# மெய்கண்ட சாத்திரம்



பதிப்பாசிரியர்

## சைவப்புலவர் சு. செல்லத்துரை

இணுவில் - இளவாலை

*அமரர் சிவகாமசுந்தரி செல்லத்துரையின்*

பத்தாம் ஆண்டு நினைவு நூல்

03-07-2020

*வெளியீடு :*

திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம்

கொழும்பு - இணுவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்கண்ட சாத்திரம்



*பதிப்பாசிரியர்*

**கலாபூஷணம்,**

**சைவப்புலவர் சு. செல்லத்துரை**

இணுவில் - இளவாலை

**அமரர் சிவகாமசுந்தரி செல்லத்துரையின்**

பத்தாம் ஆண்டு நினைவு நூல்

03-07-2020

*வெளியீடு :*

திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம்

கொழும்பு - இணுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூல் | : | மெய்கண்ட சாத்திரம் |
| பதிப்பாசிரியர் | : | கலாபூஷணம், சைவப்புலவர் சு. செல்லத்துரை |
| முதற்பதிப்பு | : | 2020-07-03 |
| பிரதிகள் | : | 500 |
| அளவு | : | B5 |
| பக்கங்கள் | : | 495 + xviii |
| உரிமை | : | பதிப்பாசிரியருக்கு |
| வெளியீடு | : | திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம் கொழும்பு - இணுவில் |
| விலை | : | 1600/- ரூபா |
| அச்சுப் பதிப்பு | : | அம்மா அச்சகம் - இணுவில் |
| ISBN | : | |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் இருமுதுகுரவர்

சைவப்புலவர் சு. செல்லத்துரை சிவகாமசுந்தரி இருவர்க்கும்

## இந்நூல் சமர்ப்பணம்



## மெய்கண்ட வாழ்வு மேதினியில் நிலைக்கட்டும்

அன்னையை இழந்து
ஆண்டு பத்தானது
மண்ணை நீங்கி
மனத்துள் உறையும்
சிவகாமசுந்தரிக்கு
சொற்கோயில் கட்டினோம்
நூல்களாய் வருடம் தோறும்
இவ்வாண்டு அவர் பெயரால்
எம் தந்தையின் பெருவிருப்பை
நிறைத்து வைக்கின்றோம்.

மெய்கண்டார் வழிவந்த
மெய்கண்ட சாத்திரங்கள்
பதினான்கும் ஒன்றாய்
பதிப்பிக்கும் பேறு பெற்றோம்

மெய்கண்டான் மிளிர
மெய்கண்ட எம் தந்தை
கற்ற போதும்
கற்பித்த போதும்
சைவ சித்தாந்தமே
சிகரமென
பற்றி நின்றவர்

அற வழி வாழ்பவர்
அதன் வழி ஒளிர்பவர்
அரன் தாள் பணிபவர் - தான்
விரும்பிய வித்தையை
தன் பின்னும்
விதைத்திட விளைவதால்
அவர் உரையுடன் கூடிய
சித்தாந்த சாஸ்திர நூல்களை
ஓர் திரட்டாய் உருவாக்கி
கருவிலே சுமந்த எம் தாயின்
பத்தாம் ஆண்டு நினைவாய்
புத்தகமாய்ப் படைத்து
காணிக்கை ஆக்குகின்றோம்

இரு முது குரவராம்
தாய் தந்தையின்
அரும் பெரும் மதிப்பும்
அருள் நிறை வாழ்வும்
நூல் வழி நின்று
ஆலென வளர்ந்து
வாழ்வாங்கு வாழ
வழி காட்டட்டும்
மெய்கண்ட வாழ்வு
மேதினியில் நிலைக்கட்டும்.

*மைந்தர்கள்*

செல்லத்துரை நாவரசன்
இலண்டன்

செல்லத்துரை மாவிரதன்
இளவாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருவாவடுதுறை (அஞ்சல்) - 609 803, நாகை மாவட்டம். தொலைபேசி : 04364 - 232021

நாள் : 11.05.2020

## அருள் வாழ்த்துரை

படிக்கும் நூல்கள் சிவாகமம் பசுபாச மோடு பதித்திறம்
எடுத்தியம்புவது ஈசன்வார்கழல் ஏத்திடும் தொழில் என்றுமே
விடுத்திடும் பொருள் காமமாதிகள் வேண்டிடும் பொருள் ஈண்டருள்
முடித்து மும்மலம் வீட்டு நின்மலனோடு நின்றிடல் முத்தியே.

– சிவஞானசித்தியார் பரபக்கம் .

இலங்கையில் செயல்பட்டுவரும் நமது சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையத்தின் மூலம் மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கும் உரையுடன் வெளிவரவுள்ளமை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஈழத் திருநாட்டு அறிஞர் பெருமக்களின் உரைகளுடன் இத்தொகுப்பு வெளிவரவுள்ளமை பாராட்டத்தக்கது.

திருமுறைகளைப் பொருளறிந்து ஓதுவதற்கும் ஆன்ம விழிப்புணர்வு கொள்வதற்கும் மெய்கண்ட சாத்திரப் பயிற்சி மிகவும் அவசியமாகும். அம்முறையில் இத்தகைய வெளியீடு பாராட்டுக்கும் வரவேற்புக்கும் உரியது.

இந்தப் பதினான்கு சாத்திர உரைகளை அன்பர்கள் ஆர்வத்துடன் பயின்று சிவநேயம் வளர்த்துத் திருவருள் பெற்றுச் சிறக்க வேண்டுமென நமது ஆன்மார்த்த மூர்த்திகளாகிய ஸ்ரீ ஞான மாநடராஜப் பெருமான் திருவடிமலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

திருவாவடுதுறை ஆதீனம்

பெறுநர் :
சிவ. செ. நவநீதகுமார் அவர்கள்.
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# முன்னுரை

## கலாபூஷணம், சைவப்புலவர் சு. செல்லத்துரை

(பதிப்பாசிரியர்)

**1**

மெய்கண்ட சாத்திரம் எனப்படுவது உலகில் நமது கருவிகரணங்களால் சுட்டியறியப்பட முடியாதனவாகிய பதி, பசு, பாசம் எனப்படும் முப்பொருள்கள் பற்றிக் கூறும் உண்மை நூல்கள் எனப் பொருள்படும். இவை மெய்கண்ட தேவராலும் அவருடைய மாணாக்கராய ஞானபரம்பரையினர் எனப்படும் மெய்கண்ட சந்தானத்தினராலும் செய்யப்பட்ட நூல்கள்.

இவை வேதத்தின் ஞானகாண்டப் பகுதியில் உள்ள உபநிடதங்களின் உண்மைப் பொருள்பற்றி மாணவன் வினாவ ஞான ஆசிரியர் பதில் சொல்வது போலத் தோற்றம் பெற்று, ஆகமங்களாகப் பரந்து, தமிழில் திருமுறைகளாக விரிந்து, அவற்றின் சாரமாகிய சைவ சித்தாந்த சாத்திரங்களாக மலர்ந்துள்ளன.

வேதம் என்பது பசுவைப் போன்றது. ஆகமங்கள் சிறப்பு; பசுவினிடத்துப் பால் போன்றன. தேவாரதிருவாசகங்கள் ஆகிய திருமுறைகள் பாலினிடத்துப் பொருந்தியுள்ள நெய்யைப் போன்றன. சிவஞானபோதம் முதலான மெய்கண்ட சாத்திரங்கள் நெய்யின் சுவையை ஒத்தன. இவ்வுண்மையை,

**வேதம் பசு, அதன்பால் மெய்யாகமம், நால்வர்**
**ஓதும் தமிழ் அதனின் உள்ளுறுநெய் - போதமிகு**
**நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்**
**செய்த தமிழ் நூலின் திறம்.**

எனும் பாடல் மூலம் அறியலாம்.

மெய்ப்பொருள்பற்றிக் கூறவல்லவர், முன்னைப் பிறப்பில் சரியை, கிரியை, யோக நெறிகளில் சித்தி பெற்று இப்பிறப்பில் ஞானமார்க்கத்தில் சாமுசித்தராகப் பிறந்தவர்களே. மெய்கண்டார் சாமுசித்தராகப் பிறந்தவர். குழந்தையாக இருந்தபோதே பரஞ்சோதி முனிவரிடம் ஞான உபதேசம் பெற்று இரண்டாவது வயதிலே மெய்கண்ட சாத்திரங்களின் தாய் நூலாகிய சிவஞானபோதத்தை அருளிச் செய்தார்.

இந்நூல் பதி, பசு, பாசங்களின் இலக்கணங்களையெல்லாம் பெரிய மலையின் உருவத்தை ஒரு சிறிய கண்ணாடியானது தன்னுள் அடக்கிக் காட்டுவது போல் பன்னிரண்டு சூத்திர வடிவாயிருக்கும் தன்னிடத்தில் அடக்கிக் கூறும் நூல். சகல வேதாகம சாரமாயிருப்பதும் எல்லா ஞான நூல்களுக்கும் தாய் நூலாயிருப்பதுமான ஒப்பற்ற ஞான சாத்திரம்.

மெய்கண்டார் திட்ப நுட்பமாகச் சுருக்கமாகக் கூறிய முப்பொருள் உண்மையை அவர் வழிவந்த ஞானபரம்பரையினர் விரித்தும், விளக்கியும் செய்த நூல்களே சித்தாந்த சாத்திரங்கள் ஆகிய பதினான்கும் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தாந்தம் என்பது முடிந்த முடிவு. சாத்திரம் என்பது அளவை நூல் முறைப்படியான மறுத்துரைக்க முடியாத உண்மைநூல் எனப் பொருள் தரும். அநாதி முதல் இற்றைவரை எத்தனையோ சமயதத்துவங்கள் தோன்றி இருந்தாலும் இன்றுவரை மறுக்க முடியாத சமய தத்துவமாக இருப்பது சைவசித்தாந்தமேயாகும். இதனைத் தமிழில் சைவசித்தாந்தம் தோற்றம் பெற்ற காலப்பின்னணி தெளிவுபடுத்துகிறது.

தமிழ்நாட்டில் கி.பி எட்டாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை சைவநெறியோடு வைதீக நெறிகளும் வளர்ந்து வந்தன. தேவார முதலிகள் அருளிய திருப்பதிக வழக்கோடு, வடமொழி வேதவழக்கும் சிவாகம வழக்கும் சிறப்புற்று விளங்கின. கி.பி எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து வடமொழி வேதவழக்கு மேலோங்கியது. இக்காலத்தில் வேதாந்த தத்துவம் செல்வாக்குப் பெற்று வளர்ச்சி கண்டது. உபநிடதம், வேதாந்த சூத்திரம் (பிரமசூத்திரம்) என்பவற்றுக்கு வேதாந்தபரமான உரைகள் தோற்றம் பெறலாயின.

கி.பி 788-870 காலத்தில் வாழ்ந்த ஆதிசங்கரர் வேதாந்தபரமான உரை எழுதினார். இதில் உள்பொருள் இரண்டல்ல என்னும் **அத்வைதக்** கொள்கையை நிறுவினார். இது சங்கரபாடியம் எனப்பட்டது. இவரின் பின் 1017-1137 காலத்தில் வாழ்ந்த இராமானுஜர் அதே வேதாந்த சூத்திரத்துக்கு எழுதிய உரையில் உள்பொருள் ஒன்று அது உலகமாக விசேடித்து நிற்கிறது எனும் **விசிட்டாத்வைதக்** கொள்கையை நிறுவினார். இது ஸ்ரீ பாடியமாக விளங்கியது. இவரின் பின் கி.பி 1197 இல் வாழ்ந்த மத்துவர் அதே வேதாந்த சூத்திரத்துக்கு எழுதிய உரையில் உள்பொருள் இரண்டு என்னும் **துவைதக்** கொள்கையை நிறுவினார். இது மத்துவபாடியமாக மலர்ந்தது.

தமிழ்நாட்டில் இத்தகைய வேதாந்த உரைகள் தோன்றி உள்பொருள் இரண்டல்ல என்னும் அத்வைதக் கொள்கையும், உள்பொருள் ஒன்றுதான் அது உலகாக விசேடித்து நிற்கிறது என்னும் வசிட்டாத்வைதக் கொள்கையும், உள்பொருள் இரண்டு என்னும் துவைதக் கொள்கையும் ஒன்றுடன் ஒன்று மாறுபட்டு வழங்கின. அப்படியாயின் உள்பொருள்கள் எவை என்னும் சிந்தனை மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியது. இக் காலகட்டத்தில் சைவத் திருமுறைகளில் உட்பொருளாயமைந்த பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்களே உள்பொருள்கள் என்னும் சைவசித்தாந்தக் கொள்கையைத் தர்க்க ரீதியாக வரையறுத்து, நிலைநிறுத்தி வளர்த்து எடுக்க வேண்டிய உள்நோக்கில் கி.பி 1213இல் மெய்கண்ட தேவரால் மெய்கண்ட சாத்திரம் தமிழில் தோற்றம் பெற்றது.

தர்க்க சாஸ்திர அளவை நூல் பிரமாணப்படி சிவஞானபோதம் எனும் நூலை மெய்கண்டார் தந்தார். இதை எக்காலத்திலும் யாரும் மறுத்துரைக்க முடியாதபடி பிரமாண இயல், இலக்கண இயல், சாதன இயல், பயன் இயல் எனும் பகுப்புகளில் திட்பநுட்பமான சூத்திர வடிவில் செய்து உதவினார். அவர் வழிவந்த மெய்கண்ட பரம்பரையினர் சிவஞான போதத்திற்கு வழிநூலும், சார்பு நூலும், விளக்க நூல்களுமாகப் பதினான்கு நூல்கள் செய்தனர்.

இவை சைவசித்தாந்த நூல்கள் என்ற வழக்கில் உள்ளன. சித்தம் அந்தம் எனும் இரு சொற்களும் இணைந்து (சித்தம் - முடிவு, அந்தம் - முடிவு) முடிந்தமுடிவு எனும் பொருளில் அமைந்தன. இவற்றின் உட்பொருள் பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்கள் என்னும் முடிவு இதுவரை யாராலும் மறுக்கப்படவில்லை. ஆதலால் சைவசித்தாந்தமே உலகில் மிக உயர்ந்த தத்துவமாக விளங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கையும் 1886 இல் முதன்முதல் பதிப்பித்த மதுரை நாயகம்பிள்ளை என்பவர் நூல்பட்டியலை ஒரு வெண்பாவில் தருகின்றார்.

**உந்தி களிறு உயர்போதம் சித்தியார்**
**பிந்திருபா உண்மைப் பிரகாசம் - வந்தவருட்**
**பண்புவினா போற்றி கொடிபாசமிலா நெஞ்சுவிடு**
**உண்மைநெறி சங்கற்ப முற்று.**

அவை:

1. திருவுந்தியார்
2. திருக்களிற்றுப்படியார்
3. சிவஞானபோதம்
4. சிவஞானசித்தியார்
5. இருபாஇருப.்.து
6. உண்மைவிளக்கம்
7. சிவப்பிரகாசம்
8. திருவருட்பயன்
9. வினாவெண்பா
10. போற்றிப் ப.்.றொடை
11. கொடிக்கவி
12. நெஞ்சுவிடு தூது
13. உண்மைநெறி விளக்கம்
14. சங்கற்ப நிராகரணம்

எனும் பதினான்கும் ஆகும்.

உ

சைவசித்தாந்த தத்துவக் கருத்துக்கள் தமிழில் முதன்முதலில் ஏழாம் நூற்றாண்டில் சைவத் திருமுறைகளாகத் தோற்றம் பெற்றன. இவற்றைச் சிவனிடம் ஞானப்பாலுண்டு சிவஞானம் பெற்ற ஞானசம்பந்தப் பெருமான் மூன்று வயதில் தேவாரமாகப் பாடித் தொடக்கி வைத்தார். இவை தொடர்ந்து இருபத்தேழு அருளாளர்களால் பன்னிரு சைவத்திருமுறைகளாக வளர்ச்சி கண்டன. இவை சைவசமயத்தின் இலக்கியங்களாக விளங்குகின்றன. "இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல்" என்னும் இலக்கணப்படி 13ஆம் நூற்றாண்டில் சைவத் திருமுறைகளின் சாரமான இலக்கணங்களாக பதினாலு சைவசித்தாந்த சாத்திரங்கள் தோன்றின. இவற்றை இரண்டு வயதில் ஞானம் பெற்ற மெய்கண்டார் சிவஞானபோதமாகத் தொடக்கி வைத்தார். தொடர்ந்து ஏழு சந்தான குரவர்களால் பதினான்கு சித்தாந்த சாத்திரங்கள் தோற்றம் பெற்றன. எனவே சைவத் திருமுறைகளும் சித்தாந்த சாத்திரங்களும் தமிழர்களாகிய எமக்கு இரு கண்கள் போன்றன.

சைவத் திருமுறைகளில் காலத்தால் முந்திய திருமூலர் திருமந்திரம் தோத்திரமாகவும், சாத்திரமாகவும் விளங்குகிறது. திருமந்திரத்தில்தான் சைவசித்தாந்த சொற்களும் கருத்துக்களும் முதன்முதலில் தமிழில் இடம்பெற்றுள்ளன. சைவம், சிவநெறி, சிவபெருமான், சித்தாந்தம், முத்தி, பதி பசு பாசம் முதலானவற்றைக் காணலாம். சைவசமயத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமான் என்பதை,

**சைவம் சிவனுடன் சம்பந்த மாகுதல்**
**சைவம் தனை அறிந்தே சிவம் சாருதல்**
**சைவம் சிவம் தன்னைச் சாராமல் நீங்குதல்**
**சைவம் சிவானந்தம் சாயுச்சியமே. (1512)**

எனவும், முப்பொருள் உண்மையை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிபசுபாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல் பசுபாசம் அநாதி
பதியினைச் சென்றணுகா பசுபாசம்
பதி அணுகில் பசுபாசம் நிலாவே.

எனவும்,

சைவசமயத்தைச் சிவபெருமானே சிவநெறி என அநாதியே தோற்றுவித்தார் என்பதை,

சைவப் பெருமைத் தனிநாயகன் நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவனெறி சன்மார்க்கம் சேர்ந்துய்ய
வையத் துள்ளார்க்கு வகுத்து வைத்தானே. (1478)

எனவும் கூறுகின்றார்.

சைவசித்தாந்தம் என்பதில் சைவம் என்பது சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் எனவும், சித்தாந்தம் என்பது சைவசம உண்மைப் பொருளைக் கூறும் முடிந்த முடிவான தத்துவம் எனவும் பொருள்படும். எனவே சைவசித்தாந்தம் என்பது மற்றைய தத்துவங்களைப் போல வெறும் தத்துவம் அன்று. அது சைவசமய வாழ்வியல் ஆகும். ஆதலால் வள்ளுவப் பெருமான்,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

எனக் கூறுவது போல சைவசித்தாந்ததைச் சந்தேக விபரீதம் அறத் தெளிவாகக் கற்றுக் கற்றபடி சைவவாழ்வு வாழ்தல் வேண்டும். அப்படி வாழ்ந்தால்தான் நாவலர் பெருமான் கூறுவது போல்,

"இந்தச் சரீரம் எமக்குக் கிடைத்தது நாம் இறைவனை விதிப்படி வணங்கி முத்தி இன்பம் பெறும் பொருட்டேயாகும்." எனும் பயனைப் பெறலாம். ஆதலால் சைவசித்தாந்தம் என்பது வெறும் அறிவுக்கு மட்டும் உரியதன்று அது வாழ்வியலுக்கரியது என்னும் உண்மையை எல்லோரும் உணரவேண்டும். அதனால்தான் சைவசித்தாந்தம் படிப்போர் சைவசமய தீட்சை பெற்றுப் பஞ்சமா பாதகங்களையும் நீக்கி, திருநீறு உருத்திராக்கம் அணிந்து, சிவனைத் தொழுது படிக்க வேண்டும் என்னும் நியதி கைக்கொள்ளப்படுகிறது. சைவத் திருமுறை ஆசிரியர்களும், சைவசித்தாந்த ஆசிரியர்களும் இந்த நியமத்தில் நின்றுதான் தாம் பெற்ற இன்பத்தை நாமும் பெறவேண்டுமென்பதற்காகத்தான் தாம் கண்ட உண்மைகளை எமக்குப் பாடிவைத்துள்ளார்கள்.

## 3

எங்கள் ஈழநாட்டில், பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும், சைவப்புலவர் கற்கை நெறியிலும், சித்தாந்தரத்தினம் முதலாய கற்கை நெறிகளிலும், சைவசித்தாந்தம் பாடமாக உள்ளது. ஆனால் பதினான்கு சித்தாந்த சாத்திரங்களையும் உள்ளடக்கிய உரையுடன் கூடிய ஒரே நூலாக இதுவரை இங்கு பதிப்பிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த கால்நூற்றாண்டு காலமாகப் பல மட்டங்களிலும் சைவசித்தாந்தத்தைக் கற்பித்து வரும் அனுபவத்தைக் கொண்டு இப்படியான, அதுவும் ஈழத்தவரின் உரைகளையும் உள்ளடக்கிய ஒரு நூலைப் பதிப்பிக்க வேண்டும் எனும் எண்ணம் நீண்ட நாட்களாக மனதில் குடிகொண்டு இருந்தது. அந்த எண்ணம் திருவருள் துணையால் இப்போது கைகூடியுள்ளது. இந்நூல் வழமையான ஒழுங்கின்படியில்லாது "இலகுவிலிருந்து கடினமானதுக்கு" எனும் கற்பித்தல் முறையில் முப்பொருள் கூறும் சார்புநூல்களைக் கற்றுவிட்டு மூல நூலான சிவஞானபோதத்தைக் கற்று அதன்மேல் விளக்க நூல்களைக் கற்றுத் தெளிந்து கொள்ளக் கூடிய வகையில் அமைந்துள்ளது. முப்பொருள் உண்மைகளைக் கூறும் உண்மை விளக்கம், திருவருட்பயன், சிவப்பிரகாசம், சிவஞானசித்தியார், சிவஞானபோதம் என்ற ஒழுங்கில் அதுவும் ஈழத்து அறிஞர்களின் பதவுரைகளுடன் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. எனது துணைவி அமரர் சிவகாமசுந்தரியின் பத்தாவது ஆண்டு நினைவாக எனது மைந்தர்களின் அனுசரணையுடன் பதிப்பிக்கும் வாய்ப்புக் கிடைத்தமை மனதுக்கு நிறைவைத் தருகின்றது.

இந்த நூல் பதிப்புக்கு வேண்டிய ஆலோசனைகளையும், பல தகவல்களையும் திருவாவடுதுறை ஆதீனச் சைவசித்தாந்தப் பயிற்சிமைய இயக்குநர் சைவப்புலவர் செ.நவநீதகுமார் (M.A) அவர்களும், சைவசித்தாந்த ஆய்வு நிறுவன இயக்குநர் சைவப்புலவர் கு.றஜீவன் (M.A) அவர்களும், சித்தாந்தரத்தினம் திருமதி. லீலாவதி அருளையா (M.A) அவர்களும் நிறைவாகத் தந்து உதவி ஊக்குவித்தனர். படிகளைப் பிழைதிருத்தம் செய்தும் உதவினர். இவர்களுக்கு என்றும் மறா நன்றியுடையேன்.

இந்த நூலுக்குத் திருவாவடுதுறை ஆதீன 24ஆவது குருமகா சந்நிதானம் அவர்கள் அருள் ஆசி தந்துள்ளார். அத்துடன் "சைவ சித்தாந்தம் ஏன் கற்கவேண்டும்" எனும் ஆதீன வெளியீடான கட்டுரையையும் தந்துள்ளார். சுவாமிகளின் திருவடிகளை வணங்கி மகிழ்கின்றேன். இவற்றைப் பெற்றுத்தந்த சித்தாந்தச் செம்மணி செ.நவநீதகுமார் அவர்களுக்கும் சிறப்பான நன்றி உரியது.

இதனைத் திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்தப் பயிற்சிமைய (கொழும்பு-இணுவில்) வெளியீடாக வெளியிடச் சம்மதம் தந்து உதவியும் புரிந்த நிர்வாகிகளுக்கு நன்றியுடையேன்.

வழமைபோல அழகுறப் பதிப்பித்து உதவிய பதிப்புச்செம்மல் ஸ்ரீ கிருஷ்ணகுமார் (அம்மா ஸ்ரீ) அவர்களுக்கும், செப்பமுற அச்சிட்டுத் தந்த ஸ்ரீ கணபதி பதிப்பகத்தினர்க்கும் நன்றியும் பாராட்டும் உரியன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுக உரை

**சைவப்புலவர், சித்தாந்தச் செம்மணி**
**செ. நவநீதகுமார். M.A. (சைவசித்தாந்தம்)**
**திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த**
**பயிற்சிமைய இயக்குநர்**

**தத்து வந்தலை கண்டறி வாரிலைத்**
**தத்து வந்தலை கண்டவர் கண்டிலர்**
**தத்து வந்தலை நின்றவர்க் கல்லது**
**தத்து வனலன் தண்புக லூரனே**

**- அப்பர் சுவாமிகள் 5 - 46 - 07**

உலகதிலிலுள்ள சமயங்களில் உயரிய தத்துவத்தைத் தன்னகத்தே கொண்டது சைவசமயம். அந்தத் தத்துவம் தான் சைவ சித்தாந்தம். இது மேலைத்தேயத்து அறிஞர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சைவசித்தாந்த நெறி பல ஆயிரம் வருடங்களாகத் தமிழ் மக்களிடையே பயின்று வந்துள்ளது. சிவாகமங்கள் திருமுறைகளில் இடம்பெற்றுள்ளது.

காலத்தால் மிக முற்பட்ட திருமுறை நூலான திருமந்திரத்தில் **“மேலான தற்பரங்கண்டுள்ளோர் சைவசித்தாந்தரே”** எனத் திருமூலர் குறிப்பிடுகின்றார்.

சைவசித்தாந்த தத்துவம் தமிழில் பதின்மூன்றாம் நூற்றாண்டளவில் நூலுருப் பெற்றது. இவை சித்தாந்த சாத்திரங்கள் எனப் பெயர்பெறும். மெய்கண்டதேவரின் சிவஞானபோதம் முதல் நூலாகவும், சிவஞானசித்தியார் வழிநூலாகவும், சிவப்பிரகாசம், திருவருட்பயன் சார்பு நூல்களாகவும் கொள்வர்.

இச் சைவ சித்தாந்த சாத்திரம் பதின்னான்கிற்கும் பல்வேறு காலங்களிற் பலர் உரை செய்திருக்கிறார்கள். இவற்றுள் நம் நாட்டவர்கள் உரையும் இடம்பெற்றுள்ளது. சித்தாந்தம் பயிலும் பயிலுநர்களுக்கு உரை நூல்கள் அவசியம் தேவைப்படும்.

எமது நாட்டிலே ஒருசில உரையுடன் கூடிய நூல்களே பெற்றுக்கொள்ளக் கூடியதாக வுள்ளது. இவற்றை முழுமையாக ஒரே நூலாக்கி ஈழநாட்டவரின் உரையுடன் வெளியிட வேண்டும் என்ற எண்ணம் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களுக்குத் தோன்றியது. அவரின் துணைவியார் அமரர். திருமதி சிவகாமசுந்தரி அவர்களின் ஆண்டு நினைவாக வருடமொன்றாக ஒன்பது பயன்மிக்க நூல்களை வெளியீடு செய்துள்ளார்.

இது பத்தாவது நூலாக வெளிவருகிறது. இந்நூலின் வைப்பு முறை முன்னர் வெளிவந்த சித்தாந்த சாத்திர நூல்களில் இருந்து வேறுபட்டது. பயில்வோரின் பயன்பாடு கருதி சார்பு நூல்களான உண்மைவிளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன் என்று தொடங்கி இவற்றைப் படித்து படிப்படியாகச் சிவஞானசித்தியார், சிவஞான போதம் என இந்நூல் விரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள் சைவசித்தாந்தத்தில் ஆற்றலுடையவர். திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்தப் பயிற்சி மையம் கொழும்பு, இணுவிற் கிளைகளில் கடந்த பத்து வருடங்களாக சைவசித்தாந்த நூல்களை பயிலுநர்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் விரிவுரை செய்து வருகின்றார். "திருமந்திரப் பணிமன்றம்" அமைத்து அதன் மூலம் திருமந்திர வகுப்பு நடாத்துதல், "திருமந்திர விருந்து" தொடர்நூல் வெளியிடுதல், திருமந்திர உரை இசை, ஒலிப்பேழை வெளியிடுதல் ஆகிய பணிகளையும் செய்து வருகின்றார்.

கேட்போர் பிணிக்கும் வண்ணம் பேசுந்திறத்தவர். சொல்லும், செயலும் ஒன்றித்த தன்மையர், போதனை மட்டுமன்றிச் சாதனையும் பயிற்றுவிக்கும் ஒருவராக விளங்குகின்றார். திருமுறை, திருவாசகம், அகத்தியர் தோத்திரத்திரட்டு முதலான முற்றோதல்களையும், புராண படனங்களையும், இந்திய, இலங்கைத் திருத்தல யாத்திரை, மலேசிய யாத்திரை போன்றவற்றையும் பயிலுநர்களோடு இணைந்து நெறிப்படுத்தி வருகின்றார்.

பன்னிரு திருமுறை, பதினான்கு சாத்திர நூல்களும் சைவர்கள் வீட்டில் வைத்துப் போற்ற வேண்டியவை.

இந்நூலைப் படித்துச் சைவ சித்தாந்த அறிவு பெற்று பிறவி பெற்ற பயனாகிய முத்தியின்பம் பெற வேண்டியது அனைவரின் கடனாகும்.

**ஈராண்டில் சிவஞானம் பெற்று உயர்ந்த**
**மெய்கண்டார் இணைத்தாள் போற்றி**
**நாராண்ட பல்லடியார்க்கு அருள்புரிந்த**
**அருள்நந்தி நற்றாள் போற்றி**
**நீராண்ட கடந்தைநகர் மறைஞான**
**சம்பந்தர் நிழல்தாள் போற்றி**
**சீராண்ட தில்லைநகர் உமாபதியார்**
**செம்பதுமத் திருத்தாள் போற்றி.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சைவ சித்தாந்தம் ஏன் பயில வேண்டும்?

**சிவத்தமிழ் சீராளர் சிவ. கணமுருகப்பன்**
**(திருவாவடுதுறை ஆதீனப் பேராசிரியர்)**

சைவ சித்தாந்தம், இந்தத் தொகுப்பில் நாம் ஏன் சேர்ந்திருக்கிறோம்? சேராதவர்கள் எத்தனையோ பேர் இருக்கும்போது நாம் மட்டும் ஏன் சேர வேண்டும்? வள்ளுவர் பெருந்தகை சொல்லுவார்... "எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு".

**மெய்ப்பொருள் என்றால் என்ன?**

மெய்பொருள் என்றால் என்னவென்று நாம் புரிந்து கொண்டு விட்டோமேயானால் மெய்ப்பொருளை எளிதில் உணரலாம். இருட்டை வைத்து வெளிச்சத்தை உணர்வது போல, உலக இயக்கத்தை வைத்து இறைவனை உணரலாம். உலகத்தை நாம் பகுத்து - பகுத்துப் பார்த்தால் மூன்று பொருள்தான் நமக்குத் தெரியும். அவை உயிர்ப்பொருள், உயிரற்ற பொருள், இவையிரண்டையும் நிர்வாகம் செய்யக்கூடிய ஒரு பொருள் ஆகியன.

உங்களுக்குத் தெரியும், உயிர்ப்பொருள் என்றால் நாமெல்லாம் உயிர்ப்பொருள். மேலும் ஆடு, மாடு, கோழி, பாம்பு, பல்லி, எறும்பு, மரம், செடி, கொடி, புல், பூண்டு ஆகியன. உயிரற்ற பொருள் எனில், மேசை, நாற்காலி, கல், மண் ஆகியன. இந்த உயிர்ப்பொருள் - உயிரற்ற பொருள் ஆகிய இரண்டையும் நிர்வாகம் செய்யக்கூடிய ஒருவனைத்தான் நாம் கடவுள் என்று சொல்கிறோம்.

**நாம் ஏன் பிறந்தோம்?**

நாம் ஏன் பிறந்தோம் என்று நமக்குத் தெரிய வேண்டும். சைவ சித்தாந்தத்தின் நோக்கமும் அதுதான். உதாரணமாக கீழே ஒரு பகுதி இருக்கிறது. அதை உயிர்பகுதி என்று கொள்வோம். மேலே ஒரு பகுதி இருக்கிறது. அதை இறைவன் என்று கொள்வோம். இந்த உயிர்களின் நோக்கம் இறைவனைச் சார்ந்து இருக்க வேண்டும். இறைவனைச் சார்ந்திருப்பதற்குத் தடையாக ஒரு பொருள் இருக்கிறது. அது இரண்டுக்கும் (இறைவன்-உயிர்) நடுவில் இருக்கிறது. ஆக அடைய வேண்டிய பொருள் (இறைவன்), அடையும் பொருள் (உயிர்), தடைப் பொருள் (பாசம்) என்ற மூன்று பொருள்கள் இருக்கின்றன. இதில் தடைப்பொருள்தான் நமக்கு வருகின்ற இன்பம், துன்பம், யான், எனது என்று சொல்லக்கூடிய கண்ணுக்குப் புலப்படாத பந்தபாசம் என்கிற ஒரு நிலை. இந்தத் தடையை உடைத்தோமேயானால், நாம் இறைவன் திருவடியை (நிலையான பேரின்பம்) அடைந்து விடலாம். அதற்குத் தடையாக இருக்கக் கூடியவை எவையென்று நாம் தெரிந்துகொள்ள வேண்டும். நாம் **அடைய வேண்டிய பொருள்** என்னவென்று தெரிய வேண்டும். முதலில் **நான் யார்** என்று தெரிந்துகொள்ள வேண்டும். அதாவது நான் யார், சேரவேண்டிய பொருள், தடை இந்த மூன்றையும் தெரிந்துகொண்டால் வாழ்க்கையில் ஏற்படக்கூடிய துன்பம் போய்விடும். பயம் போய்விடும். தன்னம்பிக்கை ஏற்படும். "அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை" என்ற எண்ணம் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறைவன் இருக்கின்றானா?**

இறைவன் உண்டா... இல்லையா? இறைவன் இருக்கிறான் என்ற நம்பிக்கை ஏற்பட்டால்தான் சைவ சித்தாந்தப் பயிற்சியில் நம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்வது எளிது. இறைவன் இருக்கிறான் என்பதை சைவ சித்தாந்தம் தெளிவுபடுத்துகிறது. அதை நாம் முழுமையாகத் தெரிந்துகொள்வது அவசியம். இறைவனை நாம் எப்படி உணருவது? சற்றுமுன் கூறியது போல், ஒன்று உயிர்பொருள் மற்றொன்று உயிரற்ற பொருள். இதை நுட்பமாகச் சொல்வதென்றால் அறிவுள்ள பொருள்... அறிவற்ற பொருள் என்று இரு நிலைகள்.

இந்த அறிவற்ற பொருள்கள் எல்லாம் அறிவுள்ள பொருள்களால்தான் இயங்குகின்றன. இந்த நாற்காலியை வா என்று அழைத்தால் அது தானே வராது. நாம்தான் அதை எடுத்து வைத்து அதில் உட்கார வேண்டும். எனவே இதிலிருந்து அறிவற்ற பொருள்கள் எல்லாம் அறிவுள்ள பொருள்களால்தான் இயக்கம் பெறுகின்றன என்பது புலனாகிறது. பகுத்தறிவு என்பது யாதெனில், அறிவற்ற பொருள்கள் எல்லாம் அறிவுள்ள பொருள்களால்தான் இயங்குகின்றன என்பதேயாம். இந்த உடம்புக்கு அறிவு உண்டா எனில், நிச்சயமாக இல்லை. உயிர் பிரிந்த உடல் இயங்காது. உயிர் இயக்குவதாலேயே இந்த உடல் இயக்கம் பெறுகிறது.

அதைப்போல, அண்டசராசரத்திற்கு உயிர் உண்டா என்றால், கிடையாது. கல்லு, மண்ணு, காற்று, ஆகாயம் போன்ற எந்தப் பொருளுக்கும் உயிர் கிடையாது. அப்படியெனில் என்ன அர்த்தம்? அண்டசராசரம் ஒரு சடப்பொருள். ஆனால் 24 மணி நேரமும் இயங்குகிறது. காலை மாலை என்னும் பொழுது மாறுகிறது. சூரியன், சந்திரன், இரவு, பகல், காற்று, மழை போன்ற அனைத்தும் அவையவை வரவேண்டிய நேரத்தில் மிகச்சரியாக வருகிறது. இந்த உலகம் ஓர் உயிரற்ற பொருள். மிகப்பெரிய உடம்பு. சடப்பொருள்கள் உயிரின் துணைகொண்டுதான் இயங்குகின்றன என சற்று முன் உணர்ந்தோம். அப்படியெனில் உயிரில்லா இந்த அண்டசராசரம் எப்படி இயங்குகிறது? மாணிக்கவாசகர் சொல்கிறார்... இந்த உலகமென்ற அறிவற்ற பொருளுக்கும் ஓர் உயிர் இருக்க வேண்டும். அதன் துணைகொண்டே இந்த உலகம் இயங்க வேண்டும். "உலகிற்கு உயிரானாய் எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே" - இந்தக் கூற்றுப்படி இறைவன் உலகிற்கு உயிராய் இருந்து இயக்குகிறான் என்பது புலனாகிறது. அண்டசராசரம் என்னும் ஒரு பெரிய உடம்பிற்கு பரம்பொருளாகிய இறைவன் உயிராய் இருக்கிறான். நமக்கு மேல் ஓர் ஆற்றல் உண்டு. அந்தப் பரம்பொருளையே நாம் இறைவன், கடவுள், சிவம் என்றெல்லாம் பெயரிட்டு அழைக்கிறோம். எனவே, இந்த "உலக இயக்கத்தை வைத்தே இறைவன் என்றொருவன் இருக்கிறான்" என்று சைவ சித்தாந்தம் நிர்ணயம் செய்கிறது.

**கடவுளைப் பார்க்க முடியுமா?**

நிறையப் பேர் கடவுளைக் காட்டு... காட்டினால் நான் நம்புகிறேன் என்பார்கள். இறைவன் எங்கிருக்கிறான் என்பார்கள். நிரூபணம் செய்யப் போட்டிக்கு அழைப்பார்கள். கடவுள் உண்டு என்பார்கள்... இல்லையென்பார்கள்... எத்தனை கடவுள் என்பார்கள். அம்பாள் என்கிறீர்கள்... முருகன் என்கிறீர்கள்... பிள்ளையார் என்கிறீர்கள் என்று சொல்லுவார்கள். கடவுள் என்பவன் நிச்சயமாக ஒருவன்தான் என்பதை அறுதியிட்டுக் கூறமுடியும். அதில் இரு வேறுபட்ட கருத்துக்கள் இல்லை. கடந்தும் உள்ளுமாக இருப்பவன் கடவுள். அனைத்தையும் கடந்தும் அனைத்திலும் உள்ளுமாய் இருப்பான். "அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்" - (ஔவையார்) எல்லாம் அழிந்தவுடன் எஞ்சியிருப்பவன் ஒரே ஒருவன். அவன்தான் இறைவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக இறைவன் இருக்கிறான் என்பதை நாம் எப்படிச் சொல்கிறோம்? ஒரு பொருளைச் சுட்டிக் காட்டுகிறோம். அந்தப் பொருளுக்கு ஓர் எல்லையுண்டு... ஒரு காலம் உண்டு. உதாரணமாக, இந்த நாற்காலியைச் சுட்டிக் காட்டுகிறோம்... அது ஓர் இருபது வருடம் இருக்கும். ஒரு பேனாவைச் சுட்டிக்காட்டுகிறோம்... அது ஓர் இரண்டு வருடம் இருக்கும். ஈசலைச் சுட்டிக் காட்டுகிறோம்... அது ஒரு நாள் இருக்கும். ஒரு வீட்டைச் சுட்டிக் காட்டுகிறோம்... அது 100 வருடங்கள் இருக்கும். ஒரு மனிதனைச் சுட்டிக்காட்டுகிறோம்... அவனது உடல் சுமார் 100 வருடங்கள் இருக்கும். ஆக சுட்டிக் காட்டக்கூடிய அனைத்தும் காலநிர்ணயத்திற்குட்பட்டவை. ஒரு நாள் அழியக்கூடியவை. இதுதான் இறைவன் என்று ஒரு பொருளைச் சுட்டிக் காட்டுவோமேயானால் நிச்சயமாக ஒரு நாள் அது அழியக்கூடிய பொருளாகிவிடும். ஆக இறைவன் அழியக்கூடிய, கண்ணால் பார்க்கக்கூடியவன் அல்லன். அழியக்கூடிய மூக்கால் நுகரக்கூடியவனும் அல்லன். அழியக்கூடிய காதினால் கேட்கப்படக் கூடியவனும் அல்லன். அப்படியெனில் இறைவனை எப்படித்தான் உணர்வது? இதோ என் கையைத் தட்டுகிறேன். வலி ஏற்படுகிறது - உணர முடிகிறது. வலி கண்ணால் பார்க்கப்படக் கூடியது அல்ல. காதால் கேட்கப்படக் கூடியதும் அல்ல. மூக்கால் நுகரக்கூடியதும் அல்ல. ஆனால் உணர முடிகிறது. ஆக வலி என்பதும் உண்மை. உலகில் உணரப்படக்கூடிய பொருள் உண்டு என்பது உண்மை. அதுபோலவே இறைவன் என்பவன் உண்மையான ஒரு பொருள். அது நிச்சயமாக உணரக்கூடிய பொருள். இறைவன், காண்ணால் பார்ப்பதுவும்... காதால் கேட்பதுவுமான மூக்கால் நுகரக்கூடியதுமான ஒரு பொருள் இல்லை. காலநிர்ணயத்துக்கு உட்பட்ட அழியக்கூடிய பொருளால் அவனை அறிய முடியாது.

கடவுள் இருக்கிறார் என்பவனுக்கு இருப்பது போன்றும், இல்லையென்பவனுக்கு இல்லாதது போன்றும் இறைவன் இருக்கிறார். தவறுதலாக நிறையப் பேர், முருகனுக்கு இரண்டு பெண்டாட்டிகள்... சிவபெருமானுக்கு இரண்டு பெண்டாட்டிகள்... என்று பேசிக்கொள்வதைக் கேட்டிருப்பீர்கள். அவையெல்லாம் இறை ஆற்றல்களின் பல வடிவங்கள். கடவுள் என்பவன் ஒருவன்தான் இருக்க முடியும். பதி இருக்கிறான் என்பதை உலக இயகத்தை வைத்து நிர்ணயம் செய்தோம். உயிரென்று ஒன்று உண்டு. உயிரில்லா வெற்று உடல் இயங்காது. இந்த உடல் இயங்க உயிர் அவசியம். உடல் இயக்கத்தை வைத்து உயிரென்று ஒன்று இந்த உடலில் இருக்கிறது என்று நிர்ணயம் செய்கிறோம்.

**இறைவன் தற்போது எங்கிருக்கிறான்?**

உயிர்களிடத்திலும் சடப்பொருள்களிடத்திலும் இறைவன் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் இருக்கிறான். அது எவ்வாறெனில், மண் தொட்டியில் விதை இருக்க இடம் கொடுப்பது ஒன்றாயிருப்பதாகும். சூரியன் நீர் காற்று போன்று அந்த விதைக்கு இறைவன் வேறாய் இருந்து அந்த விதை தாவரமாக வளர்வதற்கு உதவுகிறன். அது தன் இஷ்டம்போல் வளர்வதற்கு உடனாயிருந்து உதவுகிறான். அதைப்போல உயிர்களுக்கு இருக்க இடம் அளித்தல் (உடம்பில் உயிர்போல) ஒன்றாயும், அம்மா, அப்பா, சகோதர-சகோதரிகள், உறவினர்கள், நண்பர்கள், கால்நடைகள், தாவரங்கள் போன்றவைகளாக வேறாயும், உயிரின் இச்சைக்கு உதவும்பொழுது உடனாயும் இருக்கிறான். உயிரின் இச்சைகளுக்கு ஏற்றாற்போன்று பாவபுண்ணியங்கள் அமைகின்றன.

**ஈன்றாளுமாய் எனக்கு, எந்தையுமாய் உடன் தோன்றினராய்**
**மூன்றாய் உலகம் படைத்து உகந்தான் மனத்துள் இருக்க**
**ஏன்றான் இமையவர்க்கு அன்பன் திருப்பாதிரிப்புலியூர்த்**
**தோன்றாத் துணையாய் இருந்தனன் தன் அடியோங்களுக்கே.**

- திருநாவுக்கரசர் (4,94,1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈன்றாளுமாய் எனக்கு, எந்தையுமாய் உடன் தோன்றினராய் - வேறாய்
மூன்றாய் உலகம் படைத்து உகந்தான் - ஒன்றாய்
மனத்துள் இருக்க - உடனாய்

இவ்வாறாக இறைவன் தோன்றாத் துணையாக நம்மோடு கலந்திருக்கிறான். உதாரணமாக, செல்போன் இருக்கிறது. அதை உடல் என்று கொள்வோம். அது இயக்கம் பெற சிம் கார்டு தேவை. அதை உயிர் என்று கொள்வோம். இது மட்டும் இருந்தால் செல்போன் இயங்கி விடுமா? இயக்கம் பெறாது. மூன்றாவதாக ஒரு டவரில் இருந்து அந்த செல்போனுக்கு கண்ணுக்குத் தெரியாத சிக்னல் வரவேண்டும். அப்போதுதான் அது இயக்கம் பெறும். எனவே சிம்கார்டு தனித்து இயங்காது. செல்போனும் தனித்து இயங்காது. இவையிரண்டும் இயக்கம் பெற மூன்றாவதாக சிக்னல் வேண்டும் என்பது தெளிவாகிறது. அதுபோல உடலை செல்போன் என்று கொள்வோம். சிம் கார்டை உயிர் என்று கொள்வோம். இந்த உயிரும் உடலும் இயக்கம் பெற மூன்றாவதாக சிக்னல் என்னும் இறைவனின் ஆற்றல் தேவைப்படுகிறது.

**இறைவன் உயிர் இயக்கத்திற்கு எவ்வாறு உதவுகிறான்?**

உயிர் இயங்க உடல் தேவை. இந்த உயிரையும் உடம்பையும், பிராண வாயு என்ற ஒரு காற்று மூலமாக (காற்றடைத்த பை) இணைக்கிறான். உடல் இருந்தால்தான் உயிரின் அறிவு செயல்படும். உயிரின் அறிவு செயல்பட, இறைவன் உடலை நமக்கு அளித்து மெய்ப்பொருளாகிய தன்னை அடைய உதவுகிறான்.

**ஊனில் உயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்**
**ஞான விளக்கினை யேற்றி நன்புலத்**
**தேனை வழிதிறந் தேத்து வார்க்கிடர்**
**ஆன கெடுப்பன அஞ்செ ழுத்துமே.** - ஞானசம்பந்தர்

- பால் கெடாமல் இருக்க, பாலைக் காய்ச்சி உறையூற்றி தயிராக்க வேண்டும்.
- அது கெடாமல் இருக்க தயிரைக் கடைந்து மோர் ஆக்க வேண்டும்.
- மோரிலிருந்து எடுத்த வெண்ணெய் கெடாமல் இருக்க, அதை உருக்கி நெய்யாக்க வேண்டும்.

நெய் என்றும் கெடாது. அதுபோல கெட்டுப்போகக் கூடிய இந்த உடலுக்குள் கெடாத இந்த உயிரை இறைவன் வைத்துள்ளார். உடலுக்குள் உயிர் இருக்கும்வரை உடல் கெட்டுப்போகாது. அப்படி வைக்கப்பட்ட இந்த உயிரைக் கெடாமல் அப்படியே இறைவனிடம் கொண்டு சேர்க்க வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டுமெனில்... பக்குவப்பட வேண்டும்.

உதாரணமாக, சூரபத்மனை அழிப்பதற்கு முன்பு முருகப்பெருமான் கிரவுஞ்ச கிரி என்கிற மலையைத் தனது வேலால் உடைக்கிறார். வேல் என்பது ஞானமாகும். ஆழ்ந்து அகன்று நுண்ணியதாக இருக்கும். அந்த ஞானம் போய் பதிந்தவுடன் தடை உடைகிறது. சூரபத்மன் மீது ஞான வேலை ஏவியவுடன் யான் எனது என்ற பற்று அவனிடமிருந்து போய்விடுகிறது. ஆக யான் எனது என்ற பற்றை நீக்குவதற்குத்தான் இறைவன் அத்துணை உறவுகளையும், சடப்பொருள்களையும் கொடுத்து உதவுகிறான். அந்த யான் எனது என்ற பற்று நீங்கியவுடன் சூரபத்மனை இறைவன் தன்னோடு சேர்த்துக்கொள்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைப்போல இந்தத் தடையை ஞானம் கொண்டு நீக்கிவிட்டோமானால் இறைவனை அடைவது எளிதாகிவிடும். நாம் இன்று நேற்று பிறக்கவில்லை. "எழுகடல் மணலை அளவிடி னதிக மெனதிடர் பிறவி" என்கிறார் அருணகிரிநாதர். அவ்வளவு பிறவிகள் நாம் பிறந்திருக்கிறோம். முக்கியமாக இப்போது இறைவன் இருக்கிறார்... வீடு இருக்கிறது... தடைப்பொருள் இருக்கிறது என்று பார்த்தோம். இந்தத் தடைப்பொருளைத்தான் உடைக்க வேண்டும்.

**துன்பம் வருவது ஏன்?**

எல்லோருக்கும் இன்பம் வேண்டும்... யாருக்காவது துன்பம் வேண்டுமாவென்று கேட்டால் வேண்டுமென்று சொல்வார் யாருமில்லை. யாருக்காவது இன்பம் வேண்டுமாவென்று கேட்டால் வேண்டாமென்று சொல்வார் யாருமில்லை. உண்மையிலேயே துன்பம் எப்படி வருகிறது. துன்பம் வருகிறதேயென்று எல்லோரும் இறைவன் மீதுதான் கோபப்படுவர். அது எப்படியெனில், உதாரணமாக, ஒரு முள் நமது காலில் குத்திவிடுகிறது என்று வைத்துக்கொள்வோம். முள் தானாக வந்து நமது காலில் குத்தியதா அல்லது நமது கவனக்குறைவால் அந்த நிகழ்வு ஏற்பட்டதா? நாம்தான் சென்று குத்திக்கொண்டோம். ஆனால் முள் குத்திவிட்டது என்று பழியை முள்மீது போடுகிறோம். அதுபோல் நாம் செய்த வினைகளே துன்பமாக வந்து நம்மைத் தாக்குகின்றன. இப்போது மோதிரம் என்ற பொருள் தொலைந்துவிட்டது என்று வைத்துக்கொள்வோம். உடனே நமது மனம் துன்பமடைகிறது. ஐயோ... ஐம்பதினாயிரம் போயிற்றே... இதிலிருந்து தெரிந்துகொள்ள வேண்டிய செய்தி யாதெனில், அதன்மீது நாம் கொண்ட பற்றே நமக்கு ஏற்பட்ட இந்தத் துன்பத்திற்குக் காரணம். மோதிரம் துன்பம் தரவில்லை. "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை பற்றுக பற்று விடற்கு" என்பார் தெய்வப்புலவர். எனவே துன்பத்திற்குக் காரணம் பற்று. எத்தனையோ பேர் வீட்டை விட்டு வெளியே போகிறார்கள்... நாம் கவலைப்பட மாட்டோம். ஆனால் நமது வீட்டிலிருந்து ஒருவர் வெளியே செல்லும்போது ஜாக்கிரதை... ஜாக்கிரதை... பத்திரம் என்று பலமுறை சொல்கிறோம். இதற்குக் காரணம், நாம் அவர்மீது கொண்ட பற்றே. உயிர்ப்பொருளோ அல்லது சடப்பொருளோ... அதன்மீது ஆசை அல்லது பற்று வைப்பதினால் அதுவே துன்பத்திற்குக் காரணமாக அமைகிறது.

**ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்**
**ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்**
**ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பங்கள்**
**ஆசை விடவிட ஆனந்தம் ஆமே.** - திருமந்திரம்

ஆக துன்பத்திற்குக் காரணம் நாம் பிற பொருள்கள்மீது வைக்கின்ற பற்றுத்தானே ஒழிய, நிச்சயமாக இறைவன் நமக்கு எந்தத் துன்பத்தையும் தரவில்லை.

துன்பத்திற்குக் காரணம் என்ன... அத்துன்பத்திலிருந்து விடைபெறுவது எப்படி? இறைவனை அடைவதற்கான மார்க்கம் என்ன? இதை நோக்கியே நாம் பணப்பட இருக்கிறோம்.

**முப்பொருள் கொள்கை**

சைவ சித்தாந்தத்தில் மூன்றே பொருள்கள்தான். பதி பசு பாசம். இதில் பதி என்பது இறைவன். பசு என்பது உயிர்கள். பாசம் என்பது மும்மலங்கள் (ஆணவம் கன்மம் மாயை). பதியை அடைவதுதான் பசுவின் கடமை. அதற்குத் தடையாக இருப்பது பாசம். இந்தத் தடைகளைக் குறித்து பின்னர் விரிவாகப் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு செயற்கைக் கோள் (Satellite) மேலே சென்று அதன் சுற்றுப்பாதையில் நிலைநிற்க வேண்டுமானால் அதனுடன் சேர்த்து செலுத்தப்பட்ட மூன்று இயந்திரங்கள் (Engine) ஒவ்வொன்றாக நீக்கப்பட வேண்டும். அவ்வாறு மூன்று இயந்திரங்களும் நீங்கிய பின்னர், இறுதியில் அந்தச் செயற்கைக் கோள் (Satellite) தனது சுற்றுப்பாதையில் நிலைநிற்கிறது. அதுபோன்று இந்த உடம்போடு கூடிய உயிருடன் மூன்று தேவையற்ற இயந்திரங்கள் (ஆணவம், கன்மம், மாயை) இணைக்கப்பட்டுள்ளன. அந்த இயந்திரங்களை ஒவ்வொன்றாக நீக்கி விட்டோமானால், இறைவனோடு இந்த உயிர் நிலைபெற்றுவிடும். அவ்வாறு நீக்குவதற்கு கொடுக்கப்பட்டதுதான் இந்த உலகம் - இந்த உடல். இந்த உலகில் உள்ள உறவுகள், சடப்பொருள்கள், இவற்றையெல்லாம் நாம் பயன்படுத்தி இறைவனை அடைய வேண்டும். அந்த மெய்ப்பொருளை உணரவேண்டும்.

உதாரணமாக, இப்போது இந்த மொபைல் போனைக் காண்பித்து இது என்ன என்று கேட்டால் அனைவரும் மிக எளிதாகச் சொல்லலாம். எப்படிப் பார்த்தீர்கள் எனில் கண்ணால் பார்த்தேன் என்று பதில் சொல்வீர்கள். அதே பொருளை ஒரு இருட்டறையில் காண்பித்தால் உங்களால் சொல்ல முடியுமா? அப்படியெனில் முன்பு நீங்கள் உண்மையில் எப்படிப் பார்த்தீர்கள்? வெளிச்சத்தின் உதவியால் நமது கருவிகரணங்களைக் கொண்டு பார்த்தேன் என்பதே உண்மையான பதிலாக இருக்க வேண்டும். அப்படியெனில் கண்ணால் பார்த்தேன் என்பது பொய். கண்ணால் தன்னிச்சையாக எதையும் பார்க்க முடியாது. கண் என்பது பொய். நமக்கு இந்தப் பொருளைக் காண்பதற்கு உதவிய வெளிச்சத்தை நாம் உணர்வதில்லை. அது போன்றே நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் நம்முள்ளே இருந்து நம்மை இயக்குகின்ற இறைவனை நாம் உணர்வதில்லை.

இன்னுமொரு உதாரணம்: இந்த மின்விசிறியை எது தாங்கியுள்ளது என்று கேட்டால் அதனுடன் இணைக்கப்பட்ட குழாய் தாங்கியுள்ளது என்று பதில் வரும். குழாயை எது தாங்கியுள்ளது எனில், இந்தக் கட்டிடம் எனப் பதில் வரும். ஆனால் உண்மையில் தாங்கி நிற்பது இந்தப் பூமிதான். அதுபோலவே பூமி உட்பட அனைத்தையும் தாங்கி நிற்பது இறைவன் ஒருவனே.

"ஒன்றும் நீயில்லை அன்றி ஒன்றில்லை" என்று மாணிக்கவாசகர் சொல்லுவார். இதன் பொருள் என்னவெனில், இந்த உலகத்தில் உள்ள எந்தப்பொருளும் நீயில்லை, நீ... நீதான். நான்... நான்தான். சடப்பொருள்... சடப்பொருள்தான். ஆனால் நீயில்லாமல் எந்தப் பொருளும் இல்லை. எல்லாப் பொருள்களிலும் நீ கலந்திருக்கிறாய். ஆக எல்லாப் பொருள்களிலும் கலந்திருக்கிற அந்தப் பரம்பொருளைப் பற்றி நாம் தெரிந்துகொண்டு அவரோடு நாம் கலப்பதே இந்த உயிரின் கடமை. அதாவது இந்த உயிரை இறைவனிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பதே நமது தலையாய பணி. அதற்குத் தடையாக இருக்கின்ற அத்தனையும் பொய்ப் பொருள்களே. உடனே உறவுகளையெல்லாம் விட்டுவிட்டுச் செல்வதற்காக நாம் சித்தாந்தம் பயிலவில்லை. உண்மைப் பொருளை உணர்ந்து அத்தனை பொருள்களும் சிவப்பரம்பொருளின் சொத்து. நமது அனுபவத்திற்காகக் கொடுத்திருக்கிறார் என்று உணர வேண்டும்.'

**அப்பன் நீ, அம்மை நீ, ஐயனும் நீ, அன்புடைய மாமனும் மாமியும் நீ,**
**ஒப்பு உடைய மாதரும் ஒண்பொருளும் நீ, ஒரு குலமும் சுற்றமும் ஓர் ஊரும் நீ,**
**துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ, துணை ஆய் என் நெஞ்சம் துறப்பிப்பாய் நீ,**
**இப்பொன் நீ, இம்மணி நீ, இம் முத்து(ந்)நீ, இறைவன் நீ, ஏறு ஊர்ந்த செல்வன் நீயே.**

- தனித் திருத்தாண்டகம்

அத்துணைப் பொருட்களும் அவன் தந்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நைவேத்திய பொருள்களை இறைவன் எடுத்துக்கொள்கிறாரா?**

நாம் இறைவனுக்கு நைவேத்தியம் செய்யும் பொருளை சூக்குமமாக எடுத்துக்கொண்டு, தூலமான அவையனைத்தையும் நம்மிடமே இருக்கும்படி செய்துவிடுகிறார். உதாரணமாக, ஐந்தெழுத்தை உங்களுக்கு எழுதிக்காட்டினால் அது உங்கள் அனைவரிடமும் சென்று சேர்ந்து பதிந்துவிடும். ஆனால் ஐந்தெழுத்து எழுதப்பட்ட தாளில் அப்படியே இருக்கும். அதைப்போன்றே நாம் இறைவனுக்கு அன்போடு படைத்த நைவேத்தியப் பொருள்களை இறைவன் எடுத்துக்கொள்கிறார். நாம் கோயிலில் போய் அவருக்குத்தான் எனச்சொல்லி சங்கல்பம் பண்ணுவோம். அதைப்போல அத்துணைப் பொருள்களும் அவருக்குரிய பொருள்களே என்று நாம் நினைத்து அத்தனைப் பொருட்களையும் நாம் அனுபவித்தால் நிச்சயம் துன்பத்திலிருந்து நாம் விடுதலை பெறுவோம். பேரின்பத்தை அடைவோம். அதை நோக்கித்தான் இந்தச் சைவ சித்தாந்தத்தின் பயணமே இருக்கிறது. வாழும்வரை இன்பம் - வாழ்வின் நிறைவில் பேரின்பம் என்பதே நமது நோக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| அருள் வாழ்த்துரை | - ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் | iii |
| முன்னுரை | - சைவப்புலவர் சு. செல்லத்துரை | iv |
| அறிமுகவுரை | - சைவப்புலவர் செ. நவநீதகுமார் M.A | ix |
| மெய்கண்ட வாழ்வு மேதினியில் நிலைக்கட்டும் | - செல்லத்துரை நாவரசன் | |
| சைவசித்தாந்தம் ஏன் பயில வேண்டும் | - திருவாவடுதுறை ஆதீனம் | xi |
| 01. உண்மை விளக்கம் | - திருவதிகை மனவாசகம் கடந்ததேவர்<br>உரை : சிறுவைகிழார் சைவப்புலவர் இ. செல்லத்துரை | 01 |
| 02. திருவருட்பயன் | - உமாபதி சிவாசாரியார் (கி.பி 1313)<br>உரை : சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் | 23 |
| 03. சிவப்பிரகாசம் | - உமாபதி சிவாசாரியார் (கி.பி 1313)<br>உரை : கொழும்பு மு. திருவிளங்கதேசிகர் | 50 |
| 04. சிவஞானசித்தியார் | - அருணந்தி சிவாசாரியார் (கி.பி 1232)<br>உரை : கொழும்பு மு. திருவிளங்கதேசிகர் | 105 |
| 05. சிவஞானபோதம் | - மெய்கண்டதேவர் (கி.பி 1232)<br>சூத்திர உரை : சைவப்புலவர் சு. செல்லத்துரை | 275 |
| 06. திருவுந்தியார் | - திருவியலூர் உய்யவந்த தேவர் (கி.பி 1147)<br>பழைய உரை | 308 |
| 07. திருக்களிற்றுப்படியார் | - திருக்கடவூர் உய்யவந்த தேவர் (கி.பி 1177)<br>பழைய உரை | 321 |
| 08. இருபா இருபஃது | - அருணந்தி சிவாசாரியார் (கி. பி 1232)<br>பழைய உரை | 356 |
| 09. வினாவெண்பா | - உமாபதி சிவாசாரியார் (கி.பி 1313)<br>உரை : சிறுவைக்கிழார் சைவப்புலவர் இ. செல்லத்துரை | 374 |
| 10. போற்றிப் பஃறொடை | - உமாபதி சிவாசாரியார் (1313)<br>பழைய உரை | 381 |
| 11. கொடிக்கவி | - உமாபதி சிவாசாரியார் (1313)<br>உரை : சிறுவைகிழார் சைவப்புலவர் இ. செல்லத்துரை | 394 |
| 12. நெஞ்சுவிடு தூது | - உமாபதி சிவாசாரியார் (1313)<br>பழைய உரை | 396 |
| 13. உண்மைநெறி விளக்கம் | - உமாபதி சிவாசாரியார் (1313)<br>உரை : சிறுவைகிழார் சைவப்புலவர் இ. செல்லத்துரை | 413 |
| 14. சங்கற்ப நிராகரணம் | - உமாபதி சிவாசாரியார் (1313)<br>பழைய உரை | 418 |
| பாட்டு முதற் குறிப்பு அகராதி | | 483 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்வரும் சொற்பதங்களைத் திருத்தி வாசிக்கவும்

| தலைப்பு | பக்கம் | பாடல் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|---|
| முன்னுரை 2 | vi | -- | 9 | ஏழுசந்தான | ஆறுசந்தான |
| முன்னுரை 2 | vii | -- | 24 | கரியது | குரியது |
| **உண்மைவிளக்கம்** | | | | | |
| | 4 | 9 | 1 | திரிக்கும் | தரிக்கும் |
| | 8 | 18 | 2 | ஏலவிராகம் | ஏலவராகம் |
| | 10 | 24 | 2 | சித்தவித்தை | சித்தசித்தை |
| **திருவருட்பயன்** | | | | | |
| | 30 | 27 | 1 | துன்புஎன் | துன்பு ஏன் |
| | 31 | 30 | 1 | விள்கனைய | விளக்கனைய |
| | 32 | 34 | 2 | ஆஜம் | ஆழும் |
| | 33 | 36 | 2 | உணராத | உணரா |
| | 33 | 37 | 2 | தற்கோடர் | தற்கேடர் |
| | 33 | 39 | 1 | பரம்பு | பரப்பு |
| | 34 | 42 | 1 | உள்ளிரன் | உள்ளனர் |
| | 35 | 43 | 2 | பொருளா அறியா | பொருளார் அறிவார் |
| | 36 | 48 | 1 | அகலர்த் | அகலத் |
| | 36 | 48 | 1 | ஆர்க்கும் | ஆக்கும் |
| | 38 | 56 | 1 | கண்தொல்லை | கண்டொல்லை |
| | 39 | 59 | 1 | புலனுமாக் | புலனாக் |
| | 39 | 62 | 1 | திருந்திடுகாப் | திருந்திடுநாப் |
| | 40 | 63 | 2 | வீணடாவ | வீண்பாவம் |
| | 43 | 76 | 1 | ஓவார் | ஓவாது |
| | 43 | 77 | 1 | அளவும் இனி | அளவுமே |
| | 44 | 78 | 2 | கண்படும்போர் | கண்படுப்போர் |
| | 44 | 80 | 1 | இன்று | இன்பு |
| | 45 | 84 | 2 | தீரின் | தீரப் |
| | 45 | 85 | 2 | மேலாசி | மேலாசு |
| | 46 | 86 | 2 | மேலாதும் | மேலோதும் |
| | 47 | 92 | 1 | காரணங்கள் | காரணர்கள் |
| | 48 | 94 | 2 | நலன் | தலம் |
| | 48 | 95 | 1 | அவ்னா | அவனாம் |
| | 50 | காப்பு | 4 | நியையாவே | நினையாவே |
| | 51 | 2 | 2 | ரூபத் | ரூபந் |
| | 62 | 19 | 1 | லழுத்தி | லழுந்தி |
| | 62 | 20 | 4 | முழுநினையு | முழுதினையு |
| | 64 | 22 | 3 | அணுக்கனியார்க்கு | அணுக்களியார்க்கு |
| | 64 | 23 | 1 | எல்லையிது | என்னையிது |
| | 65 | 24 | 1 | படையின்றி | படியின்றி |
| | 67 | 26 | 1 | மாயேயாம் | மாயேயம் |
| | 75 | 38 | 7 | முயிரணைத்து | முயிரணைந்து |
| | 80 | 47 | 2 | சராயுசங்கணாகித் | சராயுசங்கணான்கின் |
| | 81 | 48 | 7 | சின்மருவு | சினமருவு |
| | 81 | 48 | 3 | காலத்தகுந்த | காலத்தருந்த |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்வரும் சொற்பதங்களைத் திருத்தி வாசிக்கவும்

| தலைப்பு | பக்கம் | பாடல் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|---|
| | 82 | 49 | 7 | கிரியாபோகக் | கிரியாயோகக் |
| | 83 | 51 | 1 | இங்கினை | இங்கிவை |
| | 95 | 79 | 4 | உடையனனடி | உடையவனடி |
| | 101 | 92 | 2 | தருனோங்கு | தருளோங்கு |
| | 101 | 93 | 4 | றுசுளிலோரே | றுகளிலோரே |
| சிவஞானசித்தியார் | | | | | |
| | 110 | 12 | 2 | செயிர்உறு | செயிர்ஒடு |
| | 126 | 48 | 3 | சந்தங்களோடும் | சத்தங்களோடும் |
| | 144 | 88 | 4 | முனையான | முளையான |
| | 153 | 108 | 3 | பாய்ந்தால் | மாய்ந்தால் |
| | 161 | 125 | 3 | கூட்டிபாலும் | கட்டிபாலும் |
| | 169 | 144 | 2 | அணித்தும் | அளித்தும் |
| | 173 | 151 | 2 | புந்தி | புத்தி |
| | 173 | 151 | 3 | சந்த | சத்த |
| | 178 | 163 | 2 | புகன்று | புகன்ற |
| | 186 | 180 | 1 | நரல் | நரர் |
| | 208 | 226 | 4 | சனனம் | சன்னம் சாரும் |
| | 222 | 254 | 6 | சந்நிதிபாதத்தால் | சத்திநிபாதத்தால் |
| | 229 | 265 | 8 | அடிக்கீழ் | அடிக்கீழ் அடங்கிடும் |
| | 232 | 269 | 2 | தன்மை | முதன்மை |
| | 232 | 269 | 3 | தோற்கும் | தோற்றும் |
| | 234 | 273 | 4 | மதுமண்டல | மதிமண்டல |
| | 235 | 274 | 4,6 | பரம, நேய | பர, ஞேய |
| | 238 | 278 | 2 | செய்திடினாம் திகழ்ந்த | செய்திடினும் திகழ்ந்து |
| | 246 | 290 | 2 | என்னில் | எங்கும் |
| | 246 | 290 | 6 | தந்துதான் | தந்துதாள் |
| | 255 | 303 | 6 | சிவன்தன்னை | சீவன்தன்னை |
| | 264 | 316 | 1 | அடிமை | அடியை |
| | 270 | 323 | 8 | தடம் | தட்டம் |
| சிவஞானபோதம் | | | | | |
| | 277 | பொதுஇயல்பு | 3 | பிராமண இயல் | பிரமாண இயல் |
| | 298 | 8ஆம் சூத்திரம் | 3 | ஒருவருத் | ஒருவ |
| | 301 | சூத்திரம் 10 | 4 | வல்வினைகின்றே | வல்வினையின்றே |
| திருவுந்தியார் | | | | | |
| | 308 | 2 | 2 | பெண்ணோ | பெண்ணே |
| | 309 | 5 | 2 | ஆனோ | ஆனான் |
| | 310 | 7 | 2 | தென்ன | தெள்ள |
| | 310 | 10 | 3 | பொருளா | பொருள் |
| | 318 | 39 | 1 | எண்ண | என்னா |
| திருக்களிற்றுப்படியார் | | | | | |
| | 332 | 33 | 4 | நந்தன் | நத்தான |
| | 353 | 94 | 1 | ஆன்நதி | ஆனந்தி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# உண்மை விளக்கம்

## திருவதிகை-மனவாசகங் கடந்த தேவர்

காப்புச் செய்யுள் ஒன்றுடன் ஐம்பத்திநான்கு வெண்பாக்களால் அமைந்த நூல். மெய்கண்டாரின் மாணாக்கராகிய மனவாசகங் கடந்தார் தனது ஞானகுருவாகிய மெய்கண்டாரை வினாவுவதாகவும் அவர் விடை கூறுவதாகவும் வினாவிடையாக உள்ளது.

ஆறாறு முப்பத்தாறு தத்துவம் ஏது, ஆணவம் ஏது, வினை ஏது, நான் ஏது, பதியாகிய நீ ஏது, நாதன் நடமேது, ஐந்தெழுத்து ஏது என்று தனித்தனியாக வினவ அவற்றுக்கு விடை கூறும் முறையில் அமைந்துள்ளது.

சைவசித்தாந்தம் படிக்கப் புகுவோர் முதலில் படிக்க வேண்டிய நூல் இது எனப் பெரியோர் கூறுவர்.

### காப்பு

**வண்மைதரும் ஆகமநூல் வைத்த பொருள்வழுவா**
**உண்மை விளக்கம் உரைசெய்யத் - திண்மதஞ்சேர்**
**அந்திநிறத் தந்திமுகத் தொந்திவயிற் றைங்கரனைப்**
**பந்தமறப் புந்தியுள்வைப் பாம்.**

பதவுரை:- வண்மை தரும் ஆகமநூல் - பேரின்பமாய உண்மைச் செல்வத்தைத் தருகின்ற ஆகம நூலிலே, வைத்த - ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு இறைவன் அருளிச் செய்து வைத்த, பொருள் - பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களினதும், உண்மை வழுவா விளக்கம் - உண்மை(யானது) சற்றேனும் தவறாமல் காட்டும் தெளிவினை, உரைசெய்ய - (இவ்வுண்மை விளக்கம் என்னும் நூலில்) சொல்லுவதற்கும், பந்தம் அற - மலபந்தம் ஒழியும் பொருட்டும், திண்மதம் அந்திநிறம் தந்திமுகம் தொந்தி வயிறு சேர் ஐங்கரனை - (ஞானசத்தி கிரியாசத்தி ஆகிய இரண்டு) வலிய மதங்களும், செவ்வானத்தையொத்துப் பிரகாசிக்கின்ற நிறமும், (பிரணவக் குறியாகிய) யானை முகமும், பெரிய வயிறும் பொருந்திய ஐந்து கரங்களையுடைய விநாயகக் கடவுளை, புந்தியுள் வைப்பாம் - நாம் எமது சித்தத்துள் இருத்தித் தியானிப்பாம்.

### நூல்

மாணாக்கனின் வினா விண்ணப்பம்

**பொய்காட்டிப் பொய்யகற்றிப் போதானந் தப்பொருளாம்**
**மெய்காட்டும் மெய்கண்டாய் விண்ணப்பம் - பொய்காட்டா**
**மெய்யா! திருவெண்ணெய் வித்தகா! சுத்தவினா**
**வையாநீ தான்கேட் டருள்.** 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை:- பொய்காட்டி– பக்குவான்மாவுக்குத் தநுகரண புவனபோகங்கள் பொய் எனக் காட்டி, பொய் அகற்றி– அப் பொய் அனுபவங்களை ஆன்மா பெற்றுக்கொள்ளுவதினின்றும் நீக்கி, போத ஆனந்தப் பொருளாம் மெய்காட்டும்– (அங்ஙனம் நீங்கச் செய்தவிடத்துப் பரிசுத்தமாய் நின்ற) ஆன்மாவின் அறிவிலே பேரானந்தம் தந்தருளுகின்ற இறைவனின் உண்மை இயல்பினை விளக்கியருளுகின்ற, மெய்கண்டாய்– (சுவேதவனப் பெருமாள் என்னும் இயற்பெயரையுடைய மெய்கண்ட நாதனே, பொய்காட்டா மெய்யா– (அபக்குவான்மாவுக்குப்) பொய்யை விளக்கிக் காட்டாத சத்தியத்தை உடையவனே, திருவெண்ணெய் வித்தகா– திருவெண்ணெய் நல்லூரிலே எழுந்தருளியிருக்கின்ற ஞானதேசிகனே, ஐயா– தலைவனே, சுத்த வினா விண்ணப்பம் நீதான் கேட்டருள்– எனது பரிசுத்தமான வினாமுறையில் அமைந்த வேண்டுகோளை நீ திருச்செவி சாய்த்து அருளவேண்டும்.

மாணாக்கனின் வினாக்கள்

**ஆறாறு தத்துவமே தாணவமே தன்றேதான்**
**மாறா வினையேது மற்றிவற்றின் - வேறாகா**
**நானேது நீயேது நாதன்நடம் அஞ்செழுத்துத்**
**தானேது தேசிகனே சாற்று.** 2

பதவுரை:- தேசிகனே – எனது ஞானாசிரியனே, ஆறு ஆறு தத்துவம் ஏது– முப்பத்தாறு தத்துவங்கள் எனச் சொல்லப்படுபவை யாவை? அன்றே தான் மாறா ஆணவம் ஏது– அநாதியே ஆன்மாவோடு உளதாய் இன்றுவரை விட்டு நீங்காத ஆணவமலம் யாது? வினை ஏது– வினை என்று சொல்லப்படுவது யாது? (மற்று) இவற்றின் வேறு ஆகா நான் ஏது? – இம் மும்மலங்களைப் பற்றி நின்றவிடத்து இவற்றின் வேறாகாமல் இவையேயாய் நின்ற எனது சொரூப இலக்கணம் யாது? நீ ஏது– இறைவனது சொரூப இலக்கணம் யாது? நாதன் நடம் ஏது– ஆன்ம நாதனாகிய இறைவனது திருநடனம் யாது? அஞ்செழுத்துத்தான் ஏது– திருவைந்தெழுத்தின் உண்மைப் பொருள் யாது? (நீ) சாற்று– (இவ்வினாக்களுக்குரிய விடைகளை நீ) சொல்லியருளுவாயாக.

தேசிகனின் முன்னுரை

**உள்ளபடி இத்தை உரைக்கக்கேள் உன்றனக்கு**
**வள்ளலரு ளாலன்று வாய்மலர்ந்து - தெள்ளியசீர்**
**ஆகமங்கள் சொன்ன அடைவிலே ஆனந்த**
**யோகம் நிகழ்புதல்வா உற்று.** 3

பதவுரை:- ஆனந்த யோகம் நிகழ் புதல்வா– பேரானந்த நிலையைப் பொருந்தி இருப்பதற்குப் பக்குவமான மாணாக்கனே, உன்றனக்கு– உனக்கு, வள்ளல் அருளால்– பரோபகாரியான இறைவன் தம்மிடம் இயல்பாகவே பொருந்தியிருக்கும் பேரருளினாலே, அன்று வாய் மலர்ந்து சொன்ன– அநாதியே திருவாய் மலர்ந்தருளிய, சீர் ஆகமங்கள் உள்ளபடி அடைவிலே தெளிய– சிறப்புப் பொருந்திய சிவாகமங்களில் உள்ள உண்மை இருந்தபடி முறைமையாகத் தெளியும் பொருட்டு, இத்தை உரைக்க உற்றுக்கேள்– இதனை (நீ கேட்ட வினாக்களுக்கு உரிய விடைகளை) யான் சொல்லப் புலவொடுக்கத்தோடு கேட்பாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பூத வடிவும் அவற்றாலாம் உடம்பும்

**நாற்கோணம் பூமிபுனல் நண்ணுமதி யின்பாதி**
**ஏற்குமனல் முக்கோணம் எப்போதும் - ஆர்க்கும்**
**அறுகோணங் கால்வட்டம் ஆகாயம் ஆன்மா**
**உறுகாயம் ஆமிவற்றால் உற்று.** 4

பதவுரை:- பூமி நாற்கோணம் (நண்ணும்)– நிலம் நாற்கோணமாய் இருக்கும், புனல் மதியின் பாதி நண்ணும்– நீர் பாதிச் சந்திரனைப் போன்றதாய் (நிலத்தில்) அமைந்திருக்கும்; அனல் முக்கோணம் ஏற்கும்– தீ முக்கோண வடிவினைப் பொருந்தி நிற்கும்; கால் எப்போதும் அறுகோணம் ஆர்க்கும்– காற்று எக்காலமும் ஆறுகோணமாக இருக்கும்; ஆகாயம் வட்டம் (ஆர்க்கும்) – ஆகாயம் வட்ட வடிவத்தைப் பொருந்தும்; ஆன்மா உற்று உறுகாயம் இவற்றால் ஆம்– ஆன்மாவானது வேறுபடப் பொருந்தி நிற்கும் உடம்பு இந்த ஐம்பூதங்களினால் உண்டாகும்.

ஐம்பூத நிறமும் எழுத்தும்

**பொன்பார் புனல் வெண்மை பொங்கு மனல்சிவப்பு**
**வன்கால் கருமைவளர் வான்றூமம் - என்பார்**
**எழுத்து லவரயவப் பாராதிக் கென்றும்**
**அழுத்தமாய் நிற்கு மது.** 5

பதவுரை:- பார் பொன்– நிலம் பொன்நிறமானது, புனல் வெண்மை– நீர் வெண்மை நிறமானது, பொங்கும் அனல் சிவப்பு– மேல் எழுந்து எரிகின்ற தீ சிவப்பு நிறமானது, வன்கால் கருமை– வலிமை பொருந்திய காற்று கருமையானது, வளர் வான் தூமம்– மேன்மேலும் விரிந்து செல்வதாய்க் காணப்படும் ஆகாயம் புகை நிறமானது, என்பார்– என்று பெரியோர் கூறுவார்கள், பார் ஆதிக்கு எழுத்து லவரய அ– நிலத்துக்கு லகரமும் நீருக்கு வகரமும் தீயுக்கு ரகரமும் காற்றுக்கு யகரமும் ஆகாயத்துக்கு அகரமும் பொருந்திய எழுத்துக்களாம், அது என்றும் அழுத்தமாய் நிற்கும்– அவ்வெழுத்துக்கள் எப்போதும் அவற்றை உறுதியாகப் பொருந்தி நிற்பனவாம்.

ஐம்பூத அடையாளம்

**குறிகுலிசங் கோகநதங் கொள்சுவத்தி குன்றா**
**அறுபுள்ளி யாரமுத விந்துப் - பிறிவின்றி**
**மண்புனல்தீக் கால்வானம் மன்னும் அடைவேயென்**
**றொண்புதல்வா வாகமமோ தும்.** 6

பதவுரை:- ஒண் புதல்வா– நல்ல மாணவனே, மண் புனல் தீ கால் வானம் (என்பவற்றின்) குறி– நிலம் நீர் தீ காற்று ஆகாயம் என்பவற்றின் அடையாளம், அடைவே– முறையே, குலிசம்– வச்சிரமும், கோகநதம்– தாமரை மலரும், கொள்சுவத்தி– பொருந்திய சுவத்திகமும், குன்றா அறுபுள்ளி– குறைவுபடாத ஆறு புள்ளியும், ஆர் அமுத விந்து– பொருந்திய அமுதத் துளியும் ஆகும், இவை பிறிவு இன்றி மன்னும் என்று ஆகமம் ஓதும். இவை வேறுபடுதலின்றிப் பொருந்தி நிலைபெற்றிருக்கும் என்று ஆகமம் உரைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பூதத்துக்கும் அதி தெய்வமும் தொழிலும்

**பாராதி ஐந்துக்கும் பன்னுமதி தெய்வங்கள்**
**ஆரா ரயனாதி யைவராம் - ஓரோர்**
**தொழிலவர்க்குச் சொல்லுங்கால் தோற்றமுத லைந்தும்**
**பழுதறவே பண்ணுவர்காண் பார். 7**

பதவுரை:- பன்னும் பார் ஆதி ஐந்துக்கும் அதி தெய்வங்கள் ஆர் ஆர் சொல்லப்படுகின்ற நிலம் நீர் தீ காற்று ஆகாயம் என்னும் ஐம்பூதங்களுக்கும் மேலான தெய்வங்கள் யாவரெனில், அயன் ஆதி ஐவராம்– அவர்கள் முறையே பிரமா விஷ்ணு உருத்திரன் மகேசுரன் சதாசிவன் என்போராவர்; அவர்க்கு ஓர் ஓர் தொழில் சொல்லுங்கால் தோற்றம் முதல் ஐந்தும் ஆம்– அவர்களுக்குப் பொருந்திய ஒவ்வொரு தொழில் சொல்லுமிடத்து, அவை முறையே, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்துமாம்; பழுது அறவே பண்ணுவர் காண்பார்– அவர்கள் தத்தம் தொழில்களைப் பிழையறச் செய்வார்கள் என்று அறிவாயாக.

இதுவுமது

**படைப்ப னயனளிப்பன் பங்கயக்கண் மாயன்**
**துடைப்ப னுருத்திரனுஞ் சொல்லில் - திடப்பெறவே**
**என்றுந் திரோபவிப்ப ரீசர் சதாசிவரும்**
**அன்றே யனுக்கிரக ராம். 8**

பதிப்புரை:- சொல்லில்– ஒவ்வொருவருக்கும் அவ்வவர் தொழிலைப் பொருந்தச் சொல்லுமிடத்து; அயன் படைப்பன்– பிரமா படைத்தலைச் செய்வர்; பங்கயக்கண் மாயன் அளிப்பன்– செந்தாமரை மலர்போலும் கண்களையுடைய விஷ்ணு காத்தலைச் செய்வர்; உருத்திரன் துடைப்பன்– உருத்திரமூர்த்தி அழித்தலைச் செய்வர்; ஈசர் என்றும் திடம்பெறவே திரோபவிப்பர்– மகேசுவர மூர்த்தி எக்காலமும் நிச்சயமாகவே மறைத்தலைச் செய்வர்; சதாசிவர் அன்றே அனுக்கிரகராம்– சதாசிவ மூர்த்தி அநாதியாகவே அருளலைச் செய்பவராம்.

ஐம்பூத இயல்பு

**மண்கடின மாய்த்திரிக்கும் வாரிகுளிர்ந் தேபதமாம்**
**ஒண்கனல்சுட் டொன்றுவிக்கும் ஓவாமல் - வண்கால்**
**பரந்துசலித் துத்திரட்டும் பார்க்கிலா காயம்**
**நிரந்தரமாய் நிற்கும் நிறைந்து. 9**

பதவுரை:- பார்க்கில் ஐம்பூதங்களின் இயல்பை ஆராய்ந்து பார்க்குமிடத்து, மண்கடினமாய்த் திரிக்கும்– நிலம் பொருள்களிடத்துக் கடினமான குணத்தைக் கொடுத்து நிற்கும் (இயல்பினையுடையதாம்), வாரி குளிர்ந்து (+ஏ) பதமாம்– நீர் விடயங்களிற் குளிர்ச்சியுடையதாய் நெகிழ்வு பொருந்தி நிற்கும் (இயல்பினையுடையதாம்); ஒண் கனல் சுட்டு ஒன்றுவிக்கும்– ஒளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்திய தீ விடயங்களில் சுடுதலைச் செய்து அவைகளைச் சேரச்செய்து நிற்கும் (இயல்பினையுடையதாம்); வண்கால் ஓவாமல் பரந்து சலித்துத் திரட்டும்– வளப்பம் பொருந்திய காற்று நீக்குதலின்றி எங்கும் பரந்து அசைந்து ஒலித்து விடயங்களைத் திரட்டி நிற்கும் (இயல்பினையுடையதாம்); ஆகாயம் நிரந்தரமாய் நிறைந்து நிற்கும்– ஆகாயம் எப்பொழுதும் எவ்விடயங்களும் நடைபெறுவதற்கு இடங்கொடுத்து அதனால் நிறைவுடையதாய் நிற்கும் (இயல்பினையுடையதாம்).

## ஐம்புலன்

**உள்ளபடி மாபூதம் ஓதினோம் உன்றனக்குக்**
**கள்ளமிகும் ஐம்புலனுங் கட்டுரைக்கில் - மெள்ளவே**
**ஓசை பரிசம் உருவம் சுவைநாற்றம்**
**ஆசைதரும் ஐம்புலனே யாம்.** 10

பதவுரை:- உன்றனக்கு உள்ளபடி மாபூதம் ஓதினோம் (மாணவகனே) இதுவரை உனக்குப் பஞ்ச பூதங்களையும் அவற்றின் உண்மை இயல்புகளையும் அவை பொருந்தியிருந்தபடி உரைத்தோம்; (இனி) கள்ளம் மிகும் ஐம்புலனும் மெள்ள (+ஏ) கட்டுரைக்கில்– இனி நேரிய நெறியிற் செல்லாமல் இழிந்த கள்ள வழியிலே ஆன்மாவை இட்டுச் சென்று தீமை விளைவிக்கின்ற ஐந்து புலன்களைச் சொல்லுமிடத்து, ஆசை பரிசம் உருவம் சுவை நாற்றம் ஆம் (இவை)– ஓசையும் ஊறும் ஒளியும் சுவையும் நாற்றமும் ஆகிய இவை, ஓசை தரும் ஐம்புலன் (+ஏ) ஆம்– ஆன்மாவுக்கு நிலையற்ற உலகவிடயங்களில் ஆசையை உண்டாக்குகின்ற ஐம்புலன்களாம்.

## ஐம்பொறிகள்

**ஞானேந் திரியங்கள் நன்றா வுரைக்கக்கேள்**
**ஊன மிகுபூதம் உற்றிடமா - ஈனமாம்**
**சத்தா தியையறியுந் தானஞ் செவிதோள்கண்**
**அத்தாலு மூக்கென் றறி.** 11

பதவுரை:- ஞான இந்திரியங்கள் நன்றா(க) உரைக்கக் கேள்– மாணாக்கனே (ஐம்புலன்களைச் சொன்னோம் இனி) ஐம்பொறிகளை நன்றாகச் சொல்லுகிறோம் கேட்பாயாக; (அவை) ஊனம் மிகுபூதம் இடமா உற்று– அவ்வைம்பொறிகளும் ஆன்மாவுக்குத் துன்பத்தை மிகுதியாகச் செய்கின்ற பஞ்ச பூதங்கள் இடமாகப் பொருந்தி நின்று, ஈனம் ஆம் சத்தம் ஆதியை அறியும்– இழிவு உடைய சத்தம் முதலிய புலன்களை அறிகின்ற, தானம் (ஆகிய) செவி தோல் கண் அத்தாலு மூக்கு என்று அறி– இடங்களாகிய காதும் தோலும் கண்ணும் நாக்கும் மூக்கும் என்று அறிவாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பொறிகளின் புலன்களும் அவை பஞ்ச பூதங்களில் தொடர்புமாறும்

**வானிடமா நின்றுசெவி மன்னும் ஒலியதனை**
**ஈனமிகுந் தோல்கால் இடமாக - ஊனப்**
**பரிசந் தளையறியும் பார்வையிற்கண் அங்கி**
**விரவியுரு வங்காணு மே.** 12

பதவுரை:- செவி வான் இடமா(க) நின்று மன்னும் ஒலி அதனை அறியும்– செவியானது ஆகாயத்தைப் பொருந்தி நின்று விளங்குகின்ற சத்தத்தை அறியும்; ஈனம் மிகும் தோல் கால் இடமா(க) (நின்று) ஊனப்பரிசம்தனை அறியும்– இழிந்த தன்மையை அதிகமாகவுடைய தோலானது காற்றைப் பொருந்தி நின்று குறைவுபாடுடைய பரிசத்தை அறியும்! பார்வையில் கண் அங்கி விரவி (நின்று உருவம் காணும் (+ஏ)– பார்க்கும் சக்தியுடையதாகிய கண் (நெருப்பின்) ஒளியைப் பொருந்தி உருவத்தை அறியும்.

இதுவுமது

**நன்றாக நீரிடமா நாவிரதந் தானறியும்**
**பொன்றா மணம்மூக்குப் பூவிடமா - நின்றறியும்**
**என்றோது மன்றே யிறையா கமமிதனை**
**வென்றார்சென் றாரின்ப வீடு.** 13

பதவுரை:- நா (தான்) நீர் இடமா(க) நின்று இரதம் நன்றாக அறியும்– நாக்கு நீரைப் பொருந்தி நின்று இரதத்தை நன்கு அறியும்; மூக்கு பூ இடமா(க) நின்று பொன்றா மணம் அறியும்– மூக்கு நிலத்தைப் பொருந்தி நின்று கெடாத சுகந்தத்தை அறியும்; என்று இறை ஆகமம் அன்றே ஓதும்– என்று இவ்வாறு சிவாகமங்கள் அநாதியே உரைக்கும்; இதனை வென்றார் இன்ப வீடு சென்றார்– இப் பஞ்சப் புலன்களின் வழிச் செல்லாமல் அவற்றை வென்று நின்றவர்கள் பேரானந்தப் பேறுதரும் முத்தியைப் பெற்றோராவர்.

கண்மேந்திரியங்களும் அவற்றின் இயல்பும்

**கண்ணுதல்நூ லோதியிடுங் கன்மேந் திரியங்கள்**
**எண்ணும் வசனாதிக் கிடமாக - நண்ணியிடும்**
**வாக்குப்பா தம்பாணி மன்னுகுதம் உபத்த**
**மாக்கருது நாளு மது.** 14

பதவுரை:- மன்னும் வாக்கு பாதம் பாணி குதம் உபத்தமா(க) நாளும் கருதும் கன்ம இந்திரியங்கள் (அது)– பொருந்திய வாக்கும் பாதமும் கையும் மலவாயிலும் (ஆண் பெண்) குறியும் எ எப்போதும் மதிக்கப்படுகின்ற கன்மேந்திரியங்களாகிய அவை ஐந்தும், எண்ணும் வசனம் ஆதிக்கு இடம் ஆக நண்ணியிடும்– நினைக்கப்படுகின்ற வசனித்தல் நடத்தல் தானஞ் செய்தல் கழித்தல் இன்புறுதல் ஆகிய ஐந்தினுக்கும் இடமாகப் பொருந்தி நிற்கும்; (என்று) கண்ணுதல் நூல் ஓதியிடும் என்று இங்ஙனம் இறைவனருளிய ஆகம நூல்கள் சொல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்மேந்திரியங்கள் தூலபஞ்ச பூதங்களைப் பொருந்தி இயங்குமாறும்

**வாக்காகா யம்இடமா வந்துவச னிக்குங்கால்**
**போக்காருங் காற்றிடமாப் புல்கியனல் - ஏற்கும்**
**இடுங்கை குதநீ ரிடமா மலாதி**
**விடும்பா ரிடமுபத்தம் விந்து.** 15

பதவுரை:- வாக்கு ஆகாயம் இடமா(க) வந்து வசனிக்கும்– வாய் ஆகாயம் இடமாகப் பொருந்தி நின்று வார்த்தை பேசும்; கால் காற்று இடமா(க)ப் போக்கு ஆரும்– பாதம் காற்றினிடமாகப் பொருந்தி நின்று நடத்தல் செய்யும்; கை அனல் புல்கி ஏற்கும், இடும்– கை தீயின் இடமாகப் பொருந்தி நின்று ஏற்றலும் ஈதலும் செய்யும்; குதம் நீர் இடமா(க) மலம் ஆதி விடும்– மலவாயில் நீரைப் பொருந்தி நின்று மலம் (சலம்) கழிக்கும்; உபத்தம் பார் இடம் விந்து (விடும்)– (ஆண் பெண்) குறி நிலத்தினிடமாகப் பொருந்தி நின்று தாதினை விட்டு இன்பமடையும்.

அந்தக் கரணங்களும் அவற்றினியல்பும்

**அந்தக் கரண மடைவே யுரைக்கக்கேள்**
**அந்தமனம் புத்தியுட னாங்காரம் - சிந்தையிவை**
**பற்றியது நிச்சயித்துப் பல்கா லெழுந்திருந்தங்**
**குற்றதுசிந் திக்கு முணர்.** 16

பதவுரை:- அந்தக்கரணம் அடைவே உரைக்கக் கேள் மாணவகனே, (கன்மேந்திரியங்களைப் பற்றிச் சொன்னோம் இனி) அந்தக் கரணங்களைப் பற்றி முறையே சொல்கிறோம் கேட்பாயாக; அந்த மனம் புத்தி ஆங்காரம் உடன் சிந்தை இவை (அந்தக்கரணமாம்) அந்த மனம் புத்தி அகங்காரம் என்பவற்றுடன் சித்தமும் சேர இந்நான்கும் அந்தக் கரணங்களாகும்; (இவற்றுள் மனம்) பற்றியது– இந்நான்கினுள் மனமானது விரும்பிச் சேர்த்துக் கொண்ட விடயத்தை, (புத்தி) நிச்சயித்து– புத்தி ஆராய்ந்து வரையறை செய்து உறுதியாய் நிற்க, (ஆங்காரம்) பல்கால் எழுந்து இருந்து– அகங்காரம் இதனைச் செய்வேன் எனப் பலமுறையும் எழுந்திருந்து ஊக்குவிக்க, (சித்தம்) அங்கு உற்றது சிந்திக்கும் (என்று நீ) உணர்– சித்தம் அதன் பயனாய் அங்கே நிகழ்ந்த விடயத்தைச் சிந்தித்து முடிந்த முடிபாக ஏற்றுக்கொள்ளும் என்று நீ உணர்வாயாக.

ஆன்ம தத்துவங்கள் இருபத்துநான்கு

**ஓதியிடும் நாலாறு முற்றான்ம தத்துவமென்**
**றாதி யருணூல் அறையுங்காண் - தீதறவே**
**வித்தியா தத்துவங்கள் தன்மை விளம்பக்கேள்**
**உத்தமனே நன்றா வுனக்கு.** 17

பதவுரை:- உத்தமனே– சிறந்த மாணவகனே, ஓதியிடும்– முன்னே சொல்லப்பட்ட, நாலாறும் உற்று– இருபத்துநான்கு தத்துவங்களும் பொருந்தி; ஆன்மதத்துவம் என்று ஆதி அருள் நூல் அறையும் காண்– ஆன்மதத்துவம் ஆகிய பெயரைப் பெறும் என்று முதல்வன் ஆகிய இறைவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளிய ஆகம நூல்கள் உரைக்கும் என நீ அறிவாயாக; வித்தியாதத்துவங்கள் தன்மை– இனி வித்தியா தத்துவங்களையும் அவற்றின் இயல்புகளையும், தீது அறவே உனக்கு விளம்ப– குற்றமில்லாதபடி உனக்கு (நான்) சொல்ல, நன்றா(க) உற்றுக் கேள்– நீ நன்கு கவனித்துக் கேட்பாயாக.

வித்தியா தத்துவங்கள் ஏழு

**காலம் நியதி கருதுங் கலைவித்தை**
**ஏலவிரா கம்புருட னேமாயை - மாலறவே**
**சொன்னோ மடைவாகச் சொன்னவிவை தம்முண்மை**
**உன்னி உரைக்கும்நா முற்று.** 18

பதவுரை:- காலம் நியதி கருதும் கலைவித்தை இராகம் புருடனே மாயை– காலமும் நியதியும் கருதப்படுகின்ற கலையும் வித்தையும் இராகமும் புருடனும் மாயையும் ஆகிய வித்தியாதத்துவங்கள் ஏழையும், மால் அறவே அடைவாக ஏலச் சொன்னோம்– (உனது) மயக்கம் அகலும்படி முறையே பொருந்துமாறு கூறினோம்; நாம் சொன்ன இவை தம் உண்மை உற்று உன்னி (அடைவாக) உரைக்கும் இனி, நாம் இங்ஙனம் கூறிய இவைகளின் உண்மை இயல்புகளைப் பொருந்தவாராய்ந்து நோக்கி (அவ்வியல்புகளை) முறையாகச் சொல்லுவோம்.

வித்தியா தத்துவங்களின் இயல்புகள்

**எல்லை பலம்புதுமை எப்போதும் நிச்சயித்தல்**
**அல்லல் தருங்கிரியை ஆன்மாவுக்(கு) - ஒல்லை**
**அறிவாசை ஐம்புலனும் ஆரவருங் காலம்**
**குறியா மயக்கென்று கொள்.** 19

பதவுரை:- ஆன்மாவுக்கு எல்லை பலம் புதுமை– ஆன்மாவுக்கு இறந்தகாலத் தெல்லையையும் நிகழ்காலத்துப் பலத்தையும் எதிர்காலத்துப் புதுமையையும் காலதத்துவம் வரையறை செய்து நிற்கும் எனவும், எப்போதும் நிச்சயித்தல் நியதிதத்துவம் (அவ்வான்மா முன்னே செய்த) கன்மங்களை அநுபவிக்கும்படி எக்காலமும் நிச்சயம் பண்ணி நிறுத்தும் எனவும், அல்லல் தரும் கிரியை– காலதத்துவம் ஆணவத்தைச் சிறிதே நீக்கி விடயங்களைப் பொருந்தும்படி அவ்வான்மாவின் கிரியாசக்தியை எழுப்பி நிற்கும் எனவும், ஒல்லை அறிவு– வித்தியாதத்துவம் விடயங்களைப் பொருந்துவதற்குரிய அறிவை ஆன்மாவிடத்தில் விளக்கி நிற்கும் எனவும், ஆசை– இராகதத்துவம் (கன்மத்துக்கீடாகப் பெற்ற போகங்களில் அநுபவித்தவற்றைச் சிறிதெனக் காட்டி, அநுபவியாதனவற்றைப் பெரிதாக்கி அவற்றிலே) ஆசையை மிகுவிக்கும் எனவும், ஐம்புலனும் ஆரவருங்காலம்– தன்னிடத்துப் பொருந்துகின்ற வினைப்போகங்களை ஐம்புல உணர்வால் ஆன்மா பொருந்தி அனுபவிக்கக் கருதும் காலத்திலே அது புருடதத்துவமாம் எனவும், குறியாமயக்கு என்று கொள்– மாயா தத்துவம் ஒன்றை நினைக்கவொட்டாமல் மயக்கத்தைச் செய்யும் எனவும் அறிந்துகொள்வாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிவ தத்துவங்கள் ஐந்து (சுத்த தத்துவங்கள்)

**வித்தியா தத்துவங்கள் ஏழும் விளம்பினோம்**
**சுத்தமாந் தத்துவங்கள் சொல்லக்கேள் - நித்தமாம்**
**சுத்தவித்தை ஈசுரம்பின் சொல்லும் சதாசிவம்நற்**
**சத்திசிவங் காணவைகள் தான்.** 20

பதவுரை:- வித்தியா தத்துவங்கள் ஏழும் விளம்பினோம்– சுத்தாசுத்த தத்துவங்களாகிய வித்தியா தத்துவங்கள் ஏழையும் முன்பு சொன்னோம்; சுத்தமாமம் தத்துவங்கள் சொல்லக்கேள்– இனி சுத்தமாகிய (சிவ) தத்துவங்களைச் சொல்லுகிறோம் கேட்பாயாக; அவைகள் (தான்) நித்தமாம் சுத்தவித்தை– அவைகளாவன நித்தியமாய் இருக்கின்ற சுத்தவித்தையும், ஈசுரம்– மகேசுரமும், பின்சொல்லும் சதாசிவம்– பின்னே கூறப்படும் சாதாக்கியமும், நல்சத்தி சிவம்காண்– நல்ல சத்தியும்–(விந்துவும்), சிவமும்–(நாதமும்) ஆகிய ஐந்துமாகும் என்று அறிவாயாக.

### சிவதத்துவங்களின் இயல்புகள்

**சுத்தவித்தை ஞானமிகுந் தொன்மையா மீசுரந்தான்**
**அத்தன் தொழிலதிக மாக்கியிடும் - ஒத்தலிவை**
**சாதாக் கியமென்றுஞ் சத்தி சிவங்கிரியை**
**ஆதார ஞானவுரு வாம்.** 21

பதவுரை:- சுத்தவித்தை ஞாம் மிகும்– சுத்தவித்தையானது கிரியை குறைந்து ஞானம் கூடியதாய் அமைந்திருக்கும்; தொன்மையாம் ஈசுரம்தான் அத்தன் தொழில் அதிகம் ஆக்கியிடும்– பழைமையதாகிய ஈசுர (மகேசுர) தத்துவம் ஞானம் குறைந்து கிரியை அதிகரித்ததாய் இருக்கும்; சாதாக்கியம் இவை ஒத்தல் ஆம்– சாதாக்கிய (சதாசிவ) தத்துவம் ஞானமும் கிரியையும் ஒத்த அளவில் பொருந்தியிருப்பதாம்; சத்தி என்றும் கிரியை (ஆம்)– சத்தி–(விந்து)தத்துவம் எப்போதும் கிரியை உடையதாய் இருக்கும்; சிவம் ஆதாரஞான உருவாம்– சிவ (நாத) தத்துவம் (யாவும் நடைபெறுவதற்கு) ஆதாரமான ஞான உருவமாக இருக்கும்.

### ஆணவமும் கன்மமும்

**ஆறாறு தத்துவமுஞ் சொன்னோ மடைவாக**
**மாறா மலமிரண்டும் வாசொல்லக் - கூறில்**
**அறியாமை ஆணவம்நீ யானசுக துக்கம்**
**குறியா வினையென்று கொள்.** 22

பதவுரை:- ஆறாறு தத்துவமும் அடைவாகச் சொன்னோம்– (மும்மலங்களுள் மாயையிலிருந்து உளவாகும்) முப்பத்தாறு தத்துவங்களையும் முறையாக உரைத்தோம்; மாறாமலமிரண்டும் சொல்ல வா– (இனி) விட்டு நீங்காமல் இருக்கின்ற (ஏனைய) இரண்டு மலங்களையும் சொல்லுகிறோம், வந்து கேட்பாயாக; கூறில் அம் மலங்களைக் கூறுமிடத்து, அறியாமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவம்– ஆன்மாவினிடத்து அநாதியே அறியாமையைச் செய்து நிற்பது ஆணவ மலம் எனவும், சுகம் துக்கம் குறியா நீ ஆனவினை என்று கொள்– இன்பம் துன்பம் ஒன்றையும் (உன்னின்று வேறாய்) நினையாமல் (அவ்வின்ப துன்ப உருவமே) நீயாய் (அவற்றின் செயலை உன் செயலாய்ப்) பொருந்தி இருப்பதுதான் கன்மமலம் எனவும் அறிந்து கொள்வாயாக.

மாணவன் வேண்டுகோள்

**ஆறாறு தத்துவமும் ஆணவமும் வல்வினையும்**
**மாறா அருளால் வகுத்துரைத்தீர் - வேறாகா**
**ன்னை எனக்கறியக் காட்டீ ரிவைகண்டேன்**
**உன்னரிய தேசிகரே யுற்று.** 23

பதவுரை:- உன்ன அரிய தேசிகரே– அபக்குவிகளால் நினைத்தற்கு அரிய ஞானாசாரியரே, ஆறாறு தத்துவமும்– முப்பத்தாறு தத்துவங்களையும், ஆணவமும்– ஆணவ மலத்தையும், வல்வினையும்– வலிய கன்ம மலத்தையும், மாறா அருளால் வகுத்து உரைத்தீர்– என்றும் விட்டு நீங்காத பெருங்கருணையினாலே வகைப்படுத்திச் சொல்லியருளினீர், இவை உற்றுக் கண்டேன்– இந்த மும்மலங்களையும் பொருந்தி அறிந்துகொண்டேன்; வேறு ஆகா என்னை அறிய எனக்குக் காட்டீர்– இனி, (இம் மலங்களைப் பற்றியதால்) இவற்றிற்கு வேறு ஆகாமல் (இவைகளேயாய்) ஒன்றுபட்டு இருக்கின்ற என்னுடைய சொரூப இலக்கணத்தை நான் அறியும்படி எனக்குக் காட்டியருளுவீராக.

சார்ந்ததன் வண்ணமாம் ஆன்மா சதசத்து

**நன்றா உரைக்கக் கேள் நல்லசித்தின் முன்னசித்திங்(கு)**
**ஒன்றாது சித்தவித்தை ஓராது - நின்றிவற்றை**
**அன்றே பகுத்தறிவ தான்மாவே என்றுமறை**
**குன்றாமல் ஓதும் குறித்து.** 24

பதவுரை:- நன்றா உரைக்கக் கேள்– (மாணவகனே நீ வினாவிய ஆன்ம தரிசனத்தை) நன்றாகச் சொல்லுகிறோம் கேட்பாயாக; நல்ல சித்தின்முன் அசித்து இங்கு ஒன்றாது சிறந்த அறிவுடைப் பொருளாகிய சிவத்தின் முன் அறிவில் பொருளாகிய பாசம் கூடி நில்லாது; சித்து அசித்தை ஓராது– (அச்) சிவம் பாசத்தைச் சுட்டி அறியவேண்டியதில்லை; இவற்றை அன்றே நின்று பகுத்து அறிவது ஆன்மாவே– சித்தாகிய சிவத்தையும் அசித்தாகிய பாசத்தையும் அநாதியாகவே பொருந்தி நின்று (சார்ந்ததன் வண்ணமாய் அவ்வவற்றை) விசாரித்து அறியுந் தன்மையுடையது ஆன்மாவேயாகும்; என்று மறை குன்றாமல் குறித்து ஓதும்– என வேதங்கள் (அவற்றைக்) குறைவுபாடின்றிச் சுட்டியுரைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவங்கள் ஆன்மாவன்று

தத்துவங்க ளாறாறுந் தம்மைத்தா மென்றறியா
எத்தன்மை யென்னி லியம்பக்கேள்- சுத்தமாம்
ஆறு சுவையு மறியாது தன்னைத்தான்
கூறி லவையிவைபோற் கொள். 25

பதவுரை:- ஆறாறு தத்துவங்களும் தம்மைத் தாம் என்று அறியா– முப்பத்தாறு தத்துவங்களும் அறிவில் பொருள்களாதலால் அவை தம்முடைய சொரூபத்தை (எக்காலத்திலும் எவ்வகையாலும்) அறியமாட்டா; எத்தன்மை யென்னில்– இது எந்த முறைமை போன்றது என வினாவில், இயம்பக்கேள்– சொல்லுகிறோம் கேட்பாயாக, கூறில்– அம் முறைமையைக் கூறுமிடத்து, சுத்தமாம் ஆறு சுவையும் தன்னைத்தான் அறியாது– தூய்மையாய் இருக்கின்ற அறுவகைச் சுவைகளும் தாம் இன்ன இன்ன சுவையுடையோம் எனத் தம்மை அறியமாட்டா, இவைபோல் அவைகொள்– இவ்வியல்புடைய சுவைகளைப் போலத் தத்துவங்களும் தம்முடைய சொரூபத்தை அறியமாட்டா என நீ உணர்ந்து கொள்ளுவாயாக.

தத்துவங்களுக்கு வேறாய் ஆன்மா உண்டு

ஆறு சுவையு மருந்தி யவைதம்மை
வேறொருவன் கூறியிடும் மேன்மைபோல் - ஆறாறும்
ஒன்றொன்றா நாடியுணர்ந் தோதிலதி லுற்றறிவாய்
நின்றபொருள் தானேகாண் நீ. 26

பதவுரை:- ஓதில்– ஆன்மா எது என்பதை உரைக்குமிடத்து, வேறு ஒருவன்– (ஆறு வகைப்பட்ட சுவைகளுக்கும்) வேறுபட்டு நின்ற ஒருவன், ஆறு சுவையும் அருந்தி– (அவ்) ஆறு சுவைகளையும் (ஒன்று ஒன்றாகப்) புசித்து, கூறியிடும் மேன்மைபோல்– (ஆராய்ந்து அறிந்து) இது கைக்கிறது; இது புளிக்கிறது; இது இனிக்கிறது எனச் சொல்லுந்தன்மை போல, ஆறு ஆறும்– முப்பத்தாறு தத்துவங்களையும், ஒன்று ஒன்றா நாடி உணர்ந்து– ஒவ்வொன்றாக விசாரித்து அறிந்து, அதில் உற்று– அவ்வநுபவத்தில் பொருந்தி, அறிவாய் நின்ற பொருள் தானே நீ காண்– அறியும் இயல்பினதாய் நின்ற பொருள்தான் நீ ஆகிய ஆன்மாவாம்.

அறிவுக்கு அறிவாய் நின்று அறிவிப்பது பதி

குன்றா வருளாலே கூறினீ ரென்வடிவு
பொன்றாத நும்முருவம் போதியீர் - நின்றருக்கன்
கண்ணுக்குக் காட்டுமாப் போலே யுனதறிவின்
நண்ணியறி வித்திடுவோம் நாம். 27

பதவுரை:- குன்றா அருளாலே என் வடிவு கூறினீர்– தேவரீர் என்றும் குறைவுபடுதலில்லாத பேரருளினாலே அடியேனுடைய சொரூபத்தை அருளிச் செய்தீர், பொன்றாத நும் உருவம் போதியீர்– இனி, கெடாத தேவரீருடைய சொரூபம் எப்படிப்பட்டதென்பதை அடியேனுக்கு அருளிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யவேண்டும்; (என மாணவகன் வினாவினானாக ஆசிரியர்:) அருக்கன் நின்று கண்ணுக்குக் காட்டுமாப் போலே– சூரியனது ஒளி நிலைபெற்று நின்று இருளை நீக்கிக் கண்ணொளியையும் பிற பொருள்களையும் காட்டுவது போல, நாம் உனது அறிவில் நண்ணி அறிவித்திடுவோம்– நாம் உனது அறிவிலே (அறிவுக்கறிவாய்ப்) பொருந்தி நின்று பாசம் பசு பதி ஆகியவற்றின் உண்மை இயல்புகளை அறிவித்து வருவோம் (என்றார்).

இறைவன் அறிவுக்கறிவாய் நிற்றல்

**அன்றியுங்கே ளான்மாவா லாய்ந்தறியு மைம்பொறிக**
**ளின்றி யறியா விவையென்ன - நின்றதுபோல்**
**ஓவாம லுன்னை யுணர்ந்துவோ முன்னறிவில்**
**மேலாமல் மேவிநா மே.** 28

பதவுரை:- அன்றியும் கேள்– முன்கூறிய அஃதேயல்லாமல் வேறும் உள; அவைகளைச் சொல்லுகிறோம் கேட்பாயாக; ஆன்மாவால் ஆய்ந்து அறியும் ஐம்பொறிகள் இன்றி அறியா– ஆன்மாவின் துணையினால் விடயங்களை அறிந்து காரியப்பட்டு வருகின்ற பஞ்சேந்திரியங்கள் "ஆன்மாவின் துணையினாலேயே (நாம்) அங்ஙனம் காரியப்பட்டு வருகின்றோம்" என உணரமாட்டா; இவை என்ன நின்றதுபோல்– இங்ஙனம் நின்ற இப் பஞ்சேந்திரியங்கள் (ஆன்மாவை அறியாமல் காரியப்பட்டமை) போல, நாமே உன் அறிவில் மேவாமல் மேவி– (உனது இயக்கத்துக்கு உறுதுணையாய் நின்ற எம்மை நீ உணராதிருக்கும் நிலையில்) நாம் உனது அறிவிலே (அறிவுக்கறிவாய்) பொருந்தாமல் பொருந்தி, உன்னை ஓவாமல்– உன்னை விட்டு நீங்காமல் நின்று, உணர்த்துவோம்– உனக்கு அறிவித்து வருவோம் (அதனை நீ அறிவாய்).

இறைவன் உயிர்க்குயிராய் நிற்றல்

**அக்கரங்கட் கெல்லா மகரவுயிர் நின்றாற்போல்**
**மிக்க வுயிர்க்குயிராய் மேவினோம் - எக்கண்ணும்**
**நில்லா விடத்துயிர்க்கு நில்லா தறிவென்று**
**நல்லா கமமோதும் நாடு.** 29

பதவுரை:- அகர உயிர் அக்கரங்கட்கு எல்லாம் (அக்கரமாய்) நின்றாற்போல்– ஷஅ; என்னும் உயிர் எழுத்தானது ஏனைய உயிர் எழுத்துக்களுக்கெல்லாம் உயிராய் நின்று இயக்குமாறுபோல, மிக்க உயிர்க்கு உயிராய் மேவினோம்– நாம் எண்ணிறந்த ஆன்மாக்களிடத்தும் அவைகளை இயக்கும் உயிராகப் பொருந்தி நின்றோம்; எக்கண்ணும் நில்லா இடத்து உயர்க்கு அறிவு நில்லாது என்று– சடசித்துக்கள் எல்லாவற்றிலும் இறைவன் பொருந்தி நின்று அறிவியாதவிடத்து உயிர் ஒன்றையும் அறியமாட்டாது என, நல் ஆகமம் ஓதும்– நல்ல சிவாகமங்கள் அறுதியிட்டுரைக்கும்; நாடு– நீ இந்த உண்மையை விசாரித்து அறிவாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவனது வேண்டுகோள்

நற்றவத்தோர் தாங்காண நாதாந்தத் தஞ்செழுத்தால்
உற்றுருவாய் நின்றாடல் உள்ளபடி - பெற்றிடநான்
விண்ணார் பொழில்வெண்ணெய் மெய்கண்ட நாதனே
தண்ணா ரருளாலே சாற்று. 30

பதவுரை:- விண் ஆர் பொழில் வெண்ணெய் மெய்கண்ட நாதனே– ஆகாயத்தை அளாவும்படி வளர்ந்த சோலைகளால் சூழப்பெற்ற திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளியிருக்கின்ற மெய்கண்ட தேவரே, நல் தவத்தோர் தாம் காண– முன்னைத் தவ விசேடமுடைய நல்லான்மாக்கள் தரிசிக்கும்படி, நாத அந்தத்து அஞ்சு எழுத்தால் உருவாய் உற்று நின்று ஆடல்– நாதத்தின் முடிவிலே இறைவன் திருவைந்தெழுத்தை திருமேனியாகக் கொண்டு நின்று திருநடனம் செய்யும் முறைமையை, நான் உள்ளபடி பெற்றிட– அடியேன் உண்மையாகத் தரிசிக்கும்படி, தண் ஆர் அருளாலே சாற்று– நீ உனது குளிர்ந்த கிருபையினாலே சொல்லியருள்வாயாக.

நடனத் திருமேனியும் நடன நோக்கமும்

எட்டு மிரண்டு முருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள் - சிட்டன்
சிவாயநம வென்னுந் திருவெழுத்தஞ் சாலே
அவாயமற நின்றாடு வான். 31

பதவுரை:- புதல்வா– மாணவகனே, நட்டம் நவிலக் கேள்– சிவபெருமானது திருநடனத்தைச் சொல்லுகிறோம் கேட்பாயாக; சிட்டன்– (அச்) சிவபெருமான், சிவாயநம என்னும் திரு எழுத்து அஞ்சாலே– சிகாரம் ஆதியாகவுடைய ஸ்ரீ பஞ்சாக்கரத்தையே திருமேனியாகக் கொண்டு, எட்டும் இரண்டும் உரு ஆன இலிங்கத்தே அவாயம் அற நின்று ஆடுவான்– அகரம் உகரம் இரண்டும் சேர்ந்த உருவமாயிருக்கின்ற யகரமாகிய ஆன்மாவிடத்திலே (அவ்வான்மாவினது) பிறவித் துன்பம் நீங்கும்படி நின்று நிருத்தம் செய்தருளுவான்.

இதுவுமது

நகராதி பஞ்சாக்கரத் திருமேனி

ஆடும் படிகேள்நல் லம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியி லேநகரம் - கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார். 32

பதவுரை:- ஐயனே– மாணாக்கனே, நல் அம்பலத்தான் ஆடும்படி கேள்– நல்ல கனகசபையிலே எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமான் திருநடனம் செய்கின்ற முறையைச் சொல்லுகிறோம் கேட்பாயாக; நாடும் திரு அடியிலே நகரம்– நாடா நின்ற திருவடியிலே நகாரமாகவும், கூடும் உதரம் மகரம்– பொருந்திய திருவுந்தியிலே மகரமாகவும், வளர் தோள் சிகரம் – வளரா நின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தோளிலே சிகாரமாகவும், பகரும் முகம் வா– சொல்லப்பட்ட திருமுகத்திலே வகாரமாகவும், முடிய;– திருமுடியிலே யகாரமாகவும் (கொண்டு அவன் திருநடனம் செய்தருளுவான் என்பதைப்) பார்– நீ விசாரித்து அறிந்துகொள்வாயாக.

இதுவுமது - சிகராதி பஞ்சாக்கரத் திருமேனி

**சேர்க்குந் துடிசிகரஞ் சிக்கனவா வீசுகரம்**
**ஆர்க்கும் யகரம் அபயகரம் - பார்க்கிலிறைக்(கு)**
**அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்**
**தங்கும் மகரமது தான்.** 33

பதவுரை:- பார்க்கில்– ஆராய்ந்து பார்க்குமிடத்து, இறைக்கு– சிவபெருமானுக்கு, ஆர்க்கும் துடிசேர்க்கும் (கரம்) சிகரம்– ஒலிக்கின்ற டமருகம் ஏந்திய திருக்கரத்திலே சிகாரமாகவும், சிக்கன வீசு கரம் வா– நன்றாக வீசிய திருக்கரத்திலே வகாரமாகவும், அபயகரம் யகரம்– அஞ்சல் என அமைத்த திருக்கரத்திலே யகாரமாகவும், அங்கி நகரம்– அக்கினி ஏந்திய திருக்கரத்திலே நகாரமாகவும், முயலகனார் தங்கும் அடிக்கீழ் மகரம் (அது) தான்– முயலகனார் பொருந்தியிருக்கும் (மிதித்த) திருவடியிலே மகாரமாகவும் பொருந்த அவ்விறைவன் திருநடனம் செய்தருளுவன் என அறிவாயாக.

இதுவுமது
திருவாசி - ஓங்காரமும், பஞ்சாக்கர நடன தரிசனத்துக்கு அதிகாரிகளும் பயனும்

**ஓங்கார மேநல் திருவாசி உற்றதனில்**
**நீங்கா வெழுத்தே நிறைசுடராம் - ஆங்காரம்**
**அற்றா ரறிவரணி யம்பலத்தா னாடலிது**
**பெற்றார் பிறப்பற்றார் பின்.** 34

பதவுரை:- ஓங்காரமே நல் திருவாசி– ஓம் என்னும் பிரணவ மந்திரமே நல்ல திருவாசியாகும்; அதனில் உற்று நீங்கா எழுத்தே நிறைசுடராம்– அப் பிரணவத்தைப் பொருந்தி அதனைவிட்டு நீங்காத பாஞ்சாக்கரமே திருவாசியில் சுடராயமைந்து நிறைந்து நின்ற (உள்) ஒளியாகும், ஆங்காரம் அற்றார் அறிவர்– இவை இங்ஙனமாதலை யான் எனது என்னும் செருக்கறுத்த பக்குவான்மாக்கள் அறிவார்கள்; அணி அம்பலத்தான் ஆடல் இது பெற்றார் பின் பிறப்பு அற்றார்– அழகிய பொன்னம்பலமுடையான் செய்கின்ற திருநடனத்தைத் தரிசிக்கப் பெற்றவர்களே பின்பு பிறப்பு இல்லாதவராவர்.

இதுவுமது - பஞ்சகிருத்திய நடனம்

**தோற்றந் துடியதனில் தோயுந் திதியமைப்பிற்**
**சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா**
**ஊன்று மலர்ப்பத்தி லுற்றதிரோ தம்முத்தி**
**நான்ற மலர்ப்பதத்தே நாடு.** 35



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை:- துடி அதனில் தோற்றம்– இறைவன் டமருகம் ஏந்திய திருக்கரத்திலே படைத்தலாகவும், அமைப்பில் தோயும் திதி– அபய கரத்திலே ஆன்மா பொருந்துகின்ற காத்தலாகவும், சாற்றியிடும் அங்கியில் (+ஏ) சங்காரம்– சொல்லப்பட்ட அக்கினி ஏந்திய திருக்கரத்திலே (மலம் நீக்கிச் சுகம் செய்தலாகிய) அழித்தலாகவும், ஊற்றம் ஆ(க) ஊன்றும் மலர்ப்பதத்தில் உற்ற திரோதம்– உறுதிபெற ஊன்றி நின்ற திருவடியிலே பிரபஞ்சத்தை மறைத்தலாகவும், நான்ற மலர்ப்பதத்து (+ஏ) முத்தி நாடு– தூக்கிய மலர்போலுந் திருவடியிலே முத்தியளித்தலாகிய அனுக்கிரகமாகவும் திருநடனம் செய்வானென்பதை நீ விசாரித்து அறிவாயாக.

மும்மலம் நீக்கி முத்தியளிக்கும் திருநடனம்

**மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டுமலஞ்**
**சாய அமுக்கியருள் தானெடுத்து - நேயத்தால்**
**ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்**
**தானெந்தை யார்பரதந் தான்.** 36

பதவுரை:- எந்தையார் பரதம் (தான்)– எமது தந்தையாகிய பரமேஸ்வரனது திருநடன முறைமையாவது, மாயைதனை உதறி– டமருகம் ஏந்திய திருக்கரத்தினாலே மாயை நீக்கி, வல்வினையைச் சுட்டு– அக்கினி ஏந்திய திருக்கரத்தினாலே கன்மத்தை அழித்து, மலம் சாய அமுக்கி– ஊன்றிய திருவடியினாலே ஆணவ மலம் மேவிடாமல் அமுத்தி, அருள் (தான்) எடுத்து– தூக்கிய திருவடியினாலே திருவருளே உடம்பாக நிறுத்தி, நேயத்தால் ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் (தான்) அளுத்தல் தான்– பெருங்கருணை கொண்டு அஞ்சலென அமைத்த திருக்கரத்தினாலே பேரானந்த சாகரத்தில் ஆன்மாவை மூழ்குவித்தலேயாம்.

அம்பலத்தான் கூத்தின் பயன் அந்தமிலின்பமாம்

**மோனந்த மாமுனிவர் மும்மலத்தை மோசித்துத்**
**தானந்த மானிடத்தே தங்கியிடும் - ஆனந்தம்**
**மொண்டருந்தி நின்றாடல் காணுமருள் மூர்த்தியாக்**
**கொண்டதிரு வம்பலத்தான் கூத்து.** 37

பதவுரை:- அந்தம் மோன மா முனிவர் மும்மலத்தை மோசித்து– முடிவான மௌன தவமுடைய சிறந்த ஞானிகள் அவனருளாலே மும்மலங்களையும் நீக்கி, ஷதான்; அந்தம் ஆன இடத்தே தங்கியிடும்– ஷநான் பிரமம்; என்னும் ஆன்ம போதம் முடிவடைந்த காலத்திலே தோன்றி நிலைத்து நிற்கின்ற, ஆனந்தம் மொண்டு அருந்தி நின்று ஆடல் காணும் (அதுதான்)– ஆனந்த வெள்ளத்தை முகந்துகொண்டு அதனை அநுபவித்திருத்தலே பயனாகத் திருநடனத்தைத் தரிசிப்பதுதான், அருள் மூர்த்தியா(க)க் கொண்ட திரு அம்பலத்தான் கூத்து– எல்லா ஆன்மாக்களும் ஈடேறவேண்டும் என இயல்பாக எழுகின்ற கருணையே திருமேனியாகக் கொண்ட திருவம்பலமுடையானது திருநடன முறைமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான் நடனம் பேணுவார்க்குப் பிறப்பில்லை

**பரையிடமா நின்றுமிகு பஞ்சாக் கரத்தால்**
**உரையுணர்வுக் கெட்டா வொருவன் - வரைமகள்தான்**
**காணும்படியே கருணையுருக் கொண்டாடல்**
**பேணுமவர்க் குண்டோ பிறப்பு.** 38

பதவுரை:- **உரை உணர்வுக்கு எட்டா ஒருவன்– வாக்கு மனாதீதனாகிய ஒப்பற்ற இறைவன், மிகு பஞ்சாக்கரத்தால் கருணை உருகொண்டு– மேன்மைமிக்க ஸ்ரீ பஞ்சாக்கரத்தினாலே கருணையே திருமேனியாகக் கொண்டு, பரை இடமாக நின்று– பராசத்தியாகிய பொன்னம்பலமே இடமாக நின்று, வரைமகள் காணும்படி (+ஏ)– மலையரையன் மகளாகிய உமையம்மை காணும்படி, ஆடல்– திருநடனஞ் செய்தருளுவதை, பேணும் அவர்க்குப் பிறப்பு உண்டோ– விரும்பி (த் தரிசித்து) வாழுகின்றவர்களுக்குத் தொடர்ந்து வருவதாகிய பிறவித் துன்பம் இல்லையாம்.**

மாணாக்கனின் வேண்டுகோள்

**நாதாந்த நாடகத்தை நன்றா யருள்செய்தீர்**
**ஓதீ ரெழுத்தஞ்சு முள்ளபடி - தீதறவே**
**அஞ்செழுத்தீ தாகி லழியுமெழுத் தாய்விடுமோ**
**தஞ்ச வருட்குருவே சாற்று.** 39

பதவுரை:- **தஞ்ச அருட்குருவே– எனக்குப் புகலிடமாயிருக்கின்ற பெருங்கருணையுடைய ஞானதேசிகரே, நாத அந்த நாடகத்தை நன்றாய் அருள் செய்தீர்– நாதமுடிவாய் இருக்கின்ற திருநடன முறைமையை அடியேனுக்கு நன்றாக அருளிச் செய்தீர்கள்; அஞ்செழுத்து ஈது (எழுத்து) ஆகில்– இறைவன் திருமேனியாகக் கொண்டருளுகின்ற பஞ்சாக்கரம் எழுத்துக்களிலே ஒன்றாயிருக்குமாயின், அழியும் எழுத்தாய் விடுமோ? – அழியும் தன்மையுடைய எழுத்தாகுமோ?, ஓதிர்– சொல்லுவீராக; தீது அற எழுத்து அஞ்சும் உள்ளபடி சாற்று – (மேலும் அடியேனது மயக்கமாகிய குற்றம் நீங்கும்படிக்குப்) பஞ்சாக்கரத்தின் உண்மை இருந்தபடி எதுவென்பதனை அருளிச் செய்வீராக.**

பொருள் அழியாப் பஞ்சாக்கரத்தின் உட்பொருள்

**உற்ற குறியழியு மோதுங்காற் பாடைகளிற்**
**சற்றும் பொருள்தான் சலியாது - மற்றதுகேள்**
**ஈசனரு ளாவி யெழிலார் திரோதமலம்**
**ஆசிலெழுத் தஞ்சினடை வாம்.** 40

பதவுரை:- **ஓதுங்கால்– பஞ்சாக்கரத்தின் உண்மையைச் சொல்லுமிடத்து, பாடைகளில் உற்ற குறி அழியும்– பல்வேறு மொழிகளிலும் பொருந்திய எழுத்துக்களின் குறிகள் தாம் அழியும் இயல்பினை உடையனவாம்; பொருள்(தான்) சற்றும் சலியாது– (ஆனால்) அவற்றால் அறியக்கிடந்த பொருள் சற்றேனும் அழியாது; (மற்று) அது கேள்– (ஆதலால்) அப்பஞ்சாக்கரத்தின் உண்மைப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியல்பை உரைக்கின்றோம் கேட்பாயாக, ஈசன் அருள் ஆவி எழில் ஆர் திரோதம் மலம்– சிவன், அருள் (சத்தி), ஆன்மா, அழகு (நன்மை) பொருந்திய திரோதான சத்தி, (ஆணவம் கன்மம் மாயையாகிய மும்) மலம் என்னும் ஐந்தும், ஆசு இல் அஞ்சு எழுத்தின் அடைவு ஆம்– குற்றமற்ற ஸ்ரீ பஞ்சாக்கரத்தின் பொருண்முறைமையாம்.

சிகாராதி நகாராதி பஞ்சாக்கரவியல்பு

**சிவனரு ளாவி திரோதமல மைந்தும்**
**அவனெழுத் தஞ்சி னடைவாம் - இவனின்று**
**நம்முதலா வோதிலருள் நாடாது நாடுமருள்**
**சிம்முதலா வோதுநீ சென்று.** 41

பதவுரை:- சிவன் அருள் ஆவி திரோதம் மலம் ஐந்தும்– சிவன் திருவருட்சத்தி ஆன்மா திரோதானசத்தி மும்மலம் என்னும் ஐந்தும், அவன் அஞ்சு எழுத்தின் அடைவு ஆம்– அவ் இறைவனது பஞ்சாக்கரத்தின் உண்மைப் பொருண் முறைமையாம்; ஆயினும், இவன் நின்று– பக்குவமடைந்த இவ் ஆன்மா பொருந்தி நின்று, ஷந; முதலா ஓதில்– திரோதன சத்தியாகிய நகாரம் முதலாக உச்சரித்தால், அருள் நாடாது– திருவருள் வந்து அணையாது; ஆதலால், நீ சென்று ஷசி; முதலாக ஓது– நீ சிகாரம் ஆகிய சிவம் முதலாக நின்ற பஞ்சாக்கரத்தைப் பொருந்தி உச்சரிப்பாயாக; அருள் நாடும்– அங்ஙனம் உச்சரிப்பதனால் திருவருள் உன்னிடம் வந்து பொருந்தும்.

சிகாராதி பஞ்சாக்கரம் ஓதற் பயன்

**அண்ணல் முதலா வழகா ரெழுத்தைந்தும்**
**எண்ணி லிராப்பகலற் றின்பத்தே - நண்ணி**
**அருளானது சிவத்தே யாக்கு மணுவை**
**இருளா னதுதீர வின்று.** 42

பதவுரை:- அண்ணல் முதலா– சிவனைக் குறிக்கும் சிகாரம் முதலாகவுள்ள, அழகு ஆர் ஐந்து எழுத்தும்– உண்மை அழகு பொருந்திய திருவைந்தெழுத்தையும், எண்ணில்– இடையீடின்றித் தியானித்தல் செய்யின், இன்று– (தியானிக்கும்) இப்பொழுதே, இருள் ஆனது தீர– ஆணவ மல மயக்கமானது முற்றாக அகலும்படிக்கு, அருள் ஆனது அணுவை நண்ணி– திருவருளானது ஆன்மாவைத் தானே பொருந்தி, இரா பகல் அற்ற இன்பத்து (+ஏ) ஆக்கும்– கேவலம் சகலம் என்னும் பெத்த நிலைகளினின்றும் நீங்கிய (சுத்தநிலையிற் பெறுதற்கரிய) பேரின்பத்தையுடைய சித்தினிடம் சேர்க்கும்.

இதுவுமது

**ஆதி மலமிரண்டு மாதியா யோதினாற்**
**சேதியா மும்மலமுந் தீர்வாக - போதம்**
**மதிப்பரிதா மின்பத்தே வாழலாம் மாறி**
**விதிப்படியோ தஞ்செழுத்து மே.** 43



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை:- ஆதி மலம் இரண்டும்– திரோதான சத்தியாகிய நகாரம் மலம் ஆகிய மகாரம் என்னும் இரண்டு எழுத்துக்களும், ஆதியாய் ஓதினால்– முதலாகப் பொருந்தும்படி உச்சரித்தால், சேதியா மும்மலமும் தீர்வு ஆகா– இன்றுவரை நீக்கப்படாத மூன்று மலங்களும் அகன்று பேரின்பப் பெருவாழ்வு கைகூடாது ஆதலால், அஞ்சு எழுத்தும் மாறி விதிப்படி ஓது– திருவைந்தெழுத்தையும் நகார மகாரங்கள் முதலாக ஓதும் முறைமை மாறி(ச் சிகார வகாரங்களை முன்னாக வைத்து) விதிப்படி உச்சரிப்பாயாக; போதம் மதிப்பு அரிது ஆம் இன்பத்து வாழலாம்– அங்ஙனம் ஓதுவதனால் ஆன்ம போதங்கொண்டு அளவிட்டறிதற்கியலாத பேரின்பத்தை எய்தி வாழலாம்.

வேதம் ஆகமம் புராணம் தாண்டவம் முத்தியாவும்
ஐந்தெழுத்துள் அடக்கம்

**அஞ்செழுத்தே யாகமமு மண்ண லருமறையும்**
**அஞ்செழுத்தே யாதிபுரா ணம்மனைத்தும் - அஞ்செழுத்தே**
**ஆனந்தத் தாண்டவமு மாறாறுக் கப்பாலாம்**
**மோனந்த மாமுத்தி யும்.** 44

பதவுரை:- அண்ணல் அருமறையும் ஆகமமும் அஞ்சு எழுத்தே– இறைவன் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அருளிச் செய்த வேதங்கள் நான்கும் ஆகமங்கள் இருபத்தெட்டும் திருவைந்தெழுத்தின் உட்பொருள் விளக்கமேயாம்; ஆதி புராணம் அனைத்தும் அஞ்சு எழுத்தே– (அவனருள் வழிப்பட்டு நின்ற சான்றோரால் அருளிச் செய்யப்பட்ட) முதன்மையான புராணங்கள் பதினெட்டும் திருவைந்தெழுத்தின் உட்பொருள் விளக்கமே, ஆனந்தத் தாண்டவமும் அஞ்சு எழுத்தே– பேரானந்தத்தைக் குறிக்கும் இறைவனின் திருநடனமும், திருவைந்தெழுத்தின் பயனே; ஆறு ஆறுக்கு அப்பால் ஆம் மோன அந்த மாமுத்தியும் – முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து நின்ற மௌன நிலையில் விளைவதாகிய பரமுத்தியும்; அஞ்சு எழுத்தே– திருவைந்தெழுத்தின் பிரயோசனமேயாம்.

அத்துவித முத்திக்கு உதாரணம்

**முத்தி தனையடைந்தோர் முந்துபழம் போதங்கி**
**வித்தகமாம் வீணை யிவையிற்றி - னொத்த**
**விரதமணம் வெம்மை யெழினாதம் போல**
**விரவுவரென் றோதும் விதி.** 45

பதவுரை:- முந்து பழம்– முற்றிக் ஷகனிந்த; பழமும், போது– மலரும், அங்கி– அக்கினியும், வித்தகம் ஆம் வீணை– அற்புதமான வீணையும் ஆகிய, இவையிற்றின் ஒத்த– இப் பொருள்களிடம் முறையே பொருந்தி இருக்கின்ற இரதம்– சுவையும், மணம்– வாசமும், வெம்மை– சூடும், எழில் நாதம் போல– இனிய ஓசையும் போல, முத்திதனை அடைந்தோர் விரவுவர்– பரமுத்தியைப் பெற்றவர்கள் சிவனிடத்து அத்துவிதமாய்க் கலந்திருப்பர்; என்று விதி ஓதும்– என இவ்வாறு சிவாகமங்கள் அறுதியிட்டுரைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவுமது

**தத்துவங்க ளெல்லாஞ் சகசமா யான்மாவிற்**
**பெத்தத்தில் நிற்கின்ற பெற்றிபோல் - முத்திதனிற்**
**சித்தமல மற்றார் செறிந்திடுவர் என்றுமறை**
**சத்தியமா வோதியிடுந் தான்.** 46

பதவுரை:- பெத்தத்தில்– ஆன்மா மலங்களினால் பந்திக்கப்பட்டிருக்கும் காலத்தில், தத்துவங்கள் எல்லாம்– முப்பத்தாறு தத்துவங்களும், ஆன்மாவில் சகசம் ஆய் நிற்கின்ற பெற்றிபோல்– அந்த ஆன்மாவிடத்திலே தாம் வேறு ஆன்மா வேறு என்ற முறைமையின்றி இரண்டறக் கலந்து (தாமே ஆன்மா எனும்படி) நிற்கின்ற தன்மை போல, சித்தமலம் அற்றார்– (சகசமலம் எனப்படும்) ஆணவச் சார்பு அகன்றவர்கள், முத்திதனில் செறிந்திடுவர்– பரமுத்தி (நிலை)யில் தாம் வேறு சிவம் வேறு எனாதபடி இரண்டறக் கலந்து நிற்பர்; என்று மறை சத்தியமா(க) ஓதியிடும்– என (இவ்வாறு) வேதாந்த சிவாகமங்கள் உண்மையாக உரைக்கும்.

இதுவுமது

**ஆதவன்றன் சந்நிதியி லம்புலியி னார்சோதி**
**பேதமற நிற்கின்ற பெற்றிபோல் - நாதாந்தத்**
**தண்ண றிருவடியி லான்மா வணைந்தின்பக்**
**கண்ணி லழுந்தியிடுங் காண்.** 47

பதவுரை:- அம்புலியின் ஆர் சோதி– சந்திரனிடத்தில் நிறைந்து பிரகாசிக்கும் ஒளியானது, ஆதவன் தன் சந்நிதியில் பேதம் அற நிற்கின்ற பெற்றிபோல்– சூரியனது ஒளியின் முன்னிலையில் வேறுபாடின்றி இரண்டறக் கலந்தொன்றி நிற்குந் தன்மைபோல, ஆன்மா– ஆன்மாவானது, நாத அந்தத்து– நாததத்துவ முடிவில் அறியக்கூடியதாய் இருக்கிற, அண்ணல் திரு அடியில் அணைந்து– முதல்வனாகிய சிவனது திருவடி (யாகிய திருவருள் முன்னிலை)யிலே பொருந்தி, இன்பக் கண்ணில் அழுந்தியிடும்– பேரின்ப(மாகிய சிறப்பு மிக்க அநுபவ)த்தில் இரண்டறக் கலந்திருக்கும் (என்பதை), காண்– நீ அறிவாயாக.

அத்துவிதக் கலப்பும் அது அநாதியா மாறும்

**சென்றிவன்றா னொன்றிற் சிவபூ ரணஞ்சிதையு**
**மன்றவன்றா னொன்றுமெனி லந்நியமாம் - இன்றிரண்டும்**
**அற்றநிலை யேதென்னி லாதித்த னந்தன்விழிக்**
**குற்றமற நின்றதுபோற் கொள்.** 48

பதவுரை:- அன்று– (இறைவன், பெத்தம் முத்தி ஆகிய இரு வேறு நிலையிலும் ஆன்மாவுடன் அத்துவிதமாகக் கலந்து உபகரிப்பானாக, அவ்விரு நிலைகளுள்) பெத்த நிலைப்பட்டிருக்குங் காலத்திலே, இவன்சென்று ஒன்றில்– ஆன்மா தனது அறிவால் சிவனிடம் சென்று அடைந்து அவனோடு இரண்டறக் கலக்கும் எனக் கொண்டால், சிவபூரணம் சிதையும்– (அதனால் அப்பெத்த நிலையில் ஆன்மா இறைவனுக்கு வெளியே இருந்தது எனக் கொள்ளக் கிடத்தலின்) சிவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபகத்தன்மை கெட்டுப் போகும்; இன்று அவன் ஒன்றும் எனில் அந்நியம் ஆம்– முத்தி நிலையிலே இறைவன் ஆன்மாவிடம் வந்தடைந்து கலந்து நிற்பான் எனக் கொள்ளின், அதற்கு முந்திய பெத்த நிலையிலே அவன் ஆன்மாவுக்கு எவ்வித உபகாரமுஞ் செய்யாமல் வேறாயிருந்தவனாவன்; இரண்டும் அற்ற நிலை ஏது? என்னில்– (ஆன்மா சென்று கலத்தல் இறைவன் வந்து ஒன்றல் ஆகிய) இரண்டு முறைமையும் இல்லாமல் ஆன்மாவும் இறைவனும் இருவேறு நிலைகளிலும் கலந்து நின்ற முறைமைதான் யாது? என்றால், அந்தன் விழிக் குற்றம் அற ஆதித்தன் நின்றது போல் கொள்– (அது) குருடனது கண்ணிடத்துப் பொருந்திய தெரியாமையாகிய (படலக்) குற்றம் நீங்க அவனது கண்ணின் ஒளியும் சூரியனின் ஒளியும் இரண்டறக் கலந்து (உளதாகும் பயனை ஆன்மா அநுபவித்து) நின்ற தன்மைபோலும் எனக் கொள்வாயாக.

மாணாக்கனது வேண்டுகோள்

**வாக்கு மனமிறந்த வான்கருணை யாளனுருத்**
**தாக்கறவே நிற்குந் தனிமுதல்வா - நீக்காப்**
**பதியினைப்போல் நித்தம் பசுபாச மென்றாய்**
**கதியிடத்து மூன்றினையுங் காட்டு. 49**

பதவுரை:- வாக்கு மனம் இறந்த– பாச ஞானம் பசு ஞானங்களால் அறிதற்கரியனாய் அப்பாற்பட்டு நின்ற வான் கருணையாளன், உரு (கொண்டு)– எல்லையில்லாத (பரிசுத்தமான) பேரருளையுடைய இறைவனேயாய்த் திருமேனிகொண்டு, தாக்கு அற நிற்கும் தனி முதல்வா– பாசங்களினாலே பற்றப்படுதலின்றி எழுந்தருளியிருக்கும் ஞானாசாரிய சிரேட்டரே, நீங்காப் பதியினைப்போல்– யாவற்றிலும் எக்காலத்திலும் விட்டு நீங்காமல் (வியாபகமாய்) இருக்கும் இறைவனைப்போல, பசு பாசம் நித்தம் என்றாய்– ஆன்மாவும் மலமும் அழியா இயல்பின என்று அருளிச் செய்தீர், கதி இடத்தும் மூன்றினையும் காட்டு– (அங்ஙனமாயின்) முத்தி நிலையிலும் (பதி பசு பாசம் ஆகிய) அம்மூன்று பொருள்களும் அழியாமல் நிற்கின்ற முறைமையை அடியேனுக்கு விளக்கியருளுவீராக.

**முத்திதனில் மூன்று முதலு மொழியக்கேள்**
**சுத்தவநு போகத்தைத் துய்த்தலணு - மெத்தவே**
**யின்பங் கொடுத்தலிறை யித்தைவிளை வித்தன்மல**
**மன்புடனே கண்டுகொளப் பா. 50**

பதவுரை:- அப்பா மாணாக்கனே, முத்திதனில்– ஆன்மாவுக்கு முத்திநிலை வந்தெய்துங் காலத்திலே, மூன்று முதலும் மொழிய கேள்– பதி பசு பாசம் ஆகிய மூன்று பொருள்களும் அழிவின்றி நித்தமாய் நிற்கும் தன்மையைச் சொல்லுகிறோம் கேட்பாயாக, சுத்த அநுபோகத்தைத்துய்த்தல் அணு– தூய பரமுத்தி இன்பத்தை அநுபவித்திருப்பது ஆன்மாவாம்; மெத்த இன்பம் கொடுத்தல் இறை– இடையீடின்றி (அநுபவிக்குந் தோறும் புதியதாய், தெவிட்டாததாய்) அப்பேரின்பத்தைக் கொடுத்து நிற்பது சிவமாம்; இத்தை விளைவித்தல் மலம்– இப்பேரின்பத்தை ஆன்மா நுகரும்படி அடைவித்து நிற்பது மலமாம்; அன்புடனே கண்டுகொள்– (இவ்வுண்மைகள் இங்ஙனமாதலை) அயரா அன்பினாலே அறிந்து அநுபவிப்பாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்திக்குவழி குருலிங்க சங்கம வழிபாடு

**அப்பாவிம் முத்திக் கழியாத காரணந்தான்**
**செப்பா யருளாலே செப்பக்கே - ளொப்பில்**
**குருலிங்க வேடமெனக் கூறிலிவை கொண்டார்**
**கருவொன்றி நில்லார்கள் காண்.** 51

பதவுரை:- அப்பா– ஞானாசாரிய முதல்வரே, இம்முத்திக்கு அழியாத காரணம் அருளால் செப்பாய்– இப்பரமுத்தியை அடைந்து வாழ்வதற்கு நிலையான வாயிலை –(வழியினை)க் கருணை கொண்டு சொல்லியருளுவீராக; (என்று மாணவகன் வேண்டினானாக, ஞானாசாரியர்) செப்பக் கேள்– அதனைச் சொல்லுகிறோம் கேட்பாயாக, ஒப்பு இல் லிங்கம் வேடம் என கூறில் – (அவ்வாயில்) நிகரில்லாத ஞானாசாரியர் சிவலிங்கம் மெய்யடியார் என்னும் மூவிடத்தும் வழிபாடியற்றலேயாம் எனச் சிவாகமங்கள் கூறுமாயின், இவை கொண்டார்– இந்த மூவிடத்தும் வழிபாடியற்றலை விரதமாகக் கொண்டவர்கள், கரு ஒன்றி நில்லார்கள்– கருப்பத்திலே பொருந்திப் பிறந்து இறந்து உழலமாட்டார்கள் என்ற உண்மையை நீ உணர்வாயாக (என்றார்).

குருலிங்க சங்கம வழிபாட்டு முறை

**கற்றா மனம்போற் கசிந்துகசிந் தேயுருகி**
**யுற்றாசான் லிங்க முயர்வேடம் - பற்றாக**
**முத்தித் தலைவர் முழுமலத்தை மோசிக்கும்**
**பத்திதனி னின்றிடுவர் பார்.** 52

பதிப்புரை:- முத்தித் தலைவர்– சீவன் முத்தரானோர், ஆசான் லிங்கம் உயர் வேடம் பற்று ஆக– ஞானாசாரியனையும் சிவலிங்கப் பெருமானையும் பக்குவத்தாலுயர்ந்த மெய்யடியார்களையும் பற்றுக் கோடாகக் கொண்டு, கன்று ஆ மனம் போல கசிந்து கசிந்து உருகி உற்று– தன் கன்றை நினைத்து அன்பு சுரக்கும் பசுவினது உள்ளத்தைப் போல (அம் மூவிடத்தும்) அயரா அன்பு மீக்கூர மனம் நெக்கு நெக்குருகிப் பொருந்தி, முழுமலத்தை மோசிக்கும் பத்திதனில் நின்றிடுவர்; பார்– (சீவன் முத்திநிலையில் நிற்குமளவும் வந்து பொருந்தும்) மல வாசலை முழுவதும் நீங்குதற்குரிய பத்தி நெறியிலே ஒழுகுவர்; ஆதலால், நீயும் அவ்வழிபாட்டு முறையை மேற்கொள்வாயாக.

**வாழ்ந்தே னருட்கடலே வற்றாப் பவக்கடலில்**
**வீழ்ந்தே யலையாமல் மேதினியில் - சூழ்ந்துவிடா**
**வெண்ணெய்ச் சுவேதவன மெய்கண்ட நாதனே**
**யுண்மைத் தவப்பயனே யுற்று.** 53

பதிப்புரை:- சூழ்ந்து விடா வெண்ணெய்ச் சுவேதவன மெய்கண்ட நாதனே– தரிசித்த மெய்யடியார்கள் சூழ்ந்து (பின்னர்) விட்டு நீங்காதபடி திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளியிருக்கும் சுவேதவனப் பெருமாள் என்னும் பிள்ளைத் திருநாமமுடைய மெய்கண்ட நாதனே, உண்மைத் தவப்பயனே– மெய்த்தவம் உடையவர் தம் தவத்தின் பயனாய் அடைதற்கு உரியவனே, அருட்கடலே– கிருபா சமுத்திரமே, வற்றாப் பவக்கடலில் வீழ்ந்து (+ஏ) மேதினியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலையாமல் உற்றுவாழ்ந்தேன்– அடியேன் குறைவுபடாத பிறவியாகிய சமுத்திரத்தில் அழுந்தி உலகவாழ்வில் (மயங்கிச்) சீரழிந்து துன்புறாமல், தேவரீரது திருவடியை (அடைந்து) பற்றிநின்று பேரின்ப வாழ்வெய்தினேன்.

மன்னதிகை வாழும் மனவா சகங்கடந்தான்
மின்னனையார் வாழ்விலுறா மெய்கண்டான் - பன்மறைகள்
வண்மைதரும் ஆகமநூல் வைத்த பொருள்வழுவா
வுண்மைவிளக் கஞ்செய்தா னுற்று. 54

பதவுரை:- மன் அதிகை வாழும் மனவாசகம் கடந்தான்– (பல வளங்களாலும்) தலைமைப்பாடுடைய திருவதிகை என்னும் பதியில் எழுந்தருளிய மனவாசகம் கடந்த தேவநாயனார், மின் அனையார் வாழ்வில் உறா மெய்கண்டான் உற்று– மின்னலையொப்பப் பிறந்தும் இறந்தும் உழலும் பெத்தான்மாக்களது உலகவாழ்வில் பொருந்தி நில்லாத மெய்கண்ட தேவநாயனாரது திருவடிகளை (மனம் மொழி மெய்களினால் துதித்து)ச் சேர்ந்து நின்று, பன் மறைகள் வண்மைதரும் ஆகம நூல்வைத்த பொருள் வழுவா– சிறப்பித்துக் கூறுகின்ற வேதாந்த (–ஞானகாண்டத்து) வளத்தை வகுத்து உரைப்பனவாகிய சிவாகமங்களிலே உள்ள பொருளியல்புகளுக்கு மாறுபடாத, உண்மை விளக்கம் செய்தான்– (இவ்) ஷஉண்மை விளக்கம்; என்னும் மெய்கண்ட சாத்திர நூலை அருளிச் செய்தார்.

உண்மை விளக்கம் முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# திருவருட்பயன்

## உமாபதி சிவாசாரியார்

பத்து அதிகாரங்களை உடையது. அதிகாரத்துக்குப் பத்தாக நூறு குறள் வெண்பாக்களில் நூல் அமைந்துள்ளது. முதல் ஐந்து அதிகாரங்களும் திருவருளைப் பற்றியும் இறுதி ஐந்து அதிகாரங்களும் திருவருளின் பயன் பற்றியும் கூறுகின்றன. முப்பொருள் உண்மையைச் சுருக்கமாகவும் நுட்பமாகவும் கூறுகின்றது.

காப்புச் செய்யுள்

**நற்குஞ்சரக் கன்று நண்ணின் கலை ஞானம்**
**கற்குஞ் சரக்கன்று காண்.**

பதவுரை:- நற்குஞ்சரம்– நல்லருளைப் பொழிவதும் யானைமுகத்தைப் போன்றதுமான பிரணவத் திருமுகத்தை உடையவரும், கன்று – எப்போதும் இளமை உள்ளவருமாகிய விநாயகக் கடவுளை, நண்ணில் – (ஒருவர் மனத்தினாலும், சொல்லினாலும், உடம்பினாலும்) வழிபடுவராயின் (அவருக்கு), கலைஞானம் – மெய்ந்நூல் அறிவாகிய ஞானசாத்திரம், கற்கும் சரக்கு அன்று – வருந்திக் கற்க வேண்டிய பண்டம் அன்று, காண் – மனமே இதனை நீ உணர்வாயாக, ஆதலால் அவருடைய திருவடியை வழிபடும் அடியேன் செய்யும் ஞான நூல் எவ்வகையாலும் தவறின்றி இனிது முடிக.

### முதலதிகாரம் – பதிமுதுநிலை

கடவுளின் இயல்பு

**அகரஉயிர்போல் அறிவாகி எங்கும்**
**நிகரில் இறை நிற்கும் நிறைந்து** (1)

பதவுரை:- அகர உயிர் போல் – அ என்னும் உயிர் எழுத்து ஒலியானது எழுத்துக்களுக்கு முதலாயும், உயிராயும் ஏனைய எழுத்துக்களில் எல்லாம் இரண்டறக் கலந்திருப்பது போல, நிகர் இல் இறை – எவற்றோடும் ஒப்பிட முடியாதவனாகிய இறைவன், எங்கும் நிறைந்து – (அறிவுள்ள, அறிவில்லாத பொருள்கள்) எல்லாவற்றிலும் வேறாக அறியமுடியாதவாறு கலந்து, அறிவாகி – அறிவே வடிவமாகி (பேரறிவு உடையதாய்),நிற்கும் – தொடக்கமும் முடிவும் இன்றி நிற்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவசக்தியின் தன்மை

**தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும் சக்தி**
**பின்னமிலான் எங்கள் பிரான்.** (2)

பதவுரை – எங்கள் பிரான் – எமது இறைவராகிய சிவபெருமான், தன் நிலைமை – (மனவாக்குக் கெடாததும் மலபந்த மில்லாததும் பேரானந்தமானதும் ஆகிய) பிறப்பு இறப்பு இன்றி என்றும் ஒரே தன்மையாய் இருக்கின்ற அந்த இருப்பை, மன் உயிர்கள் – என்றும் – அழிவில்லாத நிலைபெற்ற ஆன்மாக்கள் யாவும், சாரத்தரும் சக்தி – அடைவதற்காக சக்தியில் நின்று வேறாகமால் அருளுகின்றவர்.

சிவத்தின் பெருமை

**பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின்**
**அருமைக்கும் ஒப்பின்மை யான்.** (3)

பதவுரை - பெருமைக்கும் – (சிவபெருமானானவர்) ஊழிக்காலத்தில் எல்லாப் பெருள்களையும் தன்னில் அடக்கிக் கொண்டு அவற்றுக்கெல்லாம் தானே பெரிய பொருளாய் நிற்கும் பெருமையிலும், நுண்மைக்கும் – எல்லாப் பொருள்களிலும் கலந்து அறிவதற்கு அருமையினாலும், பேர் அருட்கும் – எல்லா உயிர்களிலும் வைக்கும் பெருங்கருணையினாலும், பேற்றின் அருமைக்கும் – எவராலும் பெறமுடியாத தன்மையினை பெற்றவனாலும், ஒப்பின்மையான் – தமக்கு ஒப்பாக வேறொன்றும் இல்லாத சிறப்பினை உடையவனாகிய எம் இறைவன்.

சிவத்தின் அருட்செயல்கள்

**ஆக்கி எவையும் அளித்து ஆசுடன் அடங்கப்**
**போக்கும் அவன் போகாப் புகல்.** (4)

பதவுரை - எவையும் ஆக்கி – எல்லாவற்றையும் ஆக்கி (தனு கரண புவன போகம் ஆகிய எல்லா பொருள்களையும் மாயையில் இருந்து படைத்துக் கொடுத்து), அளித்து – காத்து, மறைத்து (குறித்த காலம் வரும்வரை அவை நிலைபெறும்படி காத்து), ஆசுடன் அடங்கப் போக்கும் – (ஆணவமலமாகிய மாசு தேய்ந்து மெலிவுற்ற காலத்தில்) ஆணவ மலத்தோடு கேவலமாய் நிற்க ஒடுக்கும், ஆணவ மலத்தோடு மற்றைய மலங்களையும் ஒருங்கே போக்கி அருளைச் செய்யும்,அவன் – அவ்விறைவன்,போகாப்புகல் – எக்காலத்தும் உயிர்களுக்கு நீங்காத ஆதாரமாயுள்ளவர்.

அருட்செயல்களை நடத்தும் திருமேனிகள்

**அருவும் உருவும் அறிஞர்க்கு அறிவாம்**
**உருவும் உடையான் உளன்.** (5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை - அருவும் – சிவம் சக்தி நாதம் விந்து ஆகிய நான்கு அருவத் திருமேனிகளும், உருவும் – மகேருன் உருத்திரன் மால் அயன் ஆகிய நான்கு உருவத் திருமேனிகளும்,அருவும் உருவும் – சதாசிவனெனும் அருவுருவத் திருமேனியும், அறிஞர்க்கு – ஞான மார்க்கத்தார்க்குரிய (மெய்யுணர்வு பெற்ற ஞானியர்க்கு) ,அறிவாம் உருவும் – ஞான வடிவமும் அறிவே வடிவான திருமேனியும்), உடையான் – எமது தலைவராகிய சிவபெருமான், உளன் – உடையவர்.

அத்திருமேனிகளைத் தோற்றுவிப்பவர் அவரே

**பல்லாருயிர் உணரும் பான்மைபெயனமேல் ஒருவன்**
**இல்லாதான் எங்கள் இறை** (6)

பதவுரை - பல் ஆர் உயிர் – அளவில்லாதனவாய் எங்கும் நிறைந்திருக்கும் ஆன்மாக்கள், உணரும் பான்மையென – (அவற்றிற்குத் தலைவராகிய கடவுள் அருளிய உட்கருவி புறக்கருவிகளைக் கொண்டு) அறிவித்தால் அறியுந் தன்மைபோல, மேலொருவன் இல்லாதான் – தமக்கு மேல் (கருவிகளைக் கொடுத்தற்கு) ஒரு தலைவனில்லாதவர்,எங்கள் இறை – எமது பதியாகிய சிவபெருமான்.

ஆன்மாவிற் சிவம் பிரகாசித்தல்

**ஆனா அறிவாய் அகலான் அடியவர்க்கு**
**வானாடர் காணாத மன்.** (7)

பதவுரை :- வானாடர் காணாத மன் – (நிறைந்த இன்பத்தை அனுபவித்தற்கு வேண்டிய பசுநல்வினை செய்தவர்களாயினும் பேரன்பு இல்லாதவர்களாதலால்) தேரவர்களுங் காணாத சிவபெருமான், ஆனா அறிவாய் – எவ்விடத்தும் நிறைந்து நீங்காத ஞானமாய்,அடியவர்க்கு – அவருடைய அடியார்களுக்கு, அகலான் – மறையாமல் வெளியாக நின்று பேரின்பத்தைக் கொடுப்பர்.

சிவத்தின் வியாபகம்

**எங்கும் எவையும் எரியுறுநீர் போல்ஏகம்**
**தங்குமவன் தானே தனி.** (8)

பதவுரை :- அவன் – அவ்விறைவன் (சிவபெருமான்), எங்கும் – எல்லா உலகங்களிலும், எல்லா இடங்களிலும் எவையும் – சித்தும் சடமுமாகிய எல்லா பொருள்களிலும், எல்லா உயிர்களிலும், எரி உறு நீர் போல் –சூடு பொருந்திய நீர் போல் ( காய்ச்சிய நீர் போல), ஏகம் தங்கும் – ஒன்றாய் கலந்து நிற்பர் (வேறற நிற்பர்), தானே – (அவைகளோடு சேர்ந்து நின்றும்) அவற்றின் தன்மை சாராமல்,தனி – அவற்றைக் கடந்து தனித்து நிற்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவருளை நுகரும் வழி

**நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்**
**சலமிலன் பேர் சங்கரன். (9)**

பதவுரை:- நண்ணார்க்கு - தம்மை அடைந்து வழிபடாதவருக்கு (தன்னைச் சாராதவருக்கு), நலமிலன் - தமது பேரின்பத்தைக் கொடாதவர்,நண்ணினர்க்கு - தன்னைச் சார்ந்து அன்போடு வழிபடுவோருக்கு, நல்லன் - முத்தி இன்பம் எனும் நிலையான இன்பத்தினைக் கொடுக்கும் நல்லவன், சலம் இலன் - வழிபடாமையினால் வெறுப்பேனும் வழிபடுதலால் விருப்பேனும் இல்லாதவர் (விருப்பு வெறுப்பு இல்லாதவர்), பேர் சங்கரன் - (அனைத்து ஆன்மாக்களுக்கும் நிலையான இன்பத்தையே செய்பவராதலால்) சங்கரன் என்னும் திருநாமத்தை உடையவர்.

அவ்வழியில் ஆன்மாவைச் செலுத்துதல்

**உன்னும் உளது ஐயம்இலது உணர்வாய் ஓவாது**
**மன்னு பவம் தீர்க்கும் மருந்து. (10)**

பதவுரை:- உணர்வாய் - ஞானமாய் நின்று, மன்னுபவம் - அநாதியான பிறவிக்குக் காரணமாகிய ஆணவம் என்னும் நோயை, தீர்க்கும் மருந்து - (திருவருள் என்னும் மருந்தை ஊட்டி பிறவி நோயைத்) தீர்க்கின்ற வைத்திய நாதராகிய சிவபெருமானை,ஓவாது உன்னும் - இடைவிடாது அன்போடு நினைத்து வழிபடுங்கள், உளது - இதனால் வரும் முத்தியின்பமே நிலையான செல்வம், ஐயம் இலது - அவரை அன்போடு வழிபட்டால் அந்த முத்தியின்பத்தை விரைவில் அடைதற்குச் சந்தேகமில்லை.

## இரண்டாம் அதிகாரம் – உயிரவைநிலை

ஆன்மாக்கள் எண்ணில்லாதன

**பிறந்தநாள் மேலும் பிறக்கும்நாள் போலும்**
**துறந்தோர் துறப்போர் தொகை. (11)**

பதவுரை:- துறந்தோர் தொகை - ஆன்மாக்களுள் முத்தி அடைந்தோர் தொகை,பிறந்தநாள் போலும் - ஆன்மாக்கள் பல பிறவிகளில் பிறந்து வாழ்ந்த நாட்களின் தொகைக்குச் சமமாகும்,துறப்போர் தொகை - முத்தியடையாமல் இருக்கும் ஆன்மாக்களின் தொகை,மேல் பிறக்கும் நாள் போலும் - ஆன்மாக்கள் இனிப் பல பிறவிகளில் பிறந்து வாழும் நாட்களின் தொகைக்குச் சமமாகும்.

மூவகை ஆன்மாக்கள்

**திரிமலத்தார் ஒன்று அதனில் சென்றார்கள் அன்றி**
**ஒரு மலத்தாராயும் உளர். (12)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை :- திரிமலத்தார் – ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலத்தை உடைய சகலர் எனவும், அதனில் ஒன்று சென்றார்கள் – அந்த மும்மலங்களில் ஒன்றாகிய மாயை நீங்கி ஆணவம் கன்மம் என்னும் இருமலங்களை உடைய பிரளயாகலரெனவும்,அன்றி – இவர்களைத்தவிர, ஒரு மலத்தாராயும் – மாயையுங் கன்மமுமின்றி ஆணவமாகிய ஒரு மலமுடைய விஞ்ஞானகலர் எனவும், உளர் – மூன்று வகையான ஆன்மாக்கள் உண்டு.

மூவகை ஆன்மாக்களின் வேறுபாடு

**மூன்று திறத்து உள்ளாரும் மூலமலத்து உள்ளார்கள்**
**தோன்றலர் தொத்து உள்ளார் துணை.** (13)

பதவுரை :- மூன்று திறத்து உள்ளாரும் – மூன்று வகையான ஆன்மாக்களும்,மூலமலத்து உள்ளார்கள் – அனாதி காலம் தொட்டு ஆணவமலத்தின் பிணிப்பினால் அகப்பட்டுள்ளார்கள், துணையுள்ளார் – பிரகிருதி மாயை என்னும் துணையினை உடைய சகலர். தொகுத்துத் தோன்றலர் – மலத்தினால் பிணிக்கப்பட்டிருக்கும் தமது நிலையை அறியாதவர்.

ஆன்மா வலியற்றது

**கண்டவற்றை நாளும் கனவில் கலங்கியிடும்**
**திண்திறலுக்கு என்னோ செயல்.** (14)

பதவுரை :- நாளும் கண்டவற்றை – நனவிலே நாள் தோறும் கண்ட பொருள்களை (பலநாளும் பார்த்துப் பழகித் தெளிவாக உணர்ந்த பொருள்களை), கனவிற் கலங்கியிடும் – கனவிலே மாறிக் காண்கின்ற (கனவு காணும்போது அக்கனவில் மாறுபடக்கண்டு மயங்குகின்ற), திண் திறலுக்கு – வலியற்ற ஆன்மாக்களுக்கு, செயல் என்னோ – தம்முடைய செயலாவது யாது? (சுதந்திரமான செயல் என்ன இருக்கிறது).

ஆன்மா அறிவிக்க அறிவது

**பொறியின்றி ஒன்றும் புணராத புந்திக்கு**
**அறிவு என்ற பேர்நன்று அற.** (15)

பதவுரை:- பொறிஇன்றி – ஐம்பொறிகளில் ஏதாவது ஒன்றில்லாமல்,ஒன்றும் புணராத புந்திக்கு – ஒரு விடயத்தையும் அறியமாட்டாத ஆன்மாவுக்கு, அறிவு என்ற பெயர் – அறிவு என்றுரைத்த பெயர் (சித்து என்று ஆன்றோரால் கூறிவைத்த பெயர்) அற நன்று – பிழையானதாம்.

ஆன்மாவுக்கு இச்சாஞானக் கிரியாசக்திகள் இயல்பாய் உள்ளன

**ஒளியும் இருளும் உலகும் அலர்கண்**
**தெளிவு இல் லெனில் என் செய.** (16)

பதவுரை :- ஒளியும் – சூரியன் நெருப்பு முதலிய சுடர்களும், இருளும் – மயக்கத்தைத் தருவதாகிய இருளும், உலகும் – (பலவகைப்பட்ட பொருள்களோடு சிறந்து நிற்கும்) உலகமும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலர் கண் தெளிவு இல் எனின் – விழித்திருக்குங் கண்ணிற் காணுந் தன்மை இல்லையாயின், என் செய – என்ன பயனை உடையன?

ஆன்மா சதசத்து

**சத்து அசத்தைச் சாராது அசத்து அறியாது அங்கண்இவை**
**உய்த்தல் சதசத்தாம் உயிர்.** (17)

பதவுரை :- சத்து அசத்தைச் சாராது – நிலைபெற்ற ஞானமாகிய சிவம் நிலையற்றனவாகிய மாயைப் பொருள்களைப் புதிதாகச் சுட்டி அறிய வேண்டியதில்லை. (சத்து – சத்தாகிய முதற்பொருள், அசத்தை – அசத்தாகிய உலகத்தை, சாராது – அறிந்து அதனிடத்தில் அழுந்தாது). அசத்து அறியாது – சடப்பொருள்கள் ஒன்றையும் அறியமாட்டாது, அங்கண் – அப்படி இருத்தலால், இவை உற்ற – சிவத்தையும் சடப்பொருள்களையும் அறிவன, சத சத்தாம் உயிர் – சத்தாகாமலும் அசத்தாகாமலும் சதசத்தாயிருக்கும் ஆன்மாக்கள்.

ஆன்மா தன்வயமில்லாதது

**இருளில் இருளாகி எல் இடத்தில் எல் ஆம்**
**பொருள்கள் இலதோ புவி.** (18)

பதவுரை :- இருளில் இருளாகி – இருள் வந்த காலத்து இருளாகியும், எல் இடத்தில் எல் ஆம் பொருள்கள் – ஒளி வந்தபோது விளங்கியும் நிற்கும் பொருள்கள், புவி இலதோ – பூமியுடையதன்னோ? (அப்படியான பொருள்கள் பூமியிலுண்டு, அவை படிகம் முதலியன. ஆன்மா இப்படியான பொருள்களைப் போல்வது)

ஆன்மா சிவத்தைக் காணாமைக்குக் காரணம்

**ஊமன்கண் போல ஒளியும் மிகஇருளே**
**யாம்மன்கண் காணா தவை.** (19)

பதவுரை :- ஊமன் கண் போல – கூகையின் கண்ணுக்குச் சூரியனது ஒளி தோன்றாமல் இருப்பது போல (கூகையினதுகண் சூரியனது ஒளியிற் கலந்து நின்றாலும் அதனை அறியாது நிற்பது போல), மன் கண் காணாதவை – சிவபெருமான் அருளும் ஞானத்தைக் கொண்டு காணாத ஆன்மாக்களுக்கு (இறைவனது பேரறிவாகிய திருவருளை அதனோடு அநாதியே கூடியிருந்தும் அறியாது நிற்கும் உயிர்கள்), ஒளியும் மிக இருளே ஆம் – சிவமாகிய ஒளி தோன்றாமல் நிற்கும். (ஒளியிடத்தும் அறியாமையிருளில் மூழ்கி இருளாயிருக்கும் தன்மையையே மிகப் பெற்றிருக்கும்)

ஆன்மா அருளைப் பெற முயலவேண்டும்.

**அன்று அளவும் ஆற்றும் உயிர் அந்தோ அருள் தெரிவது**
**என்று அளவொன் றில்லா இடர்** (20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை:- அன்று அளவும் – அநாதியாகவே, அளவொன்று இல்லா இடர் – (பிறந்திறந்து) அளவில்லாத துன்பங்களை, ஆற்றும் உயிர் – தாங்கி நிற்கும் உயிர்கள், அந்தோ – ஐயோ!, அருள் தெரிவது என்று – ஆணவம் நீங்கித் திருவருளாகிய ஞானத்தைப் பெற்றுப் பேரின்பத்தை அடைவது எக்காலம்.

## மூன்றாம் அதிகாரம்– இருண்மல நிலை

முப்பொருளும் இன்ப துன்பமும் உள்ள பொருள்கள்

**துன்றும் பவத்துயரும் இன்பும் தணைப்பொருளும்**
**இன்று என்பது எவ்வாறும் இல்.** (21)

பதவுரை:- துன்றும் பவத்துயரும் – நெருங்கிய பிறவித் துன்பமும், இன்பும் – முத்தியாகிய பேரின்பமும், துணைப் பொருளும் – பிறவித் துன்பத்துக்குக் காரணமாகிய மும்மலங்களும் முத்திக்குக் காரணமாகிய சிவமும், இன்று என்பது – இல்லாத பொருள்கள் என்று சொல்லுவது, எவ்வாறுமில் – சுருதி யுத்தி அனுபவம் என்னும் அளவைகள் எவற்றாலுமில்லை

ஆணவத்தின் உண்மை அனுமானத்தால் துணியப்படும்.

**இருளான தன்றி இலது எவையும் ஏகப்**
**பொருளாகி நிற்கும் பொருள்.** (22)

பதவுரை - எவையும் – உலகத்திலேயுள்ள பலவகைப்பட்ட பொருள்களும், ஏகப் பொருளாகி – (அவற்றின் தன்மை தோன்றாமல்) ஒரே பொருளாக, நிற்கும் பொருள் – தோன்றச் செய்யும் பொருள், இருளானதன்றி இலது – இருளுருவான பொருளன்றி வேறு பொருள் இல்லை.

ஆணவம் இருளிற் கொடியது

**ஒரு பொருளும் காட்டாது இருள் உருவம் காட்டும்**
**இரு பொருளும் காட்டாது இது** (23)

பதவுரை:- இருள் – இருளானது, ஒரு பொருளுங் காட்டாது – மற்றைய பொருள்களைக் காட்டாதாயினும், உருவங் காட்டும் – தன்னுடைய உருவத்தைக் காட்டும், இது – இந்த ஆணவமானது, இரு பொருளுங் காட்டாது – பிற பொருள்களை மறைப்பதுமல்லாமல் தன்னையும் மறைக்கின்றது, ஆதலால் இது இருளினுங் கொடியது.

ஆணவம் அநாதியாய் ஆன்மாவோடு உள்ளது

**அன்று அளவி உள்ளொளியோடு ஆவியிடை அடங்கி**
**இன்று அளவும் நின்றது இருள்.** (24)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை:- அன்று அளவி – அனாதியே ஆன்மாவோடு உள்ளதாய், உள் ஒளியோடு ஆவியிடை அடங்கி – அவ்வான்மாவுக்குப் பிராணனாகிய சிவமும் அதனோடு நிற்க அந்தச் சிவத்தைச் சாராது ஆன்மாவைச் சார்ந்து, இருள் – ஆணவமானது, இன்றளவும் – இன்றுவரைக்கும், நின்றது – நீங்காது நின்றது.

ஆணவம் அகந்த சக்திகளை உடையது

**பலரைப் புணர்ந்தும் இருட்பாவைக்கு உண்டுஎன்றும்**
**கணவர்க்கும் தோன்றாத கற்பு.** (25)

பதவுரை:- பலரைப் புணர்ந்தும் – எண்ணில்லாது ஆன்மாக்களைப் பொருந்திக் கலந்து நின்றும், இருட் பாவைக்கு – ஆணவமாகிய பெண்ணுக்கு, கணவர்க்கும் என்றும் தோன்றாத கற்பு உண்டு – தனது நாயராகிய ஆன்மாக்களுக்குத் தன்னைக் காட்டாமல் இருக்கும் நியமமுண்டு.

ஆணவம் மெய்யுணர்வைத் தடுப்பது

**பன்மொழிகள்என்? உணரும் பான்மை தெரியாத**
**தன்மை இருளார் தந்தது.** (26)

பதவுரை:- பன்மொழிகள் என் – வேறுபல காரணங்களைப் பேசிப் பயனென்ன, உணரும் பான்மை தெரியாத தன்மை – (ஆன்மா உண்மைகளை) அறியாமல் நிற்கும் மயக்கம், இருளார் தந்தது – ஆணவம் தந்த மயக்கமாம்.

ஆணவம் ஆன்மாவின் குணமன்று

**இருள் இன்றேல் துன்புஎன்? உயிர் இயல்பேல் போக்கும்**
**பொருள் உண்டேல் ஒன்றாகிப் போம்.** (27)

பதவுரை:- இருள் இன்றேல் – ஆணவம் என்ற பொருள் இல்லையாயின், துன்பு ஏன் – ஆன்மாவுக்குப் பிறவித் துன்பமிராது, உயிர் இயல்பேல் – இந்த ஆணவம் ஆன்மாவின் குணமாயின், போக்கும் பொருள் உண்டேல் – ஆணவத்தைக் கெடுக்கத்தக்க பொருளொன்று உள்ளதாயின், ஒன்றாகப் போம் – (அப்பொருள் ஆணவத்தைக் கெடுக்கும் போது) அக் குணத்தையுடைய பொருளாகிய ஆன்மாவுங் கெட்டுப்போம்.

ஆணவம் அநாதி

**ஆசு ஆதியேல் அணைவ காரணம்என்? முத்திநிலை**
**பேசாது அகவும் பிணி.** (28)

பதவுரை:- ஆசு ஆதியேல் – ஆணவமானது ஆன்மாவை இடையிற் சேர்ந்ததாயின், அணைவ காரணம் என் – அது அதைச் சேர்தற்கு இடையிலுண்டான காரண மென்ன, (அன்றியும்),முத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை – (ஆன்மா சுத்தமாயிருக்கு) முத்தி நிலையிலும், பிணி பேசாது அகவும் – ஆணவம் ஒரு காரணமுமின்றி முன்போல அதைத் திரும்பவும் பிடித்தல் கூடும்.

ஆணவத்தைக் கெடுக்கும் ஒரு கருவி மாயை

**ஒன்று மிகினும் ஒளிகவரா தேல்உள்ளம்**
**என்றும் அகலாது இருள்.** (29)

பதவுரை:- உள்ளம் – ஆன்மாவானது, ஒன்று மிகினும் ஒளி கவராதேல் – மாயையினால் உண்டாகிய உடம்பு முதலியவைகள் கிடைத்த காலத்திலும் அறிவைப் பெறமாட்டாதாயின், இருள் என்றும் அகலாது – ஆணவ மயக்கம் ஒருகாலமும் அதை விட்டு நீங்காது.

மாயை கன்மங்களின் இயல்பு

**விடிவாம் அளவும் விள்கனைய மாயை**
**வடிவாதி கன்மத்து வந்து.** (30)

பதவுரை:- மாயை வடிவாதி – மாயையினாலாகிய தனு கரண புவன போகங்கள், கன்மத்து வந்து – ஆன்மாக்களுடைய புண்ணிய பாவங்களுக்குத் தக்கவைகளாகத் தோன்றி,விடிவாம் அளவும் விளக்கு அனைய – விடியும் வரையும் இருளை ஒருவாறு நீக்கத்தக்க விளக்குப் போல, ஆன்மா சிவஞானமாகிய பேரொளியைப் பெறும் முத்திநிலை வரையும் ஆணவ இருளை ஒருவாறு நீக்கத்தக்க அறிவைக் கொடுக்குங் கருவியாக நிற்கின்றன. (மாயை வடிவு ஆதி – மாயையினின்றும் தோன்றிய உடம்பு முதலியவை, கன்மத்து வந்து – உயிர்களை, அவைகளின் வினைக்கு ஏற்ப வந்து பொருந்தி)

## நான்காம் அதிகாரம் – அருளது நிலை

அருளின் பெருமை

**அருளிற் பெரியது அகிலத்து இல் வேண்டும்**
**பொருளில் தலை யிலது போல.** (31)

பதவுரை:- அகிலத்து வேண்டும் பொருளில் – பூமியிலே (ஆன்மாக்கள் அவ்வக்காலத்தில் இன்றியமையாததாக) விரும்பும் பொருளிலும், தலையிலது போல் – மேலான பொருள் இல்லாதது போல, அருளிற் பெரியது (இலது) – திருவருளுக்கு மேலானதும் ஒப்பானதுமான பொருள் இல்லை.

திருவருளின் பயன்

**பெருக்க நுகரவினை பேரொளியாய் எங்கும்**
**அருக்கன் எனநிற்கும் அருள்.** (32)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை:- அருக்கனென – (உலகத்திலுள்ள உயிர்த்தோற்றங்களுக்கு வேண்டிய ஆகாரம் முதலியவைகளைக் கொடுத்து அவைகளை அனுபவிப்பித்து ஒளியைக் கொடுத்து நிற்குஞ்) சூரியனைப் போல,அருள் – திருவருளானது, பெருக்கமாய் – கர்மங்களை வளர்ப்பதாய், நுகர் வினையாய் – (அவைகளைத் தொலைத்தற்காக இன்ப துன்பங்களை) அனுபவிப்பதாய், பேரொளியாய் – (அந்த அனுபவத்தினால் ஆணவத்தின் வலியைக் குறைத்து ஆன்மாவின் ஞானசத்தியாகிய) ஒளியை மேலாக விளக்குவதாய், எங்கும் நிற்கும் – எல்லா ஆன்மாக்களிடத்திலும் நிற்கும்.

அருளின்றி அறிவு பெறப்படாது

**ஊன் அறியாது என்றும், உயிரறியாது ஒன்றும்,இவை**
**தான் அறியாது ஆரறிவார் தாம்.** (33)

பதவுரை:- ஊன் என்றும் அறியாது – (அசேதனங்களாகிய தத்துவங்களாலாக்கப்பட்ட) உடல் ஒருகாலமும் ஒன்றையும் அறியமாட்டாது, உயிர் ஒன்றும் அறியாது – ஆன்மா ஆணவத்தாற் பிணிக்கப்பட்டிருத்தலால் ஒன்றையும் தானாக அறியமாட்டாது, இது தான் அறியாது – இத்திருவருளறிந்து சேர்த்தாலன்றி, ஆர் அறிவார் – அறிவைப் பெறக் கூடிய ஆன்மா எது?

ஆன்மாக்கள் அருளை அறியாமைக்குக் காரணம்

**பால் ஆழி மீன் ஆளும் பான்மைத்து அருள் உயிர்கள்**
**மால் ஆழி ஆஜம் மறித்து.** (34)

பதவுரை:- உயிர்கள் – ஆன்மாக்கள்,அருள் மறித்து – (தாம் வாழுதற் கிடமாகிய) அருளை (பயன்படுத்திச் சிவானந்தத்தை அடைதலைத்) தவிர்ந்து, மால் ஆழி ஆழும் – மயக்கத்தைக் கொடுக்கும் உலக விடயமாகிய சமுத்திரத்தில் ஆழ்ந்து நிற்கும், (அப்படி நிற்றல்), பால் ஆழி மீன் – பாற் சமுத்திரத்தில் இருக்கும் மீன்கள், ஆளும் பான்மைத்து – அங்கே நிறைந்துள்ள பாலைப் பருகாமல் இழிவான பிராணிகளைத் தேடியுண்ணும் முறைமை போலாகும்.

இதுவுமது

**அணுகு தணையறியா ஆற்றோனில்,ஐந்தில்**
**உணர்வை உணரா உயிர்.** (35)

பதவுரை:- அணுகு துணை அறியா ஆற்றோனில் – தனக்குப் பின்னே சமீபத்திலே துணையாக வருபவனை அறியாத வழிப்போக்கனைப் போலவும், ஐந்தின் – தம்முடைய காட்சிக்குத் துணையாக நிற்கும் ஆன்மாவை அறியாத ஐம்பொறிகளைப் போலவும், உயிர் உணர்வை உணராது – ஆன்மா தனக்குத் துணையாக நிற்கும் ஞானமாகிய அருளை உணர்வதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவுமது

**தரையை அறியாது தாமே திரிவார்**
**புரையை உணராத புவி.** (36)

பதவுரை:- தரையை அறியாது – பூமியை(த் தமக்கு ஆதாரமென்று) உணராமல், தாமே திரிவார் புரையை – தாமே (தமக்கு ஆதாரமானாற் போலப்) போக்கு வரவு செய்பவருடைய அறிவீனத்தை, புவி உணரா – ஆன்மாக்கள் அறியமாட்டா, ஏனெனில், அவர்கள் தாமே தமக்கு ஆதாரமென்று எண்ணுவது போல, இவைகள் திருவருளைத் தமக்கு ஆதாரமென்று அறியாமல் தாமே தமக்கு ஆதாரமென்று மயங்கும் அறிவீனத்தை உடையன.

அருளை நாடுகிறவன் எளிதில் அறிவான்

**மலைகெடுத்தோர் மண்கெடுத்தோர் வான்கெடுத்தோர் ஞானந்**
**தலைகெடுத்தோர் தற்கோடர் தாம்.** (37)

பதவுரை:- மலைகெடுத்தோர் – மலையின் மேல் நின்று கொண்டு மலையைத் தேடுபவரும்,மண் கெடுத்தோர் – நிலத்திலே நின்று நிலத்தைத் தேடுபவரும்,வான் கெடுத்தோர் – தாம் உலாவுமிடமாகிய ஆகாயத்தில் நின்று ஆகாயத்தைத் தேடுவோரும்,ஞானந் தலை கெடுத்தோர் – ஞானமாகிய அருளிலே தங்கி நின்று அதைக் தேடுவோரும்,தற்கேடர் தாம் – தம்மைக் காணாமல் தம்மைத் தேடும் அறிவிலிகளை ஒப்பர்.

இதுவுமது

**வெள்ளத்துள் நாவற்றி எங்கும் விடிந்து இருளாம்**
**கள்ளத் திறைவர் கடன்.** (38)

பதவுரை:- கள்ளத் திறைவர் கடன் – (நிறைந்த அருளோடு கலந்து நின்றும் அதனால் வரும் பேரின்பத்தை அனுபவியாமல்) பொய் வழியில் தலைமை பெற்று நிற்கும் ஆன்மாக்களுடைய தன்மை, வெள்ளத்துள் நாவற்றி – நிறைந்த நல்ல நீரிலே செல்லும் போது பிற பொருளிலே நாட்ட முள்ளவன் அதைப் பருகாமல் நா வரண்டு செல்வதையும், எங்கும் விடிந்து இருளாம் – எவ்விடத்திலும் இருள் நீங்கி விடிந்த பின்பும் கண்ணைப் பயன்படுத்தாது தடுமாறி நிற்பதையும் போலும்.

அருளை அறியும் வழி

**பரம்பு அமைந்து கேண்மின்! இது பாற்கலன்மேல் பூஞை**
**கரப்பு அருந்தநாடும் கடன்.** (39)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை:- பரப்பு அமைந்து கேண்மின் -- (ஞான நூல்களைக் கேட்கும்போது) பரபரப்பில்லாமல் நிறைந்த ஊக்கத்தோடு அவதானித்துக் கேளுங்கள் (அப்படியன்றி வேறு விடயங்களில் மனத்தை விட்டால் மாறுபாடாக விளங்கித் துன்பத்தை அடைவீர்கள்), இது - மனவொடுக்கமின்றிக் கேட்டல், பாற்கலன்மேற் பூனை - உறியிலுள்ள பாற்குடத்துக்கு மேலே நிற்கும் பூனையானது, கரப்பு அருந்த நாடும் கடன் - இறப்பிலோடுங் கரப்பைத் தின்னுதற்காகப் பாற்குடத்தில் நின்றும் பாய்ந்தோடுந் தன்மைபோலாகும்.

திருவருளை அறியாதார் சிறுமை

**இற்றைவரை இயைந்தும் ஏதும் பழக்கமிலா**
**வெற்றுயிர்க்கு வீடு மிகை. (40)**

பதவுரை:- இற்றை வரை இயைந்தும் - இவ்வளவு காலமும் திருவருளோடு கலந்து நின்றும்,ஏதும் பழக்க மில்லா - அதைச் சற்றேனும் உணரமாட்டாத, வெற்றுயிர்க்கு வீடுமிகை - அறிவில்லாத உயிருக்கு வீட்டின்பம் மேலதிக சுமை ஆகும்.

## ஐந்தாம் அதிகாரம் - அருளுருநிலை

குருவடிவாய் வருவது திருவருள்

**அறியாமை உள்நின்று அளித்ததே காணும்**
**குறியாகி நீங்காத கோ. (41)**

பதவுரை:- அறியாமை உள் நின்று அளித்ததே - கண்ணாற் காணப்படாமல் ஆன்மாக்களில் - நின்று (சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், என்னும் நான்கு தொழில்களையும் செய்து) இரட்சித்து வந்த அதுவே, காணும் குறி ஆகி - (எஞ்சியதாகிய அனுக்கிரகத்தைச் செய்தற்காக) காணக்கூடிய குருவடிவை எடுத்து, நீங்காத கோ - உடனாய் நின்று ஆட்கொள்ளும் திருவருளாம்.

அருளே ஆணவத்தை போக்கத்தக்கது

**அகத்துறு நோய்க்கு உள்ளிரன் அன்றி அதனைச்**
**சகத்தவரும் காண்பரோ தான். (42)**

பதவுரை:- அகத்து உறு நோய்க்கு - ஒரு வீட்டிலிருப்பவனுக்கு வந்த பிணியை, உள்ளின ரன்றி அவ்வீட்டிலுள்ளவர்கள் அறிவதே யன்றி, அதனை - அந்த நோயை, சகத்தவருங் காண்பரோ தூரத்திலுள்ளவரும் - அறிவாரோ அறியமாட்டார் அதுபோல, ஆன்மாவிலுள்ள நோயை ஆன்மாவோடு கலந்து நிற்கும் அருளறிவதன்றி வேறொன்றும் அறியமாட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவை சீடனன்றிப் பிறரறியார்.

**அருளா வகையால் அருள் புரிய வந்த**
**பொருளா அறியா புவி.** (43)

பதவுரை:- அருளாவகையால் – (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் என்னும் நான்கினையும்) மறைந்து நின்று செய்தது போல, அருள்புரிய வந்த (மானுட வடிவத்தினாலே தன்னை மறைத்து) அருளல் என்னுந் தொழிலைச் செய்யவந்த, பொருள் – குருவடிவத்தை, புவி ஆர் அறிவார் – (பக்குவமுள்ள சிக்ஷ்யனேயன்றிப்) பூமியில் வேறு யார் அறியத் தக்கவர்?

பக்குவமில்லாதார் அறியாமைக்குக் காரணம்.

**பொய் இருண்ட சிந்தைப் பொறியிலார் போதமாம்**
**மெய் இரண்டும் காணார் மிக.** (44)

பதவுரை:- பொய் – நிலையற்றதாகிய உலக இன்பத்திலே கருத்துடையராய், இருண்ட சிந்தை ஆணவமலத்தால் மறைக்கப்பட்ட அறிவினையுடையராய், பொறியிலார் – ஞானமாகிய ஒளியைப் பெறாதோர், போதமாம் மெய் இரண்டும் – அறிவு மயமாகிய அருளையும் அவ்வருள் அதிட்டித்து நிற்குங் குருவடிவத்தையும், காணார் மிக – சிறிதுமறியமாட்டார்.

சகலருக்குக் குருவாய் வருதலின் நோக்கம்.

**பார்வையென மாக்களை முன்பற்றிப் பிடித்தற்காம்**
**போர்வை யெனக் காணா புவி.** (45)

பதவுரை:- பார்வை என அவ்வவ் வினத்துப் பழக்கப்பட்ட விலங்குகளின் துணையைக்கொண்டு விலங்குகளைப் பிடிப்பது போல, மாக்களை முன் பற்றிப் பிடித்தற்காம் – (மனித உருவமாகிய குரு வடிவத்தையும், காணார் மிக சிறிதுமறியமாட்டார்.

குரு சாத்திரதீட்சைக்கு இன்றியமையாதவர்

**எமக்கு என் எவனுக்கு எவை தெரியும் அவ்வ**
**தமக்கு அவனை வேண்டத் தவிர்.** (46)

பதவுரை:- எமக்கு என் – (குரவினால் எமக்கு என்ன பயன் (என்று கேட்டால்), எவனுக்கு எவை தெரியும் – எவனுக்கு ஞானநூற்பொருள்கள் உள்ளபடி தெரியுமோ, அவ்வத் தமக்கு அவனை வேண்ட – அந்நூற்பொருட்கள் அவனைத் தமக்குக் குருவாக வேண்டி நிற்றலால், தவிர் – (குருவின் தேவையை நீ யுணர்வாய் ஆதலால் "எமக்கென்" என்னுங் கேள்வியை) விடுவாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயனதீட்சை

**விடம்நகுலம் மேவினும் மெய்ப் பாவகனின் மீளும்**
**கடனில் இருள் போவது இவன் கண். (47)**

பதவுரை:- விடம் – (ஒருவன் விஷம் தீண்டப் பெற்றால் அந்த) விடமானது, நகுலம் மேவினும் (மீளாது) கீரி நேரே வந்து நிற்பினும் நீங்காது, பாவகனின் மீளும் – கீரியாகத் தன்னைப் பாவிக்கும் மாந்திரிகனால் நீங்கும், கடனில் – இந்த முறைமை போல, (திருவருளானது நேரேநின்றும் மலங்களைப் போக்காது தான் அதிகூஷ்டித்தற்கு ஒரு குரு வடிவத்தைக்கொண்டு பார்வையாலும் பாவனையாலும் ஆணவத்தை நீக்கும்), இருள் போவது இவன் கண் – மலத்தை நீக்குவது குருவினுடைய கண்.

மூவகை ஆன்மாக்களுக்கும் அருள்செய்யும் முறைமை

**அகலர்த் தரும் அருளை ஆர்க்கும் வினைநீக்கும்**
**சகலர்க்கு வந்து அருளும் தான். (48)**

பதவுரை:- அகலத்து அரும் அருளை ஆக்கும் – விஞ்ஞானகலரிற் பக்குவமுடையாருக்குச் சிவபெருமான் அவர்களது அறிவிலே நின்று அருள்செய்து மலத்தை நீக்குவர், வினை நீங்கும் – பிரளயாகலரிற் பக்குவர்க்கு அவர்களைப் போல முன்னிலையாய் நின்று (ஆணவத்தோடு) கர்மத்தையும் நீக்குவர், சகலர்க்கு தான் வந்து அருளும் – சகலரிற் பக்குவருக்குக் குருவடிவாய் வந்து மும்மலங்களையும் நீக்கி அருளுவர்.

சிவபெருமானே குருவாதல் வேண்டும்

**ஆரறிவார் எல்லாம் அகன்ற நெறி அருளும்**
**பேரறிவான் வாராத பின். (49)**

பதவுரை:- எல்லாம் அகன்ற – மந்திர முதல் கலையீறாகிய அத்துவாக்களையுங் கடந்த, நெறியருளும் – வீட்டுநெறியை வெளிப்படுத்தியருளும், பேரறிவான் வாராத பின் – பேரறிவினராகிய சிவபெருமானே குருமூர்த்தங்கொண்டு வராவிட்டால், ஆரறிவார் – அதை அறியவல்லவர் யார்.

இதுவுமது

**ஞானம் இவன் ஒழிய நண்ணியிடும் நற்கல்அனல்**
**பானு ஒழியப் படின். (50)**

பதவுரை:- பானு ஒழிய – சூரிய ஒளியில்லாமல், நற்கல் அனல் படின் – சூரிய காந்தக்கல்லில் அக்கினி தோன்றுமாயின், இவன் ஒழிய – அருட்குருவின்றி, ஞானம் நண்ணியிடும் – (ஆன்மாவில்) ஞானந் தோன்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறாம் அதிகாரம் – அறியுநெறி

அருளுருவாகிய குருவினிடம் உண்மைப்பொருளை உணரும் முறைமை
இருவினை யொப்புஞ் சத்திநிபாதமும்

**நீடும் இருவினைகள் நேராக நேராதல்**
**கூடும் இறைசத்தி கொளல்.** (51)

பதவுரை:- நீடும் இருவினைகள் – வளர்ந்து வருவனவாகிய வினைகள் இரண்டும், நேராதல் – (விலக்கப்படவேண்டிய முறையால்) ஒத்த தன்மையுடையவைகள் என்ற எண்ணம், நேராக – ஆன்மாவுக்கு உண்டாக, இறை சக்தி கொளல் கூடும் – சிவபெருமானுடைய சத்தி பதியும்.

ஆறு பொருள்கள் அநாதி

**ஏகன் அனேகன் இருள் கருமம் மாயை இரண்டு**
**ஆக இவை ஆறு ஆதிஇல்.** (52)

பதவுரை:- ஏகன் – ஒருவராகிய கடவுளும், அநேகன் – அளவில்லாதனவாகிய ஆன்மாக்களும், இருள் – ஆணவமலமும், கருமம் – கர்மமலமும், மாயை இரண்டு – சுத்தம் அசுத்த மென்னும் இருவகை மாயைகளுமாகிய, இவை ஆறு ஆதியில் – இந்த ஆறு பொருள்களும் அநாதியான பொருள்கள்.

ஆறு பொருள்களுக்கு முள்ள தொடர்பு

**செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பவனும்**
**உய்வான் உளன் என்று உணர்.** (53)

பதவுரை:- செய்வானும் – கருமங்களைச் செய்யும் புருடனும், செய்வினையும் – செய்யப்படும் நல்வினை தீவினைகளும், சேர் பயனும் – அவற்றின் பயனாகிய இன்ப துன்பங்களும், சேர்ப்பவனும் – அவற்றை அனுபவிக்கப்பண்ணுங் கடவுளுடைய திருவருளும் ஆகிய இந்த நான்கையும், உய்வான் உளன் என்று உணர் – (தன்னை) ஈடேற்றுதற்காகப் பொருந்துபவன் ஆன்மா என்று அறிவாயாக.

கடவுள் ஆன்மாவுக்கு உயிராய் நிற்றல்

**ஊன் உயிரால் வாழும் ஒருமைத்தே ஊனொடுஉயிர்**
**தான் உணர்வோடு ஒன்றாம் தரம்.** (54)

பதவுரை:- ஊனொடு உயிர் – உடம்போடு சேர்ந்த ஆன்மா, உணர்வோடு ஒன்றாந்தரம் – ஞானத்தோடு கூடி ஒன்றுபட்டு நிற்குந்தன்மை, ஊன் உயிரால் வாழும் ஒருமைத்து – உடம்பானது உயிரோடு கூடிவாழும் ஒற்றுமையைப் போல்வது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் உயிர்க்குயிராய் நின்று நடத்தும் முறைமை.

**தன்னிறமும் பன்னிறமும் தான் ஆம் கல் தன்மை தரும்**
**பொன்னிறம் போல் மன்னிறம் இப் பூ.** (55)

பதவுரை:- பல் நிறமும் – (பளிங்கோடு சேர்ந்த பொருள்களின்) பலவகையான நிறங்களையும், கல் தானும் தன்மை – பளிங்கினுடைய இயல்பான நிறத்தையும், தன்னிறமும் – தன்னுடைய பிரகாசத்தையும், தரும் – தருவதாகிய, பொன்னிறம் போல் – பொலிவாகிய சூரிய கிரகணம் போல, மன் நிறம் – (மலங்களை முதிர்விக்கும் திரோதான சக்தியின் பிரகாசத்தையும் மலங்கள் நீங்கிய பின்பு ஆன்மாவை விளக்குஞ் சிற்சத்திப் பிரகாசத்தையுந் தந்து இவற்றுக்கப்பால் தன்னுடைய பிரகாசத்தோடு நிற்பதுமான) கடவுளுடைய திருவருளாகிய சோதியை உடையது, இப்பூ – இந்தப் பூமியானது.

மெய்ப்பொருளைக் காண்பதற்கு ஞானம் வேண்டும்.

**கண்தொல்லை காணும் நெறிகண் உயிர் நாப்பண் நிலை**
**உண்டு இல்லை அல்லது ஒளி.** (56)

பதவுரை:- கண் உயிர் நாப்பண் உண்டு – (ஒளியையுடைய) கண்ணானது (பொருளுக்கும்) ஆன்மாவுக்கும் நடுவே உள்ளது (அது), கண்டு (ஒரு பொருளை) உற்றுப் பார்த்து, ஒல்லை – காணும்நெறி அதை விரைவில் உணருதற்கு வழியாகின்றது, ஒளி உயிர் நாப்பண் உண்டு – ஞான ஒளியானது உயிருக்கும் மெய்ப்பொருளுக்கும் நடுவில் உள்ளது. (அது) கண்டு மெய்ப்பொருளைக் கண்டு, ஒல்லை காணும் நெறி –அதை விரைவில் உணருதற்கு வழியாம், ஒளி அல்லாது இல்லை திருவருளாகிய – ஞான ஒளி இல்லையாயின் மெய்ப்பொருளைக் காணுதலில்லையாம்.

**புன் செயலின் ஓடும் புலன் செயல் போல் நின்செயலை**
**மன் செயல தாக மதி.** (57)

பதவுரை:- புன் செயலின் ஓடும் புலன் செயல் போல் – இழிவான செய்கைகளிலே செல்லும் இந்திரியங்களின் செய்கைகளை உன்னுடைய செய்கைகளாக நீ கருதியது போல, நின் செயலை – உன்னுடைய செயலை, மன் செயல் ஆக மதி – கடவுளுடைய கிரியா சக்தியின் வழியே நடப்பதாக எண்ணிக்கொள்.

ஞானத்தைக் காணும் முறைமை.

**ஓராதே ஒன்றையும் உற்று உன்னாதே: நீ முந்திப்**
**பாராதே: பார்த்ததனைப் பார்.** (58)

பதவுரை:- ஒன்றையும் ஓராதே – ஞானம் எப்படியிருக்கும் எவ்வாறு வரும் என்று நீ ஆராயாதே, உற்று உனதே – (உலகப்பொருள்களைக் குறித்து நினைப்பது போல) அதைப்பற்றிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்றேனும் நினையாதே, நீ முந்திப் பாராதே – அது வருமுன் அதைத் தெளிந்து கொள்ள முயற்சிசெய்யாதே, பார்த்ததனைப் பார் – ஞானமானது உன்னை வந்து காணும் அப்போது அதைக் காண்பாயாக.

ஞானத்தை அணையும் முறைமை.

களியே மிகுபுலனுமாக் கருதி ஞான
ஒளியே ஒளியா ஒளி. (59)

பதவுரை:- களியே மிகு புலனாக் கருதி – (ஞானத்தைப் பெற்றபின் உண்டாகும்) பேரானந்தத்தையே நீ நினைக்கும் பொருளாகக் கொண்டு, ஞான ஒளியே ஞானமாகிய பிரகாசத்தையே, ஒளியா – பிரகாசமாகக் கொண்டு, ஒளி – (அந்த ஒளிக்குட் புகுந்து) ஒளித்து நிப்பாயாக.

பிறபொருளைக் கருதாமல் ஞான வசமாய் நிற்றல்

கண்டபடி யேகண்டு காணாமை காணாமை
கொண்டபடி யேகொண் டிரு. (60)

பதவுரை:- கண்டபடியே கண்டு – ஞானம் உனக்கு எப்படி வெளிப்பட்டதோ அப்படியே நீ அதைக் கண்டு, காணாமை காணாமை – அறியாமை வந்து தோன்றாமல், கொண்டபடியே கொண்டிரு – அது உன்னை ஏற்றபடியே அதன்வசப்பட்டிருப்பாயாக.

## ஏழாம் அதிகாரம் – உயிர் விளக்கம்

### அறியுநெறியில் கூறியபடி நின்று ஆன்மா ஆணவமலம் நீக்கப்பெற்றுத் தன்செயலின்றித் திருவருள் வசப்படுதல். இது ஆன்மசுத்தியெனவும் படும்.

அருளை அடைதற்கு ஏது

தூநிழலார் தற்காருஞ் சொல்லார் தொகுமிதுபோற்
றானதுவாய் நிற்குந் தரம். (61)

பதவுரை:- தூநிழல் ஆர்தற்கு – (வெய்யிலில் வருந்தினவன்) குளிர்ந்த நிழலைச் சேர்தற்கு, ஆரும் சொல்லார் – அங்கே போ என்று ஒருவருஞ் சொல்லவேண்டியதில்லை (அவன் தானே விரைவாக ஓடிச் சேருவான்), தொகும் இது போல் – பொருந்திய இந்த முறைமைபோலும், தான் அதுவாய் நிற்குந்தரம் – மலங்களின் துன்பங்களால் வருந்தினோன் அருளைக் கண்டவுடனே தான் அந்த அருளோடு சேர்ந்து நிற்குந் தன்மை.

ஆன்மா அருளை அறியுங் காலம்

தித்திக்கும் பாறானுங் கைக்குந் திருந்திடுகாப்
பித்தத்தின் றான் றவிர்ந்த பின். (62)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை:- தித்திக்கும் பால் தானும் கைக்கும் – (பித்தநோய் உடையாரது நாவுக்கு) மதுரமான பாலும் கசப்பாயிருக்கும், பித்தத்தின் தவிர்ந்த பின் – பித்த நோயினின்றும் நீங்கிய பின், நா நாவானது, திருந்திடும் – முன் கைத்த பால் தித்திக்கத் தக்கதாக திருந்திவிடும்.

ஆன்மா அருளைத் தானாகக் காணமாட்டாது

**காண்டா னொளி யிருளிற் காட்டிடவுந் தான்கண்ட**
**வீணடாவ மெந்நாள் வீழும்.** (63)

பதவுரை:- ஒளி – ஒளிவடிவமாகிய ஞானமானது, இருளிற் காட்டிடவும் – ஆணவமாகிய இருளில் ஆன்மா கிடந்து மயங்கும் போது தன்னைக் காட்டிடவும், காண்பான் – அதைக் காணும் , தான் கண்ட வீண் பாவம் – தன் முயற்சியால் அதைக் கண்டதாக நினைப்பதால் வீணாக வரும் பாவமானது, எந்நாள் விழும் – எப்போது தீரும்.

திருவருள் ஆணவத்தை ஒத்திருக்கும் வகை.

**ஒளியு மிருளு மொருமைத்துப் பன்மை**
**தெளிவு தெளியார் செயல்.** (64)

பதவுரை:- ஒளியும் இருளும் ஒருமைத்து – திருவருளும் ஆணவமும் தன்வகைப் பொருளைக்காட்டி ஒழிந்ததை மறைக்குந் தன்மையில் ஒத்திருக்கின்றன. பன்மை – அவைகளுக்குள்ள பேதம் யாதெனில், தெளிவு – அருளானது தன்னை அடைந்தோர்க்கு உண்மைப் பொருளைக் காட்டுவதும், தெளியார் செயல் – ஆணவமானது அது நீங்காதார்க்குப் பொய்யாகிய பொருள்களைக் காட்டுதலுமாம்.

திருவருளை யடைந்தோர்க்குக் கடவுள் வெளிப்படுத்தல் எளிது.

**கிடைக்கத் தகுமோநற் கேண்மையார்க் கல்லால்**
**எடுத்துச் சுமப்பானை யின்று** (65)

பதவுரை:- நற் கேண்மையார்க்கு அல்லால் – அன்பு நிறைந்த சுற்றத்தவரை உடையவர்களுக்கல்லாமல், எடுத்துச் சுமப்பானை – அவர்களுடைய சுமை எல்லாவற்றையும் எடுத்துச் சுமப்பவன் ஒருவனை, இன்று கிடைக்கத் தகுமோ – இப்போது பெற்றுக் கொள்ளுதல் கூடுமோ, கூடாது. அது போல பேரன்பாகிய திருவருளைச் சார்ந்தவர்களுக்கு அவர்களுடைய வினைகளையும் வினைப் பயன்களையும் சுமப்பவராகிய கடவுள் எளிதிற் தோன்றுவர்.

திருவருளைச் சாராதார் கடவுளை அடையார்

**வஞ்ச முடனொருவன் வைத்த நிதி கவரத்**
**துஞ்சினனோ போயினனோ சொல்.** (66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை:- ஒருவன் வைத்த நிதி - ஒருவன் வைத்த பொருளை, வஞ்சமுடன் கவர வேறொருவன் களவாக எடுத்துக்கொண்டு போக, துஞ்சினனோ போயினனோ - அந்தப் பொருளையுடையவன் உறங்கினானோ அல்லது அவ்விடம் விட்டு நீங்கினானோ, சொல் - சொல்லுவாயாக.

அருள் ஆன்மாவை வசபபடுத்தல்

**தனக்கு நிழலின்றா வொளிகவருந் தம்ப**
**மெனக்கவர நில்லா திருள்.** (67)

பதவுரை:- தனக்கு நிழல் இன்றா - (சூரியன் உச்சியில் நிற்கும்போது) தன்னுடைய நிறந்தோன்றப் பெறாமல், ஒளி கவரும் தம்பம் என - சூரியகிரணத்தாற் கவர்ந்து கொள்ளப்படும் படிகத் தூண்போல, கவர - (ஆன்மா தன்னறிவு தோன்றப் பெறாமல் திருவருளாற்) கவர்ந்து கொள்ளப்படுமாயின், இருள் நில்லாது - அந்நிலையிலே மலம் நில்லாமற் போகும்.

அருளுக்குப் பின்னே ஆன்மா நிற்றல் அவசியம்

**உற்கைதரும் பொற்கை யுடையவர்போ லுண்மைப்பின்**
**நிற்க வருளார் நிலை.** (68)

பதவுரை:- உற்கைதரும் பொற்கை உடையவர் போல் - தழற்கொள்ளியைப் பிடித்திருக்கும் அழகிய கையை யுடையவர்கள் (தாம் வேண்டிய பொருளைக் காணும்போது அக்கொள்ளியை முன்னிட்டுத் தாம் பின்னே நிற்பது) போல, உண்மைப் பின் நிற்க - (ஒருவர் சிவத்தைக் காணவேண்டின்) அருளைத் தமக்கு முன்னாக்கித் தாம் அதன் பின்னே நிற்பாராக, அருள் ஆர் நிலை - அருளோடு பொருந்தி நிற்கும் நிலை இதுவே.

அருளுக்கு முன்னே நிற்கும்போது சிவத்தைக் காணாமைக்கு ஏது

**ஐம்புலனாற் றான்கண் டகன்றா லதுவொழிய**
**வைம்புலனார் தாமா ரதற்கு.** (69)

பதவுரை:- ஐம்பலுனால் - மெய்யாய் கண் மூக்குச் செவிகளால், தாம் கண்டகன்றால் - தாம் கண்ட பொருள்களுக்கு அப்பாற்பட்ட பொருளாயின், அது ஒழிய - அருளாலேயன்றி, அதற்கு பேரின்பமாகிய சிவத்தை யடைதற்கு, ஐம்புலன் ஆர்தாம் ஆர் - ஐம்பொறிகளுக்கேனும் தமக்கேனும் உரிமையில்லை.

இதுவுமது

**தாமே தருமவரைத் தம்வலியி னாற்கருத**
**லாமே யிவனா ரதற்கு** (70)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை:- தாமே தரும் அவரை – ஒரு பொருளை ஒருவர்க்குத் தாமே விரும்பித் தருபவரை, தம் வலியினாற் கருதலாமே – சாமர்த்தியத்தினால் அவரிடம் அதை பெற்றதாக நினைத்தல் நீதியாகுமா? (ஆகாது: அதுபோல, திருவருளானது தானாக விரும்பி ஆன்மாவுக்கு பேரின்பத்தை கொடுக்க,ஆன்மா தன்னுடைய ஆற்றலால் அதை பெற்றதென்று நினைத்தலாகாது.) இவன் அதற்கு ஆர்.(திருவருளாலன்றி) அப் பேரின்பத்தைப் பெறத்தக்க உரிமை ஆன்மாவுக்குச் சிறிது மில்லையே

## எட்டாம் அதிகாரம் –இன்புறு நிலை

ஆன்மசுத்தி யடைந்தபின்பு பேரானந்தத்தை அடையும் முறைமை
பேரின்பத்தை பெறுவோரும் பெறாதோரும்

**இன்பறுவார் துன்பா ரிருளினெஞ் சுடரின்**
**பின்புகுவார் முன்புகுவார் பின்** (71)

பதவுரை : இருளின் எழும்– ஆணவமலத்தை நீக்குவதற்காக மேலாக விளங்குகின்ற, சுடரின் பின் புகுவார் –ஞானத்தை முன்னிட்டு தாம் பின்னே செல்பவர்கள், இன்புறுவார்– பேரின்பத்தை அடைவார்கள், முன் புகுவார் பின் – அடைவார்கள்.

இன்பத்துக்குச் சிவானுபவம் வேண்டும்.

**இருவர் மடந்தையருக்கு என்னபயன் இன்புஉண்டாம்**
**ஒருவன் ஒருத்தி உறின்** (72)

பதவுரை : இருவர் மடந்தையருக்கு என் பயன் – ஆளப்படும் இயல்புடையவளாகிய ஒரு பெண் வேறொரு பெண்ணால் இரட்சிக்கப்படமாட்டாள், (அது போல, ஆளப்படுவதாகிய ஆன்மா ஆளப்படுவதாகிய அருளோட சேர்வதினால் பேரின்பமாகிய பயனை அடையமாட்டாது), ஒருத்தி ஒருவன் உறின் இன்பு உண்டாம் – பெண்ணானவள் ஆளுந் தன்மையுடைய ஆடவனை அடைந்தால் அவனால் (இரட்சிக்கப்படுவதாகிய) இன்பத்தை அடைவாள், (அது போல ஆன்மா அருளைக்கொண்டு தீவமாகிய தன்னுடைய தலைவனைச் சேர்ந்தே பேரின்பத்தை அடையும்).

சிவம் இன்பத்தை அனுபவிப்பதில்லை

**இன்பதனை எய்துவார்க்கு ஈயும் அவற்கு உருவம்**
**இன்ப கனம் ஆதலினால் இல்.** (73)

பதவுரை : எய்துவார்க்கு இன்பதனை ஈயும் – சிவபெருமான் தம்மை அடையும் ஆன்மாக்களுக்கு பேரின்பத்தைக் கொடுத்தருள்வார், அவர்க்கு உருவம் இன்பகனம் – அவரடைய திருமேனி நிறைந்த ஆனந்தமாம, ஆதலினால் இல் – ஆதலினால் ஆநந்தத்தை அனுபவிப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்திநிலை அத்துவிதம்.

**தாடலைபோல் கூடியவை தாம்நிகழா வேற்றின்பக்**
**கூடலை நீ ஏகம் எனக் கொள்** (74)

பதவுரை : தாடலைபோல்– தாள் தலை என்னும் இரண்டு சொற்களுந் தாடலை என்னும் ஒரு சொல்லானது போல, கூடியயவை – சிவமும் ஆன்மாவுஞ் சேருவன, வேறு நிகழா – பிரிக்கப்படாத, இன்பக்கூடலை – பேரிபன்பமாகிய அந்தக் கலப்பை, ஏகமென நீ கொள் – அத்துவிதமென்று நீ அறிந்துகொள்.

முத்தியில் அத்துவிதமாய் நிற்றற்குக் காரணம்

**ஒன்றானும் ஒன்றாது இரண்டானும் ஓசையெழாது**
**என்றால் ஒன்றன்று இரண்டும் இல்.** (75)

பதவுரை- ஒன்றலும் ஒன்றது – கடவுளும் ஆன்மாவும் ஒரே பொருளாயின் அவைகள் ஒன்றாக வேண்டியதில்லை. இரண்டாலும் ஓசை எழாது என்றால் –அவைகள் வேறாக நிற்பின் பேரின்பமுண்டாகாது ஆதாலால், ஒன்று அன்று இரண்டும் இல்– அவைகள் ஒரு பொருளுமல்ல இரு பொருளுமல்ல.

இனிப் பிறவியெடாதார் வகை.

**உற்றாரும் பெற்றாரும் ஓவார் உரைஒழியப்**
**பற்றாரும் அற்றார் பவம்.** (76)

பதவுரை- உற்றாரும்– பரமுத்தியை அடைந்தோரும், பெற்றாரும்– அபர முத்தியை பெறுவதற்குக் காரணமாகிய சமாதியை அடைந்தோரும், ஓவாது உரை யொழியப் பற்றரும்– இடையறாத மௌனசமாதியை யடையாமல் (கேட்டால், சிந்தித்தல்,தெளிதல் என்னும்) ஞானநிலைகளை யடைந்தோரும், பவம் அற்றார்– பிறவிப்பிணி யற்றவர் ஆவார்.

சமாதிநிலை பலிதமாகும் முறைமை.

**பேய்ஒன்றும் தன்மை பிறக்கு அளவும்இனி**
**நீஒன்றும் செய்யாது நில்.** (77)

பதவுரை- பேயொன்றுந் தன்மை பிறக்கு மளவும்– பேய் பிடித்தவனுடைய தன்மை உனக்குண்டாகும் வரையும், நீ ஒன்றுஞ் செய்யாமல் நில்– நீ ஒன்றுஞ் செய்யாமல் அசைவற நிற்பாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயாசாரங்கள் நீங்கும் முறைமை.

**ஒண்பொருட்கண்உற்றார்க்கு உறுபயனே அல்லாத**
**கண்படும்போர் கைப்பொருள்போல் காண்.** (78)

பதவுரை- ஒண்பொருட்கண் உற்றார்– மெய்ப்பொருளாகிய ஞானத்தை அடைந்தவர்களுக்கு, உறு பயனே யல்லாது– முன் அநுட்டித்த சரியை கிரியை யோகங்களால் உண்டாகும் பயனாகிய பேரின்பமேயன்றி (அந்தச் சமயாசாரங்கள் இன்றி யமையாதனவல்ல), கண் படுப்போர் கைப்பொருள் போற் காண்– உறங்குபவரது கையிலிருக்கும் பொருள் தானே நழுவுவது போல, அந்த சமய சாரங்கள் தாமாகவே அவர்களினின்று நழுவுவதுமுண்டு.

முத்தியின்பம் இப்படிப்பட்டதென்று சொல்லத்தக்கதன்று.

**மூன்றாய தன்மை அவர் தம்மின் மிகமுயங்கித்**
**தோன்றாத இன்பம் அது என்சொல்.** (79)

பதவுரை- அவர் தன்மின் மிகமுயங்கி– (முத்தியின்பமானாது) சிவமும் ஆன்மாவுஞ் சிறிதும் பிரிப்பின்றி ஒன்றாய் நிற்குங் கலப்பினால், மூன்றாய தன்மை– காண்பவன் காட்சி காட்சிப்பொருள் என்னும் மூவகைப்பட்ட தன்மையும், தோன்றாத இன்பம்– வேறாக தோன்றாத பேரின்பமாம், அதன் சொல்– அந்த இன்பத்தின் அதிசயம் கொல்லத்தக்கதன்று.

பேரின்பம் பேரன்பினில் அடையத்தக்கது.

**இன்பில்இனிது என்றல் இன்று உண்டேல் இன்று உண்டாம்**
**அன்றுநிலையே அது.** (80)

பதவுரை- இன்பில் இனிதென்றல்– எல்லா இன்பங்களிளும் இனிதென்று சொல்லப்படுவதாகிய முத்தியின்பமானது, இன்பு உண்டேல்– ஒருவருக்குப் பேரன்புள்ளதாயின், இன்று உண்டாம்– இப்போதே பெறப்படும், அது அன்பு நிலையே– அது பேரின்பத்தைத் தனக்கு நிலையாக உடையதாதலால்.

## ஒன்பதாம் அதிகாரம் – ஐந்தெழுத்தருணிலை

வேதாகமங்களிலுள்ள உண்மைகள் ஐந்தெழுத்திலடங்கியன

**அருள்நூலும் ஆரணமும் அல்லாதும் ஐந்தின்**
**பொருள் நூல் தெரியப் புகின்.** (81)

பதவுரை:- அருள் நூலும் ஆரணமும் அல்லாதும் – சைவாகமங்களும் வேதங்களும் உபாகமம் முதலிய மற்றைய ஞானநூல்களும், ஐந்தின் பொருள் நூல் – ஐந்தெழுத்தின் பொருளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்த்தும் நூல்களாம், தெரியப்புகும் - இவ் வைந்தெழுத்தை ஆராயின் அவைகள் அதில் அடங்குதல் புலப்படும்.

பிரணவத்துள் அடங்கும் பொருள்கள்.

**இறைசக்தி பாசம் எழில் மாயை ஆவி**
**உறு நிற்கும் ஓங்காரத் துள்.** (82)

பதவுரை:- இறை – சிவமும், சக்தி – திருவருளும், பாசம் – மலமும், எழில் மாயை – (ஆன்மாவின் சிற்சத்தியை இறுதியிற் பூரணமாக விளக்கும்) சிறப்பினையுடைய திரோதான சக்தியும், ஆவி – ஆன்மாவும், ஓங்காரத்துள் உற நிற்கும் – பிரணவத்தினுள்ளே பொருந்தி நிற்கும்.

ஐந்தெழுத்துள் அடங்கும் பொருள்கள்

**ஊனநடனம் ஒருபால் ஒருபாலா**
**ஞானநடனம் தான்நடுவே நாடு.** (83)

பதவுரை:- ஊன நடனம் ஒரு பால் – பிறப்பினை விளைக்கும் திரோதானமும் மலமும் ஒரு பக்கத்திலுள்ளன, ஞான நடம் ஒருபால் ஆம் – மோட்சத்தை உதவும் சிவமும் சக்தியும் ஒரு பக்கத்தில் உள்ளன, தான் நடுவே – ஆன்மாவாகிய தான் நடுவிலுள்ளது, நாடு – (இவைகள் ஐந்தெழுத்தில் இருப்பதைக்) காண்பாயாக.

ஆன்மாவின் பெத்தநிலையும் முத்தி நிலையும் ஐந்தெழுத்தில் அடங்குதல்

**விரிய ம ந மேவி யவ்வை மீளவிடா சித்தம்**
**பெரிய வினை தீரின் பெறும்.** (84)

பதவுரை:- ந மேவிய ம விரிய – திரொதான சக்தி மலத்தைச் சார மலம் முயற்சி செய்ய, யவ்வை மீள விடா – ஆன்மாவை அவைகள் பிறவிகளில் அழுத்தும், (இது பெத்த நிலை) தம் பெரிய வினைதீர – (ஆன்மாக்கள்) தம்முடைய பெரிய பிணிகளாகிய மலங்கள் தீர, சி பெறும் – (திருவருட்சக்தியின் முயற்சியால்) சிவத்தை யடையும், (இது முத்திநிலை).

நாகராதி பஞ்சாட்சரம் உபாயமார்க்கர்க்கு உரியது

**மால்ஆர் திரோதம் மலம்முதலா மாறுமோ**
**மேலா சி மீளா விடின்.** (85)

பதவுரை:- மாலார் திரோதம் மலம் முதலா – பிறவிப்பிணியிலே விடுவனவாகிய திரோதானத்தையும் மலத்தையும் முதலாக வைத்து ஐந்தெழுத்தை ஓதினால், மாறுமோ – மலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்குமோ நீங்காது, மேல் – மேலான பொருளாகிய சிவம், ஆசுமீளாவிடின் – ஊனநடனத்தைச் செய்விப்பவைகளின் இடத்தை எடுத்துக்கொண்டு அவைகளைக் கீழாக்காவிட்டால்.

நாகராதி பஞ்சாட்சரம் மோட்ச ஆசையுடையார் ஓதலாகாது.

**ஆராதி ஆதாரம் அந்தோ! அதுமீண்டு**
**பாராது மேலாதும் பற்று.** (86)

பதவுரை:- ஆதாரம் ஆராதி – உனக்கு ஆதாரமாயிருக்கின்ற சிவத்தை முன்னாக வைத்து ஐந்தெழுத்தை ஓதி வழிபடு, அது மீண்டு பாராது – (உபாய மார்க்கத்திலே ஓதிய) நகாராதி பஞ்சாட்சரத்தின் இயல்பைத் திரும்ப விசாரியாமல், மேல் ஓதும் பற்று – (உண்மை மார்க்கத்தில் நிற்கும்போதும்) நகார மகாரங்களை முன்னாக ஓதுந் தன்மை, அந்தோ – கவலைப்படவேண்டிய தொன்று.

சிகாராதி பஞ்சாட்சரமே மோட்ட ஆசையுடையார்க்கு உரியது.

**சிவமுதலே ஆமாறு சேருமேல் தீரும்**
**பவம் இதுநீ ஓதும்படி.** (87)

பதவுரை:- சிவம் முதலே ஆமாறு சேருமேல் – சிகார வகாரம் என்னு மிரண்டும் முதலிலே வரும்படி உச்சரித்தல் கூடுமாயின், பவம் தீரும் – பிறவிக்குக் காரணமாகிய மலங்கள் நீங்கும், நீ ஓதும்படி இது – முத்தியை விரும்பிய நீ உச்சரிக்கும் முறைமை இதுவே.

வகாரம் ஆன்மாவைச் சிவமாக்குதல்.

**வா சி யருளி யவ்வை வாழ்விக்கும் மற்றுஅதுவே**
**ஆசில் உருவாமுமாம் அங்கு.** (88)

பதவுரை:- சா சி யருளி – சத்தியானது சிவத்தைக்காட்டி, அதை – ஆன்மாவை, வாழ்விக்கும் – வீட்டின்பத்தில் இருத்தும், அதுவே அங்கு ஆசில் உருவமும் ஆம் – அந்தத் திருவருளே ஆன்மாவுக்கு முத்தியிற் குற்றமற்ற மேனியாயுமிருக்கும்.

முத்திநிலையை விளக்கும் ஐந்தெழுத்து

**ஆசின் ந வா நாப்பண் அடையாது அருளினால்**
**வா சி இடைநிற்கை வழக்கு.** (89)

பதவுரை:- ஆசு இல் ந நா நாப்பண் – (முத்தியடைந்த ஆன்மாவானது) குற்றமற்றதாகிய திரோதானத்துக்குஞ் சிற்சத்திக்கும் நடுவில், அடையாது – (பெத்தான்மைவைப்போல) நில்லாது, அருளினால் – திருவருளினால், வாசி இடை நிற்கை வழக்கு – சிற்சத்திக்குஞ் சிவத்துக்கும் இடையில் நிற்பது முறைமையாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனங்களுக்கு உயிராய் உள்ளது திருவருள்

**எல்லா வகையும் இயம்பும் இவன் அகன்று**
**நில்லா வகையை நினைந்து.** (90)

பதவுரை:- இவன் அகன்று நில்லா வகையை நினைந்து – ஆன்மாவானது சிவசத்தியினின்றும் ஒரு காலமும் நீங்கி நில்லாத தன்மையை அறிந்து, எல்லா வகையும் இயம்பும் – ஆன்மா முத்தியடைதற்கு ஏதுவாகிய வழிகள் எல்லாவற்றையும் வேதாகமங்கள் சொல்லும்.

## பத்தாம் அதிகாரம் – அணைந்தோர் தன்மை

### அணைந்தோராவர் சீவன்முத்தர்

சீவன் முத்தர் நிலை

**ஓங்கு உணர்வின் உள்ளடங்கி உள்ளத்துள் இன்புஒடுங்கத்**
**தூங்குவர் மற்று ஏதுண்டு சொல்.** (91)

பதவுரை:- ஓங்கு உணர்வினுள் அடங்கி – (சீவன் முத்தர்கள்) நிறைந்த ஞானத்தினுள்ளே அடங்கி, உள்ளத்துள் இன்பு ஒடுங்க – தம் அறிவினுள்ளே பேரின்பம் அடங்கும்படி, தூங்குவர் – ஆனந்த நித்திரை செய்வர், மற்று ஏது உண்டு சொல் – அவர்களுக்கு வேறுள்ள தென்ன

இவர்கள் பதியைப்போல் ஐந்தொழிலேனும் பசுக்களைப் போல்
வினைகளேனுஞ் செய்யார்.

**ஐந்தொழிலும் காரணங்கள் ஆம்தொழிலும் போகம்நுகர்**
**வெந்தொழிலும் மேவார்மிக.** (92)

பதவுரை:- ஐந்தொழிலும் – சிவத்தினாற் செய்யப்படும் ஐந்தொழில்களையேனும், காரணர்களாந் தொழிலும் – திருவருளாற் பிரேரிக்கப்பட்டு நடைபெறுந் தினத் தொழில்களையேனும், போக நுகர் வெந்தொழிலும் – மாயைபோகத்தை அனுபவிப்பிக்கும் வெய்ய வினைகளேனும், மிக மேவார் – சிறிதும் பொருந்தார்.

முத்தர்கள் எங்குஞ் சிவத்தையே காண்பவர்கள்

**எல்லாம் அறியும் அறிவுறினும் ஈங்குஇவர் ஒன்று**
**அல்லாது அறியார் அற.** (93)

பதவுரை:- எல்லாம் அறியும் அறிவு உறினும் – எல்லாவற்றையும் அறியும் ஞானத்திற் கலந்து நிற்பினும், இங்கு – இவ்விடத்து, இவர் – சீவன்முத்தர்கள், ஒன்று அல்லாது – ஞானமொன்றையே அன்றி மற்றொன்றையும், அற அறியார் – சிறிதுங்காணார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் விஷயங்களைக் காணாமைக்குக் காரணம்.

**புலன் அடக்கித் தம்முதற்கண் புக்குறுவர் போதார்**
**தலன் நடக்கும் ஆமை தக. (94)**

பதவுரை:- தலம் நடக்கும் ஆமை தக – தன் வழிச் செல்லும் ஆமை(யானது ஆரவார முள்ள இடத்தில் தன்னுடைய ஐந்துறுப்புக்களையும் உள்ளுக்கு இழுத்து அசைவில்லாமற் கிடப்பது) போல, புலன் அடக்கி – முத்தர் தமது பொறிகளை அடக்கி, தம் முதற்கட் புக்குறுவர் – தமது முதலாகிய சிவத்திலே புகுந்து பொருந்தி நிற்பர், போதார் – விக்ஷயங்களிந் பொறிகளைப் போகவிடார்.

அவர்கள் சர்வ வியாபகர்கள்.

**அவனைஅகன்று எங்குஇன்றாம். ஆங்கு அவனாளங்கும்**
**இவனை ஒழிந்து உண்டாதல் இல். (95)**

பதவுரை:- அவனை அகன்று – சிவத்தை நீங்கி, எங்கு இன்றாம் – எவ்வுலகமுமில்லை, ஆங்கு – அது போல, அவனாம் இவனை ஒழிந்து – சிவமாதலை அடைந்த முத்தனை நீங்கி, எங்கும் உண்டாதல் இல் – எவ்விடத்தும் உளதாய் நிற்றல் இல்லை.

அவர்களுக்கு வெறுப்பு விருப்பில்லை

**உள்ளும்புறம்பும் ஒருதன்மைக் காட்சியருக்கு**
**எள்ளும் திறம் ஏதும்இல். (96)**

பதவுரை:- உள்ளும் புறம்பும் ஒரு தன்மைக் காட்சியருக்கு – உள்ளும் வெளியும் ஒரு தன்மைத்தாய்க் காணும் ஞானத்தை அடைமந்த சீவன்முத்தருக்கு, எள்ளும் திறம் ஏதும் இல் – ஒன்றையும் இகழுந் தன்மையில்லை.

அவர்களது வினையின் பயன் சிவாநந்தம்

**உறுந்தொழிற்குத்தக்க பயன் உலகம் தத்தம்**
**வறுந்தொழிற்கு வாய்மை பயன். (97)**

பதவுரை:- உறுந் தொழிற்குத் தக்க பயன் – யான் எனது என்னுஞ் செருக்கோடு செய்யப் பட்ட வினைக்குத் தகுந்த பலன், உலகம் – உலக வாழ்க்கைகளாம், தத்தம் வறுந் தொழிற்கு பயன் – அந்தச் செருக்கு நீங்கிய தொழிலுக்குரிய பலன், வாய்மை – மெய்ப் பொருளாகிய முத்தியின்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்குக் கர்மம் தீரும் முறைமை

**என்றவினை உடலோடு ஏகும் இடையேறும் வினை**
**தோன்றில் அருளே சுடும்.** (98)

பதவுரை:- என்றவினை – பிராரப்தமானது, உடலோடு ஏகும் – தேகம் நீங்கும்போது நீங்கும், இடையேறும் வினை தோன்றில் – முத்திக்கும் தேகத்தின் முடிவுக்கும் இடையில் வினை செய்யப்படின், அருளே சுடும் – அவ்வினையைத் திருவருளே நீக்கும்.

சீவன்முத்தர் நிலை பரமுத்தி

**மும்மைதரும் வினைகள் மூளாவாம் மூதறிவார்க்கு**
**அம்மையும் இம்மையே யாம்.** (99)

பதவுரை:- மும்மை தரும் வினைகள் மூளாவாம் – இம்மை மறுமை அம்மை என்னும் மூவகைப் பயனையுந் தரும் வினைகளொன்றும் அவர்களைத் தாக்க மாட்டா, மூதறிவார்க்கு – (ஆதலால் ஆணவமலம் நீங்கிப்) பேரறிவைப் பெற்ற முத்தர்களுக்கு, அம்மையும் இம்மையே ஆம் – பரமுத்தியும் சரீரம் இருக்கையிலே யுண்டாம்.

அவர்கள் பெத்தான்மாக்களில் அருளுடையர்

**கள்ளத்தலைவர் துயர் கருதித் தம்கருணை**
**வெள்ளத்து அலைவர் மிக.** (100)

பதவுரை:- கள்ளத் தலைவர் துயர் கருதி – ஆணவத்தால் வரும் பொய்யறிவு நிறைந்த பெத்தான்மாக்கள் படுந் துன்பத்தை எண்ணி, தம் கருணைவெள்ளத்து – (சீவன்முத்தர்கள்) தம்மிடத்திலுள்ள இரக்கமாகிய கடலில், மிக அலைவர் – மிகவும் அலைதலைச் செய்வர்.

திருவருட்பயன் முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# சிவப்பிரகாசம்

## உமாபதி சிவாசாரியார்

இது சிவஞானபோதத்தின் சார்பு நூல் அல்லது புடை நூல் என்று வழங்கப்படுகிறது. காப்புச் செய்யுள் தவிர மொத்தம் நூறு விருத்தப் பாக்களால் ஆனது. முப்பொருள் உண்மையை முழுமையாக விளக்குவது. ஈழத்தவரான மு. திருவிளங்கம் அவர்கள் சிறந்த உரை எழுதியுள்ளார்.

### காப்பு

ஒளியான திருமேனி யுமிழ்தான மிகமேவு
தளியார வரும்யானை கழனாளு மறவாமல்
அளியாளு மலர்தூவு மடியார்க ளுளமான
வெளியாகும் வலிதாய வினைகூட நியைாவே.

பதவுரை:- ஒளியான திருமேனி- பிரகாசமான திருமேனியும், உமிழ் தானம்- முகத்தினின்று பொழிகின்ற மதசலமும், மிக மேவு களி- மிக்க ஆநந்தமும், ஆர- பொருந்த, வரும்- தியானிக்கும் அடியவர்களின் முன் எழுந்தருளிவரும், யானை கழல்- யானை முகத்தராகிய விநாயக மூர்த்தியின் திருவடிகளை, நாளும் மறவாமல்- எப்பொழுதும் மறவாமல், அளி ஆளும் மலர் தூவும் அடியார்கள் உளமான- வண்டுகள் ஆளுகின்ற மலர்களைத் தூவி வழிபடுகின்ற அடியவரது உள்ளமானவை, வெளியாகும்- அஞ்ஞானமாகிய இருள் நீங்கி ஞானப்பிரகாசமாகும், வலிதாய வினைகூட நினையா- கொடிய வினைப்பகுதிகள் சேர நினையா.

### 1. மங்கலவாழ்த்து

நடராஜர்

1. ஓங்கொளியா யருண்ஞான மூர்த்தி யாகி
யுலகமெலா மளித்தருளு முமையம்மை காணத்
தேங்கமழு மலரிதழி திங்கள் கங்கை
திகழரவம் வளர்சடைமேற் சேர வைத்து
நீங்கலரும் பவத்தொடர்ச்சி நீங்க மன்று
ணின்றிமையோர் துதிசெய்ய நிருத்தஞ் செய்யும்
பூங்கமல மலர்த்தாள்கள் சிரத்தின் மேலும்
புந்தியிலு முறவணங்கிப் போற்றல் செய்வாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை:- ஓங்கு ஒளியாய்- மிகுந்த பிரகாசமாய், அருள்ஞான மூர்த்தியாகி- திருவருளாகிய ஞானமே வடிவமாகக் கொண்டு, உலகம் எலாம் அளித்தருளும் உமை அம்மை காண- பிரபஞ்சத்தையெல்லாம் ஈன்றருளிய உமாதேவியார் காண, தேம் கமழும் மலர் இதழி திங்கள் கங்கை திகழ் அரவம் வளர் சடைமேல் சேரவைத்து- மணம் வீசுகின்ற விரிந்த கொன்றை மாலையினையும் சந்திரனையும் கங்கையையும் விளங்குகின்ற பாம்பினையும் நீண்ட சடையின்மேற் பொருந்தவைத்து, நீங்கல் அரும் பவத் தொடர்ச்சி நீங்க- நீங்குதற்கரிய பிறவித் தொடர்ச்சி நீங்கும்படி, மன்றுள் நின்று இமையோர் துதிசெய்ய நிருத்தம் செய்யும்- சிற்றம்பலத்துள்ளே நின்று தேவர்கள் துதிசெய்யத் திருநடனஞ் செய்தருளும் நடராஜப் பெருமானது, பூங்கமல மலர்த்தாள்கள்- பொலிவினையுடைய தாமரை மலர்போன்ற திருவடிகள், சிரத்தின் மேலும் புந்தியிலும் உறவணங்கிப் போற்றல் செய்வாம்- எம்முடைய சிரசின்மேலும் அறிவிலும் பொருந்த யாம் வணங்கித் துதிப்பாம்.

சிவகாமியம்மையார்

2. பரந்தபரா பரையாதி பரன திச்சை
பரஞானங் கிரியைபர போக ரூபத்
தருங்கருணை யுருவாகி விசுத்தா சுத்தத்
தநுகரண புவனபோ கங்க டாங்க
விரிந்தவுபா தானங்கண் மேவி யொன்றாய்
விமலமா யைந்தொழிற்கும் வித்தாய் ஞாலத்
தரந்தைகெட மணிமன்று ளாடல் காணு
மன்னையருட் பாதமலர் சென்னி வைப்பாம்.

பதவுரை:- பரந்த பராபரை ஆதி பரனது இச்சை பரஞானம் கிரியை- வியாபகமான மேலான பராசக்தி திரோதானசக்தி பரமசிவனுடைய இச்சாசத்தி மேலான ஞானசத்தி கிரியாசத்தி என நின்று, பரபோகரூபம் தரும் கருணை உருவாகி- ஆன்மாக்களுக்கு மேலான சுக போக ரூபத்தைக் கொடுத்தருளும் கருணைவடிவாகி, விசுத்த அசுத்த தநுகரண புவன போகங்கள் தாங்க- சுத்த அசுத்தங்களான தநு கரண புவன போகங்களைத் தரித்தற்கு, விரிந்த உபாதானங்கள் மேவி- விரிந்த முதற் காரணங்களாகிய விந்து மோகினி மான் என்னம் மூன்றையும் பொருந்தி, ஒன்றாய்- இங்ஙனம் பலபடவாகியுந் தான் ஒன்றேயாய், விமலமாய்- நின்மலமாய், ஐந்தொழிற்கும் வித்தாய்- பரமசிவனது ஐந்தொழிலுக்குந் தானே காரணமாய், ஞாலத்து அரந்தை கெட- உலகத்துள்ள உயிர்களது பிறவித்துன்பம் ஒழியும்படி, மணி மன்றுள் ஆடல் காணும் அன்னை- பொன்னம்பலத்திலே நடராஜப் பெருமான் செய்யுந் திருநடனத்தைக் கண்டருளுகின்ற சிவகாமியம்மையாரது, அருள் பாத மலர் சென்னி வைப்பாம்- அருளாகிய திருவடித்தாமரை மலர்களைச் சென்னிமேல் வைத்து யாம் வணங்குவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகக் கடவுள்

3. நலந்தரனூ லிருந்தமிழின் செய்யுட் குற்ற
நண்ணாமை யிடையூறு நலியாமை கருதி
இலங்குமிரு குழையருகு பொருதுவரி சிதறி
யிணைவேல்க ளிகழ்ந்தகயற் கண்ணியொடு மிறைவன்
கலந்தருள வருமானை முகத்தான் மும்மைக்
கடமருவி யெனநிலவு கணபதியி னருளால்
அலர்ந்துமது கரமுனிவர் பரவவளர் கமல
மனையதிரு வடியிணைக ணினைதல் செய்வாம்.

பதவுரை:– நூல் நலம் தரல்– ஓதியுணர்வார்க்கு இந்நூல் நன்மை பயத்தலையும், இரும் தமிழின் செய்யுள் குற்றம் நண்ணாமை– பெருமை பொருந்திய தமிழிற் சொல்லப்பட்ட செய்யுட் குற்றம் நணுகாமையையும், இடையூறு நலியாமை– இடையூறு வந்து துயர் செய்யாமையையும், கருதி– நினைந்து, இலங்கும் இருகுழை அருகுபொருது– விளங்குகின்ற இரண்டு காதளவுஞ் சென்று போராடி, வரி சிதறி இணைவேல்கள் இகழ்ந்த– வரிகள் பரந்து இரண்டு வேல்களைப் பழித்த, கயல் கண்ணியொடும் இறைவன் கலந்து அருளவரும் ஆனைமுகத்தான்– கயற்கண்ணியாகிய உமையம்மையோடும் இறைவன் கூடியருள அவதரித்த யானை முகவரும், மும்மைக் கடம் அருவி என நிலவு கணபதியின்– மும்மதங்களும் அருவிபோல விளங்கப்பெற்ற கணத்தலைவருமாகிய விநாயகருடைய, அருளால் அலர்ந்து மதுகரம் முனிவர் பரவ வளர்– அருளால் மலர்ந்து வண்டுகளாகிய இருடிகள் துதிக்க வளர்கின்ற, கமலம் அனைய திருவடி இணைகள் நினைதல் செய்வாம்– தாமரைப் பூவையொத்த திருவடிகள் இரண்டையும் தியானிப்பாம்.

## முருகக் கடவுள்

4. வளநிலவு குலவமர ரதிபதியாய் நீல
மயிலேறி வருமீச னருண்ஞான மதலை
அளவில்பல கலையங்க மாரணங்க ளுணர்ந்த
வகத்தியனுக் கோத்துரைக்கு மண்ணல்விற லெண்ணா
உளமருவு சூரனுர மெனதிடும்பை யோங்க
லொன்றிரண்டு கூறுபட வொளிதிகழ்வே லுகந்த
களபமலி குறமகடன் மணிமுலைகள் கலந்த
கந்தன்மல ரடியிணைகள் சிந்தை செய்வாம்.

பதவுரை:– வளம்நிலவு குல அமரர் அதிபதியாய்– மாட்சிமை விளங்குகின்ற கூட்டமாகிய தேவர்களுக்குச் சேனாதிபதியாய், நீலமயில் ஏறிவரும் ஈசன் அருள் ஞான மதலை– நீலநிறத்தையுடைய மயில்வாகனத்தின் மேலேறி வருகின்ற சிவபிரான் அருளிய ஞானவடிவமான புத்திரனும், அளவில் பலகலை அங்கம் ஆரணங்கள் உணர்ந்த அகத்தியனுக்கு ஓத்து உரைக்கும் அண்ணல்– அளவிறந்த பல நூல்களையும் ஆறங்கங்களையும் நான்கு வேதங்களையும் அறிந்த அகத்திய மகாமுனிவனுக்கு வேதத்தினுட் பொருளை உபதேசிக்குந் தலைவருமாகிய, விறல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணா உளம் மருவு சூரன் உரம்– பிறருடைய வலியை ஒரு பொருளாக எண்ணாத ஊக்கத்தையுடைய சூரனுடைய மார்பும், எனது இடும்பை– என்னுடைய பிறவித் துன்பமும், ஓங்கல்– கிரவுஞ்சகிரியுமாகிய இவை மூன்றும், ஒன்று இரண்டு கூறுபட– ஒவ்வொன்று இரண்டு கூறுபடும்படி, ஒளி திகழ் வேல் உகந்த– ஒளிவிளங்கிய வேலை விரும்பிச் செலுத்திய, குறமகள் தன் களபமலி மணி முலைகள் கலந்த– குறமகளான வள்ளிநாயகியாருடைய களபச்சாந்து செறிந்த அழகிய ஸ்தனங்களைக் கூடியருளின, கந்தன் மலர் அடி இணைகள் சிந்தை செய்வாம்– முருகக் கடவுளுடைய செந்தாமரை மலர்போலுந் திருவடிகள் இரண்டையும் சிந்திப்பாம்.

சந்தானகுரவர்

5. தேவர்பிரான் வளர்கயிலைக் காவல் பூண்ட
திருநந்தி யவர்கணத்தோர் செல்வர் பாரிற்
பாவியசத் தியஞான தரிசனிக ளடிசேர்
பரஞ்சோதி மாமுனிகள் பதியா வெண்ணெய்
மேவியசீர் மெய்கண்ட திறலார் மாறா
விரவுபுக ழருணந்தி விறலார் செல்வத்
தாவிலருண் மறைஞான சம்பந்த ரிவரிச்
சந்தானத் தெமையாளுந் தன்மை யோரே.

பதவுரை:– தேவர்பிரான் வளர் கயிலை காவல் பூண்ட திருநந்தி– தேவர்களுக்குக் கர்த்தாவாகிய சீகண்ட பரமேசுவரன் வீற்றிருக்கின்ற கயிலைமலையைக் காவல் செய்கின்ற ஸ்ரீ நந்திபெருமான், அவர்கணத்து ஓர் செல்வர்– அவருடைய கூட்டத்திற் சேர்ந்த ஒரு செல்வரான சனற்குமார முனிவர், பாரில் பாவிய சத்தியஞானதரிசனிகள்– இந்தப் பூமியின் கண்ணே புகழ்பரந்த சத்தியஞானதரிசனிகள், அடிசேர் பரஞ்சோதி மாமுனிகள்– அவருடைய திருவடியைச் சேர்ந்த பரஞ்சோதி மாமுனிவர், பதியாவெண்ணெய் மேவியசீர் மெய்கண்ட திறலார்– திருவெண்ணெய் நல்லூரே தமது பதியாகப் பொருந்தின சிறப்பினையுடைய மெய்கண்ட தேவர் என்னும் ஞானவீரர், மாறாப்புகழ் விரவு அருணந்தி– ஒழியாத புகழ் பொருந்திய அருணந்தி தேவர், விறல் ஆர் செல்வத்தாவு இல் அருள் மறைஞான சம்பந்தர்– ஞானவீரம் நிறைந்த செல்வமாகிய குற்றமற்ற திருவருளையுடைய மறைஞானசம்பந்தர், இச்சந்தானத்து இவர் எமை ஆளும் தன்மையோர்– இச்சந்தானத்தையுடைய இவ்வேழு குரவரும் எம்மையாளும் இயல்புடையார்.

மறைஞானசம்பந்தர்

6. பார்திகழ வளர்சாம வேத மல்கப்
பராசரமா முனிமரபு பயில ஞானச்
சார்புதர வந்தருளி யெம்மை யாண்ட
சைவசிகா மணிமருதந் தலைவ னந்தண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்மருவு பொழில்புடைசூழ் மதின்மீதே மதியங்
கடவாமை நெடுங்கொடியின் கரந்தகையுங் கடந்தைச்
சீர்நிலவு மறைஞான சம்பந்த னெந்தை
திருவளரு மலரடிகள் சென்னி வைப்பாம்.

பதவுரை:– பார் திகழ– பூவுலகம் விளக்கமுறவும், வளர் சாம வேதம் மல்க– ஆயிரஞ் சாகையாய் வளர்ந்த சாமவேதம் பொலிவு பெறவும், பராசர மாமுனி மரபு பயில– பராசரமுனிவருடைய கோத்திரம் தழைக்கவும், ஞானச் சார்புதர– எம்போல்வார்க்கு ஞானமாகிய பற்றுக்கோடு தரவும், வந்தருளி– அவதரித்தருளி, எம்மை ஆண்ட சைவ சிகாமணி– எம்மை அடிமையாகக் கொண்ட சைவசிகாமணியும், மருதத் தலைவன்– மருதநகரில் வாழுந் தலைவரும், அம் தண்கார் மருவு பொழில் புடைசூழ் மதில் மீதே– அழகிய குளிர்ந்த மேகங்கள் படிகின்ற சோலைகள் பக்கங்களிற் சூழ்ந்த மதிலின் மேலே, மதியம் கடவாமை நெடும் கொடியின் கரம் தகையும் சீர் நிலவு கடந்தை– சந்திரன் கடவாதபடி நெடுங் கொடிகளாகிய கைகள் தடுக்கின்ற சிறப்பு விளங்கிய திருப்பெண்ணாகடம் என்னுந் திருநகரையுடையவரு மாகிய, மறைஞான சம்பந்தன் எந்தை– மறைஞான சம்பந்தன் என்னும் எந்தையுடைய, திருவளரும் மலர் அடிகள் சென்னி வைப்பாம்– அருட்செல்வம் வளருகின்ற மலர்போலுந் திருவடிகளை யாம் தலைமேல் வைத்து வணங்குவாம்.

## 2. நுதலியபொருள்

7. புறச்சமயத் தவர்க்கிருளா யகச்சமயத் தொளியாய்ப்
புகலளவைக் களவாகிப் பொற்பணிபோ லபேதப்
பிறப்பிலதா யிருள்வெளிபோற் பேதமுஞ்சொற் பொருள்போற்
பேதாயே தமுமின்றிப் பெருநூல் சொன்ன
அறத்திறனால் விளைவதா யுடலுயிர்கண் ணருக்க
னறிவொளிபோற் பிறிவருமத் துவித மாகுஞ்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாஞ் சைவ
சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்க லுற்றாம்.

பதவுரை:– புறச் சமயத்தவர்க்கு இருளாய்– புறச் சமயிகளால் அறியப்படாததாய், அகச் சமயத்து ஒளியாய்– அகச் சமயிகளால் அறியப்படுவதாய், புகல் அளவைக்கு அளவாகி– சொல்லப்படுகின்ற காட்சி முதலிய பிரமாணங்களால் அளவிட்டறியப்படுவதாய், பொன்பணிபோல் அபேதப் பிறப்பு இலதாய்– பொன்னானது பல ஆபரணங்களாயிருக்குந் தன்மை போலப் பிரமமும் பல ஆன்மாக்களாகத் தோன்றி நிற்கும் என்னும் அபேதவாதிகள் கொள்கையில்லாததாய், இருள் வெளிபோல் பேதமும் சொல் பொருள் போல் பேதா பேதமும் இன்றி– இருளும் ஒளியும் போல முதல்வனும் ஆன்மாக்களும் வேறாயிருக்கும் என்னும் பேதவாதிகள் கொள்கையும் இல்லாததாய், பெருநூல் சொன்ன அறத் திறனால் விளைவதாய்– சிறப்பு நூலாகிய ஆகமங்கள் சொன்ன சரியை கிரியா யோகங்களால் விளைவதாய், உடல் உயிர் கண் அருக்கன் அறிவு ஒளிபோல் பிறிவு அரும் அத்துவிதமாகும் சிறப்பினதாய்– உடலும் உயிரும் கண்ணும் சூரியனும் ஆன்மபோதமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணொளியும் போலப் பிரித்தற்கரிய அத்துவிதமாகும் சிறப்பினையுடையதாயுமுள்ள, வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத் திறன் இங்குத் தெரிக்கல் உற்றாம்- வேதாந்தத்தைத் தெளித்துரைக்கும் சைவசித்தாந்தத்தின் உண்மையை இந்நூலிலே விளங்கச் சொல்லுவாம்.

### 3. கேட்போரும் பயனும்

8. மூவகையா ருயிர்வர்க்க மலத்தார் கன்ம
மூலமலத் தார்மூன்று முடையா ரன்றே
தீவகமா மெனவுருவாய் வந்து நாதன்
றிருநோக்காற் பரிசத்தாற் றிகழும் வாக்காற்
பாவனையான் மிகுநூலால் யோகப் பண்பாற்
பரவிவரு மவுத்திரியாற் பாச நாச
மேவவரு ளுதவுமவுத் திரியிரண்டு திறனாம்
வியன்கிரியை ஞானமென விளம்பு மாறே.

பதவுரை:- மலத்தார்- ஆணவமலம் ஒன்றேயுடைய விஞ்ஞானகலர், கன்ம மூல மலத்தார்- கன்மமலமும் ஆணவமலமுமுடைய பிரளயாகலர், மூன்றும் உடையார்- ஆணவமலம் கன்மமலம் மாயாமலம் என்னும் மூன்று மலமுமுடைய சகலர் என, ஆர் உயிர் வர்க்கம் மூவகை- நிறைந்த ஆன்ம வர்க்கம் மூன்று வகையாகும், நாதன் தீவகமாம் என உருவாய் வந்து- அவருள் மும்மலமுடைய சகலர்க்குப் பரமசிவன் பக்குவம் நோக்கி மானைக் காட்டி மானைப் பிடிப்பான் போல் மானுடத் திருமேனி கொண்டு எழுந்தருளிவந்து, திருநோக்கால் பரிசத்தால் திகழும் வாக்கால் பாவனையால் மிகு நூலால் யோகப் பண்பால் பரவிவரும் அவுத்திரியால் பாச நாசம் மேவ அருள் உதவும்- சட்சு தீக்கையாலும் பரிச தீக்கையாலும் வாசக தீக்கையாலும் மானத தீக்கையாலும் சாத்திர தீக்கையாலும் யோக தீக்கையாலும் இவ்வாறையும் அங்கமாகக் கொண்டு வரும் அவுத்திரி தீக்கையாலும் மும்மலங்களும் ஒழியும்படி அநுக்கிரகஞ் செய்வர். அவுத்திரி- அவுத்திரி தீக்கையானது, வியன் கிரியை ஞானம் என விளம்புமாறு இரண்டு திறனாம்- பெரிய கிரியாவதி, ஞானவதி என்றும் சொல்லும்படி இரண்டு வகையாம்.

9. விரும்பியமந் திராதிகார மர்ச்சனா திகார
மேவும்யோ காதிகார மெனச்சமய விசேடம்
வரும்பொருவி னிருவாண மந்திரங்கள் பதங்கள்
வன்னங்கள் புவனங்க டத்துவங்கள் கலைகள்
இரங்கடைவிற் றொகைபதினொன் றெண்பத்தொன்றைம்பத்தொன்
றிருநூற்றோ டிருபத்து நாலாறா றைந்திற்
பரந்தநெறி யறுவகையு மொருவிநினை வரிதாம்
பரபதத்து ளுயிர்விரவப் பயிற்று மன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை:– சமய விசேடம்– சமயதீக்கை விசேட தீக்கை இரண்டும், விரும்பிய மந்திர அதிகாரம் அர்ச்சனா அதிகாரம் மேவும் யோக அதிகாரம் எனவரும்– விரும்பப்பட்ட மந்திரங்களுக்கு அதிகாரம் அரச்சனைக்கு அதிகாரம் அதற்கு இனமாயுள்ள யோகத்துக்கு அதிகாரம் என்று சொல்லப்பட்டுவரும், பொருவு இல் நிருவாணம்– ஒப்பற்ற நிருவாண தீக்கை, மந்திரங்கள் பதங்கள் வன்னங்கள் புவனங்கள் தத்துவங்கள் கலைகள் இரங்கு அடைவில் தொகை– மந்திரங்கள் பதங்கள் வன்னங்கள் புவனங்கள் தத்துவங்கள் கலைகள் என்று சொல்லப்பட்ட முறையிலே தொகை, பதினொன்று எண்பத்தொன்று ஐம்பத்தொன்று இருநூற்றோடிருபத்துநாலு ஆறாது ஐந்தில்– பதினொன்றாகவும் எண்பத்தொன்றாகவும் ஐம்பத்தொன்றாகவும் இருநூற்றிருபத்துநாலாகவும் முப்பத்தாறாகவும் ஐந்தாகவும், பரந்த நெறி அறுவகையும் ஒருவி– விரிந்த அத்துவாக்கள் ஆறு கூறுகளையும் நீக்கி, நினைவு அரிதாம் பரபதத்துள் உயிர் விரவப் பயிற்றும்– நினைத்தற்கரிய மேலான பதவியிலே ஆன்மா பொருந்தும்படி செய்யும்.

10. கிரியையென மருவுமவை யாவு ஞானங்
கிடைத்தற்கு நிமித்தமெனக் கிளக்கு முண்மைச்
சரியைகிரி யாயோகத் தன்மை யோர்க்குச்
சாலோக சாமீப சாரூ பங்கண்
மருவியிடு முயர்ஞான மிரண்டா மாறா
மலமகல வகலாத மன்னு போதத்
திருவருளொன் றொன்றதனைத் தெளிய வோதுஞ்
சிவாகமமென் றுகலகறியச் செப்பு நூலே.

பதவுரை:– நூல்– ஆகமங்கள், கிரியை என மருவும் அவையாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம் எனக் கிளக்கும்– கிரியை என்று சொல்லப்பட்டுப் பொருந்தியிருக்கும் அவைகளெல்லாம் ஞானம் வருதற்குக் காரணம் என்று சொல்லும், உண்மைச் சரியா கிரியா யோகத் தன்மையோர்க்குச் சாலோக சாமீப சாரூபங்கள் மருவியிடும்– உண்மைச் சரியை கிரியை யோகங்களின் நெறியிலே நின்றவர்களுக்கு முறையே சாலோக சாமீப சாரூப பதங்கள் வந்து பொருந்தும், உயர்ஞானம் இரண்டாம்– அம்மூன்றுக்கும் மேலான ஞானமானது இரு வகையாம், மாறாமலம் அகல அகலாத மன்னு போதத் திருவருள் ஒன்று– ஆன்மாக்களை அநாதியே பந்தித்து நீங்காதிருக்கும் ஆணவமலம் விட்டு நீங்கும்படி செய்து அவ்வான்மாக்களைத் தான் ஒருபொழுதும் விட்டு நீங்காத நிலை பெற்ற ஞானமாகிய திருவருள் ஒன்று, ஒன்று அதனைத் தெளிய ஓதும்சிவாகமம்– மற்றொன்று அந்த ஞானத்தைத் தெளியச் சொல்லும் சிவாகமங்கள், என்று உலகு அறியச் செப்பும்– என்று உயர்ந்தோர் அறியும்படி அவ்வாகமங்கள் சொல்லும்.

### 4. நூலின் வழியும் பெயரும்

11. தெரித்தகுரு முதல்வருயர் சிவஞான போதஞ்
செப்பினர்பின் பவர்புதல்வர் சிவஞான சித்தி
விரித்தனர்மற் றவர்கடிரு வடிகள் போற்றி
விளம்பியநூ லவையிரண்டும் விரும்பி நோக்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்திலுறை திருவருளு மிறைவ னூலுங்
கலந்துபொது வுண்மையெனக் கருதி யானும்
அருத்திமிக வுரைப்பன்வளர் விருத்த நூறு
மாசில்சிவப் பிரகாச மாகு மன்றே.

பதவுரை:- தெரிந்தகுருமுதல்வர்- முன்சொல்லிய முதற்குரவராகிய மெய்கண்ட தேவநாயனார், உயர் சிவஞானபோதம் செப்பினர்- மேலான சிவஞானபோதம் என்னும் நூலை அருளிச் செய்தார், பின்பு அவர் புதல்வர் சிவஞானசித்தி விரித்தனர்- பின்பு அவருடைய சீடரான அருணந்தி சிவாசாரியார் சிவஞானசித்தி என்னும் நூலை அதன் வழி நூலாக விரித்துக் கூறினார், அவர்கள் திருவடிகள் போற்றி- அக்குரவரிருவருடைய திருவடிகளையுந் துதித்து, விளம்பிய நூல் அவை இரண்டும் விரும்பி நோக்கி- மேலே சொல்லிய அவ்விரு நூல்களையும் அன்போடு ஆராய்ந்து பார்த்து, கருத்தில் உறை திருவருளும் இறைவனூலும் கலந்து- என்னுடைய அறிவிற் பொருந்தியிருக்கும் திருவருளையும் சிவாகமங்களின் மெய்ப்பொருளையும் கலந்து, பொது உண்மை எனக் கருதி- பொது என்றும் உண்மை என்றும் இரண்டாக மதித்து, யானும் வளர்விருத்தம் நூறும் அருத்தி மிக உரைப்பன்- யானும் சிறப்புப் பொருந்திய விருத்தச் செய்யுள் நூற்றையும் ஆசை மிகுதலாலே சொல்வேன், ஆசு இல் சிவப்பிரகாசமாகும்- இந்நூலின் பெயர் குற்றமற்ற சிவப்பிரகாசமாகும்.      அன்று- அசை.

### 5. அவையடக்கம்

12. தொன்மையவா மெனுமெவையு நன்றாகா வின்று
தோன்றியநூ லெனுமெவையுந் தீதாகா துணிந்த
நன்மையினார் நலங்கொண்மணி பொதியுமதன் களங்க
நவையாகா தெனவுண்மை நயந்திடுவர் நடுவாந்
தன்மையினார் பழைமையழ காராய்ந்து தரிப்பர்
தவறுநலம் பொருளின்கட் சார்வாராய்ந் தறிதல்
இன்மையினார் பலர்புகழி லேத்துவரே திலருற்
றிகழ்ந்தனரே லிகழ்ந்திடுவர் தமக்கெனவொன் றிலரே.

பதவுரை:- தொன்மையவாம் எனும் நூல் எவையும் நன்று ஆகா- பழையனவாகும் என்று சொல்லப்படும் எல்லா நூல்களும் நல்லனவாகா, இன்று தோன்றிய எனும் நூல் எவையும் தீது ஆகா- இப்பொழுதுண்டானவை என்று சொல்லப்படும் எல்லா நூல்களும் தீயனவாகா, துணிந்த நன்மையினார்- தெளிந்த உத்தமராயினார், நலம்கொள்மணி பொதியும் களங்கம் அதன் நவை ஆகாது என உண்மை நயந்திடுவர்- நல்ல இரத்தினத்தை மூடியிருக்கும் களங்கத்தை அதன் களங்கமன்று என விலக்கிவிட்டு அதன் உண்மைத் தன்மையை விரும்புவது போல இந்நூலில் மிகுந்திருக்கும் சொற்குற்றம் முதலியவைகளை விலக்கிவிட்டுப் பதி பசு பாசங்களாகிய முப்பொருள்களின் உண்மையை விரும்பி அங்கீகரிப்பர், நடுவாம் தன்மையினார்- மத்திமராயுள்ளோர், பழைமை அழகு ஆராய்ந்து தரிப்பர்- பழைமையான அழகுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருத்தலை ஆராய்ந்து நோக்கி ஒரு பொருளைக் கொள்ளுதல்போல இந்நூலையும் சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் முதலிய பழைமையான அழகுகள் அமைந்திருத்தலை நோக்கி அங்கீகரிப்பர், தவறு நலம் பொருளின்கண் சார்வு ஆராய்ந்து அறிதல் இன்மையினார்– பொருளினிடத்தே குற்றமுங்குணமும் பொருந்தியிருத்தலை ஆராய்ந்தறியும் வன்மையில்லாத அதமர்கள், பலர் புகழில் ஏத்துவர்– பலரும் புகழ்ந்தால் தாமும் புகழ்ந்தேத்துவர், ஏதிலர் உற்று இகழ்ந்தனரேல் இகழ்ந்திடுவர்– அந்நியர் கூடி இகழ்ந்துரைப்பாராயின் தாமும் இகழ்ந்துரைப்பார், தமக்கு என ஒன்று இலர்– அவர் தமக்கென்று ஓரறிவில்லாதவர்.

## 1. பதியிலக்கணம்

பதியின் சொரூபலக்கணம்

13. பலகலையா கமவேதம் யாவையினுங் கருத்துப்
பதிபசுபா சந்தெரித்தல் பதிபரமே யதுதான்
நிலவுமரு வுருவன்றிக் குணங்குறிக ளின்றி
நின்மலமா யேகமாய் நித்த மாகி
அலகிலுயிர்க் குணர்வாகி யசல மாகி
யகண்டிதமா யாநந்த வுருவா யன்றிச்
செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த்
திகழ்வதுதற் சிவமென்பர் தெளிந்து ளோரே.

பதவுரை:– வேதம் ஆகமம் பலகலை யாவையினுங் கருத்து– வேதம் ஆகமம், அவற்றின் வழிநூல் சார்புநூல் ஆகிய எல்லாவற்றினும் உள்ள கருத்து, பதி பசு பாசம் தெரித்தல்– பதி பசு பாசம் என்னும் முப்பொருளின் இயல்பைத் தெரிவித்தலாம், பதிபரமே– அவற்றுள் பதியாவது ஏனை இரண்டுக்கும் மேலாயிருப்பதொன்றாம், அதுதான்– அப்பதிதான், நிலவும் அரு உரு அன்றி– விளங்குகின்ற அருவமும் உருவமும் அல்லதாய், குணம் குறிகள் இன்றி– குணமும் குறிகளும் இல்லாததாய், நின்மலமாய்– மலத்திற் பொருந்தாததாய், ஏகமாய்– ஒன்றாய், நித்தமாகி– அழிவில்லாததாய், அலகு இல் உயிர்க்கு உணர்வாகி– அளவில்லாதனவாய உயிர்களது அறிவுக்கு அறிவாய், அசலமாகி– சலனமற்றதாய், அகண்டிதமாய்– கண்டிக்கப் படாததாய், ஆநந்த உருவாய்– ஆநந்தமே சொரூபமாய், அன்றிச் செலஅரிதாய்– மாறுபட்ட உணர்வினாற் சென்றடைய அரியதாய், செல்கதியாய்– வழிபட்டவர்கள் சென்றடையும் முத்திநிலையாய், சிறிதாகிப் பெரிதாய்– அணுவுக்கணுவாய் மகத்துக்கு மகத்தாய், திகழ்வது– விளங்குவதாம், தத்– அதனை, தெளிந்துளோர் சிவம் என்பர்– அறிவாற்றெளிந்தோர் சிவம் என்று சொல்வர்.

2. பதியின் தடத்தலக்கணம்

14. நீடுபரா சத்திநிக ழிச்சா ஞான
நிறைகிரியை தரவதனை நிமலன் மேவி
நாடரிய கருணைதிரு வுருவ மாகி
நவின்றுபல கலைநாத விந்து வாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடுமொளி வளர்குடிலை மாயை மேவிக்
கொடுவினைகொ டநுகரண புவன போகம்
பீடுபெற நிறுவியவை யொடுக்கு மேனி
பிறங்கியநிட் களசகளப் பெற்றி யாமே.

பதவுரை:- நீடு பராசத்தி நிகழ் இச்சா ஞானம் நிறை கிரியை தர அதனை நிமலன் மேவி- நிலைபெற்ற மேலான சிவசத்தி தனது வியாபாரத்தால் இச்சாசத்தி ஞானசத்தி நிறைந்த கிரியாசத்தி என்னும் சத்திகளைத் தர அந்தச் சத்திகளை நின்மலனாகிய சிவன் பொருந்தி, நாட அரிய கருணை திரு உருவமாகி- மதித்தற்கரிய திருவருளே திருமேனியாகக் கொண்டு, நாதம் விந்து ஆதி கூடும் ஒளிவளர் குடிலை மாயை மேவி- நாதம் விந்து முதலிய தத்துவங்கள் வந்து கூடுகின்ற பிரகாசம் மிகுந்த சுத்தமாயையைப் பொருந்தி, பலகலை நவின்று- வேதம் ஆகமம் முதலிய பலகலைகளையும் அருளிச் செய்து, கொடுவினை கொள் தநு கரண புவனபோகம் பீடுபெற நிறுவி- அசுத்தமாயை பிரகிருதி மாயைகளில் கொடிய வினைகளைக் கொண்டிருக்கின்ற தநு கரண புவன போகங்களைப் பெருமைபெற (அதிட்டானவாயிலாகப்) படைத்து நிறுத்தி, அவை ஒடுக்கும்- அவற்றைத் தோன்றின முறையிலே ஒடுங்கச் செய்வன், மேனி- அவற்றை ஆக்கி ஒடுக்குந் திருமேனி, பிறங்கிய நிட்கள சகளப் பெற்றியாமே- மேலாய் விளங்கிய நிஷ்களம் நிஷ்களசகளம் சகளம் என்னுந் தன்மையவாம்.

உருவுடைமை பற்றி வருங் குற்றங்களைப் பரிகரித்தல்

15. ஈங்கிதுவென் றதுகடந்த வியல்பி னானு
மீறுமுத னடுவொன்று மிலாமை யானும்
ஓங்கிவளர் ஞானமய னாத லானு
முண்மை பிறர்க் கறிவரிய வொருமை யானுந்
தாங்கரிய வெறுப்பினொடு விருப்பு மெல்லாஞ்
சார்வரிய தனிமுதல்வ னாத லானு
நீங்கலரு முயிர்க்குயிராய் நிற்ற லானு
நிறுத்திடுவ னினைந்தவுரு நிமலன் றானே.

பதவுரை:- ஈங்கு இது என்றது கடந்த இயல்பினானும்- இவ்விடத்துள்ளது இவ்வியல்புடையது என்று ஆன்ம போதத்தாற் சுட்டி அறியப்படுமதனைக் கடந்த இயல்பாலும், முதல் நடு ஈறு ஒன்றும் இலாமையானும்- ஆதி நடு அந்தம் ஒன்றும் இல்லாத தன்மையாலும், ஓங்கிவளர் ஞானமயன் ஆதலானும்- மேம்பட்டு நிகழும் சுர்வஞ்ஞத்துவமாகிய ஞான சொரூபியாகையாலும், உண்மை பிறர்க்கு அறிவு அரிய ஒருமையானும்- தன்னியல்பு பிறருக்கு அறிய இயலாத நுண்ணிய அறிவாகிய அதிசூக்கும சித்தாய் இருத்தலாலும், தாங்க அரிய வெறுப்பினோடு விருப்பும் எல்லாம் சார்வு அரிய தனிமுதல்வன் ஆதலானும்- பொறுத்தற்கரிய வெறுப்பும் விருப்புமாகிய உயிர்க்குணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவையும் சார்தலில்லாத ஒப்பற்ற பதியாகையினாலும், உயிர்க்கு நீங்கல் அரும் உயிராய் நிற்றலானும்– ஆன்மாக்களுக்கெல்லாம் பிரிப்பறநிற்கும் பரமான்மாவாய் இருத்தலாலும், நிமலன் நினைந்த உருத் தானே நிறுத்திடுவன்– நின்மலனாகிய அப்பரமசிவன் தான் நினைந்த வடிவத்தைத் தானே நிறுத்திக் கொள்வன்.

பதியுண்மைக்குப் பிரமாணம்

16. உலகமெலா மொருவனோ டொருத்தி யொன்றென்
றுளதாகி நின்றளவி லொடுங்கும் பின்னு
மலமதனா லுளதாகு முருவ மாறி
வருவதுபோ வதுசெல்வ தாத லானும்
அலைவிலசே தனமாயை யாத லானு
மணுக்களுரு வடையுமறி விலாமை யானு
நிலவுதொழின் மருவியுரு நிற்ற லானு
நின்றெவையு மளித்திடுவ னமலன் றானே.

பதவுரை:– உலகம் எலாம் ஒருவனோடு ஒருத்தி ஒன்று என்று உளதாகி நின்று அளவில் ஒடுங்கும்– பிரபஞ்சமெல்லாம் அவன் அவள் அது என்னும் அவயவப் பகுப்புடையதாய்த் தோன்றி நின்று ஒரு கால எல்லையிலே ஒடுங்கும், மலம் அதனால் பின்னும் உளதாகும்– ஆன்மாக்களைப் பந்தித்த ஆணவமலம் நீங்காமையினாலே அது நீங்குதற் பொருட்டு மீளவுந் தோன்றும், உருவம் மாறி வருவது போவது செல்வது ஆதலானும்– தேகங்கள் கன்மத்துக்கீடாக மாறிமாறித் தோன்றுவதும் அழிவதும் சுவர்க்க நரகங்களிற் செல்வதுமாகையால், மாயை அலைவு இல் அசேதனம் ஆதலானும்– மாயை தனக்கென ஒரு செயலற்ற சடமாயிருத்தலாலும், அணுக்கள் உரு அடையும் அறிவு இலாமையானும்– ஆன்மாக்கள் அத்தேகங்களைத் தாமே எடுத்தற்கு ஏற்ற அறிவில்லாமையாலும், நிலவு தொழில் மருவி உரு நிற்றலானும்– தேகமானது விளங்காநின்ற ஒரு சேதனனுடைய தொழிலைப் பொருந்தி நிற்றலாலும், நிமலன் தானே நின்று எவையும் அளித்திடுவன்– நின்மலனாகிய சிவனே காரணனாய் நின்று எல்லாவற்றையும் உண்டாக்குவன்.

முத்தொழிலுஞ் செய்யும் உரிமை சிவனுக்கேயுண்டென்பதும் சிவன் அம்முத்தொழிலுஞ் செய்தல் பற்றி விகாரமடையானென்பதும்

17. கந்தமல ரயன்படைக்கு முலக மெல்லாங்
கண்ணனளித் திடுமவையெங் கடவு டானே
அந்தமுற வழித்திடுவ னாத லாலே
யயனரியு மவனதுய ரதிகா ரத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தமுறை தன்றொழிலே மன்னுவிப்ப னெல்லாம்
வருவிப்பன் விகாரங்கண் மருவான் வானின்
முந்திரவி யெதிர்முளரி யலர்வுறுமொன் றலர்வான்
முகையாமொன் றொன்றுலகு முறையி னாமே.

பதவுரை:- உலகம் எல்லாம் கந்தமலர் அயன் படைக்கும்- பிரபஞ்சமெல்லாவற்றையும் வாசனை பொருந்திய தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவன் படைப்பன், கண்ணன் அளித்திடும்- அப்பிரபஞ்சமெல்லாவற்றையும் விட்டுணு காப்பன், அவை எம் கடவுள்தானே அந்தம் உற அழித்திடுவன்- அவற்றை எங்கள் சிவனே இறுதி பெறும்படி அழிப்பன், ஆதலாலே- ஆகையாலே, அயன் அரியும் அவனது உயர் அதிகாரத்து வந்தமுறை- பிரம விட்டுணுக்களும் அவனுடைய தலைமையான அதிகாரத்தைப் பெற்று வந்த முறையிலே வைத்து, தன் தொழிலே மன்னுவிப்பன்- தன்னுடைய தொழிலையே அவரிடத்துப் பொருந்தச் செய்வன், எல்லாம் வருவிப்பன்- சிவன் ஒருவனே முத்தொழிலையும் தன்னிடத்து நிகழச் செய்வன், விகாரங்கள் மருவான்- அம் முத்தொழிலுஞ் செய்தல் பற்றி விகாரங்கள் பொருந்தான், வானின் முந்து இரவி எதிர் முளரி ஒன்று அலர்வு உறும்- ஆகாயத்தில் விளங்கும் ஆதித்தன் சந்நிதியிலே தாமரை ஒன்று அலரும், ஒன்று அலர்வான் முகையாம்- ஒன்று அலர்தற்குப் பக்குவமான அரும்பாயிருக்கும், ஒன்று உலரும்- ஒன்று வாடி உலரும், முறையின் ஆமே- இப்படி ஆதித்தன் சந்நிதியில் தாமரை முத்தொழிலும் படினும் ஆதித்தன் விகாரமடையாத முறைமை போலப் பிரபஞ்சமெல்லாம் சிவ சந்நிதானத்தில் சிவன் நிர்விகாரியாயிருக்க முத்தொழிலும் படும்.

### சிவன் ஐந்தொழிலுஞ் செய்தற்குக் காரணம்

18. ஏற்றவிவை யரனருளின் றிருவிளையாட் டாக
வியம்புவர்க ளணுக்களிடர்க் கடனின்று மெடுத்தே
ஊற்றமிக வருள்புரித லேது வாக
வுரைசெய்வ ரொடுக்கமிளைப் பொழித்தன் மற்றைத்
தோற்றமல பாகம்வரக் காத்தல் போகந்
துய்ப்பித்த றிரோதாயி நிறுத்த லாகும்
போற்றலரு மருளருளே யன்றி மற்றுப்
புகன்றவையு மருளொழியப் புகலொ ணாதே.

பதவுரை:- அரன் ஏற்ற இவை- முதல்வன் ஏற்றுக் கொண்ட இத்தொழில்களை, அருளின் திருவிளையாட்டாக இயம்புபவர்கள்- பரமசிவனது திருவருளின் திருவிளையாட்டாகச் சொல்லுவார்கள், அணுக்கள் இடர்க்கடல் நின்றும் எடுத்தே- ஆன்மாக்களைத் துன்பத்திற்கேதுவான பிறவிக் கடலினின்றும் எடுத்து, ஊற்றம் மிக அருள்புரிதல் ஏதுவாக உரை செய்வர்- நிலைபேறு மிக்க அருளைக் கொடுத்தலே காரணமாக என்றுஞ் சொல்லுவார்கள், இஃதெப்படியெனில், ஒடுக்கம் இளைப்பு ஒழித்தல்- சங்காரம் பிறப்பிறப்பிற்பட்டு வருந்திய ஆன்மாக்களுக்கு இளைப்பு நீங்குதல், மற்றைத் தோற்றம் மனபாகம் வர- மற்றைய சிருட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாக்களைப் பந்தித்த மலத்துக்குப் பக்குவம் வரச்செய்தல், காத்தல் போகம் துய்ப்பித்தல்– இரட்சித்தல் கன்மந் தொலைத்தல் காரணமாகப் போகத்தைப் புசிப்பித்தல், திரோதாயி நிறுத்தலாகும்– மறைத்தல் போகம் புசிக்குமளவும் அப்போகங்களிலே சுவை பிறக்கும்படி நிறுத்துதல், போற்றல் அரும் அருள் அருளே– புகழ் தற்கரிய அநுக்கிரகம் அநுக்கிரகமே, அன்றி மற்றுப் புகன்றவையும் அருள் ஒழியப் புகல் ஒணாதே– இதுவன்றி முன் சொல்லப்பட்ட படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் என்பவைகளும் அருட்செயல்களே என்று சொல்வதன்றி வேறு சொல்லலாகாது.

## 2. பசுவிலக்கணம்

19. எண்ணரிதாய் நித்தமா யிருண்மலத்தி லழுந்தி
யிருவினையின் றன்மைகளுக் கீடான யாக்கை
அண்ணலரு ளானண்ணி யவையவரா யதனா
லலகினிகழ் போகங்க ளருந்து மாற்றாற்
புண்ணியபா வம்புரிந்து போக்குவர வுடைத்தாய்ப்
புணருமிருண் மலபாகம் பொருந்தியக்கா லருளால்
உண்ணிலவு மொளியதனா லிருளகற்றிப் பாத
முற்றிடுநற் பசுவர்க்க மெனவுரைப்ப ருணர்ந்தே.

பதவுரை:– நற் பசுவர்க்கம்– நல்ல ஆன்மவர்க்கமானது, எண்ண அரிதாய்– அளவிடுதற்கரியதாய், நித்தமாய்– என்றும் உள்ளதாய், இருள் மலத்தில் அழுந்தி– ஆணவமல இருளில் அமிழ்ந்தி, இருவினையின் தன்மைகளுக்கு ஈடான யாக்கை– நல்வினை தீவினைகளுக்கேற் சரீரத்தை, அண்ணல் அருளால் நண்ணி– முதல்வனது திருவருளாற் பெற்று, அவை அவராய்– ஆன் பெண் அலி என்னும் உயர்திணை அஃறிணைகளாய், அதனால்– அச்சரீரத்தைக் கொண்டு, அலகு இல் நிகழ் போகங்கள் அருந்தும் ஆற்றால் புண்ணிய பாவம் புரிந்து– அளவின்றி வரும் போகங்களைப் புசிக்கும் வழியாலே மீண்டும் புண்ணிய பாவங்களைச் செய்து, போக்கு வரவு உடைத்தாய்– சுவர்க்க நரகங்களிற் போதலும் வருதலுமுடையதாய், புணரும் இருள் மலபாகம் பொருந்தியக்கால்– பொருந்திய இருண்ட ஆணவமலம் பரிபாகமடைந்த காலத்து, அருளால் உள் நிலவும் ஒளி அதனால் இருள் அகற்றி– குருவருளால் அறிவிலே விளங்கும் ஞானப்பிரகாசத்தினால் அம்மல மறைப்பை நீக்கி, பாதம் உற்றிடும் என– சிவத்தினது திருவடி நீழலை அடையும் என்று, உணர்ந்து உரைப்பர்– வேதாகமங்களின் உண்மையை உணர்ந்து பெரியோர் கூறுவர்.

## 3. பாசவிலக்கணம்

### 1-2. ஆணவமும் திரோதாயியும்

20. ஏகமாய்த் தங்கால வெல்லைகளின் மீளு
மெண்ணரிய சத்தியதா யிருளொளிர விருண்ட
மோகமாய்ச் செம்பிலுறு களிம்பேய்ந்து நித்த
மூலமல மாயறிவு முழுநினையு மறைக்கும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகமாம் வகைநின்று திரோதான சத்தி
பண்ணுதலான் மலமெனவும் பகர்வரது பரிந்து
நாகமா நதிமதியம் பொதிசடையா னடிக
ணணுகும்வகை கருணைமிக நயக்குந் தானே.

பதவுரை:- ஏகமாய்- ஆணவமலமானது ஒன்றாய், தம்கால எல்லைகளின் மீளும் எண்ண அரிய சத்தியதாய்- தத்தம் பரிபாக காலத்திலே விட்டு நீங்கும் எண்ணிறந்த சக்திகளையுடையதாய், இருள் ஒளிர இருண்ட மோகமாய்- இருளும் ஒளி என்னும்படி மிக இருண்ட பேரிருளாய் நின்று அஞ்ஞானத்தை விளைவிப்பதாய், செம்பில் உறு களிம்பு எய்ந்து- செம்பிற் பொருந்திய களிம்பை ஒத்து, நித்த மூலமலமாய்- அநாதி தொட்டுச் சகசமாயுள்ள மூலமலமாய், அறிவு முழுதினையும் மறைக்கும்- ஆன்மாக்களின் வியாபக அறிவு முழுவதினையும் விளங்கவொட்டாது மறைத்து நிற்கும், திரோதானசத்தி- திரோதான சத்தியானது, நின்று- ஆன்மாக்களோடு நின்று, பாகமாம் வகை பண்ணுதலால்- அந்த ஆணவமலம் பரிபாகமடையும்படி அதற்கேற்ற உபாயங்களைச் செய்தலால், மலம் எனவும் பகர்வர்- இந்தத் திரோதான சத்தியையும் மலம் என்று உபசரித்துச் சொல்லுவர், அதுதானே- ஆணவமலம் பரிபாகமானபின் அந்தத் திரோதான சத்திதானே, நாகம் மாநதி மதியம் பொதி சடையான் அடிகள் நணுகும்வகை- பாம்பையும் பெரிய கங்கையையும் சந்திரனையும் அணிந்த சடையினையுடைய சிவபெருமானது திருவடிகளை அவ்வான்மாக்கள் பொருந்தும்படி, பரிந்து கருணைமிக நயக்கும்- இரங்கி மிக்க அருளைப் புரியும்.

## 3. மாயை

சுத்தமாயை

21. உன்னலரும் பரசிவன்ற னருளாலே நாத
முத்திக்கு மிகுங் குடிலைதனில் விந்துருவ நாதந்
தன்னிலதி னொளிவளருஞ் சதாசிவரா மவரிற்
றயங்கவரு மீசர்வித்தை தனையளிப்ப ரதனான்
மன்னுவரிவ் வகையைவர் வாய்மையினான் முன்னே
வந்திடுமென் றுரைசெய்த விந்துவழா வகையே
முன்னுதவு சூக்குமாதி யொருநான்கு மென்று
மொழிந்திடுவ ரருங்கலைகள் முதிர்ந்து ளோரே.

பதவுரை:- உன்னல் அரும் பரசிவன்றன் அருளாலே- மனத்தால் நினைத்தற்கரிய பரமசிவனது சத்தியின் வியாபாரத்தால், மிகும் குடிலைதனில் நாதம் உதிக்கும்- மேலான சுத்தமாயையாகிய குடிலையிலே நாத தத்துவந் தோன்றும், நாதம் தன்னில் விந்துவரும்- அந்த நாதத்தில் விநது தத்துவந் தோன்றும், அதில் ஒளி வளரும் சதாசிவராம்- அந்த விந்துவில் ஒளிமிகுந்த சாதாக்கிய தத்துவம் தோன்றும், அவரில் தயங்கவரும் ஈசர்- அச் சாதாக்கியத்திலே மயேசுவர தத்துவம் விளங்கித் தோன்றும், வித்தைதனை அளிப்பர்- அது சுத்தவித்தியா தத்துவத்தைத் தோற்றுவிக்கும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால்– அவ்வாறு தோன்றுவதினால், இவ்வகை ஐவர் மன்னுவர்– அவ்வத் தத்துவங்களின் பெயரே பெயராய்த் தோன்றிய கர்த்தாக்கள் ஐவர் அத் தத்துவங்களைப் பொருந்தி நிற்பர், வாய்மையினால் முன்னே வந்திடும் என்று உரைசெய்த விந்து– சத்தி பொருந்தி வியாபரித்தலால் முன்னே நாதத்திலே தோன்றுமென்று சொன்ன விந்துவானது, வழாவகையே– தவறாது, முன்சூக்குமாதி ஒரு நான்கும் உதவும் என்று– முதலிலே சூக்குமை முதலிய வாக்கு நான்கையும் தோற்றுவிக்கும் என்று, அரும் கலைகள் முதிர்ந்துளோர் மொழிந்திடுவர்– அரிய சிவாகமங்களைக் கற்று முதிர்ந்தோர் சொல்வர்.

## அசுத்த மாயை

22. உருவாதி சதுர்விதமா யொன்றொன் றொவ்வா
வுண்மையதாய் நித்தமா யொன்றா யென்றும்
அருவாகிக் கன்மாந்த மணுக்க னியார்க்கு
மாவார மாயசித்தா யசலமாகி
விரிவாய தன்செயலின் வியாபியா யெல்லாம்
விரிந்தவகை புரிந்தடைவின் மேவியவை யொடுங்க
வருகால முயிர்களெல்லா மருவிடமாய் மலமாய்
மன்னியிடு மரனருளான் மாயை தானே.

பதவுரை:– மாயைதான்– அசுத்தமாயையானது, உரு ஆதி சதுர்விதமாய்– காரியப்பாட்டிலே தநு கரண புவன போகம் என்னும் நால்வகைப் பொருள்களாய், ஒன்று ஒன்று ஒவ்வா உண்மையதாய்– ஒன்றுக்கொன்றொவ்வாத தூல சூக்கும இயல்பினையுடைய தத்துவங்களாய், நித்தமாய்– காரண ரூபத்தில் நித்தமாய், ஒன்றாய்– ஒன்றாய், என்றும் அருவாகி– எப்பொழுதும் அருவமாயிருப்பதாய், கன்ன அந்தம் அணுக்கள் யார்க்கும் ஆவாரமாய்– கன்மம் நீங்குமளவும் ஆன்மாக்கள் யாவர்க்கும் மயக்கஞ் செய்வதாய், அசித்தாய்– சடமாய், அசலமாகி– சலனமற்றதாய், விரிவாய தன் செயலில் வியாபியாய்– தன்னிடத்தினின்றும் விரிந்த காரியப் பொருள்களில் தான் வியாபித்து நிற்பதாய், எல்லாம் விரிந்தவகை புரிந்த அடைவில்– அக் காரியங்களெல்லாம் விரிந்து தோன்றச் செய்த முறையில், அவை மேவி ஒடுங்கவரு காலம்– அவை பொருந்தி ஒடுங்க வருகிற சங்கார காலத்திலே, உயிர்கள் எல்லாம் மருவு இடமாய்– ஆன்மாக்கள் எல்லாம் பொருந்தியிருத்தற்கிடமாய், மலமாய்– மும்மலங்களுள் ஒன்றாய், அரன் அருளால் மன்னியிடும்– சிவத்தினது திரோதான சத்தியாற் காரியப்படுத்தப் படுவதாய் நிலைபெறும்.

## உலகுக்கு முதற்காரணம் மாயை

23. எல்லையிது வெனிலுலகுக் குபாதான மில்லை
யிறைவனல தெனினசித்துச் சித்தினிடத் துதியா
மன்னியுள தேன்முதல்வ னென்கோ லென்னின்
மாயைதா னசித்துருவாய் மருவ மாட்டா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னவனு மிதுவொழிய வாக்க மாட்டா
னசத்தனா மெனினதுவு மவன்போ னித்த
முன்னவனவ் வசித்தைவிரித் தெவையு மாக்கு
முதன்மையது கொடுத்ததென மொழிந்திடாரே.

பதவுரை:- இது என்னை எனில்- மாயை என்னும் ஒரு பொருள் காரணமாயுண்டென்னும் இஃது என்னையெனில், உலகுக்கு உபாதானம்- அது பிரபஞ்சந் தோன்றுதற்கு முதற்காரணமாயிருக்கும், இறைவன் அலது இல்லை எனின்- உலகுக்குப் பிரமத்தையன்றி வேறொரு முதற் காரணம் இல்லையென்று நீ சொல்லின், அசித்துச் சித்தினிடத்து உதியா- சடமாகிய பிரபஞ்சம் சித்தாகிய பிரமத்தினின்று தோன்றா, மன்னி உளதேல் முதல்வன் என்கொல் என்னின்- மாயை காரணமாய்ப் பொருந்தியுள்ள தாயின் முதல்வன் வேண்டப்படுவது எதன் பொருட்டெனின், மாயைதான் அசித்து உருவாய் மருவமாட்டாது- மாயையானது சடமாகையால் அது சித்தாகிய ஒரு முதல்வனையின்றித் தானே தநுவாதிகளாகக் காரியப்பட மாட்டாது, அன்னவனும் இது ஒழிய ஆக்கமாட்டான் அசத்தனாம் எனின்- அந்த முதல்வனும் இந்த மாயையின்றிப் பிரபஞ்சத்தை உண்டாக்கமாட்டான், அதனால் அவனும் மாயைபோல அசத்தனே என்னின், அவ்வாறன்று அதுவும் அவன்போல் நித்தம்- அந்த மாயையும் அவனைப் போல அநாதியாயுள்ளது, முன்னவன் அவ்வசித்தை விரித்து எவையும் ஆக்கும்- சித்தாகிய முதல்வன் அந்த அறிவில்லாத மாயையை விரித்துப் பிரபஞ்சம் எல்லாவற்றையும் உண்டாக்குவன், முதன்மை அது கொடுத்தது என மொழிந்திடார்- அதனாற் பிரபஞ்சத்தை உண்டாக்கும் தலைமையை அந்த மாயையே கொடுத்ததென்று அறிவுடையோர் சொல்ல மாட்டார்.

வினைக்கேற்ற உடலமைப்பைக் கொடுப்பவர் கடவுள்

24. படைத்ததொரு படையின்றிப் பறவைபசு நரராப்
பண்ணியதென் முன்னைவினைப் பான்மை யென்பர்
அடுத்தவினை யுளதாயி னிறையே னென்னி
லசேதனமற் றவையாவிக் கமைத்த தாகும்
எடுத்தவினை யுருவுறுவ துயிரேற் றானே
யிருவினைக்குந் தற்கவுட லெய்து மென்னிற்
சடத்திரளுங் கர்த்தாவா யறிவொன் றில்லாத்
தன்மையனுங் கூடவொரு சங்கை யின்றே.

பதவுரை:- படைத்தது ஒருபடி இன்றிப் பறவை பசு நரராப் பண்ணியது என்- கருத்தாவே படைப்பாராயின் படைக்கப்பட்ட பிரபஞ்சத்தை ஒரு தன்மையதாகப் படையாமற் பறவை பசு மனிதராகப் படைத்த காரணம் என்னை என்று கேட்கின், முன்னைவினைப் பான்மை என்பர்- ஆன்மாக்கள் முற்பிறவியிலே செய்த நல்வினை தீவினைகளுக்கேற்படி என்று சொல்லுவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியோர், அடுத்த வினை உளதாயின் இறை ஏனெனில்- முன்கூடின சஞ்சித வினையுண்டாயின் கடவுள் வேண்டப்படுவது எதன்பொருட்டென்னின், அசேதனம்- அவ்வினை அறிவில்லாத சடலமாம், ஆதலின் மற்றவை ஆவிக்கு அமைத்தது ஆகும்- பறவை முதலிய படைப்புக்கள் அவரவர் செய்த வினைக்கேற்ப முதல்வன் உயிர்களுக்கு விதித்தனவாகும், எடுத்தவினைஉரு உறுவது உயிரேல்- செய்த வினைக்கேற்ப உடம்பைப் பொருந்துவது ஆன்மாவாயின், தானே இருவினைக்குத்தக்க உடல் எய்தும் என்னில்- அவ்வான்மாவே நல்வினை தீவினைகளுக்கேற்ற உடம்பை எடுத்துக்கொள்ளும் அதற்குக் கடவுள் வேண்டுவதில்லை என்னில், சடத்திரளுங் கர்த்தாவாய் அறிவொன்றில்லாத் தன்மையனும் கூட ஒரு சங்கை இன்று- சடமாகிய வினைமாயைகளும் தனக்கென ஒரு செயலும் அறிவுமில்லாத ஆன்மாவும் தம்முட் கூடுதற்கு வேறோரேதுவுமில்லை.

மும்மலங்களும் அநாதி

25. அல்லன்மிக வுயிர்க்கிவைதா னணைத்த தீச
னருவினைக ளருந்துதற்கோ வினையோ வன்றிச்
சொல்லிவரு மாயையோ வணுவை முந்தச்
சூழ்ந்ததெனு முரைமுதலோர் தொடக்கி லார்பால்
ஒல்லைவரு மெனினுளதா முயிருண் டாவே
யுளதுமல மலமுளதா வொழிந்த வெல்லா
நெல்லின்முளை தவிடுமியோ லநாதி யாக
நிறுத்திடுவ ரிதுசைவ நிகழ்த்து மாறே.

பதவுரை:- ஈசன்- இறைவன், உயிர்க்கு அல்லல் மிக இவைதான் அணைத்தது- ஆன்மாக்களுக்குத் துன்பம் மிக உண்டாக இவ்வுடல்களைக் கூட்டியது, அருவினைகள் அருந்துதற்கோ- அரிய வினைப்பயன்களைப் புசிப்பதற்காகவோ, அப்படியாயின் வினையோ அன்றிச் சொல்லிவரும் மாயையோ அணுவை முந்தச் சூழ்ந்தது- இந்த வினையோ அல்லது சொல்லப்பட்டுவரும் மாயையோ ஆன்மாவை முதலிற் கூடியது, எனும் உரை- என்னும் வினா முதல் ஓர் தொடக்கிலார்பால் ஒல்லைவரும் எனின் உளதாம்- அநாதியில் ஒரு பந்தமுமில்லாதவரிடத்தில் இடையில் வந்து இவை விரைவாகப் பொருந்துமெனின் அவ்வினா உண்டாம், உயிர் உண்டாகவே உளது மலம்- உயிர் உளதாகவே ஆணவமலமும் அதனோடு சகசமாயுள்ளது, ஆனால் மாயையுங் கன்மமும் பின்புண்டானதோ என்னில், மலம் உளதா ஒழிந்த (உள)- ஆணவமலம் அநாதியே உளதாக மற்றைய மாயை கன்மங்களும் அநாதியே உள்ளனவாம், எல்லாம் நெல்லின் முளை தவிடு உமிபோல் அநாதியாக நிறுத்திடுவர்- இவை மூன்றையும் நெல்லிடத்துள்ள முளையும் தவிடும் உமியும் போல அநாதியாகச் சொல்வர், இது சைவம் நிகழ்த்துமாறு- இதுவே சிவாகமங்கள் சொல்லும் முறைமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தத்துவங்கள் தோன்றும் முறை

26. அருத்திமிகுங் கலைகால நியதியுடன் வித்தை
யராகமிவை யநந்தரான் மாயைதனி லாகும்
உருத்திரராற் கலையதனிற் பிரகிருதி குணங்க
ளுளவாரு மகங்காரம் புத்தியினி லுதிக்குந்
தெரித்தவிது திரிவிதமாந் தைசதவை காரி
திகழ்தருபூ தாதியெனத் திருந்தியசாத் துவிதம்
விரித்தகுண மனம்புத்தி யிந்திரிய மென்று
விளம்பியசோத் திராதிமுதல் விளங்கியிடும் விரிந்தே.

பதவுரை:- மாயைதனில்- அசுத்த மாயையினிடத்திலே, அநந்தரால்- அநந்த தேவரின் செயலால், அருத்தி மிகும் கலைகாலம் நியதியுடன் வித்தை அராகம் இவை ஆகும்- போகத்தில் இச்சையை மிகவுண்டாக்கும் கலை காலம் நியதியும் அக்கலையிலிருந்து வித்தை அராகமும் ஆகிய இவை ஐந்தும் தோன்றும், உருத்திரரால் கலை அதனில் பிரகிருதி குணங்கள் உளவாகும்- சீகண்டருத்திரரின் செயலால் முன்சொன்ன கலையினின்றும் மூலப்பிரகிருதியும் அதனினின்று குணதத்துவமும் தோன்றும், புத்தியினில் அகங்காரம் உதிக்கும்- அக்குண தத்துவத்திலே தோன்றின் புத்திதத்துவத்தினின்றும் அகங்கார தத்துவம் தோன்றும், தெரித்த இது திகழ்தரு தைசத வைகாசி பூதாதி எனத் திரிவிதமாம்- சொல்லப்பட்ட இந்த அகங்காரமானது விளக்கத்தையுடைய தைசதவகங்காரமும் வைகாரியகங்காரமும் பூதாதியகங்காரமும் என மூவிதமாம், முதல்- முதலிற் சொல்லப்பட்ட தைசதவகங்காரத்திலே, திருந்திய சாத்துவிகம் விரித்த குணம்- சிறந்த சாத்துவிகுண சம்பந்தமான, மனம் புத்தி இந்திரியம் என்று விளம்பிய சோத்திராதி- மனமும் ஞானேந்திரியம் என்று சொல்லப்பட்ட சோத்திரம் தொக்கு சட்சு சிங்ஙவை ஆக்கிராணம் என்பவையும், விரிந்தே விளங்கிடும்- விரிந்து தோன்றும்.

## இதுவுமது

27. மன்னியகன் மேந்திரிய மானவிரா சதஞ்சேர்
வாக்காதி வைகாரி மருவிவருஞ் சத்தந்
தன்னைமுத லாகியதா மதமிகுமாத் திரைபின்
றருமதனில் வானநில மனல்புனன்மண் சத்த
முன்னதனில் வெளியாதி பொன்றொன் றாகு
முறையிலுறு மிருமையயன் முடிவா முன்னே
உன்னுசதா சிவராதி யதிபதிக ளொடுக்க
முதித்தவடை வெனவுரைப்ப ருணர்ந்து ளோரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை:- மன்னிய கன்மேந்திரயமான இராசதம் சேர்வாக்காதி- நிலைபெற்ற கன்மேந்திரியங்களான இராசதகுண சம்பந்தமான வாக்கு பாதம் பாணி பாயு உபத்தம் என்னம் ஐந்தும், வைகாரி மருவிவரும்- வைகாரியகங்காரத்தைப் பொருந்தித் தோன்றும், சத்தம் தன்னை முதலாகிய தாமதம் மிகு மாத்திரை- சத்தத்தை முதலாகவுடைய தாமதகுணம் மிகுந்த தன்மாத்திரைகள் ஐந்தையும், பின்தரும்- பின்னையதாகிய பூதாதியகங்காரமானது தரும், அதனில்- அந்தச் சத்தம் முதலிய தன்மாத்திரையிலே, வான் அநிலம் அனல் புனல் மண் (முறையில் உறும்)- ஆகாயம் வாயு தேயு அப்பு பிருதிவி என்னும் ஐந்து பூதங்களும் முறையே தோன்றும், வெளிவாதி- ஆகாயம் முதலிய பூதங்கள், சத்தம் முன்னதனில்- சுத்தம் முதலிய குணங்களில், ஒன்று ஒன்று ஆகும் முறையில் உறும்- ஒவ்வொரு குணங்களை ஏறறமாக முறைப்படி பொருந்தும், இருமை அயன் முடிவா- பெருமை பொருந்திய பிரமனீறாக, முன்னே உன்னு சதாசிவர் ஆதி- பஞ்சமூர்த்திகளுக்கும் முதன்மையாக எண்ணப்படும் சதாசிவதேவர் முதலியோர், அதிபதிகள்- அப்பூதங்களுக்குத் தெய்வங்களாயிருப்பர், ஒடுக்கம் உதித்த அடைவு என உரைப்பர் உணர்ந்துளோர்- தத்துவங்கள் ஒடுங்கும் முறைமையும் தோன்றின முறைமைப்படியேயாகும் என்று சொல்லுவர் அறிஞர்கள்.

## கன்மம்

கன்மமலத்தி னியல்பு

28. நண்ணியிடு முருவதனுக் கேது வாகி
நாநாபோ கங்களாய் நாசோற் பத்தி
பண்ணிவரு மாதலா லநாதி யாகிப்
பலவாகி யணுக்கடொறும் படர்வ தாகி
எண்ணிவரு மனவாச கன்மத்தா லியற்று
மியல்பினதாய் மதிகதமா யிருபயனாம் பாவ
புண்ணியமாய்ப் புலர்காலை மாயை மேவிப்
பொருந்துமிது கன்மமலம் புகலு மாறே.

பதவுரை:- கன்மமலம்- கன்மமலமானது, நண்ணியிடும் உருவதனுக்கு ஏதுவாகி- ஆன்மாக்கள் பொருந்துகின்ற உடம்புகளுக்குக் காரணமாய், நாநாபோகங்களாய்- அவ்வுடம்புகளால் அநுபவிக்கப்படும் பலவிதமான போகங்களைத் தருவதாய், நாச உற்பத்தி பண்ணிவரும் ஆதலால் அநாதியாகி- அழிந்தும் தோன்றியும் வருதலால் பிரவாகாநாதியாய், பலவாகி- பலவிதப்படுவதாய், அணுக்கள்தொறும் படர்வதாகி- ஒவ்வோர் ஆன்மாவிலும் செறிந்திருப்பதாய், எண்ணிவரு மனம் வாசம் கன்மத்தால் இயற்றும் இயல்பினதாய்- நினைக்கின்ற மனத்தினாலும் வாக்கினாலும் காயத்தினாலும் செய்யப்படும் இயல்பினையுடையதாய், மதிகதமாய்- புத்திதத்துவம் பற்றுக்கோடாய், இரு பயனாம் புண்ணிய பாவமாய்- இன்பமுந் துன்பமுமாகிய இருபயன்களையுந் தரும் புண்ணிய பாவ வடிவாய், புலர்காலை மாயை மேவிப் பொருந்தும்- சகல தத்துவங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுங்குஞ் சங்காரகாலத்திலே மாயையைச் சென்று பொருந்தும், இது புகலமாறு– இதுவே ஆகமங்கள் சொல்லும் முறையாம்.

### சஞ்சிதமும் பிராரத்தமும்

29. கன்மநெறி திரிவிதநற் சாதியாயு போகக்
கடனதென வருமூன்று முயிரொன்றிற் கலத்தல்
தொன்மையதா ழல்லதுண வாகா தானுந்
தொடங்கடைவி னடையாதே தோன்று மாறித்
தன்மைதரு தெய்விகமுற் பவுதிகமான் மிகமாந்
தகையிலுறு மசேதனசே தனத்தாலுஞ் சாரு
நன்மையொடு தீமைதரு சேதனனுக் கிவணூ
ணாடிலத னூழ்வினையா நணுகுந் தானே.

பதவுரை:– கன்மநெறி திரிவிதம்– கன்மம் பயன்தரும் முறை மூன்றுவிதமாம், நல்சாதி ஆயு போகக்கடனது எனவரும்– நல்லசாதி ஆயுள் போகம் என்னும் முறைமையையுடையதாக வரும். மூன்றும் உயிர் ஒன்றிற் கலத்தல் தொன்மையது– இவை மூன்றும் ஓரான்மாவிலே கூடுகிறது பழவினையினாலாம், ஊழ் அல்லது உணவாகா– ஊழல்லாத வேறொன்றும் ஆன்மாவுக்கு அநுபவமாய் வரமாட்டாது, தானும் தொடங்கு அடைவின் அடையாதே மாறித் தோன்றும்– அக்கன்மப் பயனும் செய்த முறைமையிலன்றிப் பக்குவமான முறையில் முன்செய்தன பின்னும் பின் செய்தன முன்னுமாக மாறிவரும், தன்மைதரு தெய்விகம்– இயல்பாக வருகின்ற தெய்விகத்தாலும், உத் பவுதிகம் ஆன்மிகமாம் தகையில் உறும் அசேதன சேதனத்தாலும் சாரும்– ஆதிபௌதிகம் ஆத்தியான்மிகம் என்னும் தன்மையோடு பொருந்துகின்ற அசேதன சேதனங்கள் வாயிலாகவும் வரும், நன்மையொடு தீமைதரு சேதனனுக்கு இவண் ஊண் நாடில்– நன்மை தீமைகளைச் செய்து வருகிற ஆன்மாவுக்கு இப்பிறவியில் புசிப்பை விசாரிக்கில், அதன் ஊழ்வினையால் நணுகும்– அவை அவ்வான்மா முற்பிறவியிற் செய்த வினையின் பயனாகப் பொருந்துவனவாம்.

### ஆகாமியம்

30. மேலைக்கு வருவினையே தென்னி லங்கண்
விருப்புவெறுப் பெனவறியவ் விளைவு மெல்லா
மூலத்த வினைப்பயில்வா மென்னி னாமென்
முற்றியதன் பயனுனக்கு முளைக்கு மென்பர்
ஞாலத்து வினைகளிரு திறமாகும் புந்தி
நண்ணாத வினைநணுகும் வினையெனவொன்றிரண்டாய்
ஏலத்தா னிதமகித மாமிதனால் வழுவா
தெய்தியிடும் புண்ணியபா வங்க ளென்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை:- மேலைக்கு வருவினை ஏதென்னில்- (இப் பிறவியில் வருவனவெல்லாம் முற்பிறவியிற் செய்த ஊழ்வினையின் பயனால்) இனிவரும் பிறவிக்கு ஏதுவாய் வரும் ஆகாமியவினை விளைவது எப்படியெனில், அங்கண் விருப்பு வெறுப்பு என அறி- அவ்வினைப்பயனை நுகருங்காலத்து அதில் வைத்த விருப்பு வெறுப்புக்களால் விளைவது என அறிவாயாக, அவ்விளைவும் எல்லாம் மூலத்த வினைப்பயில்வாம் என்னின்- அவ்விருப்பு வெறுப்புக்களும் எல்லாம் ஊழ்வினையின் பயனாமென்னில், நாம் என்முற்றி அதன்பயன் உனக்கு முளைக்கும் என்பர்- அவைகளை ஊழின் பயன் என்று உணராமல் நான் செய்கின்றேன் நான் அநுபவிக்கின்றேன் என்னும் முனைப்பு முதிர்ந்து அம்முனைப்பின் பயன் உனக்கு ஆகாமியமாய் வந்து ஏறுமென்று பெரியோர் சொல்லுவர், புந்தி நண்ணாத வினை நணுகும் வினை என ஞாலத்துவினைகள் இருதிறமாகும்- அபுத்தி பூர்வமான வினையும் புத்தி பூர்வமான வினையும் எனப் பூமியின்கண் செய்யப்படும் வினைகள் இரண்டு வகையாம், ஒன்று இரண்டாய் ஏலத்தான் இதம் அகிதமாம்- அவை ஒவ்வொன்றும் இவ்விரண்டாய்ப் பொருந்த இதம் அகிதங்களாகிய நல்வினை தீவினைகளுண்டாம், இதனால் வழுவாது புண்ணிய பாவங்கள் என்று எய்திடும்- இந்த நல்வினை தீவினைகளாலே தப்பாமற் புண்ணிய பாவங்கள் என்று நின்று உயிர்களைப் பொருந்தும்.

புண்ணிய பாவங்கள் வரும் வழியும் பாவம் போம்வழியும்

31. **உற்றதொழி னினைவுரையி லிருவினையு முளவா**
**மொன்றொன்றா லழியாதூ ணொழியா துன்னின்**
**மற்றவற்றி னொருவினைக்கோர் வினையால் வீடு**
**வைதிகசை வம்பகரும் மரபி லாற்றப்**
**பற்றியது கழியுமிது விலையா லேற்கும்**
**பான்மையுமாம் பண்ணாது பலிக்கு முன்னஞ்**
**சொற்றருநூல் வழியின்வரின் மிகுதி சோரும்**
**சோராதங் கதுமேலைத் தொடர்ச்சி யாமே.**

பதவுரை:- உற்ற தொழில் நினைவு உரையில் இருவினையும் உளவாம்- காயத்தின் தொழிலாலும் மனத்தின் நினைவினாலும் வாக்கின் செயலாலும் நல்வினை தீவினைகள் வருவனவாம், ஒன்று ஒன்றால் அழியாது- நல்வினை தீவினையாலும் தீவினை நல்வினையாலும் அழியாது, உன்னின் ஊண் ஒழியாது- ஆராயுமிடத்து அவ்வினைகளின் பயனை அநுபவிப்பது தவிராது, வைதிகசைவம் பகரும் மரபில்- (ஆயினும்) வேதாகமங்கள் சொல்லும் முறையிலே, அவற்றின் ஒரு வினைக்கு ஒருவினையால் வீடு ஆற்ற- அவ்விரு வினைகளுள் தீவினையாகிய பாவத்துக்கு நல்வினையாகிய பிராயச்சித்தத்தால் நிவிர்த்திசெய்ய, பற்றியதுகழியும்- பற்றிய அப்பாவம் நீங்கும், இது- இப்பிராயச்சித்தம், வினையால் ஏற்கும் பான்மையுமாம்- தான் செய்யாது பிறராற் செய்து கிரயத்துக்குக் கொள்ளும் முறைமையுடையதுமாம், பண்ணாது பலிக்கும்- ஒரு பிராயச்சித்தமுஞ் செய்யாது சித்திக்கும், முன்னம் சொல் நூல்தரு வழியின் வரின் மிகுதி சோரும்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஃதெங்ஙனமெனில் முன்சொன்ன வேதாகமங்கள் விதிக்கும் வழியிலே ஒழுகியவரின் அதிகப்பற்றான பாவம் நீங்கும். அங்குச் சோராதது மேலைத் தொடர்ச்சியாம்– அந்த வழியால் நீங்காது எஞ்சயவை மேல்வரும் பிறவிகளில் தொடர்ந்து பயன் தரும். மற்று– அசை.

6. மலங்களின் தொகை

32. மோகமிக வுயிர்கடொறு முடனாய் நிற்கு
மூலவா ணவமொன்று முயங்கி நின்று
பாகமிக வுதவுதிரே தாயி யொன்று
பகர்மாயை யொன்றுபடர் கன்ம மொன்று
தேகமுறு கரணமொடு புவன போகச்
செயலாரு மாமாயைத் திரட்சி யொன்றென்
றாகமல மைந்தென்ப ரைந்து மாறா
தருளென்ப தரிதென்ப ரறிந்து ளோரே.

பதவுரை:– மோகம் மிக வுயிர்கள் தொறும் உடனாய் நிற்கும் மூல ஆணவம் ஒன்று– அஞ்ஞானம் மிகும்படி ஆன்மாக்கடோறும் சகசமாய் அறிவை மறைத்து நிற்கும் மூலமலமாகிய ஆணவமலம் ஒன்று, முயங்கிநின்று பாகம் மிக உதவு திரோதாயி ஒன்று– அந்த ஆணவமலத்தைப் பொருந்திநின்று பக்குவத்தை மிகவுண்டாக்குகின்ற திரோதானசத்தி ஒன்று, பகர்மாயை ஒன்று– முன்சொன்ன மாயாமலம் ஒன்று, படர்கன்மம் ஒன்று– ஆன்மாக்கடோறும் செறிந்திருக்கும் கன்மமலம் ஒன்று, தேகம் உறு கரணமொடு புவனபோகச் செயல் ஆரும் மாமாயைத் திரட்சி ஒன்று என்று– தநு கரண புவன போகங்களாகிய மாயாகாரியங்கள் பொருந்தியிருக்கும் பெரிய மாயைக் கூட்டமாகிய மாயேயம் ஒன்று என்று, ஆக மலம் ஐந்து மலம் என்பர்– எல்லாமாக மலம் ஐந்தென்று சொல்லுவார்கள், ஐந்தும் மாறாது அருள் என்பது அரிது என்பர் அறிந்துளோர்– இவ்வைந்து மலமும் நீங்காது அருள் பெறுதல் அரிதென்று சொல்லுவர் அறிவுடையோர்.

## 4. அவத்தையிலக்கணம்

கேவலாவத்தை

33. ஓங்கிவரும் பலவுயிர்கண் மூன்றவத்தை பற்றி
யுற்றிடுங்கே வலசகல சுத்தமென வுணர்வர்
ஈங்குவருங் கலாதியொடு குறியுருவ மொன்று
மின்றிமல மன்றியொன்று மில்லையெனு மியல்பாய்
ஆக்கறிவை யறிவரிதா யறிகருவி யணையா
வாதலினா விருண்மருவு மலர்விழிபோ லதுவாய்
நீங்கும்வகை யின்றிநித்த வியாபமா யங்க
ணிற்பதுகே வலமென்று நிகழ்த்து நூலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை:– ஓங்கிவரும் பல உயிர்கள்– பக்குவப்பாட்டில் உயர்ந்துவரும் இவ்வெண்ணில்லாத உயிர்களும், மூன்று அவத்தை பற்றி உற்றிடும்– மூன்று அவத்தைகளைப் பொருந்தி நிற்கும். கேவலம் சகலம் சுத்தம் என உணர்வர்– அவற்றைக் கேவலாவத்தை சகலாவத்தை சுத்தாவத்தை என்று அறிஞர் சொல்லுவர், கேவலம்– அவற்றுட் கேவலாவத்தையாவது, ஈங்குவரும் கலாதியொடு குறி உருவம் ஒன்றும் இன்றி– இச் சகலாவத்தையில் நிகழும் கலையாதி தத்துவங்களும் பரவுடம்பு சூக்குமவுடம்பு தூலவுடம்புகளுமின்றி, மலம் அன்றி ஒன்றும் இல்லை எனும் இயல்பாய்– ஆணவமலம் ஒன்றேயன்றி வேறொன்றுமில்லை யென்னும் தன்மையுடையதாய், அறிகருவி அணையா ஆதலினால்– அறிதற்கேதுவாகிய கருவிகள் கூடாவாதலாலே, ஆங்கு அறிவை அறிவு அரிதாய்– அவ்விடத்தே ஒரு பொருளையும் அறியக்கூடததாய், இருள் மருவும் அலர் விழிபோல் அதுவாய்– இருளைப் பொருந்திய விழித்த கண்போல அம் மலவிருளிலே அழுந்தி, நீங்கும் வகையின்றி– அதனைவிட்டு நீங்கும் வகையின்றி, நித்தவியாபகமாய்– பிறப்பிறப்பும் ஏகதேசத் தன்மையுமின்றி, அங்கண் நிற்பது என்று– ஆணவ மலத்தோடு மாத்திரங் கூடிநிற்பதென்று, நூல் நிகழ்த்தும்– ஆகமங்கள் சொல்லும்.

ஆணவமலத்தைப் பற்றிய ஆசங்கை

34. இன்மைமல மாயைகன்ம மென்றிரண்டே யிறைதா
னிலங்குபல வுயிர்களுமுன் புரிந்தவிரு வினையின்
றன்மைகளா லெவர்களுக்குந் தநுகரண புவனந்
தந்திடுமிங் கிதனாலே யிருபயனுஞ் சார்ந்து
கன்மமெலா நேராக நேராதன் மருவக்
கடவுளரு ளாலெவையுங் கழித்திடுவ னதனாற்
பின்மலமா னவையணுகா பெருகொளிமுன் புளதே
பெற்றிடுமென் றித்திறமென் பேசு மாறே.

பதவுரை:– இன்மை மலம்– ஆணவமலம் என ஒன்றில்லை, மாயை கன்மம் என்று இரண்டே– மாயையுங் கன்மமும் என இரண்டேயுள்ளன, இறைதான் இலங்கு பல உயிர்களும் முன்புரிந்த இருவினையின் தன்மைகளால் எவர்களுக்குந் தந கரண புவனம் தந்திடும்– கருத்தாவானவன் விளங்காநின்ற பல ஆன்மாக்களும் முன்செய்த நல்வினை தீவினைகளுக்கீடாக அவ்வுயிர்கள் எவற்றுக்கும் தநு கரண புவன போகங்களைக் கொடுத்திடுவன், இங்கு இதனாலே– இப்படி இறைவன் கொடுத்தலாலே, இருபயனுஞ் சார்ந்து– இன்பத் துன்பங்களை அநுபவித்து, கன்மம் எல்லாம் நேராக நேராதல் மருவ– எல்லாக் கன்மங்களும் நேரொத்து வரும்பொழுது, கடவுள் அருளால் எவையும் கழித்திடுவன்– இறைவன் குருமூர்த்தியாய் எழுந்தருளிவந்து திருவருள் புரிந்து அக் கன்மங்களெல்லாவற்றையும் நீக்கியருளுவன், அதனால் பின் மலமானவை அணுகா– அவர் செய்யுந் தீக்கையினால் பின்பு அந்த மாயை கன்மங்கள் வந்து பொருந்தா, பெருகு ஒளிமுன்பு உளதே பெற்றிடும்– ஆன்மாக்களும் முன்புள்ளதாகிய பேரறிவையே பெற்றிடும், என்று இத்திறம் பேசுமாறு என்– என்றிப்படிச் சொல்லும் முறைமை என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவமலம் உண்டென்பதற்குப் பிரமாணம்

35. மாயைமுத லெனவினையின் பானமைமுத லெனவே
மன்னுபனை விதைமரபின் மயங்குமலஞ் சுத்தற்
கேயுநெறி யென்கொலத னியல்பாயின் முத்தி
யென்பதென்மற் றிவைநிற்க விருங்கலாதி யுணர்வாய்
மேயபினர்த் தன்னுருவம் விளங்காமை விளக்கு
மிகுமுலகந் தனிலென்னி லிவைவிடுங்கா லுணர்வுள்
தோயுநெறி யிலதாத லறியாமை யெனநீ
சொல்லியது மலமென்பர் துணிந்து ளோரே.

பதவுரை:- மாயை முதல் என வினையின் பான்மை முதல் எனவே மன்னு பனைவிதை மரபின் மயங்கும்- மாயை முந்தியதென்றும் வினைப்பகுதி முந்தியதென்றுஞ் சொல்லுமிடத்து நிலைபெற்ற பனையோ விதையோ முந்தியதென்னும் முறைமை போல மயங்க நேரும், சுத்தற்கு மனம் ஏயும் நெறி என்கொல்- அன்றியும் முன் சுத்தனாயிருந்த ஆன்மாவுக்கு அம்மாயை கன்மங்கள் பொருந்தும் முறை எவ்வாறு, அதன் இயல்பு ஆயின்- அம்மலங்களின் இயற்கையாயின், முத்தி என்பது என்- (முத்தி அடைந்த பின்னும் அவை வந்து பொருந்துமாதலால்) முத்தியுண்டென்று சொல்லுவதென்னை, இவை நிற்க- இவை நிற்க, இரும் கலாதி உணர்வாய் மேயபினர்- பெரிய கலை முதலிய தத்துவங்கள் ஆன்மாவுக்கு அறிவைத் தருவதாய்ப் பொருந்தியபின், தன் உருவம் விளங்காமை மிகு உலகம் தனில் விளக்கும் என்னில்- ஆன்மசொரூபம் விளங்காதபடி மறைத்து மிக்க பிரபஞ்ச ரூபத்தையே காட்டி நிற்குமென்று சொல்லின், இவைவிடுங்கால் உள் உணர்வு தோயுநெறி இலதாதல்- இக்கலையாதிகள் நீங்கின கேவலத்தில் ஆன்ம அறிவு விளங்காதிருந்ததற்குக் காரணம், அறியாமை என- அறியாமையாம் என்று, நீ சொல்லியது- நீ சொல்லிய அதனையே, மலம் என்பர் துணிந்துளோர்- ஆணவமலம் என்று சொல்லுவர் அதனை உணர்ந்தோர்.

இதுவுமது

36. அந்நியமா னவையுணர்த்தி யநந்தியமாய் நிறைந்த
வறிவறியா மையினானு மருணிலவுங் காலந்
தன்னிலவ னேயாவு மாய்நின்ற தொன்மை
தாமுணர்த லானுமுயிர் தானெனவொன் றிலதா
மன்னியிடு மலமாயை கன்மங்கண் மாறி
வந்திடுமிங் கிதுவழுவா தாதலினான் மனத்தால்
உன்னரிய திருவருளை யொழியமல முளதென்
றுணர்வரிதா மதனுண்மை தெரிவரிதா முனக்கே.

பதவுரை:- மலம்- ஆணவமலமானது, அந்நியமானவை உணர்த்தி- ஆன்மாக்களுக்கு வேறாய பொய்ப் பிரபஞ்சத்தை மெய்ப்பொருளென அறிவித்து நிற்றலால், அந்நியமாய் நிறைந்த அறிவு அறியாமையினாலும்- அவ்வான்மாக்கள் தமக்கு வேறின்றிப் பரிபூரணமாய் நிற்கும் அறிவாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவத்தை அறியாமையினாலும், அருள்நிலவும் காலம் தன்னில் அவனே யாவுமாய் நின்றதொன்மை தாம் உணர்தலானும்– திருவருள் பிரகாசமான சுத்த நிலையில் சிவமே எல்லாமாய் நின்ற பழைமையை அவை அறிகையாலும், உயிர்தான் என ஒன்று இலதா மன்னியிடும்– ஆன்மா என ஒரு பொருள் இல்லையாக அவ்வான்மா தானேயாய் நிலைபெற்று நிற்கும், மாயை கன்மங்கள் மாறி வந்திடும்– மாயையும் கன்மமும் சகலத்திற் பற்றுவதும் கேவலத்தில் விடுவதுமாய் ஆகந்துகமாயிருக்கும், இங்கு இது வழுவாது– இந்த ஆணவமலம் கேவலத்திலும் சகலத்திலும் நீங்காகது சகசமாயிருக்கும், ஆதலினான் மனத்தால் உன்ன அரிய திருவருளை ஒழிய மலம் உளதென்று உணர்வு அரிதாம்– ஆதலால் மனத்தினாலே நினைத்தற்கரிய திருவருளின் சகாயத்தாலன்றி ஆணவமலம் உண்டென்று அறியமுடியாது, அதன் உண்மை உனக்கு தெரிவு அரிதாம்– அத்திருவருளில்லாத உனக்கு அம்மலத்தின் உண்மை அறிதல் அரிதாம்.

## சகலாவத்தை

சகலாவத்தை நிகழும் முறையும் சூக்குமை வாக்கின் தொழிலும்

37. **புகலுமல மொழித்தற்குக் கலாதிமுதன் மாயை**
**பொருந்தியிடு மரனருளாற் போதந் தீபஞ்**
**சகலமெலா முடனாய வாறு போலுந்**
**தருமருளை மலமுயிர்கள் சாராமன் மறைக்கும்**
**இகலிவரு மிவையுணரி னிருள் வெளியாந் தன்மை**
**யெய்தும்வகை தன்செய்தி யிலங்கு விந்து**
**பகர்வரிய வுணர்வாகி யொளியா யுள்ளப்**
**பான்மையினா லொருநாதம் படருந் தானே.**

பதவுரை:– புகலுமலம் ஒழித்தற்கு– மேற்சொல்லிய ஆணவமல மறைப்பை நீக்குதற்பொருட்டு, அரன் அருளால்– சிவத்தினருளால், முதல் மாயை கலாதி பொருந்தியிடும்– சுத்த மாயா காரியமான வாக்குக்களும் கலையாதி தத்துவங்களும் ஆன்மாவை வந்து பொருந்தும், தீபம் சகலம் எலாம் உடனாயவாறு போலும் போதம்– தீபமானது அதைச் சேர்ந்த தண்டு தகழி நெய் திரி முதலிய பகுதிகள் எல்லாவற்றுடனும் கூடிப் பிரகாசித்து எரிந்தாற்போல ஆன்மாவின் அறிவு இவ்வாக்குக்களோடுந் தத்துவங்களோடுங் கூடி விளக்கமுறும், தரும் அருளை உயிர்கள் சாராமல் மலம் மறைக்கும்– அவ்வாறு வாக்கு, கலை முதலியவற்றல் அறிவைத் தருகின்ற திருவருளை ஆன்மாக்கள் அறிந்து பொருந்தாதபடி ஆணவமலம் மறைத்து நிற்கும். இகலிவரும் இவை உணரின் இருள் வெளியாம் தன்மை– இப்படி மாறுபட்டு வரும் மலமாயைகளின் இயல்பை அறியுமிடத்து இருளும் ஒளியும் போன்ற தன்மையுடையனவாம், எய்தும்வகை தன்செய்தி– ஆன்மா அறிவைப் பொருந்தும் முறையும் அம்மாயா காரியங்களின் செயலும் என்னவெனில், இலங்கு விந்து– மூலாதாரத்தில் விளங்கும் விந்து தத்துவத்திலிருந்து, பகர்வு அரிய உணர்வாகி– சொல்லுதற்கரிய ஞான மாத்திரைக்கு ஏதுவாகியும், ஒளியாய்– பரசரீரத்தினுள்ளாகப் பிரகாசமாய் விளங்கியும், உள்ளப்பான்மையினால்– ஆன்மா அறியும் அறிவுக்கீடாக, ஒரு நாதம் படரும்– ஒப்பற்ற சூக்குமை வாக்குத் தோன்றி உந்தித்தானத்திற்குச் செல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைசந்தி மத்திமை வைகரி வாக்குக்களின் தொழில்

38. வந்தடைந்து பின்னமாய் வன்னங் டோற்றம்
வருமடைவு படவொடுக்கி மயிலண்ட சலநேர்
சிந்தைதனி லுணர்வாகும் பைசந்தி யுயிரிற்
சேர்ந்துவரு மவைமருவு முருவெவையுந் தெரித்து
முந்தியிடுஞ் செவியிலுறா துள்ளுணர்வா யோசை
முழங்கியிடு மத்திமைதான் வைகரியி லுதானன்
பந்தமுறு முயிரணைத்து வந்தமொழி செவியின்
பாலணைய நினைந்தபொருள் பகருந் தானே.

பதவுரை:– வந்து அடைந்து– அந்தச் சூக்குமை வாக்கு உந்தித்தானத்தைச் சென்றடைந்து, வன்னங்கள் பின்னமாய்த்தோற்றம் வரும் அடைவுபட ஒடுக்கி– அக்கரங்கள் வேறு வேறாகப் பிரிந்து தோன்றும் முறைமை பொருந்தியிருக்கும்படி ஒடுக்கி, மயில் அண்ட சலம் நேர்– மயிலின் முட்டை தரித்திடும் நீர்போல, சிந்தைதனில் உணர்வாகும்– இருதயதானத்திற் சிந்தையிலே நிருவிகற்ப உணர்வுக்கு ஏதுவாய் நிற்கும், பைசந்தி– அப்பொழுது அது பைசந்தி எனப்படும், உயிரில் சேர்ந்து வரும் அவை மருவும் உரு எவையுந் தெரித்து– பின்பு அந்த வாக்கானது பிராணவாயுவோடு கூடி வருகின்ற அக்கரங்கள் பொருந்த சூக்கும ரூபங்கள் எல்லாவற்றையும் வேறு வேறாகப் பிரித்து, முந்தியிடும் செவியில் உறாது– முற்பட்டுவரும் செவிக்குக் கேளாமல், உள் உணர்வாய்– தான்மாத்திரம் உணர நிற்கும் சவிகற்ப உணர்வுக்கு ஏதுவாய், ஓசை– மெல்லோசையாய், முழங்கியிடும்– கண்டத்திலே தொனிக்கும், மத்திமை– அந்நிலையில் அது மத்திமை எனப்படும், வைகரியில்– வைகரி எனப்படும் நிலையில், உதானன் பந்தம் உறும் உயிர் அணைந்து வந்தமொழி– உதான வாயுவானது அகங்காரத்தாற் செலுத்தப்படும் பிராணவாயுவைக் கூடுதலாலே வந்தவாக்கு, செவியின் பால் அணைய– தன் செவிக்கும் பிறர் செவிக்குங் கேட்கும்படி, நினைந்த பொருள்– மனத்தின் நினைந்த ஒரு பொருளை, பகரும்– சொல்பவனுக்கும் கேட்பவனுக்கும் சவிகற்க உணர்வு உண்டாதற்கு ஏதுவாய்ச் சொல்லும்.

ஆன்ம அறிவு விளங்கும் வகையும் கலை வித்தைகளின் தொழிலும்

39. இத்தகைமை யிறையருளா லுயிரறியு மறிவுக்
கீடாக வாடாதே யீரிரண்டி னுரைத்த
வித்தைமுத லைவரான் விளங்கு ஞான
மேவியிடு மெனவுரைப்ப ரசுத்த மாயை
வைத்தகலை தான்மூல மலஞ்சிறிதே நீக்கி
மருவும்வகை தெரிவிக்கும் வாயில்களின் பயனைப்
புத்திதர வித்தையிடை நின்றறிவை யுயிர்க்குப்
பொருந்தியிடும் வகைபுணரும் புனிதசத்தி புணர்ந்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை:- இத்தகைமை- இந்த முறையிலே, இறை அருளால்- பரமசிவனது அருளினால், உயிர் அறியும் அறிவுக்கு ஈடாக- ஆன்மா அறியும் அறிவுக்குத் தக்கபடி, வாடாதே ஈரிரண்டின்- தவிராமல் வரும்நான்கு வாக்குக்களினாலும், உரைத்தவித்தை முதல் ஐவரான்- முன்னே சொல்லிய சுத்தவித்தை முதலிய தத்துவகர்த்தாக்கள் ஐவராலும், விளங்கு ஞானம் மேவியிடும் என உரைப்பர்- விளங்குகின்ற விடயஞானம் அவ்வான்மாவைப் பொருந்தும் என்று அறிவுடையோர் கூறுவர், அசுத்தமாயை வைத்த கலைதான் மூலமலம் சிறிதே நீக்கி மருவும் வகை தெரிவிக்கும்- (அஃதெங்ஙனமெனின்) அசுத்தமாயை தந்த கலையானது ஆணவமலத்தைச் சிறிதே நீக்கி விடயங்களைப் பொருந்தும்படி ஆன்மாவின் கிரியாசத்தியை விளக்கி நிற்கும், வித்தை- வித்தையானது, வாயில்களின் பயனைப் புத்தி தர- இந்திரியங்கள் வாயிலாக வரும் விடயங்களைப் புத்தி நிச்சயித்துத் தன்பாற் கொடுக்க, இடைநின்று- தான் ஆன்மாவுக்கும் புத்திக்கும் இடையே நின்று, பொருந்தியிடும்வகை- அவ்விடயங்களை ஆன்மா பொருந்தும்படி, அறிவை உயிர்க்குப் புணரும்- அவ்வான்மாவுக்கு அறிவைக் கூட்டிநிற்கும், புனித சத்தி புணர்ந்தே- சிவசத்தி உடன்நின்றே இவை நிகழ்வனவாம்.

அராகம் நியதி காலம் என்னுந் தத்துவங்களின் தொழில்

40. பேசரிய வராகந்தங் கன்மத்துக் கீடாப்
பெற்றதனி லாசைதனைப் பெருகுவிக்கு நியதி
தேசமிகு மரசர்தரு மாணை செய்தி
செய்தவரைத் துய்ப்பிக்குஞ் செய்தி போல
நேசமுறு தங்கன்ம நிச்சயித்து நிறுத்து
நிகழ்காலங் கழிகால மெதிர்கால மென்றே
ஓசைதர வருங்கால மெல்லைபலம் புதுமை
யுறுவிக்கு மிறைசத்தி யுடனாய் நின்றே.

பதவுரை:- பேச அரிய அராகம்- சொல்லுதற்கரிய அராகதத்துவமானது, தம் கன்மத்துக்கு ஈடாப் பெற்றதனில் ஆசைதனைப் பெருகுவிக்கும்- ஆன்மாக்கள் தங்களுடைய கன்மத்துக்கீடாகப் பெற்ற போகங்களிலே இச்சையை மிகுவிக்கும், நியதி- நியதியானது, தேசமிகும் அரசர்தரும் ஆணை- தேசங்களை மிகுதியாகவுடைய அரசராற் கற்பிக்கப்பட்ட ஆணையானது, செய்தி செய்தவரைத் துய்ப்பிக்கும் செய்திபோல- யாதொரு செய்கையும் செய்யதவரை அச் செய்கையின் பயனை அநுபவிக்கச் செய்யும் முறைமைபோல, நேசம் உறும் தம் கன்மம் நிச்சயித்து நிறுத்தும்- ஆன்மாக்கள் முன்னே விருப்பமுற்றுச் செய்த அவரவர் கன்மங்களை அவரவர் அனுபவிக்கும்படி நிச்சயம் பண்ணி நிறுத்தும், கழிகாலம் நிகழ்காலம் எதிர்காலம் என்று ஓசைதர வரும் காலம்- இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் எனச் சொல்லப்பட்டு வருங் காலதத்துவமானது, எல்லைபலம் புதுமை உறுவிக்கும்- இறந்தகாலத் தெல்லையினையும் நிகழ்காலத்துப் பலத்தினையும் எதிர்காலத்துப் புதுமையினையும் வரையறை செய்து நிற்கும், இறை சத்தி உடனாய் நின்றே- சிவசத்தி கூடநின்றே இவை நிகழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புருடதத்துவமும் பிரகிருதியும்

41. ஐவகையா லுறுபயன்க ணுகரவருங் கால
மதுபுருட தத்துவமென் றறைந்திடுவ ரறிந்தோர்
மெய்வகைய கலாசுத்தி தனினிதற்குஞ் சுத்தி
மேவியிடும் வகைதானும் விரும்பியநூல் விளம்புஞ்
செய்வகையின் றொடர்ச்சியிங்குத் தோன்றுவிக்குங் குணத்தின்
சேர்வுபுரி பிரகிருதி திரிகுணமா மவைதாம்
இவ்வகையாற் சாத்துவிக ராசததா மதமா
யியம்புவர்க ளொன்றிரண்டு குணமேற்கை யுடைத்தே.

பதவுரை:- ஐவகையால் உறுபயன்கள் நுகர வரும் காலம் அது புருடத்துவம் என்று அறிந்தோர் அறைந்திடுவர்- கலை வித்தை அராகம் நியதி காலம் என்னும் ஐந்தின் உபகாரத்தால் தன்னிடத்து வந்து பொருந்துகின்ற வினைப்போகங்களை ஆன்மா அனுபவிக்கக் கருதும் அவதரத்திலே அது புருடதத்துவமாம் என்று அறிந்தோர் சொல்வார்கள், மெய்வகைய கலாசுத்திதனில் இதற்கும் சுத்தி மேவியிடும் வகைதானும் விரும்பியநூல் விளம்பும்- சரீரத்தில் ஐவகையான கலாசோதனை செய்யுமிடத்து இந்தப் புருட தத்துவத்திற்குஞ் சுத்தி செய்யும் முறைமையினை விரும்பப்பட்ட ஆகமங்கள் சொல்லும், செய்வகையின் தொடர்ச்சி இங்குத் தோற்றுவிக்கும் குணத்தின் சேர்வுபுரி பிரகிருதி திரிகுணமாம்- முன்செய்த நல்வினை தீவினையின் பயனாய் வரும் இன்பத் துன்பங்களை இப்பொழுது உண்டாக்கும் குணங்களின் சமூகமாகிய பிரகிருதியானது மூன்று குணமாம், அவைதாம்- அந்த மூன்று குணங்களும், இவ்வகையால்- இச் செயல்வகையால், சாத்துவிக இராசத தாமதமாய் இயம்புவர்கள்- சாத்துவிககுணம் இராசதகுணம் தாமதகுணம் என்று சொல்லுவார்கள், ஒன்று இரண்டு குணம் ஏற்கை உடைத்து- அவற்றுள் ஒவ்வொன்றும இவ்விரண்டு குணங்களைப் பொருந்தும் இயல்பினை உடையதாம்.

## முக்குணங்களின் தொழிலும் புத்தியின் தொழிலும்

42. அலகில்குணம் பிரகாசம் லகுதைவியா விருதி
யடர்ச்சிமிகுங் கௌரவம நியமமிவை யடைவே
நிலவியிடு மும்மூன்று முயிரொன்றிற் கலந்தே
நிற்குமிவை நிறைபுலனின் பயனெவையுங் கவருங்
குலவிவரு போகங்கொ ளிடா மாறாக்
குறைவிலொளி யாமலகில் புலனிடத்தி லொருமை
பலவகையு முடையதாய்ப் பரனருளாற் புந்தி
பஞ்சாசற் பாவகமும் பண்ணுவிக்குந் தானே.

பதவுரை:- அலகு இல் குணம்- குணங்கள் எண்ணில்லாதன, பிரகாசம் லகுதை- பிரகாசமும் லகுதையும், வியாவிருதி அடர்ச்சி- வியாவிருதியும் அடர்ச்சியும், மிகும் கௌரவம் அநியமம்- மிக்க கௌரவமும் அநியமமும், இவை- ஆகிய இவைகள், அடைவே நிலவியிடும்- முறையே சாத்துவிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசத தாமத குணங்களைப் பொருந்தி நிற்கும், மும்மூன்றும் உயிர் ஒன்றிற் கலந்தே நிற்கும்– இவை ஒன்பது குணங்களும் ஒவ்வொரு உயிரிலும் கூடி நிற்கும், இவை– இம்முக்குணங்களும் (எதிர் நிரனிறையாக), நிறைபுலனின் பயன் எவையும் கவரும்– நிறைந்த இந்திரியங்களால் வரும் விடயங்கள் எல்லாவற்றிலும் ஆசையை உண்டாக்கும், குலவிவரு போகம் கொள் இடமாம்– கொண்டாடப்பட்டு வரும் போகங்களைப் பற்றச் செய்யும், மாறாக் குறைவில் ஒளியாம்– ஒருகாலும் நீங்காத பூரணமான பிரகாசமாயிருக்கும், புந்தி– புத்தியானது, அலகு இல் புலனிடத்தில் ஒருமை பலவகையும் உடையதாய்– எண்ணில்லாத விடயங்களில் ஒற்றுமை அநேக விதங்களையும் உடையதாய், பரன் அருளால்– பரமசிவனது அநுக்கிரகத்தாலே, பஞ்சாசத் பாவகமும் பண்ணுவிக்குந் தானே– ஐம்பது பாவங்களையுஞ் செய்து நிற்கும்.

அகங்காரம் மனம் சித்தம் என்னும் தத்துவங்களின் தொழில்

43. ஆனதநு வதனிலுறு மநிலனையு மியக்கி
யாங்கார நீங்காத வகந்தைக்கு வித்தா
யானலது பிறரொருவ ரெனையொப்பார் புவியி
லில்லையெனு மியல்பினதா யிந்திரியம் புலன்கள்
தாநுகரு மளவிலதின் முந்தியுறு மிச்சை
தானுருவாய்ச் சங்கற்ப சதாகதியுந் தந்து
மானதமா னதுநிற்குஞ் சிந்தைநினை வையம்
வந்துதரு மனமொழிய வகுப்பொ ணாதே.

பதவுரை:– ஆங்காரம்– அகங்கார தத்துவமானது, ஆனதநு அதனில் உறும் அநிலனையும் இயக்கி– வினைக்கீடாக உண்டான உடம்பிலே பொருந்தியிருக்கும் பிராணாதி வாயுக்களையும் இயங்கச்செய்து, நீங்காத அகந்தைக்கு வித்தாய்– விட்டு நீங்காத நான் என்னும் செருக்குக்கு மூலமாய், எனை ஒப்பார் புவியில் யான் அலது பிறர் ஒருவர் இல்லை எனும் இயல்பினதாய்– என்னை ஒப்பார் பூமியின்கண் யானேயல்லது பிறர் ஒருவருமில்லை என்னும் இயல்பினையுடையதாய், இந்திரியம் புலன்கள் தாம் நுகரும் அளவில்– இந்திரியங்கள் விடயங்களை நுகரும் பொழுது, அதில் முந்தி உறும்– அவ்விடயங்களிலே முற்பட்டுப் பொருந்தும், மானதமானது– மனதானது, இச்சைதான் உருவாய்– இச்சைதானே தனக்கு வடிவாய், சங்கற்ப சதாகதியும் தந்து நிற்கும்– ஒன்றைச் சங்கற்பித்தலையும் ஓயாத சலனத்தையுஞ் செய்யும், சிந்தை நினைவு– சித்தம் நினைவு மாத்திரமாய் நிற்கும், ஐயம் வந்து தருமனம் ஒழிய வகுப்ப ஒணாதே– சந்தேகத்தை உண்டாக்குகின்ற மனத்தையொழிய அதனை வேறாக வகுத்துக் கூறவொண்ணாது.

ஞானேந்திரிய கன்மேந்திரியங்களின் தொழில்

44. சொன்னமுறை செவிதுவக்கு நோக்கு நாக்குத்
துண்டமிவை யைந்திற்குந் தொகுவிடய மாக
மன்னியசத் தப்பரிச ரூபரச கந்த
மருவியிடு மிவையடைவே வாக்குப் பாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னவரு பாணிமிகு பாயுவினோ டுபத்தம்
பேசலுறு மைந்திற்கும் பிறங்கொலிகொள் வசனம்
உன்னரிய கமனதா னவிசர்க்கா நந்த
முற்றதொழில் பெற்றிடுவ துண்மை யாமே.

பதவுரை:– சொன்னமுறை– முன்னே சொன்னபடி, செவி துவக்கு நோக்கு நாக்கு துண்டம் இவை ஐந்திற்கும் தொகுவிடயமாக– செவி மெய் கண் நா நாசி என்னும் இந்த ஞானேந்திரியங்கள் ஐந்துக்கும் நெருங்கிய விடயங்களாக, மன்னிய சத்தப் பரிச ரூப ரச கந்தம் இவை அடைவே மருவியிடும்– நிலைபெற்ற சத்தம் பரிசம் உருவம் இரதம் கந்தம் என்னும் இவை ஐந்தும் முறையே பொருந்தும், வாக்குப் பாதம் பின்னர்வரு பாணி மிகு பாயுவினோடு உபத்தம் பேசல் உறும் ஐந்திற்கும்– வாக்குப் பாதம் பின்வருகின்ற பாணி மிக்கபாயு உபத்தம் என்று சொல்லப்படுகின்ற கன்மேந்திரியங்கள் ஐந்துக்கும், பிறங்கு ஒலிகொள் வசனம் உன்ன அரிய கமனதான விசர்க்க ஆநந்தம் (அடைவே) உற்ற தொழில்– விளங்குகின்ற ஓசை பொருந்திய வசனம் நினைத்தற்கரிய கமனம் தானம் விசர்க்கம் ஆநந்தம் என்னும் இவை ஐந்தும் முறையே பொருந்திய தொழிலாகும், பெற்றிடுவது உண்மையாம்– இத்தொழில்களை அவை பெற்றிருப்பது உண்மையாகும்.

## பஞ்சபூதங்களின் தொழில்

45. முந்தியவைம் பூதங்கள் வானாதி யாக
முயங்கியநற் செவிநாசி கண்ணாமெய்ம் முறையால்
இந்தவயி னின்றுவரு மைம்புலனு முயிர்தா
மெய்தும்வகை தம்முருவி னிலங்கியிடும் புறத்து
வந்தடைய விடங்கொடுக்கு நிரந்தரமாய் வானம்
வாயுமிகச் சலித்தெவையுந் திரட்டுந்தீ வெம்மை
தந்தவைசுட் டொன்றுவிக்கு நீர்குளிர்ந்து பதமே
தருமுரத்துத் தரிக்குமுந்து தரணி தானே.

பதவுரை:– முந்திய ஐம்பூதங்கள்– முன் சொல்லப்பட்ட ஐந்து பூதங்களும், வான் ஆதியாக– ஆகாயம் முதலாக, முயங்கிய நல் செவி மெய் கண் நா நாசி இந்த வயின்முறையால் நின்று– சரீரத்திற் பொருந்தியிருக்கும் நல்ல செவி மெய் கண் நா நாசி என்னும் இந்த இடங்களில் நின்று, வரும்ஐம்புலனும் உயிர்தாம் எய்தும்வகை– இந்திரியங்களிடமாக வருகின்ற சத்தாதி விடயங்கள் ஐந்தையும் உயிர் அறியும்படிக்கு, தம் உருவின் இலங்கியிடும்– தத்தம் சொரூபத்தோடு (அகத்தே) விளங்கா நிற்கும், வானம் புறத்துவந்து அடைய நிரந்தரமாய் இடம் கொடுக்கும்– ஆகாயமானது புறத்திலே மற்றைப் பூதங்கள் எல்லாம் தன்னிடத்திலே வந்தடைய வெளியாய் இடங்கொடுத்து நிற்கும், வாயு மிகச் சலித்து எவையும் திரட்டும்– வாயுவானது மிகவுஞ் சலனமுடையதாய் எல்லாவற்றையும் திரட்டும், தீ வெம்மை தந்து அவை கட்டு ஒன்றுவிக்கும்– தேயுவானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெப்பத்தைக் கொடுத்து அவற்றைச் சுட்டு ஒன்றுவிக்கும், நீர் குளிர்ந்து பதமே தரும்– அப்புவானது குளிர்ந்து பதஞ் செய்து நிற்கும், முந்து தரணிதான் உரத்துத் தரிக்கும்– முந்திய பிருதிவியானது கடினமாய் எவற்றையுந் தாங்கி நிற்கும்.

ஆன்மா தத்துவங்களோடு கூடிப்பிறந்திருந்து வினைப்பயனை அநுபவிக்கும் வகை

46. **இந்நிலையி லைந்துசுத்த மேழ்சுத்தா சுத்த**
**மெண்மூன்று மசுத்தமெனு மிவைமுப்பத் தாறா**
**மன்னியதத் துவங்களிடை மயங்கிநெடுந் துயர்தா**
**மருவுமுரு நிலையழிய வரும்பொழுது வரியார்**
**பன்னகமண் டசங்கனவு படர்வகையே முன்னம்**
**பகரவருங் கலாதிநிலை பரவியசூக் குமமாந்**
**தன்னுருவி னணைத்துபய னருந்தியர னருளாற்**
**றரையினிடை வருமென்று சாற்று நூலே.**

பதவுரை:– இந்நிலையில்– இங்ஙனம் சொல்லிவந்த முறைமையிலே, ஐந்து சுத்தம்– சுத்தவித்தை முதலிய ஐந்தும் சுத்த தத்துவம், ஏழ்சுத்தா சுத்தம்– கலை முதலிய ஏழும் சுத்தாசுத்த தத்துவம், எண் மூன்று அசுத்தம்– பிருதிவி முதலிய இருபத்துநான்கும் அசுத்த தத்துவம், எனும் இவை முப்பத்தாறாம்– என்று சொல்லப்படும் இவைகளின் தொகை முப்பத்தாறாம், மன்னிய தத்துவங்களிடை மயங்கி– இங்ஙனம் பொருந்திய தத்துவங்களின் வழியே ஆன்மா மயங்கி, நெடும் துயர்தாம் மருவும்– பெரிய துக்கத்தை அநுபவிக்கும், உரு நிலை அழியவரும் பொழுது– சரீரமானது நிலைகுலைய வருங்காலம், வரி ஆர் பன்னகம் அண்டசம் கனவு படர்வகையே– வரி பொருந்திய பாம்பு முன்னைத்தோலை விட்டுப் போதல போலவும் முட்டையிற் செனித்தவை அதனை விட்டுப் போதல் போலவும் நனவின்கட் கண்டவற்றைக் கனாக்காணுங் காலத்து மறந்து அறிவு வேறுபட்டாற் போலவும், முன்னம் பகரவரும் கலாதி நிலை பரவிய சூக்குமமாம் தன் உருவின் அணைந்து– முன்னே சொல்லப்பட்டு வரும் கலையாதி தத்துவங்கள் கூடிய சூக்குமமாகிய தனக்குரிய புரியட்டக சரீரத்தோடு சுவர்க்க நரகங்களை அடைந்து பூதசார பூதவுடம்புகளைப் பொருந்தி, பயன் அருந்தி– இன்பத் துன்பங்களை அநுபவித்து, அரன் அருளால் தரையினிடைவரும் என்று சாற்றும் நூல்– சிவாநுக்கிரகத்தாலே பூமியின்கண்ணே மீளவும் வந்து பிறக்குமென்று ஆகமங்கள் சொல்லும்.

யோனிபேதம்

47. **தோற்றியிடு மண்டசங்கள் சுவேதசங்கள் பாரிற்**
**றுதைந்துவரு முற்பிச்சஞ் சராயுசங் கணாகின்**
**ஊற்றமிகு தாவரங்கள் பத்தொன்ப தென்று**
**மூர்வபதி னைந்தமரர் பதினொன்றோ டுலவா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றருநீ ருறைவனநற் பறவைகாணாற் காலி
மன்னியிடும் பப்பத்து மாநுடரொன் பதுமா
வேற்றியொரு தொகையாக வியம்புவர்க வியோனி
யெண்பத்து நான்குநூ றாயிரமென் றெடுத்தே.

பதவுரை:– அண்டசங்கள் சுவேதசங்கள் பாரில் துதைந்துவரும் உற்பிச்சம் சராயுசங்கள் நான்கின் தோற்றியிடும்– அப்படிப் பிறக்கும்பொழுது அண்டசங்கள் சுவேதசங்கள் என்னும் நான்கிலுந் தோற்றியிடும் எழுவகைப் பிறப்புக்களில், ஊற்றம் மிகு தாவரங்கள் பத்தொன்பது என்றும்– நிலைபேறு மிக்க தாவரங்கள் பத்தொன்பது நூறாயிர பேதமென்றும், ஊர்வபதினைந்து– ஊர்வன பதினைந்து நூறாயிர பேதம் என்றும், அமரர் பதினொன்றோடு– தேவர்கள் பதினொருநூறாயிரபேதம் என்றும், உலவா மால் தரும் நீர் உறைவன நற்பறவைகள் நாற்காலி பப்பத்து மன்னியிடும்– குறையாத விருப்பத்தைத் தருகின்ற நீரில் வாழ்வன நல்ல பறவைகள் நாற்கால் மிருகங்கள் ஒவ்வொன்றும் பத்து நூறாயிர பேதமென்றும் பொருந்தியிடும், மாநுடர் ஒன்பதும்– இவற்றுடன் மாநுடயோனி ஒன்பது நூறாயிரம் பேதமுமாக, ஏற்றி ஒருதொகையாக யோனி எண்பத்து நான்கு நூறாயிரம் என்று எடுத்து இயம்புவர்– கூட்டி ஒரு தொகையாக யோனிபேதம் எண்பத்துநான்கு நூறாயிர பேதமென்று எடுத்துச் சொல்லுவர் பெரியோர்.

### 3. சுத்தாவத்தை

இருவினையொப்பும் சத்திநிபாதமும்

48. இனையபல பிறவிகளி னிறந்துபிறந் தருளா
லிருவினைகள் புரிந்தருந்து மிதுசகல மகலா
முனமருவு மிருபயனு மொருகாலத் தருந்த
முந்துநுக ருந்துபய னந்தமுற வந்த
வினையுமெதிர் வினையுமுடி வினையுதவு பயனா
னேராக நேராதன் மேவுங் கரன்முற்
சின்மருவு திரோதாயி கருணை யாகித்
திருந்தியசத் திநிபாதந் திகழு மன்றே.

பதவுரை:– அருளால் இனைய பல பிறவிகளின் இறந்து பிறந்து இருவினைகள் புரிந்து அருந்தும் இது சகலம்– பரமசிவனது திருவருளால் இப்படிப்பட்ட பல பிறவிகளிலே பிறந்திறந்து நல்வினை தீவினைகளைச் செய்து இன்ப துன்பங்களை அநுபவித்துவரும் இந்நிலை சகலாவத்தையாம், அகலா முனம் மருவும் இருபயனும்– அநுபவித்துத் தொலையாது முற்பிறவிகளிற் பொருந்திய சஞ்சிதவினையின் பயனாகிய இன்பத்துன்பங்களும், ஒருகாலத்து அரந்த– அதனோடு ஒரே காலத்தில் அருந்தத்தக்கதாக, முந்து நுகருந்து பயன் அந்தம் உற வந்த வினையும்– முற்பிறவிகளில் அநுபவிக்கும் பிரார்த்தப்பயன் அநுபவித்தொழியும் பொழுது வந்தேறி விளைந்த சஞ்சிதவினையும், எதிர்வினையும்– ஆகாமிய வினையும், முடிவினை உதவுபயனால்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபுண்ணியம் தருகின்ற பயனால், நேராக நேராதல் மேவும் கால்– சமத்துவத்தை அடைதலாகிய இருவினையொப்பு வரும் பொழுது, முன்சினம் மருவு திரோதாயி கருணையாகி– இதற்கு முன் ஆன்மாக்களை ஈடேற்றுதற் பொருட்டுக் கோபத்தைப் பொருந்திநின்ற திரோதான சத்தியானது அருட்சத்தியாய் மாறிநிற்க, திருந்திய சத்திநிபாதம் திகழும்– தீவிரதர சந்திநிபாதம் விளங்கும்.

சத்திநிபாத வகையும், தீவிரதர பக்குவர் அடையும் பேறும்

49. நாடியசத் திநிபாத நாலு பாத
நண்ணும்வகை யெண்ணரிய ஞான பாதங்
கூடுமவர் தமக்குணர்வாய் நின்ற ஞானக்
கூத்தனொரு மூர்த்திகொடு குறுகி மோக
நீடியகே வலசகல நிகழா வாறு
நிறுத்திமல மறுக்குமிது நிலையார் சுத்தங்
கேடில்புகழ் தருஞ்சரியை கிரியா போகக்
கேண்மையரே லிவையுணர்த்தக் கிளக்கு நூலே.

பதவுரை:– நாடிய சத்திநிபாதம் நண்ணும்வகை நாலுபாதம்– முன்னே ஆராயப்பட்ட சத்திநிபாதம் பொருந்தும் முறை மலபரிபாகத்துக்கேற்ப மந்ததரம் மந்தம் தீவிரம் தீவிரதரம் என நான்கு விதமாயிருக்கும், எண்ணரிய ஞானபாதம் கூடும் அவர்தமக்கு– நினைத்தற்கரிய தீவிரத சந்திநிபாதம் பொருந்துமவர்களுக்கு, உணர்வாய் நின்ற ஞானக் கூத்தன் ஒரு மூர்த்தி கொடு குறுகி– இதுவரையும் அறிவுக்கறிவாய் நின்று உணர்த்தி வந்த ஞானக்கூத்தன் ஒரு குருமூர்த்தி வடிவங் கொண்டு எழுந்தருளி வந்து, மோகம் நீடிய கேவலசகலம் நிகழாவாறு நிறுத்தி மலம் அறுக்கும்– மயக்கம் மிகுந்த கேவலாவத்தையும் விகற்பதையுடைய சகலாவத்தையும் உண்டாகாதபடி அருளில் நிறுத்தி மலங்களைப் போக்குவன், இது நிலை ஆர் சுத்தம்– இது நிலைபெற்ற சுத்தாவத்தையாம், கேடு இல் புகழ் தரும் சரியை கிரியாயோகக் கேண்மையரேல்– கேடில்லாத புகழைத் தருகின்ற சரியை கிரியாயோக சம்பந்தமுள்ளவர்களாயின், இவை உணர்த்தக் கிளக்கும் நூல்– மந்ததரம் முதலிய இந்நான்கு பாதங்களின் முறைமையையும் அவர்களுக்கு அறிவிக்கச் சொல்லும் ஆகமம்.

உண்மை முத்தி

50. அரிவையரின் புறுமுத்தி கத்த மைந்து
மறுமுத்தி திரிகுணமு மடங்கு முத்தி
விரவுவினை கெடுமுத்தி மலம்போ முத்தி
விக்கிரக நித்தமுத்தி விவேக முத்தி
பரவுமுயிர் கெடுமுத்தி சித்தி முத்தி
பாடாண முத்தியினை பழிசேர் முத்தி
திரிமலமு மகலவுயி ரருள்சேர் முத்தி
திகழ்முத்தி யிதுமுத்தித் திறந்த தாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை:– அரிவையர் இன்பு உறும் முத்தி– மகளிரின்பத்தை அனுபவிப்பதே முத்தி என்னும் உலோகாயதன் முத்தியும், கத்தம் ஐந்தும் அறும் முத்தி– உருவமாதி ஐந்து கத்தங்களும் அறுவதே முத்தி என்னும் (பௌத்தரிற்) சௌத்திராந்திகன் முத்தியும், திரிகுணமும் அடங்கும் முத்தி– மூவகைக் குணங்களும் அடங்குவதே முத்தி என்னும் (ஆருகதரில்) நிகண்டவாதி முத்தியும், விரவு வினை கெடும் முத்தி– பொருந்திய கன்மங் கெடுவதே முத்தி என்னும் பிரபாகரன் முத்தியும், மலம போம் முத்தி– ஆணவமலம் கெடுவதே முத்தி என்னும் பேதவாதிகள் முத்தியும், விக்கிரகம் நித்தம் முத்தி– சரீரம் நித்தியமாயிருப்பதே முத்தி என்னும் உருவசிவசமவாதிகள் முத்தியும், விவேகம்முத்தி– பிரகிருதியையும் புருடனையும் விவேகித்தறிவதே முத்தி என்னும் சாங்கியன் முத்தியும், பரவும் உயிர்கெடும் முத்தி– வியாபித்திருக்கின்ற ஆன்மாக் கெடுவதே முத்தி என்னும் பாற்கரியன் முத்தியும், சித்தி முத்தி– அட்டசித்திகளே முத்தி என்னும் சித்தர் முத்தியும், பாடாணம் முத்தி– உயிர் கல்லுப்போற் கிடப்பதே முத்தி என்னும் பாடாணவாதி முத்தியும், இவை– ஆகிய இவை பத்தும், பழிசேர் முத்தி– குற்றத்தையுடைய முத்திகளாம், திரிமலமும் அகல உயிர் அருள் சேர் முத்தி திகழ் முத்தி– மும்மலமும் விட்டு நீங்க ஆன்ம சிவத்தினது திருவருளைச் சேர்கின்ற முத்தியே நிலைபெற்று விளங்கும் முத்தியாம், இது முத்தித் திறத்ததாம்– இதுவே முத்திகளுட் சிறந்ததாம்.

## உண்மையதிகாரம்

இவ்வதிகாரத்தில் உணர்த்தப்படும் விஷயங்கள்

51. இங்கினை பொது வியம்பு மென்பர்க னிதன்மே லரன்மாத்
தங்கிய வஞ்ச வத்தை தன்னுண்மை யுணர்த்துந் தன்மை
பொங்கொலி ஞான வாய்மை யதன்பயன் புனித னாமம்
அங்கதி லணைந்தோர் தன்மை யறைகுவ னருளி னாலே.

பதவுரை:– இங்கு இவை பொது இயம்பும் என்பர்கள்– இங்ஙனம் கூறப்பட்ட ஐம்பது செய்யுள்களும் பதி பசு பாசங்களின் பொதுவிலக்கணத்தைச் சொல்லும் என்பர் அறிவுடையோர், இதன்மேல்– இதற்கு மேல் உண்மை என்று வகுக்கப்படும் ஐம்பது செய்யுள்களினாலும், ஆன்மா (உண்மை)– ஆன்மவிலக்கணம், தங்கிய அஞ்சு அவத்தை தன் உண்மை– அவ்வான்மாப் பொருந்திய ஐந்தவத்தைகளின் இலக்கணம், உணர்த்துந் தன்மை– சிவன் கலையாதி தத்துவங்களைச் சுட்டி ஆன்மாவுக்கு அறிவை உணர்த்தும் தன்மை, பொங்கு ஒளி ஞான வாய்மை– பேரொளியாயிருக்கும் சிவஞானத்தின் உண்மை, அதன் பயன்– அச் சிவஞானத்தாலுண்டாகிய ஆன்மதரிசனம் ஆன்மசுத்தி ஆன்மலாபம் என்னும் இவைகளின் இயல்பு, புனிதன்நாமம்– நின்மலனுடைய திருநாமமாகிய ஐந்தெழுத்தின் இயல்பு, அங்கு அதில் அணைந்தோர் தன்மை– அந்தச் சிவத்திலே அணைந்தவர்களின் இயல்பு என்னும் இவற்றை, அருளினாலே அறைகுவன்– அருள்வழி நின்று கூறுவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. ஆன்மவிலக்கணம்

### 1. ஆன்மா சகல கேவலப்படும் இயல்பினது

52. செறிந்திடு முடலுண் மன்னிச் சேர்புலன் வாயில் பற்றி
அறிந்ததி லழுந்து மொன்று மறிந்திடா தறியுந் தன்மை
பிறிந்தடை யஞ்ச வத்தை பெருகிய மலத்தாற் பேணி
உறுந்தனி யதீத முண்மை யுயிர்க்கென வுணர்த்து மன்றே.

பதவுரை:- செறிந்திடும் உடலுள் மன்னி- ஆன்மாவானது கன்மத்துக்கீடாகப் பொருந்திய தூலசரீரத்திலே இலாடத்தானத்திலே பொருந்திநின்று, சேர்புலன் வாயில் பற்றி அறிந்து அதில் அழுந்தும்- கன்மத்துக்கீடாக வரும் சத்தாதி விடயபோகங்களை இந்திரியங்கள் வழியாக அறிந்து பற்றி அவ்விடயபோகங்களில் அழுந்தி அநுபவிக்கும், ஒன்றும் அறிந்திடாது- அங்ஙனம் அநுபவிக்கும் தன்னையும் அநுபவிக்குமாறு செலுத்தி நிற்கும் திருவருளையும் அறியமாட்டாது, அறியும் தன்மை பிறிந்து அடை அஞ்சு அவத்தை- அவ்வாறு அறியுந் தன்மையினீங்கி வருகின்ற ஐந்தவத்தையை, பெருகிய மனத்தால் பேணி- மிகுத்த ஆணவமலத்தின் செயலாற் பொருந்தி, தனி அதீதம் உறும்- தனியே துரியாதீத நிலையை அடையும், உண்மை உயிர்க்கு என உணர்த்தும்- இங்ஙனம் சகல கேவலப்படுதல் ஆன்மாவுக்கு இயல்பென்று ஆகமங்கள் சொல்லும்.

### 2. ஆன்மா அறிவிக்க அறியும் இயல்புடையது

53. உருவுணர் விலாமை யானு மோரொரு புலன்க ளாக
மருவிநின் றறித லானு மனாதிக டம்மின் மன்னித்
தருபய னுகர்த லானு முயிர்சட மாத லானும்
அருவினை யுடலு ளாவி யறிவினா லறியு மன்றே.

பதவுரை:- உரு உணர்வு இலாமையானும்- உடம்பே அறியுமெனில், அது அறிவில்லாத சடப்பொருளாயிருத்தலானும், ஒரொரு புலன்களாக மருவி நின்று அறிதலானும்- ஐம்பொறிகளே அறியுமெனின், அவை விடயங்களை நுகருமிடத்து ஒவ்வொரு இந்திரியம் ஒவ்வொரு விடயமாகப் பொருந்திநின்று அறிதலாலும், மனாதிகள் தம்மின் மன்னித் தருபயன் நுகர்தலானும்- மனம் முதலிய அந்தக்கரணங்கள் அறியுமெனின், அவையெல்லாம் சேர்ந்து இந்திரியங்கள் வாயிலாக வரும் விடயங்களைப் புசிக்கையாலும், உயிர் சட மாதலானும்- பிராணவாயு அறியுமெனின், அது சடப்பொருளாயிருத்தலாலும், அருவினை உடலுள் ஆவி அறிவினால் அறியும்- நீங்குதற்கரிய வினைக்கீடாக எடுத்த தேகத்துள் நிலைபெற்று ஆன்மாவானது சிவன் அறிவிக்க அறியும்.

### ஆன்மா அறிவுடைப் பொருள்

54. அறிவெனில் வாயில் வேண்டாவன்றெனி லவைதா மென்னை
அறிவதை யுதவு மென்னி லதேசன மவைதா மெல்லாம்
அறிபவ னறியுந் தன்மை யருளுவ னென்னி லான்மா
அறிவில தாகு மீச னசேதனத் தளித்தி டானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை:- அறிவு எனில் வாயில் வேண்டா- ஆன்மாத் தானாக எவற்றையும் அறியுந் தன்மையுடையதெனில் இந்திரியங்கள் வேண்டுவதில்லை, அன்றெனில் அவைதாம் என்னை- ஆன்மா அறியுந்தன்மை இல்லாததெனில், அந்தன்மையுடைய ஆன்மாவுக்கு இந்திரியங்கள் எதன்பொருட்டு, அறிவதை உதவும் என்னில்- அவ்விந்திரியங்கள் ஆன்மாவுக்கு அறிவைக் கொடுக்குமெனில், அவைதாம் அசேதனம்- அவை சடமாதலால் அறிவைக் கொடுக்கமாட்டா, எல்லாம் அறிபவன் அறியும் தன்மை அருளுவன் என்னில்- எல்லாவற்றையும் அறிகின்ற பரமசிவன் ஆன்மாவுக்கு அறியுந் தன்மையைக் கொடுப்பாரெனில், ஆன்மா அறிவு இலதாகும்- ஆன்மா இயற்கையில் அறிவில்லாத சடப்பொருளாக வேண்டும், ஈசன் அசேதனத்து அறித்திடானே- பரமசிவன் அறிவில்லாத சடப்பொருளுக்கு அறிவைக் கொடுக்கமாட்டார்.

### ஆன்ம அறிவினாற் சுட்டி அறியப்பட்ட பொருளெல்லாம் அசத்து

55. **அறிவினா லறிந்த யாவு மசத்தா தலறிதி யென்றும்**
**அறிவினா லறியொ ணாதே லாவதொன்றின்மை தொன்மை**
**அறிவுதா னொன்றை முந்தி யதுவது வாகக் காணும்**
**அறிவுகா ணசத்து மற்ற தறிவினுக் கறியொ ணாதே.**

பதவுரை:- அறிவினால் அறிந்த யாவும் அசத்தாதல் அறிதி- ஆன்ம அறிவினால் அறியப்பட்ட சுட்டுப் பொருளெல்லாம் அசத்தாய் அழிந்து போவனவாம் என அறிவாயாக, என்றும் அறிவினால் அறிய ஒணாதேல்- எக்காலத்திலும் ஆன்ம அறிவினால் சிவம் அறியப்படாத பொருளாயின், ஆவது ஒன்று இன்மை- அதனால் ஆகத்தக்கது ஒன்றுமில்லையாம், தொன்மை அறிவுதான் ஒன்றைமுந்தி அதுவதுவாகக் காணும் அறிவுகாண்- பழைமையாகிய ஆன்ம அறிவானது ஒரு விடயத்தை இந்திரியங்களாலே முற்பட்டுப் பொருந்தி அதனதன் வண்ணமாய் நின்று சுட்டி அறியும் அறிவாகும், அசத்து- அவ்வறிவாலறிந்த விடயமே அசத்தாகும், மற்றது அறிவினுக்கு அறிய ஒணாது- சிவம் ஆன்ம அறிவினாற் சுட்டி அறியப்படாதது.

### 3. ஆன்மா சத்தையும் அசத்தையும் அறியும் இயல்பினது

56. **எவ்வறி வசத்த றிந்த தெனிலுயி ரறியா தீசன்**
**அவ்வறி வறியா னல்ல தசேதன மறியா தாவி**
**செவ்விய கருவி கூடிற் றெரிவுறா தருளிற் சேரா**
**துவ்விரு வகைய தென்னி லொளியிரு ளொருங்கு றாவே.**

பதவுரை:- அசத்து அறிந்தது எவ்வறிவு எனில்- அந்த அசத்தை அசத்தென்றறிந்தது எந்த அறிவு எனில், உயிர் அறியாது- அறிவித்தாலன்றி அறியமாட்டாத உயிரானது தானாக அசத்தை அசத்தென்று அறியமாட்டாது, ஈசன் அவ்வறிவு அறியான்- முற்றறிவுடைய ஈசன் அதனைச் சுட்டி அறியான், அல்லது அசேதனம் அறியாது- மற்றையதாகிய பாசம் சடமாதலால் அதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியமாட்டாது, ஆவி செவ்வியகருவிகூடின் தெரிவுஉறாது– உயிர் சிறந்த கருவிகளோடு கூடின் அறியுமெனில் தானாக அறியமாட்டாத உயிரும் சடமாகிய கருவிகளுங் கூடின் அறியமாட்டா, அருளிற் சேராது– உயிர் அருளோடு கூடி அறியுமெனில், பெத்தநிலையில் உயிர் அருளோடு பொருந்தாது, ஆகையால் அந்நிலையில் உயிர் அறியமாட்டாது, உவ்விருவகையது என்னில்– அருளுங் கருவிகளுங் கூடி அறியுமெனில், ஒளி இருள் ஒருங்கு உறா– ஒளியும் இருளும் போல அவை இரண்டும் ஓரிடத்திற் கூடிநில்லா.

இதுவுமது

57. சத்திது வென்ற சத்துந் தானறி யாத சத்தைச்
சத்தறிந் தகல வேண்டா வசத்திது சத்தி தென்றோர்
சத்திரு ளொளிய லாக்கண் டன்மைய தாம சத்தைச்
சத்துட னின்று நீக்குந் தன்மையாற் சதசத் தாமே.

பதவுரை:– அசத்துத் தான் சத்து இது என்று அறியாது– அசத்தாகிய பாசம் அறிவில்லாத சடமாகையாற் சத்தாகிய சிவத்தை இது சத்தென்று அறியமாட்டாது, அசத்தைச் சத்து அறிந்து அகல வேண்டா– சத்தாகிய சிவம் வியாபக அறிவாதலான் அசத்தாகிய பாசத்தைப் பகுத்தறிந்து நீங்கவேண்டிதில்லை, ஆதலால், அசத்து இது சத்து இது என்று ஓர் சத்து– அசத்தாகிய பாசம் இது என்றும் சத்தாகிய சிவம் இது என்றும் அறிகின்ற ஆன்மாவானது, இருள் ஒளி அலாக்கண் தன்மையதாம்– இருளோடு கூடிய வழி இருளாகாமலும் ஒளியோடு கூடிய வழி ஒளியாகாமலும் இவ்விரண்டின் வேறாய் நிற்குங் கண்ணின் தன்மையை ஒத்ததாம், அசத்தைச் சத்துடன் நின்று நீக்குந் தன்மையால் சதசத்தாம்– அசத்தாகிய பாசத்தைச் சத்தாகிய சிவத்தோடு கூடிநின்று நீக்குமியல்பாற் சதசத்து எனப்படும்.

மேலதனை உவமை முகத்தால் விளக்கல்

58. கண்ணொளி விளக்க ளித்துக்காட்டிடு மென்னின் முன்னாங்
கண்ணொளி யொன்றுமின்றாம் விளக்கொளி கலந்த வற்றைக்
கண்ணொளி யகல நின்றே கண்டிடும் வேறு காணா
கண்ணொளி விளக்கின் சோதி கலந்திடுங் கருத்தொன்றன்றே.

பதவுரை:– கண் ஒளி விளக்கு அளித்துக் காட்டிடும் என்னின்– கண்ணுக்கு ஒளியை விளக்குக் கொடுத்துப் பொருள்களைக் காட்டுமென்று சொல்லின், முன்னம் கண் ஒளி ஒன்றும் இன்றாம்– விளக்குக் காட்டுவதற்கு முன்பு கண்ணுக்கு ஓர் ஒளியும் இல்லை என்று முடியும், விளக்கு ஒளி கலந்தவற்றைக் கண் ஒளி அகலநின்றே கண்டிடும்– விளக்கொளி கலந்த பொருள்களைக் கண்ணின் ஒளியானது வேறாக நின்றே காணும், வேறு காணா– இப்படி வேறாக நின்று காண்கையிலும் விளக்கொளியோடு கூடிக் காண்பதொழியக் கண்ணொளி தனித்து நின்று காணமாட்டாது, கண் ஒளி விளக்கின் சோதி கலந்திடும்– கண்ணொளி விளக்கொளியோடு கலந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கும், கருத்து ஒன்று அன்று– அவ்வாறு கலந்துநிற்பினும் கருதுமிடத்து அவை ஒன்றல்ல, பொருள் வேறுபாட்டால் இரண்டாம்.

4. ஆன்மா சார்ந்ததன் வண்ணமாய் அறியும் இயல்பினது

59. ஓரிடத் திருத்தன் மாயா வுருநிறைந் திடுக லொன்றாம்
பேரிடத் துறைத றானே பிறங்கறி வாகி நிற்றல்
சோர்வுடைச் சடநிகழ்த்த லெனுமிவை சொல்லார்நல்லோர்
ஓரிடத் துணரு முண்மை யொளிதரு முபலம் போலும்.

பதவுரை:– ஓர் இடத்து இருத்தல்– ஆன்மா தேகத்திலே ஓரிடத்திருந்து அறிதலும், மாயா உரு நிறைந்திடுதல்– மாயா காரியமான தேகத்திலே நிறைந்து நின்று அறிதலும், ஒன்றாம் பேரிடத்து உறைதல்– எவ்விடத்தும் பூரணமாய் நின்றறிதலும், தானே பிறங்கு அறிவாகி நிற்றல்– ஒரு கருத்தா அறிவியாமல் தானே விளங்குகின்ற அறிவாய் நின்றறிதலும், சோர்வுடைச்சடம் நிகழ்த்தல்– அறிவில்லாத சடப்பொருள்களாகிய மனம் முதலிய கருவிகள் அறிவைக் கொடுக்க அறிதலும், எனும் இவை நல்லோர் சொல்லார்– என்னும் இக்கொள்கைகளை நல்லோராகிய சைவசித்தாந்திகள் சொல்லார்கள், உணரும் உண்மை ஓரிடத்து– ஆன்மா அறியுந் தன்மையை விசாரிக்குமிடத்து, ஒளிதரும் உபலம் போலும்– ஒளி தரும் படிகக் கற்போலச் சார்ந்ததன் வண்ணமாய் நின்றறியும்.

## 2. ஐந்தவத்தையினிலக்கணம்

1. காரியகேவலம்

60. எண்ணவொன் றிலாத தீத மெய்திய துரியத் தொன்று
நண்ணிடுஞ் சுழுத்தி தன்னி னயந்துள தொன்று பின்னும்
அண்ணிடுங் கனவு தன்னி லாறேழாஞ் சாக்கி ரத்தின்
கண்ணுறு மஞ்சா றாய கருவிகண் மருவுந் தானே.

பதவுரை:– அதீதம் எண்ண ஒன்றிலாவது– துரியாதீதத்திலே எண்ணுதற்கு ஒரு கருவியுமின்றிப் புருடன் மாத்திரமிருக்கும், எய்திய துரியத்து ஒன்று நண்ணிடும்– அதன் பின் பொருந்திய துரியத்திற் பிராணவாயு என்னும் ஒரு கருவி பொருந்தும், சுழுத்தி தன்னின் நயந்து உளது ஒன்று– சுழுத்தியிலே விரும்பியிருப்பது சித்தம் என்னும் ஒரு கருவியாம், கனவு தன்னில் ஆறு ஏழாம்– சொப்பனத்திலே சத்தாதி ஐந்தும் வசனாதி ஐந்தும் மனம் புத்தி அகங்காரம் மூன்றுமாகிய பதின்மூன்று கருவிகளும் பொருந்தும், பின்னும் அண்ணிடும்– இவையன்றி எஞ்சிய ஒன்பது வாயுக்களும் பொருந்தும், சாக்கிரத்தின் கண் அஞ்சு ஆறு ஆய உறும்– சாக்கிரத்தில் ஞானேந்திரியங்கள் ஐந்தும் கன்மேந்திரியங்கள் ஐந்தும் பொருந்தும், கருவிகள் மருவுந்தானே– இங்ஙனம் கருவிகள் புருடனைப் பொருந்தித் தொழிற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2. காரியாசகலமும் காரியசுத்தமும்

61. இவ்வகை யவத்தை தன்னி லெய்திடுங் கரண மெல்லா
மெய்வகை யிடத்தி லுற்று மேவுமா கண்டு மிக்க
பொய்வகைப் பவம கற்றப் புரிந்திடி லருளா லாங்கே
ஐவகை யவத்தை யுய்க்கு மறிவினா லறிந்து கொள்ளே.

பதவுரை:- இவ்வகை அவத்தை தன்னில் எய்திடும் கரணம் எல்லாம்- இந்த ஐந்து வகையான அவத்தைகளிற் பொருந்துகின்ற கருவிகள் யாவும், மெய்வகை இடத்தில் உற்று மேவுகண்டு- சரீரத்தின் கூறுபாடான இலலாடத்தானத்திலே ஐந்தவத்தையும் அடைந்து விடயங்களைக் கிரகிக்கும் முறைமையினை நீ அறிந்து, மிக்க பொய் வகைப் பவம் அகற்றப் புரிந்திடில்- மிகவும் பொய்யான இந்த விடயத் தோற்றரவுகளை ஒழிக்கும்படி ஞானாசாரியர் அருளிய முறையிற் சாதனை செய்யின், அருளால் ஆங்கே ஐவகை அவத்தை உய்க்கும்- திருவருளின் உபகாரத்தால் அவ்விடத்திலே நின்மல சாக்கிரம் முதலிய சுத்தாவத்தைகள் ஐந்தும் செலுத்தப்படும், அறிவினால் அறிந்துகொள்- இவற்றை ஞானாசாரியரது உபதேசத்தால் வரும் அநுபவ அறிவால் அறிக.

### 3. காரணாவத்தைகளின் இயல்பு

62. நீக்கமி லதீத மாசு நிறைந்தகே வலமா நீர்மை
சாக்கிரங் கலாதி சேர்ந்த சகலமாந் தன்மை யாகும்
ஊக்கமி லிரண்டும் கூடா தொழியவோர் நிலையி னீடுஞ்
சாக்கிரா தீதஞ் சுத்தத் தகைமைய தாகுந் தானே.

பதவுரை:- நீக்கமில் அதீதம்- காரியகேவலத்திற் கருவிகள் சுழன்று அஞ்ஞானம் நீங்காத துரியாதீதமானது, மாசுநிறைந்த கேவலமாம் நீர்மை- ஆணவமலம் நிறைந்திருக்கின்ற காரண கேவலத்தின் தன்மையை ஒக்கும், சாக்கிரம்- காரிய சகலத்திற் சாக்கிரமானது, கலாதி சேர்ந்த சகலமாம் தன்மையாகும்- கலையாதி தத்துவங்கள் சேர்ந்து தொழிற்படும் காரண சகலத்தின் தன்மையாயிருக்கும், ஊக்கம் இல் இரண்டும் கூடாது ஒழிய ஓர் நிலையில் நீடும் சாக்கிராதீதம்- மயக்க விகற்பங்களைச் செய்கின்ற கேவல சகலம் என்னும் இரண்டும் வலிகெட்டுத் தாக்காதுவிட ஒப்பற்ற அருள் நிலையில் நிலைபெற்றிருக்குஞ் சாக்கிரா தீதமானது, சுத்தத் தகைமையது ஆகும்- பரமுத்தியானது காரண சுத்தாவத்தையின் தன்மையதாகும்.

## 3. உணர்த்துந் தன்மை

### 1. ஆன்மா விடயங்களை அறியும் முறைமை

63. மருவிய பொறியி லொன்று மாபூத மைந்தி லொன்றுங்
கருவிக ணான்கு நீங்காக் கலாதிக ளைந்துங் கூடி
ஒருபுல னுகரு மிந்த வொழுங்கொழிந் துயிருமொன்றைத்
தெரிவுறா தவனொ ழிந்தத் திரள்களுஞ் செயலி லாவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை:- மருவிய பொறியில் ஒன்றும்- தத்தமக்கான விடயங்களைப் பொருந்திய ஐம்பொறிகளில் ஒன்றும், மாபூதம் ஐந்தில் ஒன்றும்- பெரிய பூதங்கள் ஐந்தில் ஒன்றும், கருவிகள் நான்கும்- அந்தக்கரணங்கள் நான்கும், நீங்காத கலாதிகள் ஐந்தும் கூடி-விட்டு நீங்காத கலாதிகள் ஐந்தும் ஆகிய பதினொரு தத்துவங்களையுங்கூடி, ஒரு புலன் நுகரும்- ஆன்மா ஒரு விடயத்தைப் புசிக்கும், இந்த ஒழுங்கு ஒழிந்து உயிரும் ஒன்றைத் தெரிவுறாது- இந்த முறையை விட்டு ஆன்மாவும் ஒன்றை அறியமாட்டாது, அவன் ஒழிந்து அத்திரள்களும் செயல் இலாவே- அவ்வான்மையை ஒழிந்து அந்தத் தத்துவங்களும் தொழிற்படுவனவல்ல.

2. சிவன் அறிவிக்க ஆன்மா அறிதல்

64. தனக்கென வறிவி லாதான் றானிவை யறிந்து சாரான்
தனக்கென வறிவி லாத வாயிறா னறியா சாரத்
தனக்கென வறிவி லாதான் றத்துவ வன்ன ரூபன்
தனக்கென வறிவா னாலிச் சகலமு நுகருந் தானே.

பதவுரை:- தனக்கு என அறிவு இலாதான் தான் இவை அறிந்து சாரான்- தானாக அறிய இயலாத ஆன்மா தானே இந்தத் தத்துவங்களை அறிந்து கூடமாட்டாது, தனக்கு என அறிவு இலாத வாயில்தான் சார அறியா- தமக்கென ஓர் அறிவுமில்லாத சடமான இந்திரியம் முதலியவைகளும் தாமாக ஆன்மாவைக் கூட அறியா, தனக்கு என அறிவு இலாதான் தத்துவ வன்ன ரூபன்- தானாக அறிய இயலாத ஆன்மா தத்துவங்களின் சொரூபமே தன் சொரூபமாகக் கொண்டு நிற்பவன், தனக்கு என அறிவானால் இச்சகலமும் நுகரும்தானே- ஆதலால் தானாக அறியும் இயல்புடைய சிவன் அக்கருவிகளைக் கூட்ட அவன் செயலால் அக்கருவிகளோடு கூடிநின்று எல்லாவற்றையும் புசிப்பன்.

பிறர்கொள்கைகளை மறுத்தல்

65. கண்டறி புலன்கள் காணுங் கருத்தினா லொருத்தன் ஞானம்
கொண்டுள மறியு மென்னிற் கொள்பவன் முதலி யாகும்
மண்டிய வுணர்வு யிர்க்கா மன்னிநின் றறியு மென்னில்
உண்டிட வேண்டு வானுக் கொருவன்வே றுண்ட லாமே.

பதவுரை:- கண்டு அறிபுலன்கள் கருத்தினால் காணும்- இந்திரியங்கள் வாயிலாகக் கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் அறியப்படும் ஐவகை விடயங்களையும் ஆன்மா மனத்தைத் துணையாகக் கொண்டு அறியும் அதுபோல, ஒருத்தன் ஞானம் கொண்டு உளம் அறியும் என்னில்- ஒப்பற்ற சிவனுடைய ஞானத்தைத் துணையாகக் கொண்டு ஆன்மா விடயங்களை அறியும் என்னில், கொள்பவன் முதலியாகும்- இப்படி அறிந்துகொள்ளும் ஆன்மாவே கருத்தாவாவன் என்னுங் குற்றமாம், மண்டிய உணர்வு உயிர்க்கா மன்னிநின்று அறியும் என்னில்- சிவனுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரண ஞானமானது ஆன்மாவிற் பொருந்தி நின்று ஆன்மாவுக்காக அறியும் என்னில், உண்டிட வேண்டுவானுக்கு வேறு ஒருவன் உண்டலாம்- பசியாலுண்ண விரும்பின ஒருவனுக்கா வேறொருவன் உண்ணல் போலாம், ஆதலால், அதுவுங் குற்றமாம்.

அறிவிக்க அறியும் வகையை உவமை முகத்தால் விளக்குதல்

66. **இருணனி யிரவி தான்வந் திரித்தலு மிரவி லெண்ணும்**
**பொருணிலை கண்டு மாந்தர் பொருந்திடு மாறு போல**
**மருணிலை யெங்கு நீங்க மகிழ்ந்துயிர் தன்னுண் மன்னும்**
**அருளையு மொழிய ஞாலத் தறிந்தவா றறியு மன்றே.**

பதவுரை:- இரவிதான் வந்து இருள் நனி இரித்தலும்- ஆதித்தன் வந்து இருளை மிகவும் நீக்கியபொழுது, இரவில் எண்ணும் பொருள்நிலை கண்டு மாந்தர் பொருந்திடுமாறு போல- அவ்விராக் காலத்திற் காணவேண்டுமென எண்ணியிருந்த பொருள்களின் நிலையைக் கண்டு மாநுடர் அவற்றை அடையுமாறுபோல, மருள்நிலை எங்கும் நீங்க உயிர் மகிழ்ந்து- கலையாதி கருவிகளாற் கேவலநிலை முற்றும் நீங்கிய பொழுது ஆன்மா விடயங்களைக் கண்டு மகிழ்வுற்று, தன்னுள் மன்னும் அருளையும் ஒழிய- தன்னுள்ளே நிலைபெற்றிருக்கும் திருவருளின் உபகாரத்தையும் மறந்து, ஞாலத்து அறிந்தவாறு அறியும்- பூமியின் கண் மாநுடர் அறிந்தாற்போல தானாகவே தன்செயலால் அறிந்ததாக் கருதி அறியும்.

இதுவுமது

67. **அறிந்திடு மனாதி வாயி லானவை யவன்ற னாலே**
**அறிந்திடு மென்றுமொன்று மறிந்திடா வவைபோலியாவும்**
**அறிந்திடு மறியுந் தன்மை யறிந்திடா கன்மத் தொன்மை**
**அறிந்தவை நுகரு மாறு மருளுவ னமலன் றானே.**

பதவுரை:- அறிந்திடும் மனாதிவாயிலானவை அவன்றனாலே என்றும் அறிந்திடும்- விடயங்களை அறிகின்ற மனம் முதலிய அந்தக்கரணங்களும் இந்திரியங்களுமானவைகள் ஆன்மாவினாலே அவ்விடயங்களை எப்பொழுதும் அறியும், ஒன்றும் அறிந்திடா- அப்படி ஆன்மாவினால் அறிகிறோமென்பதை அவற்றிலொன்றும் அறியமாட்டா, அவைபோல் யாவும் அறிந்திடும்- அக்கரணங்களையும் இந்திரியங்களையும் போல ஆன்மாக்களும் சிவனால் யாவற்றையும் அறிந்திடும், அறியுந் தன்மை அறிந்திடா- அப்படிச் சிவனால் அறிகின்றோமென்னுந் தன்மையை அறியமாட்டா, கன்மத்தொன்மை அறிந்து அவை நுகருமாறும் அருளுவன் அமலன் தானே- முன்செய்த வினைப்பகுதிகளை அறிந்து கருவிகளைக் கூட்டி அவ்வினைப்பயன்களை அநுபவிக்கும்படியுஞ் செய்வர் நின்மலராகிய சிவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. ஞானவாய்மை

### 1. ஞானம் வரும் முறை

68. காட்டிடுங் கரண மொன்று மில்லையேற் காணொ ணாதாம்
நாட்டிய விவற்றான் ஞான நணுகவு மொண்ணா முன்னம்
ஈட்டிய தவத்தி னாலே யிறையரு ளுருவாய் வந்து
கூட்டிடு மிவற்றை நீக்கிக் குரைகழல் குறுகு மாறே.

பதவுரை:- காட்டிடும் கரணம் ஒன்றும் இல்லையேல் காண ஒணாதாம்- காட்டும் அறிகருவிகளாகிய கரணங்கள் ஒன்றுமில்லையாயின் ஆன்மாவால் ஒன்றையும் அறியவொண்ணாதாம், நாட்டிய இவற்றால் ஞானம் நணுகவும் ஒண்ணா- இங்கே சொன்ன இக்கருவிகளாலே உண்மை ஞானத்தை அடையவும் இயலாது, முன்னம் ஈட்டிய தவத்தினாலே இறை அருள் உருவாய் வந்து- முற்சென்மங்களிலே செய்த சரியை கிரியா யோகங்களின் பயனால் இருவினையொப்பும் சத்திநிபாதமும் வர அதுவரையில் உண்ணின்றுணர்த்திய பரமசிவன் திருவருளே திருமேனியாகக் கொண்டு குருமூர்த்தியாய் எழுந்தருளிவந்து, இவற்றை நீக்கி- தீக்கை செய்து இக்கருவிகளை நீக்கி, குரைகழல் குறுகுமாறு- பரமசிவனது திருவடியை அடையும்படி, கூட்டிடும்- ஞானம் பற்றச் செய்தருளுவர்.

### 2. ஞானத்தினியல்பு

69. பன்னிறங் கவருந் தொன்மைப் படிகநீ டொளியும் பன்மை
மன்னிலங் கியல்புந் தந்த வளரொளி போல வையத்
தன்னகம் பயிலு நற்சிற் சடங்களின் றன்மை தாவா
நன்னலம் பெறநி றைந்த ஞானமே ஞான மென்பர்.

பதவுரை:- பல்நிறம் கவரும் தொன்மைப் படிகம் நீடு ஒளியும் பன்மை மன் இலங்கு இயல்பும் தந்த வளர் ஒளி போலவும் பல நிறங்களையுங் கவருகின்ற பழைய பளிங்குக்கு மிக்க ஒளியையும் பல நிறங்கள் பொருந்தி விளங்குந் தன்மையையுங் கொடுத்த ஆதித்தனது பேரொளிபோல, வையம் தன் அகம் பயிலும் நற்சித் சடங்களின் தன்மை தாவா நல் நலம் பெற நிறைந்த ஞானமே ஞானம் என்பர்- பூமியினிடத்துப் பொருந்திக் காரியப்படும் நல்ல சித்தும் சடமுமாகிய பொருள்களின் தன்மைகளைத் தான் பொருந்தாது நல்ல பயனைப் பெறுமாறு எங்கும் பரிபூரணமாய் நிறைந்த சிவஞானமே உண்மைஞானம் என்று சொல்வர் பெரியோர்.

### இதுவுமது

70. மாயைமா மாயை மாயா வருமிரு வினையின் வாய்மை
யாயவா ருயிரின் மேவு மருளினி லிருளாய் நிற்கும்
மாயைமா மாயை மாயா வருமிரு வினையின் வாய்மை
யாயவா ருயிரின் மேவு மருளினி லொளியாய் நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை:– மாயை மாமாயை– அசுத்தமாயையும் சுத்தமாயையும், மாயாவரும் இருவினையின்– ஒழியாமல் வரும் புண்ணிய பாவங்களுமாகிய இவற்றின், வாய்மை ஆய– உண்மையேயாய் நின்று (போகங்களை அனுபவிக்கும்), ஆர் உயரின் மேவும்– அரிய உயிரினிடத்திலே பொருந்திய, மருளினால்– மருள் நிலையில், இருளாய் நிற்கும்– அந்த ஞானம் வெளிப்படாது மறைந்து நிற்கும், மாயை மாமாயை– அசுத்தமாயையும் சுத்தமாயையும், மாயாவரும் இருவினையின்– ஒழியாமல் வரும் புண்ணிய பாவங்களுமாகிய இவற்றின், வாய்மை ஆய– உண்மையை அறிந்து (அவற்றினீங்கி நிற்கும்)– ஆர் உயிரின் மேவும்– அரிய உயிரினிடத்திலே பொருந்திய, அருளினில்– அருள் நிலையில், ஒளியாய் நிற்கும்– அந்த ஞானம் வெளிப்பட்டுப் பிரகாசமாய் நிற்கும்.

## 5. ஞானத்தால் வரும் பயன்

பயன் வகுத்துக் கூறல்

71. தேசுற மருவு மான்ம தெரிசன மான்ம சுத்தி
ஆசிலா வான்ம லாப மாகமூன் றாகு மூன்றும்
பாசம தகல ஞானம் பற்றறான் பணியை நீத்தல்
ஏசினே யத்த முந்த லெனமிவற் றடங்கு மன்றே.

பதவுரை:– தேசு உற மருவும் ஆன்ம தெரிசனம் ஆன்மசுத்தி ஆக இலா ஆன்மலாபம் ஆக மூன்றாம்– ஞானத்தை அடைதலினால் வரும் பயன் விளக்கம் மிகப் பொருந்திய ஆன்ம தரிசனம், ஆன்மசுத்தி, குற்றமற்ற ஆன்மலாபம் என மூன்றாம், மூன்றும்– இந்த மூன்றும், பாசம் அது அகல ஞானம் பற்றல்– பாசமானது நீங்க ஞானத்தைத் தரிசித்தல், தான் பணியை நீத்தல்– தன் செயலை விடுத்தல், ஏசில் நேயத்து அழுந்தல்– குற்றமற்ற ஞேயத்தழுந்துதல், எனும் இவற்று அடங்கும்– என்று சொல்லப்பட்ட இம் மூன்றனுள்ளும் அடங்கும்.

### 1. ஆன்மதரிசனம்

ஞான தரிசனத்தில் ஆன்ம தரிசனமும் தத்துவசுத்தியும் நிகழ்தல்

72. தன்னறி வதனா லேதுந் தனக்கறி வில்லை யேனுந்
தன்னறி வாக வெல்லாந் தனித்னி பயன ருந்தும்
தன்னறி வறியுந் தன்மை தன்னாலே தனைய றிந்தால்
தன்னையுந் தானே காணுந் தானது வாகி நின்றே.

பதவுரை:– தன் அறிவதனால் ஏதும் அறிவு தனக்கு இல்லை ஏனும்– ஆன்மாத் தன்னுடைய இயற்கை அறிவினால் எதனையும் அறியும் இயல்பு தனக்கு இல்லையாயினும், தன் அறிவாக– தன்னுடைய அறிவினாலே அறிந்து அனுபவிப்பவனாகக் கருதி, பயன் எல்லாம் தனித்தனி அருந்தும்– கருவிகள் வாயிலாக வரும் போகங்கள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவிக்கும், தன்னாலே தனை அறிந்தால்– சிவஞானத்தாலே அந்த ஞானத்தை அறிந்தால், தன் அறிவு அறியுந் தன்மை– தனது அறிவானது கருவிகளோடு கூடி நின்று விடயங்களை அறியும் முறைமையையும், தன்னையும்– ஆன்மாவாகிய தனது இயல்பையும், தான் அதுவாகி நின்று– தான் அந்தச் சிவஞானத்தோடு கூடி நின்று, தானே காணும்– அவ்வான்மாவே தரிசிக்கும்.

## 2. ஆன்மசுத்தி

### சிவதரிசனத்தில் ஆன்மசுத்தி நிகழுதல்

73. தத்துவ மான வற்றின் றன்மைக ளுணருங் காலை
உய்த்தறிந் திடவு திப்ப தொளிவளர் ஞான மாகும்
அத்தன்மை யறியு மாறு மகன்றிட வதுவா யான்மாச்
சுத்தமாஞ் சுத்த ஞானத் தொருமுத றோன்று மன்றே.

பதவுரை:– தத்துவமானவற்றின் தன்மைகள் உணரும் காலை– தத்துவங்களின் இயல்பை விசாரித்தறியும் பொழுது, உய்த்து அறிந்திட உதிப்பது– அவை தனக்கு அந்நியமான சடப்பொருளென்று ஆராய்ந்தறிந்திடத் தோன்றுவது, ஒளிவளர் ஞானம் ஆகும்– பிரகாசம் மிக்க சிவஞானமாம், அத்தன்மை அறியுமாறும் அகன்றிட– அப்படி அறிகின்ற சுட்டுப்போதமும் விட்டு நீங்க, அதுவாய் ஆன்மாச் சுத்தமாம்– அந்த ஞானமே தானாய் ஆன்மாச் சுத்தியை அடையும், சுத்த ஞானத்து ஒரு முதல் தோன்றும்– அப்பொழுதே அந்த நின்மலமாயுள்ள ஞானத்திற்கு முதலாகிய ஞேயம் தோன்றும்.

### ஞேயத்தைப் பற்றிய ஆசங்கையும் மறுப்பும்

74. உறைதரு முணர்வு மன்றி யதன்முத லுள்ள தென்றிங்
கறைவதென் னென்னி லண்ண லருளெனு மதுவே யன்றி
நிறையொளி முதல தன்றி நின்றிடா நிமல னாகும்
இறையவன் முதல வன்ற னிலங்கருள் சத்தி யாமே.

பதவுரை:– உறைதரும் உணர்வும் அன்றி அதன்முதல் உள்ளதென்று இங்கு அறைவது என் என்னில்– ஆன்மாவோடு பொருந்தியிருக்கும் ஞானமுமல்லாமல் அதற்கு முதலாகிய ஞேயமும் உண்டென்று இவ்விடத்துச் சொல்லுவதென்னையென்று கேட்கில், அதுவே அண்ணல் அருள் எனும்– அந்த ஞானமே முதல்வனுடைய அருள் என்று சொல்லப்படும், அன்றி– அன்றியும், நிறை ஒளி முதலது அன்றி நின்றிடா– நிறைந்த ஒளியானது அதன் முதலாகிய ஆதித்தனையொழிந்து நிற்கமாட்டாது அதுபோல ஞானமாகிய குணமும் குணியாகிய முதல்வனையன்றி நில்லாது, நிமலனாகும் இறையவன் முதல், இலங்கு அருள் அவன்றன் சத்தியாம்– நின்மலனாகிய சிவன் முதலாம்; அவனிடத்து விளங்கும் அருள் அவனுடைய சத்தியாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானமே ஞேயத்தைத் தரிசிப்பிக்கும்

75. **சுத்தமாஞ் சத்தி ஞானச் சுடராகுஞ் சிவமொ ழிந்தச்**
**சத்திதா னின்றா முன்னைத் தகவிலா மலங்கள் வாட்டி**
**அத்தனை யருளு மெங்கு மடைந்திடு மிருளகற்றி**
**வைத்திடு மிரவி காட்டும் வளரொளி போன்ம கீழ்ந்தே.**

பதவுரை:- சுத்தமாம் சத்தி ஞானச் சுடராகும்- நின்மலமாகிய அந்தச் சத்தி ஞானப்பிரகாசமாயிருக்கும், அச் சத்தி தான் சிவம் ஒழிந்து இன்றாம்- அதுதான் சிவத்தை யொழிந்து தனித்தொரு முதலாய் நிற்கமாட்டாது. எங்கும் அடைந்திடும் இருள் அகற்றி வைத்திடும் இரவி காட்டும் வளர் ஒளிபோல்- எங்குஞ் செறிந்திருக்கும் இருளை நீக்கி வைக்கின்ற சூரியனைக் காட்டும் மிக்க பிரகாசத்தைப் போல, முன்னைத் தகவு இலா மலங்கள் வாட்டி அத்தனை மகிழ்ந்து அருளும்- அந்தச் சத்தி ஆன்மாவை அநாதியிலே பந்தித்து நின்ற இழிந்த மும்மலங்களையும் போக்கி அவ்வான்மாவைச் சுத்தமாக்கித் தனக்கு முதலாகிய சிவனை அவ்வான்மாவுக்குக் கிருபையுடனே மகிழ்ந்து தரிசிப்பிக்கும்.

சிவசமவாதிகள் ஆசங்கை

76. **புகலரு மசத்தர் தம்பாற் பொருந்திய வலகை யேபோல்**
**அகிலமு முணரு மீச னருளுயிர் மேவ லாலே**
**சகலமு நிகழ வேண்டுந் தலைவனைத் தொழிலுந் தானே**
**இகலற வியற்றல் வேண்டு மென்றது நன்றி யின்றே.**

பதவுரை:- புகல் அரும் அசத்தர் தம்பால் பொருந்திய அலகையேபோல்- தமக்கென அறிவுஞ் செயலும் உண்டென்று சொல்லுதற்கரிய வலியில்லாதவரிடத்தே பொருந்திய பிசாசின் குணஞ் செயல்களெல்லாம் அவரிடத்து நிகழ்வதுபோல, அகிலமும் உணரும் ஈசன் அருள் உயிர் மேவலாலே- எல்லாவற்றையும் உணரும் சிவனுடைய அருள் ஆன்மாவிலே பொருந்துதலால், சகலமும் நிகழ வேண்டும்- சிவனுக்குரிய சர்வஞ்ஞத்துவம் முதலிய குணங்களெல்லாம் அந்த ஆன்மாவிலும் நிகழவேண்டும், தலைவன் ஐந்தொழிலும் தானே இகல் அற இயற்றல் வேண்டும்- முதல்வனுக்குரிய ஐந்தொழில்களை உயிரும மாறுபாடறச் செய்தல் வேண்டும், என்றது- என்று சொன்னது, நன்றி இன்று- நன்மையுடையதன்று.

சிவசமவாதிகள் ஆசங்கைக்கு விடை

77. **இன்றுநோக் குரைந டக்கு மியல்பிலோற் கினைய வாய்ந்து**
**நின்றதோ ரலகை சேர்ந்தா னிகழ்வதெ னதுபோலுள்ளத்**
**தொன்றிய வுணர்வு தம்பா லுள்ளது நிகழ்த்து மீசன்**
**தன்றொழி னடாத்து மேனி தனக்கெனக் கொண்டுதானே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை:- இன்று நோக்கு உரை நடக்கும் இயல்பு இலோற்கு- இப்போது பார்வையும் பேச்சும் நடக்குமியல்பும் இல்லாத ஒருவனிடத்திலே, இனைய வாய்ந்து நின்றதோர் அலகை சேர்ந்தால் நிகழ்வதென்- இவையெல்லாம் குறைவற்றுப் பொருந்திநிற்கும ஒரு பேய் சேர்ந்தால் அவனிடத்திலே உண்டாவது என்? அவன் கண் குருடு நீங்கி ஒன்றைப் பார்க்குமா? வாய் ஊமை நீங்கிப் பேசுமா? கால் முடம் நீங்கி நடக்குமா? இல்லை, ஆகையால், பேயின் தன்மை பிடியுண்டவனுக்கு உண்டாகாது; அவனிடத்துள்ளவைகளை விளக்கும், அதுபோல் உள்ளத்து ஒன்றிய உணர்வு தம்பால் உள்ளது நிகழ்த்தும்- அத்தன்மைபோல ஆன்மாவிடத்திலே பொருந்திய அருளும் அவ்வான்மாவிடத்திலுள்ளதையே விளங்கச் செய்யும், ஈசன் தனக்கென மேனி தனேகொண்டு தன்தொழில் நடாத்தும்- பரமசிவன் தமக்கென்று ஒரு திருமேனியைத் தாமே கொண்டு பஞ்சகிருத்தியத்தையும் நடத்துவர்.

### ஆன்மசுத்தியின் பயன்

78. இந்நிலை தன்னில் மன்னி யெய்திடுங் கலாதி போதந்
தன்னை வறிந்து நிற்குந் தகவிலா மலங்க ணீத்த
அந்நிலை காண மாகா வகையதி லறிவ டங்கி
மன்னிட வியாபி யாய வான்பயன் றோன்று மன்றே.

பதவுரை:- இந்நிலை தன்னில் மன்னி எய்திடும்- இச்சகலாவத்தையில் ஆன்மாவைப் பொருந்தித் தொழிற்படும், கலாதிபோதம் தன் அளவு அறிந்து- கலையாதி தத்துவங்களால் வரும் ஏகதேச அறிவின் இயல்பை உணர்ந்து, நிற்கும் தகவு இலா மலங்கள் நீத்த அந்நிலை- அவ்வேகதேச அறிவைச் செய்து நிற்கும் இழிந்த மலங்களை நீக்கிய அருள் நிலையில், கரணம் ஆகாவகை அதில் அறிவு அடங்கி- அம்மலங்களின் வாசனை தாக்காதபடி அந்த அருள் வியாபகத்துள்ளாக ஆன்மா அடங்கி, மன்னிட- அவ்விடத்துத் தோன்றும் சிவத்தில் நிலைபெற்று நிற்க, வியாபியாய வான்பயன் தோன்றும்- அதன் வியாபக அறிவாகிய மேலான பயன் தோன்றும்.

### ஐக்கயவாதிகள் ஆசங்கைக்கு விடை

79. அடைபவர் சிவமே யாகு மதுவன்றித் தோன்று மென்ற
கடனதே தென்னின் முன்னங் கண்டிடார் தம்மைப் பின்னுந்
தொடர்வரு மருளினாலுந் தோன்றுமா காணா ராயின்
உடையன னடிசேர் ஞான முணர்தலின் றணைத லின்றே.

பதவுரை:- அடைபவர் சிவமேஆகும் அதுவன்றித் தோன்றும் என்ற கடன் அது ஏதெனில்- அங்ஙனம் அருளை அடைபவர் சிவமாய் விடுதலேயன்றி அவ்விடத்து மற்றுமொரு பயன் தோன்றுமென்ற முறைமை ஏதென்னில், முன்னம் தம்மைக் கண்டிடார்- பெத்த நிலையில் ஆன்மாக்கள் மலமறைப்பினால் வியாபகமாகிய தமது சொரூபத்தை அறியாதிருந்தனர், பின்னும் தொடர்வு அரும் அருளினாலும் தோன்றுமா காணாராயின்- இச்சுத்த நிலையிலும் எய்தற்கரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளின் உபகாரத்தாலும் தமது வியாபக அறிவு விளங்கம்படி காணாராயின், உடையவன் அடிசேர் ஞானம் உணர்தல் இன்று அணைதல் இன்று- பரமசிவனது திருவடியாகிய சிவநந்தத்தைப் பெறுதற்கேதுவாகிய சிவஞானத்தை அறிதலும் இல்லை, அத்திருவடியைக் கூடுதலுமில்லையாம்.

சாக்கிராதீதம்

80. பொற்புறு கருவி யாவும் புணராமே யறிவி லாமைச்
சொற்பெறு மதீதம் வந்து தோன்றாமே தோன்றி நின்ற
சிற்பர மதனா லுள்ளச் செயலறுத் திடவு திக்குந்
தற்பர மாகி நிற்றல் சாக்கிரா தீதந் தானே.

பதவுரை:- பொற்பு உறு கருவியாவும் புணராமே- பொலிவினையுடைய கருவிகள் முப்பத்தாறும் பொருந்தி விகற்பியாமலும், அறிவிலாமைச் சொல்பெறும் அதீதம் வந்து தோன்றாமே- அறியாமை என்னும் சொல்லைப் பெறும் கேவலம் வந்து மூடி மயங்காமலும், தோன்றிநின்ற சிற்பரம் அதனால்- தன்னிடத்தே தோன்றி நின்ற மேலான ஞானசத்தியின் அனுக்கிரகத்தால், உள்ளச்செயல் அறுத்திட- தற்போதச் சேட்டையை ஒழித்து நிற்க, உதிக்கும் தற்பரமாகி நிற்றல்- அப்பொழுது தோன்றும் சிவத்தோடு ஏகனாகி நிற்றல், சாக்கிராதீதம்- சாக்கிராதீதமாம்.

கருவிகளை ஒடுக்குதற்கு உபாயம்

81. ஒடுங்கிடா கரணந் தானே யொடுங்குமா றுணர்ந்தொ டுக்க
ஒடுங்கிடு மென்னி னின்ற தொடுங்கிடா கரண மெல்லாம்
ஒடுங்கிட வொடுங்க வுள்ள வுணர்வுதா னொழியும் வேறாய்
ஒடுங்கிடி னன்றி மற்ற வுண்மையை யுணரொ ணாதே.

பதவுரை:- காரணம் தானே ஒடுங்கிடா- கருவிகள் தாமாகவே ஒடுங்கமாட்டா, ஒடுங்குமாறு உணர்ந்து ஒடுக்க ஒடுங்கிடும் என்னில்- அவை ஒடுங்கும் வழியை அறிந்து ஒடுக்க ஒடுங்குமென்று நீ சொல்லின், நின்றது ஒடுங்கிடா- இச்சாஞானக்கிரியைகளாய்ச் சீவித்து நின்ற உனது போதம் ஒடுங்காது, கரணம் எல்லாம் ஒடுங்கி ஒடுக்க- கருவிகளெல்லாம் ஒடுங்க ஒடுங்கப் போதமும் ஒடுங்குமென்று சொல்லின், உள்ள உணர்வு தான் ஒழியும்- அப்போது உனக்குள்ள அறிவுங்கெட்டுக் கேவலமும் வந்து மூடும், வேறாய் ஒடுங்கிடின் அன்றி மற்ற உண்மையை உணரொணாது- ஆதலால் அக்கருவிகளை அந்நியமாகக் கண்டு திருவருளில் ஒடுங்கினாலன்றி அந்தச் சிவத்தை அறிந்து அனுபவிக்க முடியாது.

தற்போதம் ஒழித்தற்கு உபாயம்

82. பற்றிடுங் கருவி யாவும் படர்ந்துணர் வழிக்குங் காலை
உற்றறிந் திடுவ தொன்றி னுணர்வினி னுண்மை யாரும்
மற்றது பகல்வி ளக்கின் மாய்ந்திட வருவ துண்டேற்
பெற்றிடு மதனை மாயப் பிறப்பினை யறுக்க லாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை:– பற்றிடும் கருவியாவும் படர்ந்து உணர்வு அளிக்கும் காலை– விடயங்களைப் பற்றுங் கருவிகளெல்லாம் புறத்தே சென்று ஆன்மாவுக்கு அறிவைக் கொடுக்குங் காலத்து, ஒன்றின் உற்று அறிந்திடுவது– அவ்விடயங்களில் ஒன்றைப் பொருந்தி அதனைச் சுட்டி அறிதல், உணர்வினின் உண்மையாகும்– ஆன்ம போதத்தின் இயல்பாம், அது பகல் விளக்கின் மாய்ந்திட வருவது உண்டேல்– அந்தப் போதம் பகற்காலத்தில் எரியும் விளக்குப் போலச் சீவியாமல் நிற்கும் முறைமை கூடுமாயின், அதனைப் பெற்றிடும்– அப்போது சிவத்தை அடையும், மாயப்பிறப்பினை அறுக்கலாம்– மயக்கத்தைச் செய்யும் பிறவியையும் அறுக்கலாம்.

### 3. ஆன்மலாபம்

ஞானத்தின் வகையும், வீடுபேற்றுக்குச் சிறந்த சாதனங்களும் இவை எனல்

83. முந்திய வொருமையாலே மொழிந்தவை கேட்டல் கேட்டல்
சிந்தனை செய்த லுண்மை தெளிந்திட லது தானாக
வந்தவா றெய்த நிட்டை மருவுத லென்று நான்காம்
இந்தவா றடைந்தோர் முத்தி யெய்திய வியல்பி னோரே.

பதவுரை:– முந்திய ஒருமையாலே மொழிந்தவை கேட்டல்– முற்பிறப்பிற் செய்த சரியை முதலியவற்றின் முதிர்ச்சியாலுண்டான ஒற்றுமையால் ஆசாரியர் உபதேசித்த உபதேச மொழிகளைக் கேட்டலும், கேட்டல் சிந்தனைசெய்தல்– கேட்ட பொருளைச் சிந்தித்தலும், உண்மை தெளிந்திடல்– அந்தப் பொருளின் உண்மையைத் தெளிந்து அறிதலும், அது தான் ஆக வந்த ஆறு எய்த நிட்டை மருவுதல்– சிவம் தானாக வந்த அத்துவித நிலை பொருந்தும்படி நிட்டை கூடுதலும், என்று நான்காம்– என்று ஞானம் நான்கு விதமாம், இந்தவாறு அடைந்தோர் முத்தி எய்திய இயல்பினோர்– இந்த முறைப்படி கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடினவரே முத்தியைப் பெற்ற இயல்பினையுடையோர்.

ஞானநிட்டை

84. பாசமா ஞானத் தாலும் படர்பசு ஞானத் தாலும்
ஈசனை யறிய வொண்ணா திறையருண் ஞான நண்ணித்
தேசுறு மதனான் முன்னைச் சிற்றறி வொழிந்து சேர்த்து
நேசமோ டுயர்ப ரத்து நிற்பது ஞான நிட்டை.

பதவுரை:– பாசமாம் ஞானத்தாலும் படர்பசு ஞானத்தாலும்– கருவிகளால் வரும் பாசஞானத்தினாலும் அக்கருவிகள் நீங்கினவிடத்து விரிந்த நான் பிரமம் என்னும் பசு ஞானத்தாலும், ஈசனை அறிய ஒண்ணாது– சிவனை அறியக் கூடாது, இறை அருள் ஞானம் நண்ணி– சிவனுடைய திருவருளாகிய ஞானத்தைப் பொருந்தி, தேசு உறும் அதனால் முன்னைச் சிற்றறிவு ஒழிந்து– பிரகாசம் பொருந்திய அந்த ஞானத்தினாலே பழைய ஆன்மபோதம் நீங்கி, உயர் பரத்து சேர்ந்து நேசமொடு நிற்பது– அந்த ஞானத்திற்கு மேலான சிவத்திலே அத்துவிதமாய்க் கலந்து அன்பு செய்து (சிவாநந்தத்தை அனுபவித்து) நிற்பது, ஞான நிட்டை– ஞானநிட்டையாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபாயநிட்டை

85. விளம்பிய வகையி னிட்டை மேவிட லரிதேன் முன்னம்
அளந்தறி வளித்த வற்றி னவளவுமற் றவற்றி னாலே
உளங்கொளுந் தனையு முள்ள படியுமுற் றுணர்ந்து செவ்வே
தளர்ந்திடா துவப்ப மற்றத் தன்மைய தாகுந் தானே.

பதவுரை:- விளம்பிய வகையின் நிட்டை மேவிடல் அரிதேல்- முன்சொன்ன முறைமையிலே நிட்டை கூடுதல் அரிதாயின், முன்னம் அளந்து அறிவு அளித்தவற்றின் அளவும்- பெத்த நிலையிலே விடயங்களை அறிந்து ஆன்மாவுக்கு அறிவித்துநின்ற கருவிகளின் இயல்பையும், அவற்றினாலே கொளும் உளம் தனையும்- அக்கருவிகள் வாயிலாக அறியும் ஆன்மாவாகிய தனது இயல்பையும, உள்ளபடியும்- ஆன்மாவோடு கலந்து நின்று அறிவித்தும் அறிந்தும் உபகரித்து வரும் பரமசிவனது அத்துவித நிலையையும், உற்று உணர்ந்து- திருவருளைக் கூடிநின்றறிந்து, தளர்ந்திடாது செவ்வே உவப்ப- அவ்வத்துவித நிலையை மறவாது கடைப்பிடித்து நின்று விரும்பவே, அத்தன்மையது ஆகும்- முன் சொல்லப்பட்ட நிட்டையின் முறைமை கூடும்.

பாவனையாற் சிவத்தை அடைய இயலாது

86. பாவிக்கின் மனாதி வேண்டும் பயனிலை கரண நீத்துப்
பாவிப்ப னென்னி லென்ன பழுதுள பாவ கத்தாற்
பாவிக்க வொண்ணா னென்று பாவிப்ப னென்னி னீயென்
பாவிக்க வேண்டா வாண்ட பரனருள் பற்றி னோர்க்கே.

பதவுரை:- பாவிக்கின் மனாதி வேண்டும்- அந்தச் சிவத்தைப் பாவனையாற் பெறலாம் என்னின் அதற்கு மனம் முதலிய கருவிகள் வேண்டும், பயன் இலை- கருவிகளுக்கு எட்டாதவராகையால் அந்தப் பாவனையாற் பயனில்லை, கரணம் நீத்துப் பாவிப்பன் என்னில்- கருவிகளை நீக்கிநின்று பாவிப்பேனென்னில், என்ன- கருவிகள் நீங்கியவிடத்து ஒன்றையும் அறியுமாறில்லையாதலின் பாவிப்பதெப்படி? பழுதுஉள- அன்றியும் கேவலம் வந்து தலைப்படும், பாவத்தால் பாவிக்க ஒண்ணான் என்று பாவிப்பன் என்னின்- பாவனையாற் பாவிக்க எய்தாதவரென்று பாவிப்பேன் என்று சொல்லில், நீ என்- நீ செய்யும் பாவனையாவது என்ன? ஆண்ட பரன் அருள் பற்றினோர்க்குப் பாவிக்க வேண்டா- அடிமையாகக் கொண்ட சிவனது அருள் பெற்றவர்க்குப் பாவனை வேண்டியதில்லை, அவ்வருளே சிவனைப் பெறுவிக்கும்.

அத்துவிதநிலை

87. ஒன்றிரண் டாகி யொன்றி னொருமையா மிருமை யாகி
ஒன்றினொன் றழியு மொன்றா தென்னினொன் றாகா தீயின்
ஒன்றிரும் புறழி னன்றா முயிரினைத் தொழிலும் வேண்டும்
ஒன்றிநின் றுணரு முண்மைக்கு வமையாணவத் தொடொன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை:– ஒன்று இரண்டாகி ஒன்றின் ஒருமையாம்– பிரமமாகிய ஒரு போருளே பிரமமும் சீவர்களும் என இரண்டாக எண்ணப்பட்டிருந்து முத்திநிலையில் அவ்விரண்டும் ஒன்றாய்விடும் என்னின் சீவர்களும் பிரமமும் ஒருதன்மையுடையவராக வேண்டும், அப்படியில்லாமையால் அது பொருந்தாது, இருமையாகி ஒன்றின் ஒன்று அழியும்– அநாதியிலே ஆன்மாவும சிவமும் வேறு வேறாயிருந்து முத்தியிலே ஒன்றாகும் என்னின் அநாதியிலே வேறு வேறாயிருந்த முதல் இரண்டில் ஒன்று அழியும், ஆகையால் அதுவும் பொருந்தாது, ஒன்றாது என்னின் ஒன்றாகா– சிவனும் ஆன்மாவும் முத்தியிலும் ஒன்றாது பேதமாயிருக்கும் என்னின் அது அத்துவித நிலையாகாது, ஆகையால் அதுவும் பொருந்தாது, தீயின் ஒன்று இரும்பு உறழின் அன்றாம்– தீயிற் பொருந்திய இரும்பு தீயானாற்போலச் சிவத்திற் பொருந்திய ஆன்மாவும் சிவத்தின் குணங்களைப் பொருந்தப்பெறும் எனின் அப்படியன்று, ஏனெனின், உயிரின் ஐந்தொழிலும் வேண்டும்– சிவனுக்குரிய ஐந்தொழிலும் ஆன்மாவிடத்திலுங் காணப்படவேண்டும், ஆகையால் அதுவும் பொருந்தாது, ஒன்றி நின்று உணரும் உண்மைக்கு உவமை– ஆன்மா சிவத்தோடு கூடி நின்று உணரும் உண்மைக்கு உவமை– ஆன்மா சிவத்தோடு கூடி நின்று பேரானந்தத்தை அனுபவிக்கும் முத்திநிலைக்கு உவமை கூறில், ஆணவத்தோடு ஒன்றே– பெத்தநிலையில் ஆணவமலத்தோடு கூடி அதுவாகவேயிருந்த தன்மையாம்.

## ஆணவமல நீக்கம்

88. அழிந்திடும் பாச மென்னி னித்தமென் றுரைத்தல் வேண்டா
அழிந்திடா தென்னின் ஞான மடைவது கருத வேண்டா
அழிந்திடுஞ் சத்தி நித்த மழிந்திடா தொழியின் முன்னர்
அழிந்திடு மிருளு நாச மடைந்திடா மிடைந்தி டாவே.

பதவுரை:– பாசம் அழிந்திடும் என்னின்– இந்த அத்துவித நிலையில் ஆணவமலம் அழிந்துவிடும் என்னில், நித்தம் என்று உரைத்தல் வேண்டா– பதி பசு பாசம் மூன்றும் நித்தம் என்று ஆகமங்கள் சொல்லல் வேண்டுவதில்லை, அழிந்திடாது என்னின்– அழியாதென்னில், ஞானம் அடைவது கருதவேண்டா– ஞானம் பெறுவதை நினைக்க வேண்டுவதில்லை, அப்படியாயின் அழிவது எதெனில், சத்தி அழிந்திடும் நித்தம் அழிந்திடாது– ஆன்மாவின் அறிவை மறைக்கின்ற மலத்தின் காரியமான சத்தியே அழியும், அதுவன்றி அதன் நித்தியத்தன்மை அழியாது, அஃதெதுபோலுமெனின், ஒளியின் முன்னர் அழிந்திடும் இருள் நாசமும் அடைந்திடாமிடைந்திடா– ஆதித்த ஒளியின் முன் நில்லாத இருள் நாசமடைவதுமில்லை, அவ்வொளியின் முன் முனைத்து நிற்பதுமில்லை (அதுபோலும் என்க).

## கன்மமல நீக்கம்

89. எல்லையில் பிறவி நல்கு மிருவினை யெரிசேர் வித்தின்
ஒல்லையி னகலு மேன்ற வுடற்பழ வினைக ளூட்டுந்
தொல்லையின் வருதல் போலத் தோன்றிரு வினைய துண்டேல்
அல்லொளி புரையு ஞானத் தழலுற வழிந்து போமே.

பதவுரை:– எல்லை இல் பிறவி நல்கும் இருவினை– அளவில்லாத சனனங்களைத் தரும் புண்ணிய பாவங்களான சஞ்சிதவினை, எரிசேர் வித்தின் ஒல்லையில் அகலும்–அக்கினியிற் சேர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்துப்போல ஆசாரியனது திருநோக்கால் விரைவிலே நீங்கும், என்ற உடல் பழவினைகள் ஊட்டும்– முதல்வன் என்று கொண்ட உடம்பு இடமாக வரும் தொல்லையில் வருதல் போலத் தோன்று இருவினையது உண்டேல்– முற்சனனங்களிற் பிராரத்த கன்மம் புசிக்கையில் ஆகாமிய கன்மம் ஏறினாய்போல இப்பொழுதுந் தோன்றுகின்ற ஆகாமியம் உண்டாயின், அல் ஒளி புரையும் ஞானத்தழல் உற அழிந்துபோம்– இருளைக் கெடுக்கும் சூரியனை ஒத்த ஞானாக்கினி வந்து பொருந்த அது அழிந்துபோம்.

## 6. புனிதனாமம் (ஸ்ரீ பஞ்சாக்கரம்)

### 1. மலவாசனை தாக்காமைக்கு உபாயம்

90. பந்தமா னவைய றுத்துப் பவுதிக முழலு மெல்லைச்
சந்தியா தொழியா திங்குத் தன்மைபோல் வினையுஞ் சாரும்
அந்தமா திகளில் லாத வஞ்செழுத் தருளி னாலே
வந்தவா றுரைசெய் வாரை வாதியா பேதி யாவே.

பதவுரை:– பந்தமானவை அறுத்துப் பவுதிகம் உழலும் எல்லை– ஞானாசாரியரது தீக்கையாலே மும்மல பந்தங்களும் ஒழியப்பெற்றுப் பூத சம்பந்தமான தேகம் சஞ்சரிக்கும் பொழுது, சந்தியா தொழியாது– மலவாசனை தாக்காதொழியாது, அதுபற்றி, இங்குத் தன்மைபோல் வினையும் சாரும்– பெருங்காயம் வைத்தெடுக்கப்பட்ட பாத்திரத்தில் அதன் வாசனை மங்கி மெலிதாய் வீசுமாறு போலப் பிராரத்த வினையும் மங்கி மெலிதாய் வந்து தாக்கும், அந்தம் ஆதிகள் இல்லாத அஞ்செழுத்து– முதலும் முடிவும் இல்லாத ஸ்ரீ பஞ்சாக்கரத்தை, அருளினாலே வந்தவாறு உரைசெய்வாரை– அருளே திருமேனியாகக் கொண்டெழுந்தருளி வந்த ஞானாசாரியராலே உபதேசமானபடி உச்சரிப்பவரை, வாதியா பேதியா– அவ்வாசனைகள் தாக்கவும் மாட்டா, பிறழச் செய்யுவும் மாட்டா.

### 2. சூக்கும பஞ்சாக்கரத்தின் பொருளும் அதனைக் கேட்டற்குரியவரும்

91. திருவெழுத் தைந்திலான் மாத்திரோத மாசருள் சிவஞ் சூழ்
தரநடு நின்ற தொன்றாந் தன்மையின் றொன்மை யாகி
வருமந மிகுதி யாலே வாசியி லாசை யின்றிக்
கருவழிச் சுழலு மாறுங் காதலார்க் கோத லாமே.

பதவுரை:– திரு எழுத்து ஐந்தில்– சூக்கும பஞ்சாக்கரமாகிய சிவாயநம என்னும் அக்கரங்கள் ஐந்தில், திரோதம் ஆக– திரோதான சத்தியும் ஆணவமலமும் பின்னும், அருள் சிவம்– அருளும் சிவமும் முன்னுமாகச், சூழ்தர– சூழ்ந்துநிற்க, நடுநின்றது– நடுவே நின்றது, ஆன்மா– ஆன்மாவாம், ஒன்றாம் தன்மையின்– இங்ஙனம் இருவகைக்கும் நடுவாகி ஒன்றாயிருக்குந் தன்மையோடு, தொன்மையாகி வரும் மநமிகுதியாலே– அநாதியாய் வரும் மலதிரோதங்களின் மேலீட்டினாலே (அவ்வான்மா விடயபோகங்களில் அழுந்தி), வாசியில் ஆசையின்றி– அருளிலும் சிவத்திலும் விருப்பின்றிக், கருவழிக் காதலார்க்கு ஓதலாம்– விடய போகங்களில் வெறுப்பும் முத்தியின்பத்தில் விருப்பமுமுடையவருக்கு இப்பஞ்சாக்கரத்தை உபதேசிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பஞ்சாக்கரத்தின் மகிமை

92. ஆசுறு திரோத மேவா தகலுமா சிவமுன் னாக
ஓசைகொ ளதனி னம்மே லொழித்தரு ளோங்கு மீள
வாசியை யருளு மாய மற்றது பற்றா வுற்றங்
கீசனி லேக மாரு மிதுதிரு னெழுத்தி னீடே.

பதவுரை:- ஆக உறு திரோதம் மேவாது அகலுமா- ஆணவமலமும் அதனோடு கூடிநின்று பாகம் வருத்தும் திரோதாயியும் உன்னைப் பொருந்தாமல் நீங்கும்படி, சிவமுன்னாக ஓசைகொள்- சிகார வகாரங்கள் முதலாக வைத்தோதப்படுஞ் சூக்கும பஞ்சாக்கரத்தைச் செபிப்பாயாக, அதனின்- அங்ஙனஞ் செபித்தலினால், நம்மேல் ஒழித்து அருள் ஓங்கும்- நகாரமாகிய திரோதானசத்தி அதன் பின்னுள்ள மகாரமாகிய மலத்தை ஒழித்து அருட்சத்தியாய் விளங்கும், மீளவாசியை அருளும்- பின்பு வகாரமாகிய அந்த அருட்சத்தியே சிகாரமாகிய சிவத்தைத் தரும், எங்ஙனமெனில், மாய- மகத்தான ஆன்மாவானது, மற்றது பற்றா- அந்த அருள் பற்றுக்கோடாக நின்று, அங்கு உற்று- அவ்வருளிலே அடங்கி அதுவேயாய், ஈசனில் ஏகமாகும்- சிவத்திலே ஒன்றுபடும், திருவெழுத்தின் ஈடு இது- பஞ்சாக்கரத்தின் மகிமை இதுவாம்.

## 7. அணைந்தோர் தன்மை

1. சீவன் முத்தர் நிட்டைகூடி ஞேயத்தழுந்தவர்

93. தீங்குறு மாயை சேரா வகைவினை திரிவிதத்தால்
நீங்கிட நீங்கா மூல நிறையிரு ளிரிய நேயத்
தோங்குணர் வகத்த டங்கி யுளத்துளின் பொடுங்க நேரே
தூங்குவர் தாங்கி யேகத் தொன்மையிற் றுகளி லோரே.

பதவுரை:- தீங்கு உறு மாயை சேராவகை- குற்றத்தையுடைய மாயாகாரியங்கள் வந்து சேராதபடி, வினை திரிவிதத்தால் நீங்கிட- சஞ்சிதம் முதலிய மூவினைகளும் மூவிதத்தால் ஒழிந்திட, நீங்கா மூலநிறை இருள் இரிய- விட்டு நீங்காத மூலமலமாகிய பேரிருளும் அகன்றுபோக, நேயத்து ஓங்கு உணர்வு அகத்து அடங்கி- சிவத்திற் பிரகாசமான அருளிலே தாம் அடங்கி, சிவத்திற் பிரகாசமான அருளிலே தாம் அடங்கி, ஏகத்தொன்மையின் தாங்கி- அவ்வருளோடு பிரிவின்றியிருக்குஞ் சிவத்தினால் தாங்கப்பட்டு, உளத்துள் இன்பு ஒடுங்க- தம்மறிவினுள்ளே பேரின்பம் அடங்க, நேரே தூங்குவர்- மலவாசனை சிறிதும் தாக்காது ஏகமாகி ஆனந்தமுறுவர், துகளிலோர்- பாசத்தினீங்கிய சீவன்முத்தர்.

2. அவர் விதிவிலக்குகளைத் தாமாகச் செய்வதும்
விடுவதுமின்றிச் சிவமொன்றையே கண்டிருப்பர்

94. குறிப்பிடங் காலந்திக் காசனங் கொள்கைகுலங் குணஞ்
சிறப்புறு விரதஞ் சீலந் தபஞ்செபத் தியான மெல்லாம்
மறுத்தற வொழிதல் செய்தன் மருவிடா மன்னு செய்தி
உறக்குறு பவர்போல் வாய்மை யொழிந்தவை யொழிந்து போமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை:- குறிப்பிடம்- நிட்டைக்கு யோக்கியமாக் குறிக்கும் புண்ணியத் தலங்களும், காலம்- இன்னகாலம் இது செய்ய வேண்டுமென்னுங் காலசங்கற்பமும், திக்கு- இன்ன திக்கு நன்று இன்ன திக்கு தீது என்னும் திக்குக் கற்பனையும், ஆசனம்- பத்மாசனம் முதலான ஆனங்களில் இன்ன ஆசனத்திலே இருக்க வேண்டும் என்னும் ஆசன நியமமும், கொள்கை- சமயக் கோட்பாடுகளும், குலம்- சாதியபிமானமும், குணம்- சமயாசார குலாசாரங்களைப் பற்றி வரும் விருப்பு வெறுப்புக்களும், சீர்- வேஷம் ரூபம் முதலிய சிறப்புக்களில் வைக்கம் அபிமானமும், சிறப்பு உறு விரதம்- சிறப்பினையுடைய விரதங்களும், சீலம்- நல்லொழுக்கமும், தவம்- பஞ்சாக்கினியில் நடுநிற்றல் முதலிய தவங்களும், செபம்- செபங்களும், தியானம்- ஆறாதாரங்களிலே தியானிக்கும் தியானங்களும், எல்லாம்- ஆகிய இவையெல்லாம், மறுத்து அற ஒழிதல் செய்தல் மருவிடா- தாமாக மறுத்துத் தீரவிடுதலும் செய்தலும் பொருந்தா, வாய்மை ஒழிந்தவை- உண்மைப் பொருளாகிய சிவத்தைக் கண்டிருக்குஞ் செயலொழிந்தனவாகிய, மன்னு செய்தி- ஏனைய நியமச் செயல்களெல்லாம், உறக்கு உறுபவர்போல்- நித்திரை செய்கின்றவர் கைப்பொருள்போல், ஒழிந்துபோம்- தாமாகவே ஒழிந்துபோம்.

### 3. அவர் ஆநந்தக் களிப்புடன் வாழ்வர்

95. அகம்புற மென்றி ரண்டா லருச்சனை புரியு மிந்தச்
சகந்தனி லிரண்டு மின்றித் தமோமய மாகி யெல்லாம்
நிகழ்ந்திட மகிழ்ந்து வாழு நீர்மையார் போல ஞானத்
திகழ்ந்தகம் புறமெனாத செம்மையார் நன்மை யாரே.

பதவுரை:- அகம்புறம் என்று இரண்டால் அருச்சனை புரியும் இந்தச் சகம் தனில்- அகப்பூசை புறப்பூசை என்று இருவிதமாக அருச்சனை பண்ணிப் போக மோக்ஷமிரண்டினில் தாம் இச்சித்ததைப் பெற்றுக் கொள்ளும் இந்தப் பூமியின் கண்ணே, இரண்டும் இன்றி- அவ்விருவித பூசைகளுமின்றி, தமோமயமாகி- அஞ்ஞானமே தமக்கு வடிவாகி, எல்லாம் நிகழ்ந்திட- வினைக்கீடாக நிகழ்வனவெல்லாம் நிகழத் தாம் அவற்றைக் கருதாது, மகிழ்ந்து வாழும் நீர்மையார் போல- தாம் கருதிய பொருளொன்றறிலே சந்தோஷமுற்று வாழும் உலகத்தவரைப் போல, ஞானம் திகழ்ந்து- ஞானம் பிரகாசித்தவிடத்து, அகம் புறம் எனாத செம்மையார்- அதனை அகம் என்றும் புறம் என்றும் பிரித்தறியாது எங்கும் ஒரு தன்மைத்தாகக் கண்டு, அந்த ஞானமே தமக்கு வடிவாய், பிராரத்த வினைக்கீடாக நிகழ்வனவெல்லாம் நிகழத்தாம் அவற்றைக் கருதாது, தாம் கருதிய சிவம் ஒன்றிலே ஏகமாகி நின்று சிவாநந்தத்தை அனுபவிக்குஞ் சிறப்புடையோர், நன்மையார்- அந்த உண்மை ஞானத்தைப் பெற்ற சீவன்முத்தர்.

### 4. அவர் செய்யும் யோகம்

96. அண்டமே விடவ னைத்து மனைத்தையு மண்ட மேவிக்
கொண்டல்போ லெவையு ஞானக் குறைவிலா நிறை தலாலே
கண்டதோர் பொருளை யந்தக் கருத்தினாற் காணிற் றானே
அண்டநா யகனார் மேனி யானதே லைய மின்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை:- அனைத்தும் அண்டம் மேவிட- பிருதிவி முதலிய நான்கு பூதங்களும் ஆகாயத்தைப் பொருந்திநிற்க, அண்டம் அனைத்தையும் மேவிக் கொண்டல்போல்- அந்த ஆகாயம் அவையெல்லாவற்றையும் கவளீகரித்துக்கொண்டு நிற்றல்போல, எவையும் ஞானம் குறைவிலா நிறைதலாலே- சராசரங்களனைத்திலும் திருவருள் பூரணமாய் நிறைந்திருக்கையால், கண்டதோர்பொருளை அந்தக் கருத்தினால் காணில்- தோன்றிய ஒரு விடயத்தை அத்திருவருள் வடிவாகக் காணில், தானே அண்டநாயகனார் மேனி- தானும் உலகநாயகரான சிவத்தின் திருமேனியாய் நிற்பன், ஆனதேல்- அவ்வாறு நிற்பின், ஐயமின்று- அந்த ஞானநிலையை அடைதலில் ஐயமின்று.

## 5. அவர் செய்யுங் கிரியை

97. மண்முதற் கரண மெல்லா மறுவசத் தாக்கி ஞானக்
கண்ணினி லூன்றி யந்தக் கருத்தினா லெனையு நோக்கி
எண்ணி யஞ்செழுத்து மாறி யிறைநிறை யுணர்ந்து போற்றல்
புண்ணியன் றனக்கு ஞான பூசையாய்ப் புகலு மன்றே.

பதவுரை:- மண்முதல் கரணம் எல்லாம்- பிருதிவி முதலிய தத்துவங்கள் எல்லாம், மறு அசத்தாக்கி- தனக்கு வேறாக சடப்பொருளெனக் கண்டு நீக்கி, ஞானக் கண்ணனில் ஊன்றி- அப்படிக் காணச் செய்த அருளிலே நிலைபெற்று நின்று, அந்தக் கருத்தினால் எவையும் நோக்கி- அந்த அருட்கண்ணால் எவற்றையும் பார்த்து, அஞ்செழுத்து மாறி எண்ணி- பஞ்சாக்கரத்தை மாறிச் செபித்து, இறைநிறை உணர்ந்து போற்றல்- சிவத்தினது அத்துவித நிலையை நினைந்து துதித்தல், புண்ணியன் தனக்கு ஞான பூசையாய்ப் புகலும்- சிவனுக்கு ஞான பூசை என்று ஆகமம் சொல்லும்.

## 6. அவர் செய்யும் சரியை

98. தொண்டர்க டாமும் வானோர் தொழுந்திரு மேனிதானும்
அண்டருங் கண்டி லாத வண்ணமே யெனவ ணங்கி
வேண்டர ளங்கள் சிந்த விழிமொழி குளறமெய்யே
கண்டுகொண் டிருப்பர் ஞானக் கடலமு தருந்தி னோரே.

பதவுரை:- தொண்டர்கள் தாமும்- சிவனடியாரும், வானோர் தொழும் திருமேனி தானும்- தேவர்கள் வணங்குஞ் சிவலிங்கமும், அண்டரும் கண்டிலாத அண்ணலே என வணங்கி- தேவரும் காண்டற்கரிய சிவபிரானே என்று வணங்கி, விழி வெண் தரளங்கள் சிந்த- கண்கள் வெண்மையான முத்துப்போலும் நீர்த்துளி சிந்த, மொழி குளற- வாக்குத் தழுதழுப்ப, மெய்யே கண்டுகொண்டு இருப்பர்- உண்மைப் பொருளாகிய சிவத்தையே கண்டுகொண்டிருப்பர், ஞானக்கடல் அமுது அருந்தினோர்- ஞானக்கடலிலே விளைந்த பேரின்பமாகிய அமுதத்தைப் புசித்த சீவன்முத்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்கருத்து

99. நிலவுலோ காய தாதி நிகழ்சிவாத் துவிதாந் தத்துட்
குலவின ரளவ ளாவாக் கொள்கைய தாகி வேதத்
தலைதரு பொருளா யின்பாய்த் தாவில்சற் காரி யத்தாய்
மலைவறு முணர்வாற் பெத்த முத்திகண் மதித்தா மன்றே.

பதவுரை:- நிலவு உலோகாயத ஆதி நிகழ் சிவாத்துவித அந்தத்துள் குலவினர்- விளங்குகின்ற உலோகாயதம் முதலாக வழங்கிவரும் சிவாத்துவிதசைவம் ஈறாகவுள்ள சமயங்களில் நிற்பவரது, அளவு அளாவாக் கொள்கையதாகி- பிரமாணங்களைத் தழுவாத கோட்பாட்டை உடையதாய், வேதத் தலைதரு பொருளாய்- வேதத்தின் சிரமாகிய உபநிடதங்கள் தரும் பொருளாய், இன்பாய்- பேரின்பத்தை விளைவிப்பதாய், தாவு இல் சற்காரியத்தாய்- கேடில்லாத சற்காரிய இயல்பு கூறுவதாய், மலைவு அறும் உணர்வால்- மலைவற்றிருக்கின்ற சைவசித்தாந்த அறிவால், பெத்தமுத்திகள்- பெத்தமுத்தி நிலைகளை, மதித்தாம்- வரையறுத்துச் சொன்னோம்.

நூல் உபதேசிக்கும் முறை

100. திருவருள் கொடுத்து மற்றிச் சிவப்பிர காச நன்னூல்
விரிவது தெளியு மாற்றால் விளம்பிய வேதுநோக்கிப்
பெருகிய வுவமை நான்கின் பெற்றியி னிறுவிப் பின்முன்
தருமலை வொழியக் கொள்வோன் றன்வயிற் சாற்ற லாமே.

பதவுரை:- திருவருள் கொடுத்து- தீக்கையாகிய திருவருளைக் கொடுத்து, இச்சிவப்பிரகாச நன்னூல்- இந்தச் சிவப்பிரகாசமாகிய நன்னூல், விரிவது தெளியும் ஆற்றால்- (சுருங்கியடங்கியிருக்கும் பொருள்களின்) விரிவை ஐயந்திரிபற அறியும் வழியால், விளம்பிய ஏதுநோக்கி- சொல்லப்பட்ட இயல்பேது முதலிய ஏதுக்களை ஆராய்ந்து நோக்கி, பெருகிய உவமை நான்கின் பெற்றியில் நிறுவி- (நூல்களிற் சொல்லப்பட்டுப்) பரந்த உவமைகள் நான்காலும் பெறும் பொருள்களிலே கருத்தை நிறுத்தி, பின்முன் தரும் மலைவு ஒழிய- பின்சொன்னவையும் முன்சொன்னவையும் தம்முட் காட்டும் முரண் நீங்குமாறு, கொள்வோன் தன்வயின் சாற்றலாம்- கேட்டு இனிதுணர்ந்து கொள்வோனாகிய நன்மாணவனிடத்திலே சொல்லலாம்.

சிவப்பிரகாசம் முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# சிவஞான சித்தியார் – சுபக்கம்

## அருணந்தி சிவாசாரியார்

சித்தாந்த சாத்திர நூல்களில் மிகப் பெரியது. பரபக்கம், சுபக்கம் எனும் இரு பிரிவுகளை உடையது. பரபக்கம் 301 விருத்தப் பாக்களையும், சுபக்கம் 328 விருத்தப் பாக்களையும் உடையது. அருணந்திசிவாசாரியார் மெய்கண்டரின் முதல் மாணாக்கன் ஆவார்.

இது சிவஞான போதத்தின் வழிநூல் ஆகும். சிவஞானபோத அமைப்பில் சூத்திரப் பிரிவுகளாக அமைந்துள்ளது. சைவசித்தாந்தம் பற்றிய மிக விரிவான நூல்.

"பார்விரித்த நூல் எல்லாம் பார்த்தறியச் சித்தியிலே
ஓர் விருத்தப் பாதி போதும்"

எனும் ஆன்றோர் கூற்றிலிருந்து இதன் பெருமையை அறியலாம்.

### காப்பு

ஒருகோட்டன் இருசெவியன் மும்மதத்தன் நால்வாய், ஐங் கரத்தன் ஆறு
தருகோட்டம் பிறைஇதழித் தாழ்சடையான் தரும்ஒரு வாரணத்தின் தாள்கள்
உருகோட்டு அன்பொடும் வணங்கி ஓவாதே இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திருகு ஓட்டும்; அயன் திருமால் செல்வமும்ஒன்றோ என்னச் செய்யும் தேவே. 1

(இதன் பொருள்):- ஆறு – கங்கையையும், கோட்டம் தரு பிறை – வளைவு பொருந்திய பிறையையும், இதழி – கொன்றை மாலையையும் அணிந்த, தாழ் சடையான் தரும்– தாழ்ந்த சடையையுடைய சிவபெருமான் தந்தருளிய, ஒரு கோட்டன் – ஒரு கொம்பையுடையவரும், இருசெவியன் – இரண்டு செவிகளையுடையவரும், மும்மதத்தன்– மூன்று மதங்களையுடைய வரும், நால்வாய் ஐங்கரத்தன் – தூங்குகின்ற வாயையும் ஐந்து கைகளையுடையவரும் ஆகிய, ஒருவாரணத்தின் தாள்கள் – ஒப்பற்ற யானைமுகம் போலும் முகத்தையுடைய விநாயகக் கடவுளுடைய திருவடிகள், உருகு ஓட்டு அன்பொடும் வணங்கி– பேரன்போடு தம்மை வணங்கி, ஓவாதே இரவுபகல் உணர்வோர்– இடைவிடாமல் இரவும் பகலும் தியானிப்பவரது, சிந்தைத்திருகு – அறிவிற் பொருந்திய மலக் குற்றத்தை, ஓட்டும் – நீக்கும், அதுவுமன்றி, அயன் திருமால் செல்வமும் ஒன்றோ என்ன– பிரம்ம விட்டுணுக்களுடைய வாழ்வும் ஒரு பொருளோ என்று அதனை வெறுக்கும்படி, தேவு செய்யும் – தெய்வத் தன்மைப் பெருவாழ்வையும் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்கல வாழ்த்து

சிவபெருமான் வழிபாடு

அறுவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாய் வேறாம்
குறியது உடைத்தாய் வேதா கமங்களின் குறி இறந்து அங்கு
அறிவினில் அருளால் மன்னி அம்மையோடு அப்பன் ஆகிச்
செறிவு ஒழியாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம். 2

(இதன் பொருள்):- அறுவகைச் சமயத்தோர்க்கும்- தனித்தனி அறு வகைப்பட்ட புறப்புறம் புறம் அகப்புறம் அகம் என்னும் சமயங்களில் நிற்போருக்கும், அவ்வவர் பொருளாய்- அவ்வச் சமயத்தவர் கொண்ட முதற் பொருளாயும், வேறாம் குறியது உடைத்தாய்- சித்தாந்த சைவருக்கு அச்சமயத்தவர் கூறும் இலக்கணங்களுக்கு வேறாய இலக்கணத்தையுடைய தாயும், வேதாகமங்களின் குறி இறந்து- வேதாகமங்களின் கருத்துக்கு எட்டாததாயும், அறிவினில் அருளால் மன்னி- அறிவினுக்கறிவாகியும், அங்கு அம்மையோடு அப்பன் ஆகி- அவ்வறிவின் கண் வியாபக அறிவைப் பயப்பிக்கும் சத்தியும் சிவமும் ஆகியும், செறிவு ஒழியாது நின்ற- எங்கும் செறிந்து வியாபகமாகி நின்ற, சிவன் அடி சென்னி வைப்பாம் - சிவபெருமானது திருவடியைச் சிரசின்மேற் சூடிக்கொள்வாம்.

முன்னூல் சிறப்பு

என்னை இப் பவத்திற் சேரா வகைஎடுத்து, என்சித் தத்தே
தன்னை வைத்து அருளி னாலே தாள்இணை தலைமேல் சூட்டும்
மின்னமர் பொழில்சூழ் வெண்ணெய் மேவிவாழ் மெய்கண்டான் நூல்
சென்னியில் கொண்டு சைவத் திறத்தினைத் தெரிக்கல் உற்றாம். 3

(இதன் பொருள்):- இப்பவத்தில் சேராவகை- இப் பிறவிக்கடலில் அழுந்தாதபடி, அருளினால் என்னை எடுத்து- கருணையாகிய கையினால் என்னை எடுத்து, என் சித்தத்தே தன்னை வைத்து- எனது அறிவிலே தமது சொரூபம் விளங்கும்படி செய்து, தாள் இணை தலைமேல் சூட்டும்- திருவடிகள் இரண்டினையும் சென்னியிற் சூட்டித் தீக்கை செய்தருளிய, மின் அமர்பொழில்சூழ் வெண்ணெய் மேவி வாழ் மெய்கண்டான்- மின்னல் பொருந்திய மேகம் தங்குகின்ற சோலைகள் சூழ்ந்த திருவெண்ணெய் நல்லூரில் விருப்பமுற்று வாழ்கின்ற மெய்கண்டதேவர் அருளிச் செய்த, நூல்- சிவஞானபோதம் என்னும் நூலை, சென்னியிற் கொண்டு- மற்றைய பிரமான நூல்களுக்கெல்லாம் சிரத்தானமாகக் கொண்டு, சைவத் திறத்தினைத் தெரிக்கல் உற்றாம்- சைவ சித்தாந்தத்தின் உண்மையை யாம் விளக்குவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலில் சொல்லப்படும் பொருளும், இதனைக் கேட்பவரும் கேட்பதால் உண்டாகும் பயனும்

**பண்டைநல் தவத்தால் தோன்றிப் பரமனைப் பத்தி பண்ணும்**
**தொண்டரைத் தானே தூய கதியினில் தொகுப்பன்; மார்க்கர்**
**கண்டநூல் ஓதி வீடு காதலிப் பவர்க்கு ஈசன்**
**புண்டரிகத் தாள் சேரும் பரிசினைப் புகலல் உற்றாம்.** 4

(இதன் பொருள்):- பண்டை நல் தவத்தால்– முன் செய்த நல்ல தவத்தினாலே, தோன்றி– சாமுசித்தராய்ப் பிறந்து, பரமனைப் பத்தி பண்ணும் தொண்டரை– பரமசிவனை அன்பு மாத்திரையால் வழிபடுகின்ற அடியவர்களை, தானே தூய கதியினில் தொகுப்பன்– அப் பரமசிவன் தாமாகவே சிவகதியிற் சேர்ப்பர்; ஆகையால் அச்சாமுசித்தருக்கு நூல் வேண்டப்படுவதில்லை, மார்க்கர் கண்ட நூல் ஓதி– ஞானிகள் பிரமாணம் என்றறிந்து கைக்கொண்ட நூல்களைப் படித்து, வீடு காதலிப்பவர்கட்கு– அந்நூல்கள் வழியால் முத்தி பெற விரும்பும் வைநயிகருக்கு, ஈசன் புண்டரிகத்தாள் சேரும் பரிசினை– சிவபெருமானுடைய செந்தாமரை மலர் போன்ற திருவடிகளை அடையும் முறைமையினை, புகலல் உற்றாம்– இங்கே வகுத்துக் கூறுகின்றோம்.

## அவை அடக்கம்

**மறையினால் அயனால் மாலால் மனத்தினால் வாக்கால் மற்றும்**
**குறைவிலா அளவி னாலும் கூறொணாது ஆகி நின்ற**
**இறைவனார் கமல பாதம் இன்றுயான் இயம்பும் ஆசை**
**நிறையினார் குணத்தோர்க்கு எல்லாம் நகையினை நிறுத்தும் அன்றே.** 5

(இதன் பொருள்):- மறையினால்– வேதங்களினாலும், அயனால்– பிரமனாலும், மாலால்– விட்டுணுவாலும், மனத்தினால்– மனத்தினாலும், வாக்கால்– வாக்கினாலும், மற்றும் குறைவிலா அளவினாலும்– வேறுங் குறைவில்லாத பிரமாணங்களாலும், கூற ஒணாது ஆகிநின்ற– அளவிட்டறிந்து சொல்லுதற்கு அரிதாகி நின்ற, இறைவனார் கமல பாதம்– சிவபெருமானது செந்தாமரை மலர் போலும் திருவடிகளின் இயல்பை, இன்று யான் இயம்பும் ஆசை– இப்போது யான் சொல்லுதற்குக் காரணமாய் நின்ற புல்லிய ஆசையானது, நிறையின் ஆர் குணத்தோர்க்கு எல்லாம்– நிறைந்த குணத்தினையுடைய பெரியோர் எல்லார்க்கும், நகையினை நிறுத்தும்– சிரிப்பினை உண்டாக்கும்.

## சிவபெருமானை ஒன்றினாலும் அறியமுடியாதோ என்னும் ஐயத்தைப் போக்குதல்

**அருளினால் ஆக மத்தே அறியலாம்; அளவி னாலும்**
**தெருளலாம்; சிவனை ஞானச் செய்தியால், சிந்தை உள்ளே**
**மருள்எலாம் நீங்கக் கண்டு வாழலாம். பிறவி மாயா**
**இருள் எலாம் இரிக்கல் ஆகும் அடியரோடு இருக்க லாமே.** 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்):- (சிவபெருமானது இயல்பு கூறுதற்கரியதாயினும்) சிவனை- அச் சிவபெருமானை, ஆகமத்தே- சிவாகமங்களிடத்து, அருளினால் அறியலாம் - தேசிகரது உபதேசத்தாற் கேட்டறியலாம், அளவினாலும் தெருளலாம் - கேட்டதனை அதற்கனுகூலமான பிரமாணங்களாலும் தெளிய அறியலாம், அங்ஙனமன்றியும், ஞானச் செய்தியால்- ஞானசாரியரது உபதேசத்தால், மருள் எலாம் நீங்க- மயக்கம் எல்லாம் ஒழிய, சிந்தை உள்ளே கண்டு வாழலாம்- தனது அறிவின்கண்ணே அறிந்து நிட்டை கூடி அனுபவிக்கலாம், பிறவி மாயா இருள் எலாம் இரிக்கல் ஆகும்- அதனாற் பிறவி ஒழியாமைக் கேதுவாகிய மலங்களை நீக்கலாம், அடியரோடு இருக்கலாம்- சிவனடியரோடு கூடி வாழலாம்.

## அளவை இலக்கணம்

எல்லாப் பிரமாணங்களும் மூன்றில் அடங்கும் என்பது

**அளவை காண்டல், கருதல், உரை, அபாவம், பொருள், ஒப்பு, ஆறுஎன்பர்;**
**அளவை மேலும் ஒழிபு, உண்மை, ஐதிகத்தோடு, இயல்புஎன நான்கு**
**அளவை காண்பர்; அவையிற்றின் மேலும் அறைவர்; அவை எல்லாம்**
**அளவை, காண்டல், கருதல், உரை என்றுஇம் மூன்றின் அடங்கிடுமே.** 7

(இதன் பொருள்):- அளவை- பிரமாணமாவது, காண்டல்- காட்சி, கருதல்- அனுமானம், உரை- ஆகமம், அபாவம்- இன்மை, பொருள்- அருத்தா பத்தி, ஒப்பு- உவமை என, ஆறு என்பர்- ஆறு வகைப்படும் என்பர், அளவை மேலும்- அவ்வறுவகைப் பிரமாணங்களின் மேலும், ஒழிபு- பாரிசேடமும், உண்மை- சம்பவமும், ஐதிகத்தோடு- உலகவாதமும், இயல்பு என- சகசமும் என, நான்கு அளவை காண்பர்- நான்கு பிரமாணம் உண்டென்று அறிவர், அவையிற்றின் மேலும்- அப்பத்துப் பிரமாணங்களின் மேலும், அறைவர்- பிரமாணங்கள் உள என்று கூறுவர், அவை எல்லாம் அளவை- அவையெல்லாம் பிரமாணங்களேயாயினும், காண்டல்- காட்சியும், கருதல்- அனுமானமும், உரை- ஆகமமும், என்ற இம் மூன்றின்- என்று சொல்லப்படும் இம்மூன்று பிரமாணங்களுள், அடங்கிடும்- அடங்குவனவாம்.

பிரத்யட்சம் முதலிய மூன்றின் இலக்கணம்

**மாசறு காட்சி ஐயம் திரிவுஇன்றி விகற்பம் முன்னா**
**ஆசற அறிவது ஆகும்; அநுமானம் அவினா பாவம்**
**பேசுறும் ஏதுக் கொண்டு மறைபொருள் பெறுவது ஆகும்;**
**காசறும் உரைஇம் மானத்து அடங்கிடாப் பொருளைக் காட்டும்.** 8

(இதன் பொருள்):- மாசு அறுகாட்சி- குற்றமற்ற காட்சிப் பிரமாணமாவது, ஐயம் திரிவு இன்றி- நிருவிகற்பமாகத் தோன்றிய ஒரு பொருளைச் சந்தேக விபரீத உணர்வின்றி, விகற்பம் முன்னா- விகற்ப உணர்வை முன்னாகக் கொண்டு, ஆசு அற அறிவது ஆகும்- குற்றமற நேரே அறியும் ஆன்ம சிற்சத்தியாம், அநுமானம்- அநுமானப் பிரமாணமாவது, மறை பொருள்- நேரே அறியப்படாது மறைந்து நின்ற பொருளை, அவிநாபாவம் பேசுறும் ஏதுக்கொண்டு- அதனை விட்டு நீங்காது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனிகழ்வதாகச் சொல்லப்படும் ஏதுவைக் கொண்டு, பெறுவது ஆகும்– அறியும் ஆன்ம சிற்சத்தியாம், காசு அறும் உரை– குற்றமற்ற ஆகமப் பிரமாணமாவது, இம்மானத்து அடங்கிடாப் பொருளை– காட்சி அநுமானம் என்னும் இவ்விரண்டு பிரமாணங்களாலும் அறியப்படாத பரலோகம் பாதாள லோகம் முதலிய பொருள்களை, காட்டும்– ஆப்த வாக்கியங் கொண்டு அறியச் செய்யும் ஆன்ம சிற்சத்தியாம்.

### நிர்விகற்பம் முதலிய நான்கின் இலக்கணம்

**கண்ட பொருளை இரட்டுறவே கருதல் ஐயம்; திரியவே**
**கொண்டல் திரிவாம்; பெயர் சாதி குணமே, கன்மம், பொருள் எனஐந்து**
**உண்டஅவ் விகற்ப உணர்வினுக்குப்; பொருளின் உண்மை மாத்திரத்தின்**
**விண்டல் இல்லா அறிவாகும் விகற்பம் இல்லாக் காட்சியே.** 9

(இதன் பொருள்):– விண்டல் இல்லா– பெயர் சாதி முதலியவற்றாற் பகுத்தறிதலின்றி, பொருளின் உண்மை மாத்திரத்தின் அறிவு– இஃதொன்று தோன்றுகின்றதெனப் பொது வகையிற் பொருளுண்மையை மாத்திரம் அறியும் ஆன்மசிற்சத்தி, விகற்பமில்லாக் காட்சி ஆகும்– திருவிகற்பக்காட்சி எனப்படும், கண்ட பொருளை– அங்ஙனம் அறிந்த பொருளை, இரட்டுறவே கருதல்– இஃது யாதோ என்று ஒன்றிலே துணிவு பிறவாது ஆராயும் ஆன்மசிற்சத்தி, ஐயம்– ஐயக்காட்சி எனப்படும், திரியவே கொண்டல்– அதனை அதற்குச் சமமாய் இருக்கும் மற்றொரு பொருளாக மயங்கி நிச்சயிக்கும் ஆன்மசிற்கத்தி, திரிவு ஆம்– விபரீதக்காட்சி எனப்படும், பெயர் சாதி குணம் கன்மம் பொருள் என ஐந்து– பெயரும் சாதியும் குணமும் கன்மமும் பொருளும் ஆகிய ஐந்தும் அப்பொருளினிடத்து நன்றாக விளங்க உணர்தல், அவிகற்ப உணர்வினுக்கு உண்டு– அந்தச் சவிகற்பக் காட்சிக்கு உண்டாம்.

### பிரத்தியட்சம் முதலிய மூன்றின் பாகுபாடுகள்

**காண்டல் வாயில் மனத்தன்வே தனையோடு யோகக் காட்சிஎன**
**ஈண்டு நான்காம் அனுமானம் தனக்கும் பிறர்க்கும் என்று இரண்டாம்;**
**மாண்ட உரைதந்திரம் மத்திரத்தோடு உபதேசச் சொல் எனமூன்றாம்;**
**பூண்ட அளவைக்கு எதிர் புலன்தன் இயல்பு பொது என்று இரண்டாமே.** 10

(இதன் பொருள்):– காண்டல்– காட்சிப் பிரமாணம், வாயில்– இந்திரியக் காட்சியும், மனம்– மானதக் காட்சியும், தன் வேதனையோடு– தன் வேதனைக் காட்சியும், யோகக் காட்சி– யோகக் காட்சியும் என, ஈண்டு நான்காம்– இவ்வாறு நான்கு வகைப்படும், அநுமானம்– அநுமானப் பிரமாணம், தனக்கும் பிறர்க்கும் என்று– தன் பொருட்டநுமானமும் பிறர் பொருட்டநுமானமும் என, இரண்டாம்– இரண்டு வகைப்படும், மாண்ட உரை– மாட்சிமையுடைய ஆகமப் பிரமாணம், தந்திரம்– தந்திரக் கலையும், மந்திரத்தோடு– மந்திரக் கலையும், உபதேசச் சொல் என– உபதேசக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையும் என, மூன்றாம்– மூன்று வகைப்படும், பூண்ட அளவைக்கு எதிர் புலன்– சொல்லப்பட்ட இப்பிரமாணங்களால் அளந்தறியப்படும் பிரமேயமாகிய பொருள்கள், தன்னியல்பு பொது என்று இரண்டாம்– சிறப்பிலக்கணமுடையது பொதுவிலக்கணமுடையது என இரண்டு வகைப்படும்.

### சிறப்பு இயல்பு பொது இயல்பு - இலக்கணம்

**அன்னிய சாதியும் தன் சாதியும் அகன்று நிற்றல்**
**தன் இயல்பு; அன்னி யத்தைத் தவிர்ந்துதன் சாதிக்கு ஒத்தல்**
**துன்னிய பொது இயற்கை; சொன்னஇவ் இரண்டின் உள்ளே**
**மன்னிய பொருள்கள் யாவும் அடங்கிடும் மானம் உற்றால்.** 11

(இதன் பொருள்):– அன்னிய சாதியும்– ஒரு பொருள் வேற்றுச் சாதிப் பொருளின் தன்மையும், தன்சாதியும்– தன் சாதிப்பொருளின் தன்மையும், அகன்று– நீங்கி, நிற்றல்– தனக்கு மாத்திரமுரிய தன்மையோடு நிற்றல், தன்னியல்பு– சிறப்பியல்பாம், அன்னியத்தைத் தவிர்ந்து– வேற்றுச் சாதிப்பொருளை நீங்கி, தன்சாதிக்கு ஒத்தல்– தன் சாதிப் பொருளுக்கு ஒத்து நிற்றல், துன்னிய பொது இயற்கை– பொருந்திய பொதுவியல்பாம், மானம் உற்றால்– காட்சி முதலிய பிரமாணங்களால் அளந்தறியுமிடத்து, மன்னிய பொருள்கள் யாவும்– பொருந்திய பிரமேயப் பொருள்களெல்லாம், சொன்ன இவ்விரண்டினுள்ளே அடங்கிடும்– சொல்லப்பட்ட இந்த இரண்டு இயல்பினுள் அடங்குவனவாம்.

### இந்திரியக் காட்சி மானதக் காட்சிகளின் இலக்கணம்

**உயிரினோடு உணர்வு வாயில் ஒளிஉரு ஆதி பற்றிச்**
**செயிர்உறு விகற்பம் இன்றித் தெரிவது இந்திரியக் காட்சி;**
**அயர்வுஇல் இந்திரிய ஞானம் ஐம்புலன் சார்ந்து உயிர்க்கண்**
**மயர்வுஅற வந்த ஞானம் மானதக் காண்டல் ஆமே.** 12

(இதன் பொருள்):– உயிரினோடு– அளப்பவனாகிய ஆன்மாவோடு, உணர்வு– அறிவாகிய சிற்சக்தி, வாயில்– மனம் என்னும் அந்தக் கரணத்தாற் செலுத்தப்படும் கண் முதலிய ஞானேந்திரியங்களையும், ஒளி (ஆதி)– தேயு முதலிய பூதங்களையும், உரு (ஆதி)– உருவம் முதலிய தன் மாத்திரைகளையும், பற்றி– பொருந்தி, செயிர் ஒடு விகற்பம் இன்றி– சந்தேக விபரீதக் குற்றங்களும் பெயர் சாதி முதலிய விகற்பமுமின்றி, தெரிவது– பஞ்ச விடயங்களையும அறியும் அறிவு, இந்திரியக்காட்சி– இந்திரியக் காட்சியாம், ஐம்புலன் சார்ந்து– அங்ஙனம் பஞ்ச விடயங்களையும் பொருந்தி அறிந்த, அயர்வு இல் இந்திரிய ஞானம்– நிருவிகற்ப அறிவாகிய இந்திரியக் காட்சி அறிவு, உயிர்க்கண்– புத்திதத்துவத்தின் கண், மயர்வு அற– சந்தேக விபரீதக் குற்றங்களாகிய மயக்கமின்றி, வந்த ஞானம்– பெயர், சாதி முதலிய விகற்பத்தோடு வருதலினால் உண்டாகும் சவிகற்ப அறிவு, மானதக்காண்டலாம்– மானதக் காட்சியாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்வேதனைக் காட்சி, யோகக் காட்சிகளின் இலக்கணம்

**அருந்து இன்பத் துன்பம் உள்ளத்து அறிவினுக்கு அராகம் ஆதி**
**தரும்தன் வேதனையாம் காட்சி சமாதியால் மலங்கள் வாட்டிப்**
**பொருந்திய தேச கால இயல்புஅகல் பொருள்கள் எல்லாம்**
**இருந்து உணர்கின்ற ஞானம் யோகநற் காண்டல் ஆமே.** 13

(இதன் பொருள்):– அராகம் ஆதி தரும்– அராகம் முதலிய ஐந்து தத்துவங்களாலுஞ் செலுத்தப்பட்டு, அருந்து இன்பத்துன்பங்கள்– அனுபவிக்கப்படும் இன்பத் துன்பங்கள், உள்ளத்து அறிவினுக்கு– ஆன்மாவின் அறிவிற்கு விடயமாதல், தன்வேதனைக் காட்சி ஆம்– தன்வேதனைக் காட்சி எனப்படும், மலங்கள்– மல சத்திகளை, சமாதியான் வாட்டி– இயமம் நியமம் முதலிய அட்டாங்க யோக சமாதியாற் கெடுத்து, இருந்து– ஓரிடத்திலிருந்து, பொருந்திய தேசம் காலம் இயல்பு அகல் பொருள்கள் எல்லாம்– பொருந்திய மூவிடத்தும் முக்காலத்தும் இயல்பாக விரிந்த பொருள்களெல்லாவற்றையும், உணர்கின்ற ஞானம்– காணுகின்ற அறிவு, நல்ல யோகக் காண்டல் ஆம்– நல்ல யோகக் காட்சியாம்.

இருவகை அனுமானங்களின் இலக்கணம்

**பக்கம் மூன்றின் மூன்று ஏது உடைய பொருளைப் பார்த்து உணரத்**
**தக்க ஞானம் தன்பொருட்டாம்; பிறர்தம் பொருட்டாம் அனுமானம்**
**தொக்க இவற்றால் பிறர்தெளியச் சொல்லல் ஆகும்; அச்சொல்லும்**
**மிக்க அன்று வயத்தினொடு எதிர்ஏகச் சொல் என இரண்டாம்.** 14

(இதன் பொருள்):– மூன்று ஏது உடைய பொருளை– இயல்பு காரியம் அநுபலத்தி என்னும் மூன்று ஏதுக்களுள் ஓர் ஏதுவையுடைய பொருளை, பக்கம் மூன்றின்– பக்கம் சபக்கம் விபக்கம் என்னும் மூன்றில் வைத்து, பார்த்து உணரத்தக்க ஞானம்– அவிநாபாவம் பற்றி ஆராய்ந்து அறியத்தக்க அறிவு, தன் பொருட்டு (அநுமானம்) ஆம்– தன்பொட்டனுமானமெனப்படுவது, தொக்க இவற்றால் பிறர்தெளியச் சொல்லல் ஆகும்– பக்கத்தோடு கூடிய ஏது மூன்றாலும் பிறர் அறியப் போதிக்கும் அறிவாகும், அச்சொல்லும்– அங்ஙனம் போதிக்கும் வாக்கியமும், மிக்க அந்நுபயத்தினோடு வெதிரேகச்சொல்லென– மேலான உடம்பாட்டு வாக்கியமும் எதிர்மறை வாக்கியமும் என, இரண்டு ஆம்– இரண்டு வகைப்படும்.

பக்கம் மூன்றின் பெயரும் இலக்கணமும்

**மூன்று பக்கம் பக்கம், நிகர் பக்கம், நிகரில் பக்கம் எனத்**
**தோன்றும்; பக்கம் துணி பொருளுக்கு இடமாம் உவமை; நிகர்பக்கம்**
**ஆன்ற பொருள் சென்று அடையாத இடமாம்; நிகரில் பக்கம் முதல்**
**ஏன்ற இரண்டும் பொருள் உண்மைக்கு இடமாம்; ஒன்று பொருள் இன்றாம்.** 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்):- பக்கம் மூன்று- மேற்கூறிய பக்கம் மூன்றும், பக்கம் நிகர்பக்கம் நிகரில்லாப் பக்கம் எனத் தோன்றும்- பக்கமும் சபக்கமும் விபக்கமும் எனக் காணப்படும், பக்கம் துணிபொருளுக்கு இடம் ஆம்- அவற்றுட் பக்கமாவது சந்தேகித்துத் துணியப்படுவதாகிய பொருளிருக்குமிடமாம், நிகர் பக்கம் உவமை- சபக்கமாவது துணியப்படுவதாகிய பொருளுக்கு உதாரணமாகக் காட்டப்படும் பொருளிருக்கும் இடமாம், ஆன்ற பொருள் சென்றடையாத இடம் நிகரில் பக்கம் ஆம்- மாட்சிமையான அப்பொருள் போய்ப் பொருந்தாத இடம் விபக்கம் எனப்படும், முதல் என்ற இரண்டும்- இம் மூன்றனுள் முதலிற் சொல்லப்பட்ட பக்கம் சபக்கம் இரண்டும், பொருள் உண்மைக்கு இடம் ஆம்- பொருள் உண்டென அறிதற்கு இடமாம், ஒன்று- மற்றைய விபக்கம், பொருள் இன்று ஆம்- அப்பொருள் இல்லையென்றறிதற்கு இடமாவதாம்.

ஏது மூன்றின் பெயரும் இலக்கணமும்

**ஏது மூன்றாம் இயல்பு, காரியத்தோடு, அனுபலத்தி, இவை**
**ஓதின், இயல்பு மாமரத்தைக் காட்டல், உறுகாரியம் புகைதன்**
**ஆதியாய அனல் காட்டல், ஆகும் அனுபலத்தி அது**
**சீதம் இன்மை பனி இன்மை காட்டல், போலும் செப்பிடினே.** 16

(இதன் பொருள்):- இயல்பு காரியத்தோடு அநுபலத்தி இவை ஏது மூன்றாம்- இயல்பு காரியம் அநுபலத்தி என்னும் இவை மேற்கூறிய மூன்ற ஏதுக்களுமாம், ஓதின்- இவற்றின் இலக்கணம் கூறப்புகின், இயல்பு- இயல்பேது, மாமரத்தைக் காட்டல் (ஆகும்)- மா முதலிய சொற்கள் தமக்கு இயல்பாயுள்ள ஆற்றலால் மரம் முதலிய பொருளை உணர்த்துதலாம், உறு காரியம்- பொருந்திய காரியவேது, புகைதன் ஆதியாய அனல் காட்டல் ஆகும்- புகை முதலிய காரியங்கள் தத்தங் காரண்களாகிய நெருப்பு முதலியவற்றை உணர்த்துதலாகும், அநுபலத்தியது- அநுபலத்தியேது வாவது, செப்பிடின்- சொல்லுமிடத்து, சீதம் இன்மை பனி இன்மை காட்டல்- குளிரின்மையாகிய காரியவின்மை பனியின்மையாகிய காரணவின்மையையும் பனியின்மையாகிய காரணவின்மை குளிர்வாராமையாகிய காரியவின்மையையும் உணர்த்துதலாம்.

உடம்பாட்டுச் சொல், எதிர்மறைச் சொற்களின் இலக்கணம்

**புகையால் அனல் உண்டு அடுக்களைபோல் என்னப் பகறல் அந்நுவயம்**
**வகையாம் அனல் இலாஇடத்துப் புகை இன்று ஆகும்; மலரினொடு**
**முகையார் நீரில் போல் என்று மொழிதல் எதிர்ஏகச் சொல் இவை**
**தொகையார் உறுப்பு ஐந்தொடும்கூடச் சொல்லுவாரும் உளர் துணிந்தே.** 17

(இதன் பொருள்):- (மேற்கூறிய அந்நுவயச்சொல் வெதிரேகச் சொல் என்னும் இரண்டனுள்) புகையால் அனலுண்டு- புகையுள்ள இடத்திலே நெருப்புண்டு, அடுக்களைபோல் என்னப் புகறல்- அடுக்களை போல என்று கூறுஞ்சொல், அந்நுவயம் உடம்பாட்டுச் சொல்லாம், வகையாம் அனல் இலா இடத்துப் புகை இன்றாகும்- விளக்கமாகிய நெருப்பில்லாதவிடத்துப் புகையில்லையாம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலரினொடு முகை ஆர் நீரில் போல் என்று மொழிதல்– மலரும் அரும்பு நிறைந்த தாமரைத் தடாகத்தைப் போல என்று கூறுஞ்சொல், வெதிரேகச் சொல்– எதிர்மறைச் சொல்லாம், இவை– இந்த இரண்டு வகைச் சொற்களையும், தொகை ஆர் ஐந்து உறுப்போடும் கூட– தொகை பொருந்திய மேற்கொள்ளும் ஏதுவும் திருட்டாந்தமும் உபநயமும் நிகமனமும் என்னும் ஐவகை உறுப்புக்களோடும் இணங்க வைத்து, துணிந்து சொல்வாரும் உளர்– தெளியக் கூறுவாருமுளர்.

அனுமானத்தில் அடங்கும் பிற அளவைகளின் இலக்கணம்

**போது நாற்றத்தால் அறிதல், பூர்வக் காட்சி அனுமானம்;**
**ஓதும் உரையால் அறிவின் அளவு உணர்தல், கருதல் அனுமானம்;**
**நீதியால் முன் கன்மபலம் நிகழ்வது, இப்போது இச்செய்தி**
**ஆதியாக வரும்பயன் என்று அறிதல், உரையால் அனுமானம்.** 18

(இதன் பொருள்):– நாற்றததால் போது அறிதல்– வாசனையாகிய ஏதுவைக் கொண்டு பூவாகிய பொருளை அறியும் அறிவு, பூர்வக் காட்சி அநுமானம்– பூர்வக்காட்சியநுமானமாகும், ஓதும் உரையால் அறிவின் அளவு உணர்தல்– ஒருவன் சொல்லும் வார்த்தையினால் (அவனுடைய அறிவின் திறத்தை அனுபமானித்து) அதனால் அறிவினெல்லையை அநுமானித்து அறியும் அறிவு, கருதல் அநுமானம்– கருதலநுமானமாகும, இப்போது நீதியான் நிகழ்வது முன் கன்ம பலம்– இப்போது முறையோடு வந்து நிகழுஞ் சுகதுக்க மோகங்களின் அநுபவம் முற்பிறவியிற் செய்த புண்ணிய பாவ கன்மங்களின் பயன் (என்று ஆகமங்கள் சொல்லுதலால்), இச் செய்தி ஆதியாக பயன் வரும் என்று அறிதல்– இப்பிறிவியிற் செய்யும் இப்புண்ணிய பாவ கன்மங்கள் காரணமாக அவற்றின் பயன்களாகிய சுகதுக்க மோகங்கள் மறுமையிற் சுவர்க்க நரகங்களிலும் பூமியிலும் வந்து பொருந்தும் என்று அந்த ஆகம வாக்கியங் கொண்டு அநுமானித்து அறியும் அறிவு, உரையால் அநுமானம்– உரையநுமானமாகும்.

ஆகமப் பிரமாணம் மூன்றின் இலக்கணம்

**அநாதியே அமலன் ஆய அறிவன் நூல் ஆகமம் தான்;**
**பின்ஆதி மாறு இன்றிப் பேணல் தந்திரம் மந்திரங்கள்**
**மனாதிகள் அடங்கித் தெய்வம் வழிபடும் வாய்மை ஆகும்;**
**தன் ஆதி ஈறு இலாதான் தன்மை உணர்த்துதல் உபதேசம்தான்.** 19

(இதன் பொருள்):– அநாதியே அமலன் ஆய அறிவன் நூல் ஆகமம் தான்– அநாதியே மலத்தினாற் பந்திக்கப்படாத முற்றறிவுடைய முதல்வன் அருளிச் செய்த நூல்கள் வேதாகமங்களாம், அவை கருமகாண்டம் உபாசனாகாண்டம் ஞானகாண்டம் என மூவகைப்படும், பின் ஆதிமாறு இன்றிப் பேணல்– அவற்றுள் கருமகாண்டம் பற்றிப் பின் முன் மாறுபாடின்றிக் கிரியைகள் அனுட்டித்தலைத் தெரிவது, தந்திரம்– தந்திரவுரையளவை எனப்படும், மனாதிகள் அடக்கித் தெய்வம் வழிபடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மை– உபாசனா காண்டம் பற்றி மனம் முதலிய கருவிகளை அடக்கிக் கடவுளை உபாசிக்கும் முறைமையினைத் தெரிவது, மந்திரங்கள் ஆகும்– மந்திரவுரையளவை எனப்படும், தன் ஆதி ஈறு இலாதான் தன்மை உணர்த்துதல்– ஞான காண்டம் பற்றித் தனக்கு முதலும் முடிவும் இல்லாத முதல்வனது இலக்கணங்களையும் பசு பாசங்களின் இலக்கணங்களையும் தான் உணருமாறும் பிறர்க்கு உணர்த்துமாறும் தெரிவது, உபதேசம் தான்– உபதேசவுரையளவை எனப்படும்.

அனுமான அளவையைப் பயன்படுத்துவதில் உண்டாகும் குற்றங்களின் குறைபாடு

ஈண்டு பக்கப் போலி நான்கு, ஏதுப் போலி ஒரு மூன்றாய்,
வேண்டும் எழுமூன்று ஆகும் விளங்கு உவமைப் போலி ஈர்ஒன்பான்
காண்டும் தோல்வித் தானம் இரண்டு இருபத்து இரண்டாம்; கருதில் இவை
யாண்டும் மொழிவர் அவையெல்லாம் அளக்கில், அறுபத்து ஐந்து ஆகும். 20

(இதன் பொருள்):– ஈண்டுபக்கப் போலி நான்கு– அனுமானவுறுப்பாகச் செறிந்த பக்கப்போலி நான்கு வகையாகும், ஏதுப் போலி ஒரு மூன்றாய் வேண்டும் எழு மூன்றாகும்– ஏதுப் போலி மூவகைப்பட்டு விரியினாலே வேண்டப்படுகின்ற இருபத்தொன்றாகும், விளங்கு உவமைப் போலி ஈரொன்பான் காண்டும்– விளங்குகின்ற உவமைப்போலி பதினெட்டாகக் காண்போம், தோல்வித்தானம் இரண்டு இருபத்திரண்டாம்– தோல்வித்தானம் வகையால் இரண்டாகி விரியால் இருபத்திரண்டாகும், கருதில் இவை ஆண்டு மொழிவர்– ஆராயுங்கால் இவைகளை வாதம் நிகழ்த்துங்கால் எடுத்துச் சொல்லுவர், அளக்கில் அவை எல்லாம் அறுபத்தைந்து ஆகும்– அளக்குமிடத்தில் அவைகளெல்லாம் அறுபத்தைந்தாகும்.

## முதற் சூத்திரம்

பதி உண்மை

ஒருவனோடு ஒருத்தி ஒன்றுஎன்று உரைத்திடும் உலகம் எல்லாம்
வருமுறை வந்து நின்று போவதும் ஆதலாலே
தருபவன் ஒருவன் வேண்டும்; தான் முதல் ஈறும் ஆகி
மருவிடும் அநாதி முத்த சித்துரு மன்னி நின்றே. 21

(இதன் பொருள்):– ஒருவனோடு ஒருத்தி ஒன்று என்று உரைத்திடும் உலகம் எல்லாம்– அவன் என்றும் அவள் என்றும் அது என்றும் கூறப்படும் சேதனாசேதனப் பிரபஞ்சமெல்லாம், வருமுறை வந்து நின்று போவதும் ஆதலால்– தோன்றும் முறையிலே தோன்றி நின்று ஒடுங்குதலும் உடைமையால், தருபவன் ஒருவன் வேண்டும்– அங்ஙனம் அவற்றைத் தோற்றுவித்து நிலைபெறுத்தி ஒடுக்கும் கருத்தா ஒருவன் வேண்டப்படும், தான்– அக்கருத்தா, முதல் ஈறும் ஆகி– தனக்கொரு முதல்வனின்றித் தானே எவற்றிற்கும் நிமித்த காரணனும் சங்கார காரணனுமாய்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநாதி முத்த சித்து உரு மன்னிநின்று– இயல்பாகவே பாசம் நீங்கிய ஞானமாகிய சத்தி வடிவத்தைப் பொருந்தி நின்று, மருவிடும்– அவற்றைக் காரியப்படுத்தும் இயல்புடையனாம்.

வந்து நின்று போவதை வலியுறுத்துகின்றது

**உதிப்பதும் ஈறும் உண்டு என்று உரைப்பது இங்கு என்னை? முன்னோர்**
**மதித்து உலகு அநாதி யாக மன்னியது என்பர் என்னின்**
**இதற்குயான் அனுமானம் ஆதி எடேன் இப்பூதாதி எல்லாம்**
**விதிப்படி தோற்றி மாயக் காணலால் மேதி னிக்கே.** 22

(இதன் பொருள்):– உதிப்பதும் ஈறும் உண்டு என்று இங்கு உரைப்பது என்னை– உலகிற்குத் தோற்றமும் நாசமும் உண்டென்று இங்கே கூறுவது என்ன? முன்னோர்– உலோகாயத நூலை உணர்ந்த அறிஞர், மதித்து– பிரத்தியட்சமாகக் காணப்படாதவெல்லாம் பிரமாணமன்றென நிச்சயித்து, உலகம் அநாதியாக மன்னியது என்பர் என்னின்– இவ்வுலகம் எப்பொழுதும் நிலை பெற்றுள்ளது என்று சொல்வர் என நீ சொல்லின், இப்பூதம் ஆதி எல்லாம்– இப்பூதங்களும் இவற்றின் காரியமாகிய தேகாதிப் பிரபஞ்சமெல்லாம், மேதினிக்கே– பூமியின் கண்ணே, விதிப்படி– முதலவன் நியமித்தபடி, தோற்றி மாயக் காணலான்– தோன்றி அழியப் பிரதியட்டசமாய்க் காணப்படுதலால், பூதங்களின் காரியமான உலகிற்கும் தோற்றமும் நாசமும் உண்டென்பது தானே போதரும், ஆதலால் இதற்கு– இதனைச் சாதித்தற்கு, யான் அநுமானாதி எடேன்– யான் அநுமானம் முதலிய பிரமாணங்களை எடுத்துக் கூறமாட்டேன்.

தருபவன் ஒருவன் வேண்டும் என்பதைக் கூறுகிறது

**இயல்புகாண் தோற்றி மாய்கை என்றிடின், இயல்பி னுக்குச்**
**செயலது இன்று; இயல்பு செய்தி செய்தியேல், இயல்பது இன்றாம்;**
**இயல்பதாம் பூதம் தானே இயற்றிடும் செய்தி என்னில்,**
**செயல் செய்வான் ஒருவன் வேண்டும், செயற்படும் அசேத னத்தால்.** 23

(இதன் பொருள்):– தோற்றி மாய்கை– அத்தோற்ற நாசங்கள், இயல்பு காண் என்றிடின்– உலகிற்கு இயல்பாயுள்ளன. அவற்றைக் காரியப்படுத்த ஒரு கருத்தா வேண்டுவதில்லை என்?று நீ சொல்லின், இயல்பினுக்குச் செயலது இன்று– இயற்கைக்குத் தோன்றுதலும், அழிதலும் ஆகிய விகாரம் இல்லையாம், இயல்பு– இயல்பாவது, செய்தி செய்தியேல்– தோன்றி அழிதலாகிய விகாரச் செயலாகும் என்பாயாயின், இயல்பது இன்றாம்– இயல்பு என்பது ஒன்று இல்லையாய் முடியும், இயல்பதாம் பூதம் தானே– இனி, இயல்பாயுள்ளவாகிய நான்கு பூதங்களுமே, செய்தி இயற்றிடும் என்னின்– தோற்ற நாசங்களாகிய விகாரத்தைச் செய்யும் என்று நீ சொல்லின், செயற்படும் அசேதனத்தால்– அவை தோன்றி அழிதலாகிய தொழிலைப் பொருந்தி நிற்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடப்பொருளாயிருத்தலால், செயல் செய்வான் ஒருவன் வேண்டும்- அவற்றைக் காரியப்படுத்தும் ஒரு கருத்தா அவற்றின் வேறாக வேண்டப்படும்.

இதுவும் அது

நிலம் புனல் அனல்கால் காண நிறுத்திடும் அழிக்கும் ஆக்கும்
பலம்தரும் ஒருவன் இங்குப் பண்ணிட வேண்டாம் என்னில்.
இலங்கிய தோற்றம் நிற்றல் ஈறுஇவை இசைத லாலே.
நலம்கிளர் தோற்றம் நாசம் தனக்குஇலா நாதன் வேண்டும். 24

(இதன் பொருள்):- பூதங்களைச் செயப்படுபொருள் என்றும் அசேதனம் என்றும் கூறுவது அமையாது, நிலம் புனல் அனல்கால்- பிருதிவி, அப்பு, தேயு, வாயு என்னும் நான்கு பூதங்களும் (வினைமுதற் பொருளாய் நின்று தம்முட் கூடியும் பிரிந்தும்), காண ஆக்கும் நிறுத்திடும் அழிக்கும் பலம் தரும்- காணும்படி பிரபஞ்சத்தைத் தோற்றுவித்தலும் நிறுத்தலும் அழித்தலுமாகிய காரியத்தைச் செய்யும் ஆதலால், பண்ணிட இங்கு ஒருவன் வேண்டா என்னின்- இத் தோற்ற நாசங்களைச் செய்ய இவ்விடத்து ஒரு கருத்தா இப்பூதங்களுக்கு வேறாக வேண்டுவதில்லை என்னின், இலங்கிய இவை- விளங்கிய இந்நான்கு பூதங்களும், தோற்றம் நிற்றல் ஈறு இசைதலால்- தனித்தனி தோன்றல் நிற்றல் அழிதலாகிய முத்தொழிலையும் அடைதலால், இவை காரியப்படுத்தும் ஆற்றல் உடையனவல்ல. ஆதலால், தோற்றம் நாசம் தனக்கு இலா- இப்பூதங்கள் போலத் தோன்றி நின்று அழிதலாகிய முத்தொழிற்படுதல் தனக்கில்லாத, நலம் கிளர் நாதன் வேண்டும்- மேம்பாடுடைய இறைவன் வேறு வேண்டப்படும்.

சற்காரிய வாத அடிப்படையில் நிறுவுவது

சார்பினில் தோன்றும் எல்லாம் தருபவன் இல்லை என்னில்
தேரின் இல்லதற்கோ தோற்றம். உள்ளதற்கோ நீ செப்பாய்:
ஓரின் இல்லதுவும் தோன்றாது: உள்ளதேல் உதிக்க வேண்டா:
சோர்வு இலாது இரண்டும் இன்றி நிற்பது தோன்றும் அன்றே. 25

(இதன் பொருள்):- எல்லாம் சார்பினில் தோன்றும்- பொருள்களெல்லாம் வித்தின் அழிவில் முளை தோன்றுவது போல அவ்வச்சார்பிலே தோன்றும், தருபவன் இல்லை என்னின்- இவற்றைத் தோற்றுவிக்கும் கருத்தா ஒருவன் வேண்டப்படுவதில்லையென்னின், தேரின் தோற்றம் இல்லதற்கோ உள்ளதற்கோ நீ செப்பாய்- ஆராயுமிடத்துச் சார்பிற்றோற்றம் இல்பொருளுக்கோ உள்பொருளுக்கோ என்பதை நீ கூறுவாயாக, ஓரின் உள்ளதேல் உதிக்க வேண்டா- உணருமிடத்து உளதாய்த் தோன்றி நிற்கும் பொருளுக்காயின் குடம்போல அது தோன்ற வேண்டுவதில்லை, இல்லதும் தோன்றாது- இல்பொருளுக்காயின் முயற்கொம்பு போல அதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருகாலுந் தோன்றுவதில்லை, இரண்டும் இன்றி சோர்விலாது நிற்பது தோன்றும்– ஆதலாற் பாரிசேடவளவையால் இவ்விரண்டுமின்றி உளதாய்த், தோன்றாது சூக்கும ரூபமாய் நிற்பதொருபொருள் தோன்றும்.

இதுவும் அது

**உள்ளதும் இலதும் இன்றி நின்றது ஒன்று உளதேல் உண்டாம்;**
**இல்லதேல் இல்லை ஆகும்; தோற்றமும் இசையா தாகும்;**
**உள்ள காரணத்தில் உண்டாம் காரியம் உதிக்கும் மண்ணில்**
**இல்லதாம் படம் கடாதி எழில்தரும் இயற்று வானால்.** 26

(இதன் பொருள்):– உள்ளதும் இலதும் இன்றி நின்றது ஒன்று– அங்ஙனம் உள்பொருளாதலும் இல்பொருளாதலுமின்றி வெளிப்படாது சூக்குமரூபமாய் நிற்கும் காரியப்பொருள், உளதேல் உண்டாம்– உள்பொருளாயின் அது என்றும் உளதாகும், இல்லதேல் இல்லையாகும்– இல்பொருளாயின் அது என்றும் இலதாகும், தோற்றமும் இசையாதாகும்– அன்றியும் அவ்வில் பொருளுக்குத் தோற்றமும் கூடாதாகும். ஆதலால், உண்டாம் காரியம்– உளதாகிய காரியப்பொருளே, உள்ள காரணத்தில் உதிக்கும்– உளதாகிய காரணத்தினின்று ஒரு கருத்தாவால் வெளிப்பட்டுத் தோன்றும். அது, இயற்றுவானால்– குயவனால், மண்ணில் படம் இல்லதாம்– மண்ணாகிய முதற்காரணத்தினின்றும் புடைவை முதலிய காரியம் தோன்றாது. கடாதி எழில்தரும்– குடம் முதலிய காரியம் வெளிப்பட்டுத் தோன்றுவது போலாம்.

இதுவும் அது

**ஒருபொருள் ஒருவன் இன்றி உளது இலது ஆகும் என்னில்**
**தருபொருள் உண்டேல், இன்றாம் தன்மையின் இன்று; இன்றேல் உண்டாய்**
**வருதல் இன்று; இலது காரியம் முதல் உளது ஆகும் என்னில்,**
**கருது காரியமும் உண்டாய்த் தோற்றமும் கருத்தாவால் ஆம்.** 27

(இதன் பொருள்):– ஒருபொருள்– மேற்கூறியவாறு கொள்ளாது ஒரு காரியப்பொருள், ஒருவன் இன்றி– ஒரு கருத்தாவின்றி, உளது இலது ஆகும் என்னின்– தனது காரணத்தினின்றும் தானே தோன்றித் தானே அழியும் என்னின், தருபொருள் உண்டேல்– அங்ஙனம் தானே தோன்றும் பொருள் ஒன்று உண்டாயின், இன்றாம் தன்மை இன்று– அதற்கு அழியும் தன்மை கூடாதாம். இன்றேல்– தானே அழியுமாயின், உண்டாய் வருதல் இன்று– மீளத் தோன்றி வருதல் கூடாதாம். ஆதலால் தானே தோன்றித் தானே அழியும் என்பது பொருந்தாது, காரியம் இலது முதல் உளதாகும் என்னின்– இனிக் காரியம் இல்லது காரணமே உள்பொருள் என்னின், கருது காரியமும் உண்டாய்– காரணம் உள்பொருளாகவே கருதுகின்ற காரியமும் அதினிடத்துச் சூக்குமமாய் அடங்கி நிற்கும் உள்பொருளாய், தோற்றமும் கருத்தாவால் ஆம்– அது பின்பு தூலரூபமாக் வெளிப்பட்டுத் தோன்றுதலும் ஒரு கருத்தாவினாலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலைப்போல உலகமும் நின்று ஒடுங்கும் எனக் கூறுகின்றது

**காயத்தின் அழிவு தோற்றம் கண்டனம்; உலகில் காணாம்;**
**நீ இத்தை உரைத்தவாறு இங்கு என் எனில், நிகழ்த்தும் உண்மை**
**மாயத்த உலகம் பூ, நீர், தீ, வளி, வானம் ஆதி**
**ஆய இத்தால் ஒன்றின் ஒன்று தோன்றி நின்று அழிதலாலே.** 28

(இதன் பொருள்):- காயத்தின் தோற்றம் அழிவு கண்டனம்- காயத்துக்குத் தோற்றமும் நாசமும் கண்டோம், உலகில் காணோம்- உலகிற்குக் காண்கின்றிலம், நீ இங்கு இத்தை உரைத்தவாறு என் எனில்- நீர் இவ்விடத்துத் தோற்றமும் நாசமும் உலகிற்கு உண்டென்று கூறிய முறைமை என்னையெனில், மாயத்த உகலம்- மயக்கத்தைச் செய்யும் உலகம், பூ நீர் வளி வானம் ஆதி ஆயி- பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்னும் பூதங்களைத் தனக்கு முதற் காரணமாகவுடைத்தாயிருத்தலாலும், தான்- அப்பூதம் ஐந்தும், ஒன்றின் ஒன்று- ஒன்றைப்போல மற்றதும், தோன்றி நின்று அழிதலால்- தோன்றி நின்று அழிதலாலும், உண்மை நிகழ்த்தும்- தன்பாலும் தோற்ற நாசங்கள் உளதாந் தன்மையை அறிவிக்கும்.

உலகம் தோன்றி ஒடுங்குவது எனக் கூறுகின்றது

**ஓரிடம் அழியப் பின்னும் ஓரிடம் நிற்கும் ஒக்கப்**
**பாரிடம் அழிவது இன்றாம் என்றிடில், பயில்வித்து எல்லாம்**
**காரிடம் அதனில் காட்டும் அங்குரம் கழியும் வேனில்**
**சீருடைத்து உலக காலம் சேர்ந்திடப் பெயர்ந்து செல்லும்.** 29

(இதன் பொருள்):- (உலகம் தோன்றி அழியும் என்பது ஒக்கும் அங்ஙனமாயினும்) ஓரிடம் அழியப் பின்னும் ஓரிடம் நிற்கும்- முன்னே ஒருபக்கம் அழிந்துபோகப் பின்னும் ஒருபக்கம் அழியாது நிற்கும், பாரிடம் ஒக்க அழிவது இன்றாம் என்றிடின்- ஆதலால் உலகம் முழுவதும் ஒருங்கே அழிவதில்லையாம் என்று சொல்லின், அப்படியன்று, பயில்வித்து எல்லாம்- பூமியிற் கிடக்கும் வித்துக்களெல்லாம், காரிடமதனில் அங்குரம் காட்டும்- கார்காலத்திலே முளைகளைத் தோற்றுவிக்கும், வேனில் கழியும்- அங்ஙனம் தோன்றியவை வேனிற்காலத்திலே ஒருங்கே அழியும், சீர உடைத்து உலகு- இத்தன்மையான உலகமும், காலம் சேர்ந்திடப் பெயர்ந்து செல்லும்- தனக்குக் காலம் சேர்ந்தபோது நிலைகுலைந்து ஒருங்கே அழியும்.

துணைக் காரணமும் நிமித்த காரணமும்

**காலமே கடவுள் ஆகக் கண்டனம் தொழிலுக்கு என்னில்,**
**காலமோ அறிவு இன்று ஆகும்; ஆயினும், காரியங்கள்**
**காலமே தரவே காண்டும்; காரணன் விதியினுக்குக்**
**காலமும் கடவுள் ஏவ லால் துணைக் காரணம்காண்.** 30



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்):- (காலம் சேர்ந்தபோது நிலைகுலைந்து அழிதலால்) தொழிலுக்கு- அத்தோற்றக்கேடுகளுக்கு, காலமே கடவுளாகக் கண்டனம் என்னின்- காலமே கருத்தாவாகக் கண்டோம் என்று சொல்லின், காலமோ அறிவின்றாகும்- காலமோ அறிவில்லாத சடப்பொருளாம், (ஆதலால் அது கருத்தாவாகாது), ஆயினும் காரியங்கள் காலமே தரவேகாண்டும்- அங்ஙனமாயினும் போக்கியப் பொருளின் தோற்றக் கேடுகளாகிய காரியங்களைக் காலமே தரக்காண்கின்றோம். ஆதலின், காரணன் விதியினுக்கு- நிமித்த காரணமாகிய கருத்தா செய்யுந் தொழிலுக்கு, காலமும்- காலமும், கடவுள் ஏவலால்- அறிவுடைய அக்கருத்தாவின் ஆணையாற் செலுத்தப்படலால், துணைக்காரணம் காண்- துணைக் காரணம் என்றறிவாயாக.

அணுக்கள் உலகிற்கு முதுற்காரணம் ஆகா

**அழிந்தபின் அணுக்கள் தாமே அகிலமாய் வந்து நின்று,**
**கழிந்திடும் கன்மத்து என்னில் கன்மமும் அணுவும் கூட**
**மொழிந்திடும் சடமே ஆகி முதலால், முடியா செய்தி**
**ஒழிந்திடும் அணுரூபங்கள் உலகுஎலாம் ஒடுங்கும் அன்றே.** 31

(இதன் பொருள்):- அழிந்தபின்- உலகம் அழிந்த பின்பு, அணுக்கள் தாமே- அழிவின்றி நித்தமாயிருக்கும் பரமாணுக்களே, கன்மத்து- கன்மம் ஏதுவாக, அகிலமாய் வந்து நின்று கழிந்திடும் என்னின்- உலகமாய்த் தோன்றி நின்று அழியும் என்னின் அப்படியன்று, மொழிந்திடும் கன்மமும் அணுவும் கூட- சொல்லப்பட்ட கன்மமும் அணுவும் ஆகிய இரண்டும் கூடினும், சடமே ஆகி முடிதலான்- சடமாகவே முடிதலாலும், உலகு எலாம் ஒடுங்கும் அன்று- உலகம் முழுவதும் ஒடுங்கும் பொழுது, அணுரூபங்கள் ஒழிந்திடும்- உருவமுடைய அணுக்களும் ஒடுங்குமாதலாலும், செய்தி முடியா- அவ்வணுக்கள் உலகமாய்த் தோன்றி நின்று அழிதல் கூடாது.

மாயையே உலகிற்கு முதற்காரணம்

**காரண அணுக்கள் கெட்டால் காரிய உலகு இன்று என்னில்,**
**காரணம் மாயை ஆகக் காரியம் காணல் ஆகும்;**
**காரணம் மாயை என்னை காண்பதுஇங்கு அணுவே என்னில்,**
**காரணம் மாயையே காண் காரியம் அணுவில் கண்டால்.** 32

(இதன் பொருள்):- காரண அணுக்கள் கெட்டால்- காரணமாகிய பரமாணுக்கள் அழிந்தால், காரிய உலகு இன்று என்னின்- அவற்றின் காரியமாகிய பிரபஞ்சம் இல்லையாகும் என்னின், காரணம் மாயையாக- உலகிற்கு முதற்காரணம் மாயையாயிருத்தலால், காரியம் காணலாகும்- அவ்வணுக்கள் அழியினும் காரியமாகிய பிரபஞ்சம் மீளத்தோன்றுவதாகும், காரணம் மாயை என்னை- உலகிற்கு முதற்காரணம் மாயை என்பது என்னை, இங்கு காண்பது அணுவே என்னின்- இவ்விடத்து முதற்காரணமாகக் காணப்படுவது பரமாணுவே என்னின், காரியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுவில் கண்டால்– காரியத்தன்மை பரமாணுக்களிடத்தே காணப்படுதலால் அவை உலகிற்கு முதற்காரணமாதல் கூடாது. ஆதலின், காரணம் மாயையே காண்– முதல் காரணம் மாயையே என அறிவாயாக.

அணுக்கள் காரியப்பொருள்; ஆகவே அவை முதற்காரணம் ஆகா

**காரியம் என்பது என்னை காரண அணுவை என்னில்,**
**காரியம் அவயவத்தால் கண்டனம் கடாதி போலக்**
**காரிய உருவம் எல்லாம் அழிதரும் காரணத்தால்,**
**காரிய உறுப்புஇல் மாயை தரும் எனக் கருதிடாயே.** 33

(இதன் பொருள்):– காரண அணுவை– உலகிற்கு காரணமாகிய பரமாணுக்களை, காரியம் என்பது என்னை என்னின்– காரியம் என்று சொல்லுவது எப்படியெனின், காரியம் கடாதி போல அவயத்தால் கண்டனம்– அணுக்கள் காரியப்பொருட்கள் என்பது குடம் முதலியவை போல அவயவமுடைமையால் அறிந்தனம், காரிய உருவம் எல்லாம்– காரியமாகிய உருவப் பொருள்களெல்லாம், அழிதரும் காரணத்தால்– அழிந்துபோகும் தன்மையுடைமையால், காரிய உறுப்பு இல் மாயை– காரியமான அவயவத் தன்மையில்லாத மாயையே முதற்காரணமாய், தரும் எனக் கருதிடாய்– அப்பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கும் என நீ அறிவாயாக.

மாயை முதற்காரணம் என்பதற்குப் பிரமாணம்

**தோற்றமும் நிலையும் ஈறும் மாயையின் தொழில்அது என்றே**
**சாற்றிடும் உலகம் வித்துச் சாகாதி அணுக்களாக**
**ஏற்றதேல் ஈண்டு நிற்கும்; இல்லதேல் இயைவது இன்றாம்;**
**மாற்றம்நீ மறந்தாய், இத்தால் மாயையை மதித்திடாயே.** 34

(இதன் பொருள்):– தோற்றமும் நிலையும் ஈறும்– தோற்றம் நிலை இறுதி என்னும் முத்தொழிலும், மாயையின் தொழிலது என்றே சாற்றிடும் உலகம்– மாயையினது செயலென்றே சொல்லப்படும் அறிஞர் வாக்கையும், வித்து சாகாதி அணுக்களாக ஏற்றதேல்– வித்தானது இலை முதலியவைகளைச் சூக்குமரூபமாகத் தரித்து நின்றதாயின், ஈண்டு நிற்கும்– அவை இவ்விடத்துத் தூல ரூபமாயம் வெளிப்பட்டு நிற்கும், இல்லதேல்– அவ்வாறு சூக்கும ரூபமாய் அடங்கி நிற்றல் இல்லதாயின், இயைவது இன்றாம் மாற்றம்– அவை தூலரூபமாக வெளிப்படுத்தலுமின்றாம், என உடன்பாடும் எதிர்மறையுமாகக் கூறப்படும் வழக்கச் சொல்லையும், நீ மறந்தாய்– நீ மறந்துவிட்டாய், இத்தால்– காரியவுறுப்பின்மை மாத்திரமன்றி ஆத்தவாக்கியம் வழக்கச் சொல் என்னும் இவற்றாலும், மாயையை மதித்திடாய்– அணுக்கள் உலகிற்கு முதற்காரணம் என்பதனைவிட்டு மாயையே முதற் காரணம் என்பதனை அறிவாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரண காரிய இயைபு

**மாயையயின் உள்ள வஞ்சம் வருவது போவ தாகும்;**
**நீ அது இங்கு இல்லை என்னில், நிகழ்ந்திடும் முயலின் கோடு;**
**போய்உகும் இலைகள் எல்லாம் மரங்களில் புக்குப் போதின்**
**ஆயிடும் அதுவும் என்னில் காரணம் கிடக்க ஆமே.** 35

(இதன் பொருள்):- மாயையயின் உள்ள வஞ்சம்- மாயையினிடத்து முன் சூக்கும ரூபமாய் ஒடுங்கியிருந்த பிரபஞ்சமே, வருவது போவது ஆகும்- பின் தூலரூபமாய்த் தோன்றி ஒடுங்குவதாகும், நீ இங்கு அது இல்லை என்னின்- நீ இவ்விடத்து உள்ளது தோன்றும் என்னும் சற்காரிய காரணங்கொள்ளாது இல்லது தோன்றும் என்பையாயின், முயலில் கோடு நிகழ்ந்திடும்- முயலினிடத்தும் கொம்பு தோன்றுவதாகும், போய் உகும் இலைகள் எல்லாம்- முதிர்ந்து உதிர்ந்த இலைகள் எல்லாம், மரங்களில் புக்குப் போதின்- மரங்களிலே ஒடுங்கி மீண்டும் இலைகளாகப் புறப்படுமாயின், அதுவும் ஆயிடும் என்னின்- பிரபஞ்சமும் நீ கூறிய மாயையிலே ஒடுங்கி மீளத் தோன்றும் என்னின், அஃதொக்கும், காரணம் கிடக்க- உதிர்ந்த இலைகள் சூக்குமரூப காரணமாய் நிலைபெற்றுப் பிருதிவியில் ஒடுங்கி மீளவும் இலை முதலியனவாய் வருதலின், ஆம்- பிரபஞ்சமும் அவ்வாறு மாயையிலே ஒடுங்கி மீளவும் தோன்றுவதாகும்.

பிரபஞ்சம் நித்தப் பொருள் எனக் கூறுகின்றது

**கருது காரணம் உண்டாகக் காரியம் உள்ளது ஆகி**
**வருதலால் அநாதி வையம் மற்றொரு கடவுள் இத்தைத்**
**தருதலால் ஆதி யாகச் சாற்றலும் ஆகும் மாயைக்கு**
**ஒருவன் ஆர் என்இங்கு என்னில் உள்ளவாறு உரைப்பக் கேள், நீ.** 36

(இதன் பொருள்):- கருது காரணம் உண்டாக- சொல்லப்பட்ட காரணம் உள் பொருளாக, காரியம் உள்ளதாகி வருதலால்- காரியமும் உள்பொருளாகி அதனிடத்துத் தோன்றுதலின், வையம் அநாதி- காரியமாகிய பிரபஞ்சமும் நித்தியப் பொருளேயாம், ஒரு கடவுள் இத்தைத் தருதலால்- ஒரு கருத்தா இதனைத் தோற்றி ஒடுக்குதலால், ஆதியாகச் சாற்றலும் ஆகும்- அழி பொருள் என்று சொல்லவும்படும், மாயைக்கு ஒருவன் ஆர் இங்கு என் என்னின்- அங்ஙனமாயினும் மாயையே தன்காரியமாகிய பிரபஞ்சத்தைத் தரும் அதற்குக் கருத்தா ஆர்? அவர் இவ்விடத்து எற்றுக்கெனின், உள்ளவாறு உரைப்ப நீ கேள்- அதனை உள்ளபடி உரைப்போம் நீ கேட்பாயாக.

உலகம் இறைவனாலேயே தோற்றுவிக்கப்பட்டு ஒடுக்கப்படுகிறது எனக் கூறுகின்றது

**புத்திமன் காரியத்தால் பூதாதி புருடன் தானும்,**
**அத்தனு கரணம் பெற்றால், அறிதலால் அவற்றை மாயை**
**உய்த்திடும் அதனால், மாயைக்கு உணர்வு ஒன்றும் இல்லை என்றே**
**வைத்திடும் அதனால் எல்லாம் வருவிப்பான் ஒருவன் வேண்டும்.** 37



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்):- பூதாதி- பூதம் முதலிய பிரபஞ்சமெல்லாம், புத்திமத் காரியத்தால்- (குடம் குயவனாற் செய்யப்படும காரியமானாற்போல) ஒரு சேதனனாற் செய்யப்படும் காரியமாயிருத்தலாலும், புருடன் தானும்- சேதனனாகிய புருடனும், அத் தனு கரணம் பெற்றால் அறிதலால்- அப்பூதம் முதலியவற்றாலாகிய தனு கரணங்களைப் பெற்றவிடத்து அறிதலானும், மாயை அவற்றை உய்த்திடும்- மாயை அவற்றிற்கு முதற்காரணமாய் அவற்றைச் செலுத்துமாயினும், அதனால் மாயைக்கு உணர்வு ஒன்றும் இல்லை என்றே வைத்திடும் அதனால்-- அக்காரணம் பற்றி அம் மாயைக்கு அறிவு சிறிதும் இல்லையென்று கூறியிருத்தலாலும், எல்லாம் வருவிப்பான் ஒருவன்- (பாரசேடப் பிரமாணத்தால்) பூதம் முதலிய பிரபஞ்சமெல்லாவற்றையும் மாயையினின்றும் தோற்றுவித்து நிலைபெறுத்தி அழிக்குங் கடவுள் ஒருவன், வேண்டும்- இவையெல்லாவற்றினும் வேறாய் வேண்டப்படுவன்.

காரிய நிகழ்ச்சிக்குத் தேவைப்படும் மூவகைக் காரணங்கள்

**காரிய காரணங்கள் முதல், துணை, நிமித்தம் கண்டாம்;**
**பாரின் மண், திரிகை, பண்ணும் அவன், முதல் துணை நிமித்தம்;**
**தேரின், மண்மாயை ஆகத், திரிகைதன் சத்தி ஆக,**
**ஆரியன் குலாலன் ஆய்நின்று ஆக்குவன் அகிலம் எல்லாம்.** 38

(இதன் பொருள்):- காரிய காரணங்கள்- ஒரு காரிய நிகழ்ச்சிக்கு வேண்டப்படும் காரணங்கள், முதல் துணை நிமித்தம் கண்டாம்- முதற்காரணம் துணைக்காரணம் நிமித்தகாரணம் என மூன்றாதலை அறிந்தாம். பாரில்- பூமியின் கண்ணே, மண் திரிகை பண்ணுமவன்- குடம் முதலியவற்றைச் செய்தற்கு மண்ணும் திரிகையும் செய்வோனாகிய குயவனும், முதல் துணை நிமித்தம்- முறையே முதற்காரணமும் துணைக்காரணமும் நிமித்த காரணமுமாம், தேரின்- ஆராயுமிடத்து, மாயை மண் ஆக- மாயையை மண்போல முதற் காரணமாகவும், தன் சத்தி திரிகை ஆக- தனது சக்தியைத் திரிகை போலத் துணைக் காரணமாகக் கொண்டு, ஆரியன் குலாலனாய் நின்று- சிவபெருமான் குயவன்போல நிமித்தகாரணனாகி நின்று, அகிலம் எல்லாம் ஆக்குவன்- பிரபஞ்சமெல்லாவற்றையும் தோற்றுவிப்பன்.

தருபவன் தரும் முறையைத் தொகுத்துக் கூறுகின்றது

**விந்துவின் மாயை ஆகி மாயையின் அவ்வியத்தம்,**
**வந்திடும் விந்துத் தன்பால் வைகரி ஆதி மாயை**
**முந்திடும் அராகம் ஆதி முக்குணம் ஆதி மூலம்**
**தந்திடும் சிவன் அவன்தன் சந்நிதி தன்னில் நின்றே.** 39

(இதன் பொருள்):- விந்துவின் மாயை ஆகி- மேலே முதற்காரணம் எனப்பட்ட சுத்தமாயையினின்றும் அசுத்தமாயை விருத்தியாகி, மாயையின் அவ்வியத்தம் வந்திடும்- அவ்வசுத்த மாயையினின்றும் பிரகிருதிமாயை தோன்றும், விந்துத் தன்பால்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தமாயையினின்றும், வைகரி ஆதி (வந்திடும்)– (ஒடுங்கு முறை பற்றி) வைகரி முதலிய நான்கு வாக்குகளுகந் தோன்றும், மாயை– அசுத்தமாயையினின்றும், அராகம் ஆதி முந்திடும்– (ஒடுங்குமுறை பற்றி) அராகம் முதலிய காரண தத்துவங்கள் ஐந்தும் பிரகிருதிக்கு முன்னாகத் தோன்றும், மூலம்– (அராகம் முதலியவற்றிற்குப் பின்னர் தோன்றும்) பிரகிருதிமாயை, முக்குணம் ஆதி தந்திடும்– (தோன்றும் முறைபற்றி) குணதத்துவம் முதலிய போக்கிய தத்துவம் இருபத்து நான்கையும் தோற்றுவிக்கும், சிவனவன் தன் சந்நிதிதன்னில் நின்று இவை பரமசிவனது சத்திரூப சந்நிதியினின்றும் இங்ஙனம் காரியப்படும்.

## வைகரி வாக்கின் இலக்கணம்

**வைகரி செவியில் கேட்ப தாய்அத்த வசனம் ஆகி,**
**மெய்தரு உதான வாயு மேவிட விளைந்த வன்னம்**
**பொய்யற அடைவு உடைத்தாய்ப் புந்தி காரணம் அது ஆகி**
**ஐயம் இல் பிராண வாயு அடைந்து எழுந்து அடைவு உடைத்தாம்.** 40

(இதன் பொருள்):– வைகரி– (மேற்கூறிய வாக்கு நான்கனுள்) வைகரி வாக்கானது, செவியிற் கேட்பதாய்– தன் செவிக்கும் பிறர் செவிக்கும் கேட்கப்படுவதாயும், அத்தவசனமாகி– நினைத்த பொருளைச் சொல்லும் சொல்லாயும், புத்தி காரணமதாகி– (சொல்வானுக்கும் கேட்பானுக்கும்) சவிகற்ப உணர்வு உணடாதற்கேதுவாயும், மெய்தரும் உதான வாயு மேவிடவிளைந்த வன்னம்– உடம்பின்கண் எழுகின்ற உதானவாயு பொருந்துதலினாலே மத்திமைத்தானத்திலே சூக்குமரூபமாய்ப் பிரிந்து தோன்றிய அக்கரங்கள், ஐயம் இல் பிராணவாயு அடைந்து எழுந்து– சந்தேகமின்றி இயங்கும் பிராணவாயுவினாற் செலுத்தப்பட்டு எழுந்து, பொய் அற அடைவு உடைத்தாய்– விபரீதமறப் புறத்தே தூலரூபமாய் வருதலுடையதாயுமுள்ள, அடைவு உடைத்தாம்– இலக்கணத்தையுடையதாம்.

## மத்திமை வாக்கின் இலக்கணம்

**உள்உணர் ஓசை ஆகிச் செவியினில் உறுதல் செய்யாது,**
**ஒள்ளிய பிராண வாயு விருத்தியை உடையது அன்றித்**
**தெள்ளிய அக்கரங்கள் சிந்திடும் செயலது இன்றி**
**மெள்ளவே எழுவது ஆகும் மத்திமை வேறுஅது ஆயே.** 41

(இதன் பொருள்):– உள் உணர்வு ஓசை ஆகி– சொல்லுவான் தன்னுள்ளே உணர்வதாயும் தனக்குக் கேட்பதாயும், செவியினில் உறுதல் செய்யாது– பிறர் செவியிற் கேட்கப்படாததாயும், ஒள்ளிய பிராணவாயு விருத்தியை உடையது அன்றி– விளங்கிய பிராணவாயுவின் தொழிற்பாடில்லாமைபற்றி, தெள்ளிய அக்கரங்கள் சிந்திடும் செயலது இன்றி– சூக்குமரூபமாய்ப் பிரிந்து தோன்றிய அக்கரங்கள் பிரிந்து தோன்றினாலும் பல் இதழ் நா அண்ணங்களிற் பட்டுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதறிப் போகுஞ் செயலில்லதாயும், மெள்ளவே எழுவது- மெல்லியதாய்க் கண்டத்திலே விளங்குவது, வேறதாய்- பைசந்திக்கும் வைகரிக்கும் வேறாய் அறியப்படும், மத்திமை ஆகும்- மத்திமை வாக்காகும்.

### பைசந்தி வாக்கின் இலக்கணம்

**வேற்றுமைப் பட்ட வன்னம் வெவ்வேறு விபாகம் ஆகித்**
**தோற்றுதல் அடைவு ஒடுக்கிச் சொயம் பிரகாசம் ஆகிச்**
**சாற்றிய மயிலின் அண்டம் தரித்திடும் சலமேபோன்று. அங்கு**
**ஆற்றவே உடையது ஆகிப் பைசந்தி அமர்ந்து நிற்கும்.** 42

(இதன் பொருள்):- சாற்றிய மயிலின் அண்டம் தரித்திடும் சலமே போன்று- (பஞ்சவன்னங்களையும் சூக்குமரூபமாய் ஒடுக்கிக்கொண்டு தான் பிரகாசித்து நிற்பதாகக்) கூறப்பட்ட மயிலின் முட்டை தரித்திருக்கும் நீரைப் போல, வேற்றுமைப்பட்ட வன்னம்- பலவகைப்பட்ட வன்னங்கள், வெவ்வேறு விபாகமாகித் தோற்றுதல் அடைவு ஒடுக்கி- வேறு வேறு பிரிவாகித் தோன்றுதலாகிய முறையை இதயத்தானத்திற் சிறிதுந் தெரியாமல் ஒடுக்கிக்கொண்டு, சொயம்பிரகாசமாகி- தான் பிரகாசமாகி, ஆற்றவே உடையதாகி- அவ்வன்னங்களின் சூக்குமரூபத்தை மிகவும் உடையதாகி, பைசந்தி அங்கு அமர்ந்து நிற்கும்- பைசந்தி வாக்கானது அந்த இருதயத் தானத்திலே பொருந்தி நிற்கும்.

### சூக்குமை வாக்கின் இலக்கணம்

**சூக்குமை வாக்கது உள்ஓர் சோதியாய் அழிவது இன்றி**
**ஆக்கிடும் அதிகா ரத்திற்கு அழிவினைத் தன்னைக் கண்டால்**
**நீக்கம்இல் அறிவு ஆனந்த முதன்மை நித்தியம் உடைத்தாய்ப்**
**போக்கொடு வரவு இளைப்பும் விகாரமும் புருடன் இன்றாம்.** 43

(இதன் பொருள்):- சூக்குமை வாக்கது- சூக்குமை வாக்கானது, உள் ஒர் சோதியாய்- பரசரீரத்தினுள்ளே சொல்லுதற்கரிய நிருவிகற்ப ஞானசொரூபமாய் விளங்குவதாய், அழிவதின்றி- ஏனைய வாக்குக்களைப் போலத் தோன்றி ஒடுங்குவதின்றி நிலைபெற்று, ஆக்கிடும் அதிகாரத்திற்கு- கன்மத்துக்கீடாகப் பைசந்தி மத்திமை வைகரி வாக்குக்களைத் தோற்றுவித்து ஆன்மாவைப் பந்திக்கும் முதன்மைத் தொழிலுக்கு, அழிவினைத் தன்னைக் கண்டால்- முடிவினையும் இவ்வாக்குகளுக்கு வேறாக ஆன்மாவாகிய தன்னையும் காணுமிடத்து, புருடன்- அவ்வான்மாவானது, நீக்கம் இல் அறிவு ஆனந்தம் முதன்மை நித்தியம் உடைத்தாய்- நீங்காத பேரறிவும் பேரானந்தமும் தலைமையும் அழியாவியல்பும் உடையதாய், போக்கொடு வரவு- இறப்புப் பிறப்புகளும், இளைப்பும் விகாரமும்- இவற்றால் வரும் இளைப்பும் வேறுபாடும், இன்றாம்- இல்லதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குகள் நான்கும் கலைகள் ஐந்தும்

**நிகழ்ந்திடும் வாக்கு நான்கும் நிவிர்த்தாதி கலையைப் பற்றித்**
**திகழ்ந்திடும் அஞ்சு அது ஆகச் செயல் பரிணாமம் அன்று**
**புகழ்ந்திடும் விருத்தி யாகும் படம் குடில் ஆனாற்போல**
**மகிழ்ந்திடும் பிரமம் அன்று மாமாயை என்பர் நல்லோர். 44**

(இதன் பொருள்):– நிகழ்ந்திடும் வாக்கு நான்கும்– இங்ஙனங் காரியப்படும் வைகரி முதலிய நான்கு வாக்குக்களும், நிவிர்த்தி ஆதிகலையைப்பற்றி– நிவிர்த்தி முதலிய பஞ்சகலைகளையும் பற்றுக்கோடாகச் சார்ந்து, அஞ்சதாகத் திகழ்ந்திடும்– ஐவகைப்பட்டு விளங்குவனவாயிருக்கும், செயல் பரிணாமம் அன்று, இங்ஙனம் காரியப்படுதல் அசுத்தமாயா காரியம் போல பரிணாமமன்று, படம் குடிலானாற் போல– புடைவை கூடாரமானதுபோல, புகழ்ந்திடும் விருத்தியாகும்– இவை சுத்தமாயையினின்றும் புகழப்படும் விருத்தியாய்க் காரியப்படுவனவாம், மகிழ்ந்திடும் பிரமம் அன்று– இவ்வாக்குக்கள் சத்தப் பிரமவாதிகள் மகிழ்ந்து கூறும் பிரமம் அன்று, நல்லோர்– சைவசித்தாந்திகள், மாமாயை என்பர்– சுத்தமாயாகாரியம் என்று கூறுவர்.

சுத்தமாயா காரியமே மந்திரேசுவரர் முதலிய அபர முத்தர்களின் தனுகரணாதிகள் எனக் கூறுகின்றது

**வித்தைகள் வித்தை ஈசர், சதாசிவர் என்று இவர்க்கு**
**வைத்துறும் பதங்கள், வன்னம் புவனங்கள், மந்திரங்கள்,**
**தத்தவம், சரீரம், போகம் கரணங்கள் தாம் எலாமும்**
**உய்த்திடும் வைந்தவம் தான் உபாதானம் ஆகி நின்றே. 45**

(இதன் பொருள்):- வித்தைகள்– மந்திரேசுரர், வித்தையீசர்– மந்திரமகேசுரர், சதாசிவர் என்ற இவர்க்கு– அனுசதாசிவர் என்று கூறப்பட்ட அபரமுத்தருக்கு, வைத்துறும்– வேண்டப்படும், பதங்கள்– பதங்களும், வன்னம்– அக்கரங்களும், புவனங்கள்– புவனங்களும், மந்திரம்– மந்திரங்களும், தத்துவம்– தத்துவங்களும், சரீரம்– சரீரங்களும், போகம்– போகங்களும், கரணங்கள்தாம் எலாமும்– கரணங்களுமாகிய சுத்தாத்துவாக்கள் எல்லாவற்றையும், வயிந்தவம் தான்– சுத்தமாயா காரியமான விந்துவே, உபாதானமாகி நின்று உய்த்திடும்– முதற்காரணமாகி நின்று செலுத்தும்.

சுத்தமாயா காரியம் ஆகிய வாக்கை இன்றி, எவர்க்கும் அறிவு உண்டாகாது என்கிறது

**மூவகை அணுக்க ளுக்கும் முறைமையின் விந்து ஞானம்**
**மேவினது இல்லை ஆகில், விளங்கிய ஞானம் இன்றாம்;**
**ஓவிட விந்து ஞானம் உதிப்பதுஓர் ஞானம் உண்டேல்,**
**சேவுயர் கொடியினான் தன் சேவடி சேரல் ஆகும். 46**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்):- மூவகை அனுக்களுக்கும்- மேற்கூறிய வித்தைகள் வித்தையீசர் சதாசிவர்க்கன்றி விஞ்ஞானாகலர் பிரளயாகலர் சகலர் என்னும் மூவகை உயிர்களுக்கும், விந்து ஞானம்- வயிந்தவ ஞானம், முறைமையின் மேவினது இல்லையாகில்- முறையே தூலமாயும், தூலதரமாயும் தூலதமமாயும் பொருந்தினதில்லையாயின், விளங்கிய ஞானம் இன்றாம்- விடயங்களை அறியும் சவிகற்பஞானம் அவருக்குண்டாகாதாம், விந்து ஞானம் ஓவிட- வயிந்தவஞானம் நீங்க, ஓர் ஞானம் உதிப்பது உண்டேல்- ஒப்பற்ற பதிஞானம் ஒருவனுக்க விளங்கவரின், சேஉயர் கொடியினான்றன் சேவடி சேரலாம்- உயர்ந்த இடபக்கொடியையுடைய சிவபிரானது சிவந்த திருவடிகளை அடையலாம்.

### சுத்தாசுத்த அசுத்தப் பிரபஞ்சங்களின் இலக்கணம்

அருவினில் உருவம் தோன்றி அங்கஅங்கி பாவம் ஆகி
உருவினில் உருவ மாயே உதித்திடும் உலகம் எல்லாம்;
பெருகிடும் சுருங்கும் பேதா பேதமோடு அபேதம் ஆகும்,
ஒருவனே எல்லாம் ஆகி அல்லவாய் உடனும் ஆவான். 47

(இதன் பொருள்):- அருவினில் உருவம் தோன்றி- சூக்குமமாகிய மாயையினின்றும் தூலமாகிய கலையாதி தத்துவங்கள் தோன்றி, அங்க அங்கி பாவம் ஆகி- அவை உடலும் உயிரும் போன்ற தன்மையுடையனவாய், உருவினில் உருவமாயே உதித்திடும்- அத்தூலங்களினின்றும் அவற்றினுந் தூலமான காரியமேயாய்த் தோன்றுவனவாகும், உலகம் எல்லாம் பெருகிடும் சுருங்கும்- இங்ஙனம் காரியப் பிரபஞ்சமெல்லாம் விரிவதும் ஒடுங்குவதுமாயிருக்கும், பேதா பேதமொடு அபேதமாகும்- விரிந்து தோன்றுதலை நோக்குமிடத்து பேதா பேதமாம், ஒடுங்குதலை நோக்குமிடத்து அபேதமாம். ஒருவனே- நிமித்தகாரணனாகிய முதல்வனே, எல்லாம் ஆகி- (அநந்தர் சீகண்டர் வாயிலாக அவற்றைக் காரியப்படுத்தும் பொழுது) அவை தானேயாய் அல்லவாய்- அவற்றின் வேறுமாய், உடனும் ஆவன்- அவற்றொடு உடனுமாய் நிற்பன்.

### அருவத்திலிருந்து உருவம் தோன்றும் என்கிறது

அருஉரு ஈனா தாகும் விகாரமும் அவிகாரத்தின்
வருவதும் இல்லை என்னில் வான்வளி ஆதி பூதம்
தருவது தன்னில் மேக சலன சந்தங் களோடும்
உருவமின் உரும்ஏறு எல்லாம் உதித்திடும் உணர்ந்து கொள்ளே. 48

(இதன் பொருள்):- அரு உரு ஈனாதாகும்- அருவமாகிய மாயை உருவமாகிய பிரபஞ்சத்தைத் தோற்றுவியாது, அவிகாரத்தின் விகாரமும் வருவதும் இல்லை என்னின்- அவிகாரமாகிய மாயையினின்றும் விகாரமாகிய பிரபஞ்சமும் தோன்றுவதுமில்லை எனின், வான்- உனது மதப்படி அருவமும் அவிகாரியுமாகிய ஆகாயமே, வளி ஆதி பூதம் தருவது- உருவமும் விகாரியுமாகிய வாயு முதலிய பூதங்களை முறையே தோன்றச் செய்வது, அதுவுமன்றி, தன்னின்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாகாயத்தினின்றும், மேக சலன சத்தங்களோடும் உருவமின் உருமேறு எல்லாம் உதித்திடும்– பல முகில்களும் முகிலினிடத்துப் பல விகாரங்களும் பல இடியேறுகளும் இன்னும் இவைபோன்ற பலவும் தோன்றும், ஆதலால், உணர்ந்துகொள்– அவ்வாறு கூறுதல் உனக்கே வழுவாய் முடியும் என்பதனை அறிவாயாக.

தருபவன் எதில் நின்று தருவன் என்பது கூறுகின்றது

**மண்ணினில் கடாதி எல்லாம் வருவது குலால னாலே,**
**எண்ணிய உருவம் எல்லாம் இயற்றுவன் ஈசன் தானும்**
**கண்ணு காரியங்கள் எல்லாம் காரணம் அதனில் காண்பான்**
**பண்ணுவது எங்கே நின்று, இங்கு என்றிடில் பகரக் கேள் நீ.** 49

(இதன் பொருள்):– மண்ணினின்– மண்ணினின்றும், கடாதி எல்லாம்– குடம் முதலிய காரியங்களெல்லாம், குலாலனாலே வருவது– குயவனாலே தோன்றுவது போல, ஈசன்தானும்– முதல்வனும், எண்ணிய உருவம் எல்லாம் இயற்றுவன்– தான் கருதிய உருவமெல்லாவற்றையும் மாயையின்றுந் தோற்றுவிப்பன் என்பது அமையும். கண்ணு காரியங்கள் எல்லாம்– ஆயினும் குயவன் தான் நினைக்கின்ற குடம் முதலிய காரியங்களெல்லாவற்றையும், காரணம் அதனின் (நின்று) காண்பன்– துணைக்காரணனாகிய திரிகையைப் பற்றிநின்று செய்வதுபோல, எங்கே நின்று பண்ணுவது இங்கே என்றிடின்– நீ கூறும் கடவுள் தனது சக்தியை எவ்வாறு பொருந்தி நின்று பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்பன் என்று இங்கே கேட்பாயாயின், பகரக் கேள் நீ– யாம் அதற்கு விடைகூற நீ கேட்பாயாக.

தருபவன் நிராதாரமாய் நின்று தருவன் என்கின்றது

**சீலமோ உலகம் போலத் தெரிப்பு அரிது; அதனால் நிற்கும்**
**கோலமும் அறிவார் இல்லை; ஆயினும், கூறக் கேள் நீ;**
**ஞாலம் ஏழினையும் தந்து நிறுத்திப்பின் நாசம் பண்ணும்**
**காலமேபோலக் கொள் நீ, நிலைசெயல் கடவுள் கண்ணே.** 50

(இதன் பொருள்):– சீலமோ– அவன் தன்மையோ, உலகம்போல தெரிப்பு அரிது– உலகப் பொருட்களின் தன்மை கூறுவது போலத் தெரியக்கூறுவது அரிதாம், அதனால்– அதுபற்றி, நிற்கும் கோலமும் அறிவார் இல்லை– அவன் நிற்கும் நிலையும் அறிபவரில்லை. ஆயினும் கூற நீ கேள்– அங்ஙனமாயினும் ஒருவாறு உவமை முகத்தாற் கூறுவோம். நீ கேட்பாயாக. ஞாலம் ஏழினையும் தந்து நிறுத்திப் பின் நாசம் பண்ணும் காலமே போல– உலகமெல்லாவற்றையும் தோற்றுவித்து நிலைபெறுத்திப் பின்பு அழித்துக் காரியப்படுத்துங் காலம் தான் துணைக்காரணமாகவும் சிவசக்தி நிமித்த காரணமாகவும் தம்முட் பிரிவின்றி நின்று அவற்றைக் காரியப்படுத்தும் முறைமையையும், கடவுட்கண்கொள் நீ– அம்முதல்வனிடத்தும் வைத்து அறிவாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருபவன் தரும்பொழுது, இலய போக அதிகாரத்துட்பட்டு, துடக்கு உற்றும் துடக்கு உறுவான் அல்லன் என்று கூறுகிறது

**கற்றநூல் பொருளும் சொல்லும் கருத்தினில் அடங்கித் தோன்றும்**
**பெற்றியும் சாக்கிராதி உயிரினில் பிறந்து ஒடுக்கம்**
**உற்றதும் போல எல்லா உலகமும் உதித்து ஒடுங்கப்**
**பற்றொடு பற்றது இன்றி நின்றனன் பரனும் அன்றே.** 51

**(இதன் பொருள்):-** கற்ற நூல் பொருளும் சொல்லும்- ஒருவன் கற்ற நூலின் பொருளும் அப்பொருளைக் குறிக்கும் சொல்லும், கருத்தினில் அடங்கித் தோன்றும் பெற்றி (போல்)- ஆன்ம அறிவின்கண் அடங்கித் தோன்றும் முறைமைபோல (பொருளும் சொல்லுமாகிய பிரபஞ்சமெல்லாம் தனது ச்த்தியினிடமாக ஒடுங்கித் தோன்ற), (பரனும்)- முதல்வனும், பற்றொடு நின்றனன்- தொடக்குறுவோனாகி நின்றனன், சாக்கிராதி- சாக்கிரம் முதலிய அவத்தைகள், உயிரினிற் பிறந்து ஒடுக்கம் உற்றது போல- ஆன்மாவிலே தோன்றி ஒடுங்கும் தன்மைபோல, எல்லா உலகமும் உதித்து ஒடுங்க- பிரபஞ்சமெல்லாம் தன்னிடத்துத் தோன்றி ஒடுங்க, பரனும்- முதல்வனும், பற்றது இன்றி நின்றனன்- தொடக்குறுதலிலனாகி நின்றனன்.

"ஈறும் ஆகி மருவிடும்; என்பதை, ஆறு செய்யுள்களால் வலியுறுத்தத் தொடங்கி, முதற்கண் ஷஈறும் ஆகி மருவுவித்திடும்; என்கிறது

**உயிர் அவை ஒடுங்கிப் பின்னும் உதிப்பதுஎன் அரன்பால் என்னில்,**
**செயிர்உறும் மலத்தின் ஆகும் சிதைந்தது ஏது என்னில் சித்தத்து**
**அயர்வுஒழி காரியங்கள் அழியும் காரணம் கிடக்கும்**
**பயில்தரு காரியம் பின் பண்டுபோல் பண்ணும் ஈசன்.** 52

**(இதன் பொருள்):-** உயிரவை ஒடுங்கி- உயிர்கள் சங்கார காரணனிடத்திலே ஒடுங்கி, பின்னும் அரன்பால் உதிப்பது என் என்னின்- மீளவும் அச்சங்காரகாரணனிடத்தினின்று தோன்றுவது எற்றுக்கு என்னின், செயிர் உறு மலத்தின் ஆகும்- குற்றம் பொருந்திய ஆணவ மலம் காரணமாக மீளவும் தோன்றுவனவாகும், சிதைந்தது ஏது என்னின்- (உயிர்கள் ஒடுங்கியவிடத்து ஆணவமலம் அழியாதிருக்குமாயின் அவ்வொடுக்கத்தில்) அழிந்தது யாது என்னின், சித்தத்து அயர்வு ஒழி காரியங்கள் அழியும்- ஆன்மாவின் அறியாமையை நீக்கும் மாயா காரியங்களாகிய தனுவாதிகள் அழிவதாகும், காரணம் கிடக்கும்- அவற்றின் காரணமாகிய மாயை அழியாதிருக்கும், பயில் தரு காரியம்- காரண ரூபமாய் அம்மாயையில் ஒடுங்கிக்கிடக்கும் காரியங்களை, ஈசன்- சங்காரகாரணன், பின் பண்டுபோல் பண்ணும்- மீளவும் முன்போலத் தோற்றுவிப்பன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் விகாரி ஆகான் என்று கூறுகின்றது

**தோற்றுவித்து அளித்துப் பின்னும் துடைத்துஅருள் தொழில்கள் மூன்றும்**
**போற்றவே உடையன் ஈசன், புகுந்தது விகாரம் என்னில்**
**சாற்றிய கதிரோன் நிற்கத் தாமரை அலரும்; காந்தம்**
**காற்றிடும்; கனலை நீரும் கரந்திடும் காசினிக்கே.** 53

(இதன் பொருள்):- தோற்றுவித்து அழித்துப் பின்னும் துடைத்தருள் தொழில்கள் மூன்றும்- தோன்றச் செய்து நிறுத்திப் பின்பும் அழித்தலாகிய இத்தொழில்கள் மூன்றையும், ஈசன்- சங்காரகாரணன், போற்றவே உடையன்- மெச்சும்படி உரிமையாகவுடையவனாயின், விகாரம் புகுந்தது என்னின்- அவனுக்கு விகாரம் வந்து பொருந்தியது என்று சொல்லின், அப்படியன்று, சாற்றிய கதிரோன் நிற்க- யாவராலும் புகழப்பட்ட சூரியன் தனது தானத்திலே நிற்க, காசினிக்கே- பூமியின் கண்ணே, காந்தம் கனலைக் காற்றிடும்- சூரியகாந்தக்கல் அக்கினியைக் கக்கம், தாமரை அலரும்- தாமரையும் மலரும், நீரும் கரந்திடும்- நீரும் சுவறும், இங்ஙனம் தனக்குரிய முத் தொழில்களுந் தன் முன்னிலையிலே நடந்தும் சூரியன் விகார மெய்தாமை போல முதல்வனும் விகாரியாகான்.

முத்தொழிலையும் செய்யும் உரிமை சங்கார காரணன் ஆகிய சிவபெருமானுக்கே உடையது எனக் கூறுகிறது

**உரைத்தஇத் தொழில்கள் மூன்றும் மூவருக்கு உலகம் ஓத**
**வரைத்து ஒருவனுக்கே ஆக்கி வைத்தது இங்கு என்னை என்னில்,**
**விரைக் கமலத்தோன் மாலும் ஏவலான் மேவி னோர்கள்**
**புரைத்த அதிகார சத்தி புண்ணியம் நண்ண லாலே.** 54

(இதன் பொருள்):- உரைத்த இத்தொழில்கள் மூன்றும்- மேற்கூறிய இந்த மூன்று தொழில்களும், மூவருக்கு உலகம் ஓத- பிரமன் முதலிய தேவர் மூவருக்கும் முறையே உரியன என உலகம் சொல்ல, இங்கு வரைத்து ஒருவனுக்கே ஆக்கி வைத்தது என்னை என்னின்- இவ்விடத்து வரைந்தெடுத்து அம்முத்தொழில்களுஞ் செய்யும் உரிமை ஒரு கடவுளுக்கே உண்டென்று சொன்னது என்னையெனின், விரைக் கமலத்தோன் மாலும்- வாசனை பொருந்திய கமலாசனனாகிய பிரமனும் விட்டுணுவும், புண்ணியம் நண்ணலாலே- விசேட புண்ணியம் உடையவராதலால், புரைத்த அதிகாரசக்தி- முதல்வனது உயர்ந்த அதிகார சக்தியை, ஏவலான் மேவினோர்கள்- அவனது ஏவலாற் பெற்றுடையோராவர். ஆதலால் அவர் முத்தொழில்களுக்கும் சுதந்தரரல்லர். சங்காரகாரணன் ஒருவனுக்கே அச்சுதந்திரமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவும் அது

**இறுதியாம் காலம் தன்னில் ஒருவனே இருவரும் தம்**
**உறுதியின் நின்றார் என்னில், இறுதிதான் உண்டா காதாம்;**
**அறுதியில் அரனே எல்லாம் அழித்தலால் அவனால் இன்னும்**
**பெறுதும்நாம் ஆக்கம் நோக்கம் பேர்அதி கரணத் தாலே.** 55

(இதன் பொருள்):– இறுதியாம் காலம் தன்னின்– சங்கார காலத்திலே, ஒருவனே– சங்காரகாரணன் ஒருவனே அழியாது நிற்பான், இருவரும் தம் உறுதியின் நின்றார் என்னின்– மற்றைய பிரம விட்டுணுக்களுஞ் சங்காரகாரணனுடன் தத்தம் வலிமையோடு அழியாது நின்றார்கள் என்று சொல்லின், இறுதி தான் உண்டாகாதாம்– உலகம் சங்காரமாதல் உளதாகாது. ஆதலால் அக்காலத்தில் அவ்விருவரும் சங்கரிக்கப்படுவராவர், அப்படியாயின் பின் சிருட்டியாதி கிருத்தியங்கள் இல்லாதொழியுமெனின், அறுதி இல் அரனே எல்லாம் அழித்தலால்– தனக்கு இறுதியில்லாத சங்காரக் கடவுளே எல்லாவற்றையும் அழித்தலாலும், பேர் அதிகரணத்தால்– அங்ஙனம் அழிக்கப்பட்டவைக்குப் பெரிய ஆதாரமாயிருத்தலாலும், அவனால் இன்னம் ஆக்கம் நோக்கம்– அவனால் இன்னும் சிருஷ்டியையும் திதியையும், நாம் பெறுதும்– நாம் பெற்றுக்கொள்வோம்.

சிவபெருமான் முத்தொழில்களைச் செய்வதற்குக் காரணம்

**சொன்னஇத் தொழில்கள் என்ன காரணம் தோற்ற என்னில்**
**முன்னவன் விளையாட்டு என்று மொழிதலும் ஆம் உயிர்க்கு**
**மன்னிய புத்தி முத்தி வழங்கவும் அருளால் முன்னே**
**துன்னிய மலங்கள் எல்லாம் துடைப்பதும் சொல்ல லாமே.** 56

(இதன் பொருள்):– முன்னவன்– சங்காரக் கடவுள், சொன்ன இத்தொழில்கள் தோற்ற– மேற்கூறிய முத்தொழிலையுஞ் செய்தற்கு, காரணம் என்ன என்னின்– காரணம் யாதெனின், விளையாட்டு என்று மொழிதலுமாம்– அவனது திருவிளையாட்டென்று சொல்லுதலுமாம், அஃதன்றி, அருளால்– தமது கருணையால், உயிர்க்கு– உயிர்களுக்கு, மன்னிய புத்தி முத்தி வழங்கவும்– அவரவர் கன்மத்துக்கேற்பப் போக முத்திகளைக் கொடுத்தற்கு என்றும், முன்னே துன்னிய மலங்கள் எல்லாம் துடைப்பதும்– அநாதியே அவ்வுயிர்களைப் பொருந்திய மும்மலங்களை நீக்குதற்கு என்றும், சொல்லலாம்– சொல்லலாம்.

இறைவனின் ஐந்தொழிலும் அருளே ஆகும் என்கின்றது

**அழிப்பு இளைப்பு ஆற்றல், ஆக்கம் அவ்வவர் கன்மம் எல்லாம்**
**கழித்திடல், நுகரச் செய்தல் காப்பது, கன்ம ஒப்பில்**
**தெழித்திடல் மலங்கள் எல்லாம், மறைப்பு அருள் செய்தி தானும்**
**பழிப்புஒழி பந்தம் வீடு, பார்த்திடின் அருளே எல்லாம்.** 57



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்):- அழிப்பு- தனுவாதிகளை ஒடுக்குதல், இளைப்பாற்றல்- பிறப்பிறப்பிற்பட்டு வருந்தும் உயிர்களுக்கு இளைப்பு நீக்குதற்பொருட்டாம். ஆக்கம்- தனுவாதிகளைத் தோற்றுவித்தல், அவ்வவர் கன்மம் எல்லாம் கழித்திட- அவரவர் செய்த கன்மங்களெல்லா வற்றையும் நீக்குதற்பொருட்டாம், காப்பது- தனுவாதிகளை நிறுத்துதல், நுகரச்செய்கை- அவரவர் செய்த கன்மங்களின் பயனைப் புசிப்பித்து அவற்றை நீக்குதற்பொருட்டாம், மறைப்பு- இருவினைப் பயன்களிலே நிறுத்துதல், கன்மஒப்பின்- இருவினையொப்பு வருவித்து, மலங்கள் எல்லாம் தெழிந்திட- மலங்களெல்லாவற்றையும் நீக்குதற்பொருட்டாம், அருட்செய்தி தானும்- அருட்டொழிலும், பந்தம் வீடு- அம்மலங்களெல்லாவற்றையும் நீக்கி முத்தி கொடுத்தற் பொருட்டாம், பார்த்திடின்- ஆராயுமிடத்து, எல்லாம் அருளே- இச்செயல்களெல்லாம் அருட்செயல்களேயாம், ஆதலால், பழிப்பு ஒழி- இவற்றுட் சில மறத்தொழில் போலும் எனப் பழித்தலை நீ விடுவாயாக.

"அநாதி முத்த சித்துரு" என்னும் மூன்றாம் கூறு கூறத் தொடங்கிக்
கடவுளின் தடத்த வடிவம் அருவம், அருவுருவம், உருவம் என்கிறது

**அருவமோ உருவா ரூபம் ஆனதோ அன்றி நின்ற**
**உருவமோ உரைக்கும் கர்த்தா வடிவு எனக்கு உணர்த்திங்கு என்னில்.**
**அருவமும் உருவா ரூபம் ஆனதும் அன்றி நின்ற**
**உருவமும் மூன்றும் சொன்ன ஒருவனுக்கு உள்ள வாமே.** 58

(இதன் பொருள்):- உரைக்கும் கர்த்தா வடிவு- ஐந்தொழில் செய்பவன் என்று நீர் கூறும் கர்த்தாவினது வடிவமானது, அருவமோ உருவாரூபம் ஆனதோ அன்றி நின்ற உருவமோ- அருவாகிய வடிவமோ அருவுருவாகிய வடிவமோ அவ்விரண்டுமாகாது நின்ற உருவாகிய வடிவமோ, எனக்கு இங்கு உணர்த்து என்னின்- எனக்கு இவ்விடத்தே அறிவிக்க வேண்டும் என்னின், அருவமும் உருவாரூபமானதும் அன்றி நின்ற உருவமும் மூன்றும்- அருவமும் அருவுருவமும் அவ்விரண்டுமன்றி நின்ற உருவமும் ஆகிய இம்மூன்றும், சொன்ன ஒருவனுக்கு உள்ளவாம்- மேற்கூறப்பட்ட சங்காரகாரணனாகிய முதல்வன் ஒருவனுக்கு உள்ள வடிவங்களாம்.

உருவத் திருமேனி மாயாகாரிய வடிவம் அன்று;
அஃது அருள் வடிவம் என்கிறது

**நண்ணிடும் உருவம் என்னில், நமக்குள உருவம் போலப்**
**பண்ணிட ஒருவன் வேண்டும்; இச்சையேல் பலரும் இச்சை**
**கண்ணிய உருவம் கொள்ளேம் யாம்; பெரும் கடவுள் தானும்**
**எண்ணிய யோக சித்தர் போல்உரு இசைப்பன் காணே.** 59



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்):- உருவம் நண்ணிடும் என்னின்- முதல்வனுக்கு உருவம் உண்டென்னின், நமக்கு உள உருவம் போல- நம்மனோருக்கு உள்ள உருவம் போல, பண்ணிட ஒருவன் வேண்டும்- அவனுக்கும் உருவம் உண்டாக்குதற்கு ஒரு கருத்தா வேண்டும், இச்சையேல்- முதல்வன் தனது இச்சைப்படி வடிவங்கொள்வான் என்னின், பலரும் இச்சை- நம்மனோர் பலரும் இச்சைப்படி வடிவங்கொள்ளல் வேண்டும், அப்படியன்று, யாம் கண்ணிய உருவங் கொள்வோம்- நாம் கருதிய வடிவங்களை எடுக்க மாட்டோம், பெரும் கடவுள்- எல்லாம் வல்ல முதல்வன், யோகசித்தர் போல- யோகசித்தரைப் போல, தானும் எண்ணிய உரு இசைப்பன் காண்- தானும் நினைத்த ஒரு வடிவத்தை எடுத்துக்கொள்வன் என்று அறிவாயாக.

இதுவும் அது

**வித்தக யோக சித்தர் வேண்டுருக் கொள்ளு மாபோல்**
**உத்தமன் கொள்வன் என்னில். அவர்களில் ஒருவன் ஆவன்;**
**அத்தகை யவர்கள் எல்லாம் ஆக்குவது அருளால் ஆங்கு**
**வைத்தது மாயை என்னில், வடிவு எலாம் மாயை ஆமே.** 60

(இதன் பொருள்):- வித்தக யோகசித்தர் வேண்டு உருக்கொள்ளுமா போல்- மிக்க சாதுரியமுடைய யோகசித்தர் தாம் விரும்பும் வடிவங்களை எடுத்துக்கொள்ளும் முறைமை போல, உத்தமன் கொள்வன் என்னின்- முதல்வனும் நினைத்த உருவங்களை எடுத்துக்கொள்வான் என்னின், அவர்களில் எல்லாம் ஆக்குவது- அத்தன்மையுடைய யோகசித்தர் முதலியோர் வேண்டும் உருவங்களைக் கொள்வது, அருளால்- முதல்வனது அருளாலாம், ஆங்கு வைத்தது மாயை என்னின்- அவ்விடத்து அவருக்கு நியமித்த உருவம் மாயாகாரியம் என்னின், வடிவு எலாம் மாயை ஆம்- ஆக்கிய வடிவங்களெல்லாம் மாயாகாரியமாம், முதல்வன் வடிவம் மாயாகாரியமன்று.

இறைவனுக்கு உருவத் திருமேனி உண்டு அது கொண்டு அவன் நம்மில் ஒருவன் ஆவது இல்லை என்கிறது

**மாயைதான் மலத்தைப் பற்றி வருவதோர் வடிம் ஆகும்;**
**மாயஆ ணவம் அகன்ற அறிவொடு தொழிலை ஆர்க்கும்.**
**நாயகன், எல்லா ஞானத் தொழில் முதல் நண்ண லாலே**
**காயமோ மாயை அன்று காண்பது சத்தி தன்னால்.** 61

(இதன் பொருள்):- மாயைதான் மலத்தைப் பற்றி வருவதோர் வடிவம் ஆகும். அம் மாயாகாரியமான வடிவங்களெல்லாம் ஆணவமலம் காரணமாக உண்டாகும் வடிவங்களாகும், ஆய ஆணவம்- மலமாகிய அந்த ஆணவம், அகன்ற அறிவொடு தொழிலை ஆக்கும்- வியாபக அறிவையுந் தொழிலையும் மறைத்துச் (சிற்றறிவையும் சிறு தொழிலையுமுண்டாக்குமாதலால் அச்சிற்றறிவுஞ் சிறுதொழிலுமுடைய உயிர்களுக்கே அவ்வடிவங்கள் பொருத்தமுடையனவாகும்), நாயகன்- நின்மலனாகிய முதல்வன், எல்லா ஞானத் தொழில் முதல் நண்ணலாலே- எல்லா அறிவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாத் தொழிலும் எல்லா முதன்மையுமுடையவனாகையால், காயமோ மாயை அன்று- அவனுடைய வடிவமோ மாயாகாரிய வடிவமன்று, சத்தி தன்னால் காண்பது- அது தனது சத்தியினால் உண்டாக்கும் வடிவமாகும்.

இறைவனுக்கு உருவம் கொள்ளுதல் பொருந்தாது; அருவம் கொள்ளுதலே பொருந்தும் என்கிறது

**சத்தியே வடிவு என்றாலும், தான் பரிணாமம் ஆகும்;**
**நித்தமோ அழியும் அத்தால் நின்மலன் அருவே என்னில்**
**அத்துவா மார்க்கத்து உள்ளான் அலன் இவன் அருமை தன்னைப்**
**புத்திதான் உடையை போல இருந்தனை, புகலக் கேள் நீ.** 62

(இதன் பொருள்):- சத்தியே வடிவு என்றாலும்- முதல்வனுக்குச் சத்தியே வடிவம் என்று சொல்லினும், தான் பரிணாமமாகும்- அவ்வடிவம் பரிணமித்த வடிவமாகும், நித்தமோ அழியும்- ஆதலால் அதன் நித்தியத்தன்மை அழிவெய்தும், அத்தால்- அக்காரணத்தால் நின்மலன் அருளே என்னின் முதல்வனது வடிவம் உருவம் அன்று, அருவமே என்னின், அத்துவா மார்க்கத்து உள்ளான் அலன்- அவன் ஆறத்துவாக்களில் உட்பட்டவனல்லன், இவன் அருமை தன்னை- இவனுடைய அருமையை, புத்தி தான் உடையை போல இருந்தனை- புத்தியுடையாய் போல இருந்தாய், புகல நீ கேள்- கூறுவோம் நீ கேட்பாயாக.

இறைவனுக்கு அருவம் கொள்வதும், அருவுருவம் கொள்வதும் பொருந்தாது என்கிறது

**உலகினில் பதார்த்தம் எல்லாம் உருவமொடு அருவம் ஆகி**
**நிலவிடும் ஒன்று ஒன்று ஆகா; நின்ற அந்நிலையே போல**
**அலகு இலா அறிவன் தானும் அருவமே என்னில் ஆய்ந்து**
**குலவிய பதார்த்தத்து ஒன்றாய்க் கூடுவன் குறித்தி டாயே.** 63

(இதன் பொருள்):- உலகினில் பதார்த்தம் எல்லாம்- உகலத்திலுள்ள பொருள்களெல்லாம், உருவமோடு அருவம் ஆகிநிலவிடும்- உருவமும் அருவமுமாய்க் காணப்பட்டு விளங்கும், ஒன்று ஒன்று ஆகா நின்ற அந்நிலையே போல- அவற்றுள் ஒன்று பிறிதொன்றாகாது நிற்கும் அந்த முறைமைபோல, அலகு இலா அறிவன் தானும் அருவமே என்னின்- அளவிறந்த ஞானத்தையுடைய முதல்வனையும் அருவப் பொருளாம் என்னின், குலவிய பதார்த்தத்து ஒன்றாய்க் கூடுவன்- (வேறொன்றாகமாட்டான் எனப்பட்டுச்) சொல்லப்பட்ட உலகப் பொருள்களுள் ஒன்றாய் விடுவான், ஆய்ந்து குறித்திடாய்- நீ இதனை ஆராய்ந்து அறிவாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிவு எய்துதல் ஆகிய குற்றம் இல்லை என்கிறது

**பந்தமும் வீடும் ஆய பதபதார்த் தங்கள் அல்லான்;**
**அந்தமும் ஆதி இல்லான்; அளப்பு இலன் ஆதலாலே**
**எந்தை தான் இன்னன் என்றும், இன்னதாம் இன்னது ஆகி**
**வந்திடான் என்றும் சொல்ல வழக்கொடு மாற்றம் இன்றே.** 64

(இதன் பொருள்):- எந்தை தான்- எமது முதல்வன், பந்தமும் வீடும் ஆய- ஆன்மாக்களைப் பந்திப்பனவும் விடுவனவுமாகிய, பத பதார்த்தங்கள் அல்லான்- சொல்லும் பொருளுமாய பிரபஞ்சப் பொருள்கள் அல்லாதலானும், ஆதி அந்தமும் இல்லான்- தோற்றமும் நாசமும் இல்லாதவனாதலானும், அளப்பிலன் ஆதலாலே- அளவைகளுக்கு எட்டாதவனாதலானும், இன்னன் என்றும்- அருவம் அருவுருவம் உருவம் என்னும் மூன்றனுள் இன்ன வடிவினன் என்றும், இன்னது ஆம் இன்னது ஆகி வந்திடான் என்றும் சொல்ல- இன்ன வடிவத்தைக் கொள்ளுவான் இன்ன வடிவத்தைக் கொள்ளமாட்டான் என்றும் கூறுதற்கு, வழக்கொடு மாற்றம் இன்று- ஆசங்கையும் உத்தரமும் இல்லையாம், ஆதலால் முதல்வனது திருமேனி உருவமன்று, அருவமே என்றல் பொருந்தாது.

இறைவன் உயிர்கள்மீது வைத்த அருளினால், தான் நினைத்த வடிவம் கொள்கிறான் எனவே கன்மம் காரணமாகஉருவம் கொள்பவர்போல, அவன் உருவம் கொள்வதால் குற்றம் இல்லை என்கிறது

**குறித்தது ஒன்று ஆக மாட்டாக் குறைவிலன் ஆத லானும்,**
**நெறிப்பட நிறைந்த ஞானத் தொழில் உடை நிலைமை யானும்,**
**வெறுப்பொடு விருப்புத் தன்பால் மேவுதல் இலாமை யானும்**
**நிறுத்திடும் நிறைந்த மேனி நின்மலன் அருளி னாலே.** 65

(இதன் பொருள்):- குறித்தது ஒன்று ஆகமாட்டாக் குறைவிலன் ஆதலாலும்- நினைத்ததொன்றாக மாட்டாத குறைவிலனாதலாலும், நெறிப்பட நிறைந்த ஞானத்தொழிலுடை நிலைமையானும்- என்றும் ஒரு தன்மையவாக நிறைந்த ஞானமும் செயலுமுடைய தன்மையனாதலாலும், வெறுப்பொடு விருப்புத் தன்பால் மேவுதல் இலாமையானும்- வெறுப்பு விருப்புக்கள் தன்னிடத்துப் பொருந்துதல் இலனாதலாலும், நின்மலன்- முதல்வன், அருளினால்- உயிர்கண்மாட்டு வைத்த கருணையினால், நினைந்த மேனி நிறுத்திடும்- தான் நினைத்ததொரு திருமேனியைக் கொண்டருளுவன், ஆதலால் முதல்வனது திருமேனி உருவமன்று, அருவமே என்றல் பொருந்தாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் உருவம் கொள்ளுதலின் இன்றியமையாமை கூறுகின்றது

**ஆரணம் ஆக மங்கள் அருளினால் உருவு கொண்டு**
**காரணன் அருளான் ஆகில், கதிப்பவர் இல்லை ஆகும்;**
**நாரணன் முதலாய் உள்ள சுரர் நரர் நாகர்க்கு எல்லாம்**
**சீரணி குரு சந்தானச் செய்தியும் சென்றிடாவே.** 66

(இதன் பொருள்):- காரணன்- முதல்வன், அருளினால் உருவு கொண்டு- கருணையினாலே உருவத்திருமேனி கொண்டு, ஆரணம் ஆகமங்கள் அருளானாகில்- வேதாகமங்களை உபதேசித்தருளானாயின், கதிப்பவர் இல்லையாகும்- உயிர்கள் பதி பசு பாசங்களின் இயல்பு உணர்ந்து முத்தியடைதல் இல்லையாகும், நாரணன் முதலாயுள்ள சுரர்- அன்றியும் திருமால் முதலிய தேவர்களுக்கும், நரர்- மானுடருக்கும், நாகர்க்கு எல்லாம்- நாகர் முதலியோர்க்கும், சீர் அணி குரு சந்தானச் செய்தியும்- மிக்க சிறப்புடைய குருபரம்பரையில் வைத்து உபதேசித்தலும், சென்றிடா- வழங்காவாம், இது பற்றியும் முதல்வனது திருமேனி உருவமன்று, அருவமே என்றல் பொருந்தாது.

இறைவன் உருவத் திருமேனியில் தோன்றுவன அனைத்தும் அருள்வடிவே ஆகும் என்கிறது

**உருவருள் குணாங்க ளோடும் உணர்வு அருள் உருவில் தோன்றும்**
**கருமமும் அருள் அரன்தன் கரசர ணாதி சாங்கம்**
**தரும்அருள் உபாங்கம் எல்லாம் தான்அருள் தனக்கு ஒன்றுஇன்றி**
**அருள்உரு உயிர்க்கு என்றே ஆக்கினன் அசிந்தன் அன்றே.** 67

(இதன் பொருள்):- உரு அருள்- முதல்வனது திருவுரு அருள் வடிவமாதலால், குணங்களோடும் உணர்வு அருள்- குணங்களும் கரணங்களும் அருள் வடிவேயாம், உருவில் தோன்றும் கருமமும் அருள்- அத் திருவுருவிலே தோன்றுந் தொழில்களும் அருள் வடிவேயாம், அரன் தன் கர சரண ஆதி- அம் முதல்வனது திருக்கை திருவடி முதலிய பிரத்தியங்கங்களும், சாங்கம் தரும் அருள்- சூலம் மழு முதலிய சாங்கங்களும் தரப்பட்ட அருள்வடிவேயாம், உபாங்கம் எல்லாம் தான் அருள்- உபாங்கங்களெல்லாம் அருள் வடிவேயாம், அருள் உரு- இவ்வருள் வடிவெல்லாம், தனக்கு ஒன்று இன்றி- தனக்குப் பிரயோசனமாக ஒன்றுமின்றி, உயிருக்கு என்றே- உயிர்களின் பொருட்டென்றே, அசிந்தன் ஆக்கினன்- முதல்வன் எடுத்துக் கொண்டனன்.

இறைவன் கொள்ளும் உருவத் திருமேனியின் பேதங்களும், அவற்றின் தொழில்களும் இவை என நூல் பிரமாணத்தால் கூறி, அசிந்திதன் என்பதை வலியுறுத்துகின்றது

**உலகின் இறந்து நின்றது அரன் உரு என்பது ஓரார்;**
**உலகு அவன் உருவில் தோன்றி ஒடுங்கிடும் என்றும் ஓரார்;**
**உலகினுக்கு உயிரும் ஆகி உலகுமாய் நின்றது ஓரார்;**
**உலகனில் ஒருவன் என்பர், உருவினை உணரார் எல்லாம்.** 68



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்):- அரன் உரு உலகினை இறந்து நின்றது என்பது ஓரார்- இங்ஙனம் சத்திவடிவங்கொண்டு சிந்திதனாயினும்முதல்வன் அசிந்திதனே என்பதற்கு அம் முதுல்வனுடைய வடிவம் உலகினைக் கடந்து நின்ற வடிவம் என்னும் சுருதி வாக்கியத்தை உணரார், உலகு அவன் உருவில் தோன்றி ஒடுங்கிடும் என்னும் சுருதிவாக்கியத்தையும் உணரார், உலகினுக்கு உயிருமாகி உலகுமாய் நின்றது ஓரார்- அவன் உலகிற்கு உயிராயும் உலகமாயும் நின்றனன் என்னும் சுருதி வாக்கியங்களையும் உணரார், உருவினை உணரார் எல்லாம்- இங்ஙனம் கூறும் சுருதிகள் சான்றாயிருக்கவும் திருமேனியின் இயல்பு உணராதவர்களெல்லாம், உலகினில் ஒருவன் என்பர்- உலகத்திலேயுள்ளவருள் ஒருவன் என்று சொல்லுவார்கள்.

இதுவும் அது

**தேவரில் ஒருவன் என்பர் திருவுருச் சிவனைத் தேவர்**
**மூவராய் நின்றது ஓரார்; முதல்உரு பாதி மாதர்**
**ஆவதும் உணரார்; ஆதி அரி அயற்கு அறிய ஒண்ணா**
**மேவுரு நிலையும் ஓரார்; அவன்உரு விளைவும் ஓரார்.** 69

(இதன் பொருள்):- திருவுருச் சிவனை- மேற்கூறப்பட்ட திருவுருவத்தையுடைய பரமசிவனை, தேவரின் ஒருவன் என்பர்- பிரமா விட்டுணு உருத்திரன் என்னும் தேவர் மூவர்களுள் ஒருவன் என்பர், அங்ஙனம் கூறுவோர் அப்பரமசிவன், தேவர் மூவராய் நின்றது ஓரார்- மும்மூர்த்திகளாய் அவரை அதிட்டித்து நின்றார் என்று கூறும் புராண வசனத்தினையும் உணரார், முதல் உருப்பாதி மாதர் ஆவதும் உணரார்- முதல் உருவமாகிய மகேசுர வடிவத்திலே பாதியுருவம் சிவனாகவும் பாதியுருவம் பார்வதி தேவியாகவும் இருக்கும் அர்த்தநாரீச்சுர வடிவாதலைக் கூறும் புராண வசனத்தினையும் உணரார், ஆதி அரி அயற்கு அறிய ஒண்ணா மேவு உரு நிலையும் ஓரார்- கடவுளராகிய அரிக்கும் அயனுக்கும் அடிமுடி அறிய இயலாத அப்பரமசிவன் கொண்டருளிய இலிங்கத் திருவுருவின் நிலை கூறும் புராண வசனத்தினையும் உணரார், அவன் உரு விளைவும் ஓரார்- அப்பரமசிவனது உருவமாகிய இலிங்கத் திருமேனியினின்றும் சகல பிரபஞ்சமும் தோன்றும் என்னும் புராண வசனத்தினையும் உணரார்.

உருவத்திருமேனியின் தொழில்களின் பயன் கூறுகின்றது

**போகியாய் இருந்து உயிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்;**
**யோகியாய் யோக முத்தி உதவுதல் அதுவும் ஓரார்;**
**வேகியானால் போல் செய்த வினையினை வீட்டல் ஓரார்;**
**ஊகியா மூடர் எல்லாம் உம்பரில் ஒருவன் என்பர்.** 70

(இதன் பொருள்):- போகியாய் இருந்து உயிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்- முதல்வன் போகவடிவினனாயிருந்து உயிர்களுக்குப் போகத்தைக் கொடுத்தலையும் உணரார், யோகியாய் யோகமுத்தி உதவுதல், அதுவும் ஓரார்- யோக வடிவினனாயிருந்து யோகமுத்தி கொடுப்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணரார், வேகி யானாற்போல் செய்த வினையினை வீட்டல் ஓரார்– கோபத்தையுடையவனானாற் போலக் கோரவடிவினனாய் உயிர்கள் செய்த வினைகளைக் கெடுத்தலையும் உணரார், ஊகியா மூடர் எல்லாம்– இங்ஙனம் மாறுபட்ட வடிவங்களைக் கொள்ளும் தன்மையினை ஆராய்ந்தறியும் இயல்பில்லாத மூடர் அனைவரும், உம்பரில் ஒருவன் என்பர்– அம் முதல்வனைத் தேவரில் ஒருவன் என்பர்.

திருமேனி கொள்ளுதல் உயிர்களின் பொருட்டே ஆகலின், இறைவன் சிந்தனைக்கு எட்டாதவனே என்கிறது

**ஒன்றொடு ஒன்று ஒவ்வா வேடம் ஒருவனே தரித்துக் கொண்டு**
**நின்றலால், உலகம் நீங்கி நின்றனன் என்றும் ஓரார்;**
**அன்றி அவ்வேடம் எல்லாம் அருள்புரி தொழில் என்று ஓரார்;**
**கொன்றது வினையைக் கொன்று நின்றஅக் குணம் என்று ஓரார்.** 71

(இதன் பொருள்):– ஒன்றொடு ஒன்று ஒவ்வா வேடம் ஒருவனே தரித்துக் கொண்டு நின்றலால்– அங்ஙனம் போக வடிவும் கோர வடிவும் யோகவடிவுமாகித் தம்முன்னே மாறுபட்ட பல வடிவங்களை ஒருவனே தரித்துக்கொண்டு நின்றலால், உலகம் நீங்கி நின்றனன் என்றும் ஓரார்– உலகத்திற்கு வேறாய் அப்பாற்பட்டு நின்றனன் என்பதையும் உணரார், அன்றி அவ் வேடம் எல்லாம்– அன்றியும் அம்மாறுபட்ட வடிவங்கள் யாவும் கொள்ளுதல், அருள்பரி தொழில் என்று ஓரார்– ஆன்மாக்களுக்கு அநுக்கிரகஞ் செய்தற்குக் காரணமான செயல் என்பதையும் உணரார், கொன்றது வினையைக் கொன்று நின்ற அக்குணம் என்று ஓரார்– கொல்லுதலாகிய தீமை செய்வதும் அவரவர் வினையைக் கெடுத்து நன்மை பயப்பித்து நிற்கும் திருவருட் குணம் என்பதையும் உணரார்.

இந்தத் திருமேனியில் நின்று புரியும் தொழில்களும் உயிர்களின் பொருட்டே ஆகும். நெற்றிக் கண்ணின் பயன் கூறுகின்றது

**நாயகன் கண் நயப்பால் நாயகி புதைப்ப, எங்கும்**
**பாய்இருள் ஆகிமூடப் பரிந்து உலகினுக்கு நெற்றித்**
**தூயநேத்திரத்தி னாலே சுடர்ஒளி, கொடுத்த பண்பில்**
**தேயம்ஆர் ஒளிகள் எல்லாம் சிவன்உருத் தேசுஅது என்பர்.** 72

(இதன் பொருள்):– நாயகன் கண்– முதல்வனது கண்களை, நாயகி நயப்பால் புதைப்ப– முதல்வி திருவுள மகிழ்ச்சியால் மூடியவிடத்து, எங்கும் பாய் இருள் ஆகி மூட– எவ்விடமும் பரவிய இருள் வளர்ந்து மூடவும், பரிந்து– கருணைகூர்ந்து, உலகினுக்கு– உலகத்திலுள்ளார்க்கு, நெற்றித் தூய நேத்திரத்தினாலே– தாம் கொண்ட நெற்றிக் கண்ணினாலே, சுடர் ஒளி கொடுத்த பண்பின்– மிகுந்த பிரகாசத்தினை அளித்த தன்மையால், தேயம் ஆர் ஒளிகள் எல்லாம்– உலகின் கண்ணுள்ள ஒளிகள் எல்லாம், சிவன் உருத் தேசது என்னார்– அச்சிவபெருமானது திருமேனிப்பிரகாசமே என்று உணரார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவருட் செயலுக்குத் திருவேடம் இன்றியமையாது வேண்டப்படும் என்கிறது

**கண்ணுதல் யோகு இருப்பக் காமன் நின்றிட வேட்கைக்கு**
**விண்ணுறு தேவர் ஆதி மெலிந்தமை ஓரார்; மால்தான்**
**எண்ணிவேள் மதனை ஏவ எரிவிழித்து இமவான் பெற்ற**
**பெண்ணினைப் புணர்ந்து உயிர்க்குப் பேரின்பம் அளித்தது ஓரார். 73**

**(இதன் பொருள்):-** கண்ணுதல் யோகியிருப்ப- நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் யோகநிலையிலிருந்தபொழுது, வேட்டைக்குக் காமன் நின்றிட- காம வேட்டைக்குக் காரணமாகி மன்மதன் இருக்கவும், விண் உறு தேவர் ஆதி- விண்ணுலகத்துள்ள தேவர்கள் முதலாயினோர், மெலிந்தமை ஓரார்- காமப்பற்றின்றி வருத்தமுற்றதையும் உணரார், மால்தான் எண்ணி வேள்மதனை ஏவ- விட்டுணு அத்துன்பத்தை நீக்கக் கருதி வேட்கை பொருந்திய மன்மதனை ஏவுதல் செய்ய, எரி விழித்து- அவனை நெற்றிக்கண்ணாற் பார்த்து எரித்து, இமவான் பெற்ற பெண்ணினைப் புணர்ந்து இமயமலை அரசன் பெற்ற உமாதேவியைக் கலந்து, உயிர்க்குப் பேரின்பம் அளித்தது ஓரார்- அவ்வுயிர்களுக்குப் பேரின்பம் அருளியதையும் உணரார்.

இதுவும் அது

**படைப்புஆதித் தொழிலும், பத்தர்க்கு அருளும் பாவனையும், நூலும்**
**இடப்பாகம் மாதரா ளோடு இயைந்து உயிர்க்கு இன்பம் என்றும்**
**அடைப்பானாம் அதுவும், பாசம் அளித்திடும் யோகும், பாசம்**
**துடைப்பானாம் தொழிலும், மேனி தொடங்கானேல் சொல்லொ ணாதே. 74**

**(இதன் பொருள்):-** படைப்பு ஆதித் தொழிலும்- சிருட்டி முதலிய பஞ்ச கிருத்தியங்களும், பத்தர்க்கு அருளும் பாவனையும்- பத்தருக்க உபதேசித்தருளும் தியானமும், நூலும்- வேதாகமங்களை உபதேசித்தலும், இடப்பாகம் மாதராளோடு இயைந்து என்றும் உயிர்க்கு இன்பம் அடைப்பானாம் அதுவும்- திருமேனியின் வாமபாகம் உமாதேவியாரோடு பொருந்தியிருந்து எஞ்ஞான்றும் உயிர்களுக்குப் போகத்தைக் கொடுத்தருளுஞ் செயலும், முத்தி அளித்திடும் யோகும்- முத்தியைக் கொடுக்குஞ் சிவயோகமும்- பாசம் துடைப்பானாம் தொழிலும்- பாசத்தை நீக்குஞ் செயலும் ஆகிய இவையெல்லாம், மேனி தொடக்கானேல்- முதல்வன் அருட்டிருமேனி கொள்ளானாயின், சொல்ல ஒணாது- உண்டென்று சொல்லக்கூடாது.

இறைவனுக்கு உருவத் திருமேனி மட்டும் அன்றி அருவத் திருமேனியும் அருவுருவத் திருமேனியும் உண்டு என்றும் அவையும் கருணையே என்றும் கூறுகின்றது

**உருமேனி தரித்துக் கொண்டது என்றலும், உருவு இறந்த**
**அருமேனி அதுவும் கண்டோம்; அருஉரு ஆன போது**
**திருமேனி உபயம் பெற்றோம்; செப்பிய மூன்றும், நம்தம்**
**கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு காணே. 75**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்):- உருமேனி தரித்துக் கொண்டது என்றலும்- உருவத் திருமேனி தரித்துக்கொண்டதென்றவளவிலே, உரு இறந்த அருமேனி அதுவும் கண்டோம்- உருவம் ஒடுங்குதற்குக் காரணமாகிய அருவத்திருமேனியின் உண்மையும் கண்டோம், அருஉரு ஆனபோது திருமேனி உபயம் பெற்றோம்- அந்த அருவம் எனப்படும் சூக்குமப் பொருள் பின் உருவம் எனப்படும் தூல நிலை அடையும்போது (அவ்விரு நிலைக்கும் பொதுவாகியதோர் நிலையும் உண்டென்பது பற்றி) அருவுருவத் திருமேனியின் உண்மையும் பெற்றோம், செப்பிய மூன்றும்- இங்ஙனங் கூறிய மூன்று திருமேனியும், நம் தம் கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு- நமது பிறவிக்கேதுவாகிய மாயாகாரியவுருவத்தை ஒழித்தற்கு முதல்வன் கொண்ட கருணை வடிவங்களாம்.

### இறைவனுக்குள்ள உபசார வடிவங்கள்

**அத்துவா மூர்த்தி யாக அறைகுவது என்னை என்னின்,**
**நித்தனாய் நிறைந்து அவற்றின் நீங்கிடா நிலைமை யானும்,**
**சித்துடன் அசித்திற்கு எல்லாம் சேட்டிதன் ஆத லானும்**
**வைத்ததாம் அத்துவா வும் வடிவு என மறைகள் எல்லாம்.** 76

(இதன் பொருள்):- (மேற்கூறியவாறு முதல்வனுக்கு அருள்வடிவேயன்றி மாயை வடிவில்லையாயின்) மறைகள் எல்லாம்- வேதாகமங்களெல்லாம், அத்துவா மூர்த்தியாக அறைகுவது என்னை என்னின்- அத்துவாக்கள் ஆறும் அம்முதல்வனுக்கு வடிவமாகக் கூறுதல் என்னையெனில், நித்தனாய்- நித்தியனாய், வேறாயும், நிறைந்து அவற்றின் நீங்கிடா நிலைமையாலும்- எங்கும் வியாபகமாய் அவற்றை விட்டு நீங்காது ஒன்றாயும் நிற்குந் தன்மையாலும், சித்துடன் அசித்திற்கு எல்லாம் சேட்டிதன் ஆதலானும்- சித்துப்பொருள் சடப்பொருள்கள் எல்லாவற்றையும் உடனாய் நின்று செலுத்துபவனாதலாலும், அத்துவாவும் வடிவு என வைத்தவாம்- அத்துவாக்களும் வடிவு என அவ்வேதாகமங்கள் உபசாரமாகக் கூறினவாம்.

### மந்திர வடிவத்தின் சிறப்பு

**மந்திரம் அத்துவாவின் மிகுத்துஒரு வடிவமாகத்**
**தந்தது என் அரனுக்கு என்னில், சகத்தினுக்கு உபாதானங்கள்**
**விந்து மோகினி மான் மூன்றாம் இவற்றின் மேலாகி விந்துச்**
**சிந்தையார் அதீதம் ஆன சிவசத்தி சேர்ந்து நிற்கும்.** 77

### இதுவும் அது

**சுத்தமாம் விந்துத் தன்னில் தோன்றிய ஆத லானும்,**
**சத்திதான் பிரேரித்துப் பின் தான் அதிட்டித்துக் கொண்டே**
**அத்தினால் புத்தி முத்தி அளித்தலால் அரனுக்கு என்றே**
**வைத்தவாம் மந்தி ரங்கள் வடிவுஎன மறைகள் எல்லாம்.** 78



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்):- அரனுக்கு- முதல்வனுக்கு, அத்துவாவின்- அத்துவாக்களுள், மந்திரம் ஒரு வடிவம் ஆக- மந்திரத்தை ஒரு வடிவமாக, மிகுத்துத் தந்தது என் என்னின்- சிறந்தெடுத்தோதியது என்னையெனின், சகத்தினுக்கு உபாதானங்கள்- உலகிற்கு முதற்காரணங்கள், விந்து மோகினி மான் மூன்றாம்- சுத்தமாயை அசுத்தமாயை பிரகிருதி மாயை என மூன்றாம், இவற்றின் விந்து மேலாகி- இம்மூன்றனுள்ளே சுத்தமாயை உத்தமமானதாய், சிந்தை ஆர் அதீதமான சிவசத்தி சேர்ந்து நிற்கும்- மனத்தினால் அறிதற்கெட்டாத சிவசத்தி அதனைப்பொருந்தி நிற்றலாலும், சுத்தமாம் விந்து தன்னில்- சுத்தமாயையிலே, தோன்றிய ஆதலானும்- தோன்றிய முதன்மையுடையனவாதலாலும், சத்திதான் பிரேரித்து- அச்சிவசத்தி சாதகர் கணிக்கும்படி அவற்றைச் செலுத்திப், பின் தான் அதிட்டித்துக் கொண்டு- கணித்த பின்பு தான் அவற்றை நிலைக்களமாகக் கொண்டு வாயிலாகச்சாதகருக்குப் போகம் முத்தி என்னும் இரண்டினையும் அளித்தலாலும், மறைகள் எல்லாம்- வேதாகமங்களெல்லாம், மந்திரங்கள் அரனுக்கு வடிவு என- மந்திரங்கள் முதல்வனுக்கு ஒரு வடிவம் என, வைத்தவாம்- கூறினவாம்.

### பஞ்சப்பிரம மந்திரத்தின் சிறப்பு

**மந்திரம் அதனில் பஞ்ச மந்திரம் வடிவம் ஆகத்**
**தந்திரம் சொன்ன வாறு இங்கு என் எனில், சாற்றக்கேள் நீ;**
**முந்திய தோற்றத் தாலும், மந்திர மூலத் தாலும்,**
**அந்தமில் சத்தி ஆதிக்கு இசைத்தலும் ஆகும் அன்றே.** 79

(இதன் பொருள்):- மந்திர மதனில்- மந்திரங்களுக்குள்ளே, பஞ்ச மந்திரம் வடிவமாக- பஞ்சப்பிரம மந்திரம் முதல்வனுக்கு வடிவமாக, தந்திரம் சொன்ன ஆறு இங்கு என்னெனின்- ஆகமங்கள் சொல்லிய நெறி இங்கே என்ன காரணமெனின், சாற்றக் கேள்நீ சொல்லக்கேட்டி, முந்திய தோற்றத்தாலும்- முற்பட்ட தோற்றத்தினாலும், மந்திர மூலத்தாலும்- மற்றைய மந்திரங்களுக்குக் காரணமாயிருத்தலாலும், அந்தம இல் சத்தி- அழிவில்லாத சத்திகளாகிய பஞ்சப்பிரம மந்திரங்களையும், ஆதிக்கு இசைத்தலும் ஆகும்- முதல்வனுக்கு வடிவம் ன்று சொல்லுதலும் முறையாகும்.

சிவபெருமானின் சத்தி ஒவ்வொன்றே, பிரமன் முதலியோரிடத்தில் நிற்பதால், சிவபெருமான் ஒருவனே முதல்வன், அவனுக்கு பிரமன் முதலியோர் இன்றியமையாது வேண்டப்படுவர் என்கிறது

**அயன்தனை ஆதி ஆக அரன்உரு என்பது என்னை**
**பயந்திடும் சத்தி ஆதி பதிதலால் படைப்பு மூலம்**
**முயன்றனர் இவரே ஆயின், முன்னவன் தன்மை முற்றும்**
**நயந்திடும் அவன் இவர்க்கு நண்ணுவது ஓரோஒன்று ஆமே.** 80

(இதன் பொருள்):- அயன்தனை ஆதியாக- பிரமாவின் வடிவம் முதலாகக் கிருத்திய கர்த்தாக்களின் வடிவங்களையும், அரன் உரு என்பது என்னை- முதல்வன் கொண்ட வடிவங்கள் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வோதாகமங்கள் கூறுவது எற்றுக்கு பயந்திடும் சத்தி ஆதி பதிதலால்– செந்நி முதலிய சிவசத்திகள் அவரிடத்தே பதிந்து நின்று செலுத்துதலால் அவ்வாறு கூறப்பட்டதாம். படைப்பு மூலம் இவரே முயன்றனர் ஆயின்– அங்ஙனமின்றிப் படைப்பு முதலிய தொழில்களைப் பிரமன் முதலியோரே செய்வர் என்று சொல்லின், முன்னவன் என்னை– முதல்வன் எதன்பொருட்டு வேண்டப்படுவன். அதனால், அவன் முற்றும் நயந்திடும்– அம் முதல்வன் ஐந்தொழிலுஞ் செய்வன். இவர்க்கு நண்ணுவது ஒரோவொன்று ஆம்– இவர்க்கு அடையச் செய்வது ஒவ்வொரு தொழிலேயாம்.

சிவசத்தி ஒன்றின் தடத்தமே பல சத்திகள் ஆகலின், சிவபெருமான் ஒருவனே கடவுள் என்கிறது

**சத்திதான் பலவோ என்னில் தான்ஒன்றே அநேகம் ஆக,**
**வைத்திடும் காரியத்தால் மந்திரி ஆதிக்கு எல்லாம்**
**உய்த்திடும் ஒருவன் சத்தி போல் அரன் உடையது ஆகிப்**
**புத்தி முத்திகளை எல்லாம் புரிந்து அவன் நினைந்தவாறாம்.** 81

(இதன் பொருள்):– சத்திதான் பலவோ என்னின்– சத்திகள் அநேகமோ என்று கேட்கின், தான் ஒன்றே காரியத்தால் அநேகமாக வைத்திடும்– சத்தி ஒன்றே பிரமன் முதலியோரிடத்து நின்று செய்யுந் தொழில் வேறுபாட்டாற் செந்நி முதலிய பல சத்திகளாக வைத்து எண்ணப்படும், மந்திரி ஆதிக்கு எல்லாம் உய்த்திடும் ஒருவன் சத்திபோல்– அது அமைச்சர் படைத்தலைவர் பாடிகாவலர் முதலாயினரிடத்துத் தொழில் வேறுபாட்டாற் பல வகைப்பட நின்று செலத்தும் அரசனது சத்தி ஒன்றாயிருத்தல் போலாம், அரனுடையதாகி– அச்சத்தி முதல்வனோடு பிரிவின்றி நின்று, புத்தி முத்திகளை எல்லாம் புரிந்து– போக மோட்சங்களையெல்லாம் அருளி, அரன் நினைந்தவாறு ஆம்– அம்முதல்வன் நினைத்தபடி நிற்பதாம்.

சிவசத்தியின் சொரூப இயல்பு கூறுகிறது

**சத்திதன் வடிவு ஏது என்னில் தடைஇலா ஞானம் ஆகும்;**
**உய்த்திடும் இச்சை செய்தி இவை ஞானத்து உளவோ என்னில்**
**எத்திறம் ஞானம் உள்ளது அத்திறம் இச்சை செய்தி**
**வைத்தலால், மறைப்புஇல் ஞானால் மருவிடும் கிரியை எல்லாம்.** 82

(இதன் பொருள்):– சத்திதன் வடிவு ஏது என்னின்– சிவசத்தியின் சொரூபம் யாதெனின், தடைஇலா ஞானம் ஆகும்– அது சுத்தஞானமாயிருக்கும், உய்த்திடும் இச்சை செய்தி– அச்சத்தி செலுத்தும் இச்சை கிரியைகள் வேற்றுத்தொழில்களாதலால், இவை ஞானத்து உளவோ என்னின்– இவை அந்த ஞானத்தினின்றுந் தோன்றுவனவோ என்னின், ஞானம் எத்திறம் உள்ளது அத்திறம் இச்சை செய்தி வைத்தலான்– ஞானம் எவ்வாறு உளதோ அவ்வாறு இச்சை கிரியைகளும் உள என்று வேதாகமங்கள் சொல்லுதலால், கிரியை எல்லாம்– முற்கூறிய சுத்தஞானமாகிய பராசகத்தியினாற் காரியப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவசத்தி ஒன்றே சிறப்பு வகையாய்த் தொழிற்படுவதால் உண்டாகும் பயன் கூறுகின்றது

**ஒன்றதாய் இச்சை ஞானக் கிரியை என்று ஒருமூன்று ஆகி**
**நின்றிடும் சத்தி இச்சை உயிர்க்குஅருள் நேசம் ஆகும்;**
**நன்றுஎலாம் ஞான சத்தி யால் நயந்து அறிவன் நாதன்**
**அன்று அருட் கிரியை தன்னால் ஆக்குவன் அகிலம் எல்லாம்.** 83

**(இதன் பொருள்):-** சத்தி ஒன்றதாய்- அப்பராசத்தியானது பொது வகையால் ஒன்றாய், இச்சா ஞானக் கிரியை என்று ஒரு மூன்றாகி நின்றிடும்- ஐந்தொழிலுஞ் செய்தலைக் குறித்துச் சிறப்பு வயைால் வியாபரிக்குமிடத்துத் திரோதான சத்தி என நின்று இச்சை ஞானம் கிரியை என மூவகைப்பட்டு வியாபரிக்கும், இச்சை- அவற்று இச்சாசத்தியாவது, (நாதன்) உயிர்க்கு அருள் நேசம் ஆகும்- முதல்வன் ஆன்மாக்களுக்கு மலத்தை நீக்கி முத்தியைக் கொடுத்தற்பொருட்டுக் கொண்ட விருப்பமாம், நன்று எலாம் ஞானசத்தியால் (நாதன்) நயந்து அறிவன்- அவ்வான்மாக்கள் முத்தியைப் பெறும்பொருட்டுச் செய்யவேண்டிய உபாயங்களையெல்லாம் ஞானசத்தியால் முதல்வன் விரும்பி அறிவன், அன்று- அங்ஙனம் அறிந்த பொழுது, அருள் கிரியை தன்னால்- அந்த ஞானத்தின் வேறல்லாத கிரியாசத்தினால், அகிலம் எல்லாம் நாதன் ஆக்குவன்- பிரபஞ்சமெல்லாவற்றையும் முதல்வன் சங்கற்பித்துச் செய்வன்.

இச்சை ஞானம் கிரியை என்னும் மூன்று சத்திகளும் உயிருக்கும் உண்டு; அதனால் சீவன் ஆகிய உயிர் சிவனுக்கு ஒப்பு ஆகான் எனக் கூறுகிறது

**சீவனுமிச்சா ஞானக் கிரியையால் சிவனை ஒப்பன்**
**ஆவன் என்றிடில், அநாதி மலம் இவற்றினை மறைக்கும்;**
**காவலன் அவன்செய் கன்மத்து அளவினில் கொடுப்பக் காண்பன்;**
**பாவியாம் புத்தி முத்திப் பயன்கொளும் பண்பிற்று ஆகும்.** 84

**(இதன் பொருள்):-** சீவனும் இச்சா ஞானக் கிரியையால் சிவனை ஒப்பன் ஆவன் என்றிடின்- உயிர்களும் இச்சை ஞானம் கிரியை என்னும் மூன்று சத்திகள் உடையராதலின் முதல்வனை ஒப்பவராவர் என்று சொல்லின், இவற்றினை அநாதிமலம் மறைக்கும்- கேவலத்தில் இச்சத்திகளை அநாதியாயுள்ள ஆணவமலம் மறைக்கும், காவலன் இவன் செய் கன்மத்து அளவினில் கொடுப்ப- சகலத்தில் முதல்வன் உயிர்கள் செய்த கன்மத்தளவிற்கேற்ப இச்சாஞானக் கிரியைகளைக் கொடுக்க, பாவி ஆம் புத்தி காண்பன்- அக்கன்மத்துக்கீடாக வரக்கடவதாகிய போகத்தை ஏகதேசமாய் அறிந்து அநுபவிப்பர், முத்திப் பயன் கொளும் பண்பு- சுத்தநிலையில் முத்திப்பயனை அடையும் முறையும், இற்று ஆகும்- இத்தன்மையதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடத்த சிவம்-லயசிவம், போக சிவம், அதிகார சிவம் என முத்திறப்படும் என்கிறது

**ஞானமே ஆனபோது சிவன் தொழில் ஞானம் ஒக்கின்,**
**ஈனம்இல் சதாசிவன் பேர் ஈசனாம் தொழில் அது ஏறின்,**
**ஊனமேல் கிரியை வித்தை உருத்திரன் இலயம் போகம்**
**ஆனபேர் அதிகாரத்தோடு அதிகரணத்தன் ஆமே.** 85

(இதன் பொருள்):- உருத்திரன்- சங்காரகாரணனாகிய முதல்வன், ஞானமே ஆன போது சிவன்- மேற்கூறிய சத்திகள் மூன்றனுள்ளே ஞானமேயாய் வியாபரிக்கும்பொழுது சிவன் எனவும், தொழில் (ஆனபோது) ஞானம்- கிரியையேயாய் வியாபரிக்கும் பொழுது சத்தி எனவும், ஒக்கின்- ஞானமும் கிரியையும் ஒத்து வியாபரிக்கின், ஈனம் இல் சதாசிவன்- மேம்பாடுடைய சதாசிவன் எனவும், தொழில் அது ஏறின் பேர் ஈசனாம்- ஞானம் குறைந்து கிரியை ஏறி வியாபரிக்குங்கால் மகேசுவரன் எனவும், கிரியை ஊனமேல் வித்தை- ஞானம் ஏறிக் கிரியை குறைந்து வியாபரிக்கின் சுத்தவித்தை எனவும் ஐவகைப் பெயர் பெற்று, இலயம் போகம் பேர் ஆன அதிகாரத்தோடு- இலயம் போகம் பெரிதாகிய அதிகாரம் எனப்படும் மூன்று அவத்தைகளையும், அதிகரணத்தன் ஆம்- அவ்வவத்தைகளுக்குச் சுத்த தத்துவங்களையும் ஆதாரமாக உடையவனாம்.

இலய போக அதிகார நிலைகளுக்கு ஏதுவாய் நின்ற ஆதாரங்கள் சிவ தத்துவங்களே ஆகும் என்கிறது

**வித்தையோடு ஈசர் சாதாக் கியம் சத்தி சிவங்கள் ஐந்தும்**
**சுத்த தத்துவம் சிவன்தன் சுதந்திர வடிவம் ஆகும்;**
**நித்தம் என்று உரைப்பர் காலம் நீங்கிய நிலைமை யாலே**
**வைத்திலர் முற்பிற் பாடு வருவித்தார் கருமத் தாலே.** 86

(இதன் பொருள்):- வித்தையோடு ஈசர் சாதாக்கியம் சத்தி சிவங்கள் ஐந்தும் சுத்ததத்துவம்- சுத்தவித்தை மகேசுவரம் சதாசிவம் சத்தி சிவம் என்னும் ஐந்தும் சுத்ததத்துவங்களாம், சிவன்றன் சுதந்திர வடிவம் ஆகும்- இவை ஐந்தும் மேற்கூறியவாறு ஆதாரங்களாயிருத்தலேயன்றிப் பரமசிவனுக்குச் சுதந்திரமான திருமேனியுமாயிருக்கும், நித்தம் என்று உரைப்பர்- இத் தத்துவங்களை நித்தம் என்று சொல்வர், காலம் நீங்கிய நிலைமையாலே- கால தத்துவத்துக்கு முன்னர்த் தோன்றி அக்காலதத்துவத்தைக் கடந்து நிற்குந் தன்மையால், முற்பிற்பாடு வைத்திலர்- இவற்றிற்கு முற்பிற்பாடு கூறிற்றிலராயினும், கருமத்தாலே (முற்பிற்பாடு) வருவித்தார்- முன்பின்னாக நிகழும் ஞானசத்தி கிரியாசத்திகளின் வியாபார பேதம் பற்றி அவற்றிற்கு முற்பிற்பாடு கூறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொரூப சிவம் விகாரி ஆகான் என்கின்றது

**ஒருவனே இராவ ணாதி பாவகம் உற்றால் போலத்**
**தருவன் இவ்வுருவம் எல்லாம் தன்மையும் திரியான் ஆகும்;**
**வரும்வடிவு எல்லாம் சத்தி சத்திதான் மரமும் காழ்ப்பும்**
**இருமையும் போல மன்னிச் சிவத்தினோடு இயைந்து நிற்கும்.** 87

**(இதன் பொருள்):-** ஒருவனே இராவணன் ஆதி பாவகம் உற்றாற் போல- ஒருவனே இராவணன் முதலிய பல வேடங்களைக் கட்டி நடித்தானாயினும் அவன் தனது தன்மையிற் சிறிதும் மாறுபடாதது போல, தருவன் இவ்வுருவம் எல்லாம்- முதல்வனும் ஐந்தொழிற்குமுரிய அருவம் அருவுருவம் உருவம் என்னும் இப்பேத வடிவெல்லாம் எய்தினும், தன்மையும் திரியான் ஆகும்- தனது தன்மையும் வேறுபட்டு விகாரியாவான் அல்லன், வரும் வடிவு எல்லாம் சத்தி- அங்ஙனம் பொருந்திய அவ்வடிவு வேறுபாடுகளெல்லாம் சத்திவடிவமாம், சத்திதான்- அச்சத்தி, மரமும் காழ்ப்பும் இருமையும் போல- மரமும் வயிரமுமாகிய இரண்டும் ஒன்றோடொன்று சேர்ந்து பிரிவின்றியிருத்தல் போல, சவத்தினோடு மன்ன இயைந்து நிற்கும்- சிவத்தினோடு சேர்ந்து பிரிவின்றி நிற்கும்.

சத்தியில் காணப்படுதல் தனக்கு ஆமாறு கூறுகின்றது

**பொன்மை நீலாதி வன்னம் பொருந்திடப் பளிங்கு அவற்றின்**
**தன்மையாய் நிற்குமாப் போல் சத்திதன் பேதம் எல்லாம்**
**நின்மலன் தானாத் தோன்றி நிலைமை ஒன்று ஆயே நிற்பன்**
**முன்அருள் சத்தி தன்பால் முகிழ்க்கும் தான் முனையான் அன்றே.** 88

**(இதன் பொருள்):-** பளிங்கு- பளிங்கானது, பொன்மை நீலம் ஆதி வன்னம் பொருந்திட- பொன்மை நீலம் முதலிய நிறங்களைப் பொருந்தியவிடத்து, அவற்றின் தன்மையாய் நிற்குமா போல்- அவ்வந் நிறங்களின் தன்மையாய்த் தான் தோன்றி வேற்றுமையின்றி நிற்குமாறுபோல, நின்மலன்- முதல்வனும், சத்திதன் பேதமெல்லாம்- சத்தியினுடைய பேதங்களெல்லாம், தான் ஆத் தோன்றி- தானாகத் தோன்றி, நிலைமை ஒன்றாயே நிற்பன்- தனது தன்மையில் வேறுபாடின்றியே நிற்பன், முன் அருட்சத்தி தன்பால் முகிழ்க்கும்- அப்பேதமெல்லாம் சொல்லப்பட்ட அருட்சத்தியினிடமாகத் தோன்றுவனவாம், தான் முளையான்- தானாக வேறு தோன்றான்.

இறைவனுக்குரிய பொது இலக்கணத்தைத் தொகுத்துக் கூறுகின்றது

**சத்தியும் சிவமும் ஆய தன்மை இவ்வுலகம் எல்லாம்**
**ஒத்து ஒவ்வா ஆணும் பெண்ணும் உணர் குணம் குணியும் ஆகி**
**வைத்தனன் அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை எல்லாம்**
**இத்தையும் அறியார் பீட இலிங்கத்தின் இயல்பும் ஓரார்.** 89



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்):– சத்தியும் சிவமும் ஆய தன்மை– முதல்வன் இங்ஙனம் சத்தியும் சிவமும் எனத் தம்முள் இருவேறு வகைப்பட்ட தன்மைகள் உடையனாயிருத்தலால், இவ்வுலகம் எல்லாம்– இப்பிரபஞ்சமெல்லாம், ஒத்து ஒவ்வா ஆணும் பெண்ணும்– வடிவங்களெல்லாம் ஒத்தும் குறிகள் ஒவ்வாது இரு வேறுவகைப்பட்ட ஆணும் பெண்ணுமாகவும், உயர் குணம் குணியும் ஆக– ஆராய்ந்து அறியத்தக்க குணமும் குணமுடைய பொருள்களுமாகவும், வைத்தனன்– உபகரித்தனன், இவ்வாழ்க்கை எல்லாம்– இவ்வாழ்வுகளெல்லாம், அவளால் வந்த ஆக்கம்– சிவசத்தி கூடினதால் வந்த வாழ்வாம், இத்தையும் அறியார்– திருமேனியின் இயல்பு உணராதார் சிவசத்தி இங்ஙனம் ஆன்மாக்களை வாழ்வித்து உபகரித்தலையும் உணரார், பீட இலிங்கத்தின் இயல்பும் ஓரார்– பீடமும் இலிங்கமுஞ் சத்தியும் சிவமுமாய் நின்ற தன்மையும் உணரார்.

இறைவனது சிறப்பு இலக்கணத்தைத் தொகுத்துக் கூறுகிறது

**சிவன் அருஉருவம் அல்லன்; சித்தினோடு அசித்தும் அல்லன்;**
**பவம்முதல் தொழில்கள் ஒன்றும் பண்ணிடு வானும் அல்லன்;**
**தவம் முதல் யோக போகம் தரிப்பவன் அல்லன்; தானே**
**இவைபெற இயைந்தும் ஒன்றும் இயைந்திடா இயல்பி னானே.** 90

(இதன் பொருள்):– சிவன் அரு உருவும் அல்லன்– பரமசிவன் (உயிர்கள் பொருட்டுத் தடத்தவடிவங் கொண்டானாயினும் உண்மையில்) அருவும் அருவுருவும் உருவும் அல்லாதவன், சித்தினோடு அசித்தும் அல்லன்– சித்தாகிய சத்தி வடிவமும் அசித்தாகிய அத்துவாவடிவ மந்திர வடிவங்களும் அல்லாதவன், பவம் முதல் தொழில்கள் ஒன்றும் பண்ணிடுவானும் அல்லன்– சத்திவடிவினனாய் நின்று சிருட்டி முதலிய தொழில்கள் ஒன்றும் செய்பவனும் அல்லாதவன், தவம் முதல் யோக போகம் தரிப்பவன் அல்லன்– ஆன்மாக்களுக்குப் புத்தி முத்திகளைக் கொடுக்கும் பொருட்டுத் தவம் முதலாக யோக போக வடிவங்களைக் கொள்பவனும் அல்லாதவன், தானே இவைபெற இயைந்தும்– தானே தடத்தலக்கணம் முதலிய இவையெல்லாம் உளவாகப் பொருந்தி நிற்பினும், ஒன்றும் இயைந்திடா இயல்பினன்– இவற்றிலொன்றையும் பொருந்தாத சுத்தசைத்தன்னிய இலக்கணத்தையுடையவனாம்.

## இரண்டாம் சூத்திரம்

இறைவன் உயிர்களோடும் பாசங்களோடும் அத்துவிதமாய்க் கலந்து அவற்றை நடத்தும் முறைமையைக் கூறுகின்றது

**உலகுஎலாம் ஆகி வேறாய் உடனும் ஆய் ஒளியாய் ஓங்கி**
**அலகுஇலா உயிர்கள் கன்மத்து ஆணையின் அமர்ந்து செல்லத்**
**தலைவனாய், இவற்றின் தன்மை தனக்கு எய்தல் இன்றித் தாளே**
**நிலவுசீர் அமலன் ஆகி நின்றனன் நீங்காது எங்கும்.** 91

(இதன் பொருள்):– உலகு எலாம் ஆகி– மேற்கூறிய பரமசிவன் கலப்பினால் உலகுயிர்கள் அனைத்தும் தானேயாய், வேறாய்– பொருட்டன்மையால் அவற்றின் வேறுமாய், உடனுமாய்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்துந் தன்மையினால் உடனுமாய், ஒளியாய் ஓங்கி– சத்திவடிவமாய் வியாபரித்து, அலகிலா உயிர்கள்– எண்ணிறந்த உயிர்கள், கன்மத்து– இருவினைக்கீடாக (வரும் இன்பத் துன்பங்களை நுகரத்தற்பொருட்டு மாயாகாரியமான தனு கரணங்களைப் பொருந்திப் பிறந்திறந்து), ஆணையின் அமர்ந்து செல்ல– அவ்வாணையின் வழி அடங்கிச் செல்லுமிடத்து, தலைவனாய்– அவற்றை நடத்தும் முதல்வனாய், இவற்றின் தன்மை தனக்கு எய்தல் இன்றி– உலகுயிர்களாகிய இவற்றின் தன்மைகள் தன்கட் பொருந்துதலின்றி, தான் நிலவு சீர் அமலனாகி– தான் சுயம்பிரகாசமாம் இயல்புடைய நின்மலனாய், எங்கும் நீக்காது நின்றனன்– இவ்வுலகுயிர்களெங்கும் அத்துவிதமாய்க் கலந்து பிரிவின்றி நின்றனன்.

பல உயிர்களோடும், ஒருவன் என்னும் ஒருவன் ஆகிய இறைவன் கலந்து உடனாய் நிற்பதற்கு உவமை கூறுகின்றது

**ஒன்று என மறைகள் எல்லாம் உரைத்திட உயிர்கள் ஒன்றி**
**நின்றனன் என்று பன்மை நிகழ்த்துவது என்னை என்னில்**
**அன்று அவை பதிதான் ஒன்று என்று அறையும் அக்கரங்கள் தோறும்**
**சென்றிடும் அகரம் போல நின்றனன் சிவனும் சேர்ந்தே.** 92

இதன் பொருள்):– மறைகள் எல்லாம்– வேதங்களெல்லாம், ஒன்று என உரைத்திட– ஆன்மா ஏகன் என்று சொல்லவும், உயிர்கள் ஒன்றி நின்றனன் என்று– ஆன்மாக்களோடு கலந்து நிற்பன் என்று, பன்மை நிகழ்த்துவது என்னை என்னின்– பன்மைப்படக் கூறுவது என்னையெனின், அன்று அவை– அநாதியான வேதங்கள், பதிதான் ஒன்று என்று அறையும்– பரமான்மா ஒன்றே என்று கூறுவதன்றிச் சீவான்மாக்களை அன்று, அக்கரங்கள் தோறும் சென்றிடும் அகரம் போல– உயிரும் மெய்யுமாகிய எழுத்துக்களோடு ஒன்றாயும் அவற்றின் வேறாயும் அவற்றை இயக்குவதாயும் நிற்கும் அகரவுயிர்போல, சிவனும் சேர்ந்து நின்றனன்– முதல்வனும் சேதனாசேதனப் பிரபஞ்சங்களோடு ஒன்றாயும் அவற்றின் வேறாயும் அவற்றைச் செலுத்துபவனுமாய் நிற்பன்.

இறைவன் உயிர்களோடு கலந்து உடனாய் நிற்பினும், வேறு ஆவன் என உவமை முகத்தால் கூறுகின்றது

**உருவொடு கருவி எல்லாம் உயிர்கொடு நின்று வேறாய்**
**வருவது போல ஈசன் உயிர்களின் மருவி வாழ்வன்;**
**தரும் உயிர் அவனை ஆகா; உயர் அவை தானும் ஆகான்;**
**வருபவன் இவைதான் ஆயும் வேறும்ஆய் மன்னி நின்றே.** 93

(இதன் பொருள்):– உயிர்– உயிரானது, உருவொடு கருவி எல்லாம்– உடம்பையும் ஐம்பொறி முதலிய கருவிகளையும், கொடு நின்று– பற்றிக்கொண்டு அபேதமாய் நிற்பினும், வேறாய் நின்று அவற்றைச் செலுத்துதல்போல, ஈசன்– முதல்வனும், உயிர்களின் மருவி வாழ்வன்– உயிர்களோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்து அபேதமாய் நிற்பனாயினும், தரும் உயிர் அவனை ஆகா– தரப்பட்ட உயிர்கள் அம்முதல்வனாக மாட்டா, தானம் உயிர் அவை ஆகான்– அம் முதல்வனும் அவ்வுயிர்களாக மாட்டான், (ஆதலால்), இவை தானாயும் வேறுமாய்– அம்முதல்வன் இவ்வுயிர்களேயாயும் (அபேதமாய்) இவற்றின் வேறுமாய் (பேதமாய்) மன்னி நின்று வருபவன்– இவற்றோடு (பேதாபேதமாய்) ஒன்றி நின்று செலுத்துவோனாம்.

இறைவன் வினைப்பயன் ஆகிய இன்ப துன்பங்களை உயிர்கட்கு ஊட்டுதல் பொருட்டு, "கன்மத்து ஆணையின் நிற்றல்" என்பதைத் தொகுத்துக் கூறுகின்றது

**இருவினை இன்பத் துன்பத்து இவ்உயிர் பிறந்து இறந்து**
**வருவது போவதாகும்; மன்னிய வினைப் பயன்கள்**
**தரும் அரன் தரணியோடு தராபதி போலத் தாமே**
**மருவிடா வடிவும் கன்ம பயன்களும் மறுமைக் கண்ணே.** 94

(இதன் பொருள்):– இருவினை– முற்பிறவிகளிற் செய்யப்பட்டுக் கிடந்த புண்ணிய பாவங்களின் பயனாகிய, இன்பத் துன்பத்து– இன்பத் துன்பங்களை நுகரும் பொருட்டு, இவ்வுயிர் பிறந்து இறந்து வருவது போவது ஆகும்– மேற்கூறப்பட்ட உயிர்கள் இப்பூமியிற் பிறந்து இறந்து மீண்டும் பூமிக்கு வருதலும் சுவர்க்க நரகங்களுக்குச் செல்லுதலுமுடையவாயிருக்கும், மன்னிய வினைப் பயன்கள்– அவ்வாறு நிலைபெற்றுள்ள புண்ணிய பாவங்களின் பயன்களை, தரணியோடு தராபதி போல– மருத்துவனும் அரசனும் போல, அரன் தரும்– முதல்வன் தனது ஆணையாற் கூட்டுவன், கன்மப் பலன்களும் வடிவும்– இவ்வாறன்றிப் புண்ணிய பாவங்களின் பயனும் அதனை அனுபவித்தற்கு வேண்டப்படும் உடலும், தாமே மறுமைக்கண் மருவிடா– தாமாக மறுபிறவிகளில் வந்து உயிர்களைப் பொருந்தா.

இன்ப துன்பங்கள் வினையின் பயன் என்பதைக் கூறுகின்றது

**இருவினை என்னை இன்பத் துன்பங்கள் இயல்பு அது என்னில்**
**ஒருதன்மை இயல்புக்கு உள்ளது ஒருவனுக்கு இரண்டு செய்தி**
**வருவது என்? மலரும் தீயும் மருவலின் வாசம் வெம்மை**
**தருவது என்? நீர் என் செய்து தான் இயல்பு ஆகும் அன்றே.** 95

இதுவும் அது

**தன் இயல்பு ஒழியப் பூவும் தழலும் வந்து அணைய நீரின்**
**மன்னியது இரண்டு செய்தி வரும் இரு வினையி னாலும்**
**உன்னிய இன்பத் துன்பம் உறும் உயிர் உணர்வு இல்லாத**
**துன்னிய அசித்தை இன்பத் துன்பங்கள் சூழ்ந்திடாவே.** 96

(இதன் பொருள்):– இருவினை என்னை– இன்பத் துன்பங்களுக்குக் காரணம் இருவினை என்பது என்னை, இன்பத் துன்பங்கள் இயல்பது என்னின்– இன்பத் துன்பங்கள் உடலுக்கு இயல்பாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளவை என்னின், இயல்புக்கு உள்ளது ஒரு தன்மை– இயல்பினுக்கு உள்ளது ஒரு தன்மையே, ஒருவனுக்கு இரண்டு செய்தி வருவது என்– அவ்வாறின்றி ஒருவனுக்கு இன்பமும் துன்பமும் எனத் தம்முள்ளே மாறுபட்ட இரண்டு தன்மை வருதற்குக் காரணம் யாது, மலரும் தீயும் மருவலின்– பூவும் அக்கினியும் பொருந்துதலால், வாசம் வெம்மை நீர் தருவது என்– வாசனையும் சூடும் நீரினிடத்து உண்டாதற்குக் காரணம் யாது, (நீர்) என் செய்து– அந்த நீர் யாது கன்மம் செய்து அவை உண்டாயின? இயல்பாக உண்டாவனவேயன்றி வேறு காரணமின்மையால், தான் இயல்பு ஆகும்– அவ்வின்பத் துன்பங்களும், உடலெடுத்வன்றே– அவ்வுடலுக்கு இயல்பாக உள்ளனவாம்.

இன்ப துன்பங்களுக்குக் காரணம் இருவினையே அன்றி முயற்சி அன்று என்று கூறுகின்றது

**இம்மையின் முயற்சி யாலே, இருநிதி ஈட்டி இன்பம்**
**இம்மையே நுகர்வர் செய்தி இலாதவர் பொருளும் இன்றி**
**இம்மையே இடர் உழப்பர் வேறு இரு வினையது உண்டேல்**
**இம்மையின் முயற்சி இன்றி எய்திட வேண்டும் இங்கே.** 97

இதுவும் அது

**இருவினைச் செயல்காண் இம்மை இரும்பொருள் இன்பம் வேண்டி**
**வருவினை செய்யும் காலை மடிவரும்; மடியும் இன்றித்**
**தருவினை அதனில் அத்தம் தான்அறும் துயரும் தங்கும்**
**ஒருவினை செய்யா தோரும் உடையர் இவ் உலகத்து உள்ளே.** 98

(இதன் பொருள்):– இம்மையின் முயற்சியாலே இருநிதி ஈட்டி– இப்பிறவியின் முயற்சியாலே மிக்க பொருள்ளைச் சம்பாதித்து, இன்பம் இம்மையே நுகர்வர்– இன்பத்தையும் இப்பிறவியிலே தானே அநுபவிப்பர், செய்தி இலாதவர்– முயற்சி இல்லாதவர், பொருளும் இன்றி இம்மையே இடர் உழப்பர்– பொருள் சம்பாதித்தலுமின்றி இப்பிறப்பிலே துன்பத்தை அநுபவிப்பர், வேறு இருவினையது உண்டேல்– இம்முயற்சிக்கு வேறாக இருவினை எனப்படும் ஒரு காரணம் உளதாயின், இம்மையில் முயற்சி இன்றி– இப்பிறப்பிலே யாதொரு முயற்சியின்றியும், இங்கே எய்திடவேண்டும்– இவ்விடத்தே பொருள் வந்து சேரவேண்டும்.

இம்மை இரும் பொருள் இன்பம் வேண்டி– இப்பிறப்பிலே மிக்க பொருளையீட்டி இன்பத்தை அநுபவித்தல் விரும்பி, வருவினை செய்யுங்காலை– அப்பொருள் வருதற்கேற்ற முயற்சி செய்யும்பொழுது, மடிவரும்– சோர்வுண்டாகும், மடியும் இன்றித் தருவினை அதனில்– சோர்வும் வராமற் செய்யும் அம்முயற்சிக்கண், அத்தம் தான் அறும்– பொருளும் இல்லாமற் போகும், துயரும் தங்கும்– அதனாலே துன்பமுஞ் சேரும், இவ்வுலகத்துள்ளே– இப்பூமியின் கண், ஒருவினை செய்யாதோரும்– யாதோரு முயற்சியும் செய்யாதாரும், உடையார்– பொருளுடையராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்றனர், இங்ஙனம் பயன் மாறுபடுதலால் அம்முயற்சி காரணமாகாது. ஆதலால், இருவினைச் செயல்காண்– இன்பத் துன்பங்கள் இருவினை காரணமாக வருவன என்பதை அறிவாயாக.

முயற்சியின் பயன் மேல்வினையும், முன்வினைப் பயனை அனுபவிக்கச் செய்கின்ற துணையும் என இருதிறப்படும் எனக் கூறுகின்றது

**பேறு இழவு இன்ப மோடு பிணி மூப்புச் சாக்காடு என்னும்**
**ஆறும் முன்கருவுட் பட்டது; அவ்விதி அனுபவத் தால்**
**ஏறிடும்; முன்பு செய்த கன்மம் இங்கு இவற்றிற்கு ஏது;**
**தேறு நீ; இனிச்செய் கன்மம் மேல் உடல் சேரும் என்றே.** 99

(இதன் பொருள்):– பேறு இழவு– இப்பிறவியிலே செல்வம் கல்வி நற்சாதி முதலியவற்றைப் பெறுதலும், அவற்றைப் பெறாதிருத்தலும், இன்பமொடு பிணி– இன்பமும் துன்பமும், மூப்புச் சாக்காடு– நீடிய ஆயுளும் குறுகிய ஆயுளும், என்னும் ஆறும்– ஆகிய ஆறும், முன் கருவுள் பட்டது– பிறக்கு முன் சூக்குமமாய்க் கருவினுள் அமைந்து கிடந்தனவாம், அவ்விதி அநுபவத்தால் ஏறிடும்– அங்ஙனம் அமைக்கப்பட்டவை முயற்சியோடு கூடிய அநுபவத்தால் பின் தூலமாய் வந்து பொருந்தும், முன்பு செய்த கன்மம் இங்கு இவற்றிற்கு ஏது– முற்பிறவியிலே செய்யப்பட்ட நல்வினை தீவினைகள் இப்பிறவியிலே அநுபவிக்கப்படும் பேறிழவு முதலிய ஆறினுக்கும் காரணமாம், இனிச் செய் கன்மம்– இப்பிறவியிற் செய்யப்படும் நல்வினை தீவினைகள், மேல் உடல் சேரும் என்று நீ தேறு– மறுபிறவிகளிலே எடுக்கப்படும் உடம்பைப் பொருந்தி அவ்வறுவகைக்கும் காரணமாயிருக்கும் என்று நீ அறிவாயாக.

முயற்சியால் வினையும் வினையால் முயற்சியும் வித்தும் மரமும் போல் ஆகும் என்று கூறுகின்றது

**உடல் செயல் கன்மம் இந்த உடல்வந்த வாறுஏது என்னில்,**
**விடப்படும் முன் உடம்பின் வினை இந்த உடல் விளைக்கும்**
**தொடர்ச்சியால் ஒன்றுக்கு ஒன்று தொன்றுதொட்டு அநாதி; வித்தின்**
**இடத்தின் மரம்; மரத்தின் வித்தும் வந்து இயையுமா போல்.** 100

(இதன் பொருள்):– கன்மம் உடல் செயல்– கன்மமானது உடலைப் பொருந்தி நின்று செய்யப்படுவதாயின், இந்த உடல் வந்தவாறு ஏது என்னின்– இந்த உடல் வந்த முறைமை யாதெனின், முன் விடப்படும் உடம்பின் வினை– முற்பிறவிகளில் விட்டு நீங்கிய உடம்பின் கண் நின்று செய்யப்பட்ட நல்வினை தீவினைகள், இந்த உடல் விளைவிக்கும்– இந்த உடலை உண்டாக்கும், வித்தின் இடத்தினின் மரம்– வித்தினிடத்து மரமும், மரத்தின் வித்தும் வந்து இயையுமாபோல்– மரத்தினின்று வித்தும் வந்து பொருந்துமாறு போல, ஒன்றுக்கு ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சியாய்– உடலும் வினையும் ஒன்றுக்கொன்று காரண காரியத் தொடர்புடைய தாயிருத்தலின், தொன்று தொட்டு அநாதி– தொன்று தொட்டுப் பிரவாகாநாதியாய் வருவனவாம்.

முயற்சி இன்றி வினைப்பயன் அனுபவிக்க முடியாது என்றும் முன் வினைப்பயனை அனுபவிப்பதற்கான அந்த முயற்சிமேல் வினைக்கு வித்து ஆகும் என்று கூறுகின்றது

**முற்செயல் விதியை இந்த முயற்சியோடு அனுபவித்தால்**
**இச்செயல் பலிக்குமாறு என்? இதம் அகிதங்கள் முன்னர்**
**அச்செயல் ஆனால், இங்கும் அவை செயில், மேலைக்கு ஆகும்;**
**பிற்செயாது அனுபவிப்பது இன்று பின் தொடரும் செய்தி.** 101

(இதன் பொருள்):– முன் செயல்விதியை– முற்பிறவியிற் செய்யப்பட்ட இதமகிதங்களின் பயனாகிய பேறிழவு முதலியனவற்றை, இந்த முயற்சியோடு அநுபவித்தால்– இப்பிறவியில் இந்த இதமகிதங்களைச் செய்து அநுபவித்தால், இச்செயல் பலிக்கும் ஆறு என்– இவ்விதமகிதங்கள் பயன்தரும் முறைமை எங்ஙனமெனின், இதம் அகிதங்கள் முன்னர் அச் செயல் ஆனால்– முற்பிறவிகளிற் செய்யப்பட்ட இதமகிதங்கள் இப்பிறவியில் அவற்றின் பயனைத் தருதற்கும் அப்பயனை நுகருமிடத்துச் செய்யப்படும் இதமகிதங்களுக்கும் காரணமாயிருக்கும் என்பது உனக்கு உடம்பாடாதலின் இங்கும் அவை செய்யின்– இப்பிறவியிலும் இதமகிதங்களைச் செய்யின், மேலைக்கு ஆகும்– அவை மறுபிறவியிற் பயன் தருதற்கும் அப்பயனை அநுபவிக்குமிடத்துச் செய்யப்படும் இதமகிதங்களுக்கும் காரணமாயிருக்கும், பின் செயாது அநுபவிப்பது இன்று– பின்பு இதமகிதங்களைச் செய்யாது முன் வினைப்பயனை அநுபவித்தல் இல்லையாதலின், செய்தி பின் தொடரும்– இதமகிதங்கள் பிறவிதோறும் தொடர்ந்து வரும்.

முயற்சியானது செயல் வகையால் அனுபவமாயும், "யான் செய்தேன்" என்னும் கருத்து வகையால், மேல் வினைக்கு வித்தாயும் இரு திறப்படும் எனக் கூறுகின்றது

**மேலைக்கு வித்தும் ஆகி விளைந்தவை உணவும் ஆகி**
**ஞாலத்து வருமா போல நாம் செய்யும் வினைகள் எல்லாம்**
**ஏலத்தான் பலமாச் செய்யும் இதம் அகிதங்கட்கு எல்லாம்**
**மூலத்தது ஆகி என்றும் வந்திடும் முறைமை யோடே.** 102

(இதன் பொருள்):– விளைந்தவை– ஒருவன் விதைத்து விளைந்த தானியம் முதலியன, மேலைக்கு உணவுமாகி வித்துமாகி ஞாலத்து வரும் ஆபோல– பின்னர் உணவுமாய் வித்துமாய் இவ்வுலகத்திலே உபயோகத்துக்கு வருமாறு போல, நாம் செய்யும் வினைகள் எல்லாம்– நாம் என்னும் முனைப்போடு செய்யப்படும் வினைகள் தீவனைகளெல்லாம், ஏலத்தான்– புண்ணிய பாவங்களாய் விளைதலினால், பலமாய்– பின்னர் இன்துபத்துன்பப் பயனாயும், செய்யும் இதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகிதங்கட்கு எல்லாம் மூலத்தது ஆகி- அவ்வின்பத் துன்பங்களை அநுபவிக்குமிடத்துச் செய்யப்படும் நல்வினை தீவினைகளுக்கெல்லாம் காரணமாகியும், என்றும் முறையோடு வந்திடும்- எக்காலமும் முறைபிறழாது வந்து நம்மைப் பொருந்தும்.

உயிர்க்கு இன்பதுன்பப் பயனை இறைவனே தருவன் என்கின்றது

**இதம் அகிதங்கள் என்பது. இகல் மன வாக்குக் காயத்து.**
**இதம் உயிர்க்கு உறுதி செய்தல்; அகிதம் மற்று அது செய்யாமை;**
**இதம் அகிதங்கள் எல்லாம் இறைவனே ஏற்றுக் கொண்டு இங்கு**
**இதம் அகிதத்தால் இன்ப துன்பங்கள் ஈவன் அன்றே.** 103

(இதன் பொருள்):- இதம் அகிதங்கள் என்பது- நன்மை தீமை என்று சொல்லப்படும் இரண்டும், இகல் மனம் வாக்குக் காயத்து- மாறுபட்ட மனத்தின் நினைவாலும் வாக்கின் செயலாலும் காயத்தின் தொழிலாலும் வருவதாம், இதம் உயிர்க்கு உறுதி செய்தல்- அவற்றுள் இதமாவது மனம் வாக்குக் காயங்களினால் உயிர்க்கு நன்மை செய்தல், அகிதம் அது செய்யாமை- அகிதமாவது அங்ஙனம் நன்மை செய்யாது தீமை செய்தலாம், இதம் அகிதங்கள் எல்லாம் இறைவனே ஏற்றுக்கொண்டு- இதம் அகிதங்களாகிய அவ்விரண்டினையும் முதல்வனே ஏற்றுக்கொண்டு, இங்கு இதம் அகிதத்தால்- இங்கே இதம் அகிதங்களுக்கேற்ப, இன்பத் துன்பங்கள் ஈவன்- அவற்றின் பயனாக இன்பத் துன்பங்களைக் கொடுப்பன்.

இறைவன் இதம் அகிதங்களைப் பொருந்தி அறிவதற்குக் காரணம், உயிர்கள் மாட்டு அவன் கொண்ட கருணையே ஆகும் என்கின்றது

**இறைவன் இங்கு ஏற்பது என்னை இதம் அகிதங்கள் என்னில்,**
**நிறைபரன் உயிர்கட்கு வைத்த நேசத்தின் நிலைமை ஆகும்;**
**அறம்மலி இதம்செய் வோருக்கு அனுக்கிர கத்தைச் செய்வன்;**
**மறம்மலி அகிதம் செய்யின், நிக்கிர கத்தை வைப்பன்.** 104

(இதன் பொருள்):- இறைவன்- முதல்வன், இதம் அகிதங்கள்- ஆன்மாக்கள் செய்த நல்வினை தீவினைகளை, இங்கு ஏற்பது என்னை என்னின்- இங்ஙனம் ஏற்றுக்கொள்ளுதற்குக் காரணம் யாதெனின், நிறைபரன்- எங்கும் வியாபகமாய் இருக்கும் அம்முதல்வன், உயிர்க்கு வைத்த நேசத்தின் நிலைமை ஆகும்- ஆன்மாக்கள் முத்தியடைதற் பொருட்டு அவர்கள் மேல் வைத்த கருணையின் நன்மையாகும், ஆதலால், அறம் மலி இதம் செய்வோருக்கு- புண்ணியமாய் மிகுந்த நல்வினை செய்வோருக்கு, அநுக்கிரகத்தைச் செய்வன்- அருளைப் புரிவன், மறம் மலி அகிதம் செய்யின்- பாவமாய் மிகுந்த தீவினையைச் செய்வோருக்கு, நிக்கிரகத்தை வைப்பன்- தண்டனையைச் செய்வன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனால் செய்யப்படும் அனுக்கிரகம், நிக்கிரகமாகிய இரண்டும் கருணையே என்கிறது

**நிக்கிர கங்கள் தானும் நேசத்தால் ஈசன் செய்வது**
**அக்கிர மத்தால் குற்றம் அடித்துத் தீர்த்து அச்சம் பண்ணி**
**இக்கிர மத்தி னாலே ஈண்டு அறம் இயற்றிடு என்பர்**
**எக்கிர மத்தினா லும் இறை செயல் அருளே என்றும்.** 105

(இதன் பொருள்):- ஈசன்- முதல்வன், நிக்கிரகங்கள் தானும் செய்வது- அநுக்கிரகஞ் செய்தலேயன்றி அகிதஞ் செய்தவரைத் தண்டித்தலும், நேசத்தால்- அவர்கள் மேல் வைத்த கருணையினாலாம், அக்கிரமத்தாற் குற்றம்- நீதி தவறிச் செய்யப்பட்ட குற்றங்களை, அடித்துத் தீர்த்து அச்சம்பண்ணி- கண்டித்து நீக்கி அச்சமுண்டாகச் செய்து, இக்கிரமத்தினாலே ஈண்டு அறம் இயற்றிடு என்பன்- இம்முறைமைப்படி இங்கே அறத்தைச் செய்வாயாக என உணர்த்துவன், எக்கிரமத்தினாலும்- எந்த முறையானாலும், இறை செயல் என்றும் அருளே- முதல்வனது செயல் எப்பொழுதும் கருணையேயாம்.

தண்டித்தலும் கருணையே என்பதை உவமை முகத்தால் கூறுகின்றது

**தந்தை தாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தம்சொல் ஆற்றின்**
**வந்திடா விடின், உறுக்கி வளாரினால் அடித்துத் தீய**
**பந்தமும் இடுவர்; எல்லாம் பார்த்திடில் பரிவே ஆகும்;**
**இந்தநீர் முறைமை அன்றோ ஈசனார் முனிவும் என்றும்.** 106

(இதன் பொருள்):- தந்தை தாய் பெற்ற தத்தம் புதல்வர்கள்- தந்தை தாயர்கள் பெற்ற தம்முடைய புதல்வர்கள், தம் சொல் ஆற்றின் வந்திடாவிடின்- தம்முடைய சொல்லின் வழியில் நடவார்களாயின், உறுக்கி வளாரினால் அடித்து- அதட்டிச் சிறு கம்பினால் அடித்து, தீய பந்தமும் இடுவர்- கொடிய விலங்குமிடுவர், பார்த்திடின்- ஆராயுமிடத்து, எல்லாம் பரிவே ஆகும்- இச்செயல்களெல்லாம் வெகுளிபோலத் தோன்றினாலும் அவர்கள்மேற் கொண்ட அன்பு காரணமான செயல்களாம், ஈசனார் முனிவும்- முதல்வன் செய்யும் நிக்கிரகமும், என்றும் இந்த நீர் முறைமையன்றோ- எக்காலமும் இத்தன்மைபோலும் முறைமையையுடைய தன்றோ.

வினையோ பலன் தரும் என்பதை மறுத்துக் கூறுகின்றது

**செயல்களே பலத்தைச் செய்யும் தெய்வம் வேண்டா இங்கு என்னில்**
**முயலும்இச் செயல்கள் இங்கே முழுவதும் அழியும் எங்கே**
**பயன் அளிப்பன அழிந்தே பலன்களைப் பண்ணும் கெட்டே**
**வயல்இடும் தழையும் தின்னும் மருந்தும் பின் பலிக்கு மாபோல்.** 107



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்):- செயல்களே பலத்தைச் செய்யும்- இதமகிதங்களாகிய வினைகளே தத்தம் பயனைத் தரும், இங்கு தெய்வம் வேண்டா என்னின்- இப்பயனைத் தருதற்கு முதல்வன் வேண்டுவதில்லை என்னின், முயலும் இச்செயல்கள் இங்கே முழுவதும் அழியும்- செய்த இவ்வினைகள் செய்த பொழுதே இவ்விடத்து முழுதுங் கெட்டொழிவனவாகலின், எங்கே பயன் அளிப்பன்- எவ்விடத்து நின்று அவை பயனைத் தரும்? வயல் இடும் தழையும் தின்னும் மருந்தும்- வயலில் இட்ட தழைகளும் உண்ணப்பட்ட மருந்தும், கெட்டே பின் பலிக்கும் ஆபோல்- கெட்டுப் பின் பயன் தருமாறு போல, அழிந்தே பயன்களைப் பண்ணும்- இவ்வினைகளும் கெட்டே பின் பயன் தருவனவாம்.

வினை, கெட்டுப் பயன்தரும் என்பதை மறுத்துக் கூறுகின்றது

**செய்க்கிடும் தழையும், தின்னும் திரவியம் அதுவும் போல,**
**உய்த்திடும் செய்தி கேட்டே உறுவிக்கும் பலத்தை என்னில்,**
**வைத்திடும் சோறும் பாக்கும் அருந்தினர் வயிற்றில் பாய்ந்தால்**
**மெய்த்திடும் பலம் உனக்கு மலம் அலால் வேறும் உண்டோ?** 108

(இதன் பொருள்):- செய்க்கு இடும் தழையுந் தின்னும் திரவியம் அதுவும் போல- வயலின்கண் இட்ட தழையும் உண்ணப்பட்ட மருந்தும் கெட்டுப் பின் பயன் தருமாறு போல, உய்த்திடும் செய்தி- செய்யப்பட்ட வினைகளும், கெட்டே பலத்தை உறுவிக்கும் என்னின்- கெட்டே பின் பயனைப் பொருந்தச் செய்யுமெனின், வைத்திடும் சோறும் பாக்கும்- உண்ணுதற்காக வைக்கப்பட்ட சோறு முதலிய உணவுகளும் பாக்கு வெற்றிலை முதலியனவும், அருந்தினர் வயிற்றின் மாய்ந்தால்- உண்டவர் வயிற்றிலே அழியப் பெற்றால், உனக்கு மெய்த்திடும் பலன்- உனக்குப் பிரத்தியட்சமாகக் காணப்படும் பலன், மலம் அலால் வேறும் உண்டோ- மலம் அல்லாது வேறில்லை, ஆதலால் வினை கெட்டுப் பயன் தருமென்பது எவ்விடத்தும் பொருந்தாது.

கெட்ட வினை பிறிதோர் இடத்தில் பயன்தராது என்று கூறுகின்றது

**திரவியம் உவமை அன்று செய்திக்கண் திரவி யங்கள்**
**விரவிய இடத்து வீந்து பலம்தரும் இம்மை அம்மை**
**பரவி நீ பார், நீர், அங்கி பாத்திரத்து இட்ட எல்லாம்**
**கரவிடும் இங்கே எங்கே பலன்கொளக் கருதி னாயே.** 109

(இதன் பொருள்):- திரவிங்கள்- தழையும் மருந்தும் என்று முன்னே கூறப்பட்ட பொருள்கள், விரவிய இடத்தே விந்து- தாம் கிடந்த இடத்திலே அழிந்து, பலன் தரும்- பயன் தருதலாலும், இம்மை அம்மை- இம்மையிற் செய்த வினை மறுமையிற் பயன் தருமென்பது உனது கொள்கையாதலாலும், திரவியம் செய்திக் கண் உவமை அன்று- அப்பொருள்கள் வினைகெட்டுப் பயன் தரும் என்பதற்கு உவமை ஆகா, பரவி நீ பார்- இம்மையிற் செய்த வினை மறுமையிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்தரும் என்று நீ கூறுவதை ஆராய்ந்து பார்ப்பாயாக, நீர் அங்கி பாத்திரத்து இட்ட எல்லாம்– நீ நீரிலிட்டதிலதானமும் யாககுண்டத்தின் அக்கினியிலிட்ட நெய் முதலியனவும் சற்பாத்திரமாயுள்ளவருக்குக் கொடுத்த அன்ன பானாதிதானமும் ஆகிய .இவை எல்லாம், இங்கே கரவிடும்– இம்மையிலே கெட்டொழிவனவாதலின், எங்கே பலன் கொளக் கருதினாய்– வேறெங்கே இவற்றின் பயனை அநுபவிக்க எண்ணினாய்? ஆதலால், வினை கெட்டு மறுமையிற் பயன் தரும் என்பதை ஒழித்து விடுவாயாக.

வினை, செய்தவரின் புத்தியிலே கிடந்து பயன்தரும் என்பதை மறுத்துக் கூறுகின்றது

**செய்தவர் மனத்தே எல்லாச் செய்தியும் கிடந்து, பின்னர்**
**எய்தவே பலன்கள் ஈனும் என்றிடில், இரும் சுவர்க்கம்**
**பொய்யர்வாழ் நரகம் பூமி புந்தியில் கிடந்து போந்தது;**
**ஐயனே அழகுஇது உன்சொல் இந்திர சாலம் ஆய்த்தே.** 110

(இதன் பொருள்):– செய்தவர் மனத்தே– வினை செய்தவர் மனத்தின் கண்ணே, எல்லாச் செய்தியும் கிடந்து– எல்லா வினைகளும் தங்கி, பின்னர் எய்தவே பலன்கள் ஈனும் என்றிடின்– பின் சுவர்க்கம் முதலிய இடங்களைப் பொருந்தவே பயன் தரும் என்று சொல்லின், இரும் சுவர்க்கம் பொய்யர்வாழ் நரகம் பூமி– பெரிய சுவர்க்கம் பொய்யர் வாழ்கின்ற நரகம் பூமி என்னும் இடங்களில் அநுபவிக்கப்படும் பயன்கள், புந்தியில் கிடந்து போந்தது– உனது புத்தியிலே கிடந்து தோன்றினவாகும், ஐயனே உன்சொல் அழகிது– ஐயனே உன்சொல் அழகினையுடையது, இந்திரசாலம் ஆய்த்து– இந்திரசாலமாய் முடிந்தது.

இறைவனே வினைப்பயனை உயிர்க்குத் தருவன் என்பதும், தருவது அவன் கடமை என்பதும் கூறுகிறது

**தானம்செய் பொருள் தரித்தோர் செய்தவர் தக்க செய்தி**
**ஊனம்பின் உறவே காண்டும் பலம் உறுவிப்பான் வேண்டும்;**
**ஈனம்இல் செய்தி ஈசன் இடும்பணி இவை நாம் செய்தால்**
**நூனங்கள் அதிகம் நோக்கி நுகர்விப்பான் வினைநோய் தீர.** 111

(இதன் பொருள்):– தானம் செய் பொருள்– மேற்கூறியவாறு தானம் செய்யப்பட்ட பொருள்களும், தரித்தோர்– அவற்றை ஏற்றவரும், செய்தவர்– அத்தானத்தைச் செய்தவரும், தக்க செய்தி– அந்த நற்கருமமும், பின் ஊனம் உறவே காண்டும்– பின்னர் நிலை பேறின்றிக் கெட்டுப் போகவே காண்கின்றோம். ஆதலால், பலம் உறுவிப்பான் வேண்டும்– இவற்றின் பயனைப் பொருத்துகின்ற நிலைபேறான ஒரு கடவுள் வேண்டப்படும், ஈனம் இல் செய்தி ஈசன் இடும் பணி– தானம் முதலிய நற்கருமங்கள் முதல்வன் வேதாகமங்களிலே நியமித்த விதிகளாம், இவை நாம் செய்தால்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை நாம் செய்யின், நூனங்கள் அதிகம் நோக்கி– அவற்றாலாய பாவ புண்ணியங்களை அறிந்து, வினை நோய்தீர்– அப்பாவ புண்ணியங்களாகிய நோய் தீரும்படி, நுகர்விப்பன்– அவற்றின் பயனைக் கொடுத்துப் புசிப்பிப்பன்.

உயிர்கள் சிற்றறிவு உடையன ஆகலின், முற்றறிவு உடைய முதல்வனுக்கு வினைப்பயனைக் கூட்டுவித்தல் கடமை ஆயிற்று எனக் கூறுகின்றது

**உலகு உடல் கரணம் காலம் உறுபலம் நியதி செய்தி**
**பலஇவை கொண்டு, கன்மம் பண்ணுவது உண்பது ஆனால்,**
**நிலவிடாது இவைதாம் சென்று நினைத்து உயிர் நிறுத்திக் கொள்ளாது;**
**அலகு இலா அறிவன் ஆணை அணைத்திடும் அருளினாலே.** 112

(இதன் பொருள்):– உலகு– கன்மம் செய்தற்கு வேண்டப்படும் இடமும், உடல்– உயிர் தங்குதற்கிடமாகிய சரீரமும், கரணம்– இந்திரியங்கள் முதலிய கருவிகளும், காலம்– முக்காலங்களுளொன்றாகிய நிகழ்காலமும், உறு பலம்– அக்காலத்தினாற் பொருத்தப்படும் விடயபோகமும், நியதி– அவ்விடய போகத்தைக் கன்மத்துக்கீடாக ஏறாமற் குறையாமல் வரையறுத்து நிற்கும் நியதியும், செய்தி– மனம் வாக்குக் காயங்களினாற் செய்யப்படும் செயலும் ஆகிய, இவை பல கொண்டு– இவை பலவற்றையும் தனக்குத் துணையாகக் கொண்டு, கன்மம் பண்ணுவது உண்பது ஆனால்– கன்மம் செய்யப்படுவதும் அவற்றின் பயன் நுகரப்படுவதும் என்பது எல்லார்க்கும் பொருத்தமுடைமையின், இவை தாம் சென்று நிலவிடா– உலகுடல் முதலிய இவை சடமாதலால் மறுமைக்கண் தாமாகச் சென்று உயிரைப் பொருந்தா, உயிர் நினைந்து நிறுத்திக்கொள்ளாது– தனு கரணங்களையின்றி அறியமாட்டாத சிற்றறிவுடைய உயிர் தானாக அவற்றை அறிந்து கூட்டிக்கொள்ளமாட்டாது. ஆகையால், அலகு இலா அறிவன்– அளவிட்டறிதற்கரிய சுதந்திர அறிவையுடைய முதல்வன், அருளினால்– உயிர்கள் மேற்கொண்ட கருணை காரணமாக, ஆணை அணைத்திடும்– தனது சத்தியால் உலகுடல் முதலியவற்றை அவ்வுயிர்களுக்குப் பொருத்துவன்.

இறைவன் கருணையால் விதித்த அறச் செயல்கள் இவை எனக் கூறுகின்றது

**ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், உபசாரம், உறவு, சீலம்,**
**வழுக்கு இலாத் தவம், தானங்கள், வந்தித்தல், வணங்கல், வாய்மை,**
**அழுக்கு இலாத் துறவு, அடக்கம், அறிவொடு அர்ச்சித்தல் ஆதி**
**இழுக்கு இலா அறங்கள் ஆனால் இரங்குவான் பணி அறங்கள்.** 113

(இதன் பொருள்):– ஒழுக்கம்– உயர்ந்தாரோடு பொருந்த நடத்தலுடைமை, அன்பு– யாவரிடத்தும் அன்புடைமை, அருள்– கருணையுடைமை, ஆசாரம்– தத்தம் குலத்துக்குரிய கிரியைகளை அநுட்டித்தலுடைமை, உபசாரம்– தக்கோரிடத்துச் செய்யும் உபசரிப்புடைமை, உறவு– யாவரிடத்தும் நண்புடைமை, சீலம்– நற்குணமுடைமை, வழுக்குஇலாத் தவம்– ஐம்பொறி அடக்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரதங்காத்தல் முதலிய வழுவுதலில்லாத தவமுடைமை, வணங்கல்– வணங்குதலுடைமை, வாய்மை– மெய்ம்மையுடைமை, அழுக்கு இலாத் துறவு– பிறர்மனை விழையாமை வரைவின் மகளிரை விழையாமை முதலிய குற்றமில்லாத ஆண்டகைமையுடைமை, அடக்கம்– தீநெறிக்கட்ட செல்லாது அடங்குதலுடைமை, அறிவொடு– தக்கன இவை தகாதன இவை எனப் பகுத்தறிதலுடைமை, அர்ச்சித்தல் ஆதி– தன்னின் மூத்தார்மாட்டு அர்ச்சித்தலுடைமை முதலியன, இழுக்கு இலா அறங்கள் ஆனால்– குற்றமில்லாத அறங்கள் என்பது உனக்கு உடம்பாடாயிருத்தலின், இரங்குவான் பணி அறங்கள்– அவை கருணை கூர்ந்து அருள் செய்யும் முதல்வன் விதித்த விதிகளாகும்.

நல்வினைகளுள் சிறந்தது சிவ வழிபாடு செய்தலே என்பதும், அதுவும் குறிப்பிட்ட உபாசன மூர்த்த வழிபாடு தேவை என்பதும், அதற்குப் பயன் சிவனே தருவன் என்பதும் கூறுகின்றது

**மனம் அது நினைய, வாக்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல,**
**இனமலர் கையில் கொண்டு, அங்கு இச்சித்த தெய்வம் போற்றிச்,**
**சினம் முதல் அகற்றி வாழும் செயல் அறம் ஆனால் யார்க்கும்**
**முனம்ஒரு தெய்வம் எங்கும் செயற்குமுன் நிலையாம் அன்றே.** 114

(இதன் பொருள்):– சினம் முதல் அகற்றி– மேற்கூறிய ஒழுக்கம் முதலிய நன்மைகளை அநுட்டித்து அவற்றிற்கு மாறாய கோபம் முதலிய தீமைகளை நீக்கி, அங்கு இச்சித்த தெய்வம்– தன் கருத்துக்கு இயைந்த ஒரு கடவுளை, மனமது நினைய– மனத்தால் நினைந்து, வாக்கு வழுத்த– வாக்காலே துதித்து, மந்திரங்கள் சொல்ல– மந்திரங்களை உச்சரித்து, கையில் இனமலர் கொண்டு போற்றி– கைகளால் இனமாகிய மலர்களை எடுத்து அர்ச்சித்து வணங்கி, வாழும் செயல் அறம் ஆனால்– வாழ்கின்ற செயல் அறம் என்பது உனக்கு உடம்பாடாதலின், யார்க்கும் முனம் ஒரு தெய்வம்– எல்லாத் தெய்வங்களுக்கும் முன்னுள்ள ஒப்பற்ற பரமசிவனே, செயற்கு– அச்செயலுக்கு, எங்கும் முன்னிலையாம்– அத்தெய்வத்தினிடமாக முன்னின்று பயனளிப்பன்.

எந்தத் தெய்வத்தை வழிபட்டாலும் சிவபெருமானே பயன் கொடுப்பன் என்பதைக் கூறுகின்றது

**யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வம் ஆகி ஆங்கே**
**மாது ஒரு பாகனார் தாம் வருவர்; மற்றத் தெய்வங்கள்**
**வேதனைப்படும்; இறக்கும்; பிறக்கும்; மேல் வினையும் செய்யும்**
**ஆதலால் இவை இலாதான் அறிந்து அருள் செய்வன் அன்றே.** 115

(இதன் பொருள்):– யாதொரு தெய்வம் கொண்டீர்– நீர் யாதொரு தெய்வத்தைப் பொருளாகக் கொண்டு வழிபட்டீரோ, அத் தெய்வமாகி– அத்தெய்வமாகி, மாது ஒரு பாகனார்தாம்– தேவியை ஒரு பாகத்திலுடைய சிவபிரனே, ஆங்கே வருவர்– அவ்விடத்து எழுந்தருளி வந்து நின்று உமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டை ஏற்றுப் பயனளிப்பர். ஏனெனில், மற்று அத்தெய்வங்கள்– சொல்லப்பட்ட அத்தெய்வங்ள், வேதனைப்படும்– துக்கங்களை அடையும், இறக்கும் பிறக்கும்– இறத்தலும் பிறத்தலும் செய்யும், மேல்வினையும் செய்யும்– அன்றியும் நல்வினை தீவினைகளையுஞ் செய்யும். ஆதலால்– ஆகையால், இவை இலாதான்– இவைகளொன்றுமில்லாத அச்சிவபிரானே, அறிந்து அருள் செய்வன்– ஆன்மாக்களின் செயல்களை அறிந்து அருள் செய்வார்.

மேற்கூறியதனை உவமை முகத்தால் விளக்கிக் கூறுகிறது

**இங்கு நாம் சிலர்க்குப் பூசை இயற்றினால், இவர்களோ வந்து**
**அங்கு வான் தருவர்? அன்றேல் அத்தெய்வம் அத்தனைக் காண்;**
**எங்கும் வாழ் தெய்வம் எல்லாம் இறைவன் ஆணையினால் நிற்பது;**
**அங்கு நாம் செய்யும் செய்திக்கு ஆணை வைப்பால் அளிப்பன்.** 116

(இதன் பொருள்):– சிலர்க்கு இங்கு நாம் பூசை இயற்றினால்– பசு பிராமணர் தந்தை தாய் முதலாயினோருக்கு இம்மையிலே நாம் பூசை செய்து வழிபட்டால், இவர்களோ வந்து அங்கு வான் தருவர்– இவர்களோ வந்து மறுமைக் கண்ணே பயன் தருபவர், அன்றேல்– இவரல்லராயின், அத்தெய்வம் அத்தனைக் காண்– அத்தேவர்களும் அவ்வளவேயன்றிப் பயன் கொடுக்க வல்லவரல்லர் என அறிவாயாக, எங்கும் வாழ் தெய்வம் எல்லாம் நிற்பது– எவ்விடத்துமுள்ள தேவர்கள் யாவும் நிற்பது, இறைவன் ஆணையினால்– சிவபெருமானது சத்தியால் அதிட்டிக்கப்பட்டேயாம், அங்கு நாம் செய்யும் செய்திக்கு– அவரிடத்து நாம் செய்யும் வழிபாட்டுக்கு, ஆணை வைப்பால் அளிப்பன்– அச்சிவபெருமான் அச்சத்தி வழியாகப் பயன் தருவன்.

சிவபெருமானை வழிபடுவது ஒன்றே சிறந்த அறம் என்று கூறுகிறது

**காண்பவன் சிவனே ஆனால் அவன் அடிக்கு அன்பு செய்கை**
**மாண்பு அறம்; அரன் தன் பாதம் மறந்து செய் அறங்கள் எல்லாம்**
**வீண் செயல்; இறைவன் சொன்ன விதி அறம்; விருப்பு ஒன்று இல்லான்**
**பூண்டனன் வேண்டல் செய்யும் பூசனை புரிந்து கொள்ளே.** 117

(இதன் பொருள்):– காண்பவன் சிவனே ஆனால்– இங்ஙனம் ஏனைக் கடவுளரிடத்துச் செய்யும் வழிபாடுகளை அறிந்து அவற்றிற்குப் பயன் அளிப்பவன் சிவபெருமான் என்பது பெறப்படுதலின், அவன் டிக்கு அன்பு செய்கை– அவன் திருவடியை அன்பினால் வழிபடுதல், மாண்பு அறம்– சிறந்த புண்ணியமாம், அரன்றன் பாதம் மறந்து செய் அறங்கள் எல்லாம்– அம்முதல்வனது திருவடியை மறந்து செய்கின்ற புண்ணியங்கள் யாவும், வீண்செயல்– பயனற்ற செயல்களாகும், அறம் இறைவன் சொன்ன விதி– அறமாவது முதல்வன் வேதாகமங்ளிற் கூறிய விதிகளாதலாலும், விருப்பு ஒன்று இல்லான் பூண்டனன்– அவ்விதிகள் வழி ஒழுகுவோருக்கு ஒன்றினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பிலானாகிய அம்முதல்வன் பயனளிக்க விருப்பங் கொண்டனனாதலாலும், வேண்டல் செய்யும் பூசனை புரிந்துகொள்– அவனது அன்பு செய்யும் வழிபாட்டை நீ செய்வாயாக.

சிவபெருமானை வழிபடுதற்கு உரிய இடங்கள் இவை எனக் கூறுகின்றது

**தாபர சங்க மங்கள் என்று இரண்டு உருவில் நின்று**
**மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க்கு அருளை வைப்பன்;**
**நீ பரன் தன்னை நெஞ்சில் நினைவையேல் நிறைந்த பூசை**
**ஆய் பரம் பொருளை நாளும் அர்ச்சி நீ அன்பு செய்தே.** 118

(இதன் பொருள்):– தாபர சங்கமங்கள் என்ற இரண்டு உருவில் நின்று– சிவலிங்கம் சிவனடியார் என்று சொல்லப்பட்ட இரண்டு திருமேனிகளையும் ஆதாரமாகக் கொண்டு நின்று, மாபரன்– மாட்சிமையுடைய பரமசிவன், பூசைகொண்டு– ஆன்மாக்கள் பத்தியோடு புறத்தே செய்யும் பூசையை ஏற்று, மன் உயிர்க்கு அருளை வைப்பன்– நிலைபெற்ற அவ்வான்மாக்களுக்கு அருள் செய்வன், நீ பரன் தன்னை நெஞ்சில் நினைவையேல்– நீ அப்பரமசிவனை அகத்தே தியானிப்பாயாயின், நிறைந்த பூசை– அதனைப் பரிபூரண பூசையாக அவ்வகத்தே உயிரிடமாகக் கொண்டு நின்று ஏற்று அருள்செய்வன். ஆதலால், ஆய் பரம் பொருளை– இவ்வாறு அறியப்படும் அப் பரமசிவனை, நாளும் நீ அன்பு செய்து அர்ச்சி– நாடோறும் நீ பத்தி செய்து வழிபடுவாயாக.

சிவபெருமானிடத்து அன்பு இலாது செய்யும் அறமும் பாவம் ஆகும் எனவும், அவனிடத்து அன்போடு இருந்து செய்யின், பாவமும் அறமாகும் எனவும் கூறுகின்றது

**அரன் அடிக்கு அன்பர் செய்யும் பாவமும் அறம்அது ஆகும்.**
**பரன் அடிக்கு அன்பு இலாதார் புண்ணியம். பாவம் ஆகும்;**
**வரம் உடைத் தக்கன் செய்த மா வேள்வி தீமை ஆகி,**
**நரரினில் பாலன் செய்த பாதகம் நன்மை ஆய்த்தே.** 119

(இதன் பொருள்):– அரன் அடிக்கு அன்பர் செய்யும் பாவமும் அறமது ஆகும்– பரமசிவனது திருவடிகளுக்கு அன்புடையார் செய்யும் பாவச் செயல்களும் அறங்களாய் முடியும், பரன் அடிக்கு அன்பு இலாதார் புண்ணியம் பாவம் ஆகும்– பரமசிவனது திருவடிகளுக்கு அன்பிலாதவர் செய்யும் புண்ணியச் செயல்கள் பாவங்களாய் முடியும், அது, வரம் உடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமை ஆகி– தேவரில் வரங்கள் பெற்றுடைய தக்கன் செய்த பெரிய பாதகம் நன்மை ஆய்த்து– மானுடரிற் சிறுபிள்ளையாகிய சண்டேசநாயனார் செய்த கொலைப்பாதகம் புண்ணியமாகவும் முடிந்தது என்பதனால் அறியப்படும். ஆதலால் மாண்பறமாகிய திருவடிப் பூசனை புரிந்து கொள்வாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்கள் அனைத்திற்கும் இன்பதுன்பங்கள் இறைவன் ஆணை ஆகிய அருளால் வந்து கூடும் என்று கூறுகின்றது

**மறைகள் ஈசன் சொல், அச்சொல் வழிவரா உயிரை வைக்கும்**
**சிறைகள் மா நிரயம்; இட்ட பணி செய்வோர் செல்வத்தோடும்**
**உறையும் மா பதிகள் உம்பர் உலகங்கள்; யோனிக்கு எல்லாம்**
**இறைவன் ஆணையினால் இன்பத் துன்பங்கள் இயைவது ஆகும்.** 120

(இதன் பொருள்):- மறைகள் ஈசன் சொல்- வேதாகமங்கள் சிவபெருமான் அருளிய வாக்குக்களாம், அச்சொல் வழிவரா உயிரை வைக்கும் சிறைகள்- அவ்வாக்குகளின்படி நடவாத உயிர்களைத் தண்டித்தற் பொருட்டு அவனால் அமைக்கப்பட்ட சிறைச்சாலைகள், மா நிரயம்- பெரிய நரகங்களாம், இட்ட பணி செய்வோர்- அவ்வேதாகமங்களில் விதித்த விதிகளின்படி நடப்போர், செல்வத்தோடும் உறையும் மா பதிகள்- செல்வத்தோடும் வாழ்கின்ற மேன்மையுடைய இடங்கள், உம்பர் உலகங்கள்- மேலுள்ள சுவர்க்கம் முதலியனவாம், யோனிக்கெல்லாம்- இச்சுவர்க்க நரகங்களை அடையும் உயிர்களுக்கேயன்றி எல்லா உயிர்களுக்கும், இன்பத் துன்பங்கள்- இன்பமும் துன்பமும், இறைவன் ஆணையினால் இயைவது ஆகும்- முதல்வன் ஆணையினால் வந்து கூடுவதாகும்.

மேற்சொன்னபடி தண்டித்தற்கும் வாழ்வித்தற்கும் அரசனை உவமையாகக் கூறுகின்றது

**ஆணையால் அவனி மன்னன் அருமறை முறை செய்யாரை,**
**ஆணையின் தண்டம் செய்தும், அரும்சிறை இட்டும் வைப்பன்;**
**ஆணையின் வழிசெல் வோருக்கு அரும்பதி செல்வம் நல்கி,**
**ஆணையும் வைப்பன்; எங்கும் ஆணையே ஆணையே காண்.** 121

(இதன் பொருள்):- அவனி மன்னன்- பூமியில் வாழும் அரசன், ஆணையால்- தனது அதிகாரத்தினால் அமைத்த, அருமறை முறை செய்யாரை- அரிய விதிப்படி நடவாதவரை, ஆணையின் தண்டம் செய்தும் அரும் சிறை இட்டும் வைப்பன்- தனது அதிகாரசத்தியாலே தண்டித்தும் பொறுத்தற்கரிய சிறைச்சாலையிலிட்டும் வைப்பன், ஆணையின் வழி செல்வோருக்கு- அவ்விதியின் வழி நடப்போருக்கு, அரும்பதி செல்வம் நல்கி- கிடைத்தற்கரிய ஊர்களும் செல்வமும் கொடுத்து, ஆணையும் வைப்பன்- தன்கீழ் அதிகாரம் செய்யவும் வைப்பன், எங்கும் ஆணையே ஆணையே காண்- இராச்சியமெங்கும் அவ்வதிகாரசத்தியே யாவரையும் வாழ்விப்பதும் தண்டிப்பதுமாகும். அது போல முதல்வனிடத்துங் கண்டுகொள்க.

அரசன் செயலும் இறைவன் ஆணை வழிப்பட்டதே ஆகும் எனக் கூறுகின்றது

**அரசனும் செய்வது ஈசன் அருள்வழி அரும் பாவங்கள்**
**தரையுளோர் செய்யில், தீய தண்டலின் வைத்துத் தண்டத்து**
**உரை செய்து தீர்ப்பன்; பின்பு சொல்வழி நடப்பர் தூயோர்**
**நிரயமும் சேரார்; அந்த நிரயம் முன் நீர்மை ஈதாம்.** 122



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்):– அரசனும் செய்வது– அரசன் மேற்கூறியவாறு அரும்பதி செல்வம் முதலியவற்றை கொடுத்தலன்றித் தண்டித்தலும், ஈசன் அருள் வழி– முதல்வனது அருள்வழிப்பட்டதாம், அஃதெங்ஙனமெனில், தரையுளோர் அரும் பாவங்கள் செய்யின்– இப்பூமியிலுள்ளோர் அரிய பாவங்களைச் செய்யின், தீய தண்டலில் வைத்து– அரனானவன் கொடிய தண்டனை செய்து, தண்டித்து உரை செய்து தீர்ப்பன்– அங்ஙனம் தண்டிக்குமிடத்து மேலும் பாவஞ்செய்யின் இன்னும் கொடிய தண்டஞ் செய்வன் எனச் சொல்லி அப்பாதகங்களை ஒழிப்பன், தூயோர் பின்பு செல்வழி நடப்பர்– அறிவுடையோர் பின்பு விதிப்படி நடந்து, நிரயமும் சேரார்– நரகத்தையும் அடையார், அந்த நிரயமும் ஈது நீர்மை ஆம்– அந்த நரகதண்டமும் இந்த அரச தண்டத் தன்மையதாயிருக்கும்.

இறைவன் ஒரு மருத்துவரைப்போல், உயிர்களுக்கு இன்ப துன்பங்களைப் புசிப்பித்து இருவினையைப் போக்குவன் என்று கூறுகின்றது

**அருளினால் உரைத்த நூலின் வழிவராது அதன்மம் செய்யின்,**
**இருள் உலா நிரயத் துன்பத்து இட்டு, இரும் பாவம் தீர்ப்பன்;**
**பொருள் உலாம் சுவர்க்கம் ஆதி போகத்தால் புணியம் தீர்ப்பன்;**
**மருள் உலாம் மலங்கள் தீர்க்கும் மருந்து இவை வயித்திய நாதன்.** 123

(இதன் பொருள்):– அருளில் உரைத்த நூலின் வழி வராது– முதல்வன் கருணையினால் உரைத்தருளிய வேதாகம நூல் வழி நடவாது, அதன்மம் செய்யின்– பாவம் செய்யின், இருள் உலாம் நிரயத் துன்பத்து இட்டு– இருள் நிறைந்த நரகத்திற் செலுத்தித் துன்பத்தினை நுகர்வித்து, இரும் பாவம் தீர்ப்பன்– பெரிய பாவத்தினை ஒழிப்பன், பொருள் உலாம் சுவர்க்கம் ஆதி போகத்தால்– அந்நூல்வழி நின்று புண்ணியஞ் செய்யின் இன்பத்துக்கேதுவாகிய பொருள்கள் தங்கிய சுவர்க்கம் முதலிய இடங்களில் வைத்து இன்பத்தை நுகர்வித்தலால், புண்ணியம் தீர்ப்பன்– அப்புண்ணியத்தை ஒழிப்பன், இவை– இன்பத்துன்பங்களாகிய இவை, மருள் உலாம் மலங்கள் தீர்க்கும் மருந்து– மயக்கத்தைத் தரும் புண்ணிய பாவங்களாகிய நோய்கள் இரண்டினையும் தீர்த்தற்குரிய மருந்தாம், நாதன் வயித்தியன்– முதல்வன் வயித்தியனாவன்.

சிவபெருமான், மருத்துவனைப் போலத் துன்பத்தை அனுபவிக்கச் செய்து, பாவத்தைப் போக்கும் முறைமையைக் கூறுகின்றது

**மருத்துவன் உரைத்த நூலின் வழிவரின் பிணிகள் வாரா;**
**வருத்திடும் பிணிகள் தப்பின் தப்பிய வழியும் செய்யத்**
**திருத்தினன் மருந்து செய்யாது உறும்பிணி சென்றும் தீர்ப்பன்**
**உரைத்த நூல் சிவனும் இன்னே உறும் கன்மம் ஊட்டித் தீர்ப்பன்.** 124

(இதன் பொருள்):– மருத்துவன் உரைத்த நூலின் வழிவரின்– வைத்தியன் சொன்ன சாத்திர முறைப்படி ஒழுகிவரின், பிணிகள் வாரா– வியாதிகள் உண்டாகா, தப்பின் பிணிகள் வருத்திடும்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்ஙனம் ஒழுகாது தவறின் வியாதிகள் உண்டாகி வருத்தும், தப்பிய வழியும் செய்யத் திருத்துவன்- அங்ஙனம் தவறியவிடத்தும் மருந்துசெய்து அவ்வியாதியை மாற்றுவன், மருந்து செய்யாது சென்றும் உறும் பிணி தீர்ப்பன்- ஒரு மருந்தும் செய்யாது சென்றும் பொருந்திய வியாதியைச் சாந்தி முதலியவற்றாலும் மாற்றுவன், உரைத்த நூல் சிவனும்- சொல்லப்பட்ட வேதாகமங்ளை அருளிய சிவனும் அவ்வேதாகமங்ளின்படி ஒழுகாதவிடத்து, உறும் கன்மம்- வந்து பொருந்திய பாவ கன்மத்தை, இன்னே ஊட்டித் தீர்ப்பன்- இத்தன்மையாகவே நுகர்வித்துத் தீர்ப்பன்.

நரகமே அன்றி சுவர்க்கமும் மருந்து ஆகும் என உவமை முகத்தால் விளக்குகின்றது

**மண்ணுளே சில வியாதி மருத்துவன் அருத்தியோடும்**
**திண்ணமாய் அறுத்துக் கீறித் தீர்த்திடும்; சிலநோய் எல்லாம்**
**கண்ணிய கூட்டி பாலும் கலந்து உடன் கொடுத்துத் தீர்ப்பன்;**
**அண்ணலும் இன்பத் துன்பம் அருத்தியே வினை அறுப்பன்.** 125

(இதன் பொருள்):- மருத்துவன்- வைத்தியன், மண்ணுளே சில வியாதி- இவ்வுலகத்திலே சில வியாதிகளை, அருத்தியோடும் திண்ணமாய்- ஆதரவும் உறுதியுமுடையனாய், அறுத்துக் கீறித் தீர்த்திடும்- சந்திரமிட்டு அறுத்துக்கீறித் தீர்த்திடுவன், சில நோய் எல்லாம்- சில வியாதிகளையெல்லாம், கண்ணிய கட்டி பாலும் உடன் கலந்து கொடுத்துத் தீர்ப்பன்- கருதப்பட்ட சக்கரையும் பாலும் மருந்துடன் கலந்து கொடுத்துத் தீர்ப்பன அதுபோல, அண்ணலும்- முதல்வனும், இன்பத்துன்பம் அருத்தியே வினை அறுப்பன்- இன்பத்துன்பங்களாகிய மருந்தை நுகர்வித்து இரு வினையாகிய நோயைத் தீர்ப்பன்.

பூமி, நரகம், சுவர்க்கம் ஆகிய உலகங்களில் உயிர்கள் அனுபவித்தற்கு உரிய சரீர இயல்பு கூறுகிறது

**பூதனா சரீரம் போனால் புரியட்ட ரூபம் தானே,**
**யாதனா சரீரம் ஆகி இன்பத் துன்பங்கள் எல்லாம்**
**நாதனார் ஆணை உய்க்க நரகொடு சுவர்க்கம் துய்த்துத்**
**தீதிலா அணுவாய் யோனி சேர்ந்திடும் சீவன் எல்லாம்.** 126

(இதன் பொருள்):- பூதனா சரீரம் போனால்- மேற்கூறியவாறு பூமியிலே இன்பத் துன்பங்களை நுகர்தற் பொருட்டுப் பொருந்திய பூதபரிணாம சரீரமாகிய இத்தூலவுடம்பு நீங்கியவிடத்து, புரியட்டரூபம் தானே- சூக்கும சரீரமே, யாதனா சரீரமாகி- பூதசாரவுடம்பு பூதவுடம்புகளாகக் காரியப்படுதலால், சீவன் எல்லாம்- உயிர்கள் எல்லாம், நாதனார் ஆணை உய்க்க- முதல்வனது ஆணை செலுத்த, அவ்வுடம்புகளோடு சென்று, சுவர்க்கமொடு நரக இன்பத் துன்பங்கள் எல்லாம் துய்த்து- சுவர்க்க நரகங்களில் யாதனா சீரரத்தோடு இன்பத் துன்பங்களெல்லாவற்றையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வவற்றின் வினைக்கேற்ப நுகர்ந்து, தீது இலா அனுவாய்– பின்பு அவ்வினைச்சேடம் அநுபவித்தற்குக் குற்றமில்லாத சூக்குமவுடம்போடு பூமியிற் சென்று, யோநி சேர்ந்திடும்– பூதனாசரீரத்தைப் பொருந்தும்.

உலகில் பெற்ற உடலை விட்டவுடன், உயிர் பிறிதோர் உடலைப் பெறுதலும் உண்டு, அல்லது கல்போல் கிடத்தலும் உண்டு என்பதைக் கூறுகின்றது

**உடல்விடா யோனி பற்றி உதிப்பினும் உதிக்கும்; ஒன்றில்**
**படர்வுறாது உறும் பாவத்தால் பாடாணம் போல் கிடந்து**
**கடன் அதாம் காலம் சென்றால், கடுநரகு அதனில் வீழ்ந்து, அங்கு**
**இடர் உறும் உருவம் கன்மத்து அளவினில் எடுக்கும் அன்றே.** 127

(இதன் பொருள்):– உடல் விடா யோநி பற்றி– மேற்கூறியவாறு பூதனா சரீரம் போனவிடத்து யாதனாசரீரத்தையும், யாதனா சரீரம் போனவிடத்துப் பூதனாசரீரத்தையும் எடாது பூதனாசரீரமாகிய இத்தூலவுடம்பினைவிட்டு மற்றொரு தூலவுடம்பைப் பொருந்தி, உதிப்பினும் உதிக்கும்– பிறக்கினும் பிறக்கும், ஒன்றில் படர்வு உறாது– ஒரு யோநியிலும் செல்லாது, உறும் பாவத்தால்– மிகுந்த பாவத்தால், பாடாணம் போல் கிடந்து– அது பக்குவமாகுமளவும் கல்லைப்போல உணர்வின்றிக் கிடந்து, கடனதாம் காலம் சென்றால்– அங்ஙனங்கிடத்தற்குரிய காலம் சென்று பக்குவமானவிடத்து, கடு நரகு அதனில் வீழ்ந்து– கொடிய நரகத்தின்கண் வீழ்ந்து, அங்கு இடர் உறும்– அவ்விடத்துத் துன்புறுதலுமுண்டு, கன்மதது அளவினில்– பக்குவமான வினைக்கீடாக, உருவம் எடுக்கும்– உயிர்கள் சரீரங்களை எடுக்கும்.

உடல், இடம், குறி, உணர்வு மாறினும், உயிர் ஒன்றே என்பதை உவமை முகத்தால் கூறுகின்றது

**பன்னகம் அண்ட சங்கள் பரகாயம் தன்னில் பாய்வோர்.**
**துன்னு தோல் முட்டை யாக்கை துறந்து செல்வதுவே போல**
**உன்னிய உயிர்கள் தூல உடல் விட்டு வானின் ஊடு**
**மன்னிடும் நனவு மாறிக் கனவினை மருவு மாபோல்.** 128

(இதன் பொருள்):– பன்னகம்– பாம்பு, துன்னு தோல் (துறந்து செல்வதுவே போல)– தான் பொருந்திய முன்னைய தோலைவிட்டு மற்றொரு தோலோடு செல்லுதல் போலவும், அண்டசங்கள் முட்டை (துறந்து செல்லுவதுவே போல)– பறவைகள் முட்டையாகிய முன்னைய இடத்தினைவிட்டு மற்றோரிடத்துச் செல்லுதல் போலவும், கரகாயம் தன்னில் பாய்வோர் யாக்கை துறந்து செல்வதுவே போல– பரகாயப் பிரவேசிகள் முன்னைய சரீரத்தை விட்டு மற்றொரு சரீரத்திற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லுதல் போலவும், உன்னிய உயிர்கள்- கருதப்பட்ட உயிர்கள், தூல உடல் விட்டு- தூலவுடலாகிய முன்னைய உடம்பினைவிட்டு மற்றோருடம்போடு, வானின் ஊடும் மன்னிடும்- சுவர்க்க நரகங்களைச் சேர்ந்திடும், நனவு மாறிக் கனவினை மருவும் ஆபோல்- நனவுணர்வுமாறிக் கனவுணர்வை எய்தும் முறைமைபோல அறிவு வேறுபட்டு.

இருவினை என்பது முயற்சி என்றும் அதுவே கன்ம மலம் என்றும், அக்கன்மத்திற்கு மூலம் உண்டு என்றும் கூறுகிறது

**தன்மமோடு அதன்மம் ஆகித் தான் இரு பயனும் தந்து,**
**நன்மை தீமையினும் இன்பத் துன்பினும் நாடிக் காண**
**முன்னமே ஆன்மாவின் தன் மும்மலத்து ஒன்றது ஆகிக்**
**கன்மமும் மூலம் காட்டிக் காமிய மலமாய் நிற்கும். 129**

(இதன் பொருள்):- கன்மமும்- ஆன்மாவினாற் செய்யப்படும் இருவினைகளும், தன்மமொடு அதன்மமாகி- புண்ணிய பாவ வடிவாகி, தான் இரு பயனும் தந்து- தான் இன்பத் துன்பங்களாகிய இரு பயனையும் தருவதாய், நன்மை தீமையினும் இன்பத் துன்பினும் நாடிக் காண- நன்மை தீமைகளைச் செய்யும் பொழுதும் இன்பத் துன்பங்களை அநுபவிக்கும் பொழுதும் ஆராய்ந்து அறியப்படுவதாய், முன்னமே ஆன்மாவின் தன் மும்மலத்து ஒன்றது ஆகி- அநாதியே ஆன்மாவைப் பொருந்திய மும்மலங்களுள் ஒன்றாய் எண்ணப்பட்டு, மூலம் காட்டிக் காமியமலமாய் நிற்கும்- தனக்கு முதற்காரணம் உண்டென்பது காட்டிக் காமியமலம் எனப்பட்டு நிற்கும்.

மூலகன்மம் தொடர்ச்சியாய் இறைவன் ஆணையால், உயிர்க்குப் பல்வேறு வகைப்பட்ட உடல்களைத் தோற்றுவிக்கும் என்று கூறுகிறது

**இருவினை அநாதி ஆகி இயற்றலால் நுகர்வால் அந்தம்**
**வருமலம் சார்ந்து மாயா உருவுகள் மருவி ஆர்த்துத்**
**தருசெயல் முறைமை யாலே தான்பல பேதம் காட்டி**
**அரு அதாய் நின்று அரன்தன் ஆணையின் அமர்ந்து செல்லும். 130**

(இதன் பொருள்):- இருவினை- நல்வினை தீவினை எனப்படும் கன்மம், இயற்றலால் ஆதி- மனம் வாக்குக் காயங்களினாற் செய்யப்படுதலின் தொடக்கமுடையதாயும், நுகர்வால் அந்தம் வரும்- இன்பத் துன்பங்களாக அநுபவிக்கப்பட்டொழிதலின் நாசமுடையதாயும் சந்தானமாய் வருதலின், அநாதி- பிரவாகநாதியாம், மலம் சார்ந்து- ஆணவமலத்தைப் பொருந்தி, மாயா உருவுகள் மருவி- மாயாகாரியமான சரீரங்களைத் தோற்றுவித்து, ஆர்த்து- உயிர்களைப் பந்தித்து, தருசெயல் முறைமையாலே- நிற்கும் காரியத் தன்மையுடையதாயிருத்தலினாலே, தான் பல பேதம் காட்டி- தான் பலவேறுவகைப்பட்ட யோநிகளைத் தோற்றுவித்து, அருவதாய் நின்று- சூக்குமமாய் நின்று, அரன்தன் ஆணையின் அமர்ந்து செல்லும்- முதல்வனது ஆணையின் வழியே அடங்கிச் செல்லும் இயல்புடையதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்கள் அச்சு மாறிப் பிறக்கும் என்று கூறுகின்றது

**சங்கமம் தாப ரங்கள் தத்தம் கன்மத்து ஈடா**
**அங்குஉரு யோனி மாறும் அச்சு மாறாது இங்கு என்னில்,**
**இங்கு மானுடர் இயற்றும் புண்ணியத்து இன்ப ஈட்டம்**
**அங்கு வான் சுரர்க ளாயோ நரர்களாய் அருந்து வாரோ?** 131

(இதன் பொருள்):– சங்கமம் தாவரங்கள்– சரமும் அசரமும் எனப்படும் உயிர்கள், தத்தம் கன்மத்துக்கு ஈடா– தங்கள் தங்கள் கன்மத்துக்கீடாக, அங்கு– அவ்வப் பிறவியிலே, உரு யோநி மாறும்– உடம்பாகிய யோநி மாறிப் பிறக்கும், அங்கு– இங்ஙனம் மாறிப் பிறக்குமிடத்து, அச்சு மாறாது என்னின்– அச்சு மாறாது பிறக்கும் என்று சொல்லின், இங்கு மானுடர் செய்யும் புண்ணியத்தின் பயனாகிய இன்ப மிகுதியை, அங்குவான்– அந்தச் சுவர்க்கத்திலே, சுரர்களாயோ நரர்களாயோ அருந்துவார்– தேவர்களாயோ மானுடரராயோ அநுபவிப்பார்?

உயிர்களுக்குப் பிறவிகள் தோன்றும், உடல் மாறும் என்பதை வலியுறுத்துகின்றது

**நரர்களாய்த் துய்ப்பர் என்னில், நரர் பதி சுரர் உலோகம்**
**சுரர்களாய்த் துய்ப்பர் என்னில், சொன்ன அச்சு அழியும் ஆகும்;**
**சுரர்களாய்ப் பலன்கள் துய்த்துத் தாம் இங்குத் தோன்றும் போது,**
**நரர்களாய்ப் பிறப்பர்; ஞாலத்து அமரராய் நண்ணி டாரே.** 132

(இதன் பொருள்):– சுரர் உலோகம் நரர்களாய்த் துய்ப்பர் என்னின்– சுவர்க்க லோகத்திலே மானுட வடிவாகி அநுபவிப்பரெனின், நரர்பதி– அது பூலோகமேயாம், சுரர்களாய்த் துய்ப்பர் என்னின்– தேவர்களாகி அநுபவிப்பரெனின், சொன்ன அச்சு அழியும் ஆகும்– நீ அழியாதென்று சொல்லிய அச்சு அழிவதுடைத்தாம். ஆதலின், சுரர்களைப் பலன்கள் துய்த்து– தேவர்களாய்ப் பயன்களை அநுபவித்துத் தொலைத்து, தாம் இங்குத் தோன்றும்போது– தாம் மீளவும் இவ்வுலகத்திலே தோன்றும் பொழுது, நரர்களாய்ப் பிறப்பர்– மானுட வடிவாய்ப் பிறப்பர், அமரராய் ஞாலத்து நண்ணிடார்– தேவராய் இவ்வுலகத்தின் கண்ணே பொருந்திடார்.

மயிர்க் குட்டி முதலியன வண்டு முதலியனவாய் மாறும் நடைமுறை உண்மையைக் காட்டி உடல் மாறும் என்பதை வலியுறுத்துகின்றது

**வண்டுகள் ஆகி மாறும் மயிர்க்குட்டி மற்றோர் செந்துப்**
**பண்டைய உருவம் தானே வேட்டுவனாய் பிறக்கும்;**
**கண்டுகொள் யோனி எல்லாம் கன்மத்தால் மாறும் என்றே**
**கொண்டன சமயம் எல்லாம்; இச்சொல் நீ கொண்டது எங்கே?** 133



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்):- மயிர்க்குட்டி வண்டுகளாகி மாறும்- மயிர்க்குட்டிகள் வண்டுகளாகி அச்சு மாறும், மற்றோர் செந்துப் பண்டைய வடிவம் தானே- வேறோர் புழு தன் பழைய வடிவமே, வேட்டுவனாய்ப் பிறக்கும்- அச்சுமாறி வேட்டவனாகித் தோன்றும், கண்டுகொள்- இவற்றை நீ கண்கூடாக அறிவாயாக, யோநி எல்லாம் கன்மத்தான் மாறும் என்றே- உடம்பும் அச்சும் கன்மத்துக்கேற்ப மாறும் என்றே, சமயம் எல்லாம் கொண்டன- எல்லாச் சமயங்களும் கூறியிருக்க, இச்சொல் நீ எங்கே கொண்டது- யோநி மாறும் அச்சு மாறாது என்னும் இந்தச் சொல்லை நீ எங்கே கற்றனை?

யோனியும் அச்சும் மாறும் என்பதற்கு உவமை கூறுகின்றது

**அகலியை கல் அது ஆனாள்; அரி பல பிறவி ஆனான்;**
**பகலவன் குலத்தில் தோன்றிப் பார்எலாம் முழுதும் ஆண்டு,**
**நிகரிலா அரசன் ஆகும் சிலந்தி நீடு உலகம் போற்றச்**
**சகம் அதில் எலிதான் அன்றே மாவலி ஆய்த்துத் தானே.** 134

(இதன் பொருள்):- அகலியை- அகலியையானவள், கல்லது ஆனால்- கௌதம முனிவரிட்ட சாபவயத்தால் உருவும் அச்சும் அழிந்து கல்லானாள், அரி- விட்டுணு, பல பிறவியானான்- பிருகுமுனிவரிட்ட சாபவயத்தால் உருவும் அச்சும் அழிந்து மச்சம் முதலிய பல பிறவிகளை அடைந்தான், சிலந்தி- சிலந்திப்பூச்சியானது உருவும் அச்சும் அழிந்து, பகலவன் குலத்தில் தோன்றி- சூரிய வம்சத்தில் உதித்து, நிகர் இலா அரசன் ஆகும்- ஒப்பில்லாத அரசனாயிற்று, எலி தான் அன்றே- எலியானது உருவும் அச்சும் மாறியே, சகம் அதில்- பூமியின்கண்ணே, நீடு உலகம் போற்ற- மூவுலகத்தோறும் துதிக்கும்படி, மாவலியாய்த்து- மகா பலிச் சக்கரவர்த்தியாயிற்று.

அகலிகை முதலிய பிரமாணம் எல்லாம் சாபமும் அருளுமே அன்றி, வினைப்பயன் அன்று என்று கூறுபவர்க்கு வினைப்பயன் தருவதும் இறைவன் சாப அருளே ஆகும் என்று கூறுகின்றது

**செப்பினாய் மாற வேறு சிலர் விதியாலே கன்மால்**
**வைப்பு உறும் யோனி எல்லாம் மாறி வந்திடா இங்கு என்னில்,**
**எப்படி யானும் செய்திக்கு இறை கரி ஆவன் என்றே**
**முற்பட மொழிந்தேன் எல்லாம் முதல்வன்தன் விதியே ஆகும்.** 135

(இதன் பொருள்):- வேறு சிலர் விதியாலே மாறச் செப்பினாய்- (சிலர் கன்மத்துக்கீடாகவும்) வேறு சிலர் சாபத்தினாலும் உருவும் அச்சும் மாறினார் என்று நீர் சொன்னீர்- கன்மால் வைப்புறும் யோநி எல்லாம் மாறி வந்திடா இங்கு என்னின்- ஆயினும் கன்மம் காரணமாக அமைந்துள்ள உருவும் அச்சும் மாறித் தோன்றா என்று இங்கே நீ சொல்லின், எப்படியானும்- எவ்வகையாலும், செய்திக்கு இறை கரி ஆவன் என்றே- உயிர் செய்யுங் கன்மங்களுக்கு முதல்வன் சாட்சியாவன் என்றே, முற்பட மொழிந்தேன்- முன்னே சொன்னோம். ஆதலின், எல்லாம் முதல்வன் தன் விதியே ஆகும்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாபவயத்தாலாதல் கன்மத்துக்கீடாகவாதல் உருவும் அச்சும் மாறுதல் முதல்வன் சங்கற்பித்தபடியே உண்டாவதாகும்.

ஒன்றைப் பற்றி, அதுவாய் நிற்கும் உயிர், முன் பற்றியதை விட்டு, பிறிது ஒன்றை இறைவன் ஆணையால் பற்றி, அதுவாய் நிற்கும் என்று கூறுகின்றது

**அவ்வவ் யோனி தோறும் அவ்வவ் உலகம் தோறும்**
**செவ்விதின் அறிந்து கன்மம் சேர்ந்திடா; சீவன் சேரா;**
**இவ்வகை தம்மில் சேர்வும் இறைசெயல்; ஆனால் செய்த**
**எவ்வுருவும் தம் கன்மால் மாற்றுவன் இறைவன் தானே.** 136

(இதன் பொருள்):- கன்மம்- வினைகள் (சடமாதலின்), அவ்வவ யோநி தோறும் அவ்வவ உலகம் தோறும்- அவ்வவ் வினைக்கேற்ற சரீரங்களையும் அவ்வவ் வினைக்கேற்ற புவனங்களையும், செவ்விதின் அறிந்து சேர்ந்திடா- நேராக அறிந்து அணையமாட்டா, சீவன் சேரா- உயிர்களும் அறிவுடைப் பொருள்களாயினும் தமக்கென அறிவின்மையாலே அம்மாயாகாரியமான சரீரங்களைத் தாமாகப் பொருந்திக் கன்மப் பயனை அநுபவிக்கமாட்டா. ஆதலால், இவ்வகை தம்மில் சேர்வும்- இம்மாயாகாரியங்களும் கன்மமும் உயிர்களும் தம்முட் சேர்ந்து காரியப்படுதலும், இறைவன் செயல் ஆனால்- முதல்வன் செயலால் என்பது பாரிசேடவளவையாற் பெறப்படுதலின், செ்யத எவ்வுருவும்- முதல்வன் செய்த எவ்வகைச் சரீரங்களையும, தம் கன்மால்- அவரவர் வினைக்கேற்ப, இறைவன்றானே மாற்றுவன்- முதல்வனே மாற்றிக் கொடுப்பன்.

இறைவன் ஆற்றலால் ஒரு சூக்கும உடம்பே பல தூல உடல்களாய் மாறுவதால், சற்காரிய வாதத்திற்கு இழுக்கு இல்லை என உவமை முகத்தால் விளக்குகின்றது

**மாறி இவ் உருவம் எல்லாம் வருவது எங்கே நின்று என்னில்,**
**கூறிய சூக்குமத்து ஆம்; உரு எனில், குறி ஒன்று என்னில்,**
**வேறு ஒரு குறியாம் ஆரம் வீர சங்கிலியும் ஆகும்;**
**தேறு நீ ஒருவனால் இச் செயல் எலாம் சிவனால் ஆகும்.** 137

(இதன் பொருள்):- இவ்வுருவம் எல்லாம் மாறி வருவது எங்கே நின்று என்னின்- இப்பலவகை உடம்புகளெல்லாம் மாறித் தோன்றுவது எங்கே நின்று என்று கேட்பாயாயின், கூறிய சூக்குமத்து ஆம்- மேற்கூறிய சூக்குமவுடம்பினின்றும் உண்டாம், உரு எனின்- தூலவுடம்புகள் பலவகை என்றும், குறி ஒன்று என்னின்- அவற்றின் காரணமாகிய சூக்குமவுடம்பு ஒன்று என்றும் கூறுதல் சற்காரியவாதத்திற்குக் கூடாது என்று சொல்லின், வேறு ஒரு குறியாம் ஆரம் வீரசங்கிலியும்- (ஒரே பொன்னினின்றும்) வேறு தனித்தனிக் குறிகளுடைய மாலை வீரசங்கிலி முதலிய பல ஆபரணங்கள், ஒருவனால் ஆகும்- செய்பவனது ஆற்றலால், இச்செயல் எலாம் ஆகும்- ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூக்குமவுடம்பினின்று பலவகைத் தூலவுடம்புகளும் மாறித் தோன்றும். ஆதலால், நீ தேறு– சற்காரியவாதத்திற்கு இழுக்கில்லை என்பதனை நீ தெளிவாயாக.

ஒரு சூக்கும உடம்பிலிருந்து பல தூல உடம்புகள் தோன்றி அழிவதற்கு உவமை கூறுகின்றது

**சூக்குமம் கெட்டுத் தூலம் தோன்றிடா; சூக்குமத்தின்**
**ஆக்கி ஓர் உடல் கிடப்பது இன்று உடல் ஆக்கும் தன்மைக்கு**
**ஒக்கிய சத்தி உண்டாய் உடல் தரும் காலம் உற்று**
**நீக்கிட மரம் பின் வேர் ஓர் நீள்மரம் நிகழ்த்துமா போல்.** 138

(இதன் பொருள்):– (சூக்குமவுடம்பினின்றும் தூலவுடம்புகள் தோன்றுமாறு எங்ஙனமெனின்) சூக்குமம் கெட்டுத் தூலம் தோன்றிடா– அச் சூக்குமவுடம்பு கெட்டுத் தூலவுடம்புகள் தோன்றுவுன அல்ல, சூக்குமத்தின் ஆக்கி ஓர் உடல் கிடப்பது இன்று– சூக்குமவுடம்பின்கண் உண்டாக்கப்பட்டு ஒரு தூலவுடம்பு கிடந்து தோன்றுவதுமின்று, உடல் ஆக்குந் தன்மைக்கு– சூக்குமவுடம்பினின்றும் தூலவுடம்புகளை உண்டாக்கும் தன்மைக்கு உவமை யாதெனின், மரம் காலம் உற்று நீக்கிட– மரம் இறுதிக் காலம் வருதலால் வெட்டப்பட, பின் வேர் ஓர் நீள் மரம் நிகழ்த்தும் ஆபோல்– பின்பு அம்மர வேர் மற்றொரு நீண்ட மரத்தை உண்டாக்குதல்போல, ஒக்கிய சத்தி உண்டாய் உடல் தரும் சூக்குமவுடம்பிலே இயைபுள்ள ஒரு சத்தி உளதாய் அத்தூலவுடம்புகளைத் தோற்றுவிக்கும்.

பல தூல உடம்பு தோன்றி ஒடுங்குவதற்கு ஒரு சூக்கும உடம்பு வேண்டப்படும் என உவமை முகத்தால் விளக்குகின்றது

**விதிப்படி சூக்கு மத்தே உருவமும் வினையால் இங்கே**
**உதித்திடா உருவம் ஆக உருவரும் மரங்கள் ஆக**
**கதித்து எழு மரமும் வித்தும் கழியும்பின் அழியும் சூக்கம்**
**மதிக்கு எழு கலைகள் போல வருவது போவ தாமே.** 139

(இதன் பொருள்):– வினையால்– வினைக்கேற்ப, விதிப்படி– முதல்வனாணையால், சூக்குமத்தே உருவரும்– சூக்குமவுடம்பினின்றும் தூலவுடம்புகள் தோன்றும், உருவமாக இங்கே உதித்திடா– சூக்குமவுடம்பு இல்லாதவிடத்து அவ்வுடம்புகள் தூலமாக இங்கே தோன்றிடா, உரு வரும் மரங்கள்– அது, உருவமாக விளங்கும் மரங்கள், வித்தில் கதித்து எழும்– வித்தினின்று பருத்து எழும்புதல்போலாம், மரமும் வித்தும் கழியும்– அப்படியாயின் மரம் அழிய அதன் மூலமாகிய வித்தும் அழிதல்போல, பின் சூக்கம் அழியும்– தூலவுடம்பு அழியப் பின் சூக்குமவுடம்பும் அழியும் என்னின், அப்படியன்று சூக்குமத்திலே தூலம் தோன்றுதன் மாத்திரைக்கே வித்தும் மரமும் உவமையன்றி முற்றுவமையன்று. அதற்குவமை யாதெனின், மதிக்கு எழு கலைகள் போல வருவது போவதாம்– சந்திரனுக்குள்ளே கலைகள் பதினாறிற் காரணமாகிய ஒரு கலை அழியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்க மற்றக் கலைகள் தோன்றுதலும் ஒடுங்குதலும்போல மூலமாகிய சூக்குமவுடம்பு அழியாது நிற்க அதினின்று தூலவுடம்புகள் தோன்றி ஒடுங்கும்.

சூக்கும உடம்பிற்கு மூலம் அசுத்த மாயை என்றும் தூல சூக்கும உடல்கள் சிவத்தைச் சார்தல் பொருட்டு அஞ்ஞான காலத்தில் உள்ளனவாகும் என்றும் கூறுகின்றது

**தூலமாம் உருவினுக்குச் சூக்கும முதல்; அதற்கு**
**மூலம்மான்; அதற்கு மூலம் மோகினி; அதன் முதல்தான்**
**மேலதாம் விந்து சத்தி சிவம் இவை மிசையாம் எல்லாம்**
**சால இன்று ஆகும் ஆன்மாச் சிவத்தினைச் சார்ந்த போது.** 140

(இதன் பொருள்):– தூலமாம் உருவினுக்குச் சூக்குமம் முதல்– தூலவுடம்பிற்குச் சூக்குமவுடம்பு முதற்காரணமாம், அதற்கு மூலம் மான்– அச்சூக்குமவுடம்பிற்கு முதற் காரணம் மூலப்பிரகிருதி, அதற்கு மூலம் மோகினி– அம்மூலப்பிரகிருதிக்கு முதற் காரணம் அசுத்தமாயை, அதன் முதல் தான் மேலதாம் விந்து– அவ்வசுத்தமாயையின் முதற்காரணம் மேலான சுத்தமாயையாம், சத்தி சிவம் இவை மிசையாம்– சத்தியும் சிவமும் ஆகிய இரண்டும் இவை அனைத்திற்கும் மேலாம், எல்லாம்– இச்சுத்த மாயாகாரியங்களும் அவ்வசுத்தமாயா பிரகிருதி மாயாகரியங்களுமாகிய எல்லாம், ஆன்மா சிவத்தினைச் சார்ந்த போது– ஆன்மா சிவத்தினை அடைந்தபொழுது, சால இன்று ஆம்– அவ்வான்மாவைப் பந்தியாது முற்றும் நீங்குவனவாம்.

ஆணவ மலம் கன்மமலம் என்னும் நோயைத் தீர்த்து, சிவத்தை அடைவித்தற்கு தூல சூக்கும உடம்புகளை உயிர்க்கு இறைவன் தருகிறான் என்று கூறுகின்றது

**அரன்விதி அருள் அது என்றே அறைந்தனன்; அதுவும் முன்னே**
**தரை, நரகு, அரும் துறக்கம் தனு கரணாதி எல்லாம்**
**வருவதும் செய்து, அநாதி மலங்கள் இம் மருந்தால் தீர்த்துப்**
**பரகதி அதுவும் தந்து பாத பங்கயமும் சூட்டும்.** 141

(இதன் பொருள்):– அரன் விதி– முதல்வன் செய்யுஞ் செயல்கள், அருளது என்று அறைந்தனன்– கருணையே என்று மேலே கூறினாம், அதுவும்– அக்கருணையும், முன்னே தரை நரகு அரும் துறக்கம்– முன்பு பூமி நரகம்– அரிய சுவர்க்கம் முதலியவற்றிலே, தனு கரணாதி எல்லாம்– (உயிர்கள் வினைப்பயனை நுகர்தற்கு வேண்டப்படும்) தனு கரண புவன போகங்களையெல்லாம், வருவதும் செய்து– மாயையினின்றுந் தோற்றுவித்து, அநாதி மலங்கள்– அவ்வுயிர்களைப் பொருந்திய அநாதியாய மல கன்மங்கள் என்னும் நோய்களை, இம்மருந்தால் தீர்த்து– இத்தனு கரணாதிகளாகிய மருந்துகளினாலே தீர்த்து, பரகதி அதுவும் தந்து– பின்னர் பரஞானத்தையும் அருளி, பாத பங்கயமும் சூட்டும்– செந்தாமரை மலர்போலும் திருவடியையுந் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவ மலத்தைத் தீர்த்தல் பொருட்டு, இறைவன் தனு கரணாதிகளை உயிர்களுக்கு வழங்குகிறான் எனக் கூறுகின்றது

**எழும்உடல் கரணம் ஆதி இவைமலம்; மலம் மலத்தால்**
**கழுவுவன் என்று சொன்ன காரணம் என்னை என்னில்**
**செழுநவை அறுவை சாணி உவர் செறிவித்து அழுக்கை**
**முழுவதும் கழிப்பன் மாயை கொடு மலம் ஒழிப்பன் முன்னோன். 142**

(இதன் பொருள்):- எழும் உடல் கரணம் ஆதி இவை மலம்- மாயையினின்று தோன்றுகின்ற தனுகரணங்கள் முதலிய இவை மலமாகும், மலம் மலத்தால் கழுவுவன் என்று சொன்ன காரணம் என்னை என்னின்- மல கன்மங்களை மாயாமலத்தாலே நீக்குவன் என்று சொன்ன காரணம் யாதெனின், செழு நவ அறுவை சாணி உவர் செறிவித்து- வண்ணான் அழகிய கோடிப் புடைவையிற் சாணியும் உவர் மண்ணுமாகிய அழுக்குப் பொருள்களை நன்கு பொருத்தி, அழுக்கை முழுவதும் கழிப்பன்- முன்னிருந்ததும் பின் வந்ததுமாகிய இருவகை அழுக்கையும் முற்றாகப் போக்குவன். அதுபோல, முன்னோன் மாயை கொடு மலம் ஒழிப்பன்- முதல்வனும் மாயாமலத்தின் காரியமான தனுகரணாதிகளைக் கொண்டு மலங்களை நீக்குவன்.

மாயையின் இலக்கணம் கூறுகின்றது

**நித்தமாய் அருவாய் ஏக நிலையதாய் உலகத்திற்கு ஓர்**
**வித்துமாய் அசித்தாய் எங்கும் வியாபியாய் விமலனுக்கு ஓர்**
**சத்தியாய்ப் புவன போகம் தனு கரணமும் உயிர்க்காய்**
**வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமும் செய்யும் அன்றே. 143**

(இதன் பொருள்):- மாயை- அசுத்தமாயையானது, நித்தமாய்- நித்தமாயும், அருவாய்- உருவமற்றதாயும், ஏக நிலையதாய்- ஒன்றாயும், அகிலத்துக்கு ஓர் வித்துமாய்- உலகம் உண்டாதற்கு ஒரு வித்தாயும், அசித்தாய்- சடமாயும், எங்கும் வியாபியாய்- எவ்விடத்தும் வியாபகமாயும், விமலனுக்கு ஓர் சத்தியாய்- முதல்வனுக்கு ஒரு பரிக்கிரக சத்தியாகவும், புவன போகம் தனு கரணமும் உயிர்க்காய் வைத்ததோர் மலமாய்- புவனமும் போகமும் தனுவும் கரணமுமாக உயிர்களின் பொருட்டு விரிந்ததோர் மலமாயும், மயக்கமும் செய்யும்- விபரீதவுணர்வை உண்டாக்குவதாயுமிருக்கும் இலக்கணங்களையுடையதாம்.

மாயையினின்று காலதத்துவம் தோன்றும் எனவும் அதன் இயல்பும் கூறுகின்றது

**மாயையில் கால மோடு நியதியின் கலாதி தோன்றும்**
**ஆய அக் காலம் மூன்றாய் ஆக்கியும் அனித்தும் போக்கிக்**
**காய மோடு உலகுக்கு எல்லாம் கால சங்கையினைப் பண்ணி**
**நாயகன் ஆணையாலே நடத்திடும் சகத்தை எல்லாம். 144**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்):- மாயையின்- மேற்கூறிய அசுத்தமாயையினின்றும், காலமொடு நியதி- காலதத்துவமும் நியதிதத்துவமும், பின் கலாதி தோன்றும்- பின்னர்க் கலை முதலிய தத்துவங்களு் முறையே தோன்றும், ஆய அக்காலம்- தோன்றிய அக்கால தத்துவமானது, மூன்றாய்- இறந்த கால் நிகழ்காலம் எதிர்காலம் என முத்திறப்பட்டு, ஆக்கியும் அளித்தும் போக்கி- தனக்குக் கீழுள்ள பிரபஞ்சமனைத்தையும் தோற்றுவித்தும் நிலை பெறுத்தியும் ஒடுக்கியும், காயமோடு உலகுக்கு எல்லாம் காலசங்கையினைப் பண்ணி- உடலுயிர்கள் அனைத்திற்கும் கால சத்தியாலே, சகத்தை எல்லாம் நடத்திடும்- சடமுஞ் சித்துமாகிய பிரபஞ்சமனைத்தையும் நடாத்தும்.

கால தத்துவத்தின் பின்னர் நியதி தத்துவமும் கலா தத்துவமும் தோன்றும் எனவும், கலையில் வித்தை தத்துவமும் தோன்றும் எனவும் அவற்றின் இயல்பும் கூறுகின்றது

**நியதிபின் தோன்றிக் கன்ம நிச்சயம் பண்ணி நிற்கும்;**
**அயர்வு இலாக் கலைபின் தோன்றி ஆணவம் ஒதுக்கிச் சித்தின்**
**செயல் புரி கிரியா சத்தி தெரிவிக்கும் சிறிதே வித்தை**
**உயர்கலை அதனில் தோன்றி அறிவினை உதிக்கப் பண்ணும்.** 145

(இதன் பொருள்):- நியதி பின் தோன்றி- நியதி தத்துவம் கால தத்துவத்தின் பின்னாக மாயையினின்றும் முதல்வன் ஆணையாலே தோன்றி, கன்ம நிச்சயம் பண்ணி நிற்கும்- அவரவர் செய்த கன்மம் அவரவரே நுகருமாறு நியமிக்கும், பின் அயர்வு இலாக் கலை தோன்றி- அதன்பின் அம்மாயையினின்றும் சோர்விலாத கலாதத்துவம் தோன்றி, ஆணவம் (சிறிதே) ஒதுக்கி- ஆணவ மலத்தைச் சிறிதே நீக்கி, சித்தின் செயல்புரி கிரியாசத்தி சிறிதே தெரிவிக்கும்- ஆன்மாவின் தொழில் செய்யும் கிரியாசத்தி விடயங்களைப் பொருந்தும்படி அதனை ஏகதேசமாய் விளக்கி நிற்கும், வித்தை- வித்தியாதத்துவம், உயர் கலையதனில் தோன்றி- மேலான அக் கலையினின்றுந் தோன்றி, அறிவினை உதிக்கப்பண்ணும்- அவ்வான்மாவின் ஞானசத்தியை விளக்கி அப்போகங்களை அறியச் செய்யும்.

வித்தையிலிருந்து அராகதத்துவம் தோன்றும் எனவும் அதன் இயல்பும் காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் ஐந்தினோடு கூடிய உயிர் புருட தத்துவம் எனவும் கூறுகின்றது

**விச்சையில் அராகம் தோன்றி வினைவழி போகத்தின் கண்**
**இச்சையைப் பண்ணி நிற்கும்; தொழில் அறிவு இச்சை மூன்றும்**
**வைச்ச போது இச்சா ஞானக் கிரியை முன் மருவி ஆன்மா**
**நிச்சயம் புருடன் ஆகிப் பொதுமையின் நிற்பன் அன்றே.** 146

(இதன் பொருள்):- விச்சையின் அராகம் தோன்றி- மேற்கூறிய வித்தையினின்றும் முதல்வனாணையால் அராகதத்துவம் தோன்றி, வினை வழி போகத்தின் கண் இச்சையைப் பண்ணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கும்– (ஆன்மாவின் இச்சாசத்தியை விளக்கி) வினைக்கீடாக வரும் போகங்களிலே இச்சையை உண்டாக்கி நிற்கும், தொழில் அறிவு இச்சை மூன்றும் வைச்சபோது– இங்ஙனம் கலை முதலிய மூன்றும் ஆன்மாவின் கிரியாசத்தி ஞானசத்தி இச்சாசத்தி மூன்றனையும் விளக்கியவிடத்து, இச்சா ஞானக் கிரியை முன் மருவி– அவ்விச்சா ஞானக் கிரியைகள் போகங்களில் உன் முகமாகி, ஆன்மா– ஆன்மாவானது, நிச்சய புருடனாகி– அப்போகங்களை அறியத்தக்க வல்லமையுடையதாய்ப் புருடதத்துவம் எனப் பெயர்பெற்று, பொதுமையில் நிற்பன்– அவற்றைப் பகுத்தறிந்து நுகருந்தன்மையின்றிப் பொதுத்தன்மையுற்றிருக்கும்.

கலா தத்துவத்திலிருந்து மூலப் பிரகிருதியும் அதிலிருந்து குண தத்துவமும் தோன்றும் எனவும் குணத்துவத்தின் இயல்பும் கூறுகின்றது

**வரும் குண வடிவாய் மூலப் பிரகிருதி, கலையில் தோன்றித்**
**தரும் குணம் மூன்றாய், ஒன்றில் தான் மூன்றாய், மும் மூன்று ஆகும்;**
**இரும் குண ரூபம் ஆகி இயைந்திடும் எங்கும் ஆன்மாப்**
**பெரும் குண வடிவாய்ப் போக சாதனம் பெத்தம் ஆமே.** 147

(இதன் பொருள்):– மூலப்பிரகிருதி– அதன்பின் மூலப்பிரகிருதியானது, வரும் குண வடிவாய்– தன்னிடத்துத் தோன்றுங் குணங்களின் அவ்வியத்தவடிவாய், கலையின் தோன்றி– சீகண்டருத்திரரின் அருளாற் கலையினின்று தோன்றி, தரும் குணம் மூன்றாய்– தன்னால் வியத்தமாகத் தரப்படுங் குணங்கள் சாத்துவிகம் இராசதம் தாமதம் என மூவகையாய், ஒன்றின் தான் மூன்றாய்– ஒவ்வொன்றிலும் தான் மூவகையாய், மும்மூன்றாகும்– ஒன்பது வகையாகும், இரும் குணரூபமாகி எங்கும் இயைந்திடும்– அம்மூலப் பிரகிருதி பெரிய குணவடிவாகி எவ்விடத்தும் கலந்து நிற்கும், ஆன்மாப் பெருங் குணவடிவாய்ப் போகசாதனம் பெத்தமாம்– அதனால் ஆன்மாவும் பெரிய குணவடிவினதாய் அதன் போகத்திற்குச் சாதனமாயுள்ள தத்துவங்களும் போக்கியப் பொருள்களும் பந்திக்கப்பட்டு நிற்கும்.

மூலப்பிரகிருதியிலிருந்து குணதத்துவமே அன்றி, அஞ்ஞானமும் தோன்றும் எனவும், குணதத்துவத்திலிருந்து புத்தி தத்துவம் தோன்றும் எனவும், அவற்றின் இயல்பு கூறுகிறது

**சித்தமாம் அவ்வியத்தம் சிந்தனை அதுவும் செய்யும்;**
**புத்தி அவ்வியத்தில் தோன்றிப் புண்ணிய பாவம் சார்ந்து**
**வத்து நிச்சயமும் பண்ணி வரும் சுக துக்க மோகப்**
**பித்தினில் மயங்கி ஞானக் கிரியையும் பேணி நிற்கும்.** 148

(இதன் பொருள்):– சித்தமாம் அவ்வியத்தம்– மேற்கூறியவாறு குணவடிவாயன்றிச் சித்தவடிவாயும் நிற்கும் மூலப்பிரகிருதி, சிந்தனை அதுவும் செய்யும்– ஆன்மாக்களைப் பந்தித்தலேயன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றிற்குப் போகசிந்தனையையும் உண்டாக்கும், புத்தி அவ்வியத்தில் தோன்றி– புத்தி தத்துவம் பிரகிருதியிலே தோன்றி, புண்ணிய பாவம் சார்ந்து– அவ்வவ்வுயிர்கள் செய்த புண்ணிய பாவங்களுக்கேற்ப, வத்து நிச்சயமும் பண்ணி– விடயங்களை இது அது என்று தீர்மானித்தும், வருஞ் சுகதுக்க மோகப் பித்தின் மயங்கி– அவ்விடயங்களால் வரும் சுகதுக்க மோகங்களாகிய மயக்கத்தில் அழுந்தி, ஞானக் கிரியையும் பேணி நிற்கும்– ஆன்மாவின் அறிவையும் தொழிலையும் விருத்தி செய்து நிற்கும்.

புத்தி தத்துவத்திலிருந்து அகங்காரத் தத்துவம் தோன்றும் எனவும்
அதன் இயல்பும், அது மூன்று வகைப்படும் எனவும் கூறுகின்றது

**ஆங்காரம் புத்தியின் கண் உதித்து, அகந்தைக்கு வித்தாய்**
**ஈங்கு ஆர்தான் என்னோடு ஒப்பார் என்று, யான் என்னது என்றே**
**நீங்காதே நிற்கும். தானும் மூன்றதாய் நிகழும் என்பர்;**
**பாங்கு ஆர்பூதாதி வைகா ரிகம் தைசதம்தான் என்றே.** 149

(இதன் பொருள்):– புத்தியின்கண் ஆங்காரம் உதித்து– மேற்கூறிய புத்தி தத்துவத்தினின்றும் அகங்கார தத்துவம் தோன்றி, அகந்தைக்கு வித்தாய்– அகந்தையுறுதற்கு மூலகாரணமாய், ஈங்கு ஆர்தான் என்னோடு ஒப்பார் என்று– இப்பூமியில் யாவர்தாம் என்னோடு ஒப்பவர்? ஒருவருமில்லை என்று செருக்குற்றும், யான் என்னது என்று– யான் எனது என்று அபிமானித்தும், நீங்காதே நிற்கும்– ஆன்மாவை விட்டு நீங்காது நிற்கும், தானும்– அவ்வகங்காரமும், பாங்கு ஆர் பூதாதி– (குணவேற்றுமை பற்றிப்) பகுப்பினையுடைய பூதாதியகங்காரமும், வைகாரிகம்– வைகாரியகங்காரமும், தைசதம் என்று– தைசதவகங்காரமும் என்று, மூன்றதாய் நிகழும் என்பர்– முத்திறப்பட்டு விளங்கும் என்பர் பெரியோர்.

தைசத அகங்காரத்திலிருந்து மனம் தோன்றி, அந்த மனம் சித்த ரூபமாய் நிற்கும் எனவும், அவற்றின் இயல்பும், தைசத அகங்காரத்தில் மனத்தின் பின்னாக ஞானேந்திரியம் தோன்றும் எனவும் கூறுகின்றது

**மனம் அது தைசதத்தின் வந்து ஒரு பொருளை முந்தி**
**நினைவதும் செய்து அங்கு ஐய நிலைமையில் நிற்கும் ஆங்கே**
**இனம் மலி சோத்தி ராதி கன்ம இந்திரியம் எல்லாம்**
**முனம்உரை செய்த வைகா ரிகம் தரும் என்பர் முன்னோர்.** 150

(இதன் பொருள்):– மனமது– மனமானது, தைசதத்தின் வந்து– தைசத அகங்காரத்தினின்றுந் தோன்றி, ஒரு பொருளை முந்தி நினைவதும் செய்து– எதிர்ப்பட்ட ஒரு விடயத்தை இஃது யாதோ என முன்னர்ச் சித்தரூபமாய் நின்று சிந்தித்தும், அங்கு ஐய நிலைமையில் நிற்கும்– பின்பு அவ்விடயத்தில் நிச்சயம் பிறவாது ஐயமடைந்து நிற்கும், ஆங்கே– அத் தைசதவங்காரத்தினின்றே, இனம் மலிசோத்திராதி– இனம் மிகுந்த சோத்திரம் துவக்குசட்சு சிங்ஙவை ஆக்கிராணம் என்னும் ஐந்தும் தோன்றும், கன்ம இந்திரியம் எல்லாம்– வாக்கு பாதம் பாணி பாயு உபத்தம் என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்மேந்திரியங்கள் ஐந்தும், முனம் உரை செய்த வைகாரிகம் தரும் என்வர் முன்னோர்– முன்னர் கூறிய கொரிகாகங்காரத்தினின்று தோன்றும் என்பர் பெரியோர்.

ஞானேந்திரியங்கள் ஆவன இவை என்றால் அவற்றின் குணங்கள் இவை என்றும் கூறுகின்றது

**நற்செவி, துவக்குக், கண், நா, நாசி ஐந்தினையும் நல்லோர்**
**புந்தி இந்திரியம் என்று புகன்றனர்; இவை தமக்குச்**
**சந்த நற் பரிச ரூப இரத கந்தங்கள் ஐந்தும்**
**வைத்தனர் விடயம் ஆக அடைவினில் மருவும் என்றே.** 151

(இதன் பொருள்):– நல் செவி துவக்குக் கண் நா நாசி ஐந்தினையும்– நன்மையாகிய சுரோத்திரம் துவக்கு சட்சு சிங்ஙவை ஆக்கிராணம் என்னும் ஐந்தினையும், நல்லோர்– அறிவுடையோர், புத்தி இந்திரியம் என்று புகன்றனர்– ஞானேந்திரியங்கள் என்று சொல்லினர், இவை தமக்கு விடயமாக– இவற்றிற்கு விடயமாக, அடைவினின்– முறையே, சத்த நல்பரிச ரூப இரதகந்தங்கள் ஐந்தும்– சத்தமும் நல்ல பரிசமும் உருவமும் இரதமும் கந்தமுமாகிய பூதகுணமைந்தும், மருவும் என்று வைத்தனர்– பொருந்தும் என்று வைத்தனர்.

கன்மேந்திரியங்கள் இவை என்றும், அவற்றின் தொழில்கள் இவை என்றும் கூறுகின்றன

**வாக்கொடு பாதம் பாணி பாயுவோடு உபத்தம் ஐந்தும்**
**நீக்கினர் முன்னே கன்மேந் திரியங்கள் என நினைத்தே**
**ஆக்கிய வசன கமன தானமும் விசர்க்க ஆனந்தம்**
**ஊக்கம் ஆர் ஐந்தும் ஐந்தின் தொழில் என ஓதி னாரே.** 152

(இதன் பொருள்):– வாக்கொடு பாதம் பாணி பாயுவோடு உபந்தம் ஐந்தும்– வாக்கும் பாதமும் பாணியும் பாயுவும் உபத்தமும் ஆகிய ஐந்தும், கன்ம இந்திரியங்கள் என நினைத்து முன்னே நீக்கினர்– தொழில் செய்யுங் கருவிகள் எனக் கருதி முன்னே அவற்றை ஞானேந்திரியங்களினின்று வேறாக வைத்தனர், ஆக்கிய வசன கமன தானமும் விசர்க்க ஆநந்தம்– இவற்றால் உண்டாக்கப்பட்ட வசனமும் கமனமும் தானமும் விசர்க்கமும் ஆநந்தமுமாகிய, ஊக்கம் ஆர் ஐந்தும்– உள்ளக்கிளர்ச்சி பொருந்திய ஐந்தும், ஐந்தின் தொழில் என ஓதினர்– வாக்கு முதலிய இவ்வைந்தின் தொழில்கள் என்று சொல்லினர்.

உயிர்க்கு ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள் புறக் கருவியும், மனம் முதலிய நான்கும் அகப்புறக் கருவியும், கலை முதலியன அகக் கருவியும் ஆகும் முறைமை கூறுகின்றது

**வாயாதி சோத்தி ராதி புறத்து வாழ் கருவி ஆகும்;**
**ஓயாத மனாதி காயத்து உணரும் உட்கருவி ஆகும்;**
**ஆய்வார்கட்கு அராகம் ஆதி அவற்றின் உட்கருவி என்பர்;**
**மாயாள் தன் வயிற்று இவற்றால் துடக்குண்டு வாழும் ஆன்மா.** 153



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாயம் வாயு தேயு அப்பு பிருதிவி என்னும் ஐந்து சூக்கும பஞ்சபூதங்களும் தோன்றும், அங்கு– ஆகாயம் முதலிய அப்பூதங்களிடத்து, தொடக்கியே ஒன்றுக்கு ஒன்று ஏற்றமாம், ஓசை ஆதி இரும் குணம் இயைந்து நிற்கும்– தொடர்ச்சியாய் ஒன்றற்கொன்று அதிகமாயிருக்கும் சத்தம் முதலிய பெருங் குணங்கள் பொருந்தி நிற்கும், விடய பூதம்– விடய வடிவான தூல பஞ்ச பூதங்கள், ஆற்றவே– மிகவுந் தூலமாகவே, அங்க அங்கி பாவத்து ஆம்– தேகமும் தேகியும்போல அக்குணங்களோடு பிரிப்பின்றி நிற்கும் தன்மையுடையனவாம்.

ஐந்து பூதங்களின் குணமும் தொழிலும் இவை எனக் கூறுகின்றது

**இரந்திரம் ஆகி வான்தான் இடம் கொடுத்திடும்; சலித்துப்**
**பரந்தவை திரட்டும் கால்; தீச் சுட்டு ஒன்று வித்தல் பண்ணும்;**
**நிரந்தரம் குளிர்ந்து நின்று பதம் செய்யும் நீர்; மண் தானும்**
**உரம்தரு கடினம் ஆகித் தரித்திடும்; உணர்ந்து கொள்ளே.** 156

(இதன் பொருள்):– வான் தான்– பூதங்களுள் ஆகாயமானது, இரந்தரமாகி இடம் கொடுத்திடும்– வெளியாயிருத்தலாகிய குணமும் இடங்கொடுத்தலாகிய தொழிலும் உடையதாம், கால்– வாயுவானது, சலித்துப் பரந்தவை திரட்டும்– சலித்தலாகிய குணமும் பரந்தவற்றைத் திரட்டுதலாகிய தொழிலும் உடையதாம், தீ– தேயுவானது, சுட்டு ஒன்றுவித்தல் பண்ணும்– சுடுதலாகிய குணமும் ஒன்றுவித்தலாகிய தொழிலும் உடையதாம், நீர்– அப்புவானது, நிரந்தரம் குளிர்ந்து நின்று பதஞ்செய்யும்– இடைவிடாது குளிர்தலாகிய குணமும் பதஞ்செய்தலாகிய தொழிலும் உடையதாம், மண்தானும்– பிருதிவியும், உரம் தரும் கடினமாகித் தரித்திடும்– வலி தருதற்கு ஏதுவாகிய கடினமாதலாகிய குணமும் தரித்திடுதலாகிய தொழிலும் உடையதாம், உணர்ந்துகொள்– இவற்றினை அறிவாயாக.

ஐந்து பூதங்களின் வடிவும், நிறமும், பீஜ அக்கரம் இவை எனக் கூறுகின்றது

**மண், புனல், அனல், கால், வான் பால் வடிவு நாற்கோணம் ஆகும்;**
**தண்பிறை மூன்று கோணம் தகும் அறுகோணம் வட்டம்**
**வண் பொன்மை வெம்மை செம்மை கறுப்பொடு தூம வன்னம்**
**எண்தரும் எழுத்துத் தானும் லவரய அவ்வும் ஆமே.** 157

(இதன் பொருள்):– மண் புனல் அனல் கால் வான் பால்– நிலம் நீர் தீ வளி வெளி என்னும் புறப்பூதங்கள் ஐந்துக்கும், நாற்கோணம் தன் பிறை மூன்றுகோணம் தகும் அறுகோணம் வட்டம்– முறையே நாற்கோணமும் குளிர்ந்த பிறை போலும் இருகோணமும் முக்கோணமும் தக்க அறுகோணமும் வட்டமும், வடிவு ஆகும்– வடிவங்களாகும், வண் பொன்மை வெண்மை செம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்):– வாயாதி சோத்திராதி– வாக்கு முதலிய கன்மேந்திரியங்களும் சுரோத்திரம் முதலிய ஞானேந்திரியங்களும், புறத்து வாழ் கருவி ஆகும்– உடம்பின் புறத்தே தொழிற்படும் புறக்கருவிகளாகும், ஓயாத மனாதி– ஒழிவில்லாது சலனப்படும் மனம் முதலாயின, காயத்து உணரும் உட்கருவி ஆகும்– அவ்வவ் விந்திரியங்களாலே தரப்பட்ட விடயங்களை உடம்பின் அகத்தே நின்று விடயிக்கும் உட்கருவிகளாகும், ஆய்வார்கட்கு– ஆராய்வார்களுக்கு, அராகம் ஆதி– அராகம் முதலியன, அவற்றின் உட்கருவி என்பர்– அவ்வந்தக்கரணங்களின் உள் எந்தக் கரணங்களாம் என்பர், மாயாள் தன் வயிற்று இவற்றால்– மாயையினிடத்துண்டாகிய இம்முத்திறக் கருவிகளாலும், ஆன்மாத் தொடக்குண்டு வாழும்– உயிர் பந்திக்கப்பட்டு நிற்கும்.

பூதாதி அகங்காரத்திலிருந்து சப்தாதி தன்மாத்திரை ஐந்தும் தோன்றும் எனவும் அவற்றின் இயல்பும் தன்மாத்திரை ஐந்தும் மனம் புத்தி அகங்காரம் மூன்றும் ஆக எட்டும் புரியட்ட சரீரம் எனவும் கூறுகின்றது

**ஓசை நற் பரிச ரூப இரத கந்தங்கள் என்று**
**பேசும் மாத்திரைகள் ஐந்தும் பிறக்கும் பூதாதி கத்தின்**
**நேச இந்திரியங்கட்கு நிகழ் அறிவு இதனால் காண்டும்**
**ஆசை சேர் மனாதி தன் மாத் திரை புரியட்டகம் தான்.** 154

(இதன் பொருள்):– ஓசை நல் பரிச ரூப இரத கந்தங்கள் என்று பேசும் மாத்திரைகள் ஐந்தும்– சத்தம் நல்ல பரிசம் உருவம் இரதம் கந்தம் என்று சொல்லப்படுந் தன்மாத்திரைகள் ஐந்தும், பூதாதிகத்தில் பிறக்கும்– பூதாதியகங்காரத்தினின்று தோன்றும், நேச இந்திரியங்கட்கு நிகழ் அறிவு இதனர் காண்டும்– விரும்பப்பெற்ற இந்திரியங்களுக்கு உண்டாகும் விடயஞானம் இத் தன்மாத்திரைகளினால் உண்டாதலைக் காண்போம், ஆசை சேர் மனாதி தன்மாத்திரை– இச்சாரூபமாகிய மனம் புத்தி அகங்காரம் மூன்றும் தன்மாத்திரைகள் ஐந்தும் ஆகிய எட்டுங் கூடியது, புரி அட்டகம்– புரியட்டகமாம்.

ஆகாயம் முதலிய ஐந்து பூதங்கள் தன் மாத்திரையிலிருந்து தோன்றும் எனவும், அவற்றின் குணங்கள் ஒன்றற்கு ஒன்று ஏற்றமாய் இருக்கும் எனவும்,இப் பூதங்களின் காரியங்கள் தாத்துவிகங்கள் ஆகிய அங்கம் ஆகவும், இப் பூதங்கள் அங்கியாகவும் இருக்கும் எனவும் கூறுகின்றது

**சாற்றிய பஞ்ச தன்மாத் திரைகளில் சத்தம் முன்னாத்**
**தோற்றும்; வான் வளி தீ நீர் மண் தொடக்கியே ஒன்றுக்கு ஒன்று அங்கு**
**ஏற்றமாம்; ஓசை ஆதி இருங்குணம் இயைந்து நிற்கும்**
**ஆற்றவே விடய பூதம் அங்க அங்கி பாவத்து ஆமே.** 155

(இதன் பொருள்):– சத்தம் முன்னா சாற்றிய பஞ்ச தன்மாத்திரைகளின்– சத்தம் முதுலியவாக மேற்கூறிய தன்மாத்திரைகள் ஐந்திலும் நின்று, வான் வளி தீ நீர் மண் தோற்றும்– முறையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுப்பொடு தூமம் வண்ணம் (ஆம்)– அழகு பொருந்திய பொன்மையும் வெண்மையும் செம்மையும் கருமையும் புகைமையும் முறையே நிறங்களாம், எழுத்துத் தானும் எண்தரும் லவரய அவ்வும் ஆம்– இவற்றிற்குப் பீசங்கள் வலியுடைய லகார வகார ரகார யகார ஹகாரங்களாம்.

ஐந்து பூதங்களின் அடையாளங்களும் அதி தெய்வங்களும் இவை எனக் கூறி நிவர்த்தி முதலிய பஞ்சகலைகட்கும் அவை உள் எனக் கூறுகின்றது

**குறிகள் வச்சிரத்தி னோடு கோகனதம் சுவத்தி**
**அறுபுள்ளி அமுத விந்து அதி தெய்வம் அயன் மால் ஆதி**
**செறிபுகழ் ஈசனோடு சதாசிவம் பூத தெய்வம்**
**நெறிதரு கலை ஐந்திற்கும் நிகழ்த்துவர் இந்த நீர்மை.** 158

(இதன் பொருள்):– குறிகள்– இப்பூதங்களுக்கு அடையாளங்கள், வச்சிரத்தினோடு கோகநதம் சுவத்தி அறுபுள்ளி, அமுதவிந்து– முறையே வச்சிரமும் தாமரைப்பூவும் சுவத்திகமும் அறுபுள்ளியும் அமுத விநதுவுமாம், அதிதெய்வம்– அதிதெங்வங்கள், அயன் மால் ஆதி செறி புகழ் ஈசனோடு சதாசிவம்– பிரமாவும் விட்டுணுவும் உருத்திரனும் மிக்க புகழினையுடைய மகேசுவரனும் சதாசிவமுமாம், பூத தெய்வம்– இப்பூதங்களின் அதி தெய்வங்களை, இந்த நீர்மை– இந்த முறையிலே, நெறிதரு கலை ஐந்திற்கும்– மந்திரம் முதலிய அத்துவாக்களை அடக்கி நிற்கும் முறைமையுடைய நிவிர்த்தி முதலிய பஞ்சகலைகளுக்கும் அதிதெய்வங்கள் என்று, நிகழ்த்துவர்– பெரியோர் கூறுவர்.

தத்துவம் முப்பத்தாறும் மூவகை இயல்பை உடையன எனக் கூறுகின்றது

**சுத்த தத்துவங்கள் என்று முன்னமே சொன்ன ஐந்தும்**
**இத்தகைமையின் இயல்பும் இவை முப்பத்து ஒன்றும் ஆகத்**
**தத்துவம் முப்பத்து ஆறாம் சைதன்னியங்கள் ஐந்தும்**
**சித்தசித்து ஆன்மா ஒன்று முப்பதும் அசித்தே செப்பில்.** 159

(இதன் பொருள்):– சுத்த தத்துவங்கள் என்று முன்னமே சொன்ன ஐந்தும்– சுத்த தத்துவங்களென்று முற்சூத்திரத்திலே கூறப்பட்ட வித்தையோடீசர் சாதாக்கியம் சத்தி சிவம் என்னும் ஐந்தும், இத்தகைமையின் இயம்பும் இவை முப்பத்தொன்றும் ஆக– இந்த முறைமையிலே கூறிய அசுத்தமாயா தத்துவம் முதற் பிருதிவி ஈறாக அசுத்த தத்துவங்கள் முப்பத்தொன்றுமாக, தத்துவம் முப்பத்தாறாம்– தத்துவங்கள் முப்பத்தாறாம், செப்பின்– சொல்லுமிடத்து, ஐந்து சைதன்னியங்கள்– இவற்றுள் சுத்ததத்துவங்கள் ஐந்தும் சடமாயினும் சிவத்துக்குச் சுதந்திரவடிவாகலின் சித்து எனப்படும், ஆன்மா ஒன்று சித்தசித்து– ;புருடதத்துவம் ஒன்றும் சார்ந்ததன் வண்ணமாய் நிற்றலின் சித்தசித்து எனப்படும், முப்பதும் அசித்தே– ஏனைய முப்பது தத்துங்களும் அசித்தாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முபத்தாறு தத்துவமும் சுத்தம், சுத்தாசுத்தம், அசுத்தம் என மூவகையாகவும், பிரேரகாண்டம், போக காண்டம், போக்கிய காண்டம் என்ற மூன்று காண்டமாகவும் இருக்கும் எனக் கூறுகின்றது

**ஐந்து சுத்தத்தின் கீழ், ஏழ் சுத்தாசுத்தம், அசுத்தம்**
**தந்திடும் புமான் கீழ், எண் மூன்று ஆய தத்துவம் சீவர்க்கு**
**வந்திடும்; பிரேர காண்டம் மருவு போக சயித்திரத் தோடு**
**அந்தமில் அணுக் களுக்குப் போக்கிய காண்டம் ஆமே.** 160

(இதன் பொருள்):- (மேற்கூறிய ஐந்து சுத்ததத்துவங்களும்), ஐந்து சுத்தத்தின் கீழ் ஏழ் சுத்தாசுத்தம்- அவ்வைந்து சுத்த தத்துவங்களின் கீழாகவுள்ள அசுத்தமாயாதத்துவம் முதலிய ஏழு சுத்தா சுத்தங்களும், அசுத்தம் தந்திடும் புமான் கீழ் எண்மூன்றாய தத்துவம்- அசுத்தமாயையிலே தோன்றும புருடதத்துவத்துக்குக் கீழாகவுள்ள இருபத்து நான்கு அசுத்ததத்துவங்களும், சீவர்க்கு வந்திடும்- உயிர்களுக்கு வந்து பொருந்தும், அந்தம் இல் அணுக்களுக்கு- அம்மூவகைத் தத்துவங்களும் எண்ணில்லாத உயிர்களுக்கு, பிரேர காண்டம்- பிரேரக கண்டமும், மருவு போசயித்திரத்தோடு போக்கிய காண்டமாம்- உயிர்களைப் பொருந்தும் போசயித்திருகாண்டமும் போக்கிய காண்டமுமாம்.

பிரபஞ்சம் அனைத்தும் தத்துவம் வடிவாய், தூலம் சூக்குமம் அதிசூக்குமம்என முத்திறப்படும் எனவும் இந்த தத்துவங்களைப் பொருந்தும் அணுபக்க சம்புபக்கத்து அதிதெய்வங்கள் அந்த அந்த தத்துவப் பெயரைப் பெறும் எனவும் அனைத்தையும் தத்துவத்தில் வைத்துக் காணவேண்டும் எனவும் கூறுகின்றது

**தத்துவ ரூபம் ஆகும் தரும் அரு உருவம் எல்லாம்**
**தத்துவம் தூல சூக்க பரங்களும் ஆகி நிற்கும்;**
**தத்துவம் தன்னில் சாரும் அணுக்கள் சாதாக்கியத்தில்**
**தத்துவ சத்தம் சாரும்; சகலமும் தத்துவம் காண்.** 161

(இதன் பொருள்):- தரும் அரு உருவம் எல்லாம்- மாயையினாலே தரப்பட்ட அருவும் உருவும் அருவுருவுமாயுள்ள காரியப்பிரபஞ்சமனைத்தும், தத்துவ ரூபமாகும்- இந்தத் தத்துவங்களின் வடிவேயாம், தத்துவம் தூல சூக்கபரங்களும் ஆகி நிற்கும்- இம் முப்பத்தாறு தத்துவங்களும் தூல தத்துவம் சூக்குமதத்துவம் அதிசூக்கும தத்துவம் எனத் தனித்தனி மூவகைப்பட்டும் நிற்கும், தத்துவம் தன்னில் சாரும் அணுக்கள்- இத்தன்மையான தத்துவங்களைப் பொருந்தி நிற்கும் ஆன்மாக்கள், சாதாக்கியத்தில் தத்துவ சத்தம் சாரும்- சாதாக்கிய தத்துவமீறாக அவ்வத் தத்துவப்பெயர் பொருந்தும், சகலமும் தத்துவம் காண்- ஆதலாற் சடமும் சித்துமாய பிரபஞ்சமனைத்தும் தத்துவ ரூபமென அறிவாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவங்கள் ஒடுங்கும் முறை இவ்வாறு எனவும், ஒடுக்கும் கடவுளர் இவர் எனவும் கூறுகின்றது

**தத்துவம் எண் மூன்றும் சென்று ஆன்ம தத்துவத்து ஒடுங்கும்;**
**வித்தையின் ஒடுங்கும் ஆறும்; சிவத்தினின் ஒடுங்கும் மூன்றும்;**
**நித்த தத்துவம் இம் மூன்றும் என்பார்கள், இரண்டும் நின்ற**
**சுத்தமாம் சிவத்து ஒடுங்கும்; தோற்றமும் இதுபோல் ஆகும்.** 162

(இதன் பொருள்):- தத்துவம் எண்மூன்றும் சென்று- சங்கார காலத்திலே பிருதிவி முதற் பிரகிருதி ஈறாகிய இருபத்துநான்கு தத்துவங்களுஞ் சென்று, ஆன்மதத்துவத்து ஒடுங்கும்- ஆன்மதத்துவங்களுக்கு அதி தெய்வமாகிய சீகண்டருத்திரனால் ஒடுங்கும், ஆறும் வித்தையில் ஒடுங்கும்- அராகம் முதல் ரயையீறாகவுள்ள ஆறும் வித்தியா தத்துவங்களுக்கு அதிதெய்வமாகிய அநந்தரால் ஒடுங்கும், மூன்றும் சிவத்தினில் ஒடுங்கும்- சுத்தவித்தை முதற் சாதாக்கியம் ஈறாகவுள்ள மூன்று தத்துவங்களும் இலய சிவனால் ஒடுங்கும், இம்மூன்றும் நித்ததத்துவம் என்பர்கள்- இம்மூன்று தத்துவங்களையும் நித்தியம் என்று சொல்வர், நின்ற இரண்டும்- ஏனைய சத்தி தத்துவம் சிவதத்துவம் இரண்டும், சுத்தமாம் சிவத்து ஒடுங்கும்- சுத்த சிவனால் ஒடுங்கும், தோற்றமும் இது போல் ஆகும்- இத்தத்துவங்கள் தோன்றும் முறைமையும் ஒடுங்கிய இந்த முறை போலவாகும்.

மூவகைப் புறச் சயமத் தெய்வங்கள், பிரகிருதி மாயா தத்துவம், அசுத்த மாயா தத்துவங்களில் நிலைபெறும் எனவும், அகச்சமய தெய்வம் ஆகிய லய போக அதிகார சிவபேதங்கள், சுத்தமாயா தத்துவத்தில் நிலைபெறும் எனவும், சுத்தசிவம் இந்த முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து நிற்கும் எனவும், அமலன் ஆதலை விளக்கிக் கூறுகின்றது

**மொய்தரு பூதம் ஆதி மோகினி அந்தம் ஆகப்**
**பொய்தரு சமயம் எல்லாம் புக்கு நின்றிடும்; புகன்று**
**மெய்தரு சைவம் ஆதி இருமூன்றும் வித்தை ஆதி**
**எய்து தத்துவங்கள் ஏயும் ஒன்றும் இன்று எம் இறைக்கே.** 163

(இதன் பொருள்):- பொய்தரு சமயம் எல்லாம்- பொய்ப் பயனைத் தருகின்ற உலோகாயதம் முதல் ஐக்கியவாத சைவம் ஈறாகவுள்ள புறப்புறச்சமயம் புறச்சமயம் அகப் புறச்சமயம் என்னும் முக்கூற்றுச் சமயத்தவர் அனைவரும், மொய்தரு பூதம் ஆதி மோகிநி அந்தாகப் புக்கு நின்றிடும்- நெருங்கிய பூதம் முதல் அசுத்த மாயாதத்துவம் ஈறாகவுள்ள ஒவ்வொரு தத்துவங்களிற் சென்று நிலைபெறுவர், புகன்ற மெய்தரு சைவம் ஆதி இரு மூன்றும்- சிவாகமங்களுட் கூறப்படும் பதி பசு பாசங்களின் உண்மைத் தன்மையை விளக்குகின்ற சைவம் முதற் சிவாத்துவித சைவம் ஈறாகவுள்ள அறுவகைச் சமயத்தோரும், வித்தை ஆதி எய்து தத்துவங்கள் ஏயும்- மந்திரேசுரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியோர் பொருந்தியிருக்கும் சுத்தவித்தை முதலிய தத்துவங்கள் ஒவ்வொன்றைப் பொருந்துவர், எம்இறைக்கு ஒன்றும் இன்று– சித்தாந்த சைவத் தெய்வமாகிய எமது சுத்தசிவன் இத்தத்துவங்களுக்கு அதீதப்பட்டு நிற்கும் நின்மலனாம்.

சுத்த சிவம் ஆகிய சிவபெருமானே சுத்தமாயா தத்துவங்களில் ஒன்பது பேதமாய் நின்று தொழில் செய்வன் எனக் கூறுகின்றது

**சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், திகழும் ஈசன்,**
**உவந்து அருள் உருத்திரன் தான், மால், அயன் ஒன்றின் ஒன்றாய்ப்**
**பவம்தரும் அருவம் நாலு இங்கு உருவம் நாலு; உபயம் ஒன்றாய்**
**நவம் தரு பேதம் ஏக நாதனே நடிப்பன் என்பர்.** 164

(இதன் பொருள்):– சிவம் சத்தி நாதம் விந்து சதாசிவன் திகழும் ஈசன் உவந்து அரள் உருத்திரன் தான் மால் அயன்– சிவம் சத்தி நாதம் விந்து சதாசிவன் விளங்குகின்ற மகேசுவரன் விரும்பி அருள்புரியும் உருத்திரன் விட்டுணு பிரமன் என்னும் இப்பேதங்கள், ஒன்றின் ஒன்றாய்ப் பவம் தரும்– ஒன்றின் ஒன்றாகத் தோன்றும், இங்கு– இந்நிலையில், அருவம் நால்– அருவத் திருமேனி சிவம் சத்தி நாதம் விந்து என நான்காம், உருவம் நால்– உருவத் திருமேனி மகேசுவரன் உருத்திரன் விட்டுணு பிரமா என நான்காம், உபயம் ஒன்றாம்– அருவுருவத் திருமேனி சதாசிவம் என ஒன்றாம், நவம்தரு பேதம்– இம்முத்திறத்து ஒன்பது பேத வடிவங்களையுங் கொண்டு, ஏகநாதனே நடிப்பன் என்பர்– இறைவன் ஒருவனே பஞ்சகிருத்தியங்களையுஞ் செய்வன் என்று பெரியோர் சொல்லுவர்.

பிரமம் முதல் சிவம் ஈறாகிய சிவபேதம் ஏழற்கும் பராசத்தி ஆகிய ஒருத்தியே சரஸ்வதி முதலிய சத்தி பேதம் ஏழாய் நிற்பள் எனக் கூறுகின்றது

**சத்தியாய், விந்து சத்தி யாய், மனோன்மணி தானாகி,**
**ஒத்துறும் மகேசை ஆகி, உமை, திரு, வாணி ஆகி**
**வைத்துறும் சிவாதிக்கு இங்ஙன் வரும் சத்தி ஒருத்தி ஆகும்;**
**எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்.** 165

(இதன் பொருள்):– வைத்துறும் சிவாதிக்கு– மேற்கூறிய சிவம் முதலிய பேதம் ஒன்பதுக்கும், சத்தியாய்– சிவம் சத்தி நாதம் என்னும் சத்திகளையும், விந்து சத்தியாய்– விந்து சத்தியாயும், மனோன்மனி தானாகி– மனோன்மனியாயும், ஒத்துறும் மகேசையாகி– இயைந்து நிற்கும் மகேசையாயும், உமை திரு வாணி ஆகி உமையாயும் இலக்குமியாயும் சரசுவதியாயும், இங்ஙன் வரும் சத்தி ஒருத்தி ஆகும்– இவ்வாறு ஒன்பது பேதங்களாய் வருஞ் சத்தி ஒருத்தியாகிய பராசத்தியேயாம், ஈசன் எத்திறம் நின்றான் அத்திறம் அவளும் நிற்பள்– முதல்வன் சிவபேதம் ஒன்பதிலும் எவ்வாறு நின்று நடாத்துகின்றானோ அவ்வாறே சத்திபேதம் ஒன்பதிலும் அப்பராசத்தியும் நின்று நடாத்துவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமும் சத்தியும் எனப் பிரித்து எண்ணப் படினும் அவ்விரண்டும் பிரிப்பின்றி நாயகன் நாயகி பாவமாய் நிற்கும் எனக் கூறுகின்றது

**சத்திதான் நாதம் ஆதி தான் ஆகும்; சிவமும் அந்தச்**
**சத்திதான் ஆதி ஆகும்; தரும் வடிவு ஆன எல்லாம்**
**சத்தியும் சிவமும் ஆகும்; சத்திதான் சத்தனுக்கு ஓர்**
**சத்தியாம்; சத்தன் வேண்டிற்று எல்லாம் ஆம் சத்திதானே.** 166

(இதன் பொருள்):- சத்திதான் நாதம் ஆதி தான் ஆகும்- அப்பராசத்தியானது மேற்கூறியவாறு ஒன்பது வகையாய் நாதம் முதற் பிருதிவியீறான தத்துவங்களோடு இயைந்து நிற்கும், சிவமும் அந்தச் சத்தி தான் ஆதி ஆகும்- பரமசிவனும் அந்தச் சத்தி முதலியவற்றை அதிட்டித்து அவற்றோடு இயைந்து நிற்கும். ஆதலால் தரும் வடிவான எல்லாம் சத்தியும் சிவமும் ஆகும்- அச்சத்தியாற் சிருட்டிக்கப்பட்ட பிரபஞ்ச வடிவமெல்லாம் சத்தி மயமும் சிவமயமுமாயிருக்கும், சத்திதான் சத்தனுக்கு சத்தியாம்- அச்சத்தியே சத்தனாகிய பரமசிவனுக்குத் தேவியுமாகலின், சத்தன் வேண்டிற்றெல்லாம் சத்திதான் ஆம்- பரமசிவன் சங்கற்பித்தனவெல்லாம், அச்சத்தியாலாவதாம்.

சிவனும் சத்தியும் நாயகனும் நாயகியுமாய் நிற்பினும் சிவன் பிரமசாரியும் சத்தி கன்னியும் ஆவர் என "இவற்றின் தன்மை தனக்கு எய்தல் இன்று ஆதலை" விளக்கிக் கூறுகின்றது.

**சிவம் சத்தி தன்னை ஈன்றும், சத்திதான் சிவத்தை ஈன்றும்,**
**உவந்து இருவரும் புணர்ந்து இங்கு உலகு உயிர் எல்லாம் ஈன்றும்,**
**பவன் பிரமசாரி ஆகும்; பால் மொழி கன்னி ஆகும்;**
**தவம்தரு ஞானத்தொர்க்கு இத் தன்மை தான் தெரியும் அன்றே.** 167

(இதன் பொருள்):- சிவம் சத்தி தன்னை ஈன்றும் சத்திதான் சிவத்தை ஈன்றும்- மேற்கூறியவாறு சிவம் சத்தியைத் தோற்றுவித்தும் சத்தி சிவத்தைத் தோற்வித்தும், உவந்து- ஆன்மாக்களின் ஈடேற்றத்தை விரும்பி, இருவரும் புணர்ந்து- இருவருங்கூடி, இங்கு உலகு உயிர் எல்லாம் ஈன்றும்- இவ்விடத்துச் சடமும் சித்துமாகிய பிரபஞ்சமெல்லாவற்றையும் தோற்றுவித்துப் பஞ்சகிருத்தியம் நடத்துவரெனினும், பவன் பிரமசாரி ஆகும்- சிவபெருமான் பிரமசாரியாவன், பால்மொழி கன்னி ஆகும்- பால்போலும் இனிய மொழியையுடைய பராசத்தி கன்னிகையாவள், தவம் தரு ஞானத்தோர்க்கு- விடே தவத்தாலுண்டாகும் திருவருளைப் பெற்ற ஞானிகளுக்கு, அத்தன்மை தான் தெரியும்- சிவமுஞ் சத்தியும் உலகுயிர்களோடு தோய்வின்றி நிற்கும் முறைமை விளங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவங்கள் எல்லாம் உயிர்களோடு பொருந்துவன என்று அறிந்து நீக்கி, தத்துவாதீதன் ஆகிய பரசிவனை அறிபவன், தத்துவ ஞானி ஆவன் எனக் கூறுகின்றது

**தனு கரண புவன போகம் தற்பரம் பந்தம் வீடுஎன்று**
**அணுவினோடு எல்லாம் ஆகி அடைந்திடும் தத்துவங்கள்**
**இனிது அறிந்து இவை நிவர்த்தி முதல்கலை இடத்தே நீக்கி**
**நனி பரம் உணர்ந்தோன் அந்த தத்துவ ஞானி ஆவன். 168**

(இதன் பொருள்):- தனு கரண புவன போகம்- அசுத்தமாயா காரியமான தனு கரண புவன போகங்களும், தற்பரம்- அவ்வசுத்தமாயைக்கு மேலான சுத்தமாயா காரியங்களும் ஆகிய இவைகள், பந்தம் வீடு என்று- முறையே ஆன்மாக்களைப் பந்திப்பன என்றும் அவ்வான்மாக்களுக்கு அபரமுத்தித் தானங்கள் என்றும் சொல்லப்பட்டு, எல்லாம் ஆகி- அவ்வான்மாக்கள் கன்மப்பயனை நுகர்தற்கு இன்றியமையாது வேண்டப்படும் பொருள்கள் யாவுமாகி, அணுவினோடு அடைந்திடும் தத்துவங்கள்- அவ்வான்மாக்களைப் பொருந்தும் தத்துவங்களாகும், இனிது அறிந்து- இவற்றின் இயல்பைத் தெளிய அறிந்து, இவை நிவிர்த்தி முதல் கலை இடத்தே நீக்கி- இவற்றை நிவிர்த்தி முதல் சாந்தியதீதை ஈறாகவுள்ள பஞ்சகலைகளிடத்தும் வைத்துக் கழித்து, பரம் நனி உணர்ந்தோன்- அச்சாந்தியதீத கலைக்கு மேலாக சிவனை நன்குணர்ந்தோன், அந்தத் தத்துவஞானி ஆவன்- (பவன் பிரமசாரியும் பான்மொழி கன்னியுமாம் என்னும்) அவ்வுண்மை அறிவுடையனாவன்.

தத்துவங்கள் உயிரைப் பொருந்துவதற்குக் காரணம், உயிர்கட்கு வினைப்பயனை அனுபவிக்கச் செய்து. அதனால் கன்ம மலம் ஆணவ மலங்களைப் போக்குதல் பொருட்டு ஆகும் எனக் கூறுகின்றது

**எல்லாமாய் தத்துவங்கள் இயைந்தது என் அணுவுக்கு என்னில்**
**தொல்லாய கன்மம் எல்லாம் துய்ப்பித்துத் துடைத்தற்கும் பின்**
**நில்லாமை முற்றுவித்து நீக்கவும் கூடி நின்ற**
**பொல்லாத ஆணவத்தைப் போக்கவும் புகுந்தது அன்றே. 169**

(இதன் பொருள்):- தத்துவங்கள் எல்லாமாய் அணுவுக்கு இயைந்தது என் என்னின்- தத்துவங்கள் அங்ஙனம் தது கரண புவன போகங்களாகி ஆன்மாக்களைப் பொருந்தினதற்குக் காரணம் யாது என்னின், தொல்லாய கன்மம் எல்லாம் துய்ப்பித்துத் துடைத்தற்கும்- பழைமையாகிய இரு வினைகளையும் நுகர்வித்து நீக்குதற்பொருட்டும், பின் நில்லாமை முற்றுவித்து நீக்கவும்- அதனாற் பக்குவமடைந்தவிடத்து அவ்வினைகள் மேற்பிறவிகளுக்கு வித்தாகாமல் அவற்றை முதிர்வித்துத் தீக்கையாற் கழித்தற் பொருட்டும், கூடி நின்ற பொல்லாத ஆணவத்தைப் போக்கவும்- ஆன்மாக்களோடு சகசமாய் நின்று எல்லாத் தீங்குகளுக்குங் காரணமாயுள்ள ஆணவமலத்தைப் போக்குதற்கும், புகுந்தது- அடைந்ததாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவ மலத்தின் இலக்கணம் கூறுகின்றது

ஒன்றதாய், அநேக சத்தி உடையதாய், உடனாய், ஆதி
அன்றதாய், ஆன்மாவின் தன் அறிவொடு தொழிலை ஆர்த்து,
நின்று போத் திருத்துவத்தை நிகழ்த்திச் செம்பினில் களிம்பு ஏய்ந்து,
என்றும் அஞ்ஞானம் காட்டும் ஆணவம் இயைந்து நின்றே. 170

(இதன் பொருள்):- ஆணவனம்- மேற்கூறிய ஆணவமலமானது, ஒன்றதாய்- ஒன்றாய், அநேக சத்தி உடையதாய்- எண்ணிறந்த சத்திகளையுடையதாய், உடனாய்- ஆன்மாக்களோடு கூடி நிற்பதாய், ஆதியன்றதாய்- அநாதியேயுள்ளதாய், ஆன்மாவின் தன் அறிவொடு தொழிலை ஆர்த்து நின்று- கேவலத்திலே அவ்வான்மாக்களின் அறிவையும் தொழிலையும் மறைத்து நின்று, போத்திருத்துவத்தை நிகழ்த்தி- சகலத்திற் போக நுகர்ச்சிக்கு வினைமுதலாதற்றன்மையை உண்டாக்கி, செம்பினில் களிம்பு ஏய்ந்து இயைந்து நின்று- செம்பினிற் பொருந்திய களிம்பை ஒத்து அவ்வான்மாக்களோடு விரவி நின்று, என்றும் அஞ்ஞானம் காட்டும்- கேவலம் சகலம் என்னும் இரண்டிலும் அஞ்ஞானத்தை நிகழ்த்தும்.

மாயையே ஆணவமலம் என்பதை மறுத்து உரைக்கின்றது

மலம் என வேறுஒன்று இல்லை, மாயா காரியம் அது என்னில்
இலகு உயிர்க்கு இச்சா ஞானக் கிரியைகள் எழுப்பும் மாயை;
விலகிடும் மலம் இவற்றை வேறும் அன்று அதுவேறு ஆகி
உலகு உடல் கரணம் ஆகி உதித்திடும் உணர்ந்து கொள்ளே. 171

(இதன் பொருள்):- மலம் என ஒன்று வேறு இல்லை- ஆணவமலம் என்று ஒரு பொருள் வேறாக இல்லை, அது மாயாகாரியம் என்னின்- உயிர்களின் அறிவையும் தொழிலையும் மறைப்பது மாயாகாரியம் என்னின், அப்படியன்று, மாயை- மாயையானது, இலகு உயர்க்கு- விளங்கா நின்ற உயர்களுக்கு, இச்சா ஞானக் கிரியைகள் எழுப்பும்- இச்சை அறிவு செயல்களை விளக்கும், மலம் இவற்றை விலகிடும்- ஆணவமலம் இவ்விச்சை அறிவு செயல்களைத் தடுக்கும், வேறும் அன்று- அன்றியும் இந்த ஆணவ மலம் உயிர்களுக்கு வேறாயிருப்பதுமன்று, அது வேறாகி- அந்த மாயை உயிர்களுக்கு வேறாயிருப்பதாய், உலகு உடல் கரணம் ஆதி- உலகும் உடலும் கரணமுமாய், உதித்திடும்- தோன்றுவதாகும், உணர்ந்துகொள்- உயிர்களோடு கலந்து நின்று அவற்றின் இச்சா ஞானக் கிரியைகளை மறைக்கும் ஆணவ மலத்திற்கும் உயிர்களின் வேறாக நின்று அவ்விச்சா ஞானக் கிரியைகளை விளக்கும் மாயைக்கும் வேற்றுமை அறியாது, தனு கரண புவன போகங்களாகத் தோன்றும் மாயாகாரியமே உயிர்களை மறைக்கும் என்பது போலிமதம்என அறிவாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயா மலத்தைத் தவிர ஆணவமலம் வேறு இல்லை என்பதற்குக் கூறப்பட்ட உவமை பொருந்தாது எனக் கூறுகின்றது

**மாயையே ஆன்ம ஞானக் கிரியையை மறைத்து நிற்கும்;**
**தூய அப்பரிதி தன்னில் சுடர் முகில் மறைத்தால் போலப்**
**போய்முகில் அகலச் சோதி புரிந்திடும் அதுவே போலக்**
**காயமும் அகல ஞானத் தொழில் பிரகாச மாமே.** 172

இதுவும் அது

**பரிதியை முகில் மறைப்பப் பாய் ஒளி பதுங்கினால் போல்**
**உருஉயிர் மறைக்கில் ஞானக் கிரியைகள் ஒழிக்கும் ஆகும்,**
**கருதிடும் இச்சா ஞானக் காரியம் காயம் பெற்றால்**
**மருவிடும் உயிர்க்குக் காயம் வந்திடா விடில் மறைப்பே.** 173

(இதன் பொருள்):- தூய அப்பரிதி தன்னிற் சுடர் முகில் மறைத்தாற் போல- தூயதாகிய அந்த ஆதித்தனின் ஒளியை மேகம் வேறாய் நின்று மறைத்தாற் போல, மாயையே ஆன்ம ஞானக் கிரியையை மறைத்து நிற்கும்- மாயையே உலகு உடல் கரணமாய் நின்று ஆன்மாவின் இச்சா ஞானக் கிரியைகளை மறைக்கும், முகில் போய் அகலச் சோதி புரிந்திடும் அதுவே போல- மேகம் அகன்று நீங்க ஆதித்தனது ஒளி வெளிப்பட்டுத் தோன்றுமாபோல, காயமும் அகல ஞானத் தொழில் பிரகாசமாம்- உடலாகிய மாயையும் நீக அவ்விச்சா ஞானக் கிரியைகள் விளங்கித் தோன்றும் என்று சொல்லின், பரிதியை முகில் மறைப்பப் பாய் ஒளி பதுங்கினாற்போல்- ஆதித்தனை மேகம் மறைத்தவளவில் பரந்து நின்ற ஆதித்தவொளி மறைந்தாற்போல, உயிர் உரு மறைக்கின்- ஆன்மாவை உடலாகிய மாயை மறைக்கின், ஞானக் கிரியைகள் ஒளிக்கும்ஆகும்- அதன் இச்சா ஞானக் கிரியைகளும் மறைவனவாகும், அங்ஙனமின்றி, காயம் பெற்றால்- ஆன்மா உடம்பைப் பெற்றவிடத்து, கருதிடும் இச்சாஞான காரியம் மருவிடும்- கருதப்படும் இச்சா ஞானக் கிரியைகள் நிகழ்தலாலும், உயிர்க்குக் காயம் வந்திடாவிடின் மறைப்பு- ஆன்மா உடம்பைப் பெறாதவிடத்து அவ்விச்சா ஞானக் கிரியைகள் நிகழாவாதலாலும் உனது கூற்றுப் பொருந்தாது.

ஆணவமல மாயாமலங்களின் வேற்றுமையை விளக்கி, ஆணவ மலத்தின் தன்மை, உயிரின் உணர்வைத் தடுத்தல் ஆகும் எனக் கூறுகின்றது

**போத காரியம் மறைத்து நின்றது புகல் மலம் காண்;**
**ஓதலாம் குணமும் ஆக உயிரினுள் விரவ லாலே,**
**காதலால் அவித்தை சிந்தத் தரும்கலை ஆதி மாயை**
**ஆதலால் இரண்டும் சோதி இருள் என வேறாம் அன்றே.** 174

(இதன் பொருள்):- போத காரியம் மறைத்து நின்றது புகல் மலம் காண்- மேற்கூறியவற்றால் ஆன்மாவின் அறிவு தொழில்களை மறைத்து நின்றது சொல்லப்பட்ட ஆணவமலம் என அறிவாயாக, உயிரினுள் விரவலாலே குணமும் ஆக ஓதலாம்- உயிரோடு விரவிநிற்றலால் அதனை அவ்வுயிரின் குணம் போன்ற ஒன்றதாகவுங் கூறலாம், அவித்தை சிந்த- ஆயினும் ஆணவமலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெடும்படி, மாயை காதலால் கலை ஆதி தரும் ஆதலால்– மாயையானது விருப்பத்தோடு கலை முதலிய துத்துவங்களைத் தோற்றுவிக்குமாதலால், இரண்டும் இருள் சோதி என வேறாம்– ஆணவம் மாயை என்னும் இரண்டும் இருளும் ஒளியும்போலத் தம்முள் வேற்றுமையுடயனவாம்.

ஆணவமலம் உயிர்க்குக் குணம் என்பவரை மறுத்து உரைக்கின்றது

**புருடன் தன் குணம் அவித்தை எனில், சடம் புருடன் ஆகும்;**
**குருடன்தன் கண்ணின் குற்றம் கண்ணின்தன் குணமோ? கூறாய்**
**மருள்தன் தன் குணம் அது ஆகி மலம் அசித்து ஆகி நிற்கும்;**
**தெருள்தன் தன் குணம் அது ஆகிச் சித்துஎன நிற்கும் சீவன்.** 175

(இதன் பொருள்):– அவித்தை புருடன்றன் குணம் எனின்– ஆணவமலம் உயிரின் குணம் என்று சொல்லின், புருடன் சடம் ஆகும்– சித்தாகிய புருடன் சடமாகும், குருடன்றன் கண்ணின் குற்றம் கண்ணின்றன் குணமோ கூறாய்– அன்றியும் குருடனது கண்ணிலே அதன் ஒளியை மறைத்து நிற்கும் படலமாகிய குற்றம் கண்ணினது குணமோ நீ கூறுவாயாக, அவ்வாறன்றாதலின், ஆன்ம அறிவை மறைக்கும் மலமும் ஆன்மாவின் குணமாயிருத்தல் கூடாதாம், மலம் மருள் தன்றன் குணமதாகி அசித்தாகி நிற்கும்– மலமானது அஞ்ஞானத்தைத் தனது குணமாகக் கொண்டு குணிப்பொருளாகிய தான் சடமாயிருக்கும், சீவன் தெருள் தன்றன் குணமதாகிச் சித்து என நிற்கும்– உயிரானது அறிவைத் தனது குணமாகக் கொண்டு குணிப்பொருளாகிய தான் சித்துப்பொருளாய் விளங்கும்.

மும்மலங்களும் உயிரைப் பந்தப்படுத்துதல் நெல்லுக்கு முளை தவிடு உமி போல எனவும் வேறு இரு மலம் உண்டு எனவும் கூறுகின்றது

**மும்மலம் நெல்லி னுக்கு முளையொடு தவிடு உமிப்போல்**
**மம்மர் செய்து அணுவின் உண்மை வடிவினை மறைத்து நின்று**
**பொய்மை செய் போக பந்த போத் திருத் துவங்கள் பண்ணும்**
**இம்மலம் மூன்றி னோடும் இருமலம் இசைப்பன் இன்னும்.** 176

(இதன் பொருள்):– மும்மலம்– மேற்கூறிய கன்மம் மாயை ஆணவம் என்னும் மூன்று மலங்களும், நெல்லினுக்கு முளையொடு தவிடு உமிப்போல் மம்மர் செய்து– நெல்லுக்கு முளையும் தவிடும் உமியும்போல் உயிருக்கு மயக்கத்தைச் செய்து, அணுவின் உண்மை வடிவினை மறைத்து நின்று– அதுபற்றி அவ்வுயிரின் சொரூபத்தை மறைத்து நின்று, பொய்ம்மை செய் போகபந்த போத்திருத்துவங்கள் பண்ணும்– முறையே பொய்யான போகத்தையும் பந்தத்தையும் போத்திருத்துவத்தையும் உண்டாக்கும், இம்மலம் மூன்றினோடும்– இந்த மூன்று மலங்களோடும், இன்னும் இருமலம் இசைப்பன்– மேலும் இரண்டு மலங்களைக் கூறுவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமலம் என்பது மாயா காரியமும் திரோதான சத்தியும் ஆகும் எனவும் ஐந்து மலமும் உயிர்க்குப் பந்தம் செய்யும் எனவும் கூறுகின்றது

**மாயையின் காரியத்தை மாயேய மலம் அது என்றும்**
**ஏயும் மும்மலங்கள் தத்தம் தொழிலினை இயற்ற ஏவும்**
**தூயவன் தனது ஓர் சத்தி திரோதான கரி அது என்றும்**
**ஆய்வர் இம் மலங்கள் ஐந்தும் அணுக்களை அணைந்து நிற்கும்.** 177

(இதன் பொருள்):– மாயையின் காரியத்தை மாயேயமலம் அது என்றும்– மாயாகாரியக் கூட்டத்தை மாயேயமலம் என்றும், ஏயும் மும்மலங்கள் தத்தம் தொழிலினை இயற்ற ஏவும்– ஆன்மாக்களைப் பொருந்திய மும்மலங்களும் தத்தந் தொழிலைச் செய்யும்படி செலுத்தாநின்ற, தூயவன் தனது ஓர் சத்தி– சிவனுடைய ஒப்பற்ற சத்தியை, திரோதான கரி அது என்றும்– மறைத்தலைச் செய்யும் திரோதாயி என்றும், ஆய்வர்– ஆராய்ந்து கூறுவர், இம்மலங்கள் ஐந்தும் அணுக்களை அணைந்து நிற்கும்– சொல்லப்பட்ட இந்த ஐந்து மலங்களும் ஆன்மாக்களைப் பொருந்தியிருக்கும்.

உயிர், மேற்கூறிய ஐந்து மலங்களினால் பிறந்து இறந்து உழலும் எனக் கூறுகின்றது

**மலம், மாயை, கன்மம், மாயே யம், திரோதாயி மன்னிச்**
**சலம் ஆரும் பிறப்பு இறப்பில் தங்கி, இத் தரைகீழ் மேலும்**
**நிலையாத கொள்ளி வட்டம் கறங்கு என நிமிடத்தின் கண்**
**அலமரும் இறைவன் ஆணை யால்உயிர் நடக்கும் அன்றே.** 178

(இதன் பொருள்):– உயிர்– ஆன்மாவானது, மலம் மாயை கன்மம் மாயேயம் திரோதாயி மன்னி– ஆணவம் மாயை கன்மம் மாயேயம் திரோதாயி என்னும் ஐந்து மலங்களையும் பொருந்தி, சலம் ஆரும் பிறப்பு இறப்பில் தங்கி– போக்கு வரவுடைய பிறப்பிறப்புக்களிற் பட்டு, இத்தரை கீழ் மேலும்– இப்பூமி நரகம் சுவர்க்கம் என்னும் மூவுலகங்களிலும், நிலையாத கொள்ளிவட்டம் கறங்கு என– நிலையில்லாத கொள்ளிவட்டமுங் காற்றாடியும் போல, நிமிடத்தின்கண் அலமாரும்– கணப்பொழுதிற் கழன்று திரிந்து, இறைவன் ஆணையால் நடக்கும்– முதல்வன் ஆணைப்படி நடக்கும்.

பிறந்து இறந்து உழலுதற்கு உரிய பிறவிகளுள், மானுடப் பிறவியே அரிது எனக் கூறுகின்றது

**அண்டசம் சுவேத சங்கள் உற்பிச்சம் சராயுசத் தோடு**
**எண்தரு நால் எண் பத்து நான்கு நூறு ஆயிரத்தாய்,**
**உண்டுபல் யோனி எல்லாம் ஒழித்து மானுடத்து உதித்தல்**
**கண்டிடில், கடலைக் கையால் நீந்தினன் காரியம் காண்.** 179



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்):- அண்டசம் சுவேதசங்கள் உற்பிச்சம் சராயுசத்தோடு எண்தரு நால்- முட்டை, வியர்வை, வித்து, வேர், கருப்பை ஆக எண்ணப்படும் நான்கிலுந் தோற்றிடும் எழுவகைப் பிறப்புக்களிலே, எண்பத்து நான்கு நூறு ஆயிரத்து ஆய் உண்டு- எண்பத்து நான்கு நூறாயிர பேதமுடையதாய் யோநிகள் உள்ளன, பல்யோநி எல்லாம் ஒழிந்து- அவற்றுள் பலவாகிய யோநிபேதங்கள் எல்லாவற்றையும் ஒழித்து, மாநுடத்து உதித்தல் கண்டிடின்- மாநுடப் பிறவியிற் பிறத்தலை எய்தப் பெறின், கடலைக் கையால் நீந்தினன் காரியம் காண்- அது சமுத்திரத்தைக் கையாலே நீத்திக் கரையேறினவன் செயல் போன்றதாம்.

மானுடப் பிறவியின் உள்ளும் உத்தம நாட்டில், உத்தம குலத்தில் உத்தம சமயத்தில் பிறத்தல் அரிது எனக் கூறுகின்றது

**நரல்பயிர் தேயம் தன்னில் நான்மறை பயிலா நாட்டில்,**
**விரவுதல் ஒழிந்து தோன்றல் மிக்க புண்ணியத்தால் ஆகும்;**
**தரையினில் கீழை விட்டுத் தவம்செய் சாதியினில் வந்து**
**பர சமயம்கள் செல்லாப் பாக்கியம் பண்ணொ ணாதே.** 180

(இதன் பொருள்):- நரர் பயில் தேயம் தன்னில்- மாநுடர் வாழ்கின்ற தேசங்களுள்ளே, நான்மறை பயிலா நாட்டில் விரவுதல் ஒழிந்து தோன்றல்- வேதாகமங்கள் ஓதப்படாத தேசத்திலே பிறவாமை, மிக்க புண்ணியத்தான் ஆகும்- மிகுந்த புண்ணிய வசத்தால் உண்டாகும், தரையினில் கீழைவிட்டுத் தவம் செய்சாதியினில் வந்து- இப்பூமியிலே கீழாய சாதியிலே தோன்றாது தவஞ் செய்தற்குரிய உத்தம சாதியிலே தோன்றி, பரசமயங்கள் செல்லாப் பாக்கியம் பண்ண ஒணாது- புறச்சமயங்களிற் சொல்லாது நிற்கும் நன்மை பெறுதல் அரிதாம்.

உத்தம குலத்தில் பிறந்தாலும், வாழ்வினால் ஆகிய செருக்கும் வறுமையால் ஆகிய சிறுமையும் நீங்கிச், சைவ சமயத்தைச் சாரல் மிக அரிது எனவும், அதைவிடச் சித்தாந்த நெறியினால் சிவபெருமானை வழிபடுவோரே வீடு பெறுவர் எனவும் கூறுகின்றது

**வாழ்வு எனும் மையல் விட்டு, வறுமையாம் சிறுமை தப்பித்**
**தாழ்வு எனும் தன்மை யோடும் சைவமாம் சமயம் சாரும்**
**ஊழ்பெறல் அரிது; சால உயர்சிவ ஞானத் தாலே**
**போழ்இள மதியி னானைப் போற்றுவார் அருள் பெற்றாரே.** 181

(இதன் பொருள்):- வாழ்வு எனும் மையல் விட்டு- (மேற்கூறியவாறு உத்தம சாதியிலே பிறந்து புறச்சமயங்களிலே செல்லாது நிற்பினும்) செல்வத்தினால் உண்டாகும் மயக்கத்தை ஒழித்தும், வறுமையாம் சிறுமை தப்பி- வறுமையால் உண்டாகும் சிறுமையினீங்கியும், தாழ்வு எனும் தன்மையோடும்- அடிமையாந் தன்மையோடும், சைவமாம் சமயம் சாரும் ஊழ்பெறல்- சைவ சித்தாந்தம் என்னும் நெறியைப் பொருந்தும் புண்ணியத்தைப் பெறுதல், சால அரிது- மிகவும் அரிதாம், உயர் சிவஞானத்தாலே- (இத்தன்மைகளோடு அந்நெறியிலே நின்று) மேலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனருளாலே, போழ் இள மதியனானைப் போற்றுவார்– பிளவுபட்ட இளம்பிறை அணிந்த சிவபெருமானை வழிபடுவோர், அருள் பெற்றார்– அவனருளைப் பெற்று மலங்களைப் போக்கி முத்திப்பேறு பெறுவோராவர்.

உத்தம நாட்டில், உத்தம குலத்தில் மானுடராய்ப் பிறத்தல் வேண்டப்படும் எனவும் அவ்வாறு வேண்டப்படுவதற்குக் காரணம் உணர்ச்சி விசேடமே எனவும் கூறுகின்றது

**மானுடப் பிறவி தானும் வகுத்தது, மனவாக் காயம்**
**ஆன் இடத்து ஐந்தும் ஆடும் அரன் பணிக்கு ஆக அன்றோ?**
**வான் இடத்தவரும் மண்மேல் வந்து அரன்தனை அர்ச்சிப்பர்;**
**ஊன் எடுத்து உழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ!** 182

(இதன் பொருள்):– மாநுடப் பிறவி தானும் வகுத்தது– பிறவிகளுள் விசேடமான மாநுடப் பிறவியை முதல்வன் கொடுத்தது, மனவாக் காயத்து– மனத்தாலே நினைத்தும் வாக்காலே துதித்தும் காயத்தாற் பணிந்தும் செய்யப்படும், ஆனிடத்து ஐந்தும் ஆடும் அரன் பணிக்காக அன்றோ– பஞ்ச கவ்வியத்தினை ஆடியருளுகின்ற சிவபெருமானது தொண்டின் பொருட்டாகவன்றோ, வானிடத்தவரும்– மேலுலகத்துள்ள விட்டுணு முதலிய தேவர்களும், மண் மேல் வந்து அரன்தனை அர்ச்சிப்பர்– இந்தப் பூமியிலே வந்து அச்சிவபெருமானை அருச்சிப்பர், அந்தோ ஊன் எடுத்து உழலும் ஊமர் ஒன்றையும் உணரார்– ஐயோ! இவ்வுலகத்திலே சரீரத்தைப் பெற்று உழன்று திரிகின்ற மூகர் இவைகளில் ஒன்றையும் ஆராய்ந்தறிகின்றாரில்லை.

வாழ்வினால் ஏற்படும் மயக்கத்தை நீக்குவதற்கு, சரீர நிலையாமையை நோக்குவது உபாயம் எனக் கூறுகின்றது

**கருவினுள் அழிவ தாயும், கழிந்திடாது அழிவ தாயும்,**
**பரிணமித்து அழிவ தாயும், பாலனாய் அழிவ தாயும்,**
**தருணனாய் அழிவதாயும், தான் நரைத்து அழிவ தாயும்,**
**உருவமே அழிவே ஆனால், உள்ளபோதே பார் உய்ய.** 183

(இதன் பொருள்):– கருவினுள் அழிவதாயும்– மாதாவினுடைய கருப்பத்திலே அழிவதாயும், கழிந்திடா அழிவதாயும்– பிறந்து உடனே அழிவதாயும், பரிணமித்து அழிவதாயும்– உருந் திரிந்து வளருங் குழவிப் பருவத்தில் அழிவதாயும், பாலனாய் அழிவதாயும்– பாலனான் வரும் பருவத்தில் அழிவதாயும், தருணனாய் அழிவதாயும்– யௌவன பருவமுடையனாய் அழிவதாயும், நரைத்துத்தான் அழிவதாயும்– விருத்தனாய் அழிவதாயும், உருவமே அழிவே ஆனால்– இங்ஙனம் சரீரமே அழிந்து போகுந் தன்மையுடையதாகலின், உள்ளபோதே உய்யப்பார்– இச்சரீரம் இருக்கும்பொழுதே சிவபெருமானை வழிபட்டு பலபந்தத்தைப் போக்கி முத்தியடைய முயல்வாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களை அறியும் அறிவும், வாழ்க்கையும் நிலை உடையன அல்ல என அறிதலும், அந்த மயக்கத்தை நீக்குவதற்கு உபாயம் எனக் கூறுகின்றது

**ஒருபுலன் நுகரும் போது அங்கு ஒன்று இல்லை, ஒன்றின் பாலும்**
**வருபயன் மாறி மாறி வந்திடும் எல்லாம் மாறும்**
**ஒருபொழுது உணரின் உண்டாம் அல்லது இவ் அல்லல் வாழ்க்கை**
**மருள் கனவு அதுவும் போல மாயும் பின் மாயும் அன்றே.** 184

(இதன் பொருள்):- ஒரு புலன் நுகரும்போது- ஒரு விடயத்தை நாம் அநுபவிக்கும் பொழுது, அங்கு ஒன்று இலை- அவ்விடத்து வேறொரு விடயம் அனுபவமாதலில்லை, ஒன்றின்பாலும் வருபயன் மாறி மாறி வந்திடும்- ஒரு விடயத்தின் கண்ணும் வருகின்ற பயன் இன்பமும் துன்பமுமாக மாறி மாறி வருவதாகும், ஒருபொழுது எல்லாம் மாறும்- கேவல நிலையில் விடய அநுபவமும் இன்பத்துன்ப நுகர்ச்சியும் இல்லையாய்விடும், உண்டாம் அல்லது (ஆம்) இவ்வல்லல் வாழ்க்கை உணரின்- இங்ஙனம் உள்ளதும் இல்லதுமாய்த் துன்பத்தோடுங் கூடியதாயிருக்கும் இவ்விடய போகத்தின் இயல்பை ஆராயுமிடத்து, மருள் கனவதும் போல- அது மயக்கத்தையும் கவலையையும் ஒத்து, அன்றேமாயும் பின் மாயும்- தோன்றியவுடனே அழிவதும் சிறிது காலத்தின் பின் அழிவதுமாயிருக்கும்.

இதுவும் அது

**அரிசனம் பூசி மாலை அணிந்து பொன் ஆடை சாத்திப்**
**பரிசனம் பின்பு செல்லப் பாரகர் பரிக்கக் கொட்ட**
**வரிசின்னம் ஊதத் தொங்கல் வந்திட உணர்வு மாண்டு**
**பெரியவர் பேச்சும் இன்றிக் கிடத்தலால் பிணத்தோடு ஒப்பர்.** 185

(இதன் பொருள்):- அரிசனம் பூசி- சந்தனம் முதலிய வாசனைத் திரவியங்களைப் பூசியும், மாலை அணிந்து- வாசத்தோடு கூடிய பூமாலைகளை அணிந்தும், பொன் ஆடை சாத்தி- பீதாம்பரம் போர்த்தும், பரிசனம் பின்பு செல்ல- தமது பரிவாரங்கள் பின்னே வரவும், பாரகர் பரிக்க- காவுவோர் சிவிகை சுமக்கவும், கொட்ட- வாத்தியங்கள் முழக்கவும், வரிசின்னம் ஊத- வரி பொருந்திய சின்னங்களை ஊதவும், தொங்கல் வந்திட- குடை சாமரங்கள் சூழ வரவும், பெரியவர்- இவ்விடய சுகங்களோடு கூடிய பெரியவர், உணர்வுமாண்டு பேச்சும் இன்றிக் கிடத்தலால்- செல்வச் செருக்கினால் அறிவு மழுங்கிப் பேச்சுமின்றி அச்சிவிகைக்குட் கிடத்தலால், பிணத்தோடு ஒப்பர்- செத்தாருக்குச் சமமாவர்.

வறுமையால் உண்டாகும் சிறுமை நீங்குவதற்கு உபாயம் கூறுகின்றது

**பிணத்தினை ஒத்து வாழ்வோர் பின் நடைப்பிணங்கள் போல**
**உணக்கியே உழல்வீர் உங்கள் உடல் உயிர் உணர்வும் எல்லாம்**
**கணத்திடைத் தோன்றி மாயும் காயம் என்று அறிந்து ஒருக்கால்**
**வணக்குறீர் அரனை என்றும் வானவர் வணங்க வைப்பன்.** 186



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்):– பிணத்தினை ஒத்து வாழ்வோர் பின்– நீர் பொருட்செல்வம் ஈட்டுதற் பொருட்டுப் பிணம் போல வாழும் செல்வச் செருக்குடையார் பின் சென்று, நடைப்பிணங்கள் போல– நடைப்பிணங்கள் போல, உங்கள் உடல் உயிர் உணர்வு எல்லாம்– உங்களுடைய உடல் உயிர் அறிவு முதலியவைகளை, உணக்கியே உழல்வீர்– வாட்டியே அலைவீர் அங்ஙனம் அலைதலை விட்டு, காயம் கணத்திடைத் தோன்றிமாயும் என்று அறிந்து– உமது சரீரம் கணத்திலே தோன்றி அழியும் இயல்புடையதென்று உணர்ந்து, அரனை ஒருக்கால் வணக்குறீர்– சிவபெருமானை ஒரு காலேனும் வணங்குவீராக, அங்ஙனம் செய்வீராயின், என்றும் வானவர் வணங்க வைப்பன்– எஞ்ஞான்றும் தேவர்களும் வணங்கும்படி அவர் அருட்செல்வத்தை உமக்குக் கொடுப்பர்.

## மூன்றாம் சூத்திரம் - பசு இலக்கணம்

சூனியம், தூல உடம்பு, ஐம்பொறி, சூக்கும உடம்பு, பிராண வாயு, பிரமம், சமுதாயம் என்னும் ஏழும் உயிர் அன்று என்றும், இவற்றின் வேறாய்க் காணப்படும் உடலின்கண் உயிர் உண்டு என்றும் கூறுகின்றது

**உயிர் எனப் படுவது இந்த உடலின் வேறு உளதாய் உற்றுச்**
**செயிர் உறும் இச்சா ஞானச் செய்திகள் உடையது ஆகிப்**
**பயில் உறும் இன்பத் துன்பப் பலன்களும் நுகரும்; பார்க்கில்**
**துயிலொடும் அஞ்சு அவத்தைப் படும் உண்மை துரியாதீதம்.** 187

(இதன் பொருள்):– உயிர் எனப்படுவது– உயிர் என்று சொல்லப்படுவது, இந்த உடலின் வேறுளதாய்– இந்த உடம்பிற்கு வேறாயுள்ளதாய், உற்று– உடம்புகளைப் பொருந்தி, செயிர் உறும் இச்சாஞானச் செய்திகள் உடையதாகி– குற்றம் பொருந்திய இச்சாஞானக் கிரியைகளுடையதாய், பயில்வு உறும்– புண்ணிய பாவங்களைச் செய்யும், இன்பத்துன்பப் பலன்களும் நுகரும்– அவற்றால் வரும் இன்பத்துன்பப் பயன்களையும் அநுபவிக்கும், பார்க்கின்– ஆராயுமிடத்து, துயிலொடும் அஞ்சு அவத்தைப்படும்– அறிவு சோர்தலோடும் சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் எனும் ஐந்து அவததைப்படும் உண்மை– அவற்றினுள்ளே துரியாதீதம் உயிர் தான்மாத்திரம் உளதாயிருக்கும் கேவலநிலையாம்.

இரண்டாம் கூறு ஆகிய "உடம்பு உயிர்" என்பதைப் பிணமாய்க் கிடப்பதிலும், உறக்கத்திலும் உணரப்படாமையின் வைத்து விளக்குகின்றது

**உடலின் வேறு உயிர்ஏன் இந்த உடல் அன்றோ உணர்வது என்னில்,**
**உடல் சவம் ஆனபோதும் உடலினுக்கு உணர்வு உண்டோதான்?**
**உடலினின் வாயுப் போனால் உணர்ச்சி இன்று உடலுக்கு என்னில்**
**உடலினின் வாயுப் போகாது உறக்கத்தும் உணர்வது இன்றே.** 188

(இதன் பொருள்):– உடலின் வேறு உயிர் ஏன்– இந்த உடம்பின் வேறாய் உயிரொன்றுண்டு என்பது எற்றுக்கு, இந்த உடலன்றோ உணர்வது என்னின்– இந்த உடம்பே அறிவது என்று சொல்லின்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் சவமான உடலினுக்கு உணர்வு உண்டோதான்– உடம்பு பிரேதமாய்க் கிடக்கையிலும் அவ்வுடம்புக்கு அறிவுளதோ, உடலினில் வாயுப்போனால் உடலுக்கு உணர்ச்சி இன்று என்னின்– இவ்வுடம்பிலுள்ள பிராணவாயு நீங்குமாயின் இவ்வுடம்புக்கு அறிவு நிகழாது என்னின், உடலினில் வாயு போகாத உறக்கத்திலும் அறிவு நிகழ்வதின்று. ஆதால் அறிவது உடம்பன்று.

மூன்றாம் கூறு ஆகிய ஐம்பொறிகள் உயிர் என்பதை, ஒவ்வொன்றையே அறிவதிலும் ஒன்றை ஒன்று அறியாமையிலும், தாமே அறியாமையிலும் வைத்து விளக்குகின்றது

**அறிவது ஐம்பொறியே என்னில், உறக்கத்தின் அறியா ஆகும்;**
**அறிவது ஒன்று ஒன்றாக ஒன்று ஒன்றாய் அறியும் என்னில்,**
**அறிவுகள் ஒன்றை ஒன்று அங்கு அறிந்திடா; ஐந்தையும் கொண்டு**
**அறிவது ஒன்று உண்டு; அது ஆன்மா; ஐம்பொறி அறிந்திடாவே.** 189

(இதன் பொருள்):– ஐம்பொறியே அறிவது என்னின்– ஐம்பொறிகளுமே உடம்பின் கணின்று விடயங்களை அறியும் என்னின், உறக்கத்தில் அறியா ஆகும்– உறங்கும் பொழுது அவை அறிய மாட்டாவாதலால் அதவும் பொருந்தாது. அப்படியன்று. உறக்கத்தில் அவை ஒடுங்கி நிற்கும், நனவின் கண் அறியும், அறிவதும் ஒன்றொன்றாக ஒன்றொன்றாய் அறியும் என்னின்– அங்ஙனம் நனவின்கண் அறிவதும் ஒவ்வொரு பொறியாக ஒவ்வொரு விடயத்தை அறியும் என்னின், அறிவுகள் அங்கு ஒன்றை ஒன்று அறிந்திடா– அங்ஙனமாயினும் பொறிகள் தத்தம் விடயத்தை அறியும் பொழுது தாம் ஒன்றையொன்று அறியமாட்டா, ஆதலால் அதுவும் பொருந்தாது. ஐந்தையும் கொண்டு அறிவது ஒன்று உண்டு– இவ்வைந்து பொறிகளாலும் விடயங்கள் ஐந்தையும் அறிவது ஒன்றுளது, அது ஆன்மா– அதுவே ஆன்மாவாம், ஐம்பொறி அறிந்திடா– ஐம்பொறிகளும் தாமாக அறியமாட்டா.

நான்காம் கூறு ஆகிய பிராணவாயு உயிர் என்பதை பிராணவாயு நிற்கும்போதும் கருவிகள் நில்லாமையில் வைத்து விளக்குகிறது

**அறிந்திடும் பிராண வாயு அடங்குதல் விடுதல் செய்தால்,**
**அறிந்திடாது உடல் உறக்கத்து அறிவு இன்மை கரணம் இன்மை**
**அறிந்திடம் முதலி ஆகில் அதுநிற்கக் கரணம் போகா;**
**அறிந்திடும் பிராணன் தன்னை அடக்கியும் விட்டும் ஆன்மா.** 190

(இதன் பொருள்):– பிராணவாயு அடங்குதல் விடுதல் செய்தால் அறிந்திடும்– பிராணவாயுவானது உள்ளே போய் அடங்குதலும் வெளியே வருதலுமாக இயங்குமாயின் அஃது ஐம்பொறிகளையும் கொண்டு விடயங்களை அறியும் என்னின், உடல் உறக்கத்து அறிந்திடாது– உடம்பு உறங்குமிடத்து அப்பிராணவாயு இயங்கினாலும் அது விடயங்களை அறியமாட்டாது. ஆதலால் அதுவும் பொருந்தாது, அறிவு இன்மை கரணம் இன்மை– அவ்வறிவின்மைக்குக் காரணம், கருவிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்படாமை என்று சொல்லின், அறிந்திடும் முதலியாகின்- அப்பிராணவாயுவே அறியும் முதன்மையுடையதாயின் அது நிற்கக் கரணம் போகா- உறக்கத்தில் அப்பிராணவாயு தொழிற்பட்டு நிற்க அக்கருவிகள் தொழிற்படாது நீங்கா. ஆதலால், பிராணன் தன்னை அடக்கியும் விட்டும் ஆன்மா அறிந்திடும்- பிராணவாயுவை உள்ளே அடக்கியும் வெளியே விட்டும் அதற்கு வேறாயுள்ள ஆன்மாவே விடயங்களை அறிவதாகும்.

## நான்காம் சூத்திரம்

அந்தக் கரணங்கள் ஆன்மா அன்று எனவும், ஆணவ மலத்தின் சேர்க்கையால், ஆன்மா அந்தக் கரணங்களைக் கூடி ஐந்து அவத்தைப்டும் எனவும் கூறுகின்றது

**உணர்வன கரணம் என்னில் ஒன்றை ஒன்று உணரா; வெவ்வேறு**
**அணைதரும் செயல்கள் நான்கும் அறிந்து அவை அடக்கி ஆக்கிப்**
**புணரும் உட்கருவி ஆக்கிப் புறக்கருவியினும் போக்கி,**
**இணைதரும் இவற்றின் வேறாய் யான் எனது என்பது ஆன்மா.** 191

(இதன் பொருள்):- கரணம் உணர்வன என்னின்- அந்தக் கரணங்களே அறியும் என்னின், ஒன்றை ஒன்று உணரா- அவை ஒன்றனையொன்று அறியா, வெவ்வேறு செயல்கள் அணைதரும்- அன்றியும் அவை ஒன்று அறிந்ததை மற்றொன்று அறிதலின்றி வேறுவேறு தொழில்களைப் பொருந்தும், ஆதலால் அவை அறியும் என்பதும் பொருந்தாது, நான்கும் அறிந்து- அவ்வந்தக் கரணங்கள் நான்கினையும் அறிந்து, அவை அடக்கிப் புணரும் உட்கருவி ஆக்கி- அவற்றை வேண்டுமிடத்து அடக்கிப் பொருந்திய உட்கரணங்களாக்கியும், ஆக்கிப் புறக்கருவியிலும் போக்கி- விருத்தி செய்து புறக்கருவிகளினாலும் செலுத்தியும், இணைதரும் இவற்றின் வேறாய்- தன்னோடு இயைந்து நிற்கும் இக்கரணங்களுக்கு வேறாய், யான் எனது என்பது- யான் என்றும் எனது என்றும் செருக்குற்று நிற்பது, ஆன்மா- ஆன்மாவாம்.

அந்தக் கரணங்கள் கருவி எனவும், ஆன்மா இவற்றின் வேறு எனவும், இவ்வான்மாவை அறியும் ஞானம், பசு ஞானம் எனவும், சிவஞானம் அதனினும் வேறு எனவும் கூறுகின்றது

**கருவி ஆம் மனமும் புத்தி அகங்காரம் சித்தம் நான்கும்**
**மருவி ஆன்மாவே என்ன வரும் தீபம் எனத் தெரிந்து அங்கு**
**ஒருவி ஆன்மாவின் உண்மை உணர்ந்தவர் தமை உணர்ந்தோர்**
**தரும் இது பசு ஞானம், பின் சிவஞானம் தனக்கு மேலாம்.** 192

(இதன் பொருள்):- கருவியாம் மனமும் புத்தி அகங்காரம் சித்தம் நான்கும்- அந்தக் கரணங்களாகிய மனம் புத்தி சித்தம் அங்காரம் என்னும் நான்கும், மருவி- ஆன்மாவைப் பொருந்தி, ஆன்மாவே என்ன வரும்- இவையே ஆன்மா என்னும்படி ஒற்றித்து நிற்கும், தீபம் எனத் தெரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு ஒருவி– கண் பொருக்ளைக் காணுதற்கு விளக்குக் கருவியாதல் போல ஆன்மா விடயங்களை அறிதற்கு இவை கருவிகளாம் என அறிந்து, அவற்றினின்று நீங்கி, ஆன்மாவின் உண்மை உணர்ந்தவர்– அவ்வான்மாவின் இயல்பை ஆராய்ந்தறிந்தவர், தமை உணர்ந்தோர்– ஆன்மாவாகிய தமது இயல்பை அறிந்தோராவர், தரும் இது பசு ஞானம்– இங்ஙனம் ஆராய்ந்தறியும் அறிவு பசுஞானமாம், பின் சிவஞானம் தனக்கு மேலாம்– அதன்பின் உதிக்கும் பதிஞானம் அப்பசுஞானத்துக்கு மேலானதாம்.

அந்தக் கரணங்களை உடன் நின்று செலுத்தும் அக்கரங்கள் இவை என்றும், அந்த அக்கரங்களைச் சேர்த்து நோக்கினால் பிரணவம் ஆகும் என்றும், இந்தப் பிரணவத்தின் உண்மை நால்வகை வாக்குகளை உற்றுநோக்க வல்லார்க்கு விளங்கும் என்றும் கூறுகின்றது

**அவ்வுடன் உவ்வும் மவ்வும் மனம் புத்தி அகங்காரங்கள்;**
**செவ்விய விந்து நாதம் சித்தமோடு உள்ளம் ஆகும்;**
**ஒவ்வெனும் எழுத்தாம் ஐந்து உணர்வு உதித்து ஒடுங்கும் ஆறும்**
**பவ்வமும் திரையும் போலும் பார்க்கில் இப் பண்பு தோன்றும்.** 193

(இதன் பொருள்):– அவ்வுடன் உவ்வும் மவ்வும்– அகாரமும் உகாரமும் மகாரமும், அகங்காரம் புத்தி மனங்கள்– முறையே அகங்காரம் புத்தி மனம் என்னும் கருவிகளையும், செவ்விய விந்து நாதம்– செம்மையான விந்துவும் நாதமும், சித்தமோடு உள்ளம் ஆகும்– சித்தம் உள்ளம் என்னும் கருவிகளையும் செலுத்துவதாகும், ஐந்தும் ஒவ்வெனும் எழுத்தாம்– அகரம் முதலிய ஐந்தும் சமட்டியிற் பிரணவமாம், உணர்வு உதித்து ஒடுங்குமாறு– இவ்வைந்தெழுத்துக்களாலும் உயிரினிடத்து அறிவு மாறி மாறித் தோன்றி ஒடுங்கும் முறைமை, பவ்வமும் திரையும் போலும்– கடலின் கண்ணே திரை புதிது புதிதாகத் தோன்றியும், ஒடுங்கியும் வருமாறு போலாம், பார்க்கில் இப் பண்பும் தோன்றும்– யோகப்பயிற்சி செய்து ஆராயுமிடத்து எழுத்துக்கள் கரணங்களைச் செலுத்தும் முறைமையன்றி அறிவு தோன்றி ஒடுங்கும் முறைமையும் இனிது விளங்கும்.

அந்தக் கரணங்களைச் செலுத்தும் அக்கரங்களின் அதி தெய்வங்கள் இவை எனவும், இந்தப் பதினைந்தும் கூடியபொழுது ஆன்மா அறிதலைச் செய்யும் எனவும், யோகப் பயிற்சி உடையவர்க்கு இந்தப் பதினைந்தின் உண்மை விளங்கும் எனவும் கூறுகின்றது

**அயன் அரி அரனும் ஈசர் சதாசிவம் அதி தெய்வங்கள்**
**உயவரும் அவ்வோடு உவ்வும் அவ்விந்து நாதங் கட்குப்**
**பயன் உறும் அஞ்சில் ஆன்மாப் பரவிடில் அசித்தாம் பார்க்கில்**
**சயம் உறு வளி இரண்டும் தவிர்த்து உறில் தானும் தோன்றும்.** 194



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்):- உயவரும் அவ்வோடு உவ்வும் மவ்விந்து நாதங்கட்கு- மேற் கூறியவாறு அகங்காரம் முதலிய கரணங்களைச் செலுத்தும் அகார உகார மகார விந்து நாதங்களாகிய ஐந்து அக்கரங்களுக்கும், அயன் அரி அரனும் ஈசர் சதாசிவம் அதிதெய்வங்கள்- முறையே பிரமா விட்டுணு உருத்திரன் மகேசுவரன் சதாசிவன் என்னும் ஐவரும் அதிதெய்வங்களாம். அஞ்சில் ஆன்மாப் பிரவிடில் பயன் உறும்- இங்ஙனம் அக்கரங்களாலும் தெய்வங்களாலும் செலுத்தப்படும் கரணங்கள் ஐந்தினோடு ஆன்மாவானது பொருந்திப் பிரவர்த்திக்குமிடத்து அறிதற் பயனை எய்தும், பார்க்கின் அசித்தாம்- இவை ஆராயுமிடத்துச் சடப்பொருள்களாம், சயம, உறுவளி இரண்டும் தவிர்த்து உறின்- இடைகலை பிங்கலை நாடிகள் வழியாய் ஓடும் வலி பொருந்திய வாயு இரண்டினையும் தடுத்துச் சுழுமுனை நாடியிற் செலுத்தி யோகப் பயிற்சி செய்யின், தானும் தோன்றும்- இவ்வியல்பும் விளங்கும்.

அந்தப் பதினைந்தும் சுட்டி அறியப்படுதலின் அவை ஆன்மாவின் வேறு எனக் கூறுகின்றது

**ஆன்மாவின் வடிவு தானே அநேக அர்த்தக் கூட்டம் என்னில்**
**பார்ப்பார்கட்கு ஆன்மா இன்றாய் பலபொருள் உண்மை ஆகும்;**
**சேர்ப்பாய் பலவே உண்மை என்றிடில் சென்று இவற்றை**
**ஓர்ப்பான் வேறு உணர்வோர்க்கு எல்லாம் உணர்பொருள் வேறு அது ஆமே. 195**

(இதன் பொருள்):- ஆன்மாவின் வடிவுதானும்- ஆன்ம சொரூபமும், அநேக அர்த்தக் கூட்டம் என்னின்- அந்தக் கரணங்கள் பிராணவாயு முதலிய பல பொருள்களின் கூட்டம் என்னின், பார்ப்பார்கட்கு ஆன்மா இன்றாய்ப் பலபொருள் உண்மை ஆகும், ஆராய்பவர்களுக்கு ஆன்மா என ஒரு பொருள் இல்லதாய் அப்பல பொருட்களின் கூட்டமே ஆன்ம சொரூபமாகும், கூட்டம் என ஒரு பொருளின்மையால் அது பொருந்தாது, சேர்ப்பாயபலவே உண்மை என்றிடின்- கூட்டமான அந்தக் கரணங்கள் முதலிய பல பொருள்களே ஆன்ம சொரூபம் என்று சொல்லின், உணர்வோர்க்கு எல்லாம்- அறிபவரனைவர்க்கும், இவற்றைச் சென்று ஓர்ப்பான் வேறு- இப் பொருள்களைப் பொருந்தி அறிபவனாகிய ஆன்மா வேறாயும், உணர்பொருள் வேறதாம்- அறியப்படும் அப்பொருள்கள் வேறாயும் இருத்தலின் அதுவும் பொருந்தாது. ஆதலான் பல பொருளின் கூட்டம் ஆன்மாவாதல் கூடாது.

கருவி முதலிய பதினைந்தோடும் கூடிய இடத்து அன்றி, அறிவு விளங்காமை யால் ஆன்மா, இயல்பாகவே அறிகின்ற பிரமம் ஆகாது எனக் கூறுகின்றது

**அறிவு இச்சை செயல்கள் எல்லாம் அடைந்து, அனல் வெம்மையும் போல்,**
**குறி உற்று அங்கு ஏக அநேக குண குணி பாவம் ஆகி,**
**நெறியுற்று நிற்கும் என்னில், நிகழ் புலன் கரணம் எல்லாம்**
**செறிவு உற்று அங்கு அறிவு கொள்ள வேண்டுமோ சீவனார்க்கே. 196**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்):- அறிவு இச்சை செயல்கள் எல்லாம் அடைந்து- (பிரமம்) ஞானஇச்சைக் கிரியைகள் கரணங்கள் எல்லாவற்றையும் பொருந்தி, அனல் வெம்மையும் போல் குறி உற்று- அக்கினியும் சூடும் போல அவற்றோடு பிரிவின்றிச் சூக்குமதேகத்தைப் பொருந்தி, அங்கு அநேக அநேக குணகுணி பாவம் ஆகி- அச்சூக்கும தேகத்தினின்றும் அநேக குணத் தன்மையும் அநேக குணித்தன்மையுமுடைய சீவர்களும் சடப்பொருள்களுமாகி, நெறி உற்று நிற்கும் என்னின்- இந்த முறைமை பொருந்தி நின்று விடயங்களை அறியும் என்று சொல்லின், சீவனார்க்கு- பிரமத்தின் பரிணாமமாய்த் தோன்றிய சீவர்களுக்கு, நிகழ்புலன் கரணம் எல்லாம் செறிவு உற்று அங்கு அறிவு கொள்ள வேண்டுமோ- விளங்குகின்ற பொறி கரணங்கள் முதலிய கருவிகளைப் பொருந்தி நின்று விடயங்களை அறிந்து அநுபவிக்க வேண்டுமோ? வேண்டுவதின்று.

அறிவு இச்சை செயல்கள் ஆகிய குணம் ஆன்மாவுக்கு இல்லை எனவும், ஆன்ம சந்நிதியில் கரணங்களுக்கே உண்டு எனவும் கூறுபவரை மறுத்து ஆன்மாவுக்கு அறிவிச்சை செயல்கள் ஆகிய குணம் உண்டு எனக் கூறுகின்றது

**குணங்களை இன்றி ஒன்று ஆம் குறியுடைத்து ஆன்மா என்னில்**
**இணங்கிடா இச்சா ஞானக் கிரியைகள் இவை உடல்கண்**
**பிணங்கிடும் சந்நிதிக் கண் எனில், பிணத்து உறக்கத்து இன்றாம்;**
**உணங்கிடும் கரணம் என்னில் சந்நிதி ஒழிந்தது அன்றே.** 197

(இதன் பொருள்):- குணங்களை இன்றி ஒன்றாம்குறி உடைத்து ஆன்மா என்னின்- இச்சாஞானக் கிரியைகளாகிய குணங்களையின்றித் தனியே அறிவு மாத்திரையாய் நிற்கும் இயல்புடையது ஆன்மா என்னின், இச்சா ஞானக்கிரியகள் இணங்கிடா- அறிவு மாத்திரம் நிகழ்வதேயன்றி அறிவிச்சை செயல்கள் மூன்றும் நிகழா. ஆதலால் அது பொருந்தாது. இவை- இவ்விச்சாஞானக் கிரியைகள், சந்நிதிக்கண் உடற்கண் பிணங்கிடும் எனின்- வியாபகமாயிருக்கும் உயிரின் சந்நிதியிலே உடலினிடத்தே தொழிற்படும் என்னின், பிணத்து உறக்கத்து இன்றாம்- உடல் பிணமாய்க் கிடக்குமிடத்தும் உறங்கும் பொழுதும் இவை தொழிற்படுதலில்லையாம். ஆதலால் அதுவும் பொருந்தாது, கரணம் உணங்கிடும் என்னின்- பிணக் கிடக்கையிலும் உறக்கத்திலும் கரணங்கள் தொழிற்படாமையால் இச்சா ஞானக் கிரிகைளும் நிகழாதிருக்கும் என்னின், சந்நிதி ஒழிந்தது அன்றே- உயிரின் சந்நிதியிலே இவை தொழிற்படும் என்பது இல்லதாகும்.

காந்தத்தின் முன்பு இரும்பு தொழிற்படுவது போல, ஆன்மாவின் முன் கரணம் தொழிற்படும் என்பவரை மறுத்து, நினைத்தல் மறத்தல் முதலிய மாறுபட்ட தொழில்கள், கரணத்தில் நிகழக் காண்டலின், இழுக்கப்படுதல் ஒன்றே நிகழும் அந்த உவமை பொருந்தாது எனக் கூறுகின்றது

**சந்நிதி குணம் அது ஆகும் தான் என்போல் என்னில், காந்தம்**
**முன் இரும்பு என்றாய் ஈர்க்கும் முறைமை உண்டு அகற்றல் இன்றாம்**
**உன்னுதல் ஒடுங்கல் ஓடல் இருத்தலே கிடத்தல் நிற்றல்**
**என்னும் இத் தொழில்கள் மற்றும் இயற்றுவது ஆன்மா என்னே.** 198



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்):- சந்நிதி குணமது ஆகும்- சந்நிதி என்பது உயிரின் முன் உடம்பு தொழிற்படுதற்கு ஏதுவாய் அவ்வுயிரினிடத்திருக்கும் ஒரு விசேட குணமாகும். தான் என் போல என்னின்- அ∴து எதுபோல என்னின், காந்தம் முன் இரும்பு என்றாய்- காந்தக்கல்லின் முன் இரும்பு தொழிற்படுதற்கு ஏதுவாய் அக்காந்தக்கல்லினிடத்திலிருக்கும் ஒரு விசேட குணம் போலும் என்று கூறினாய், ஈர்க்கும் முறைமை உண்டு அகற்றல் இன்றாம்- அங்ஙனமாயின் காந்தத்துக்கு இரும்பை இழுக்கும் ஒரு குணம் உண்டன்றி அகற்றலாகிய மாறுபட்ட குணம் இன்றாம், ஆன்மா உன்னுதல் ஒடுங்கல் ஓடல் இருத்தல் கிடத்தல் நிற்றல் என்னும் இத்தொழில்கள் மற்றும் இயற்றுவது என்னே- ஆன்மா அவ்வாறின்றி நினைத்தல் மறத்தல் ஓடல் இருத்தல் கிடத்தல் நிற்றல் என்னும் மாறுபட்ட தொழில்களும் பிறவுஞ் செய்வது என்னோ? ஆதலால் சந்நிதி ஆன்மாவுக்குரிய விசேட குணம் என்பது பொருந்தாது.

ஆன்மா உருவப் பொருள் என்பவரை மறுத்து உரைக்கின்றது

**உரு உயிர் என்னில் இந்த உடலினுள் காண வேண்டும்;**
**வருவது பரிணா மத்தாய் அனித்தமாம் பூதம் ஆகும்**
**கருவினுள் நுழையும் ஆறும் காட்டிட வேண்டும் கண்ணில்**
**மருவிடாது என்னில் உன்தன் வாயினால் உரு அன்று என்னே.** 199

(இதன் பொருள்):- உயிர் உரு என்னின்- உயிரானது உருவப் பொருள் என்று சொல்லின், இந்த உடலினுள் காண வேண்டும்- இவ்வுடம்பினுள்ளே அவ்வுருவம் காணப்பட வேண்டும், வருவது பரிணாமத்தாய் அநித்தமாம் பூதமாகும்- அன்றியும் அங்ஙனம் உருவாய்த் தோன்றுவது பரிணாமமுடையதாய் அழிவெய்தும் பூதப் பொருள்களுள் ஒன்றாகும், கருவினில் நுழையு மாறும் காட்டிட வேண்டும்- அ∴தன்றி அவ்வுரு மாதாவின் கருப்பத்தினுள் புகுதல் எவ்வாறென்றும் தெரிவிக்க வேண்டும். கண்ணின் மருவிடாது என்னின் உருவடிவாயினும் கண்ணுக்குப் புலப்படாது என்னின், உன்றன் வாயினால் உரு அன்று என்னே- (விழிமாத்திரத்தாற் கவரப்படும் குணமே உருவம் ஆகலின்) உனது வாயினால் அ∴து உருவமன்று என மொழிவாயாக.

ஆன்மா அருவம் ஆகிய சூக்கும உருவம் என்பவரையும், அதிசூக்கும உருவம் என்பவரையும் மறுத்து உரைக்கின்றது

**சூக்கும உரு அது என்னில் தூல காரணம் அது ஆகும்,**
**ஆக்கிய மனாதி தன் மாத் திரை வடிவு அசேதனம் பின்**
**நீக்கிய சூக்கு மத்தே நிற்பதோர் உரு உண்டு என்னில்,**
**ஆக்கிடும் உருவம் எல்லாம் அசித்துமாய் அநித்தம் ஆமே.** 200

(இதன் பொருள்):- சூக்கும உருவது என்னின்- (கண்ணால் காணப்படாத) சூக்குமவுருவாய் நிற்பது உயிர் என்னின், தூலகாரணமது ஆகும்- அது தூலவுருக்கள் தோன்றுதற்குக் காரணமாயிருக்கும், மனாதி தன்மாத்திரை ஆக்கிய வடிவு அசேதனம்- அன்றியும் அது மனம் முதலிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக்கரணங்களாலும் தன்மாத்திரைகளாலும் ஆக்கப்பட்ட புரியட்டகவுடம்பும் சடமுமாயிருத்தலின் ஆன்ம சொரூபமாகாது, பின் நீக்கிய சூக்குமத்தே நிற்பது ஓர் உரு உண்டு என்னின்- முன் நீக்கப்பட்ட சூக்குமவுருவினுள்ளே நிற்கும் அதிசூக்குமவுரு ஒன்றுண்டு. அதுதான் உயிர் என்னின், (அது கலையாதி தத்துவங்களால் ஆக்கப்பட்ட பரசரீரமாயிருத்தலாலும், ஆக்கிடும் உருவம் எல்லா அசித்துமாய் அநித்தமாம்- ஆக்கப்படும் உருவங்களெல்லாம் சடமாய் அழிந்துபோவனவாயுமிருத்தலாலும், அதுவும் ஆன்மசொரூபமாகாது.

ஆன்மா அருவுருவம் என்பவரை மறுத்து உரைக்கின்றது

**அருஉரு என்னில் ஆன்மா அருஉரு ஆவது இன்றாம்;**
**உருஅரு ஆகா தாகும் ஒரு பொருட்கு இரண்டு தன்மை**
**வருவதும் இல்லை; காட்ட வன்னிபோல் மருவும் என்னில்**
**உருவமும் காண வேண்டும் உண்மையும் ஒழிந்து போமே.** 201

(இதன் பொருள்):- ஆன்மா அருவுரு என்னின்- உயிரானது அருவும் உருவுமாய ஒரு பொருள் என்னின், அரு உருவாவது இன்றாம்- அருவப் பொருள் உருவப் பொருளாகாது, உரு அரு ஆகாதாகும்- உருவப் பொருள் அருவப் பொருளாகமாட்டாது, ஒரு பொருட்கு இரண்டு தன்மை வருவதும் இல்லை- அன்றியும் ஒரு பொருளுக்கு மாறுபட்ட இரண்டு தன்மை வருதலுமில்லையாம், காட்ட வன்னியோல் மருவும் என்னின்- இங்ஙனம் கூறுவதென்னை? விறகிலே அக்கினியானது காணப்பட்டு உருவமாயும் காணப்படாது அருவமாயும் இருத்தல்போல ஆன்மாவும் அருவும் உருவுமாய் இரு தன்மையுமுற்றிருத்தல் கூடும் என்னின், உருவமும் காணவேண்டும்- அக்கினியின் உருவம் காண்படுமாறு போல உயிரின் உருவமும் காணப்பட வேண்டும், உண்மையும் ஒழிந்துபோம்- (அங்ஙனம் காண்படின் காண்படுவனவெல்லாம் அழியுந் தன்மையுடையனவாதலால், உயிரும் அழியுந் தன்மையுடைதாய்) அது நித்தியப்பொருள் என்பதும் இல்லாதொழியும்.

மீண்டும், சந்திரன்போல் ஆன்மா அருவுருவம் என்பவரை மறுத்து உரைக்கின்றது

**சந்திரன் வடிவு போலத் தான் அரு உருவம் என்னில்,**
**வந்து நம் கண்ணில் தோன்றும் வடிவு உளதாம் உயிர்க்கும்**
**இந்த ஊன் உருவம் தானாய் எழுவதும் உயிரே என்னில்**
**பந்தமாய் அசித்தாய் ஆன்மாப் பவுதிகம் ஆகும் அன்றே.** 202

(இதன் பொருள்):- சந்திரன் வடிவுபோல- சந்திரனது உருவம் அமாவாசைத் தினத்திலே காணப்படாது அருவாய் நின்று பின்பு வெளிப்பட்டு உருவமாய்த் தோன்றுதல் போல, தான் அரு உருவம் என்னின்- உயிரும் அருவமும் உருவமுமாய் நிற்கும் என்னின், வந்து நம் கண்ணில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றும் வடிவு– சந்திரன் வடிவம்போல் வெளிபட்டு வந்து எங்கள் கண்களுக்குப் புலப்படும் வடிவம், உயிர்க்கும் உளதாம்– உயிருக்கும் உளதாதல் வேண்டும், இந்த ஊன் உருவம் தானாய் எழுவதும் உயிரே என்னின்– அமாவாசையில் அருவாய் நின்று பின் முறைமுறையே வளர்ந்து பூரணையிலே தூலவுருவாய் விளங்குவது சந்திரனா மாறு போலத் தோற்றப்படாது அருவாய் நின்று கருவுட் புகுந்து முறைமுறையே வளர்ந்து இந்த உடம்புருவாய்த் தோன்றுவதும் உயிரேயாம். ஆதலின் அது அருவுருவாம் என்னின், ஆன்மா பந்தமாய் அசித்தாய் பவுதிகம் ஆகும். உயிர் பந்திக்கப்பட்டதாய்ச் சடமாய்ப் பூதகாரியமாகும்.

ஆகாசம்போல் ஆன்மா அருவம் ஆகும் என்பவரை மறுத்து உரைக்கிறது

**அரு அவிகாரி ஆன்மா ஆகாயம் போல என்னில்,**
**உருவினைக் கட்டி ஆட்டி ஒட்டி மீட்டு உலாவப் பண்ணி,**
**மருவி நிற்பித்து இருத்திக் கிடத்தி மண் புரட்டி மற்றும்**
**பெரு விகாரங்கள் எல்லாம் தருவது என்? பேசிடாவே.** 203

(இதன் பொருள்):– ஆன்மா ஆகாயம் போல அரு அவிகாரி என்னின்– உயிராவது ஆகாயத்தைப் போல அருவாய் விகாரமில்லதாய் நிற்பது என்னின், உருவினைக் கட்டி ஆட்டி– உடம்பைப் பிணித்தும் நடிப்பித்தும் ஓட்டி மீட்டு உலாவப் பண்ணி– ஓடச் செய்தும் திரும்ப உலாவச் செய்தும், மருவி நிற்பித்து இருத்திக் கிடத்தி மண் புரட்டி– அவ்வுடம்பைப் பொருத்தி நிற்பித்தும் இருத்தியும் கிடத்தியும் மண்ணிற் புரட்டியும், மற்றும் பெரு விகாரங்கள் எல்லாம் தருவது என் பேசிடாய்– வேறும் பெரிய விகாரங்களையெல்லாம் செய்வது யாது? சொல்லுவாயாக.

ஆன்மா ஷஅசித்து; என்பவரையும் ஷசித்தசித்து; என்பவரையும் ஷசுத்தசித்து; என்பவரையும் மறுத்து உரைக்கின்றது

**அசித்து எனில் உணராது ஆன்மா; அசித்துச் சித்து ஆகும் எனில்,**
**அசித்துச் சித்து ஆகாது ஆகும்; சித்து அசித்து ஆவது இல்லை;**
**அசித்து ஒரு புறமாய் ஒன்றில், சித்து ஒரு புறமாய் நில்லாது;**
**அசித்து உறாச் சித்தே என்னில், அசித்து அடைந்து அறிவது இன்றாம்.** 204

(இதன் பொருள்):– ஆன்மா அசித்து எனின் உணராது– ஆன்மா சடப்பொருள் என்று சொல்லின் அ∴து அறியமாட்டாது, அசித்துச் சித்தாகும் என்னின்– சடப்பொருளாகிய ஆன்மா (மனத்தோடு கூடுதலால்) அறிவுடைப் பொருளாகும் என்று சொல்லின், அசித்துச் சித்தாகாதாகும், சடப்பொருள் அறிவுடைப் பொருளாகாது. சித்து அசித்து ஆவது இல்லை– அறிவுடைப் பொருளுஞ் சடப்பொருளாவதில்லை. ஆதலால் அது பொருந்தாது, அசித்து ஒரு புறமாய் சித்து ஒரு புறமாய் ஒன்றில் நில்லாது– (ஆன்மா சித்தும் அசித்துமாயிருக்கும் என்னின்) அசித்து ஒரு புறமும் சித்து ஒரு புறமுமாக மாறுபட்ட இரண்டு தன்மை ஒரு பொருளிலே இருத்தல் கூடாது. ஆதலால் அதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்தாது. அசித்து உறாச்சித்து என்னின்– அசித்தாகிய கருவிகளைப் பொருந்தாது அறியும் சித்துப்பொருள் ஆன்மா என்னின, அசித்து அடைந்து அறிவது இன்றாம்– அசித்தாகிய கருவிகளைக் கூடி ஆன்மா அறியவேண்டுவதின்று. ஆதலால் அதுவும் பொருந்தாது.

ஆன்மா ஷபரம அணு; என்பவரை மறுத்து உரைக்கின்றது

**உயிரினை அணு அது என்னில் உடல்பல துவாரம் ஓடும்**
**பயில்வு உறக் கட்டுணாது; பாரமும் தரித்துச் செல்லாது;**
**அயர்வு உறும் அசித்தாய்ப் பூத அணுக்களில் ஒன்றுஅது ஆகும்;**
**இயல்பு உறும் அவயவத்தால் அணு உரு இறக்கும் அன்றே.** 205

(இதன் பொருள்):– உயிரினை அணுவது என்னின்– உயிரானது பரமாணுவளவாய் உடலில் நிற்பதொன்று என்னின், உடல் பல துவாரம் ஓடும்– அவ்வுடலிற் பல துவாரங்களுள, அவற்றால் ஓடிப்போவதாகும், பயில்வு உறக் கட்டுணாது– அன்றியும் அவ்வுடம்பிலே தொழில் நிகழும்படி கட்டுப்பட்டு நில்லாது, பாரமும் தரித்துச் செல்லாது– பாரத்தையும் தாங்கிச் செல்லமாட்டாது, அயர்வு உறும் அசித்தாய்– அழிவெய்தும் சடப்பொருளாய்ப், பூத அணுக்களில் ஒன்றது ஆகும்– பூத பரமாணுக்களில் ஒன்றதாய் முடியும், இயல்பு உறும் அவயவத்தால்– இத்தன்மை பொருந்திய அவயவப் பகுப்புடையதாயிருத்தலின், அணுவுரு இறக்கும்– அணுவடிவம் அழிந்து போம். ஆதலால் ஆன்மா அணு என்பதும் பொருந்தாது.

ஆன்மா உடம்பினுள் ஏகதேசமாய் நிற்கும் என்பவரை மறுத்து உரைக்கின்றது

**உடலினில் ஏக தேசி உயிர் எனின், உருவாய் மாயும்;**
**படர் உறும் அறிவு இன்று; எங்கும் சுடர் ஒளிப் பண்பு அது என்னில்,**
**சுடர் தொடில் சுடுவது; எங்கும் தொட்ட இடம் அறிவு உண்டாகும்;**
**அடர்புலன் இடத்தும் ஒக்க அறிவு எழ வேண்டும் அன்றே.** 206

(இதன் பொருள்):– உயிர் உடலினில் ஏகதேசி எனின்– உயிரானது உடம்பினுள் இருதயத்தானத்திலே ஏகதேசமாய் நிற்கும் என்னின், உருவாய் மாயும்– உருவப்பொருள் எனப்பட்டு அழிவதாகும். எங்கும் படர்வு உறும் அறிவும் இன்று– அன்றியும் எங்கும் வியாபித்தறியும் அறிவும் இல்லதாகும். ஆகையால் அக்கூற்றுப் பொருந்தாது, சுடர் ஒளிப் பண்பது என்னின்– அப்படியன்று, விளக்கு ஓரிடத்தில் இருக்க அதன் ஒளி எங்கும் பிரகாசித்துப் பொருள்களை விளக்குதல்போல உயிரும் உடம்பினுள்ளே ஓரிடத்திருக்க அதன் அறிவு எங்கும் வியாபித்து விடய உயர்ச்சியை நிகழ்த்தும் என்னின், சுடர் தொடின் சுடுவது– விளக்குத் (தனக்கும் தன்னால் விளக்கப்படும் பொருட்கும் இடையில் மறைப்பில்லாத) தொடர்பிருந்தால் விளங்குவதாகும். அதுபோல எங்கும் தொட்டிட அறிவு உண்டாகும்– உயிரும் (அறியப்படும் விடயத்துக்கும் தனக்கும் மறைப்பில்லாத) தொடர்ச்சி எங்குமிருந்தால் விடய அறிவை நிகழ்த்தும். அவ்வாறன்றி உடல் முதலிய கருவிகளது மறைப்பிருந்தும் உயிர் விடய அறிவை நிகழ்த்துவதாலும், அடர் புலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தும் ஒக்க அறிவு எழவேண்டும்- (தொடர்பின்றியும் அறிவு நிகழும் எனின்) விளக்குத் தன்னைச் சூழ்ந்த பொருள் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் விளக்குதல் போல, உயிரும் தன்னைச் சேர்ந்து நெருங்கி இருக்கும் விடயங்கள் எல்லாவற்றிடத்தும் ஒரே காலத்தில் அறிவை நிகழ்த்த வேண்டும். அவ்வாறன்றி ஒரு காலத்தில் ஒரு விடயத்தினிடத்தேயே உயிர் அறிவை நிகழ்த்துதலாலும் அதுவும் பொருந்தாது.

ஆன்மா உடம்பு அளவாக நிறைந்து நிற்கும் என்பவரை மறுத்து உரைக்கின்றது

**உருவினில் நிறைந்து நின்று அங்கு உணர்ந்திடும் உயிர்அது என்னில்,**
**மருவிடாது உறக்கம் வாயில் அறிவு ஒக்க வழங்க வேண்டும்**
**பெருகிடும் சுருங்கும் போதும் பேருடல் சிற்றுடல் கண்**
**வரும் உடல் குறைக்க ஒக்கக் குறைந்து பின் மாயும் அன்றே.** 207

(இதன் பொருள்):- உருவினில் நிறைந்து நின்று அங்கு உணர்ந்திடும் உயிரது என்னின்- உடம்பளவிலே நிறைந்து நின்று அங்கே அறிதலைச் செய்யும் உயிர் என்று சொல்லின், உறக்கம் மருவிடாது- நித்திரை வரமாட்டாது, வாயில் ஒக்க அறிவு வழங்க வேண்டும்- அன்றியும் ஐம்பொறிகளிலும் ஏக காலத்தில் அறிவு நிகழ்தல் வேண்டும், போதம் பேருடல் கண் பெருகிடும் சிற்றுடல் கண் கருங்கும்- அன்றியும் அறிவு பெரிய உடம்பினித்துப் பெரிதாயும், சிறிய உடம்பினித்துச் சிறிதாயும் நகிழவேண்டும், வரும் உடல் குறைக்க- இவ்வாறு சிறிதாயும் பெரிதாயும் வளருகின்ற உடம்பிலே ஓர் அங்கத்தைக் குறைத்தவிடத்து, ஒக்கக் குறைந்து- அதனுடன் கூட உயிரும் குறைந்து, பின் மாயும்- பின்பு உடம்பு முற்றும் அழியுமிடத்து உயிரும் அழியும். ஆதலால் உயிர் உடம்பின்கண் நிறைந்து நின்று அறியும் என்பதும் பொருந்தாது.

முதல்வன் போல் ஆன்மாவும் வியாபகப் பொருள் ஆகும் என்பவரை மறுத்து உரைக்கின்றது

**எங்கும்தான் வியாபியாய் நின்று உணரும்இவ் ஆன்மா என்னில்**
**தங்கிடும் அவத்தை, போக்கு வரவுகள் சாற்றல் வேண்டும்;**
**பங்கம்ஆர் புலன் ஒன்று ஒன்றாப் பார்த்திடல் பகரல் வேண்டும்;**
**இங்கு எலாம் ஒழிந்தால் நிற்பது எங்ஙனம் இயம்பல் வேண்டும்.** 208

(இதன் பொருள்):- இவ்வான்மா எங்கும் தான் வியாபியாய் நின்று உணரும் என்னின்- இந்த ஆன்மா எவ்விடத்தும் வியாபியாய் நின்று காயத்துடனே கூடி இந்திரியங்க்ள வழியாக விடயங்களை அறியும் என்று சொல்லின், தங்கிடும் அவத்தை போக்கு வரவுகள் சாற்றல் வேண்டும்- அறிவு நிகழாதிருக்கும் அவத்தைகளுக்கும் சுவர்க்க நரகங்களுக்குச் சென்று மீளுவதற்கும் காரணம் சொல்லல் வேண்டும், பங்கம் ஆர் புலன் ஒன்று ஒன்றாய்ப் பார்த்திடல் பகரல் வேண்டும்- அன்றியும் சாக்கிரத்திலே குற்றம் பொருந்திய சத்தாதி விடயங்களையும் ஒருங்கே அறியாது ஒன்றொன்றாய் அறிதற்குக் காரணமுஞ் சொல்லல் வேண்டும், இங்கு எலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழிந்தால் நிற்பது எங்ஙனம் இயம்பல் வேண்டும்– (காயம் முதலியவற்றைக் கலந்து நிற்றலே வியாபியாய் நிற்றலாம் என்னில்) இக்காயம் முதலிய யாவும் இல்லாத சங்கார காலத்திலே ஆன்மா நிற்பது எவ்வாறு என்றுஞ் சொல்லல் வேண்டும்.

மாயா காரியத்தால் ஆன்மாவின் அறிவு ஏகதேசப்படுவது ஆயிற்று என்பவரை மறுத்து உரைக்கின்றது

**சுத்தமாம் ஆன்ம சிந்தைத் துகள்உடல் மறைத்தது என்னில்,**
**வைத்துறாது உடல்கண் வாயில் கரணங்கள் வழியால் ஞானம்**
**ஒத்து உறும் மலம் அற்றாலும் உறும் மலம் வீடும் இன்றாம்**
**பெத்தமும் அடையான் முத்த னாய்ப் பிரகாசன் ஆமே.** 209

(இதன் பொருள்):– சுத்தமாம் ஆன்ம சித்தைத் துகள் உடல் மறைத்தது என்னின்– அநாதியே சுத்தமாகிய ஆன்மாவின் அறிவை இடையே வந்து பொருந்திய மாயாமலமாகிய உடம்பு மறைத்தது என்று சொல்லின், உடற்கண் வாயில் கரணங்கள் வழியால் ஞானம் வைத்துறாது– உடம்பின் கண்ணுள்ள இந்திரியங்க்ள வாயிலாகவும் அந்தக்கரணங்கள் வாயிலாகவும் அவ்வான்மாவுக்கு அறிவு உண்டாகாதாம், ஒத்து உறும் மலம் அற்றாலும்– இடையே வந்து பொருந்திய மாயாமலமாகிய அவ்வுடம்பு நீங்கப்பெறினும், மலம் உறும்– பின்னும் அம்மலம் பொருந்துமாதலால், வீடும் இன்றாம்– முத்தி என்பது இல்லையாய் முடியும். ஆன்மா அநாதியே சுத்தனாயின், முத்தனாய்ப் பிரகாசனாம்– என்றும் முத்தனாயே விளங்குவன், பெத்தமும் அடையான்– உடலைப் பொருந்திப் பந்தமுமுறான்.

சைவ சித்தாந்த நெறிப்படி ஆன்ம இலக்கணம் இது எனக் கூறுகின்றது

**அசித்துஅரு வியாபகம் போல் வியாபகம், அருவம் இன்றாய்,**
**வசித்திட வரும் வியாபி எனும் வழக்கு உடையன் ஆகி**
**நசித்திடா ஞானச் சோதி அநாதியே மறைத்து நிற்கும்**
**பசுத்துவம் உடையன் ஆகிப் பசு என நிற்கும் ஆன்மா.** 210

(இதன் பொருள்):– ஆன்மா– ஆன்மாவானது, அசித்து அருவியாபகம்போல்– சடப் பொருளாகிய மாயையினது வியாபகத்தன்மையும் (அருவத் தன்மையும்) போல, வியாபகம் அருவம் இன்றாய்– வியாபகத் தன்மையும் அருவத் தன்மையும் இல்லாதாய், வசித்திட வரும் வியாபி எனும் வழக்கு உடையனாகி– சார்ந்த பொருளிடத்து அதுவதுவாய் வசிப்புண்டு நின்றறியும் வியாபகத் தன்மையுடையதாய், நசித்திடா ஞானச் செய்தி அநாதியே மறைத்து நிற்கும் பசுத்துவம் உடையனாகி– கெடாது நித்தமாயிருக்கும் அதன் இச்சாஞானக் கிரியைகளை அநாதியே மறைத்து நிற்கும் ஆணவ மலசம்மந்தமுடையதாய், பசு என நிற்கும்– பசு எனப் பெயர் பெற்று நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரண சரீரம், கஞ்சுக சரீரம், குண சரீரம் என்னும் மூன்றினையும் ஆன்மா பொருந்தும் முறைமை கூறுகின்றது

**மாயையின் வயிற்றுள் மன்னி, வரும் செயல் ஞானம் இச்சை**
**ஏயும் அக் கலாதி மூன்றால் ஏகதேசத்தின் ஏய்ந்து இங்கு**
**ஆயும் முக்குணங்கள் அந்தக் கரணங்கள் ஆதி எல்லாம்**
**காயம் பெத்தங்கள் ஆகிக் கலந்து உடன் நிற்கும் ஆன்மா.** 211

(இதன் பொருள்):- ஆன்மா- அங்ஙனம் ஆணவமலத்தாலே மறைப்புண்டு கேவலப்பட்டு நின்ற ஆன்மா, மாயையின் வயிற்றுள் மன்னி- அசுத்த மாயையிலே அசுத்த மாயாதத்துவத்தைப் பொருந்தி, வரும் செயல் ஞானம் இச்சை ஏயும்- (அத்தத்துவத்திற் சமட்டி ரூபமாய் அடங்கியிருக்கும் கலாதிகளாலே) பொது வகையால் விளங்கப்பெறும் இச்சா ஞானக் கிரியைகளைப் பொருந்தும், அக்கலாதி மூன்றால் கதேசத்தின் ஏய்ந்து- பின்னர் வியட்டி ரூபமாய் தோன்றும் அக்கலையாதி தத்துவங்கள் மூன்றினாலும் சிறப்பு வகையால் விளங்கப் பெறும் இச்சா ஞானக்கிரியைகளைச் சிறுபான்மை பொருந்தி, இங்கு ஆயும்- இங்கே விடயங்களில் வியாபரிக்கும், முக்குணங்கள் அந்தக்கரணங்கள் ஆதி எல்லாம்- முக்குணங்கள் அந்தக்கரணங்கள் முதலிய தத்துவங்கள் யாவும், காயபெத்தங்களாகி- சரீர பந்தங்களாய், கலந்து உடன் நிற்கும்- ஆன்மா அவற்றோடு பிரிவின்றி உடனாய் நிற்கும்.

சூக்கும சரீரம், தூல சரீரங்களை ஆன்மா பொருந்தி, ஐந்தவத்தைப்படும் முறைமை கூறுகின்றது

**சூக்கும தேகி ஆகித் தூல ரூபத்தில் மன்னிச்**
**சாக்கிரம் முதலாய் உள்ள அவத்தையுள் தங்கி எங்கும்**
**போக்கொடு வரவும் எல்லாம் புரிந்து புண்ணியங்கள் பாவம்**
**ஆக்கியும் பலன்கள் எல்லாம் அருந்தியும் நிற்கும் ஆன்மா.** 212

(இதன் பொருள்):- ஆன்மா- ஆன்மாவானது, சூக்கும தேகியாகி- மேற்கூறியவாறு அந்தக் கரணங்கள் முதலியவற்றாலாய சூக்குமதேகத்தையுடையதாய், தூல தேகத்தின் மன்னி- தூல சரீரத்திலே நிலைபெற்று, சாக்கிரம் முதலாயுள்ள அவத்தையுள் தங்கி- சாக்கிரம் முதல் அதீதம் ஈறாகவுள்ள ஐந்தவத்தைகளுட்பட்டு, எங்கும் போக்கொடு வரவும் எல்லாம் புரிந்து- யாண்டும் போக்கு வரவு முதலாய வினைகளை விரும்பிப் பயின்று, புண்ணிய பாவங்கள் ஆக்கியும்- அப்பயிற்சியாற் சூக்குமமாயும் தூலமாயும் புண்ணிய பாவங்களை ஈட்டியும், பலன்கள் எல்லாம் அருந்தியும் நிற்கும்- அவற்றின் பயனாய் வரும் இன்பத்துன்பங்களெல்லாவற்றையும் நுகர்ந்தும் நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து சரீரங்களும் ஐந்து கோசங்கள் எனப் பெயர் பெறும் எனவும், அவற்றில் ஆன்மா கட்டுப்பட்டுப் போக்கு வரவு செய்து நிற்கும் எனவும் கூறுகின்றது

**மருவு ஆனந்தம், விஞ்ஞான, மனோ, பிராணன், அன்னமயம்**
**உருவாம் தன்மை உண்டாய் முன் ஒன்றுக்கு ஒன்று சூக்குமமாய்**
**வருமாம் அன்னமயம் பற்றி மாயை முதற்காரணம் ஆகும்;**
**அருவாய் ஆன்மா ஐங்கோசத்து ஆர்ப்பு உண்டு அவற்றின் அகம்புறமாம். 213**

(இதன் பொருள்):- மருவு ஆநந்தம் விஞ்ஞானம் மனோ பிராணன் அன்னமயம்- ஆன்மாவைப் பொருந்திய ஆநந்தமயகோசம் விஞ்ஞானமயகோசம் மனோமயகோசம் பிராணமயகோசம் அன்னமயகோசம் என்னும் ஐந்தும், உருவாம் தன்மை உண்டாய்- முறையே காரணசரீரம் கஞ்சுகசரீரம் குணசரீரம் சூக்குமசரீரம் தூலசரீரம் என்னும் சரீரங்களின் தன்மையுடையனவாய், அன்னமயம் பற்றி முன் ஒன்றுக்கு ஒன்று சூக்குமமாய் வருமாம்- அன்னமயகோசம் முதலாகப் பின் தோன்றுவதாகிய ஒன்றற்கு முன் தோன்றியது சூக்குமமாய் வருவதாம், மாயை முதற் காரணமாகும்- இவ்வைந்தினுக்கும் அசுத்தமாயை முதற்காரணமாயிருக்கும், அருவாம் ஆன்மா ஐங்கோசத்து ஆர்ப்புண்டு- அருவப் பொருளாகிய ஆன்மா இந்த ஐந்து கோசங்களினாலும் பந்திக்கப்பட்டு, அவற்றின் அகம் புறமாம்- அவற்றோடு அதுவதுவாயும் அவற்றின் வேறாயும் நின்ற அவற்றைச் செலுத்தும்.

பஞ்ச கோசங்களிலும் ஆன்மா நிற்கும் முறைமை கூறுகின்றது

**தோற் பாவைக் கூத்தும் தொல்லை மரப்பாவை இயக்கமும் சீர்த்**
**தேர்ப் பாரில் செலவும் வேறாய்ச் செலுத்துவோர் செய்தி தானும்**
**பார்ப்பாய வேடம் கட்டி ஆடுவோர் பரிசு போலும்**
**ஆர்ப்பாய காயம் தன்னை ஆன்மா நின்று ஆட்டும் ஆறே. 214**

(இதன் பொருள்):- ஆர்ப்பாய காயம் தன்னை ஆன்மா நின்று ஆட்டுமாறு- பந்தமாகிய ஆநந்தமயகோசம் விஞ்ஞானமயகோசம் மனோமயகோசம் பிராணமயகோசம் அன்னமயகோசம் என்னும் ஐந்தினையும் ஆன்மா அவற்றோடு ஒன்றாயும் வேறாயும் நின்று செலுத்தும் முறைமை, தோற்பாவைக் கூத்தும்- தோற் பாவைக் கூத்தும், சீர்த்தேர் பாரில் செலவும்- சிறப்புடைய தேர் பூமியிற் செல்லுகையும் ஆகிய மூன்றனையும், வேறாய்ச் செலுத்துவோர் செய்திதானும்- இவற்றின் வேறாய் நின்று ஆட்டுவோர் செலுத்துவோர்களின் தன்மையும், பார்ப்பாய வேடம் கட்டி அடுவோர் பரிசும் போலும்- பார்க்கப்படுகின்ற பல வேடங்கட்டி அதுவதுவாய் நின்று ஆடுவோர் தன்மையும் போலுமாம்.

ஆன்மா, பஞ்சகோசங்களினும் வேறு என்பதை உவமை முகத்தால் விளக்குகின்றது

**என் உடல் பொறி பிராணன் கரணம் என் உணர்வு என்றக்கால்,**
**தன்னின் வேறாகும் நீ என் தன் மனை என்ற எல்லாம்**
**நின்னின் வேறு ஆகம் என்னில் நீங்கிடா இவை இங்கு என்னில்**
**உன்னின் ஆகும் நீ யாம் உகிர் மயிர் உகவும் காண்டி. 215**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்):- என் உடல் பொறி பிராணன் கரணம் என் உணர்வு என்றக்கால் தன்னின் வேறாகும் நீ- எனது உடல் எனது பொறி எனது பிராணன் எனது கரணம் எனது அறிவு என்று நீ சொல்லுமிடத்து (அவ்வாறு சொல்லுதலாலே) நீ அவற்றின் வேறாகுமன்றே, என்றன் மனை என்ற எல்லாம் நின்னின் வேறாகும்- அது, நீ எனது மனைவி (எனது வீடு) என்று அபேதமாய் வழங்கி வந்தனவெல்லாம் உனக்கு வேறாயிருத்தல் போலவேயாம், இவை இங்கு என்னின் நீங்கிடா என்னின்- மனைவி முதலிய புறப்பொருள்கள் என்னின் வேறாதல் கூடும். உடல் பொறி முதலிய இவைகளோ இங்கே என்னை விட்டு நீங்கமாட்டா. ஆகையால், உயிர் பஞ்சகோசங்களின் வேறன்று என நீ சொல்லின், உன்னினவாகி நீயாம் உகிர் மயிர் உகவும் காண்டி உன்னுடையனவாகி அபேதமாய் எனதென்று வழங்கப்படும் நகம் மயிர் முதலியன நீங்குதலும் நீ காணுதலால் அவைபோல உடல் முதலியனவும் நீங்குவனவாம். ஆதலால் நீ அவற்றின் வேறாம்.

அபேதம் பற்றி பஞ்சகோசங்களை ஷஎனது; என்று வழங்கப்படுவதால், ஆன்மா அவற்றின் வேறு என்பது கூடாது என்பவரை மறுத்து உரைக்கின்றது

**பொன் அணி ஆடை மாலை போது மேல் ஆனபோது இங்கு**
**என் அணி யான் என்று உன்னி இருந்தனை பிரிந்த போது**
**நின் அணி நீயும் அல்ல ஆயினை காயம் நின்னின்**
**அன்னியம் ஆகும் உன்னை அறிந்து நீ பிரிந்து பாரே.** 216

(இதன் பொருள்):- பொன் அணி ஆடை போதுமாலை மேலானபோது- பொன்னாபரணம் வஸ்திரம் பூமாலை முதலிய புறப்பொருள்களை அணிந்தபோ, இங்கு என் அணி யான் என்று உன்னி இருந்தனை- இவ்விடத்து என் ஆபரணம் என்றும், அபேதம்பற்றி யான் என்றும் நீ இவற்றைக் கருதியிருந்தாய், நின் அணி பிரிந்தபோது நீயும் அல்லவாயின- நின்னால் அணியப்பட்ட அப்பொன்னாபரணம் முதலியவை நீங்கியபோது அவை உனக்கு அந்நியமாய் நீயும் அல்லவாயிருந்தன. அதுபோல காயம் நின்னின் அந்நியமாகும்- உடல் பொறி முதலிய அனைத்தும் நின்னிலிருந்து வேறாகும், உன்னை அறிந்து நீ பிரிந்துபார்- ஆதலால் உனது சொரூபத்தை அறிந்து நீ இவற்றை நீங்கிநின்று அறிவாயாக.

விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசங்களே ஆன்மா என்பவரை மறுத்து உரைக்கின்றது

**உடல் யான் அல்லேன், இந்த உணர்வு யான் அல்ல,: ஆன**
**கடன் யாது என்னில், வேறு கண்டு உணர்வு என்னது, என்கை**
**இடர் இலா என்றன் ஆன்மா என்ற போது, ஆன்மா வேறோ**
**திடனதா உயிரை வேறு கண்டிடார் செப்பலே காண்.** 217

(இதன் பொருள்):- உடல் யான் அல்லேன்- உடல் பொறி முதலியன யான் அல்லன் என்பது அமையும், இந்த உணர்வு யான் அல்லவான கடன் யாது என்னின்- இந்த விஞ்ஞானமய ஆநந்தமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோசங்கள் யான் அல்லன் என்றும் முறைமை யாதெனின், வேறு கண்டு உணர்வு என்னது என்கை- ஏனைக் கோசங்களைப் போல வேறாகக் கண்டு இவற்றை எனதென்று வழங்குதல் பற்றியாம். அப்படியாயின் இடர் இலா என்றன் ஆன்மா என்றபோது ஆன்மாவேறோ- குற்றமில்லாத என்னுடைய ஆன்மா என்றவிடத்து யான் வேறு ஆன்மா வேறோ? திடனதா உயிரை வேறு கண்டிடார் செப்பலே காண்- அஃது உணர்பொருள்களையெல்லாம் உணர்ந்து நிற்பதாகிய உயிரை உறுதியாக அவற்றினின்று பிரித்தறியாதார் கூறும் கூற்றாமென அறிவாயாக.

ஷஎன்னுடைய ஆன்மா; என்பதற்குப் பொருள் கூறி மேற்கூறியதனை வலியுறுத்துகின்றது

**புந்தியை மனம்அது என்றும், மனம்அதுபுந்தியென்றும்,**
**சிந்தையைச் சீவன் என்றும் சீவனைச் சிந்தை என்றும்,**
**முந்தனை ஆன்மா என்றும், ஆன்மாவை முந்தன் என்றும்,**
**வந்திடும் என்தன் ஆன்மா என்றது மற்று ஒன்றைக் காண்.** 218

(இதன் பொருள்):- புந்தியை மனமது என்றும் மனமது புந்தி என்றும்- புத்தியை மனம் என்றும் மனத்தைப் புத்தி என்றும், சிந்தையைச் சீவன் என்றும் சீவனைச் சிந்தை என்றும்- சித்தத்தை ஆன்மா என்றும் ஆன்மாவைச் சித்தம் என்றும், முந்தனை ஆன்மா என்றும், ஆன்மாவை முந்தன் என்றும்- சிவபிரானை ஆன்மா என்றும் ஆன்மாவைச் சிவபிரான் என்றும், வந்திடும்- ஒவ்வோரவதாரங்களில் உபசாரமாகக் கூறப்படும், என்றன் ஆன்மா என்றதும் மற்றொன்றைக் காண்- இவைபோல என்றன் ஆன்மா என்பதும் தன்னோடு சம்பந்தமுள்ள பிறிதொரு பொருளைக் குறிக்கும் என்பதை அறிவாயாக.

ஐந்து கோசங்களை ஆன்மா என வேதத்துள் கூறியதும் ஆகுபெயராலேயே ஆகும் எனக் கூறுகின்றது

**அறிவு உடல் சிந்தை ஆன்மா அணைதலால் ஆன்மா என்பர்;**
**எறிசுடர் விளக்கு இருக்கும் இடத்தையும் விளக்கு என்றால் போல்,**
**பொறிபுலன் கரணம் எல்லாம் புலப்படும் அபேதம் ஆகிப்**
**பிறிதராது அறிவது ஆன்மா அறிபொருள் பின்னம் ஆமே.** 219

(இதன் பொருள்):- அறிவு- விஞ்ஞானமய ஆநந்தமய கோசங்களையும், சிந்தை- மனோமய பிராணமய கோசங்களையும், உடல்- அன்னமய கோசத்தையும், ஆன்மா அணைதலால்- ஆன்மா பொருந்துதல் பற்றி, ஆன்மா என்பர்- அக்கோசங்களையும் ஆன்மா எனக் கூறுவர், சுடர் எறிவிளக்கு இருக்கும் இடத்தையும் விளக்கு என்றாற்போல்- ஒளியை வீசும் விளக்கிருக்கின்ற தகழியையும் விளக்கென்றாற் போலவாம், பொறி புலன் கரணம் எல்லாம் அபேதமாகிப் புலப்படும்- ஆதலாற் பொறி புலன் கரணங்கள் யாவும் ஆன்மாவுக்கு வேறல்லனவாக அறியப்படும், பிறிதராது அறிவது ஆன்மா- அங்ஙனம் பிரிவின்றி நின்று அறிவது ஆன்மாவாம், அறி பொருள் பின்னமாம்- ஆயினும் அங்ஙனம் அறியப்படும் பொருள்கள் அவ்வான்மாவுக்கு வேறாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து கோசங்களிலும் ஆன்மா வேறு என்பதை அனுபவத்தால் வலியுறுத்து கின்றது

**கண்டு உணர் புருடன் வேறு கனவு கண்டு ஒடுங்கிக் காயம்**
**உண்டியும் வினையும் இன்றிக் கிடந்து உயிர்த்திட உணர்ந்து**
**கண்டிடும் கனவும் சொல்லி ஒடுக்கமும் கருதி வேறாய்**
**உண்டியும் வினையும் உற்று இங்கு உணர்த்திட உணரா நிற்கும்.** 220

(இதன் பொருள்):- கண்டு உணர் புருடன்- அங்ஙனம் பொறி புலன் முதலியவற்றை அபேதமாகக் கண்டு அவற்றோடு பிரிவின்றி நின்று அறிந்து சாக்கிராவத்தையுறும் உயிரானது, வேறு அவற்றின் வேறாம், எவ்வாறெனின், கனவு கண்டு- அவ்வுயிரானது சொப்பனாவத்தையைப் பொருந்திக் கனவு கண்டு, ஒடுங்கி- பின் சுழுத்தி முதலிய அவத்தைகளை அடைந்து, காயம் உண்டியும் வினையும் இன்றிக்கிடந்து- உடலானது போகவிருப்பமும் தொழிலுமின்றி ஓரிடத்தில் கிடந்து, உயிர்த்திட- பின் சாக்கிராவத்தையுற்று விழித்தவிடத்து, உணர்ந்து- தெளிவடைந்து, கண்டிடும் கனவும் சொல்லி- சொப்பனாவத்தையிலே தோன்னிற கனவுஞ் சொல்லி, ஒடுக்கமும் கருதி- சொல்லவாராமையாற் சுழுத்தி முதலிய அவத்தைகளின் அநுபவத்தையும் உணர்ந்து, வேறாய் உண்டியும் வினையும் உற்று- இச்சொப்பனம் முதலிய அவத்தைகளுக்கு வேறாய்ப் போக விருப்பும் தொழிலும் பொருந்தி, இங்கு உணர்த்திட உணரா நிற்கும்- இப்பொறி புலன் முதலியன அறிவிக்க விடயங்களை அறியுமாதலினாம்.

ஆன்மா, முதல்வனின் வேறாய், அநாதியே ஆணவமலத்தின் மறைந்து நிற்கும் எனக் கூறுகின்றது

**புருடனே அறிவன் ஆகில் பொறி புலன் ஆதி போதம்**
**தருவது என் அறிவு மாயா தனு கரணாதி பற்றி**
**வருவது இங்கு அநாதி ஆக மலத்தினின் மறைந்து நிற்பன்;**
**அருவனாய் இவற்றோடு ஆளும் அமைச்சரும் அரசும் போல்வன்.** 221

(இதன் பொருள்):- புருடனே அறிவனாகில்- மேற்கூறியவாறு ஆன்மாவே அறியும் என்னின், பொறி புலன் ஆதி போதம் தருவது என்- பொறி புலன் முதலியன ஆன்மாவுக்கு அறிவைத்தரும் என்பது எற்றுக்கு அநாதியே மலத்தினின் மறைந்து அருவனாய் நிற்பன்- ஆன்மா அநாதியே தனது ஞானக்கிரியைகள் ஆணவமலத்தினாலே மறைக்கப்பட்டுக் கேவலத்தின் உருவிலியாய் நிற்குமாதலால், மாயா தனுகரணாதிகளைக் கூடிச் சகலநிலையிலே அதற்கு அறிவு உண்டாகும், இவற்றோடு ஆளும் அரசும் அமைச்சரும் போல்வன்- அரசன் மந்திரிகளோடு ஒற்றித்து நின்று அரசு செய்தல்போல அவ்வான்மாவும் இத்தனுகரணாதிகளோடு ஒற்றித்து நின்று விடயங்களை அறியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மா ஐந்து அவத்தையில் போக்கு வரவு புரிவதை, அரச உவமையில் வைத்து விளக்குகின்றது

**படைகொடு பவனி போதும் பார்மன்னன் புகும்போது இல்லில்**
**கடைதொறும் விட்டு விட்டுக் காவலும் இட்டுப் பின்னர்**
**அடைதரும் தனியே அந்தப் புரத்தினில் அதுபோல் ஆன்மா**
**உடலினில் அஞ்சு அவத்தை உறும் உயிர் காவல் ஆக.** 222

(இதன் பொருள்):- படைகொடு பவனி போதும் பார்மன்னன்- அமைச்சர் படைத்தலைவர் முதலிய பரிசனங்களோடு வெளியிலே உலாவப்போன பூவுலக அரசன், இல்லில் புகும் போது- மீள அரண்மனையுட் புகும்போது, கடை தொறும் விட்டு விட்டு- ஒவ்வொரு வாயிலிலிலும் நிறுத்தவேண்டியவர்களை அங்கங்கே நிறுத்தி, காவலும் இட்டு- காவலும் வைத்து, பின்னர் அந்தப் புரத்தினில் தனியே அடைதரும் அதுபோல- பின்பு அந்தப்புரத்திலே தனியே புகுமாறு போல, ஆன்மா- தனுகரணாதியோடு கூடி விடயங்களை அறிந்து பற்றி அனுபவித்த புருடனும் உடலினுட் செல்லும் பொழுது, உடலினில் உயிர்காவலாக- அவ்வுடலின்கண் இலாடம் கண்டம் இருதயம் என்னும் தானங்களிற் கருவிகளை விட்டு விட்டு நாபித் தானத்திலே பிராணவாயுவைக் காவலாக வைத்து மூலாதாரமாகிய அந்தப் புரத்திற்குத் தனியே சென்று, அஞ்சு அவத்தை உறும்- இங்ஙனம் சாக்கரம் சொப்பனம, சுழுத்தி துரியம் துரியாதீதம் என்னும் ஐவகை அவத்தைகளையும் பொருந்தும்.

ஐந்து அவத்தையுள் ஒவ்வோர் அவத்தைக்கு உரிய தத்துவங்களும் தானங்களும் இவை என உணர்த்துகின்றது

**சாக்கிரம் முப்பத்து ஐந்து நுகலினில், கனவு தன்னில்**
**ஆக்கிய இருபத்து ஐந்து களத்தினில் சுழுமுனை மூன்று**
**நீக்கிய இதயம் தன்னில், துரியத்தில் இரண்டு நாபி,**
**நோக்கிய துரியா தீதம் நுவலில் மூலத்தில் ஒன்றே.** 223

(இதன் பொருள்):- சாக்கிரம் முப்பத்தைந்து நுதலினின்- சாக்கிராவத்தையில் முப்பத்தைந்து கருவிகள் இலாடத்தானத்திலும், ஆக்கிய கனவு தன்னில் இருபத்தைந்து களத்தினில்- அதன்பின் உண்டாக்கப்பட்ட சொப்பனாவத்தையில் இருபத்தைந்து தத்துவங்க் கண்டத்தானத்திலும், நீக்கிய சுழுனை மூன்று இதயம் தன்னில்- இவை இரண்டும் ஒழிந்த சுழுத்தியவத்தையிலே மூன்று கருவிகள் இதயத்தானத்திலும், துரியத்தில் இரண்டு நாபி- துரியாவத்தையில் இரண்டு கருவிகள் நாபித்தானத்திலும், நோக்கிய துரியாதீதம் நுவலின் ஒன்று மூலத்தில்- முற்கூறிய துரியாதீதத்தைச் சொல்லுமிடத்து ஒரு கருவி மூலாதாரத்திலும் தொழிற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து அவத்தைகளும், சகலத்திலும் கீழால் அவத்தை, மேலால் அவத்தை என இருதிறப்படும் எனக் கூறுகின்றது

**அறிதரு முதல் அவத்தை அடைதரும் இடத்தே ஐந்தும்**
**செறிதரும் கரணம் தன்னில் செயல்தொறும் கண்டுகொள் நீ;**
**பிறிவு இலா ஞானத்தோரும் பிறப்பு அற அருளால் ஆங்கே**
**குறியொடு அஞ்சு அவத்தை கூடுவர் வீடு கூட.** 224

(இதன் பொருள்):- அறி தரும் முதல் அவத்தை அடைதரும் இடத்தே- மேற்கூறிய அவத்தை ஐந்தினுள் விடய அறிவைத் தரும் முதலவத்தையாகிய சாக்கிராவத்தை பொருந்துகின்ற இலாடத்தானத்திலே, ஐந்தும் செறி தரும்- சாக்கிரம் முதலிய ஐந்தவதைகளும் பொருந்தும், கரணம் தன்னில் செயல் தொறும் நீ கண்டுகொள்- கருவிகளால் விடயங்களை அறியுஞ் செய்கைதோறும் அவை அதிநுட்பமாய் இடையீடின்றி நிகழும் முறைமையை நுண்ணுணர்வால் நீ காண்பாயா, பிறிவிலா ஞானத்தோரும்- எங்கும் நீக்கமின்றி நிற்கும் திருவருளைப் பெற்றோரும், பிறப்பு அறவீடு கூட- பிறப்பு நீங்கி முத்தியடையும் பொருட்டு, அருளால்- ஞானாசாரியரின் உபதேசப்படி, ஆங்கே- அவ்விலலாடத்தானத்திலே, குறியொடும் அஞ்சு அவத்தை கூடுவர்- தமது அறிவை ஒரு குறியின் கண் நிறுத்திச் சாக்கிரம் முதலிய நின்மலாவத்தை ஐந்தினையும் பொருந்துவர்.

சகலத்தில் மத்தியால் அவத்தை ஐந்து உண்டு எனவும், சுத்தத்திலும் ஐந்து அவத்தை உண்டு எனவும் கூறுகின்றது

**ஐந்து சாக்கிரத்தில், நான்கு கனவினில், சுழுமுனை மூன்று**
**வந்திடும் துரியம் தன்னில் இரண்டு, ஒன்று துரியாதீதம்**
**தந்திடும் சாக்கிராதி அவத்தைகள் தானம் தோறும்**
**உந்திடும் கரணம் தன்னில் செயல் தொறும் உணர்ந்து கொள்ளே.** 225

(இதன் பொருள்):- சாக்கிரத்தில் ஐந்து- மேற்கூறிய மத்தியாலவத்தையில் நிகழும் சாக்கிரத்திலே சிவதத்துவம் முதற் சுத்தவித்தையீறாகிய ஐந்து கருவிகளும, கனவினில் நான்கு- சொப்பனத்திலே சிவதத்துவம் முதல் மகேச்சுரமீறாகிய நான்கு கருவிகளும், சுழுனை மூன்று- சுழுத்தியிலே சிவதத்துவம் முதற் சாதாக்கியமீறாகிய மூன்று கருவிகளும், வந்திடும் துரியம் தன்னில் இரண்டு- அதன்பின் வரும் துரியத்திலே சிவதத்துவம் சத்தி தத்துவம் ஆகிய இரண்டு கருவிகளும், துரியாதீதம் ஒன்று- துரியாதீதத்திலே சிவதத்துவம் ஆகிய ஒரு கருவியும், சாக்கிராதி அவத்தைகள் தந்திடும் தானந்தோறும்- அச்சாக்கிரம் முதலிய அவத்தைகள் நிகழும் அவ்வவ்விடங்களிலே, உந்திடும்- கலாதிகளைச் செலுத்தாநிற்கம், கரணம் தன்னில் செயல் தொறும் உணர்ந்து கொள்- கரணங்களால் விடயங்களை அறியுஞ் செய்கை தோறும் இதனை நீ நுண்ணணர்வால் அறிந்து கொள்வாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாக்கிரம் முதலிய ஐந்து அவத்தையிலும், சிவதத்துவம் நின்று செலுத்தும் முறைமை இவ்வாறு எனக் கூறுகின்றது

**இருவகை சாக்கி ராதி அவத்தைகள் இயல்பு தானும்**
**ஒருவகை கீழே நூக்கி உற்பவம் காட்டும் ஒன்று**
**பெருகமேல் நோக்கித் தீய பிறப்பு அறுத்திடும் யோகில்**
**தருவதோர் சமாதி தானும் தாழ்ந்து பின் சனனம்** 226

(இதன் பொருள்):- சாக்கிரா அவத்தைகள் இயல்புதானும்- சாக்கிராதி அவத்தைகளின் இயல்பும், இருவகை- மேற்கூறியவாறு மத்தியாலவத்தை நின்மலாவத்தை என இரு வகையாய் இருக்கும், ஒருவகை கீழே நூக்கி உற்பவம் காட்டும்- மத்தியாலவத்தையாகிய ஒன்று கீழே தள்ளிப் பிறப்பினை உண்டாக்கும், ஒன்று பெருக மேல் நோக்கித் தீய பிறப்பு அறுத்திடும்- நின்மலாவத்தையாகிய மற்றொன்று முழுதும் மேலே செலுத்திக் கொடிய பிறவியை அறுக்கும், யோகில் தருவதோர் சமாதிதானும்- இவையன்றி யோகத்தால் உண்டாகும் சமாதியும், தாழ்ந்து பின் சனனம் சாரும்- கீழே தள்ளிப் பின்பு பிறவியைக் கொடுக்கும்.

காரிய அவத்தை ஆகிய சாக்கிராதி ஐந்திற்கும், காரண அவத்தை கேவல, சகல, சுத்தம் என மூன்று உண்டு எனவும், அவற்றின் பொது இயல்பு இவை எனவும் கூறுகின்றது

**கேவலம் சகலம் சுத்தம் என்று மூன்று அவத்தை ஆன்மா**
**மேவுவன்; கேவலம் தன் உண்மை; மெய் பொறிகள் எல்லாம்**
**காவலன் கொடுத்த போது சகலனாம்; மலங்கள் எல்லாம்**
**ஓவின போது சுத்தம் உடையன் உற்பவமத் துடைத்தே.** 227

(இதன் பொருள்):- கேவல சகல சுத்தம் என்று மூன்று அவத்தை ஆன்மா மேவுவன்- மேற்கூறிய காரியவத்தைகளுக்குக் காரணமாகிய கேவலம் சகலம் சுத்தம் என மூன்று அவத்தைகளை ஆன்மா எய்துவன், கேவலம் தன் உண்மை- அவற்றுட் கேவலமாவது இச்சாஞானக் கிரியைகளின் நிகழ்ச்சி சிறிதுமின்றித் தான் மாத்திரம் உளனாதலாம், மெய் பொறிகள் எல்லாம் காவலன் கொடுத்தபோது சகலனாம்- பின்பு தனு கரணாதிகள் முதலியன முதல்வனாற் கொடுக்கப்பெற்று இவ்விச்சாஞானக் கிரியைகள் சிறிது விளங்கும் அவதரத்திலே அவ்வான்மா சகலன் எனப்படுவன், மலங்களெல்லாம் ஓவினபோது உற்பவம் துடைத்து சுத்தமுடையன்- பின்பு பஞ்சமலங்களும் நீங்கியவிடத்துப் பிறவியை ஒழித்து அவ்விச்சா ஞானக்கிரியைகள் எங்கும் வியாபித்து விளங்கும் அவதரத்திலே சுத்தமுடையன் எனப்படுவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேவலத்தின் சிறப்பு இயல்பு இது எனக் கூறுகின்றது

**அறிவு இலன்; அமூர்த்தன்; நித்தன்; அராகாதி குணங்களோடும்**
**செறிவு இலன்; கலாதியோடும் சேர்வு இலன்; செயல்கள் இல்லான்;**
**குறி இலன்; கருத்தா அல்லன் போகத்தில் கொள்கை இல்லான்;**
**பிறிவு இலன் மலத்தினோடும்; வியாபி கேவலத்தில் ஆன்மா.** 228

(இதன் பொருள்):- கேவலத்தில்- மேற்கூறிய கேவலாவத்தையிலே, ஆன்மா- ஆன்மாவானது, அறிவில்- அறிவு விளங்கப் பெறாததும், அமூர்த்தன்- தூலவுடம்பு இல்லாததும், நித்தன்- தோற்றக்கேடுகள் இல்லாததும், அராகாதி குணங்களோடும், செறிவிலன்- தமோகுணம் முதலிய குணங்களோடும் சேர்தல் இல்லாததும், செயல்கள் இல்லான்- தொழில்கள் விளங்கப்பெறாததும், குறியிலன்- காரண சரீரம் இல்லாததும், கருத்தா- அல்லன் தனக்கெனச் சுதந்திரம் இல்லாததும், போகத்தில் கொள்ளையில்லான்- போகங்களில் பற்று இல்லாததும், மலத்தினோடும் பிறிவு இலன்- ஆணவமலத்தினோடும் பிரிவின்றி நிற்பதும், (மலத்தினோடும்) வியாபி- அம்மலத்தினோடு சமவியாபகமுடையதுமாயிருக்கும்.

சகலத்தின் சிறப்பு இயல்பு இது எனக் கூறுகின்றது

**உருவினைக் கொண்டு, போக போக்கியத்து உன்னல், செப்பல்,**
**வருசெயல் மருவிச், சத்தம் ஆதியாம் விடயம் தன்னில்**
**புரிவதும் செய்து இங்கு எல்லா யோனியும் புக்கு உழன்று**
**திரிதரும் சகல மான அவத்தையில் சீவன் சென்றே.** 229

(இதன் பொருள்):- சீவன்- மேற்கூறிய கேவலாவத்தையிலே நின்ற ஆன்மா, சகலமான அவத்தையிற் சென்று- சகலாவத்தையை அடைந்து, உருவினைக் கொண்டு- உடம்பைப் பற்றி, போக போக்கியத்து உன்னல் செப்பல் வருசெயல் மருவி- போகத்துக்குரிய பொருள்களை மனம் வாக்குக் காயங்களால் நினைத்தல் உரைத்தல் இயற்றல் ஆகிய வினைகளைப் பொருந்தி, சத்தம் ஆதியாம் விடயந் தன்னில் புரிவதும் செய்து- சத்தாதி விடயங்களை விரும்பி நுகர்ந்து, இங்கு எல்லா யோனியும் புக்கு உழன்று திரிதரும்- இங்கே எண்பத்துநான்கு நூறாயிர யோனி பேதங்களையும் எடுத்துச் சுழன்று திரியும்.

சுத்தத்தின் சிறப்பு இயல்பு இது எனக் கூறுகின்றது

**இருவினைச் செயல்கள் ஒப்பில், ஈசன்தன் சத்தி தோயக்**
**குருஅருள் பெற்று ஞான யோகத்தைக் குறுகி, முன்னைத்**
**திரிமலம் அறுத்துப், பண்டைச் சிற்றறிவு ஒழிந்து, ஞானம்**
**பெருகி நாயகன் தன்பாதம் பெறுவது சுத்தம் ஆமே.** 230



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்):- இருவினைச் செயல்கள் ஒப்பில்- மேற்கூறிய நல்வினை தீவினைகளாகிய இருவினைப் பயன்களிலும் சமபுத்தி வந்தவிடத்து, ஈசன் தன் சத்தி தோய- சிவசத்தி பதிதலால் குருவருள் பெற்று- ஞானகுருவின் உபதேசத்தைப் பெற்று, ஞானயோகத்தைக் குறுகி- ஞானபோகத்தை அடைந்து, முன்னைத் திரிமலம் அறுத்து- அநாதியான மும்மலங்களையும் நீக்கி, பண்டைச்சிற்றறிவு ஒழிந்து- பழைய ஆன்மபோதம் நீங்கி, ஞானம் பெருகி- வியாபக அறிவெய்தி, நாயகன் தன்பாதம் பெறுவது- முதல்வன் திருவடியைப் பெறுதல், சுத்தமாம்- சுத்தாவத்தையாம்.

## ஐந்தாம் சூத்திரம்

ஆன்மா தன்னைச் செலுத்தி உடனாய் நிற்கும் முதல்வனை அறியமாட்டாது எனக் சூத்திரப் பொருளைத் தொகுத்துக் கூறுகின்றது

**பொறி புலன் கரணம் எல்லாம் புருடனால் அறிந்து ஆன்மாவை**
**அறிதரா; அவையே போல ஆன்மாக்கள் அனைத்தும் எங்கும்**
**செறிதரும் சிவன்தனாலே அறிந்திடும்; சிவனைக் காணா;**
**அறிதரும் சிவனே எல்லாம் அறிந்தும் அறிவித்தும் நிற்பன்.** 231

(இதன் பொருள்):- பொறிபுலம் கரணம் எல்லாம்- ஐம்பொறிகளும் ஐம்புலன்களும் அந்தக்கரணங்களும்ஆகிய யாவும், புருடனால் அறிந்து- ஆன்மாவினது உபகாரத்தால் அறிந்தும், ஆன்மாவை அறிதரா- அவ்வாறு உபகரித்து நிற்கும் ஆன்மாவை அறியா, அவையே போல- அவ்விந்திரியங்கள் முதலியவற்றைப் போல, ஆன்மாக்கள் அனைத்தும்- ஆன்மாக்களெல்லாம், எங்கும் செறிதரும் சிவன்றனாலே அறிந்திடும்- எங்கும் வியாபித்து நிற்கும் முதல்வனது உபகாரத்தால் விடயங்களை அறியும். ஆயினும், சிவனைக்காணாத, அறிதரும் சிவனே- அறியச் செய்யும் முதல்வனே, எல்லாம் அறிந்து அறிவித்து நிற்பன்- எல்லாவற்றையும் அறிந்து ஆன்மாவிற்கு அறிவித்து உடனிற்பன்.

ஆன்மாக்களைச் செலுத்துதல் கன்மமே அன்றி முதல்வன் அல்லன் என்பவரை மறுத்து உரைக்கின்றது

**இறைவனே அறிவிப்பானேல் ஈண்டு அறிவு எவர்க்கும் ஒக்கும்**
**குறைவு அதிகங்கள் தத்தம் கன்மமேல் கோமான் வேண்டா;**
**முறைதரு செயற்குப் பாரும் முளரிகட்கு இரவியும் போல்**
**அறைதரு தத்தம் கன்மத்து அளவினுக்கு அனிப்பன் ஆதி.** 232

(இதன் பொருள்):- இறைவனே அறிவிப்பானேல்- முதல்வனே அறிவிப்பானாயின், ஈண்டு அறிவு எவர்க்கும் ஒக்கும்- இவ்விடத்து அறிவுகள் யாவர்க்கும் ஒரு தன்மையாயிருத்தல் வேண்டும், அங்ஙனமின்றி அவை ஏற்றத் தாழ்வுகளாய் நிகழ்தலின், குறைவு அதிகங்கள் தத்தம் கன்மமேல்- அவ்வேற்றத் தாழ்வுகள் அவரவர் கன்மத்துக்கீடாக நிகழ்வன என்னில், கோமான் வேண்டா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவித்தற்கு ஒரு முதல்வன் வேண்டுவதில்லை என முடியும். அப்படியன்று, முறைதரு செயற்குப் பாரும்– உழுதல் எருவிடல் விதைத்தல் நீர்பாய்ச்சல் காத்தல் என முறையே செய்யப்படும் செயல்களுக்கேற்ப பயனை விளைநிலம் கொடுக்குமாறு போலும், முளரிகட்கு இரவியும் போல்– பக்குவப்பட்ட தாமரை முகைகளை ஆதித்தன் அலரச்செய்தல் போலும், ஆதி– முதல்வனும், அறைதரு தத்தம் கன்மத்து அளவினுக்கு– சொல்லப்பட்ட அவரவர் கன்மத்துக்கு ஈடாக ஏற்றத்தாழ்வான அறிவுகளையும் மலபரிபாகமான ஆன்மாக்களுக்கு வியாபக அறிவையும், அளிப்பன்– கொடுப்பன்.

கன்மத்தோடு கூடிய ஆன்மா அறிவுடைப்பொருள் ஆதலின், ஆன்மாவே தன்னைச் செலுத்திக் கொள்ளும், இறைவன் வேண்டாம் என்பவரை மறுத்து உரைக்கின்றது

**அறிந்திடும் ஆன்மா, ஒன்றை ஒன்றினால் அறித லானும்,**
**அறிந்தவை மறத்த லானும் அறிவிக்க அறித லானும்**
**அறிந்திடும் தன்னையும் தான் அறியாமை யானும், தானே**
**அறிந்திடும் அறிவன் அன்றாம்; அறிவிக்க அறிவன் அன்றே.** 233

(இதன் பொருள்):– அறிந்திடும் ஆன்மா– மேற்கூறியவாறு கன்மத்துக்கேற்ப அறியும் ஆன்மாவானது, ஒன்றை ஒன்றினால் அறிதலானும்– ஒவ்வொரு விடயத்தையும் ஒவ்வொரு இந்திரியத்தால் அறிதலாலும், அறிந்தவை மறத்தலாலும் அங்ஙனம் அறிந்தவற்றை மீள மறத்தலாலும், அறிவிக்க அறிதலானும்– ஒருவன் அறிவிக்க அறிதலாலும் அறிந்திடும் தன்னையும் தான் அறியாமையானும்– இங்ஙனம் அறிகின்ற தன்னையும் தான் அறியாமையாலும், தானே அறிந்திடும் அறிவன் அன்றாம்– தானே அறிந்திடும் சுதந்திர அறிவுடையதன்று, அறிவிக்க அறிவன் அன்றே– சிவன் அறிவிக்க அறியும் இயல்புடையதாம்.

மாயேயம் ஆகிய தத்துவங்களே ஆன்மாவிற்கு அறிவதை உண்டுபண்ணும், இறைவன் வேண்டாம் என்பவரை மறுத்து உரைக்கின்றது

**கருவியால், பொருளால், காட்டால், காலத்தால், கருமம் தன்னால்,**
**உருவினால், அளவால், நூலால், ஒருவரால், உணர்த்த லானும்,**
**அருவனாய் உண்மை தன்னில் அறியாது நிற்ற லானும்,**
**ஒருவனே எல்லாம் தானும், உணர்த்துவன் அருளினாலே.** 234

(இதன் பொருள்):– கருவியால்– ஐம்பொறி முதலிய கருவிகளாலும், பொருளால்– சத்தாதி விடயங்களாலும், காட்டால்– சந்திர சூரியர் முதலிய விளக்குங் கருவிகளாலும், காலத்தால்– இறந்தகாலம் முதலிய முக்காலங்களாலும், கருமம் தன்னால்– புண்ணிய பாவச்செயல்களாலும், உருவினால்– காட்சிக்கமைந்த உடம்புகளாலும், அளவால்– அநுமானங்களாலும், நூலால்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகமங்களாலும், ஒருவரால்– வேறொருவராலும், உணர்த்தலாலும்– ஆன்மா சகல நிலையில் அறிவிக்கப்பட்டு அறிதலாலும் உண்மை தன்னில்– கருவிகளொன்றுமின்றியிருக்கும் கேவல நிலையில், அருவனாய் அறியாது நிற்றலாலும்– அருவப் பொருளாய் ஒன்றையும் அறியாது நிற்றலாலும், ஒருவனே– இவ்விரு நிலைகளையும் அறியவல்ல ஒப்பற்ற முதல்வனே, அருளினாலே– ஆன்மாக்கள் மேற்கொண்ட கருணையினாலே, எல்லாத்தானும் உணர்த்துவன்– மேற்கூறிய ஏதுக்கள் எல்லாவற்றையுங்கொண்டு அவ்வான்மாக்களுக்கு அறிவிப்பன்.

பிறர் அறிவிக்க வேண்டாது இறைவன் தானே ஆன்மாக்களின்பொருட்டு தூலம் சூக்குமம் அதிசூக்குமம் என்னும் மூவகையான ஐந்தொழிலைச் செய்வன் எனக் கூறுகின்றது

**கருவியும் பொருளும் காட்டும் காலமும் கருமம் தானும்**
**உருவமும் அளவு நூலும் ஒருவரும் உணர்த்தல் இன்றி**
**அருவனாய் உலகம் எல்லாம் அறிந்து அவை ஆக்கி வேறாய்**
**ஒருவனே உயிர்க்கு எல்லாம் உயிருமாய் உணர்த்தி நிற்பன்.** 235

(இதன் பொருள்):– ஒருவனே– ஒப்பற்ற முதல்வனே, கருவியும்– ஐம்பொறி முதலிய கருவிகளும், பொருளும்– சத்தாதி விடயங்களும், காட்டும்– சந்திர சூரியர் முதலிய விளக்குங்கருவிகளும், காலமும்– இறந்தகாலம் முதலிய முக்காலங்களும், கருமம் தானும்– புண்ணிய பாவச் செயல்களும், உருவமும்– சரீரங்களும், அளவும்– அநுமானங்களும், நூலும்– சாத்திரங்களும், ஒருவரும்– தனக்கு வேறாகிய ஒரு சேதனனும், உணர்த்தல் இன்றி– அறிவிக்க அறிதலின்றி அருவனாய்– சுதந்திரனாய், உலகம் எல்லாம் அறிந்து– உலகுயிர்கள் யாவையும் அறிந்து, அவை ஆக்கி– அவற்றைத் தோற்றுவித்து, வேறாய்– அத்தொழில்பற்றி விகாரப்படாது வேறாயும், உயர்கட்கு எல்லாம் உயிருமாய்– உயிர்களுக்கெல்லாம் உயிராயும், உணர்த்தி நிற்பன்– அறிவித்து நிற்பன்.

உயிருக்கு இறைவன் அறிவிப்பதால், அவன் உயிர்போலும் பந்தம் அடையான் எனக் கூறுகின்றது

**இறைவன்தன் சந்நிதிக் கண் உலகின்தன் சேட்டை என்னும்**
**மறைகளும் மறைந்தாய் மாயை மருவிடான் சிவன்; அவன்கண்**
**உறைதராது அசேதனத்தால் உருவுடை உயிர்கட்கு எல்லாம்**
**நிறைபரன் சந்நிதிக் கண் நீடு உணர்வு உதிக்கும் அன்றே.** 236

(இதன் பொருள்):– (மேற்கூறியவாறு மாயாகாரியங்களைக் கொண்டு உணர்த்துதல் பற்றி முதல்வன் விகாரியாவான் போலும் எனின்) இறைவன் தன் சந்நிதிக்கண்– அம்முதல்வனது சந்நிதானத்திலே, இலகின் தன் சேட்டை என்னும் மறைகளும் மறந்தாய்– சடமும் சித்துமாகிய பிரபஞ்சம் காரியப்படும் என்னும் வேத வாக்கியத்தையும் மறந்தாய், சிவன் மாயை மருவிடான்– முதல்வன் எங்கும் வியாபித்து நிற்றலால் மாயையைப் பொருந்தான், (மாயை) அசேதனத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன்கண் உறைதராது– அம்மாயை சடமாதலால் சித்தாகிய முதல்வனிடத்திலே பொருந்தியிராது, ஆதலால், உருவுடை உயர்கட்கு எல்லாம்– அம்மாயையின் காரியமான தனுகரணங்களைப் பொருந்திய எல்லா உயிர்களுக்கும், நிறைபரன் சந்நிதிக்கண்– எங்கும் வியாபித்து நிற்கும் முதல்வனது சந்நிதானத்திலே, நீடு உணர்வு உதிக்கும்– கன்மத்துக்கீடாக ஏகதேசவறிவின்றி வியாபக அறிவும் உண்டாகும்.

இறைவன் உயிர்க்கு அறிவிப்பதால், விகாரம் எய்தான் எனக் கூறுகின்றது

**உலகமே உருவம் ஆக, யோனிகள் உறுப்பது ஆக**
**இலகு பேர் இச்சா ஞானக் கிரியை உட்கரணம் ஆக**
**அலகு இலா உயிர்ப் புலன்கட்கு அறிவினை ஆக்கி, ஐந்து**
**நலமிகு தொழில் களோடும் நாடகம் நடிப்பன் நாதன்.** 237

(இதன் பொருள்):– நாதன்– முதல்வன், உலகமே உருவமாக– தனக்கு இருநூற்றிருபத்துநான்கு புவனமும் திருமேனியாகவும், யோநிகள் உறுப்பதாக– எண்பத்து நான்கு நூறாயிரம் யோநிபேதங்களும் அவயவங்களாகவும், இலகுபேர் இச்சாஞானக் கிரியைகள் உட்கரணமாக– மிக்க விளக்கமுடைய இச்சாஞானக் கிரியைகள் உட்கரணமாகவும் கொண்டு, அலகிலா உயிர்கட்கு எல்லாம் அறிவினை ஆக்கி– எண்ணிறந்த உயிர்களுக்கும் விடய அறிவை உண்டாக்கி, நலம்மிகு ஐந்து தொழில்களோடும்– நன்மை மிகுந்த அதிசூக்கும ஐந்தொழில்களையும் மேற்கொண்டு, நாடகம் நடிப்பன்– நாடகமாகச் செய்தருளுவன்.

இறைவன் உயிர்க்கு அறிவித்தலில், அதிசூக்கும ஐந்தொழிற்குப் பயன், ஏகதேச அறிவும், வியாபக அறிவும் நிகழ்ந்து, அவற்றால் போக மோட்சங்களை உயிர் அடைதல் ஆகும் எனக் கூறுகின்றது

**தெரிந்து கொண்டு ஒரோ ஒன்று ஆகச் சென்று, ஐந்து புலனும் பற்றிப்**
**புரிந்திடும் உணர்வினோடும் போகமும் கொடுத்து, யோனி**
**திரிந்திடும் அதுவும் செய்து, செய்தி கண்டு உயிர்கட்கு எல்லாம்**
**விரிந்திடும் அறிவும் காட்டி வீட்டையும் அளிப்பன் மேலோன்.** 238

(இதன் பொருள்):– தெரிந்துகொண்டு– மேற்கூறியவாறு உணர்த்த உணர்ந்து கொண்டு, ஒரோவொன்றாகச் சென்று– பஞ்சப்பொறிகள் ஒவ்வொன்றின் வழியாகச் சென்று, ஐந்து புலனும் பற்றிப் புரிந்திடும் உணர்வினோடு– சத்தாதி ஐந்து விடயங்களையும் விரும்பிப் பொருந்தித் தொழிற்படும் ஏகதேச அறிவோடு, போகமும் கொடுத்து– அவ்விடயங்களால் வரும் இன்ப துன்பங்களையும் கொடுத்து, யோநி திரிந்திடும் அதுவுஞ் செய்து– யோநி மாறிமாறிப் பிறந்திறந்து சுழலுதலுஞ் செய்து, செய்தி கண்டு– அவரவர் கன்மம் நோக்கி– உயிர்கட்கெல்லாம் விரிந்திடும் அறிவும் காட்டி– உயிர்களனைத்திற்கும் வியாபக அறிவையும் நிகழ்வித்து, வீட்டையும் அளிப்பன் மேலோன்– முத்தியையும் கொடுப்பன் முதல்வன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தொழிலால் இறைவனுக்கு யாதொரு பயனும் இல்லை என்றும், அருட்பெருக்கால் அவ்வாறு செய்வது இறைவனுக்கு இயல்பே ஆகும் என்றும் கூறுகின்றது

**அருளது சத்தி ஆகும் அரன் தனக்கு; அருளை இன்றித்**
**தெருள் சிவம் இல்லை, அந்தச் சிவம் இன்றிச் சத்தி இல்லை;**
**மருளினை அருளால் வாட்டி மன் உயிர்க்கு அளிப்பன்; கண்கட்கு**
**இருளினை ஒளியால் ஓட்டும் இரவியைப் போல ஈசன்.** 239

(இதன் பொருள்):- அருளது- அருள் எனப்படுவது, அரன் தனக்கு சத்தி ஆகும்- முதல்வனது சத்தியாம், அருளை இன்றித் தெருள் சிவம் இல்லை- அச்சத்தியினின்றும் பிரித்தறியப்படும் சிவம் இன்று, அந்தச் சிவம் இன்றிச் சத்தி இல்லை- அந்தச் சிவத்தினின்றும் வேறாகச் சத்தி என்னும் பொருளில்லை, ஈசன்- அச்சிவன், கண்கட்கு இருவினை ஒளியால் ஓட்டும் இரவியைப் போல- கண்களுக்கு மறைப்பைச் செய்யும் இருளைத் தனது கிரணத்தாலோட்டிப் பிரகாசத்தினைச் செய்கின்ற ஆதித்தன் போல, மன் உயிர்க்கு மருளினை அருளால் வாட்டி- நிலைபெற்ற உயிர்களுக்கு அறிவை மயக்கும் மலமயக்கத்தைத் தனது அருளாலே நீக்கி, அளிப்பன்- மேற் கூறியவாறு வீட்டையும் கொடுப்பன்.

## ஆறாம் சூத்திரம்

சிவம் அறியப்படும் பொருளாகவும், அறியப்படாத பொருளாகவும் இன்றிச் சித்துச் சத்தாய் நிற்கும் என சூத்திரப் பொருளைத் தொகுத்துக் கூறுகின்றது

**அறிவுறும் பொருளோ ஈசன் அறிவுறாதவனோ என்னில்,**
**அறிபொருள் அசித்து அசத்தாம்; அறியாதது இன்றாம்; எங்கும்**
**செறி சிவம் இரண்டும் இன்றிச் சித்தொடு சத்தாய் நிற்கும்;**
**நெறிதரு சத்தின் முன்னர் அசத்து எலாம் நின்றிடாவே.** 240

(இதன் பொருள்):- ஈசன் அறிவுறும் பொருளோ அறிவுறாதவனோ என்னின்- மேற்கூறிய சிவன் ஆன்மபோதத்தாற் சுட்டியறிப்படும் பொருளோ அன்றி ஒருவாற்றானும் அறியப்படாத பொருளோ என்னில், அறிபொருள் அசித்து அசத்தாம்- அறியப்படும் பொருள் சடமாய் அழிந்து போவனவாம், அறியாதது இன்றாம்- ஒருவாற்றானும் அறியப்படாத பொருள் இல் பொருளாம், எங்கும் செறிசிவம்- எங்கும் வியாபித்து உபகரிக்கும் சிவன், இரண்டும் இன்றி- சுட்டியறியப்படுதலும் ஒருவாற்றானும் அறியப்படாமையும் ஆகிய இரண்டு தன்மையுமின்றி, சித்தொடு சத்தாய் நிற்கும்- சித்துச் சத்தாகி அருளினாலறியப்படுவதாய் நிலைபெறும், நெறிதரு சத்தின் முன்னர் அசத்தெல்லாம் நின்றிடா- உயிர்களுக்குபகரித்துக் கதியுதவும் சிவத்தின் முன்னர் அசத்தாகிய ஒன்றும் நிலைபெற மாட்டா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறாகச் சுட்டி அறியப்படுவதால், அறியப்படும் பொருள் அனைத்தும் அசத்து எனக் கூறுகின்றது

**ஆவதாய் அழிவது ஆகி வருதலால், அறிவு தானும்**
**தாவலால் உலகு போகம் தனு கரணாதி ஆகி**
**மேவலால் மலங்கள் ஆகி, விரவலால் வேறும் ஆகி,**
**ஓவலால் அசத்தாம் சுட்டி உணர்பொருள் ஆன எல்லாம்.** 241

(இதன் பொருள்):- அறிவு ஆவதாய் அழிவதாகி வருதலால்- சுட்டியறியும் அறிவு தோற்றமும் நாசமும் உடையதாய் நிகழ்தலாலும், தானும் தாவலால்- அவ்வாறு நிகழுமறிவுந்தானே நிலைபேறின்றி ஒன்றைவிட்டொன்றைப் பற்றுதலாலும், சுட்டி உணர்பொருள் ஆன எல்லாம்- அத்தன்மையான ஆன்மவறிவாற் சுட்டியறியப்படுவதாகிய காரியப் பிரபஞ்சம் முற்றும், தனு கரணம் உலகு போகம் ஆதி ஆகி மேவலான்- தனு கரண புவன போகங்களாகிய வலவகையாய் வருதலாலும், மலங்களாகி விரவலான்- சகல நிலையில் மாயாமலங்களாகி ஆன்மாவோடு கலந்து நிற்றலாலும், வேறும் ஆகி ஓவலால்- சுத்த நிலையின் ஆன்மாவுக்கு அந்நியமாய் ஒழிதலாலும், அசித்தாம்- சடப்பொருளாம்.

மேலைச் செய்யுள்களில் அறிவின்மேல் வைத்து அறியப்படும் பொருள் அசத்து என்று கூறினமையால் இந்தச் செய்யுளில், பொருளின் மேல் வைத்து அறிதல் தன்மை பற்றி, அறியப்படும் பொருள் அசத்து எனக் கூறுகின்றது

**மண்தனில் வாழ்வும், வானத்து அரசு அயன் மாலார் வாழ்வும்,**
**எண்தரு பூதபேத யோனிகள் யாவும் எல்லாம்**
**கண்ட இந்திரமா சாலம் கனாக்கழுது இரதம் காட்டி**
**உண்டுபோல் இன்றாம் பண்பில் உலகினை அசத்தும் என்பர்.** 242

(இதன் பொருள்):- மண்தனில் வாழ்வும்- நிலவுலகத்து அரச வைபவத்தோடு வாழும் வாழ்வும், வானத்து அரசு அயன்மாலார் வாழ்வும் வானுலகத்து இந்திரன் அயன் முதலியோர் வாழ்வும், எண்தரு பூதபேத யோநிகள் யாவும் எல்லாம்- சொல்லப்பட்ட பூதபரிணாமமாகிய எண்பத்துநான்கு நூறாயிர யோநிபேதங்கள் அனைத்தும் ஆகிய இவை எல்லாம், கண்ட இந்திரமாசாலம் கனா கழுதிரதம் காட்டி- காணப்பட்ட இந்திரமாசாலமும் கனாக் காட்சியும் பேய்த்தேரும் போல, உண்டுபோல்- நெடுங்காலம் நிலைபெறுவன போலத் தோன்றி, இன்று ஆம் பண்பில்- விரையக்கெட்டு மறைந்து போம் இயல்புபற்றி, உலகினை அசத்தும் என்பர்- காரியப் பிரபஞ்சத்தை அசித்தென்று கூறுதலேயன்றி அசத்தென்றுங் கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாத பொருள் உண்டு எனக் கொள்வோம் என்பவர்க்கு, அப்பொருள் வினை செய்பவனால் அறியப்படாமையால் உண்டு என்றல் பொருந்தாது எனக் கூறுகின்றது

**உணராத பொருள் சத்து என்னில், ஒரு பயன் இல்லை தானும்**
**புணராது, நாமும் சென்று பொருந்துவது இன்றாம்; என்றும்**
**தணவாத கருமம் ஒன்றும் தருவதும் இல்லை; வானத்து**
**இணர்ஆர்பூந் தொடையும் யாமைக்கு எழும் மயிர்க் கயிறும் போலும்.** 243

(இதன் பொருள்):- உணராத பொருள்- ஒருவாற்றானுமறியப்படாத பொருள், சத்து என்னின்- உள்பொருளாதல் கூடுமே என்னில், ஒரு பயன் இல்லை- அதனால் ஆகும் பயனும் இல்லை, தானும் புணராது- அது தானாகவே ஒரு வகையாலும் எம்மைச் சேராது, நாமுஞ் சென்று பொருந்துவது இன்றாம்- நாமேனும் சென்று அதனைப் பொருந்துமாறுமில்லையாம், என்றும் தணவாத கருமம் ஒன்றும் தருவதும் இல்லை- அன்றியும் எக்காலத்தும் எம்மை விட்டுப்பிரியாது நின்று செய்யவேண்டிய செயலையும் அது எம் பொருட்டுச் செய்யுமாறும் இல்லையாம், ஆகையால், வானத்து இணரார் பூந்தொடையும் யாமைக்கு எழும் மயிர்க்கயிறும் போலும்- ஆகாயப் பூவினாலே தொடுத்த மாலையும் ஆமைமயிரினாலே திரித்த கயிறும் போலப் பயனுமிலதாய் அஃது இல்பொருளாகும்.

அறியப்படுவதும் அறியப்படாததும் ஆகிய பரம்பொருள், அநிர்வசனமும் அன்று, மனம் வாக்குகளுக்கு எட்டுவதும் அன்று எனக் கூறுகின்றது

**தத்துவம் சத்து அசத்துச் சதசத்தும் அன்று என்றால் என்?**
**உய்த்து உணர்ந்து உண்டோ இன்றோ என்றவர்க்கு உண்டு என்று ஓதில்,**
**வைத்திடும் சத்தே ஆகும்; மனத்தொடு வாக்கு இறந்த**
**சித்துரு அது அசித்தாம் மனத்தினால் தேர்வது எல்லாம்.** 244

(இதன் பொருள்):- தத்துவம்- பிரமப்பொருள், சத்து அசத்து சதசத்தும் அன்று என்றால் என்- உள்பொருளுமன்று இல்பொருளுமன்று உள்பொருளும் இல்பொருளும் ஆவதுமன்று என்று அநிர்வசனியமாகக் கூறிற் படும் இழுக்கென்னை எனின், உண்டோ இன்றோ என்றவர்க்கு- அப்படி அநிர்வசனமாய்க் கூறப்படும் பொருளொன்றுதான் உண்டோ இல்லையோ ஓதில்- ஆராய்ந்து பார்த்து (இல்லையெனில் முயல்கொம்பை ஒக்குமென்றஞ்சி) உண்டென்று கூறுவாயாகில், வைத்திடும் சத்தை ஆகும்- அந்தப் பிரமம் சொல்லப்பட்ட சத்துப் பொருளாகும் ஆயினும், மனத்தினால் தேர்வது எல்லாம் அசித்தாம்- மனத்தினாற் சுட்டியறியப்படுவன மனத்தோடு வாக்கிறந்த சித்துரு- அப்பிரமம் மனம் வாக்குக்களாலாய சுட்டறிவுக்கு எட்டாத சித்துப் பொருளாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபரம்பொருளை, அப்பரம்பொருளின் அருளினால், ஆன்மா பிரிவின்றி நின்று அறியும் எனக் கூறுகின்றது

**அறிபொருள் அசித்தாய் வேறாம் அறிவுறாப் பொருள் சத்து என்னில்,**
**அறிபவன் அறியான் ஆகில் அது இன்று, பயனும் இல்லை;**
**அறிபவன் அருளினாலே அன்னியம் ஆகக் காண்பன்**
**அறிபொருள் அறிவாய் வேறாய் அறிவு அருள்உருவாய் நிற்கும். 245**

(இதன் பொருள்):– அறிபொருள் அசித்தாய் வேறாம்– சுட்டி அறியப்படும் பொருள் சடமாய் சிவத்துக்கு அந்நியமாம் என்பது ஒக்கும், ஆயினும், அறிவுறாப் பொருள் சத்து என்னின்– ஒருவாற்றானுமறியப்படாத பொருள் சத்தாகிய சவமாயிருத்தல் கூடும் என்னில், அறிபவன் அறியான் ஆகில் அது இன்ற பயனும் இல்லை– அறிபவனாகிய ஆன்மா அறியானாகில் அச் சிவமும் இல்பொருளாய் அதனாற் பெறக்கடவதோர் பயனுமில்லையாய் முடியும். அப்படியன்று, அறிபவன் ஆன்மா திருவருட் சகாயத்தால் அச்சிவம் தனக்கு வேறற நிற்பதாகக் காண்பன். ஆதலால், அறிபொருள் அறிவாய் வேறாம்– அங்ஙனம் அறியப்படும் பொருளாகிய சிவம் அவ்வறிவேயாய் வேறுமாய், அறிவு அருள் உருவாய் நிற்கும்– அறிவைப் பயப்பிக்கும் ஞான வடிவாய் நிற்கும்.

யோக பாவனையால் இறைவனைக் காணக்கூடும் என்பவரை மறுத்து, ஷஅவன் அருளால் காண வேண்டும்; என்பதை வலியுறுத்துகின்றது

**பாவிப்பது என்னில் பாவம் பாவகம் கடக்கில் பாவம்**
**பாவிக்கும் அது நான் என்னில் பாவகம் பாவம் கெட்டுப்**
**பாவிப்பது என்னில் பாவம் பாவனை இறந்து நின்று**
**பாவிக்கப் படுவது ஆகும் பரம்பரன் அருளி னாலே. 246**

(இதன் பொருள்):– பாவிப்பது என்னின்– சிவம் மேற்கூறியவாறு அருளினாலே அறியப்படுதலன்றி மனம் முதலிய கருவிகளோடு கூடிச் செய்யும் பாவனையால் அறியப்படும் என்னில், பாவம்– அவ்வாறு கருவிகளால் அறியப்படுவன யாவுஞ் சடப்பொருளாதலால் அப்பாவனை பயனற்றதாம், பாவகம் கடக்கின் பாவம்– கருவிகளை நீங்கிநின்று செய்யும் பாவனையால் அறியப்படும் என்னில், அப்பொழுது கேவலம் வந்து மூடுமாதலால் அதுவும் பயனற்ற செயலாம், பாவிக்கும் அது நான் என்னிற் பாவகம்– பாவிக்கப்படும் அந்தப்பொருளே நான் என்று பாவனை செய்ய அறியப்படும் என்னில், அதுவும் போலிப் பாவனையாகிப் பயனற்ற செயலாம், பாவம் கெட்டுப் பாவிப்பது என்னின் பாவம்– ஒருவாற்றானும் பாவனையின்றிப் பாவித்தறியப்படும் என்னில் அப்பேது பாவனையேயின்றி அது அநிர்வசனியப்பாழாய்ப் பயனற்ற செயலேயாகும். ஆதலால் பரம்பரன்– அப்பரம்பொருள், பாவனை இறந்து நின்று– பாவனைகளைக் கடந்து நின்று, அருளினாலே பாவிக்கப்படுவதாகும்– தனது திருவருளாற் பாவிக்கப்படுவதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவமலம் ஆகிய குற்றம் நீங்கிய உயிரின் அறிவால், சிவனை அறியக்கூடும் என்னும் சிவசமவாதியை மறுத்து உரைக்கின்றது

**அன்னியம் இலாமையானும், அறிவினுள் நிற்ற லானும்,**
**உன்னிய எல்லாம் உள்நின்று உணர்த்துவன் ஆதலானும்,**
**"என்னது யான்" என்று ஓதும் இருஞ்செருக்கு அறுத்த லானும்,**
**தன்அறிவு அதனால் காணும் தகைமையன் அல்லன் ஈசன்.** 247

(இதன் பொருள்):- ஈசன்- முதல்வன், அந்நியம் இலாமையானும்- ஆன்மாவிற்கு வேறற நிற்றலாலும், அறிவினுள் நிற்றலாலும்- அறிவுக்கறிவாய் நிற்றலாலும், உள்நின்று உன்னிய எல்லாம் உணர்த்துவன் ஆதலானும்- அங்ஙனம் அறிவுக்கறிவாய் நின்று ஆன்மா நினைத்தவை எல்லாவற்றையும் அறிவிப்பனாதலாலும், என்னது யான் என்று ஓதும் இரும் செருக்கு அறுத்தலானும்- அவ்வாறறியும் ஆன்மாவைப் பொருந்திய, எனது யான் என்று சொல்லப்படும் பெரிய மயக்க உணர்வை முற்றாய் நீக்குதலாலும், தன் அறிவு அதனால் காணும் தகைமையன் அல்லன்- யான் எனது என்னுஞ் செருக்கோடு கூடியுள்ள ஆன்ம அறிவினால் அறியப்படுந் தன்மையுடையவனல்லன்.

பிரித்து அறிய முடியாத நிலையில் ஒன்று ஆதலும் வேறு ஆதலும், உடன் ஆதலும் உள என்பதற்கு ஏது கூறுகின்றது

**ஒன்றுஎனும் அதனால் ஒன்றுஎன்று உரைப்பது உண்டு ஆகையாலே,**
**நின்றனன் வேறாய்த் தன்னின் நீங்கிடா நிலைமை யாலே**
**பின்றிய உணர்வுக்கு எட்டாப் பெருமையன், அறிவின் உள்ளே**
**என்றும் நின்றிடுத லாலே, இவன் அவன் என்னல் ஆமே.** 248

(இதன் பொருள்):- ஒன்றெனும் அதனால்- சிவனும் ஆன்மாவும் ஒன்றென்று கூறுமிடத்து, ஒன்று என்று உரைப்பது உண்டு ஆகையாலே- அங்ஙனம் ஒன்றென்று கூறும் ஆன்மா வேறாய் உளதாதலின், வேறாய் நின்றனன்- சிவன் அவ்வான்மாவிற்கு வேறாய் நிற்பவனாம், தன்னின் நீங்கிடா நிலைமையாலே- ஆயினும், அச்சிவன் அவ்வான்மாவோடு பிரிப்பின்றி உடனாய் நிற்குந் தன்மையாலே, பின்றிய உணர்வுக்கு எட்டாப் பெருமையன்- வேறென்று பகுத்தறியும் அறிவுக்கு எட்டாது உடனிற்கும் மாட்சிமையுடையோனுமாம், அறிவினுள்ளே என்றும் நின்றிடுதலாலே- அறிவினுள் எக்காலத்தும் ஒன்றித்து நிற்றலாலே, இவன் அவன் என்னலாமே- ஆன்மாவே சிவன் என்னும்படி ஒன்றாயும் நிற்பவனுமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழாஞ் சூத்திரம்

பாசத்தைப் பதி அறியாது, பதியைப் பாசம் அறியாது எனக் கூறுகின்றது

**அனைத்தும் சத்து என்னில், ஒன்றை அறிந்திடாது; அசத்தால் என்னில்**
**முனைத்திடாது; அசத்துச் சத்தின் முன் இருள் இரவி முன் போல்**
**நினைப்பது இங்கு அசத்தே என்னில் சத்தின்முன் நிலாமை யானும்**
**தனைக்கொடு ஒன்று உணர்தலானும் தான் அசத்து உணராது அன்றே.** 249

(இதன் பொருள்):- அனைத்தும் சத்து என்னின்- அறியும் பொருள் யாவும் சத்தாம் என்று சொல்லின், ஒன்றை அறிந்திடா- சத்துப்பொருள் வியாபகமாயிருத்தலால் ஒன்றைப்பிரிந்து அறியப்படமாட்டாது, அசத்தால் என்னின்- அவ்வாறு அறிதல் அசத்தின் சேர்க்கையாலாம் என்னின், இருள் இரவி முன் போல்- இருள் ஆதித்தன் முன் நிற்கமாட்டாதவாறுபோல, அசத்துச் சத்தின்முன் முனைந்திடாது- அசத்தும் சத்தின்முன் முனைத்து நில்லாது, ஆதலால் சத்தே அசத்தை அறியும் என்பது பொருந்தாது, நினைப்பது இங்கு அசத்தே என்னில்- அறியும் பொருள் அசத்தேயாம் என்னில், சத்தின்முன் நிலாமையானும்- அசத்துச் சத்தின்முன் முனைத்து நில்லாதாதலாலும், தனைக்கொடு ஒன்று உணர்தலானும்- அசத்தாகிய கருவிகளைக் கொண்டு ஆன்மாவாகிய பிறிதொரு பொருளே அறிவதாதலாலும், தான் அசத்து உணராது- அசத்தே சத்தை அறியும் என்றலும் பொருந்தாது.

பதி பாசம் இரண்டினையும் ஆன்மா அறியும் எனவும், அவ்விரண்டையும் அறியும் முகத்தால் ஆன்மா தன்னை அறியும் எனவும் கூறுகின்றது

**சத்து அசத்து அறிவது ஆன்மாத் தான் சத்தும் அசத்தும் அன்று;**
**நித்தனாய்ச் சதசத்து ஆகி நின்றிடும் இரண்டன் பாலும்;**
**ஒத்துஉடன் உதித்து நில்லாது; உதியாதும் நின்றிடாது;**
**வைத்திடும் தோற்றம் நாற்றம் மலரினில் வருதல் போலும்.** 250

(இதன் பொருள்):- சத்து அசத்து அறிவது ஆன்மா- சத்து அசத்து என்னும் இரண்டினையும் அறிவது ஆன்மாவாம், தான் சத்தும் அசத்தும் அன்று- அவ்வான்மா சத்தாகிய சிவமும் அன்று, அசத்தாகிய பாசமும் அன்று, நித்தனாய்ச் சதசத்தாகி நின்றிடும் இரண்டன்பாலும்- அது நித்தியப் பொருளாய் சத்து அசத்து என்னும் இரண்டனிடத்தும் தனித்தனி கூடியவழிச் சத்தாயும் அசத்தாயுந் தோன்றி அதுவதுவாய் நின்று அறியுந் தன்மையதாம். ஒத்து உடன் உதித்தும் நில்லாது- அவ்விரண்டிற்கும் சமமாய் அவற்றோடு கூடி விளங்கித் தோன்றி நிற்பதுவுமன்று, உதியாதும் நின்றிடாது- விளங்கித் தோன்றாது சூனியமாய் நிற்பதும் அன்று. வைத்திடும் தோற்றம்- அது தோன்றி நிற்குந் தன்மை, நாற்றம் மலரினில் வருதல் போலும்- வாசனையானது பூவினிடத்தில் அடங்கித் தோன்றி நிற்றல் போலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதி சூக்குமசித்தும், பசு தூலசித்துமாய் நிற்பதால், பசுவைப் பாசம் பற்றும் என்றும், அந்தப் பற்று அநாதியே நிகழ்வது என்றும், அந்தப் பற்றே பதிபாசம் இரண்டினையும் பசு அறிவதற்குக் காரணம் என்றும், பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளுக்கு உவமையும் கூறுகின்றது

**சுத்த மெய்ஞ்ஞான மேனிச் சோதிபால் அசத்து அஞ்ஞானம்**
**ஒத்துஉறா குற்றம் எல்லாம் உற்றிடும் உயிரின் கண்ணே**
**சத்து உளபோதே வேறாம்; சதசத்தும் அசத்தும் எல்லாம்**
**வைத்திடும் அநாதி ஆக வாரிநீர் லவனம் போலும்.** 251

(இதன் பொருள்):– சுத்தமெய்ஞ் ஞான மேனிச் சோதிபால்– இயல்பாகவே பாசத்தினீங்கிய உண்மை ஞானமே திருமேனியாகவுடைய அருள் ஒளியாகிய சிவத்தினிடத்து, அசத்து அஞ்ஞானம் ஒத்துறா– அசத்தாகிய ஆணவமலவிருள் முனைத்து நில்லாது, ஆதின் குற்றம் எல்லாம் உயிரின் கண்ணே உற்றிடும்– ஆணவம் முதலிய பாசங்கள் அனைத்தும் உயிரினிடத்தே பொருந்தும், சத்து உளபோதே– சத்தாகிய சிவம் என்று உள்ளது அன்றே, வேறாம் சதசத்தும் அசத்தும் எல்லாம்– அச்சிவத்தின் வேறாயுள்ள சதசத்தாகிய உயிர்களும் அசத்தாகிய பாசங்களும் சேர்ந்து, வாரி நீர் லவணம் போலும்– கடல் நீர் உப்பு (என்னும் மூன்றனுள் கடலைப் பற்றாது நீரையே உப்புப் பற்றியிருத்தல்) போல, அநாதி ஆக வைத்திடும்– அநாதியே இரண்டும் ஒன்றையொன்று பற்றி நிற்கும். ஆதலால் உயிர் அநாதியே அசத்தின் வன்மையுள்ளது.

சிவம் சூக்கும சித்து ஆவதற்கும் சீவன் தூல சித்து ஆவதற்கும் காரணம், பற்றும் தன்மை இன்மையும், பற்றுந் தன்மை உண்மையுமே எனக் கூறுகின்றது

**அறிவிக்க அறிதலானும்; அழிவு இன்றி நிற்றலானும்**
**குறிபெற்ற சித்தும் சத்தும் கூறுவது உயிர்க்கு; ஈசன்**
**நெறி நித்த முத்த சுத்த சித்து என நிற்பன் அன்றே.**
**பிறிவிப்பன் மலங்கள் எல்லாம் பின் உயிர்க்கு அருளினாலே.** 252

(இதன் பொருள்):– அறிவிக்க அறிதலானும்– உயிர்கள் சிவன் அறிவிக்க அறிதலாலும், அழிவின்றி நிற்றலானும்– நித்தப் பொருள்களாய் இருத்தலாலும், குறிபெற்ற சித்தும் சத்தும் உயிருக்குக்கூறுவது– (மலத்தின் பற்றுக்கோடுடைய) தூல சித்துத் தன்மையும் தூலசத்துத் தன்மையும் அவ்வுயிர்களுக்கு உளவாகக் கூறப்படும். ஈசன் நெறி நித்தமுத்த சுத்த சித்தென நிற்பன்– முதல்வனோ உயிருக்கு அறிவுதந்து கதியிற் செலுத்துஞ் சத்தாய் மலமுத்தனாய் அதிசூக்குமசித்தாய் நிற்பன், மலங்கள் எல்லாம் பின் உயிர்க்கு அருளினாலே பிறிவிப்பன்– தூலப்படுத்தும் அம் மலங்களெல்லாவற்றையும் உயிர்கள் பக்குவமெய்தியவிடத்து, அவ்வுயிர்களினின்றும் தமது அருளினாலே நீக்குவன். ஆதலால் உயிர் சத்துச் சித்தின் வண்ணமாந் தன்மையுடையது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டாம் சூத்திரம்

இறைவன் குருவாகி வந்து உணர்த்துவன் என சூத்திரப் பொருளைத் தொகுத்துக் கூறுகின்றது

**மன்னவன்தன் மகன்வேடர் இடத்தே தங்கி**
**வளர்ந்தவனை அறியாது மயங்கி நிற்பப்**
**பின்அவனும் "என்மகன் நீ" என்று அவரின் பிரித்துப்**
**பெருமையொடும் தானாக்கிப் பேணுமாப்போல்**
**துன்னிய ஐம்புல வேடர் சுழலில்பட்டுத்**
**துணைவனையும் அறியாது. துயர் உறும் தொல் உயிரை**
**மன்னும் அருள் குருவாகி வந்து அவரின் நீக்கி**
**மலம் அகற்றித் தானாக்கி மலர் அடிக் கீழ் வைப்பன்.** 253

(இதன் பொருள்):- மன்னவன்தன் மகன்- அரசகுமாரன் ஒருவன், வேடரிடத்தே தங்கி வளர்ந்து- (இளமைப்பருவத்து மடமையால்) வேடரிடத்திலே அகப்பட்டு அவரோடு கூடி இழிதொழில் செய்து வளர்ந்து (பருவம் வந்தவிடத்து), அவனை அறியாது மயங்கி நிற்ப- தனது தந்தையாகிய அவ்வரசனையும் தன்னையும் அறியாது மயக்கமுற்று நிற்க, பின் அவனும் நீ என் மகன் என்று அவரின் பிரித்து- பின்பு அவ்வரசனும் நீ எனது மகன் என்று அறிவுறுத்தி அவ்வேடரினின்றும் அவனைப் பிரித்து, பெருமையோடும் தான் ஆக்கிப் பேணுமாபோல்- பெருந்தகைமையோடும் தானாம் வண்ணம் செய்து ஆதரித்தல்போல, துன்னிய ஐம்புல வேடர் சுழலில்பட்டு- அறியாமையினாலே நெருங்கிய ஐம்பொறிகளாகிய வேடரின் சுழற்சியிற் பட்டு விடயபோகங்களிலே அழுந்தியிருந்து, துணைவனையும் அறியாது துயர் உறும் தொல் உயிரை- தன்னையும் (பக்குவ காலத்துப் பேரின்ப அறிவு தரவந்த) தலைவனையும் அறியாது வருந்தும் அநாதி உயிரை, மன்னும் அருட்குருவாகி வந்து- முதல்வனும் நிலைபெற்ற அருளே திருமேனியாகக் குருவடிவங் கொண்டு எழுந்தருளிவந்து உபதேசித்து, அவரின் நீக்கி- அவ்வைம்பொறிகளினின்றும் நீக்கி, மலம் அகற்றி- மலங்களின் வலியைக் கெடுத்து, தான் ஆக்கி- தன் வண்ணமாக்கி, மலர் அடிக்கீழ் வைப்பன்- மலர் போலுந் திருவடிக் கீழ் வைத்து வாழ்விப்பன்.

உணர்த்தும் முறையில், தீக்கையால் உணர்துவன் ஆதலின், அந்தத் தீக்கை சாதார தீக்கை, நிராதார தீக்கை என இருவகைப்படும் எனவும்,சாதார தீக்கைக்கு உரியார் சகலரும், நிராதார தீக்கைக்கு உரியார் பிரளயாகலரும் விஞ்ஞானகலரும் எனவும் கூறுகின்றது

**உரைதரும் இப்பசு வர்க்கம் உணரில் மூன்றாம்;**
**உயரும் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர்**
**நிரையில் மலம், மலம் கன்மம், மலம் கன்மம் மாயை**
**நிற்கும் முதல் இருவர்க்கும் நிராதாரம் ஆகிக்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையில் அருட்பரன் துவிதா சந்நிதி பாதத்தால்
கழிப்பன் மலம் சகலர்க்குக் கன்ம ஒப்பில்
தரையில் ஆசான் மூர்த்தி ஆதாரம் ஆகித்
தரித்து ஒழிப்பன் மலம் சதுர்த்தா சத்திநிபாதத்தால். 254

(இதன் பொருள்):- உரைதரும் இப்பசுவர்க்கம்- மேற்கூறிப்போந்த இந்த உயிர் வர்க்கம், உணரின்- அராய்ந்தறியுமிடத்து, உயரும் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர்- மேலான விஞ்ஞானகலரும் பிரளயாகலரும் சகலுரும் என, மூன்றாம்- மூவகையாம், நிரையில் மலம், மலம் கன்மம், மலம் கன்மம் மாயை நிற்கும்- அம்மூவகை உயிர்களையும் முறையே ஆணவ மலமும் அதனோடு கன்ம மலமும் அவற்றோடு மாயாமலமும் பொருந்தியிருக்கும், முதல் இருவர்க்கும்- ஒரு மலமுடைய விஞ்ஞானகலரும் இரு மலமுடைய பிரளயாகலருமாகிய இருவகை உயிர்களுக்கும், கரை இல் அருள் பரன்- அளவிடுதற்கரிய கருணை வடிவாகிய முதல்வன், துவிதா சத்திநிபாதத்தால்- தீவிரம் தீவிரதரம் என்னும் இருவகைச் சத்திநிபாதம் நோக்கி, நிராதாரமாகி மலம் கழிப்பன்- வடிவம் முதலிய ஆதாரம் ஒன்றும் இன்றித் தானே உண்ணின்றும் முன்னின்றும் தீக்கை செய்து மலத்தை நீக்குவன், சகலர்க்கு- மும்மலமுடைய சகலருக்கு, கன்ம ஒப்பில்- இருவினையொப்பு வருமிடத்து, சதுர்த்தா சத்திநிபாதத்தால்- மந்ததர மந்தம் தீவிரம் தீவிரதரம் என்னும் நால்வகைச் சத்தி நிபாதம் நோக்கி, தரையில் ஆசான்மூர்த்தி ஆதாரமாகித் தரித்து- இப்பூமியின் கண் குருமூர்த்தியை இடமாகக் கொண்டு நின்று தீக்கை செய்து, மலம் ஒழிப்பன்- மலங்களை நீக்குவன்.

தீக்கையின் வகைகளைப் பற்றிக் கூறுகின்றது

பலவிதம் ஆசான், பாச மோசனம்தான் பண்ணும்
படி நயனத்து அருள் பரிசம் வாசகம் மானதமும்,
அலகில் சாத்திரம், யோகம், அவுத்தி ராதி,
அநேகம் உள; அவற்றின் அவுத்திரி இரண்டு திறனும்;
இலகுஞானம், கிரியை என ஞானம் மனத்தால்
இயற்றுவது கிரியை எழில் குண்டம் மண்டலாதி
நிலவுவித்துச் செய்தல், கிரியாவதிதான் இன்னும்
நிர்பீசம் சபீசம் என இரண்டு ஆகி நிகழும். 255

(இதன் பொருள்):- ஆசான் பாசம் மோசனம்தான் பண்ணும்படி- மேற்கூறிய குருமூர்த்தி மலத்தை ஒழிக்கும் முறைமை, பலவிதம்- பலவகையாம், நயனத்து அருள் பரிசம் வாசகம் மானதமும் அலக இல் சாத்திரம் யோகம் அவுத்திராதி அநேகம் உள- அவை திருவருணோக்கம் பரிசம் வாக்குப் பாவனை மிக்க நூலுபதேசம் யோகம் ஔத்திரி முதலியவாக அநேகமுள, அவற்றின் அவுத்திரி- அவற்றின் அவுத்திரி தீக்கையாவது, இலகு ஞானம் கிரியை என இரண்டு திறனாம்- விளங்குகின்ற ஞானவதி கிரியாவதி என இருவகைப்படும், ஞானம் மனத்தால் கிரியை இயற்றுவது இவற்றுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானவதியானது (குண்டமண்டலாதிகளை மனத்தாற் கற்பித்துக்கொண்டு) அகத்தே ஆகுதி முதலிய கிரியை செய்வதாம், எழில் குண்டம் மண்டலம் ஆதி நிலவுவித்துச் செய்தல்– அழகினையுடைய குண்டமண்டலாதிகளைப் புறத்தே அமைத்துக்கொண்டு விதிப்படி புறம்பே ஆகுதி முதலிய கிரியை செய்வது, கிரியாவதி– கிரியாவதியாம், தான் இங்ஙனம் இருவகைப்பட்ட ஔத்திரிதான், இன்னும் நீர்ப்பீசம் சபீசம் என இரண்டாகி நிகழும்– மேலும் நிர்ப்பீசதீக்கை சபீச தீக்கை என இரண்டாக விளங்கும்.

நிர்பீச தீட்சைக்கு அதிகாரி இவர் எனவும், அந்தத் தீக்கையின் இலக்கணம் இது எனவும், அது நிரதிகார தீக்கை எனச் சொல்லப்பட்டு, சமயம், விசேடம், நிருவாணம் என மூன்றாய் விளங்கும் எனவும் கூறுகின்றது

பாலரொடு வாலீசர், விருத்தர், பணிமொழியார்,
பலபோகத்தவர், வியாதிப் பட்டவர்க்குப் பண்ணும்
சீலம் அது நிர்ப்பீசம், சமயா சாரம்;
திகழ்சுத்தி சமயி புத்திரர்க்கு நித்தத்து
ஏலும் அதிகாரத்தை இயற்றித் தானும்
எழில் நிரதி காரை என நின்று இரண்டாய் விளங்கும்;
சாலநிகழ் தேக பாதத்தினோடு
சத்திய நிர்வாணம் எனச் சாற்றுங் காலே. 256

(இதன் பொருள்):– பாலரொடு வாலீசர் விருத்தர் பனிமொழியார் பலயோகத்தவர் வியாதிப்பட்டவர்க்குப் பண்ணும் சீலம் அது– பாலரும், வாலிபரும் முதியோரும் மெல்லிய வசனத்தையுடைய மாதரும் பலபோகத்தினையுடையவரும் நோயினையுடையவரும் ஆகிய இவர்களுக்குச் செய்யும் முறையான தீக்கை, நிர்ப்பீசம்– நிர்ப்பீசம் எனப்படும் சமயாசாரம், திகழ்சுத்தி– இம்முறையில், ஆசாரியன் சமயாசார கன்மங்களை ஆகுதியார் பண்ணும் சுத்தி, சமயி புத்திரர்க்கு நித்தத்து ஏலும் அதிகாரத்தை இயற்றி– சமயிக்கும் (சாமானிய விசேடமாகிய இருதிறத்துப்) புத்திரர்க்கும் நித்திய கன்ம மாத்திரையின் இயல்வதாகிய அதிகாரத்தைக் கொடுத்தலால், எழில் நிரதிகாரையென நின்று– இந்த நிர்ப்பீசதீக்கை (நித்தியம் நைமித்திகம் காமியம் ஆகிய மூன்றற்கும் அதிகாரம் உதவாமையால்) நிரதிகாரை எனப்பட்டு, சாற்றுங்கால்– மேலுஞ் சொல்லுமிடத்து, சாலநிகழ் தேக பாதத்தினோடு சத்திய நிர்வாணமென இரண்டாய் விளங்கும்– மிக்கு நிகழ்கின்ற தேகமுடிவில் முத்தியைப் பயக்கும் சத்தியோ திருவாணம் எனவும் உடனே முத்தியைப் பயக்கும் அசத்தியோ நருவாணம் எனவும் இருவகையாய் அறியப்படும்.

மேலும் தீக்கை வகைகளைப் பற்றிக் கூறுகின்றது

ஓதி உணர்ந்து ஒழுக்கநெறி இழுக்கா நல்ல
உத்தமர்க்குச் செய்வது, உயர்பீசம், இவர் தம்மை
நீதியினால் நித்திய நைமித்திக காமியத்தில்
நிறுத்தி; நிரம்பு அதிகாரம் நிகழ்த்துவதும் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதக ஆசிரியரும் ஆக்கி, வீடு
தருவிக்கும் உலோக சிவ தருமிணி என்று இரண்டாம்
ஆதலினால், அதிகாரையாம் சமயம், விசேடம்,
நிருவாணம், அபிடேகம் இவற்று அடங்கும் அன்றே. 257

(இதன் பொருள்):- ஓதி உணர்ந்து- சிவாகமங்களை ஓதி அவற்றின் பொருளை அறிந்து, ஒழுக்கநெறி இழுக்கா- அவற்றிலே விதிக்கப்பட்ட அறங்களின் வழி வாழுவாதொழுகும், நல்ல உத்தமர்க்குச் செய்வது- விசேடித்த உத்தமர்களுக்குச் செய்யும் தீக்கை, உயர்பீசம்- மேலான சுபீசதீக்கையாம், இவர் தம்மை நீதியினால் நித்திய நைமித்திக காமியத்தின் நிறுத்தி- இத்தீக்கை தம்மைப் பெற்றவரை முறைப்படி நித்திய நைமித்திக காமிய கன்மங்களிலே நிற்கச்செய்து, நிரம்பு அதிகாரம் நிகழ்த்துவதும் செய்து- அக் கன்மங்களின் முழு அதிகாரமும் கொடுத்து, சாதக ஆசாரியரும் ஆக்கி- சாதகரும் ஆசாரியருமாகச் செய்து, வீடுதரும் உலோக சிவதருமினி யென்று இரண்டாம்- முத்தியைப் பயப்பிக்கும் உலோக தருமினியும் சிவதருமினியும் என இருவகைப்படும். ஆதலினான் அதிகாரையாம்- கன்மங்களெல்லா வற்றையும் பண்ணுமதிகாரங்கொடுத்தல் பற்றி, இது சாதிகாரதீக்கை எனப்படும். சமயம் விசேடம் நிருவாணம் அபிடேகம் இவற்றுளடங்கும்- சபீசமான சமயம் விசேடம் நிருவாணம் அபிடேகம் என்னும் தீக்கைவகைகள் இவ்விரு வகைத் தீக்கைகளுள்ளும் அடங்குவனவாம்.

தீக்கை செய்யும் ஆசிரியன் சிவம் எனவும், செய்யும் விதம் ஆகிய அத்துவ சுத்தி இவ்வாறு எனவும் கூறுகின்றது

அழிவு இலாக் கிரியையினால் ஆதல் சத்தி மத்தால்
ஆதல் அத்துவா சுத்தி பண்ணி, மலம் அகற்றி
ஒழிவிலாச் சிவம் பிரகாசித்தற்கு ஞானம்
உதிப்பித்து உற்பவம் துடைப்பன் அரன் ஒரு மூவர்க்கும்
வழுவிலா வழி ஆறாம், மந்திரங்கள், பதங்கள்,
வன்னங்கள், புவனங்கள், தத்துவங்கள், கலைகள்
கழிவிலாது உரைத்த முறை ஒன்றின் ஒன்று வியாத்தி
கருதுகலை சத்தியின்கண் சத்தி சிவன் கண்ணும். 258

(இதன் பொருள்):- அரன்- முதல்வன், குருமூர்த்தியை அதிட்டித்து நின்று அழிவிலாக் கிரியையினான் ஆதல்- கெடுதலில்லாத ஞானவதி கிரியாவதி என்னும் கிரியாதீக்கையினாலாவது, சத்திமத்தான் ஆதல்- சாம்பி என்னும் ஞானதீக்கையினாலாவது, ஒருமூவர்க்கும்- அவ்வத் தீக்கைகளுக்குரியோர் மூவர்க்கும், அத்துவா சுத்திபண்ணி- அறுவகை அத்துவாக்களையுஞ் சுத்திபண்ணி, மலம் அகற்றி- மலங்களை ஒழித்து, ஒழிவிலாச் சிவம் பிரகாசித்தற்கு ஞானம் உதிப்பித்து- எங்கும் வியாபகமான சிவம் பிரகாசித்தற் பொருட்டு ஞானத்தை உதிக்கச் செய்து, உற்பவம் துடைப்பன்- பிறவியை ஒழிப்பன், வழுவு இலா வழி- இங்ஙனம் முதல்வன் சுத்தி செய்ய நின்ற குற்றமற்ற அத்துவாக்கள், மந்திரங்கள் பதங்கள் வன்னங்கள் புவனங்கள் தத்துவங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைகள்– மந்திரங்களும் பதங்களும் வன்னங்களும் புவனங்களும் தத்துவங்களும் கலைகளும் என, ஆறாம்– அறு வகைப்படும், உரைத்த முறை– மேற்கூறிய முறையிலே, கழிவு இலாது ஒன்றின் ஒன்று வியாத்தி– ஒழிவின்றி ஒன்றின் ஒன்று அடங்கும், கருது கலை சத்தியின்கண்– மேற்சொல்லிய கலையானது சத்தியினிடத்தும், சத்தி சிவன்கண்ணாம்– சிவத்தினிடத்தும் அடங்கும்.

நிவர்த்தி பிரதிட்டை என்னும் இரண்டு கலைகளுள் அடங்குவன ஆகிய ஏனைய அத்துவாக்களின் தொகை இவை எனக் கூறுகின்றது

**மந்திரங்கள் முதல் ஐந்தும், கலை ஐந்தின் வியாத்தி,**
**மருவு மந்திரம் இரண்டு பதங்கள் நால் ஏழ்,**
**அந்த நிலை எழுத்து ஒன்று, புவனம் நூற்று எட்டு**
**அவனி தத்துவம் ஒன்று நிவர்த்தி அயன் தெய்வம்**
**வந்திடும் மந்திரம் இரண்டு பதங்கள் மூவேழ்,**
**வன்னங்கள் நால் ஆறு, புரம் ஐம்பத்து ஆறு,**
**தந்திடும் தத்துவங்கள் இருபத்து மூன்று**
**தரு பிரதிட்டா கலை மால் அதிதெய்வம் தானாம்.** 259

(இதன் பொருள்):– மந்திரங்கள் முதல் ஐந்தும் கலை ஐந்தின் வியாத்தி– மந்திரங்கள் முதலாகத் தத்துவங்கள் ஈறாகவுள்ள அத்துவாக்கள் ஐந்தும் ஒன்றினொன்று வியாத்தியாய்ப் பஞ்சகலைகளுள் அடங்குமாறு எவ்வாறெனின், மந்திரம் இரண்டு– மந்திரம் இரண்டும், பதங்கள் நாலேழ்– பதம் இருபத்தெட்டும், அந்தநிலை எழுத்து ஒன்றும்– அத்தன்மையுடைய எழுத்து ஒன்றும், புவனம் நூற்றெட்டு– புவனங்கள் நூற்றெட்டும், அவனிதத்துவம் ஒன்று– பிருதிவிதத்துவம் ஒன்றும் ஆகிய இவைகள் ஒன்றினொன்றாக, நிவிர்த்தி மருவும்– நிவிர்த்தி கலையில் அடங்கும், அயன் தெய்வம்– அதற்குப் பிரமன் அதிதேவதையாம், வந்திடும்மந்திரம் இரண்டு– வாராநின்ற மந்திரம் இரண்டும், பதங்கள் மூவேழ்– பதம் இருபத்தொன்றும், வன்னங்கள் நாலாறு– எழுத்து இருபத்து நான்கும், புரம் ஐம்பத்தாறு– புவனம் ஐம்பத்தாறும், தந்திடும் தத்துவங்கள் இருபத்து மூன்று– இப்புவனங்களைத் தராநின்ற தத்துவம் இருபத்து மூன்றும் ஆகிய இவைகள், தரும் பிரதிட்டாகலை– இவற்றைத் தரும் பிரதிட்டாகலையில் அடங்கும், மால் அதிதெய்வம்தான் ஆம்– அதற்குத் திருமால் அதிதேவதையாம்.

வித்தை, சாந்தி எனும் இரண்டு கலைகளுள் அடங்குவன ஆகிய ஏனைய அத்துவாக்களின் தொகை இவை எனக் கூறுகின்றது

**வித்தையில் மந்திரம் இரண்டு, பதம் நால் ஐந்து,**
**விரவும் எழுத்து ஏழு, புரம் இருபத்து ஏழு,**
**தத்துவமும் ஓர் ஏழு, தங்கும் அதிதெய்வம்**
**தாவில் உருத்திரன் ஆகும், சாந்திதன்னில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தன மந்திரம் இரண்டு, பதங்கள் பதினொன்று
வன்னம் ஒரு மூன்று, புரம் பதினெட்டு ஆகும்,
உத்தமமாம் தத்துவமும் ஒரு மூன்று ஆகும்
உணரில் அதிதேவதையும் உயிர் ஈசன் ஆமே. 260

(இதன் பொருள்):- வித்தையின்- வித்தியாகலையினிடத்து, மந்திரம் இரண்டு- மந்திரங்கள் இரண்டும், பதம்நாலைந்து- பதங்கள் இருபதும், விரவும் எழுத்து ஏழு- பொருந்திய வன்னங்கள் ஏழும், புரம் இருபத்தேழு- புவனங்கள் இருபத்தேழும், தத்துவமும் ஓரேழு- தத்துவங்கள் ஏழும், தங்கும்- ஒன்றினொன்றாக அடங்கும், அதிதெய்வம் தாவு இல் உருத்திரன் ஆகும்- அதற்கு அதிதெய்வம் அழிவில்லாத உருத்திரன் ஆகும், சாந்தி தன்னின் வைத்தன- சாந்திகலையில் அடங்குவன, மந்திரம் இரண்டு- மந்திரங்கள் இரண்டும், பதங்கள் பதினொன்று- பதங்கள் பதினொன்றும், வன்னம் ஒரு மூன்று- அக்கரங்கள் மூன்றும், புரம் பதினெட்டு ஆகும்- புவனங்கள் பதினெட்டுமாகும், உத்தமமாம் தத்துவமும் ஒரு மூன்று ஆகும்- நன்மை தரும் தத்துவங்களும் மூன்றாகும், உணரில் அதிதேவதையும் உயர் ஈசனாம்- உணருமிடத்து அதற்கு அதிதெய்வமும் மகேசுவரனாம்.

சாந்தியாதீத கலையில் அடங்குவன ஆகிய ஏனைய அத்துவாக்களின் தொகை இவை எனக் கூறுகின்றது

சாந்தியா தீத கலை தன்னில் மந்திரங்கள்
தாம் மூன்று, பதம் ஒன்று, அக்கரங்கள் பதினாறு,
வாய்ந்த புரம் மூவைந்து, தத்துவங்கள் இரண்டு,
மருவும் அதிதேவதையும் மன்னு சதாசிவராம்,
ஏய்ந்தமுறை மந்திரங்கள் பதினொன்று பதங்கள்
எண்பத்து ஒன்று, அக்கரங்கள் ஐம்பத்து ஒன்று ஆகும்
ஆய்ந்தபுரம் இருநூற்றோடு இருபத்து நாலாம்;
அறிதரு தத்துவம் முப்பத்து ஆறு கலை ஐந்தே. 261

(இதன் பொருள்):- சாந்தியாதீதகலை தன்னின்- சாந்தியாதீத கலையிலே, மந்திரங்கள் தாம் மூன்று- மந்திரங்கள் மூன்றும், பதம் ஒன்று- பதம் ஒன்றும், அக்கரங்கள் பதினாறு- வன்னங்கள் பதினாறும், வாய்ந்தபுரம் மூவைந்து- சிறந்த புவனங்கள் பதினைந்தும், தத்துவங்கள் இரண்டு- தத்துவங்கள் இரண்டும், மருவும்- ஒன்றினொன்றாக அடங்கும், அதிதேவதையும் மன்னு சதாசிவராம்- அதற்கு அதிதேவதை நிலைபெற்ற சதாசிவனாம், ஏய்ந்த முறை- மேற்கூறியவாறு அடங்கிய வகையிலே, மந்திரங்கள் பதினொன்று- மந்திரங்கள் பதினொன்றாம், பதங்கள் எண்பத்தொன்று- பதங்கள் எண்பத்தொன்றாம், அக்கரங்கள் ஐம்பத்தொன்றாகும்- வன்னங்கள் ஐம்பத்தொன்றாம், ஆய்ந்தபுரம் இருநூற்றோடு இருபத்து நாலாம்- ஆராயப்பட்ட புவனங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருநூற்று இருபத்து நான்காம், அறிதரு தத்துவம் முப்பத்தாறு– அறியப்பட்ட தத்துவங்கள் முப்பத்தாறாம், கலை ஐந்து– கலைகள் ஐந்தாம்.

கன்மங்கள் யாவும் அத்துவா ஆகிய வழியால் வருவதால், அத்துவ சுத்தியே சிறந்தது என்றும், இந்த அத்துவ சுத்தியால் ஆணவம், கன்மம் ஆகிய ஏனைய மலங்களும் சுத்தி ஆகும் என்றும் கூறுகின்றது

**மூன்று திறத்து அணுக்கள் செய்யும் கன்மங்கட்கு**
**முன்னிலையாம் மூவிரண்டாம் அத்துவாவின்**
**ஆன்றமுறை அவை அருத்தி அறுத்துமலம் முதிர்வித்து,**
**அரும்பருவம் அடைதலுமே, ஆசான் ஆகித்**
**தோன்றி நுகராத வகை முன்செய் கன்மத்**
**துகள் அறுத்து அங்கு அத்துவாத் துடக்கு அறவே சோதித்து**
**ஏன்ற உடல் கன்மம், அனுபவத்தினால் அறுத்து இங்கு**
**இனிச்செய் கன்மம், மூலமலம் ஞானத்தால் இடிப்பன்.** 262

(இதன் பொருள்):– மூன்று திறத்து அணுக்கள் செயும் கன்மங்கட்கு– மனம் வாக்கு காயம் என்னும் முத்திறத்தால் உயிர்கள் செய்யுங் கன்மங்களுக்கு, முன்னிலையாம்– துணைக் காரணமாகிய, மூவிரண்டாம் அத்துவாவின் ஆன்றமுறை– ஆறு அத்துவாக்களிலே கட்டுப்பட்டுப் பக்குவமான முறையிலே, அவை அருத்தி அறுத்து– அவற்றைப் புசிப்பித்து தொலைத்து, மலம் முதிர்வித்து– ஆணவமலத்தை பரிபாகப்படுத்தி, அரும்பருவம் அடை தலுமே– அதனால் அவ்வுயிர்களுக்கு அரிய பக்குவமுண்டாக, ஆசானாகித் தோன்றி– முதல்வன் குருவடியாய் எழுந்தருளி வந்து, நுகராதவகை முன் செய்கன்மத்துகள் அறுத்து– சஞ்சித கன்மப்பயனை அநுபவியா வண்ணம் அக்கன்மக் குற்றத்தை ஒழித்து, அங்கு அத்துவாத்துடக்கு அறவே சோதித்து– அவ்விடத்து மயேயமாகிய அத்துவ பந்தம் முழுதும் சுத்தி செய்து, உடல் ஏன்ற கன்மம் அநுபவத்தினால் அறுத்து– உடலுக்கமைக்கப்பட்ட பிராரத்த கன்மத்தை அநுபவத்தினால் ஒழித்து, இங்கு இனிச்செய் கன்மம் மூலமலம்– இவ்விடத்து இனிமேற் செய்யும் ஆகாமிய வினையையும் அநாதி ஆணவ மலத்தையும், ஞானத்தால் இடிப்பன்– ஞானத்தினால் ஒழிப்பன்.

புறச்சமய் நெறிமுதல், படிமுறையால் மேம்பட்டு, சைவத்தை அடைந்தவர்க்கு அத்துவசுத்தி எய்துவதற்கு உரிய பருவம் உண்டாகும் என்றும், அந்தச் சைவம் ஆகிய தவநெறியும் சரியை முதல் நான்கு வகைப்படும் என்றும் கூறுகின்றது

**புறச்சமய நெறி நின்றும், அகச் சமயம் புக்கும்,**
**புகல் மிருதி வழி உழன்றும் புகலும் ஆச்சிரம**
**அறத்துறைகள் அவை அடைந்தும், அரும் தவங்கள் புரிந்தும்,**
**அருங்கலைகள் பல தெரிந்தும், ஆரணங்கள் படித்தும்,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும், வேத
சிரப்பொருளை மிகத் தெரிந்தும் சென்றால், சைவத்
திறத்து அடைவர், இதில் சரியை கிரியா யோகம்
செலுத்திய பின், ஞானத்தால் சிவனடியைச் சேர்வர். 263

(இதன் பொருள்):- புறச்சமயநெறி நின்றும்- புறச்சமயநூல் வழியே ஒழுகியும், அகச்சமயம் புக்கும்- அகச்சமய நூல் வழியே சென்றொழுகியும், புகல் மிருதிவழி உழன்றும்- மநு முதலியோராற் சொன்ன மிருதிநூல் வழியே சென்றொழுகியும், புகலும் ஆச்சிரம அறத்துறைகள் அவை அடைந்தும்- வேதங்களிற் கூறிய ஆச்சிரம தரும நெறிகளை மேற்கொண்டு அவற்றின் வழுவாதொழுகியும், அரும்தவங்கள் புரிந்தும்- அரிய தவங்களைச் செய்தும், அருங்கலைகள்பல தெரிந்தும்- அரிய கலைஞானங்கள் பலவற்றைப் பயின்றும், ஆரணங்கள் படித்தும்- வேதங்களை ஓதியும், சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும்- சிறப்பினையுடைய புராணங்களை ஆராய்ச்சி செய்தறிந்தும், வேதசிரப்பொருளை மிகத்தெளிந்தும்- வேதசிரசாகிய உபநிடதங்களின் பொருளை மிகவுமாராய்ந்து தெளிவுற்றும், சென்றால்- இங்ஙனம் சோபான முறையிலே மேலேறிச் சென்றால், சைவத்திறத்து அடைவர்- சிவாகம நெறியாகிய சைவசித்தாந்தத்தைத் தலைப்படுவர், இதில் சரியை கிரியை யோகம் செலுத்தியபின்- இச்சைவ சித்தாந்தத்தினும் சரியை கிரியை யோகம் யோகங்களைச் சாதித்து முற்றிய பின், ஞானத்தால் சிவன் அடியைச் சேர்வர்- ஞானத்தைப் பெற்று அதனாற் சிவபெருமானது திருவடிகளை அடைதலாகும் முத்திப்பேற்றைப் பெறுவர்.

புறச்சயம நெறி முதல் பல்வேறு வகைப்பட்ட நெறிகளின் பயன் ஆகிய முத்திகளின் இலக்கணமும், சைவ முத்தியின் இலக்கணமும் இவை எனக் கூறுகின்றது

இம்மையே ஈரெட்டு ஆண்டு எய்தி எழில் ஆரும்
ஏந்து இழையார் முத்தி என்றும், இரும் சுவர்க்கமுத்தி
அம்மையே என்றும், முத்தி ஐந்து கந்தம்
அறக் கெடுகை என்றும், அட்ட குணம் முத்தி என்றும்,
மெய்மையே பாடாணம் போல்கை முத்தி என்றும்,
விவேகம் முத்தி என்றும், தன்மெய்வடிவாம் சிவத்தைச்
செம்மையே பெறுகை முத்தி என்றும் செப்புவர்கள்;
சிவனடியைச் சேரும் முத்தி செப்புவது இங்குயாமே. 264

(இதன் பொருள்):- இம்மையே ஈரெட்டு ஆண்டு எய்தி எழில் ஆரும் ஏந்திழையார் முத்தியென்றும்- இம்மையிலே பதினாறு வயதுள்ள அழகு பொருந்திய அரிவையரைக் கூடி இன்புறுதலே முத்தி என்றும், அம்மையே இரும் சுவர்க்கம் முத்தி என்றும்- யாகம் முதலிய கன்மங்களைச் செய்து மறுமையிலே பெரிய சுவர்க்கம் முதலிய உலகங்களிலே போகங்களை நுகர்தலே முத்தி என்றும், ஐந்து கந்தம் அறக்கெடுகை முத்தி என்றும்- பஞ்சகந்தங்களும் முற்றக்கெடுதலே முத்தி என்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டகுணம் முத்தி என்றும்- எட்டுத் தீக்குணங்களும் அடங்க எட்டு நற்குணங்களையும் அடைதலே முத்தி என்றும், மெய்ம்மையே பாடாணம் போல்கை முத்தி என்றும்- மெய்ம்மையாகப் பாடானணம் போற் கிடப்பதே முத்தி என்றும், விவேகம் முத்தி என்றும்- விவேகஞானமே முத்தி என்றும், தன்மெய்வாம் சிவத்தைச் செம்மையே பெறுகை முத்தி என்றும்- தனது உண்மை வடிவாகிய சிவசொரூபத்தைச் செவ்விதாகப் பெறுதலே முத்தி என்றும், செப்புவர்கள்- ஏனைச் சமயிகள் கூறுவர், இங்கு யாம் செப்புவது- இங்கே யாம் கூறும் சைவசித்தாந்த முத்தியானது, சிவனடியைச்சேரும் முத்தி- பரமசிவனது திருவடியைச் சேரும் முத்தியாம்.

உண்மைச் சமயமும், அதன் இலக்கணமும், உண்மை நூலும் இவை எனக் கூறுகின்றது

**ஓது சமயங்கள் பொருள் உணரும் நூல்கள்**
**ஒன்றோடு ஒன்று ஒவ்வாமல் உள; பலவும் இவற்றுள்**
**யாது சமயம் பொருள் நூல் யாது இங்கு என்னின்**
**இது ஆகும் அது அல்லது எனும் பிணக்கு அது இன்றி**
**நீதியினாலிவை எல்லாம் ஓர் இடத்தே காண**
**நின்றது யாது ஒரு சமயம் அது சமயம் பொருள் நூல்**
**ஆதலினால் இவை எல்லாம், அருமறை ஆகமத்தே**
**அடங்கியிடும் இவை இரண்டும் அரன் அடிக்கீழ்.** 265

(இதன் பொருள்):- ஓது சமயங்கள்- சொல்லப்பட்ட சமயங்களும, பொருள் உணரும் நூல்கள்- அச்சமயப் பொருள்களை உணர்த்தும் நூல்களும், ஒன்றோடு ஒன்று ஒவ்வாமல் உள பலவும்- ஒன்றோடொன்று மாறுபட்டனவாகவும் பலவாகவும் இருத்தலினால், இவற்றுள் சமயம் யாது பொருள் நூல் யாது இங்கு என்னில்- இவற்றுள் முதன்மையான சமயம் யாது, அச்சமயப் பொருளை உணர்த்தும் நூல் யாது, என்று இங்கே கேட்கின், இது ஆகும் அது அல்லது எனும் பிணக்கது இன்றி- இது பொருத்தமுடையது, அது பொருத்தமுடையதன்று என்னும் தருக்கவாதமின்றி, நீதியினான் இவையெல்லாம் ஓர் இடத்தே காண நின்றது யாதொருசமயம்- முறைமையால் இச்சயமங்களும் இவற்றால் உணர்த்தப்படும் பொருள்களுமாகிய அனைத்தும் தனித்தனி ஒவ்வோர் இடத்தேயமைய அவற்றை ஒருங்கு சேர்த்துக் காண நின்றது எச்சமயமோ, அது சமயம் பொருள் நூல் ஆதலினால்- அதுவே முதன்மையான சமயமும், அச்சமயப் பொருளை உணர்த்தும் நூலே முன்மையான நூலுமாகவிருத்தலே முறையாம். இவையெல்லாம் அருமறை ஆகமத்தே அடங்கியிடும்- இச்சமயங்களும் அவற்றின் பொருள்களுமெல்லாம் அரிய வேதாகமங்களிலே அடங்குதல் காணக்கிடந்தது. அவை இரண்டும் அரன் அடிக்கீழ் அடங்கும்- அவ்வேதாகமங்கள் இரண்டும் முதல்வன் திருவடியிலே அடங்குதலும் அறியக்கிடந்தது, (ஆதலால், அச்சிவனடியை அடைவிக்கும் சைவ சமயமே உண்மைச் சமயமும், அச்சமயப் பொருள்களை விளக்கும் வேதாகமங்களே உண்மை நூல்களுமாம்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை நூல்கள் ஆகிய வேதாகமங்களே முதல் நூல் எனவும், ஏனைய நூல்கள் எல்லாம் வழிநூல் சார்பு நூல்களாய் முதல் நூலில் அடங்கும் எனவும் கூறுகின்றது

**அருமறை ஆகமம் முதல்நூல்; அனைத்தும் உரைக்கையினால்,**
**அளப்பு அரிதாம்; அப்பொருளை அரன் அருளால் அணுக்கள்**
**தருவர்கள்; பின் தனித்தனியே தாம் அறிந்த அளவில்**
**தர்க்கமொடு உத்தரங்களினால் சமயம் சாதித்து,**
**மிருதி, புராணம், கலைகள் மற்றும் எல்லாம்**
**மெய்ந்நூலின் வழி புடையாம்; அங்கம் வேதாங்கம்**
**சுருதி சிவாகமம் ஒழியச் சொல்லுவது ஒன்று இல்லை;**
**சொல்லுவார் தமக்கு அறையோ சொல் ஒணாதே. 266**

(இதன் பொருள்):- அரு மறை ஆகமம்- ஓதி உணர்தர்க்கரிய வேதாகமங்கள், அனைத்தும் உரைக்கையினான்- எல்லாப் பொருள்களின் இயல்பும் கூறுகையினால், முதல் நூல்- முதனூல் எனப்படும், அளப்பரிதாம் அப்பொருளை- அளவிடற்கரிய அப்பொருளை, அரன் அருளால்- முதல்வன் பக்குவநோக்கி அளித்த அருளினாலே, அணுக்கள் பின் தனித்தனியே தாம் அறிந்த அளவில்- உயிர்கள் பிற்காலத்தே தனித்தனியாகத் தத்தம் அறிவளவுக்கேற்ப, தர்க்கமொடு உத்தரங்களினால்- தர்க்க முறையோடு வினா விடைகளினால், சமயம் சாதித்துத் தருவார்கள்- தத்தம் சமயத்தை உறுதிப்படுத்தி நூல் செய்தனர், மிருதி புராணம் கலைகள் மற்றும் எல்லாம்- மிருதி புராணம் கலைகளும் உபாகமம் முதலிய ஏனை நூல்களும் ஆகிய யாவும், மெய்ந்நூலின் வழி- உண்மை நூலாகிய வேதாகமங்களின் வழியே செய்யப்பட்ட வழிநூலாகும், அங்கம் வேதாங்கம் புடையாம்- ஆகமங்களும் வேதாகமங்களும் சார்பு நூலாம், சிவாகமம் ஒழியச் சொல்லுவது சுருதி ஒன்று இல்லை- சிவாகமங்களிற் கூறியவற்றையன்றிப் புதிதாக ஒரு பொருளை எடுத்துரைக்கும் ஒரு நூல் வேறில்லை. சொல்லுவார் தமக்கு அறையோ சொல்லொணாதே- உண்டென்று சொல்லுவாருக்கு உத்தரமுஞ் சொல்ல இயலாது.

வேதம் பொது நூல் எனவும் ஆகமம் சிறப்பு நூல் எனவும் சித்தாந்தம் எனவும் கூறுகின்றது

**வேதநூல் சைவநூல் என்று இரண்டே நூல்கள்,**
**வேறுரைக்கும் நூல், இவற்றின் விரிந்த நூல்கள்,**
**ஆதிநூல், அநாதி அமலன் தரும் நூல் இரண்டும்**
**ஆரண நூல் பொது, சைவம் அரும் சிறப்பு நூலாம்;**
**நீதியினால் உலகர்க்கும் சத்திநிபாதர்க்கும்**
**நிகழ்த்தியது நீள்மறையின் ஒழிபொருள் வேதாந்தத்**
**தீதுஇல் பொருள் கொண்டு உரைக்கும் நூல் சைவம் பிறநூல்**
**திகழ் பூர்வம்; சிவாகமங்கள் சித்தாந்தம் ஆகும். 267**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(இதன் பொருள்):- வேதநூல் சைவநூல் என்று நூல்கள் இரண்டே- வேதம் சிவாகமம் என்று நூல்கள் இரண்டேயாம், வேறு உரைக்கும் நூல் இவற்றின் விரிந்த நூல்கள்- வேறு உண்டெனக் கூறப்படும் நூல்கள் இவை இரண்டினின்றும் விரிந்த நூல்களாம், அநாதி அமலன் தருநூல் இரண்டும் ஆதிநூல்- அநாதிமுத்த சிவனாலே தரப்பட்ட வேதாகமங்கள் இரண்டும் முதனூல்களாம், அவ்வாறாயினும் ஆரணநூல் பொது சைவம் அருஞ்சிறப்பு நூலாம்- வேதம் பொது நூலாகும் ஆகமம் அரிய சிறப்பு நூலாகும், நிதியினால் உலகர்க்கும் சத்திநிபாதர்க்கும் நிகழ்த்தியது- இவை முறையே உலகத்தவர்க்கும் சத்திநிபாதமுடையோருக்குமாகச் செய்யப்பட்டன. நீள் மறையின் ஒழிபொருள்- விரிந்த வேதத்திற் கூறாதொழிந்த பொருளையும், வேதாந்தத் தீது இல்பொருள்- வேதமுடியாகிய உபநிடதத்தின் சாரமாயுள்ள குற்றமற்ற பொருள்களையும், கொண்டு வேறொடுத்துக்கொண்டு உரைக்கும் நூல் சைவம்- இனிது விளக்கும் நூல் சிவாகமம் ஆதலால், பிறநூல் திகழ்பூர்வம்- இவ்வாகமத்துக்கு மாறாக வேத வேதாந்தப் பொருளைச் சொல்லும் ஏனைய நூல்களெல்லாம் விளங்குகின்ற பூருவபக்க நூல்களும், சிவாகமங்கள் சித்தாந்தம் ஆகும்- சிவாகமங்கள் சித்தாந்த நூல்களுமாம்.**

சித்தாந்த நெறியில் நிற்போருக்கு அந்தப் பிறப்பிலேயே சிவபெருமான் முத்திதந்து அருள்வன் எனக் கூறுகின்றது

**சித்தாந்தத்தே சிவன்தன் திருக்கடைக்கண் சேர்த்திச்**
**செனனம் ஒன்றிலே, சீவன் முத்தர் ஆக**
**வைத்து ஆண்டு மலம் கழுவி, ஞானவாரி**
**மடுத்து, ஆனந்தம் பொழிந்து, வரும் பிறப்பை அறுத்து**
**முத்தாந்தப் பாதமலர்க்கீழ் வைப்பன் என்று**
**மொழிந்திடவும், உலகர் எல்லாம் மூர்க்கர் ஆகிப்,**
**பித்தாந்தப் பெரும் பிதற்றுப் பிதற்றிப் பாவப்**
**பெருங்குழியில் வீழ்ந்திடுவர்; இது என்ன பிராந்தி!** 268

(இதன் பொருள்):- சித்தாந்தத்தே- மேற்கூறிய சிவாகமங்ளிலே, சிவன் தன் திருக்கடைக்கண் சேர்த்து- சிவபெருமான் குருவடிவாய் எழுந்தருளிப் பக்குவ ஆன்மாக்களுக்குத் தனது திருநோக்கமாகிய தீக்கைசெய்து, இச் செநநம் ஒன்றிலே சீவன்முத்தராக வைத்து- இப்பிறப்பிற்றானே சீவன் முத்தராகச் செய்து, ஆண்டு- தடுத்தாட்கொண்டு, மலம் கழுவி- மும்மல அழுக்கை நீக்கி, ஞானவாரிமடுத்து- ஞானசாகரத்திலே மூழ்குவித்து, ஆநந்தம் பொழிந்து- சிவாநந்தம் மேலிடச் செய்து, வரும் பிறப்பை அறுத்து- மேல்வரும் பிறவியை ஒழித்து, முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்பன் என்று மொழிந்திடவும்- முத்திமுடியாகிய திருவடி மலர்க்கீழ் வைப்பன் என்று சொல்லியிருக்கவும், உலகர் எல்லாம் மூர்க்கர் ஆகி- உலகத்தாரனைவரும் இதனை அறியமாட்டாத அறிவிலிகளாய், பித்தாந்தப் பெரும் பிதற்றுப் பிதற்றி- பித்தமுடியாகிய பெரிய மயக்க வார்த்தைகளைப் பேசி, பாவப் பெருங்குழியில் வீழ்ந்திடுவர்- பிறப்பாகிய பெரிய குழியில் வீழ்வர், இது என்ன பிராந்தி- இது என்ன மயக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றுணர்வு முதலிய குணங்களை உடைய சிவபெருமான், ஒரு பிறவியிலேயே முத்தியை தரமுடியும் எனவும், அந்தக் குணங்கள் சிவபிரானிடத்து உள என்பதற்கு ஏதுக்கள் இவை எனவும் கூறுகின்றன

**இறைவன் ஆவான் ஞானம் எல்லாம், எல்லா**
**தன்மை அனுக்கிரகம் எல்லாம் இயல்புடையான் இயம்பும்,**
**மறைகள், ஆகமங்களினால் அறிவு எல்லாம் தோற்கும்;**
**மரபின்வழி வருவோர்க்கும், வாராதோற்கும்,**
**முறைமையினால் இன்பத் துன்பம் கொடுத்தலாலே,**
**முதன்மை எல்லாம் அறிந்தும் முயங்கு இரண்டு போகத்**
**திறம் அதனால் வினை அறுக்கும் செய்தியாலே**
**சேரும் அனுக்கிரகம் எலாம் காணுதும் நாம் சிவற்கே.** 269

(இதன் பொருள்):- இறைவன் ஆவான்- முழுமுதற் கடவுள் எனப்படுவன், எல்லா ஞானம், எல்லாமுதன்மை, எல்லா அநுக்கிரகம்- முற்றறிவு, முடிவிலாற்றல் பேரருள் என்னும் இலக்கணங்களை, இயல்பு உடையான்- இயல்பாகவே உடையனாதல் வேண்டும். சிவற்கே- சிவனுக்கே, இயம்பு மறைகள் ஆகமங்களினால்- அவனாலருளிய வேதசிவாகமப் பெருமையினால், எல்லா அறிவும் தோற்றும்- முற்றறிவு காணப்படும், மரபின் வழிவருவோர்க்கும் வராதோர்க்கும்- அவ்வேதாகமங்களின் வழியே ஒழுகுவோர்க்கும் ஒழுகாதோர்க்கும், முறைமையினால் இன்பம் துன்பம் கொடுத்தலாலே- அவ்வவர் ஒழுக்கமுறைப்படி இன்பத்தையும் துன்பத்தையும் கொடுத்தல் பற்றி, எல்லா முதன்மை நாம் அறிந்தும்- முடிவிலாற்றலுடைமை நாம் அறியக் கிடந்தது, முயங்கு இரண்டு போகத் திறமதனால் வினையறுக்குஞ் செய்தியாலே- அவ்வாறு பொருந்திய இன்ப துன்பங்களாகிய இருவகை அனுபவங்களால் அவற்றிற்குக் காரணமாகிய இருவினைப் பந்தத்தை நீக்கும் ஏதுவினால், சேரும் எல்லா அநுக்கிரகமும் நாம் காணுதும்- நிறைந்த பேரருளுடைமையும் நாம் காணக்கிடந்தது. ஆகையால் சிவனே முழுமுதல்வனெனப்பட்டு முத்தியளிப்பவனுமாம்.

சைவநெறி ஆகிய முத்திநெறி சரியை முதலிய நான்கு பேதப்படும் என்றும், அவற்றின் பயன் பதமுத்தி பரமுத்தி என இருவகைப்படும் என்றும் கூறுகின்றது

**சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்திர மார்க்கம்,**
**தாதமார்க்கம், என்றும் சங்கரனை அடையும்**
**நன்மார்க்கம் நால்; அவைதாம் ஞானயோக**
**நற்கிரியா சரியை என நவிற்றுவதும் செய்வர்,**
**சன்மார்க்க முத்திகள் சாலோக்கிய சாமீப்பிய**
**சாரூப்பிய சாயுச்சியம் என்று சதுர்விதமாம்;**
**முன்மார்க்க ஞானத்தால் எய்தும் முத்தி**
**முடிவு என்பர்: மூன்றினுக்கும் முத்தி பதம் என்பர்.** 270



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(இதன் பொருள்):- சங்கரனை அடையும் நன்மார்க்கம்- சிவபெருமானது திருவடிகளைச் சேர்தற்குரிய நல்ல நெறிகள், சன்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்திரமார்க்கம் தாதமார்க்கம் என்றும் நாலு- சன்மார்க்கம் என்றும் சகமார்க்கம் என்றும் சற்புத்திரமார்க்கம் என்றும் தாதமார்க்கம் என்றும் நான்கு வகைப்படும். அவைதாம் ஞான போக நற்கிரியா சரியை என நவிற்றுவதும் செய்வர்- அவற்றையே ஞானபாதம் யோகபாதம் நல்ல கிரியாபாதம் சரியாபாதம் என்றுஞ் சொல்லுவர். சன்மார்க்க முத்திகள்- தாதமார்க்கம் முதலியன நன்னெறிகட்குரிய முத்திகள். சாலோக்கிய, சாமீப்பிய, சாரூப்பிய சாயுச்சியம் ஏன்று சதுர்விதமாம்- முறையே சிவசாலோக சாமீப சாரூப சாயுச்சியம் என நான்கு வகைப்படும். முன்மார்க்க ஞானத்தால் எய்தும் முத்தி- இவற்றுள் முதன்மையான ஞானபாதத்தால் அடையும் சிவசாயுச்சிய முத்தியை, முடிவு என்பர்- பரமுத்தி எனக் கூறுவர். மூன்றினுக்கும் முத்திபதம் என்பர்- ஏனைய மூன்றினுக்குமுரிய முத்தியை அபரமுத்தி என்று கூறுவர்.**

தாச நெறி ஆகிய சரியையின் இலக்கணமும் அதன் பயனும் இவை எனக் கூறுகின்றது

**தாத மார்க்கம் சாற்றில் சங்கரன்தன் கோயில்**
**தலம் அலகிட்டு, இலகுதிரு மெழுக்கும் சாத்திப்,**
**போதுகளும் கொய்து, பூந்தார் மாலைகண்ணி,**
**புனிதற்குப் பல சமைத்துப், புகழ்ந்து பாடித்**
**தீதில் திருவிளக்கு இட்டுத் திருநந்த வனமும்**
**செய்து, திருவேடம் கண்டால், "அடியேன் செய்வது**
**யாது? பணியீர்;" என்று பணிந்து அவர்தம் பணியும்**
**இயற்றுவது; இச்சரியை செய்வோர் ஈசன் உலகு இருப்பர்.** 271

(இதன் பொருள்):- தாதமார்க்கம் சாற்றில்- மேற்கூறிய நான்கனுள்ளே தாதமார்க்மாகிய சிவசரியையைச் சொல்லுமிடத்து, சங்கரன் தன் கோயில் தலம் அலகு இட்டு- சிவபெருமானுடைய திருக்கோயிலிலே திருவலகிட்டு, இலகு திருமெழுக்குஞ்சாத்தி- விளங்குகின்ற திருமெழுக்கும் இட்டு, போதுகளும் கொய்து- பூக்களும் எடுத்து, பூந்தார் மாலை கண்ணி பல புனிதர்க்குச் சமைத்து- மலரினாற் தார் மாலை கண்ணி முதலிய தொடையல்கள் பலவற்றையும் சிவபெருமானுக்குச் சாத்துமாறு அமைத்து, புழ்ந்து பாடி- அவருடைய கீர்த்தியினை வாயார வாழ்த்தி, தீது இல் திருவிளக்கு இட்டு- குற்றமற்ற பிரகாசம் பொருந்திய விளக்குகளையும் ஏற்றி, திருநந்தவனமும் செய்து- அழகிய நந்தவனங்களும் வைத்து, திருவேடம் கண்டால்- சிவனடியார் திருவேடத்தைக் காணுமிடத்து, அடியேன் செய்வது யாதுபணிப்பீர் என்று பணிந்து- அடியேன் செய்யத்தக்க குற்றேவல் யாது அதனை அருளவேண்டும் என்று வணங்கி, அவர்தம் பணியும் இயற்றுவது- அவர் அருளிச் செய்யும் பணிவிடையும் செய்வதாம், இச்சரியை செய்வோர் ஈசன் உலகு இருப்பர்- இச்சிவசரியையினை அனுட்டிப்போர் சிவலோகத்திலிருப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திர நெறி ஆகிய கிரியையின் இலக்கணமும் அதன் பயனும் இவை எனக் கூறுகின்றது

**புத்திர மார்க்கம் புகலில், புதிய விரைப்போது**
**புகை, ஒளி, மஞ்சனம், அமுது முதல் கொண்டு ஐந்து**
**சுத்தி செய்து, ஆசனம், மூர்த்தி, மூர்த்திமான் ஆம்**
**சோதியையும் பாவித்து, ஆவாகித்துச் சுத்த**
**பத்தியினால் அருச்சித்துப் பரவிப் போற்றிப்**
**பரிவினொடும் எரியில் வரும் காரியமும் பண்ணி,**
**நித்தலும் அக்கிரியையினை இயற்றுவோர்கள்**
**நின்மலன்தன் அருகு இருப்பர் நினையும் காலே.** 272

(இதன் பொருள்):- புத்திரமார்க்கம் புகலின்- புத்திரமார்க்கமாகிய சிவகிரியா பாதத்தைச் சொல்லுமிடத்து, புதிய விரைப்போது புகை ஒளி மஞ்சனம் அமுது முதல்கொண்டு- புதிய வாசனையுடைய மலர்கள் தூபம் தீபம் திருமஞ்சனம் திருவமுது முதலிய உபகரணங்களை அமைத்துக் கொண்டு, ஐந்துசுத்தி செய்து- பூதசுத்தி முதலிய பஞ்சசுத்திகளுஞ் செய்து, ஆசனம் மூர்த்தி மூர்த்திமானாம் சோதியையும் பாவித்து ஆவாகித்து, சுத்தபத்தியினால் அருச்சித்துப் பரவிப் போற்றி- மெய்யன்போடு அருச்சனை செய்து, துதித்து வழிபட்டு, பரிவினோடும் எரியில் வருகாரியமும் பண்ணி- விருப்போடு அக்கினி காரியமுஞ் செய்து முடித்தலாம், நித்தலும் இக்கிரியையினை இயற்றுவோர்கள்- நாடோறும் இக்கிரியையை அனுட்டிப்போர், நினையுங்கால்- ஆராயுமிடத்து, நின்மலன்தன் அருகிருப்பர்- சிவனது சமீபத்திலிருப்பதாகிய சாமீப பதத்தை அடைவர்.

தோழநெறி ஆகிய யோகத்தின் இலக்கணமும் அதன் பயனும் இவை எனக் கூறுகின்றது

**சகமார்க்கம் புலன் ஒடுக்கித் தடுத்து வளிஇரண்டும்**
**சலிப்பு அற்று, முச்சதுரம் முதல் ஆதாரங்கள்**
**அகமார்க்கம் அறிந்து, அவற்றின் அரும் பொருள்கள் உணர்ந்து, அங்கு**
**அணைந்து போய், மேல் ஏறி அலர் மது மண்டலத்தின்**
**முக மார்க்க அமுது, உடலம் முட்டத் தேக்கி,**
**முழுச் சோதி நினைந்து இருத்தல் முதலாக வினைகள்**
**உக மார்க்க அட்டாங்க யோகம் முற்றும்**
**உழத்தல், உழந்தவர் சிவன்தன் உருவத்தைப் பெறுவர்.** 273

(இதன் பொருள்):- சகமார்க்கம்- யோக பாதமாகிய தோழநெறி, புலனொடுக்கி- ஐம்பொறிகளை ஒடுக்கி, வளி இரண்டும் தடுத்து- உச்சுவாசம் நிச்சுவாசம் இரண்டினையும் அடக்கி, சலிப்பற்று- மனம் சலனப்படாது ஒருவழி நிறுத்தி, முச்சதுரம் முதல் ஆதாரங்கள் அகமார்க்கம் அறிந்து-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கோணம் முதலிய வடிவினவாகிய மூலதாரம் முதலிய ஆறாதாரங்களின் உள் வழிகளை அறிந்து, அவற்றின் அரும்பொருள்கள் உணர்ந்து– அவ்வாறாதாரங்களிலுள்ள பத்மதளம் அக்கரங்கள் அதிதேவதைகளாகிய அரிய பொருள்களையும் அறிந்து, அங்கு அணைந்துபோய்– மூலாதாரந் தொடங்கி அவ்வவ்விடங்களிலே பொருந்தித் தியானித்து, மேல் ஏறி– அவ்வாறாதாரங்களுக்கும் மேலே சென்று, மதிமண்டலத்தின் அலர்முகம் அமுது ஆர்க்க– சந்திர மண்டலத்தின் கண்ணுள்ள பிரமரந்திர கமலத்தினது மலர்ந்த முகையானது அமிர்தத்தை ஊட்ட, உடலம் முட்டத் தேக்கி– அதனைத் தேகம் முழுவதும் நிரப்பி, முழுச்சோதி நினைந்திருத்தல் முதலாக– பூரணப் பிரகாசத்தைத் தியானித்துச் சமாதிகூடுதல் பிரதானங்கமாக, வினைகள் உகமார்க்க அட்டாங்க யோகம் முற்றும் உழத்தல்– வினைகள் கெடுதற்குரிய வழியாகிய அட்டாங்க யோகத்தை முற்றும் அநுட்டித்தலாம், உழந்தவர் சிவன் தன் உருவத்தைப் பெறுவர்– இங்ஙனம் அநுட்டித்தோர் சிவனது சாரூபத்தைப் பெறுவர்.

சன்மார்க்கம் ஆகிய ஞானத்தின் இலக்கணமும் அதன் பயணம் இவை எனக் கூறுகின்றது

**சன்மார்க்கம், சகலகலை புராண வேத**
**சாத்திரங்கள் சமயங்கள் தாம் பலவும் உணர்ந்து**
**பன்மார்க்கப் பொருள் பலவும் கீழாக மேலாம்**
**பதி பசு பாசம் தெரித்துப் பரமசிவனைக் காட்டும்;**
**நன்மார்க்க ஞானத்தை நாடி, ஞான**
**நேயமொடு ஞாதிருவும் நாடா வண்ணம்,**
**பின்மார்க்கச் சிவன் உடனும் பெற்று ஞானப்**
**பெருமை உடையோர் சிவனைப் பெறுவர் தானே.** 274

(இதன் பொருள்):– சன்மார்க்கம்– ஞானபாதமாகிய சன்மார்க்கமாவது, சகல கலை புராணவேத சாத்திரங்கள் சமயங்கள் தாம் பலவும் உணர்ந்து– எல்லாக் கலைஞானங்களும் புராணங்களும் வேதங்களும் சாத்திரங்களும் சமய நூல்களும் ஆகிய பலவற்றையும் ஆராய்ந்தறிந்து, பல்மார்க்கப் பொருள் பலவுங்கீழாக– பல சமயங்களிலும் கூறப்படும் பொருளியல்புகள் சித்தாந்தமல்லவாக, மேலாம் பதி பசு பாசந்தெரிந்துப் பரசினைக் காட்டும் நன்மார்க்க ஞானத்தை நாடி– மேலான பதி பசு பாசம் என்னும் முப்பொருளையும் சித்தாந்தமாகத் தெரிவித்துப் பரமசிவனைத் தெளிவாய்க் காட்டும் நல்லநெறியாகிய சிவாகம ஞானத்தைத் தெளிந்தறிந்து, ஞானம் ஞேயமொடு ஞாதிருவும் நாடாவண்ணம்– அறிவாகிய அவ்வருளையும், அறியப்படுவதாகிய சிவத்தையும், அறிபவனாகிய தன்னையும் பகுத்தறிதலின்றி, பின்மார்க்கம் சிவனுடனாம்பெற்றி– அத்துவிதமாகிய பிணிப்பு முறையில் சிவத்துடன் கலந்து நிற்றலாம், ஞானப்பெருமையுடையோர்– இந்த ஞான நெறியைச் சாதித்தநுபவமடைந்த பெரியோர், சிவனைப் பெறுவர்– சிவ சாயுச்சியமாகிய பரமுத்தியைப் பெறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானத்தால் வழிபடுவது ஆகிய ஞான யாகமே முத்தியைத் தரும் எனவும், கன்மம் முதலிய நான்கு யாகங்களும் போகத்தைத் தரும் எனவும் கூறுகின்றது

**ஞான நூல்தனை ஓதல், ஓதுவித்தல்**
**நற்பொருளைக் கேட்பித்தல், தான்கேட்டல், நன்றா**
**ஈனம் இலாப் பொருள் அதனைச் சிந்தித்தல் ஐந்தும்**
**இறைவன் அடி அடைவிக்கும் எழில்ஞானபூசை**
**ஊனம் இலாக் கன்மங்கள், தபம், செபங்கள், தியானம்**
**ஒன்றுக்கு ஒன்று உயரும்; இவை ஊட்டுவது போகம்;**
**ஆனவையால் மேலான ஞானத்தால் அரனை**
**அர்ச்சிப்பர், வீடுஎய்த அறிந்தோர் எல்லாம்.** 275

(இதன் பொருள்):– ஞானநூல்தனை ஓதல் ஓதுவித்தல்– சிவாகமங்கள் முதலிய ஞான நூல்களைத் தான் படித்தலும் பிறருக்குப் படிப்பித்தலும், நற் பொருளைத் தான் கேட்டல் கேட்பித்தல்– அவற்றிலே கூறப்பட்ட சிறந்த பொருள்களைத் தான் ஞானாசாரியரிடமாகக் கேட்டலும் பக்குவருக்கு உரைத்தலும், நன்றா ஈனம் இலாப்பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்– செவ்விதாகக் குற்றமற்ற அப்பொருள்களைச் சிந்தித்தலும் ஆகிய ஐந்தும், இறைவன் அடி அடைவிக்கும் எழில் ஞானபூசை– முதல்வனது திருவடியைச் சேர்விக்கும் மேலான ஞானபூசையாம், ஊனம் இலாக்கன்மங்கள் தபம் செபங்கள் தியானம்– குற்றமற்ற கன்மயாகம் தவயாகம் செபயாகம் தியானயாகம் என்னும் இவை, ஒன்றுக்கு ஒன்று உயரும்– ஒன்றுக்கொன்று ஏற்றமாம், இவை ஊட்டுவது போகம் ஆனமையான்– இவை தருவன போகங்களாதலின், அறிந்தோர் எல்லாம்– அறிவுடையோர் யாவரும், வீடு எய்த– முத்தியடைதற்கு, மேலான ஞானத்தால் அரனை அருச்சிப்பர்– மேலான ஞானவேள்வியினாலே சிவபிரானைப் பூசிப்பர்.

உண்மை ஞானம் நான்கு வகைப்படும் எனவும் ஞானத்திற்கு வராமல் ஓதல் முதலியவற்றில் நின்று சரீரம் நீங்கினவர் கதி இது எனவும் கூறுகின்றது

**கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை**
**கிளத்தல்என ஈர்இரண்டாம்; கிளக்கில் ஞானம்**
**வீட்டை அடைந்திடுவர்; நிட்டை மேவினோர்கள்**
**மேவாது தப்பினவர் மேலாய பதங்கட்கு**
**ஈட்டிய புண்ணிய நாதர் ஆகி இன்பம்**
**இனிது நுகர்ந்து அரன் அருளால், இந்தப் பார்மேல்**
**நாட்டிய நல் குலத்தினில் வந்து அவதரித்துக் குருவால்**
**ஞான நிட்டை அடைந்து அடைவர் நாதன் தாளே.** 276

(இதன் பொருள்):– கிளக்கில் ஞானம்– மேலும் விரித்துக் கூறுமிடத்து ஞானமாவது, கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை கிளத்தில் என ஈரிரண்டாம்– கேட்டலும், கேட்ட பொருளைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தித்தலும், சிந்தித்து அப்பொருளின் உண்மையைத் தெரிந்து அறிதலும், தெளிந்தவாறே நிட்டை கூடுதலும் என நான்கு விதமாம், நிட்டை மேவினோர்கள் வீட்டை அடைந்திடுவர்– இம்முறையே வந்து நிட்டை எய்தினோர் பரமுத்தி அடைவர், மேவாது தப்பினவர்– நிட்டை பொருந்தாது ஞானநூல் ஓதல் முதலாகத் தெளிதலளவிலே தேகத்தை விட்டவர், மேலாயபதங்கட்கு– அவரவர் செய்த புண்ணியத்திற்கேற்ப அதிபராய் இருந்து, இன்பம் இனிது நுகர்ந்து– இன்பத்தினை நன்குபெற அநுபவித்து, அரன் அருளால்– முதல்வனது ஆணையால், இந்தப் பார் மேல் நாட்டிய நற்குலத்தினில் வந்து அவதரித்து– இந்தப் பூமியிலே உயர்ந்த நற்குலத்திலே வந்து பிறந்து, குருவான் ஞானநிட்டை அடைந்து– ஞானகுருவினது அருளால் ஞானநிட்டை கைவரப்பெற்று, நாதன் தாள் அடைவர்– முதல்வனது திருவடியை அடைவர்.

தானம் முதலியன பசு புண்ணியம் எனவும், சரியை முதலிய மூன்றும் பதி புண்ணியம் எனவும், இந்த மூன்றும் ஞானத்தைப் பயப்பித்துமுத்தியைத் தரும் எனவும் கூறுகின்றது

தானம், யாகம், தீர்த்தம், ஆச்சிரமம், தவங்கள்,
சாந்தி, விரதம், கன்ம யோகங்கள் சரித்தோர்,
ஈனம் இலா சுவர்க்கம் பெற்று இமைப்பளவில் மீள்வர்;
ஈசன் யோகக் கிரியா சரியையினில் நின்றோர்,
ஊனம் இலா முத்தி பதம் பெற்று, உலகம் எல்லாம்
ஒடுங்கும்போது, அரண்முன் நிலாது ஒழியில் உற்பவித்து
ஞானநெறி அடைந்து, அடைவர் சிவனை, அங்கு
நாதனே முன் நிற்கில், நணுகுவர் னல்தாளே. 277

(இதன் பொருள்):– தானம்– தானங்கள் கொடுத்தலும், யாகம்– யாகங்கள் செய்தலும், தீர்த்தம்– புண்ணிய தீர்த்தங்கள் ஆடலும், ஆச்சிரமம்– தத்தம் நிலைகளிலே தவறாது நிற்றலும், தவங்கள்– தவங்கள் புரிதலும், சாந்தி– பிராயச்சித்தங்கள் பண்ணலும், விரதம்– விரதங்கள் காத்தலும், கன்மயோகங்கள்– கருமயோகங்கள் இயற்றலும் ஆகிய இவைகளை, சரித்தோர்– அநுட்டித்தோர், ஈனம் இலாச் சுவர்க்கம் பெற்று– துன்பமின்றி இன்பம் மிக்குடைய சுவர்க்கவுலகினைப் பொருந்திப் போகங்களை நுகர்ந்து, இமைப்பு அளவின் மீள்வர்– கணப்பொழுதிலே மீண்டு வந்து பிறப்பர், ஈசன் யோகக் கிரியா சரியையினின் நின்றோர்– முதல்வன் விதித்த சரியை கிரியா யோகங்களை அநுட்டித்தோர், ஊனம் இலாபதம் முத்தி பெற்று– குற்றமில்லாத பத முத்தியை அடைந்து, உலகம் எல்லாம் ஒடுங்கும்போது– பிரபஞ்சம் முழுதுஞ் சங்காரப்படும் பொழுது, அரன்முன் நில்லாது ஒழியின்– முதல்வன் முன்னின்று அருளானாகில், உற்பவித்து ஞானநெறி அடைந்து சிவனை அடைவர்– மீண்டும் பிறந்து குருவருளால் ஞானமார்க்கத்தை அடைந்து முதல்வன் திருவடி சேர்வர், அங்கு நாதனே முன்நிற்கின்– அச்சங்கார காலத்தில் முதல்வன் முன்னின்று அருளுவானாயின், நற்றாள் நணுகுவர்– திருவடி அடைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானமும் சாமானியருக்குக் கொடாமல், சிவ ஞானிகளுக்குக் கொடுத்தால் முத்திக்கு ஏது ஆகும் எனக் கூறுகின்றது

சிவஞானச் செயல் உடையோர் கையில் தானம்
திலம் அளவே செய்திடினாம், நிலமலைபோல் திகழ்ந்த
பவமாயக் கடலில் அழுந்தாத வகை எடுத்துப்,
பரபோகம் துய்ப்பித்து பாசத்தை அறுக்கத்
தவம் ஆகும் பிறப்பு ஒன்றில் சாரப் பண்ணிச்
சரியை கிரியா யோகம் தன்னிலும் சாராமே
நவமாகும் தத்துவ ஞானத்தை நல்கி
நாதன் அடிக் கமலங்கள் நணுகுவிக்கும்தானே. 278

(இதன் பொருள்):- சிவஞானச் செயலுடையோர் கையின்- சிவஞானிகள் கையிலே, தானம் திலமளவே செய்திடினும்- ஒருவன் தானம் முதலிய அறங்களை எட்டுணையாயினும் இயற்றுவானாகில், நிலம் மலைபோல் திகழ்ந்து- அது நிலம் போலகன்றும் மலைபோல் ஓங்கியும் பெருகி, பவமாயக் கடலின் அழுந்தாத வகை எடுத்து- அவனைப் பிறப்பிறப்பாகிய பிரபஞ்சக் கடலின்கண்பட்டு அமிழ்ந்தா வண்ணம் கரையேற்றி, பரபோகந் துய்ப்பித்து- மேலான சிவசாலோகாதி பதங்களிலுளவாகிய இன்பங்களை அநுபவிக்கச் செய்து, பாசத்தை அறுக்க- மலங்களை நீக்குமாறு, தவம் ஆரும் பிறப்பு ஒன்றின் சாரப்பண்ணி- புண்ணியப் பிறப்பொன்றடையச் செய்து, சரியை கிரியா யோகம் தன்னிலும் சாராமே- சரியை கிரியை யோகங்களையும் சோபானமுறையில் அநுட்டிக்க வேண்டாதே, நவம் ஆரும் தத்துவஞானத்தை நல்கி- அதிசயிக்கத்தக்க தத்துவ உணர்ச்சியாகிய மெய்ஞ்ஞானத்தைக் கொடுத்து, நாதன் அடிக்கமலங்கள் நுணுகுவிக்கும்- முதல்வனது சீபாத தாமரை களையடைவிக்கும்.

வீடு பேற்றிற்குச் சிறந்த சாதனம் ஞானமே அன்றிப் பிறிது இல்லை எனக் கூறுகின்றது

"ஞானத்தால் வீடு" என்றே நான்மறைகள் புராணம்
நல்ல ஆகமம் சொல்ல, அல்லவாம் என்னும்
ஊனத்தார் என் கடவர்? அஞ்ஞானத்தால்
உறுவதுதான் பந்தம்; உயர்மெய்ஞ்ஞானம்தான்
ஆனத்தால் அதுபோவது, அலர்கதிர்முன் இருள்போல்
அஞ்ஞானம் விடப், பந்தம் அறும் முத்தி ஆகும்;
ஈனத்தார் ஞானங்கள் அல்லா ஞானம்,
இறைவன் அடி ஞானமே ஞானம் என்பர். 279

(இதன் பொருள்):- ஞானத்தால் வீடு என்றே- (மேற்கூறியவாறு எல்லா நெறிகளும் புண்ணியச் செயல்களும் மெய்ஞ்ஞானத்தை உதிப்பிக்க) மெய்ஞ்ஞானம் ஒன்றினாலே தான் வீடு பேறாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று, நான்மறைகள் புராணம் நல்ல ஆகமம் சொல்ல– நான்கு வேதங்களும் பதினெண் புராணங்களும் இருபத்தெட்டுச் சிவாகமங்களும் ஆகிய அளவு நூல்களெல்லாம் கூறுவதாகவும், அல்லவாம் என்னும் ஊனத்தார் என்கடவர்– அவ்வாறன்று, கன்மங்கள், விவேகஞானம், தத்துவவிசாரம், சரியைகிரியைகள், யோகம் முதலியன தம்மாத்திரையானே முத்திபயப்பனவாம் என்று கூறும் அறிவிலிகள் யாது பயனைப் பெறுவரோ, அஞ்ஞானத்தால் உறுவது தான் பந்தம்– அஞ்ஞானத்தால் நேர்ந்திருப்பதுவே பந்தமாம், உயர்மெய்ஞ் ஞானந் தான் ஆனத்தால்– உயர்வாகிய மெய்ஞ்ஞானம் உதித்தவாற்றானே, அலர் கதிர் முன்னிருள் போல் அதுபோவது– உதயமாகும் சூரியன் முன்னே இருள் அகல்வதுபேல் அவ்வஞ்ஞானம் விட்டு நீங்குவதாகும், அஞ் ஞானம் விடப் பந்தம் அறும்– அவ்வாறு அஞ்ஞானம் விட்டு நீங்கப் பந்தமும் அகன்றுபோம், முத்தியாகும்– வீடுபேறாகிய பரமுத்தி நிலை கைகூடும், ஆதலால், ஈனத்தார் ஞானங்கள் அல்லாஞானம்– அவ்வறிவிலிகள் கூறும் ஞானமெல்லாம் உண்மை ஞானமன்றாம், இறைவன் அடி ஞானமே ஞானம் என்பர்– முதல்வன் திருவடியை அடையச் செய்யும் சிவஞானமே மெய்ஞ்ஞானமாமென்று பெரியோர் கூறுவர்.

கேட்டல் ஆகிய ஞானத்தின் முறையும் அதன்கண் நிகழும் அனுபவமும் இவை எனக் கூறுகின்றது

சூரிய காந்தக் கல்லின் இடத்தே, செய்ய
சுடர் தோன்றியிடச், சோதி தோன்றுமா போல்,
ஆரியனாம் ஆசான் வந்து அருளால் தோன்ற
அடிஞானம் ஆன்மாவில் தோன்றும்; தோன்றத்
தூரியனாம் சிவன் தோன்றும்; தானம் தோன்றும்;
தொல் உலகம் எல்லாம் தன் உள்ளே தோன்றும்;
நேரியனாய்ப் பரியனுமாய் உயிர்க்கு உயிராய் எங்கும்
நின்ற நிலை எல்லாம் முன் நிகழ்ந்து தோன்றும். 280

(இதன் பொருள்):– சூரிய காந்தக்கல்லின் இடத்தே செய்ய சுடர் தோன்றியிட– சூரியகாந்தக்கல்லின் கண்ணே ஆதித்தனது சிவந்த ஒளி பிரகாசிக்க, சோதி தோன்றுமாபோல்– அதனிடத்து அக்கினி விளங்கித் தோற்றுமாறு போல, ஆரியனாம் ஆசான் அருளால் வந்துதோன்ற– ஞானாசாரியர் அருளே திருமேனியாக் கொண்டு எழுந்தருளி வந்து பக்குவ ஆன்மாவின் சந்நிதியிலே தோன்றி உபதேசிக்க, அடிஞானம் ஆன்மாவில் தோன்றும்– சிவஞானம் அவ்வான்மாவினிடத்து விளங்கித் தோன்றும், தோன்ற– அங்ஙனம் தோன்றவே, தூரியனாம் சிவன்தோன்றும்– வாக்கு மனாதீதனாய் நின்ற சிவத்தின் இயல்பு ஆன்ம அறிவின்கண் விளங்கித் தோன்றும், தானும் தோன்றும்– ஆன்மாவாகிய தனது இயல்புந் தோன்றும், தொல் உலகம் எல்லாம் தன்னுள்ளே தோன்றும்– அநாதி பாசமாகிய பிரபஞ்சம் அனைத்தின் இயல்பும் தனது அறிவின்கண் விளங்கித் தோன்றும், நேரியனாய்ப் பரியனுமாய்– அன்றியும் அச்சிவன் அனுவுக்கனுவாயும் மகத்துக்கு மகத்தாயும், உயிர்க்குயிராய்– அறிவுக்கறிவாயும் எங்கும் நின்ற நிலை எல்லாம்– சடசித்துக்கள் யாவற்றோடும் அத்துவிதமாய்க் கலந்து நின்ற தன்மையும், முன்நிகழ்ந்து தோன்றும்– அவ்வறிவின் அநுபவமாகத் தோன்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தித்தல் ஆகிய ஞானத்தின் முறையும் அதன்கண் நிகழும் அனுபவமும் இவை எனக் கூறுகின்றது

மிக்கதொரு பக்குவத்தில் மிகு சத்தி நிபாதம்
மேவுதலும், ஞானம் விளைந்து ஓர் குருவின் அருளால்
புக்கு அனுட்டித்தே நிட்டை புரிந்துளோர்கள்
பூதலத்தில் புகழ் சீவன்முத்தர் ஆகித்
தக்க பிரிய அப்பிரியம் இன்றி, ஓட்டில்
தபனியத்தில் சமபுத்தி பண்ணிச் சங்கரனோடு
ஒக்க உறைந்து இவர் அவனை, அவன் இவரை விடாதே
உடந்தையாய்ச் சிவன் தோற்றம் ஒன்றுமே காண்பர். 281

(இதன் பொருள்):- மிக்கது ஒரு பக்குவத்தின்- ஆணவமலம் மிகவும் பரிபாகமான காலத்திலே, மிகு சத்திநிபாதம் மேவுதலும்- தீவிரதர சத்திநிபாதம் பொருந்த, ஞானம் விளைந்து- மேற்கூறிய கேட்டல் ஞானம் முதிர்ந்து, ஓர் குருவின் அருளால்- ஒப்பற்ற ஞானாசாரியரது கருணையினால், புக்கு அநுட்டித்தே நிட்டை புரிந்துளோர்கள்- நூற்பொருள் ஆராய்ச்சியிற் பிரவேசித்துக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து இம்முறையே வந்து நிட்டை கூடினவர்கள், பூதலத்திற் புகழ் சீவன்முத்தராகி- இப்பூமியின் கண்ணே புகழத்தக்க சீவன் முத்தர்களாய், தக்க பிரியம் அப்பிரியம் இன்றி- இச்சையுண்டாகத்தக்க பொருளிலே விருப்பும் அல்லாத பொருளிலே வெறுப்புமின்றி, ஓட்டில் தபநியத்தில் சமபுத்தி பண்ணி- ஓட்டையும் பொன்னையும் சமமாக் கண்டு, சங்கரனோடு ஒக்க உறைந்து- சிவனோடு பிரிவின்றி நின்று, இவர் அவனை அவன் இவரை விடாதே உடந்தையாய்- தாம் சிவனைப் பிரியாமலும் சிவன் தம்மைப் பிரியாமலும் ஒன்றுபட்டிருந்து, சிவன் தோற்றம் ஒன்றுமே காண்பர்- சிவனது தோற்றம் ஒன்றுமே கண்டிருப்பர்.

தெளிதல் ஆகிய ஞானத்தின் நெறியும் அதன்கண் நிகழும் அனுபவமும் இவை எனக் கூறுகின்றது

அறியாமை அறிவு அகற்றி, அறிவின் உள்ளே
அறிவுதனை அருளினால் அறியாதே அறிந்து,
குறியாதே குறித்து, அந்தக் கரணங்களோடும்
கூடாதே வாடாதே குழைந்து இருப்பை ஆகில்,
பிறியாத சிவன் தானே பிரிந்து தோன்றிப்
பிரபஞ்ச பேதம் எல்லாம் தானாய்த் தோன்றி
நெறியிலே இவை எலாம் அல்லவாகி
நின்று என்றும் தோன்றிடுவன் நிராதாரன் ஆயே. 282

(இதன் பொருள்):- அறியாமை அறிவு அகற்றி- அறியாமையாகிய கேவலாவத்தையையும், அறிவாகிய கலாவத்தையையும் சிவஞானத்தினால் நீக்கி, அறிவின் உள்ளே அறிவுதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளினால் அறியாதே அறிந்து– ஆன்மாவினிடத்துப் பரமான்மாவாய்ப் பிரிவற உள்ளிருந்த சிவத்தை அருளினாலே பகுத்தறியாதறிந்து, குறியாதே குறித்து– தற்போதத்தாற் சுட்டி நிச்சயிக்காது அருளினால் விரிய நிச்சயித்து, அந்தக்கரணங்களோடும் கூடாதே வாடாதே– பின்பு கருவிகளோடு கூடிச் சகனப்படாமலும் கேவலப்படாமலும், குழைந்து இருப்பை ஆகின்– அவ்வருளோடு கூடி நிட்டை செய்து இருக்கப்பெறின், பிரியாதசிவன் தானேபிரிந்து தோன்றி– பெத்த நிலையிலே ஆன்மாவோடு பிரிவின்றி அபேதமாய் நின்ற சிவன் இச் சுத்த நிலையிற் பிரிந்து பேதமாய்த் தோன்றி, பிரபஞ்சபேதம் எலாம் தானாய்த் தோன்றி– தனு கரணாதி பிரபஞ்சப் பொருள்கள் யாவும் சிவ சொரூபமாய்த் தோன்றக் காட்டி, நெறியாலே இவை எல்லாம் அல்லவாகி நின்று– உண்மையிலே இப்பிரபஞ்ச பேதமெல்லாம் தானல்லவாக வேறாய் நின்று, என்றும் நிராதாரனாய்த் தோன்றிடுவன்– எப்பொழுதும் பற்றவொன்றின்றித் தமியே தோற்றுவன்.

நிட்டை ஆகிய ஞானத்தின் முறையும் அதன்கண் நிகழும் அனுபவமும் இவை எனக் கூறுகின்றது

புண்ணியம் மேல் நோக்குவிக்கும்; பாவம் கீழ் நூக்கும்;
புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தினாலே
நண்ணிய ஞானத்தினால் இரண்டினையும் அறுத்து
ஞால மொடு கீழ் மேலும் நண்ணான் ஆகி
எண்ணும் இகலோகத்தே முத்தி பெறும் இவன்தான்
"எங்கு எழில் என் ஞாயிறு எமக்கு?" என்று குறைவு இன்றிக்
கண்ணுதல்தன் நிறைவுதனில் கலந்து, காயம்
கழிந்தக்கால், எங்குமாய்க் கருது அரன்போல் நிற்பன். 283

(இதன் பொருள்):– புண்ணியம் மேல் நோக்குவிக்கும்– புண்ணியம் சுவர்க்கஞ் சென்று இன்பத்தை நுகரச்செய்யும், பாவம் கீழ் நூக்கும்– பாவம் நரகஞ் சென்று துன்பத்தை நுகரச் செய்யும், புண்ணியனைப் பூசித்த புண்ணித்தினாலே நண்ணிய ஞானத்தினால்– புண்ணியமூர்த்தியாகிய சிவபிரானை அருச்சித்த சிவபுண்ணியத்தின் பயனாய் நிகழ்ந்த சிவஞானம் என்னும் வாளினால், இரண்டினையும் அறுத்து– அப்புண்ணிய பாவத்தளைகள் இரண்டையும் அறுத்து, ஞாலமொடு கீழ்மேலும் நண்ணான் ஆகி– அப்புண்ணிய பாவங்களின் பயனை அநுபவித்தற்குரிய பூமிநரக சுவர்க்கங்களிற் செல்லுதலிலனாகி, எண்ணும் இகலோகத்தே முத்திபெறும் இவன்தான்– கருதப்பட்ட இவ்வுலகத்திலே முத்தி அடைந்த இந்த ஞானநிட்டையாளன், ஞாயிறு எங்கு எழில் எமக்கு என் என்று– ஆதித்தன் எவ்விடத்தே உதிக்கினும் எமக்கு என்ன என்று சொல்லி, குறைவு இன்றி– ஒரு குறைவுமின்றி, கண்ணுதல்தன் நிறைவு அதனில் கலந்து– தேகம் நீங்கியவிடத்து, எங்குமாய் கருது அரன்போல் நிற்பன்– எங்கும் வியாபியாய்ச் சொல்லப்பட்ட முதல்வனோடொத்து நிற்பன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான நிட்டை உடையவர், எந்தத் தொழிலைச் செய்தாலும் இறைவன் திருவடியை விட்டுப் பிரியமாட்டார் என்று கூறுகின்றது

**ஞாலம் அதில் ஞான நிட்டை உடையோருக்கு**
**நன்மையொடு தீமைஇல்லை; நாடுவது ஒன்று இல்லை;**
**சீலம் இல்லை; தவம் இல்லை; விரதமொடு ஆச்சிரமச்**
**செயல் இல்லை; தியானம் இல்லை; சித்தமலம் இல்லை;**
**கோலம் இல்லை; புலன் இல்லை; கரணம் இல்லை;**
**குணம் இல்லை; குறி இல்லை; குலமும் இல்லை;**
**பாலருடன் உன்மத்தர் பிசாசர்குணம் மருவிப்**
**பாடலினொடு ஆடல் இவை பயின்றிடினும் பயில்வர்.** 284

(இதன் பொருள்):– ஞாலமதில் ஞான நிட்டை உடையோருக்கு– இப்பூமியின்கண் ஞான நிட்டை கூடினோருக்கு, நன்மையொடு தீமை இலை– நன்மை தீமைகளாகிய வினைகளும் வினைப் பயன்களும் வேறாகக் காணப்படாவாம், நாடுவது ஒன்று இல்லை– அவர் வினையைச் செய்யினும் அவரால் விரும்பும் பயனொன்றுமில்லை, சீலம் இலை– அவரால் ஒழுக வேண்டியதென நியதியான சமயவொழுக்கமுமில்லை, தவம் இல்லை– அவரால் செய்ய வேண்டியதென்ற தவமுமில்லை, விரதமொடு ஆச்சிரமச் செயல்இல்லை– அவரால் அநுட்டிக்க வேண்டியதென்ற விரதங்களும் ஆச்சிரம தருமங்களும் இல்லை, தியானம் இல்லை, சித்தமலம் இல்லை– சித்தத்தாற் சிந்திக்க வேண்டிய பந்தனைகளுமில்லை, கோலமிலை– காயத்தாற் கட்டிக்காட்ட வேண்டிய வேடங்களுமில்லை, புலன் இல்லை– புலன்களால் உணரப்படும் பேத உணர்வுமில்லை, கரணம் இல்லை– நீக்கவேண்டிய அந்தக்கரண விடயப்பற்றுமில்லை, குணம் இல்லை– அடக்க வேண்டுமென்றதாகிய குணங்களுமில்லை, குறி இல்லை– நிலையாய் நிற்க வேண்டுமென்ற குறியுமில்லை, குலமும் இல்லை– கொண்டொழுக வேண்டிய குலாசாரமும் இல்லை, பாலருடன் உன்மத்தர் பசாசர் குணம் மருவி– பாலர் பித்துக் கொண்டோர் பேய்பிடியுண்டோர் முதலியோர் தன்மைகளையுடையோராய், பாடலினோடு ஆடல் இவை பயின்றிடினும் பயில்வர்– ஆநந்த மேலீட்டாற் பாடல் ஆடல் முதலிய பயிற்சிகளைப் பயிலினும் பயிலுவர்.

இதுவும் அது

**தேசம், இடம், காலம், திக்கு, ஆசனங்கள் இன்றிச்,**
**செய்வது ஒன்றுபோல் செய்யாச் செயல் அதனைச் செய்து, அங்கு**
**ஊசல்படும் மனம் இன்றி, உலாவல், நிற்றல்,**
**உறக்கம், உணர்வு, உண்டி, பட்டினிஇருத்தல், கிடத்தல்**
**மாசு அதனில் தூய்மையினில் வறுமை, வாழ்வின்**
**வருத்தத்தில், திருத்தத்தில், மைதுனத்தில், சினத்தில்,**
**ஆசையினில், வெறுப்பில் இவை அல்லாதும், எல்லாம்**
**அடைந்தாலும் ஞானிகள்தாம் அரனடியை அகலார்.** 285



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்):- ஞானிகள்- ஞானநிட்டை கூடியுள்ளோர், தேசம் இடம் காலம் திக்கு ஆசனங்கள் இன்றி- தேசம், இடம், காலம், திக்கு, ஆசனம் என்பவற்றுள் இயைந்தன இவை, இயையாதன இவையென்ற சங்கற்பமின்றி, செய்வது ஒன்றுபோல் செய்யா- உலகர் தற்போத முனைப்புடனறிந்து விரும்பி ஒன்றைச் செய்வது போலச் செய்யாத, செயல் அதனை செய்து- தொழில்களைச் செய்து, அங்கு ஊசல் படுமனம் இன்றி- அவ்வாறு செய்யுந் தொழில்கள் பற்றி மனம் சலனமடைதலின்றி, உலாவல் நிற்றல்- நடத்தல் நடவாது நிற்றல், உறக்கம் உணர்வு- உறங்குதல் உறங்காது விழித்தல், உண்டிபட்டினி- உண்ணுதல் உண்ணாது பட்டினியிருத்தல், இருத்தல் கிடத்தல்- இருத்தல் இருக்காது கிடத்தல், மாசதனில் தூய்மையினில்- அசுத்தமாயிருத்தல் சுத்மாயிருத்தல், வறுமை வாழ்வில்- வறுமையிற்றயங்கல் அன்றிச் செல்வத்துளழுந்தல், வருத்தத்தில் திருத்தத்தில்- நோயில் வருந்தல் அன்றி சுகத்தில் மகிழ்தல், மைதுனத்தில் சினத்தல்- ஆசையினில் வெறுப்பில்- ஒருபொருள் மாட்டுற்ற பற்றினால் ஆசை கொள்ளல் அல்லாவிடத்து வெறுத்தல், இவை அல்லாததும் எல்லாம் அடைந்தாலும்- இவையேயல்லாது இவை போன்ற இருமைத் தன்மையான எவ்வகை வினைகளுட்பட்டாலும், அரனடியை அகலார்- சலனமின்றி முதல்வனது திருவடிகளை விட்டு நீங்குவாரல்லர். (ஆகையால் இருவகை வினைகளிலும் ஒத்த அநுபவமே உடையராயிருப்பர்,)

ஞான நிட்டையில் நிலை பெறாதவர், அந்த நிட்டையில் நிலைப்பதற்குச் செய்யும் உபாயம் இது எனக் கூறுகின்றது

**இந்நிலைதான் இல்லையேல், எல்லாம் ஈசன்**
**இடத்திலும், ஈசன் எல்லா இடத்தினிலும் நின்ற**
**அந்நிலையை அறிந்து, அந்தக் கரணங்கள் அடக்கி,**
**அறிவது ஒரு குறி குருவின் அருளினால் அறிந்து,**
**மன்னுசிவன் தனை அடைந்து நின்று அவன்தனாலே**
**மருவு பசுகரணங்கள் சிவகரணம் ஆகத்**
**துன்னிய சாக்கிரம் அதனில் துரியாதீதம்**
**தோன்ற முயல் சிவானுபவம் சுவானுபூதிகமாம்.** 286

(இதன் பொருள்):- இந்நிலைதான் இல்லையேல்- இவ்வாறு ஞான நிட்டை கூடல் முடியாதாயின், எல்லாம் ஈசனிடத்தினினும் ஈசன் எல்லா இடத்தினினும் நின்ற அந்நிலையை அறிந்து- சடசித்துக்கள் யாவும் முதல்வனிடத்து வியாப்பியமாயும் முதல்வன் எங்கும் வியாபகமாய் அவற்றோடு கலந்து அத்துவிதமாயும் நிற்கும் மெய்ந்நிலையை நூலாராய்ச்சியாலறிந்து, அந்தக்கரணங்கள் அடக்கி- (பொறி புலன்) கரணங்களை ஒருவழிப்பட அடக்கி, அறிவதொருகுறி- அறிவு மாத்திரத்தான் உணர்வதாகிய ஒரு பாவனையை, குரு அருளினால் அறிந்து- ஆசாரியனது அருளுபதேசத்தால் அறிந்து, மன்னுசிவன்தனை அடைந்து நின்று அவ்வறிவினால் நிலைபெற்ற சிவனைச் சேர்ந்து நின்று, அவன்றனாலே- அவ்வாறு அறிவினாற் கண்ட சிவனருளினால், மருவு பசு கரணங்கள் சிவகரணமாக- பொருந்திய சீவச் செயல்கள் யாவும் சிவச்செயல்களாகக் கண்டு, துன்னிய சாக்கிரம் அதனில்- கருவிகளோடு கூடிய சாக்கிராவத்தையிலே, துரியாதீதம் தோன்ற முயல்- அக்கருவிகளின் செயலற்று நிற்கும் துரியாதீத நிலை ஒருவாறு கைவர முயல்வீராக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாநுபவம் சுவாநுபூதிகமாம்- அங்ஙனம் முய்வீராயின் சிவபோகம் தமக்கென உரித்தாய அநுபவமாகவிருக்கும்.

ஞான நிட்டையில் முயலுபவரின் பெருமை இது எனக் கூறுகின்றது

சாக்கிரத்தே அதீதத்தைப் புரிந்தவர்கள் உலகில்
சருவசங்க நிவிர்த்தி வந்த தபோதனர்கள் இவர்கள்
பாக்கியத்தைப் பகர்வது என் இம்மையிலே உயிரின்
பற்று அறுத்துப் பரத்தை அடை பராவுசிவர் அன்றோ?
ஆக்கு முடி கவித்து அரசு ஆண்டவர்கள், அரிவையரோடு
அனுபவித்து அங்கு இருந்திடினும் அகப்பற்று அற்று இருப்பர்;
நோக்கி இது புரியாதோர் புறப்பற்று அற்றாலும்
நுழைவர் பிறப்பினில் வினைகள் நுங்கிடாவே. 287

(இதன் பொருள்):- சாக்கிரத்தே அதீதத்தைப் புரிந்வர்கள்- மேற்கூறியவாறு சாக்கிரதத்தினின்று கொண்டு கருவிகள் கடந்த அதீதத்தைப் பொருந்தினவர்கள், உலகில்- இப்பூமியின்கண்ணே, சருவசங்க நிவிர்த்தி வந்த தபோதனர்கள்- எல்லாப் பற்றையும் ஒழித்த தபோதனர்களாவர், இவர்கள் பாக்கித்தைப் பகர்வதுஎன்- இவர்கள் முற்பிறவியிற் செய்த புண்ணியப் பேற்றைச் சொல்வது எவ்வாறு, இம்மையிலே உயிரின் பற்று அறுத்துப் பரத்தை அடைபராவுசிவர் அன்றே- இம்மைக்கண் உயிர்ப்பற்றை நீக்கிச் சிவத்தைக் கலந்து யாவராலும் வணங்கப்படும் சிவன்களாவர், அவர்கள் ஆக்குமுடிகவித்து அரசு ஆண்டு- அவர்கள் ஆக்கப்பட்ட முடியினை அணிந்து அரசாட்சி செய்து, அங்கு அரிவையரோடு அநுபவித்து இருந்திடினும்- அவ்விடத்து மாதரோடு கூடி அநுபவித்து இன்புற்றிருந்திடினும், அகப்பற்று அற்று இருப்பர்- அகப்பற்றின்றி இருப்பர், நோக்கியிது புரியாதோர் புறப்பற்று அற்றாலும்- ஆராய்ந்து இவ்வகைப்பற்று நீங்காதோர் புறப்பற்று நீங்கிடினும், வினைகள் நுங்கிடா- வினைகள் கெடாவாதலின், பிறப்பினின் நுழைவர்- பிறப்பிற்படுவர்.

சிவகரணமாய் நின்றபொழுது, சிவனைக் காணக்கூடும் அன்றி, கரணம் கடந்த நிலையில் சிவனைக் காண்பது என்பது பொருந்தாது என்பவரை மறுத்து உரைக்கின்றது

கருவி கழிந்தால் காணார் ஒன்றும் எனில், காணார்
காணாதார் கன்னிகைதான் காமரதம் காணாள்;
மருவி இருவரும் புணர வந்த இன்பம்
வாயினால் பேச அரிது; மணந்தவர்தாம் உணர்வர்;
உருவின் உயர் வடிவு அதுவும் உணர்ந்திலர்காண் சிவனை
உணராதார், உணர்வினால் உணர்வது கற்பனைகாண்;
அருள்பெறின் அவ்இருவரையும் அறிவு இறந்து அங்கு அறிவர்
அறியாரேல், பிறப்பும்விடாது; ஆணவமும் அறாதே. 288



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்):- காணாதார்- திருவருளொளி கொண்டு காணுமாறில்லாதார், கருவி கழிந்தாற் காணார்- கருவிகள் (கூடாதும் தொழிலற்றும்) கழிந்தார் காண மாட்டார், ஒன்றும் எனிற் காணார்- (காட்சிப்பொருள் தம்மின் வேறாகாது) ஒன்றியிருக்குமாயிற் காணமாட்டார், ஒன்றும் எனிற் காணார்- (காட்சிப்பொருள் தம்மின் வேறாகாது) ஒன்றியிருக்குமாயிற் காணமாட்டார், கன்னிகைதான் காமரதம் காணாள்- அஃது கன்னிப் பருத்துப்பெண் (பக்குவமின்னையாலும் அநுபவமின்மையாலும்) காமவின்பத்தின் சுவையை அறியமாட்டாளாதலும், மருவி இருவரும் புணரவந்த இன்பம் வாயினாற் பேச அரிது மணந்தவர் தாம் உணர்வர்- சேர்க்கையில் தலைவன் தலைவியராகிய இருவருங் கூடிச் சுவைக்குமின்பம் பிறர்க்கு வாயினாற் கூறி விளக்க முடியாது, மணந்தநுபவித்தோர்க்கே தெரிய வருவதும் போலும், உணராத உருவின் உயிர் வடிவதுவும் உணர்ந்திலர்காண்- (அருளுணர்வினால்) அறியுமாற்றலில்லாதார் இவ்வுடம்பிற் செறிந்தொன்று பட்டிருக்கும் உயிரையே உணர்ந்தறியமாட்டார், சிவனை உணர்வினால் உணர்வதும் கற்பனை காண்- அவர் உணர்வினாற் பேரின்பமாகிய சிவத்தை அறிவர் என்பது கற்பனை மொழியேயாகும், அருள் பெறில் அவ்விருவரையும் அறிவு இறந்து அங்கு அறிவர்- திருவருள் கைவரப்பெற்றபோதே சீவன் சிவன் என்ற இருவரையும் பாசபசுஞானங்கள் அகல மெய்யறிவானறிவர், அறியாரேல் பிறப்பும் விடாது ஆணவமும் அறாது- அவ்வாறு அறியாதிருப்பார்க்குப் பிறப்பு விட்டு நீங்குவதுமில்லை ஆணவமாசு அகல்வதுமில்லையாம்.

கரணம் கடப்பதற்கு உபாயம் கூறுகின்றது

**பல்நிறங்கள் அவனை காட்டும் படிகம் போல் உள்ளம்**
**பலபுலன்கள் நிறம் காட்டும் பரிசு பார்த்திட்டு,**
**இந்நிறங்கள் என் நிறம் அன்று என்று தன்தன்**
**எழில் நிறம் கண்டு, அருளினால் இந்நிறத்தின் வேறாய்ப்**
**பொய்ந்நிற ஐம்புல நிறங்கள் பொய் என மெய்கண்டான்**
**பொருந்திடுவன் சிவத்தினொடும் போதான் பின்னை**
**முன் நிறை நீர் சிறை முறிய முடுகி ஓடி**
**முந்நீர் சேர்ந்து அந்நீராய்ப் பின் நீங்கா முறைபோல்.** 289

(இதன் பொருள்):- பல்நிறங்களவை காட்டும் படிகம்போல- தன்னையடுத்த பல நிறங்களின் இயல்பே தனது இயல்பாகக் காட்டி நிற்கும் படிகம் போல, உள்ளம் பலபுலன்கள் நிறம் காட்டும் பரிசு பார்த்திட்டு- ஆன்மாவும் தன்னையடுத்த பல கருவிகளின் இயல்பே தனது இயல்பாகக் காட்டி நிற்குந் தன்மையை அறிந்து, இந்நிறங்கள் என்நிறம் அன்று என்று தன்றன் எழில்நிறம் அருளால் கண்டு- இந்தக் கருவிகளிலழுந்தி நின்ற இயல்புகள் எனது இயல்பன்று என்று தேர்ந்து தனது சிறப்பியல்பு இவற்றின் வேறு என்று திருவருளால் அறிந்து, இந்நிறத்தின் வேறாய்ப் பொய்ந்நிற ஐம்புல நிறங்கள் பொய் என மெய்கண்டான்- இச்சிறப்பியல்புக்கு வேறாய்ப் பொய்த் தன்மையான ஐம்பொறி முதலிய கருவிகளோடு மயங்கி அவற்றின் வண்ணமெனத் தன்னை நினைந்திருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பு பொய்யென்ற உண்மையை அறிந்தவன், சிவத்தினொடும் பொருந்திடுவன்- சிவத்தைப் பொருந்துவன், பின்னைபோதான்- மீள அக்கருவிகளோடும் கூடுவானல்லன், முன்நிறைநீர் சிறை முறிய முடுகி ஓடி- முன்னர்த் தடையுண்டு நிறைந்து நின்ற நீரானது அத்தடை தீர்ந்தபோது விரைந்தோடி, முந்நீர் சேர்ந்து அந்நீராய்- கடலின் நீரைப் பொருந்தி அந்நீரேயாய், பின் நீங்காமுறை போல்- பின் மீளாது அடங்கி நிற்றல் போலாம்.

சிவத்தைப் பொருந்தினவன் கரணங்களில் மீண்டும் வந்தாலும் இழுக்கு இல்லை என்பவரை மறுத்துக், கரணங்களோடு கூடினால் சிவன் அறியப்படான் என்று உரைக்கின்றது

எங்கும்தான் என்னில், நாம் எய்த வேண்டா;
எங்கும் இலன் என்னில், வேறு இறையும் அல்லன்
அங்கம் சேர்உயிர் போல்வன் என்னில், அங்கத்து
அவயவங்கள் கண்போலக் காணா ஆன்மா
இங்குநாம் இயம்பும் தத்துவங்களில் வைத்து அறிவது
இறைஞானம் தந்துதான் ஈதல் சுடர் இழந்த
துங்கவிழிச் சோதியும் உட்சோதியும் பெற்றால்போல்,
சோதிக்குள் சோதியாய்த் தோன்றிடுவன் காணே. 290

(இதன் பொருள்):- எங்கும்தான் என்னின்நாம் எய்தவேண்டா- (மேற்சிவத்தோடு பொருந்தும் என்றது எவ்வாறாம் என ஆராய்ச்சி நிகழுங்கால்) சிவமே சடசித்தெங்கும் வியாபித்து நிற்றலின் ஆன்மாக்களாகிய நாம் அதனை அடைய வேண்டுமென்பதில்லையே என்பார்க்கு, எங்கும் இலன் வேறு என்னின் இறையுமல்லன்- சிவம் எங்கும் வியாபித்திருப்பதன்று ஆன்மாக்களின் வேறாய் நிற்பதாம் என்னில், அது முழுமுதற் பொருளுமாகாது என முடியும். அப்போது அடைந்ததும் முத்திநிலையன்று என்றாகும். அங்கம் சேர் உயிர் போல்வன் எங்கும்- (அப்படியன்று) உடம்பெங்கனும் செறிந்திருக்குமுயிர்போலச் சிவனும் சடசித்தெங்கும் வியாபித்திருப்பன், அங்கத்து அவயவங்கள் கண்போலக் காணா- அவ்வாறு உடம்பெங்கனுஞ் செறிந்திருப்பினும், கண்ணவயவத்தைக் கொண்டு விரித்தறிவது போல்- மற்றை அவயவங்களைக் கொண்டு உயிர் அறியாதவாறுபோல், ஆன்மா இங்கு நாம் இயம்பும் தத்துவத்தின் வைத்து அறிவது- ஆன்மாவும் சகலத்தில் நாம் கூறிய தத்துவங்களிற் செறிந்து வியாபரித்தலாகிய பசுஞானங் கொண்டு விரிவின்றி அறிவதாம், இறைஞானம் தந்துதாள் ஈதல்- முதல்வன் பதிஞானத்தையளித்து மலரடிக்கீழ் வைத்தலாகிய பரமுத்தியை ஆன்மாவுக்குக் கொடுத்தல், சுடரிழந்த துங்கவிழி- (ஒருக்கால் ஒளியோடு கூடி உள்ளொளியின்மையானும்) ஒளியை இழந்து நிற்கும்கண், சோதியும் உட்சோதியும் பெற்றாற்போல்- இரவியொளியையும் உள்ளொளியையம் அடையவுற்றது போலாகும், சோதிக்குள் சோதியாய்த் தோன்றிடுவன்- அவ்வாறு இரவியொளி இருப்பவும் காட்சிக்கின்றியமையாதிருக்கும் கண்ணுள்ளொளி போலச் சிவனும் ஞானத்துள்ளும் பரஞானமாயிருந்து தோற்றுவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவத்தைப் பொருந்தியவர், பழைய வாசனையால் கரணங்களைக் கூட நேர்ந்தால், உபாயத்தினால் வாசனையை நீக்க வேண்டும் எனக் கூறுகின்றது

**பாசிபடு குட்டத்தில் கல்லினை விட்டு எறியப்**
**படும்பொழுது நீங்கி, அது விடும் பொழுதில் பரக்கும்;**
**ஆசுபடு மலம், மாயை, அரும் கன்மம் அனைத்தும்**
**அரன் அடியை உணரும்போது அகலும், பின் அணுகும்;**
**நேசமொடும் திருவடிக்கீழ் நீங்காதே தூங்கும்**
**நினைவு உடையோர் நின்றிடுவர், நிலை அதுவே ஆகி,**
**ஆசையொடும் அங்கும் இங்கும் ஆகி அலமருவோர்**
**அரும்பாசம் அறுக்கும் வகை அருளின் வழி உரைப்பாம்.** 291

(இதன் பொருள்):- பாசிபடு குட்டத்தில் கல்லினைவிட்டெறிய- பாசிபொருந்திய தடாகத்திலே கல்லை மேலும் மேலும் எறியும்போது, படும்பொழுது நீங்கி விடும்பொழுது அது பரக்கும்- கல்லெறி படுமிடத்து நீங்கிக் கல்லெறியாது விடுமிடத்து அப்பாசியானது நீரை மூடிக்கொள்ளும். அதுபோல, ஆசுபடு மலமாயை அரும் கன்மம் அனைத்தும்- குற்றம் பொருந்திய மலமும் மாயையும் பெரிய கன்மமுமாகிய எல்லாம், அரன் அடியை உணரும்போது, அகலும் பின் அணுகும்- சிவனடியைத் தியானிக்கும் போது நீங்கி உணராதவிடத்து மீளவும் அவை பொருந்தும், திருவடிக் கீழ் நேசமொடும் நீங்காதே தூங்கும் நினைவுடையோர்- ஆதலால், இடையறாத அன்போடு சிவத்தைப் பொருந்தி அதீதத்தை அடையும் இச்சையுடையோர், நிலை அதுவே ஆக நின்றிடுவர்- அரனடியை உணரும் சுத்தாவத்தை நிலையே நிலையெனக் கொண்டு அதிலே நிற்பர், அங்கு மிங்குமாகி ஆசையொடும் அலமருவோர் அரும்பாசம் அறுக்கும் வகை- அவ்வாறின்றிச் சிவத்தின் மாட்டும் கருவிகள் மாட்டும் விருப்புற்றுச் சுழலுவோர் பெரிய மலவாதனையைப் போக்கும் நெறியை, அருளின்வழி உரைப்போம்- முதல்வன் ஆகமங்களிற் கூறியபடி பின்னர்க் கூறுவோம்.

## ஒன்பதாஞ் சூத்திரம்

பதிஞானத்தால் சிவனை அடைதல் கூடும் என்றும், அந்தப் பதிஞானத்தில் நிலைபெற ஒட்டாது செய்வது மல வாசனை என்றும் அந்த மலவாசனையைக் கெடுக்கும் உபாயங்கள் இவை என்றும் சூத்திரப் பொருளைத் தொகுத்துக் கூறுகின்றது

**பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும்**
**பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத்தாலே**
**நேசமொடும் உள்ளத்தே நாடிப், பாத**
**நிழல் கீழ் நில்லாதே நீங்கிப் போதின்,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைதரும் உலகம் எலாம் அலகைத்தேராம் என்று
அறிந்து அகல, அந்நிலையே ஆகும்; பின்னும்
ஓசைதரும் அஞ்சு எழுத்தை விதிப்படி உச்சரிக்க
உள்ளத்தே புகுந்து அளிப்பன் ஊனம் எலாம் ஓட. 292

(இதன் பொருள்):- பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பு அரிய பரம் பரனை- பாசஞானத்தாலும் பசு ஞானத்தாலும் ஆராய்ந்தறிதற்கரிய பரமசிவனை, பதிஞானத்தாலே நேசமொடும் உள்ளத்தேநாடி- அவனது திருவடி ஞானத்தாலே அன்போடும் தன்னறிவின் கண்ணாராய்ந்திருக்க, பாத நீழற்கீழ் நில்லாதே நீங்கிப்போதின்- அத்திருவடி நிழலின்கீழ் பிரிப்பற நின்று தூங்குதலாகும் ஞானநிட்டை கைவருவதாகும். ஆயினும் கன்ம வலியால் நிட்டை கைவராது பிரபஞ்சப்பற்றுவழி அறிவுசெல்லுமாயின், ஆசை தரும் உலகமெலாம் அலகைத்தேராம் என்று அறிந்து அகல- அவ்வாறு பற்றுவதற்கிடமாயிருக்கும் பிரபஞ்சமனைத்தும் கானற்சலம் போல நிலையில்லாதன என்று கண்டு அவற்றை விட்டுநீங்க, அந்நிலையே ஆகும்- திருவடிஞானம் தலைக்கொண்டு நிட்டை கைவரப்பெறும், பின்னும்- அவ்வாறு ஒருவாற்றால் நிட்டை கைவரப்பெற்ற பின்னரும், ஓசை தரும் அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க- நிட்டை நிலைத்தற்கு ஆற்றலைத் தருவதாகிய திருஅஞ்செழுத்தை விதிமுறை யாலுச்சரிக்க, உள்ளத்தே புகுந்து- அறிவின்கண் அறிவாய் விளங்கி நின்று, ஊனமெல்லாம் ஓட அளிப்பன்- பற்றுக்கு வித்தாய்ச் சாரமாய் நின்ற பாசங்கள் யாவும் செயலற்று விலகும்படி தனதருளைத் தந்துநிற்பன்.

பாசஞானம், பசு ஞானம், பதி ஞானங்களின் இலக்கணம் இவை எனக் கூறுகின்றது

வேத சாத்திரம் மிருதி புராண கலைஞானம்
விரும்பு அசபை வைகரி ஆதித் திறங்கள் மேலாம்
நாதமுடிவான எல்லாம் பாசஞானம்;
நணுகி ஆன்மா இவை கீழ் நாடலாலே
காதலினால் "நான் பிரமம்" என்னும் ஞானம்
கருது பசுஞானம், இவன் உடல் கட்டுண்டு,
ஓதி உணர்ந்து ஒன்று ஒன்றா உணர்ந்திடலால் பசுவாம்
ஒன்றாகச் சிவன்இயல்பினை உணர்த்திடுவன் காணே. 293

(இதன் பொருள்):- வேதசாத்திர மிருதிபுராண கலைஞானம்- வேதங்களும் சாத்திரங்களும் மிருதிகளும் புராணங்களும் மற்றைக் கலை ஞானங்களும், விரும்பு அசபை- விரும்பப்படும் அசபா என்னும் மந்திரமும், வைகரி ஆதித் திறங்கள் - வைகரி முதலிய நால்வகை வாக்குக்களும், மேலாம் நாதம் முடிவான எல்லாம்- பிருதிவி முதல் மேலாகிய நாதம் ஈறாகவுள்ள தத்துவங்களும் ஆகிய இவை அனைத்தின் வாயிலாகவும் ஆன்மாவின்கண் நிகழும் ஞானம், பாசஞானம்- பாசஞானமாம் ஏனெனில், ஆன்மா இவை நணுகி கீழ்நாடலாலே- ஆன்மா இக்கலைஞானம் முதலியவற்றைப் பொருந்தி பிறப்பிறப்பிற்படுதலானாம், காதலினால் நான் பிரமம் என்னும் ஞானம்- செருக்கால் நான் இவற்றிற்கு வேறாகிய பிரமரூபம் என்று மதிக்கும் ஞானம், கருதுபசு ஞானம்- சொல்லப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுஞானமாம், இவன் உடலிற் கட்டுண்டு– இவ்வான்மா தூரசூக்கும பரதேகங்களாற் கட்டுண்டு, ஓதி உணர்ந்து– மேற்கூறிய வேதம் முதலியவற்றை ஓதி உணர்த்த உணர்தலாலும், ஒன்று ஒன்றா உணர்ந்திடலால்– ஐம்பொறி முதலிய தத்துவங்களால் விடயங்களை ஒவ்வொன்றாய் உணர்தலாலும், பசுஆம்– ஏகதேச அறிவுடைய பசுவாம், சிவன் இயல்பின் ஒன்றாக உணர்ந்திடுவன் காண்– சிவன் உணர்த்த உணர்தலின்றியும் ஒவ்வொன்றாய் அறிதலின்றியும் இயல்பாகவே எல்லாவற்றையும் ஒருங்கேஅறிவனாதலின் முற்றறிவுடைய பதியாம். ஆதலால் பதி பாசஞானம் பசுஞானங்களால் அறிதற்கரியதாம் என்பதை அறிவாயாக.

பாடாணவாத ஞானமும் பேதவாத ஞானமும் பசு ஞானமே எனவும், பதி ஞானத்தால் அன்றி பசுத்துவ வாதனை நீங்காது எனவும் கூறுகின்றது

**கரணங்கள் கெட இருக்கை முத்தியாம் என்னில்**
**கதியாகும் சினைமுட்டை கருமரத்தின் உயிர்கள்**
**மரணம் கொண்டிட, உறங்க, மயங்கி மூர்ச்சிக்க,**
**வாயுத்தம்பனை பண்ண, வல்விடத்தை அடையச்**
**சரணங்கள் புகுநிழல்போல் தனை அடையும் சமாதி**
**தவிராது மலம்; இதுவும் பசுஞானம் ஆகும்;**
**ஆரணங்கள் எரித்தவன்தன் அடியை அறிவு இறந்து அங்கு**
**அறிந்திடீர் செறிந்த துகள் அகற்றிடீரே.** 294

(இதன் பொருள்):– கரணங்கள் கெட இருக்கை முத்தியாம் என்னில்– மேற் சொல்லியவாறு கருவிகளோடு கூடி ஆன்மா கீழ்நாடலின்றி அவை கூடாதும், செயலற்றுக் கெட்டும் இருக்கப்பெறுவதே முத்தியாகும் என்று கூறின், சினைமுட்டை கருமரத்தின்– கருவிகள் விரிந்து தொழிற்படாதிருக்கும் சினைமுட்டை கரு வித்து என்னும் நிலைகளிலும், மரணங்கொண்டிட உறங்க மயங்கி மூர்ச்சிக்க வாயுத்தம்பனைபண்ண பல்விடத்தை அடைய– கருவிகள் தஞ்செயலற்றுக் கெட்டுநிற்கும் மரணவத்தை, உறக்கம், மயக்கத்தோடு கூடிய மூர்ச்சை, பிராணவாயு அடங்கிய யோகம், ஸ்மரணயறச் செய்யும் கொடிய விடந் தலைக்கேறுகை ஆகிய இந்நிலைகளிலும், உயிர்கள் கதியாகும்– உயிர்கள் வீட்டின்பத்தைப் பெறுவனவாதல் வேண்டும். அவ்வாறன்றாதலாலும், சரணங்கள் புகுநிழல் போல்– காலையிற் சேய்மையாய் நின்ற நிழல் உச்சியில் தன்காலுள்ளடங்கிப் பின்னும் மாலையிற் சேய்மைத்தாதல்போல, தனையடையுஞ் சமாதி– யோகமதத்தில் தன்னையறிந்தடங்குதலெனக் கூறப்பட்டவொடுக்க நிலையும் காலத்திற்கேற்ப ஒடுங்கியும் பின் விரிந்தும் நிகழுமாதலாலும், தவிராது மலம்– இந்நிலைகளில் மலம் அகன்றதாகமாட்டாது, இதுவும் பசுஞானமே ஆகும்– இந்நிலையில் ஞானம் உதிப்பின் அதுவும் பசு ஞானமேயாகும் ஆகையால், அரணங்கள் எரித்தவன் தன் அடியை அறிவிறந்து அங்கு அறிந்திடீர்– முப்புரங்களையும் முறுவலித்தெரித்த முதல்வனது திருவடிகளைக் கருவிகளோடு கூடியும் தற்போத முனைப்பினின்றும் அறிவதைவிட்டு, மெய்ஞ்ஞானங்கொண்டு அறியின், செறிந்த துகள் அகற்றிடீரே– உயிரைச் சகசமாய்ப் பந்தித்துற்ற மலவாதனை அறப்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிஞானத்தால் அன்றி, பசு ஞானம் பாசு ஞானங்களால் சிவனை அறிய முடியாததால், அந்த இரு ஞானங்களும் தாமே பிரகாசிப்பதும் பிறிது ஒன்றைப் பிரகாசப்படுத்துவதும் இல்லை எனக் கூறுகின்றது

**சிவனை அவன் திருவடி ஞானத்தால் சேரச்**
**செப்புவது செயல் வாக்குச் சிந்தை எல்லாம்**
**அவனை அணுகா என்றும் ஆதலாலும்,**
**அவன் அடி அவ் ஒளி ஞானும் ஆதலாலும்,**
**இவனும் யான் துவக்கு உதிரம் இறைச்சி மேதை**
**என்பு மச்சை சுக்கிலமோ இந்திரியக் கொத்தோ**
**அவம் அகல எனை அறியேன் எனும் ஐயம் அகல**
**அடிகாட்டி ஆன்மாவைக் காட்டலாலும்.** 295

(இதன் பொருள்):- சிவனை அவன் திருவடிஞானத்தால் சேரச்செப்புவது- பரம சிவனை அவனது திருவடிஞானமாகிய பதிஞானத்தாலே அடையும்படி மேற்கூறியது எற்றாலோவெனின், சிந்தைவாக்குச் செயலெல்லாம்- மனம் வாக்குக் காயம் முதலியன யாவும், அவனை என்றும் அனுகா ஆதலானும்- அவனை ஒரு காலத்திலும் அடையாவாதலாலும், அவன் அடி அவ்வொளி ஞானம் ஆதலானும்- அவனது திருவடி மேற் கூறியவாறு பாச இருளை நீக்கும் சுயம்பிரகாச ஞானமாதலாலும், இவனும்- இவ்வான்மாவும், யான் துவக்கு உதிரம் இறைச்சி மேதை என்பு மச்சை சுக்கிலமோ இந்திரியக் கொத்தோ- யான் தோல் இரத்தம் தசை நரம்பு எலும்பு மூளை சுக்கிலம் முதலியனவோ அல்லது இந்திரியக்கூட்டமோ எனத் தனது சொரூபத்தை அறியாது நிற்றலால், அவம் அகல- அக்குற்றம் நீங்கும்படியும், எனை அறியேன் என்னும் ஐயம் அகல- தனது சொரூபத்தை அறியேன் என்னும் ஐயம் நீங்கும்படியும், அடிகாட்டி ஆன்மாவைக் காட்டலானும்- சிவஞானத்தைப் பிரகாசிப்பித்து ஆன்மாவினது தற்சொரூபத்தை விளக்குதலாலுமாம்.

பசு ஞானம் பாச ஞானங்களுக்குத் தாமே பிரகாசித்தலும், பிறிது ஒன்றைப் பிரகாசப்படுத்துதலும் இல்லாமையை அனுபவத்தில் வைத்து விளக்குகின்றது

**கண்டிடும் கண், தனைக் காணா; கரணம் காணா;**
**கரணங்கள் தமைக் காணா; உயிரும் காணா;**
**உண்டி அமர் உயிர் தானும் தன்னைக் காணாது;**
**உயிர்க்கு உயிராம் ஒருவனையும் காணாதாகும்;**
**கண்டசிவன் தனைக் காட்டி உயிரும் காட்டிக்**
**கண்ணாகிக் கரணங்கள் காணாமல் நிற்பன்;**
**கொண்டு அரனை உளத்தில் கண்டு அடிகூடில் பாசம்**
**கூடாது; கூடிடினும் குறித்து அடியில் நிறுத்தே.** 296



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்):- கண்டிடும் தனைக் காணா கரணம்காணா- விடயங்களைக் காண்கின்ற கண்கள் தமது இயல்பையும் அறியா; தமக்கு முதலாகிய அந்தக்கரணங்களையும் அறியமாட்டா, கரணங்கள் தமைக் காணா உயிரும் காணா- மனம் முதலிய அந்தக்கரணங்களும் வித்தை முதலிய உள்ளந்தக்கரணங்களும் தமது இயல்பையும் அறியமாட்டா, தமக்கு விடயங்களைக் காட்டி முதலாய் நிற்கும் உயிரையும் அறியா, அவை போல, உண்டி அமர் உயிர் தானும் தன்னைக் காணாது உயிர்க்கு உயிராம் ஒருவனையும் காணாது ஆகும்- விடயங்களைப் பொருந்துகின்ற ஆன்மாவும் தனது இயல்பையும் அறியமாட்டாது. தனக்கு அறிவுக்கறிவாய் நின்று உணர்த்தும் முதல்வனையும் அறியமாட்டாது நிற்கும், கண்டசிவன்- இவை யாவையும் ஒருங்கே அறிந்து நிற்கும் முதல்வன், தனைக் காட்டி உயிரும் காட்டி- தன்னியல்பை விளக்கி ஆன்மவியல்யையும் விளங்கச் செய்து, கண்ணாகிக் கரணங்கள் காணாமல் நிற்பன்- ஆதலால், கொண்டு அரனை உளத்தில் கண்டு அடிகூடின்- அந்தச் சிவஞானத்தைத் துணையாகக் கொண்டு முதல்வனை ஆன்ம அறிவிற்கண்டு திருவடி நிழற்கீழ் நிற்கப் பெறின், பாசம் கூடாது- பாசம் விட்டு நீங்கும், கூடிடினினும் குறித்து அடியின் நிறுத்து- நீங்கியது வந்து ஒருக்காற் பொருந்துமாயினும் சிவபாவனையை விடாது செய்து அதனானே திருவடிநிழற்கீழ் நீங்காதே தூங்கி நிற்றலுமாகும்.

பதி ஞானம் பிரபஞ்ச வயிராக்கியத்தால் உண்டாகும் எனக் கூறுகின்றது

**குறித்து அடியில் நின்று அட்ட குணம் எட்டுச் சித்தி**
**கோகனதன் முதல் வாழ்வு குலவுபதம் எல்லாம்**
**வெறுத்து நெறி அறுவகையும் மேலோடு கீழ்அடங்க**
**வெறும் பொய் என நினைந்து இருக்க மேலோடு கீழில்லான்**
**நிறுத்துவதோர் குணம் இல்லான் தன்னை, ஒருவர்க்கும்**
**நினைப்பு அரியான், ஒன்றும் இலான் நேர்பட வந்து உள்ளே**
**பொறுப்பு அரிய பேரன்பை அருளி அதன் வழியே**
**புகுந்திடுவன் எங்கும் இலாப் போகத்தைப் புரிந்தே.** 297

(இதன் பொருள்):- குறித்து அடியின் நின்று- மேற்கூறியவாறு குருவினருளால் அறிவதாகிய குறிப்புப் பாவனையால் உள்ளத்தில் நாடித் திருவருளே தாரகமாக நின்று, அட்ட குணம் எட்டுச்சித்தி- அநந்தஞானம் முதலிய எண்குணங்களும் அணிமா முதலிய அட்டமா சித்திகளும், கோகநகன் முதல்வாழ்வு குலவுபதம் எல்லாம் வெறுத்து- பிரமன் முதலியோருடைய செல்வங்கள் ஆழகிய புவனங்கள் யாவும் கானற்சலம்போல நிலையற்றன என்று அறிந்து வெறுத்து, நெறி அறுவகையும் மேலொடுகீழ் அடங்க- அத்துவாக்கள் அறுவகையும் கலைகள் முதலாகத் தத்துவங்கள் ஈறாக, வெறும் பொய் என நினைந்து இருக்க- முழுவதும் பொய் என்று நினைந்து சலிப்பற்று இருக்கப்பெறின், மேலொடுகீழ் இல்லான்- அந்தமும் ஆதியும் இல்லாதவனும், நிறுத்துவது ஓர் குணம் இல்லான்- இன்னதென்று நிச்சயிக்கத்தக்க ஒரு இயல்பு இல்லாதவனும், தன்னை ஒருவர்க்கு நினைப்ப, அரியான்- தான் ஒருவரானும் உணரப்படாதவனும், ஒன்றும் இலான்- ஒரு பற்றும் இல்லாதவனும் ஆகிய சிவன், நேர்பட உள்ளே வந்து- நேரே ஆன்ம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவின்கண் தோன்றி, பொறுப்பரிய பேரன்பை அருளி– பொறுத்தற்கரிய பெருங் காதலைக் கொடுத்து, அதன்வழியே– அவ்வன்பின் வழியாக, எங்கும் இலாப் போகத்தைப் புரிந்து– எவ்விடத்தும் அறிதற்கரிய திருவடிப் பேரின்பத்தை அருளி, புகுந்திடுவன்– அவ்வான்ம அறிவினுள்ளே நிற்பன்.

பிரபஞ்ச வயிராக்கியம் நிலைப்பதற்குச் சிவோகம் பாவனை செய்ய வேண்டும் என்று கூறுகின்றது

கண்ட இவை அல்லேன் நான் என்று அகன்று காணாக்
கழிபரமும் நான் அல்லேன் எனக் கருதிக் கசிந்த,
தொண்டினொடும் உளத்து அவன்தான் நின்ற கலப்பாலே
சோகம் எனப் பாவிக்கத் தோன்றுவன்; வேறு இன்றி
விண்டு அகலும் நலங்கள் எல்லாம்; கருட தியானத்தால்
விடம் ஒழியும்; அதுபோல விமலதையும் அடையும்;
பண்டை மறைகளும் அதுநான் ஆனேன் என்று
பாவிக்கச் சொல்லுவது இப் பாவகத்தைக் காணே. 298

(இதன் பொருள்):– கண்ட இவை நான் அல்லேன் என்று அகன்று– ஆன்ம போதத்தினாற் சுட்டி அறியப்பட்ட இத்தேகாதிப் பிரபஞ்சமாகிய பாசம் நான் அன்றென்று நியதிபண்ணி, காணாக் கழிபரமும் நான் அல்லேன் எனக் கருதி– அப்போதத்தினாற் சுட்டி அறியப்படாது மேம்பட்டு நின்ற கலப்பாலே– (அவ்வாறு அறியப்படாது நின்றானாயினும்) ஆன்மாவின்கண் அச்சிவன் அத்துவிதமாய்க் கலந்து நின்ற முறைமையால், கசிந்த தொண்டினோடும் சோகம் எனப் பாவிக்க– அன்போடு கூடிய அடிமைத் திறத்தினாற் சிவோஹம்பாவனை செய்யின், வேறின்றித் தோன்றுவன்– அவ்வான்மாவுக்கு வேறாதலின்றி அத்துவிதமாய்த் தோன்றுவன், கருடதியானத்தால் விடம் ஒழியும் அதுபோல– கருட தியானத்தால் விடம் நீங்குவது போல, மலங்கள் எல்லாம் விண்டு அகலும்– மலங்கள் யாவும் விட்டு நிற்கும், விமலதையும் அடையும்– அதனால் ஆன்மா சுத்தியும் அடையும், பண்டை மறைகளும் அதுநானானேன் என்று பாவிக்கச் சொல்லுவது– பழைய வேதாந்தமும் அது நானானேன் எனப் பாவிக்கச் சொல்லுவதும் அப்பாவகத்தைக் காண்– இச்சோகம் பாவனையையே என அறிவாயாக.

சிவலோகம் பாவனை நிலைப்பதற்கு பஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரிக்க வேண்டும் எனக் கூறுகின்றது

அஞ்சு எழுத்தால் ஆன்மாவை அரனுடைய பரிசும்
அரன் உருவும் அஞ்சு எழுத்தால் அமைந்து அமையும் அறிந்திட்டு
அஞ்சு எழுத்தால் அங்கசுர நியாசம் பண்ணி
ஆன்மாவின் அஞ்சு எழுத்தால் இதயத்து அர்ச்சித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சு எழுத்தால் குண்டலியில் அனலை ஓம்பி
அணைவு அரிய கோதண்டம் அணைந்து, அருளின் வழி நின்று
அஞ்சு எழுத்தை விதிப்படி உச்சரிக்க மதி அருக்கன்
அணை அரவம் போல், தோன்றும் ஆன்மாவில் அரனே. 299

(இதன் பொருள்):- அஞ்செழுத்தால் ஆன்மாவை அரன் உடைய பரிசும்- திருவஞ் செழுத்திலே ஆன்மாவைச் சிவன் அடிமையாகவுடைய தன்மையும், அரன் உருவம் அஞ்செழுத்தால் அமைந்தமையும் அறிந்திட்டு- சிவனுடைய திருமேனி திருவஞ்செழுத்தாலமைந்திருக்குந் தன்மையுமறிந்து, அஞ்செழுத்தால் அங்கரா நியாசம் பண்ணி- திருவஞ்செழுத்தால் சகளீகரணமென்னும் அங்கநியாச கரநியாசங்களை முறையே மற்றையக் கிரியைகளோடு கூட்டிச் செய்து, ஆன்மாவின் அஞ்செழுத்தால் இதயத்து அர்ச்சித்து- மலநீங்கிச் சுத்தியெய்தியதாகிய ஆன்மாவிடத்துத் திருவஞ்செழுத்தால் இதயத் தானத்துச் சிவனை ஆவாகித்துப் பூசித்து, அஞ்செழுத்தால் குண்டலியில் அனலை ஓம்பி- திருவஞ்செழுத்தால் உந்தித்தானத்திருக்கும் அருட்சத்தியைப் பிராணாயாமத்தாற் பிரகாசிக்கச் செய்து மேனோக்கி எழுப்பி, அணைவு அரிய கோதண்டமடைந்து- கூடுதற்கரிய புருவநடுவில் அச்சத்தியைச் சேர்த்துத் தியானித்து, அருள் வழி நின்று அங்செழுத்தை விதிப்படியுச்சரிக்க- அவ்வருட் சத்தியின் வயத்தாய் நின்று திருவஞ்செழுத்தை விதிப்படியே உச்சரிக்க, மதி அருக்கன் அணை அரவம் போல- சந்திர சூரியனிடத்துக் கிரகண காலத்திற் தோன்றும் இராகு கேதுக்கள்போல, ஆன்மாவின் அரன் தோன்றும்- ஆன்மாவிடத்துச் சிவன் பிரகாசியா நிற்பன்.

இதயத்தில் இறைவனை அஞ்செழுத்தால் பூசிக்கும் முறை இவ்வாறு என வகுத்துக் கூறுகின்றது

நாட்டும் இதயம் தானும் நாபியினில் அடியாய்,
ஞாலம் முதல் தத்துவத்தால் எண்விரல் நாளத்தாய்,
மூட்டு மோகினி சுத்தவித்தை மலர் எட்டாய்,
முழுஇதழ் எட்டு அக்கரங்கள் முறைமையினில் உடைத்தாய்க்
காட்டு கமலாசனம் மேல் ஈசர் சதாசிவமும்
கலா மூர்த்தம் ஆம் இவற்றின் கண்ணாகும் சத்தி
வீட்டை அருள் சிவன் மூர்த்திமான் ஆகிச் சத்தி
மேலாகி நிற்பன்; இந்த விளைவு அறிந்து போற்றே. 300

(இதன் பொருள்):- நாட்டும் இதயந்தானும்- பூசைத்தானமாகக் குறித்த இருதயமும், நாபியினில் அடியாய்- உந்தித்தானத்திலே மூலப் பிரக்கிருத்தியாகிய கிழங்கையுடையதாய், ஞாலம் முதல் தத்துவத்தால் எண்விரல் நாளத்தாய்- பிருதிவி முதற் கலையீறான தத்துவங்களாலாகிய எட்டங்குல நீளமுள்ள தண்டினையுடைய தாய், மோகினி மூட்டு- அசுத்தமாயையாகிய முடிச்சைக் கொண்டு, சுத்தவித்தை மலர் எட்டாய்- அசுத்தமாயையிலுள்ள வித்தியா தத்துவங்களேமுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தவித்தையுஞ் சேர்ந்து எட்டுப் புறவிதழ்களாகவும், அக்கரங்கள் முழுவிதழ் எட்டு முறைமையினின் உடைத்தாய் - வித்தியேசுரர்கள் எட்டகவிதழ்களாகவும் முறையே அமைந்திருப்ப, காட்டு கமலாசனம்– தியானத்திற் காணத்தக்க கமலாசனமாகவிருக்கும், மேல் ஈசர் சதாசிவமும் கலாமூர்த்தமாம்– இக்கமலத்தின் மேலும் ஈசுரம் சதாக்கியம் என்னும் இருதத்துவங்களும் அறுபத்துநான்காகும் கேசரவடிவமாகிய மூர்த்தியாகவிருக்கும், இவற்றின் கண்ணாகும் சத்தி– இக்கேசரங்களுட் சத்தி தத்துவம் பொகுட்டுவடிவாக உயர்ந்திருக்கும். வீட்டையருள் சிவன் மூர்த்திமானாகிச் சத்தி மேலாகி நிற்பன்– உயிர்களுக்கு வீடுபேற்றையளிக்கும் சிவன் இச்சத்திக்கும் மேலாகிய பீசமாய் மூர்த்திமானாக நிற்பன், இந்த விளைவு அறிந்து போற்றே– இந்த முறைமையை முன்கூறிய பாவனைகளினமுந்தி நிலையாக அகத்தே கண்டு அருச்சனை செய்வாயாக.

அந்தரியாக பூசைக்கு வேண்டிய பூசா திரவியங்கள் சேகரிக்கும் முறை இது எனவும், இந்தப் பூசை இன்றியமையாது வேண்டும் எனவும் கூறுகின்றது

அந்தரி யாகம் தன்னை முத்தி சாதனமாய்
அறைந்திடுவர்; அதுதானும் ஆன்ம சுத்தி ஆகும்;
கந்தம், மலர், புகை, ஒளி, மஞ்சனம், அமுது முதலாக்
கண்டன எலாம் மனத்தால் கருதிக் கொண்டு
சிந்தை தனில் அர்ச்சிக்கச் சிவனை ஞானத்தால்
சிந்திக்கச் சிந்திக்கத், தர்ப்பணத்தை விளக்க
வந்திடும் அவ்வொளி போல் மருவி அரன் உள்ளத்தே
வரவர வந்திடுவன்; பின் மலம் ஆனது அறுமே. 301

(இதன் பொருள்):– அந்தரியாகம்தன்னை– மேற்கூறிய அகப்பூசனையை, முத்தி சாதனமா அறைந்திடுவர்– முத்திக்கு ஏதுவாகச் சாதிக்கத்தக்கது என்று பெரியோர் கூறுவர், அதுதானும் ஆன்மசுத்தி ஆகும்– அதுவும் ஆன்ம சுத்தியை வருவிக்கும். எவ்வாறெனில், கந்தம் மலர் புகை ஒளி மஞ்சனம் அமுது முதலாக்கண்டன எலாம் மனதாற் கருதிக் கொண்டு– வாசனைத் திரவியம் புட்பம் தூபம் தீபம் அபிடேககத்திரவியம் திருவமுது முதலிய வாகக் காட்டிய பூசைப் பொருள்களையெல்லாம் மனத்தாற் கற்பித்துக் கொண்டு, சிவனை சிந்தைதனில் அர்ச்சிக்க– சிவனை ஆன்மாவில் வைத்துப் பூசித்து, ஞானத்தாற் சிந்திக்கச் சிந்திக்க– அருள் வழி நின்று மீட்டும் மீட்டும் தியானிக்க. தர்ப்பணததை விளக்க வந்திடும் அவ்வெளி போல– அரன் உளத்தே மருவிவரவர வந்திடுவன்– சிவனும் ஆன்மாவின் கண்ணே பொருந்தி மேலிட்டு மேலிட்டு வந்து விளங்கித் தோன்றுவன், பின் மலமானது அறும்– அவ்வாறு சிவன் தோன்ற ஞானம் உற்பவிப்பதனால் ஆணவ மலம் பற்றறக் கழியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலம் கழிவது ஆகிய ஆன்ம சுத்திக்குப் புறப்பூசை அங்கம் எனவும், அகப் பூசை செய்யும் முறை இவ்வாறு எனவும் கூறுகின்றது

**புறம்பேயும் அரன் கழல்கள் பூசிக்க வேண்டில்**
**பூமரத்தின் கீழ்உதிர்ந்த போதுகளும் கொண்டு.**
**சிறந்து ஆகும் சீர்ச்சிவனை ஞானத்தால் அங்குச்**
**சிந்திக்கும்படி இங்குச் சிந்தித்துப் போற்றி**
**அறம் பாவங்கட்கு நாம் என் கடவோம் என்றும்**
**ஆண்டவனைக் கண்டக்கால் அகம் புறம் என்னாதே**
**திறம்பாதே பணி செய்து நிற்கை அன்றோ**
**சீர் அடியார் தம்முடைய செய்திதானே.** 302

(இதன் பொருள்):– புறம்பேயும் அரன் கழல்கள் பூசிக்க வேண்டின்– மேற்கூறியவாறு அகத்தேயன்றிப் புறத்தேயும் முதல்வன் திருவடிகளைப் பூசிக்க வேண்டுமாயின், பூமரத்தின் கீழ் உதிர்ந்த போதுகளும் கொண்டு– பூமரங்களின் கீழே உதிர்ந்து கிடக்கும் பூக்களும் பிறவுபகரணங்களுங் கொண்டு, சிறந்து ஆரும் சீர்ச் சிவனை– சிறந்து விளங்குகின்ற புகழையுடைய முதல்வனை, அங்கு ஞானத்தால் சிந்திக்கும்படி– அகப் பூசையிலே திருவருளின் வழி நின்று தியானித்தவாறே, இங்கு சிந்தித்துப் போற்றி– இப்புறப் பூசையிலும் தியானித்து வணங்கி, அறம் பாவங்கட்கு நாம் என் கடவேம் என்றும்– நம்மால் விளையும் புண்ணிய பாவங்கட்குநாம் சுதந்திரர் அல்லேம் என்றும், ஆண்டவனைக் கண்டக்கால் அகம் புறம் என்னாது திறம்பாது– புறத்தே குருலிங்க சங்கமமாகிய இறைவன் திருவுருவங்களைத் தரிசிக்கில் அகத்து லிங்கத்துக்கும் இவ்வுருவங்கட்கும் பேதம் நினைந்து பிறழாமலும், பணி செய்து நிற்கை அன்றோ– எங்கும் சிவமாகக் கண்டு வழிபடுதலன்றோ, சீர் அடியார் தம்முடைய செய்தி– சிறந்த மெய்யடியார்களது செயலாம்.

புறப்பூசை, அகப்பூசை என்னும் இரண்டின் உள்ளும் அகப்பூசையே சிறப்பு எனக் கூறுகின்றது

**இந்தனத்தில் எரி பாலில் நெய் பழத்தில் இரதம்**
**எள்ளின்கண் எண்ணெயும்போல் எங்கும் உளன் இறைவன்**
**வந்தனை செய்து எவ்விடத்தும் வழிபடவே அருளும்;**
**மலம் அறுப்போர் ஆன்மாவின் மலர் அடி ஞானத்தால்**
**சிந்தனை செய்து அர்ச்சிக்கச் சிவன் உள்ளத்தே தோன்றித்**
**தீ இரும்பைச் செய்வதுபோல் சிவன்தன்னைப்**
**பந்தனையை அறுத்துத் தான் ஆக்கித் தன் உருவப்**
**பரப்புஎல்லாம் கொடுபோந்து பதிப்பன் இவன்பாலே.** 303

(இதன் பொருள்):– இந்தனத்தின் எரி பாலில் நெய் பழத்தி விரதம் எள்ளின் கண் எண்ணெயும் போல– விறகின் கண் தீயும் பாலின் கண் நெய்யும் பழத்தின் கண் சுவையும் எள்ளின் கண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணெயும் போல, இறைவன் எங்கும் உள்ன்– முதல்வன் எங்கும் ஆன்மாக்களது பக்குவத்திற்கேற்பத் தோன்றியும் தோன்றாதும் உடனாயும் நிற்பனாதலால், எவ்விடத்தும் வந்தனை செய்து வழிபடவே அருளும்– சராசரமாகிய யாவும் சிவமயமாகக் கண்டு அவற்றின் வைத்து வணங்கி வழிபடவே பக்குவத்துக்கேற்ப யாவர்க்கும் அநுக்கிரகஞ் செய்வன் ஆயினும், மலம் அறுப்போர்– பிறவி தோறும் பற்றிய மல வாதனையினிடருற்று அதனைத் தவிர்க்க விரும்புவோர், ஆன்மாவில் மலரடி ஞானத்தாற் சிந்தனை செய்து அர்ச்சிக்க– ஆன்மாவினகத்தே இருதய கமலத்திலிங்கத்தைத் திருவடிஞானமே துணைக்கொண்டு தியானித்துப் பூசை செய்யக் கடவர். சிவன் உளத்தே தோன்றி– அவ்வாறு பூசிக்கவே மறைந்து நிற்குஞ் சிவன் வெளிப்பட்டான் மாவினுள்ளே தோன்றி, தீ இரும்பைச் செய்வது போல்– தீயானது தன்கணடைந்த இரும்பை மாசு நீக்கித் தன் வண்ணமாக்குதல் போல, சீவன் தன்னைப் பந்தனையை அறுத்துத் தானாக்கி– ஆன்மாவையும் அதனை அநாதியே பொருந்திய பந்தத்தினின்றும் விடுவித்துத் தானாம் வண்ணமாக்கி, தன் உருவப் பரப்பையெல்லாம் கொடு புகுந்து– தனது சொரூப இலக்கணமாகிய முற்றறிவு முதலியவற்றையெல்லாங் கொடுத்துட்புகுந்து நின்று, இவன் பாலே பதிப்பன்– அவ்வான்மாவின் மீது மலரடியைப் பதிப்பன்.

## பத்தாம் சூத்திரம்

ஏகனாய் நிற்றல், இறைவணி நிற்றல் என்னும் இருதிறத்தாலும் மும்மலங்களும் நீங்கும் என சூத்திரப் பொருளைத் தொகுத்துக் கூறுகின்றது

**இவன் உலகில் இதம் அகிதம் செய்த எல்லாம்**
**இதம் அகிதம் இவனுக்குச் செய்தார் பால் இசையும்;**
**அவன் இவனாய் நின்ற முறை ஏகன் ஆகி,**
**அரன் பணியில் நின்றிடவும் அகலும் குற்றம்**
**சிவனும் இவன் செய்தி எல்லாம், என்செய்தி என்றும்,**
**செய்தது எனக்கு, இவனுக்குச் செய்தது என்றும்,**
**பவம் அகல உடனாகி நின்று கொள்வன், பரிவால்**
**பாதகத்தைச் செய்திடினும் பணி ஆக்கி விடுமே.** 304

(இதன் பொருள்):– இவன் உலகில் இதம் அகிதம் செய்த எல்லாம்– சிவஞானப் பேறுற்றோன் உலகியலிலே செய்தனவாகிய நல்வினை தீவினைகளின் பயன்களியாவும், அவன் இவனாய் ஏகனாகி நின்றமுறை– முதல்வன் இச்சிவஞானியோடு பிரிப்பின்றி அவனேயாய் உடனின்ற முறைமையினால், இதம் அகிதம் இவனுக்குச் செய்தார்பால் இசையும்– நல்வினை தீவினைகளை இவனுக்குப் புரிந்தார் மாட்டுப் பொருந்தும், அரன்பணியில் நின்றிடவும்– தன் செயலற்றுத் தலைவன் பணியிலே நின்றொழுகுதலாலே, குற்றம் அகலும்– வினைவிளைவுக்குக் காரணமாகிய மலக்குற்றம் அகலும், சிவனும் இவன் செய்தி எல்லாம் என் செய்தி என்றும்– முதல்வனும் இச்சிவஞானியது வினைகள் யாவும் தஞ்செயலாகவும், இவனுக்குச் செய்தது எனக்குச் செய்தது என்றும்– இச்சிவஞானிக்குப் பிறர்செய்த வினைகள் யாவும் தமக்கே செய்தனவாகவுங் கொண்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவம் அகல உடனாகி நின்று கொள்வன்- மேலும் பிறவியானது அவனை வந்தடையாவண்ணம் தாமவனோடுடனாக நின்று வினைகளையெல்லாம் ஏற்றுக்கொள்வன். பரிவால் பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கிவிடும்- ஆதலால் அவன் சிவநேயத்தழுந்தி நின்று பாதகத்தையே ஒருக்காற் செய்திடினும் அதனையும் தனது பணியாகிய அறமாக்கிக்கொள்வான்.

ஏகன் ஆகி நின்றால் அன்றி, யான் எனது என்னும் செருக்கு அறுவது இல்லை எனக் கூறுகின்றது

யான் செய்தேன் பிறர் செய்தார் என்னது யான் என்னும்
இக்கோணை ஞான எரியால் வெதுப்பி நிமிர்த்துத்
தான் செவ்வே நின்றிட அத்தத்துவன்தான் நேரே
தனை அளித்து முன் நிற்கும் வினை ஒளித்திட்டு ஓடும்;
நான் செய்தேன் எனும் அவர்க்குத்தான் அங்கு இன்றி,
நண்ணுவிக்கும் போகத்தைப், பண்ணுவிக்கும் கன்மம்
ஊன் செய்யா ஞானம்தான் உதிப்பின் அல்லால்,
ஒருவருக்கும் யான் எனது இங்கு ஒழியாதன்றே. 305

(இதன் பொருள்):- யான் செய்தேன் பிறர் செய்தார் என்னது யான் என்னும் இக்கோணை- யான் பிறர்க்கு இதமகிதம் செய்தேன்; பிறர் எனக்கு அவற்றைச் செய்தார் என்றும், எனது என்றும் யான் என்றும் அபிமானித்து நிற்றலாகிய மலக்குற்றத்தை, ஞானஎரியால் வெதுப்பி நிமிர்த்து- ஞானாக்கினியினாலே காய்ச்சித் தீர்த்து, தான் செவ்வே நின்றிட- தான் மெய்ஞ்ஞானத் திறத்து நிற்க, அத்தத்துவன் தான் நேரே தனை அளித்து முன் நிற்கும்- அம்முதல்வன் ஆன்மசொரூபத்தை மறைத்து நேரே தற் சொரூபத்தை விளக்கி முற்பட்டுத் தோன்றும், வினை ஒளித்திட்டு ஓடும்- அவ்வாறு தோன்றவே வினைகள் யாவும் பயன்பட நில்லாது விரைவனீங்கும், நான் செய்தேன் எனும் அவர்க்கு- நான் செய்தேன் என்பது முதலாய அபிமானமுடையோர்க்கு, தான் அங்கு இன்றி போகத்தை நண்ணுவிக்கும்- முதல்வன் முற்பட்டு விளங்கித் தோன்றுதலின்றிக் கன்மப் பயனாகிய இன்ப துன்பங்களைப் புசிக்ச் செய்வன், கன்மம் பண்ணு விக்கும்- அங்ஙனம் புசிக்கும்போதே மேலித மகிதமாகிய ஆகாமியங்களையும் ஏறச் செய்வன், ஊன் செய்யா ஞானம்தான் உதிப்பின் அல்லால்- ஆகவே, உடம்பிற்பட்டுப் பிறத்தலையொழிப்பதாம் மெய்ஞ்ஞானம் தோன்றினாலன்றி, ஒருவருக்கும் யான் எனது இங்கு ஒழியாது- யாவர்க்கும் யான் எனது என்ற அபிமானம் இப்பிறவியில் விட்டு நீங்காது.

இறைபணியில் நின்றால் அன்றி, இந்திரியங்களின் வழிபட்டுச் செல்லும் பரதந்திரம் நீங்குவது இல்லை எனக் கூறுகின்றது

இந்திரியம் எனைப் பற்றி நின்றே என் வசத்தின்
இசையாதே, தன் வசத்தே எனை ஈர்ப்பது; இவற்றைத்
தந்தவன் தன் ஆணைவழி நின்றிடலால் என்றும்
தான் அறிந்திட்டு இவற்றினொடும் தனை உடையான் தாள்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தனை செய்து, இவற்றின் வலி அருளினால் வாட்டி
வாட்டம் இன்றி இருந்திடவும், வரும் செயல்கள் உண்டேல்
முந்தனுடைச் செயல் என்று முடித்து ஒழுக, வினைகள்
மூளா, அங்கு ஆளாகி மீளான் அன்றே. 306

(இதன் பொருள்):- இந்திரியம் எனைப்பற்றி நின்றே- என்னின் வேறாகிய இந்திரியங்கள் வினைப்பயனுகர்ச்சிக்காக என்னுடன் கூடி நின்றனவாயினும், என்வசத்தின் இசையாதே- என்வசத்தாக நின்றியங்காது, எனை ஈர்ப்பது- என்னைத் தம்வசமாக்கி விடயங்களிலிழுத்து அழுத்துவது, இவற்றைத் தந்தவன்றன் ஆணைவழி நின்றிடலால் என்றும் தான் அறிந்திட்டு- அவற்றை எனக்குத் தந்த இறைவனது ஆணைவழிக்கொண்டு அவை நிற்றலானேயாம் என்றும் அறிந்து, இவற்றினொடும் தனை உடையான் தாள்கள் வந்தனைசெய்து- அவ்விந்திரியங்களையும் தன்னையுமே தமதுடைமைப் பொருள்களாகக் கொண்ட இறைவனது திருவடிகளைப் போற்றி, இவற்றின் வலி அருளினால் வாட்டி- அவ்விந்திரியங்களின் வன்மையை இறைபணி நிற்றலென்னும் மெய்யுணர்வாகிய ஞானசத்தியினாற் கெடுத்து, வாட்டமின்றியிருந்திடவும்- தான் ஒருவாற்றானும் கலக்கமின்றி அவன் செயலையே கண்ணுற்று இருக்கவும், வரும் செயல்கள் உண்டேல்- பழக்கம் பற்றி ஒருக்கால் நல்வினை தீவினைகள் இயலுமாயின், முந்தனுடைச் செயல் என்று முடித்து ஒழுக- அவ்வினை கடாமே முதல்வனது திருவிளையாட்டாமென்று திட்டப்படுத்தி இறை பணியிலொழுகவர, வினைகள் மூளா- ஆகாமிய வினைகள் மேலேறாவாம், அங்கு ஆளாகி மீளான் அன்றே- அதனால் சிவஞானி அரனடிக்காளாகி மீட்டும் வினைவயப்படு மாறின்றிபிருப்பன்.

இறைபணி நிற்பது இவ்வாறு எனவும், இறைபணி நின்றவர் செயலை இறைவன் தன் செயல் என ஏன்று கொள்வதும் பிறர்செயலை அவ்வாறு என்று கொள்ளாது அவர் செயலாகப் பயன் அனுபவிக்கச் செய்வதும் பற்றி, இறைவனது நடுவுநிலைக்குக் குறை ஆகாது எனவும் கூறுகின்றது

சலம் இலனாய், ஞானத்தால் தனை அடைந்தார் தம்மைத்
தானாக்கித், தலைவன் அவர் தாம் செய்வினை தன்னால்
நலமுடனே பிறர் செய்வினை ஊட்டி ஒழிப்பானாய்
நணுகாமல் வினை அவரை நாடிக் காப்பன்;
உலகினில் என் செயல் எல்லாம் உன்விதியே, நீயே,
உள் நின்றும் செய்வித்தும் செய்கின்றாய் என்றும்,
நிலவுவதோர் செயல் எனக்கு இன்று உன் செயலே என்றும்,
நினைவார்க்கு வினைகள் எல்லாம் நீங்கும் தானே. 307

(இதன் பொருள்):- தலைவன்- முதல்வன், சலம் இலனாய்- தமக்கு ஒருவர் மாட்டு விருப்பும் பிறிதொருவர் மாட்டு வெறுப்புஞ் செலுத்துவதாகிய விகாரம் வந்தடையாமலே, ஞானத்தால் தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்தார் தம்மைத் தான் ஆக்கி– சிவஞான விளைவினால் அருள்வழியே நின்று தம்மைச் சரண் புகுந்த மெய்யன்பர்களைத் தானாம் வண்ணஞ் செய்து, அவர் தாம் செய்வினை தன்னால் பிறர் செய்வினை நலமுடனே ஊட்டி ஒழிப்பானாய்– அவர் இயற்றும் வினைகளின் பயனைக்கொண்டு அவர்க்கு இதமகிதங்கள் செய்யும் பிறரது வினைப்பயன்களைக் கருணையினாலே ஊட்டுவித்தொழிப்பவனுமாய், வினை அவரை நணுகாமல் நாடிக் காப்பன்– இதமகிதங்கள் அவரை வந்தடையாமே முன்னின்று காத்தருளுவன், ஆகையால், உலகினில் என்செயல் எல்லாம் உன்விதியே– உலகியலில் நின்று யான் செய்யுஞ் செயல்களெல்லாம் உன் பணியேயாகும், நீயே உள் நின்றும் செய்வித்தும் செய்கின்றாய் என்றும்– நீயே என்னுட் பிரிப்பற நின்று அநுபவித்தும், பிறரினின்று அவராலெனக்கு வினைகளைச் செய்வித்தும, விளையாட்டயர்கின்றாயென்றும், அதனால், நிலவுவது ஓர் செயல் எனக்கு இன்று உன்செயலே என்றும் நினைவார்க்கு– உண்மையினுளதாய ஓர் வினையும் எனக்கு இல்லையாகவும் உனது திருவிளையாடல் தானே என்றும் கருதும் ஞானியர்க்கு, வினைகள் எல்லாம் நீங்கும் தானே– ஆகாமியமாகிய வினைகள் யாவும் பயன்தருமாற்றலின்றி ஒழிந்தேவிடும்.

எல்லாம் சிவன் செயல் என்று எண்ணும் இறைபணியில் நில்லாதவர் செய்யும் கிரியா யோகங்களால், பிறப்பு அறாது எனக் கூறுகின்றது

நாடுகளில் புக்கு உழன்றும். காடுகளில் சரித்தும்,
நாக முழை புக்கு இருந்தும். தாகம் முதல் தவிர்த்தும்,
நீடுபல காலங்கள் நித்தராய் இருந்தும்,
நின்மல ஞானத்தை இல்லார் நிகழ்த்திடுவர் பிறப்பில்
ஏடுதரு மலர்க் குழலார் முலைத் தலைக்கே இடைக்கே
எறிவிழியின் படுகடைக்கே கிடந்தும். இறை ஞானம்
கூடும் அவர். கூடரிய வீடும் கூடிக்
குஞ்சித்த சேவடியும் கும்பிட்டே இருப்பர். 308

(இதன் பொருள்):– நாடுகளில் புக்கு உழன்றும்– மூர்த்தி தலம் தீர்த்த விசேடம் நோக்கி ஊரூராயலைந்து திரிந்தும், காடுகளில் சரித்தும்– வனங்களிற் சஞ்சரித்தும், நாகமுழை புக்கு இருந்தும்– மலைக்குகையுட் சென்று யோகத் திருந்தும், தாகம் முதல் தவிர்ந்தும்– தாகம் பசி முதலியவற்றை அடக்கித் தவசு செய்தும், நீடுபல காலங்கள் நித்தராய் இருந்தும்– வாணாளைப் பெருக்கி நெடுங்காலம் மரணமற்றிருந்தும், நின்மல ஞானததை இலார்– சிவஞானத்தைப் பெறாதார், பிறப்பில் நிகழ்ந்திடுவர்– மேலும் பிறத்தலாகிய நிகழ்ச்சியுட்படுவர், இறைஞானம் கூடும் அவர்– சிவஞானங் கைவரப் பெற்றோர், ஏடுதரும் மலர்க்குழலார் முலைத்தலைக்கே இடைக்கே எறி விழியின் படுகடைக்கே கிடந்தும்– இதழ் விரியும் மலர்மாலை சூட்டிய கூந்தலையுடைய மங்கையர் கொங்கைகளிடத்தும் இடையிடத்தும் வெறித்த கண்களின் கொடிய கடையிடத்தும் தோய்ந்திருப்பினும், கூடரிய வீடும் கூடி– பெறுதற்கரிய வீடுபேற்றினையும் பெற்று, குஞ்சிததசேவடியும் கும்பிட்டே இருப்பர்– தூக்கி நடனஞ்செய்து நிற்கும் சிவந்த திருவடியையும் கைகூப்பி வணங்கியிருப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைபணியில் நின்றவர் இந்திரியங்களோடு கூடினாலும், பற்று அற்று இருப்பர் என்பதை உவமை முகத்தால் விளக்குகின்றது

**அங்கித் தம்பனை வல்லார்க்கு அனல் கூடாது ஆகும்;**
**ஔடதம், மந்திரம் உடையார்க்கு அருவிடங்கள் ஏறா;**
**எங்கித்தைக் கன்மம் எலாம் செய்தாலும் ஞானிக்கு**
**இருவினைகள் சென்று அணையா முற்செய்வினை இங்குத்**
**தங்கிப்போம் பாத்திரமும் குலாலன் வினை தவிர்ந்த**
**சக்கரமும் கந்தித்துச் சுழலுமா போல்**
**மங்கிப்போய் வாதனையால் உழல்விக்கும்; எல்லா**
**மலங்களும் பின் காயமொடு மாயும் அன்றே.** 309

(இதன் பொருள்):- அங்கித் தம்பனம் வல்லார்க்கு அனல் கூடாதாகும்- அக்கினியைத் தம்பனஞ் செய்ய வல்லவர்களுக்கு அவ்வக்கினி சுடுமாறில்லையாம், ஔடதம் மந்திரம் உடையார்க்கு அருவிடங்கள் ஏறா- விடங்ளைத் தடுக்க வல்ல மருந்தும் மந்திரமும் பெற்றுள்ளார்க்குக் கொடிய விடம் தலைக்கேறுமாறில்லை. அவ்வாறே, எங்கு இத்தைக் கன்மமெலாம் செய்தாலும்- எவ்வாற்றானும் தம்பொருட்டன்றியே செயல்களெவற்றையும் செய்யுமாற்றல், ஞானிக்கு இரு வினைகள் சென்றணையா- அவற்றாற் சிவஞானியர்க்கு நல்வினைகள் தீவினைகள் ஏறுமாறில்லையாம், முற் செய்வினை- ஆயின் முன் செய்யப்பட்டுப் பிராரத்த சஞ்சிதங்களாயிருந்து வினை (அநுபவப்பட ஆகாமியமேறாதோவெனில்), இங்கு தங்கிப்போம் பாத்திரமும் குலாலன் வினை தவிர்ந்த சக்கரமும் கந்தித்துச் சுழலுமாபோல்- பெருங்காயம் இருந்தொழிந்த பாத்திரமும் குயவனது வனைதற்றொழிலொழிந்த திகிரியும் தமதியல்பிலுபயோகப்படாதிருந்தும் மணம் வீசுதலும் சுழலுதலும் செய்யுமாறுபோல, மங்கிப்போய் வாதனையாற் சிறிது சிறிதாக அநுபவத்தினுழல்விக்கும், எல்லா மலங்களும் பின் காயமொடு மாயும்- இவ்வாறு கன்மமொழிய, மற்றைய மலங்களுமெல்லாம் பின் உடம்பொழியுங் காலத்து அதனோடு கூட ஒழிந்து கெடும்.

## பதினொராஞ் சூத்திரம்

இறைவன் அத்துவிதமாய் நின்று காட்டிக் காணும் உபகாரத்தைச் சிந்தித்து அன்பு செய்வதனால் மலங்கள் நீங்கிச் சிவானுபவம் உண்டாகும் எனச் சூத்திரப் பொருளைத் தொகுத்துக் கூறுகின்றது

**காயம் ஒழிந்தால் சுத்தன் ஆகி, ஆன்மாக்**
**காட்டக் கண்டிடும் தன்மை உடைய கண்ணுக்கு**
**ஏயும் உயிர் காட்டிக் கண்டிடுமா போல**
**ஈசன் உயிர்க்குக் காட்டிக் கண்டிடுவன்; இத்தை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயும் அறிவு உடையனாய் அன்பு செய்ய
அந்நிலைமை இந்நிலையில் அடைந்த முறையாலே
மாயம் எலாம் நீங்கி, அரன் மலர் அடிக்கீழ் இருப்பன்,
மாறாத சிவானுபவம் மருவிக் கொண்டே. 310

(இதன் பொருள்):- ஆன்மா ஆயும் அறிவுடையவனாய் அன்பு செய்ய- ஆன்மா ஆராய்ந்தறியும் பரஞானப் பேற்றினாற்றலையாய வன்புபூண்டு நிட்டையிலழுந்தி நிற்க, காயம் ஒழிந்தால்- உடல் அழிவு பெறுமாயின், சுத்தனாகி- மலப்பற்றில்லாது பரிசுத்தனாகி, அந்நிலைமை இந்நிலையில் அடைந்த முறையாலே- அந்த மலமுத்த நிலையை இகத்தே ஒருவாற்றா னடைந்து நின்ற முறையாலே (பரத்தும்), மாயமெலா நீங்கி- மலசம்பந்தமாயுள்ள மயக்கமெல்லா நீங்கப்பெற்று, மாறாத சிவாநுபவம் மருவிக் கொண்டே- என்றும் நீங்காத அத்துவிதப் பேரின்பத்தைச் சுவைத்துக் கொண்டு, அரன் மலர் அடிக்கீழ் இருப்பன்- முதல்வனது மலர் போன்ற சீபாதத்தையணைந்திருப்பன், காட்டக் கண்டிடும் தன்மையுடைய கண்ணுக்கு ஏயும் உயிர் காட்டிக் கண்டிடுமபோல- அந்நிலையில், காட்டுங்காற் காணுமாற்றலுள்ள துங்கமாயவிழிக்கு அதனோடியைந்து நிற்கும் உயிர் காட்டியும் தானே கண்டும் இயங்குமாறு போல, ஈசன் உயிர்க்குக் காட்டி இத்தைக் கண்டிடுவன்- முதல்வனும் மலநீக்கம் பெற்றவுயிர்க்குப் பேரின்ப அநுபவத்தைத் துய்ப்பித்துத் தன்பொருட்டன்றித் தானே துய்ப்பவனுமாயிருப்பன்.

சிவானுபவம் உடைய முத்தருக்கு சிவமே அன்றிப் பிற பொருள் தோன்றாது எனக் கூறுகின்றது

பரஞானத்தால் பரத்தைத் தரிசித்தோர், பரமே
பார்த்திருப்பர்; பதார்த்தங்கள் பாரார்; பார்க்க
வருஞானம் பலஞானம், அஞ்ஞான விகற்பம்
வாச்சிய வாசக ஞானம், வயிந்த வத்தின் கலக்கம்
தருஞானம், போக ஞாதிரு ஞான ஞேயம்
தங்கிய ஞானம் சங்கற்பனை ஞானம் ஆகும்;
திரு ஞானம் இவை எல்லாம் கடந்த சிவஞானம்
ஆதலால் சீவன் முத்தர் சிவமே கண்டிருப்பர். 311

(இதன் பொருள்):- பரஞானத்தால் பரத்தைத் தரிசித்தார்- மேலாகிய வீடுபேற்றைத் தரும் மெய்ஞ்ஞானத்தாற் சிவனைத் தரிசித்தோர், பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்- சிவமொன்றனையே கண்டுகொண்டிருப்பர் ஏனைப் பதார்த்தங்களைச் சிறிதுங் காண்பாரல்லர், பார்க்கவரும் பலஞானம் அஞ்ஞான விகற்பம்- அவற்றைக் காணவரும் ஞானங்கள் பலவகை ஞானங்களையும் அறியாமையோடு கூடி வேறுபாடுடையனவாயும் இருக்கும், வாச்சியவாசக ஞானம் வயிந்தவத்தின் கலக்கம் தருஞானம்- சொற்பொருளாலும் சொல்லாலும் உண்டாகும் ஞானம் விந்துவிலே தோன்றி வைகரி முதலிய நால்வகை வாக்கைப்பற்றி நிகழுவதும் ஐயந் தருவதுமாயிருக்கும் ஞானமாம், போக ஞாதிரு ஞானம் ஞேயம் தங்கிய ஞானம் சங்கற்பனை ஞானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகும்– போக அநுபவத்தோடு கூடி ஞாதிருவும் ஞானஞேயங்களும் பொருந்திய ஞானம் சங்கற்பஞானமாம், திருஞானம் இவை எல்லாம் கடந்த சிவஞானம்– தலைமையாகிய பரஞானம் இவையனைத்திற்கு மேலான சிவஞானமாகம். ஆதலாற் சீவன் முத்தர் சிவமே கண்டு இருப்பர்– ஆதலால் இதனைப் பெற்ற சீவன்முத்தர் சிவமொன்றையே கண்டு சிவாநுபூதியிற்றிளைத்திருப்பர்.

திவ்விய தேகத்தோடு இருப்பதே முத்தி என்பவரை மறுத்து சிவானுபவம் உடையவர்க்கு மாயா மலம் பற்றறக் கழியம் எனக் கூறுகின்றது

**அநாதி உடல் ஒன்றினை விட்டு, ஒன்று பற்றிக் கன்மால்**
**ஆய் அழிந்து வருதலால், அந்தம் இல்லை;**
**பின் ஆதி அருள் பெற்றவர்கள் நித்த உருவத்தைப்**
**பெற்றிருக்கை முத்தி எனில், பெறும் பதமே இதுவும்**
**இனாது நிலை இது தானும் காயம் உண்டேல்**
**இரும் கன்மம் மாயை மலம் எல்லாம் உண்டாம்;**
**மனாதி தரும உடல் ஆதி காரியத்தால் அநாதி**
**மலம் அறுக்கும் மருந்து அற்றால் உடன் மாயும் காணே.** 312

(இதன் பொருள்):– உடல் ஒன்றினை விட்டு ஒன்று ப்றறிக் கன்மால் ஆய் அழிந்து வருதலால் அநாதி– உடம்பு ஒன்றழியப் பின்னொன்றுறுவதாய் உயிர்களைப் பற்றித் தொடர்ச்சியாய்க் கன்மத்துக்கேற்ப ஆகியும் அழிந்தும் வருதலினாலே அநாதியாம், அந்தம இல்லை– ஆதலின் அதன்று முடிவுமாகுமாறில்லை, பின் ஆதி அருள் பெற்றவர்கள் நித்த உருவத்தைப் பெற்று இருக்கை முத்தி எனில்– ஆகவே முதல்வனது திருவருளைப் பெற்றவர்கள் நித்தியமாகிய திவ்விய சரீரத்தைப் பெற்றிருக்கை தானே முத்தியாமென்னில், இதுவும் பெறும் பதமே– இப்பேறும் பெறுவதாகிய ஓர் பதமுத்தியாய் அடைவதாகிய வீட்டு நிலையாகாதொழியும், இது தானும் இனாது நிலை– அன்றியும் இவ்வாறு பெற்ற நிலையுமே துன்பத்தைத் தரும் நிலையாம், எவ்வாறெனில், காயம் உண்டேல் இரும்கன்மம் மாயை மலம் எலலாம் உண்டாம்– சரீரம் உளதாகவே அதனோடு மிக்க கன்மம் மாயை ஆணவமாகிய அனைத்தும் உளவாகும். ஆகவே வீடுபேறாயவாறுமின்றாய் அக்கூற்றுப் பொருந்தாது, மனாதிதரும் உடல்– மனம் முதலியவற்றோடு கூடிய உடல்களியாவும், அநாதி மலம் அறுக்கும் மருந்து– உயிர்களை அநாதியே பந்தித்திருக்கும் மலநோயைத் தவிர்க்கும் மருந்தாக உற்றமையின் காரியத்தால் ஆதி– காரணம் பற்றித் தோன்றிய காரியமாதலால் ஆதியாகும், மலம் அற்றால் உடல் மாயும்– ஆகவே காரணமாகிய மலஞ் செயலற்றொழியக் காரியமாகிய உடலும் வேண்டப்படாதொழியும்.

சிவானுபவம் உடையவருக்கு ஆணவமலம் பற்றறக் கழியும் எனக் கூறுகின்றது

**தெரிவு அரிய மெய்ஞ்ஞானம் சேர்ந்த வாறே**
**சிவம் பிரகாசிக்கும்; இங்கே சீவன் முத்தன் ஆகும்;**
**உரிய மலம் ஔடதத்தால் தடுப்புண்ட விடமும்,**
**ஔ் எரியின் ஔிமுன்னர் இருளும் தேற்றின்,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருபால் சேர் நீர் மருவு கலங்களும் போலாகி,
மாயாதே தன் சத்தி மாய்ந்து, காயம்
திரியும் அளவும் உளதாய்ப் பின்பு காயம்
சேராத வகை தானும் தேயும் அன்றே. 313

(இதன் பொருள்):- தெரிவு அரிய மெய்ஞ்ஞானம் சேர்ந்தவாறே- அறிதற்கரிய உண்மைஞானம் வந்தவிடத்து, சிவம் பிரகாசிக்கும்- சிவம் பிரகாசியா நிற்கும், இங்கு சீவன் முத்தன் ஆகும்- இகத்தே ஆன்மா சீவன் முத்தனாகும், உரியமலம்- காயமெடுத்தற்குக் காரணமாயிருந்த கன்மமலம், ஔடதத்தால் தடுப்புண்ட விடும்- மருந்தினாற்றடைப்பட்ட நஞ்சுபோலவும், ஒள் எரியின் ஒளி முன்னர் இருளும்- மிக்க அக்கினிப் பிரகாசத்துக்கு முன்னர் இருள் போலவும், தேற்றின் வருபரல்சேர் நீர்மருவு கலங்களும் போல்- தேற்றாமரத்திலுண்டாகிய வித்துச் சேர்ந்த நீரைப் பொருந்திய கலங்கள் போலவும், மாயாதே தன்சத்தி மாய்ந்து- தான் கெடாதே தன் சத்தி கெட்டு, காயம் திரியும் அளவும் உளதாய்- அவ்வுடம்பு நின்றியங்குமளவும் உளதாய், பின்பு காயம் சேராத வகை தானும் தேயும்- அக்காயம் நீங்கியபின் மற்றொரு காயம் வந்து பொருந்தாதபடி கழந்தொழியும்.

ஆணவமலம் அநாதி ஆதலால், பற்றறக் கழியாது என்பவரை மறுத்துப் பற்றறக் கழியும் என வலியுறுத்துகின்றது

ஆணவம் தான் அநாதி, அந்தம் அடையாது ஆகும்;
அடையின் அந்த ஆன்மாவும் அழியும் எனில், செம்பில்
காணல் உறும் களிம்பு, இரத குளிகை பரிசிக்கக்
கழியும், செம்பு உரு நிற்கக் கண்டோம் அன்றே?
தாணுவின் தன் கழல் அணையத் தவிரும் மலம்; தவிர்ந்தால்
தான் சுத்தனாய் இருக்கை முத்தி; அரன் தாளைப்
பூணவேண்டுவது ஒன்றும் இல்லை எனில், அருக்கன்
புகுத இருள் போம்; அடியில் பொருந்த மலம் போமே. 314

(இதன் பொருள்):- ஆணவம் தான் அநாதி அந்தம் அடையாதாகும்- ஆணவமலமோ அநாதி நித்தமாகி ஆன்மாவோடு கூடியிருக்குமாதலால் அது நாசமடைவதின்றாம், அடையின் அந்த ஆன்மாவும் அழியும் எனின்- நாசமுறுமாயின் அவ்வான்மாவும் அழிவுறுவதாய் நித்தமென்றற்கிழுக்கா மென்னின், அன்று, செம்பில் காணலுறும் களிம்பு இரதகுளிகை பரிசிக்கக் கழியும்- செம்பினிடத்துக் காணப்படும் களிம்பானது இரதகுளிகை பரிசிக்க நீங்கும், செம்புஉரு நிற்கக் கண்டோமற்றே- அங்ஙனம் களிம்பு நீங்கவும் செம்புரு வேறுநிற்கக் கண்டோம், அதுபோல், தாணுவின்தான் கழல் அணைய மலம் தவிரும்- முதல்வனது திருவடி ஞானம் சார்ந்தபோதே ஆணவமலம் நீங்கும், தவிர்ந்தால் தான் சுத்தனாய் இருக்கை முத்தி- அவ்வாறு நீங்க உயிர் மலமுமின்றி இறைவனோடத்துவிதப் படலுமின்றி வேறாய் நிற்றலே முத்தியாம், அரன்தாளைப் பூணவேண்டுவதொன்றுமில்லையெனில்- ஆகவே மேலும் அரன் திருவடியைச் சேர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துவிதப் பேறு பெற வேண்டுவதில்லையெனில், அருக்கன் புகுத இருள்போம்– ஆதித்தனொளி கண்ணுள் வந்தடைந்திருப்பினே இருள் நீங்கும், அதுபோல, அடியிற் பொருந்த மலம் போம்– உயிர் முதல்வன் திருவடியிற் சேர்ந்திருப்பவே ஆணவமலம் பற்றறக் கழியும்.

அநாதியான ஆணவ மலம் கெடும் என்பதற்கு உவமை கூறிக், கெடினும் ஏனைப்பெத்தர் இடத்தில் இருப்பதனால் நித்தத்திற்கு இழுக்கு இல்லை எனக் கூறுகின்றது

நெல்லினுட் தவிடு உமிகள் அநாதியாயே
நெல்லை விட்டு நீங்கும் வகை நின்றநிலை நிகழ்த்தீர்
சொல்லியிடில் துகள் அற்ற அரிசியின்பால் இல்லை;
தொக்கு இருந்து மற்றொரு நெல் தோன்றிடாவாம்
மெல்ல இவை விடும் அறவே; இவை போல அணுவை
மேவும் மலம், உடல் கன்மம் அநாதி விட்டே நீங்கும்;
நல்லசிவ முத்தியின்கண் பெத்தான்மாவை
நணுகி நிற்கும் ஆதலால் நாசமும் இன்றாமே. 315

(இதன் பொருள்):– நெல்லினுக்கு தவிடு உமிகள் அநாதியாயும்– நெல்லுக்குத் தவிடும் உமியும் (முளையும்) அநாதியாக வியைந்திருந்தும், நெல்லை விட்டு நீங்கி அவை நின்ற நிலை நிகழ்த்தீர்– ஒருக்கால் நெல்லைவிட்டு அவை நீங்கி நிற்பது கண்டோமே, அநாதியென்பது யாண்டாம் எனில், சொல்லியிடில், துகளற்ற அரிசியின்பால் இல்லை– கூறுங்கால் குற்றநீங்க அரிசியாகத் தீட்டிய நெல்லிடத்து அவை இல்லையாம், தொக்கு இருந்து மற்று ஒரு நெல்தோற்றிடாவாம்– (இரதக்குளிகை கண்ட செம்பிடத்திற் களிம்பு தோற்றாதிருப்பதுபோல்). இவை அரிசியிடத்தும் அவ்வரிசி நெல்லாகும்படி அவை தோன்றுவதில்லை. மெல்ல இவைவிடும் அறவே– ஆகவே தவிடுமுளைகள் நெல்லை மெல்ல மெல்ல விட்டுநீங்குவதே முறையாம், அவைபோல அணுவை அநாதிமேவும் மலம் உடல் கன்மம் நல்ல சிவமுத்தியின்கண் விட்டே நீங்கும்– அவற்றைப் போல உயிரை அநாதியே பந்தித்துள்ள மலமாயை கன்மங்களும் சிவமுத்தி நிலையடைய உயிரைவிட்டு நீங்கியேவிடும், பெத்தான்மாவை நணுகிநிற்கும் ஆதலினால் நாசமுமின்றாமே– முத்தி நிலை கூடாத பெத்தர்களை அடைந்து நிற்கும். ஆதலால் நித்தப் பொருளுமாகும்.

அநாதி சம்பந்தம் ஆன ஆணவ மலத்தினின்று முத்திக் காலத்தில் உயிர் நீங்குவது போல, பெத்தம் முத்தி இரண்டிலும் இறைவனை விட்டு உயிர் தனித்து நிற்பது இல்லை எனக் கூறுகின்றது

எவ்விடத்தும் இறை அடிமை இன்றி அமைந்து ஒன்றை
அறிந்து இயற்றியிடா உயிர்கள்; ஈசன் தானும்
செவ்விதினில் உளம் புகுந்து செய்தி எல்லாம் உணர்ந்து
சேட்டிப்பித்து எங்குமாய்ச் செறிந்து நிற்பன்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுயிர்கள் தோற்றும் போது, அவனை இன்றி தோற்றா;
இவற்றினுக்கு அம் முதல் எழுத்துக்கு எல்லாமாய் நிற்கும்
அவ் உயிர் போல நின்றிடுவன்; ஆதலால் நாம்
அரனடியை அகன்று நிற்பது எங்கே யாமே? 316

(இதன் பொருள்):- உயிர்கள் எவ்விடத்தும் இறை அடியை இன்றி ஒன்றை அமைந்து அறிந்து இயற்றிடா- ஆன்மாக்கள் (பெத்த நிலையில்) யாண்டும் முதல்வனது திருவடியாகிய அருளையின்றி ஒரு விடயத்தையும் பற்றி அறிந்து அநுபவியா, ஈசன் தானும் செவ்விதினின் உளம் புகந்து செய்தியெலாம் உணர்ந்து சேட்டிப்பித்து எங்குமாய்ச் செறிந்து நிற்பன்- (முத்தநிலையில்) முதல்வனே ஆன்மாவினுள்ளே அத்துவிதமாக நின்று வினைகளைப் பற்றியும் அறிந்தும் அநுபவப்படுத்தியும் சராசரமெல்லாவற்றிலும் செறிந்து நிற்பன், இவ்வுயிர்கள் தோற்றும்போது அவனையின்றித் தோற்றா- பெத்தான்மாக்கள் ஒடுங்கி மீளத் தோன்றும்பொழுது முதல்வனையின்றித் தோன்றாவாம், அஃதெவ்வாறெனில், அம்முதலெழுத்துக்கு எல்லாமாய் நிற்கும் அ உயிர்போல் இவற்றினுக்கு நின்றிடுவன்- அகரத்தை முதற்கொண்டுள்ள எழுத்துக்களுக்கெல்லாம் இன்றியமையாது வேண்டப்படும் அகரவுயிர்போல ஆன்மாக்களுக்கும் இன்றியமையாது முதல்வன் வேண்டப்படும், ஆதலால் நாம் அரன் அடியை அகன்று நிற்பது எங்கேயாம்- ஆதலால் நாம் முதல்வனது திருவடியை அகன்று நிற்றல் பெத்தம் முத்தம் ஆகிய எவ்விடத்தும் இல்லை.

இறைவன் அத்துவிதமாய் நின்று காட்டிக் காணும் உபகாரத்தைச் செய்யினும், அவ்வாறு செய்கிறான் என்பதை அறிவுடைய பக்குவம் உடையவரே அன்றி, அபக்குவர் அறியார் என்று கூறுகிறது

எங்கும் தான் நிறைந்து சிவன் நின்றான் ஆகில்
எல்லாரும் காணவே வேண்டும் தான் என்னில்,
இங்கும்தான் அந்தகருக்கு இரவி, இருள் ஆகும்;
ஈசன் அருட்கண் இல்லார்க்கு ஒளியாயே இருளாம்;
பங்கம்தான் எழும் பதுமம் பக்குவத்தை அடையப்
பரிதி அலர்த்திடுவது போல் பருவம்சேர் உயிர்க்குத்
துங்க அரன் ஞானக்கண் கொடுத்து அருளினாலே
சோதிக்குள் சோதியாய்த் தோன்றிடுவன் காணே. 317

(இதன் பொருள்):- சிவன் எங்குந்தான் நிறைந்து நின்றானாகில்- முதல்வன் எவ்விடத்துமே கலந்து பிரிப்பற நிற்பானாகில், எல்லாரும் காணவே வேண்டும் தான் என்னில்- அத்தன்மையையெல்லாருமறிந்து முத்தியின்பமநுபவிக்க வேண்டுமே என்னில் (அன்று), இங்குந்தான் இரவி அந்தகருக்கு இருளாகும்- இவ்வுலகிலேயே இரவி ஒளியாயிருந்தும் காணுங் கண்ணில்லாக் குருடர்க்கு இருளாகவே தோன்றும். அதுபோல், ஈசன் ஒளியாயே அருட் கண்ணில்லார்க்கு இருளாம்- முதல்வன் ஞானவருக்கனாயிருந்தும் அருட்கண் பெறாதோர்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியவரான. பங்கந்தான் எழும்பதுமம் பக்குவத்தையடையப் பரிதி அலர்த்திடுவது போல்– சேற்றிலே தோன்றிய தாமரை பக்குவமடைந்தவிடத்து அதனை ஆதித்தன் அலரச் செய்வது போல, பருவம் சேர் உயிர்க்கு– மலபரிபாக பக்குவமடைந்த உயிர்களுக்கு துங்க அரன் அருளினாலே ஞானக்கண் கொடுத்து– மாட்சிமையுடைய முதல்வன் கருணையினாலே ஞானக்கண்ணைக் கொடுத்து, சோதிக்குள் சோதியாய் தோன்றிடுவன்– அறிவினுளறிவாய் நின்று பிரகாசிப்பான். அதனால் எல்லாருமநுபவிக்காமையின் அத்துவிதப் பரமுத்தி யுண்மைக்கிழுக்கின்றாம்.

முத்தி நிலையை வேறு வேறு கூறும் ஈசுர அவிகார வாதி, பரிணாம வாதி, ஐக்கிய வாதிகளை மறுத்து உரைக்கின்றது

**சென்று அணையும் நிழல் போலச் சிவன் நிற்பன் என்னில்**
**சென்று அணையும் அவன் முதலி சிவத்தை அணைந்து ஒன்றாய்**
**நின்றது உயிர் கெட்டு என்னில், கெட்டது அணைவு இன்றாம்;**
**நின்றதேல் கேடு இல்லை; அணைந்து கெட்டது என்னில்,**
**பொன்றினது ஏன்? முத்திவினைப் பெற்றவர் யார்? புகல் நீ;**
**பொன்றுகையே முத்தி எனில், புருடன் நித்தன் அன்றாம்;**
**ஒன்றியிடம் நீரோடு நீர் சேர்ந்தால் போல் என்னில்,**
**ஒரு பொருளாம் அதிபதியோடு, உயிர் பொருள் ஒன்று அன்றே. 318**

(இதன் பொருள்):– சென்று அணையும் நிழல்போல் சிவன் நிற்பன் என்னில்– வேனிலான் வருந்தினோர் சென்று அணைவதாகிய மரநிழலைப் போலப் பக்குவான்மாக்கள் சென்று தம்மை அணைய முதல்வன் விகாரமின்றி நிற்பன் என்னில், சென்று அணையும் அவன் முதலி– மரநீழலுக்குச் சுதந்தரமிலதாக அணைந்தோர்க்கே சுதந்தரமிருந்தவாபோல முதல்வன் சுதந்தரனாகாது உயிரே சுதந்தரனாகும். ஆதலின் நிழலையணைந்த பதிதன் போல உயிர் முதல்வனையடைந்து நிற்றலே முத்தியென்பது பொருந்தாது. உயிர்கெட்டு சிவத்தையணைந்து ஒன்றாய் நின்றது என்னின்– உயிர்கெட்டே சிவத்தோடணைந்து ஒன்றுபட்டு நிற்கும் என்னின், கெட்டது அணைவு இன்றாம்– கெட்டபின் ஒன்று பிறிதினையணையுமாறு செல்லாது. நின்றதேல் கேடு இல்லை– அவ்வாறணையுங்காற் கெட்டும் பின்னிற்கும் என்னில் கெட்டதென்பது இல்லையாம். அணைந்து கெட்டது என்னில்– அணையும் வரையும் நின்று பின்னே கெட்டது என்னில், பொன்றினதேன்– அவ்வாறு பின்கெட வேண்டிய காரணம் யாது, முத்தியினைப் பெற்றவரார்– முத்தியின் பத்தைப் பெற்றது யாது, புகல் நீ– இவ்வாறு கெட்டணைதற்கியல்பாகிய மூவகையானும் வருங்கடாக்களுக்கு விடை கூறுதி, பொன்றுகையே முத்தி எனில்– உயிர் கெட்டழிந்து தானே முத்தியாகுமென்னில், புருடன் நித்தம் அன்றாம்– உயிர் நித்தப் பொருள் என்னும் உண்மை பொய்த்துவிடும், ஆதலால் உயிர் கெட்டுச் சிவத்தை அணையும் என்பது பொருந்தாது, நீரொடு நீர் சேருமாப்போல் உயிர் முதல்வனோடைக்கியமாகும் என்னில், ஒரு பொருளாம்– அவ்வாறு இரண்டாய் நின்று சேர்ந்த நீர் பொருண்மாத்திரையானொன்றேயாம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபதியோடு உயிர் பொருள் ஒன்று அன்றே- அவ்வாறு முதல்வனோடு உயிரும் ஒரு தன்மைத்தாய பொருளல்லவே. ஆதலின் நீரொடு நீர் போலைக்கியமாவது முத்தியாமெனல் பொருந்தாது.

சிவசமவாதி கூறும் முத்தியை மறுத்து உரைக்கின்றது

செம்பு இரத குளிகையினால் களிம்பு அற்றுப் பொன்னாய்ச்
செம்பொன்னுடன் சேரும்; மலம் சிதைந்தால் சீவன்
நம்பனுடன் கூடும் எனில், பொன் போல் அல்லன்;
நற்குளிகை போல அரன், நணுகு மலம் போக்கி
அம்பொன் அடிக்கீழ் வைப்பன்; அரும் களங்கம் அறுக்கும்
அக்குளிகை தானும் பொன் ஆகாதாகும்;
உம்பர் பிரான் உற்பத்தியாதிகளுக்கு உரியன்;
உயிர்தானும் சிவாநுபவம் ஒன்றினுக்கும் உரித்தே. 319

(இதன் பொருள்):- செம்பு இரதகுளிகையினால் களிம்பு அற்று பொன்னாய்ச் செம்பொன்னுடன் சேரும்- செம்பு இரதக் குளிகையினாற் களிம்பு நீங்கியவிடத்துப் பொன்னாகிச் செம்பொன்னோடொத்து ஒன்றாதல் போல, மலம் சிதைந்தால் சீவன் நம்பனுடன் கூடும் எனின்- ஆணவாதி மலமாசு நீங்கியவிடத்து உயிரும் முதல்வனோடொத்து ஒன்றாகும் என்னில், பொன்போல் அல்லன்- செம்பினுக்கு ஒரு தொழிலுஞ் செய்யாது நிற்கும் பொன் போலன்றி, அரன் நற்குளிகைபோல நணுகும் மலம் போக்கி அம் போம் அடிக்கீழ் வைப்பன்- முதல்வன் இரதகுளிகை போல் நின்று உயிருக்கியல்பாயுள்ள மலமாசை நீக்கி மாசற்ற பொன்னாகிய தமது திருவடிப் பரமுத்தியநுபவிப்பனுமாகான், உம்பர் பிரான் உற்பத்தி ஆதிகளுக்குரியன்- ஆகவே தேவாதிதேவனாகும் முதல்வன் சிருட்டியாதி தொழில்களைச் செய்து உயிர்களின் மலத்தை நீக்கும் அதிகாரமுடையன் ஆவன், உயிர்தானும் சிவாநுபவம் ஒன்றினுக்கும் உரித்தே- முத்திநிலையின் முதல்வனோடு அத்துவிதமாய்க் கலந்த உயிருமே சிவாநுபமாய முத்தியின்பத்தைத் துய்த்திருக்கும் அதிகாரம் ஒன்றற்கே யுரித்தாம்; ஆகவே செம்பு பொன்னாய்ச் செம்பொன்னுடன் சேர்வது போல் உயிரும் முதல்வனோடு சேர்ந்திருப்பது முத்தியாமெனல் பொருந்தாது.

இறைவனுக்கும் ஆன்மாவிற்கும் உள்ள அந்தரங்க பேதங்களை எடுத்துக் காட்டி, ஆன்மா இறைவனோடு சமம் ஆகாது என்பதை வலியுறுத்துகிறது

சிவன் சீவன் என்று இரண்டும் சித்து ஒன்றாம் என்னில்,
சிவன் அருட்சித்து; இவன் அருளைச் சேரும் சித்து; அவன்தான்;
பவம், கேடு, புத்தி, முத்தி பண்ணும் சித்து; அவற்றில்
படியும் சித்து அறிவிக்கப்படும் சித்து இவன்தான்;
அவன் தானே அறியும் சித்து; ஆதலினால் இரண்டும்
அணைந்தாலும் ஒன்றாகாது; அன்னியமாய் இருக்கும்
இவன் தானும் புத்தியும் சித்து; இவன் ஆமோ புத்தி?
இது அசித்து என்றிடில் அவனுக்கு இவனும் அசித்தாமே. 320



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்):- சிவன் சீவன் என்ற இரண்டும் சித்து- முதல்வன், உயிர் என்று கூறப்படும் இரு பொருளும் சித்துப் பொருளாதலின், ஒன்றாமென்னின்- எவ்வகையானும் இரண்டும் முத்தியிற் கலந்த பின் ஒரு திறத்தவாய் ஒன்றாமே என்னில், சிவன் அருட்சித்து இவன் அருளைச் சேருஞ் சித்து- முதல்வன் அருளாகிய சித்தாம், உயிரோ அவ்வருளைச் சேர்வதாகிய சித்தாம், அவன் தான் பவன் கேடு புத்தி முத்தி பண்ணும் சித்து (இவன்) அவற்றிற் படியும் சித்து-முதல்வன் பிறப்பு இறப்பு போகம் மோட்சம் அளிப்பதாகிய சித்தாம். உயிர் இன்றி னெல்லாம் அழுந்துவதாகிய சித்தாம், அவன் தானே அறியும் சித்து இவன் தான் அறிவிக்கப்படும் சித்து- முதல்வன் தானாக அறியுஞ் சித்தாம். உயிர் அறிவிக்க அறியுஞ் சித்தாம். ஆதலினால் இரண்டும் அணைந்தாலும் ஒன்றாகாது அநந்தியமாய் இருக்கும்- ஆதலால் அவ்விரு பொருளும் தம்முட் கூடிய வழியும் ஒன்றாகாகது அத்துவிதமாய் நிற்கும். இவன் தானும் புத்தியுஞ் சித்து- உயிரும் புத்தி தத்துவமுஞ் சித்தெனப்படினும், புத்தி இவனாமே- புத்தித்துவமே உயிராதல் செல்லுமோ, இது அசித்தென்றிடில்- உயிரை நோக்கப் புத்திதத்துவம் அசித்தாமென்னில், அவனுக்கு இவனும் அசித்தாமே- முதல்வனை நோக்க உயிரும் அசித்தேயாய் விடும், ஆதலால் உயிர் முத்தியில் முதல்வனோடொத்து ஒன்றாய் நிற்குமெனலும் பொருந்தாது.

ஈசுவர அவிகாரவாதி, பரிணாமவாதி, ஐக்கியவாதி, சிவமவாதிகள் கூறும் ஆசங்கைகளை மறுத்து, வேறு வேறு உவமை எடுத்துக் காட்டி, சித்தாந்தத்தை வலியுறுத்துகின்றது

**இரும்பைக் காந்தம் வலித்தால் போல் இயைந்து அங்கு உயிரை**
**எரி இரும்பைச் செய்வது போல், இவனைத் தான் ஆக்கி**
**அரும்பு இத்து இந்தனத்தை அனல் அழிப்பதுபோல் மலத்தை**
**அறுத்து அமலன் அப்பு அணைந்த உப்பே போல் அணைந்து**
**விரும்பிய பொன்னினைக் குளிகை ஒளிப்பது போல் அடக்கி**
**மேளித்துத் தான் எல்லாம் வேதிப்பான் ஆகிக்**
**கரும்பைத் தேனைப், பாலைக், கனி அமுதைக், கண்டைக்,**
**கட்டியை ஒத்து இருப்பன், அந்த முத்தியினில் கலந்தே.** 321

(இதன் பொருள்):- காந்தம் இரும்பை வலித்தாற்போல் அங்கு உயிரை இயைந்து- காந்தம் இரும்பினைத் தன்னகத்திழுத்து அதனோடு இயைந்து நிற்றல் போல உயிரினையும் தன்னகத்து வலித்து அதனோடு இயைந்து நின்றும், எரி இரும்பைச் செய்வதுபோல் இவனைத்தான் ஆக்கி- தீயானது தன் கண்ணடைந்த இரும்பைத் தன்வண்ணமாக்கி நிற்றல்போல உயிரினைத் தன்வண்ணமாக்கி நின்றும், அனல் அரும்பித்து இந்தனத்தையழிப்பது போல் மலத்தை யறுத்து- நெருப்பானது விறகினுட் சூக்குமமாயிருந்த தீயினை வெளிப்படுத்தி விறகாந் தன்மையையழித்துத் தானேயாக்கி நிற்றல்போல உயிரினது மலத்தை நீக்கித் தானேயாக்கி நின்றும், அப்பு அணைந்த உப்பேபோல் அணைந்து- நீரோடு கலந்த உப்பினைப் போலத் தன்வியாபகத்துட்படக் கலப்பித்து நின்றும், பொன்னினைக் குளிகை ஒழிப்பதுபோல் விரும்பி அடக்கி- களிம்பு நீங்கிப் பொன்னாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்பினை இரதக்குளிகை மறைத்து அடக்கி நின்றும், மேளித்து தான் எல்லாம் வேதிப்பானாகி- மூலிவகையைக் கூட்டி ஒரு லோகத்தைப் பிறிதொன்றாக்கி நிற்கும் இரசவாதிபோல உயிரையும் சிவசமமாக மாற்றி நின்றும், கலந்தே- இவ்வாறெல்லா வகையினும் காட்டலாகும் அத்துவித முறையிற் கலந்து நின்று, அமலன் கரும்பைத் தேனைப்பாலைக் கனி அமுதைக் கண்டைக் கட்டியை ஒத்து இருப்பன் அந்த முத்தியினில்- முதல்வன் கருப்பஞ்சாறு தேன் பால் பழத்திரதம் கற்கண்டு சர்க்கரையாதிய இவற்றின் சுவை போன்ற சிவாநுபூதிப் பேரின்பத்தையுதவிப் பரமுத்தியிலுயிரோடியைந்து நிற்பன்.

## பன்னிரண்டாஞ் சூத்திரம்

சீவன் முத்தர் இயல்பு இவ்வாறு என சூத்திரப் பொருளைத் தொகுத்துக் கூறுகின்றது

செங்கமலத் தாள் இணைகள் சேரல் ஒட்டாத்
திரி மலங்கள் அறுத்துஈசன் நேசரொடும் செறிந்திட்டு
அங்கு அவர்தம் திருவேடம் ஆலயங்கள் எல்லாம்
அரன் எனவே தொழுது இறைஞ்சி ஆடிப்பாடி
எங்கும் யாம் ஒருவர்க்கும் எளியோம் அல்லோம்
யாவர்க்கும் மேல் ஆனோம் என்று இறுமாப்பு எய்தித்
திங்கள் முடியார் அடியார் அடியோம் என்று
திரிந்திடுவர் சிவஞானச் செய்தி உடையோரே. 322

(இதன் பொருள்):- செம் கமலத் தாளிணைகள் சேரல் ஒட்டாத் திரிமலங்கள் அறுத்து- முதல்வனது செந்தாமரை மலர்போலுந் திருவடிகளை அணைய விடாது தடுப்பனவாகிய மலமாயை கன்மங்களை வலிகெடுத்து, எங்கும் யாம் ஒருவர்க்கும் எளியோம் அல்லோம் யாவர்க்கும் மேலானோம் என்று இறுமாப்பெய்தி- அதனாலே யாம் உலகிலெங்கும் மலவரியுட்பட்டமுந்துமியாவர்க்கம் எளியரல்லோம் அவரினும் மேலாயுள்ளோம் என்று பெருமிதக் களிபுற்று, ஈசன் நேசரொடுஞ் செறிந்திட்டு- அதுகாரணமாகச் சிவபிரானது மெய்யன்பர் கூட்டத்துப் பயின்று, ஆடிப்பாடி- ஆடல் பாடல் முதலாய பேரின்பக் குறிகளை நிகழ்த்தி, அங்கவர்தம் திருவேடம் ஆலயங்கள் எல்லாம் அரன் எனவே தொழுது இறைஞ்சி- சிவனடியார்களது திருவேடப் பொலிவினும் சிவாலயங்களினும் மலத்தையெரிக்கும் முதல்வன் செறிவையே கண்டு அவற்றைப் போற்றி வணங்கி, திங்கள் முடியார் அடி ஆர் அடியோம் என்று- பிறையினையணிந்த திருமுடியினையுடைய சிவபிரான் (குருவடிவாய் வந்துநின்று பதித்த) திருவடி தாங்கும் சிற்றடியர் ஆனோம் என்று, திரிந்திடுவர்- உலகியலில் இயங்கி நிற்பர், சிவஞானச் செய்தியுடையோர்- திருவடி ஞானஞ் கைவரப் பெற்று உலகியலிலொழுகும் பெரியோர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீவன் முத்தன் சிவனடியாரிடத்தில் அன்பு உடையவனாகவும், ஏனைய அறிவு இல்லாதவரிடத்தில் வெறுப்பு உடையவனாகவும் இருக்க வேண்டும் எனவும் கூறுகின்றது

ஈசனுக்கு அன்பு இல்லார், அடியவர்க்கு அன்பு இல்லார்;
எவ்வுயிர்க்கும் அன்பு இல்லார், தமக்கும் அன்பு இல்லார்
பேசுவது என் அறிவு இல்லாப்பிணங்களை நாம் இணங்கில்,
பிறப்பினிலும் இறப்பினிலும் பிணங்கிடுவர்; விடு நீ
ஆசையொடும் அரன் அடியார் அடியாரை அடைந் திட்டு,
அவர் கருமம் உன் கருமம் ஆகச்செய்து
கூசி மொழிந்து அருள் ஞானக் குறியில் நின்று,
கும்பிட்டுத் தடம் இட்டுக் கூத்தாடித் திரியே. 323

(இதன் பொருள்):– அடியவர்க்கு அன்பு இல்லார்– சிவனடியார் பால் அன்பில்லாதவர், ஈசனுக்கு அன்பு இல்லார்– முதல்வனிடத்தும் அப்பில்லாதவரேயாவர், எவ்வுயிர்க்கும் அன்பு இல்லார்– அவர பிறவுயிர்கள் யாவற்றினும் அன்பில்லாதவராய், தமக்கும் அன்பு இல்லார்– தம்மேலுமே அன்பில்லாதவராவர், அறிவிலாப் பிங்களைப் பேசுவது என்– இத்தகையோர் உயிரோடிருந்தும் அறிவின்மையாற் பிணமேயாவர் (என்பதன்றி வேறு) எவ்வாறு இவரைக் கூறுவது, இணங்கில் பிறப்பினிலும் இறப்பினிலும் பிணங்கிடுவர்– இத்தகையோரோடு கூடின் மேலும் பிறந்திறந்துழல்வதாகிய துயரத்துட்படுத்துவர், விடுநீ– ஆதலால் இவர்கள் துறவையறவேயொழித்து, ஆசை யொடும் அரன் அடியார் அடியாரை அடைந்திட்டு– பேரன்போடும் சிவனடி பேணுவார்க்கடிமை பூண்டொழுகும் மெய்யன்பர் கூட்டத்திற் கலந்து, அவர் கருமம் உன்கருமமாகச் செய்து– அவர்கள் செயற்பாலவாய பணிகளையெல்லாம் மெய்ப்பணியாகக் கொண்டு, கூசிமொழிந்து பணிவாக அவர் முன்பேசி, அருள் ஞானக் குறியில் நின்று– தற்போதமேதுமின்றி முதல்வனதருளாகும் மெய்ஞ்ஞான உபதேச வழியொழுகி, கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே– கும்பிடுதல் கைகொட்டல் கூத்தாடுதல் முதலிய ஆநந்தச் செயல்களைச் செத்துமியலுவது சிவஞானியர்க்கியைந்த நிலையாம்.

பாசப்பற்று உடையவர், பற்று விடுவதற்குச் சிவனடியாரைச் சிவன் எனவே துணிந்து வழிபடவேண்டும் எனக் கூறுகின்றது

அறிவு அறியான் தனை அறிய யாக்கை ஆக்கி
அங்கு அங்கே உயிர்க்கு உயிராய் அறிவு கொடுத்து அருளால்
செறிதலினால் திருவேடம் சிவன் உருவே ஆகும்;
சிவோகம் பாவிக்கும் அத்தால் சிவனாம் ஆவர்;
குறி அதனால் இதயத்தே அதனைக் கூடும்
கொள்கையினால் அரன் ஆவர்; குறியொடு தாம் அழியும்
நெறி அதனால் சிவமே ஆய் நின்றிடுவர் என்றால்
நேசத்தால் தொழுதிடு நீ, பாசத்தார் விடவே. 324



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்):- அறிவு அறியான்- பாச பசு ஞானங்களால் அறிதற்கரியனாகிய சிவன், தனை அறிய- உலினுள்ளார் தம்மை அறிந்து வழிபட்டுயதற் பொருட்டு, யாக்கை ஆக்கி- திருவேண்ணீறு கண்டிகை முதலியவற்றோடு பொலிந்த தமது திருவேடத்தை அன்பர்க்குதவி, அங்கு ஆய்கே உயிர்க்க உயிராய் அறிவு கொடுத்து- யாண்டும் உயிர்க்குயிராய் நின்று அறிவை விளக்கி, அருளால் செறிதலினால்- அருளாற் கலந்து நிறைந்திருத்தலினால், திருவேடம் சிவன் உருவே ஆகும்- திருவேடம் சிவனுருவமேயாக, அதனைப் பூண்டார் உருவ சிவமேயாயிருப்பர். சிவோகம்பாவிக்கும் அத்தால் சிவனும் ஆவர்- சிவமே தாமெனப் பாவனை செய்யுந் தன்மையினாற் பாவனா சிவமேயாகவும் இருப்பர், குறியதனால் இதயத்தே அரனைக் கூடும் கொள்கையினால் அரன் ஆவர்- அருட்குறி வழி நின்று இதயத் தானத்திற் சிவனை இருத்திப் பூசித்தலாகிய தியானம் சாதிக்குந் தன்மையினாற் செயற்சிவமேயாகவும் இருப்பர். குறியோடு தாம் அழியும் நெறியதனாற் சிவமேயாய் நின்றிடுவர்- அவ்வாறு குறித்த குறியுமழிவு பெறத் தம்மையுமே காணப்பெறாது அவனே தாமாந்தன்மைபெற்று நிற்றலாற் சிவமேயாயும் இருப்பர். என்றால்- இவ்வாறு திருவேடம் பூண்ட மெய்யடியர் இலயம் போகம் அதிகாரம் சுத்தம் ஆகிய சிவமேயாய் நிற்றல் தெளிவாதலின், பாசத்தாள் விட- வாதனா மலத்தை விட்டுநீங்க, நேசத்தால் தொழுதெழுமின்- மெய்யன்பினாற் தொழுதொழுக வேண்டும்.

சிவாலயத்தைச் சிவன் எனக் கண்டு வழிபடும் முறையை வகுத்துக் கூறுகின்றது

திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னைச்
சிவன் எனவே கண்டவர்க்குச் சிவன் உறைவன் அங்கே
உருக்கோலி மந்திரத்தால் என நினையும் அவர்க்கும்
உளன் எங்கும் இலன் இங்கும் உளன் என்பார்க்கும்
விருப்பாய வடிவாகி இந்தனத்தில் எரிபோல்
மந்திரத்தில் வந்து உதித்து மிகும் சுரபிக்கு எங்கும்
உருக்காண ஒண்ணாத பால் முலைப் பால் விம்மி
ஒழுகவதுபோல், வெளிப்பட்டு அருளுவன் அன்பர்க்கே. 325

(இதன் பொருள்):- திருக்கோயில் உள் இருக்கும் திருமேனி தன்னை- திருக்கோயிலின்கண் ஆகம முறையானமைத்த பரார்த்தமாகிய சிவலிங்கம் முதலிய திருவுருவங்களை, சிவன் எனவே கண்டவர்க்கு- சிவன் எனக் கொண்டு உருவ வழிபாடு செய்யும் சரியையாளர்க்கு, சிவன் உறைவன் அங்கே- சிவபிரான் அவ்வுருவங்களிலே வெளிப்படாது நின்று அருள் செய்வன். உருக்கோலி மந்திரத்தாலே நினையும் அவர்க்கும் உளன்- திருவுருவங்களை ஆன்மார்த்தமாக எழுந்தருளச் செய்து மந்திரவடிவுங் கூட்டி அத்துவா மூர்த்தியாகக் கொண்டு அருவாருவ வழிபாடு செய்யுங் கிரியையாளர்க்குந் திருக்கோயிலிற் காணுந் திருவுருவங்களில் மந்திர வடிவமாய் நின்று அருள் செய்வன். எங்கும் இல்லன் இங்கு உளன் என்பார்க்கும்- சராசரங்களெங்கும் அருவாய்க் குடிகொண்டு நிற்கும் முதல்வன் தம் தேகத்தில் உள்ளத்தே பாவனையாவடிவமைந்திருப்பன் எனக் கொண்டு அருவ வழிபாடு செய்யும் யோகியர்க்கும், மந்திரத்தின் இருப்பு ஆய வடிவாகி இந்தனத்தின் எரி போல் வந்துதிப்பன்- திருக்கோயிலிலே தேகம் போன்றிருக்க அதன்கண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்துத் தோன்றுமாறே விறகிற்றோன்றாது நின்ற தீ கடைய வந்துதிப்பதுபோல் பாவனா வடிவத்தோடு வெளிப்பட்டுமருள் செய்வன், அன்பர்க்கு- மெய்யன்பு கூடி அறிவு மாத்திரையான் அருளுருவில் வணங்கும் ஞானியர்க்கு, இரும் சுரபிக்கு எங்கும் உருக்காண ஒண்ணாத பால்- மேம்பாடுற்ற கறவைப் பசுவின் உடலெங்கனும் செறிந்திருந்தும் வெளிக்காண முடியாதிருக்கும் பாலானது, முலைபால் விம்மி ஒழுவதுபோல் வெளிப்பட்டருளுவன்- முலை வழியாக விம்மிப் பொழிவதுபோற் கருணையின் வெளிப்பட்டுத் தோன்றியருள்செய்வன். (ஆகையால் திருக்கோயில் வழிபாடு யாவருஞ் செய்ய வேண்டியதாம்.)

ஞானிக்கு நால்வகை வழிபாடும் கூடும் எனவும் ஏனையோர்க்குத் தம் நிலைமைக்கு மேம்பட்ட வழிபாடு கூடாது எனவும், ஞானியே யாவர்க்கும் குரு ஆவார் எனவும், சிவாலயமும் சிவனடியாரும் அந்தக் குருவின் வேறல்ல எனவும் கூறுகின்றது

ஞான யோகக் கிரியா சரியை நான்கும்
நாதன்தன் பணி; ஞானி நாலினுக்கும் உயரின்;
ஊனம் இலா யோகம் முதல் மூன்றினுக்கும் உரியன்
யோகி; கிரியாவான் தான் ஒண்கிரியை ஆதி
ஆன இரண்டினுக்கும் உரியன்; சரியையினில் நின்றோன்
அச்சரியைக்கே உரியன்; ஆதலினால் யார்க்கும்
ஈனமிலா ஞான குருவே குருவும் இவனே,
ஈசன் இவன்தான் என்றும் இறைஞ்சி ஏத்தே. 326

(இதன் பொருள்):- ஞானம் யோகம் கிரியை சரியை நாலும் நாதன்தன் பணி- ஞானம் யோகம் கிரியை சரியை என்னும் நான்கு சாதனைகளும் சிவனதடிமைத் தொழில்களேயாக, இவற்றினொழுகுவோரும் சிவனடியார்கயோவர், ஞானி நாலினுக்கும் உரியன்- அவரள் ஞானசாதனை செய்வோர் ஞானம் யோகம் கிரியை சரியையென்னும் நான்கு பணிகளையும் பூணற்பாலர். யோகி ஊனம் இலா யோகம் முதல் மூன்றினுக்கும் உரியன்- யோக சாதனை செய்வோர் குற்றமற்ற யோகம் கிரியை சரியையென்னும் மூன்று பணிகளுமே பூணற்பாலர், கிரியாவான் தான் ஒண்கிரியை ஆதி ஆன இரண்டினுக்கும் உரியன்- கிரியாசாதனை செய்வோர் சிறந்த கிரியை என்னும் இருவகைப் பணிகளுமே பூணற்பாலர். சரியையினில் நின்றோன் அச் சரியைக்கே உரியன்- சரியா சாதனை செய்து வருவோர் அந்தச் சரியைப் பணி ஒன்றுமே பூணற்பாலர் ஆதலினால் யார்க்கும் விழையும் பக்குவர் யாவர்க்கும் ஞான குருவே வேண்டிற்று. குருவும் இவனே- அத்தகைய மெய்க்குருவாவானும் சிவஞானியே, ஈசன் இவன் தான் என்றும்- எனவே பக்குவநோக்கி வந்து மலமகற்றும் பரமாசாரியனாகும் சிவனும் இந்த ஞானகுருவே என்று தெளிந்து, இறைஞ்சி ஏத்தே- அத்தகை ஞானகுருவை வாதனாமலந் தவிர்க்க வேண்டிச் சிவஞானியரும் வணங்கிப் போற்றியொழுகற்பாலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான குருவின் அருளால் அன்றி, சிவபெருமான் திருவடியை அடைய முடியாது எனக் கூறுகின்றது

மந்திரத்தால் மருந்துகளால் வாய்த்த யோகத்தால்
மணி இரத குளிகையினால் மற்றும் மற்றும்
தந்திரத்தே சொன்ன முறை செய்ய, வேத
சகல கலை ஞானங்கள் திரிகால ஞானம்
அந்தம் இலா அணிமாதி ஞானங்கள் எல்லாம்
அடைந்திடும்; ஆசான் அருளால் அடிசேர் ஞானம்
வந்திடும்; மற்று ஒன்றாலும் வாராது ஆகும்;
மற்றவையும் அவன் அருளால் மருவும் அன்றே. 327

(இதன் பொருள்):- மந்திரத்தான்- மந்திரங்களாலும், மருந்துகளான்- மருந்துகளாலும், வாய்த்த யோகத்தான்- சிறந்த யோகத்தாலும், மணி இரத குளிகையினான்- மணியாலும் இரசக்குளிகையினாலும், மற்றும் மற்றும் தந்திரத்தே சொன்னபடி செய்ய- வேறு வேறு சாத்திரங்களிலே சொன்னடி செய்தாலும், வேதம் சகல கலைஞானங்கள் திரிகாலஞானம் அந்தமிசை அணிமாதி ஞானங்கள் எல்லாம் அடைந்திடும்- நான்கு வேதங்களை விளக்குமறிவும் சகல கலைஞானங்களைத் தெரியுந் தெளிவும் முக்காலங்களையுமறியும் திருட்டிக்யானமும் இவை போன்ற பிறஞானங்களுமடையலாகும். ஆசான் அருளால் அடி சேர் ஞானம் வந்திடும் ஆயின்- குருவின் திருவருளானே திருவடிப் பேறாகிய முத்திக்கு வழியான மெய்ஞ்ஞானம் வந்துதிக்கும், மற்று ஒன்றாலும் வாராதாகும்- வேறொருவகையானும் அது வருமாறில்லை, மற்று அவையும் அவனருளால் மருவும் அன்றே- முன்கூறிய வேதவித்தை முதலிய ஞானங்கள் தாமும் குருவருளால் வரற்பாலவேயாம் (ஆகையால் யாவர்க்கும் குரு இன்றியமையாது வேண்டப்படக் குருசேவையும் வேண்டிற்று).

ஞானகுருவை வழிபட்டவர்க்கு உண்டாகும் பயன் இது எனக் கூறுகின்றது

பரபிரமம் இவன் என்றும், பரசிவன்தான் என்றும்
பரஞானம் இவன் என்றும் பராபரன்தான் என்றும்
அரன் தரும் சீர்நிலை எல்லாம் இவனே என்றும்
அருட் குருவை வழிபடவே, அவன் இவன்தான் ஆயே
இரங்கிய வாரணம், யாமை, மீன் அண்டம் சினையை
இயல்பினொடும் பரிசித்தும், நினைந்தும், பார்த்தும்,
பரிந்து இவைதாம் ஆக்குமா போல், சிவமே ஆக்கும்,
பரிசித்தும் சிந்தித்தும் பார்த்தும் தானே. 328



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள்):– பரம் பிரமம் இவன் என்றும்– அவாங்கமன கோசரமாய் நின்ற சொரூபசிவமே இக்குருமூர்த்தியெனக் கொண்டும், பரசிவன் தான் என்றும்– பரையோடு கூடிய சுத்தசிவனே இக்குருமூர்த்தியெனக் கொண்டும், பரஞானம் இவன் என்றும்– பரையோடு கூடி அறிவாய் விரிந்த இலயசிவனே இக்குருமூர்த்தியெனக் கொண்டும், பராபரன் தான் என்றும்– பரையோடு கூடி இச்சையாய் விரிந்த போகசிவனே இக்குருமூர்த்தி எனக் கொண்டும், அரன் தரு சீர்நிலை எல்லாம் இவனே என்றும்– பரையோடு கூடித் தொழிலாய் விரிந்த அதிகார சிவனே இக்குருமூர்த்தியெனக் கொண்டும் கருதி, அருட்குருவை வழிபடவே– மெஞ்ஞானமருளிய குருமூர்த்தியைச் சேவை செய்தொழுகவே, அவன் இவன் தான் ஆயே இரங்கி– அத்தகைய ஐவேறவத்தையினறியப்படும் முதல்வனே இக்குருமூர்த்தியை அதிட்டித்து நின்று கருணை பூத்து, வாரணம் ஆமை மீன் அண்டம் சினையை இயல்பினொடு பரிசித்தும் நினைந்தும் பார்த்தும் பரிந்து இவைதான் ஆக்குமா போல்– கோழியும் ஆமையும் தம் முட்டையும் மீன் தன் சினையையுமுறையே பரிசித்தும் நினைந்தும் பார்த்தும் பரிவினால் ஓடு முதலிய ஆவரணங்களினீக்கித் தம்வண்ணமாக்குமாறு போல, பரிசித்தும் சிந்தித்தும் பார்த்தும் தான்– பரிசித்தல் நினைத்தல் பார்த்தலாகிய தீக்கைகளைச் செய்தே மாயா கன்ம ஆணவ ஆவரணங்களை நீக்கி, சிவமே ஆக்கும்– சிவனாம்வண்ணமருளுவன்.

சிவஞானசித்தியார் முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# சிவஞானபோதம்

## மெய்கண்டதேவர்

இது சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கினுள் மணிமுடியாய் விளங்குவது. கி.பி. 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மெய்கண்டதேவரால் அருளிச்செய்யப்பட்டது.

இது பன்னிரண்டு சூத்திரங்களில் (நூற்பாக்களில்) சைவசித்தாந்தப் பேருண்மைகளைப் புலப்படுத்துகிறது. முதல் ஆறு சூத்திரங்களும் பொது இலக்கணம் என்றும் பின் ஆறு சூத்திரங்களும் சிறப்பு இலக்கணம் என்றும் இரு பிரிவுகளாக உள்ளன.

**நான்கு இயல்களை உடையது.**

| | | | |
|---|---|---|---|
| பிரமாண இயல் | 1 - 3 சூத்திரங்கள், | இலக்கண இயல் | 4 - 6 சூத்திரங்கள் |
| சாதன இயல் | 7 - 9 சூத்திரங்கள், | பயன் இயல் | 10 - 12 சூத்திரங்கள் |

சூத்திரம் 12, வரிகள் 40, சொற்கள் 216, எழுத்துக்கள் 624.

சிவஞானபோதச் சூத்திரங்கள் ஒவ்வொன்றும், அதில் கூறப்பட்ட விடயங்களுக்கு ஏற்ப அதிகரணங்களாக (உட்பிரிவுகள்) வகுக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வோர் அதிகரணத்திலும் மேற்கோள், ஏது, எடுத்துக்காட்டு எனும் மூன்று உறுப்புக்கள் உள. மேற்கோள் ஏது வசனத்திலும் எடுத்துக்காட்டு வெண்பாக்களிலும் உள்ளன.

அதிகரணங்கள் ஒவ்வொன்றும் சூர்ணிகை என்னும் கருத்துரையையும் (சூத்திரக்கருத்து – சூர்ணிகை) வார்த்திகம் என்னும் பொழிப்புரையையும் உதாரண வெண்பாக்களையும் கொண்டு பொருள் உரைக்கப்படும். உதாரண வெண்பாக்கள் 81 உள்ளன.

### சிவஞானபோதச் சிறப்புப் பாயிரம்

நேரிசை ஆசிரியப்பா

மலர்தலை உலகின் மாஇருள் துமியப்
பலர்புகழ் ஞாயிறு படரின் அல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போல் ஈண்டிய
பெரும்பெயர்க் கடவுளில் கண்டுகண் இருள்தீர்ந்(து)
அருந்துயர்க் குரம்பையின் ஆன்மா நாடி
மயர்வுஅற நந்தி முனிகணத்து அளித்த
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ச் சுவேதவனன்
பொய்கண்டு அகன்ற மெய்கண்ட தேவன்
பவநனி வன்பகை கடந்த
தவர்அடி புனைந்த தலைமை யோனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சிறப்புப் பாயிரத்தைச் செய்தவர் அருள்நந்தி சிவாசாரியார் என்று கருதப்படுகிறது.

"நூல் செய்தான் பாயிரஞ் செயற்பாலனல்லன்... இந்தப் பாயிரஞ்செய்தார் யாவரெனில், இதன்வழி சிவஞான சித்தி என்னும் நூலைச் செய்தாரும் அவர் மாணாக்கராகிய நாற்பத்தொன்பது பெயரிற் சண்பைத் தலைவன் நாயனாருமாகிய அருணந்தி தேவநம்பிரான்"

இப்பெரிய உலகின் புற இருளைச் சூரியன் உதித்து நீக்காவிட்டால் எப்பொருளையும் கண்ணால் காண முடியாது. அதே போன்று, அறியாமையாகிய இருளை இறையருள் மட்டுமே நீக்க முடியும். அவ்வாறு அருள் பெற்று இருள் நீங்கியபின் துயர் கொண்ட உடல்களில் உள்ள ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு, நந்தியெம்பெருமான் முனிவர்களுக்கு அருளிய சிவஞான போதத்தைத் தமிழில் சொல்லியவர் பெண்ணையாறு சூழ்ந்த திருவெண்ணெய் நல்லூர் சுவேதவனன் ஆவார். சுவேதவனனான இந்தப் பொய்நீங்கிய மெய்கண்ட தேவன் என்பார், பிறவிப் பகையை வென்ற பல தவசீலர்கள் இவரது திருவடிகளைச் சூடும் தலைமை பெற்றவர் ஆவார்.

மங்கல வாழ்த்து

**கல்லால் நிழல்மலை**
**வில்லா ரருளிய**
**பொல்லார் இணைமலர்**
**நல்லார் புனைவரே.**

இது கடவுள் வாழ்த்துப் பாடலாகும்.

கல்லால மரத்தின் நிழலில் அமர்ந்து ஞானம் அருளிய முதல் ஆசிரியராம் சிவபெருமான் தந்த பொல்லாப் பிள்ளையாரின் திருவடி மலர்களைத் தவம் சான்ற நல்லோர் சூடுவர். மலைவில்லார் என்று சேர்த்து மலைவு இல்லார் எனப் பிரித்தால், மலைவு நீக்குவதற்காக அருளினார் எனப் பொருள் கொள்ளலாம்.

அவையடக்கம்

**தம்மை உணர்ந்து தமைஉடைய தன்னுணர்வா(ர)**
**எம்மை உடைமை எமைஇகழார் - தம்மை**
**உணரார் உணரார் உடங்(கு) இயைந்து தம்மில்**
**புணராமை கேளாம் புறன்.**

தம்மை உணர்ந்த பெரியோர்கள் தம்மை உடைமையாக உடைய தலைவனையும் உணர்வார்கள். தலைவனை உணர்ந்தவர்கள், எம்மைத் தங்களின் உடைமையாகக் கொண்டவர்கள்; எனவே எம்மை இகழமாட்டார்கள்.

தம்மை உணராதவர்கள் எதையும் உணராதவர்கள். அப்படிப்பட்டவர்கள், தமக்குள்ளேயே ஒருமைப்பாடு இல்லாமல் மாற்றி மாற்றிப் பேசக் கூடிய புறம்பான செய்திகளை நாம் கேட்க மாட்டோம் என்பதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது இயல்பு
## (முதல் ஆறு சூத்திரங்களை உள்ளடக்கியது)

### பிராமண இயல்

(ஒன்று முதல் மூன்றாம் சூத்திரம் வரை)

### முதல் சூத்திரம்

**அவன்அவள் அதுஎனும் அவைமூ வினைமையின்**
**தோற்றிய திதியே ஒடுங்கிமலத்(து) உளதா(ம்)**
**அந்தம் ஆதி என்மனார் புலவர்.**

அதிகரணம் (உட்பிரிவு)

1. அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்
2. தோற்றியதிதியே ஒடுங்கி மலத்து உளதாம்.
3. அந்தம் ஆதி

பொருள் : அவன் அவள் அது எனும் அவை – அவன், அவள், அது என்று மூன்றாகப் பகுக்கப்படும் உலகப் பொருள்கள் யாவும் மூவினைமையின் – தோன்றுதல், நிலைபெறுதல், அழிதல் எனும் மூன்று செயல்களுக்கு உரியன. தோன்றிய திதியே ஒடுங்கி – அவை கடவுளாலே தோன்றி நிலை பெற்று அழிகின்றன, மலத்து உளதாம் – ஆணவ மலம் அழியாத போது மீளவும் தோன்றுகின்றன. அந்தம் ஆதி என்மனார் புலவர் – ஒடுக்கமாகிய முடிவைச் செய்யும் கடவுளே உலகத்துக்கு முழுமுதற் கடவுள் ஆவார், என்மனார் புலவர் – என்று அளவை நூலுணர்ந்த அறிவாளர் கூறுவர்.

உதாரண வெண்பா

**பூதாதி ஈறும் முதலும் துணையாகப்**
**பேதாய் திதியாகும் பெற்றிமையின் - ஓதாரோ**
**ஒன்(று) ஒன்றில் தோன்றி உளதாய் இறக்கண்டும்**
**அன்றுஎன்றும் உண்டென்ன ஆய்ந்து.** O1

ஐம்பெரும் பூதங்கள் முதலிய யாவற்றுக்கும் தோற்றத்தையும் அழிவையும் துணைக் காரணங்களாகக் கொண்டு இருத்தல் (வாழ்தல்) என்கிற நிலைபேறு நடக்கும்.

ஒரு காலத்தில் ஒவ்வொன்றும் குழுவாகத் தோன்றி மறுகாலத்தில் அவை மறையுமே தவிர எல்லாம் ஒரே காலத்தில் தோன்றி ஒரே காலத்தில் அழிந்துவிடாது என்று ஆய்ந்து கொள்க என்று மாணவனுக்கு ஆசிரியர் கூறுகிறார்.

(பேதாய்! – மாணவன் ஒரு கேள்வியைக் கேட்க, அவனுடைய அறியாமையைச் சுட்டி விளக்கம் கூறும் முறை.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலயித்த தன்னில்இல யித்த(து)ஆம்(ம்)ம லத்தால்
இலயித்த வா(று) உளதா வேண்டும் - இலயித்த(து)
அத்தியில் என்னில் அழியா தவைஅழிவ(து)
அத்தியும் ஆதியும் ஆம்அங்கு. 02

எதனில் போய் ஒடுங்குகிறதோ, அதனிலிருந்தே, ஒடுங்கிய பொருள், மலம் காரணமாக மீண்டும் தோன்றும்.

அடங்கிய அதுவே மீண்டும் படைப்புக்கு வரும். (அதாவது நெல்லாக அடங்கியிருப்பது பிறகும் நெல்லாகவே வெளிவரும், கரும்பாக வெளிவராது என்பதாம்.)

வித்துண்டா மூல(ம்) முளைத்தவா தாரகமாம்
அத்தன்தாள் நிற்றல் அவர்வினையால் - வித்தகமாம்
வேட்டுவனாம் அப்புழுப்போல் வேண்டுருவைத் தான் கொடுத்துக்
கூட்டானே மண்போற் குளிர்ந்து. 03

மண் (நிலம்) குளிர்ந்த இடத்தில் (பக்குவப்பட்ட இடத்தில்) விதை விழுந்து அது முளைக்கும். அது போலவே, மாயையும் தனக்கு ஆதாரமாக உள்ள இறைவனுடைய தாள் வழி (சத்தி வழி) நின்று செயல்பட, அதனால் உயிர்கள் தோன்றும்; உலகம் தோன்றும். அவர் வினையால் வித்தகம். அதாவது, இறைவன் செயலால் தோன்றும்.

குளவியால் இடப்பட்ட புழு, குளவியே ஆதல்போல, வேண்டுவார் வேண்டிய உருவைக் கொடுத்து இறைவன் செய்வினைப் பயனைக் கூட்டுகிறான்.

விதை முளைக்க உழவன் செயல் போல, இறைவன் (நிமித்த) காரணம் ஆகிறான். விதை முளைக்க மண் குளிர்வது தேவை; அதுபோல், உயிரும் உலகும் தோன்ற இறையருள் தேவை.

நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்தில்
தாக்காது நின்றுளத்தில் கண்டுஇறைவன் - ஆக்காதே
கண்ட நனஉணர்வில் கண்ட கனவுஉணரக்
கண்டவனில் இற்(று) இன்றாங் கட்டு. 04

ஆக்காமல் ஆக்கி, நோக்காமல் நோக்கி, அழிக்காமல் அழிக்கும் எம்முடைய இறைவன் இம்மூன்று தொழில்களையும் செயலாகச் செய்யாது நினைவு மூலமே செய்வான். முன்பு நனவில் உணர்ந்த அனுபவத்தால் கண்ட கனவையும் உணர்வது போல் இச் செய்கையும் இருக்கும்.

(ஆக்கல் = படைத்தல்; நோக்கல் = காத்தல்; நொடித்தல் = அழித்தல்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுலா ஒன்றால் உளதாக நின்றவா(று)
ஒன்றலா ஒன்றில் அவை ஈறாதல் - ஒன்றலா
ஈறே முதல் அதனின் ஈறு அலா ஒன்று பல
வாறே தொழும்பு ஆகும் அங்கு. 05

படைப்புப் பொருள்களில் ஒன்றாக இல்லாத ஒரு பொருளால் (கடவுளால்) பிரபஞ்சம் உற்பத்தியாகி நிலைபெறவும் செய்கிறுது. பின், அந்த ஒன்றிலேயே ஒடுங்கி இறுதியுமாகிறது; இப்படி இறுதி செய்யும் அப்பொருளே முதல்வனாம்; ஒன்றுக்குள் அடங்கிவிடாத அதுவே முழு முதல் பொருளாம். அதில் ஒடுங்கும் பல பொருள்களும் அதற்கு (அவனுக்கு) அடிமையே ஆகும். (எனவே முதல்வன் தனிமுதல்வன் என்றுணர்க.)

## இரண்டாம் சூத்திரம்

அவையே தானே ஆய்இரு வினையில்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கமின்றி நிற்கும் அன்றே.

அதிகரணங்கள்

1. அவையே தானேயாய்
2. ஆணையின் இருவினையின்
3. போக்குவரவு புரிய
4. ஆணையின் நீக்கம் இன்றி நிற்கும் அன்றே.

பொருள் : அவையே ஆய் – சங்காரக் கடவுளாகிய சிவபெருமான் உயிர்களுடன் உடம்பில் உயிர்போலப் பிரித்தறிவதற்கு இடமின்றி, அவ்வுயிர்களே யாயும் (ஒன்றாதல்), தானேஆய் – உயிர் என்று சொல்லும் படி கலப்பினால் ஒன்றாய் நிற்பினும், கண்ணொளியும் சூரியன் ஒளியும் போல பொருள் தன்மையால் அதற்கு வேறாயும் (வேறாய்), அவையே தானே ஆய் – கண்ணொளியும் ஆன்ம போதமும் போல உயிர்களோடு உடன் நின்றும் (உடனாதல்), ஆணையில் – தன் ஆணை என்னும் சிற்சக்தியால் செலுத்தப்பட்டு வருகின்ற, இருவினையின் அவர்கள் செய்த நல்வினைகள் தீவினைகளுக்குத் தக்கவாறு, போக்குவரவு புரிய – உயிர்கள் – பிறத்தல் இறத்தல்களைச் கொள்ளும் படி, நீக்கமின்றி தனது சிற்சக்தியைப் பிரியாமல், நிற்கும் – எப்பொழுதும் நின்று அருளுவார்.

உதாரண வெண்பா

கட்டும் உறுப்பும் கரணமும் கொண்டு உள்ளம்
இட்டதொரு பேர் அழைக்க என் என்றாங்(கு) - ஒட்டி
அவன் உளம் ஆகில்லான் உளம் அவனா மாட்டா(து)
அவன் உளமாய் அல்லனுமாய் அங்கு. 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலும் உறுப்புகளும் பொறி புலன்களும் சேர்ந்து உயிரும் சேர்ந்திருக்கும்போது, இட்ட பெயரைச் சொல்லி அழைத்தால், அந்த உயிர் 'ஏன்?' என்று பதில் கேட்கும். காரணம், உயிர் உடலில் கலந்திருப்பதேயாகும்.

உயிர், உடலில் பேதமில்லாமல் கலந்திருப்பது போல் இறைவனும் உயிர்களோடு வேற்றுமையில்லாமல் கலந்திருக்கிறான். ஆனாலும், அவன் உயிர் ஆக மாட்டான்; உயிர்களும் அவனாகி விட முடியாது. இறைவன் உயிர்களும் ஆகி, உயிர்கள் அல்லாதவையுமாகி, அவற்றுக்க அப்பாலுமாகி இருப்பான்.

**ஒன்(று) என்ற(து) ஒன்றே காண் ஒன்றே பதிபசுவா(ம்)**
**ஒன்(று) என்றநீ பாசத்தோடு(உ)ளை கா(ண்) - ஒன்றின்றா(ல்)**
**அக்கரங்களின்றா(ம்) அகரவுயி(ர்) இன்றே(ல்)**
**இக்கிரமத்(து) என்றும் இருக்கு.** 07

பிரமம் அத்துவிதம் – அதாவது இறைவன் அத்துவிதம் என்று வேதங்களும் உபநிடதங்களும் கூறுகின்றன. 'இரண்டும் கலந்தது அத்துவிதம், அது அந்நிய நாஸ்தி' என்று குறிப்பிட்டால் அது 'ஒன்று' என்று கூறிவிடலாமே என்பதற்கு இந்தப் பாடல் விளக்க மாகிறது.

ஒன்று என்று சொன்னது ஒரு கருத்தையேயாகும். அது கடவுள் (பதி) ஒருவரே என்பதாகும். பசு என்கிற உயிர், பாசத்தோடு கட்டுப்பட்டது. (பதியும் பசுவும் ஒன்று என்று சொல்லும் நீ, பாசத்தோடு உள்ளாய். பின் எப்படி பதியாவாய்?) 'அ' என்னும் எழுத்து இல்லாமல் மற்ற எழுத்துக்கள் இயங்குவது இல்லை. இரண்டும் வேறு வேறு என்றாலும், இரண்டும் ஏகமாகவே இயங்குவதில்லை. இரண்டும் கலந்து ஏகமாக இயங்கினாலும் (அத்துவிதம்) இரண்டும் ஒன்றில்லை.

**பண்ணையு(ம்) ஓசையும்போலப் பழ(ம்) அதுவு(ம்)**
**எண்ணு சுவையும் போ(ல்) எங்குமா(ம்) - அண்ணல்தா(ள்)**
**அத்துவிதமாத(ல்) அருமறைக(ள்) ஒன்று என்னா(து)**
**அத்துவிதம் என்(று) அறையும் ஆங்கு.** 08

பண்ணும் ஓசையும கலந்து எங்கும் இணைந்தது போல, பழமும் அதன் சுவையும் கலந்ததுபோல, இறைவன் உயிர்களில் கலந்து நிற்பதை வேதங்கள் அத்துவிதம் என்ற சொல்லால் கூறுகின்றன. 'ஒன்று' என்று கூறாமல் 'அத்துவிதம்' (இரண்டல்ல) என்று கூறுகின்றன. (இறைவன் திருவருளே இரண்டறக் கலப்பதன் காரணம் என்பதால் அருளைக் குறிக்க 'தாள்' எனப்பட்டது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரக்கொடு சேர்த்தி அணைத்தஅக் கற்போ(ல்)
உருக்கி உடங்கி இயைந்து நின்று - பிரிப்பின்றித்
தானே உலகாம் தமியேன் உளம் புகுதல்
யானே உலகென்பன் இன்று. 09

இது மேலும் உதாரணம் கூட்டும் முறையில் அமைந்த பாடல். அரக்கொடு சேர்க்கப்பட்ட கல்பொடி உருகி ஒன்று சேர்ந்து தோன்றுவதுபோல் இறைவனும் உயிர்களிலிருந்து பிரியாமல் நிற்பதால் அவனே உயிர்களாயும் உலகமாயும் தோன்றுகிறான். முத்திக் காலத்தில் இறைவன் என்னிடத்தில் இணைந்து நிற்பதால், இறைவன் உலகமாதல் போல, இறைவனோடு கலந்த நானும் உலகமாகிவிட்டேன் என்று கூறுவேன்.

உள்ளதே தோற்ற உயிர்அணையும் அவ்வுடலின்
உள்ளதாம் முன்செய்வினை உள்அடைவே - வள்ளல்அவன்
செய்பவர் செய்திப் பயன்விளைக்கும் செய்யேபோல்
செய்வன் செயல்அணையா சென்று. 10

முன்பிறவியில் செய்த வினையானது, உயிரை, இப்பிறவியில் வந்து அடையும். வினைப் பயனை அவ்வுயிர் அநுபவிக்கும். முன்வினைப் பயனை அநுபவிப்பதாலும் புதிய வினை உண்டாகும். முயற்சியின் அளவுக்கேற்ப, அதற்கான பயனை முயற்சி செய்த உழவனுக்கு நிலம் தருவது போல, வினையின் தன்மைக்கேற்ப, வினைப் பயனை, வினை செய்தார்க்கு இறைவன் கூட்டுவிப்பான். வினைப் பயன் தானே சென்று செய்தவனை அடையாது.

அவ்வினையைச் செய்வதனில் அவ்வினைஞர் தாம்சென்று அங்(கு)
அவ்வினையைக் காந்த பசாசம்போல் - அவ்வினையைப்
பேராமல் ஊட்டும் பிரானின் நுகராரேல்
ஆர்தாம் அறிந்துஅணைப்பார் ஆங்கு. 11

ஆன்மா, தான் செய்த வினையைத் தானே சென்று அடையாது. வினையும் தானாக ஆன்மாவை அடைகிற அறிவில்லாதது. காந்தத்திற்கு நேராக இரும்பைப் பிடித்துக் காந்தத்தை அதனைப் பற்றச் செய்வது போல, வினைப் பயன்களுக்கு எதிராக வினை செய்யும் ஆன்மாவை நிறுத்தி வினைப் பயனை இறைவனே நுகரச் செய்கிறான். வேறு யார் தாம் வினைப் பயன்களை அறிந்து அவற்றைச் சரியாக உயிர்களுக்குச் சேர்ப்பிப்பார்?

நெல்லில் உமியும் நிகழ்செம்பி னில்களிம்பும்
சொல்லில் புதிதன்று தொன்மையே - வல்லி
மலகன்மம் அன்றுளவாம் வள்ளலால் பொன்வாள்
அலர்சோகம் செய்கமலத் தாம். 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்லில் உமியும் செம்பில் களிம்பும் புதியவை அல்ல; அவை ஆதியிலிருந்து இயலபாகவே உள்ளன. அதுபோல மாயையும் ஆணவமும் கன்மமும் எப்போதும் உள்ளன.

இயல்பாக உள்ள தாமரை பொன்னொளி தரும் சூரியனால் விரிகிறது; குவிகிறது. அதுபோல, இயல்பால் உள்ள மும்மலங்களின் செயல்களும் இறைவனால் நிகழ்கின்றன. மலங்கள் இயல்பு, செயல்கள் இறைவனால் செய்விக்கப்படுகின்றன.

கண்ட நனவைக் கனவு உணர்வின் தான்மறந்து
விண்படர்ந்துஅத் தூடு வினையினால் - கண்செவிகெட்(டு)
உள்ளதே தோற்ற உளம்அணுவாய்ச் சென்றுமனம்
தள்ள விழும்கருவில் தான். 13

பிறவியில் நனவாகக் கண்ட யாவற்றையும் கனவினை மறப்பதுபோல் மறந்து ஆகாயத்தில் சென்று, கண்ணும் செவியும் கெட்டு உடம்புத் தோற்றம் மாறி, பின்னர் முன் செய்த வினைகளுக்கு ஏற்ப வேறு ஒரு கருவில் புகும்.

அரவுதன் தோல்உரிவும் அக்கனவும் வேறு
பரகாயம் போய்வரும்அப் பண்பும் - பரவில்
குடாகாய ஆகாயக் கூத்தாட்டாம் என்ப(து)
அடாதுஉள்ளம் போம்ஆறு அது. 14

பாம்பின் தோல் உரித்துப் போடப்படுவது போல் தூல உடம்பும் வீசப்பட்டு விடும். மண் குடத்தின் வெற்றிடமாகிய குட ஆகாயம், அக்குடம் உடைந்ததும் பர ஆகாரயமாகிய காற்று வெளியில் போய்க் கலப்பது போல், சூக்கும உடம்பு, தூல உடம்பை விட்டு வெளிப்போந்து இறைவெளியில் கலந்துவிடும். இப்படியாக, தூலமும் சூக்குமமும் பிரிவதை 'கூத்தாட்டு' என்று கூறுவர்.

எங்கும்உளன் என்அளவை ஒன்றுஅன்று இரண்டுஎன்னில்
எங்கும் உளன்அன்று எவற்றெவனும் - அங்கண்
அவைஅவன்அன்று இல்லைப் பொன்னொளிபோல் ஈசன்
அவைஉடைமை ஆளாநாம் அங்கு. 15

எங்கும் உளன் என்றபோது அவன் ஒன்றே என்றாகும். இறைவன் இரண்டு என்றால் எங்கும் உளன் என்பதில் குறைவு வரும். எங்கும் எல்லாப் பொருளும் அவன் இல்லாமல் இருக்க முடியாது. பொன்னின் நகை முழுதும் பொன் ஒளி இடைவிடாது இருப்பதுபோல் அவன் எங்கும் உள்ளான். உயிர்கள் அவனுக்கு உடைமையாகவும் அடிமையாகவும் உள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் சூத்திரம்

**உளது இலது என்றலி(ன்) எனது உட(ல்) என்றலி(ன்)**
**ஐம்புலன் ஒடுக்க(ம்) அறிதலில் கண்படில்**
**உண்டிவினை இன்மையின் உணர்த்த உணர்தலின்**
**மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா.**

அதிகரணங்கள்

1. இலது என்றலின் ஆன்மா உளது. (சூன்ய ஆன்மவாதி)
2. எனது உடல் என்றலின் ஆன்மா உளது (தேக ஆன்மவாதி)
3. ஐம்புலன் அறிதலின் ஆன்மா உளது. (இந்திரிய ஆன்மவாதி)
4. ஒடுக்கம் அறிதலின் ஆன்மா உளது (சூக்கும தேக ஆன்மவாதி)
5. கண்படில் உண்டிவினை இன்மையின் ஆன்மா உளது. (பிராண ஆன்ம வாதி)
6. உணர்த்த உணர்தலின் ஆன்மா உளது (விஞ்ஞான ஆன்மவாதி)
7. மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா உளது (சமூக ஆன்மவாதி)

பொருள் : இலது என்றலின் ஆன்மா உளது – இல்லை என்று சொல்லுதலால் அவ்வாறு சொல்லும் ஆன்மா உளது – எனது உடல் என்றலின் உளது, எனது உடம்பு என்று கூறுதலால் உடம்புக்கு வேறாக ஆன்மா உள்ளது, ஐம்புலன் அறிதலின் உளது– ஐம்புலன்களை வேறாக அறிதலால் அவற்றுக்கு வேறாக ஆன்மா, உளது – ஒடுக்கம் அறிதலின் உளது – ஐம்புலன்களும் ஒடுங்கின· சொப்பனத்தில் நிகழ்ந்தவற்றை அறிதலால் ஆன்மா வேறுண்டு, கண்படில் உண்டி வினை இன்மையின் உளது – நித்திரையில் இன்பதுன்ப அனுபவமும், உடம்பின் சேட்டையும் பிராண வாயுவுக்கு இல்லாமையால் பிராண வாயுவுக்கு வேறாக ஆன்மா உளது, உணர்ந்த உணர்தலின் உளது – அறிவிக்க அறிதலால் ஆன்மா உள்ளது. மாயாயந்திர தனுவினுள் உளது – மாயா காரியங்களால் ஆக்கப்பட்ட சூத்திரப் பாவை போலும் உடம்பின் கண்ணே எல்லாம் கூடிய சமுதாயத்திற்கு வேறாக ஆன்மா உளது.

உதாரண வெண்பா

**அன்றுஅன் றெனநின்று அனைத்தும்விட்டு அஞ்செழுத்தாய்**
**நின்றுஒன்று உளதுஅதுவே நீயனைத்து - நின்றுஇன்று**
**தற்பணம்போற் காட்டலால் சார்மாயை நீஅல்லை**
**தற்பரமும் அல்லை தனி.** 16

(ஆன்மா, அறிவுத் தன்மை கொண்டது என்பதை ஏற்கெனவே கூறியாகிவிட்டது.)

உடல், பொறி என்று பலவற்றையும் ஆராய்ந்து அவை யாவும் ஆன்மா அல்ல என்று தள்ளிவிட்ட நிலையில் அப்படி ஆராயும் திறமை படைத்த அறிவு இருக்கிறதல்லவா – அந்த அறிவு ஐந்தெழுத்து வடிவாய் இருக்கிறது – ஆகவே நீயாவாய் (ஆன்மா ஆவாய்)! மாயை என்பது ஆன்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. ஆன்மாவோடு கூடவே இருக்கும் மாயை, கண்ணாடி போல பிரதிபலிக்குமே தவிர, அதற்குத் தனியாக, சுயமாக அறிவில்லை. மாயை, ஆன்மா இல்லை. சிவம் (தற்பரம்) என்பதும் ஆன்மா இல்லை. அது அறிவிற்கு அப்பாற்பட்டு மேலாக இருப்பது. மாயையும் இல்லாமல் சிவமும் இல்லாமல் மூன்றாவதான ஒன்றே ஆன்மா. (ஐந்தெழுத்தென்பது மந்திர வடிவு.)

எனது) என்ற மாட்டி(ன்) எனதலா(து) என்னா(து)
உனதலா(து) உன்கை கால் யாக்கை - என(து) என்று(ம்)
என்னறிவு அது என்றும் உரைத்து நீ நிற்றி கா(ண்)
உன்னில் அவை வேறா(ம்) உணர். 17

'எனது' என்று சொல்லுகிற இயல்பு காரணமாக உன்னுடையது அல்லாதவற்றையும் என் பதி, என் மனை என்றெல்லாம் கூறுகிறாய். அதுபோலவே, உனது அல்லாதவற்றை 'என் கை, என் கால், என் உடல், என் பாசம்' என்று கூறி நிற்கிறாய். ஆனால், அவை உன்னிலிருந்து வேறுபட்டவையாகும். வேறுபட்ட அவற்றை 'நான்' என்று சொல்லாது, எனது எனச் சொல்லும் அறிவு உடையதே ஆன்மாவாகும்.

ஒன்று அறிந்த(து) ஒன்றறியா(து) ஆகிஉடன் மன்னி
அன்றும் புலனாய(அ)வ் அஞ்செழுத்தை - ஒன்றறிதல்
உள்ளதேயாகி(ல்) அதுநீ! தனித்தனி கண்(டு)
உள்ளல்அவை ஒன்றல்லை ஓர். 18

உடலில் இருக்கக்கூடிய ஐம்பொறிகள், தமக்குள் ஒன்று அறிந்ததனை மற்றொன்று அறியாது நிற்கக் கூடியவை. அப்படியில்லாமல், பொறிகள் ஐந்தையும் (தனித்தனியாகவும் ஒரு சேரவும் ஒருங்கிணைத்தும்) அவற்றின் குணங்களையும் அறிந்து கொள்ளும் தன்மை படைத்ததான ஒன்றுதான், ஆன்மாவான நீ! தனித்தனியாகத் தத்தமக்கு உரியவற்றில் மட்டும் செயல்படும் அவையும் நீயும் ஒன்றல்ல! (கண் பார்க்கும்; ஆனால் பார்ப்பது தெளிவானதா தெளிவற்றதா என்று தேர்வு செய்யும் அறிவு ஆன்மாவுடையதாகும்.)

அவ் உடலின் இன்று உயிர்ப்ப ஐம்பொறிகள் ஆம்கிடப்பச்
செவ்விதின் அவ்வுடலில் சென்றடங்கி - அவ்வுடலின்
வேறொன்று கொண்டு விளையாடி மீண்டுஅதனை
மாறல்உடல் நீஅல்லை மற்று. 19

அவ்வுடலில் நின்று மூச்சுவிடலும், பொறிகளுடன் ஈடுபடுவதும், அந்த உடலில் அடங்கிக் கிடப்பதும் அறிவதும் ஆன்மாவாகும். ஆனால் கனவு நேரத்தில், அந்த உடலிலிருந்து எழுந்து கனவில் வேறொரு வடிவில் வந்தும் சென்றும் இயங்கியும் பின் மீண்டும் உடலுக்குள் சென்று விடுகிறதே. அதுவே சூக்கும உடலாகும். சூக்கும உடலும் ஆன்மாவும் ஒன்றல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு அறியும் இவ்வுடலே காட்டு ஒடுங்கக் காணாதே
உன்வினை இன்றி உயிர்த்தலால் - கண்டறியு(ம்)
உள்ளம்வே றுண்டா ஒடுங்கா(து) உடல் நண்ணி
உள்ளத்தா(ம்) உண்டிவினை ஊன். 20

பொருள்களைப் பார்த்து புரிந்து கொள்ளக் கூடிய பொறிகளைக் கொண்டது. உடல் தூக்கத்தில் இந்தப் பொறிகள் இயங்குவதில்லை. அந்த ஒடுக்கத்தில், உடலில் நுகர்ச்சியும் (உணவு உண்ணுதல்) மற்ற செயல்களும் கூட நிகழ்வதில்லை. வெறும் உயிர்ப்பு (மூச்சு விடுதல்) மட்டும் இருக்கும். உயிர்ப்பு, கண் பார்ப்பதைப் புரிந்து கொள்வதில்லை. கண் பார்ப்பதைப் புரிந்துகொள்ளும் ஒன்று உடலில் பொருந்தியிருக்கிறது. அதுவே ஆன்மா. (உயிர்ப்பும் ஆன்மாவும் ஒன்றல்ல.) ஆன்மா ஒடுங்காமல் (இறந்து விடாமல்) உடலில் இருக்கும்வரை நுகர்ச்சியும் மற்ற செயல்களும் இந்த ஊன் உடலுக்கு உண்டு.

கலைஆதி மண்அந்தம் காணில் அவை மாயை
நிலையாவாம் தீபமே போல - அலையாமல்
ஞானத்தை முன்னுணர்ந்து நாடில் அதுதநுவாம்
தானத்தின் வேறாகும் தான். 21

கலை முதலாகிய வித்யா தத்துவங்களும், நிலத்தை இறுதியாகக் கொண்ட ஆன்ம தத்துவங்களும் மாயையால் செய்யப்பெற்றவை. ஆன்மாபோல அவை நிலை பெற்றவையல்ல. பல பொருள்கள் கூடி எரியும்போது தீபம் எனப் பெயர் பெற்றது போல் பல கருவிகள் கூட உடல் எனப் பெயர் பெற்றது. அங்குமிங்கும் அலையாமல் ஞானத்தால் நாடினால் உடல் என்பதும், ஆன்மா அவ்வுடம்பினின்று வேறு என்பதும் புரியும்.

## இலக்கண இயல்

### நான்காம் சூத்திரம்

அந்தக் கரணம் அவற்றின்ஒன்று அன்றுஅவை
சந்தித்தது ஆன்மாச் சகசமலத்து உணரா(து)
அமைச்சுஅரசு ஏய்ப்பநின்று அஞ்சுஅவத் தைத்தே.

அதிகரணங்கள்

1. அந்தக் கரணம் அவற்றின் ஒன்று அன்று
2. ஆன்மா சகசமலத்து உணராது
3. அமைச்சு அரசு எய்ப்ப நின்று ஐஞ்சு அவத்தைத்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் : ஆன்மா அந்தக் கரணம் அவற்றின் ஒன்று அன்று – ஆன்மா அந்தக் கரணங்கள் ஆகிய மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் நான்கினுள் ஒன்று அன்று, அவை சந்தித்தது ஆன்மா – அவற்றின் துணை கொண்டு நிற்பது ஆன்மா, சகச மலத்து அறியாது – ஆன்மா தன்னோடு ஆதியாய் உள்ள ஆணவ மலத்தின் மறைப்பினால் ஒன்றையும் தானாய் அறியமாட்டாது, அமைச்சு ஏய்ப்ப நின்று அஞ்சு அவத்தைத்து – ஓர் அரசன் ஆலோசனை கூறுவதற்கு மந்திரிமாரை வைத்திருந்து அரச கருமங்களை நடத்துவது போல ஆன்மாவும் ஆலோசனைத் துணைகளாகிய அந்தக் கரணங்களோடு கூடிநின்று நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம் உயிர்ப்படங்கல் என்னும் ஐந்து அவத்தை (நிலை) களைப் பொருந்தும்.

உதாரண வெண்பா

மனம்ஆதி யால் உணர்தல் மன்னு புலன்கள்
மனம்ஆதி மன்புலனி அல்லன் - மனமேல்
உதித்துஒன்றை உள்ளம் உணர்தல் அதனில்
உதிக்கும் கடல்திரையை ஒத்து. 22

மனம் முதலிய அந்தக்கரணங்கள் உணர்வது ஐந்து புலன்கள் உணர்ந்ததையே ஆகும். புலனுக்குப்பின் மனம் முதலான அந்தக்கரணங்கள் நிற்க அவற்றின் ஆன்மா நிற்கும். ஆன்மாதான் அந்தக்கரணங்களையும் பொறிபுலன்களையும் செயல்பட வைக்கிறது. அத்தகைய செயல்பாடுகளின் பயன் மீண்டும் ஆன்மாவையே அடைகிறது. இது கடலில் இருந்தே ஓர் அலை புறப்பட்டுக் கரையை அடைந்து மீண்டும் கடலுக்குள் செல்வது போன்றது ஆகும்.

சிந்தித்தாய் சித்தம் தெளியாதாய் ஆங்காரம்
புந்தியாய் ஆய்ந்து மனமாகிப் - பந்தித்து
வெவ்வேறு தானே துணிந்துஉள்ளம் இவ்வேறா
அவ்வேறாம் போதுபோல் ஆங்கு. 23

கண் முதலிய பொறிகள் உணர்த்தும் புலன்களில் முதலில் மனம் பதியும் (பந்திக்கும்); பின்னர் அவை பற்றிச் சித்தம் சிந்திக்கும்; பின்னர் அகங்காரம் 'இதுவா அதுவா' என்று தெளிவின்றிக் குழம்பும்; புத்தியோ ஆய்வு செய்யும். இவ்வாறு ஒவ்வொரு வகையில் அந்தக்கரணம் ஒவ்வொன்றும் செயல்படும். பொழுது என்பதும் அதை வகுக்கும் காரணிகளும் தனித்தனியாவது போல் இந்த அகக் கருவிகளும் ஆன்மாவும் வேறு வேறாம்.

அகார வுகாரம் அகங்காரம் புத்தி
மகார(ம்) மனம்சித்தம் விந்து - பகாது இவற்றை
நாதம் உளவடிவாம் நாடில் பிரணவமாம்
போதம் கடல்திரையே போன்று. 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அ' எனும் ஒலி (அகாரம்) அகங்காரம், 'உ' எனும் ஒலி (உகாரம்) புத்தி, 'ம்' எனும் ஒலி (மகாரம்) மனம்; விந்து என்பது சித்தம்; இவற்றைப் பகுத்து உச்சரிக்காது சேர்த்து உச்சரித்து நாதமாக எழுப்பினால் அதுவே பிரணவ ஒலியாகிய 'ஓம்' என்பதாகும். அந்த நாதமே ஆன்மாவாம். நாதம் ஆன்மாவைத் தூண்ட அது மீண்டும் மனம் முதலியவற்றைத் தூண்டும்.

இவ்வாறு அந்தக்கரணங்கள், ஆன்மா, பொறிகள் மீண்டும் அந்தக்கரணங்கள் என்று நிரல்படி நிகழும் இந்தச் செயல்பாடுகள் எப்படியுள்ளன? கடலில் தோன்றும் அலை விழுந்து மீண்டும் எழுந்து மீண்டும் விழுந்து தொடர்ந்து சுற்றுவது போல்வன.

**எண்ணில ஓங்காரத்து ஈசர் சதாசிவமா**
**நண்ணிய விந்துவொடு நாதத்துக் - கண்ணில்**
**பகர்அயன்மா லோடு பரமன் அதிதெய்வம்**
**மகரவுக ரம்அகரத் தாம்.** 25

ஓசையும் ஒலியும் இப்படி ஒன்றை ஒன்று தூண்டக் காரணம் உடம்பிலும் புறத்திலும் உள்ள அதிதேவதைகளேயாம். அகரம் பிரம்மனாலும், உகரம் திருமாலாலும், மகரம் ருத்திரனாலும் தூண்டப்படும். ஓம் எனும் பிரணவம் விந்து நாதத்தில் உள்ள சதாசிவத்தால் தூண்டப்படும்.

**மாயா தநுவிளக்கா மற்றுள்ளம் காணாதேல்**
**ஆயாதாம் ஒன்றை அதுஅதுவாய் - வீயாத**
**வன்னிதனைத் தன்னுள் மறைத்து ஒன்றாங் காட்டம் போல்**
**தன்னைமலம் அன்றணைதல் தான்.** 26

இப்பாடலில் மாயைக்கும் மலத்துக்கும் வேறுபாடு கூறப்படுகிறது. உடல் மாயையால் ஆனது, ஆன்மா மலத்தின் பிடியில் உள்ளது. மாயையால் உண்டாகிய இவ்வுடல் ஒரு விளக்குபோல் பொருளை மட்டும் காட்டும்; அதை ஆன்மாவே ஆயும். ஆன்மா இல்லாமல் ஆராய்தல் நடைபெறாது. விளக்கு பொருளை பளீரிட்டுக் காட்டுமே தவிர, அந்தப் பொருளை விளக்கே புரிந்துகொள்ளாது. (ஆன்மாவை மூடிய மலம் சிறிது விலகியதும் ஆராயும் செயல் ஆன்மாவிற்கு வரும். இத்தகைய ஆராயும் செயலே ஆன்மாவின் அறிவு.)

விறகில் நெருப்பு இருப்பதை விறகே மறைத்துள்ளது. அதைக் கடைந்தால் நெருப்பு வெளிப்படும். அதுபோல் ஆன்மாவை ஆணவமலம் மறைத்துள்ளது. ஆணவமலத்தைக் கடைந்தால் அறிவு வெளிப்படும். (வன்னி – நெருப்பு; காட்டம் – விறகு.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுஅணையா மூலத்து உயிர்அணையும் நாபியினில்
சென்றுஅணையும் சித்தம் இதயத்து - மன்றவே
ஐயைந்தாம் நன்னுதலில் கண்டத்து வாக்காதி
மெய்யாதி விட்டுஅகன்று வேறு. 27

(ஐந்து அவத்தைகளிலும் தொழில்படும் கருவிகள் பற்றி இதில் கூறப்படுகிறது.)

துரியாதீதத்தில் புருடன் எனும் ஒரு கருவியே மூலாதாரத்தில் தொழில்படும் (மாயை வசமான ஆன்மாவுக்கே புருடன் எனப் பெயர்.) துரியத்தில் பிராணவாயுவும் புருடனும் ஆகிய இரு கருவிகள் உந்தியில் செயல்படும். உறக்கத்தில் அகங்காரம், பிராணன், புருடன் ஆகிய மூன்று கருவிகள் இதயமாகிய தானத்தில் நின்று செயல்படும். கனவில், ஞானேந்திரியம் கன்மேந்திரியம் ஆகியவற்றால் உணரப்படும் பொருள்கள் பத்தும் அவற்றை அறியப் பயன்படும் வாயுக்கள் பத்தும், அந்தக்கரணங்கள் நான்கும் புருடன் ஒன்றுமாகிய இருபத்து ஐந்து கருவிகளும் கண்டத்தில் (தொண்டை) நின்று தொழில் செய்யும்.

இலாடத்தே சாக்கிரத்தை எய்திய உள்ளம்
இலாடத்தே ஐந்தவத்தை எய்தும் - இலாடத்தே
அவ்வவ் இந்திரியத்து அத்துறைகள் கண்டதுவே
அவ்வவற்றின் நீங்கலது ஆங்கு. 28

இலாடத்தானம் என்னும் புருவ மத்தியில் ஆன்மா (உள்ளம்) நின்று நனவு அவத்தையை அடைந்தபோது நனவில் நனவு, நனவில் கனவு, நனவில் உறக்கம், நனவில் துரியம், நனவில் துரியாதீதம் என்ற ஐந்து அவத்தைகளையும் ஒன்றுக்குப் பின் ஒன்றாக உணரும். அவ்வப்போது அவ்வவற்றுக்கான இந்திரியங்களோடு உள்ளம் சேரும். இது ஒரு சுழற்சியான விளைவுமாகும்.

## ஐந்தாம் சூத்திரம்

விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண் மூக்கு
அளந்து அறிந்து அறியா ஆங்கு அவை போலத்
தாம்தம் உணர்வின் தமியருள்
காந்தம் கண்ட பசாசத்து அவையே.

அதிகரணங்கள்

1. விளம்பிய உள்ளத்து மெய் வாய் கண் மூக்கு அளந்து அறிந்து அறியா.
2. ஆங்கு அவை போல தாம் தம் உணர்வின் தமியாருள் காந்தங் கண்ட பசாசத்தவையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் : விளம்பிய உள்ளத்து – மேலே குறிப்பிட்ட ஆன்மாவின் உதவியால் (உள்ளம் – ஆன்மா) மெய்வாய் கண் மூக்கு அளந்தறிந்து – மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐந்து பொறிகளும் தத்தம் விடயங்களை அளவிட்டு அறிந்தாலும், அறியா – தம்மையும், தம்மைச் செலுத்தும் ஆன்மாவையும் அறிவதில்லை, ஆங்கு அவைபோல – அந்த ஐம்பொறிகள் போல, தாம் தம் உணர்வின் தமியருள் – ஆன்மாக்களும் தம்மையும் தமது அறிவுக்கு விளக்கம் தருவனவாகிய தனி முதல்வனது திருவருட் சக்தியையும் அறிய மாட்டா, காந்தம் கண்ட பசாசத்து அவையே – காந்தத்தின் முன்வைத்த (பசாசம் இரும்பு) இருப்பின் இயக்கம் போல முதல்வன் சந்நிதி மாத்திரையாய் நிகழும்.

உதாரண வெண்பா

**ஐம்பொறியை ஆண்டுஅங்(கு) அரசாய் உளம்நிற்க**
**ஐம்பொறிகள் உள்ள அறியாவா(ம்) - ஐம்பொறியில்**
**காணாதேற் காணாது காணும் உளங் காணாதேல்**
**காணாகண் கேளா செவி.** 29

ஓர் அரசன், தன்னுடைய பணியாளர்களை வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பி, அரசாங்கப் பணிகளை ஆங்காங்கே செயல்படுத்துவான். அவ்வவ்விடத்து மக்கள் நேரடியாக அரசனை அறிய மாட்டார்கள்; பணியாளர்கள்கூட அரசனை முழுமையாய் அறிய மாட்டார்கள்.

ஐந்து பொறிகளையும் செலுத்திக்கொண்டு அரசனாய் ஆன்மா உள்ளது. பொறிகளுக்கு ஆன்மாவைத் தெரியாது. இந்த ஐம்பொறிகள் இல்லாமல், ஆன்மாவும் உலகப் பொருள்களைப் புரிந்துகொள்ள முடியாது. பொறிகள் வாயிலாகவே ஆன்மா பொருட்களைப் புரிந்துகொள்வது போல (தானாகப் புரிந்துகொள்ளாமல்), அரசனும் தான் மட்டும் நேராக ஆட்சி செலுத்த முடியாது; பணியாளர்கள் வழியாகவே செயல்பட முடியும்.

ஆன்மா ஒன்றாவிட்டால் கண் வெறும் கண்ணாக இருக்குமே தவிர காணுகிற கண்ணாகாது; செவி இருக்கும்; ஆனால் கேட்காது; (கனவில் பொறிகளுடன் ஆன்மா ஒன்றாததால் அவை செயல்படுவதில்லை என்பது மேலும் ஆதாரம்.)

**மன்னுசிவன் சந்நிதியின் மற்றுலகம் சேட்டித்த(து)**
**என்னு மறையின் இயல்மறந்தாய் - சொன்னசிவன்**
**கண்ணா உளம்வினையால் கண்டறிந்து நிற்குங்கா(ண்)**
**எண்ணான் சிவன்அசத்தை இன்று.** 30

மாறாத நிலைப்பொருளாக உள்ள இறைவனின் தூண்டுதலால், இந்த உலகம் தொழில்படுகின்றது. மறைகளும் ஆகமங்களும் சொல்லக்கூடிய இந்த உண்மையை மறந்தவனே! அந்த இறைவன் கண்ணாக விளங்க (அதாவது தூண்டிச் செயல்படுத்த), ஆன்மா பொருட்களைக் கண்டு தன்னுடைய வினைக்குத் தக்கவாறு அவற்றை அநுபவிக்கும். (கண் பொறிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்லாமல் எல்லாப் பொறிகளுக்கும் இது பொருந்தும்.) ஆன்மாவின் கண்ணாக இறைவன் நின்றாலும், பார்க்கப்படுகின்ற அசத்துப் பொருட்களை (நிலையற்ற பொருட்களை) அவன் அநுபவிக்க மாட்டான்.

**வெய்யோன் ஒளியில் ஒடுங்கி விளங்காது**
**வெய்யோனை ஆகாத மீன்போல - மெய்யவனில்**
**கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றுஅறியும் ஐம்புலனைக்**
**கண்டுஉடனாய் மன்னுதலைக் காண். 31**

சூரியன் முன்னால் விண்மீன் ஒளிராது. சூரியன் இல்லாமலும் விண்மீன் ஒளிராது. அதுபோல் இறைவன் இட்ட செய்கையாலும் ஆன்மா உணராது; இறைவன் அருளாமலும் ஆன்மா உணராது. ஆயின், அவனோடு உடன்பட்டு உணரும். (அதுவும் சூரியன் ஒரு பூவை மொட்டாக்குதல், மற்றதை மலர்வித்தல், இன்னொன்றை வாடச் செய்தல் என்று தனித்தனிச் செய்கை செய்யாதது போல) கண்டு, கேட்டு, உண்டு, உற்று, உயிர்த்து அறியும் பல செய்கைகளுக்கும் இறைவன் தனித்தனிச் செய்கை செய்வதில்லை. (இப்பாடல் சூரிய ஒளியால் விண்மீன் ஒளிரும் என்னும் கருத்தில் எழுதப்பட்டதாகும்.)

**அருளுண்டாம் ஈசற்கு அதுசத்தி யன்றே**
**அருளும் அவனன்றி இல்லை - அருளின்(று)**
**அவனன்றி இல்லை அருட்கண்ணார் கண்ணுக்(கு)**
**இரவிபோல் நிற்கும் அரன் ஏய்ந்து 32**

இறைவனுக்கு உயிர்களை உய்விக்கும் இரக்கம் உண்டு; அதுவே அருள்; அதுவே அவனது சத்தியாகும். அந்த சத்தியும் அவனில்லாமல் இருக்காது. அச்சத்தி இல்லாமல் அவனும் இல்லை. (இரண்டும் இணைந்தே இருக்கும்). சரியாகப் பார்க்கக் கூடியவர்களுக்கு ஒன்று புரியும். சூரியனையும் ஒளியையும் பிரிக்க முடியுமா? சூரியன் தனியாக ஒளி தனியாகப் பார்க்க முடியுமா? அதுபோல அந்த அரனானவன் (இறைவனானவன்) சிவசத்தியாய் இணைந்துதான் இருப்பான்.

## ஆறாம் சூத்திரம்

**உணருரு அசத்தெனின் உணராது இன்மையின்**
**இருதிறன் அல்லது சிவசத் தாமென**
**இரண்டு வகையின் இசைக்குமன் னுலகே.**

அதிகரணங்கள்

1. உணர் உரு அசத்து எனின் உணராது இன்மையின்
2. இருதிறன் அல்லது சிவசத்தாமென இரண்டு வகையின் இசைக்கும் மன் உலகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் : உணர் உரு எனின் அசத்து – கருவிகரணங்களால் அறியப்படும் இயல்பினனானால் இறைவன் நிலையில்லாப் பொருளாவான், உணராது எனின் இன்மையின் – அவன் எல்லாவற்றாலும் அறிய முடியாத பொருளானால் அவன் இல்பொருளாவான், இருதிறன் அல்லது – ஆதலின் இரண்டு தன்மையும் இன்றி, இரண்டு வகையின் – பாச ஞானம், பசு ஞானங்களால் அறியப்படாமையும் பதி ஞானத்தால் அறியப்படுதலும் ஆய இரண்டு வகையினுக்கும் உரியது ஆகிய சிவசத்து ஆம் என – சித்துப் பொருளாகிய சத்தாய் உள்ளவன் என்று, மன் உலகு இசைக்கும் – மெய்யறிவுடைய உயர்ந்தோர் கூறுவர்.

உதாரண வெண்பா

**அசத்துஅறியாய் கேள்நீ அறிவுஅறிந்த எல்லா**
**அசத்தாகு(ம்) மெய்கண்டான் ஆயின் - அசத்தலாய்**
**நீரில் எழுத்து நிகழ்கனவும் பேய்த்தேரும்**
**ஓரின்அவை இன்றாமா(று) ஒப்பு.** 33

அசத்து என்பதன் தன்மை அறியாதவனே கேட்பாயாக! அறிவால் அறியப்படும் எல்லாமே அசத்தாகும். (மாயையால் ஆன உடல், உடலின் ஐம்பொறிகள் என்று இத்தகைய கருவிகளின் உதவியால் பெறப்படும் அறிவு). உண்மையைக் காண்பவனுக்கு இது புரியும். நீரின்மேல் எழுதப்படும் எழுத்து எழுதிய உடனே மறைவது போல, காணும் கனவு கண்டு கொண்டிருக்கும்போதே காணாமல் போவது போல, கானல் நெருங்க நெருங்க மறைவது போல அசத்துப் பொருள்களும் நிலையின்றி நீங்கும். (இருப்பது போல இருந்து இல்லாமல் போலவே அசத்து).

**எண்ணிய சத்தன்று அசத்தன்றாம் என்றால்என்**
**கண்ணி உளதென்றான் மெய்கண்டான் - எண்ணி**
**அறிய இரண்டா அசத்தால் சத்தா(ம்)**
**அறிவறியா மெய்சிவன் தாள்ஆம்.** 34

முன்பு எண்ணியபடி சத்துப் பொருளும் இல்லை அசத்துப் பொருளும் இல்லை என்றால் அப்படி ஒரு பொருள் உண்டா? அது எதற்காக இருக்கிறது? என்ற கேள்விகள் எழும். உண்மையைத் தேடுபவன் எண்ணிப் பார்த்தால், இரண்டும் அசத்து என்று புரியும். எப்படி? கருவிகள் காட்டியவற்றை அறிந்து சுட்டிக்காட்டி அவற்றை சத்து என்று எண்ணினோம் (எண்ணிய சத்து – உலகத்தோரின் கண்களில் சத்து என்று நினைத்தவை). அவை அழியக் கூடியவை. ஆகவே சத்தில்லை. இன்னொன்று சூன்யமானது; கருவிகள் காட்டாதது. அதுவும் சத்தில்லை. எனவே இரண்டும் அசத்து.

சுட்டறிவினால் அறியப்படாத மெய்ப்பொருள் இருக்கிறதே, அதுவே சத்து, அதுவே இறைவனின் தாள் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ப அசத்தாதல் ஒன்றுணரா(து) ஒன்றை
உணருநீ தானுணராய் ஆயின் - உணரும்உனில்
தான்இரண்டாதல் மெய்கண்டான் தன்னால் உணர்தலாம்
தான்இரண்டாய்க் காணான் தமி. 35

கருவிகளால் உணரப்படும் பொருள்கள் அசத்தென்பதால், அவற்றுக்குள் இறைவனை உணரமுடியாது. அவற்றை உணரும் நீயும் (ஆன்மாவும்) தன் அறிவினால் இறைவனை உணர மாட்டாய் (உணர முடியாது). அசத்துப் பொருள்களை உணரும்போது, அவற்றிலிருந்து ஆன்மா வேறுபட்டுத் தனித்து நிற்கிறது. ஆனால், ஆன்மா சத்தாகிய சிவத்தைத் தனித்து நின்று உணர முடியாது. இறையருளில் தன்னறிவை ஒருமுகப்படுத்தித்தான் உணர முடியும்.

பாவகமேல் தான்அசத்தாம் பாவநா தீதமெனில்
பாவகமாம் அன்றென்னில் பாழ்அதுவாம் - பாவகத்தைப்
பாவித்தல் தான்என்னில் பாவகமாம் தன்னருளால்
பாவிப் பதுபரம்இல் பாழ். 36

மனம் பொறிகள் என்னும் கருவிகளால் பாவிக்கப்படுவதென்றால் அது சுட்டறிவின் அசத்து. கருவிகளுக்கு அப்பாற்பட்டது என்றால் அது சுட்டறிவுமில்லை; வெறும் பெயர் மட்டுமே. இவை இரண்டுமே இல்லையென்றால், அது வெறும் சூன்யமே. அறியாத ஒன்றை அறிந்ததாகப் பாவித்தால், அது போலிப் பாவனை. அப்படியானால், இறைவனுடைய அருளாலேயே உணரப்படுவதுதான் பரம்பொருள். அது பாழில்லை.

அறிய இரடண்டல்லன் ஆங்(கு) அறிவு தன்னால்
அறியப் படான்அறிவின் உள்ளான் - அறிவுக்குக்
காட்டாகி நின்றானைக் கண்ணறியா மெய்யென்னைக்
காட்டா(து) அறி(வு)அறிந்து கண்டு. 37

ஆன்மா சிவத்துக்கு வேறில்லை ஆதலால் தன் அறிவால் அறிவது என் ஒன்றில்லை – தன் அறிவிற்கு உள்ளாக நிற்கும் உயிர்க்கு உயிராகிய சிவம் ஆகையால் தானும் தனித்து நின்று விட்டது என்க.

அதுவென்னும் ஒன்றன்று அதுவன்றி வேறே
அதுவென்று அறிஅறிவும் உண்டே - அதுவென்று
அறிய இரண்டல்ல ஆங்கறியும் நிற்றல்
அறியும்அறி வேசிவமு மாம். 38

அது எனும் சிவம் தனித்து அறியப்படுவதும் இல்லை. ஆனால் ஆன்மா அதை அறியுமாறு நிற்கும், நின்றபோதும் சிவத்தை அறிவிக்கும் அறிவே சிவமாகி இருக்கும் என்பதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மை இயல்பு

## சாதன இயல்

### ஏழாம் சூத்திரம்

**யாவையும் சூனியம் சத்துஎதிர் ஆகலின்**
**சத்தே அறியா(து) அசத்தில(து) அறியா(து)**
**இருதிறன் அறிவுள(து) இரண்டலா ஆன்மா.**

அதிகரணங்கள்

1. யாவையும் சூனியம் சத்து எதிர் ஆகலில் சத்தே அறியாது.
2. அசத்து இலது அறியாது
3. இருதிறன் அறிவு உள இரண்டு அலா ஆன்மா

பொருள் : சத்து எதிர்யாவையும் சூனியம் ஆகலின் – சத்தாகிய சிவத்தின் முன் அசத்தாகிய உலகப் பொருள்கள் எல்லாம் இப்பொருள் ஆகின்றன. சத்து அறியாது – சத்தாகிய சிவம் அசத்தை அறிதல் செய்யாது, அசத்து இல்லது ஆகலின் – அசத்தாகிய உலகம் அறிவு இல்லாதது ஆதலால், பதி, பசு ஆகிய இரண்டையும் அறியாது, இருதிறன் அறிவு உளது இரண்டலா ஆன்மா – சத்தையும் அசத்தையும் அறியும் தன்மை உள்ளது சத்தேயாகவும், அசத்தேயாகவும் இல்லாத சதசத்து ஆகிய ஆன்மா.

உதாரண வெண்பா

**அந்தியம் இல்லாமை அரற்(கு) ஒன்று உணர்வின்றாம்**
**அந்நியம் இலான்அசத்தைக் காண்குவனேல் - அந்தியமாக்**
**காணான் அவன்மன் கதிர்முன் இருள்போல**
**மாணா அசத்தின்மை மற்று.** 39

எங்கும் நிறைந்த சிவத்திற்கு பசுவும் பாசமும் உட்பட்டதேயாம். ஆகவே அவனுக்கு இவை அந்நியமில்லை. அசத்தை அறிய நேர்ந்தால் நம்மைப் போல, அது வேறு நாம் வேறாக அறிய வேண்டுவதில்லை. தன்னுள் அகப்படுத்தியவாறே அறிவான். அசத்தும், சூரியன் முன் இருள்போல, சிவத்தின் முன் விளங்காது போகும்.

**பேய்த்தேர்நீர் என்றுவரும் பேதைக்கு மற்றுஅணைந்த**
**பேய்த்தேர் அசத்தாகும் பெற்றிமையின் - வாய்த்ததனைக்**
**கண்டுணர்வார் இல்வழியில் காணும் அசத்தின்மை**
**கண்டுணர்வார் இல்ல(து) எனக் காண்.** 40

பாலை நிலத்தில் தோன்றும் கானல் நீரை உண்மை எனக் கருதித் தாகத்தோடு வரும் அறிவில்லாதவன், அங்கு வந்தவுடன் அது நீரில்லை என்று அறிவது போல, குருவின் உபதேசத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்தவுடன் அசத்து என்னும் உண்மையைப் புரிந்து கொள்ளலாம். உலகப் பொருள்கள் மூலமாக வரும் அறிவு, ஆய்ந்து உணர்த்துவார் இருக்கும்போது, இல்லாது போகும்.

அருவுருவம் தானறிதல் ஆயிழையாய் ஆன்மா
அருவுருவம் அன்றாகும் உண்மை - அருவுருவாய்த்
தோன்றியுடன் நில்லாது தோன்றாது நில்லாது
தோன்றல் மலர்மணம்போல் தொக்கு. 41

அருவமாகிய சத்துப் பொருளையும் உருவமாகிய அசத்துப் பொருளையும் அறியக்கூடிய திறன் கொண்ட ஆன்மா, அவ்விரண்டும் அல்லாத வேறு பொருளேயாம். அவ்விரண்டும் போல, அவற்றுடன் நிற்காது, தனியேயும் தோன்றாது, மலரில் உள்ள மணம் எப்படி மலரின் பகுதிகளோடு கலந்து அந்தந்த நேரத்தில் வெளிப்படுகிறதோ, அப்படியே வெளிப்படும்.

மயக்கம்அது உற்றும் மருந்தில் தெளிந்தும்
பெயர்த்துணர்நீர் சத்தாகாய் பேசில் - அசத்தும்அவை
நீஅறிந்து செய்வினைகள் நீஅன்றி வேறு) அசத்துத்
தான் அறிந்து துய்யாமைதான். 42

ஒரு பொருளை அறிய இயலாமல் மயங்குவதும் பிறகு மருந்தால் மயக்கம் தீர்வதும்போல, அறிவுவந்து, முன் அறியாத பொருளை இப்போது அறியக்கூடிய தன்மையால் நீ சத்துப் பொருள் ஆகிவிடமாட்டாய். (சத்துப் பொருளுக்கு அறிவு ஒரு பொழுது இருந்தும் பிறிது இல்லாதும் போவது இல்லை) நீ அசத்துப் பொருளும் ஆகமாட்டாய். ஏன் என்றால், நீ முன்பு செய்த வினையை, நீயே பிறகு அனுபவிக்கிறாய். அசத்துப் பொருள் இவ்வாறாக அனுபவிப்பது இல்லை. ஆகையால் நீ அசத்தும் இல்லை.

மெய்ஞ்ஞானம் தன்னில் விளையாது அசத்துஆதல்
அஞ்ஞானம் உள்ளம் அணைதல்காண் - மெய்ஞ்ஞானம்
தானே உளவன்றே தண்கடல்நீர் உப்புப்போல்
தானேய் உளம்உளவாத் தான். 43

அஞ்ஞானம் அசத்து; ஆகையால் மெய்ஞ்ஞானமுள்ள சிவத்தில் அது தோன்றாது. அதைச் சாரும் ஆன்மாவுக்கு அஞ்ஞானம் மலத்தினால் வந்தது. எப்படி என்றால், கடலுக்கு இயல்பாக இல்லாத உப்பு, அதனில் நிற்கும் நீருக்குமட்டும் வந்ததைப் போன்றதாகும். (இங்குக் கடல் என்பது நீர்தாங்கும் பள்ளமாகும்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எட்டாம் சூத்திரம்

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்துஎனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்(டு)
அந்நியம் இன்மையின் அரன்கழல் செலுமே.

அதிகரணங்கள்

1. தலத்தினில் உணர்த்த
2. தம் முதல் குருவுமாய்
3. ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தென
4. விட்டு அந்நியம் இன்மையின் அரன்கழல் செலும்

பொருள் : தவத்தினில் – ஆன்மா முன்னைய பிறவிகளில் செய்து வந்த சரியை, கிரியை, யோகம் ஆகிய தவ.விசேடத்தால், தம் முதல் – தனக்குள்ளே நின்று அறிவித்து வந்த தனது முதல்வனாகிய சிவனே, குருவுமாய் – இப்பொழுது குருவடிவம் கொண்டு மானிட வடிவில் வந்தருளி, ஐம்புல வேடரின் வளர்ந்து அயர்ந்தனை என உணர்த்த – சிவ தீட்சை செய்து இராசகுமாரனாகிய நீ ஐம்பொறிகள் ஆகிய வேடருள் அகப்பட்டு வளர்ந்து உனது பெருமையை அறியாது மயங்கித் துன்புற்றாய் என்று உணர்த்தி அருள, விட்டு – ஆன்மா ஐம்புல வேடரை விட்டு நீங்கி, அந்நியம் இன்மையின் அரன் கழல் செலுமே – இறைவனோடு அந்நியம் இல்லாத தன்மையில் நிலை பெற்று இறைவன் திருவடியை அடையும்.

உதாரண வெண்பா

தவம்செய்தார் என்றும் தவலோகம் சார்ந்து
பவம்செய்து பற்றுஅறுப்பா ராகத் - தவம்செய்த
நற்சார்பில் வந்துஉதித்து ஞானத்தை நண்ணுதலைக்
கற்றார்சூழ் சொல்லுமாம் கண்டு. 44

தவம் செய்தவர்கள் தவலோகம் சென்று, தவப்பயனை அனுபவித்து, மீண்டும் பிறந்து, முன்பே மிச்சமிருந்த வினைப்பயனை அனுபவிக்கும் காலத்தில், பற்றுவிட்டு, மேலும் தவம் செய்தலால் ஞானம் பெறுவர் என்று பெரியோர் சொல்வர்.

பசித்துண்டு பின்னும் பசிப்பானை ஒக்கும்
இசைத்து வருவினையில் இன்பம் - இசைத்த
இருவினை ஒப்பில் இறப்பில் தவத்தால்
மருவுவனாம் ஞானத்தை வந்து. 45



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசித்தவனுக்கு உண்டபின்னும் வசி வந்தால், மேலும் உண்பதால் இன்பம் பெறுவதைப் போல, புதிய வினைகளை அனுபவித்து இருவினை ஒப்பு நிகழ்ந்த பிறகு, தவம் செய்தால் அதன் மூலமும் ஞானத்தை அடைவான்.

மெய்ஞ்ஞானம் தானே விளையும்விஞ் ஞானகலர்க்(கு)
அஞ்ஞான அச்சகலர்க் அக்குருவாய் - மெய்ஞ்ஞானம்
பின்உணர்த்தும் அன்றிப் பிரளயா கலருக்கு
முன்உணர்த்தும் தான்குருவாய் முன். 46

ஒரு மலமுடைய விஞ்ஞானகலராகிய ஆன்மாவிற்கு அவர் உள்ளத்தில் ஞானம் தானே உண்டாகும். பிரளயாகலருக்கு (இருமலம் உடையவர்), குருவடிவம் தாங்கி வந்து ஞானம் வழங்கும். சகலருக்கு (மூன்று மலங்களும் உடையவர்) முதலில் அஞ்ஞானமாயிருந்து, பிறகு அது நீங்க குருஉபதேசம் கிட்டும்.

அறிவிக்க அன்றி அறியா உளங்கள்
செறியுமாம் முன்பின் குறைகள் - நெறியில்
குறைவுடைய சொற்கொள்ளார் பவத்தின் வீடென்
குறைவில்சகன் சூழ்கொள் பவர்க்கு. 47

அறிவித்தாலன்றி (அறிவிக்கப் பெறாமல்) ஆன்மாக்கள் அறிவது இல்லை. காரணம், முன்னும் பின்னும் குறைகள் அவற்றிடம் இருக்கலாம். நூல் வேண்டாம் என்ற நிலையினர்க்கு, குருவடிவத்தின் உண்மையே போதும். நூலும் தேவைப்படுவோர்க்கு அதுவும் கிடைக்கும். (சகலர்க்கு நூல் வேண்டும்.)

இல்லா முலைப்பாலும் கண்ணீரும் ஏந்திழைபால்
நல்லாய உளவாமா நீர்நிழல்போல் - இல்லா
அருவாகி நின்றானை யார்அறிவார் தானே
உருவாகித் தோன்றானேல் உற்று. 48

குழந்தையைக் காண்பதற்கு முன் முலைப்பாலும் கண்ணீரும் ஒரு பெண்ணுக்கு இல்லை. அன்பு வசத்தால் குழந்தையைக் கண்டதும் இவை உண்டாகின்றன. அவ்வாறே ஞானம் தர, இறைவன் வெளிப்படுவான். நீரில் பதியும் நிழல் போல, கடவுளின் உருவமும் ஆன்மாவில் பதிவதில்லை. எனவே அவனே அருளால் வேறு வடிவை கொண்டால் தான் உண்டு.

பன்னிறம் காட்டும் படிகம்போல் இந்திரியம்
தன்னிறமே காட்டும் தகைநினைந்து - பன்னிறத்துப்
பொய்ப்புலனை வேறுணர்ந்து பொய்பொய்யா மெய்கண்டான்
மெய்ப்பொருட்குத் தைவமாம் வேறு. 49



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நிறங்களையும் காட்டும் படிகம் போல, இந்திரியங்கள் உணர்த்துவதையே மெய் என்று நம்புகின்ற ஆன்மா, குருவினால் அவற்றைத் தன்னில் வேறாகவுணர்ந்து , மெய்கண்டு, பொய்யைப் பொய்யாக உணரும்.

சிறைசெய்ய நின்ற செழும்புனலின் உள்ளம்
சிறைசெய் புலன்உணர்வில் நீர்ந்து - சிறைவிட்(டு)
அலைகடலில் சென்றடங்கும் ஆறுபோல் மீளா(து)
உலைவில்அரன் பாதத்தை உற்று. 50

தன்னைச் சிறையில் வைப்பது போல அடக்கியாளுகிற புலன் உணர்வுகளிலிருந்து நீங்கி, அணையைவிட்டு வெளியேறும் நீர்போல வெளிப்பட்டு, கடலில் போய் அடங்கும் நிலையில், ஆன்மாவானது, இறைவன் பாதத்தை அடைந்து மீளாத நிலையை அடையும்.

எவ்வுருவும் தான்என்னில் எய்துவார் இல்லைதாள்
இவ்வுருவின் வேறேல் இறையல்லன் - எவ்வுருவும்
கண்போல் அவயவங்கள் காணாஅக் கண்ணில்லார்
கண்பேறே காணக் கழல். 51

எல்லா உருவமும் தானேயாகி இறைவன் நின்றுவிட்டால், பின்னர், அவன்தாளைத் தனியே அடைய முடியாது. இந்த உருவங்களில் அவன் வேறானவன் என்றால், அவன் இறைவனல்ல என்றாகும். (உப்பளத்தில் கிடந்த வைக்கோலும் உப்பாவது போலச் சிவத்தோடு சேர்ந்தவையும் சிவமே ஆகும்.) ஞானேந்திரியங்கள் இருந்தபடி இருந்துமட்டுமே அறியும்போது, கண் மட்டும் தொலைவில் உள்ளதை அறியும். கண்ணில்லாதவரும் அதைப் பெற்றுப் பயன் பெறுவர். அவ்வாறு சகலரும் சிவஞானம் பெறுவர்.

ஐம்பொறியின் அல்லையெனும் அந்த தரசிவனை
ஐம்பொறியை விட்டங்(கு) அணைசகலன் - ஐம்பொறியின்
நீங்கான்நீர் பாசிபோல் நீங்குமல கன்மம்வரின்
நீங்கானை நீங்கு நினைந்து 52

ஐம்பொறிகளைக் கைவிட்டுச் சிவன் திருவடியை அடைந்து, பிறகும் கூட முன்பு போலவே உட்பொறிகள் ஐந்துடனும் நிற்பாயாக. அப்போதும் சகலர்களை விட்டு ஐம்பொறிகள் நீங்காததுபோலச் சிவமும் உன்னை விட்டு நீங்காது. பாசியுள்ள குளத்தில் கல் எறிந்ததும் பாசி நீங்கிப் பிறகு ஒன்றாகி மீளும். ஆகவே முன்புபோல, ஐம்பொறிகளை விட்டு விலகி இறைவனை நினைத்துவிடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் சூத்திரம்

**ஊனக்கண் பாசம் உணராப் பதியை**
**ஞானக் கண்ணினில் சிந்தை நாடி**
**உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவருத்**
**தண்ணிழலாம் பதிவிதி எண்ணும்அஞ் செழுத்தே.**

அதிகரணங்கள்.

1. ஊனக்கண், பாசம், உணராப் பதியை ஞானக் கண்ணினில் சிந்தை நாடி
2. உராத்துனைத்து தேர்ந்தெனப் பாசம் ஒருவ தண் நிழலாம் பதி
3. விதி எண்ணும் ஐந்து எழுத்தே.

பொருள் : ஊனக் கண், பாசம், உணராய் பதியை – குறை உணர்வு ஆகிய பசு ஞானத்தாலும், பாச ஞானத்தாலும் அறிய முடியாத பதியாகிய சிவபெருமானை, ஞானக் கண்ணினில் – அவனுடைய திருவடி ஞானமாகிய பதி ஞானத்தால், சிந்தை நாடி – ஆன்மா தன் அறிவின் கண் ஆராய்ந்தறிந்து, பாசம் உராத்துனைத் தேர்ந்தென – நிலம் முதல் நாதம் ஈறாகிய சடப்பொருள்கள் ஒருவரும் ஏறிச் செலுத்தாத விரைவுடைய பேய்த்தேராகிய கானல் நீர்போல் கழிவது என்று அறிந்து, ஒருவ – அவற்றை விட்டு நீங்க, பதிதன் நிழலாம் – அந்தப் பதிஞானம் பிறவித்துன்பமாகிய வெப்பத்திற்குக் குளிர் நிழலாய் வெளிப்பட்டு விளங்கும், அஞ்செழுத்து விதி எண்ணும் – அப்பேற்றைத் தருகின்ற ஐந்தெழுத்தை ஆன்மா விதிப்படி ஓதும்.

உதாரண வெண்பா

நாடியோ என்போ நரம்புசீக் கோழையோ
தேடி எனைஅறியேன் தேர்ந்தவகை - நாடியரன்
தன்னாலே தன்னையும் கண்டு தமைக்காணார்
என்னாம் எனஅறிவார் இன்று. 53

நாடி, எலும்பு, நரம்பு, சீழ், கோழை எனும் உடல் பொருள்களில் எது ஆன்மாவின் இடம் எனத் தேடியும் அறியேன். தேர்ந்த வகையில் நாடியவர்கள், இறையருளால் தன்னையும் (ஆன்மாவையும்) கண்டு தன்னைக் காணாராய் இருப்பர். (காரணம் சிவமே தானாய் இருப்பர் என்பதாம்.)

காட்டிய கண்ணே தனைக்காணா கண்ணுக்குள்
காட்டாய உள்ளத்தைக் கண்காணா - காட்டிய
உள்ளந் தனைக்காணா உள்ளத்தின் கண்ணாய
கள்வன்தான் உள்ளத்தில் காண். 54



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்களைக் காட்டும் கண் தன்னைக் காணாது, தன்னைக் காணுமாறு செய்கிற ஆன்மாவையும் காணாது, அதுபோலவே, தன்னையும் ஆன்மா அறியாது. தன்னைச் செலுத்தும் இறைவனையும் அறியாது. ஆனால், கண்ணில் ஆன்மா இருந்து செயற்படுத்துவது போல, ஆன்மாவின் அறிவில் இறைவனும் இருந்து செயல்படுத்துகிறான்.

நிர்க்குணனாய் நின்மலனாய் நித்தியா னந்தமாய்த்
தற்பரமாய் நின்ற தனிமுதல்வன் - அற்புதம்போல்
ஆனா அறிவாய் அளவிறந்து தோன்றானோ
வானே முதல்களையின் வந்து. 55

முக்குணங்களுக்கு அப்பாற்பட்டவனாக, மலகன்மங்களால் அறியப்படாதவனாக, என்றும் உள்ளவனாக, ஆனந்தமானவனாக, ஆன்மாக்களின் தலைவனாக நிற்கும் தனிப்புகழ் கொண்ட முதல்வன், அவன் முன்பு தோன்றாது இருந்தாலும், அற்புதமாக அறிவு வடிவமாக வந்து தோன்றுவன்; எப்போது? வானம் முதலிய பாசங்களைக் களைந்த பிறகு வருவான்.

சுட்டி உணர்வதனைச் சுட்டி அசத்தென்னச்
சட்ட இனியுளது சத்தேகாண் - சுட்டி
உணர்ந்தநீ சத்தல்லை உண்மையைத் தைவம்
புணர்ந்ததனால் பொய்விட்டுப் போம். 56

சுட்டி உணரப்படுகிற பிரபஞ்சம் முதலான பொருள்கள் அசத்து ஆகும். சுட்டாது எஞ்சியுள்ளது சத்துப் பொருளாகும். இப்படிப் பிரித்தபின், சுட்டப்பட்ட நீயும் அசத்தின் தன்மை ஆவாய்; ஆனால் தெய்வம் உன்னைக் கலந்ததால் பொய் உன்னை விட்டுப் போகும்.

கண்டதை அன்றுஅன்று எனவிட்டுக் கண்டசத்தாய்
அண்டனை ஆன்மாவில் ஆய்ந்துணரப் - பண்டணைந்த
ஊனத்தைத் தான்விடுமா(று) உத்தமனின் ஒண்கருட
சானத்தில் தீர்விடம்போல் தான். 57

சுட்டியறியும் பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொன்றாகப் பார்த்து இது சத்து அன்று, அசத்து என நீக்கிக்கொண்டே வந்தால், இறுதியாக சத்துப் பொருளாகிய சிவத்தை ஆன்மாவில் ஆய்ந்துணரலாம். அப்போது முன்பு வந்த மலகன்மங்களாகிய ஊனம் விட்டுப் போகும்படி, சிவயோகம் முதலானவை செய்தால், கருடபாவனையால் விஷம் தீர்ந்தது போல ஆன்ம ஊனமும் நீங்கும்.

அஞ்செழுத்தால் உள்ளம் அரன்உடைமை கண்டுஅரனை
அஞ்செழுத்தால் அர்ச்சித்து இதயத்தில் - அஞ்செழுத்தால்
குண்டலியில் செய்துஓமம் கோதண்டம் சானிக்கில்
அண்டனாம் சேடனாம் அங்கு. 58



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்செழுத்தால், ஆன்மா சிவனுக்கு உடைமை என்பதைக் கண்டு, சிவனை, அதே அஞ்செழுத்தால் அர்ச்சனை செய்து, இதயத்தில் அஞ்செழுத்தால் குண்டலி ஓமம் செய்து, இமை நடுவில் தியானித்தால் இறைவன் நட்புடன் அடிமையாவும் அமைவதை அறியலாம்.

(குண்டலி ஓமம் என்பது, உந்தி, இதயம், புருவ மத்தியாவற்றையும் ஒரு நேர்கோட்டில் பாவித்து 'ஓம்' என்று மனத்தால் உச்சரிக்கும் தியானம். குண்டலினி நெருப்பு எழும்; அது புருவம் வரை போவது கோதண்டம் எனும் தியானமாம்; கோதண்டம் என்றால் இமை. இங்கு இமை நடுவான புருவ மத்தியையும் தியான முறையையும் குறிக்கும்.)

**இந்துவில் பாநுவில் இராகுவைக் கண்டாங்குச்**
**சிந்தையில் காணில் சிவன்கண்ணாம் - உந்தவே**
**காட்டாக்கில் தோன்றிக் கனல்சேர் இரும்புஎன்ன**
**ஆள்தானாம் ஓது அஞ்செழுத்து.** 59

இராகு கேது ஆகிய நிழல் கிரகங்களை நேரில் காண முடியாது; ஆனால் சந்திர சூரிய கிரகணங்களில் அவை சந்திரனைய் சூரியனையும் மறைப்பதால் அறியலாம். அது போல, சிவனும் சிந்தையால் மட்டுமே காணப்படுவான். கடைவதால் விறகில் உள்ள தீ வெளிப்படுவது போல, சிந்திப்பதால் சிந்தையில் சிவம் தெரியும். இரும்பு கறுப்பாக இருந்தாலும் தீயில் சேர்ந்து பழுத்த போது தீயைப் போலச் சிவக்கும். ஆன்மாவில் சிவம் சேர்வதும் இப்படியே. ஆகவே ஐந்தெழுத்தை ஓத வேண்டும்.

**மண்முதல் நாளம்மலர் வித்தை கலாரூபம்**
**எண்ணிய ஈசர் சதாசிவமும் - நண்ணில்**
**கலையுருவாம் நாதமாம் சத்திஅதன் கண்ணாம்**
**நிலைஅதிலாம் அச்சிவன்தான் நேர்.** 60

மண் முதலிய இருபத்து நான்கு தத்துவங்களும் (ஆன்ம தத்துவம்) தாமரையின் நாளமாம் (தண்டு), வித்தியாதத்துவம் ஏழும் சுத்த வித்தையும் தாமரையின் எட்டு இதழ்கள், ஈசுவரத்தத்துவமும் சதாசிவ தத்துவமும் அறுபத்து நான்கு கேசாரபுலங்கள், சத்திதத்துவம் தாமரையின் பொகுட்டாகும். சிவதத்துவம் அதில் காணப்படும் ஐம்பத்தொரு பீஜ வடிவங்களாகும். இப்படி முப்பத்தாறு தத்துவங்களையும் பீடமாகக் கொண்டு சிவம் இருக்கும். அவ்வுருவை ஐந்தெழுத்தால் அர்ச்சிக்க வேண்டும். (இது உந்தியில் முளைத்து இதயம் வரை உயர்ந்த தாமரை.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயன் இயல்

### பத்தாம் சூத்திரம்

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏக னாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே.

அதிகரணங்கள்

1. அவனே தானே ஆகிய அந்நெறி ஏகன் ஆகி
2. இறைபணி நிற்க மலம் மாயை தன்னோடு வல்வினை இன்றே.

பொருள் : அவனே – ஞானக் கண்ணால் சிந்தை நாடப்பட்ட அம் முதல்வன், தானே ஆகிய அந்நெறி – உயிராகிய தானே யாய் நின்ற அப்பெத்த நிலை (மலபந்தம் உள்ள) போல், ஏகனாகி – உயிர் அவனோடு ஒன்றேயாய், இறைபணி நிற்க – அவ்விறைவன் பணியில் வழுவாது நின்றபின், மலமாயை தன்னொடு வல்லினைகின்றே – ஆணவமலம், மாயாமலம் என்னும் இரண்டனோடு வலிய கன்ம மலமும் இல்லா தொழியும்.

உதாரண வெண்பா

நான்அவன்என்று எண்ணினர்க்கு நாடும்உளம் உண்டாதல்
தான்எனஒன்றுஇன்றியேதான் அதுவாய் - நானெனஒன்(று)
இல்லென்று தானே எனும்அவரைத் தன்னடிவைத்(து)
இல்லென்று தானாம் இறை. 61

தான் அவன் என்று (அஹம்பிரம்மாஸ்மி) என்று எண்ணுபவர்க்கும் நான், அவன் எனப் பிரித்து உணர்பவர்க்கும் இறைவனை உணரும் ஆன்மபோதம் உண்டாகும். தன்னைப் பிரித்து இறைவனும் தனியே அவர்க்குத் தோன்றமாட்டான். தானே ஆன்ம அறிவாய் நிற்பான். இப்படி நான் என்று தன்னைப் பிரித்து உணராதவரைத் தன் அடியின் கீழ் வைத்து, முழுதுமாய் அவனே இவன் ஆவானாம்.

நாமல்ல இந்திரியம் நம்வழியில் அல்லவழி
நாமல்ல நாமும் அரன்உடைமை - யாமென்னில்
எத்தநுவில் நின்றும் இறைபணியார்க்(கு) இல்லைவினை
முற்செய்வினை யும்தருவான் முன். 62

இந்திரியங்கள் நாமல்ல, அவற்றைத் தொழில்பட வைப்பதும் நாமல்ல என்று உணர்ந்து, நாமும் அவன் உடைமை என்று இருந்தால், எந்த உடம்பிலிருந்து எந்தச் செயலைச் செய்தாலும், அது பந்தமாகாமல் பந்தத் தளைக்குள் கட்டுப்படுத்தாமல் சென்ற பிறவி வினைகளும் இறையருளால் உடல் வருத்தமாகக் கழியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடன்ஆதல்
சார்ந்தாரைக் காத்துஞ் சலம்இலனாய்ச் - சார்ந்தடியார்
தாம்தானாய் செய்துபிறர் தங்கள்வினை தான்கொடுத்தல்
ஆய்ந்தார்முன் செய்வினையும் ஆங்கு. 63

தன்னைச் சார்ந்தவரைக் காப்பது தலைவனுடைய கடனானபடியால், அடியார்களைக் காப்பான். தன்னைச் சார்ந்தவர்களைத் தானே போல ஆக்கியும் காப்பான். வினைத் தொடர்புகள் அற்றுப் போகச் செய்வான். பிறருக்கு அவரவர் வினைக்கு ஏற்பப் பயன் விளைவுகளை நுகரச் செய்வான்.

இங்குளி வாங்கும் கலம்போல ஞானிபால்
முன்செய் வினைமாயை முண்டிடினும் - பின்செய்வினை
மாயையுடன் நில்லாது மற்றவன்தான் மெய்ப்பொருளே
ஆயஅத னால்உணரும் அச்சு. 64

பெருங்காயம் வைத்திருந்த பாத்திரத்தில் அதை எடுத்த பிறகும் வாசனை இருப்பது போல, முன்செய்த வினையும் மாயையும் ஞானிகளிடம் வந்தாலும்கூட, பின்பு செய்த வினையுடனும் மாயையுடனும் அவை சேர்ந்திடாது அழியும். காரணம், சிவமாகிய அச்சு தனையே ஞானி எண்ணியிருப்பதாலாம்.

நல்அனல் வேவாத நல்தவர் தம்மினும்
பண்ணமர மாச்செலுத்தும் பாகரினும் - எண்ணி
அரனடி ஓர்பவர் ஐம்புலனில் சென்றும்
அவர்திறன் நீங்கார் அதற்கு. 65

தீயின் நடுவில் நின்றாலும்கூட நல்தவம் உடையாரை அது சுடாதது போலவே, குதிரையைச் செலுத்தும் பாகுநூல் கற்றவர் குதிரையின் வேகத்திற்குக் கலங்காதது போலவே, எப்போதும் சிவனடியையே நினைத்திருப்பவர், ஐம்புலன்களுடன் இருந்தாலும் அவற்றிற்கு மயங்க மாட்டார்.

சதசத்தாம் மெய்கண்டான் சத்தருளில் காணின்
இதமித்தல் பாசத்தில் இன்றிக் - கதமிக்(கு)
எரிகதிரின் முன்னிருள்போல் ஏலாஅசத்தின்
அருகணையார் சத்துணைவார் ஆங்கு. 66

சத்தினிடம் சத்தாகவும் அசத்தினிடம் அசத்தாகவும் இருக்கும் சதசத்தாகிய தன்னுடைய இயல்பின் உண்மையை உணர்ந்தவன், இறைவன் திருவருள் வழி எதையும் காண்பவன் ஆவான். அசத்தின் மேல் பற்று வைக்க மாட்டான். சூரியன் முன் இருள் நில்லாது விலகுவதுபோல சத்தின் முன் அசத்தின் வலிமை அழிந்துவிடும். சத்துப் பொருளையே அணைந்தவர், அசத்தைப் பின் கூட மாட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினொராம் சூத்திரம்

காணும் கண்ணுக்கு காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே.

அதிகரணங்கள்

1. காணும் கண்ணுக்குக் காட்டும் உள்ளம் போல் காண உள்ளத்தைக் காட்டிக் காண்டல்
2. அதனை அயரா அன்பின் அரன் கழல் செலுமே.

பொருள் : காணும் கண்ணுக்கு – காட்டக் காண்பதாகிய கண்ணுக்கு, காட்டும் உள்ளம் போல் – அதனுடன் கலந்து நின்று உருவங்களைக் காட்டித் தானும் காண்கின்ற ஆன்மாவைப் போல, காண உள்ளத்தைக் கண்டு காட்டலின் – அறிவித்தால் அறியும் இயல்புடைய அவ்வான்மாவுக்கு அதனுடன் கலந்து நின்று முதல்வன் விடயங்களை அறிவித்தல் மூலம் தானும் அறிந்து கொண்டு நிற்பன், அயரா அன்பின் அரன்கழல் செலுமே – ஆன்மாஇந்த உபகாரத்தை உணர்வதால் விளையும் அயரா அன்பினாலே அம்முதல்வன் திருவடியாகிய சிவானந்த அநுபூதியைப் பெற்று வாழும்.

உதாரண வெண்பா

ஐந்தையும் ஒக்க உணராது அவற்றுணர்வ(து)
ஐந்தையும்போல் நின்றுணரும் ஆகலான் - ஐந்தினையும்
ஒன்றுஒன்றாப் பார்த்துணர்வது உள்ளமே எவ்வுலகும்
ஒன்றுஒன்றாய்ப் பார்க்கும் உணர்ந்து. 67

ஐம்பொறி உணர்வுகளை உணரும்போது, தன் உணர்வைத் தனிப்படுத்தாமல் அந்தப் பொறி போலவே நின்று உணர்வதும் ஐந்தையும் ஒன்றாக உணராது ஒவ்வொன்றாக உணர்வதும் ஆன்மாவுக்குரிய செயல்கள். சிவம், ஆன்மாக்களை ஏகமாய் உணர்ந்து, அதே சமயம் சிறப்பு வகையாக ஒவ்வோர் ஆன்மாவிலும் நின்றும் உணர்வானாம்.

ஏகமாய் நின்றே இணையடிகள் ஒன்றுணரப்
போகமாய்த் தான் விளைந்த பொற்பினான் - ஏகமாய்
உள்ளத்தின் கண்ஆனாள் உள்குவார் உள்கிற்றை
உள்ளத்தால் காணானோ உற்று. 68

'தான்' என்று ஆன்மா, தன்னைத் தனிப்படுத்தி உணராமல், இறைவனுடன் ஏகமாய் நிற்கும்போது, வினைப்பயன்கள் விளையாமல் சிவபோகமே விளையும். அத்தகைய சீவன் முக்தர்க்கு, அந்த நிலையில் இறைவனும் அவர் உள்ளத்தில் இருப்பதால், அவர் உணர்வதையும் இறைவன் தான் காண்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருக்கன்நேர் நிற்பினும் அல்கிருளே காணார்க்(கு)
இருட்கண்ணே பாசத்தார்க்கு ஈசன் - அருட்கண்ணால்
பாசத்தை நீக்கும் பகல்அலர்த்தும் தாமரைபோல்
நேசத்தில் தன்உணர்ந்தார் நேர். 69

சூரியன் ஒரு மாதிரியாக நேர் நின்றாலும், கண் படலத்தால் பார்வை பழுது பட்டோர்க்கும் நல்ல பார்வை உள்ளவர்க்கும் வெவ்வேறாக, ஒருவர்க்கு இருளாகவும் மற்றவர்க்கு ஒளியாகவும் தெரிகிறது. அதுபோல, பாசம் நீங்காதவர்க்கு பாசஞானமாகவும் முத்தர்களுக்குப் பூரண சிவஞானமாகவும் கடவுள் அருள் செய்வான். தன் ஒளியால் அரும்பை விரியச் செய்தும் தாமரையை மலர்த்தும் சூரியன் போலச் சிவமும் செயல்படும்.

மன்னும் இருளை மதிதுரந்த வாறுஅன்பின்
மன்னும் அரனே மலந்துரந்து - தன்னின்
வலித்துஇரும்பைக் காந்தம் வசம்செய்வான் செய்தல்
சலிப்பில் விகாரியலன் தான். 70

கண்ணிற்குத் தெரியும் இருளை, நிலவு மெல்ல மெல்ல நீக்கிவிடுவது போல, தன்னோடு இணைத்துக் கொள்ளும அன்பு மிகுதியால், சிவனே, ஆணவமலத்தை நீக்கி, காந்தம் இரும்பை இழுப்பது போலத் தன்வசம் செய்வதில் சலிப்பதுமில்லை. அதை நேரிடையாகச் செய்து விகாரப்படுதலும் இல்லை. (கை காலுடன் வந்து அணைப்பதே விகாரம் எனப்படும்.)

நசித்தொன்றின் உள்ளம் நசித்தலால் ஒன்றா
நசித்திலதேல் ஒன்றாவ தில்லை - நசித்துமலம்
அப்பணைந்த உப்பின் உளம்அணைந்து சேடமாம்
கப்பின்றாம் ஈசன் கழல். 71

இப்படி இணையும் போது, ஆன்மா கெட்டுக் கூடுமானால் முழுதும் கூடியது ஆகாது. எந்தக் கேடின்றியும் கூட முடியாது. மலம் முதலியவை மட்டும் கெடக் கூடும். நீரில் உப்பு இணைவது போல ஆன்மாவும் சிவத்துடன் கூடித் திருவடியில் இணையும்.

பொன்வான்முன் கொண்மூவில் புக்கொடுங்கிப் போய்அகலத்
தன்வாளே எங்குமாம் தன்மைபோல் - முன்வாள்
மலத்தின் மறைந்(து) உள்ள மற்றுலகை உண்ணும்
மலத்(து) இரித்துச் செல்லும் வரத்து. 72

மேகத்திற்குள் நுழையும் சூரியன் ஒளி குறைந்து நிற்கும். மேகம் நீங்கியதும் தன் ஒளியே எங்குமாக நிற்கும். அதுபோல ஆணவ மலத்தால் தன் அறிவு மழுங்கிய ஆன்மா, பிரபஞ்சத்தையே விரும்பும். (கொண்மூ – மேகம்; வரத்து – வரமாகிய திருவடிக்கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னிரண்டாம் சூத்திரம்

**செம்மலா் நோன்தாள் சேரல் ஒட்டா**
**அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ**
**மால்அற நேய(ம்) மலிந்தவா் வேடமு(ம்)**
**ஆலயம் தானும் அரன்எனத் தொழுமே.**

அதிகரணங்கள்

1. செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா அம்மலம் கழீஇ
2. அன்பரொடு மரீஇ
3. மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
   ஆலயம் தானும் அரனெனத் தொழுமே.

பொருள் : செம்மலர் நோன்தாள் – செந்தாமரை மலர் போன்று விரிந்து பொலிந்து விளங்கும் முதல்வனது திருவடிகளை, சேரல் ஒட்டா – அணையவிடாமல் மறைத்தலைச் செய்யும், அம்மலம் கழீஇ – மும்மல அழுக்கை ஞானதீக்கையால் குழுவி , அன்பரொடுமரீஇ – முதல்வனை மறவாத சிவனடியார்களுடன் கூடிக்கலந்து, மாலறநேயம் மலிந்தவர் வேடமும் – மலமயக்கம் நீங்குதலால் அன்பிற் சிறந்த அடியவர்களின் திருவேடத்தையும், ஆலயம் தானும் அரனெனத் தொழுமே – சிவாலயத்தையும் சிவன் எனவே கண்டு வழிபாடு செய்து வாழ்வேன்.

உதாரண வெண்பா

**புண்ணிய பாவம் பொருந்தும்இக் கான்மியமும்**
**மண்முதல் மாயைகாண் மாயையும் - கண்ணிய**
**அஞ்ஞானம் காட்டும்இவ் ஆணவமும் இம்மூன்று(ம்)**
**மெய்ஞ்ஞானிக்கு ஆகா வீடு.** 73

புண்ணியம் பாவம் என்பன பொருந்துவதே கன்மமலமாகும். மண் முதல் நரகம் முடிவாக உள்ள பிரபஞ்சப் படைப்பு யாவும் மாயம் தரும் மாயையாயும். அஞ்ஞானததைச் சேர்க்கும் ஆணவ மலம். இம்மூன்றும் எந்த ஞானிக்கும் ஆகாதவை ஆகும்.

**மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்கும்**
**சிறப்பித்தாா் தம்திறத்துச் சோ்வை - அறப்பித்துப்**
**பத்தா் இனத்தாய் பரன்உணா்வினால்உணரும்**
**மெய்த்தவரை மேவா வினை.** 74

ஞான நெறியை மறக்கச் செய்து மலங்களின் பிடியில் விழச்செய்யும் சிறப்பில்லாதவர்களுடன் சேராமல், சிவனடியார் இனத்தில் இருந்து, இறை உணர்வில் ஈடுபடும் மெய்த்தவர்களை, வினையானது வந்து மேவாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்உணர வேண்டித் தனதுஉருவத் தான்கொடுத்துத்
தன்உணரத் தன்னுள் இருத்தலால் - தன்உணரும்
நேசத்தார் தம்பால் நிகழும் ததிநெய்போல்
பாசத்தார்க்கு இன்றாம் பதி. 75

தன்னை அவர்கள் உணரவேண்டும் என்னும் விருப்பத்தால், தன் உருவை அடியார்களுக்குத் தந்து, தானும் அவர்களுக்குள் இருப்பதால், சிவமானது தயிரில் இருக்கும் வெண்ணெய் போல உடன் அடையத் தோன்றும்; மற்றவர்க்கோ பாலில் நெய் போல் மறைந்து இருக்கும்.

கண்டதொரு மந்திரத்தால் காட்டத்தில் அங்கிவே(று)
உண்டல்போல் நின்றங்கு உளதாமால் - கண்டஉருத்
தான் அதுவாய் அன்றானான் தானதுவாய்த் தோன்றானோ
தான் அதுவாய்க் காணும் தவர்க்கு. 76

எல்லாப் பொருள்களிலும் இருக்கும் இறைவனை, விறகைக் கடைந்து நெருப்பைக் காண்பதுபோல, மந்திரம் கூறியும் காணப்பெறுவர். தானே அவனாகப் பாவிக்கும் தவசிகளுக்கு, எப்பொருளிலும் அவன் தோன்றுவானாம்.

அதுஇது என்ற(து) அதுஅல்லான் கண்டார்க்(கு)
அதுஇது என்றதும் அல்லான் - பொதுஅதனில்
அத்துவிதம் ஆதல் அகண்டமும் தைவமே
அத்துவிதி அன்பினில் தொழு. 77

சடப் பொருளிலும் சித்துப் பொருளிலும் நிற்கும் இறைவன், கண் வேறு சூரியன் வேறு என பேத நிலையிலோ, உடலும் உயிரும் போல பேதமற்ற நிலையிலோ, குணமும அதையுடைய பொருளும் போல பேத + அபேதம் ஆகிய இரண்டுமாகிய நிலையிலோ இல்லாது அறிவும் ஒளியும்போல அத்துவிதமாக நிற்பதால் யாவும் அவனே எனத் தொழ வேண்டும்.

வினையால் அசத்து விளைதலான் ஞானம்
வினைதீரின் அன்றி விளையா - வினைதீர
ஞானத்தை நாடித் தொழவே அதுநிகழும்
ஆனத்தால் அன்பில் தொழு. 78

வினை இருக்கும் வரை அசத்து உணர்வே மேம்படும்; ஞானம் தோன்றாது. வினை தீர்வதற்கு ஞானத்தை விரும்பிச் சிவனடியார்களைத் தொழுதல் தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை அறிவித்துத் தான்தானாச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையலது - முன்னவனே
தானேதா னாச்செய்தும் தைவமென்றும் தைவமே
மானே தொழுகை வலி. 79

உயிருக்குச் சிவம், தன்னை அறிவித்தும் தானே ஆகுமாறு செய்தும் உதவியதை, பிறகு மறப்பது பெரும் பிழையாகும். தானாகச் செய்த அத்தெய்வத்தை விடாது வழிபடுதலே வலிமை. (மானே – மகானே என விரியும்)

நூலுக்கு அதிகாரங்கள்

சிவம்என்னும் அந்தர சிந்தைநேர் நோக்கப்
பவம்இன்றாம் கண்வா சகத்தில் - சிவமுண்டாம்
ஒன்றும் இரண்டும் மலத்தார்க்(கு) இங்(கு) ஒண்குருவால்
இன்(று) இந்நூல் மும்மை மலர்க்கு. 80

சிவம் என்னும் அந்ததரத்தைச் சிந்தையில் நேர் நோக்கினால் பிறவி இல்லையாம். ஒரு மலம் உடைய விஞ்ஞானகலர்க்கு கண்பார்வை மூலமும் இருமலம் உடைய பிரளயா கலர்க்கு வாய்ப்பேச்சின் மூலமும் இறைவன் குருவாய் தீட்சை தருவான். இவர் தவிர மூன்று மலம் உடைய சகலர்க்கு இந்த நூல் துணையாகும்.

நூல் மரபு

எந்தை சனற்குமரன் ஏத்தித் தொழஇயல்பாய்
நந்தி உரைத்துஅருளு ஞானநூல் - சிந்தைசெய்து
தான்உரைத்தான் மெய்கண்டான் தாரணியோர் தாமுணர
ஏதுதிருட் டாந்தத்தால் இன்று. 81

எம் ஞானத் தந்தையாகிய சனற்குமார முனிவர் தொழுது வணங்கியதால் நந்தியெம் பெருமான் இயல்பான இந்த ஞான நூலை உரைத்தருளினார். உலகில் உள்ளவர் இதை உணரும்படி பல விளக்கங்கள் தந்த (ஏதுக்களும் திருட்டாந்தங்களும் தந்து) மெய்கண்டான் இதை எடுத்துரைத்தான்.

சிவஞானபோதம் முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# திருவுந்தியார்

## திருவியலூர் உய்யவந்ததேவர்

சாத்திர நூல்கள் பதினான்கில் ஒன்றாக இருப்பது திருவியலூர் உய்யவந்ததேவ நாயனார் அருளிச் செய்த "திருவுந்தியார்" ஆகும். கி.பி. 12ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த உய்யவந்தார் சோழநாட்டில் திருவியலூரில் அவதரித்தவர்.

இறைவனுடைய உயர்வை இரண்டு பெண்கள் விளையாடிக்கொண்டே பாடும் முறையில் அமைந்துள்ள இந்நூலில் 45 தாழிசைப் பாடல்கள் உள்ளன. திருவாசகத்தில் உள்ள திருவுந்தியார் போலவே இந்நூலும் உள்ளது. உந்துதல் என்பது குதித்தல், பறத்தல் என்பது மேலே எழுதல். இறைவனைப் பற்றிய மேல்நோக்குச் சிந்தனைகளை எழுப்புவது இந்நூலின் முறை. ஞான நெறியின் சிறப்பும் ஞானியர் மேன்மையும் கூறப்படுகிறது.

### உபதேசம்

(1 முதல் 6 வரையான பாடல்கள்)

அகளமாய் யாரும் அறிவுஅரிது அப்பொருள்
சகளமாய் வந்துஎன்று உந்தீபற
தானாகத் தந்ததுஎன்று உந்தீபற. 1

கடவுளாகிய அந்தப் பொருள் உருவமற்றது. யாராலும் அறிய முடியாதது. ஆனால் அன்பால் நாம் நினைத்த வடிவத்தைத் தனக்கு அமைத்துக்கொண்டு, அந்த உருவத்தோடு நினைநத்தவர் முன் வந்து தோன்றும். (களம்– உருவம், அ+களம்=உருவமற்றது, ச+களம்=தெளிவான உருவம்.

பழக்கம் தவிரப் பழகுவது அன்றி
உழப்புவது என்பெண்ணே உந்தீபெற
ஒருபொரு ளாலேஎன்று உந்தீபற. 2

உலகச் செய்திகளில் பழகிவிட்ட பழக்கத்தை மாற்றி இறைவன் பற்றிய செய்திகளில் பழக வேண்டும்.

அவ்வாறன்றி உலகச் செய்திகளில் உழல்வது என்ன பயன் தரும்? (ஆன்மா பெண் என்று அழைக்கப்படுகிறது. சிவன் என்னும் தலைவனை அது சேரும்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவர்
பிண்டத்தில் வாரார்என்று உந்தீபற
பிறப்புஇறப்பு இல்லைஎன்று உந்தீபற. 3

மனத்தில் காணப்பட்ட கடவுள் உணர்வைக் கைப்பற்றிக் கொண்டு தம் தவத்தை முடித்தவர்கள் மீண்டும் உடல் எடுக்க மாட்டார்கள். அத்தகையவர்களுக்குப் பிறப்பு இறப்பு இரண்டும் இல்லை.

('தவம் செய்வார் தம்கருமம் செய்வார்' என்ற குறளின்படி, கருமம் என்பதைத் தவம் எனக் கொள்க.)

இங்ஙன் இருந்ததுஎன்று எவ்வண்ணம் சொல்லுவேன்
அங்ஙன் இருந்ததுஎன்று உந்தீபற
அறியும் அறிவதுஅன்று உந்தீபற. 4

இப்படி இருந்தது என்றோ அப்படி இருந்தது என்றோ எப்படிச் சொல்வேன்? ஏன் என்றால், கடவுள் அனுபவம், அறிவால் அறியக் கூடுவது இல்லை. உணர்வைப் பொறுத்து அது வேறுபடும்.

ஏகனும் ஆகி அநேகனும் ஆனவன்
நாதனும் ஆனாஎன்று உந்தீபற
நம்மையே ஆண்டான்என்று உந்தீபற. 5

கடவுள் ஒருவனாகவும் பலவிதமாகவும் உள்ளவன். நாதவடிவம் அவனே. தலைவனானவனும் அவனே. நம்மை ஆண்டுகொண்டவனும் அவனே.

ஆற்றலின் வேறுபாட்டாலும் செயலின் வேறுபாட்டாலும் அனுபவ வேறுபாட்டாலும் ஒரு பொருள் பலவாகத் தோற்றமளிப்பது போலவே கடவுளும் பலவாகிறான்.

நம்செயல் அற்றுஇந்த நாம்அற்ற பின்நாதன்
தன்செயல் தானேஎன்று உந்தீபற
தன்னையே தந்தான்என்று உந்தீபற. 6

நாம்தான் என்பதையும் செய்வதாக எண்ணும் எண்ணத்தை இழந்து, நாம் என்று தனித்துக்கொள்ளும் உணர்வையும் இழந்து விட்டால், எல்லாம் கடவுள் செயல்தான் என்பது விளங்கும். நமக்காக அவன் தன்னையே தந்தான் என்பதும் தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதனம்

(7 முதல் 11 வரையான பாடல்கள்)

உள்ளம் உருகில் உடனாவர் அல்லது
தென்ன அரியர்என்று உந்தீபற
சிற்பரச் செல்வர்என்று உந்தீபற. 7

கடவுளை நினைத்து உள்ளம் உருகினால் மட்டுமே அந்தக் கடவுள் நம்மோடு இருப்பார். உள்ளம் நெகிழவில்லையானால், மற்ற எவ்வகையிலும் அவரைத் தெளிந்து உணர்வதும் இயலாதது ஆகும்.

நம் சித்தத்திலும், சித்தத்தைவிட நுணுக்கமான இடத்திலும் (சிற்பரம்) இருப்பவர் கடவுள் என்றுணர வேண்டும்.

ஆதாரத் தாலே நிராதாரத் தேசென்று
மீதானத் தேசெல்க உந்தீபற
விமலற்கு இடமதுஎன்று உந்தீபற. 8

ஆதாரச் சக்கரங்களில் இறைவனைத் தியானித்து அதன் மூலம், குண்டலினியை எழுப்பி மீதானமான மேலிடத்தில் சேர்க்க வேண்டும். அங்குள்ள திருவருளுடன் ஒன்ற வேண்டும். குற்றமற்ற இறைவனுக்கு அதுவே இடமாகும். (உடலில் உணரும் யோகம் ஆதாரம்; உச்சியில் உணர்வது நிராதாரம்; மீதானம் மேலிடம்)

ஆக்கில்அங் கேஉண்டாய் அல்லதுஅங்கு
இல்லையாய்ப் பார்க்கில் பரமதுஅன்று உந்தீபற
பாவனைக்கு எய்தாதுஎன்று உந்தீபற. 9

ஓரிடத்தில் கடவுள் இருப்பதை நம்பி, மனம் ஒன்ற அந்த நம்பிக்கையுடன் பார்த்தால், அங்கே அவர் இருப்பார்; நம்பிக்கையில்லாதபோது, அங்கே அவர் இருப்பதைப் புரிந்துகொள்ள முடியாது. வெறும் கண்பார்வைக்கோ, வெறும் பாவனைக்கோ கடவுள் கிட்ட மாட்டார்.

அஞ்சே அஞ்சாக அறிவே அறிவாகத்
துஞ்சாது உணர்ந்திருந்து உந்தீபற
துய்ய பொருளாஈதென்று உந்தீபற. 10

புலன்கள் ஐந்து பொறிகள் ஐந்து பூதங்ள் ஐந்து என்று இப்படி ஐந்து ஐந்தாக அடுக்கியுள்ள பொருள்கள் வழியாக அறியப்படும் அறிவுக்கு ஆதாரமாய் ஒரு நுண்ணறிவு தொழிற்படும். அதனைக் கொண்டு சிறிதும் சோர்வடையாமல் உணரும்போது, உணரப்படும் பொருளாகக் கடவுள் இருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கியே தாக்காது நின்றதோர் தற்பரம்
நோக்கில் குழையும்என்று உந்தீபற
நோக்காமல் நோக்கஎன்று உந்தீபற. 11

மனத்திலும் உடம்பிலும் பல்வகையிலும் தொடர்பு கொண்டிருந்தாலும் தொடர்பே இல்லாதது போலக் கடவுளாகிய நுண் பொருள் இருக்கும். அதை மனத்தால் உணர்ந்தால் நம் மனத்து அது நெருங்கும். அப்படி உணர்வதும் நேர்த் தொடர்பு இல்லாமல் உணர்வதே ஆகும்.

## மீதானம்

(12 முதல் 17 வரையான பாடல்கள்)

மூலை இருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியார்என்று உந்தீபற
தவத்தில் தலைவர்என்று உந்தீபற. 12

மூலதாரத்தில் உள்ள (குண்டலினி) சக்தியை நடுநாடியாகிய சுழுமுனை வழியே தலைப்பகுதிக்கு (முற்றம்) (யோகமுறையில்) அனுப்பியவர் மிகவும் பெரியவராவார்.

அவர் தவம் செய்பவரில் தலையானவர் ஆவார்.

(மூலை = மூலதாரம்; முற்றம் = ஆயிர இதழ்த்தாமரை)

ஒட்டற்று நின்ற உணர்வு பதிமுட்டித்
தேட்டற் றிடம்சிவம் உந்தீபற
தேடும் இடம்அதன்று உந்தீபற. 13

உடம்பின் மீதுள்ள பற்றும் பிறவற்றின் மீதுள்ள பற்றும் நீங்கி நிற்கிற உணர்வு, பதியாகிய கடவுளின் இருப்பிடத்தைத் தொட்டுநிற்கும். அதற்கு மேல் இறைவனைத் தேட இடம் இல்லை. அதுவே சிவமும் ஆகும். (தேடினால் எந்த இடத்திலும் இறைவன் கிடைக்க மாட்டான்; ஆனால், உணர்ந்தால், எந்த இடத்திலும் இறைவன் கிட்டுவான்.)

கிடந்த கிழவியைக் கிள்ளி எழுப்பி
உடந்தை யுடனேநின்று உந்தீபற
உன்னையே கண்டதுஎன்று உந்தீபற. 14

மூலாதாரத்தில் கிடந்த குண்டலினி சக்தியை நினைப்பாலும் பிராணாயாமத்தாலும் (கிள்ளி) எழும்பச் செய்து, நடு நாடி வழியாக மேல் ஏறச் செய்து, உடம்பில் ஒன்றி உணரச்செய்க. அப்போது ஆன்ம தரிசனத்தை உணரலாம். (ஆன்ம தரிசனம்– உன்னையே காணுதல்) (உடந்தை – உடன்படல்) (நீண்ட காலமாக இருப்பதாலும் உரிமை உடைமையாலும் பெண்பாலாகச் சொல்லப்படுவதாலும் குண்டலினியைக் கிழவி என்றார்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றை அறுப்பதோர் பற்றினைப் பற்றில்அப்
பற்றை அறுப்பர்என்று உந்தீபற
பாவிக்க வாரார் என்று உந்தீபற. 15

(பிற) பற்றுகளை அறுக்கத்தக்க ஒருபற்று இறைவன் திருவடிப் பற்றே ஆகும். அதைப் பற்றினால் நம் மனத்தில் உள்ள பிற பற்றுக்களை, அது அறுக்கும். உலகப் பற்றுக்களை நம் சுய முயற்சியால், நாமே விடுவதாகப் பாவிப்பதால் இறைவனை அடைய முடியாது.

உழவாது உணர்கின்ற யோகிகள் ஒன்றோடும்
தழுவாமல் நிற்பரென்று உந்தீபற
தாழ்மணி நாவேபோல் உந்தீபற. 16

பிற (உலக) இன்பங்களில் படியாமல் கடவுளை உணர்கின்ற யோகிகள், எதையும் தம் மனத்தால் தழுவாமல் தனித்து நிற்பர். அது மணியின் நாக்கு, மணியைத் தொடாமல் நிற்பது போல் ஆகும்.

திருச்சிலம் போசை ஒலிவழி யேசென்று
திருத்தனைக் கும்பிடென்று உந்தீபற
நேர்பட அங்கேநின்று உந்தீபற. 17

ஓம் என்று மனத்தால் ஒலிக்கும் ஓசையையோ, உடம்பில் மனத்தில்தானே தோன்றும் ஓசையையோ, யோகசாதனையால் கேட்கும் சிலம்பு ஓசையையோ பற்றிக் கொண்டு நடராசர் திருநடனத்தின் ஒலியாக அதனை உணர்ந்து அதோடு ஒன்றியிருப்போமாக.

(நேர்படல்= ஒன்றல், நிறுத்தன்= நடராசன், திருநடத்தில் ஒன்றலே அவரைக் கும்பிடலாம்.)

மருளும் தெருளும் மறக்கும் அவன்கண்
அருளை மறவாதே உந்தீபற
அதுவேஇங் குள்ளதுஎன்று உந்தீபற. 18

மயக்கம் தரும் நினைவைத் தருவதும் அதைத் தெளியச் செய்வதும் இறைவன் திருவருளேயாகும். இந்த இரண்டையுமே நினைத்திராது இறைவனையும் இறைவன் அருளையும் மட்டுமே மறவாது பற்றியிருக்க வேண்டும். அதுவே உலகில் நமக்குத் துணையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்புறுநிலை

(19 முதல் 20 வரையான பாடல்கள்)

கருதுவ தன்முன் கருத்தழியப் பாயும்
ஒருமகள் கேள்வன்என்று உந்தீபற
உன்ன அரியன்என்று உந்தீபற. 19

வேறு எதையும் எண்ணாமல் எதன் மீதும் பற்று வைக்காமல், இறைவனையே கருதி நிற்கும்போது, அந்தக் கருத்தையும் விலக்குவது போல் வெள்ளமாக வந்து இறைஉணர்வு நமக்குள் பாயும். அதுவே உமையாள் கணவன் ஆகும். மற்றபடி அப்பொருளை எண்ணுவதும் இயலாது.

(அதாவது வேறு பற்றோடு எண்ணும்போது இறைவனை உணரமுடியாது.)

இரவு பகலில்லா இன்பவெளி ஊடே
விரவி விரவிநின்று உந்தீபற
விரைய விரையநின்று உந்தீபற. 20

இரவு பகல் முதலியவற்றால் புரிந்துகொள்ளப்படும் சராசரி உலக எண்ணங்க் இல்லாத இடம் இன்பம் தரும் வெளியே ஆகும். அதில் கடவுள் உணர்வும் ஆன்ம உணர்வும் கலக்குமாறு வேகமாக முனைதல் வேண்டும்.

இணைவனை உணர்தலே இன்ப வெளி. அங்கு இரவு பகல், இருட்டு வெளிச்சம் என்னும் பேதமில்லாமல் எப்போதும் ஒளியேயாகும்.

## வேறு உபாயங்கள்

(21 முதல் 22 பாடல்கள்)

(i) தத்துவ ஞானம்

சொல்லும் பொருள்களும் சொல்லா தனவும்அங்கு
அல்லனாய் ஆனான்என்று உந்தீபற
அம்பிகை பாகன்என்று உந்தீபற. 21

நம் அறிவு, அடையாளம் கண்டு சொல்லும் பொருள்களாக இருக்கும் கடவுள், அப்படிச் சொல்லாமல் விடப்படும் பொருள்களாகவும் இருக்கிறான். அவற்றுக்குள் அடங்காது, அப்பொருள்களாக இல்லாமல் இருப்பவனும் அவனே. அவனே அம்பிகையைத் தன் உடலில் ஒரு பாகமாக்கியவனும் ஆவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) வாசி யோகம்

**காற்றினை மாற்றிக் கருத்தைக் கருத்தினுள்**
**ஆற்றுவது ஆற்றல்என்று உந்தீபற**
**அல்லாதது அல்லல்என்று உந்தீபற.** 22

காற்றை மூச்சாக இழுத்து மாற்றிவிடும் பிராணாயாம முயற்சியின் போது பிறவற்றில் கருத்தைச் செலுத்தாது கடவுள் திருவடியில் செலுத்துவது பேராற்றலாகும்.

இப்படிச் செய்யாத முயற்சிகள் அல்லலுக்கு உரியனவேயாம்.

## பயன்

(23 முதல் 27 வரையான பாடல்கள்)

(i) பாசவீடு

**கள்ளரோடு இல்லம் உடையார் கலந்திடில்**
**வெள்ள வெளியாம்என்று உந்தீபற**
**வீடும் எளிதாம்என்று உந்தீபற.** 23

பொறி புலன்களோடு ஆன்மா கலந்து அவற்றைச் சரியான வழியில் செலுத்துமானால் அதுவே வெட்ட வெளியாக இருக்கும். வெட்டவெளி முழுமையான வெளிச்சத்தைக் குறிக்கும். அதுவே வீடுபேறு பெற எளிய வழியுமாகும். வீடு என்பது விடுதலை. வெட்டவெளி எப்படித் தடையற்றதோ, அப்படியே தடைகளில்லாத வீடுபேறும் கிடைக்கும்.

பொறிபுலன்களின் வசத்தில் ஆன்மா இருக்கக் கூடாது. ஆன்மாவின் வசத்தில் பொறி புலன்கள் இருக்க வேண்டும்.கள்ளத்தனம் செய்வதால் புலன்கள் கள்ளர் எனப்பட்டனர். இல்லம் = உடம்பாகிய வீடு. இல்லமுடையார் = உடம்பில் குடியிருக்கும் ஆன்மா.

**எட்டுக்கொண்டர் தமைத் தொட்டுக்கொண்டே நின்றார்**
**விட்டார் உலகம்என்று உந்தீபற**
**வீடேவீ டாகும்என்று உந்தீபற.** 24

எட்டு வகை குணங்களைக் கொண்ட கடவுளை, எப்போதும் மனத்தால் தொட்டபடி உள்ளவர்கள், உலகப்பற்றை விட்டவர்கள் ஆவார்கள். அப்படி உலகப் பற்றை விடுவதே வீடுபேறு ஆகும்.

(எட்டு வகை புரியட்டகம் கொண்டார் என்றும் கொள்க.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தமும் தீய கரணமும் சித்திலே
ஒத்ததே ஒத்ததுஎன்று உந்தீபற
ஒவ்வாதது ஒவ்வாதுஎன்று உந்தீபற. 25

அந்தக்கரணங்கள் நான்கினில் ஒன்றாகிய சித்தமும், தீமை தரக்கூடிய பொறிபுலன்களும் எப்போதும் ஒன்றியே இருக்கும். அவ்வாறன்றி, சித்தத்தைப் புலன்களோடு ஒவ்வாதபடி பிரித்து விடுவதே பற்று நீக்கும் வழியாகும். (இறைவன் திருவடியைச் சித்தத்தில் நிறுத்துதல் நன்று.)

(ii) சிவப்பேறு

உள்ளும் புறமும் நினைப்புஅறில் உன்னுள்ளே
மொள்ளா அமுதாம்என்று உந்தீபற
முளையாது பந்தம்என்று உந்தீபற. 26

உள்ளத்தில் தொடர்ந்து பெருக்கெடுக்கும் நினைப்புகளையும் வெளியுலகத் தொடர்பால் ஏற்படும் நினைப்புகளையும் வெட்டிவிட்டு எதையும் நினைக்காமல் இருந்தால், உள்ளுக்குள்ளே அள்ள அள்ளக் குறையாத அமுதல் ஊறும். பந்தபாசமும் முளைக்காமல் இருக்கும்.

அவிழ இருக்கும் அறிவுடன் நின்றவர்க்கு
அவிழும்இவ் அல்லல்என்று உந்தீபற
அன்றி அவிழாதுஎன்று உந்தீபற. 27

சென்ற பிறவியின் தொடர்பெல்லாம் அவிழ்ந்து நீங்க இருக்கும் அறிவுடன் நிற்பவர்க்கு பிறவித்துன்பமும் நீங்கும். அப்படியல்லாமல் பிற வகையில் நீங்காது.

## ஞானமாவது இறவாத இன்ப அன்பே

(28ஆவது பாடல்)

வித்தினைத் தேடி முளையைக்கை விட்டவர்
பித்தேறி னார்கள்என்று உந்தீபற
பெறுவதங்கு என்பெண்ணே உந்தீபற. 28

முளைத்திருக்கும் முளையைப் பாராமல், வேறு விதையைத் தேடுபவர்கள் பித்தர்கள் ஆவர். முளை வந்த பிறகு விதை இருக்க முடியாது.

நாம் இயல்பிலேயே இறைவனை அடையும் கருவிகளையெல்லாம் நமக்குள் பெற்றிருக்கிறோம். நாம் விதையென்றால் அவை முளையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதை முளைவிட்டால்தான் வளர முடியும். இல்லையெனில் விதையே அழிந்துபோகும். இறைவனை அடைய இந்தக் கருவிகளைப் பயன்கொண்டு அன்பு செலுத்த வேண்டும். அதுவே இறைவனை அடையும் வழி.

## பரமுத்தியின் இயல்பு

(29ஆவது பாடல்)

சொல்லும் இடமன்று சொல்லப் புகுமிடம்
எல்லை சிவனுக்குளன்று உந்தீபற
என்றால்நாம் என்செய்கோம் உந்தீபற. 29

சிவனுக்குரிய எல்லையானது ஆன்மாக்கள் சொல்லால் புரிந்து கொள்ளும் எல்லையன்று. அதனை எப்படிச் சொல்லால் விளக்க முடியும்?

## தன்னிழப்பு

(30ஆவது பாடல்)

வீட்டில் இருக்கில்என் நாட்டிலே போகில்என்
கூட்டில்வாள் சார்த்திநின்று உந்தீபற
கூடப் படாததுஎன்று உந்தீபற. 30

ஆன்மா என்னும் கூட்டுக்குள் திருவருள் என்னும் வாளை மறைத்து வைத்துக் கொண்டு விட்டு, நாட்டில் (உலகப்பற்றோடு) இல்லற வாழ்க்கை வாழ்ந்தால் என்ன? வீட்டின்பத்தில் துறவு வாழ்க்கை வாழ்ந்தால் என்ன? இரண்டுமே கூடாத முறைகளாம்.

## சிவநெறியின் சிறப்பு

(31ஆவது பாடல்)

சாவிபோம் மற்றைச் சமயங்கள் புக்குநின்று
ஆவி அறாதேஎன்று உந்தீபற
அவ்வுரை கேளாதே உந்தீபற. 31

உள்ளீடு இல்லாத பிற சமயங்களில் சென்று ஆவியை இழந்து மீண்டும் பிறப்பை ஏற்கக்கூடாது. அவற்றின் உரைகளையும் கேட்டுக் காலம் கடத்தல் கூடாது. (சாவி = அரிசி இல்லாது கருக்காயாகப் போவது. தத்துவச் சிறப்புச் சைவத்துக்குரியது எனப்பட்டது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணைந்தோர் தன்மை

(32 முதல் 38 வரையான பாடல்கள்)

துரியம் கடந்தஇத் தொண்டர்க்குச் சாக்கிரம்
துரியமாய் நின்றதுஎன்று உந்தீபற
துறந்தார் அவர்களென்று உந்தீபற. 32

நான்காம் அவத்தையாகிய துரியத்தைக் கடந்த நல்ல தொண்டர்க்கு, விழிப்பு நிலையே துரியம் போலாகிவிடும். அத்தகைய தொண்டரே துறந்தோர் ஆவர்.

(உறக்கம், கனவு, விழிப்பு, துரியம் என்பவை நான்கு நிலைகள். தன்னை வெட்ட வெளியாக உணர்தலும், இறைவனைச் சித்தத்தில் சூடுதலும், எவ்வகை நினைப்பு அறுதலும் துரிய நிலைக்கு உரியவையாம்.)

பெற்றசிற் றின்பமே பேரின்ப மாய்அங்கே
முற்ற வரும்பரிசு உந்தீபற
முளையாது பந்தம்என்று உந்தீபற. 33

புலன்களால் வரும் சிற்றின்பத்தை அனுபவிக்கும்போதும்கூட அது இறைவன் தந்தது என்ற உணர்போடு ஈடுபட்டால், அதுவே பேரின்பப் பயனைப் பெற்றுத் தரும். முழு இன்பமும் இதனால் வரும். இதனால் சிற்றின்பப் பொருள்கள்மேல் பற்று முளைக்காது.

பேரின்ப மான பிரமக் கிழத்தியோடு
ஓர்இன்பத் துள்ளாஎன்று உந்தீபற
உன்னையே ஆண்டானென்று உந்தீபற. 34

பேரின்பமாகிய திருவருளை பிரம்மப் பொருளின் (பரம் பொருள் இறைவன்) மனைவி என்று பாவித்தார். பிரம்மம், அந்தப் பேரின்பக் கிழத்தியுடன் ஒன்றியிருக்கும். திருவருளை நீ நுகரும்போது உன்னை அவன் ஆண்டதாக உணரலாம்.

பெண்டிர் பிடிபோல ஆண்மக்கள் பேய்போலக்
கண்டாரே கண்டார்என்று உந்தீபற
காணாதார் காணாரென்று உந்தீபற. 35

ஆன்மா பெண் போல; கடவுளாகிய ஆண்மகன் பேய் போலாம். பேய்பிடித்த பெண் தன் செயலை இழந்து பேயின் செயலையே எப்போதும் மேற்கொண்டிருப்பாள். அதுபோல அருள் வயப்பட்டவர் செய்கையும் எப்போதும் கடவுள் செயலாகவே இருக்கும். இதை வாழ்வில் அனுபவித்துக் கண்டவர்களே காண்பவராம்; மற்றவர்கள் காணாதவரேயாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலாய பூதமும் நாதமும் ஒன்றிடின்
நாலாம் நிலையாம்என்று உந்தீபற
நாதற்கு இடமதுஎன்று உந்தீபற. 36

ஐந்து பூதங்களில் கீழிருந்து எண்ணினால், நான்காவது காற்றே ஆகும். பிராணாயாமத்தில் வரும் காற்றும், நமக்குள் ஒன்றும் நாதமும் ஒன்றுபடுமானால் நான்காம் நிலையாகிய துரிய நிலை உண்டாகும். அதுவே கடவுளுக்கு இடமுமாகும்.

சென்ற நெறியெல்லாம் செந்நெறி யாம்படி
நின்ற பரிசுஅறிந்து உந்தீபற
நீசெயல் செய்யாதே உந்தீபற. 37

செய்யும் செயல் யாவும் சிவவழியில் செய்யும்படிக்கு செய்தல் தேவை. இறைவன் செலுத்தச் செயல்படுகிறோம் என்று உணர்தல் வேண்டும். தானே செய்கிறோம் என எண்ணுவது பொருந்தாது.

பொற்கொழுக் கொண்டு வரகுக்கு உழுவதுஎன்
அக்கொழு நீஅறிந்தது உந்தீபற
அறிந்துஅறி யாவண்ணம் உந்தீபற. 38

கேழ்வரகை விதைப்பதற்குப் பொன்னால் ஏர் செய்து உழ வேண்டுமா? உழும்போதே பொன் தேய்ந்துவிடும். அது விளையும் வரகைவிட விலைமதிப்பு உடையது. வீடுபேற்றுக்குப் புலன்களையும் பொறிகளையும் பயன்படுத்த வேண்டும். ஏனெனில் அவை பொன் கொழு போல உலகச் செய்திகளை அறிவதென்பது கேழ்வரகைப் பயிர் செய்வது போலாகும். எனவே அவற்றைக் கொண்டு இறைவனை அறிந்து பிறவற்றை அறியாவண்ணம் இருக்க வேண்டும்.

பரம சித்தாந்தம்

அதுஇது எண்ண அனைத்தறிவு ஆகும்
அதுஇது என்றறிந்து உந்தீபற
அவிழ்ந்த சடையானென்று உந்தீபற. 39

அது என்றும் இது என்றும் தனித்தனியே உலகப் பொருள்களை அறிந்தே உணர்வது மனித அறிவு. ஆனால் அதனால் எல்லாவற்றையும் முழுமையாக உணர்ந்துவிட முடியாது. கடவுள் அறிவோ எல்லாப் பொருள்களையும் சேர்த்து ஒரே நேரத்தில் அறியக்கூடிய பேரறிவு ஆகும். அதனால் அவன் விரிந்த சடையை உடையவனாகக் காணப்படுகிறான் (சடா முடிதாரி – அவிழ்சடையான்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் பெயர்ப்பொருள்

**அவன்இவன் ஆனதுஅவனருளால் அல்லது**
**இவன்அவன் ஆகானென்று உந்தீபற**
**என்றும் இவனேஎன்று உந்தீபற.** 40

அவன் என்னும் இறைவன் இவன் என்னும் ஆன்மாவோடு ஒன்றி அதனை உயர்த்துவதும் அவன் (இறைவன்) அருளாலேயாகும். அப்படி இல்லாமல் ஆன்மா, தானே சிவமாகிவிடாது. ஆன்மா, இறைவன் அருளால் உயருமேயன்றி, தானே உயர்தல் இல்லை என்பதாகும்.

சிவநெறியின் அறிவடிப்படை

**முத்தி முதலுக்கே மோகக் கொடிபடர்ந்து**
**அத்தி பழுத்ததுஎன்று உந்தீபற**
**அப்பழும் உண்ணாதே உந்தீபற.** 41

முத்தியை விளைவாகப் பெறுவதற்கு உரிய ஆன்மாவில் (தேவையற்ற) மோகமாகிய கொடி படர்ந்து அது பழமாகவும் பழுத்துவிட்டது. அவை எண்ணிக்கையில் அதிகமான அத்தியாகும். ஆனால் அப்பழம் உண்ணத்தக்கது அல்ல.

(மேலே அழகாகவும் உள்ளே பிட்டால் அழகின்றியும் புழுக்களுடனும் அத்திப்பழம் இருக்குமாதலால் மாமிசத்தை இப்படிக் கூறினார் என்க.)

ஆன்மலாபம்

**அண்ட முதலாம் அனைத்தையும் உட்கொண்டு**
**கொண்டத்தைக் கொள்ளாதே உந்தீபற**
**குறைவற்ற செல்வமென்று உந்தீபற.** 42

நிலம் முதலாக எல்லாற்றையும் தனக்குள்ளே அடக்கிக் கொண்டிருக்கும் இப்பிரபஞ்சத்தை மெய் என்று கொள்ளக்கூடாது. அவ்வாறு கொள்ளாமல் இருப்பதே குறைவற்ற செல்வமும் ஆகும்.

உயிர்களுக்கு இரங்கல்

**காயத்துள்மெய்ஞ் ஞானக்கள்ளுண்ண மாட்டாதே**
**மாயக்கள் உண்டரென்று உந்தீபற**
**வறட்டுப் பசுக்களென்று உந்தீபற.** 43



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உடம்பிலேயே சிவயோகத்தால் ஊறக்கூடிய மெய்ஞ்ஞானக் கள்ளினை உண்ணாமல் மயக்கம் தரும் கள்ளை உண்ணுகின்றனர் சிலர்; அவர்கள் அமுதம் (பால்) சுரக்காத வறட்டுப் பசுக்களே ஆவார்கள்.

(யோக சித்தியால் உடம்பில் ஊறும் அமுதமே கள் எனப்பட்டது.)

வாழ்த்து

**சிந்தையின் உள்ளும்என் சென்னியி னும்சேர**
**வந்தவர் வாழ்கஎன்று உந்தீபற**
**மடவாள் உடனேஎன்று உந்தீபற. 44**

என் சிந்தையிலும் என் தலைமேலும் சேருவதற்காக தானே வந்தருளும் சிவபெருமான் திருவருள் வாழ்க. அவன் துணைவியாகிய உமையோடும் அவன் வாழ்க.

நூல்பயன்

**வையம் முழுதும் மலக்கயம் கண்டிடும்**
**உய்யவந் தான்உரை உந்தீபற**
**உண்மை உணர்ந்தரென்று உந்தீபற. 45**

உலகம் முழுவதும் மல நீக்கம் காணுவதற்கு உரியது, உய்ய வந்த தேவ நாயனாரின் இந்த நூலாகும். இதனை உணர்ந்தவர்கள் உண்மையை உணர்ந்தவர்கள் ஆவர்.

திருவுந்தியார் முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# திருக்களிற்றுப்படியார்

## திருக்கடவூர் உய்யவந்ததேவர்

சாத்திர நூல்கள் பதினான்கில் திருக்கடவூர் உய்ய வந்த தேவர் அருளிச் செய்த "திருக்களிற்றுப்படியாரும்" ஒன்று ஆகும். திருக்கடவூரில் தோன்றிய நூலாசிரியர், ஆளுடைய தேவர் கி.பி 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். திருவியலூர் உய்யவந்தாரிடம் உபதேசம் பெற்றவரான ஆளுடைய தேவர், தம்முடைய குருவின் திருநாமத்தையே தாம் உபதேசம் கொடுத்த இவருக்கும் வைத்தார். அதனாலேயே இவரும் உய்யவந்த தேவநாயனார் ஆனார்.

இந்த நூல், திருவுந்தியாருக்கு விளக்க நூலாகச் செய்யப்பட்டதாகக் கருதப்படுகிறது. இந்நூலாசிரியர், தான் செய்த நூலை எடுத்துக்கொண்டு தில்லைச் சிதம்பரம் சென்றார். அங்கு ஆண்டவனை வணங்கிய பின்னர், சிற்றம்பலச் சந்நிதிக்குச் செல்லும் பஞ்சாட்சரப் படிகளில் தன்னுடைய நூலை வைத்தார். படிகளின் இருபக்கமும் அமைந்துள்ள கல்யானைகள் தம்முடைய தும்பிக்கைகளால் இந்த நூலைத் தூக்கி நடராசப் பெருமானின் திருவடிகளில் வைத்தன. எனவே இந்நூலுக்குத் "திருக்களிற்றுப்படியார்" என்னும் பெயர் ஏற்பட்டது.

100 வெண்பாக்களால் ஆன இந்த நூல், இறைவனே அம்மையப்பன், இறைவனே குருவாகவும் வந்து அருள்வான், குருவருளே திருவருள் என்னும் சிறப்புகளைத் தெரிவிக்கிறது, உலக இயக்கம், ஐந்தெழுத்து மகிமை, திருவடிப் பேறு, சிவனடியார் சிறப்பு ஆகிய செய்திகளும் இடம்பெறுகின்றன.

கடவுள் வாழ்த்து

அம்மையப்ப ரேஉலகுக்கு அம்மையப்பர் என்று அறிக
அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பர் - அம்மையப்பர்
எல்லா உலகுக்கும் அப்புறத்தார் இப்புறத்தும்
அல்லார்போல் நிற்பார் அவர். 1

உமை அம்மையுடன் அப்பனாகிய சிவம் கலந்துள்ளார். உலகத்தவர்க்கு அம்மையும் அப்பருமாகவே வந்து துணை செய்வார். எல்லா உலகங்களுக்கும் அப்பால் இருப்பவர். இவ்வுலகிலும் எதிலும் கலந்து நிற்காதவர் போல் தோன்றுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவம் பெறும் முறை

**தம்மில் தலைப்பட்டார் பாலே தலைப்பட்டுத்**
**தம்மில் தலைப்படுதல் தாம்உணரின் - தம்மில்**
**நிலைப்படுவர் ஓரிருவர் நீக்கிநிலை ஆக்கித்**
**தலைப்படுவர் தாம்அத் தலை.** 2

கடவுள் தம்மிடம் யார் ஈடுபடுகிறார்களோ அவர்களிடமே தாமும் ஈடுபாடு கொள்வார். தம்மிடம் அவர் ஈடுபடுவதை அந்த உயிர் உணரும்போது அதனில் நிலையாக நிற்பார். நின்று மும்மலத்தில் ஆணவம் தவிர பிற இரு மலங்களை நீக்கி அந்த உயிரோடு கடவுள் தலையான ஈடுபாடு கொள்வார்.

(மும்மலத்தில் சகசமலமாகிய ஆணவம் இறைவன் திருக்காட்சியின்போது மட்டுமே விலகும். ஆகையால் அதை விலக்குவது பற்றிக் கூறவில்லை.)

நூல் வழி

**என்அறிவு சென்றஅளவில் யானின்று அறிந்தபடி**
**என்அறிவி லார்அறிக என்றொருவன் -சொன்னபடி**
**சொல்லக்கேள் என்றொருவன் சொன்னான் எனக்கு அதனைச்**
**சொல்லக்கேள் யான்உனக்குஅச் சொல்.** 3

என் அறிவால் அறிந்தபடியும் என் அறிவில் என் குருநாதன் பதியும்படிச் சொல்லியதையும் நான் உனக்குச் சொல்கிறேன். கேட்பாயாக. ஒருவன் சொன்னபடி ஒருவன் கேட்டு ஒழுகுவதே மரபாக இவ்வுலகில் வருகிறது. ஆகையால் இதைக் கேள். (குரு வழி சீடர் என்று வழி வழியாகத் தொடரும் நன் மரபு பற்றிய குறிப்பு. தன் அநுபவத்தைப் பிறருக்கு உரைத்தலும் இதில் உண்டு.)

உபதேசம்

**அகளமய மாய்நின்ற அம்பலத்தளம் கூத்தன்**
**சகளமயம் போல்உலகில் தங்கி - நிகளமாம்**
**ஆணவ மூல மலம்அகல ஆண்டனன்காண்**
**மாணவக என்உடனாய் வந்து.** 4

திரு அம்பலத்தில் ஆடும் எம்கூத்தப் பெருமான் உருவமற்ற நுண் பொருளாய் எங்கும் நிறைந்து நின்று உள்ளான். அவனே உருவம் உடையவன் போல் உலக வடிவாகவும் நினைப்போர் நினைவிலும் தங்கி உள்ளான். விலங்கு போல் என்னைப் பிடித்து, எப்போதும் நீங்காத மூலமலமான ஆணவம் நீங்கும்படி என்னை அவன் ஆட்கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகமங்கள் எங்கே அறுசமயம் தானெங்கே
யோகங்கள் எங்கே உணர்வுஎங்கே -பாகத்து
அருள்வடிவும் தானுமாய் ஆண்டுஇலனேல் அந்தப்
பெருவடிவை யார்அறிவார் பேசு. 5

ஆகமம், ஆறு சமயப் பகுப்பு, யோகம் செய்தல், மனத்தில் வளரும் உணர்வு ஆகியவை இறைவன் நம்மை ஆண்டதால் நாம் பெற்ற பயன்களாகும். இல்லாவிட்டால் இவை இல்லை. இவை இல்லாதபோது அப்பெரும் பொருளை யாரும் அறிந்துகொள்ள இயலாது.

பாகத்து அருள்வடிவு என்பது சிவ சக்தி என்பதாம். இறைவனுடைய அருளே சக்தியாகும். அதுவே அவன் பாகத்தில் பெண் வடிவாய் உள்ளது.

சாத்திரத்தை ஓதினர்க்குச் சற்குருவின் தன்வசன
மாத்திரத்தே வாய்க்குநலம் வந்துறுமோ – ஆர்த்த கடல்
தண்ணீர் குடித்தவர்க்குத் தாகம் தணிந்திடுமோ
தெண்ணீர்மை யாய்இதனைச் செப்பு. 6

எவ்வளவுதான் சாத்திரங்களை ஓதினாலும் நல்ல குருவின் வார்த்தையால்தான் உடனடியாக நலம் வாய்க்கும். கடலில் உள்ள நீரைக் குடித்தால் தாகம் தணியாது. அதுபோல் சாத்திரக்கடலை தான் மட்டுமாக ஓதி உணர முடியாது.

இன்று பசுவின் மலம்அன்றே இவ்வுலகில்
நின்ற மலம்அனைத்தும் நீக்குவதுஇங்(கு) – என்றால்
உருவுடையான் அன்றே உருஅழியப் பாயும்
உருஅருள வல்லான் உரை. 7

இவ்வுலகில் பசுவின் சாணம்தான் மலமாயினும் பிற அழுக்குகளை நீக்குகிறது.

இதுபோல் குருவடிவமாகிய மனித உருவமும் நம் பிறப்பால் வந்த உருவம் அழிந்திடுமாறு வந்து உபதேசம் செய்கிறது. இதுவே வீடுபேற்றைத் தருகிறது; சிவவடிவு பெறக் காரணமாயிருக்கிறது.

ஆகவே குருவடிவம் சிவ வடிவமேயாம்.

கண்டதைக் கொண்டு கருமம் முடித்தவரே
அண்டத்தின் அப்புறத்தது என்னாதே – அண்டத்தின்
அப்புறமும் இப்புறமும் ஆரறிவும் சென்றுஅறியும்
எப்புறமும் கண்டவர்கள் இன்று. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய உடலில் அடங்கிய சிறிய அறிவு என்று நினைக்காது, அதைக்கொண்டே தவம் முயன்றவர் அண்டத்தின் மறுபுறத்தில் உள்ள அறிவையும் உணர்வர். அங்கும் இங்கும் எங்கும் செறிந்த அறிவை இங்கிருந்தே உணர்வர்.

(கண்டம் = குறைக்கப்பட்டது; அகண்டம் = மிக விரிந்தது. அகண்டமே இங்கு அண்டம் என்றும் வந்தது.)

**அன்றுமுதல் ஆரேனும் ஆளாய் உடனாகிச்**
**சென்றவர்க்கும் இன்னதுஎனச் சென்றதுஇலை - இன்றுஇதனை**
**இவ்வாறு இருந்ததுஎன்று எவ்வண்ணம் சொல்லுகேன்**
**அவ்வாறு இருந்தது அது.** 9

அன்று முதல் (இன்று வரை) சிவத்தால் ஆளப்பட்டவர் யாராய் இருந்தாலும் 'இது இப்படிப்பட்டதே' என்று கடவுளை முழுதும் உணர்ந்து 'கடவுள் இப்படித்தான்' என்று சொல்லிச் சென்றது இல்லை.

ஆகவே நான் மட்டும் இப்போது 'இது இப்படி இருக்கிறது' என்று சொல்ல முடியுமோ?

அப்பழம்பொருளான கடவுள், எப்போதும் தன்னை முழுதும் விளக்கிக் கொள்ளாமல், தான் இருந்தபடியே இருக்கிறது.

**ஒன்றும் குறியே குறிஆத லால்அதனுக்(கு)**
**ஒன்றும் குறிஒன்று இலாமையினால் - ஒன்றோ(டு)**
**உவமிக்கல் ஆவதுவும் தானில்லை ஒவ்வாத்**
**தவமிக்கா ரேஇதற்குச் சான்று.** 10

சிவத்தோடு ஈடுபடுதலாகிய விருப்பமே அவரோடு ஒன்றும் ஒரே வழியாகும். அது அல்லாமல் அதை மேற்கொள்ள வேறு வழியும் இல்லை.

அதனோடு நிகராக வேறெந்த வழியையும் ஒப்பிடவும் முடியாது. பிறரோடு உவமிக்க முடியாத தவம் உடையவர்கள் இதனைச் சொல்வதும் செய்வதுமே இதற்குச் சான்றாகும்.

**ஆற்றால் அலைகடற்கே பாய்ந்தநீர் அந்நீர்மை**
**மாற்றிஅவ் ஆற்றான் மறித்தால்போல் - தோற்றிப்**
**புலன்களெனப் போதம் புறம்பொழியும் நம்தம்**
**மலங்கள்அற மாற்றுவிக்கும் வந்து.** 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலில் கலந்து ஆற்றுநீரும் உப்புநீராகி மீண்டும் வந்த ஆற்றின் வழியே சிறிதுதூரம் செல்வதுண்டு, அப்படியே, மாய அறிவு தரும் நம் புலன்கள் சிவனுடன் கலக்கும்போது, சிவஞானம் பெற்றுத் தாமே மலங்களை நீக்கித் தரும். (மல மாயைக்குள் காரணமாகும் புலன்களே அது நீங்கவும் வழி செய்யும்.)

பவுர்ணமியில் ஆற்றின் உள்ளே கடல்நீர் வரும். அதுபோல் இறை ஒளி படியும்போது, மனித உடலில் மலஅறிவு நீங்கிச் சிவ அறிவு சேரும்.

(சிவத்திற்குக் கடல் உவமையாவது பெருமை பற்றியே ஆகும்; உவர்ப்பு பற்றி அன்று.)

பாலைநெய்தல் பாடியதும் பாம்புஒழியப் பாடியதும்
காலனைஅன்று ஏவிக் கராக்கொண்ட - பாலன்
மரணம் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நம்தம்
கரணம்போல் அல்லாமை காண். 12

திருஞானசம்பந்தர் பாலை நிலம் நெய்தலாகுமாறு பாடியதும் அப்பர் அப்பூதியாரின் மகனுக்குப் பாம்பு நஞ்சு நீக்கிடப் பாடியதும் முதலை உண்ட பாலனின் மரணம் தவிர்த்து மீளுமாறு சுந்தரர் பாடியதும் சாதாரண மனிதச் செய்கைகள் இல்லை. சிவச் செய்கைகளேயாகும்.

தூங்கினரைத் தூய சயனத்தை விட்டதன்பின்
தாங்களே சட்ட உறங்குவர்கள் - ஆங்குஅதுபோல்
ஐயன் அருள்கடைக்கண் ஆண்டதன்பின் அப்பொருளாய்ப்
பைய விளையும்எனப் பார். 13

உறக்கத்தின் நடுவே எழுப்பினால் முழு உறக்கமும் கெட்டு விடுவதில்லை. மீண்டும் வேறு இடத்தில் படுக்க வைத்தால் அவர்களே மீண்டும் உறங்குவர்.

அதுபோல் சிவபெருமான் அருளால் ஆண்டுகொண்ட பின்பும் அப்படி ஆளப்பட்டவர்கள் மனிதர்கள் போலவே இருப்பர். ஆனால் அவர்களிடம் மெல்லமெல்லச் சிவவிளைவு படிந்திருக்கும்.

சாதனம்

உள்ள முதல்அனைத்தும் ஒன்ற ஒருவவரில்
உள்ளம் உருகவந்து உன்னுடனாம் - தெள்ளி
உணரும்அவர் தாங்கள் உளராக என்றும்
புணரும்அவ னில்லாப் பொருள். 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மிடத்தில் வாழ்வதற்காக அருளப்பட்ட எல்லா முதலீடுகளும் ஒரே நேரத்தில் விலகி உள்ளமும் உருகினால், அப்போது சிவன் வந்து சேர்வான்.

தெளிந்து எண்ணும் அவர்கள் இருப்பது தெரியும்; அவருள் இருக்கும் சிவம் மட்டும் பிறருக்குத் தெரியாமல் இருக்கும்.

"ஒன்ற ஒருவவரில்" என்பது கடவுளோடு ஒன்றும் படியும் நம் உடல் உணர்வு விலகும் படியும் (ஒருவ) வருவதாம். (ஒருவுதல் – நீங்குதல்)

நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால் நான்அழியும் - வல்லதனால்
ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படும்காண்
ஆரேனும் காணா அரன். 15

நல்ல சிவபுண்ணியத்தாலும் நல்ல சிவயோகத்தாலும் நல்ல சிவஞானத்தாலும் 'நான்' என்ற செருக்கு அழியும். அப்படிப்பட்ட வலிமையுடன் யாராவது அன்பு கொள்வாரானால் யாராலும் காண முடியாத சிவன் அவரிடம் (தலைப்படுவான்) காணப்படுவான்.

மெல்வினையே என்ன வியனுலகில் ஆற்றரிய
வல்வினையே என்ன வரும்இரண்டும் - சொல்லில்
சிவதன்மம் ஆம்அவற்றில் சென்றதிலே செல்வாய்
பவகன்மம் நீங்கும் படி. 16

சிவ தன்மத்தைப் பொறுத்தவரை எளிய செயல் என்றோ வலிய செயல் என்றோ இல்லை. எதிலாவது ஒன்றில் முழுதுமாக நின்றால் பிறப்புக்குக் காரணமான கர்மவினை நீங்கும்.

அடியார்களில் சிலர் செயற்கரிய செய்தனர். சிலர் எளியனவே செய்தனர். இவற்றைப் பார்த்து நாம் எதைக் கைக்கொள்வது எனத் திகைக்கக்கூடாது என்பதாம். எதைச் செய்தாலும் அது சிவ புண்ணியமானால் அது போதும்.

ஆதியை அர்ச்சித்தற்கு அங்கமும் அங்கங்கே
தீதில் திறம்பலவும் செய்வனவும் - வேதியனே
நல்வினையாம் என்றே நமக்கும் எளிதானவற்றை
மெல்வினையே என்றதுநாம் வேறு. 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியாகிய கடவுளை அர்ச்சிப்பதற்குப் பல வழிகள் (சடங்கு) ஆங்காங்கே கூறப்பட்டுள்ளன. தீதுநீங்கிய திறமையான அச்செய்கைகள் யாவும் செய்வதே நல் வினையாகும். நம் இயல்புக்கு எளிதானவை என்பதே மெல்வினை என்று நாம் கூறியுள்ளோம்.

(வேதியனே என்பது இறைவனை அழைத்துக் கூறிய பாங்காகும். இதை ஆண்மகனை அழைத்துக் கூறியது என்பாரும் உளர்.)

**வரங்கள்தரும் செய்ய வயிரவர்க்குத் தங்கள்**
**கரங்களினால் அன்றுகறி யாக்க - இரங்காதே**
**கொல்வினையே செய்யும் கொடுவினையே ஆனவற்றை**
**வல்வினையே என்றதுநாம் மற்று.** 18

அன்று பைரவர் கோலத்தில் வந்த சிவனடியாருக்காகத் தம் மகனைத் தம் கைகளால் கறி சமைத்த கொல்வினையையே வல்வினை என்று நாம் கூறினோம்.

(கொடு வினை என்றது அந்தச் செயல் காண்பார்க்குக் கொடுமை விளைவிக்கும் என்பதாம்.)

**பாதகம் என்றும் பழிஎன்றும் பாராதே**
**தாதையை வேதியனைத் தாளிரண்டும் - சேதிப்பக்**
**கண்டுஈசர் தாமாம் பரிசளித்தார் கண்டாயே**
**தண்டீசர் தம்செயலால் தான்.** 19

'தம் தந்தை' என்று எண்ணாது, 'இது பாவம் பழி' என்றும் சிந்திக்காது வேதியன் காலிரண்டையும் (பாலகன்) வெட்டியது கண்டு, பாலகனுக்கு ஈசர் பதம் பெறும் பரிசைச் சிவபெருமான் அருளினார்.

(இது தண்டீசநாயனார் (சண்டேசர் – சண்டீசர்) செய்கையாம்.)

**செய்யில் உகுத்த திருப்படி மாற்றுஅதனை**
**ஐயஇதுஅமுது செய்கென்று - பையவிருந்து**
**ஊட்டி அறுத்தவர்க்கே ஊட்டி அறுத்தவரை**
**நாட்டிஉரை செய்வதுஎன்னோ நாம்.** 20

அரிவாட்டிய நாயனார் இறைவனுக்குரிய திருப்படி கட்டளைகளை (பூசைக்குரிய பொருள்கள்) தமது களைப்பால் தவறிக் கீழே போட்டுவிட்டார். இதற்குச் சமானமாகத் தம் தொண்டையைத் தம் வாளால் அறுத்து அதையே திருவமுதாக உண்ணுமாறு ஊட்டித் தமது பிறப்பை அறுத்தார்.

இதை முழுதும் புகழ்ந்து சொல்ல இயலாது. (ஊட்டி = குரல்வளை, ஊட்டி = உணவாக ஊட்டி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் செயலே செயலாகச் சென்றுதமைப்
பையக் கொடுத்தார் பரம்கெட்டார் - ஐயா
உழவும் தரிசும் ஒருமுகமே ஆனால்
இழவுண்டோ சொல்லாய் இது. 21

உலக வாழ்வை வாழ்ந்து கொண்டிருப்பதே நல்வாழ்வும் சேர்ந்து வாழ்வதாகிய செயலாகுமானால் அவர்களுக்கு வினையாகிய சுமை இல்லாது போகும்.

கடன் வாங்கிய இடத்தில் உழவும் செய்து வீட்டாலே கடன் அடையும் என்றிருக்குமாயின் எளிதாகும். தமக்குத் தெரியாத தொழில் செய்தே கடனை அடைக்க வேண்டும் என்றால் அது கடினமே ஆகும்.

(பரம் = பாரம் (சுமை); சிவனாலேயே அணுப்போதும் வாழ்கிறோம் என்ற உணர்வு கொண்டிருப்பதே இங்கு கூறப்பட்டது.)

ஆதார யோகம் நிராதார யோகமென
மீதானத்து எய்தும் விதிஇரண்டே - ஆதாரத்து
ஆக்கும் பொருளாலே ஆக்கும் பொருளாம் ஒன்று
ஆக்காப் பொருளேஒன் றாம். 22

மேம்பட்ட சுகத்தை அடைய இரு வகைகள் உண்டு.

ஒன்று ஆதார யோக முறை; மற்றது நிராதார யோகமுறை. பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கும் திருவருள் கொடுக்கும் சுகம் ஒன்று; சிவன் கொடுப்பது மற்றொன்று.

ஆதார யோகத்தில் தூலமுறை சூக்குமமுறை என இரண்டும் உண்டு. (ஆக்கும் பொருள் தூலம். ஆக்காப் பொருள் சூக்குமம். எளிதில் முடியாததை ஆக்காப் பொருள் என்றார்.)

ஆக்கி ஒரு பொருளை ஆதாரத்து அப்பொருளை
நோக்கி அணுவில் அணு நெகிழப் - பார்க்கில்
இவனாகை தானொழிந்திட்டு ஏகமாம் ஏகத்து
அவனாகை ஆதார மாம். 23

பிரபஞ்சத்தில் உள்ள பற்பல பொருட்களை விசாரித்து ஆராய்ந்து, அவை யாவும் மாயை என்பதும் யாவும் இறைவன் செயல் என்பதும் தான் தன்னால் செய்வது ஒன்றும் இல்லை என்பதும் உணரும்போது இவன் (ஆன்மா), 'தான்' என்னும் எண்ணம் விட்டுத் திருவருளோடு ஒன்றிவிடும். அப்படி ஒன்றிக் கலந்து விடுதல்தான் (அவனாகை – இறைவனின் ஒன்றுதல்) ஆதாரம் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டது ஒரு பொருளைக்கோடி படக்கூறு செயின்
கொண்டவனும் அப்பரிசே கூறுபடும் - கொண்ட
இருபொருளும் அன்றியே இன்னதுஇது என்னாது
ஒருபொருளே யாஇருக்கும் உற்று. 24

சரியான தியானத்தில், தியானிக்கப்படுவதும் தியானிப்பவனும் பிரியாத நிலையை அடைவர்.

தியானிக்கப்படும் பொருளை ஒரு கோடி பாகங்களாகக் கூறு போட்டால், தியானிப்பவனும் அவ்வாறு கூறுபட்டவனே ஆவான். அந்நிலையில், தியானப்பொருள் எது தியானிக்கும் பொருள் எது என்று தனித்தனியாகப் பிரிக்க முடியாமல் அவை இரண்டும் சேர்ந்து ஒரே பொருளாக நிற்கும்.

(தியானத்தால் இரண்டறக் கலப்பதைக் காட்டியது இது.)

அஞ்செழுத்து மேஅம்மை அப்பர்தமைக் காட்டுதலால்
அஞ்செழுத்தை ஆறாகப் பெற்றுஅறிந்தே - அஞ்செழுத்தை
ஓதப்புக் குள்ள மதியும் கெடில் உமைகோன்
கேதம்அற வந்தளிக்குங் கேள். 25

திருவைந்தெழுத்து என்னும் ஐந்து எழுத்துகளே அம்மையை அப்பனை அடையும் வழியாகும். எனவே ஐந்தெழுத்துகளையே வழியாகக் கொண்டு ஓதினால், தியானத்தில் ஒன்றினால், தியானம் செய்யும்போது தான் தன் என்னும் நிலை கெட்டு தியானப் பொருளில் கலந்தால், உமையம்மையின் பதியானவன், நம்முடைய பிறவிப்பிணி அகல நமக்கு அருள் புரிவான்.

(தீட்சை தேவையற்றது நமசிவாய மந்திரம். தீட்சை தேவைப்படுவது சிவாயநம எனும் மந்திரம்.) (ஐந்தெழுத்தில் 'சி' என்பது அப்பனையும் 'வ' என்பது அம்மையையும் குறிக்கும்.)

ஆக்கப் படாத பொருளாய் அனைத்தினிலும்
தாக்கித்தான் ஒன்றோடும் தாக்காதே - நீக்கியுடன்
நிற்கும் பொருளுடனே நிற்கும் பொருளுடனாய்
நிற்கை நிராதார மாம். 26

நிராதாரம் என்னும் யோகம் பற்றி இப்பாடலில் கூறப்படுகிறது.

சிவம் யாராலும் ஆக்கப்படாத பொருள். அதுபோல் நமக்குள் உள்ள ஒளியும் ஆக்கப்படாதது. உடலின் எல்லா அணுக்களிலிருந்தும் ஒளிப் பொறியாகத் திரண்டாலும் உள்ஒளி உடலின் வேறு பகுதியில் சென்று கலக்காது. ஆதாரம் யாவற்றையும் நீக்கி தானே நிற்பது சிவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஒளியும் அப்படியே நிற்கும். சிவத்துடன் ஒன்றாய்க் கூடி நிற்கும் பொருள் பராசக்தி. உடம்பிலும் குண்டலினி சக்தியாய் மூலதாரத்தில் அவள் இருக்கிறாள். அக் குண்டலினி சக்தியே உள் ஒளிக்கும் நிராதார யோகத்திற்கும் துணை செய்வதாகும். ஆகவே திருவருளுடன் பொருந்திய சிவத்துடன் கூடி நிற்பதே நிராதாரம்.

காண்கின்ற தோர்பொருளைக் காண்கின்ற யோகிகளே
காண்கின்றார் காட்சியறக் கண்ணுதலை - காண்கின்றார்
காண்பானும் காணப் படும்பொருளும் அன்றியே
காண்கையினால் கண்டனரே காண். 27

காணப்படும் பொருள் சிவம்; காணுபவன் யோகி; காட்சியில்லாமலே யோகிகள் சிவத்தைக் காணுகின்றனர். காணும் பொருளும் காணப்படும் பொருளும் யோகத்தில் ஒன்றாகி விடுவதால் காணும் காட்சி தேவை இல்லாது போகிறது. இரண்டும் ஒன்றெனக் கண்டதால், காணாமல் காண்பது சாத்தியமாகிறது.

காணும் காட்சியாவது அறிவு; காண்கிறோம் என்பது உணர்வு. இந்தக் காட்சியாகிய அறிவு கடவுளைக் காணப் பயன்படாது; உலகப் பொருள்களைக் காணவே பயன்படும்.

பேசாமை பெற்றதனிற் பேசாமை கண்டனைரைப்
பேசாமை செய்யும் பெரும்பெருமான் - பேசாதே
எண்ணொன்றும் வண்ணம் இருக்கின்ற யோகிகள்பால்
உள்நின்றும் போகான் உளன். 28

பேச இயலாததாகிய அனுபவத்தைப் பெற்றுப் பேசாமையாகிய மவுனத்தால் சித்தியடைந்தவர்கள், தாம் கண்டதை மற்றவர்க்குத் தெரிவிக்க இயலாதபடி செய்யும் பெருமை மிக்க சிவபெருமான், மவுனத்தில் மனம் ஒன்றிச் சாதனை செய்யும் யோகிகளின் உள்ளத்திலிருந்து பெயர்ந்து போகாமல் எப்போதும் அங்கேயே இருப்பான்.

ஒட்டற்று நின்ற உணர்வு பதிமுட்டித்
தேட்டற்று நின்ற இடம்சிவமாம் - நாட்டற்று
நாடும் பொருள்அனைத்தும் நானா விதமாகத்
தேடுமிடம் அன்று; சிவம். 29

உள்ளத்திலிருந்து வெளியே சென்ற உணர்வு உலகப் பொருள் எல்லாவற்றையும் கடந்து சென்று நிற்கும். அவ்வாறு மேலும் போக முடியாதபடி முட்டி நிற்கும் இடமே சிவமாகும். மேலும் தேடத் தேவையற்ற இடம் அது. ஞானக்கண் இல்லாமல் பலவிதமான பொருள்களையும் விசாரித்துத் தேடுமிடமல்ல அந்த இடம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணராதே யாதும் உறங்காதே உன்னிப்
புணராதே நீபொதுவே நிற்கில் - உணர்வுஅரிய
காலங்கள் சொல்லாத காலத்துடன் இருத்தி
காலங்கள் மூன்றினையும் கண்டு. 30

ஐம்பொறிகளாலும் புலன்களாலும் சிவத்தை உணரலாம் என்று முயலாதே – (உணராதே);
எல்லாவிதப் பற்றுக்களையும் விடாது பெற்று மயங்காதே – (உறங்காதே);
உன் உடம்புதான் நீ என்று சேர்ந்து விடாதே – (புணராதே);

எதிலும் சேராமல் தனித்துப் பொதுவாக நின்று தியானித்தால், உணர்வதற்கு அரிய பொருளாகவும் காலத்தைக் கடந்து ஆனால் காலத்தின் வடிவமாகவும் உள்ள சிவத்துடன் கலந்து முக்காலமும் அறிந்திருக்கலாம்.

பற்றினுள் பற்றைத் துடைப்பதுஒரு பற்றுஅறிந்து
பற்றிப் பரிந்திருந்து பார்க்கின்ற - பற்றுஅதனைப்
பற்றுவிடில் அந்நிலையே தானே பரமாகும்
அற்றம்இது சொன்னேன் அறி. 31

வினைப்பயனால் உலகத்து இன்பங்களில் வைக்கும் பற்றை முழுதும் நீக்கும் பற்று திருஅருளே ஆகும்.

அத்திருவருளைப் பற்றிக்கொண்டு, அவ்வாறு பற்றிக் கொண்டதற்காகப் பெருமை கொள்ளும் அகந்தைப் பற்றைப் பற்றாமல் விட்டு விட்டால், அந்த நிலையிலேயே சிவம் வெளிப்படுவதாம். இதனை முடிவாகச் சொன்னேன் அறிவாயாக.

அறிவறியாய் நிற்கில் அறிவுபல வாம்என்று
அறிவின் அறிவுஅவிழ்த்துக் கொண்டுஅவ் - அறிவினராய்
வாழ்ந்திருப்பர் நீத்தோர்கள் மானுடரின் மாணவகா
தாழ்ந்தமணி நாவேபோல் தான். 32

அறிவால் பிறபொருளை அறியும்போது அறிவதற்கு முன் உள்ள அறிவும் அறிந்தபின் உள்ள அறிவும் என இரண்டாகும். இப்படிப் பல பொருள்களையும் அறியும்போது அறிவின் வடிவமும் பலவாகப் பெறும்.

பற்று நீக்கிய (நீத்தார்) பெரியோர் அறிவிலேயே இப்படிப் பெருகும் அறிவுகளை நீக்கித் தரையில் வைத்த மணியின் நாக்கு அசையாதிருப்பது போல் சலனமற்று இருப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசையெலாம் அற்றால் ஒலிக்கும் திருச்சிலம்பின்
ஓசை வழியேசென்று ஒத்துஒடுங்கின் - ஓசையினின்
அந்தத்தான் அத்தான் அரிவையுடன் அம்பலத்தே
வந்து ஒத்தான் நந்தன் மகிழ்ந்து. 33

புற ஓசைகள் அடங்கினால் இறைவனின் சிலம்போசையாகிய பரநாதம் புலனாகும். அவ்வோசை வழியே சென்று ஒன்றினால் சேரும் இடம்தான் திருவம்பலத்தில் சிவகாமியுடன் இறைவன் நடமிடும் இடமாகும்.

(ஆன்மாவில் வந்து சிவன் ஆனந்த தாண்டவம் ஆடுவான்.)

சார்புஉணர்ந்து சார்பு கெடஒழுகின் என்றமையால்
சார்புஉணர்தல் தானே தியானமுமாம் - சார்பு
கெடஒழுகல் நல்ல சமாதியுமாம் கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று. 34

(தான் சார்ந்திருப்பதை உணர்வதும் அந்தச் சார்வை விட்டு நடப்பதும் என்று கூறியதால்) நாம் திருவருளைச் சார்ந்திருப்பதை உணர்வது தியானம் எனப்படும். அந்தச் சார்பையும் விட்டு உடல் பற்றும், விட்டோம் என்ற மனப்பற்றும் விடுவது அவசியமாகும். இவ்வாறு நடப்பவர்களுக்கு வினைகளால் வரும் துன்பம் பாதிப்பது இல்லையாம்.

இன்புறு நிலை

அன்றிவரும் ஐம்புலனும் நீயும் அசையாதே
நின்றபடி யேநிற்க முன்னிற்கும் - சென்று
கருதுவதன் முன்னம் கருத்தழியப் பாயும்
ஒருமகள்தன் கேள்வன் உனக்கு. 35

மாறுபட்டு எழும் ஐம்புலன்களின் வழியே சென்று சலனப்படாதே. அவ்வாறு நிலையாக நின்றால், நிற்கக் கருதும் அளவிலேயே நினைவுக்குள் அம்மையப்பன் பாய்ந்து வந்து நிற்பான்.

உண்டெனில் உண்டாக்கும் இல்லாமை இல்லையெனில்
உண்டாகும் ஆனமையின் ஓரிரண்டாம் - உண்டில்லை
என்னும் இவைதவிர்ந்த இன்பத்தை எய்தும் வகை
உன்னில் அவன் உன்னுடனே யாம். 36

உண்டு என நம்புவோர்க்கு உண்டாகியும் இல்லை என்போர்க்கு இல்லாததாகியும் அருள்வது திருவருளாகும். இந்த இரண்டு எழுச்சிகளையும் நீங்கிப் பரமானந்தம் எய்தும் வகையை நினைத்துப் பழகினால் அவன் உன்னுடன் வருவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தூல உடம்பாய முப்பத்தோர் தத்துவமும்**
**மூல உடம்பாம் முதல்நான்கும் - மேலைச்**
**சிவமாம் பரிசினையும் தேர்ந்துஉணர்ந்தார் சேர்ந்த**
**பவமாம் பரிசறுப்பார் பார்.** 37

நம் உடம்பு முப்பத்தோர் தத்துவங்கள் அடங்கிய தூல உடம்பாகும். ஒரு மலம் உடைய விஞ்ஞானகலர்க்கு சுத்தமாயையில் உள்ள நான்கு தத்துவங்களால் உடம்பு வரும் அது மூலப்பொருளால் ஆனதால் மூல உடம்பு. இவை இரண்டும் 31+4=35 தத்துவங்கள் ஆகும். முப்பத்தாறாவது தத்துவமாக உள்ளது நாத தத்துவமான சிவமே ஆகும். அது எங்கும் உடலாகப் போகாது.

முப்பத்தாறு தத்துவங்களின் முறைமைகளையும் தேர்ந்து உணர்ந்தோர், பிறவியை உண்டாக்கும் ஆணவமலத்தை அறுக்கப்பெறுவர்.

**எத்தனையோ தத்துவங்கள் எவ்எவர்கோட்பாடு உடைய**
**அத்தனையும் சென்றுஅங்(கு) அளவாதே - சித்தமெனும்**
**தூதுதனைப் போக்கிப்போய்த் தூக்கற்ற சோதிதனில்**
**பாதிதனைக் கும்பிடலாம் பார்.** 38

உலகில் எத்தனையோ தத்துவங்கள் உண்டு. யார் யாரோ பற்பல கோட்பாடுகள் உடையவராய் உள்ளனர். அத்தனையும் சென்று அங்கு ஆராய்ந்து தெளிய முடியாது. ஆகையால் சித்தம் என்பதை ஆராயும் தூதுவனாக அனுப்பி, உலக இயல்பும் தெய்வ இயல்பும் பற்றி விசாரித்தால், சோதிக்கத் தேவையற்ற இறையாகிய சோதியின் ஒரு பகுதியைக் குறிப்பிட்ட பயனை அடையலாம். (சித்தம் தூதுவனாகச் சென்று திருவருளை அடையும்; அதன் பாதியான சிவனை அப்படியே கும்பிடலாம் என்றும் விளக்கம் கூறப்படுகிறது.)

**சாம்பொழுதில் ஏதும் சலமில்லை செத்தாற்போல்**
**ஆம்பொழுதி லேஅடைய ஆசைஅறில் - சோம்பிதற்குச்**
**சொல்லுந் துணையாகும் சொல்லாத தூய்நெறிகள்**
**செல்லும் துணையாகும் சென்று.** 39

சாவு வரும்போது சலனமின்றி இருப்பதற்கு, உயிரோடு இருக்கும்போதே செத்தவர்போல் இருந்து பற்றுகள் நீக்கிப் பழகவேண்டும். அவ்வாறு பழகுவதற்கு சோம்பல் துணையாகும். சோம்பல் என்றால் இங்கு தியானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி உணர்த்த முடியாத வீடுபேறு பெறும் வழியில் செல்வதற்கும் இதுவே துணையாகும்.

(சோம்பு – சோம்புதல் = தூங்குதல்; சும்மா இருத்தல் எனப்படும் தியான நெறியாம்.)

**வேண்டும்கால் வேண்டும் பிறவானை என்றமையால்**
**வேண்டின்அஃது ஒன்றுமே வேண்டுவது - வேண்டிடுக**
**வேண்டாமை வேண்டவரும் என்றமையால் வேண்டிடுக**
**வேண்டாமை வேண்டும்அவன் பால்.** 40

வேண்டும்போது பிறவாமையையே வேண்ட வேண்டும் என்று சொன்னபடி கடவுளிடம் வரம் கேட்கும் நேரத்தில் மீண்டும் பிறக்காமல் இருப்பதையே வரமாகக் கேட்க வேண்டும்.

பிறவாமையைப் பெற ஒரு வழியும் உள்ளது. பொருள்கள் மேல் உள்ள ஆசையைத் துறந்தால் பிறப்பு வராது. எனவே வேண்டாமையை இறைவனிடம் விரும்பிக் கேட்க வேண்டும். அந்த வேண்டாமையையே விரும்ப வேண்டும்.

'சொன்னபடி' 'கூறியபடி' என்று எதனையோ, யாரையோ மேற்கோள் காட்டும்படி இப்பாடல் அமைந்துள்ளது. திருக்குறளில் கூறியுள்ள கருத்துகள் மேற்கோள் காட்டுகின்றன என்று பொருள் விரிப்பார் பலர். இங்கு அமையும் குறட்பாக்கள் இவை இரண்டாம்.

**"அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்**
**தவாஅப் பறிப்பீனும் விந்து" (361)**
**"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது**
**வேண்டாமை வேண்ட வரும்" (362)**

அருள்வழி நிற்றல்

**அரண உணர்வுதனில் அவ்வுணர்வை மாற்றில்**
**கரணமும் காலும்கை கூடும் - புரணமது**
**கூடாமை யும்கூடும் கூடுதலும் கூட்டினுக்கு**
**வாடாமை யும்கூடும் வந்து.** 41

ஐம்புலன்களுக்கு அடிமையாக உள்ள உணர்வினை அவ்வாறின்றி மாற்றினால் அதுவே ஆன்மாவிற்குப் பாதுகாப்புத் தரும் உணர்வாகும். அதனால் அந்தக்கரணங்களும் தசவாயுக்களும் நமக்கு வசமாகும்.

அந்நிலையில், உலக அறிவில் ஆன்மா மயங்காதபோது எங்கும் உள்ள பரிபூரணமான வியாபகத் தன்மை ஆன்மாவில் கூடும். உடல் அழியாதிருக்கவும் அதுவே வழி செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றிங்கு அசேதனமாம் இவ்வினைகள் ஓரிரண்டும்
சென்று தொடரும்அவன் சென்றிடத்தே - என்றும் தான்
தீதுஉறுவன் ஆனால் சிவபதிதான் கைவிடுமோ
மாதொருகூறு அல்லனோ மற்று. 42

அறிவற்றவையாகிய இருவினைகளும் சீவன் முக்தர்களுக்கு இப்பிறவியிலேயே எல்லாம் வந்து சேரும் – ஏனென்றால் வினைகளால் அவர்கள் துன்பமுறுவதை மாதொரு பாகனாகிய இறைவன் கைவிடுவானா மாட்டவே மாட்டான்.

(சீவன் முக்தர்களுக்கு மறுபிறவி இல்லை என்பது ஒரே பிறப்பில் வினை யாவும் வருமென்பதால் தெரிந்தது. அசேதனம் = அறிவு இன்மை.)

அநாதி சிவன் உடைமை யால்எதையும் ஆங்கே
அநாதி எனப்பெற்ற அணுவை - அநாதியே
ஆர்த்த துயர்அகல அம்பிகையோடு எவ்விடத்தும்
காத்தல் அவன்கடனே காண். 43

சிவம் அநாதி என்பது போல் ஆன்மாவும் அநாதியாகும். உயிர்களுக்கு வரும் துன்பமும் அநாதியாகவே உள்ளது. ஆன்மா உடம்பை ஏற்பதற்கு முன்பும் ஏற்ற பின்பும் உள்ள துன்பங்களை நீக்குவதற்காக அம்பிகையோடு கூடி எல்லா இடத்திலும் நிறைந்திருப்பதைச் சிவம் தம் கடமையாகக் கொண்டுள்ளது.

(அணு = வியாபகத் தன்மை குறைந்த ஆன்மா; அநாதி = காலம் தெரியாத நிலை.)

தம்மில் சிவலிங்கம் கண்டதனைத் தாம்வணங்கித்
தம்அன்பாம் மஞ்சநீர் தாம்ஆட்டித் - தம்மைஒரு
பூவாக்கிப் பூவழியா மல்கொடுத்துப் பூசித்தால்
ஓவாமை அன்றே உளன். 44

தமக்குள்ளேயே உள்ள சிவலிங்கத்தை அடையாளம் கண்டு அதனை வணங்குதல் நன்று. அவ்வாறு வணங்கும் வகையில், அன்பையே மஞ்சனநீராக ஆட்டி, தம்மையே பூவாகப் பாவித்து அப்பூக் கொண்டு அச் சிவலிங்கத்தை வழிபட்டால், அந்தச் சிவன், என்றும் உள்ளுக்குள்ளே பொருந்தி இருப்பான்.

தன்னைப் பெறுவதன்மேல் பேறுஇல்லைத் தான் என்றும்
தன்னைத்தான் பெற்றவன்தான் ஆர்என்னில் - தன்னாலே
எல்லாம்தன் னுள்கொண்டு கொண்டதனைக் கொள்ளாதே
எல்லாமாய் நிற்கும் இவன். 45



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் உடம்பு அல்ல ஆன்மாவே என்று உணர்வது தன்னைப் பெறுவதாகும். இதுவே சிறந்த பேறாகும்.

இவ்வாறு தன்னைப் பெற்றவன் யார் என்று எவ்வாறு விளக்குவது? பொறிபுலன்கள் வழியாக வரும் உணர்வைக் கைக்கொள்ளாமல் திருவருளையே உள்கொண்டு தானாக இருக்கும் உணர்வைப் பெற்றவன் எவனோ அவனே அவ்வாறு ஆனவன்.

துன்பமாம் எல்லாம் பரவசனாய்த் தான்துவளில்
இன்பமாம் தன்வசனாய் தான்இருக்கில் - என்பதனால்
நின்வசனாயேஇருக்கில் நின்உடனாம் நேரிழையாள்
தன்வசனா யேயிருப்பன் தான். 46

உலக இன்பங்களின் வசமாக இருப்பது பரவசமாகும்; இதன் முடிவு துன்பத்தில் துவளுவதே ஆகும். தன்னை உணர்தல் தன்வசமாகும்; இதன் பயன் எப்போதும் இன்பமே.

நீ, உன்வசமாக இருக்கும்போது திருவருளாகிய பராசக்தியும் உன்னுடன் இருக்கும்; சத்தியைப் பிரியாத சிவமும் உன்னுடன் இருப்பான்.
(பரவசம் என்பது பரத்தின் (வேறானவற்றின்) வசப்படுதல் எனப் பொருள்படும்.)

செத்தாரே கெட்டார் கரணங்கள் சேர்ந்ததனோ(டு)
ஒத்தாரே யோக பரர் ஆனவர்கள் - எத்தாலு(ம்)
ஆராத அக்கரணத்து ஆர்ப்புண்டுஇங்கு அல்லாதார்
பேராமல் செல்வர் அதன் பின். 47

பொறி புலன்களை முழுமையாய் விட்டவர்கள், செத்தவர்க்கு ஒப்பாவர்; ஏனெனில் அவர்கள் அநுபவம் இழந்தவர்கள். அவ்வாறின்றி, பொறி புலன்களையும் சிவன் வழியில செலுத்தியவர்கள் யோகபரம் ஆனவர்கள்.

இவை இரண்டும் இல்லாமல், எந்த விதத்திலும் நேராகாத கருவிகள் வழியாகச் சென்று, அவற்றின் ஆர்ப்பாட்டத்தில் கட்டுண்டு சிவவழியை விட்டவர்கள் அந்தக் கருவிகளின் பின்னாலேயே செல்வர்.

சிவ சிந்தனை உடையார்க்குக் கரணங்களும் சிவகரணங்களாகவே இருக்கும். (கள்ளப் புலனைத்தும் காளாமணி விளக்கே என்னும் திருமந்திரம் காண்க.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணும் கருத்தும் கடந்துஒரு பேறேயும்
கண்ணும் கருத்தும் களிகூர - நண்ணி
வடம்அடக்கி நிற்கும் வடவித்தே போல
உடன்அடக்கி நிற்பர்காண் உற்று. 48

கண்ணும் கருத்தும் கடந்த பேறாக உள்ள பரம்பொருளை கண்ணும் கருத்தும் மகிழ்ச்சி அடைய உள்ளத்தில் உடம்பில் அடக்கி வைத்திருப்பர் ஞானம் பெற்றவர். பெரிய ஆலமரத்தை சிறிய விதை தனக்குள் அடக்கி வைத்திருப்பது போல ஞானவான்கள் பரம்பொருளைத் தமக்குள் வைத்திருப்பர். (வடம் = ஆலமரம்)

வானகமும் வையகமு மாய்நிறைந்தவான் பொருளை
ஊனகத்தே உன்னும்அது என்எனையேல் - யானகத்து
வாதனையை மாற்றும் வகையதுவே மண்முதலாம்
ஆதனமே அன்றோ அதற்கு. 49

வானமும் வையமுமாக நிறைந்த பெரிய பொருளை ஊனாகிய உடம்பில் அடக்க எண்ணுவது எப்படி என்றால், அதற்கான வழி இது.

மண் முதலான தத்துவங்களில் தாமாகவே சிவபெருமான் இடம் பெற்றுள்ளான். என் உடலும் அத்தத்துவங்களால் ஆனதுதான். எனவே முன்பே என்னுள் அவன் இருக்கிறான்.

மேலும், பிறவி வாசனை, மலவாசனை எனும் தொடர்புகளால் அவன் இருப்பது தெரியவில்லை; அவற்றை மனத்தால் நினைத்து நீக்கவே அவனும் தெரிவான். (வாதனை = வாசனை; ஆதனம் = ஆசனம்)

கல்லில் கமரில் கதிர்வானில் சாணையினில்
வல்லுப் பலகையினில் வாதனையைச் - சொல்லும்
அகமார்க்கத்தால் அவர்கள் மாற்றினர்காண் ஐயா
சகமார்க்கத் தால்அன்றே தான். 50

கல், நிலவெடிப்பு, ஒளிமிக்க வாள், சாணை, சூதுப்பலகை ஆகியவற்றின் துணையால் (சிலர்) தங்கள் பிறவித்துன்பம் நீக்கிச் சிவமானார்கள். அவர்கள் நெறி அகமார்க்கமாகிய அன்பு நெறியாகும். சகத்தில் காணும் பிற மார்க்கங்களால் இல்லை.

(சகமார்க்கம் என்பதை யோக பதம் என்றும் கொள்ளலாம். அப்படியாயின் இவர்கள் உடல் தொண்டு செய்தவர்கள். யோகம் செய்தவர்கள் அல்ல.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கல்லில் துணி துவைத்துத் திருக்குறிப்புத் தொண்டர் முத்தி பெற்றார்.
2. அரிவாட்டாய நாயனார் நிலவெடிப்பில் நெல் சிந்தியதால் கழுத்தறிந்து கொண்டார்.
3. ஏயர்கோனும் கோட்புலியும் வாளால் முத்தி பெற்றார்கள்.
4. மூர்த்தியார் முழங்கையைச் சாணையில் அரைத்தார்.
5. மூர்க்க நாயனார் சூதுப்பலகையால் முத்தி பெற்றார்.

(பெரியபுராணத் தொண்டர்கள் பற்றிய குறிப்புச் செய்திகள்.)

சிவப்பேறு

**உள்ளும் புறம்பு நினைப்பொழியில் உன்னிடையே**
**வள்ளல் எழுந்தருளும் மாதினொடும் - தெள்ளி**
**அறிந்துஒழிவாய் அன்றியே அன்புடையை யாகில்**
**செறிந்துஒழிவாய் ஏதேனும் செய். 51**

உள்ளத்திலும் வெளியிலும் சிவம் தவிர வேறு நினைப்பு எதுவாயினும் அதை ஒழித்திட்டால் சிவமும் சத்தியும் உனக்குள் எழுந்தருள்வர். தெளிவாக இதை அறிதலோ, அல்லது அன்பினால், அவர்களோடு ஒன்றுபடுதலோ ஆகிய இரண்டில் எதை வேண்டுமாயினும் நீ செய்யலாம்.

**கண்ணப்பன் ஒப்பது ஓர்அன்பின்மை என்றமையால்**
**கண்ணப்பன் ஒப்பதோர் அன்பினைக் - கண்ணப்பர்**
**தாம்அறிதல் காளத்தி யார்அறிதல் அல்லதுமற்று**
**யாமறியும் அன்பன்று அது. 52**

திருவாசகத்தில் திருக்கோத்தும்பிப் பதிகத்தில் கண்ணப்பன் அன்புக்கு எங்கும் ஒப்பு காணமுடியாது என்று கூறுகிறார் மாணிக்கவாசகர்.

இப்பாடல் அதனை அடியொட்டியே அமைகிறது.

கண்ணப்பனுக்கு நிகரான அன்பு வேறில்லை என்று கூறினபடியால், அப்படிப்பட்டதோர் அன்பை, ஒன்று கண்ணப்பர் அறியமுடியும் அல்லது காளத்தியப்பர் அறியமுடியும். அவர்கள் இருவர் தவிர நாம் அறியக்கூடிய அன்பு அல்ல அது. (மிகவுயர்ந்த அன்பு என்பது பொருள்.)

**அவிழ்ந்த துணியில் அவிழ்ந்த அவிழை**
**அவிழ்ந்த மனத்தால் அவிழ்க்க - அவிழ்ந்தசடை**
**வேந்தனார்க்கு இன்னமுதம் ஆயிற்றே மெய்யன்பில்**
**சேந்தனார் செய்த செயல். 53**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாதிரையன்று சேந்தனார் தம் கந்தைத்துணியில் முடிந்து வந்த களியாகிய அமுது, குழைந்த கந்தல் துணியின் நூலிடுக்கு வழியே வெளிப்பட்டது. உலக விருப்பங்களாகிய பற்றுகளில் பதியாத மனத்தோடு தந்ததால், அப்படிச் சிந்திய அமுதும் இறைவனுக்குத் திருவமுது ஆயிற்று.

(அவிழ்ந்த துணி = நூல் விலகிய பழந்துணி; அவிழ்ந்த அவிழ் = அத்துணி இடுக்கில் வெளிப்பட்ட அமுது; அவிழ்ந்த மனம் = பற்றுகளின் கட்டுப்பாட்டிலிருந்து விலகிய மனம்; அவிழ்ந்த சடை வேந்தன் = விரிசடை கடவுளாகிய சிவன்.)

சுரந்த திருமுலைக்கே துய்யசிவ ஞானம்
சுரந்துஉண்டார் பிள்ளையெனச் சொல்லச் - சுரந்த
தனமுடையாள் தென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையாள் அன்பிருந்த வாறு. 54

திருஞானசம்பந்தர் மூன்றாண்டுப் பிள்ளையாக இருந்து குளக்கரையில் அழுதபோது பார்வதியின் திருமுலையில் பால் சுரந்தது. அதை உண்டு, பிள்ளையார் தெளிந்த சிவஞானத்தை அடைந்தார். இந்த வரலாற்றைக் கேட்ட தென்பாண்டி நாட்டு அரசியாகிய மங்கையர்க்கரசியார், மடைதிறந்து தாழ்ந்த வெள்ளம் போல் அன்பு உடையவராயிருந்ததால், அவருக்கும் பால் சுரந்தது.

அன்பேஎன் அன்பேஎன்று அன்பால் அழுதுஅரற்றி
அன்பேஅன் பாக அறிவழியும் - அன்பன்றித்
தீர்த்தத்தியானம் சிவார்ச்சனைகள் செய்வ தெல்லாம்
சார்த்தும் பழமன்றே தான். 55

என் அன்பே என் அன்பே என எடுத்துக் கூறி அழுது அரற்றி சிவமாகிய அன்பே தன்னன்பாக ஆகும்போது உலகியலில் பற்றுக்கொண்ட அறிவு அழியும். இந்த அன்பு வழியின்றித் தீர்த்தம் ஆடல், தியானம் செய்தல், சிவார்ச்சனை செய்தல் முதலியவை, பழுத்துப் பயன் தரும் என்று கூறமுடியாது.

எல்லார் அறிவுகளின் தாற்பரியம் என்னறிவு
செல்லும் இடத்தளவும் சென்றறிந்தேன் - வல்லபடி
வாதனையை மாற்றும் வகைஇதுவே மற்றுஅவற்றுள்
ஏதமறக் கண்டது இது. 56



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அறிவு செல்லும் இடம் எங்கும் சென்று ஆய்ந்து அறிந்தேன். இதனால் பிறரையும் அவர்கள் சொல்வதையும் கூட அறிய முடிந்தது.

தவறு இல்லாதபடி அறிந்தது எது என்றால் உலகியல் அறிவு வாதனைகளை மாற்றிக் கடவுள் சிந்தனையாக இருப்பதுவே குற்றமற்றது ஆகும்.

ஞானமும் அன்பும்

**வித்தும்அதன் அங்குரமும் போன்றிருக்கும் மெய்ஞ்ஞானம்**
**வித்தும்அதன் அங்குரமும் மெய்யுணரில் - வித்துஅதனில்**
**காணாமை யால்அதனைக் கைவிடுவர் கண்டவர்கள்**
**பேணாமை யால்அற்றார் பேறு.** 57

விதையும் அதில் எழுந்துவரும் முளையும் போலச் சிவமும் அதிலிருந்து வரும் அருளும் பிரியாதே இருக்கும். இதை இப்படி உணர்தலே மெய்யுணர்வாகும்.

முளையை மட்டும் பார்ப்போரால் வித்தைக் காண முடியாது; ஆகவே அவர்கள் விதையை உணராது விடுவர். முளை மட்டும் இருக்கிறது என்று எண்ணுவர். அவ்வாறே, ஆதியில் உள்ள சிவத்தை உணராமல், சிவத்திலிருந்து முளைத்திருக்கும் தன்னை மட்டும் பெரிதாய் நினைப்பவர்கள் பேறு பெற மாட்டார்கள்.

சிவன்தான் ஆதி என்று உணர்ந்தவர்களும் கூட தன்னை முதலாக எண்ணிச் சிவத்தைப் பேணாமல் விடும்போது வீடுபேறின்றிப் போவர்.

(முளையைப் பார்த்துவிட்டு விதையைக் காணாத காரணம் விதை வெடித்தபின்தான் இலைகளாக முளைத்து வந்தது; எனவே முளை வந்தபின் விதை புலனாகாது.)

பரமுத்தியின் இயல்பு

**ஒன்றுஅன்று இரண்டுஅன்று உளதுஅன்று இலதன்று**
**நன்றன்று தீதன்றுநான்அன்று - நின்ற**
**நிலைஅன்று நீஅன்றுநின்னறிவும் அன்று**
**தலைஅன்று அடிஅன்று தான்.** 58

சிவத்தோடு ஆன்மா ஒன்றிய நிலையில் சிவம் தனி ஒன்று என்று கூறமுடியாது; சிவத்தை ஆன்மா என்றும் பிரியாது என்பதால் அவற்றை இரண்டு பொருள்கள் என்று கூற முடியாது; ஓரிடத்தில் இல்லாமல் வேறிடத்தில் இருப்பதையே 'உள்ளது' என்று கூற முடியும்; எல்லாமாய் எல்லா இடத்திலும் இருக்கும் கடவுளை ஓரிடத்தில் மட்டும் உளதாகக் கூற முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யாச் செயலைஅவன் செய்யாமல் செய்ததனைச்
செய்யாச் செயலில் செலுத்தினால் - எய்யாதே
மாணவக அப்பொழுதே வாஞ்சைக் கொடிவளர்க்கும்
ஆணவமும் அற்றது அறி. 59

இறைவன் தன் ஐந்தொழில்களைச் செயல்களாகச் செய்யாமல் நினைப்பின் மூலமே செய்து முடிக்கிறான். எனவே அது செய்யாமல் செய்வதாகும். எல்லாச் செயலும் சிவன் செயல் என உணர்ந்து அதனில் சித்தத்தைச் செலுத்தினால், அப்போதே ஆணவ மலம் அறும். சீடனே! அந்நிலையில் சிவன் அநுபவத்தை அடைவாயாக!

ஏதேனும் காலமுமாம் ஏதேனும் தேசமுமாம்
ஏதேனும் திக்கு ஆசனமுமாம் - ஏதேனும்
செய்தல் ஒருவலுமாம் செய்யாச் செயல்அதனைச்
செய்யாமல் செய்யும் பொழுது. 60

சிவத்தையே எப்போதும் ஒன்றி உணர்ந்து எல்லாச் செயலும் சிவன் என்றே உணரும்போது காலம், இடம், திசை, வழிபடும் இருக்கை (ஆசனம்), கருவி, கரணம், நல்வினை தீவினை முதலிய எதுவும் இல்லை.

(ஆகமங்களில் கூறிய வழிபாட்டு நெறிப்படியான விதிகள் கூட அவர்களுக்கு இல்லை என்பதாம்.)

செய்தற்கு அரிய செயல்பலவும் செய்துசிலர்
எய்தற்கு அரியதனை எய்தினர்கள் - ஐயோநாம்
செய்யாமை செய்த செயல்அறுக்க லாய்இருக்கச்
செய்யாமை செய்யாத வாறு. 61

செய்வதற்கு அரிய செயல்கள் பலவும் செய்து சில பெரியோர்கள், அடைவதற்கு அரிய பேற்றினை அடைந்து சிவானுபவ இன்புறுகிறார்கள்.

ஐயோ! ஐயோ, செய்யக் கூடாதவற்றைச் செய்து அவற்றின் வினைப் பயன்களையும் நீங்க முடியாது இருக்கிறோம். இனியாவது அத்தகு செயல்களைச் செய்யாமல் இருப்பது மிகவும் பரிவுக்கு உரியதேயாம்.

இப்பொருள்கள் யாதேனும் ஏதேனும் ஒன்று செய்தல்
எப்பொருளும் செய்யாது ஒழிந்திருத்தல் - மெய்ப்பொருளைக்
கண்டிருத்தல் செய்யாதே கண்ட மனிதரெலாம்
உண்டிருப்பது என்னோ உரை. 62



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனுக்கு உகந்ததான பணிகளைச் செய்தல்; தனக்கென்று எதையும் செய்யாது இருத்தல்; சிவனைத் தவிர வேறு எதையுமே நினையாதிருத்தல் - இம் மூன்றில் எதையும் செய்யாமல், வெறுமே உண்பதும் இருப்பதுமாகிய உலக இன்பச் செயல்களில் ஆழ்ந்திருத்தல் என்ன பயனைத் தரும்? உரைப்பாயாக!

தன்னிழப்பு

வீட்டிலே சென்று வினையொழித்து நின்றிடில்என்
நாட்டிலே நல்வினைகள் செய்திடில்என் - கூட்டில்வாள்
சாத்தியே நின்றிலையேல் தக்கனார் வேள்விசெய்த
மாத்திரமே ஆம்கண்டாய் வந்து. 63

(பற்றுகளிலிருந்து) விடுதலை கொண்டு உலகச் செயல்களை ஒழித்துத் துறவறத்தில் நின்றாலும் நாட்டில் இல்லறத்தில் இருந்து செயல்பட்டாலும் தன்முனைப்பு இல்லாமல் செய்ய வேண்டும். உறைக்குள் இருக்கும் வாள்போல் செயலற்றுச் சிவனடியில் அடங்கியிருந்தல் வேண்டும்.

தன் முனைப்புடன் நன்மையைச் செய்தால்கூட, அது சரியாகாது. தக்கன், யாகம் செய்தாலும் ஆணவ முனைப்புடன் செய்ததால் தீமைகள் வந்தன.

சிவன்முதலே அன்றி முதல்இல்லை என்றும்
சிவனுடையது என்அறிவு என்றும் - சிவன்அவன(து)
என்செயல் அதாகின்றது என்றும் இவையிற்றைத்
தன்செயலாக் கொள்ளாமை தான். 64

உயிர்களின் இயல்பாகிய விருப்பம் (இச்சை), அறிவு, செயல் என்பன உடல் எடுத்துப் பிறவி வந்த பிறகே வெளிப்படுகின்றன. உடல் எடுப்பதற்கு முன் இவை வெளிப்பட இயலாமல் இருந்தன.

உடல் தந்த இறைவனின் அருளால் இவை வெளிப்பட்டு அவனுடைய இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி ஆகியவற்றின் துணையால் செயல்படுகின்றன.

சிவனுடைய விருப்பமன்றி வேறு விருப்பமில்லை, சிவனின் அறிவன்றி வேறு அறிவில்லை, சிவனுடைய செயலன்றி வேறு செயலில்லை என்று எல்லாம் சிவனாக்கி, எதவும் தனது செயலில்லை என்று ஒன்றும் நிலைமையே முத்தி நிலைமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்றுஇச் சமயத்தின் அல்லதுமற்று ஏழையுடன்**
**ஒன்றுசொலி மன்றத்து நின்றவர்ஆர் - இன்றிங்கே**
**அங்கம் உயிர்பெறவே பாடும் அடியவர்கள்**
**எங்கும்இலை கண்டாய் இது. 65**

பேச இயலாத பெண்ணுக்கு பேச்சும் வரச்செய்து அவளுடன் வார்த்யையாடி நின்றார் ஒருவர் (மாணிக்கவாசகர் தில்லையில் நிகழ்த்திய அற்புதம்.)

இறந்த பெண்ணின் எலும்பைக் கொண்டே அவளை உயிர்ப்பித்து ஒருவர் அற்புதம் செய்தார். (மயிலாப்பூரில் திருஞானசம்பந்தர் நிகழ்த்திய திருவருள்.)

இந்தச் (சைவ) சமயத்தில் அல்லால் வேறு எங்கும் இத்தகு செயற்கரிய செயலை யாரும் செய்யாமையால் இச்சிவநெறியே உயர்ந்தது.

**விரிந்தும் குவிந்தும் விழுங்குவர்கள் மீண்டும்**
**தெரிந்தும் தெரியாதும் நிற்பர் - தெரிந்தும்**
**தெரியாது நிற்கின்ற சேயிழைபால் என்றும்**
**பிரியாது நின்றவனைப் பெற்று. 66**

எங்கும் வியாபகமாய் உள்ள சிவனை, உடலுக்குள்ளேயே ஒன்றச் செய்து விழுங்கி அனுபவிக்கும் ஞானியர், உலகச் செய்திகளில் நிற்பது போல நின்றாலும் அவை தெரிந்தும் தெரியாததுமாய் இருப்பர். உலகைத் தெரிந்தும் தெரியாதது போல நிற்கும் திருவருளாம் சத்தியை எப்போதும் பிரியாமல் நிற்கும் சிவனை அடைந்தவர்களுக்கு இதுவே முறை.

**ஆதனமும் ஆதனியும் மாய்நிறைந்து நின்றவனைச்**
**சேதனனைக் கொண்டே தெளிவுற்றுச் - சேதனனைச்**
**சேதனனி லேசெலுத்திச் சிற்பரத்தராய் இருப்பர்**
**ஏதம்அறக் கண்டவர்கள் இன்று. 67**

ஆன்மாவும் தாமுமாகக் கலந்து நிற்கும் பரம்பொருளை, குருவைக் கொண்டு தெளிந்து, ஆன்மாவைச் சிவனிடத்திலே செலுத்திச் சிவமயமாக இருப்பவர்கள், குற்றமற்ற ஞானிகள் ஆவர்.

(ஆதனம் = ஏற்பதாகிய உயிர்கள்; ஆதனி = ஏற்கப்பட்டதாகிய இறைவன்; சேதனன் = அறிவுமயமானவன்; ஞானகுரு; சேதனனை = ஆன்மாவை; சேதனனிலே = கடவுளிடத்திலே; சிற்பரம் = சிவம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமடங்க இந்தத் தலமடங்கும் தாபதர்கள்
தாமுணரில் இந்தத் தலம்உணருந் - தாம்முனியில்
பூமடந்தை தங்காள் புகழ்மடந்தை போயகலும்
நாமடந்தை நில்லாள் நயந்து. 68

(சிவமாகவே வாழும் தனஞானிகளால் தாம், இந்த உலகமே நடக்கிறது என்பதனை உணர்த்தும் பாடல்) சிவஞானியர் அடக்கினால் இவ்வுலகம் அவர்களுக்குள்ளேயே அடங்கும்; அவர்கள் எதை உணர்ந்தார்களோ அதை இவ்வுலகும் உணரும்.

அவர்கள் சினம் கொண்டால் நிலமங்கையும் செல்வமங்கையும் தங்க மாட்டார்கள். புகழ் மகளும் அகன்று விடுவாள். கலைமகள் தந்த அறிவும் நீங்கிவிடும்.

அணைந்தோர் தன்மை

துரியம் கடந்தசுடர்த் தோகையுடன் என்றும்
பிரியாதே நிற்கின்ற பெம்மான் - துரியத்தைச்
சாக்கிரத்தே செய்தருளித் தான் செய்யும் தன்மைகளும்
ஆக்கியிடும் அன்பர்க்கு அவன். 69

துரியமும் துரியாதீதமும் மேவிய சிவசத்தியை எப்போதும் பிரியாதிருக்கும் பெருமான், தவம் உடையவர்க்குத் துரிய காலத்து இன்பத்தை விழிப்பு நிலையிலேயே அருளிச் செய்வான். தான் செய்யும் செயல்களையெல்லாம் அவர்கள் செய்தனவாகவும் காணச் செய்வான்.

(இதனால் அருளாளர்கள் செய்த அற்புதங்கள் யாவும் இறைவன் செயல்களே என அறிகிறோம்.)

ஓடம் சிவிகை உலவாக் கிழிஅடைக்கப்
பாடல் பனைதாளம் பாலைநெய்தல் - ஏடுஎதிர் வெப்(பு)
என்புக் குயிர்கொடுத்தல் ஈங்கிவைகாண் ஓங்கு புகழ்த்
தென்புகலி வேந்தன் செயல். 70

(தென்புகலி = சீர்காழி; இப்பாடலில் சீர்காழி வேந்தராகிய திருஞானசம்பந்தரின் அருளிச் செயல்கள் தொகுக்கப்பட்டன.)

1. ஓடம் – ஆற்றில் வெள்ளம் மிகுந்தபோது பதிகம் பாடி ஓடம் பெற்று அடியார்களோடு திருக்கொள்ளம் பூதூரில் கரை ஏறினார்.
2. சிவிகை – தீருவரத்துறையில் முத்துச்சிவிகை பெற்றார்.
3. உலவாக்கிழி – திருவாவடுதுறையில் உலவாக்கிழி பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பாடல் – திருமறைக்காட்டில் கோயில் கதவு அடைக்கப் பாடினார்.
5. பனை – திருவோத்தூரில் ஆண்பனையைப் பெண் பனையாக்கினார்.
6. தாளம் – திருக்கோலக்காவில் பொன் தாளம் பெற்றார்.
7. பாலை நெய்தல் – திருநனிப்பள்ளியில் பாலை நிலத்தைப் பாடி நெய்தலாக்கினார்.
8. ஏடு – வைகையாற்றில் பதிகஏடு எதிர்த்து நீந்துமாறு செய்தார்.
9. வெப்பு – பாண்டியனுக்கு வெப்பு நோயை நீக்கினார்.
10. என்புக்கு உயிர் – மயிலாப்பூரில் எலும்பைப் பெண் ஆக்கிப் பாடினார்.

– இவை யாவும் சீர்காழி வேந்தரின் செயல்களாகும்.

கொல்கரியின் நீற்றறையின் நஞ்சில்கொலை தவிர்தல்
கல்லே மிதப்பாய்க் கடல்நீந்தல் - நல்ல
மருவார் மறைக்காட்டில் வாசல்திறப் பித்தல்
திருவாமூர் ஆளி செயல். 71

(திருவாமூர் ஆளி (ஆள்பவர்) – திருநாவுக்கரசர்; இப்பாடலில் திருநாவுக்கரசரின் அருளிச் செயல்கள் தொகுத்துக் கூறப்படுகின்றன.)

1. கொல்கரி – தம்மைக் கொல்ல வந்த யானையிடமிருந்து தப்பியது.
2. நீற்றறை – நீற்றறையில் அடைக்கப்பட்டதிலிருந்து வெளிவந்தது.
3. நஞ்சில் கொலை – பால் சோற்றில் கலந்த நஞ்சிலிருந்து வெற்றி கொண்டது.
4. கல் மிதப்பு – கல்லில் கட்டிக் கடலில் இட்டபோது கல்லே தெப்பமாக மிதந்தது.
5. வாசல் திறப்பு – திருமறைக்காட்டுக் கோயில் கதவைத் திறக்கப் பாடியது.

– இவை யாவும் திருவாமூர் தோன்றிய நாவுக்கரசரின் நற்செயல்கள்.

மோகம் அறுத்திடின்நாம் முத்தி கொடுப்பதென
ஆகமங்கள் சொன்ன அவர்தம்மைத் - தோகையர்
தூதாகப் போகவிடும் வன்தொண்டன் தொண்டுகளை
ஏதாகச் சொல்லுவேன் யான். 72

(வன்தொண்டன் = சுந்தரர்; இப்பாடலில் சுந்தரரின் இறையன்பும் உறவும் கூறப்பட்டன.)

காமத்தை நீக்கினால் முத்தி தருவோம் என்று ஆகமங்கள் மூலம் சொல்லிய சிவபெருமானையே தம் மனைவியர்களிடம் தூதாகப் போகச் செய்த சுந்தரர் செய்கைகளை எப்படிப் பாராட்டுவோம்?

பாய்பரியேற அந்தப் பரமானந் தப்பயனைத்
தூயதிரு வாய்மலரால் சொல்செய்து - மாயக்
கருவாதை யாம்அறியா வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூர்ஆளும் தே. 73



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(திருவாதவூர் ஆளும் தே = திருவாதவூரில் தோன்றிய தெய்வமாகிய மாணிக்க வாசகர்; மாணிக்க வாசகரின் புகழ் பேசும் பாடல்)

எல்லையற்ற ஆனந்த பரமாக விளங்கும் சிவனையே குதிரைச் சேவகனாக வரச்செய்து, பின் அந்தச் சிவனைத் தன் திருவாயால் புகழ்ந்து பாடித் திருவாசகம் செய்து, அதன் மூலம் மாயக் கருப்பைத் துன்பம் நமக்கு இல்லாமல் செய்தவர் மாணிக்க வாசகரே ஆவார்.

அம்மையிலும் இம்மையிலும் அச்சம் தவிர்த்து அடியார்
எம்மையுமாய் எங்கும்இயங்குதலான் - மெய்ம்மைச்
சிவயோக மேயோகம் அல்லாத யோகம்
அவயோகம் என்றே அறி. 74

(அம்மை = மறுமை; இம்மை = இப்பிறவி; எம்மை = எப்போதும்; அவயோகம் = பயனற்ற யோகம்.)

மறுமையிலும் இம்மையிலும் உண்டாகும் அச்சங்களைப் போக்கி, அடியவர்கள் எப்போதும் இன்புறுமாறு இயங்குகின்ற சிவனை நோக்கிச் செய்யும் சிவயோகமே யோகமாகும். மற்ற யோகங்கள் பயனற்றவை.

மன்னன்அருள் எவ்வண்ணம மானுடர்பால் மாணவக
அன்ன வகையே அரன்அருளும் - என்னில்
அடியவரே எல்லாரும் ஆங்கவர்தாம் ஒப்பில்
அடியவரே எல்லாம் அறி. 75

மாணவனே! மன்னனுடைய அருளும் ஆணையும் மக்கள் யாவருக்கும் சமமாக வந்தமைதல் போல, சிவனின் அருளிப்பாடும் யாவர்க்கும் ஒருநிலையிலேயே அமையும். ஆதலால் அவனுக்கு யாவரும் அடியவர்கள் ஆவோம்.

இருப்பினும், தம்மோடு இணங்கி இருப்போரை அரசன் ஒப்பற்றவராகச் செய்வது போல் சிவத்தை உணர்ந்து ஒழுகும் அடியார்களையும் சிவன் ஒப்பற்றவராகச் செய்வான்.

உடம்புடைய யோகிகள்தாம் உற்றசிற் றின்பம்
அடங்கத்தம் பேரின்பத் தாக்கத் - தொடங்கி
முளைப்பதும்ஒன் றில்லை முடிவதும்ஒன் றில்லை
இளைப்பதும்ஒன் றில்லை இவர். 76



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்போடு வாழும் சீவன் முத்தராகிய யோகிகள், தாம் அனுபவிக்கும் உலகியல் இன்பமாகிய சிற்றின்பத்தையும் வீட்டுலகப் பேரின்பமாகவே அனுபவிப்பர்; ஏன் என்றால், அவர்கள் விருப்பு வெறுப்பு இல்லாது சிவமாகவே வாழ்பவர்கள். அவர்களுக்கு நல்வினை தீவினை என்ற விளைவுகள் முளைப்பதுமில்லை; முடிவதும் இல்லை. இதனால் அவர்கள் தளர்ச்சி அடைவதும் இல்லை.

சத்தி சிவமாதல்

பேரின்ப மான பிரமக் கிழத்தியுடன்
ஓரின்பத் துஉள்ளானை உள்ளபடி - பேரின்பம்
கண்டவரே கண்டார் கடல்உயிர்த்த இன்னமுதம்
உண்டவரே உண்டார் சுவை. 77

(பிரம்மக் கிழத்தி = பராசக்தி; கடல் = திருப்பாற்கடல்)

பேரின்பவடிவான பராசக்தியுடன் ஒரே நிலைப்பட்டு இன்பமென நிறைந்த சிவனை, உள்ளபடி நினைத்து ஒன்றி இருக்கும் யோகிகளே பேரின்பம் கண்டவர் ஆவர்; பிறர் அப்படிக் காண்பதில்லை. (இது எதைப் போன்றதெனில், திருப்பாற்கடலின் அமுதத்தை உண்டவரே அதன் சுவையும் பயனும் காணமுடியும்; பிறரால் இயலாது.)

நங்கையினான்நா மனைத்தும் செய்தாற் போல் நாடனைத்தும்
நங்கையினால் செய்தளிக்கும் நாயகனும் - நங்கையினும்
நம்பியாய்த் தாள்நடுவே நாட்டப் பெறும்இதுகாண்
எம்பெருமா னார்தம் இயல்பு. 78

நம்முடைய கைகளினால் எந்தச் செயலையும் நாம் செய்வதுபோல், சிவன், தன் சத்தியினால் எல்லாத் தொழில்களையும் செய்கிறான். தானும் அந்தச் சத்தியின் நடுவே உள்ளான். இதுவே எம்பெருமானின் இயல்பு.

பொன்னிறம் கட்டியினும் பூணினும் நின்றாற்போல்
அந்நிற அண்ணலும் அம்பிகையும் - செந்நிறத்தள்
எந்நிறத்த ளாய்இருப்பள் எங்கள் சிவபதியும்
அந்நிறத்த னாஇருப்பன் ஆங்கு. 79

தங்கத்தின் நிறம் கட்டியாக இருக்கும் போதும் அதில் செய்த நகையாக இருக்கும் போதும் மாறாமல் இருக்கிறது. அதுபோல் சிவன் நிறத்தில் சத்தியும் சத்தி எடுக்கும் நிறத்தில் சிவமும் என ஒன்றித்து நிற்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரத்தோடு ஒன்றாதவர் தாரத்துஓர் கூறாவர்
தாரத்தோடு எங்கும் தலைநிற்பர் - தாரத்தின்
நாதாந்தத் தேஇருப்பர் நல்தானத் தேஇருப்பர்
வேதாந்தத் தேஇருப்பர் வேறு. 80

சிவனும் சத்தியும் ஒன்றுபட்டிருக்கும் இடமும் வகைகளும் இப்பாடலில் தொகுக்கப்படுகின்றன.)

1. தாரத்தோடு ஒன்றாவர் = (தாரம் = மனைவி) உயிர்கள் உய்வதற்காகப் படைத்த போது நாயக நாயகியாக ஒன்றுபட்டிருப்பர்.
2. தாரத்து ஓர் கூறாவர் = உயிர்கள் ஆண் பெண்ணாகி வாழ்வதற்கு முன் தாமே (அர்த்த நரியாக) மங்கை பங்கனாக இருப்பர்.
3. தாரத்தோடு எங்கும் தலை நிற்பர் = உயிர்களுக்கு மலசம்பந்தம் தீர்வதற்காக தொண்ணூற்று ஆறு தத்துவங்களைத் தன் சத்தியினால் உருவாக்கி அவற்றைத் தொழில் படுத்த அவற்றுக்கு மேம்பட்டு நிற்பர். சத்தி, தத்துவங்கள் சார்பாக இருப்பாள்.
4. தாரத்தில், நாதாந்தத்தே இருப்பர் = வினைகளால் களைத்த உயிர்களுக்கு இளைப்பாற்றல் செய்வதற்காக விந்து என்ற சத்தியாகவும், நாதம் என்ற சிவமாகவும் நிற்பர்.
5. நற்றானத்தே இருப்பர் = வேள்வி, பூசைகளிலும், தியானம் பாயும் இடங்களிலும், (ஆறாதாரங்கள்), மீதானந்தம் என எங்கும் சத்தியோடு இருப்பர்.
6. வேதாந்தத்தே இருப்பர் = வீடுபேறு அருளுவதற்காக வேதத்தைப் பற்றி அதன் நாத முடிவிலே இருப்பர்.

ஒன்றுரைத்தது ஒன்றுஉரையாச் சாத்திரங்கள் ஒன்றாக
நின்றுரைத்து நிச்சயிக்க மாட்டாவால் - இன்றுரைக்க
என்னால்இயன்றிடுமோ என்போல் வார்ஏதேனும்
சொன்னால்தான் ஏறுமோ சொல். 81

சாத்திரங்களைக் கொண்டு இறைவனின் உண்மை இயல்பைக் கற்க முடியாது. ஏன் என்றால் ஒரு நூல் கூறுவதை மற்றொரு நூல் சொல்லாது. எல்லா நூல்களும் ஒன்றாக நின்று ஒன்றை உறுதி செய்வதில்லை. ஆகையால் என்னாலும் இன்று, அதன் இயல்பை எடுத்து முழுதுமாகக் கூற முடியாது. என்போல்வார் ஏதாவது சொன்னாலும் எல்லார் மனத்திலும் அது ஏறுமோ?

(நூலறிவால் பெறமுடியாவிட்டாலும் சிவ யோகம் செய்து பழகினால் தானே குருவாக வந்து உணர்த்துவான் என்பதாம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாதேனும் காரணத்தால் எவ்வுலகில் எத்திறமும்
மாதேயும் பாகன் இலச்சினையே - ஆதலினால்
பேதமே செய்வாய் அபேதமே செய்திடுவாய்
பேதாபே தம்செய்வாய் பின். 82

இவ்வுலக இயக்கம், அதிலுள்ள உயிர்களின் இயக்கம், அவற்றைச் சூழ்ந்துள்ள பொருள்களின் இயக்கம் என எதை எடுத்து ஆராய்ந்தாலும் அதற்குள் சிவமும் சத்தியும் இணைந்தே இருப்பர்.

எனவே, சிவனை பேதமாக்கி தியானம் செய்வாய். அன்றியும் சிவனை ஆபேதமாக்கிக் (சிவனுடன் ஒன்றி) கலந்திடுவாய். அன்றியும் பேதாபேதமாக்கியும் (இரண்டுமாய்) சிந்திப்பாய்.
(இலச்சினை = அடையாளம், மாதேயும் பாகன் = மாதொருபாகன்)

கடவுளும் ஆன்மாவும் வேறுவேறு என்பது பேதவாதம். இரண்டும் ஒன்றே என்பது அபேதவாதம். வேறாகவும் ஒன்றாகவும் உடனாகவும் என்பது பேதாபேத வாதம். (இவை முறையே துவைதம், அத்வைதம், விசிட்டாத்வைதம் எனப்படும்.)

நின்றபடி நின்றவர்கட்கு அன்றி நிறம்தெரியா
மன்றினுள்நின்று ஆடல் மகிழ்ந்தானும் - சென்றுஉடனே
எண்ணுறும்ஐம் பூதமுதல் எட்டுருவாய் நின்றானும்
பெண்ணுறநின் றாடும் பிரான். 83

திருச்சிற்றம்பலத்தின் உள்நின்று ஆடல் மகிழும் சிவனும் எண்ணப்படக்கூடிய ஐம்பூதங்களாக உள்ளவனும் புரியட்டகமாக விளங்கும் அட்டமூர்த்தியும் பெண்ணைப் பாதியுடலில் கொண்ட பெருமானும் என பலவாக இருப்பவன் ஒருவனே! ஒருவனே பலவானதால், அவன் இயல்பு உயிர்களுக்குத் தெரியாது.

அவனுடனே நின்று அவனாகவே இருக்கும் அருள்ஞானிகளுக்கு மட்டும் அவன் இயல்பு தெரியுமே தவிரப் பிறருக்கு அவன் (நிறம்) இயல்பு தெரியாது.

புரியட்டகம் = நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், நிலவு, ஆன்மா என்ற எட்டுமாக இறைவன் இருப்பதைப் புரியட்டகம் என்றும் அட்டமூர்த்தி என்றும் கூறுவர்.)

உணர்விறந்து உணர்தல்

சிவமே சிவமாக யான் நினைந்தாற் போலச்
சிவமாகி யேஇருப்ப தன்றிச் - சிவமென்(று)
உணர்வாரும் அங்கே உணர்வழியச் சென்று
புணர்வாரும் உண்டோ புவி. 84



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவம் ஒன்றே செம்மை தரும் வழி என்று நான் நினைந்து சிவமாகவே ஆகிவிட்டேன். அப்படியில்லாமல் சிவத்தை உணரும் பலரும் கூட உணர்வுகள் அழிந்து சிவத்தோடு இணைந்து சிவமாகும் நிலையை அடையாது விட்டுவிடுகின்றனர். (நீயாவது என்போல் ஆகுக என்பது குறிப்பு)

பரம சித்தாந்தம்

**அதுஇது என்றும் அவன்நானே என்றும்**
**அதுநீயே ஆகின்றாய் என்றும் - அதுவானேன்**
**என்றும் தமைஉணர்ந்தார் எல்லாம் இரண்டாக**
**ஒன்றாகச் சொல்லுவரோ உற்று.** 85

(வேதத்தில் உள்ள மகாவாக்கியங்களை வைத்து உண்மையை விளக்கும் பாடல்.)

அது இது என்றும்; 'பிரக்ஞானம் பிரம்மம்' என்னும் முதல் வாக்கியப்படி நம் அறிவே பிரம்மம் என்றாகிறது.

அது நீயே ஆகின்றாய்; 'தத்துவமசி' என்னும் இரண்டாம் மகாவாக்கியம். இதன்படி நீ அதுவாகிய பிரம்மம் ஆகிறாய் என்றாகிறது.

அவன் நானே என்றும்; இது மூன்றாம் மகாவாக்கியமாகிய 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்பதாம். நான் பிரம்மம் ஆகிறேன் என்பது இதன் பொருள்.

அது, ஆனேன் என்றும்; இது நான்காம் மகாவாக்கியமாகிய 'அயம் ஆத்மா ப்ரஹ்மம்' என்பதாம். என் ஆன்மா பிரம்மமே என்பது இதன் பொருளாம்.

இந்த நான்கு வாக்கியங்களிலும் இரண்டு இரண்டாகவே பிரித்துச் சொன்ன பிறகு இந்த இரண்டும் ஒன்றுதான் என்று சொல்ல முடியுமா? முடியாது.
(ஆகவே அத்துவித வாதம் மறுக்கப்படுகிறது எனக் கொள்ளலாம்.)

**ஈறாகி அங்கே முதல்ஒன்றாய் ஈங்கிரண்டாய்**
**மாறாத எண்வகையாய் மற்றுஇவற்றின் - வேறாய்**
**உடனாய் இருக்கும் உருவுடைமை என்றும்**
**கடனாய் இருக்கின்றான் காண்.** 86

படைப்பு முழுதும் அழியும்போது சிவசத்தி உட்பட எல்லாவற்றையும் தனக்குள் அடக்கிக் கொண்டு ஒருவனாய் இருக்கிறான். படைப்பை உண்டாக்கும் போது சிவமும் சத்தியுமாய்ப் பிரிந்து இரண்டாக உள்ளான். உலக இயக்கத்திற்கு உறுதுணையாக எட்டு வகைப் பொருள்களாகவும் உள்ளான். (அட்டமூர்த்தி அல்லது புரியட்டகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை யாவற்றையும் கண்காணிப்பவனாய் வேறாகவும் உள்ளான். உயிர்களுக்கு வேறாகவும் இருக்கிறான்; உயிர்களுக்கு உள்ளேயும் உள்ளான். உயிர்களுக்கு உய்திதர உடனாகவும் உள்ளான். இதுவே அவன் முறைமையாகும்.

உன்உதரத் தேகிடந்த கீடம் உறுவதெல்லாம்
உன்னுடையது என்னாய்நீ உற்றனையோ - மன்னுயிர்கள்
அவ்வகையே காண்இங்கு அதிவதுவும் ஆவதுவும்
செவ்வகையே நின்றசிவன் பால். 87

மாணவனே! உன் வயிற்றில் உள்ள புழுக்களின் இன்ப துன்பங்களை நீ அடைவது இல்லை. உன் வினைகளே அவற்றுக்கும் உள்ளன என்று சொல்லமுடியாது. உன்னிடமிருந்தும் உன்னைவிட்டும் அவை வேறுபட்டன.

அதுபோல, உலக உயிர்கள் யாவும் சிவனின் கீழ் இருந்தாலும் அவற்றின் செய்கைகளும் அவற்றின் அழிவும் ஆக்கமும் எதுவும் சிவனைப் பாதிப்பது இல்லை.

அவனே அவனி முதல்ஆயி னானும்
அவனே அறிவாய்நின் றானும் - அவனேகாண்
ஆணாகிப் பெண்ணாய் அலியாகி நின்றானும்
காணாமை நின்றானும் கண்டு. 88

அவனே மண்முதல் நாதம் முடிய உள்ள தத்துவங்களானான். அவனே உயிர்களின் அறிவானான். அவனே ஆண் பெண் அலி எனப் பிரிந்து நிற்பான். பிறரால் காண முடியாதவனாகவும் ஆனால் தான் எல்லாவற்றையும் காண்பவனாகவும் இருப்பவனும் அவனே.

இன்றுதான் நீஎன்னைக் கண்டிருந்தும் கண்டாயோ
அன்றித்தான் நானுன்னைக் கண்டேனோ - என்றால்
அருமாயை ஈன்றவள்தன் பங்கனையார் காண்பார்
பெருமாயைச் சூழல் பிழைத்து. 89

நீ என்னை இன்று கண்டிருந்தாலும் என் ஆன்ம சொரூபத்தைக் காணவில்லை. அதுபோல் நான் உன்னைக் கண்டிருந்தாலும் உன் ஆன்மாவின் சொரூபத்தை (வடிவத்தைக்) காணவில்லை.

எங்கும் நிறைந்திருக்கும் மாயையை ஈன்ற பராசத்தியின் ஒரு பங்காய் இருக்கும் சிவனை மட்டும் யார் காணமுடியும்? இந்தப் பெருமாயையை விட்டு நீங்கி அவனை அறியவே முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சில பொருள்களை யாரும் காண முடியாது; நம்மைச் சூழ்ந்துள்ள மாயைக்கு பிரகிருதிமாயை என்று பெயராம்.)

கடல்அலைத்தே ஆடுதற்குக் கைவந்து நின்றும்
கடல்அளக்க வாராதாற் போலப் - படியில்
அருத்திசெய்த அன்பரைவந்து ஆண்டதுவும் எல்லாம்
கருத்துக்குச் சேயனாய்க் காண். 90

கடலில் நீராடும்போது நீரும் ஆழமும் அலையும் நமக்குக் கட்டுப்பட்டது போலத் தோன்றிடினும் கடல் முழுவதையும் நம்மால் அளக்க முடியவில்லை.

அதுபோல அவன் மீது அன்பு கொண்ட அடியார்களின் அன்புக்குக் கட்டுண்டு அவன் தானும் அவனின் அருளும் அளவு கடந்ததாக இருக்கும்; அவனும் அளவு கடந்திருப்பான்; அளவுகளுக்கு அப்பாலும் இருப்பான்.

சிவன்எனவே தேறினன்யான் என்றமையால் இன்றும்
சிவன்அவனி வந்தபடி செப்பில் - அவனிதனில்
உப்பெனவே கூர்மை உருச்செய்யக் கண்டமையால்
அப்படியே கண்டாய் அவன். 91

திருவாசகத்தில் மாணிக்கவாசகர் சிவன் நிலத்தின் மீது அடிவைத்து வந்ததாகவும் அவன் சிவனே எனத் தாம் தெளிவடைந்ததாகவும் கூறி உள்ளார். இப்படி, உருவமற்ற இறைவன் உருவம் தாங்கி வராவிட்டால் இறைப் பயனை அனுபவித்திருக்க முடியாது.

கடல் நீரில் உருவமில்லாது இருந்த உவர்ப்புச் சுவை உப்பாக உருவம் கொண்டது போலச் சிவனும் உருவம் கொண்டான் என்று உணர வேண்டும். உப்பாக உருவம் கொள்ளாவிட்டால் நாம் அச்சுவையைப் பயன்கொள்ள முடியாமல் போய்விடும்.

மகாவாக்கியப் பொருள் உண்மை

அவன்இவனாய் நின்றது அவனருளால் அல்ல(து)
எவன்அவனாய் நிற்கின்றது ஏழால் - அவனிதனில்
தோன்றுமரப் புல்லூரி தொல்லுலகில் அம்மரமாய்
ஈன்றிடுமோ சொல்லாய் இது. 92

அவன் இவனாகி நின்றான் என்பது மகாவாக்கியம். இறைவன் அருள் அல்லாமல் வேறு எவன் வந்து இவனாக முடியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்தில் உள்ள புல்லுருவி மரத்தில் தோன்றி வளர்ந்தாலும் மரத்தின் பழம் பூ முதலியவற்றை அது தர முடியாது. அது போல் சிவமாக மாறிய மனிதர்கள் தம் சிவத்தைப் பிறருக்கு வழங்க முடியாது.

பிறப்பின் காரணம்

**முத்தி முதல்கொடிக்கே மோகக் கொடிபடர்ந்(து)**
**அத்தி பழுத்தது அருளென்னும் - கத்தியினால்**
**மோகக் கொடிஅறுக்க முத்திப் பழம்பழுக்கும்**
**ஏகக் கொடிஎழுங்காண் இன்று.** 93

முத்தி எனும் பழம் விளையக் கூடிய கொடி நம் ஆன்மாவே ஆகும். அதனை வளரவிடாமல் மோகம் என்னும் கொடி படர்ந்து தடுக்கிறது. அக்கொடியில், அத்தி போல் அதிக அளவில் ஆசைப் பழங்கள் விளைகின்றன. இறைவனின் திருஅருள் என்னும் கத்தியால் மோகக் கொடியை அறுத்தால் முத்தியாகிய பழம் பழுக்கும். அப்போது ஆன்மாவாகிய (ஏகக்கொடி) தனிக்கொடி தடையற்று எழும்.

ஆன்ம லாபம்

**அகளத்தில் ஆனந்தத்து ஆன்நதி யாயே**
**சகளத்தில் தையலுடன் தோன்றி - நிகளத்தைப்**
**போக்குவதும் செய்தான்தன் பொன்னடிஎன் புன்தலைமேல்**
**ஆக்குவதும் செய்தான் அவன்.** 94

அருவமாக இருக்கும் இறைவன் ஆனந்தத்தில் மேலும் ஆனந்தமாய் இருக்கிறான். உருவம் கொள்ளும்போது பராசத்தியுடன் தோன்றுகிறான்.

என்னுடைய ஆணவ விலங்கையும் போக்கினான். தன் பொன்னடியை என் உயர்வற்ற தலைமேல் வைத்து அருளினான்.

**குற்றம்அறுத்து என்னைஆட் கொண்டுஅருளித் தொண்டனேன்**
**உற்ற தியானத் துடன்உறைவர் - முற்றவரின்**
**மாட்சியுமாய் நிற்பார்யான்மற்றொன்றைக் கண்டிடின்அக்**
**காட்சியுமாய் நிற்பார் கலந்து.** 95

ஆணவ மலக்குற்றங்களை நீக்கி என்னை ஆண்டு கொண்டு அருள் செய்து, தொண்டனாகிய நான் செய்யும் தியானத்தில் என்னுடன் இருப்பார். என் பழைய வினைக் காரணமாகத் தியானத்திலிருந்து நழுவி வேறு ஒன்றைக் காண நேர்ந்தால் அக்காட்சியுமாய் என்னுடன் கலந்திடுவார். தியானம் முழுதுமாக முற்றினால் பேரின்பமாக மாட்சியுடன் இருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்து

**ஆளுடையான் என்தரமும் ஆளுடையா னேஅறியும்**
**தாளுடையான் தொண்டர் தலைக்காவல் - நாளும்**
**திருவியலூர் ஆளும் சிவயோகி இன்றுஎன்**
**வருவிசையை மாற்றினான் வந்து.** 96

பக்குவமான ஆன்மாக்களைத் தம் அருளால் ஆட்கொள்ளும் ஆளுடையவனே (சிவன்) எல்லோரையும் ஆட்கொள்ளக் கூடியவன். எத்தரமும் இல்லாத என்னை ஆட்கொள்வதற்காக நான் அறியும்படிக்குத் திருவடியுடன் வந்தான். தத்தம் முன் வினையால் தொண்டர்களுக்கு வரும் துயர்களைக் களையும் முதன்மைக் காவலனும் ஆவான்.

அவனே தீருவியலூரில் ஆட்சி கொண்ட சிவயோகியாக வந்து எனக்கு வரும் பிறப்பு இறப்பு வேகத்தை நிக்கியருளினான்.

(இந்நூல் ஆசிரியராகிய திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் தம் குருவாகிய திருவியலூர் ஆளுடைய தேவ நாயனார் தமக்குச் செய்த உதவியைப் புகழ்ந்துரைக்கிறார்.)

**தூலத்து அடுத்த பளிங்கின் துளக்கமெனத்**
**தூலத்தே நின்று துளங்காமல் - காலத்தால்**
**தாளைத்தந் தென்பிறவித் தாளை அறவிழித்தார்க்(கு)**
**ஆளன்றி என்மாறு அதற்கு.** 97

நிறமற்ற பளிங்கு, நிறமுள்ள பொருள்களைச் சார்ந்து அந்தந்த நிறங்களைக் காட்டும். பல நிறங்கள் ஒன்று சேர்ந்து வந்தால் கலங்கி நிற்கும். அதுபோல் என் உயிரும் சார்ந்த பொருள்களாய் இருந்து கலங்கும்.

அப்படி நான் கலங்கிவிடாமல், காலத்தில் வந்து தம் திருவடி தந்து என் பிறவித்தாளை அறுத்தார்க்கு, அருட்பார்வை பார்த்தார்க்கு ஆளாவது அன்றி வேறு ஏது செய்வது!

**இக்கணமே முத்தியினை எய்திடினும் யான்நினைந்த**
**அக்கணமே ஆனந்தம் தந்திடினும் - நற்கணத்தார்**
**நாயகற்கும் நாயகிக்கும் நான்அடிமை எப்பொழுதும்**
**ஆயிருத்தல் அன்றியிலேன் யான்.** 98

இப்போதே முத்தியை எனக்கு அருளினாலும் யான் நினைக்கும் அக்கணத்திலேயே சிவானந்தம் தந்தாலும் நல்லவர்களாம் சிவனடியார்களுக்கும் நாயகன் நாயகிஆகிய இருவருக்கும் எப்பொழுதும் நான் அடிமையாயிருப்பதன்றி வேறு எதுவும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை உடையவன்வந்து என்உடனாய் என்னளவில்
என்னையும்தன் ஆளாகக் கொள்ளுதலால் - என்னை
அறியப்பெற் றேன்அறிந்த அன்பருக்கே ஆளாய்ச்
செறியப்பெற் றேன்குழுவிற் சென்று. 99

என்னை அடிமையாகக் கொண்ட இறைவன் என் உடனாய் என் அளவில் வந்து (மானுட வடிவில் எனக்கு ஈடாகி) என்னையும் தன் ஆளாகக் கொள்ளுதலால் என் ஆன்ம இயல்பை நான் அறியப் பெற்றேன். இப்படி அறிந்த அன்பர்களுக்கும் நான் ஆளாகி அவர் குழுவில் இணைந்தேன்.

சிந்தையிலும் என்றன் சிரத்தினிலும் சேரும்வகை
வந்தவனை மண்ணிடை நான் வாராமல் - தந்தவனை
மாதினுடன் எத்திறமும் வாழ்ந்திருக்க என்பதலால்
ஏதுசொலி வாழ்த்துவேன் இன்று. 100

என் சிந்தையிலும் என் தலையிலும் சேரும் வகையாக வந்து திருவடிகள் தந்தவனை, மண்ணில் மீண்டும் நான் பிறவாமல் அருள் தந்தவனை, 'பராசத்தியுடன என்றும் வாழ்ந்திருப்பாயாக' என்று சொல்லி வாழ்த்துவது தவிர வேறு எது சொல்வேன்?

(பிறரும் உய்வதற்காக மாதொரு பாகனாக வருமாறு வாழ்த்தினார். முதல் பாடலிலும் இறுதியான இப் பாடலிலும் அம்மையப்பரைப் புகழ்ந்தார்.)

திருக்களிற்றுப்படியார் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# இருபா இருபஃது

## திருத்துறையூர் அருணந்தி சிவாசாரியார்

மொத்தம் இருபது பாடல்கள் கொண்ட இந்நூலில், வெண்பாக்கள் பத்தும் அகவற்பாக்கள் பத்தும் உள்ளன. இரண்டு வகையான பாடல்கள் என்பதாலேயே 'இருபா' என்னும் பெயர் அமைந்தது. பாடல்கள் ஒன்றுக்கொன்று, அந்தாதித் தொடையாக அமைந்துள்ளன. அது மட்டுமின்றி, கடைசிப் பாடலும் முதற்பாடலும் கூட, அந்தாதியாக மண்டலிப்பதனால், இருபது பாடல்களும் ஒரு மாலையாகக் கூடுகின்றன.

அருள்நந்தியாரின் குருபக்தி, இந்நூலின் கண் தெளிவாக விளங்கும். தன்னுடைய குருவான திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்ட தேவரை அழைத்து, விளித்து உரையாடும் முறையிலே இப்பாடல்கள் உள்ளன. மெய்கண்ட தேவரை, உருவம் கொண்டு வந்த சிவபெருமான் எனக் கொண்டே பாடுகிறார் அருள் நந்தியார். ஆணவத்தின் எட்டு இயல்புகளையும் மாயையின் ஏழு இயல்புகளையும் கன்மத்தின் ஆறு இயல்புகளையும இந்நூல் பேசுகிறது.

குரு வணக்கம்

**கண்ணுதலும் கண்டக் கறையும் கரந்தருளி**
**மண்ணிடையின் மாக்கள் மலமகற்றும்- வெள்ணெய் நல்லூர்**
**மெய்கண்டான் என்றொருகால் மேவுவரால் வேறின்மை**
**கைகண்டார் உள்ளத்துக் கண்.** 1

தன்னுடைய நெற்றிக்கண்ணையும் கறைபட்ட கழுத்தையும் மறைத்துக் கொண்டு, மண்ணுலக மக்களின் துன்பம் தீர்ப்பதற்காக, திருவெண்ணெய் நல்லூரில், மெய்கண்டார் என்னும் திருநாமத்தோடு எழுந்தருளியிருக்கக்கூடிய அந்தப் பெருமகனை, ஒரு முறை சென்று வணங்கினால், வேற்றுமையின்றி அந்த அருளை உணரலாம். நெஞ்சில் கண் பெற்றாற் போல, அகமும் புறமும் சேர, குருவருளைப் பெறலாம்.

ஆன்மாவின் பக்குவம்

**கண்ணகன் ஞாலத்துக் கதிரவன் தானென**
**வெண்ணெய்த் தோன்றிய மெய்கண்ட தேவ**
**காரார் கிரகக் கலிஆழ் வேனைநின்**
**பேரா இன்பத்து இருத்திய பெரும**
**வினவல் ஆனாது உடையேன் எனதுளம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கா நிலைமை ஊங்கும் உளையால்
அறிவின் மைமலம் பிறிவுஇன் மைஎனின்
ஓராலினை உணர்த்தும் விராய்நின் றனையேல்
திப்பியம் அந்தோ பொய்ப்பகை ஆகாய்
சுத்தன் அமலன் சோதி நாயகன்

முத்தன் பரம்பரன் எனும்பெயர் முடிய
வேறுநின்று உணர்த்தின் வியாபகம் இன்றாய்ப்
பேறும்இன் றாகும் எமக்கெம் பெரும
இருநிலம் தீநீர் இயமானன் கால்எனும்
பெருநிலைத் தாண்டவம் பெருமாற் கில்ஆதலின்

வேறோ உடனோ விளம்பல் வேண்டும்
சீறி அருஎல் சிறுமை உடைத்தால்
அறியாது கூறினை அபக்குவ பக்குவக்
குறிபார்த்து அருளினம் குருமுத லாய்எனின்
அபக்குவம் அருளினும் அறியேன் மிகத்தகும்

பக்குவம் வேண்டில் பயனிலை நின்னால்
பக்குவம் அதனால் பயன்நீ வரினே
நின்னைப் பருவம் நிகழ்த்தாது அன்னோ
தன்னொப் பாரிலி என்பதும் தகுமே
மும்மலம் சடஅணு மூப்புஇள மையின்நீ

நின்மலன் பருவம் நிகழ்த்தியது யார்க்கோ
உணர்வெழு நீக்கத்தை ஓதியது எனினே
இணையிலி ஆயினை என்பதை அறியேன்
யானே நீக்கினும் தானே நீங்கினும்
கோனே வேண்டா கூறல் வேண்டும்

காண்பார் யார்கொல் காட்டாக் கால்எனும்
மாண்புரை உணர்த்திலை மன்ற பாண்டியன்
கேட்பக் கிளக்கும் மெய்ஞ்ஞா னத்தின்
ஆட்பால் அவர்க்குஅருள் என்பதை அறியே. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்து இருட்டைப் போக்கும் கதிரவன் என்று திருவெண்ணெய் நல்லூரில் தோன்றிய மெய்கண்டரே! இருட்டுக் கிரகம் போன்ற அஞ்ஞானத் துயருக்குள் ஆழ்ந்து கிடந்த என்னை,மாறாத இன்பத்துக்குள் இருக்கச் செய்த பெருமகனாரே! எனக்கொரு வினாவுண்டு. என்னிடம் எப்போதும் நீங்காமல் இருக்கும் அறியாமை காரணமாக முன்னர் தங்களை உணராதிருந்திருப்பேன். இப்போது என் அறியாமை போகும்படி நின்றீர் என்பது எத்தனை பெரும் வியப்பு! இருளோடு கூடி நிற்பதனால் (இருட்டுத் தன்மை கொண்ட என்னுடன்) தூய்மையானவன், களங்கமற்றவன், சுடர்த்தலைவன், முத்திக்குக் காரணன், பரம்பொருள் என்னும் பெயர்கள் உமக்கு ஏற்படாது. வேறு வகையாக அறிவிக்கப் பெற்றால், எங்கும் நிறைந்த வியாபகத் தன்மை உமக்கு இல்லை. எனக்கு நல்பேறும் இல்லை. எங்கள் பெருமகனே! நிலம் நெருப்பு நீர் இயமானன் காற்று என்னும் பூதங்களின் பெரும் தலைவனாகும் நிலைமை உமக்கில்லை. வேற்றுமையோ உடன்பாடோ தங்கள் நிலைமை எது எனக் கூறல் வேண்டும். (தவறாகக் கேட்டமைக்குச்) சீறாமல் விடை தரவேண்டும். (கோபப் படுதல் சிறுமை கொண்டது) 'அறியாமல் கூறிவிட்டாய் பக்குவம் இல்லாதவனே!' என்று அழைத்து, பக்குவத்தைக் கண்டு, அதற்கேற்ப குருவாக வந்து அருளினேன் என்று கூறுவீர்களோ!

அபக்குவம் அழிக்க அருளினாலும், அடியேன் வேண்டுகின்ற பக்குவத்தைத் தங்களிடமிருந்து பெற இயலாது. எழுந்தருளியதால் பக்குவம் பெறலாம் என்பீராயின், தங்களைப் பக்குவம் அறிவிக்காது; அறிவிக்குமென்றால், பக்குவம் முதலாகும். தாங்களும் நிகரில்லாதவர் ஆவீர். பக்குவம் யார்க்கு? மூன்று மலங்களுக்காக என்றால், மலங்கள் சடமானவை (அறிவற்றவை); அவற்றுக்குப் பக்குவம் வேண்டாம். ஆன்மாவுக்கு என்றால், ஆன்மாவுக்கு இளமையும் முதுமையும் கிடையாது என்பதால் பக்குவம் வேண்டாம். தங்களுக்கே என்றால், தாங்களே தூய்மையானவர்; எனவே, தங்களுக்கும் வேண்டாம். பின் யாருக்காக? இருவினை ஒப்பும் சத்திநிபாதமும் கொண்ட நிலையினைக் காட்டியது என்பதனால் தங்களுக்கும் நிகர் யாருமில்லை. இருளானது, தானே நீங்கினாலும் என்னால் நீக்கப்பட்டாலும் தாங்களே நீக்கிடினும், மூவகையாலன்றி அறிவினால் நீங்குதல் தகும்.

சிவன்" ஒளியாக வந்து வெளிப்படல், ஆன்மாவுக்கு அறிவென்னும் பக்குவம் ஏற்படல், அறிவு இருளை நீக்குதல் ஆகியவை குறித்துச் சொல்லும் பாடல் இது!

ஆன்மாவின் உண்மை

அறிஅறி யாமை இரண்டும் அடியேன்
செறிதலான் மெய்கண்ட தேவே - அறிவோ
அறியேனோ யாதென்று கூறுகேன் ஆய்ந்து
குறிமாறு கொள்ளாமல் கூறு. 3

அறிவுடன் சேரும்போது அறிவாகவும் அறியாமையுடன் கூடும்போது அறியாமையாகவும் யான் (ஆன்மா) இருக்கிறேன். மெய்கண்டதேவரே! யான் அறிவா? அறிவற்றதா? எனது உண்மையை என்னவென்று மாறுபடாமல் அருளுவீராக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும்மலக் குணங்கள்

கூறிய மூன்று மலத்தின் குணக்குறி
வேறு கிளக்கின் விகற்பம் கற்பம்
குரோதம் மோகம் கொலைஞர் மதநகை
விராய்எண் குணனும்ஆ ணவமென விளம்பினை
அஞ்ஞா னம்பொய் அயர்வே மோகம்

பைசாச சூநியம் மாச்சரி யம்பய
மாவேழ் குணனும் மாயைக்கு அருளினை
இருத்தலும் கிடத்தலும் இருவினை இயற்றலும்
விடுத்தலும் பரநிந்தை மேவல்என்று எடுத்த
அறுவகைக் குணனும் கருமத்து அருளினை

ஆங்கவை தானும் நீங்காது நின்று
தன்வழிச் செலுத்தித் தானே தானாய்
என்வழி என்பதுஒன்று இன்றாம் அன்ன
ஊரும் பேரும் உருவும் கொண்டுள்ள
ஊரும் பேரும் உருவும் கொடுத்த

பெண்ணை சூழ்ந்த வெண்ணெயம் பதியில்
சைவ சிகாமணி மெய்யர் மெய்ய
மும்மலம் சடமென மொழிந்தனை அம்ம
மாறுகோள் கூறல் போலும் தேறும்
சடம்செய லதனைச் சார்ந்திடும் எனினே

கடம்படம் அதனுள் கண்டில விடப்படும்
ஊன்திரள் போன்ற தாயில் தோன்றி
அணைந்தாங்கு அகறல் வேண்டும் குணங்களும்
பன்மைஇன் றாகும் எம்மைவந்து அணையத்
தானோ மாட்டாது யானோ செய்கிலன்

நீயோ செய்யாய் நின்மல னாயிட்டு
இயல்பெனில் போகாது என்றும் மயல்கெடப்
பந்தம் வந்த வாறுஇங்கு
அந்தம் ஆதி இல்லாய் அருளே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும்மலங்களின் குணம் வேற்றுமையாகச் சொல்லுமிடத்து, பிடித்தது விடாது இருத்தல், கோபம் கொள்ளுதல், மோகம் மிகுத்தல், கொலைத் தொழில் நினைவு கொள்ளுதல், அறியாமை மிகுந்து அடைதல், யான் எனும் செருக்கடைதல், மாச்சரியம் விடாதிருத்தல், வருத்தம் கொள்ளுதல் ஆகிய எட்டும் ஆணவ மலத்தின் குணங்களாகும். அறியாமை, அறிந்தது மறுத்தல், சோம்பல், அழுக்காறு, ஈகையற்றதன்மை, கண்டது மறுத்தல், அதிகமான மாச்சரியம் என்பன ஏழும் மாயையின் குணங்களாம். சோம்பி இருத்தல், ஒளியின்றிக் கிடத்தல், இருவினையும் செய்தல் (புண்ணியம் செய்தல், பாவம் செய்தல்), தொழில் செய்யாமல் இருத்தல், பரநிந்தனை செய்தல் என ஆறு குணங்களும் கன்மத்தின் குணங்களாம். இவை யாவும் நீங்காதிருந்து அவ்வவை அவ்வவ்வழியில் செயல்படுவதற்கு என் வழி எதுவும் இல்லை. உருவமும் ஊரும் பேரும் கொண்ட என்னுடைய இப்பிறவித்தளை நீக்க, தாங்கள் ஊரும்பேரும் உருவும் கொண்டு வந்து, திருவெண்ணெய் நல்லூர் சைவசிகாமணியாக அருள் பாலித்து, மும்மலங்களும் அறிவு அற்றவை என்று அருளினீர். எட்டும் ஏழும் ஆறுமான இவை, செலைச் சார்பவை என்றால் கடமும் படமும் ஆன சடங்களில் காணப்படவில்லை. உடலில் நுழையும் விஷம் போல என்றால், ஒரு கால் வந்து ஒரு கால் நீங்குவதில்லை. தாமாகவே வருகின்றன என்றால் அதுவும் இல்லை. யானே அவற்றை அணையமுடியாது. தாங்களே செய்கிறீர் எனில், தாங்கள் நின்மலன். எனவே அவ்வாறு செய்ய இயலாது. ஆன்மாவிடம் இவை தாமே வருமென்றால், முத்தியிலும் வர வேண்டும். அவ்வாறு வருவதில்லை. எமக்குப் பாசம் எவ்வாறு கூடியதென்று தோற்றமும் முடிவும் இல்லாதவரே சொல்லும்!

இருள் நீக்கம்

**அருள்முன்பு நில்லாது அடியேற்குக் கண்ணின்(று)**
**இருள்கண்ட வாறுஎன்கொல் எந்தாய் - மருள்கொண்ட**
**மாலையா வெண்ணெய்வாழ் மன்னவா என்னுடைய**
**மாயை மாற்ற மதி.** 5

மணம் பொருந்திய மாலையினை உடையவரே! திருவெண்ணெய் நல்லூர் மன்னவனே! அருளின் முன்பு நின்று தேடி அதனைப் பெற முயற்சி செய்யாத எனக்கு, இருள் நீங்கும் வழி கண்டது எவ்வாறு? என் மயக்கம் மாற்றுவீராக!

ஆன்ம அருள்

**மதிநுதல் பாக னாகிக் கதிதா**
**வெண்ணெய்த் தோன்றி நண்ணியுள் புகுந்தென்**
**உளம்வெளி செய்துன் அளவில் காட்சி**
**காட்டியெற் காட்டினை எனினும் நாட்டிஎன்**
**உண்மையுள் பெருமையும் நுவலில் அண்ணல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதாள சத்தி பரியந்த மாக
ஓதி உணர்ந்த நானே ஏக
முழுத்தும்நின் றனனே முதல்வ முழுத்தும்
புலன்கடைப் பூழை நுழைந்தனன் கலங்கி
ஆங்குஐந்து அவத்தையும் அடைந்தனன் நீங்கிப்

போக்கு வரவு புரிந்தனன் தூக்கி
எவ்விடத்து உண்மையும் இவ்விடத்து ஆதலும்
செல்லிடத்து எய்தலும் தெரிந்த மூன்றினும்
ஒன்றெனக்கு அருளல் வேண்டும் என்றும்
இல்லது இலதாய் உள்ளது உளதென்றும்

சொல்லே சொல்லாய்ச் சொல்லுங் காலைச்
சிறுத்தலும் பெருத்தலும் இலவே நிறுத்தி
யானை எறும்பிம் ஆனது போலெனின்
ஞானம் அன்றவை காய வாழ்க்கை
மற்றவை அடைந்தன உளஎனின் அற்றன்று

விட்ட குறையின் அறிந்தது ஒன்று
தொட்டுவந் தனஎன வேண்டும் நட்ட
பெரியதில் பெருமையும் சிறியதில் சிறுமையும்
உரியது நினக்கே உண்மை பெரியோய்
எனக்குஇன் றாகும் என்றும்
மனக்கினி யாய்இனி மற்றது மொழியே. 6

எனக்கு உய்வு தருவதற்காக, பெண்ணை இடப்பாகத்துக் கொண்ட தாங்கள், திருவெண்ணெய் நல்லூரில் அவதரித்து, என் உள்ளம் புகுந்து, என் உள்ளத்தையே பெருவெளியாக்கி, அளவில்லாத தங்களின் அருள் காட்சியைக் காட்டி, இப்போதுள்ள உண்மையும் இதனால் கிடைத்த பெருமையும் புரிவத்து அருளினீர். அறிவுடன் கூடி அறிவாகி நின்று, உணர்ந்து அறிந்தும் கூட, புலன்களில் நுழைந்து திரிவேன்; அவத்தைகளை அடைவேன்; உடல் நீங்கியும் இங்கும் அங்கும் திரிவேன்; இவற்றை ஆராயுங்கால், எங்கும் உள்ள உண்மையை, அது எங்கும் இருப்பதை, பரத்தோடு கூடி இருப்பதை எனக்கருள வேண்டும். இல்லது, உள்ளது யாவும் உணர்த்தி, சிறியது பெரியது என்பவை நீக்கி, யானை எறும்பு என்பதெல்லாம் உடல் அளவுதாம் என்பது தெரிவித்து, விட்டதும் தொட்டதும் அறிந்திட அருளது தேவை. பெரியதில் பெரியதாவதும் சிறியதில் சிறியதாவதும் உமக்கே உண்டு. பெரியோய்! மனத்தின் இனிமையாக உள்ளவரே! இம்முறைமை அருளுக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவின் தன்மை

மொழிந்த அவத்தை முதலடியேன் நின்றாங்(கு)
ஒழிந்தன நான்கும் உணர - இழிந்தறிந்(து)
ஏறிற்றிங் கில்லை எழில்வெண்ணெய் மெய்த்தேவே
தேறிற்றென் கொண்டு தெரித்து. 7

அவத்தைகளில் ஒன்றி, அடியேன் நிற்கும் அளவில், அவற்றின் தன்மைகளை அறிந்து நீக்கினேன். துரியாதீதத்தில் சேர்ந்த பொழுதில், மீதமுள்ள நான்கையும், அவை எனக்கு அளித்த அநுபவங்களையும் ஆராய்ந்தேன். சாக்கிரமான நனவு நிலையில் கருவிகளாம் புலன்களும் பொறிகளும் வந்து ஏறி இறங்கவில்லை. அங்கு தங்கள் ஞானமும் வந்து பொருந்தவில்லை. வெண்ணெய் நல்லூர் தேவரே! ஆனால், எதைக் கருவியாகக் கொண்டு எவ்வாறு நான் அறிந்தேன் என்பதை அருள்கூர்ந்து விளக்கவேண்டும்.

ஆன்ம உணர்வு

தெரித்ததுஎன் கொண்டுஎனை உருத்திர பசுபதி
செடிய னேனையும் அடிமைச் செய்யப்
படிவம் கொண்டு வடிவகாட் டில்லாப்
பெண்ணை ஆளும் வெண்ணெய் மெய்ய
அவத்தையில் தெரித்தனன் ஆயின் அவத்தை

தெரிந்தாங்கு இரித்தலும் இலனே திருத்தும்
காலம் முதலிய கருவி ஆயின்
மாலும் பிரமனும் வந்துஎனை அடையார்
ஓதும்காலை ஒன்றை ஒன்று உணரா
சேதநம் அன்றவை பேதைச் செயலும்இச்

சேதந ஆனால் செயல்கொள வேண்டும்
போதம் அவற்றைப் புணர்வதை அறியேன்
கருவித் திரளினும் காண்பதோர் ஒன்றாம்
ஒருவுதல் அறியேன் உணர்விலன் ஆதலின்
நிற்கொடு கண்டனன் ஆயின் எற்குக்

கருவி ஆயினை பெருமையும் இலவே
யானே பிரமம் கோனே வேண்டா
இன்னும் கேண்மோ மன்ன நின்னின்
முன்னம் என்றன் உணர்விலன் ஆதலின்
என்னைக் காண்பினும் காண்பல காணாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைக் காண்பினும் காண்பல உன்னோடு
ஒருங்கு காண்பினும் காண்பல அருந்துணை
கண்டவாறுஏது எனது கண்ணே
அண்ட வாண அரட்பெருங் கடலே. 8

அஞ்ஞானியாகிய என்னையும் அடிமை கொள்வதற்காக, உருவம் கொண்டு வெண்ணெய் நல்லூருக்கு வந்த உண்மைக் கடவுளே! உருத்திர பசுபதியே! எதைக் கொண்டு தெரிந்து கொண்டேன்? அவத்தை மூலம் அவை போல அறிந்தேன் என்று சொன்னால், எல்லாம் நீங்கிய நிலையில் அவத்தை இருப்பதும் காண்பதும் கிடையாது. காலம் முதலிய கருவி கொண்டு கண்டேன் என்றால், திருமாலும் பிரமனும் எனக்கு ஒவ்வாதவர்கள். அதுவுமில்லாமல், கருவிகள் அறிவு இல்லாதவை. அவற்றுடன் ஆன்மா கூடினால் மட்டுமே அவற்றால் செயல்பட முடியும். ஆகையால், அவை கொண்டு அறிந்திலேன். (கருவிகளுடன் கூடி) அறியச் செய்தாலும், அறிகிறோம் என்பதனை உணர மாட்டேன். கருவிகள் பல இருந்தாலும், அவற்றின் மூலம் வரும் அறிவுதனை ஒன்றாக, ஒட்டுமொத்தமாக அறிய மாட்டேன். ஒவ்வொரு கருவி உணர்த்தும் அறிவினையும், தனித்தனியாகவே அறிவேன்.

கருவிகள் கூடுவதையும் நீங்குவதையும் கூட, அறிவு இல்லாத காரணத்தினால் உணர மாட்டேன். தங்களைக் கொண்டு கண்டேன் என்றால், தாங்கள் கருவியாகி விடுவீர்கள். அப்போது தங்களுக்குப் பெருமையில்லை. தாங்கள் கருவியானால், நானே கடவுளாகிடுவேன். இன்னொரு கடவுளே வேண்டாம். இன்னமும் கேளுங்கள்! தங்களை உதவியாகக் கொண்டு காணும் முறை இல்லையென்பதால், அவ்வாறு காணவில்லை. என்னைக் கொண்டே அறிந்தேன் என்றால், அப்போது அறிகிற நானும் அறிவிக்கும் கருவியும் என்று நானே இரண்டாக வேண்டும். கருவிளைக் கொண்டுத் தங்களைக் கண்டதுமில்லை. தங்களைக் கொண்டு எல்லாவற்றையும் கண்டேன் என்றால், அதுவுமில்லை. அருட்பெருங் கடலே! எவ்வாறு அறிந்தேன் என அருளுவீராக!

(மறைமுகமான விடை இப்பாடலில் உண்டு. ஆன்மா, தன்னை அறிய எது கருவியானது? இது கேள்வி. கண்ணாடியை இடமாகக் கொண்டு கண், கண்ணாடியையும் தன்னையுமே காண்கிறது. அதுபோல, உள்ளொளி கொண்டு, ஆன்மா, தன்னையே உணர்கிறது)

உணர்த்தும் வழி

கடலமுதே வெண்ணெய்க் கரும்பேஎன் கண்ணே
உடல்அகத்து மூலத்து ஒடுங்கச் - சடலக்
கருவியாது ஆங்குஉணர்த்தக் காண்பதுதான் என்னை
மருவியாது என்று உரைக்க மன். 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலின் அமுதம் போன்றவரே! வெண்ணெய் நல்லூர்க் கரும்பே! என் கண் போன்றவரே! கருவிகளின் செயல்பாடுகள் யாவும் என் மூலாதாரத்தில் ஒடுங்கிவிட, அறிவில்லாத கருவிகள் எதைக்கொண்டு உயர்த்த, எதனைக் கண்டேன்? இவற்றைத் தெரிவித்துக் கூறுங்கள். (ஆன்மாவுக்குத் துரியாதீதத்திலும் உணர்த்தும் முறை பற்றிக் கேட்டது)

குருவின் விண்ணப்பம்

மன்னிய கன்மச் சமத்திடை மலங்களை
அந்நிய மாக்கி அருள்வழி அதனால்
என்னுள் புகுந்தனை எனினே முன்னைத்
திரிமலம் தீர்த்த தேசிக நின்னோடு
ஒருவுதல் இன்றி உடந்தையே மருவிடு

மும்மலம் அதனால் எம்முள்நின் றலைஎனின்
அம்மலத் திரிவும் செம்மலர்த் தாள்நிழல்
சேர்தலும் இலவாய்ச் சார்பவை பற்றிப்
பெயர்விலன் ஆகும் பெரும தீர்வுஇன்று

அமைந்த கருமத்து இயைந்ததை அல்லது
சமைந்தன இலவெனச் சாற்றில் அமைந்த
மாயேயம் கன்ம மாமல மூன்றும்
மாயா தாகவே ஆர்ச்சந மாயையின்
உற்பவம் தீரா ஒழுகும்ஒன்று ஒன்று

நின்சம மாயின் அல்லது நிற்பெறல்
இல்லென மொழிந்த தொல்லறம் தனக்கு
மேயா தாகும் நாயேன் உளத்து
நின்றனை என்பனோ நின்றிலை என்பனோ
பொன்றிய பொன்றிற்று இலமலம் என்பனோ

ஒன்றினை உரைத்தருள் மன்ற குன்றாப்
பெண்ணைப் புனல்வயல் வெண்ணெய்க்கு அதிபதி
கைகண் தலைவாய் கால்செவி மூக்குஉயர்
மெய்கொண்டு என்வினை வேர்அறப் பறித்த
மெய்கண்ட தேவ வினையிலி
மைகொண்ட கண்ட வழுவில்என் மதியே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவரே! என் மலம் நீக்கி என்னுள் புகுந்து எனக்கு அருளினீர்கள். மலங்களை நீங்கிய குருநாதரே! தங்களை விட்டு நீங்காமல், ஒன்றுபட்டுத் தங்களுடன் நான் கூடவேண்டும். மும்மலங்களும் எனக்குள் இருக்கின்றன என்ற காரணத்தால் என்னைத் தாங்கள் சேராமல் இருப்பீர்களாயின், அநாதியாக என்னுடன் இருக்கும் இவை காரணமாக, எப்போதும் தாங்கள் என்னைச் சேரமாட்டீர்கள். செந்தாமரைத் திருவடிகளில் யான் கூட வேண்டும். இருவினைகளின் ஒப்பு நிகழ்ந்த காலத்தும், மலம் என்னும் (ஆணவமலம்) குற்றம் ஆன்மாவுடன் பொருந்தியே நிற்கும். மலங்கள் ஆறு அத்துவாக்களிலும் நிறைந்து நிற்கும் ஆதலால், மலங்கள் கெடாமலேதான், புண்ணிய பாவங்களை அநுபவம் காணவேண்டும். தங்களைப் போல, மலங்களும் அநாதியானவை. அப்படியாயின், அடியேனிடத்தில் அநாதியாகப் பொருந்தினீர் என்பதா? இல்லை என்பதா? மலம் கெட்டதென்பதா? இல்லை என்பதா? என்ன சொல்வேன்? எனக்கு எது என்று உரைத்தருள வேண்டும். பெண்ணை ஆற்றுப் புறுத்து வயல் செறிந்த வெண்ணெய் நல்லூரில், கையும் காலும் தலையும் வாயும் கண்ணும் செவியும் மூக்கும் உயர் உருவமும் கொண்டு வந்து, என் வினைகளைத் தீர்க்க அருள் கொண்டவரே! என் அறிவுக்கு எட்டுமாறு அருள வேண்டும்.

பதி-பசு-பாச ஞானம்

**மதிநின்பால் இந்த மலத்தின்பால் நிற்க**
**விதிஎன்கொல் வெண்ணெய்வாழ் மெய்ய - பதிநின்பால்**
**வந்தால் இதில்வரத்தில் வந்துஇரண்டும் பற்றுகிலேன்**
**எந்தாய் இரண்டாமாறு என்.** 11

என் அறிவானது தங்களால் அறிவு பெற்று நிற்காமல், பாசத்தின் பாற்பட்டு அதில் அமிழ்ந்து ஆட்பட்டுக் கிடப்பதற்குக் காரணமென்ன? இவை விட்டு, தங்களின் பதிஞானத்தில் சேரும்போது, என்னறிவு பசுஞானத்தையும் பாசஞானத்தையும் விட்டு நிற்கிறது. எனது அறிவு, இவ்வாறு இரண்டு தன்மைகள் பெறுவானேன்?

திருவடி பொருந்துதல்

**எண்திசை விளங்க இருள்படாம் போக்கி**
**முண்டகம் மலர்த்தி மூதறிவு அருளும்**
**மேதினி உதய மெய்கண்ட தேவ**
**கோதில் அமுத குணப்பெரும் குன்ற**
**என்னின் ஆர்தலும் அகறலும் என்னைகொல்**

**உன்னிற்கு உன்னிஉன் னாவிடில் பெயர்குவை**
**என்னும் அதுவே நின்இயல்பு எனினே**
**வியங்கோ ளாஎனும் ஆகி இயங்கலும்**
**உண்டெனப் படுகை எண்தோள் முக்கண்**
**யாங்கணும் பிரியாது ஓங்குநின் நிலையின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான்வந்து அணைந்து மீள்குவன் ஆயின்
ஆற்றுத்துயர் உற்றோர் அணிநிழல் நசைஇ
வீற்றுவீற்று இழிதர வேண்டலும் வெறுத்தலும்
இன்றிச் சாயைக்கு நன்றுமன் னியல்பே
அனையை யாகுவை நினைவரும் காலை

இந்நிலை அதனின் ஏழையேற்கு இரங்கி
நின்னை வெளிப்படுத்து ஒளிப்பை நீயேல்
அருள்மா றாகும் பெருமஃ தன்றியும்
நின்பெற் றவர்க்கும் உற்பவம் உண்டெனும்
சொற்பெறும் அஃதுஇத் தொல்லுல கில்லை

அவ்வவை அமைவும் சால்பும் மயர்வறச்
சொல்லில் சொல்லெதிர் சொல்லாச்
சொல்லே சொல்லுக சொல்இறந் தோயே. 12

இருட்டை நீக்கி, தாமரையை மலர்வித்துத் தான் வந்ததை அறிவிக்கும் சூரியன் போல, என் அஞ்ஞான இருட்டைப் போக்கி என் மனத்தாமரையை மலர்விக்கும் மெய்கண்டதேவரே! குற்றமில்லாத அமுதமே! குணக் குன்றே! என்னிடம் ஒரு கால் ஒன்றி ஒளிர்கிறீர்! மற்றொரு கால் மங்கி இருக்கிறீர்! இது ஏன்? தங்களை, யான் எண்ணும்போது எனக்குள் செறிவதும், எண்ணாதபோது என்னைவிட்டு நீங்குவதும்தான் தங்களின் இயல்பு. எல்லோரும் தங்களைக் கருணையாளன் என்வர். எப்படி? எட்டுத் தோள்களையும் மூன்று கண்களையும் விட்டு நீங்கி, மனித உடலில் வெளிப்பட்டு வந்த தெய்வமே! எங்கெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் தங்களின் நிறைவில் நான் வந்து பொருந்துவது என்பது, வெயில் வழிச்செல்பவர் நிழலில் வந்து பொருந்துவது போலாகும். நிழலை விட்டுப் போகின்ற வரை, நிழல் கூடச் சென்று கூப்பிடாது. தன்னிடமிருந்து நீங்கியவர், மீண்டும் வந்தால், மீண்டும் ஒதுக்காது. நிழல் என்று தங்களைச் சொன்னால், தாங்கள் அறிவற்றவர் என்றாகும். நிழல் சிலபோது இருக்கும்; சிலபோது மறையும். இப்படித் தங்களைச் சொன்னால், தாங்களும் தோன்றி மறையக் கூடியவர் என்றாகும். நிழலை அடைந்தாலும் பயணத்தைத் தொடரவேண்டும். அப்படியானால், தங்களின் திருவடி அடைந்தவர்கள், மீண்டும் பிறப்பார் என்னும் கருத்து உண்டாகும்.

இவ்வுலகில், தங்களின் திருவடியைச் சேர்ந்தவர்களுக்குப் பிறப்பில்லை. சொல்லுக்கு எட்டாதவரே! எனவே, மலங்களின் தன்மையும் தங்களை விட்டு நீங்காத முறைமையும், என்னுடைய மயக்கம் போக, எதிர்ச்சொல் இல்லாதபடிச் சொல்லுவீராக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை வினா

இறந்தோய் கரணங்கள் எல்லாம் எனக்குச்
சிறந்தோய் எனினும்மெய்த் தேவே - பிறந்துடனாம்
காயம் கொளவும் கொளாமலும் கண்டதுநீ
ஆயன்கொல் பாதவத்து அற்று. 13

கருவி கரணம் ஆகிய யாவற்றையும் நீக்கி நிற்கும் தாங்கள், அவை விட்டு நீங்கினாலும் என்னை விட்டு நீங்காத சிறப்புடையீர்! இருப்பினும், என்னை உடல் எடுக்க வைத்து, அவ்வுடல் நிற்க, அவ்வுடலில் தாங்கள் சேராமல் நிற்பது எப்படி? இது எவ்வாறென்றால், இடையன் மரத்தை வெட்டியது போன்றதாகும்.

இருவினை நுகர்ச்சி

அற்றதுஎன் பாசம் உற்றதுஉன் கழலே
அருட்டுறை உறையும் பொருட்சுவை நாத
வேறுஎன் றிருந்த என்னை யான்பெற
வேறுஇன்மை கண்ட மெய்கண்ட தேவ
இருவினை என்பது என்னைகொல் அருளிய

மனமே காயம் வாக்குஎனும் மூன்றின்
இதமே அகிதம் எனும்இவை யாயில்
கணத்திடை அழியும் தினைத்துணை ஆகா
காரணஞ் சடமதன் காரியம் அஃதால்
ஆரணங் காம்வழி அடியேற்கு என்னைகொல்

செயல்என தாயினும் செயலே வாராது
இயமன் செய்தி இதற்கெனின் அமைவும்
பின்னைஇன் றாகும் அன்னதும் இங்குச்
செய்திக் குள்ள செயல்அவை அருத்தின்
மையல்தீர் இயமற்கு வழக்கில்லை மன்

ஒருவரே அமையும் ஒருவா ஒருவற்கு
இருவரும் வேண்டா இறைவனு(ம்) நின்றனை
நின்னது கருணை சொல்அளவு இன்றே
அமைத்தது துய்ப்பின் எமக்கணை இன்றாம்
உள்ளது போகாது இல்லது வாராது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளதே உள்ளது எனும்உரை அதனால்
கொள்ளும் வகையால் கொளுத்திடும் ஆயின்
வள்ளன் மைஎலாம் முன்னிட அமையும்
ஈய வேண்டும் எனும்விதி இன்றாம்
ஆயினும் என்னை அருந்துயர்ப் படுத்த

நாயி னேற்கு நன்றுமன் மாயக்
கருமமும் கரும பந்தமும்
தெருள அருளும் சிவபெரு மானே. 14

தங்கள் திருவடிகளில் சேர, அதனால் என் பாசம் அறுந்தது. வெண்ணெய் நல்லூர் அருட்துறையுள் இருக்கும் இன்பப்பொருளான மெய்கண்ட நாதரே! அடிமை ஆதாரம் என்று வேறுபட்டு நின்ற என்னைத் தங்களுடன் இணைத்து ஒன்றாக்கிக் கொண்ட மெய்கண்டரே! இரவினைகள் (பாவம், புண்ணியம்) எனப்படுபவை யாவை? மனம் வாக்குக் காயங்களால் செய்யும் நன்மை தீமை ஆகியவை என்றால் எப்படி? மனமானது, இமைப்பொழுதில் பலவற்றையும் எண்ணிப் பறந்து மீண்டும் எண்ணுவதாகும். அது பலவும் எண்ணும். அதைக் கொண்டு பாவம் புண்ணியம் பார்த்தால் பொருந்தாது. மேலும் மனோ வாக்குக் காயங்கள் அறிவற்றவை. எனவே, அறிவின்றி அவை செய்வது கொண்டு பாவம் புண்ணியம் கூறமுடியாது. ஆன்மாவாகிய எனது செயல் இவை என்றால், என் செயலும் தங்களின் செயலின்றி நடப்பதில்லை. சுகமும் துக்கமும் யமனின் செயல் என்றால் அது ஓரளவு சரி. ஆனால், யமன் செயல் என்றால், செய்த கருமத்துக்குத் தக்கபடி, பயன்களை அநுபவிக்கச் செய்யும் தலைமைத் தன்மை யமனுக்கு இல்லை. உலகத்து அரசனும் எனக்குப் பரிசும் தண்டனையும் தருவான் என்கிறீர்கள். இருவர் இதற்கு எதற்கு? இவர்கள் இல்லாமல், தாங்களும் உள்ளீர். தங்களின் கருணை அளப்பரியது. யான் தங்களின் அடிமை. அப்படிப்பட்ட அடிமையான யான், எனக்கானதை, நான் அநுபவிக்கிறேன் என்பீர்களா? கன்மவினைகள் தாமே வந்து என்னைச் சேருவதில்லை. உள்ளது; அது போகாது என்றாலும், அதைத் தாங்களும் நீக்கமுடியாது என்றாலும் குறைக்கவோ அதிகப்படுத்தவோ முடியாது என்றாலும் அவை யாவும் சரியல்ல. அவற்றைக் கூட்டும் வகையறிந்து தாங்களே கூட்டுகிறீர். எனவே தங்களின் பெருமை அளவிடற்கரியது. தாங்கள், கருமவினைகளைக் கூட்ட வேண்டியதில்லை. இருப்பினும், என்னைத் துயர்ப்படுத்தக் கூட்டுகின்றீர்கள் என்றால், கருமமும் கருமவினையும் முன்பின் மயங்காமல் எனக்கருளிச் செய்ய வேண்டும்.

வினை தொடர்ச்சி

மானமரும் செய்கை மதில்வெண்ணெய் வாழ்மன்ன
போனவினை தானே பொருந்துமோ - ஆனதனில்
ஆவனோ ஆக்காய் அமலனாம் நின்னருள்தான்
தேவனே யாதுக்கோ தேர். 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானை ஏந்தும் சிவந்த கரங்கள் கொண்டவரே! வெண்ணெய் நல்லூரில் வாழும் மன்னவரே! அநுபவித்துத் தொலைத்த வினை மீண்டும் வந்ததோ? யானே சென்று அதனைச் சேர்ந்தேனோ? குறையற்றவரே! தங்கள் அருள்தான் யாது?

கன்மத் தன்மை

தேராது உரைப்பன் தெருமால் உளத்தொடு
பேராது அருளுதல் பெரியோர் கடனே
நின்னைக் கலப்பது என்உண் மையே
நின்னது நேர்மை சொல்மனத்து இன்றே
எழுவகைத் தாதுவின் ஏழ்துணை இரண்டும்

பெருமுழைக் குரம்பையில் பெய்துஅகத்து அடக்கி
நீக்கி என்றனைப் போக்கற நிறுத்தி
இச்சை முதலிய எழுப்பி நடத்திடும்
விச்சை சாலவும் வியப்பது நிற்க
வாக்கும் மனமும் போக்குள தனுவும்

சொல்லும் நினைவும் செய்யும் செயலும்
நல்லவும் தீயவும் எல்லாம் அறிந்து
முறைபிற ழாமல் குறைவுநிறைவு இன்றாய்க்
காலமும் தேசமும் மாலற வகுத்து
நடுவுநின்று அருத்தலின் நடுவன்ஆ குதியே

சான்றோர் செய்தி மான்றுஇருப் பின்றே
சாலார் செயலே மால்ஆ குவதே
அத்துவா மெத்தி அடங்கா வினைகளும்
சுத்திசெய் தனையே ஒத்தகன் மத்திடை
நீங்கின என்னை ஊங்குஊழ் வினைகளும்

ஆங்குஅவை அருத்துவது ஆரைகொல் அதனால்
கருமமும் அருத்தும் கடனது இன்றாம்
தருமம் புரத்தல் பெருமையது அன்றே
கண்ணினுள் மணிய கருத்தினுள் கருத்த
வெண்ணெய் வேந்த மெய்கண்ட தேவ

இடர்ப்படு குரம்பையுள் இருத்தித்
துடைப்பதில் அருள் தோன்றிடச் சொல்லே. 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியோய்! புரியாமல் விண்ணப்பம் செய்கிறேன். நீங்காது அருள வேண்டுவது உனது கடனல்லவா! வாக்குக்கும் மனதுக்கும் எட்டாத உண்மையை உரைத்தருள வேண்டும். எல்லா வகைத் தாதுக்களையும் வைத்து, ஏழு சிறு வாயில்களும் இரண்டு பெருவாயில்களும் கொண்ட இவ்வுடம்பைச் செய்து, அதனுள் என்னை அடக்கி, உடன் வந்து ஒட்டிய என் அறியாமையைப் போக்கி, எனது இச்சா கிரியா ஞான சக்திகளையும் எழுப்பி, அவற்றை முறைப்படி நடத்துவிப்பது விந்தையிலும் விந்தையாகும். அவரவர், மனம் வாக்கு ஆகியவற்றின் வழியாகவும் சிறைபோன்றிருக்கும் உடலின் வழியாகவும் செய்யும் செயல்களின் தன்மையும் அவற்றின் பயன்களும் அறிந்து, அவை முன்பின் முரணாகாமல், அவற்றுக்கான பயன்களைத் துய்க்கச் செய்கிறீர்கள். அப்பயன்களைக் குறைத்தோ கூட்டியோ தராமல், நடுவாகி நின்று அருள்கிறீர்கள். ஞானிகள், செய்கையில் பொருந்தாமல் செய்யும்படியால், அவர்களுக்கு வினைப்பயன் ஏதுமில்லை. இருவினை ஒப்பு வரும் காலத்தில் ஊழ்வினைகளும் நீங்கின. அக்காலத்தில் அவை என்ன செய்ய முடியும்? அவை யாரைப் பற்ற முடியும்? கன்மம் என்பது தானாகப் பெருந்துவதில்லை. தாங்கள் ஈடு என்றால், அது தங்களின் பெருமைக்கு ஆகாது. எனவே. கன்மம் நீக்கி அருளுமாறு எப்படி? கண்ணின் பாவையாகவும் கருத்தின் அறிவாகவும் உள்ள மெய்கண்டதேவரே! துன்ப உடம்புக்குள் நீங்காத தீருவருள் எது?

திருவடிப் பேறு

சொல்தொழும்பு கொள்ளநீ சூழ்ந்ததுவும் நின்செயல்கள்
மற்றவர்கள் நின்நோக்கின் மாய்ந்தவுயிர்க்கு - குற்றம்
ஒளித்தியாங்கு ஐய உயர்வெண்ணெய் நல்லூர்க்
குளித்தமதுக் கொன்றைஎம் கோ. 17

வெண்ணெய் நல்லூர் தெய்வமே! தேன்மிக்க கொன்றை மலர்கள் சூடிய செம்மலே! உமது சொல்வழி யாம் செயலற நிற்பது முறையோ சொல்லீர். பெத்தர்களும் தங்களின் பான்மையில் நிற்கின்றனர். தங்களிடம் எல்லாரும் நின்றும், சிலருக்கு மட்டும் குற்றம் போயது எவ்வாறு?

உடனிருந்து அருளல்

கோலம் கொண்ட வாறுஉண ராதே
ஞாலம் காவலன் யான்எனக் கொளீஇப்
பொய்யை மெய்யெனப் புகன்று வையத்(து)
ஓடாப் பூட்கை நாடி நாடா
என்னுள் கரந்தென் பின்வந்து அருளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னையும் தன்னையும் அறிஇன்றி இயற்றி
என்னது யானெனும் அகந்தையும் கண்டு
யாவயின் யாவையும் யாங்கணும் சென்று
புக்குழிப் புக்குப் பெயர்த்துழிப் பெயர்ந்து
மிக்க போகம் விதியால் விளைத்திட்டு

என்பணி யாளாய் எனைப்பிரி யாதே
ஓடி மீள்கென ஆடல் பார்த்திட்டு
என்வழி நின்றனன் எந்தை அன்னோ
அருள்மிக உடைமையின் அருட்டுறை வந்து
பொருள்மிக அருள்தலும் பொய்ப்பகை யாதலும்

கைகண்டு கொள்ளெனக் கடல்உல கறிய
மெய்கண்ட தேவன் எனப்பெயர் வரீஇத்
தன்னுள் கரந்து தான்முன் னாகித்
தன்னதும் தானுமாய் என்னைஇன் றாக்கித்
தன்மையும் என்னையும் தந்து தனது

செய்யா மையும்என் செயலின் மையும்
எம்மான் காட்டி எய்தல்
அம்மா எனக்கே அதிசயம் தருமே. 18

தாங்கள் உருவம் கொண்ட முறைமையை உணராமல், பிரபஞ்சத்துக்கு நான்தான் தலைவன் என்பது போன்ற மதர்ப்புடன், அசத்தாகிய பிரபஞ்சத்தைச் சத்து என்று கருதிக் கொண்டிருக்கும் எனக்குள்ளே மறைந்து கொண்டு, என்னை முன் வைத்து எனக்குப் பின் வந்து, யான் எனது என்னும் அகந்தையை எனக்கு உண்டாக்கி, எங்கு எப்பிறப்பில் நான் சென்றாலும் அங்கு வந்து. நான் மீளத்தான் மீண்டு, நான் புகுந்த இடம் தானும் புகுந்து, எனக்கு போகமெல்லாம் கொடுத்து, எனக்கு ஏவலாளாக இருந்து, என்னை விட்டு நீங்காமல், என் விளையாட்டெல்லாம் பார்த்து நின்றீர்! ஐயோ! ஐயோ! அருள் துறைக்கு அருளுடன் வந்து எல்லாப் பொருளும் தந்து, உண்மையாம் தெய்வத்தைப் பற்றி விசாரித்துக் காட்டி, தனக்குள்ளே என்னை அடக்கி, தன் செயல் தன்னது என்றாக்கி, என் செயல் என்னது என்பவற்றை நீக்கி, தன் உண்மையும் என் உண்மையும் உணர்வித்து, செயலற்று நிற்கும் தன்மையையும் காட்டினீர்! அம்மா! இது என்ன வியப்பு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவாகிய பெருமை

தருமஅ தருமத் தலைநின்றுஆழ் வேனைக்
கருமா கடல்விடமுண் கண்டப் - பெருமான்
திருவெண்ணெய் நல்லூர்ச் சுவேத வனத்தான்
உருவென்ன வந்துஎடுத்தான் உற்று. 19

புண்ணிய பாவங்களுக்குள் நீங்காது திரியும் என்னை ஈடேறக் கொண்டார் எம் இறைவன். திருமாலும் பிரம்மனும் பிறதேவர்களும் இறந்து போகாமல், பெரிய கடல் நஞ்சைத் தான் உண்டு அவர்களைக் காப்பாற்றிய நீலகண்டனாம் இறைவன், திருவெண்ணெய் நல்லூரில், சுவேதனப் பெருமான் என்னும் திருநாமம் கொண்டு, உருவம் ஏற்று வந்து, என்னை அடிமை செய்து கொண்டார்.

குருவருள்

உற்றவர் பெற்றவர் அற்றவர் முற்றும்
அற்றவர்க்கு அற்றவன் அல்லவர்க்கு அல்லவன்
அந்தம் ஆதி இல்லவன் வந்து
குரக்கு மனத்துக் கொடியேன் பரக்கும்
பரப்பைக் குவித்து நிறுத்திப் பிடித்திட்டு

இருள்வெளி யாகும் மருளினை அறுத்து
வந்து புகுதலும் சென்று நீங்கலும்
இன்றி ஒன்றாய் நின்றஅந் நிலையில்
ஒன்றா காமல் இரண்டா காமல்
ஒன்றும் இரண்டும் இன்றுஆ காமல்

தன்னது பெருமை தாக்கான் ஆயினும்
என்னது பெருமை எல்லாம் எய்தித்
தன்னை எனக்குத் தருவதை அன்றியும்
என்னையும் எனக்கே தந்து தன்னது
பேரா நந்தப் பெருங்கடல் அதனுள்

ஆரா இன்பம் அளித்துத் தீரா
உள்ளும் புறம்பும் ஒழிவின்றி நின்ற
வள்ளன்மை காட்டி மலரடி அருளிய
மன்னன் எம்கோன் வார்புனல் பெண்ணை
வெண்ணெய் காவலன் மெய்கண்ட தேவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணல் அருள் ஆலயத்தன் நண்ணிய
மலமுத லாயின மாய்க்கும்
உலக உயிர்க்கெல் லாம்ஒரு கண்ணே. 20

ஆசானின் அருளிச் செயல் உண்மையில் பொருந்தினவர்கள், அதனைச் சிந்திப்பவர்கள், தன் தனித்துவம் அற்றவர்கள், அவரில் தன்னைக் கொடுத்தவர்கள் ஆகியோருக்கு, உருவத் திருமேனி கொண்டு வந்து இறையனார் அருள்வார். குரங்கெனத் திரியும் மனத்தைக் கட்டிப்பிடித்து நிறுத்தி, இருள், வெளி என்னும் பேதங்களையும் மயக்கங்களையும் நீக்கி, ஒன்றித்து நிற்பார். பொன்னும் அணியும் போல ஒன்றாகிவிடாமல், தன் பெருமையை எனக்குச் சேர்ப்பித்து, தன் உண்மையையும் என் உண்மையையும் எனக்குக் காட்டி, பேரானந்தக் கடலுள் என்னை மூழ்குவித்து, தன் தலைமையைக் காட்டி, திருவடியைத் தந்து, எம் கோன் என்னை ஆண்டு கொண்டீர். என் உள்ளமே தன் கோயிலாக்கிய வெண்ணெய் நல்லூர் தலைவராம் மெய்கண்ட தேவர், குருவாக வந்து மலங்கள் கெடுத்து என்னை ஆண்டு கொண்டீர்.

உரையாசிரியர் குறிப்பு

இருபா இருபது உரைஎழுதி னோன்முன்
ஒருவா விகற்பம் உணர்ந்தோன் - அருள்உடம்பாம்
பண்புடைய சிற்றம் பலநாடி தாள்பணிவோன்
சண்பைநகர்த் தத்துநா தன்.

இருபா இருப∴து என்னும் நூலுக்கு முதன்முதலில் உரை எழுதிய சீகாழித் தத்துவநாதர பற்றிக் கூறுகிறது இப்பாடல். சிற்றம்பல நாடிகளின் சீடரான இவரே, இருபா இருப∴துக்குக் காண்டிகை உரை வகுத்தார்.

இருபா-இருபஃது-முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# வினா வெண்பா

## உமாபதி சிவாசாரியார்

வினா வெண்பா, சித்தாந்த அட்டகங்களுள் மூன்றாவதாக அமைந்திருப்பது. இந்நூல், மொத்தம் பதின்மூன்று நேரிசை வெண்பாக்களாக அமைந்துள்ளது. இவை, கேள்வி கேட்கும் வகையில் அமைந்துள்ளன. உமாபதிசிவம், தன்னுடைய குருநாதரான மறைஞான சம்பந்தரிடத்தில் ஆழ்ந்த சித்தாந்தக் கருத்துக்களை வினாக்களாக எழுப்பினார். அவ்வினாக்களே, இப்பாடல்கள்.

குருவானவர், சொல்லாமலே சொல்லக் கூடியவர் என்பதனால் இவ்வினாக்களைச் சிந்திப்பவர்க்கு விடைகளும் தாமே கிடைக்கும்.

நீடும் ஒளியும் நிறைஇருளும் ஓரிடத்துக்
கூடல் அரிது கொடுவினையேன் - பாடிதன்முன்
ஒன்றவால் சோலை உயர்மருதைச் சம்பந்தா
நின்றவாறு எவ்வாறு நீ. 1

வினா

விரிந்த ஒளியும் நிறைந்த இருளும் ஒரே இடத்தில் சேர்ந்திருக்க முடியாது. அழகிய சோலைகள் நிறைந்த மருத நகரில் வாழும் மறைஞான சம்பந்தரே, கொடிய வினையுடைய என்னுடைய உள்ளத்திலும் எனக்கு அருகாமையிலும், வினைகள் நீங்கிய நீர் எப்படி நின்றீர்?

விடை

ஈரமுள்ள மரம் பற்றி எரிகிறதல்லவா? நோயுடையவனை நோயில்லாத மருத்துவர் அணுகித் தீர்க்கவில்லையா? ஆன்மாவின் உள்ளே ஆணவ இருளும் சிவமாகிய ஒளியும் இருக்கவில்லையா? அதுபோல.

இருளில் ஒளிபுரையும் எய்தும் கலாதி
மருளின் நிலையருளும் மானும் - கருவிஇவை
நீங்கின் இருளா நிறைமருதைச் சம்பந்தா
ஈங்குஉன்அரு ளால்என் பெற. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினா

கேவல நிலையில் உடம்பு இல்லாதபோதும், ஆன்மா ஆணவமலப்பிடியில் இருந்ததால், திருவருள் ஆன்மாவை விட்டு விலகியே இருந்தது. உடல் பெற்றுப் பிறவி எடுத்த சகல நிலையிலும் திருவருள் ஆன்மாவை நெருங்கிவிட்ட நிலையிலும் ஆணவம் ஆன்மாவை விட்டு நீங்கவில்லை. ஆகவே மறைஞான சம்பந்தா? இறையருளால் என்னதான் பயனாகும்?

விடை

மருத்துவன் அருகிலிருந்தும் ஓரிரு வேளை மருந்து கொடுத்தும் நோய் நோயாளியை விட்டு உடனே நீங்குவதில்லை. காரணம் மருந்தும் பத்தியமும் மருத்துவர் சொன்னபடி கடைப்பிடித்தால்தான் நோய் நீங்கும். அதுபோல் ஆன்மாவும் திருவருளை நம்பி விரும்பி அதன் வழியே நடந்தால்தான் ஆணவமலம் நீங்கும்.

**புல்லறிவு நல்லுணர்வு அதுஆகா பொதுஞானம்**
**அல்லதுஇலது உள்ளதெனில் அந்நியமாம் - தொல்லைஇருள்**
**ஊனம்மலையாவாறு உயர்மருதைச் சம்பந்தா**
**ஞானமலை ஆவாய் நவில். 3**

வினா

ஆனவமல மறப்பால் ஆன்மா சிற்றறிவு உடையதாகும். அந்தச் சிற்றறிவு பேரறிவு ஆகாது. மலபரிபாகம் ஏற்பட்ட பின் அதற்கு பதி ஞானம் (சிவஞானம்) ஏற்பட்டது என்கிறார்கள். மறைஞான சம்பந்தரே! முன்பு இல்லாத ஞானம் இப்போது மட்டும் எப்படி வந்தது?

விடை

திருவருள் எப்போதும் ஆன்மாவில் மறைந்தே இருக்கிறது. இப்போது மலம் நீங்கியதும் சிவஞானமாக அதுவே மலர்கிறது.

**கனவு கனவென்று காண்பரிதாம் காணில்**
**நனவில் அவைசிறிதும் நண்ணா - முனைவன் அருள்**
**தான் அவற்றில் ஒன்றா தடமருதைச் சம்பந்தா**
**யான் அவத்தை காணுமாறு என். 4**

வினா

கனவு காணும்போதே இது கனவு என அறிய முடியாது. அப்படிக் கண்ட கனவை, கனவுக்குத் துணை செய்த கருவிகளால் மீண்டும் நனவில் வெளிப்படுத்த முடியாது. கனவு திருவருள் துணையால் நிகழ்வதாகவும் கூற முடியாது; ஏன் என்றால் சடக்கருவிகளுடன் தெய்வம் ஒன்றாது. மறைஞான சம்பந்தரே! பிறகு, அவத்தைகளைத் தெய்வ முயற்சியாக நான் எப்படி அறிவது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை

கனவு காண உதவும் கருவிகளும் கடவுள் தந்தனவே. கனவை நனவில் உணர்த்தும் வாக்குகளும் கடவுள் அருளால் வந்தனவே. ஆகவே அவத்தைகளும் கடவுள் அருளால் விளைவனவேயாகும்.

**அறிவறிந்த எல்லாம் அசத்தாகும் ஆயின்**
**குறியிறந்தநின் உணர்விற்கூடா - பொறிபுலன்கள்**
**தாமா அறியா தடமருதைச் சம்பந்தா**
**யாம்ஆர் அறிவார் இனி.** 5

வினா

ஆன்ம அறிவினால் அறிந்தது எல்லாம் அசத்து (சடஅறிவு) அறிவாகும். அது சிற்றறிவு. இறைவன் அறிவு வியாபக அறிவு (பேரறிவு). வாக்கு மனம் என்னும் குறிகளுக்கு அப்பாலாய் நிற்கும் தேவரீரின் ஞானம் அது. இரண்டும் பொருந்துவது இல்லை. எனவே மறைஞான சம்பந்தரே! இறைவனைப் பொறி புலன்களுடன் உள்ள ஆன்மா எப்படி அறியும்?

விடை

ஆன்மா சத்தும் அசத்தும் இணைந்த சதசத்து ஆகும். ஆகவே முயன்றால் திருவருளால் அறியலாம். மரத்தால் செய்த யானை என்றபோது, யானையின் அழகு தெரியாது. மாமதயானை என்று அதனோடு ஒன்றும்போது மரத்தால் செய்தது என்பது மறைந்துபோகும். இப்படி ஆன்மா ஒன்றில் தோயும்போது அது அதுவாகி நிற்கும். பாசத்தோடே கூடிப் பாசமாய் நிற்கும் ஆன்மா, அருளோடு கூடிப் பாசம் நீங்கி அருளாய் நிற்கும்.

**சிற்றறிவு முன்சிதையில் சேர்வார் இன் றாம்சிறிது**
**மற்றதனில் நிற்கில்அருள் மன்னாவாம் - துற்றமுகில்**
**மின்கொண்ட சோலை வியன்மருதைச் சம்பந்தா**
**என்கொண்டு காண்பேன் யான்.** 6

வினா

சிற்றறிவே ஆன்மாவிடம் உள்ளது. அது முழுதுமாய் கெட்டுப் போனால் (சிதைந்தால்) இறை அருளைப் பெற முடியாது. சிறிதளவே இருந்தாலும் அருள் புரியாது. மேகமும் மின்னலும் கொண்ட ஆகாயத்தைத் தொட்டு நிற்கும் சோலைகள் சூழ்ந்த வியன் நகராம் மருதையில் வாழ் மறைஞான சம்பந்தரே! இனித் திருவருளை எதைக் கொண்டு காண்பேன்?

விடை

தான் சடமல்ல, அறிவுள்ள சித்துப் பொருள் ஆகிய ஆன்மா என்று அந்த ஆன்மா உணரும்போதே திருவருள் அந்த ஆன்மாவில் வந்து விளக்கம் பெறும். அதுவே சிவத்தையும் அறிவிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னரிய நின்னுணர்வது ஓங்கியக்கால்ஒண்கருவி
தன்அளவும் நண்ணரிது தானாகும் - என்அறிவு
தான்அறிய வாரா தடமருதைச் சம்பந்தா
யான்அறிவது எவ்வாறு இனி. 7

வினா

நினைவுக்கு எட்டாத கடவுள் அருள் ஓங்கிய நிலையில், சடப்பொருள்களாகிய கருவிகளால் அதனை உணர முடியாது. என்னுடைய அறிவால் (பசு ஞானத்தால்) அறிய முடியாது. மறைஞானசம்பந்தரே! திருவருளை நான் இனி எப்படிப் பெறுவது?

விடை

கருவிகளுடன் கூடிய அறிவு பாச அறிவு; கருவிகளை நீக்கியறிவது பசு அறிவு. இரண்டாலும் திருவருளை அறிய முடியாது. கடவுள் அறிவு பதி ஞானமாகும்.

திருவருளை உணர்ந்து அதனாலேயே எல்லாம் நடப்பதாக உணரும்போது பசுகரணம் சிவகரணமாகும். பசுஞானம் அப்போது பதிஞானம் ஆகும்.

அருவேல் உருவன்று உருவேல் அருவன்று
இருவேறும் ஒன்றிற்கு இசையா - உருஓரில்
காணில் உயர்கடந்தைச் சம்பந்தா கண்டவுடல்
பூணும்இறைக் கென்னாம் புகல். 8

(மருதூர் பெண்ணாடம் கடந்தை ஆகியவை மறைஞான சம்பந்தருடன் தொடர்புடைய ஊர்கள். கடந்தை என்பது சிதம்பரத்துக்கு வடமேற்கே 2 கி.மீட்டரில் அவருடைய ஜீவசமாதிக் கோயில் இருக்கும் திருக்களாஞ்சேரியாகும்.)

வினா

கடவுள் உருஉடையவர் என்றால் அருவம் இல்லை; அருவம் என்றால் உருவமில்லை. அருவுருவம் என்றால் ஒருவர்க்கு இரண்டு தன்மையும் இருப்பதில்லை. கடந்தை மறைஞானசம்பந்தரே! நீர் கண்ட கடவுளின் உடல் எத்தன்மையது சொல்லுங்கள்?

விடை

படைப்பு முழுதும் கலந்துள்ள இறைவன் மண்ணாகவும் நீராகவும் இருக்கும்போது உருவமாகவும், நெருப்பாக இருக்கும்போது அருவுருவமாகவும், காற்றும் ஆகாயமுமாக இருக்கும்போது அருவமாகவும் தென்படுகிறான் என்பதாம். இவற்றைத் தன் சத்தித் திருமேனி மூலம் தானே ஏற்கிறான் என்க. அதாவது, ஞானத்தில் திருமேனி கொள்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இருமலத்தார்க்கு இல்லை உடல்வினைஎன் செய்யும்**
**ஒருமலத்தார்க்கு ஆரை உரைப்பேன் - திரிமலத்தார்**
**ஒன்றாக வுள்ளார் உயர்மருதைச் சம்பந்தா**
**அன்றாகில் ஆமாறு அருள்.** 9

**வினா**

மாயை தவிர மற்ற இருமலங்களையுடைய பிரளயாகலருக்கு (மாயை இல்லாதபடியால்) உடலில்லை, உடல் இல்லாதவர்க்கு வினைவந்து என்ன செய்யும்? (வினைப்பயனை ஒத்துத்தான் உடல் அமையும் அல்லவா?) ஆணவமலம் மட்டுமே உடைய விஞ்ஞானகலர் ஆன்மாவுக்கு உவமையாக யார் உள்ளனர்? ஆணவம் கன்மம் மாயை என்ற மூன்று மலங்களுும உடையவர் சகலர்; மறைஞான சம்பந்தரே! இவர்கள் இறைவனுடன் இணைவது எப்படி என்று உரைத்து அருள வேண்டும்!

**விடை**

விஞ்ஞானகலர் அசுத்த மாயைக்கும் சுத்தமாயைக்கும் நடுவில் உள்ள புவனங்களில் வாழ்பவர். சுத்த மாயையால் ஆகிய உடலை உடையவராய் இருப்பர். இவர்களுக்கு இனிப் பிறவி இல்லை.

பிரளயாகலருக்கு அசுத்தமாயைக்கும் அராகத்துவத்திற்கும் இடையில் உள்ள புவனங்களே வாழ்விடமாகும். இவர்களுக்குக் கன்மமலம் இருப்பதால் ஓரிரு பிறவிகளில முத்தி பெறுவர்.

சகலர், பிரகிருதி மூலம் முதல் பிருத்வி பூதம் வரை உள்ள உலகுகளில் வாழ்வர். பல பிறவிகள் எடுத்து மேலும் மேலும் மலபரிபாகமும் இருவினை ஒப்பும் நிகழ்ந்து குரு உபதேசப்படி முத்தி பெறுவர்.

**ஒன்றிரண்டாய் நின்றொன்றில் ஓர்மையதாம் ஒன்றாக**
**நின்றிரண்டாம் என்னில் உயிர் நேராகும் - துன்றிருந்தார்**
**தாங்கியவாழ் தண்கடந்தைச் சம்பந்தா யானாகி**
**ஓங்கியவாறு எவ்வாறு உரை.** 10

**வினா**

பிரமமாகிய ஒரு பொருளே கடவுள் ஆன்மா என இரண்டாகப் பிரிந்தது என்று சிலர் கூறுவர். அப்படியானால் முத்தியில் இரண்டும் ஒன்றாகி விடும். அதாவது கடவுளில் ஆன்மா அடங்கிவிடும். மறைஞானசம்பந்தரே! நான் ஆன்ம நிலையிலிருந்து சிவத்தன்மை பெற்று ஓங்கியதற்குக் காரணம் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை

தானே அறிவது கடவுள்; அறிவிக்க அறிவது ஆன்மா; இந்த இருவேறு தன்மைகள் ஒரே பொருளில் இருக்க முடியாது. சார்ந்ததன் தன்மையைப் பெறும் ஆன்மாவின் இயற்கையின்படியேஅது சிவமாகி உள்ளது.

காண்பானும் காட்டுவதும் காண்பதுவும் நீத்துண்மை
காண்பார்கள் நன்முத்தி காணார்கள் - காண்பானும்
காட்டுவதும் காண்பதுவும் தண்கடந்தைச் சம்பந்தன்
வாட்டும்நெறி வாரா தவர். 11

இப்பாடல் முழுவினாவாக வாராமல் பிறரை மறுக்கும் கருத்தாகவே வந்துள்ளதால் அவர் கருத்தை வினாவாக்கி மறுப்பை விடையாக்குக.

முத்தியில், காண்பவர், காணப்படும் பொருள், காட்டுவது என மூன்றும் ஒன்றாகும் என்பர். அப்படி ஒன்றானால், முத்தி விளையாது. மறைஞானசம்பந்தர் உணரச் செய்யும் சித்தாந்த சைவம் வேறானது.

காண்பதாகிய ஆன்மா தன்னைக் காணாது சிவத்தைக் காணும். காணப்படுவதாகிய சிவம் தனித்துநிற்காது. காட்டுவதாகிய திருவருளும் தனிக்கவில்லை.

இவை மூன்றும் ஒன்றாய் உடனாய் ஆயினும் வேறு போன்றதாகவே இருக்கும்; இதுவே முத்தியாம்.

ஒன்றி நுகர்வதிவன் ஊணும் உறுதொழிலும்
என்றும் இடையில் இடமில்லை - ஒன்றித்
தெரியா அருள்மருதைச் சம்பந்தா சேர்ந்து
பிரியாவாறு எவ்வாறு பேசு. 12

வினா

கடவுள் எங்கும் நிறைந்தவர். எனவே ஆன்மா அவரை விட்டுத் தனித்திருக்க இடமில்லை. தனித்திருக்க முடியாதபோது, அவர் தர ஒன்றைப் பெறுவது, அவர் அறிவிக்க அறிவது என்பதெல்லாம் பொருந்தாது. பின் எப்படி இவை சாத்தியம்?

விடை

ஆன்மா, கடவுள், உலக இன்பதுன்பம் என்பவை தனித்தனியாக இல்லாவிட்டால் அவற்றை நுகர முடியாது என்பதே வினா. தின்பண்டம் தனியாக இல்லாமல் அதுவும் நாமே ஆகிவிட்டால், தின்பது எப்படி என்பதே மேற்கூறிய வினா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவம் யாவுமாய் இருப்பதை ஆன்மா அறியாது. காரணம் ஆணவமலம். திரோதானம் என்ற மறைப்பாற்றலால் இறைவன் தன்னை வேறுபடுத்திக் கொள்கிறான். ஆன்மாவின் ஆணவமலம் அழிந்து பக்குவம் வந்ததும் திரோதான சத்தியே திருவருள் சத்தியாகி முத்தி தரும்.

அருளால் உணர்வார்க்கு அகலாத செம்மைப்
பொருளாகி நிற்கும் பொருந்தித் - தெருளா
வினாவெண்பா உண்மை வினாவாரேல் ஊமன்
கனாவின்பால் எய்துவிக்கும் காண். 13

இப்பாடலும் வினா விடையாக வராமல் கருத்தாகவே உள்ளது. குருவினால் உணர்த்தப்பட்டவர், திருவருளை அறிவர். அவர்களே இந்நூலில் கூறிய சிறந்த பொருளையும் அறிவர். இப்படி இந்நூலுண்மையை ஆய்ந்து உணராவிட்டால், பேச இயலாதவன் கனவில் கண்டதை எப்படி எடுத்துரைக்க முடியாது தவிப்பானோ அப்படி இருப்பான்.

வினா வெண்பா முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# போற்றிப் பஃறொடை

## உமாபதி சிவாசாரியார்

"போற்றிப் ப∴றொடை" உமாபதி சிவாசாரியார் அருளிச் செய்த சித்தாந்த அட்டகங்களுள் ஐந்தாவதாகும். ப∴றொடை வெண்பாக்களால் அமைந்த இந்நூல், தொண்ணூற்றைந்து கண்ணிகளைக் கொண்டது. வெண்பா வரிகள் 'போற்றி' என்று நிறைவு பெறக்கூடியவையாகும். இறைவனின் திறம், ஆற்றல் ஆகியவற்றோடு உயிர்களின் இயல்பு, ஆணவம், உயிர்கள் படும் துன்பங்கள் ஆகியவையும் பேசப்படுகின்றன. குறிப்பாக, மறைஞானசம்பந்தர் குருவாக நின்று உமாபதி சிவத்தை ஆட்கொண்ட அருமையும் கூறப்படுகிறது. மனிதச் சட்டை போர்த்துக்கொண்டு வரும் குருவின் பெருமையைப் பேணும் நூல் இது.

பூமன்னு நான்முகத்தோன் புத்தேளிர் ஆங்கவர் கோன்
மாமன்னு சோதி மணிமார்பன் - நாமன்னும்
வேதம்வே தாந்தம் விளக்கம்செய் விந்துவுடன்
நாதநா தாந்தம் நடுவேதம் - போதத்தால்
ஆமளவும் தேட அளவிறந்த அப்பாலைச்
சேம ஒளிஎவரும் தேறும்வகை - மாமணிசூழ்
மன்றுள் நிறைந்து பிறவி வழக்கறுக்க
நின்ற நிருத்த நிலைபோற்றி.

தாமரைப் பூவில் இருக்கும் பிரமன், தேவர்கள், அவர்களின் தலைவனான இந்திரன், திருமகளையும் கௌத்துவ மணியையும் மார்பில் அணிந்திருக்கும் திருமால் ஆகியோரும், நாவில் பயிலும் வேதாந்ததம் (உபநிடதம்), அறிவை விளக்கம் செய்கிற விந்து எனும் ஒளிமயமான (வித்யா) தத்துவம், நாதம், நாதாந்தம் எனும் ஓங்காரம் ஆகியவையும் உள்ளத்தில் தோன்றிய அறிவும் இவை யாவும் எவ்வளவுதான் தேடினாலும் அவற்றுக்கு எட்டாமல், அளவுகளுக்கு உட்படாமல், எல்லாவற்றுக்கும் அப்பாலாய் பேரொளியாய் இருக்கும் இறைவன், யாவர்க்கும் ஆனந்தமும் பாதுகாப்பும் அருளும் கொடுக்கும் பொருட்டு, மாமணிகள் சூழ்ந்த அம்பலமாம் திருச்சிற்றம்பலத்தில் இதற்காகவே ஓர் உருவம் ஏற்று, ஆன்மாக்களின் பிறப்பாகிய வழக்கை அறுக்க, தான் நின்று நிலைத்து நடனம் செய்கிறான். நடனமாடும் சிவமே போற்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றாத
பல்லுயிர்வெவ் வேறு படைத்தும் அவைகாத்தும்
எல்லை இளைப்பொழிய விட்டுவைத்தும் - தொல்லையுறும்
அந்தம்அடி நடுவென்று எண்ண அளவுஇறந்து
வந்த பெரிய வழிபோற்றி.

பல்வேறு உயிர்களை வேறுவேறாகப் படைத்தும் அவற்றைக் காத்தும் பின்னர் பிறப்பு இறப்பு அலைப்பு என்னும் இளைப்புகள் ஒழிய யாவற்றையும் ஒடுக்கியும் இருக்கக் கூடியதும், இதுதான் ஆதி இதுதான் முடிவு இதுதான் நடு என்றெல்லாம் அளந்துவிட முடியாததுமான பெரிய வழியைப் போற்றுதும்!

(ஐந்தெழுத்து ஓதுவதால் இந்த வழி இறைமை என்னும் வழி என்று தெரியும்.)

முந்துற்ற
நெல்லுக்கு உமிதவிடு நீடுசெம்பில் காளிதம்
தொல்லைக் கடல்தோன்றத் தோன்றவரும் - எல்லாம்
ஒருபுடை ஒப்பாய்த்தான் உள்ளவா றுண்டாய்.

நெல்லுக்கு உமியும் தவிடும் இயற்கையாய் வந்தது போலவும் செம்பிற்கு இயல்பாகவே களிம்பு இருப்பது போலவும் முன்பு தோன்றிய கடலில் உப்பும் உடன் தோன்றியது போலவும் ஆணவ மலமும் ஆன்மாவுடன் இருப்பதாகவே உள்ளது.

அருவமாய் எவ்வுயிரும் ஆர்த்தே - உருவுடைய
மாமணியை உள்ளடக்கும் மாநாகம் வன்னிதனைத்
தான்அடக்கும் காட்டத் தகுதியும்போல் - ஞானத்தின்
கண்ணை மறைத்த கடியதொழில் ஆணவத்தால்
எண்ணம் செயல்மாண்ட எவ்வுயிர்க்கும் - உள்நாடிக்

கடிய செய்கை கொண்ட ஆணவ மலத்தால் ஆன்மாவின் ஞானக்கண் மறைக்கப்பட்டு, எண்ணமும் செயலும் பாழ்பட்டுப் போயிருக்கும் உயிர்களுக்கு உள்ளே, நாகத்திற்குள்ளிருக்கும் மாணிக்கம் போல, விறகுக்குள்ளிருக்கும் நெருப்பு போல, அருவமாயிருப்பான் இறைவன்.

கட்புலனால் காணார்தம் கைக்கொடுத்த போலே போல்
பொற்புடைய மாயைப் புணர்ப்பின்கண் - முற்பால்
தனுகரணமும்புவன மும்தந் துஅவற்றால்
மனமுதலால் வந்தவிகா ரத்தால் - வினையிரண்டும்
காட்டி அதனால் பிறப்பாக்கிக் கைக்கொண்டும்
மீட்டறிவு காட்டும் வினைபோற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையற்றவர்களின் கையில் ஊன்றுகோல் கொடுத்து உதவுவது போல உடலும் கருவிகளும் உலகமும் நுகர்ச்சி இன்பமும் தந்து, இவற்றினால் மனம் என்பதை ஏற்படச் செய்து, அதில் வரும் விகாரங்களால் நல்வினை தீவினை என பிரியச் செய்து, பிறப்பை உண்டாக்கி, மீண்டும் இறக்கச் செய்து, இவ்வாறே மீள மீளச் செய்து நிறைவாக உயிர்களுக்கு அறிவை உண்டாக்கிவிடும் திருவருள் செயலைப் போற்றுதும்!

நாட்டுகின்ற
எப்பிறப்பும் முற்செய் இருவினையால் நிச்சயித்துப்
பொற்புடைய தந்தைதாய் போகத்துள் - கர்ப்பமாய்ப்
புல்லில் பனிபோல் புகும்திவலைக்கு உட்படுங்கால்
எல்லைப் படாஉதரத்து எண்டியதீப் - பல்வகையால்

அங்கே கிடந்த அநாதிஉயிர் தம்பசியால்
எங்கேனு மாக எடுக்குமென - வெங்கும்பிக்
காயக் கருக்குழியில் காத்திருந்தும் காமியத்துக்கு
ஏயக் கை, காலமுதலாம் எவ்வுறுப்பும் - ஆசறவே
செய்து திருத்திப்பின் யோகிருத்தி முன்புக்க
வையவழி யேகொண்டு அணைகின்ற - பொய்யாத
வல்லமே போற்றி.

இவ்வுலகில் வாழுவதற்காக வரும் எந்த உயிரும் எத்தகைய பிறவி எடுக்குமென்பது அது முன் செய்த இருவினைகளால் நிச்சயிக்கப்படுகிறது. அவ்வாறு மனிதப் பிறவி எடுக்கக் கூடிய உயிரை, பொலிவுடைய தந்தை தாயின் புணர்ச்சியில் கர்ப்பமாகி, புல் நுனிப் பனித்துளி போன்றிருக்கும் தந்தையின் விந்தைத் தாயின் கருப்பைக்குள் செலுத்தி, அங்க தாயின் உதரத்துள் இருக்கும் உதராக்கினித் தீயாலும் பல்வேறு புழு பூச்சிகளாலும் அந்த விந்துவிற்கு அழிவு ஏற்படாமல் காப்பாற்றி, தாயின் கருக்குழியில் அக்கர்ப்பத்தைத் தங்கவைத்து, அந்த உயிரின் வினைக்கேற்றவாறு கையும் காலும் உறுப்புகளும் தந்து, குறைவில்லாது அவ்வுயிரைக் காத்து, அதற்கு உணர்வுகளையும் கொடுத்து, பின்னர் அவ்வுயிர், தாயின் கருக்குழயிலிருந்து வெளி வருகிற நேரத்தில் முன்பு விந்து உள்ளே போன அதேச் சிறு வழியை இப்போது தேவைக்கேற்பப் பெரிதாக்கி, அந்த வழியில் அவ்வுயிரை, மனிதவுடலோடும் பிறக்கச் செய்து, அவ்வாறு அவ்வுயிர் வெளிவரும்போது அதற்கு எத்துன்பமும் வராமல் இடனிருந்து காப்பாற்றி, அதனை வெளியே இழுத்துக் கொண்டுவரும் மெய்யான பேராற்றலே! நின்னைப் போற்றுதும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம் மாயக்கால் தான்மறைப்ப
நல்ல அறிவுஒழிந்து நன்குதீ - தொல்லையுறா
அக்காலம் தன்னில் பசியைஅறி வித்துஅழுவித்(து)
உக்காவி சோரத்தாய் உள்நடுங்கி - மிக்குஓங்கும் 20
சிந்தை உருக முலைஉருகும் தீஞ்சுவைப்பால்
வந்துமடுப் பக்கண்டு வாழ்ந்திருப்பப் - பந்தித்த
பாசப் பெருங்கயிற்றால் பல்லுயிரும் பாலிக்க
நேசத்தை வைத்த நெறி போற்றி.

குழந்தை பூமியில் பிறந்தவுடன் மாயை எனும் மயக்கக் காற்று அலைக்கழிக்க, நல்லது தீயது தெரியாது அப்பிள்ளை இருக்க, அப்போது அப்பிள்ளைக்குப் பசியைத் தோற்றுவித்து அதனை உணர வைத்து அதற்காக அழ வைத்து, அந்த அழுகைக்குப் பொறுக்காத தாயை நடுங்க வைத்து, அவளுடைய பாசமுள்ள மனதை உருக வைத்து, அவளின் முலைக் காம்பில் பால் சுரக்கச் செய்வித்து, அக்குழந்தை பாலைப் பருகிக் களிக்க அது பார்த்து தாய் மகிழும்படி செய்வித்துப் பாசம் என்கிற கயிற்றால் உயிர்களையெல்லாம் காப்பாற்றி, நேசத்தை வைத்தருளும் நெறியைப் போற்றுதும்!

ஆசற்ற
பாளைப் பசும்பதத்தும் பாலனாம் அப்பதத்தும்
நாளுக்கு நாட்சகல ஞானத்து - மூள்வித்துக்
கொண்டாள ஆளக் கருவிகொடுத் தொக்கநின்று
பண்டாரி யான படிபோற்றி.

தாயின் கருப்பையிலிருக்கும் குற்றமில்லாத பச்சிளம் பாளைப்பருவத்திலும், குழந்தையாக வளரும் பருவத்திலும், பின்னர் குமார பருவத்திலும், எல்லாவித அறிவும் அப்பிள்ளைக்கு வருமாறு செய்வித்து, முப்பத்தாறு (கருவி) தத்துவங்களிலும் பழகச் செய்வித்து, தானும் உடன்நின்று அருள் வழங்கும் வள்ளலைப் போற்றுதும் (பண்டாரம் = நிதிக் களஞ்சியம்; பண்டாரி = நிதி வழங்கும் வள்ளல்)

தண்டாத
புன்புலால் போர்த்த புழுக்குரம்பை மாமனையில்
அன்புசேர் கின்றனகட்டு ஐந்தாக்கி - முன்புள்ள 25

உண்மை நிலைமை ஒருகால் அகலாது
திண்மை மலத்தால் சிறையாக்கிக் - கண்மறைத்து
மூலஅரும் கட்டிலுயிர் மூடமாய் உட்கிடப்பக்
கால நியதி அதுகாட்டி - மேலோங்கும் 27



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்திவியன் கட்டில்உயிர் சேர்த்துக் கலைவித்தை
யந்த அராக மவைமுன்பு - தந்த 28

தொழிலறி இச்சை துணையாக மானின்
எழிலுடைய முக்குணமும் எய்தி - மருளோடு 29
மன்னும் இதயத்தில் சித்தத்தால் கண்டபொருள்
இன்னபொருளென்று இயம்பவொண்ணா - அந்நிலை போய்க் 30

கீழான புலால் கொண்டு மூடி, நாறும் தோல் போர்த்த உடம்பாகிய பெரிய வீட்டில் ஐந்து அறைகளை இறைவன் உண்டாக்குகிறான்.

துரியாதீதம், துரியம், சுழுத்தி, சொப்பனம், சாக்கிரம் என்னும் இந்த ஐந்து அறைகளைக் கட்டுவிக்கும் இறைவன், ஆன்மாவுக்கு இயல்பாக உள்ள ஆணவம் நீங்காதவாறு அதனை மலங்களால் சிறைப்படுத்தவும் செய்கிறான்.

(இனி தொடர்ந்து மூலாதாரம், உந்தி, இதயம், கண்டம், புருவமத்தி எனும் ஐந்து சக்கரங்களில் உண்டாகும் நிலைகள் விளக்கப்படுகின்றன.)

மூலாதாரம் என்னும் வீட்டில், துரியாதீதப்பட்டு, உயிர் அறியாமை வசமாகி உள்ளே கிடக்கிறது. காலம், நியதி என்னும் இரு தத்துவங்கள் இங்கு இணைகின்றன.

அடுத்து அங்கிருந்து மேலேயுள்ள உந்தியில் (நாபி ஸ்தானம்) (துரியம்) உயிரைச் சேர்த்துவிட, அங்கு ஏற்கெனவே (உந்திக்கட்டில்) உள்ள கலை, வித்தை, அராகம் என்னும் தத்துவங்களோடு தொழில், அறிவு, இச்சை என்னும் ஆற்றல்களோடு சேர்ப்பிக்க, அவ்வுயிரானது சத்துவம், ரஜஸம், தாசம் என்னும் முக்குணங்களைப் பொருந்தி மருண்டிருக்கும்படியும் இறைவன் செய்கிறான்.

அடுத்து, இதயம் என்னும் கட்டில், சுழுத்தி நிலையில், சித்தத்தால் கண்டது எது என்று புரிந்துகொள்ள முடியாமல் இருக்கும் நிலைக்கு உயிரைச் செலுத்துகிறான்.

கண்டவியன் கட்டில் கருவிகள் ஈரைந்துஒழியக்
கொண்டுநியமித்தற்றைநாட்கொடுப்பப் - பண்டை
இருவினையால் முன்புள்ள இன்பத்துன் பங்கள்
மருவும்வகை அங்கே மருவி - உருடுன்நின்(று)
ஓங்கு நுதலாய ஓலக்க மண்டபத்தில்
போங்கருவி யெல்லாம் புகுந்தீண்டி - நீங்காத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னை மலத்திருளுள் மூடா வகையகத்துள்
துன்னும்இருள் நீக்கும் சுடரேபோல் - அந்நிலையே
சூக்கம் சுடருருவில் பெய்து தொழிற்குரியர்
ஆக்கிப் பணித்த அறம்போற்றி.

கண்டம் (தொண்டை) எனும் கட்டில் முப்பத்தைந்து தத்துவங்களில் ஞானேந்திரியம் ஐந்தும் கன்மேந்திரியம் ஐந்தும் நீங்கலாக மீதமுள்ளவற்றைக் கூட்டில், சொப்பன நிலையில் உயிரை நிறுத்திவித்து, இருவினைகளுக்கு ஈடாக இன்பதுன்பங்களை நுகரச் செய்துவிடுகிறான்.

பின்னர், நெற்றியில் உள்ள புருவ மத்தி என்னும் அரசவை மண்டபத்தில், சாக்கிர நிலையில், எல்லாக் கருவிகளும் வந்து பொருந்தும்படிச் செய்வித்து, கூடவே இருக்கும் ஆணவமலம் என்னும் இருள் மீண்டும் மூடிவிடாமல் இருள் நீக்குகின்ற சுடராகக் கூடவே இருந்து, சூக்குமாதி வாக்குகளும் பிற அறிவுகளும் தொழில் புரியுமாறு பணித்து நிற்கும் அறத்தைப் போற்றுதும்!

வேட்கைமிகும்
உண்டிப் பொருட்டால் ஒருகால் அவியாது
மண்டிஎரி யும்பெருந்தீ மாற்றுதற்குத் - திண்டிறல் சேர்
வல்லார்கள் வல்ல வகையால் தொழில்புரிதல்
எல்லா முடனே ஒருங்கிசைந்து - செல்காலை 37

முட்டாமல் செய்வினைக்கும் முற்செய்வினைக்கும் செலவு
பட்டோலை தீட்டும் படிபோற்றி 38

ஆன்மாக்கள், பிரபஞ்சத்தில் வாழும் ஆசையால் வயிற்றில் ஒரு கணமும் குறையாது எரிந்து கொண்டு இருக்கும் பசித் தீயையும் (மற்ற பல ஆசைப் பெரு நெருப்புகளையும்) மாற்றுவதற்காக, அவரவர்கள் வல்லமைக்கு ஏற்ற வகையில் விதவிதமாகத் தொழில் புரிந்து செயலாற்றும்போது அவ்வான்மாக்களுடன் (தோன்றாத் துணையாகக்) கூடவே இருந்து அவர்களின் செயல்களையெல்லாம் செய்வித்துக் கொடுக்கும் இறைவன் கணக்கும் எழுதுகிறான். அந்த ஆன்மாக்கள் தொடர்ந்து செய்யும் வினையான ஆகாமியத்துக்கும், முன்பு செய்த வினையான சஞ்சிதத்துக்கும் முன்பு செய்து (இப்பிறவியில்) அனுபவிக்கும் வினையான பிராரத்தத்துக்கும் கணக்கு எழுதிக் கொண்டிருக்கும் கருணை அருளைப் போற்றுதும்!

நட்டோங்கு
இந்நிலைமை மானிடருக்கே அன்றி எண்ணிலா
மன்னுயிர்க்கும் இந்த வழக்கேயாய் - முன்னுடைய
நாள் நாள் வரையில் உடல்பிரிந்து நல்வினைக்கண்
வாணாளின் மாலால் அயனாகி - நீள் நாகர் 40



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானாடர் கோமுதலாய் வந்த பெரும்பதத்து
நானா விதத்தால் நலம்பெறுநாள் - தான்மாள
வெற்றிக் கடுந்தூதர் வேகத் துடன்வந்து
பற்றித்தம் வெங்குருவின் பாற்காட்ட - இற்றைக்கும்
இல்லையோ பாவி பிறவாமை என்றெடுத்து
நல்லதோர் இன்சொல் நடுவாகச் - சொல்லிஇவர்
செய்திக்குத் தக்க செயலுறுத்துவீர் என்று
வெய்துற்று உரைக்க விடைகொண்டு - மையல்தரும்
செருக்கின் இடைத்திரித்தும் தீவாயில் இட்டெரித்தும்
தக்கநெருப் புத்தூண் தழுவுவித்தும் - மிக்கோங்கு

நாராசம் காய்ச்சிச் செவிமடுத்தும் நாஅரிந்தும்
ஈராஉன் ஊனைத்தின் என்றடித்தும் - பேராமல்
அங்காழ் நரகத்து அழுத்துவித்தும் பின்னும்தம்
வெங்கோபம் மாறாத வேட்கையராய் - இங்கொருநாள்

எண்ணிமுதல் காணாத இன்னல் கடுநரகம்
பன்னெடுநாள் செல்லும் பணிகொண்டு - முன்நாடிக்
கண்டு கடன்கழித்தல் காரியமாம் என்றெண்ணிக்
கொண்டுவரு நோயின் குறிப்பறிவார் - மண்டெரியில்
காய்ச்சிச் சுடவறுக்கக் கண்ணுரிக்க நன்நிதியம்
ஈய்த்துத்தாய் தந்தைதமர் இன்புறுதல் - வாய்த்த நெறி

ஓடியதே ரின்கீழ் உயிர்போன கன்றாலே
நீடுபெரும் பாவம்இன்றே நீங்குமென - நாடித்தன்
மைந்தனையும் ஊர்ந்தோன் வழக்கே வழக்காக
நஞ்சனைய சிந்தை நமன்தூதர் - வெஞ்சினத்தால்
அல்ல லுறுத்தும் அருநரகம் கண்டுநிற்க
வல்ல கருணை மறம்போற்றி.

மனிதர்களுக்கு மட்டுமின்றி மற்ற உயிர்களுக்கும் கடவுள் இப்படியே கணக்கு எழுதுகிறான். அவற்றின் வாழ்நாள் முடிந்ததும் வினைப்படி உடல்களைப் பிரிக்கிறான். ஆன்மாக்களின் நல்வினைக்கு ஏற்ப திருமால் என்றும், பிரமன் என்றும், இந்திரன் என்றும், பிற தேவர்கள் என்றும் வெவ்வேறு பதவிகளில் வெவ்வேறு நன்மைகள் பெற்று வாழ வழி செய்வித்துப் பின்னர் உயிர் பிரிந்ததும் யமதூதர்களைக் கொண்டு அவ்வுயிரை யம தர்மனிடம் நிறுத்துவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யமதர்மனோ, 'பாவியே இன்றுவரை நீ திருந்தவில்லையா? பிறவாமல் இருப்பதற்குப் பல வாய்ப்புகளை இறைவன் அருளியதையும் கடைப்பிடிக்கவில்லையா' என்று நடுநடுவே நல்ல சொற்களைக் கூறி, அவர்கள் செய்த வினைக்கு உரிய தண்டனையைத் தர சொல்லி அனுப்பான்.

செக்கில் இட்டு அரைத்தல், நெருப்பில் எரித்தல், நெருப்புத் தூணைத் தழுவச் செய்தல், இரும்பைக் காய்ச்சிக் காதில் விடுதல், நாவை அரிதல், அவரவர் உடம்புத் தசையை அறுத்து அவர் அவரே தின்னச் செய்தல் என்று பலவாறான நரகத் துன்பங்கள் பலவற்றைப் பலநாளும் அனுபவிக்குமாறு செய்யப்படும்.

நோயைக் காண்பதற்காகச் சோதனை செய்தும், எரியில் ஊசிகளைக் காய்ச்சிச் சுட்டும், கத்தியால் அறுத்தும், கண்ணைப் படலமாக உரித்தும் மருத்துவம் செய்யும் மருத்துவரை நோயாளியின் பெற்றோர் சினக்காமல் இன்புறுவர். அதுவே நடக்கும் முறையாகும்.

தேரின் கீழ் அரைபட்டு உயிர் இழந்த பசுக்கன்றுக்காக மனுநீதிச் சோழன் தேரில் சென்ற தன்மகனைத் தேர்காலில் இட்டு அரைத்தான். மகனின் கொலைப்பாவம் நீக்குவதற்கே அப்படித் தண்டித்தானாம். அது போன்றே இறைவனும் யமதூதர் வழியாக உயிர்கள் தண்டனை பெற்றுத் தத்தம் பாவம் தீர்வதைக் கண்டு நிற்பான். கருணை வழியாய் யாவும் கண்டு நிற்கும் அவன் கருணையைப் போற்றுதும்!

பல்லுயிர்க்கும்
இன்ன வகையால் இருவினைக்கண் நின்றருத்தி
முன்னைமுத லென்ன முதல்இல்லோன் - நல்வினைக்கண்
எல்லா வுலகும் எடுப்புண்டு எடுப்புண்டு
செல்காலம் பின்நரகம் சேராமே - நல்லநெறி

எய்துவதோர் காலம்தன் அன்பரைக்கண்டு இன்புறுதல்
உய்யும் நெறிசிறிதே உண்டாக்கிப் - பையவே
மட்டாய் மலராய் வருநாளின் முன்னைநாள்
மொட்டாய் உருவாம் முறைபோலக் - கிட்டியதோர்
நல்ல பிறப்பில் பிறப்பித்து நாடும்வினை
எல்லை இரண்டும் இடையொப்பில் - பல்பிறவி
அத்தமதில் அன்றோ அளவென்று பார்த்திருந்து
சத்தி பதிக்கும் தரம்போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு மேல் முதல் இல்லாதவனான இறைவன், இவ்வாறு பல உயிர்களையும் இருவினைகளையும் நுகரச் செய்து, அவற்றின் நுகர்ச்சிக்காகவே உலகுகளை மாறி மாறி வருமாறு படைத்தும் காத்தும் ஒடுக்கியும் மறைத்தும் அருளியும் அருள் செய்கைகளைச் செய்து வருகிறான்.

பக்குவப்பட்ட ஆன்மாக்கள் மேலும் நரகம் செல்வதைத் தடுக்கவும் அவை முத்தி அடையவும் வழி செய்கிறான். தம் மெய்யன்பர்களான சிவனடியார்களைக் கண்டு தொழுதாலே நல்வழி கிடைக்கச் செய்கிறான். மெல்ல மெல்ல மொட்டாகி, அரும்பாகி, பின் மலராவது போல் ஆன்மாவையும் படிப்படியாக உயர்த்துகிறான்.

நல்ல பிறவியில் பிறக்கச் செய்து, பின்னர் இரு வினைகளும் ஒக்குமாறு செய்து, மலபரிபாகம் செய்வித்து, சத்திநிபாதம் அருளி, ஆன்மாவின் தரம் உயர்த்தி முத்தி நிலைக்கு உயர்த்திச் செல்கிற சத்தியின் பதியான இறைவனின் அருளைப் போற்றுதும்!

முத்திதரு
நன்னெறிவிஞ் ஞானகலர் நாடுமலம் ஒன்றினையும்
அந்நிலையே உள்நின்று அறுத்தருளிப் - பின்அன்பு

மேவா விளங்கும் பிரளயா கலருக்குத்
தேவாய் மலகன்மம் தீர்த்தருளிப் - பூவலயந்
தன்னின்று நீங்காச் சகலர்க்கு அவர்போல்
முன்நின்று மும்மலம்தீர்த் தாட்கொள்கை - அன்னவனுக்கு
ஆதிகுணம் ஆதலினால் ஆடும் திருத்தொழிலும்
சோதி மணிமிடற்றுச் சுந்தரமும் - பாதியாம்
பச்சை யிடமும் பவளத் திருச்சடைமேல்
வைச்ச நதியும் மதிக்கொழுந்தும் - அச்சமற
ஆடும் அரவும் அழகார் திருநுதல்மேல்
நீடுருவ வன்னி நெடுங்கண்ணும் - கேடில்லயம்

கூட்டும் தமருகமும் கோல எரிஅகலும்
பூட்டுஅரவக் கச்சும் புலிஅதளும் - வீட்டின்ப
வெள்ளத்து அழுத்தி விடும்தா ளினம்அடியார்
உள்ளத் தினும்பிரியா ஒண்சிலம்பும் - கள்ளவினை
வென்று பிறப்பறுக்கச் சாத்தியவீ ரக்கழலும்
ஒன்றும்உருத் தோன்றாமல் உள்ளடக்கி - என்றும்
இறவாத இன்பத்து எமையிருத்த வேண்டிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவா முதல்வன் பிறந்து - நறவாரும்
தார்உலா வும்புயத்துச் சம்பந்த நாதன்என்று
பேரிலா நாதன்ஒரு பேர்புனைந்து - பாரோர்தம் 70

உண்டி உறக்கம் பயம்இன்பம் ஒத்தொழுகிக்
கொண்டு மகிழ்ந்த குணம்போற்றி. 71

முத்திக்கான நன்னெறியில் உள்ள விஞ்ஞானகலர் என்னும் வகை ஆன்மாக்களுக்கு அவர்களிடத்திருக்கும் மலத்தை அறுக்கச் செய்வித்து அருள்வதும் பின்னர், பிரளயாகலர் என்னும் வகை ஆன்மாக்களுக்குத் தம் திருமேனி காட்டி அவர்களின் ஆணவம் கன்மம் ஆகிய இருமலங்களை ஒழியச் செய்வித்து அருள்வதும் உலகப் பற்றிலிருந்து விடுபடாதவரான மும்மலங்கள் கொண்ட சகலர் என்னும் வகை ஆன்மாக்களுக்கு, மானைக் காட்டியே மானைப் பிடிப்பது போல மனிதர் உரு எய்தி மனித குருவாகத் தோன்றி உபதேசம் செய்து தீட்சையால் மலங்களை நீக்கி அவர்களைத் தமக்கு ஆளாக்கிக் கொள்வதும் இறைவனின் பழைமைக் (நெடுநாளைய, அதாவது இடையறாத) குணமாகும்.

அந்த இறைவன், பிறவியில்லாத முதல்வன், மன்றிலாடும் திருத்தொழிலும் சோதி மணியென ஒளிரும் கறைத் தொண்டையும் பச்சை நிறத்தவளான அம்மையின் இடப்பாகமும் பவளமென நிறம் கொண்ட சடைமுடியும் அதன்மீது வைத்த கங்கையும் பிறைநிலவும் அச்சமின்றிப் படமெடுத்தாடும் பாம்பும் நெற்றியில் துலங்கும் நீண்ட தழல் கண்ணும் தவறாது லயம் சேர்க்கும் தமருகமும் கையில் ஏந்திய அகல் நெருப்பும் இடுப்பில் கட்டிய பாம்புக் கச்சும் புலித்தோலும் அடியார்களை வீடுபேற்றில் அழுத்தும் ஊன்றிய திருவடியும் அடியார் உள்ளத்தில் ஒலிக்கும் சிலம்பும் உயிர்களைப் பற்றி நிற்கும் வஞ்சமிகு இருவினைகளை நீக்கிப் பிறப்பை அறுக்கும் வீரக்கழல் மணிகளும், வெளியில் தெரியாமல் வடிவில் தோன்றாமல், எம்மை என்றும் நீங்காத இன்பத்தில் ஆழ்த்துவதற்காக, நறுமண மிக்க மாலைகளை அணிந்து சம்பந்தநாதன் (மறைஞான சம்பந்தன்) என்னும் பெயர் தாங்கி வந்தான். பெயரொன்றும் இல்லாத அவன் நாம் நன்மை பெற ஒரு பெயர் தாங்கி வந்தான். உலகத்தோரைப் போல உண்பதும் உறங்குவதும் அச்சமும் இன்பமும் கொண்டதாகக் காட்டி உலகத்தோடு ஒத்து ஒழுகும் அந்த அருள்குணம் போற்றுதும்!

மிண்டாய
ஆறு சமயப் பொருளும்அறி வித்துஅவற்றில்
பேறின்மை எங்களுக்கே பேறாக்கித் - தேறாத 82

சித்தம் தெளியத் திருமேனி கொண்டுவரும்
அத்தகைமை தானே அமையாமல் - வித்தகமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ நெறியில் சமய முதலாக
எய்தும் அபிடேகம் எய்துவித்துச் - செய்யதிருக்
கண்ணருளால் நோக்கிக் கடிய பிறப்பால் பட்ட
புண்ணும் இருவினையும் போய்அகல - வண்ணமலர்க் 75

கைத்தலத்தை வைத்துஅருளிக் கல்லாய நெஞ்சுருக்கி
மெய்த்தகைமை யெல்லாம் விரித்தோதி - ஒத்து ஒழுகும்
சேண் ஆர்இருள்வடிவும் செங்கதிரோன் பால்நிற்பக்
காணாது ஒழியும் கணக்கேபோல் - ஆணவத்தின்
ஆதி குறையாமல் என்பால் அணுகாமல்
நீதி நிறுத்தும் நிலைபோற்றி. 78

அகங்காரம் பொருந்திய புறச்சமயங்கள் ஆறின் பொருளையும் அறிவித்து, அவற்றில் இல்லாத பேற்றினைச் சைவநெறியில் எங்களுக்குப் பேறாக ஆக்கி, தெளியாமல் இருந்த எங்கள் சித்தத்தைத் தெளியவைத்து, உருவத் திருமேனி கொண்டு தரிசனம் தந்ததோடு மட்டும் அமையாமல், சைவநெயில் சமய தீட்சை முதல் ஆச்சாரிய திருமஞ்சனம் வரை செய்து வைத்து, அருட் கண்ணால் எங்களைப் பார்த்து, இதுவரை பல பிறவிகளில் நாங்கள் பட்ட துன்பமும் இருவினையும் நீங்கும்படி செய்து, வண்ணமலர் போலும் தம் திருக்கையை எங்கள் தலைமேல் வைத்து அருளி, கல்போலும் உள்ளத்தையும் உருகச் செய்து, மெய்பொருள் இயல்புகளை விரித்து ஓதி, அடர்ந்த இருளின் வடிவத்தை சிவந்த சூரியன் உதயமாகி அழிப்பதைப் போல் எங்கள் ஆணவத்தை நில்லாது அழித்து, நீதியைக் காத்திடும் அருள் நிலையைப் போற்றுதும்!

மேதக்கோர்

செய்யும் சரியை திகழ்கிரியா யோகத்தால்
எய்தும்சீர் முத்திபதம் எய்துவித்து - மெய்அன்பால்
காணத் தகுவார்கள் கண்டால் தமைப்பின்பு
நாணத் தகும்ஞான நன்னெறியை - வீணே 80

எனக்குத் தரவேண்டி எல்லாப் பொருட்கும்
மணக்கும் மலர்அயன்மால் வானோர் - நினைப்பினுக்குந்
தூரம்போ லேஅணிய சுந்தரத்தாள் என்தலைமேல்
ஆரும் படிதந்தருள்செய்த - பேராளன்
தந்தபொருள் ஏதென்னில் தான்வேறு நான்வேறாய்
வந்து புணரா வழக்காக்கி - முந்திஎன்றன்
உள்ளம்என்றும் நீங்காது ஒளித்துஇருந்து தோன்றி நிற்கும்
கள்ளமின்று காட்டும் கழல்போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றுக்களை ஒழித்துவிட்ட மேலோர் செய்யும் சரியை, கிரியை, யோகம் ஆகியவற்றுக்குப் பயனாக, முத்திக்குரிய பதங்களை அடையச் செய்கிறான் சிவன். (பதமுத்தி முறை சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் முதலியனவாம்) மெய் அன்பில் ஆட்பட்டுவிட்ட அப்பெரியோர் இதுவரை நாம் ஆணவப்பட்டு நின்றோமே என நாணப்படுவர். அத்தகு ஞானத்தை எனக்கு முன்பே அருளிய பெருமானே!

உலகப் பொருள்களுக்கும் மனத்துக்கும் பிரமன் திருமால் முதலான தேவர்களின் நினைப்புக்கும் எட்டாதவனான இறைவனை எனக்கு அணுக்கமானவனாக ஆக்குவதற்காக ஞான சம்பந்தர் என் தலைமேல் திருவடியை வைத்து அருள் செய்தார். அவர் எனக்கு உபதேசித்தது என்னவெனில், தான் வேறு நான் வேறு என்று எப்போதும் இருந்ததில்லையென்றும் அவ்வாறு வேறுபட நான் எண்ணிய காலத்தும் தான் ஒளிந்து எனக்குள் பிரியாதிருந்து வந்த தன்மையும் ஆகும். நாம் காணாதிருக்க நம்மைக் கண்டு காத்திருக்கும் கள்ளம் இன்று மறைஞான சம்பந்தனாய் வெளிப்பட்டு அருளிய பெருமையைப் போற்றுதும்!

வள்ளன்மையால்
தன்னைத் தெரிவித்துத் தன்தாளி னுள்கிடந்த
என்னைத் தெரிவித்த எல்லையின்கண் - மின்னாரும் 85

வண்ணம் உருவம் மருவும் குணமயக்கம்
எண்ணும் கலைகாலம் எப்பொருளும் - முன்னம் எனக்(கு)
இல்லாமை காட்டிப்பின்பு எய்தியவா காட்டிஇனிச்
செல்லாமை காட்டும் செயல்போற்றி.

வள்ளன்மையால் தன்னைத் தெரிவித்துத் தன் தாளில் கிடக்கும் என் ஆன்மாவின் இயல்பையும் தெரிவித்து, முக்குணங்களின் இயல்பைக் காட்டி, உயிர்களுக்கு அறிவு நல்கும் கலை எனும தத்துவத்தைய், காலம் எனும் தத்துவத்தையும் காட்டி, இவை பிறப்புக்கு முன்பு வந்து சேர்ந்தவை அல்ல என்பதைக் காட்டி, (அதாவது கேவல நிலையில் அவை இல்லை), பிறகு சகல நிலையில் வந்து அடைந்தன என்பதையும் காட்டி, இனி மாய வழியில் உழலாதபடிக்குத் திருவருளைக் காட்டும் திறலைப் போற்றுதும்!

எல்லாம்போய்த்
தம்மைத் தெளிந்தாராய்த் தாமே பொருளாகி
எம்மைப் புறங்கூறி இன்புற்றுச் - செம்மை
அவிகாரம் பேசும் அகம்பிரமக் காரர்
வெளியால் இருளில் விடாதே - ஒளியாய்நீ
நின்ற நிலையே நிகழ்த்தி ஒருபொருள்வே(று)
இன்றிஅமை யாமை எடுத்துஓதி - ஒன்றாகச் 90



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதித்துத் தம்மைச் சிவமாக்கி இப்பிறவிப்
பேதம் தனில்இன்பப் பேதமுறாப் - பாதகரோ(டு)
ஏகமாய்ப் போகாமல் எவ்விடத்தும் காட்சிதந்து
போகமாம் பொன்தாளி னுள்புணர்த்தி - ஆதியுடன்
நிற்க அழியா நிலைஇதுவே என்றருளி
ஒக்க வியாபகம்தன் னுள்காட்டி - மிக்கோங்கும்
ஆநந்த மாக்கடலில் ஆரா அமுதுஅளித்துத்
தான்வந்து செய்யும் தகுதியினால் - ஊன் உயிர்தான்
முன்கண்ட காலத்தும் நீங்காத முன்னோனை
என்கொண்டு போற்றிசைப்பேன் யான். 95

எல்லாத் தத்துவங்களையும் நிலையற்றவை என்று நீக்கித் தம்மைத் தெரிந்து தெளிந்து கொண்டவர் போல் தாமே முதல் பொருள் என நினைத்து, அக் கொள்கை இல்லாத எம்மைப் புறம்பேசி இன்பம் அடைந்து, தாமே பிரம்மம் என்பாரின் அறியாமை இருளில் நாங்கள் மயங்கிடாமல் எம்மைக் காத்தருள்கின்றாய்.

ஒளிவடிவான பதியாய் நின்று, அதற்கு மேல் ஏதும் இல்லையென்பதும் காட்டி, ஆன்மாவைச் சிவத்துடன் சேர்த்துச் சிவமாக்கி, பாதகர்களுடன் சேர்ந்து போய்விடாதபடிக்குக் காட்சியளித்துக் காப்பாற்றி, புறம் போகாதபடிக்குப் பொன்னடி ஞானத்தில் சேர்த்து, ஆதியான சிவத்துடன் எப்போதும் ஒன்றி இருப்பதே சாயுச்சியமூர்த்தி என்று அருள்வித்து, ஓங்கும் ஆனந்தக் கடலில், தவிட்டாத அமுதம் அளித்து, தானே வந்து பெருங் கருணையினால் இவை யாவும் செய்து, ஊனை உடலை முதன்மைப்படுத்தி நான் வாழும் காலத்திலும் நீங்காது நின்றருளும் முன்னோனை எவ்விதம் போற்றுதும்? எது கொண்டு போற்றுதும்?

போற்றி திருத்தில்லை போற்றி சிவபோகம்
போற்றிஅவன் மெய்ஞ்ஞானப் புண்ணியநூல் - போற்றிஎங்கள்
வெம்பந்த வாழ்க்கைவிட வேறாய்வந் துள்நின்ற
சம்பந்த மாமுனிபொன் தாள்.

திருவருள் சிறக்கும் தில்லை போற்றி! சிவபோகம் போற்றி! மெய்ஞ்ஞானத்தை வெளியிடும் புண்ணிய நூல்களாகிய சாத்திரத் தோத்திரங்கள் போற்றி! வெப்பம் மிகுந்த பந்தங்கள் கொண்ட எங்கள் வாழ்க்கையை விட்டுவிட எமக்குள் வேறாக வந்து உள் நின்ற சம்பந்த முனிவனின் பொன்னடிகள் போற்றி.

போற்றிப் பஃறொடை முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# கொடிக் கவி

## உமாபதி சிவாசாரியார்

சாத்திரங்கள் பதினான்கில், அளவில் மிகச் சிறிதான நூல் "கொடிக்கவி" என்னும் கொடிப்பாட்டு. உமாபதி சிவாசாரியாரால் அருளிச் செய்யப்பட்ட இந்நூலில் நான்கு பாடல்கள் உள்ளன. முதல் பாடல் கட்டளைக் கலித்துறையாகவும் மீதமிருக்கும் மூன்று பாடல்கள் வெண்பாக்களாகவும் அமைந்துள்ளன.

சிதம்பரம் திருக்கோயிலில் கொடிமரத்தில் ஏறாமல் நின்ற கொடியை ஏறும்படி வேண்டி அருளிச் செய்யப்பெற்றவை இப்பாடல்கள். இப்போதும் சிவன் கோயில்களில் ரிஷபக் கொடியேற்றத்தின்போது இவை பாடப்பெறுகின்றன.

ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்ஒன்று மேலிடல் ஒன்று
ஒளிக்கும் எனினும் இருள்அட ராதுஉள் ளுயிர்க்கு உயிராய்த்
தெளிக்கும் அறிவு திகழ்ந்துள தேனும் திரிமலத்தே
குளிக்கும் உயிர்அருள் கூடும் படிகொடி கட்டினனே. 1

ஒளியும் இருளும் தமக்குள் வேறுபட்டவை ஆகும். ஆனால் திருவருளாகிய ஒளியும், ஆணவ மலமாகிய இருளும் ஆன்மாவாகிய ஒரே இடத்தில் இருக்கின்றன.

இவற்றுள் ஒன்று மேலோங்கும்போது மற்றது அடங்கிநிற்கும். ஆனாலும் ஆணவ மலம் திருவருள் அடங்கியிருக்கும் போது அதைப் பற்றிக்கொள்ளாது. திருவருள் எல்லா உயிர்க்கும் உயிராக இருக்கும். அறிவிருந்தாலும் கூட உயிர் முன் வினை காரணமாக மும்மலங்களில் மூழ்கும். திருவருள் ஆன்மாவில் வந்து சேரும்படி கொடியை நான் கட்டுகிறேன்.

(கொடியேற்றுதல் என்பது ஒரு முறை. ஆவணத்துக்கும் ஞானத்துக்கும் இடமாகவிருக்கிற ஆன்மா, மலத்துக்குள் ஆட்பட்டுக் கிடக்கிறது. மலத்தைப் போக்க, முறைப்படி கொடியேற்றிப் பயிற்சி செய்வோம் என்பதாம்.)

பொருளாம் பொருள்ஏது போதுஏது கண்ணேது
இருளாம் வெளிஏது இரவுஏ(து) - அருளாளா
நீபுரவா வையமெல்லாம் நீஅறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பொருளிலும் நீங்காதிருக்கும் சில பொருள் ஏது? சூரியனின் கிரணம் போன்று சிவனின் சத்தித் திருவருள் ஏது? சூரியனால் காணப்பெறும் கண் போலத் திருவருளால் செயல்படும் ஆன்மா ஏது? அஞ்ஞான இருள் ஏது? முழு கருப்பு ஏது? அருளாளனே! நீ காக்கும் உலகம் எல்லாம் நீ அறிய (சாட்சியாக) உன் போபுரவாசலில் கொடி கட்டினேன். (ஏது என்று கேட்டவற்றையெல்லாம் அறிந்துகொள்ள கொடி கட்டினேன்.)

(வாக்கினாலும் மத்தினாலும் எக்காலத்திலும் உற்று அறிய முடியாதவன் இறைவன். பசு ஞானம் பாச ஞானங்களை நீக்கி பதிஞானத்தால் அறியவும், அறிந்த பின் திருவருளை விட்டுப் பிரியாதிருக்கவும் அருள் நல்குமாறு கொடி கட்டினேன்.)

வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்காது உணர்வரிய தன்மையனை – நோக்கிப்
பிறித்துஅறிவு தம்மில் பிரியாமை தானே
குறிக்கும் கொடிகட்டினேன். 3

வாக்கு மனங்களால் ஒரு காலத்திலும் தாக்காமல் அறிந்து உணர்வதற்கு அரிய தன்மையை உடையவன் இறைவன். இறைவனைப் பற்றி விசாரித்துப் பார்த்து பகுத்து ஆராய்ந்து அவன் அறிவுக்கறிவாய்ப் பொருந்திப் பிரியாமல் இருப்பதை உணர்ந்து கொண்டேன். அவ்வாறு உணர்வதற்கு அருள் நல்க வேண்டிக் கொடி கட்டினேன்.

(வாக்குக்கும் மனத்துக்கும் அப்பாற்பட்டு அறிதற்கு அரியவனாய் அறிவுக்கும் அறிவாய் இருக்கக் கூடிய இறைவன், ஆன்மாவில் பொருந்தி அருள வேண்டுமென்று கொடி கட்டினேன்.)

அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் – நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமல் காட்டக் கொடி. 4

| | | | |
|---|---|---|---|
| 5 எழுத்து = | சி, வா, ய, ந, ம | பிஞ்சு எழுத்து = | 'வா' (சத்தித் திருவருள்) |
| 8 எழுத்து = | ஓம், ஹாம், ஹௌம், சி, வா, ய, நம | பெரிய எழுத்து = | 'சி' (சிவம்) |
| 6 எழுத்து = | ஓம், ந, ம, சி, வா, ய | பேசும் எழுத்து = | 'வ' (சத்தி) |
| 4 எழுத்து = | ஓம், சி, வா, ய (அல்லது) சி, வ, சி, வ | பேசா எழுத்து = | 'சி' (சிவம்) |

அஞ்செழுத்துப் பஞ்சாட்சர முதலான மந்திர எழுத்துக்களை உச்சரிக்கும் முறையில் உச்சரித்து, அந்த மந்திரங்களின் அட்சர சொரூபங்களான சத்தியையும் (பிஞ்சு எழுத்து 'வா') சிவத்தையும் (பெரு எழுத்து 'சி') நெஞ்சில் நிறுத்தினால் சத்தியும் சிவமும் (பேசா எழுத்தும் பேசும் எழுத்தும்) ஆன்மாவில் கூடும். அவ்வாறு கூட்டுவிக்க அருள வேண்டுமென்று கொடி கட்டினேன்.

கொடிக்கவி முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# நெஞ்சு விடு தூது

## உமாபதி சிவாசாரியார்

தன்னுடைய குருநாதர் மறைஞான சம்பந்தரிடம், தன்னுடைய நெஞ்சைத் தூது விடுகிறார் உமாபதி சிவம். கொன்றை மாலையை வாங்கி வரச் சொல்கிறார். கலிவெண்பா யாப்பில் 129 கண்ணிகளைக் கொண்டுள்ள இந்நூலுக்கு ஒரு தனிச் சிறப்புண்டு. பதினான்கு சித்தாந்த நூல்களில் இலக்கிய நெறியைப் பயன்படுத்தி யாக்கப்பட்டுள்ள நூல் இதுதான். சிற்றிலக்கிய வகையான தூது பற்றியது.

இறைவனது பெருமை, தன்னுடைய சிறுமை, தலைவன் திருவுலா, தளை இயல்பு, தன் பேறு, அனுகு நெறி போற்றல், புகழல் என்பவை குறித்த செய்திகளைத் தரும் இந்நூலில், தலைவனுக்கான தசாங்கங்கள் பற்றியும் பேசப்படுகிறது.

இறைவன் இயல்பு

பூமேவும் உந்திப் புயல்வண்ணன் பொற்பு அமைந்த
நாமேவு மாது புணர் நான்முகத்தோன் - தாம்மேவிப்
பன்றியும் அன்னமுமாய்ப் பாரிடத்தும் வான் பறந்தும்
என்றும் அறியா இயல்பினான் - அன்றியும்
இந்திரனும் வானோரும் ஏனொரும் எப்புவியும்
மந்தர வெற்பும் மறிகடலும் - மந்திரமும்
வேதமும் வேத முடிவும் விளை விந்துவுடன்
நாதமும் காணா நலத்தினான் - ஓத
அரியான் எளியான் அளவுஇறந்து நின்ற
பெரியான் சிறியான் பெண் பாகன் - தெரியா
அருவான் உருவான் அரு உருவும் இல்லான்
மரியான் மரிப்பார் மனத்தான் - பரிவான
மெய்யர்க்கு மெய்யன் வினைக்கு வினை ஆயினான்
பொய்யர்க்குப் பொய்யாப் பொய் ஆயினான் - ஐயன்
படநாகம் பூண்ட பரமன் பசுவின்
இடமாய் நிறைந்த இறைவன் - சுடர்ஒளியான்

தாமரைப் பூ உந்தியை உடைய மேக நிறத்துத் திருமாலும் பொலிவுடைய நாவில் கலைமகளைக் கொண்ட பிரமனும் முறையே, பன்றியும் அன்னமுமாக மாறி நிலத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகழ்ந்தும் வானில் பறந்தும் தேடினார்கள். அப்படித் தேடியும் அறிய முடியாத இயல்பு உடையவன்;

மேலும் இந்திரன், தேவர்கள், மற்றோர், எல்லா உலகிலும் உள்ளோர் மந்திரமலையில் உள்ளவர்களும் அலை கடலில் உள்ளோரும் ஏழு கோடி மந்திரங்களும், நான்கு வேதங்களும், வேத முடிவான உபநிஷத்துக்களும், அறிவுக் கருவிகளுக்குத் துணை செய்யும் விந்துவாகிய ஒளியும், நாத உந்தியும் காண முடியாத நலம் கொண்டவன்.

சொல்லி உணர்த்த முடியாதவன்; ஆனால் எளியன்; அளக்க முடியாதபடி பெரியவன்; நுண்மையானவன்; பெண்ணைப் பாகமாக உடையவன்;

கண்ணிற்குத் தோன்றாத அருவம் ஆகியவன்; அருளால் உருவம் கொள்பவன்; அருவும் உருவுமாக அல்லாதவனுமாக உள்ளவன்.

அவன் என்றும் அழியாதவன்; பிறந்து இறந்து மாளும் உயிர்களின் மனத்தில் இருப்பவன்; அன்புள்ள மெய்யடியார்க்கு மெய்யானவன்; வினைகளைத் தொழில்படுத்துபவன்; நம்பிக்கை இல்லாதவர்க்கும் பொய் எனப் பேசுவோர்க்கும் பொய்யாயிருப்பவன்; யாவர்க்கும் தலைவன்; படமெடுத்த நாகத்தை அணிந்த பரம்பொருள்; ஆன்மாக்கள் எல்லாவற்றிலும் (பசு) இடங்கொண்டு விளங்குபவன்.

## உயிர் இயல்பு

என்றும்உளன் அன்று அளவும் யானும் உளனாகி
நின்ற நிலையில் தரித்து நில்லாமல் - சென்று சென்று
தோற்றியிடும் அண்டம் சுவேதசங்கள் பாரின் மேல்
சாற்றும் உற்பீசம் சராயுசங்கட்கு - ஏற்ற பிறப்பு
எல்லாம் பிறந்தும் இறந்தும் இருவினையின்
பொல்லாங்கு துய்க்கும் பொறியிலியேன் - கல்லா
உணர்வின் மிசையோடு உலகாய் அதனைப்
புணர்வது ஒரு புல்லறிவு பூண்டு - கணையின்
கொடிது எனவே சென்று குடிபழுதே செய்து
கடிய கொலை களவு காமம் - படியின்மிசைத்
தேடி உழன்று தெரிவைத் தெரியாமல்
வாடி இடையும் மனம் தனக்கும் - நாடி அது
போன வழி போகும் புந்திக்கும் புந்தியுடன்
ஆன திறலர் அகந்தைக்கும் - மேனி
அயர அயர அழிய அழியும்
உயிரின் துயரம் உரையேன் - வயிரமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே நிலையில் இருக்காமல், பற்பல பிறவி, பற்பல முறையில் பிறந்து இளைத்து, மீண்டும் மீண்டும் பிறந்தும் இறந்தும் சுற்றி வந்து, இரண்டு வகை வினைகளின் பயன்களை அனுபவித்து, உணர்வு பல பெற்று, சிற்றறிவு கொண்டு, கூர்மையான அம்பையும் விட வேகமாகச் சென்று பல தவறுகளைச் செய்து, கொலையும் களவும் காமமும் கொண்ட தீச் செயல்களைச் செய்து, இவை பலவும் தேடித் தேடி உழன்று, உயிர்களுக்கெல்லாம் நன்மை செய்யம் திருவருளைப் புரிந்துகொள்ளாது வாடி, சலிப்படைகின்ற மனதுக்கு ஆளாகி, மனம் விரும்புகின்ற புத்தி வழியில் சென்று, அதனால் அகந்தைக்கும் ஆளாகி, உடல் தளர்ந்து, மூப்படைந்து, நலிந்து, துயரங்கள் பல கண்டு தவிக்கிறது உயிர். உயிரின் துயரங்கள் எடுத்துக் கூற அளவில்லாதன ஆகும்.

தளையின் இயல்பு

**கொண்டது ஒரு காமனுக்கும் கோபனுக்கும் மோகனுக்கும்**
**மண்டு மத மாச்சரியனுக்கும் - திண் திறல்சேர்**
**இந்திரியம் பத்துக்கும் ஈர் ஐந்து மாத்திரைக்கும்**
**அந்தம் இலாப் பூதங்கள் ஐந்துக்கும் - சிந்தை கவர்**
**மூன்று குற்றம் மூன்று குணம் மூன்று மலம் மூன்று அவத்தை**
**ஏன்று நின்று செய்யும் இருவினைக்கும் - தோன்றாத**
**வாயு ஒரு பத்துக்கும் மாறாத வல்வினையே**
**ஆய கிளைக்கும் அருநிதிக்கும் - நேயமாம்**
**இச்சை கிரியை இவை தரித்து அங்கு எண்ணிலா**
**அச்சம் கொடுமை அவை பூண்டு - கச்சுஅரவன்**
**சீரின் நிலை நில்லாமல் திண்டாடும் பல்கருவி**
**வாரில் அகப்பட்டு மயங்கினேன்**

காமம், குரோதம் (சினம்), மோகம், மதம், மாச்சரியம் ஆகிய தீய குணங்களில் பட்டு மயங்குகிறேன்.

ஞானேந்திரியங்கள் ஐந்தும் கன்மேந்திரியங்கள் ஐந்தும் சுவை, ஒளி, ஓசை, ஊறு, மணம் என்ற தன்மாத்திரைகள் ஐந்தும் இவற்றின் செய்கைகளான உண்ணுதல், காணுதல், கேட்டல், தொட்டு உயிர்த்தல், முகருதல் ஐந்தும் ஆகிய மாத்திரைகள் பத்தும் பெரும் பூதங்கள் ஐந்தும் ஆதியாத்மிகம் (பிற ஆன்மாவால் வருவன) ஆதிதைவிகம் (தெய்வத்தால் வருவன) ஆதிபௌதிகம் (பூதங்களால் வருவன) ஆகிய குற்றங்கள் மூன்றும் குணங்கள் மூன்றும் மலங்கள் மூன்றும் கேவலம், சகலம், சகல கேவலம் ஆகிய அவத்தைகள் மூன்றும் நல்வினை தீவினைகள் ஆகிய இரண்டும் (வெளியில் தெரியாத) வாயுக்கள் பத்தும் மாற்ற முடியாத ஊழ்வினையும் பிறவியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த உறவும் தேடிய செல்வமும் அறிவு இச்சை செயல் ஆகியவையும் அச்சம் கொடுமை ஆகியவையும் இன்றும் பிறவும் என்னை மயக்கி விட்டன.

பாம்பினைத் தன் கச்சாக அணிந்த சிவபெருமான் வழியில் நில்லாமல் வேறு பல சமயங்களில் ஈடுபட்டும் மயங்கினேன்.

- தேருங்கால்

உன்னை ஒழிய உறவு இல்லை என்னும் அது
தன்னை அறிவைத் தனிஅறிவை - முன்னம்
தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை அவர் என்று - நிலைத் தமிழின்
தெய்வப் புலமைத் திருவள்ளுவர் உரைத்த
மெய் வைத்த சொல்லை விரும்பாமல் - ஐவர்க்கும்
ஆவதுவே செய்து அங்கு அவர் வழியைத் தப்பாமல்
பாவம் எனும் பௌவப் பரப்பு அழுத்திப் - பூவையர் தம்
கண்வலையில் பட்டுக் கலவிக் கலை பயின்று
உண்மை அறிவுணர்ச்சி ஓராமல் - திண்மையினால்
நாவில் கொடுமை பல பிதற்றி நாள்தோறும்
சாவின் பிறப்பில் தலைப்பட்டு இங்கு - ஆவிநிலை
நிற்கும் வகை பாராய் நிலையான நெஞ்சமே
பொற்பினுடன் யானே புகலக் கேள்

ஆராய்ந்து பார்க்கும்போது கடவுளாகிய உன்னைத் தவிர எனக்கு யாரும் உறவில்லை என்னும் கருத்தை, ஆன்மாவின் அறிவையும் (பசுஞானம்) பரம் பொருளின் மேலான மெய்யறிவையும் (பதிஞானம்) முன்பு எய்தியவர்கள் கூறினர். இவ்வுடலையும் உலகவாழ்வையும் முழுதுமாகத் துறந்தவர்களான அவர்கள் கூறிய இத்தகைய உண்மைகளை உணராதவர், மயங்கி மாயைகளின் வலையில் பட்டவர் என்று கூறிய தெய்வப் புலமைத் திருவள்ளுவரின் மெய்யான கருத்தையும் விரும்பாமல் (அறிந்து கொள்ளாமல்) ஐந்து புலன்களுக்கு விருப்பமானதையே செய்து, அவை காட்டும் வழியில் மட்டும் தவறாமல் நடந்து, பாவம் என்னும் கடல்பரப்பில் மூழ்கி வருந்துகிறேன். ('தலைப்பட்டார் தீரத்து றந்தார் மயங்கி வலைப்பட்டார் மற்றையவர்' என்பது திருக்குறள் சொற்றொடரே ஆகும்.) மேலும், பெண்களின் கண்வலையில் பட்டு, அவர்களுடன் உறவு கொண்டு, அதனால் உண்மையை உணராமல், நாவினால் பல கொடுஞ்சொற்களும் சொல்லி, நாள்தோறும் மீண்டும் சாகவே யாவும் செய்து நிற்கிறேன். இத்தகு ஆவியின் நிலையைப் பார், நிலைபெற்ற நெஞ்சமே! நான் சொல்வதை இனியேனும் கேள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனது நிலை

-வெற்பின் மிசை

வந்திருக்க வல்லான் மதியாதார் வல் அரணம்
செந்தழலின் மூழ்கச் சிரித்த பிரான் - அந்தம் இலா
வேத முடிவில் விளைவில் விளைவில் ஒளி
ஆதி அமலன் நிமலன் அருள் - போத
குறி உள் புகுதும் குணவன் - நெறிகொள்
வெளியில் வெளியில் வெளியன் வெளியில்
ஒளியில் ஒளியில் ஒளியன் - ஒளியில்
அளியில் அளியில் அளியன் அளியல்
அளவில அளவில் அளவன் - அளவுஇறந்து
நின்றான் அனைத்தும் நிறைந்தான் நினைப்பவர்பால்
சென்றான் தெரியத் தெரியாதான் - குன்றா
விளக்காய் நிறைந்த விரிசுடரான் விண்மேல்
துளக்காமல் நின்ற பெரும்சோதி - உளக் கண்ணுக்கு
அல்லாது தோன்றா அமலன் அகிலம் எலாம்
நில்லாமல் நின்ற நிலையினான் - சொல்ஆரும்
ஈசன் பெருமை இருவினையேன் உன்தனக்குப்
பேசும் தகைமை எல்லாம் பேணிக் கேள்.

கயிலை மலையில் வந்து தங்கும் வல்லமை உள்ளவன்; திரிபுரங்களாகிய வலிய அரக்கர்களின் கோட்டைகளை நெற்றிக்கண் நெருப்பால் சிரித்தபடியே அழித்தவன்; முடிவற்ற வேதமும் அவற்றின் முடிபொருளாகிய ஒளி முதலியவையாகத் தோன்றும் குற்றமற்றவன் (அமலன்); இயற்கையாகவே பாசங்களிலிருந்து நீங்கியவன் (நிமலன்); (தனித்த வகையில் குற்றம் இல்லாததை அமலன் என்றும் பாச உயிர்களோடு பழகியதால் அவற்றின் தொடர்பு இருக்குமோ என்ற ஐயத்தை நீக்கியதால் நிமலன் என்றும் கூறுவர்) திருவருள் துணையுடன் அறியாமையை நீக்கி, மெய்யறிவில் ஈடுபட்டு, எதையும் அறியும் ஞானிகள் உள்ளத்தில் நுழையும் எண் குண இயல்பினன்; ஆகாயமாகிய வெளியாகவும் அதற்குக் காரணமாகிய கலைஆகிய வெளியாகவும் அவற்றுக்கும் காரணமான வெளியாகவும் இருப்பவன்; வெளியில் ஈடுபடாத மாயை எனும் ஒளியாகவும் பூதங்களில் ஒன்றாகிய ஒளியாகவும் இவற்றுக்கு ஒளி தருபவனாகவும் உள்ளவன்; வித்தாகிய ஒளியில் தோன்றும் நாதத்திற்கும், அதற்குக் காரணமான பரநாதத்துக்கும், அதற்கும் காரணமான பராசக்தியாகவும் அதற்கே காரணமாகவும் நின்றவன்; அளக்க அளக்க இயலாதவன்; அளவைகளால் அளந்து உணர முடியாமல் அவற்றுக்கும் அப்பால் நிற்பவன்; எல்லாவற்றிலும் நிறைந்து இருப்பவன்; தன்னை விடாமல் நினைப்பாரிடத்தில் சென்றவன்; தெரிவிக்கும் எதனாலும் தெரிந்து கொள்ள முடியாதவன்; குறைவில்லாத ஒளிதரும விளக்காக, நிறைந்த விரிசுடராக, வானத்தில் என்றும் மறையாமல நின்ற பெரும் சோதி வடிவினன்; உள்ளக்கண்ணுக்கு மட்டுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றுபவன்; படைப்பு முழுதும் தான் இருப்பது தெரியாமல் ஆனால், எல்லாவற்றுள்ளும் இருப்பவன்; இவ்வாறு பற்பல பெருமைகளைக் கொண்ட ஈசன், சொல்லாமல் உணர்த்த முடியாத ஈசன் பெருமையை இருவினை கொண்ட நான் சாத்திரங்களில் உள்ளபடி சொல்கிறேன். நெஞ்சே விருப்பிக் கேட்டபாயாக.

## *தசாங்கம்*

**1. மலை**

பலவும் கடந்து பரிந்து அருள்சேர் பண்பால்
குலவி விளங்கு குணக் குன்றோன்

**2. ஆறு**

-இலகவே
செய்ய தருமச் செழுங்கிரியின் மீது இழிந்து
வையம் பரவ மகிழ்ந்து எழுந்து அங்கு - ஐயம்
களவு பயம் காமம் கொலை கோபம் காதி
அளவுஇல் வினை எல்லாம் அவிழ்த்து இங்கு - உளம்மகிழத்
தொம் எனவே எங்கும் முழங்கிச் சுருதி பயில்
செம்மை தரும் ஆகமங்கள் சேர்ந்து ஓடி - மும் மலத்தின்
காடு அடங்க வேர் பறித்துக் கல்விக் கரை கடந்து அங்கு
ஓடு பல பூதத்து உணர்வு அவிழ்த்து - நீடு புகழ்
மெய் வாய் கண் மூக்குச் செவி என்னப் பேர் பெற்ற
வையாய வேட்கை அவா அழித்து - நையும் இயல்
வாக்குப் பாதம் பாணி பாய் உபத்தம் பலவும்
நீக்கிச் செறிந்து நிறைந்து ஓடிப் - போக்கு அரிய
பந்தம் எனும் சோலை பறித்துப் பரம் தலைக்கு
மந்த மணம் புத்தி இடன் ஆங்காரம் - சிந்தை விழ
மோதி அலைக்கும் அருள் நீர்மை முக்குணமும்
காதி உரோமம் எலாம் கைகலந்து - சீதப்
புளகம் அரும்பிப் புலன் மயக்கம் போக்கி
விளைவு இல் புலன் முட்ட மேவிக் களப தன
மாதர் மயக்கம் அழித்து வளர் மண்டலத்தின்
சோதி ஒரு மூன்றினையும் சோதித்து - நீதியினால்
ஆதாரம் ஆறினும் சென்று ஆறி அடல் வாயுக்கண்
மீதான பத்தும் மிகப் பரந்து - காதிப்
பிருதிவி அப்புத் தேயு வாயு ஆகாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதி நிலம் ஐந்தும் ஓடி - மறுஇலா
நான்முகன் மால் ஈசன் மகேசன் நலம் சிறந்த
தான்முகம் ஐந்தாம் சதாசிவமும் - ஆனது ஒரு
விந்து நாதம் கடந்து சுத்த வெறு வெளியில்
அந்தம் இலாப் பாழ் அடங்கத் தேக்கிய பின் - முந்திவரும்
அவ்வறிவுக்கு அப்பாலும் சென்று அகண்டம் உள்ளாக்கிச்
செவ்வறிவே ஆகித் திகைப்பு ஒழித்து அங்கு - எவ்வறிவும்
தான் ஆய வீடு அருளித் தன்னில் பிரிவு இல்லா
ஊனாகி எவ்வுயிர்க்கும் உள்புகுந்து - மேனி இலா
அஞ்சு அவத்தையும் கடந்து ஆய பெரும் பேரொளிக்கே
தஞ்சம் எனச் சென்று தலைப்பட்டு - வஞ்சம் அறத்
தான் அந்தம் இல்லாத தண் அளியால் ஓங்கி வரும்
ஆனந்தம் என்பதோர் ஆறு உடையான்

(தலைவனுக்குரிய உறுப்புக்கள் தச + அங்கம் = தசாங்கம் எனப்டும்)
ஆணவம் கன்மம் மாயை என்னும் பல பாசங்களைக் கடந்து இரக்கமும் அருளும் கொண்ட பண்பினில், உயிர்க்கு உயிராகி எண்குணமும் ஒரு குணமாக நின்ற குன்றே!

சிவமாகிய ஆறு, சிவபுண்ணியம் (தருமம்) என்னும் மலையிலிருந்து கீழே இறங்கி, உலகம் என்றென்றும் தொழுது மகிழ்ந்திடப் பாய்ந்து வந்து, உயிர்களிடத்து உள்ள ஐயம், களவு, அச்சம், காமம், கொலை, கோபம் ஆகியவற்றை அழிக்கிறது.

உளம் மகிழத் 'தொம்' என்ற ஓசையுடன் எங்கும் முழக்கம் இட்டு, வேதம் மற்றும் ஆகமம் முதலியவற்றைச் சேர்த்துக் கொண்டு ஓடி, மும்மலக்காட்டின் வேர்கள் முழுவதையும் அழித்து, கல்வியாகிய கரையைக் கடந்து ஓடுகிறது.

ஐந்து பூதங்களால் வரும் உணர்வுகளை அழித்து, நீண்ட புகழ்க்குரிய மெய்வாய்கண் மூக்குச் செவி என்று பெயருடைய ஐந்து வேட்கைகளின் விருப்பங்களை அழித்து, வாக்கு கால் கை எருவாய் நீர்வாய் என்ற கன்மேந்திரியங்களையும் நீக்கிச் செறிவு குறையாது ஓடுகிறது.

பந்த பாசம் எனும் சேலையை அழித்து, எங்கும் பரவி, அலையும் மனம் புத்தி சித்தம் அகங்காரம் எனும் அந்தக்கரணங்கள் நான்கும் விழும்படி மோதுகிறது.

அருள் தன்மையால் இராசதம், தாமசம், சாந்தம் எனும் முக்குணங்களையும் அழித்து, உடம்பில் உள்ள உரோமங்கள் யாவும் சிலிர்த்து நிற்கச் செய்து, புளகம் வரச் செய்து, புலன்களின் மயக்கத்தைப் போக்கி, அதன் பயனாய் புலன்கள் அடங்குமாறு மேவுகின்றது. சந்தனம் பூசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்பை உடைய பெண்களின் மேல் வரும் மயக்கத்தை அழித்து, பூவுலகின் சோதிகள் மூன்றினையும் சோதனை செய்து (சூரிய சந்திர அக்னி மண்டலம் மூன்று. இவை உடலிலும் கொள்க) ஆறு யோக ஆதாரங்களிலும் சென்று பொருந்தி, வளமையுடைய வாயுக்கள் பத்தின் மேலும் பரவி, நிலம் நீர் நெருப்பு வாயு ஆகாயம் ஆகிய பூதங்கள் ஐந்திலும் ஓடி, குற்றமில்லாத பிரமன் திருமால் உருத்திரன் மகேசன் சதாசிவம் எனப் பொருந்தி, விந்து நாதம் என்ற தத்துவநிலைகள் கடந்து, சுத்தமான வெறும் வெளியில் எல்லை இல்லாத பாழ் இடத்தில் முழுதுமாய்த் தேங்கி நின்று, பிறகு, அறிவுக்கு அப்பாலுமாகி, திகைப்பாரைத் திகைப்பு ஒழித்து, வீடுபேறு அருளி, தானும் ஆன்மாவை விட்டுப் பிரியாதிருந்து, எவ்வுயிர்க்கும் உள்ளே சென்று, உருவம் இல்லாத ஐந்து அவத்தைகளையும் கடந்து, பெரிய பேரொளிக்குள் தஞ்சமடைந்து, வஞ்சமில்லாது, எல்லையில்லாத குளிர்ந்த அருள் ஓங்கி வரும் ஆனந்தம் என்பதாகிய ஆற்றை உடையவன்.

### 3. நாடு

-ஆனந்தம்

பண்ணும் பயன் கருதி ஆகமங்கள் பார்த்து உணர்ந்து
நண்ண அரியது ஒரு நாடு உடையான்

உயிர்களுக்குப் பேரின்பம் செய்யும் வேதம் ஆகமம் என்பவற்றை உணர்ந்து அவ்வழியில் நிற்கும் வீட்டு உலகே கடவுளின் நாடாகும்.

### 4. ஊர்

-எண்எண்

கலையால் உணர்ந்து கருத்து அழிந்து காம
நிலையானது எல்லாமும் நீத்து அங்கு அலைவு அறவே
தேட்டு அற்ற சிந்தை சிவஞான மோனத்தால்
ஓட்டு அற்று வீற்று இருக்கும் ஊர் உடையான்

உலக இன்பத்தைத் தரும் அறுபத்து நான்கு கலைகளை உணர்ந்து, அவற்றால் பெறும் பயன் உலக இன்பம் என அறிந்து, காமம் நிலை கொண்ட எல்லாத் துறையையும் நீக்கி, மனம் அலையாது, சிவஞான மோனத்தால் வேறுபுறம் திரும்பாமல் இருக்கும் ஊரைத் தன் ஊராக உடையான்.

### 5. தார்

-நாட்டத்தால்

தென் நீர் அருவி விழச் சிந்தை மயக்கம் தெளிந்து
உள் நீர்மை எய்தி உரோமம் எலாம் - நண்ணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புளகம் புனை மெய்யர் பொய்யில் கூடாமல்
உள கம்பம் கொண்டு உள் உருகி - அளவு இலா
மாலாய் இருக்கும் அவர் மனத்தை வாங்க அருள்
மேலாய் விளங்கல் அங்கன் மெய்யினான்

கருணையை நினைத்துக் கண்ணீர் விழ, சிந்தை மயக்கம் தீர்த்து, உள்ளத்து இயல்பு புதுமை பெற, மயிர்க்காம்புகள் சிலிர்த்து நிற்க, பொய்யான உலக இன்பத்தில் கூடாமல், உள்ளம் உருகி நிற்கும் மெய்யன்பராம் அடியார் மனத்தை வாங்கித் தன் மெய்யில் மாலையாக அருள் மேவ அணிந்துள்ளான்.

6. குதிரை

-தோலாத
வானம் புவனம் மலை கடல் ஏழ் பாதாளம்
ஊன் ஐந்து பூதத்து உயிர் உணர்ச்சி - ஞானமாய்
எல்லாமாய் அல்லவாய் எண்ணுவார் எண்ணத்துள்
நில்லாமல் நிற்கும் நீள் வாசியான் - சொல்லாரும்

வானம், உலகம், மலை, கடல், ஏழு பாதாளங்கள், உடல், ஐம்பூதங்கள், உயிர், உணர்ச்சி முதலியவற்றில் தோய்ந்தும், ஞானமாகவும் எல்லாமாகவும் அல்லவையாகவும் இருக்கும் தன்மையையும் எண்ணிப் பார்ப்பார் எண்ணத்துள் காணப்படாமல் நிற்கும் தன்மையையும் மன வேகத்தின் இச்சா கிரியா ஞான சத்திகளின் தன்மையையும் தன்னுடைய குதிரையாகக் கொண்டு உள்ளான்.

7. யானை

பாதாளம் ஊடுருவிப் பார் ஏழும் விண் ஏழும்
ஆதாரம் ஆகி அகண்டம் நிறைந்து - ஓத
அரிதாய் எளிதாய் அருமறை ஆறு அங்கத்து
உருவாய் உயிராய் உணர்வாய்ப் - பெரிதாய
வெய்ய துயர்ப் பாசம் அற வீசியே எம்பிறவித்
துய்ய கடலைத துகள் எழுப்பி - ஐயம் உறும்
காமக் குரோத மத மாச்சரியம் காய்ந்து அடர்த்துச்
சாமத் தொழிலின் தலை மிதித்து - நாமத்தால்
கத்தும் சமயக் கணக்கின் விறல் கட்டு அழித்துத்
தத்தம் பயம் கொலைகள் ஆங்கு அழித்தே - தத்திவரும்
பாசக் குழாத்தைப் பட அடித்துப் பாவையர்தம்
ஆசைக் கருத்தை அற வீசி - நேசத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன வேகம் கொண்டு அருள் மும்மதத்தினால்
ஊனையார் தத்துவங்களுள் புகுந்து - தேனைப்
பருகிக் களித்து உயர்ந்து பன்முறை நால் கோட்டான்
மருவித் திகழ் ஞான ஆனையான்

கீழ் உலகு ஏழு, மேல் உலகு ஏழு, நடுவுலகு ஆகியவற்றுக்கு ஆதாரமாகியும் அகண்டதாகவும் எங்கும் நிறைந்ததாகவும் ஓத இயலாததாகவும் எளிதாகவும் அரிய வேதம் மற்றும் ஆறு அங்கங்களின் உருவாகவும் உயிராகவும் உணர்வாகவும் பெரிதாகவும் துன்பம் தரும் பாசங்களை எல்லாம் அழித்துப் பிறவிக்கடலை நீக்கிக் காமகுரோதம் நீக்கிப் பெண்களின் ஆசையாகிய கருத்தெல்லாம் முழுதும் நீக்குவதாகவும் நேசமாகிய வேகம் கொண்டதாகவும் அருள் சத்திகளாகிய லட்சுமி துர்க்கை சரஸ்வதியை மூன்றாகக் காட்டி முறைப் படுத்துவதாகவும் உடம்புகளில் படியும் தத்துவங்களில் புகுந்ததாகவும் திருவருள் தேனைப் பருகிக் களித்து உயர்ந்து வேதங்களாகிய நான்கு தத்துவங்கள் பெற்றுத் திகழ்வதாகவும் உள்ள ஞானமே அவனது யானைப் படையாம்.

### 8. கொடி

–இருமுச்
சமையம் கடந்து தனக்கு ஒப்பிலாத
சுமை துன்பம் நீக்கும் துவசன்

ஆறுவகைச் சமயங்களையும் கடந்து, தனக்கு யாரும் ஈடில்லாத தன்மையால் உயிர்களின் வாழ்க்கைச் சுமையும் துன்பமும் நீக்கி அருளுவதையே தன்னுடைய கொடியாக உடையவன். அவன் அருளே அவன் கொடி.

### 9. முரசு

தம்மை மறந்து தழல் ஒளி உள்ளே இருத்தி
இம்மை மறுமை இரண்டு அகற்றிச் - செம்மையே
வாயுவை ஓடா வகை நிறுத்தி வானத்து
வாயுவைம் ஆங்கே உற அமைத்துத் - தேயுறவே
என்றும் ஒரு தகைமையாய் இருக்கும் இன்பு அருளே
நின்று முழங்கு நெடு முரசோன்

தம் உடல் உணர்வை மறந்து, இறைவனின் ஒளியை மனத்தில் இருத்தி, இம்மை மறுமை இரண்டும் துன்பமிலாது நீக்கி, பிராணவாயுவை உள்ளிருந்து வெளியில் ஓடாத வகையில் நிறுத்தி, அதுபோல வெளியில் உள்ள காற்றையும் தமக்குள் புகாமல் யோக சாதனைகள் செய்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டலினியின் நெருப்பு கபாலத்திற்குச் செல்லுமாறு செய்து, என்றும் ஒரே நிலையில் இருக்கும் சிவானந்தத்தைக் காண்பவர் உள்ளே ஒலியாய் முழங்குவான்; நாதமாக இசைப்பான் இறைவன். அத்தகு முழக்கமே அவனுடைய முரசாகும்.

**10. ஆணை**

-அன்றியும்

**மாலும் அயனும் வகுத்து அளித்த வையம் எலாம்**
**சாலும் இதற்கு அப்பாலும் எப்பாலும் - மேலை**
**உலகும் உலகால் உணர ஒண்ணா ஊரும்**
**இலகி நடக்கும் எழில் ஆணையான் - அலகு இறந்த**

திருமாலும் பிரமனும் வகுத்தும் காத்தும் செய்த உலகம் எல்லாவற்றிலும் அப்பால் உள்ள அசுத்தமாயை உலகுகளிலும் அதற்கும் மேல் உள்ள சுத்தமாயா உலகுகளிலும் பிற உலகுகளால் உணர முடியாத எல்லா உயிர்களிலும் தன் கருத்துக்கு ஒத்து நடக்கும் அழகிய ஆணையை உடையவன்.

இறைவன் பெருமை

**காட்சியான் காட்சிக்கும் காணான் கலை ஞான**
**ஆட்சியான் ஆட்சிக்கும் ஆயிலான் - சூட்சியான்**
**பாரும் திசையும் படர் ஒளியாலே நிறைந்தான்**
**தூரும் தலையும் இலாத் தோன்றலான் - வேராகி**
**வித்தாகி வித்தின் விளைவாகி மேவு தனுச்**
**சத்தாதி பூதங்கள் தாம் ஆகிச் - சுத்த**
**வெறு வெளியாய்ப் பாழாய் வெறும் பாழுக்கு அப்பால்**
**உறு பொருளாய் நின்ற ஒருவன்**

அளக்க முடியாத அறிவுடையவன்; கண்பார்வைக்குக் காண்படாதவன்; உலகில் உள்ள எல்லாக் கலை ஞானங்களையும் தானே ஆளுபவன்; அக்கலை ஞானத்தைப் பயின்றார்களையும் ஆளுபவன்; ஆய்ந்து செய்யும் திறத்தான்; எல்லா உலகுக்கும் எல்லாத் திசைகளுக்கும் படரும் ஒளியால் நிறைந்தவன்; ஆதியும் அந்தமும் இல்லாதவன்; வேராகவும் விதையாகவும் விளைவதாகவும் நிற்கும் காரணமானவன்; (நிமித்த காரணன் = வினைக்கு முதல் காரணன்); உடல்கள் அதில் உள்ள கருவிகள், உலகுகள், அவற்றின் அனுபவம் ஆகியவையாகவும் அவற்றுக்கான பூதங்களாகவும் இருப்பவன்; சுத்தமாகவும் வெறும் வெளியாகவும் வேறு பொருளில்லாப் பாழாகவும் அதற்கு அப்பாலுமாகவும் பிறவாகவும் இருப்பவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான ஆசிரியர்

-பொறி இலியேன்

வெம்பும் பிறவி அலை விழாமல் வீடு அளித்த
சம்பந்த மாமுனி என் தம்பிரான் - அம்புவியோர்
போற்றும் திருவடி என் புன் தலை மீதே பொறித்தோன்
ஏற்றின் புறத்து அமைத்த எம் கோமான்

தகுதியற்ற என்னை துன்பம் சார்ந்த பிறவிக்கடலில் விழாமல் வீடு கொடுத்தருளிய மறை ஞானசம்பந்தன் என்னும் பெருமுனிவன் என் தலைவன். உலகினர் புகழும்படியாகத் தம் திருவடியை என் தலைமீது வைத்தவன். இடபத்தின் முதுகில் (சிவமாய்) ஏறியமர்ந்த என் கோமகன்.

-சாற்றுவார்

சாற்றும் பொருளான் தனி முதல்வன் தான் அல்லான்
வேற்று இன்பம் இல்லா விளங்கு ஒளியான் - போற்றும்
குரு வேடம் ஆகிக் குணம் குறி ஒன்றில்லாப்
பெரு வேடமாய் நிறைந்த பெம்மான் - கரு வேடம்
கட்டும் உருக் கட்டு அறுத்தான் கற்றவர் வாழ் தில்லையான்
எட்டும் அவர்க்கு எட்டா இயல்பினான்

நூல் உணர்ந்தோர் கூறும் நுண் பொருளாகியவன். தனித்த முதல்வன் தன்னைத் தவிர வேறு இன்பம் கொள்ளாது விளக்கமான ஒளியாய் இருப்பவன். போற்றத்தக்க குருவேடம் கொண்டவன். பிறருக்குள்ள முக்குணமும் அடையாளமும் ஒன்றுமில்லாது பெரிய வேடம் உடையவனாக நிறைந்த பெரியோன். கருவில் விழக் காரணமான கன்மமலம் ஆணவ மலம் இரண்டும் அறுத்தவன். வேதம் கற்றுணர்ந்தவர்கள் வாழும் தில்லையில் இருப்பவன். பலவற்றையும் எட்டிய எவராலும் எட்டப்படாதவன்.

குரு உபதேசம்

-மட்டு அவிழ்தார்

வானோன் பவனி வரக்கண்டு வல்வினையேன்
ஏனோரும் ஏத்துதல் கண்டு ஏத்தினேன் - தான் என்னைப்
பார்த்தான் பழைய வினைப் பஞ்ச மலக் கொத்தை எல்லாம்
நீத்தான் நினைவு வேறு ஆக்கினான் - ஏத்துஅரிய
தொண்ணூற்று அறுவர் பயில் தொக்கில் துவக்கு அறுத்தான்
கண் ஊறு தேன் அமுதம் காட்டினான் - வெண்நீறும்
வேடமும் பூசையுமே மெய் என்றான் பொய் என்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடையும் வாழ்க்கை மனையுமே - நாடு அறிய
அஞ்சு எழுத்தின் உள்ளீடு அறிவித்தான் அஞ்சு எழுத்தை
நெஞ்சு அழுத்தி நேயம் மயலாக்கி - அஞ்சு எழுத்தை
உச்சரிக்கும் கேண்மை உணர்த்தி அதில் உச்சரிப்பு
வைச்சிருக்கும் அந்த வழிகாட்டி - அச்சம் அறச்
சென்று விளக்கை எழத் தூண்டிச் செஞ்சுடரின்
ஒன்றி ஒரு விளக்கின் உள் ஒளியாய் - நின்ற
பெருவிளக்கின் பேரொளியின் உள்ளே பிரசம்
மருவும் மலர் போல் மதித்து அங்கு - அருவின் உருக்
கொள்ளா அருளைக் கொளுத்திக் குணம் குறி ஒன்று
இல்லா இடத்தே இளப்பு ஆற்றி - விள்ளாத
உள்ளம் முதலாக உற்றது எல்லாம் வாங்க அருள்
வெள்ள மயல் அளித்து மேவினான் - கள்ளம்
மறப்பித்தான் மெய்ஞ்ஞானம் ஆக்கி மனம் எல்லாம்
இறப்பித்தான் என் பிறவி ஈர்த்தான் - விறல் சொல்லுக்கு
எட்டானை யார்க்கும் எழுதா இயல் குணங்கள்
எட்டானை ஆற்றா எழுத்தினான் - மட்டுஆகும்
பாடலார் ஆடலார் பண்பலார் நண்பலார்
ஆடலார் அடல் அகன்பதியாம் - கூடலார்
காணக் கிடையாதான் காண்பார்க்குக் காட்சியான்
பாணர்க்கு இலகு பலகையிட்டான் - சேணில்
சிறந்த உருவான் திருமாலுக்கு எட்டான்
நிறைந்த திருஉருவாய் நிற்போன் - கறங்குடனே
சூறை சுழல் வண்டு சுழல் கொள்ளி வட்ட மனம்
ஆறில் கருணையினால் மாற்றினான் - நீறு அணிந்த
மெய் அமலன் நிமலன் அருள் வீடு அளிக்கும்
ஐயன் அறிவுக்கு அறிவு ஆயினான் - பொய்யர்பால்
பொய்மையாய் நின்றான் புரிந்தவர்தம் நெஞ்சத்து
உள் மெய்மையாய் நின்று விளங்கினான்

(மறைஞானசம்பந்தர் உபதேசம் பெற்று மலபரிபாகம் பெற்றதாகக் கூறுவது)

தேன் அவிழும் மாலையணிந்து அந்தத் தேவன் பவனி வந்து கண்டு மற்றவர்கள் வணங்குவதும் கண்டு நானும் வழிபட்டேன். என்னைப் பார்த்த பார்வையினாலேயே என் ஐந்து வகை மலங்கள் முழுவதையும் நீக்கினான். என் நினைவை உலகியலில் இருந்து அருளியலுக்கு மாற்றினான். (ஐந்து மலமானவை ஆணவத்தால் வரும் கரண கன்மம், மாயை, காரிய கன்மம், மாமாயை, திரோதான மலம் ஆகியவையாம்.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்ணூற்று ஆறு தத்துவக் குப்பைகளின் தொடர்பை அறுத்தான். இதை நினைக்கும் போது ஆனந்தக் கண்ணீர் வருமாறு செய்தான். திருநீறும் அடியார் வேடமும் பூசையும் மட்டுமே மெய்யானவை என்றான். செல்வம் (மாடு), வாழ்க்கை, மனை என்பவை பொய் என்றான். திரு ஐந்தெழுத்தின் பொருளை அறிவித்தான்.

அஞ்செழுத்தின் மேல் விருப்பம் கொண்டு நெஞ்சில் நீங்காதிருக்கச் செய்து, அங்செழுத்தை உச்சரிக்கும் அகப்பூசை மரபை உணர்த்தி, அவை ஆதாரங்களில் வைக்கும் வழியைக் காட்டி, அப்போது எழும் அச்சத்தையும் நீக்கி, விளக்குச் சுடரைப் பெருக்கி, அதனுள் நிறம் ஒளி இவை மூன்று விதமாக ஒன்றியிருப்பதை விளக்கி, (இப்பேரொளியால் இம்மூன்றும் இருப்பது போல் சி–வ–ய என்ற முதல் மூன்று எழுத்தும் இணையும்) தேன் இருக்கும் தாமரை போல் வீடு பேறடையும் காட்சியை விளக்கி, கருவில் மீண்டும் உருக்கொள்ளாதபடி அருள் செய்து, குணமும் அடையாளமும் இல்லாத இடத்தில் இளைப்பாறச் செய்து, சிற்றறிவு கொண்ட உள்ளத்து அனுபவங்களை எல்லாம் வெளிப்படுத்தி அருள் வெள்ளத்தில் இருக்கச் செய்தான்.

கள்ளமான எல்லாம் மறக்குமாறு செய்தான். மெஞ்ஞானம் கொடுத்து மனம் எல்லாம் இறக்குமாறு செய்து, என் பிறவியைப் பிளந்தான். அந்த குருநாதரை வேதங்களாலும் எட்ட முடியாது. அவன் இயல்புகளை எழுதிக் காட்டமுடியாது.

பாடல் ஆடலால் காண முடியாதவன். பண்பிலாதவராலும் நட்பிலாதவராலும் பாரக்கப்பட முடியாதவன். ஆடல் வல்லுநர்கள், பல தாண்டவமும் செய்த மதுரையில் எழுந்தருளியிருக்கும் சிவனாவான். ஊனக் கண்ணால் பார்க்க இயலாதவன். ஞானக் கருவியில் குளிர்ச்சி சேராதபடி இலகு பலகை இட்டவன். தொலைவிற்கும் தெரியும் பெரிய சோதி உருவானவன். திருமாலாகிய பன்றிக்கு எட்டாதவனாக இருப்பவன்.

காற்றாடி, சூறைக்காற்று, சுழலும் வண்டு, கொள்ளி வட்டம் ஆகியவை போலும் சுழலுகின்ற எம் பிறவிச் சுழற்சியை தன்னுடைய மாறாத கருணையினால் மாற்றினவன். திருநீறணிந்த உடலினன், அமலன். நிமலன். அருளால் வீடுபேறு தரும தலைவன். என் அறிவுக்கு அறிவாய் இருப்பவன்.

பொய்யற்குப் பொய்யாகவும் உண்மை புரிந்த ஞானியர்க்கு அவர் நெஞ்சிலேயே மெய்யாகவும் விளங்கியவன்.

-கைமமுவன்

அத்தன்பால் நீ சென்று அடையும் இடத்தை எல்லாம்
சித்தம் சேர் நெஞ்சமே செப்பக் கேள் - நித்தலுமே
பூசி முடித்து உண்டு உடுத்துப் பூங்குழலார் தம் கல்வி
ஆசைதளில்பட்டு இன்ப ஆர்கலிக்குள் - நேசம்உற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று திளைக்கும் இது முத்தி அல்லது வேறு
ஒன்று திளைக்கும் அது முத்தி - அன்றுஎன்று
இலகா இருள் அலகை போல் இகலே பேசும்
உலகாயதன்பால் உறாதே - பலகாலும்
தாம் பிரமம் கண்டவர்போல் தம்மைக் கண்டு ஆங்குஅதுவே
நான் பிரமம் என்பவர்பால் நண்ணாதே - ஊன்தனக்குக்
கொன்று இடுவது எல்லாம் கொலை அல்லவென்று குறித்து
என்றும் அறமே தெய்வம் என்று என்று - வென்றிப்
பொறையே எனும் புத்தன் பொல்லாத புன்சொல்
மிறையே விரும்பி விழாதே - நிறைமேவி
வாழ்பவர்போல் மண்ணுடலின் மன்னும் உரோமம் பறித்துத்
தாழ்வு நினையாது துகில் தான் அகற்றி - ஆழிவிக்கும்
அஞ்சும் அகற்றும் அது முத்தி என்று உரைக்கும்
வஞ்சமணன் பாழி மருவாதே - செஞ்சொல் புனை
ஆதிமறை ஓதி அதன் பயன் ஒன்றும் அறியா
வேதியர் சொல் மெய் என்று மேவாதே - ஆதியின் மேல்

உற்ற திருநீறும் சிவாலயமும் உள்ளத்துச்
செற்ற புலையர்பால் செல்லாதே - நல்தவம்சேர்
வேடமுடன் பூசை அருள் மெய்ஞ்ஞானம் இல்லாத
மூவருடன் கூடி முயங்காதே - நீட
அழித்துப் பிறப்பு அது அறியாது அரனைப்
பழித்துத் திரிபவரைப் பாராதே - விழித்து அருளைத்
தந்து எம்மை ஆண்டு அருளும் சம்பந்த மாமுனிவன்
அந்தம் கடந்து அப்பாலாய் நின்றோன்

(இப்பகுதியில் சிவனைக் காணக்கூடிய இடங்கள் கூறப்படுகின்றன)
சிந்திக்கும் நெஞ்சமே! நான் கூறக் கேள்.

சந்தனம் பூசி, கூந்தல் முடித்து, உண்டு, உடுத்து, மகளிருடன் இன்பம் கண்டு, இன்ப சமுத்திரத்தில் விருப்பத்துடன் அழுந்துவதைத் தவிர வேறு முத்தி இல்லை என்று கூறும் உலகாயதனிடம் சொல்லாதே.

பலமுறையும் பிரம்மத்தைத் தாமே, நேரில் கண்டவர் போல 'நான் பிரமம்' என்பவரிடமும் சொல்லாதே. நாம் உண்பதற்காகப் புலால் தருபவர் செய்யும் கொலை நம்மைச் சாராது என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறமே தெய்வமென்றும் பொறுமையே எப்போதும் வெற்றி தரும் என்றும் புத்தன் சொல்லும் வார்த்தையைக் கேட்டு மயங்கித் தடுமாறாதே.

தம்மைப் பிறர் மதிக்க விரும்பி நடந்து, உடலில் மயிர் பறித்து, நீரால் முழுகாது, உடை மற்றும் உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் எனக்கு வந்து நீக்குவதே முத்தி என்னும் அமணர் பாழியில சொல்லாதே.

பழைய வேதசங்களை ஓதினாலும் அதன் பயனைச் சிறிதும் அறியாத வேதியர்கள் சொல்லை மெய் என்று விரும்பாதே. திருநீற்றையும் சிவாலயங்களையும் உள்ளத்தில் மதித்துப் போற்றாத நீசர்களிடம் சொல்லாதே. அடியார் திருவேடமும் சிவபூசையும் இரக்ககுணமும் மெய் உணர்வும் இல்லாத அறியாமை கொண்ட புறச்சமயத்தாருடன் சேராதே. உலகப் படைப்பை அழிததுப் பின் பிறக்கவைக்கும் சிவனை அறியாது, பழித்துத் திரிபவரைப் பாராதே. கண் விழித்து அருளைத் தந்து எம்மை ஆண்டு அருளும் சம்பந்த மாமுனிவன் எங்குமாய் நின்றான்.

-எந்தை
பிரான் வீற்றுஇருக்கும் ஓலக்கம் எய்தி அடி வீழ்ந்து
இறைஞ்சிப் போற்றி சய சய போற்றி என

அந்த எம் தலைவன் வீற்றிருக்கும் திருவோலக்கத்தை (அரசவை) அடைந்து அவன் அடியில் விழுந்து வழிபட்டுப் போற்றி சயசய போற்றி என்னைக் காப்பாயாக என்று கூறினேன்.

-ஆர்த்த கரி
அன்று உரித்தாய் நின் பவனி ஆதரித்தார் எல்லாரும்
வென்றி மதன் அம்பு பட வீழ்வரோ – நின்றுஇடத்து
நில்லாத செல்வம் நிலை என்று உனை நீங்கிப்
பொல்லா நரகம் புகுவரோ - பல்லாரும்
கத்தும் சமயக் கணக்கில் படுவரோ
சித்தம் பலகால் திகைப்பரோ - முத்தம்
பொருத நகை மடவார் புன் கலவி இன்பம்
மருவி மயங்கி வருவரோ - இருபொழுதும்
நாள் இருபத்து ஏழும் நவக்கிரகமும் நலியும்
கோள் இது என்று எண்ணிக் குறிப்பரோ

தாருகாவனத்து முனிவர்கள் பகையுடன் அனுப்பிய யானையைத் தோல் உரித்தாய்! வெற்றியுடன் நீ வரும் ஊர்வலத்தைக் கண்டோர் மன்மதன் மாயையில் வீழ்வார்களோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில்லாத செல்வத்தை நிலை என்று உன்னை நீங்கிப் பொல்லாத நரகத்தில் புகுவார்களோ? தம் கொள்கையே சிறந்தது என்று ஓங்கிப் பேசும் சமயவாதிகளிடம் செல்வார்களோ? சித்தாந்த சமயம் இருக்கும்போது சித்தம் பலகாலும் திகைத்து நிற்பாரோ? முத்துப் போலும் சிரிப்புடைய பெண்கள் இன்பத்தில் மயங்கி வருவார்களோ? நடசத்திரங்கள் இருபத்தேழும் கோள்கள் ஒன்பதும் தம்மை நலியச் செய்யும் என்று வருந்துவார்களோ?

- வேளை

எரித்த விழியாய் நின் இன்பக் கடற்கே
தரித்து மதி மறந்த தையல் - வருத்தம் எலாம்
தீராய் என உரைத்துச் செங்கமலப் பூந் திருத்தாள்
தாராய் எனப் பலகால் தாழ்ந்து இறைஞ்சி - ஏர்ஆரும்
பூங்கொன்றை வாங்கிப் புகழ்ந்து புரி நெஞ்சமே
ஈங்கு ஒன்றை வாராய் இனி.

மன்மதனை எரித்த விழியுடையவனே! உன்னைக் கண்டது முதலாக உன்னை நெருங்கி உன் இன்பக் கடலில் மூழ்கி மதிமறந்த பெண் ஆனேன்.

என்வருத்தமெலாம் தீர்ப்பாயாக என்று சொல்லிச் செந்தாமரையை ஒத்த திருவடியைத் தருவாயாக என்று பல முறையும் தாழ்ந்து வணங்கி, அழகுடைய பூங்கொன்றையை வாங்கிப் புகழ்ந்து பேசும் என் நெஞ்சமே! இப்போதே இங்கு வருவாயாக!

(தம் குருநாதரைக் கணவனாகவும் தன்னை காதலியாகவும் பாவித்து உமாபதி சிவம் பாடிய நூலிது.)

வெம்பும் பிறவி அலை வீழாமல் வீடு அளித்த
சம்பந்த மாமுனிவன் தார் வாங்கி - அம்புந்தும்
வஞ்ச மேவும் விழியார் வல்வினை எல்லாம் அகல
நெஞ்சமே வாராய் நினைந்து.

பிறவிக் கடலில் வீழாமல் எனக்கு வீட்டுலகைத் தந்த மறைஞான சம்பந்தன் என்னும் மாமுனிவன் மாலையை வாங்கி, அம்பு போலும் விழியுடைய வலிய வினை எல்லாம் அகல, நெஞ்சமே நீ நினைவோடு வருவாயாக.

நெஞ்சுவிடு தூது முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# உண்மை நெறி விளக்கம்

## உமாபதி சிவாசாரியார்

ஆறு விருத்தப் பாக்களால் ஆனது. தசகாரியங்கள் எனப்படும். முதற் செய்யுள் தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி பற்றியும், இரண்டாவது செய்யுள் ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி பற்றியும் ஏனைய நான்கு செய்யுள்களும் சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் பற்றியும் எடுத்துரைக்கின்றன.

இந்த ஆறு தரிசனங்களும் ஒரு ஆன்மா படிமுறையாக உயர்ந்து உயர்ந்து ஈற்றில் சிவபோகமாகிய முத்திப்பேற்றை அடையும் நிலை பற்றிச் சொல்கின்றன.

தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி

**மண்முதற் சிவம தீறாய் வடிவுகாண் பதுவே ரூபம்**
**மண்முதற் சிவம தீறாய் மலஞ்சட மென்றல் காட்சி**
**மண்முதற் சிவம தீறாய் வகையதிற் றானிலாது**
**கண்ணுத லருளா னீங்கல் சுத்தியாய்க் கருதலாமே.** 1

இதன் பொருள் : தான்– ஆன்மாவாகிய தான், கண்ணுதல் அருளால்– நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் அதிட்டித்து நின்று அருளும் ஞானகுருவின் உபதேச மொழிகொண்டு, மண் முதல் சிவம் அது ஈறு ஆய்– பிருதிவிதத்துவம் முதலாக நாதத்துவம் இறுதியாகவுள்ள பிரபஞ்சத்தின், வடிவு காண்பதுவே ரூபம்– வடிவு குணம் தொழில் என்னும் இயல்புகளைத் தனக்கு வேறாகக் காணுதலே தத்துவ ரூபக்காட்சி ஆகும்; கண்ணுதல் அருளால் – மண்முதல் சிவம் அது ஈறு ஆய்– பிருதிவிதத்துவம் முதல் நாதத்துவம் இறுதியாகவுள்ள பிரபஞ்சமானது, மலம் சடம் என்றல்– மாயை ஆகிய மலத்தின் காரியமாகுமென்றும் அஃது உணரும் தன்மை அற்றது என்றும் தன்னறிவிலே விளங்கக்காணுதல், காட்சி– தத்துவ தரிசனம் ஆகும்; கண்ணுதல் அருளால்– மண்முதல் சிவம் அது ஈறு ஆய்– பிருதிவி தத்துவம் முதல் நாதத்துவம் அறுதியாகவுள்ள, வகை அதில்– முப்பத்தாறு வகைத் தத்துவங்களிலே, நில்லாது நீங்கல்– பொருந்தி நில்லாமல் விலகுதல், சுத்தியாய்க்கருதலாம்– தத்துவ சுத்தி என்று சொல்லப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி

**பாயிரு ணீங்கி ஞானந் தனைக்காண்ட லான்ம ரூபம்**
**நீயுநின் செயலொன் றின்றி நிற்றலே தரிசனந் தான்**
**போயிவன் றன்மை கெட்டுப் பொருளிற்போ யங்குத் தோன்றா**
**தாயிடி லான்ம சுத்தி யருணூலின் விதித்த வாறே.** 2

இதன் பொருள் : பாய் இருள் நீங்கி– ஞானாசாரியரின் அநுக்கிரகத்தினாலே ஆன்மாவானது விரிந்து பரந்த தத்துவங்களின் உருவம் தரிசனம் சுத்தி ஆகிய காரியங்களைப் பொருந்தி ஆணவம் நீங்கிய பின்னர், ஞானம் தனைக் காண்டல்– சிவஞானமானது தன்னறிவுக்கறிவாய் நின்று உணர்த்தத் தானுணர்தலாகிய தனதியல்பை அறிதல், ஆன்மரூபம்– ஆன்மரூபம் எனப்படும்; நீயும் நின் செயல் ஒன்று இன்றி நிற்றல்– ஆன்மாவாகிய நீ, உனது முயற்சி ஒன்றும் இல்லாமற் சிவஞானத்தின் செயலே உனது செயலாக மதித்து நிற்றல், தரிசனம் தான்– ஆன்ம தரிசனம் எனப்படும்; போய் இவன் தன்மை கெட்டு– அங்ஙனம் சிவஞானம் பற்றுக்கோடாகச் சென்ற ஆன்மாவின் சுட்டறிவாகிய பசுஞானம் அடங்கி, பொருளில் போய்– சிவஞானத்தை அடைந்து அதன் வசமாய் நிற்குங்கால், அங்கு தோன்றாதாயிடில்– அவ்விடத்திலே, முன்னைப் பயிற்சி வசத்தால் வரக்கடவதாகிய அஞ்ஞானமானது மீளவும் உண்டாகாதிருக்குமானால்– (தற்போதும் நிகழாதிருக்குமானால், ஆன்ம சுத்தி– அஃது ஆன்ம சுத்தி ஆகும், அருள் நூலில் விதித்தவாறே– இவ்வுண்மைகள் யாவும் இறைவனருளிய வேதாகமங்களிலே கூறப்பட்ட முறைமையாகும்.

சிவரூபம்

**எவ்வடி வுகளுந் தானா யெழிற்பரை வடிவ தாகித்**
**கவ்விய மலத்தான் மாவைக் கருதியே யொடுக்கி யாக்கிப்**
**பவ்வம்விண் டகலப் பண்ணிப் பாரிப்பா னொருவ னென்று**
**செவ்வையே யிரிற் காண்டல் சிவரூப மாகு மன்றே.** 3

இதன் பொருள் : கவ்விய மலத்து ஆன்மாவை கருதி– உண்மையை அறியவிடாமல் மறைக்கும் இயல்பினையுடைய ஆணவமலத்தினாலே கட்டுண்டிருக்கும் ஆன்மாவை (–அதன் ஈடேற்றத்தை)க் கருத்திற்கொண்டு, அதற்காக, ஆக்கி ஒடுக்கி– தநு கரண புவன போகங்களைப் படைத்து, அவற்றை அநுபவிக்க வேண்டிய காலபரியந்தங்காத்து ஈற்றில் அழித்து, எவ்வடிவுகளும் தான் ஆய்– யாண்டும் எக்காலத்தும் நீக்கமறக் கலந்து உபகரிக்குந் தன்மையினாலே எல்லாப் பிரபஞ்சங்களும் சிவமாயுள்ளதாமே என்னும்படி வேறறநின்று, எழில் பரை வடிவது ஆகி– நன்மை அழகு பொருந்திய திருவருளே தமது திருமேனியாகக் கொண்டு, பவ்வம் விண்டு அகலப் பண்ணி– பிறவித் துன்பத்தை ஆக்கவல்ல இந்திரியங்களை நீங்கிக் காணும்படி மலபரிபாகஞ் செய்து சத்திநிபாதத்தைத் தந்து, பாரிப்பான்– பேரின்பத்துக்கு ஆதாரமாய்ப் பாதுகாத்து நிற்பவர், ஒருவன்– ஒப்பற்ற குருமூர்த்தி ஆவார், என்று செவ்வையே உயிரில் காண்டல்– என்று உயிரானது திருவருளிடமாக நின்று தெளிவாகக் காணுதல், சிவரூபம் ஆகும்– சிவரூபம் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவதரிசனம்

பரையுயிரில் யானெனதென் றறநின்ற தடியாம்
பார்ப்பிடமெங் குஞ்சிவமாய்த் தோன்றலது முகமா
முரையிறந்த சுகமதுவே முடியாகு மென்றிவ்
வுண்மையினை மிகத்தெளிந்து பொருள்வேறொன் றின்றித்
தரைமுதலிற் போகாது நிலையினி னில்லாது
தற்பரையி னின்றழுந்தா தற்புதமே யாகித்
தெரிவரிய பரமாநந் தத்திற் சேர்தல்
சிவனுண்மைத் தரிசனமாச் செப்பு நூலே. 4

இதன் பொருள் : பரை, உயிரில் யான் எனது என்று அற நின்றது– சிவ சத்தியானது, ஆன்மாவினிடத்திலே யானென்றும் எனதென்றும் சுட்டி அறியும் ஏகதேச ஞானம் நீங்கும்படி நிலைபெற்று நிற்றல், அடியாம்– சிவபெருமானது திருப்பதமாகும்; பார்ப்பிடம் எங்கும் சிவமாய்த் தோன்றலது– அவன் அவள் அது என்று சுட்டிக் காண்கின்ற பிரபஞ்சமெங்கும் சிவமேயாய்த் தோன்றா நிற்றல், முகமாம்– சிவபெருமானது திருமுகமாகும், உரை இறந்த சுகமதுவே– (அறிவுக்கறிவாய்த் தன்னிடத்தே விளங்கும் சிவபெருமானது) சொல்லுக்கடங்காத இன்பமே, முடியாம்– சிவபெருமானது திருமுடியாகும்; என்று– எனவறிந்து (கொண்ட), இவ்வுண்மையினை மிகத் தெளிந்து– இவ்வுண்மையைச் சந்தேக விபரீதமற உள்ளபடி விசாரித்து அறிந்து தெளிந்து, பொருள் வேறு ஒன்று இன்றி– உண்மையான பொருள் அவனையன்றி வேறு ஒன்று இல்லை என உணர்ந்து, தரை முதலில் போகாது– பிருதிவி முதல் நாதமீறாய முப்பத்தாறு தத்துவங்களோடுங் கூடுதலாகிய சகாலவத்தையிற் சென்று சேராமலும், நிலையினில் நில்லாது– ஆணவ மாத்திரையே நிற்கும் கேவலாவத்தையிற் பொருந்தாமலும், தற்பரையில் நின்று அழுந்தாது– பசு ஞானத்தால் உளதாகும் ஷநான்பிரமம்; என்னுஞ் செருக்கில் நிலைபெற்று நில்லாமலும், அற்புதமே ஆகி– ஞானாசாரியரது அநுக்கிரகத்தினாலே அவ்வாசாரிய மூர்த்தமாய் நின்ற சிவத்தைச் சார்ந்து சிவஞானத்தின் வண்ணமாகி, தெரிவு அரிய பரமானந்தத்திற் சேர்தல்– அறிதற்கு அரியராகிய மேலான பேரானந்த சொரூபராம் சிவபெருமானின் அநுக்கிரக ஞானத்தை எவ்விடத்திலுங் காணல், உண்மைச் சிவன் தரிசனமா நூல் செப்பும்– உண்மையான சிவதரிசனமாகும் என்று சிவாகமங்கள் உரைக்கும்.

சிவயோகம்

எப்பொருள்வந் துற்றிடினு மப்பொருளைப் பார்த்தங்
கெய்துமுயிர் தனைக்கண்டிங் கவ்வுயிர்க்கு மேலா
மொப்பிலருள் கண்டுசிவத் துண்மை கண்டிங்
குற்றதெல்லா மதனாலே பற்றி நோக்கித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பினைச்செய் வதுமதுவே நினைப்புமது தானே
தருமுணர்வு புசிப்புமது தானே யாகு
மெப்பொருளு மசைவில்லை யெனவந்தப் பொருளோ
டிசைவதுவே சிவயோக மெனுமிறைவன் மொழியே. 5

இதன் பொருள் : இங்கு– இறைவனோடு அத்துவிதமாய் நிற்கும் ஆன்மாவானது அந்நிலையிலே, எப்பொருள் வந்து உற்றிடினும்– மாயா காரியமான எவ்வகைப் பிரபஞ்சங்கள் வந்து தாக்கினாலும், அப்பொருளைப் பார்த்து– அவற்றினியல்பையும் உள்ளபடியுணர்ந்து (அவ்வளவிலமையாது), அங்கு எய்தும் உயிர்தனைக் கண்டு– அப்பிரபஞ்சங்களின் வசப்பட்டு நிற்கின்ற ஆன்மாக்களின் இயல்பையும் அவை எய்தும் இடர்ப்பாட்டையும் நன்றே உணர்ந்து, (அதன்பின்) அவ்வுயிர்க்குமேல் ஆம் ஒப்பு இல் அருள் கண்டு– அவ்வான்மாவுக்குப் பெத்தநிலையிலும் திரோதான சத்தியாய் நின்று சுகஞ் செய்தலினாலும் (தன்மாட்டுப் பெரும் பயனீந்து வியாபித்தலினாலும் (மேன்மையுடையதாய் விளங்குகின்ற ஒப்பற்ற திருவருளிலே தான் வியாப்பியமாய் அடங்கி, சிவத்து உண்மை கண்டு– அத்திருவருளே தனக்கு வடிவமாய்க் கொண்டு ஞானகுருவை அதிட்டித்து நின்ற சிவபெருமானை உள்ளபடி தரிசித்து, இங்கு உற்றது எல்லாம்– இவ்விடத்திலே வந்து தாக்குகின்ற மாயா கன்மங்களையெல்லாம், அதனாலே பற்றி நோக்கி– அத்திருவருள் ஞானத்தைச் சேர்ந்து நின்று தரிசித்து அகற்றி, தப்பினை செய்வது அதுவே– பிறர், தனக்கு (இன்ப,) துன்பஞ் செத்தலை இறைவனே செய்கின்றான் எனவும், நினைப்பும் அது தானே– தானே பிறருக்குச் செய்யும் (இன்ப,) துன்பங்களையும் இறைவனே செய்கின்றான் எனவும், தரும் உணர்வு(ம்)– அங்ஙனம் வரக்கடவதாகிய (இன்ப) துன்ப உணர்வையும், புசிப்பும்– (இன்ப) துன்ப நுகர்ச்சியையும், அது தானே ஆகும்– ஏற்றுக் கொள்பவன் அவ்விறைவனேயாவன் எனவும், எப்பொருளும்– எவ்வகைச் சட சித்துக்களும், அசைவு இல்லை என– அவ்விறைவனையின்றி இயங்கமாட்டாவெனவும் உணர்ந்து, அந்தப் பொருளோடு இசைவதுவே– அவ்விறைவனோடு வேறறக் கூடி அவன்பணி நிற்றலையே, இறைவன் மொழி– இறைவனருளிய வேதாகமங்கள், சிவயோகம் என்னும்– சிவயோகம் என்று கூறும்.

சிவபோகம்

பாதகங்கள் செய்திடினுங் கொலைகளவு கள்ளுப்
பயின்றிடினு நெறியல்லா நெறிபயிற்றி வரினுஞ்
சாதிநெறி தப்பிடினுந் தவறுகள் வந்திடினுந்
தனக்கெனவோர் செயலற்றுத் தானதுவாய் நிற்கி
னாதனவ னுடலுயிரா யுண்டுறங்கி நடந்து
நானாபோ கங்களையுந் தானாகச் செய்து
பேதமற நின்றவனைத் தானாக்கி விடுவன்
பெருகுசிவ போகமெனப் பேசுநெறி யிதுவே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள் : தான்– இறைவனருள் பற்றுக் கோடாக இறைபணிநின்ற ஆன்மா வானது, தனக்குஎன ஓர் செயல் அற்று– இறைவனருள் வழிப்பட்டல்லது தானே ஒரு செயலையும் செய்யமாட்டாததாய், அது ஆய் நிற்கில்– அவ்விறைவனே தானாய்க் கலந்து அத்துவித சம்பந்தமுற்று நின்றால், பாதகங்கள் செய்திடினும்– அந்நிலையில் அவ்வான்மா, காமம், கோபம், உலோபம் முதலிய பல்வேறு பாவங்களைச் செய்தாலும், கொலை, களவு, கள்ளூ பயின்றிடினும்– கொலை செய்தல், களவெடுத்தல், கள்குடித்தல் முதலிய பஞ்சமா பாதகங்களைச் செய்தாலும், நெறி அல்லா நெறி பயிற்றி வரினும்– நல்லொழுக்கமல்லாத தீய ஒழுக்கங்களைத் தவறாது நடத்தி வந்தாலும், சாதிநெறி தப்பிடினும்– தான் பிறந்த சாதிக்குரிய ஆசார முறைகளினின்றுந் தவறினாலும், தவறுகள் செய்திடினும்– இன்னும் (ஈண்டுக் கூறப்படாத) பல குற்றங்களைச் செய்தாலும், அவற்றால் அவ்வான்மா அனுபவிக்க வேண்டிய கன்ம பலன் முழுவதையும், அவன் உடல் ஆய் நாதன் உயிர் ஆய்– அவ்வான்மாவே உடம்பாய் நிற்க இறைவனே அதன்கண் உயிராய் நின்று, உண்டு உறங்கி நடந்து– புசித்தல் உறங்குதல் நடத்தல் முதலிய செயல்களைப் பொருந்தித் தானே ஏற்றுக்கொண்டு, நானாபோகங்களையும் தான் ஆகச்செய்து– பிராரத்தகன்ம பலனாக வருகின்ற எல்லாவிதமான போகங்களையும் சிவபோகமாகிய பேரின்பமாக்கி, பேதம் அற நின்று– பின்னர்விட்டு நீங்கி வேறுபட்டு நிற்றல் இன்றி, இவனை தான் ஆக்கிவிடுவான்– அவ்வான்மாவைத் தன் வியாபகத்துள் அடக்கித் தன்மயமே (–சிவமயமே) ஆக்கி ஆளுவன், இதுவே பெருகு சிவபோகம் எனப் பேசுநெறி– இவ்வுண்மையே, அநுபவிக்குந்தோறும் புதிதாய் மிக்குவரும் சிவபோகம் என்று சொல்லப்படும் உயர் நிலையாகும்.

உண்மை நெறி விளக்கம் முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# சங்கற்ப நிராகரணம்

## உமாபதி சிவாசாரியார்

சாத்திரங்கள் பதினான்கில், பதினான்காவதாக வைக்கப்படும் "சங்கற்ப நிராகரணம்" என்னும் இந்நூல், உமாபதி சிவாசாரியாரால் இயற்றப்பட்டதாகும். அட்டாங்க சித்தாந்தத்தில் நிறைவான நூல் இது. பிற சமயத்தவர்களின் கருத்துக்களைக் கூறி, அவற்றைக் காரண காரியம் காட்டி மறுக்கும் முறையில் அமைந்தது. பாடல்கள், கண்ணிகளாகவும் தொடர் வரிகளாகவும் அமைந்துள்ளன.

விநாயகர் வணக்கம்

**திருந்திய அருந்தவம் பொருந்துபன் முனிவர்**
**கமையாக் காத லமையாது பழிச்சு**
**நிகரில் செக்கர்ப் புகர்முகத்து எழுந்த**
**புனிற்று வெண்பிறைத் தனிப்பெரும் கோட்டுத்**
**தழைசெவி மழைமதப் பழைநெடும் தடக்கை**
**வாட்டரும் மும்மை நாட்ட நால்வாய்ப்**
**பாசம் அங் குசம் தேசறு எயிறுஒண்**
**கனிஇவை தாங்கும் புனித நாற்கரத்து**
**அங்கதம் கடகம் பொங்கிழை ஆர**
**நறைமணிச் சுடிகைக் கறைஅணல் கட்செவி**
**கொண்ட திண்பெரும் பண்டிக் குறுந்தாள்**
**களிறுதன் இருகழல் கருதா**
**வெளிறுறு துயரம் வீட்டினம் பெரிதே.**

சிறந்த அரிய தவம் செய்யும் பல முனிவர்களும் ஆர்வம் மிகுந்து வழிபடுவது ஒப்பற்ற சிவந்த யானை முகம் ஆகும். அதில் இளம் வெண்பிறை போன்ற கொம்புள்ளது; தழைத்த காதுகள் உள்ளன; பழை போல மதம் ஒழுகும் இருதுணை கொண்ட துதிக்கை உள்ளது. மூன்று கண்களும் அசையும் வாயும் கொண்டு பாசம், அங்குசம், ஒளிரும் (ஒடிந்த) கொம்பு, மாங்கனி ஆகியவற்றைத் தாங்கும் நான்கு கைகளும் கொண்டது அந்த யானை.

தோள்வளை, கடகம், ஒளி சிறக்கும் மாலை, மணிகள் நிறைந்த கடிகை, கரிய கண்டம் (கழுத்து), பாம்புக் கச்சை கட்டிய பெருவயிறு, குறுகிய பாதம் ஆகியவை கொண்டது. அந்த யானையின் (கணபதியின்) திருவடிகளை நினைந்து, அறியாமையால் வந்த துன்பங்களிலிருந்து விடுதலை பெறுவோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங்கடல் உதவும் கருங்கடு வாங்கிக்
கந்தரத் தமைத்த அந்தமில் கடவுள்
பாலரை உணர்த்து மேலவர் போலக்
கேட்போர் அளவைக் கோட்படு பொருளால்
அருளிய கலைகள் அலகில ஆனவை.

திருப்பாற் கடலில் உண்டாகினதான நஞ்சைத் தன் கண்டத்தில் அமைத்த முடிவில்லாத கடவுள்; குழந்தைகளை நினைத்து அறிவுரை கூறும் பெற்றோர் போல, அவர் அவர் அறிவு கொள்ளும் தன்மை அறிந்து (இந்தக் கடவுள்) அருளிய வேதம் ஆகமம் முதலிய கலைகள் அளவற்றனவாம்.

பலபல சமயப் பான்மைத்து அன்றே அஃதால்
அந்நூற் றன்மை உன்னிய மாந்தர்
இதுவே பொருளென்று அதனிலை அறைதலின்
வேற்றோர் பனுவல் ஏற்றோர்க்கு இசையா
மாறு பாடு கூறுவ ரதனால்
புறச்சம யங்கள் சிறப்பில வாகி
அருளின் மாந்தரை வெருளுற மயக்கி
அலகைத் தேரின் நிலையில் தீரும்
ஈங்கிவை நிற்க நீங்காச் சமய
மூவிரு தகுதி மேவிய தாமும்

அக்கலைகள் பலப்பல சமயத்தையும் தழுவியவாறு நிற்பதால் அந்தந்த வகையை உணர்த்த மனிதர்கள் இதற்கு இதுவே பொருள் என தத்தம் நிலையே சொல்வதால், ஒரு கருத்துடையவர், மறு கருத்துடையவர்க்கு ஒப்பதில்லை. இதனால் தமக்குள் மாறுபாடு கொள்வர்.

சிறப்பில்லாத புறச் சமயங்கள் அருள் வயப்படாத மனிதரை மருட்டி மயக்கும்; கானல்நீர் தாகம் தீர்க்காதது போன்று புறச் சமயக் கருத்துக்களும் பயன் தராது போகும். இவை நீங்கிய ஒன்றுபடு சமயங்கள் ஆறும் தமக்குள் ஒன்றினோடு ஒன்றி நிற்கும் நிலையில்... ( அ வை ய ா வ ன சைவம், பாசுபதம், மகாவிரதம், காளாமுகம், வாமம், வயிரவம் என்பனவாம்.)

ஒன்றோ டொன்று சென்றுறு நிலையில்
ஆறும் மாறா வீறுடைத்து இவற்றுள்
எவ்வ மில்லாச் சைவநற் சமயத்து
அலகில் ஆகம நிலவுதல் உளவை
கனகம் இரணியம் காஞ்சனம் ஈழம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனநிதி ஆடகம் தமனியம் என்றிப்
பலபெயர் பயப்பதோர் பொருளே போலப்
பதிபசு பாச விதிமுறை கிளக்கும்
வாய்ந்த நூல்கள் ஆய்ந்தன ராகி
ஆசா னாகி வீசிய சமத்துடன்

தனித்த ஆறு பகுதிகள் போல இவை இருக்கும். இருந்தாலும் எவ்வித குற்றமும் இல்லாத சித்தாந்த மரபின் சைவமே விளங்கித் தோன்றும்; ஆறும் ஆகமம் உடையவாகும். கனகம், இரணியம், காஞ்சனம், ஈழம், தனநிதி, ஆடகம், தமனியம் என்று பல பெயர்கள் வழங்கினாலும் பொன்னாகிய பொருள் ஒன்றே போலப் பதி பசு பாசம் எனும் மூன்று உண்மைகளையும் விதிமுறைகளையும் கொண்டிருப்பதான சமயமேயாகும். (இப்படி வாய்ந்த நூல்களை ஆராய்ந்து அதற்கு ஆசானுமாகி)........

ஏழ்அஞ்சு இருநூறு எடுத்த ஆயிரம்
வாழுநல் சகன மருவா நிற்பப்
பொற்பொது மலிந்த அற்புத னான்
ஆறாம் விழவில் பொற்றேர் ஆலயத்து
தேறா வெண்மமர் நிரையில் இருப்ப

சமயதீட்சை, விசேட தீட்சை, நிருபாணதீட்சை, ஆசார்ய அபிடேகம் என்னும் நான்கு தீட்சை மரபு கொண்டிருப்பர். சாலிவாகன சகாப்தம் ஆயிரத்து இருநூற்று முப்பத்தைந்தாம் ஆண்டில் தில்லைப் பொன்னம்பல மண்டபத்தில் ஆனித் திருமஞ்சனன விழா ஆறாம் நாளில கூடி, ஆறு வகையாளரும் இருக்க...

மயங்கு வாத மாயா வ ாதி
முயங்கிட ஒருதலை முதுவெதிர் மணிசேர்
பெண்ணை சூழ்ந்த வெண்ணையம் பதிதிகழ்
மெய்கண் டவன்அருள் கைகண் டவர்களில்
ஒருவ ரொருதலை மருவி இருப்ப

வஞ்சப் பிறவிக்கு அஞ்சிவந் தொருவன்
ஏதிறை அருளென ஈதெனும் மாயா
வாதியை அளலினர் மறுதலைத் தருடர
மாற்றவர் அயலினர் அவருரை மறுத்துச்
சொற்றரவு அயலினர் அவரும் தொலைவுற்(று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயக்கக் கொள்கை கொண்ட மாயாவாதிகள் ஒரு பக்கம் முயங்கி இருக்க, வெண்ணெய் நல்லூர் மெய்கண்டரின் அருள் பெற்ற ஒருவர் அங்கிருக்கிறார். துன்பம் தரும் பிறவிக்கு அஞ்சிய ஒருவன் வந்து "இறைவன் திருவருள் எப்படி இருக்கும்" என்று கேட்டான். தன் நூலில் காட்டியதை மாயாவாதி எடுத்து "இதுதான் பொருள்" என்று முழங்கினான். மற்றவன் ஒருவன் அதை மறுத்து அது அல்ல என்றான். அவனை வேறு ஒருவன் மறுத்தான். இப்படி அவர்கள் கருத்து வேறுபாடு கொண்டிருக்கும்போது...

**இன்னே எவரும் முன்னே சுழியுழி**
**ஆங்குஅயல் இருந்த வல்அளினர் அழகிது**
**நீங்கள்சங் கற்ப நிராகரித் தமைஎன**
**மற்றவர் உரைத்த சொல்தரு பொருள்கொடு**
**வாத செற்ப விதண்டையும் ஏதுவும்**
**ஓது நால்வகை உவமையும் திகழ்வர**
**அருள்சேர் மாந்தர் வெருள்சே ராமல்**
**தற்கமும் விடயமும் கற்க**
**நற்கவி மாந்தர் நகநவிற் றுவனே.**

ஆசாரியரை நோக்கிய ஒருவர் நீங்கள் பிறரை மறுத்த விதம் நன்றாக இருந்தது என்றார்.

அப்படிக் கூறிய விவாதத்தில் வாதம், செற்பம், விதண்டை, ஏது என்ற நான்கும் விளக்கிடும் வகையில் மற்றவர் கேட்டு மயங்காதபடி, தர்க்கம் உண்மைப் பொருள் ஆகியன விளங்குமாறு நல்ல கவி மாந்தர்கள் விரும்பும்படி இதைச் செய்வேன். (சங்கற்ப நிராகரணம் எனும் நூல் வந்த முறையை இதில் கூறினார்.)

## நூல்

### மாயாவாதி சங்கற்பம் -பெத்தத்து இயல்பு

**நவிற்றிய நிரையின் அவித்தையின் உனரை**
**நித்தன் அறிவன் சுத்தன் அகண்டிதன்**
**இருவி கற்பன்நிர்த் தத்துவன் நிரஞ்சனன்**
**சொல்வகை எவையும் தொடராத் தூய்மணி**
**வரம்பில் வேதச் சிரந்தரு பரம்பொருள்**

முன்பு கூறியபடி அறியாமைக் கருத்துடைய மாயாவாதியின் உரைப்படி கடவுள் கருத்து வருமாறு: என்றும் அழியாதவன் (நித்தன்); எல்லாம் அறிபவன் (அறிவன்); தூயவன் (சுத்தன்); எங்கும் வியாபித்தவன் (அகண்டிதன்); வேறுபாடின்றி எப்போதும் ஒரு நிலையாக இருப்பவன் (நிர்விகற்பன்); தத்துவங்களுக்குள் அகப்படாதவன் (நிர்த் தத்துவன்); மய்கம் இல்லாதவன் (நிரஞ்சனன்); (நிர் + அஞ்சனன்; அஞ்சனம் = மயக்கம்); சொற்கள் எவற்றாலும் தொடர முடியாத தூய மணியாக இருப்பவன்; எல்லையற்ற வேதங்களின் உச்சியாகிய உபநிடதங்களில் கூறப்படும் பரம்பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தாய் எவையும் தானாய் அவித்தை
தொத்தா துயர்ந்த தொல்சுடர் மூவா
இன்ன தன்மையன் ஏகன் அநேகன்
கன்னல் பெருஞ்சுவை தன்னில் பிறவாப்
பெற்றியின் இருந்து பொற்பணி இயல்பினின்

என்றுமுளதாகிய சத்துப்பொருள்; எல்லாப் பொருளும் தானாக இருப்பவன்; அறியாமை வந்து தொட முடியாத பழைய சுடராக இருப்பவன்; மூப்பில்லாதவன்; இத்தன்மையில் ஒருவனாகவும் அநேகனாகவும் இருப்பவன்; கரும்பு தின்பார்க்க இனிக்கும்; ஆனால் கரும்பு தன் சுவையைத் தானே உணராதது போல, இன்ப மயமானவன்; என்றும் பிறவாதவன்; பொன்னாகவும் அந்தப் பொன்னில் செய்த நகையாகவும் பல தொழில்களும் இயற்றுபவன்.

வான்வளி அனல்நீர் மண்மருந் தன்ன
மான தாது ஆறுஐங் கோசத்(து)
தொகுதி யாக்கைப் பகுதிய தொருபுடை
சுத்தி வெள்ளி ஒத்தென மித்தையில்
தானெனல் ஆகும் தன்மைத் துலூதையிற்

வான் முதலிய பஞ்சபூதங்களும் இவை கலந்த மருந்துமாக உள்ள ஆறு யோக ஆதாரங்களும் அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞான மயகோசம், ஆனந்தமய கோசம் என்னும் ஐந்து கோசங்களுமாக உள்ள உடம்பு மயக்கம் தருகிறது. கிளிஞ்சலில் பளபளக்கும் வெள்ளி பகுதியைப் பார்த்து மயங்குவது போல, இதனாலும் மயக்கம் ஏற்படும்; அறிவு மயக்கம் (மித்தை) தோன்றும். ஆயினும் இவை பிரம்மத்திலிருந்தே தோன்றியவையாகும்.

-உலூதையின்
சின்னூல் தகைமையின் வேற்றுமை மரீஇய
தென்னப் பன்மையது எனினிலை பழம்பூத்
தோல்நார் வயிரம் தருத்தரும் தொன்மையின்
ஆனா ரம்திரை நுரைதரு வாய்மையில்
கூடும் அசித்தைச் சித்துஉத வாதெனின்

(பிரம்மத்திலிருந்து இவை தோன்றினால, பிரம்மத்தின் தன்மையிலிருந்து ஏன் வேறுபடுகின்றன என்னும் வினாவிற்கு விடையாகக் கூறுவது) சிலந்தியின் (உலூதை) வாயில் உள்ள நூல் சிலந்தியை விட வேறுபட்டிருப்பதுபோல, பிரம்மமும் பிரபஞ்சமும் வேறுபட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்மம் ஒன்று; பிரபஞ்சமும் பொருள்களும் பலப்பல? என்றால் இலை, பழம், பூ, தோல், நார், வயிரம் ஆகிய பலப்பலவற்றையும் ஒன்றாகவிருக்கும் மரமே தருவதுபோல, பிரம்மமும் பலவற்றைத் தருகிறது. நீர் என்பதிலும் அலை, நுரை, துளி எனப் பல வடிவுகள் உண்டு. அசித்தாகிய இப்பொருள்களைச் சித்தாகிய பிரம்மம் தராது என்று கூறினால்...

நெல்பதர் பலாலத் திற்பரம் தருமிது
தன்னியல்பு என்றும் விளையாட் டென்றும்
முன்னுள் மறைகள் மொழிதலின் ஒருநூல்
பன்மணி நிலையும் பசுப்பா லெனவும்
பலவகன் நீரில் அலர்கதி ரெனவும்

நெல்லானது, பதரையும் வைக்கோலையும் தரவில்லையா? அதுபோல, அறிவில்லாதவற்றை அறிவு உடைய பொருள் தருகிறது. பிரமம் அறிவுடையதாயிருப்பது தன் இயல்பு எனப்படும். மாயையைச் செறப்படுத்துவது, பிரம்மத்தின் விளையாட்டு எனப்படும். இப்படி வேதங்களே சொல்கின்றன.

ஒரு நூலில் பல மணிகள் கோக்கப்பட்டாலும், நூல் தன்னுடைய நிலையோ நிறமோ மாறாதது போல, இவை எல்லாம் பிரம்மத்தில் கோக்கப்பட்டவையாம். பசுக்களின் நிறங்கள் பலவாக இருந்தாலும், அவற்றின் பால் வெண்மையாக மட்டுமே உள்ளது. பலவகைப் பாத்திரங்களில் நீர் இருந்தாலும், அவற்றில் சூரியன் ஒருமாதிரியாகவே பிரதிபலிக்கும்.

கூவல் ஆழி குளம்சிறு குழிகால்
வாவி யாவையும் வருபுனல் எனவும்
அவ்வவற்று அடங்கிய ஆடியுள் நிழலெனத்
தோன்றி யாக்கைநற் காந்தத்து இரும்பும்
கனவில் தீங்கும் கங்குலில் கயிறும்

கிணறு, கடல், குளம், சிறுகுழி, கால்வாய், ஏரி ஆகிய பலவற்றிலும் ஒரே வகையானதாக நீர் இருக்கிறது. கண்ணாடியில் காணும் நிழல் பலமுறை பார்த்தும் தேயாமல் உள்ளது. இரும்பை இழுக்கும் காந்தம், தான் எந்த மாறுபாடும் அடையாமல் பணியைச் செய்யும். கனவில் கண்ட தீங்கு மெய்யல்ல என்று நனவுக்கு வந்ததும் தெரிகிறது. இரவில் பாம்பு எனக் கருதப்பட்டது ஒளியில் கயிறு என்னு உணரப்படுகிறது.

புனலில் தோன்றும் பேய்த்தேர்ச் செய்தியும்
அன்ன துஉன்பி னன்றிறப் பளிங்கெனப்
பதினாற் கரணத் தொருமூன்று அவத்தை
நாளு நாளு நயந்துறும் இருபயன்
தன்னில் சாராத் தொன்மைத் தன்மை
தர்ப்பண நிழற்கண் குற்றிபாய்த் தற்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் நிலை மாதிரியே தோன்றும் கானல்நீர் செய்தியும் அப்படியே! (ஆகவெ பலவற்றிலும் பயின்ற பிரம்மம் அசுத்தம் அடைவதாகக் கூறுவது பொய் அல்லது மாயை) உயிர்தோறும் பிரம்மம் நின்றாலும் அவற்றில் தோயவில்லை என்பது பல நிறங்களுடன் கூடிய படிகம் அவற்றால் பாதிக்கப்படுவதில்லை என்பதனால் தெரியும்.

ஞானகர்ம இந்திரியங்கள் பத்தும் அந்தக்கரணங்கள் நான்கும் கூடிக் கனவு, நனவு, உறக்கம் ஆகிய மூன்று அவத்தைகளிலும் (நிலைகள்) ஈடுபட்டுப் பிரம்மம் அனுபவம் பெறுகிறது. இதனால் நல்வினை தீவினைப் பயன் பிரம்மத்திற்கு வருமா என்றால் கண்ணாடியில் காணும் ஒரு கண்ணைக் குச்சியால் குத்தினால் உண்மைக் கண் பாதிக்கப்படுமா? படாது! அது போல, வராது.

சிவன் முத்தி இயல்பு

இவ்வியல்பு பந்தப் பௌவமது அகல
விண்முதல் தந்த கொண்மூப் படலத்து
இருளற வுதித்த காறக விவேகம்
தன்னில் தோன்றிச் சாதகம் அனைத்தையும்
மன்னகப் பிரிப்பு மடியிழை வாங்கலும்
போல ஞானம் பொய்யறக் கழீஇத்

இவ்வியல்பில் பிரம்மப் பொருளுக்கு நேர்ந்த பந்தமாகிய (பிறவி) கடலில் துன்பம் சாராது அகலும். வானில் தோன்றிய மேகம் வானையே மறைக்கிறது; ஆகாயத்தில் தோன்றிய காற்றே அந்த மேகத்தையும் நீக்குகிறது. அதுபோல, பிரம்மத்தில் தோன்றிய அநுபவம், சிற்றறிவையும் நீக்கும்.

ஒரு வீட்டை, கல், ஓடு, மரம் எனப் பிரித்தால் வீடு தன் உருவத்தையே இழந்துவிடும்; ஒரு புடவையில் ஒவ்வொரு நூலாகப் பிரித்தால் புடவை என்றே ஒன்றில்லாமல் போய்விடும். அதுபோல, நம்மில் தோன்றும் ஞானத்தால் நம்மிடம் உள்ள பொய்ப் பொருள்களை எல்லாம் நீக்கினால், அதாவது உடல் கருவிகள், அந்தக்கரணம் முதலியன நான் அல்ல என்று நீக்கிக் கொண்டே வந்தால்...

சித்தாந்த சாத்திரம்

தானே தானாய்த் தன்னில் தன்னைத்
தானே கண்டு தன்னலம் உற்று
வசையில் அத்துவ மசிபதத் தெளிவால்
அகமே பிரம மாயினன் எனஅறிந்து
அசல னாகிநற் சலம்சல மதியெனக் கண்டிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரமுத்தி இயல்பு

உடலம் விண்டகல் கடந்து
மண்குடம்அஃது உடைதர எங்குமாம் தகைத்தே
இவ்வகை உணர்ந்து செய்தொழில் அறாத

மடவோர் தாமும் கடனா இயற்றும்
கன்ம காண்டத் தொன்மைப் புரிவால்
தோற்றிய வித்தை மேற்கடை அரணியில்
எழுந்தெரி அவற்றை விழுங்கியது என்னத்
தன்னொழிந் துள்ள தானாய் அழியும்

பொய்ப் பொருள்களைத் தன்னில் இருந்து விலக்கும்போது தான் மட்டும் தனியாக இருப்பதைக் கண்டு தானே பிரம்மம் எனவும் கண்டு தன்னை உணர்தலாகிய இன்பத்தைப் பெற்று, குற்றமற்ற 'தத்துவம்சி' எனும் கருத்துத் தெளிவினால் 'அகம் பிரமாஸ்மி' என்று (நான் பிரமம் ஆயினேன்) அறிந்து, சிறிதும் அசையாமல் இருந்து அசையாத நீரில் தெரியும் நிலவும் அசையாமல் இருப்பது போல (அதாவது நிழலாக நீரில் நிலவு தெரிந்தாலும் உண்மையில் அங்கு அது இல்லாதது போல) பிரம்ம ஞானமும் நிழலாக முதலில் தோன்றும்.

உடம்பை விட்ட பிறகு பிரம்ம ஞானமும் பிரம்மத்தோடு சேர்ந்துவிடும். குடத்தின் ஆகாசம் குடம் உடைந்ததும் பெரிய ஆகாசத்தோடு கலப்பது போல இது நடக்கும். இவ் வாறு உணர்ந்து முயலாதவர்களுக்கும் கன்ம காண்டப் பழங் கருத்துப்படியும் நிகழும். (அதாவது வழிபாடு, பூசை முதலானவற்றைச் செய்து வரவே அவர்களுக்கும் விவேக ஞானம் உண்டாகும்)

அரணிக் கட்டையைத் தேய்த்து உண்டாக்கும் தீயானது அக்கட்டையையே எரித்துவிடுவது போல, விவேகஞானம் ஒருவனை முத்திக்குரியவனாக்கி விடும். (ஞானத்தீயில் கன்மங்கள் எரியும்) இப்படியயல்லாது முத்தி இல்லை என்று தன் இயல்பை மாயாவாதி வகுத்துக் கூறினான். (ஒன்று, அகம் பிரமாஸ்மி என்று பாவிப்பது; இன்னொன்று கன்ம காண்டப்படி பூசை முதலியன செய்து ஞானம் பெறுவது. இரண்டே முத்தி நெறி).

## மாயாவாதி சங்கற்ப நிராகரணம்

பிரமாண மறுப்பு:

வேதம் சுயம்பன்று
உரைதரு பிரமம் ஒன்றெனும் உரைக்கண்
வருபிர மாண மறையெனில் அருமறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிய பிரம்மம் என்பது ஒன்றுதான் என்று கூறும் கருத்துக்கும், அது உள் பொருள் என்பதற்கும் கூறப்படும் வேதச்சான்று (பிரமாணம்) எது என்றால், வேதமே சான்று என்று மாயாவாதி கூறினால்...

சங்கற்ப நிராகரணம்

ஒன்றென்றது அன்றி இருபொருள் உரைத்த
அன்றன்று அபேத நாடிய பொருளேல்
பேதமும் அபேதமும் ஓத வேண்டா

பேதம் எனினும் அபேதம் எனினும்
பேதா பேதம் எனினும் அமையுநின்
ஐயமில் உரையில் பையவந் துளதாம்
திகழ்பிர மாண இகழ்வுமுண் டன்றிப்
பெத்தம் பேத முத்தி அபேதமே

அந்நிலை அன்றி அழிவறு முத்தி
யேயா தென்றுதன் னியல்பை
மாயா வாதி வகுத்துரைத் தனனே
அவத் திதமாம் அவைஇரு திறனும் 58

வேதம் பொருள் ஒன்று சொல்வதோடு இரு பொருளும் கூறுகிறது (சிவன் பரம் என்பன அவை). அதுவே பேதத்தை உனக்குச் சான்றாக்குவது இயலாது. பேதமில்லாமல் (அபேதம்) சொல்லியதாக பேதத்தை ஏற்றுக்கொண்டால், பேதம் என்பதையோ பேதுமும் அபேதமும் (பேதாபேதம்) என்பதையோ கூறத் தேவை இல்லை. (பேதம் = துவைதம், பேதாபேதம் = அத்வைதம்)

அபேதம் = கடவுளும் ஆன்மாவும் வேறல்ல; பேதம் = கடவுளும் ஆன்மாவும் வேறானவையே; பேதாபேதம் (பேத + அபேதம்) = வேறுமாக ஒன்றுமாக அவை இருப்பதாம். இம்மூன்றும் அமையும் என்று கூறினால் பிரமாண விரோதம் உண்டாகும். பிரமாணத்தில் ஐயப்பாடு உண்டாகும். பிறந்து வாழ்வதால் பேதம் என்றும் (பெற்ற நிலை), வீடு பேறு அடைவதால் அபேதம் என்றும் கூறினால் முடிவற்ற நிலையாகும் (அவைத்திதம்).

இனியப் பழமொழி இரண்டல ஒன்றே
அன்றியும் பெத்தம் பேதத்து அறைதலும்
ஒன்றிய முத்தி ஆபேதத்து உரைத்தலும்
பழுதாம் இத்திறம் பதையா தாய்கமற்(று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய அப்பழைய வேதம் உள்பொருள் இரண்பு அல்ல என்று இப்போது கூறுவது முரணாகும். மேலும் பிறந்து வாழும் நிலையில் சீவன் என்றும் பரம் என்றும் வேறு வேறாகவும் முத்தி நிலை இவை வேறுபடாது ஒன்றாகவும் இருக்கும் என்று கூறுவதும் குற்றமே. இதைத்தீர ஆய்வாயாக.

எழுதா மறையெனும் இப்பிர மாணம்
ஆருரை தானே ஆயின தேல்உது
ஏகம் அநேகம் உறும்இயம் பாமல்
சத்த ரூபம் தகாதெனில் வானத்(து)
ஒத்தொலி யுறழும் எனில்அறி துதியா(து)

எழுதாமறை எனப்படும் இந்தப் பழைய பேதத்தை யார் சொன்னது? அது தானாகவே வந்தது என்றால் பிரம்மமும் அனாதிவேதமும் அநாதி என்று பலவாக ஆகும். மேலும் ஒலி வடிவமான வேதம் சொல்லப்படாமல் வந்திருக்க முடியாது. யாரும் பேசாமல் அசரீரியாக இது ஒலிக்கப்பட்டதாகக் கூறினால்...

அன்றியும் பதமும் பாழியும் அனைத்தும்
இன்றிஓ ரொலியாய் எழுந்திடும் அதனுக்(கு)
அறிவிலது உருவிலது அறியா தறையா(து)
அன்றியும் அவ்வகை அகண்டிதம் அதுவிது
என்றது குறிப்பது எவ்வகை யாவும்

ஆதாரமில்லாது எந்த ஒலியும் தோன்றாது; மேலும் சொல்லும் அதன் பொருளும் ஆகியவற்றோடு வேதம் ஒலி வடிவில் உள்ளது. அது அறிவற்றது அல்ல. அறிவு பூர்வமானதாகையால் ஓர் அறிவுப் பொருளே அதை ஆக்கியிருக்க வேண்டும். அது வரையறைக்கு உட்படாது அகண்டமாக இருப்பதாகும். எனவே சொல்லும் பொருளும் இணைந்தது வேதம் என்றால் அது கட்டுக்கு அடங்கியதாகிவிடும்.

சித்தாந்த சாத்திரம்

ஒன்றெனும் உரையும் மொழிந்தனை அன்றே
அருமறை பிரம வுரைஎனில் அதற்குத்
தந்த தாலும் முதன்நவில் பொறியிலது
என்னிலோர் உடற்கண் மன்னிய வலகை
அறைந்தற்று என்பது ஆர்சொல அமலத்

யாவும் ஒன்றே என்று நீ கூறியதையும் இப்போது நீ மறுத்துவிட்டாய். பிரம்மம் வேதத்தைக் கூறியது என்றால் அதற்குப் பல் நாக்கு உதடு முதலிய உறுப்புக்கள் இருக்க வேண்டும் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிறது. இப்படியெல்லாம் பிரமத்திற்கு உருவமில்லை என்றால், ஒருவனைப் பேய் பிடித்தது போல, ஒருவன் உள்ளத்தில் பிரம்மம் புகுந்து அவனைப் பேச வைத்தது என்றாகும்.

திறம்பெற் றின்றே செய்தோர் பெயரால்
சுயம்பு என்றுலகு இயம்புமென்று அறியினில்
தற்கீட் டலைவரைத் தான்தொழு துரைக்கும்
சொற்கேற் புரவலன் ஏவல் அமைச்சரை
அடிகண் மற்றெங்குடிமுழு தாண்மின்என்(று)

ஒருவர் செய்வது என்று ஒத்துக்கொண்டால் அது தூயதாக முடியாது. உலகம் வேதத்தைச் சுயம்பு என்று சொல்கிறது; அதாவது உருவமற்ற கடவுள் அனுபட்சத் திருமேனி பெற்று. அதனுள் ஒலித்ததால் வேதம் தோன்றியது என்பர். இதனாலேயே சுயம்பு எனப்படுகிறது.

உனக்கும் கீழான ஆற்றலை வசம் செய்து பிரமம் சொன்னதாக நீ கூறினால் அது தவறாகும். எவ்வாறு என்றால் அரசர் ஒருவர், அமைச்சரை அனுகாமல் ஏவலனை அனுகி எம் குடிகளை நீங்களே ஆள வேண்டுமென்று கேட்டால் ஏப்படியோ அப்படியே!

ஏத்தி இறைஞ்சிக் காப்பர்கள் என்றாங்கு
ஈச னாம்செயப் பேசினன் அன்றி
இனையவை பிறரில் கனவினும் இலனே
தன்னைத் துதிக்கும் சொன்னலம் தானுமத்
துறைஅறி வாணர்க்கு அறைவதொன்று அன்றியும்

நாம் நன்கு பயன் பெற ஈசன் பேசியது அல்லாமல், தன் கீழ் உள்ளோரைச் சார்ந்து வேதத்தைப் பேசினான் என்பது கனவிலும் நடக்காதது ஆகும். தன்னைத் துதிப்பது எனப் பிரமம் கூறியது என்பது கருதி, மிக்க ஆன்மாக்கள் பிரம்மத்தை வணங்கியதையே குறிப்பதாகும்.

தனக்குத் தானே தன்னலம் பகராது
அசத்துக்கு உரையா தார்க்குஉரை உயிர்க்கெனில்
உரைபிர மாணம் இறைபிர மேய
நீபிர மாதா நின்பிர மதியென
நால்வகை உளதுஉனது ஏகநன் றன்றே

நற்பிர மாண நிற்பதொன்று அன்றால்
அப்பிர மேயமும் அதன்இயல்பு அன்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் தானே தன் பெருமையைப் பிறர் கேட்குமாறு கூறாது பிரம்மம். அசத்தாக உள்ளதற்கு அது சொல்லியிருக்க முடியாது (சொல்லிப் பயனில்லை).

பிரமத்தின் பெருமையை உயிர்கள் வாழவே உரைத்ததாகக் கொண்டால், வேதம் பிரமாணம் ஆகும். பிரம்மம் பிரமேயம் (அனுபவிக்கப்படுவது) ஆகும். ஆன்மா பிரமாதா (அனுபவிப்பவர்) ஆகும். ஆன்ம அறிவு பிரமிதி (அறிவதாகிய தொழில்) ஆகும். வேதமாகிய பிரமாணத்தால் பிரம்மம் உணரப்படும். இதை ஞேயம் என்றும் கூறுவர். பிரமாணப்படி ஆன்மா தன் அறிவால் அறிவதால் ஆன்மாவை ஞாதுரு என்பர். இதனால் பிரம்மம் மட்டுமே உள்பொருள் என்றால் இந்த நான்கு நிலை ஏன் உள்ளன? பிரமாணம் என்பது தனியே நிற்பதன்று; அதன் இயல்பே பிரமேயமாய் உள்ளது.

சங்கற்ப நிராகரணம்

பிரமேய மறுப்பு:

**பிரமம் பிரமேயமன்று**
**கன்னல் சுவையில் அந்நியம் இலதால்**
**இனிமை தோன்றாத் தனிமைத்து என்றனை**
**அறிவிற்கு உவமை அசத்தாங் கட்டி**

கரும்பின் இனிய சுவை அதற்கு வேறுபட்டதாக இல்லாமையால் கரும்புக்கு அதன் சுவை தெரியவில்லை; இதைப் பிரமத்திற்கு உவமையாகச் சொல்ல முடியாது. பிரம்மம் சத்துப்பொருள்; கரும்போ அசத்துப்பொருள்; ஆகவே பொருந்தாது.

**பிறிவித் தொட்டினும் பேறதுறாதே**
**தற்பர விரிவுபொற்பணி தகுமெனில்**
**செய்வோ ரின்றிச் செய்வினை இன்மையில்**
**பொன்பணி யாகை தன்பணி யன்றே**
**செய்வோர் போலச் செயப்படு பொருள்முதல்**

கரும்பில் தோன்றிய சுவைக்கட்டி என்பது கரும்புக்கு அந்நியமானதால் அது தன்மையை உணருமோ? உணராது, தற்பரமாகிய தன் விரிவைப் பொன்னும் அதில் செய்த அணியும் போல என்று கூறினால் பொருந்தாது. காரணம் பொன்னே நகையாக விரியாது. வேறு ஒருவர் செய்யாமல் பொன்னில் நகை தோன்றாது. (பிரம்மத்தின் விரிவை வேறு ஒருவர் செய்ததாகக் கூற நேரும்;ர ஆகவே பொருந்தாது) பிரம்மமே எல்லாவற்றையும் செய்தது எனச் சொன்னால் அதற்கு விடை வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வோ ரேயாச் செய்யவும் படுமே
சுத்தி வெள்ளியில் தோன்றிற்று ஆயினும்
சத்துலகு ஏதும் தாரா தருமெனில்
உலக மித்தைஎன்று ஓராது உரைத்தனை
நிலவுநின் மரபு நினைந்திலை யாம்கொல்

செய்யப்படும் பொருளுக்குக் காரணமாக இருக்கும் ஒரு போருளே அதைத் தானாகச் செய்யும் என்று கூற முடியாது. (பானை செய்யப்பட்ட பொருள். இதற்கு முதல் காரணம் மண். அது, செய்பவனாகிய குயவனாக நிற்க முடியாது) இவ்வகையில் இவ்வுலகைப் பிரம்மம் (குயவன் போல) உருவாக்கியது என்றால், உலகிற்கு முதற்காரணம் (குடத்து மண் போல) வேறு ஒரு பொருள் வேண்டும் என்று தோன்றுகிறது. கிளிஞ்சலில் வெள்ளி தோன்றுவது போல பிரம்மத்தில் இந்த உலகப் படைப்புத் தோன்றியதாகக் கூற முடியாது. காரணம் ஒரு சிறிதாக ஒரு நேரத்தில் மட்டும் ஒரே விதமாக உள்ள கிளிஞ்சல், உவமை பல விதமாக உள்ள உலகப் படைப்புக்கு ஒத்துவராது, நிலையற்றதாகிய உலகம் பிரம்மத்தின் முன் நிலையானது போலத் தோன்றும் என்று நீ சொன்னால், உலகை, முன்பு பொய் என்று நீயே கூறியதை மறத்துது ஆகும். நீயே கூறியதை நீ மறந்ததாகவும் ஆகும்.

விவகா ரத்தில் வேண்டுவதும் உலகம்
பரமார்த் தத்திற் பகரா மென்னில்
பரத்துள தேல்இவை யும்பர மார்த்தம்
பரத்தில தேல்ஒழி முன்பகர் மாற்றம்
அதன்முதல் இதுவென வுதவுக வன்றியும்
விவகரிக் குங்கால் திகழ்பர மார்த்த
நிலையது தெரியி னிதுநீ நீயேற்று
எறியா தாயி மஃதுந் தெரியாது

தன்னை உயிராகப் பிரமாணப்படுத்திக் கொண்டு பிரம்மமே இருப்பதாகக் கூறுகிறாய். பரமார்த்தமாகிய முத்தி நிலையில் நான் பிரம்மம் என்று கூறுகிறாய். உலக நிலையில் உலகம் உட்பட யாவும் பொய் என்கிறாய். முத்திநிலையில் உள்ள பிரம்மத்திலிருந்து உலகம் தோன்றியிருந்தால் உலகமும் நிலையாகவே இருக்க வேண்டுமே. அல்லது பொய்யான உலகம் முத்தி நிலையில் உள்ள உண்மையான பிரம்த்திலிருந்து தோன்றவில்லை என்று ஆகிறது. அப்படியானால் இது தோன்றுவதற்கான மூலப்பொருள் யாது? கூறுக. மேலும் விளக்கம் செய்து பார்க்கும்போது பிரம்மம் இயல்பாகவே பாசத்திலிருந்து நீங்கியது. நீயோ மாயையின் வசமானவன். நான் என்னைப் பிரம்மமாகவே பாவிக்கிறேன் என்று கூறுவாயானால், பிரம்மம் பேரறிவு உடையது; நீயோ சிற்றறிவு உடையவன். நீயும் பிரம்மமும் ஒரு முதல் பொருள் என்றால் உன்னைப்போல அதுவும் அறியாமை உடையதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையார் அளவையும் அழிந்தனை அன்றே
அளவை காண்டல் கருத லுரையென
அளவை மூன்றின் மொழிவழி நுழையி
ளின்பிர மேயம் என்ப தெனாம்கொல்

அளவை நெறிகளை விட்டுவிட்டு உன் கொள்கையை நிறுவப் பார்க்கிறாய். காணுதல், கருதுதல், ஆகமம் ஆகிய மூன்றுமே பிரமாணங்கள் ஆகும். இவற்றின் வழியாக ஆய்ந்தால் நீ கூறும் (பிரமேயமாகிய) அனுபவப் பொருளாகிய பிரம்மம் என்பது எந்த நிலையில் உணரப்படும் என்று நீ கூற முடியுமா? (இது வரை பிரமேயமானதை மறுத்தார்)

பிரமிதி மறுப்பு:

பொற்பிதிர் பிதிர்ந்தும் பொன்னே யாநின்று
தற்பரம் அசித்தைத் தருமா றென்னெனில்
சிலம்பி நூல்தரு நலம்போல் தோன்றும்

என்றனை அதுவ தன்தொழில் அன்றியும்
ஒன்றத னியல்புஉல கோரியல் பன்றெனப்
பலமிலை பழம்பூப் பாதவந் தருநீர்
திரைநுரை திவலை சிலதரும் இவைபோல்
தானே பலவா மெனநீ சாற்றினை

பொன்னிலிருந்து நகைகள் தோன்றுவது போலப் பிரம்மத்திலிருந்து உலகு தோன்றியது என்றாய். நகைகள் மீண்டும் பொன்னில் சேர்ந்து பொன்னே ஆவது போல, உலகம் பிரம்மத்தில் சேர்ந்து பிரம்மம் ஆகுமா?

சித்து அசித்தைத் தருமா என்று கேட்டதற்குச் சிலந்தியாகிய சித்துப்பொருள் வாய்நூலாகிய அசித்துப் பொருளைத் தரவில்லையா என்று கேட்டாய்? சிலந்தி எப்போதும் நூலை உண்டாக்கிய படியே இருக்கும். பிரம்மம் அப்படித் தொடர்ந்து செய்யாது. மேலும் சிலந்தி நூல் ஒரே மாதிரியாக இருக்கும். உலகமோ பலவிதமாக இருக்கும் என்று நாம் சொன்னோம்.

சத்தசத் தாகவும் சத்தினில் அசத்தின்
கொத்துள தாகவும் கூறினர் இலரால்
வித்திலை கனிநனி விழுதா றுருநெறி
சத்தல தொறு தான்தர வேண்டு
நெற்பதர் பலாலத் திற்குஉபா தானமென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரண மின்றிக் காரியம் பிறவா
பாரிடை யொருபடம் பண்ணவும் படுமே
அந்தமில் பிரமம் அவித்தைகா ரணமெனத்
தந்தனை அவித்தை தானெய் துறுதம்
தன்னியல்பு என்னில் வன்னிதன் வெம்மையில்

சத்துப் பொருள் அசத்துப் பொருளைத் தந்ததாகவும் சத்துப்பொருளல் அசத்துக் கொத்துகள் இருப்பதாகவும் யாரும் கூறினவர் இல்லை. வித்து இலை காய் கனி விழுது முதலியவற்றை நுண்ணிய விதை பெருவடிவில் விரியச் செய்தது போல, நுண்ணிய விதைப் பொருளாகிய மாயையில் இருந்துதான் பருநிலையுடைய பலவும் தோன்றியிருக்க முடியும். நெல்லில் இருந்து பதரும் வைக்கோலும் தோன்றியது போல, சித்திலிருந்து உலகம் ஆகிய சடப்பொருள் தோன்றியதாக நீ கூறலாம். நெல்லுமே சடப்பொருள் தான்; அது தோன்றியதும் ஒரு நுண்பொருளில் இருந்துதான். அது நுண்பொருளில் இருந்துதான் வைக்கோலும் தோன்றியிருக்க வேண்டும்.

எனவே எல்லாம் ஒரு காரணப் பொருளில் இருந்து தான் விளைவாகிய காரியப் பொருள் தோன்ற முடியும். இதைச் செய்பவனாகிய நிமித்த காரணத்திலிருந்து தோன்றாது. தோன்றுமானால் பருத்தியிலிருந்தே ஆடை உண்டாகாமல் மண்ணிலிருந்தே ஆடை உண்டாகியிருக்க முடியுமே. பெருமைக்குரிய பிரம்மம் அழியக் கூடிய அறியாப் பொருளாகிய உலகைத் தரும் காரணப் பொருள் என்று நீ சொன்னால் அறியாப் பொருளாகிய உலகம் பிரம்மத்திலிருந்து தோன்றுவது இயற்கை என்றால்...

சங்கற்ப நிராகரணம்

சத்தினது இயல்பும் சத்தே அசத்தெனில்
வைத்ததன் இயல்பெனும் வழக்கொழி அன்றியும்
இருள்பொதி விளக்கென வருமிரு விளக்கில்
கருமை பயந்த பெருகொளி தகுமெனில்
தன்னியல்பு அன்றுஅதன் உபாதி வசத்தான்

தீயின் வைவப்பத்திற்குச் சுடுவது இயல்பு ஆனது போல பிரமத்தின் இயல்பு உலகைத் தருவது இயற்கை என்றால் அது பொருள் தராது. மேலும் ஒளிவிளக்கு இருளைப் பொதிந்துள்ளத என்று கூறியதை ஒக்கும். சித்தாகிய பிரம்மம் சடமாகிய உலகைத் தரும் என்று நீ சொன்னது, பெரிய விளக்கிலிருந்து கரிய இருள் தோன்றும் என்பதாகவும் ஆகும். அரிய புகை தருவதும் கூட, ஒளியில் வருவதன்று; தரி எண்ணெய் ஆகிய (உபாதிகள்) தற்காலிகப் பொருள்களால் தோன்றியதே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னியது அன்றிமை தான்தனின் மாயாது
ஒன்றா னசுத்தன் அன்றாம் அன்றே
ஆங்கொரு காலத் தோங்கிய தாயின்
அந்தமில் அவித்தை வந்தணை வதற்கோர்
ஏது வேண்டும் புவிஇயல்பு என்னின்வீண்

ஓத வேண்டா ஒழிந்தோ ரினுமுறும்
களங்கம துஉறவுறும் அவித்தைதற் கவித்தல்
விளங்கிய பிரம விளையாட் டாயின்
அவித்தை என்பதொன்று அன்னியம் தன்னில்
உதிக்கு மென்றமுன் னுரையு மறந்தனை

உலகம் எதில் தோன்றியதோ அதில் போய் அடங்கும். விளக்கில் தோன்றியமை மீண்டும் அதே விளக்கில ஒன்றாது. என்றும் சுத்தனாக உள்ள பிரம்மம் அசுத்தம் அடையமாட்டான். மாயையும் அதன் விரிவும் பிரம்மத்தில் வந்து கூடும் என்று நீ கூறினால் அதற்கு ஒரு காரணம் வேணடும். தூய வானத்தை அதிலேயே தோன்றிய மேகம் மறைத்துவிடுவது போல, தூய பிரம்மத்தை மாயா காரியங்கள் இயல்பாகத் தோன்றி மறைத்தன. வேறு காரணம் தேவையில்லை என்று நீ கூறினால் மோட்சம் பற்றியும் பேசத் தேவையில்லையே. ஏன் என்றால், யாரிடமும் மாயா காரியங்கள் விலகிவிட்டால், தானாகவே மோட்சம் வருமல்லவா?

அறியாமைப் பொருள்களோடு பிரமம் கூடுவது திருவிளையாட்டு என்று கூறலாம். விளையாடுபவனுக்கு விளையாட்டுப் பொருள் வேறாக இருப்பது போல, பிரம்மத்துக்கு மாயா தொடர்பு வேறாகவே இருக்க முடியும். முன்பு பிரம்மத்தில் தோன்றி மாயை பிரம்மத்தில் மறையும் என்று சொன்னதையும் மறந்துவிட்டாய்.

நுண்ணூல் குடம்பை நுந்துழி போலுள்
படுநெறி அதனால் விடுநெறி இலதால்
தலைமையும் அறிவும் இலதென வித்தையை
விடுத்தெடுத் தாணரும் வேற்றோ ரன்றே
ஒளிகொள் தாமிரம் குளிகைபெற் றாங்கதன்

அவித்தையை வித்தை தவிரக்குமென்று உரைக்கின்
இத்தன் அறிவன் சுத்தனென்று உரைத்த
வித்தகம் என்நீ வித்தையும் வேறொன்று
எம்ம னோரில் ஒருவன் இன்னிறை
அம்ம சைவந் தவனீ யன்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுப் பூச்சி தன் வாய் நூலால் தன்னைச் சுற்றியமைத்துக் கொண்ட கூட்டிலிருந்து வெளிவர முடியாது. அதிலேயே இறப்பதுபோல, பிரம்மமும் இந்த மாய உடலில் புகுந்ததாகக் கூறினால், இந்த உடலை விட்டும் நீங்க முடியாது. அதற்குத் தலைமையும் அறிவும் இல்லை என்றாகுமே.

பாச பந்தத்தில் பிரம்மம் இருந்தால் நம்மைப் போன்றதாகிவிடும். பிறகு நம்மையே அதனால் ஆள முடியுமா? தாமிரம் (செம்பு), குளிகையில் வைத்துப் புடம் போட்டால் பொன்னாவது போல, பிரம்மமும் தன் அறிவால் அறியாமையைத் தானே நீக்கிக் கொள்ளும் என்று நீ கூறினால் முன்பு நித்தன், அறிவுடையவன், சுத்தன் என்று பிரம்மம் பற்றிக் கூறிய விவேகம் ஆகுமா? நம்மைப் போன்றதே பிரம்மமும் உள்ளது எனப் பிறர் இகழுமாறு ஆகுமல்லவா? இதில் பரமிதியை மறுத்தார்.

சித்தாந்த சாத்திரம்

பிரமாதா மறுப்பு: பெத்தம்

**பன்மணி பசுநற் பாத்திர மெனவும்**
**நன்னூல் பானீர் நற்கதி ரெனவும்**
**உடலையும் உணர்வையும் உவமித் தனையேல்**
**தடமணி சரடொடு தாங்கூ டலவே**
**உணர்வுணர்வு ஒழியின் உலகுணர்வு உறினின்**

மணிகள் பலவானாலும் அவற்றில் கோக்கப்பெற்ற நூல் ஒன்றே என்றும் பசுக்கள் பல நிறமானாலும் பால் நிறம் வெள்ளையே என்றும் பாத்திரம் பலவானாலும் அவற்றில் பிரதிபலிக்கும் சூரியன் ஒன்றே என்றும் நீர்நிலைகள் பல விதமானாலும் அவற்றில் உள்ள நீர், தன்மையால் ஒன்றே என்றும யோனிகள் பலவானாலும் அவற்றுள் தோன்றிய உடம்புகளில் உள்ள பிரம்மம் ஒன்றே என்றும் பிரம்மத்தை விளக்க உவமை கூறினாய் முன்பு.

மணிகள் பலவும் ஒரு சரடு (நூல்) கொண்டு கோக்கப்பட்டன. அதுபோல, பிரம்மமும் உடல்களோடு வேறு ஒருவரால் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். அப்போது பிரம்மம் அறிவற்றதாக நிற்கும்; அத்துடன் உள்ள உடல்கள் அறிவு பெற்றதாகி விடும்.

**பாலும் பசுவும் சாலும் சாலக்**
**கலம்பல வன்றிச் சலம்பல இலதெனக்**
**காணுநர் இன்றி வீணின் விளம்பினை**
**ஆடியுள் நிழல்போற் கூடுதல் கூறில்**
**தன்னிழல் கொண்டு தற்பணம் சலிக்கின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல பசுக்களின் நிறம் வேறாக இருந்தாலும் அவற்றின் பால் ஒரு நிறமே என்று நீ கூறிய உவமை பொருந்தும். பல வித பாத்திரங்கள் வடிவில் வேறாயினும் அவற்றின் நீர் பலவல்ல; அதில் தெரியும் சூரியனும் ஒருவனே என்று பிறர் கூறுவதை நீயும் கூறுவது சரியாகாது.

கண்ணாடியில் தெரியும் உருவம் (பிம்பம்) அதிலேயே தோய்ந்து நிற்பதில்லை; அப்படியே பிரம்மமும் உடல்களில் பதியாமலே நிற்கும் என்கிறாய். இதுவும் சரியல்ல; ஏன் என்றால் கண்ணாடியை அசைத்தால் அதில் தெரியும் உருவமும் கூடியும் குறைந்தும் நிற்கும். இதுபோல, உடலில் உள்ள பிரம்மமும் உடல் அசைவுக்கு ஏற்ப அசையும். ஆகவே இதுவும் பொருந்தாத வாதமேயாகும்.

மன்னிழல் கொண்டுஉடல் வந்துஅகன் றிடுமே
மன்அயக் காந்தம் என்னவுடல் பிரம
சன்னிதி அளவில் சலித்திடு மாயின்
அகண்டிதன் சன்னிதி அலதிலது எவையும்
நடந்திட வேண்டும் கிடந்திடப் பெறாவே 130

அது உடலின் நிழல் உடலில் பொருந்தியும் அகன்றும் நிற்பது போலும்.

காந்தம் எந்த அசைவுமற்று நிற்க, அதன் முன்னிலையில் உள்ள இரும்பு மட்டும் இழுக்கப்படுகிறது. அது போல, பிரம்மத்தின் முன்னிலையில் உயிர்கள் பிறப்பு இறப்புக் கொள்கின்றன என்று நீ கூறுகிறாய்.

இதுவும் சரியன்று. ஏன் என்றால் பிரம்மம் ஓர் அகண்ட பொருள். எங்கும் அது உள்ளது. அதன் முன்னிலையில் உள்ள எல்லாப் பொருளும், இப்படி அசைவு பெற்று நடக்க வேண்டுமே தவிர கல் போலக் கிடக்கக் கூடாது.

காந்தத்து இரும்பு காட்டுநர்ப் பெறில்அயம்
சேர்ந்திடு நீக்கும் செயலதற்கு இலதே
கனாத்துயர் கயிற்றுஅரவு எனாச்சில தொடுத்தனை
கனவின் பயனும் நனவின் பயனும்
வினையின் பயன்அவை பொய்யென வேண்டா 135

காந்தமும் இரும்பும் தாமே ஒன்றாகக் கூடுவதில்லை. யாராவது ஒருவர் அவை இரண்டையும் அருகில் நேருக்கு நேராக வைக்க வேண்டும். மேலும் இரும்பைக் காந்தம் சேர்க்குமே தவிரப் பிரிப்பதற்குத் தெரியாது. (ஒன்று செய்து, மற்றது செய்ய இயலாத உவமையைப் பிரம்மத்திற்குக் கூற முடியாது).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவில் கண்ட துயரம் விழித்ததும் பொய் என உணர்கிறான்; புற்றின் அருகில் இரவில் கிடந்த கயிற்றைப் பாம்பு எனக் கண்டு அஞ்சியவன்; விடிந்ததும் அது பொய் என உணர்கிறான். இப்படித்தான் பிரம்மத்திற்கு இன்பதுன்ப உணர்வுகள் பொய்யாகி அதைப் பாதிக்காது என்கிறாய் நீ. கனவும் நனவும் வினையால் விளைவதால் அவை பொய்யாகா.

உடன்மா றாட்டக் கடனது கருதுக
உற்ற புற்று மற்றுஇதில் கயிறும்
உடலும் கூடச் சடமென அறிதி
அறிவு கயிறென்று அறியாது அன்றே
அச்சம் அடைதல் கொச்சமை யுடைத்தே

உடலில் காணும் பதிவுகள் வினையால் பதியும் கடன் உடையன.

புற்று, கயிறு, உடல் ஆகிய யாவும் சடப்பொருள்கள் அவை எதையும் அறியா. ஆனால் பிரம்மமோ அறிவுடையது; அதற்கு இது கயிறா பாம்பா என்பது சரியாகத் தெரியும். கயிற்றைப் பாம்பு என்று பிரம்மம் அஞ்சுமானால், அது கொச்சை நிலையாகும். எனுவே பிரம்மம் அறிவில்லாத கொச்கை நிலையுடையதாக ஆகக் கூடாது.

சங்கற்ப நிராகரணம்

இன்னம்அக் கனவில் இருளுறு கயிற்றில்
பின்னுநின் பிரமம் பிரமித் திடுமே
துன்னிய வினையில் செம்மலர்ப் பளிங்கெனத்
தானாம் தகைமை ஆனான் மலரென
ஒருபய னன்றிப் பலபயன் மரீஇய

மேலும் மறுபடி காணும் கனவின் துயரில் துன்புறுவதும் கயிற்றைப் பிறகும் பாம்பு எனக் கருதலும் நடக்கவே நடக்கும். அப்போது நீ கூறும் பிரம்மம் பிரமிக்காமல் இருக்க முடியாது. சிவந்த பூவைப்பளிங்கு வைத்து மூடினால், பளிங்கின் நிறமும் பூவின் நிறமும் மாறாது என்று கூறுகிறாய். இதுபோலவே பிரம்மம் வினைப்பயனை ஆனபவித்தாலும் தன் இயல்பு மாறாது எக்கிறாய். ஆனால் வினைப்பயன் பலவாக இருப்பதால் பிரம்மம் அவற்றை அனுபவித்ததாகவே கூறநேரிடும்.

திருவினை தருபயன் எனநனி வேண்டில்
ஆண்ட வித்தையும் அவித்தைகொ டாக்கையும்
ஈண்டிரு வினையும் இயம்பினை பரத்தைக்
கள்வரைப் பிணிக்கும் காவலர் எனமுய
தொல்வினைத் தொடக்கில் தோன்றுடல் சிறையிட்(டு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவினைக்குரிய பயன் மட்டுமல்ல; பகுத்தறிவும் அறியாமையும் கொண்ட உடலும் (இருவினையும்) நீ சொல்லும் பிரமத்திற்கு உண்டு என்று சொன்னதாகிறது. கள்ளர்களைச் சிறை செய்து தண்டிக்கும் மன்னன் போல, முன்வினைக்கு உரிய பயன்களாக உடலாகிய சிறையில் இட்டு, உன் பிரம்மத்திற்கும் பிற உயிர்களுக்கும் எம் கடவுள் அனுபவம் தருவதாக நீ அறிக.

இருவினை ஊட்டும் எம்மான் அம்மான்
அருவினை உடற்கண் அவத்தைகள் உரைத்தனை
யாருறு பவர்பரம் அகண்டிதம் அடங்கா(து)
ஓர்விலது உடல்சடம் உறுநெறி யாதெனின்
மன்னிய கரண மாறாட் டத்தில்

முன்செய்த அரிய வினைக்கு ஈடாகவே உடம்பு எடுக்கப் பெறும் என்றும் அது மூன்று அவத்தைகளை ஏற்கும் என்ற கூறினாய். அந்த அவத்தைகளை அனுபவிப்பவர் யார்? பிரம்மமாகிய பிரம்மம் எங்கும் நிறைந்ததால், அது ஓர் உடலில் அடங்காது. உடம்போ சடம்; அதற்கு அறிவு அனுபவம் கிடையாது; வேறு எவ்வழியில் அந்த அனுபவம் நிகழும் என்று கேட்டால்;

பன்இனம் என்னின் இவையோ பரமோ
முதலிய தாயின் இவைபிறழ் வெய்தா
இவையெனி லுனது மொழிபழு துளதே
உடற்படு பிரம முறுமெனில் சாளரத்(து)
இடத்தகும் உறுவிரல் நுதியளி யெறிதுய(ர்)

அந்தக்கரணங்கள் பிரிந்தபோது உண்டாகும் மயக்கத்தையே அவத்தையாகக் கூறுவதாக நீ கூறலாம். அப்படியானால் இந்த உடலுக்க முதன்மை கொள்வது பரப்பிரம்மமா அல்லது அந்தக்கரணமா? பிரம்மமே முதன்மை உடையது என்று நீ சொன்னால் அந்த பிரம்மம் இருக்கும்போது, அந்தக்கரணங்கள் நீங்குவதில்லை. அந்தக்கரணங்களே உடலுக்க முதன்மை உடையன என்றால் பரப்பிரம்மம் முதன்மையற்றதாகித் தாமும் வேதத்தோடு ஒப்பாது உன் மொழி தப்பாகி விடும். உடலுக்குள் இருக்கும் பிரம்மமே இதைப் பெறுவதாக கூறினால்...

அங்குலி தானே அருந்திடில் உடற்கட்(டு)
அங்கிய அறிவு தனித்துறு மன்றே
தற்பண நிழற்கண் குற்றிபாய்ந் தற்றா
னற்கணிற் றுயர நணுகாத் தகைத்தெனின்
இன்மொழி விரோதமுங் காட்சி விரோதத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சன்னலில் விரலை நீட்டியதும் ஒரு வண்டு வந்து கொட்டுவதாகக் கொண்டால் துன்பம் கொள்வது விரல் அங்குலம் மட்டுமே என்றால் நீ சொல்வது சரி. ஆனால் அது உடல் முழுதுமல்லவா பரவுகிறது. (ஆகவே உடலில் உள்ள பிரம்மமும் துன்பம் எய்தும்; உடல் மட்டுமே எய்தும் என்பது தவறு) கண்ணாடியில் தெரியும் கண்ணில் ஒரு குச்சியால் குத்தினால் கண்ணாடிக்குப் பாதிப்பு வராது. இது போலவே, உடலின் துன்பம் பிரம்மத்துக்கு வராது என்று நீ கூறினால் அது...

**தன்மையும் உறும்அவை தவறில வாகா**
**யாமுடைப் பதிவகை யாவரும் பலகலை**
**சொல்லுதல் எளிதரிது அத்தொழில் புரிவெனப்**
**புல்லிய பழமொழி புதுக்கினை அன்றே**
**அகண்டித மெனநீ பகர்ந்தமை தனக்குப்**

வேதக் கருத்து விரோதமும் அனுபவ விரோதமும் ஆகித் தவறாகவே நிற்கும். நம்முடைய கடவுள் வகையில் படாதவை பல சொல்கிறாய். "இது சொல்லுதல யார்க்கும் எளியது ஆனால் சொல்லியபடி நடப்பது அரியது" என்ற பழைய (திருக்குறள்) கருத்தைப் புதிய வகையில் சொன்னாற்போல ஆகிறது.

**பந்தம் இதுவெனத் தந்தமை கருதில்**
**வானில் அடக்கும் காலினைப் பிடித்துப்**
**பருவிலங் கிட்ட ஒருவன்நீ யன்றே**

சீவன்முத்தி மறுப்பு

**பந்தமது அகல உந்து விவேகம்**
**வான்வளி எனத்தனில் தானே தோன்றின்**

எங்கும் நிறைந்த பொருள் என நீ பிரம்மத்தைக் கூறினாய். இப்போது அது சிறிய உடலில் பந்தப்படும் என்கிறாய். இது எது போல என்றால், வானில் உள்ள காற்றைப் பிடித்து அதற்கு கைகளில் விலங்க இட்டவன் நீ என்றே ஆகும். உடலில் கட்டுப்பட்ட பிரம்மம் அதை நீக்குவது எப்படி என்றால், வானில் உள்ள மேகங்களை வானில் தானாகவே காற்றுத் தோன்றிக் கலைப்பது போல என்று நீ உவமை கூறுகிறாய்.

**முன்புள தாயின் மயங்காது இலதெனில்**
**பின்புள தாகாது இலதுள தெனின்வெளி**
**மலரது தரும்அனல் மரக்கண்இன் றாகித்**
**தருவது தகுமெனில் தானே தோன்றா**
**விறகி னுதித்த கனல்தகு மாயின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானில் காற்று முன்பே இருப்பது போல பிரமத்திற்கும் முன்பே அறிவு இருக்குமாயின் இடையில் அறிவு மயங்கியிருக்காது. அறிவு இடையில் தான் பிரம்மத்திற்கு வந்தது என்றால் முன்னால் இல்லாதது பின்னால் உள்ளதாக முடியாது. இல்லாததே பிறகு உண்டாகலாம் என்றால் அது ஆகாயத்தில் பூ மலர்ந்தது என்பது போலாகும். விறகில் முன்பு இல்லாதபோது அதைக் கடைந்ததும் வெளிப்படும் நெருப்பைப் போல, பிரம்மத்திற்கும் இல்லாத அறிவு உண்டாகும் என்றால் விறகில் நெருப்புத் தானாக வராது; ஒருவர் முயற்சித்த பிறகே வரும். ஆகவே பிரம்மத்துக்கும் அப்பால் அதற்கு அறிவு தர ஒருவர் உள்ளாரா? என்று கேட்க நேரும்.....

அவித்தையி னுதித்த வித்தை பம்மரத்
துதித்த விவேகம் வித்தைஎன்று உரைத்த
வெந்தழல் அனைய விவேகம் உதித்தது
இந்தன மனையது இறையிலன் றற்றே
இற்படப் பிரிப்பின் மெய்ப்படும் எவற்றையும்

உடலில் உள்ள அறியாமை இருக்கும்போதே அறிவு தோன்றுவது போல விறகில் நெருப்புத் தோன்றியதாகக் கூறுவாய். அதாவது அறிவும் நெருப்பு போன்றது என ஆகிறது. அந்த ஞானம் தோன்றிய இடம் விறகு ஆகும். நெருப்புத் தோன்றியதும் விறகையே அது அழிப்பது போல, அறிவும் பிரமத்தை அழிப்பதாகப் பொருள்படும். எனவே தவறாகும்.

இதுஅன் நிதுஅன்று எனக்கழி காலை
அதுவே தானே யாயினது என்றனை
வித்தை முன்னர் அவித்தையும் அவித்தைமுன்
வித்தையு நில்லா வியனொளி இருளென
இருளல வொளிக்கும் ஒளியல இருட்கு

வைக்கோல் வேய்ந்த குடிசையில் வைக்கோல் பிரியையும் அன்புகளையும் பிரித்து எடுத்துவிட்டால் வீடு என்பது அங்கில்லை. ஒரு துணியில் ஒவ்வோர் இழையாகப் பிரித்தால் துணி இல்லாமல் போகும். அதுபோல, நம் உடல் உறுப்பு ஒவ்வொன்றையும் நான் அல்லன் என்று கூறியே மனத்தால் நீக்கினால் பிரம்மம் தானே சீவனாய் இருந்து விளங்கும் என்கிறாய். அறிவில் அறியாமை நிற்காது. அறியாமை முன் அறிவும் நிற்காது, பிரம்மம் அறிவு உடையது; உலகம் அறிவற்றது. இரண்டும் எப்படி இணையும்? சூரிய ஒளி முன் இருளும் நிற்காது; இருளின் முன் ஒளியும் நில்லாதது போல இதைக் கொள்க.

ஒருகா லத்து ஒருபய னிலதால்
இரண்டையு நுகரு முரண்டரு விழியென
வித்தையும் அவித்தையும் உய்த்ததென் றுளதே
தானே தானா மானாற் பயனென்று
தன்னில் தன்னைத தானே காணிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளும் ஒளியும் கூடுவதால் ஒரு காலத்திலும் எந்தப் பயனும் இல்லை. ஆனால் இருளுடன் சேர்ந்து இருளை அறிவதும் ஒளியுடன் சேர்ந்து ஒளியை உணர்வதுமாகிய கண்ணைப் போல, பசு என்ற ஒன்று உள்ளது. அறிவுடன் கூடி இது பதி என அறிவதும் அறியாமையுடன் கூடி இது பாசம் என அறிவதும் அந்தப் பசுவேயாம். என அறிவாயாக. வழியாகிய பிரம்மமே தன்னைத் தானே காணும் என்பதால் பயனில்லை. தன்னில் தன்னைத்தானே காணுவது என்பது கண்ணைக் கண்ணே காண்பது போன்றதாகும்.

கண்ணிற் கண்ணைக் காணவும் படுமே
தன்னல மதனைத் தானே நுகரும்
என்னின் முன்னலம் எய்தாது இருந்ததென்
கட்டி போலெனக் கதறினை இன்பம்வந்து
ஒட்டிடும் வித்தை யுடையயா யிடினே

பிரம்மம் உடல் தொடர்பு கொண்டாலும் தன் இன்பத்தையே அது அனுபவிக்கும என்று கூறினாய். அப்படியானால் உடல் தொடர்பு வருவதற்கு முன்பு ஏன் பிரம்மம் தனது இன்பத்தை அனுபவிக்கவில்லை என்று கேட்டால் கரும்பு தன் சுவையைத்தான் அறியாது இருப்பது போல என்று பதில் சொல்கிறாய். ஆனால் நீ பசுவாக (ஆன்மா) இருந்து பாசத்தை நீக்கினால் பதியுடன் சேர்ந்து ஓர் இன்பத்தைப் புதிதாகப் பெறுவாய் என்பதை அறிவாயாக.

தத்துவ மசியென வைத்தமுப் பதத்திற்
கொன்றே பொருளென் றன்றே பகர்வது
நீபுவி யாயினை யென்றாங் குணரில்
ஆயினை யென்றதும் ஆகுஉவ தைத்தான்
ஓயா யினமே லாயா யென்றால்

அகமே பிரம மாயின தென்றாற்
சகமே யறியத் தான்வே றன்றே
உண்மையிற் சலமில வுடற்சஞ் சலமுறும்
வெண்மதி போல விளங்கிடு மென்றனை
அசல னாகிச் சஞ்சல சலத்துச்

தத்துவமசி எனும் மகா வாக்கியத்தில் உள்ள மூன்று சொற்களும் ஒரே பொருள் கொண்டது ஆகாது. தத் = (அது) கடவுள்; துவம் = நீ; அசி = ஆனாய் என்பதே தத்துவமசியாகும். இதில் முதல் இரண்டு சொல்லும் இருவேறு பொருள்களைக் குறித்தன. மூன்றாம் சொல் உவமையை விளக்கி நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நீ புலி ஆனாய்' என்று கூறினால் புலி வேறு நீ வேறு தான். ஆனால் வலிமை வீரம் ஆகிய குணங்களால் நீ புலியை ஒத்துள்ளாய் என்பதே ஆகும். அப்படி நீ கடவுள் (பிரமம்) ஆனாய் என்பதும் ஒற்றுமைக் குணத்தை மட்டுமே காட்டியது.

நான் பேயாக இருந்தேன் என்று ஒருவன் கூறினால், அவனும் பேயும் ஒன்று என்று ஆகாது. பேய் வேறு, அவன் வேறு என்பதை இந்த உலகமே அறியும். அப்படி "அகம்பிரமம்" (அகம் பிரம்மாஸ்மி) என்பதும் இப்படியே அறிக. நீர் அசையும் போது சந்திரனும் அசைகிறது என்று உவமை கூறுகிறாய். இதனால் பிரம்மம் எந்தச் சலமும் இல்லாதது என்கிறாய். ஆற்றில் ஏற்படும் அசைவைக் கரையில் உள்ளவன் காண்பது போலத்...

சலன மேவின மெனமதி காண
வேண்டும தன்றிக் காண்பவர் பிறரேல்
ஈண்டுனது ஏகம் மென்செய்த தியம்பு

பரமுத்தி மறுப்பு

உடல்விடக் கடத்துள் படுவெளி போலெனில்
விட்டென் பெறவுடற் பட்டென் படமற்று

தனக்கு அசைவு இல்லை என்பதை நிலவும் அறிய வேண்டும். அது காணாமல் பிறர் காண்பதா? பிரம்மம் அசைவற்றதைத் தான் அறியாமல் பிறர் அறிந்தால் பிரம்மம் ஒன்றா இரண்டா? என்று ஐயமாகும். 'ஏகம் பிரம்மம்' என்பது என்ன ஆகும்?

குடம் உடைந்தால் அதில் உள்ள வெளி (குட ஆகாசம்), பெருவெளியாக அகன்று, பர ஆகாசத்தோடு ஒன்றுபடுவது போல, உடல் உடைந்த பின் அதிலுள்ள பிரமம் வெளியாகி, அகண்ட பிரம்மத்தோடு சேரும் என்கிறாய். இது பர முத்தி என்பது உன் கருத்து. உடலில் புகுந்த பிறகும் துன்பத்தை அடைந்த பிரம்மம், உடலை விட்டுப் பிரிந்த பிறகு இன்பத்தை அடைவதால் இந்த உவமை பொருந்தாது என்பதாம்.

இகலற வொருவ னிவ்வகை தெளியில்
அகிலமு முத்தி அடைந்திட வேண்டும்
அறிந்தோர் முத்தி யடைந்தோ ராயின்
பிறந்தோ ருயிர்பல பேதத் தன்றே

பிரமஞானம் வாரா தென்றது
கன்ம காண்டங் கரண மாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த மாறுபாடும் இல்லாமல் தான் பிரம்மம் என்று இப்படித் தெளிவடைந்தான் ஒருவன் என்றால் அவன் அறிவும் பிறர் அறிவும் (ஏகம்) ஒன்று என்று சொல்வதால் உலகில் உள்ள எல்லோருமே முத்தி அடைய வேண்டும். தெரிந்தவர் அடைவர் மற்றவர் அடையமாட்டார் என்றால் அறிந்தோரில் ஒரு பிரம்மமும் அறியாத பலரிடமும் பல பிரம்மமும் உள்ளன என்றாகும்.

மன்னும் விவேக என்னில் அவித்தைக்கு
ஏது காரணம் ஓதினை இல்லை
இதற்குங் காரணம் விதித்தல்வேண் டின்றே
அரணியி லுதித்த கனலவை கவர்வென
விரதத் துதித்த விவேகம் அழித்தல்

பிரம்மஞானம் வாராது என்று கூறல்

வேதத்தில் கூறப்பட்ட கர்ம காண்டப்படி யாகம் முதலியவற்றைச் செய்தால் முத்தியடையாதவர்க்கும் பிரம்மஞானம் உண்டாகும் என்கிறாய். அப்படியானால் உடலில் வந்த பிரம்மத்திற்கு அறியாமை ஏன் வந்தது என்பதற்கு இது வரை நீ காரணம் சொல்லவில்லை. முன்பே இப்படி ஒரு மாயத் தொடர்பு பிரம்மத்திற்கு இருந்ததாக நீ கூறவேண்டும். விறகைக் கடையும் போது வரும் தீயானது விறகை எரிப்பது போல, யாகம் முதலான கர்மத்தால் வரும் ஞானம் அந்தக் கர்மங்களையே அழித்து விடுமல்லவா.

வருந்தி ஆயினும் திருந்திய வேத
நீதி எல்லா நீத்துப் போதமொன்று
அறியார் தாமும் அவ்வழி நடத்தல்
பொறியோ போத நெறியோ இதுபவ
நீங்கிடு நெறிதரு பாங்கினைப் பழித்தன்

ஆகவே நடக்க வேண்டிய வேத நெறிகளை வருந்திக் கைக்கொள்வதை விட்டுவிட்டு, சிவஞானம் என்பதையே அறியாத சிலர் தமக்குப் பிரம்மஞானம் உண்டாகி விட்டதாகவும் அதனால் இனி ஒழுக்கநெறிகள் தேவை இல்லையென்றும் சொல்லி வருகிறார்கள். இது அவர்கள் விதியா? அல்லது அவர்களின் தவறான அறிவு நெறியா?

சங்கற்ப நிராகரணம்

நன்றி கொன்றல் அன்றே அன்றியும்
ஞால நீதியு நான்மறை நீதியும்
பாலர்உன் மத்தர் பசாசரில் எனவும்
உறங்கி னோன்கை வெறும்பாக் கெனவும்
தானே தவிரா தானால் புரியா(து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் விலகாத பிறவித் துயரைப் போகச் செய்யும் இந்த கர்மங்களைச் செய்யாது செய்ந்நன்றி இகழ்ந்து கைவிடுதலானது, கொலைக் குற்றத்தையே ஒக்கும். மேலும் உலக நீதியையும் வேத நீதியையும் சிறுவர் உன்மத்தர், பேயர் ஆகியோர் கைவிடுவதும் உறங்குகிறவன் கையிலிருந்த வெற்றிலைப் பாக்குத் தாமாகக் கீழே விழுவது போலத்தான்.

ஒழிந்திடின் நிரயத்து அழுந்துத றிடமே
உய்த்தோ னன்றி முத்தி யுரைத்தல்
பித்தோ பிரமம் செத்தோ பெறுவது
உடலையு நீயே சடமெனச் சாற்றினை
வையினும் வாழ்த்தினும் கொய்யினு கொளுத்தினும்

வேத ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தவர் அல்லாமல் அவற்றைப் புறக்கணித்தவர் கூட முத்தியடையலாம் என்பது பித்தர் உரையேயாகும். பிரம்ம ஞானம் என்பது செத்த பிறகு கிடைக்குமா? (அது உடம்பு அழியாதபோதே பெற வேண்டியதாகும்) ஆனால் நீயோ உடலைச் சடம் என்று இழித்து உணர்ந்து விட்டாய்.

வணங்கினும் உதைப்பினும் பிணங்குதல்செய்யாப்
பிரமத் தன்மை பெறுவதெக் காலம்
இருக்கு நாள்சில எண்ணின்நூல் கதறித்
தருக்கம் பேசித் தலைபறி யுற்றுக்
கண்டோர் ஈந்த பிண்டமுண்டு அலறிப்

இவனை ஒருவன் வைதாலும் வாழ்த்தினாலும் உறுப்புக்களைச் சிதைத்தாலும் நெருப்பிட்டாலும் வணங்கினாலும் உதைத்தாலும் அவனிடம் மாறுபாடு கொள்ளாது இருக்கிறான். இவன் பிரம்மஞானம் பெறுவது எந்தக் காலத்தில்?

இவ்வுடம்பில் உயிர் இருக்கும் நாட்களை எண்ணினால் அவை குறைவேயாகும். இதற்கிடையில் பல நூல்களையும், படித்தும், கற்றவரிடம் விவாதம் செய்தும், பிறர் அறிஞர் எனப் புகழவும், தன் தலையைக் குழப்பிக் கொண்டும், பிறர் இடும் பிச்சையை ஏற்று உண்டும்

பன்னோ யாக்கை தன்நோ யுற்றுஉடல்
விடவரு மென்று நடுநடு நடுங்கி
விட்டோர் தெய்வத் தொட்டின்று அன்றியும்
யானே எவரும் ஆனேன் என்றலின்
அவ்வவர் சீறி அவ்வவர் வாழ்நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்விதின் நிரயம் சேர்த்துவர் அதனால்
மாயா வாதப் பேயா உனக்குத்
தேவரில் ஒருவருண் டாக
மேவரு நரகம் விடுத்தலோ அரிதே.

பலவித நோய்களைத் தன் உடலில் பெற்றும் கூட, அதன் பின்னரும் கலகநேருமே என நடுங்கி இருக்கும் போதிலும் 'இவனுக்கு அஞ்சாதே' என்று அபயம் தர ஒரு தெய்வத்தின் தொடர்பும் இல்லாது போனது.

நானே (பிரம்மம்) எல்லாம் ஆனேன் என்று கூறுவதால் பிரம்மத்தின் சார்பாக உள்ள தெய்வ அதிகாரிகள (மும்மூர்த்தி முதலியோர்) இவனிடம் சினம் கொண்டு, ஆயுள் முழுவதும் இவனை நரகில் சேர்ப்பார்கள். அதனால் மாயாவாதம் எனும் பேய்க்கொண்ட உன்னைத் தேவர்களில் ஒருவராவது நரகத்திலிருந்து விடுவிக்க இயலாது போகும்.

## சித்தாந்த சாத்திரம்

### ஐக்கியவாதி சங்கற்பம்

பெத்தநிலை

அரிதேர்ந் துணராப் பெரியோ னுரைத்த (5)
பதிபசு பாச விதிமுறை கிளக்கில்
ஈசன் ஏகன் எண்ணிலி பசுக்கள்
பாசம் இருவகைப் பரிசினது உலகத்
தாயவன் உயிர்க்கு மாயையி னருளால்

யாராலும் தேர்ந்து உணர முடியாத பெரியவன் ஆகிய சிவபெருமானால் சொல்லப்பெற்ற பதி, பசு, பாசம் என்ற முறையாகக் கூறப்பட்ட உண்மையை எடுத்து விளக்கினால் பதியாகிய ஈசன் ஒருவன் என்பதும் பசுவாகிய ஆன்மாக்கள் எண்ணற்றன என்பதும், பாசம் என்பதும் மாயை கன்மம் (அல்லது அசுத்த மாயை சுத்த மாயை) என இரண்டாகும் என்பதும் விளங்கும்.

இருவினைத் தொகையி லுருவினைத் தருமால்
கருமுகில் அடர விரிதரு கதிர்போன்(று)
அறிவாம் உயிரில் பிறியா தேயும்
ஈட்டும் இருபய னூட்டிடு நியதிக்
கொருபொழுது இருபயன்நுகர்வுற மருவுதல்

உலகிற்குத் தாயாக இருந்து உயிர்களுக்கு மாயையின் மூலமாக, அவர்கள் செய்த நல்வினை தீவினைக்குரிய பயன்களைத் தருவான். கருமேகமானது விரிந்த கதிர் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியனை மறைப்பது போல, இயற்கை அறிவுகொண்ட உயிர்களுக்கு மாயையால் ஆகிய உடலைத் தந்து, அறிவை மாற்றி, ஆனால் அவர்களைப் பிரியாது நின்று வினைப்பயனை ஊட்டுவான் கடவுள்.

**இன்மை யாதன் முன்னிய காலைச்**
**சத்தி நிபாதம் உற்றிறை அருளால்**
**உருகொ டுலகு தெரிவுற மருவி**
**மாசுறும் தூசு தேசுற விளக்கும்**
**தன்மையின் உணர்த்தும் புன்மைகள் நீங்கி**

**நீரு நீரும் சேரும் தகைமையின்**
**அறிவினோடு அறிவு செறிவுறப் பொருந்தி**
**ஒன்றாம் என்பதை உலகோர்**
**நன்றா முத்தி என நவின் றனரே.**

இருவித வினைகளையும் ஒரே பிறவியில் அனுபவித்து முடித்த பிறகு சத்திநிபாதம் என்னும் இறையருள் தோன்றும். அருளால் குருவுருவம் கொண்டு உலகினர் காணுமாறு எழுந்துவந்து, உடையில் உள்ள அழுக்கை நீக்குவது போல தீட்சை முதலியவற்றால் உயிர்களின் அழுக்கை நீக்குவான். நீரோடு நீர் ஒன்றாகச் சேர்வது போல, இறைவன் அறிவும் உயிர்கள் அறிவும் ஒன்றாகி நிற்கும் என்பதையே பெரியோர் முத்தி என்னும் நன்னிலை என்று கூறுகின்றனர். (இப்படி ஐக்கியப்படுவதைக் கூறுவதால், இவர்கள் ஐக்கியவாதி எனப்பட்டனர்).

### **சங்கற்ப நிராகரணம்** (ஐக்கியவாதி சங்கற்ப நிராகரணம்)

பெத்தநிலை மறுப்பு:

**முத்தி என்பது எவனோ சுத்த**
**அறிவெனில் பாசம் செறியா மாயை** (6)
**உருவிரு வினையால் வரும்இரு வினையும்**
**உருவா லன்றி மருவாது இவற்றின்**
**முந்தியது ஏதோ வந்துஅணை வதற்கோர்**

முத்தி என்று எதைக் கூறுகிறாய்? ஆன்மா முன்பே சுத்தமும் அறிவும் உடையதாக இருப்பதாக நீ கூறினால், நடுவே பாசம் வந்து ஆன்மாவைக் கூட்ட முடியாது. முன்பு இந்த ஆன்மா செய்த நல்வினை தீவினையால் மட்டுமே பாசம் வரும், அந்த இருவினைகளும் மாயையால் எடுத்த உடலில் அல்லது இந்த ஆன்மாவில் வந்து கூட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏது வேண்டும் தான்இயல்பு என்னின்
வீடுற் றவரினும் கூடக் கூடும்
ஈங்கிவை நிற்க நீங்காக் கருவிகள்
கொண்டறிவு அறியக் கண்டது மன்றி
மருவிய உருவு துயில்பெறும் காலைச்

சிறுபொறித் தறுகட் கறையணல் கடிகைத்
துத்திக் கடுவுள் துளைஎயிற்று உரகக்
கொத்தயல் கிடப்பினும் குவைதரு தவமணி
ஒருபாற் றுதையினும் பெருகுஆர் வத்தினோடு
அச்சமும் அணுகாக் கொச்சமை என்னே

பாசம் இரண்டு; ஆகையால் அவற்றில் எது முன்னதாக இவ்வான்மாவை வந்து கூடியது? அவை சிவனை வந்து கூடுவதற்கும் ஒரு காரணம் இருந்தே ஆகவேண்டும். இயல்பாக அது தானே வந்து கூடும் என்று கூறினால்; முன்பே வீடுபேறு பெற்றவரையும் சென்று கூடுவதே இயல்பாக இருக்க முடியும். இவை நிற்க உனக்கு ஆணவ மலம் நீங்காத தொடர்புடையதாகவிருந்தது. மாயையால் வந்த உடலும் கருவிகளும் வந்ததால் அறிவு ஏற்பட்டு உலகில் எல்லாம் அறிகிறாய், இதைத் தெரிந்த பிறகும், ஆணவ மலம் இருப்பதை நீ ஒப்புவதில்லை. உடம்பு உறங்கும் போது நஞ்சுடைய பாம்புகளும் நவரத்தினங்களும் இரு பக்கமும் இருந்தால் கூட, அச்சமோ மகிழ்ச்சியோ உனக்கு வருவதில்லை; காரணம் அவை இருப்பதை நீ உறங்குவதால் அறியாமையே ஆகும்.

கருவி யாவும் பிரிவுறு நிலையேல்
பொறிபுல னாதி குறைவற நிறைந்து
காட்சியது அளிக்கும் மூட்சியின் முன்னர்ச்
கொடுத்தோர் ஆழி விடுத்தவர் நாடிக்
கொள்வோர்க் காணாது உள்கி மீண்டுழித்(து)
தந்தவர் கண்டாங்க அந்தமில் அதனைத்
தருக வென்னும் பெருமதி பிறங்கும்அது
அறிவி லாமையென்று அனையது மலமாக்
குறிகொ ளாளள் அறைகுவ ரன்றே

உடலில் உள்ள கருவிகள் உடலை விட்டு நீங்கிய போது விருப்பமோ வெறுப்போ ஏற்படுவதில்லை. ஆனால் அந்தக் கருவிகள் குறைவில்லாமல் நிறைவாக உன் உடலில் இருக்கும்போது உணர்வு மிகுந்து எல்லாக் காட்சிகளும் உனக்க உணர அளிக்கும். ஒருவரிடம் மோதிரத்தைக் கொடுத்து விற்று வரச் சொன்னார் ஒருவர். வாங்குவார் யாரும் இல்லை என அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதிரத்தை முன்பு தந்தவரிடமே திருப்பிக் கொடுத்து விட்டார். ஆனால் திரும்ப வாங்கியதை மறந்துவிட்டு முன்பு கொடுத்த மோதிரத்தைத் திருப்பிக் கேட்டால் அது அறிவில்லாமல் கேட்டது என்றே நீ கூறுவாய். இது போல, ஆணவமலத்தில் கிடந்தபோது ஆன்மாவுக்கு அறிவில்லை; உடல்பெற்ற போது அறிவு வந்தது என்று பெரியோர் கூறுகின்றனர்.

முத்திநிலை மறுப்பு

**அறிவிற்கு அறிவு செறியவேண் டின்றே**
**உண்மையில் இருமையும் ஒளியே எனிலொரு**
**தன்மை யாகமுன் சாற்றினர் இலரே**
**முன்பு நன்றுடன் ஒன்றிய காலை**
**இன்ப மெய்துதற்கு இலதுயி ராலின்**
**ஈயலை பொரு மாயா வாதி**
**யால்தினை அமையும் அருள்றிலை கேள்மி**

முத்தியில் அறிவும் அறிவுமாச் சிவமும் ஆன்மாவும் ஒன்றாகும் என்றால், ஆன்மாவிற்க அறிவு இருக்கும் போது வேறு அறிவுடன் சேரத் தேவை இல்லை. இரண்டும் ஒளிகளேயாக இணையும் எனில் அது பொருந்தாது. ஏன் என்றால், சிவம் முற்றறிவும் ஆன்மா சிற்றறிவும் கொண்டன. இரண்டும் ஒரே தன்மை உடையதாக யாரும் கூறவில்லை.

சிவத்தோடு ஆன்மா கூடி இன்பத்தை அனுபவிக்கும் என்றால், அது உண்மையானால், மாயாகருவிகளுடன் கூடிப்பிறப்பு எடுப்பதற்கு முன்பும் சிவத்துடன் ஆன்மா இருந்ததாக ஆகும். ஆகவே நீயும் மாயாவாதி போல, உடல் பிரிந்ததும், குட ஆகாசம் மகா ஆகாசத்தில் தானே ஒன்றுவது போலச் சிவத்தோடு கூடி முத்தி பெறும் என்கிறாய். இனியும் கேட்பாயாக.

பாடாணவாதி சங்கற்பம்

பெத்தநிலை:

**மூல மலத்தால் சாலு மாயை**
**கருமத் தளவில் தரும்உரு இறைவன்**
**செறிந்தி பயனு நுகர்ந்திடும் உயிர்கள்**
**இருளுறு மலத்தில் பருவரல் படுதலின்**

ஆதியிலேயே ஆணவமலத்தால் மூடப்பட்ட ஆன்மாவுக்குத் துணை புரிய மாயை வந்து சேரும். இப்படிச் சேர்ந்த மாயையால் அவரவர் வினைப் பயனுக்கு ஏற்ற உடம்பை இறைவன் அருள்வான். தன் வினைப்பயனை உயிர்கள் இதனால் நுகர்ந்திடும். ஆணவ மல இருளில் துன்புற்றதால் இறைவன் இப்படி அருள் புரிந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இடைஇரு நோக்கும் தடைபட் டோரில்**
**உயர்உறு மதனால் செயிருறு துன்பம்**

நன்றாகப் பார்வையுள்ள கண்கள் திரைவளர்ந்து மறைக்கும்போது பார்வை கெடும். அதனால் உயிர்கள் துன்பமுறும். அதுபோலவே, ஆணவமலத்தால் ஆன்மாவின் இயற்கை அறிவு மறைந்தது. இதையும்நீக்க ஆன்மாவிற்குப் பிறப்பைத் தரவேண்டியதாயிற்று.

முத்தி நிலை

**கொத்தை மாந்தர் உய்த்துறந்(து) துயில்போல்**
**காட்சி என்னக் காணாத் துயர**
**மாட்சியை முத்தி யெனவகுத் தனரே.**

உறக்கத்தின்போது மக்கள் எந்த ஒன்றையும் (இன்ப துன்பம் எதையும்) அனுபவிக்காது இருப்பது போல, துயரம் ஏதும் காணமுடியாமல் மாட்சி பெற்ற நிலையே முத்தி என்று வகுத்துக் கூறினார்.

பாடாணவாதி சங்கற்ப நிராகரணம்

**வகுத்துரை பெருகத் தொகுத்திடு(ம்) முத்தி** (7)
**நன்று நன்றுஇருள் ஒன்றிய மலத்தா(ம்)**

சொற்களை வகுத்துத் தொகுத்து நீ முத்தி பற்றிச் சொல்கிறாய். ஆணவ மலத்தில் அழுந்திக் கிடக்கும் ஒரு நிலையே முத்தி என்று நீ சொல்வது நன்றாக இருக்கிறது. (என்று கேலியாகப் பாராட்டினார்)

**உளத்திற் குறுபொறி செறிபுலன் நுகர்தல்**
**விளக்கில் திகழு மேன்மையது அன்றே**
**கருவிகள் அகல்வழி மருவிய துயரமு**
**நன்றெனல் ஆகும் துன்றிய படலத்து**
**இடைதடைப் பட்ட சுடர்விழி மாந்தர்**
**படல நீங்குதல் கடனா தலினே**
**காட்சி என்னக் காணாத் துயர**
**மாட்சியை முத்தி எனவகுத் துரைக்கிற்(கு)**

பொறிகளும் புலன்களும் நுகர்வதை உள்ளத்திற்கு உணரச் செய்தல் விளக்கின் துணையால் விழி பார்ப்பதற்கு ஒப்பதாகும். இந்தக் கருவிகள் அகன்றபோது ஆணவமலத்தில் அழுந்தும் நிலைதான் ஆன்மாவிற்கு உண்டாகும். இந்த நிலையைக் கேவல நிலை என்பர். உடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு துயர்படுவதும் உடலின்றித் துன்பமும் இன்றி ஆன்மாவால் அழுந்தியிருப்பதும் நல்லது என்றே சொல்லப்படும். கண்ணில் பார்வை தடைப்படும்படி திர வளர்வதைத் தவிர்ப்பதே கடனாகும். (அதனால் கேவல நிலை நிக்கப்பட வேண்டும்) காட்சி இல்லாதது போலத் துயரமும் இல்லாததே முத்தி என்று கூறினால் கேவல நிலையே வந்து சேரும் என்பதாம். அப்போது இதையே முத்தி என்று கூறியதாக முடியுமல்லவா?

கரணா பாவ மரணம் கருமரம்
ஏய்ந்தவர் முத்தி சேர்ந்தவர் அன்றே
அனைய கதிக்கோர் முனைவரும் வேண்டா
தனிதரு துயரம் எனுமிது திடமே
பாடாணத்தில் கூட முத்தி

இதையே முத்தி என்று நீ கூறினால், கருவிகள் எதுவும் இல்லாது நீங்கும் மரணத்தை அடைந்து, கருவில் போய் நிற்கும் ஆன்மாவும் ஆகாயத்தில் மேகத்தோடு வந்து மழைவழியாக விழுந்து கீழே மரமாகி விட்ட ஆன்மாவும் முத்தியடைந்தவர் எனவே ஆகுவர். அப்படிச் சொல்லப்படுகிற முத்தியை அடைய வழிகாட்டும் பெரியோர் யாரும் வேண்டாம். தனித்து ஆணவ மலத்துடன் இருப்பது உறுதியாகும். எனவே பாடாண முத்தி கூடாததே ஆகும்.(பாடாணம் – கல்; முத்திக் காலத்தில ஒரு கல் போல, இன்பதுன்பமின்றி இருப்பதாகிய கருத்துடையவர் பாஷாணவாதிகளாம்.)

பேதவாதி சங்கற்பம்

ஈசனது அருளால் பாசத் தொகுதி
செறிவுறு செம்பில் கறையுறு களிம்பு
குளிகை தாக்க ஒளிபெற் றாங்கு
நித்த சுத்த முத்த ராக
வைத்தனர் உலகின் மறைவல் லோரே.

செம்பில் உள்ள களிம்பு மருந்திட்டும் தேய்த்தால் பொன்போல ஒளிவீசும். அதுபோல, ஆன்மாக்களின் மும்மலக் குற்றங்களை நீக்கி இறைவன் தூய முத்தியைத் தருவான். பெற்ற ஆன்மாவும் பெற்ற முத்தியுமாக இருப்பர் முதர் என்று வேதம் வல்லவர்கள் சொன்னார்கள்.

பேதவாதி சங்கற்ப நிராகரணம்

மறைகள் ஆகமத் துறைகள்மற்று எவையு (8)
நாசமில் பதிபசு பாசமென்று உரைத்தல்
அயர்த்தோர் குளிகைச் சயத்தால் தாம்பிரக்
காளித நாசம் பாசத் தேய்த்தல்
கூடா தன்றியும் குளிகை சீருண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பேதவாதிகள்,வேத ஆகமத்திற்குப் பேதமாகப் பேசுவதாலும் ஆன்மாவும் முத்திப் பேறுமாக இருப்பர் என்று வேறுபடுத்தியதாலும் பேதவாதி எனப்பட்டனர்)

வேதங்கள், ஆகமங்கள் இவற்றிலிருந்து விரிந்த சாத்திர தோத்திர நூல்கள் யாவும் பதிபசுபாசம் என்ற மூன்று பொருள்களும் என்றும் அழியாப் பொருள்கள் எனக் கூறியுள்ளன.

நீயோ செம்பிலுள்ள களிம்பு, மருந்துக் குளிகையால் நீங்கும் என்று உவமை கூறினாய். இதனால் பாசம் அழியும் என்று ஆகம விரோதமாகப் பேசியது ஆயிற்று.

நீடாது அழித்த நிலைநிலை யாதலில்
பேத வாத மோதுதல் பிழையே
இன்னும் இன்னுயிர் ஏமங் குளிகை
தன்னில் அந்நியம் தருவது திடமே
வீடித் திறத்தினில் கூடக் கூடா

மருந்துகளால் அழிப்பதுபோல, ஆன்மாவுடன் இருக்கும் அசுத்தத்தை பயிற்சிகளால் நீக்குவது என்பது பேதவாதம். இது பிழையானதாகும்.

மேலும் ஒரு குற்றம் இதில் உண்டாகும். செம்பின் இயற்கையான களிம்பும் ஆகாமல் தன்னை நீக்கிய மருந்தும் ஆகாமல் பொன்னானது போல, ஆன்மா தன் இயல்பிலும் நில்லாமல் தன்னை மாற்றிய சிவனாகவும் நில்லாமல் வேறு ஒன்றாக ஆவதாக ஒரு பொருள் உண்டாகிறது. ஆகவே, செம்பில் களிம்பை நீக்கும் மருந்து போல என்று நீ கூறும் பேதவாதம் கூடாத ஒன்றாகும்.

### சிவசமவாதி சங்கற்பம்

பாசமும் பசுவும் ஈசனும் என்றிம்
மூவகை உணர்வும் தான்முதன் மையவாய்ப்
பாச ஐம்புலன் தேசுற உணர்த்தப்
பசுத்தனி ஞானம் புசித்திடு மன்றேற
இனைய ஞானனம் பிரிவுற எரியாச்
செந்தழல தகுநெறி அந்தமில் உயிரும்
அறிவா யொன்றும் அறியா தன்றே
இவ்வாறு எழுகும் ஏனை உயிர்க்கும்
முன்னோன் தனது முதிரொளி ஞானம்
அறியாப் பச்சைச் சிறுபுழுக் கவர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசம் பசு பதி (ஈசன்) என்ற இம் மூவகை உணர்வும் (ஞானம்) இந்த மூன்று வகை முதல் பொருள்களுக்கும் இருக்கும். இது இயல்பு. இவற்றுள் பாச ஞானம் என்பது பொறி புலன்களின் செய்கையால் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தையும் அறிவிப்பதும் அந்தக்கரணங்களால் அறிந்தவற்றை அனுபவிப்பதுமாகிய உணர்வுகள் ஆகும்.

பசு ஞானம் என்பது பொறியும் புலனும் தரும் அறிவை நீக்கி, கொழுந்துவிட்டு எரியாமல் அடக்கமாக இருக்கும் செந்தழல் போல, ஓரளவு அறிவு பெற்ற ஆன்மா எதையும் சுட்டி இது அது என உணராமல் இருப்பதே ஆகும்.

இப்படியே தினமும் புலனறிவில் இணைந்தும் அதில் இருந்து நீங்கியும் இருக்கும் ஆன்மாவிற்குப் பதி ஞானம் எது என்றே தெரியாதிருக்கும் அந்நிலையில்...

**வண்டென உயிரைக் கொண்டிடும் உயிரது**
**தன்னை நோக்கித் தானது வாகி**
**ஐவகைத் தொழிலும் மெய்வகை உணர்வும்**
**பிரியா வாறு பெற்றுத்**
**திரியாப் பெரியோர் திரட்சிசேர்ந் திடுமே.**

குளவி (வண்டு) ஒரு பச்சைப் புழுவைக் கவர்ந்து தன் கூட்டில் வைத்து அதையே தன்னைப்போல உண்டாக்கிவிடும். அப்படிச் சிவத்தைச் சேர்ந்த உயிர் சிவமே ஆகிவிடும். சிவனின் ஐவகைத் தொழிலும் பேரறிவும் தன்னை விட்டுநீங்காதவாறு இருந்து முன்பே முத்தி பெற்ற பெரியோரோடு சேர்ந்திடும்.

(இதில் இந்த உவமை தவறு, கூட்டில் பச்சைப்புழு வைப்பது சரி. அப்புழுவே பிறகு வண்டாக வளர்வதில்லை. தன் முட்டையிலிருந்து வந்த குஞ்சுக்கு உணவாகவே இந்தப்புழு உள்ளே வைக்கப்படுகிறது. குஞ்சு சாப்பிட உணவாகும். பலநாளும் கெடாது. இதே உவமையைச் சித்தாந்திகளும் கூறுவர். அப்போது குஞ்சு ஆன்மா; வண்டு சிவம்; புழு மலபரிபாகம், இருவினை ஒப்பு எனக் கொள்வது பொருந்தும்)

## சிவசமவாதி சங்கற்ப நிராகரணம்

பெத்தநிலை மறுப்பு:

**சேர்ந்த மும்மை வாய்ந்த ஞானமும்** (9)
**ஒருகா லன்றித் தெரிவுற நிற்கில்**
**ஒண்பொருள் காணும் பண்பினுக் கொருகால்**
**பரிதியு மதியு எரிதரு விளக்கும்**
**வேண்டல் இன்றே காண்டகு காலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசு பாச பதி ஞானங்கள் மூன்றும் சேர்ந்து நின்றே ஒரு பொருளை அறியவேண்டும் என்பதில்லை. இது எதுபோல எனில், நிலவு, சூரியன், விளக்கு ஆகிய மூன்றும் சேர்ந்திருந்தாலே கண்ணால் பார்க்க முடியும் என்பது போலத் தவறான கருத்தாகும்.

ஒன்றொன் றாக நின்றறி வுறும்எனில்
அந்நிய் அறியா மன்னுயிர் பொறிபுலன்
தானோ அறியா தலைவர்க்கு உலகினை
யானா அறிவால் அறியவேண் டின்றே
கொழுந்தழல் குதமனில் அழுந்திடும் அவத்தையில்

திரியாத் தலைவர் தெரியாத் தன்மைவந்(து)
எய்தலாகா மெய்யுறு பொருட்கு
முன்னர்க் கீடம் தன்னென எடுத்த
வேட்டுவன் இயல்பு கூட்டல் பெறாதே
வண்டிறும் பெடாவுள் கொண்டது தனக்கு

ஒவ்வொரு பொருளைத் தனித்தனியாக ஆன்மா அறியும் என்று சொல்ல முடியாது. காரணம் பொறி புலன்களும் ஆன்மாவிற்கு அந்நியம். காணப்படும் பொருள்களும் அந்நியம். ஆகவே ஆன்ம அறிவாகிய பசுஞானத்தால் இப்படி அறிய முடியாது. அதுபோல பொறிபுலன்களுக்குத் தனி அறிவில்லாமையால் அவையும் அறிய முடியாது. பதி ஞானம் எல்லாம் தெரிந்ததாகையால் எந்த ஒன்றையும் அது சுட்டி அறிய வேண்டியது இல்லை.

கொழுந்துவிட்டு எரியாதிருக்கும் ஒளிபோல, ஆணவ மலத்தால் அடங்கியிருக்கும் ஆன்மா, அந்த ஆன்மாவை என்றும் பிரியாதிருக்கும் இறைவனைத் தெரிந்துகொள்ளாமல் இருப்பதும் கூடாது. இந்நிலையில் பச்சைப் புழுவை வண்டாகிய குளவி உவமையும் பொருந்தாது. ஏன் என்றால், பக்குவ ஆன்மாவிற்குச் சிவன் மந்திர உபதேசம் செய்வதுபோல, அக்குளவி, பச்சைப் புழுவுக்கு எந்த உபதேசமும் செய்யவில்லை. ஆகவே முத்திக்குரிய சாதனத்தை விளக்கும் உவமையாக இதை ஏற்க இயலாது.

மந்திர வாதந் தந்ததும் இலதே
எடுத்திடும் அதனால் அடுத்ததென் றறையில்
கருமயிர்க் குட்டி இருசிறைப் பறவை
ஆயின தெடுத்த தாயர்சாற் றிலரே
பிறவிப் பேதத் துறைஇவை கிடக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேயும் இத்திற னாயும் காலை
யோகத் தகுதி யாகத் தகுமே
ஞானம் இன்மைஎன் றோதுவது எவன்எனில்
உயிரும் உணர்வும் பயிலுதல் இன்றி
வேட்டுவன் உருவம் என்புழு வுணர்வு

அந்தப் புழுவுக்கு மந்திர உபதேசம் செய்யப்பட்டதால்தான், வண்டுருவம் ஆனது என நீ விவாதித்தால், மயிர்க் குட்டிப்புழு பெரிய சிறகு முளைத்தால் பறவை போலப் பறந்துபோகும். அந்தப் பறவைக்கு இப்படி உபதேசம் செய்த தாயார் இவரே என்று யாரும் முழுமையாகக் கூறியது இல்லை. புழு வண்டாவதும் மயிர்க்குட்டிப்புழு பறவையாவதும் அவை செய்த முன் வினைப்பயன் என்று கூறலாம். இது முத்திக்கு உவமையாகாது. இதை ஆராயும்போது யோகத்தில் வேண்டுமானால் சிவ சொரூபம் ஆவதைக் கூறலாம். ஞானத்திற்கு இந்த உவமை கூடாது. மேலும் சிவமும் ஆன்மாவும் ஒன்றுபட்டிருப்பதே முத்தி; நீ கூறுவது போல் வேறுபட்டிருப்பது ஆகாது.

கூட்டுத லால்உருக் கூடுத லானு
முத்தியில் இறையில் பற்றுத லின்றித்
தன்னுரு அணைந்த பின்னதன் உணர்வு
மாறுத லானும் மூறுடைத் தன்றே
ஈசன தியல்பரு ளெள்துயிர் இயற்றல்
பேசுத றவறெனப் பெருமறை அறைய
ஐந்தொழில் உயிரும் தந்திட தகுமோ
யாவதெ முன்னா ணாவலர் பெருமான்

புழுவானது வண்டு உருவம் எடுத்ததுபோல, வேறு ஓர் உடல் உனக்கு முத்தியில் கிடைக்கும் என்றாகிச் சிவத்தோடு ஒன்றாகப் பற்றாமல் நிற்பாய் என்றாகும். தன் உணர்வில் புதிதாக நாம் ஒன்றைப் பெற்றோம் என்று நினைவு வரப்போவது இல்லை. எனவே, இது ஞானத்தால் கிடைத்த முத்தியாகாது. இது குறைபாடு உடைய வாதமே ஆகும். இறைவன் செய்யும் ஐந்தொழில்களையும் முத்திக்குரிய ஆன்மாக்கள் செய்வது தவறு என்று பெரிய வேதங்கள் கூறுகின்றன. உயிருக்கு அந்தச் சிறப்பைத் தரமுடியாது.

பண்டொரு முதலை உண்டமைந் தனைவர
வழைத்தன னென்றாய் பிழைப்பில ததூஉந்
தந்திட வேண்டு மென்றன ரன்றே
யின்னவை கிடக்க முன்னவன் றன்மை
யெய்தின ரெல்லாச் செய்தியுஞ் செய்வ
இரும்பெரி எய்தித் தரும்செய தகவெனில்
பொருணிலை கிடக்க வொருதிட் டாந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பு சுந்தரமூர்த்தி நாயனார், முதலை உண்ட பாலகனைத் திரும்ப அழைக்கவில்லையா என்று விவாதம் செய்யலாம். அது தவறில்லை. சிவபெருமன் இடம் வேண்டித்தான் வரவழைத்தார். தானாகச் செய்யவில்லை. சிவன் திருவருள் பெற்றவர்கள் சிவனுக்குரிய ஐந்தொழிலைச் செய்வது எப்படி என்றும் கேட்கிறாய். இரும்ப நெருப்பில் காய்ந்து நெருப்பின் செயல் எல்லாம் செய்வது போல என்று உவமை கூறலாம். பொருள் நிமை வேறாக இருக்கும்போது பொது முடிவாக ஒன்றைச் செய்ய முடியாது.

பேறே யாயிற் சீறாக் கதுவிய
புனலொரு புடைசேர் கனறகு மாயினும்
வேறொரு பொருளை நீறாக் கிலதே
நெருப்பெனு மிதனி னுருத்தனி காட்டுக
வங்கியு மொன்றிற் றங்கிநின் றல்லது
தன்றொழி டைத்தா தென்றறி யினிநீ
யிரும்பனற் செய்தி தரும்பரி களதோ
வதுவெனோ ரலகை பொதிதருங் காலை
யதன்செய லனைத்து மிவன்செய லாமா
லவனிவ னாகி லிவனவன் செய்திக்(கு)

பெறுவதெல்லாம் இப்படிப்படும் என்றால், நெருப்பில் நீரும் கலந்து காய்ச்சப்பட்ட பின், அந்த நீர், நெருப்பின் செய்கையைப் பெற்று வேறு ஒரு பொருளைச் சாம்பலாக்குமா? நெருப்பும் ஒன்றில் தங்கியிருந்துதான் சுடுவதைச் செய்யும். தனியே நெருப்பு இருந்து தொழில் செய்யுமாயின் அதைக் காட்டுவாயாக. ஒரு பேய் ஒருவனைப் பிடித்தால் பிடிப்பவர் செயலாக அது ஆகுமே தவிரப் பிடிபட்டவர் செயல் ஆகாது.

என்னவை யென்னிற் பின்னுறு செயலும்
அதன்செய லன்றி இவன்செய லாகி
இவன்செயல் பேயின் தன்செய லாகி
இருந்த வாவெனத் தெரிந்திட வேண்டும்
தெரியா தாகிற் புரியில் கடுங்கனல்

(உயிர்) இவனும் அவனும் (சிவன்) ஒன்றாகினாலும் சிவன் செயலை உயிர் செய்வதாகக் கொண்டால், மனிதனைப் பிடித்த பேயின் செயலே மனிதன் செயல் என்றும், மனிதன் செய்கை எல்லாம் பேயின் செயலாகும் என்றும் குழப்பமாக உணரப்படும். இப்படி உணராவிட்டால் நெருப்பு எரிந்தது என்பது மாறி நெருப்பு எரிபட்டது என்று ஆகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிந்தது என்னும் இதுதகு மன்றியும்
மன னிவ னாகில் இவனவன் செய்தி
என்று செய்வான் ஒன்றிய மதத்தா
எல்லாம் அறிதல் செல்லா துயிர்கள்
சிற்றறிவு எனுமிச் சொற்றவ றாகும்
என்பதென் அலகை தன்பத மடைந்தோர்
கொண்ட வாறு கண்டன மென்னின்

சிவன் எல்லா வகையிலும் பெரியவன். நித்தியமானவன். எல்லாம் எளிதில் செய்ய வல்லவன். அப்படி இருக்க, சிற்றறிவும் சிறிய வாழ்நாளும் சிறிய வலிமையும் உடைய ஆன்மா சிவனின் செயலைச் செய்வது என்று தொடங்கினால் என்றைக்குச் செய்து முடிப்பான்? ஏன் என்றால் எல்லாவற்றையும் முக்காலத்திலும் உணரும் திறம் ஆன்மாவுக்கு இல்லை என்பதால் ஆகும்.

எல்லாம் அறியும் இறைவன் திருவருள் ஆன்மாவில் பதிவதால் இதைச் செய்ய முடியும் என்று வாதிக்கலாம். ஆனால் ஆன்மா சிற்றறிவுடையது என்று வேத ஆகமங்களில கூறிய சொல் தவறாகிவிடும்.

பேயின் பிடியில் சிக்கினோர் வருங்கால நிகழ்ச்சிகளைக் கூடச் சொல்லியதைக் கேட்டுள்ளோமே எனலாம். (அதாவது பேய்ப்பிடிக்கே வருங்காலம் எல்லாம் தெரியும் என்பதாம்)

மூங்கை அந்தரும் ஓங்கி குணங்குறி
செய்வதெ னின்னும் பௌவம்உற் றழுந்தினு
நாழி கொள்ளாது ஆழியின் அலைபுன
நானாழி என்னுள் செய்யுள்
அதனால் கருத்து முதலுள தாக
வேண்டு மன்றே யீண்டினி யமையு
மெல்லா மெனுமிச் சொல்லாற் படும்பொரு
ளனைத்துந் தாக்காத் தனிப்பரத் துற்றவர்க்
கெவ்வகை யுணர்வு செய்வதென் செப்புக

வாய்பேசாதவரும், கண் தெரியாதவரும் பேயால் பிடிபட்ட பிறகு பேச்சு வந்ததாகவும் பார்வை பெற்றதாகவும் காண்பதில்லை. எனவே பேயால் பழகிவிட்டவன் பெருமை உறுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதம் கடலில் அழுத்தினாலும், நாழியளவுக் குவளை நான்கு நாழியளவு கடல்நீரை அளந்திட முடியாது என்பது பழைய செய்யுள். அதுபோல, இறைவனோடு ஆன்மா கூடினாலும் இறைவன் பெரறிவு முழுதும் ஆன்மாவுக்கு வராது. ஆன்மா அளவே அதற்கு வரும். அநாதி காலமாக இப்படி இருந்து வருவதை அறிந்து இதைவிடுக.

இறைவனை அடைந்த முத்தி ஆன்மா 'எல்லாம்' பெறும் என்ற சொற்படி அனைத்தும் கிடைக்கும் என்பது பொருந்தாது. ஒன்றுவதற்கு முன் உள்ள நிலையும் ஆன்மாவுக்கு இருக்காது. சிவம் போல எல்லாச் சிறப்பம் வந்தவிட முடியாது. ஆகவே ஐந்தொழில் செய்வது என்பதை விடுவாயாக.

ஒன்றி ஒன்றா மொன்றா துலகின்
நின்ற போதுயிர் நேரா மன்றே
முத்தி யுற்ற நற்றவ ரவையிடச்
சேர்வ ரென்றனை சார்தரு முத்தி
சாலோக் கியமோ சாயுச் சியமெனிற்
பந்த முற்ற கந்தல கழித்த
வறிவினோ டறிவு பிறியாப் பெற்றி
வேண்டு மென்றதற் கீண்டிவ ரிவ்வா(று)
இருப்ப ரன்பதற் குருத்தான் வேண்டு
மண்ணல தருளி னண்ணி யிருப்பினும்

சிவமும் ஆன்மாவும் ஒன்றாகி விடும் முத்தியில் என்றால் ஆன்மாவே இல்லாது போய்விடும். முத்தியடையாமல் உடலோடு ஆன்மா இருந்தபோது சீவன் முத்தராய் ஆன்மா சிவத்துக்க இணையாகும்.

முத்தியடைந்தவர்கள் முன்பே முத்திபெற்ற நற்றவருடன் இருப்பர் என்றாய் நீ. அப்படிப்பட்ட முத்தி சாலோக முத்தியா? இல்லை சாயுச்சியம் என்று நீ கூறினால், ஆன்மாவின் சிற்றறிவும் சிவத்தின் பேரறிவும் ஒன்றுபட்டு பிரியாதிருக்கும் நிலை வேண்டும். மேலும் இங்கேயே சீவன் முத்தரானவர், அங்கு முத்தியடைந்தோருடன் கூடி இருக்க வேண்டும் எனில், அதற்காக ஓர் உடல் பெற்றிருக்க வேண்டும்.

சீவன் முத்தரென் றோதின ரகன்று
நீங்கியு முருவ நீங்கா தாயி
னோங்கிய முத்தி யாவதென் னுரைக்க
செடியுட லணுகாக் குடிலை கொடுக்குமென்
றோதினை நீயே பேதாய் பகட்டுர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லொளிர்சினை முச்சித் தளிரெனு மிதுதகு
மிச்சா ரூப நச்சின ரென்னின்

சிவன் அருள் பெற்றவர்கள் உடலோடு சீவன் முத்தராக உடல் தொடர்புடன் இருந்தால் அவர்கள் பரமுத்தியை எப்படி அடைய முடியும். இந்த மாயா உடலை நீத்த சுத்த மாயா உடம்புடன் இருப்பர் என்று நீ கூறலாம். (குடிலை = சுத்த மாயை) பேதையே! நெல்லைக் குத்திய உரலில் வேரும் தளிரும் முளைத்தன என்பதுபோலப் பேசுகிறாய். மும்மலம் தீர்ந்தவர் எப்படி உடம்பை விரும்புவார்கள்?

மும்மலத் தேது மின்மைய தன்றே
இதுவளர் முத்திப் பதமென வியம்புவ
ரீங்கிவை நிற்க

மும்மலத்தில் ஏதுமில்லாதிருப்பதே முத்திப்பதம் என்று பெரியோர் கூறினர். ஆகவே நீ தவறாகக் கூறினாய் என்று உணர்க.

சங்கிராந்தவாதி சங்கற்பம்

நீங்கா தொளிருயிர்
விளக்கென நிற்க மளப்புறும் அறிவின்று
இறைவர்க் கேது மறியவேண் டின்றே
மன்னும் ஆன்ம சந்நிதி யளவிற்
காந்த பசாசத் தேய்ப்ப வாய்ந்த
வுயிருட லியக்குஞ் செயலுறு பூட்டைப்
பலவகை யுறுப்பு மிலகிய தொழில்போ
லைம்பொறி புலன்க ளின்புறு மன்றே
யினைய வாய்தலி னிகழ்தரு பயனவை
யந்தக் கரண முந்தி யுணர்ந்திடும்
இவையகல் வுழியைம் பொறிபுல னிகழா

ஆன்மா நீங்காத ஒளியுடன் இருக்கும் விளக்கைப் போல கட்டுப்படாது நிற்கும். அது இது என எவற்றையும் அளந்து (சுட்டி) அறியும் அறிவு ஆன்மாவுக்கு இல்லை. இறைவனுக்கோ எது ஒன்றையும் புதிதாக அறியவேண்டிய நிலை இல்லை.

ஆன்மாவின் சந்நிதியில் உயிரையும் உடலையும் இயக்கும் கருவிகள் (பூட்டை) பலவகை உறுப்புகளுடன் தொழில் செய்வதுபோல, ஐம்பொறிகளு் புலன்களால் இன்பம் எய்தும். இது காந்தமானது அசையாமல் இருந்தபடியே இரும்பைச் செயல்படுத்துவது போலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானேந்திரியங்கள் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற தன் மாத்திரைச் செய்திகளை அந்தக்கரணங்களாகிய நான்கும் முதலில் அறியும். இவை விலகிடும்போது பொறிகளில் அறிவு நிகழ்வது இல்லை. (இதைச் சகலநிலை என்பர்).

**உயிர்நீங் கிடிலுடல் செயலில் தன்றே**
**யிவ்வகை வினையின் செவ்விதி நடத்தும்**
**பழுமல நீங்க நிகழுங் காலை**
**யேற்றோர் முகவொளி தோற்றுங் கலனெனத்**
**தலைவன தருளுயிர் நிலவிடு நிலவக்**
**காட்டத் தங்கி மாட்டத் தங்கிய**
**தன்மையு மளத்துப் புல்வையி னீப்பும்**
**போன்றது வாகித் தோன்றிடு மதனாற்**
**பசுகர ணங்கள் சிவகர ணங்க**
**ளாக மாறி யறிவு**
**மேக மாமுயி ரியானென தின்றே**

உயிர் நீங்காவிட்டால் உடல் செயல்படுவது இல்லாமல் போகும். ஆனால் பிராணவாயு மட்டும் இயங்கி முன்வினைக்குரிய அனுபவத்தைத் தொடர்ந்து நடத்தும்.

பழைய மலங்கள் நீங்கும் நிலையில் கண்ணாடியால் தோன்றும் முகத்தின் நிழல் தெரிவது போல, ஆன்மாவில் இறைவனின் திருஅருள் பதியும். (இதுவே இருவினை ஒப்பு சத்திநிபாதம் எனப்படும்).

விறகில் உள்ள தீயை வெளிப்படுத்தும்போது விறகு எரிவது போலவும் உப்பளத்தில் உள்ள வைக்கோலும் புல்லும் சேர்ந்து உப்பாக ஆவது போலவும் ஆன்மாவின் பசுகரணங்ள் (கருவிகள்) சிவ கரணங்களாக மாறி அறிவும் தனித்து இரண்டாவதாக நிற்கும். திருவருளோடு ஒன்றி நிற்கும். யான் எனது எனும் உணர்வும் ஆன்மாவுக்கு இல்லாது போகும்.

சங்கிராந்தவாதி சங்கற்ப நிராகரணம்

**இன்றுள துரையி னன்றி யுயிரொளிர்** (10)
**தீபம போலத் தாபந் தரினிருள்**
**செறியுந் தன்மையெ னறிவில தாகி**
**லொளியென வுரைத்த தெளிவதற் கேதாஞ்**
**சந்நிதி யளவின் மன்னுஞ் செயலுடல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் பேச்சில் உள்ளபடி ஆன்மா ஒளியுடையதாக இருக்குமாயின் அறியாமையாகிய இருள் எப்படி வந்திருக்க முடியும். ஆன்மா அறிவற்றதாயின் ஒளியுடைடயதாக நீ கூறிய தெளிவு எப்படி வந்தது?

காந்தம் போல வாய்ந்த தென்ற
தன்மையு முணராப் புன்மைய தன்றே
யுயிருட லியக்கிற் றுயில்பெறுங் காலைச்
செய்ததென் மனாதி யெய்துயிர் பொறிபுல
னடத்த வாவியுஞ் சடத்தன வாயிற்
பூட்டையிற் பூணி கூட்டல் பெறாதே
வுலனைம் பொறியி னிலவிடு மென்றனை
யஞ்சு மொருகாற் றுஞ்சா தறிதற்
கழிவென் றருச்செழு மலரினை யொடுபலங்
கனிதரு வதுபோ லினையவை ஐந்தும்

காந்தத்தின் முன் இரும்பு செயல்படுவது போல, பிராணவாயுவின் முன்னிலையில் அது இயக்க உடல் இயங்கும் என்று நீ கூறலாம். அவ்வாறாயின் உறக்கத்தின் போதும் பிராணவாயு உடலில் தான் இருக்கிறது; ஆனால் உடல் இயங்காமல் உணர்வு அடங்கி இருக்கிறது இது ஏன்? (உடலை ஆன்மாவே இயங்குகிறது என்பதைப் பெறவைக்கிறார்)

மனம் பொறிகள் புலன்கள் பிராணவாயு ஆகியவற்றை நடத்தி வைக்க ஆன்மா முயலுதல் என்பது செக்கில் பூட்டிய பூண் சுழன்று செக்கை இயக்குவது போல என்று நீ கூறுவதும் பொருந்தாது. (காரணம் செக்கில் உள்ளது சடம் ஆகும்) ஐந்து பொறிகளிலும் புலன்களாகிய சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பன வந்து பொருந்தும் என்கிறாய். ஐந்து பொறியும் ஐந்து புலன்களை ஏற்பதில்லை; ஒன்று ஒன்றை ஏற்கும் போது பிற நான்கை ஏற்பதில்லை. ஒரே நேரத்தில் இவை ஏற்கப்படுவதும் இல்லை. மரத்தில இலை மலர் கனி என்பன ஒவ்வொன்றாக வருவதுபோல் இவை ஐந்தும் தனித்தனியாகச் செயல்படும் என்று கூறலாம்.

ஒன்றொன் றாக நின்றறி வுறுமெனில்
ஒன்றின் பயனளி ஒன்றறி யாதால்
இதுவே யல்லது கதுமென இருசெவி
இருகூற் றொருகாற் றெரியாத் தன்மைவந்து
எய்து மனாதியு மெய்யுயிர்ச் செயலுந்
தனக்கில தொருவற் கெனத்தெளி கிலையே
நோக்கு முகவொளி நீக்கா தானெனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவருந் தன்மை முகுரம் போலக்
கொடுத்தது கோடற் கடுத்துதண் டன்றே
காட்டத் தங்கி கூட்டக் கூடும்

இதுவும் பொருந்தாது. ஏன் என்றால் ஒரு கொம்பில் ஒரு காலத்தில் இலையும் பிறகு ஒரு காலத்தில் மலரும் உண்டாகும். ஆனால் ஒரு இந்திரியம் அறிவதை வேறு ஓர் இந்திரியம் அறிவதில்லை. இரு செவியிலும் ஒரே காலத்தில் இருவித ஒலிகள் கேட்டால், ஓர் ஒலி தெரிவதாகவும் மற்றது தெரியாததாகவும் இருக்கும். மனம் முதலிய அந்தக்கரணங்களின் செயல்கள் ஆன்மாவுக்கே தெரிவன ஆகும். உடலின் செயலும் இப்படியே என நீ தெளிவாக அறிக.

கண்ணாடியைப் பார்ப்பவரின் முகவொளி அதில் தெரிவது போல என்று முத்திக்கு உவமை கூறினாய். கண்ணாடியில் முகம் பதிந்தது மாதிரி திருவருள் ஆன்மாவில பதியும் என்பது இதன் கருத்து. ஆனால் கண்ணாடி என்ற ஒன்றிருப்பதால்தான் இப்படி முகம் தெரிய முடியும். கண்ணாடிக்கு முகம் ஒளி தருவதுபோல இறைவனுக்கு நீ ஒளி தருவதாக இந்த வாதம் ஆகிவிடக் கூடாது.

மேலும் விறகில உள்ள நெருப்பை கடைந்தால் வெளிப்படும் என்று உவமை கூறினாய். அதுவும் பொருந்தாது; ஏன் என்றால் அத் தீ விறகை அழித்துவிடும்.

இந்தனத தியற்கை வெந்தழல் தாங்கா
உப்பளத் தடுத்த புற்பலா லங்கள்
சடத்த வேனுங் கொடுத்தது கொள்ளுந்
தன்மை யுண்டுனக் கின்மைய தன்றே
அவமுறு கருவி சிவமய மாமெனக்

உப்பளத்தில் புல் வைக்கோலும் உப்போடு சேர்ந்து உப்பே ஆகிவிடும் என்று முத்திக்கு உவமை கூறினாய். சடமும் கொடுத்ததோர் சிறப்பை ஏற்கும் என்றாய். ஆனால் அந்தத் தன்மை உனக்கு இல்லை. அவமயமான கருவிகள் சிவமயமாகும் என்று கூறினாய். அது எப்படிப் பொருந்தும்? நம் உடல் வேறு ஓர் உடல் அருளில் தோன்றியவை ஆகமாட்டா.

கூறினை யாகம் வேறுருக் கவரா
தென்பதே னவைமுற் றுன்பந் துடைக்குந்
திருவருண் மருவ வுரியன வென்னி
லருளுரு மாயா விருளின தாங்கொல்
சத்த பரிச ரூப ரசநறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெத்திறத் தினதரு ளியம்புக வன்றியு
நிறைந்து நீயாய் நின்றனை யேனு
மறைந்தைம் புலனாய் வாரா யென்றுங்
கரண மெல்லாம் கடந்தனை யென்றும்
மரணஜ ஐந்தின் னப்புறத் தென்றும்

உயிர்களின் துன்பம் துடைப்பதற்காகவே உடல் கருவிகள் திருவருளால் வழங்கப்பட்டன. ஆகவே திருவருளைக் கொள்ள அக்கருவிகள் உரியன என்று கூறுவது பொருந்துமா? மாயாசக்தியின், இருள்வடிவம் அருள் ஒளி வடிவம் இரண்டும் எப்படி ஒன்றாக ஆக முடியும்?

சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்தும் மாயாகருவிகளால் அறியத்தக்கன. அரள் மூலம் அறிவன அல்ல. நிறைந்து நீயாய் நின்றனை என்பது கயிலை பாதி காளத்தி பாதி; கரணம் எல்லாம் என்பது திருவாசகம்; மரணம் ஐயைந்தின் என்பது அப்பர் தேவாரம்; உடல் கருவிகளுக்கும், இறப்பு பிறப்புக்கும், ஆன்ம தத்துவங்களுக்கும் அப்பாற்பட்டவன் கடவுள் என்றுஇப்பாடல்கள் கூறுகின்றன. (இதனால் அருளம் மாயையும் வேறானவை என்பது உணர்த்தப் பெற்றது)

முன்னருள் தலைவர் பன்னின ரெனவும்
இனையவை யொழிய வறிகுவ தெவ்வாறு
என்ற நிற்கலிக் கொன்றிய வின்பம்
கூறுத றகுமருட் பெறி?? யன்றே
யேக மயிரறி வாக மொழிந்தனை
யிருபொரு ளொருமை மருவிய திலதே
யிவ்வகை கிடக்க மெய்வகை கேண்மதி

ஈசுவர அவிகாரவாதி சங்கற்பம்
பஃறுளைக் குடத்தி னுள்விளக் கேய்ப்ப
அறிவுள தாகு முருவுறு முயிர்கள்
கண்ணா லோசையுங் கந்தமுங் கருத

இந்தக் கருவிகள் இல்லாது எதையும் அறிய முடியாது. திருவருளைப் பிறகு எப்படி அறிவது என்கிறாய். ஆணும் பெண்ணும் சேர்ந்து பெறும் இன்பத்தை ஓர் அலிக்குக் கூறினால் அவனால் உணர முடியாது. உனக்கும் அருள் பற்றிக் கூறுவது அதுபோல உணர முடியாததே ஆகும். மேலும் ஆன்மாவும் அறிவாகிய பிரம்மமும் ஒன்று என்று கூறுகிறாய். இரு பொருள்கள் கூடி ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாக மாறுவதில்லை. காரணம் அவை இரண்டின்மூலங்களும் காரணங்களும் வேறு வேறாகும். எனவே உண்மை நெறியைக் கேட்டுணர்க. பல துளைகளைக் கொண்ட ஒரு குடத்தினுள் எரியம் ஒரு விளக்கு பல விளக்குகள் போலத் தோன்றும். அப்படி ஏகமான அறிவு வடிவமான இறைசக்தி பல உருவங்கள் போல் தோன்றினாலும் ஒன்றேயாம். ஆனால் ஆன்மாக்கள் பல உருவங்களை உடல் வகையால் பெற்று இருக்கும்.

ஒண்ணா தென்னும் உணர்வுடை மையினால்
அவ்வப் புலன்கட் கவ்வப் பொறிகள்
செவ்வித னிறுவிச் சேர்ந்தவை நுகரு
மூல மலத்தின் பாகம்வந் துதவுழீஇ
யிருடரு மிற்புக் கொருபொருள் கவரத்

கண்ணினால் ஓசையையும் மனத்தையும் உணர முடியாது. ஆகவே அந்த அந்தப் பொறிகளுக்குரிய புலன்களை அவ்வவற்றுடன் பொருந்தி அவற்றை உணரும். மூலமலமாகிய ஆணவ மலம் பரிபகாம் அடையும்போது...

தீபம் வேண்டு மானவா போல
மோக மாபலம் போக ஞான
விளக்கர னருளாற் றுளக்கறப் பொருந்தி
நீர்நிழ லனைய சீர்பெறு கடவுளைச்
சலமில னாகிச் சார்ந்தவர்க் கென்று
நலமிக நல்கு நாதனை யணைந்து
பூழி வெம்மை பொருந்தா துயர்ந்த
நீழல் வாழு நினைவினர் போலத்
திருவடி நீழல் சேர்ந்து
கருவுறு துயரங் களைந்திருந் திடுமே. (11)

இருளான ஒரு வீட்டில், ஒரு பொருளைத் தேட உள்ளே செல்பவர்க்கு ஒரு விளக்குத் தேவையாவதைப் போல, மோகம் தரும் பெரிய மலம் நீங்க இறைவன் ஞானவிளக்கை ஆன்மாவிற்குள் அருளுவான். நீரும் நிழலும் ஒன்றில் ஒன்று தெரிந்தாலும் அதைப் பற்றிக் கொள்வதில்லை. அப்படித்தான் கடவுள் எல்லாவற்றிலும் பயின்றாலும் தொடர்பு பெறுவதில்லை. அந்தக் கடவுளை, தன்னைச் சார்ந்தவர்களுக்கு மிகுந்த நலம் தரும் நாதனை, அடைந்து, கடிய வெயிலில் துன்புற்றோர் நிழலையடைந்து வாழுவோர் போல, இவர்களும் இறைவன் திருவடி நிழல் சேர்ந்து பிறவித் துன்பம் நீங்கப் பெறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்ததுன் கேள்வி திருந்திடு முயிர்கள்
அறிவெனில் வாயிற் பொறிபுல னென்னை
மற்றவை பற்றி யுற்றறிந் திடுதலில்
அறிவென வழங்கு முயிரென வுரைத்தல்
காணுங் கண்ணினன் கைகொடு தடவிப்
பூணும் பொருளின் பெயர்பல புகற
லென்னுங் கிளவி தன்னொடு தகுமே
யவ்வப் பலன்கட் கவ்வப் பொறிகளைச்
செவ்விதி னிறுவலி னறிவெனச் செப்பினை
அறிவி லமைகண் டனமணை புலற்குப்

(ஈசுவர அவிகாரவாதியைப் பரிணாமவாதி மறுப்பதாகக் கொண்டு உணர்க)

உன் கேள்வி இப்படி இருந்தது. எனவே நான் கூறியதில் தவறில்லை. உயிர்கள் அறிவோடு சேர்ந்திருப்பது உண்மை என்றால் அவற்றுக்குப் பொறியும் புலன்களும் எதற்காக? அறிவுடைய உயிர் பொறிகளால் அறிவு பெறும் என்று நீ சொல்வது, கண்ணால் காணும் ஒரு மனிதன், கையாலும் தடவிப் பொருள்களை உணரும் என்பது போலுள்ளது. (கண்ணற்றவரே தடவிப் பார்ப்பர்)

கண்பார்வை உள்ளவன் கையால் தடவி ஒன்றை உணர்ந்து அதன் பெயரை வாயால் சொல்கிறான் என்று சொல்வதை ஒக்கும். ஒவ்வொரு புலனுக்கும் ஒவ்வொரு பொறியை திறமாக நிறுவியதிலிருந்து உயிர்களுக்கு அறிவில்லை என்பதை அறிகிறோம்.

பொறிக ளேவலி னறிவொடு பொருந்திற்
கண்டதோர் பொறியாற் கொண்டிட வேண்டு
முதவிய தொன்றாற் கதுமென வியற்றின்
ருண்டோ வென்னிற் கண்டன மேனாட்
கடவுளிற் கடிமலர் முடுகிய மதன
னங்க மனங்கந் தங்கிடக் கிடந்தது
வையின் றிரளிற் செய்ய சிறுபொறி
மாட்டி மூட்டின் தன்றே மீட்டுந்
தேனமர் தவிசி னான்முக னுச்சி
யறுத்ததுங் கருவி பொறுத்தோ வன்றே

பொறிகளின் ஏவலால்தான் அறிவொடு பொருந்திக் காணமுடிகிறது.

அப்பொறிகளும் சடம்; அதில் அறிவு கலக்காமல் பெறும் பொறிகளை மட்டும் ஏவி அறிந்தார் உண்டா? அந்த அறிவு, ஆன்ம அறிவெனில், அதே அறிவால் ஒரு பொறியை ஏவி, தான் விரும்பும் ஒரு பொருளைக் காணமுடியுமா? எனவே ஆன்ம அறிவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்த ஒரு பொறியைக் கொண்டு வேறு ஒன்றாக விரும்பியதைக் காணமுடியாது என்று கூறமுடியாது; கண்டவரும் உண்டு. மலரம்பால் தன்னைத் தாக்கிய மன்மதனை, வைக்கோல் பொறியை எறித்துத் தீ வைத்து எரிக்கவில்லை; கண்ணால் பார்த்தே எரித்தார் சிவன். நான்முகன் தலையை வாள் கொண்டு வெட்டவில்லை; விரல் நகத்தில் கிள்ளினார்.

ஈசன் தியல்வு பேசுதல் தவிர்க
காழி மாநகர்க் கவுணியர் கடவுண்
ஞான மாகிய நற்பதி கங்க
ளெழுதுறு மன்பர்த மின்புறு மொழியாற்
களிறென வணைந்த கன்மனப் புத்தன்
முருட்டுச் சிரமொன் றுருட்டின ரன்றி
வாய்ந்த வாளொன் றேந்தின ரிலரே
யென்றது மீர்வாள் கொன்றதென் பதுபோற்
றனித்துணை யருளாற் றுணித்தன ரென்ப
ஆதலின் வாயி லளவினி லறிதலில்

நான் ஆன்மா இயல்பு பற்றிப் பேசினால் நீர் ஈசன் இயல்பைப் பேசுகிறீர். அதை விடுக.

திருஞானசம்பந்தரின் திருப்பதிகங்களை எழுதும் அன்பர் சம்பந்த சரணாலயர், தம்மை எதிர்த்து வந்த புத்தன் ஒருவன் தலையை வாள் கொண்டு அறுக்காமல் பதிகம் பாடியே நீக்கினார். அதுவும் வாள் கொண்டு செய்தது போல, தனித் துணைத் திருவருளால் இப்படிச் செய்தார் என்பர். எனவே பொறிகளினால் அறியும் அறிவு ஓர் எல்லைக்குட்பட்ட அளவே உடையதாகும். இறைவனின் குற்றமற்ற அறிவு, உயிர்களுக்கு வர இயலாது.

ஏதமில் லறிவுயிர்க் கெய்துத லிலதே
இருட்கு விளக்கொன் றேந்தினர் போல
மருட்கு ஞான மன்னுத லுளதே
என்றனை கருவிக ளியாவு மசேதனந்
துன்றிய வுயிருந் துரியத் தன்மையன்
ஆதலி னந்த ரனைவருங் கூடித்
தீதற வருநெறி தெரியுமென் றற்றே
நீர்நிழ லனையை சீர்பெறு கடவுளைச்
சேர்ந்தவர்க் கின்பம் வாய்ந்திடு மென்றனை
பாதவ மென்றும் சேதன மின்மையின்

இருளில் ஒன்றைத் தேடிச் செல்பவர், விளக்கை ஏந்திப் போவது போல, மருள் கொண்டவரிடம் ஞான விளக்கைக் கொண்டு உண்மை உணர்வான் என்றாய். ஆனால் கருவிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவும் சடப்பொருள்களே ஆகும். மேலும் உயிர்கள் கருவிகளை நீங்கினால் எதையும் அறியாத (துரிய) நிலையில் இருக்கும். இந்த நிலையில் ஆன்மா இறைவனை அடையும் என்பது கண்ணில்லாதவர் எல்லாரும் கூடித் தடையில்லாமல் பெரிய வழியில் நடப்பர் என்று கூறுவது போல உள்ளது.

நீரும் நிழலும் போல, பற்றில்லாது பதியும் இறைவன், தன்னை வந்து சேர்ந்த ஆன்மாக்களுக்கு இன்பம் வழங்குவான் என்று கூறினாய்.

இணைத்தோர் வம்பி னென்பதுந் துன்பம்
விளைத்தோர் தம்மில் வெறுப்புமொன் றிலதே
பொடித்திடு கொப்புள் வெடித்திடு பாதம்
வெய்ய பூழியி னுள்ளுற வழுங்கி
ஆற்றுத லின்றி யாறியங் கினர்முன்
தோற்றிடு மென்று சொல்லலவு மிலதால்
இவ்வகை கடவுட்கு இயம்புதல் தவறே
பாச ஞானப் பழிவழி யொழிக
ஈசன தருள்வழி இயம்புவன் கேண்மதி
நிமித்தகரண பரணாமவாதி சங்கற்பம்
புவனம் இயாவையும் புனிதனது உருவாம்

இதற்கு உவமையாக வெயிலில் துன்பம் அடைந்தவர்க்கு மரம் நிழல் தருவது போல என்றாய். மரங்கள் என்றும் அறிவுடையன அல்ல. வெயிலில் உள்ளவர்களை வா என்று அழைத்து நிழல் தருவதில்லை; தன்னை வெட்டுபவரிடம் வெறுப்பு அடைதலும் இல்லை. உள்ளங்காலில் கொப்புளம் வந்து துன்பம் அடைந்தவரிடம் தானே நேரில் போய் என் நிழலைக் கொள்க என்று சொல்வதில்லை. இதுபோல, இறைவனும் பரிபக்குவம் உடையவரிடம் சென்று என் அருளை ஏற்றுக்கொள்க என்றும் சொல்வதில்லை. ஆகவே இந்த உவமை தவறாகும். ஆகவே பாசஞானமாகிய பழி மிக்க வழியை நீக்குவாயாக. இறைவன் அருள்வழியை நான் கூறக் கேட்பாயாக.

நிமித்தகாரண பரிணாமவாதி சங்கற்பம்

சிவமும் சத்தியும் எனத்தெளி யவற்றுள்
அசேதன மென்றொன் றறைதற் கிலதது
சேதநன் நுகர்பொழு திரண்டுமோர் திறத்தே
யிதுவெனு மொன்றை யதுவாய்ப் படுத்துப்
பொதுமையின் நிற்கும் போதமென் றறிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொற்பணி பேதம் புரைவழி யொருவழி
நற்பொனிற் றிகழ்வென நயப்பதொன்று அன்றால்
ஆவதும் ஆகா தொழிவதும் எனுமிப்
பாவகம் உண்மை பாரா தோர்க்கே
பாரா தோரெனப் பல்லுயிர் பகர்தலின்

இவை சிவமும் சத்தியும் ஆகும் என்று தெளிவாயாக. (இவற்றுள் உருவமுடைய சத்தி என்றும் அருவமாயிருப்பன சிவமென்றும் கொள்க) இதனால் சடப்பொருள் (அசேதனம்) என்று ஒன்றைச் சொல்வதற்கில்லை. உயிர் அறிவாகவும் அருவமாகவும் இருக்கும். அனுபவிக்கும் போது அந்த இருநிலையையும் ஒரு நிலையாகக் கொண்டிருக்கும்.

இது என ஒரு பொருளைச் சுட்டி அறியும்போது உயிர் அப்பொருளாகவே ஆகி நிற்கும். ஆதலால் அதை அறிவில்லாத பொருள் என்று கூற முடியாத பொது வகையைச் சேர்ந்ததாய் இருப்பதை அறிக. பொன்னாக இருப்பது வேறு; அதுவே நகையாக இருப்பது வேறு; இப்படி இரு வேறுபாடுகள் இருப்பினும் பொன்னின் மாற்றே நகையிலும் இருப்பதால் அது வேறுபாடில்லாதது ஆகும்.

இது எப்படி என்றால் யாரும் ஆவதும் ஆகாததும் உண்மையை உணராதவர்களுக்கும் உணர்பவர்களுக்கும் உடைய வேறுபாடாம். இப்படி உணர்வார் உணராதார் என இருப்பதால் உயிர்கள் பலவகை என்பதும் தெரிகிறது.

ஆராய்ந் துரைக்கி னவைபிற வல்ல
பலபல பேத மிலவென் போருமில்
கண்ணின் தொளியைக் கண்ணின தெனிலது
திண்ணிய விருளிற் செறிபொரு டெரித்தலும்
இன்மை மின்மினி யெனவிரு கண்மணித்
தன்மை தானுந் தாவில ததனாற்
கண்ணின் துருவும் அதிற்கதி ரொளியும்

ஆயினும் அவ்வுயிர்கள் பறி ஆராய்ந்தால், அவை சிவனுக்கு அந்நியமான பிற அல்ல என்பது புரியும். சிவம், ஆன்மா, உலகம் இவை வேறு வேறு என்று பலவாகக் கூறுவோர்களும் உள்ளனர். ஆனால் அது உண்மையன்று. கண்ணில் உள்ள ஒளியை கண்ணின் ஒளி என்றால், அந்த ஒளி இருளில் உள்ள ஒரு பொருளைக் காட்டுவது இல்லை. மின்மினிப் பூச்சி, ஒளியை எழுப்பி இருளை விலக்கும். ஆகவே கண்ணின் உருவமும் அதில் படரும் சூரிய ஒளியும் சிசவக்தி இருவரின் நாடகத்தால் விளைந்த உண்மையே ஆகும். இதை எப்படி அறிவது என்றால் சொல்லக் கேள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்ணருஞ் சித்தி சத்தர்க ணடிப்பே
உலகே நானத்திசை பத்தென ஒருவன்
பலவாய் நின்ற படியிது வென்றும்
ஊனா யுயிராய் உணர்வா யென்றும்
மானக் கண்ணே மணியே யென்றும்
தாமே தாமாய்ச் செய்தன ரென்றும்
நாமே சிவமாய் நண்ணின மென்றும்
காயாய்ப் பழமாய்ச் சுவையாய் நுகர்வும்
ஓயா துண்போன் தானே யென்றும்
அறிவோன் தானும் அறிவிப் போனும்
அறிவாய் அறிகின் றோனும் அறிவுறு
மெய்ப்பொருள் தானும் வியந்திது வெனப்படும்
அப்பொரு ளியாவு மவனே யென்றும்
தாய்தலைப் பட்டங் கொன்றாய்த் தென்றும்
ஏதம தறநான் கெட்டே னென்றும்
இன்னு மின்னும் இறையோ னளித்தவை
பன்னி லெண்ணரும் பான்மைத் தாதலில்
தருபொருள் கொள்பொரு டருவோன் கொள்வோன்

ஏழுலகம் பத்துத்திசைய் என அவற்றில நான் ஒருவனே பலவாகி நின்றான் என்று திருவாசகத்தில் (தோள்நோக்கம் 5) கூறுவதும்– அப்பர் தேவாரத்திலும் ஊன் உயிராகி அவற்றுள் உணர்வாகி கடவுளே நின்றார் என்றும் கண்ணே கண்ணில் கருமணியே என்று (திருவானைத்தாண்டகம் 2, திருவாவடுதுறைத் தாண்டகம் 1) கூறுவதும் – திருஞானசம்பந்தர் தேவாரத்தில் (திருப்பிரமபுரம் திருத்தாசை 7) பரம் பொருளைச் சேர்வாரைத் தாமாகவே செய்யும் என்று கூறுவதும் – திருவாசகத்தில்(திருத்தெள்ளேணம் 4) அவமானவை எல்லாம் நீங்கிச் சிவமானதாகக் கூறுவதும் –

அப்பர் தேவாரத்தில் (நின்ற திருத்தாண்டகம் 5) "காயாகிப் பழமாகி அதன் சுவையாகி அதை நுகர்பவனும் தானே ஆகி" எனக் கூறுவதும் – காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந் தாதியில் (20) அறிபவன், அறிவிப்பான், அறிவு ஆகிய அறியும் பொருளும் பஞ்ச பூதங்களும் தானே என்று கூறுவதும், கருவூர்த் தேவரின் திருவிசைப்பாவில் (கங்கை கொண்ட சோழபுரம் 7) தாயைத் தலைபட்டு உருகி ஒன்றாவது போல் என்றும் திருசைவத் (தெள்ளேணம் 18)தில் நான் என்பதும் இல்லாது போனேன் என்று கூறுவதும் நோக்கி, பெரியோர் இறைவன் எங்கும் எல்லோரும் தாயாக இருப்பதை எடுத்துச் சொன்னதை எண்ணினால் அவை எண்ணில் அடங்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருபொரு ளிவ்வியல் உவப்பென வுணர்க
நுகர்பொருள் சத்தி நுகர்வோன் சத்தனென்
றிகலறு முணர்வுவந் தெய்துத லரிதே
நானவ னெனுமிது நவைவழி நல்வழி
தானவ னாகை றிதுசா யுச்சியம்

எனவே கொடுக்கும் பொருள், கொள்ளும் பொருள், தருபவன், கொள்பவன் ஆகிய எல்லாம் ஒரு பொருளே. நுகரும் பொருள் சிவம், நுகர்பவன் சிவன், இப்படி உணர்வு வருவது அரிதே.

நான் அவன் என்று பிரித்துணர்வது குற்றமுள்ள வழியாகும். தானும் அவனே என ஆகுதல் நல்வழியாகும்.

இத்திறன் தெளிய வுய்த்திடு மளவும்
இயாதொரு வகையி னீதிய தாகத்
தானறி வழியே தாலைநின் றென்று
மூனுயிர் சிவத்தி லொடுங்கிட நடத்தி
மூடு முழுமலம் வீடுங் காலைக்
கருவிக ளளவிற் புரிதரு மறிவு
சாக்கிரங் கனவு நீக்கமில் சுழுனை
துரித மென்றவை பயிறரு மறிவு
துரிய தீதந் திரியாத் தன்மையில்
இறையரு ளுதவுங் கறையற மாறி

தானே அவனாகவும் ஆகுதல் சாயுச்சியம் எனும் முத்தி நிலையாகும்.

இத்தகுதி உறுதியாகும்வரை யாதாவது ஒரு வகையில் நின்று நீதியானதைக் கைக்கொண்டு தான் அறிந்த வழியில் உடலும் உயிரும் சிவத்தில் ஒடுங்கும்படி நடந்து வருவாராக! அவர்கள் அறிவை மறைக்கும் ஆணவமலம் விலகும்போது கருவிகளால் உணரப்படும். அறிவு நனவு கனவு உறக்கம் பேருறக்கம் எனும் கருவிகள் நீங்கிய நிலையை அடையும்போது, இறைவன் தன் அருளை ஆன்மாவிற்கு உதவுவான்.

அறிவே யாகும் பிறியாக் கருவிக
ணிறைமுத லவத்தையி லறிவில தாகத்
துரியா தீதத் தோற்றந்
திரியா தனுநற் சிவகதித் திறனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிமித்தகாரண பரிணாமவாதி
## சங்கற்ப நிராகரணம்

திறம்பெற நீயிங் கறைத்தமை கருதிற் (12)
புவன மியாவையும் புனிதன துருவெனில்
அவன்முதற் காரண மன்றா மென்னின்
நிமித்த காரண நிகழ்த்துக வெனநீ
அவனே காரண மனைத்துமென் றறைந்தனை
மண்டனிக் குலாலன் றண்டசக்க ராதி
காரண மூன்று மோர்பே ரணைந்ததித்(து)

அப்போது கறைப்படும் ஆணவ நிலை முழுதும் மாறி அறிவே வடிவம் நிற்கும். நீங்காத தத்துவம் யாவும் நனவு எனும் முதல் அவத்தையிலேயே நிற்கும். அப்போதே உயிர்ப் படங்கள் எனும் துரியாதீதம் தோன்றும். இந்த நிலை நீங்காமல் இருப்பதே சிவகதியாகும்.

நீயிங்குத் திறமாகக் கூறியவற்றைச் சிந்தித்தால், உலகம் முழுதும் சிவம் வடிவம் என்று நீ சொன்னாய். அப்படியானால் அவன் உலகிற்கு முதல் காரணன் அல்லன் என்றாகிறது. இனி நிமித்த காரணனாகச் சொல் என்று கூறினால், காரணம் மூன்றும் சிவனே என்று கூறுகிறாய். மண் முதல் காரணமாகவும் குயவன் நிமித்த காரணமாகவும் தண்டம் சக்கரம் துணைக் காரணமாகவும் குடமாகிய ஒரு காரியத்துக்கு அமைந்த மூன்றும் உலகு செய்ய சிவன் ஒருவனுக்கே நீ ஆக்கினாய்.

தாரணி யதனிற் கண்டது சாற்றுக
வத்த னியற்று மித்தொழில் பிறர்க்கோ
தனக்கோ வீணோ வெனக்கீ தியம்புக
வீணெனிற் பித்தர் மாண்பறுந் தொழில்போற்
றலைமையு மறிவு மிலதென விகழ்வர்
தனக்கெனி லஃதுமு னிற்பதொன் றன்றே
தன்போ லறிஞருந் தலைவரு மிலரான்
இன்போ னிலைமையை வேண்டலும் பழுதே

ஆனால் உலகில் இறைவன் தொழில் பற்றிக் கூறியவற்றைச் சாற்றுக நீ. அது என்ன என்றால் நிமித்த காரணம் சிவன் என்றும், துணைக் காரணம் சிவசத்திகள் என்றும் முதல் காரணம் விந்து மோகினிமான் என்னும் பாசத் தொடர்பின் என்றுமே உலகினர் கருதுவர். கடவுள் உலகைப் படைப்பது தனக்காகவா? பிறர்க்காகவா? வீணுக்காகவா? இதை எனக்க நீ சொல்வாயாக. வீணுக்காக இயற்றினான் என்றால் அது பித்தர் செய்கையைப் போன்றது. சிறப்பில்லாதது போலாகும். இறைவனுக்குரிய தலைமையும் அறிவும் இல்லை என்று இகழ்வர். தனக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகைப் படைத்தான் என்றால் அதுவும் பெருமைக்குரிய ஒன்றன்று. அவனைப் போலப் பேரறிவும் தலைமையும் பிறருக்கு இல்லை. ஆகவே மின்னல்போல மறையும் இந்த உலகைத் தன் பொருட்டுச் செய்தான் என்பது குற்றமே ஆகும்.

பிறர்க்கெனிற் பிறரும் பிறர்க்காம் பொருளும்
பொருட்கமை கருவியு மதற்குபா தானமுஞ்
செய்கையு மென்றோ ரைவகைத் தானொடு
மாறாச் சைவர் கூறா தென்றான்
நின்சித் தாந்தம் அவசித் தாந்தம்

பிறருக்காக இயற்றினான் என்றால், அந்தப் பிறர் என்ற முதல்வனும் அவனுக்கு வேண்டிய பொருள்களும் அப்பொருள்களை நுகர்வதற்குரிய கருவிகளும், அக்கருவிகள் தோன்ற ஓர் அடிப்படையும் அதிலிருந்து உலகை இயற்றும் சிவனும் என்று ஐந்து வகையில் சொல்ல நேர்கிறது. இப்படிச் சைவர்கள் கூறமாட்டார்கள். ஆகவே சித்தாந்தம் அவசித்தாந்தமே ஆகும்.

என்சித் தான்அ வசித்தைமற்று ஈனாது
அசித்தில தென்னி லசித்ததென் னுலகில்
உலகா யதனும் பூதக் கூட்டம்
சலமேற் கொப்புட் டகுமெனச் சாற்றினன்
தீய கருமச் சீனர்சா வகர்பிறர்

என் அறிவு (சிவம்) அறிவற்ற ஒன்றைப் பெற்று எடுக்காது. (உலகு அறிவற்றது என்க) உலகம் அறிவற்றது என்று சொல்ல முடியாது. எல்லாம் அறிவுடைய பொருளே என்று நீ கூறினால், இவ்வுலகில், சடப்பொருள்களும் இருப்பதாக நூல்கள் ஏன் கூறவேண்டும்?

உலகாயதனும் இந்த உலகம் நீர்க்குமிழி போன்றது என்றுதான் கூறினான்.

நேய மில்லென நிகழ்த்தின ரிலரே
காண்டல் விரோத நிற்பிறர் கணித்தி
ரீண்டுன துரைக்குமற் றியார்கரி யுடலுஞ்
சித்தோ சித்தின் சேர்வாற் சித்தெனிற்
கடப டாதியு முடற்கட் சிதைவென்
தாபர வுயிர்போற் றநுவொழிந் திவற்றின்
மேவிய வுணர்வு விரவிடு மென்னிற்
சடத்துயிர் போலெனச் சாற்றினை யாகலி
னுடற்குயி ரிறையை யொழிந்துண் டன்றே
தருதிட் டாந்தமுந் தாட்டாந் திகமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனர், சாவகர் ஆகிய பிறநாடுகளில் உள்ள தீய செய்கை செய்யும் சயத்தினரும் ஆன்மா இல்லை என்று கூறவில்லை. காண்பதற்கு எதிராகச் சிந்திக்கும் உன்னைப் போலப் பிறர் முடிவு செய்யவில்லை. உன் உரைக்கு ஆதாரமான பிரமாணம் எது?

இந்த உடல் அறிவுடையதா, அறிவு இல்லாததா? அறிவோடு கூடி நுகர்ச்சி பெறுவதால் அறிவுடையது என்று நீ சொன்னால், குடம் புடவை முதலியவையும் உடல்போல அசைவில்லாது கிடக்கின்றனவே, அது ஏன்?

உடலில் இறைவன் ஒன்றியிருப்பது போல, குடம் புடவை முதலியவற்றில் இல்லை என்றும் நீ கூறுவாய். இதனால் உயிர் உள்ள உடம்புக்கும் உயிர் இல்லாத பொருளுக்கும் உள்ள வேறுபாட்டைக் கூறி உடலுக்கு வேறாக உயிர் உண்டு என்பதை நீயே ஒத்துக் கொண்டவன் ஆகிறாய்.

ஒருபொரு ளாகி லுவமை பெறாதே
யொன்றே யாகி லுடற்கிறை தாபரத்
தொன்றிய நிலையில் விசேடமென் னுரைக்க
பூதச் சேர்வைப் பேதமென் றறையிற்
சேர்வைப் பேத மென்கொடு செப்புக

ஒரே பொருளை உவமையாகவும் உவமேயமாகவும் உலகினர் ஏற்கமாட்டார்கள். (திருஷ்டாந்தம் = உவமை; தட்டாந்தம் = உவமேயம்)

எங்கும் நிறைந்த பரம்பொருளைத் தாவரங்களை விட மனித உடலில் சிறப்பாக இருப்பதாக நீ ஏன் கூறுகிறாய்? இந்த வேறுபாடு பூதங்களின் சேர்க்கையால் வந்தது என்றால் அந்த வேறுபாடு உடம்புக்கு மட்டும் வரக் காரணம் என்ன? சொல்வாயாக.

கருமத் தளவில் வருமெனிற் பித்த
ருரையிற் றிகழு முணர்வொழிந் தனையே
கருமஞ் செய்வோன் கடவுளன்று உடலு
மருவிந் றிருவினை வளரா நுகரா
கடவுளும் உடலின் கண்ட துஞ்சல்

செய்வினை காரணமாக இந்தப் பூதச் சேர்க்கை வேறுபாடு வரும் என்று நீ கூறலாம். பித்தர்கள் போல் நீயும் பேசுவதாக அமையும். வினையை யார் செய்யமுடியும் கடவுள் செய்யவில்லை. இந்த உடலே அறிவில்லாதது. இது காரணம் இல்லாமல் வினையை அனுபவிக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடர்நல முறுத லிறங்குத லேறுதல்
எவ்வகை யேனுஞ் செய்கையின் றாதலும்
பலகலை யுலகி னிலவுத லானு
மெண்ணரும் பொருளு மிரவியு மொழியக்
கண்ணென வொன்று காண்கையி னாலும்
பாசப் பகுதியு மீசனு மொழியப்
பசுவு முண்டென் றிசையவேண் டின்றே
யிதுவெனு மொன்றை யதுவாய்ப் படுத்துப்
பொதுமையி னிற்கு மாயையின் பொற்பெனப்
பொற்பணி யாவும் பொன்னாந் தன்மையின்

கடவுளும், இந்த உடலில் உறங்குதல் முதலிய அவத்தைபடலும், இன்பதுன்பம் உறுதலும், இறங்குதல் ஏறுதல் முதலிய எதுவும் (கடவுள்) செய்வதில்லை. இவ்வுலகில் பலகலைகள் இருக்கின்றன. அப்படி எண்ணற்ற பொருளும் சூரியனும் தவிர கண் என்ற ஒன்று காண்பதைச் செய்வதால் பாசமும் கடவுளும் தவிரப் பசு என்ற ஆன்மாவும் உண்டு என்பதை இந்த உவமையால் உணர்கிறோம்.

இது எனச் சுட்டி ஒரு பொருளை அறியும்போது ஆன்மா அப்பொருளாகவே ஆகிவிடும். பொதுவாக இது நிகழும். இது மாயையால் நிகழ்வது. பொன்னும் அதனால் ஆகிய நகைகளும் போல, இந்தக் கருத்தை ஒன்றாக உணர்க.

நிட்கள சகளத் திருவுரு நிலையும்
ஈச னேயெனப் பேசுவ ரன்றி
அருவுரு வாகி வருமல கென்னில்
லனைத்து மாயை யெனத்தெளி கிலையே
ஆவது மாகா தொழிவதும் இலதெனும்
பாவகம் உலகா யதனது பான்மை
கட்கொலை வெகுளி காமம் களவுகள்
உட்படு மிவைவிட மொழியா தாரிலர்

இதனால் பெரியோர் உருவமற்ற நிகளத்தையும், உருவம் உடைய சகளத்தையும் ஒரே ஈசன் செய்வதாகக் கூறுவர். இதைவிட்டு அருவாக உள்ள சிவம் உருவாக உள்ள உலகமாக உள்ளது என்று நீ கூறலாம். அது பொருந்தாது. ஏன் என்றால், உலகம் மாயையிலிருந்து தோன்றியது. சிவத்திலிருந்து உலகம் தோன்றவில்லை. எல்லாம் படைக்கப்படவில்லை; எதுவும் அழிவதும் இல்லை என்று உலகாயதர்கள் பேசுவார்கள். கள், கொலை, சினம், காமம், களவுகள் ஆகியவற்றைக் கைவிடுங்கள் என்றுதான் எல்லாரும் சொல்வார்கள். இவை நல்லவை என்று எந்த நூலும் சொல்லக் கேட்டதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோம பானஞ் சுராபா னங்கள்
ஆமென மறைக ளார்செவிப் பறைந்தன
மறையோன் புலைச்சியை மருவு மென்பது
முறையோ வெனிலது புனைமொழி என்னில்
சாதி பேத நீதிநீ தவறினு
மேதியை யேறு விழையா விரும்புங்
கண்ணின் துருவு மதிற்கதி ரொளியு

(சோமபானம் = மதுபானம்; சுராபானம் = வாசனை நீர்)

தாழ்குலப் பெண்ணை வேதியன் காமுறுவது முறையாகுமா? இது முறையல்ல என்று சொன்னாலும் உலகில் நடப்பதால் அது புனைமொழியாகி விட்டது எனலாம். சாதி பேதமும் நீதியும் நீ கைக்கொள்ளாது போனாலும், இயற்கையைப் பார்; எருமையை பசுங்காளை விரும்புவதில்லை (அதுபோல் பெரியோர் நீதி தவறமாட்டார்)

நண்ணருஞ் சத்தி நாடக மெனிலதற்கு
ஏதுவும் பயன மோத வேண்டும்
நின்மொழி விரோதமு நீடுல கியற்கையுந்
தன்மசாத் திரமுஞ் சகலமு மென்செயும்
உலகே ழெனவிறை பலவாந் தன்மை
கடமொடு சாரவங் கலச மாதிகள்
உடலுறு குயவ னாயின என்றால்
தானே யாகா அவைதா னாகா
ஆயின னென்பது ஆக்கின னெனவே
ஆனா யென்ப தனைத்து மவ்வகை

கண்ணில் தெரியும் உருவமும் சூரிய ஒளி அதற்குத் துணையாவதும் சத்தியின் நாடகம் என்று நீ சொன்னால் அப்படிக் கூறக் காரணம் சொல்ல வேண்டும். அதனால் சீவனுக்கு ஏதேனும் பயனுண்டா என்றும் சொல்ல வேண்டும். உன் மொழி உண்மைக்கு வேறுபட்டுள்ளது. உலகின் நெடுங்கால மரபுக்கும், அறநூல்களும் பிற சாத்திரங்களும் கூறிய கருத்துக்கும் என்ன காரணமாகும்? (ஆன்மாவை மறுப்பதை எதிர்த்து இப்படிக் கூறுகிறார்)

உரகு ஏழு, திசை பத்து, இறைபலவாம் என்பது குடம், சட்டி, கலசம் முதலியவை போல என்ற திருப்பாட்டில் இறைவனே இவை ஆனான் என்பதன்று. குயவன் ஆயினான் என்பதற்கு இவற்றைக் குயவன் ஆக்கினான் என்று மட்டுமே பொருளாகும். தானேயாக இவை ஆவதில்லை; குயவன் இவையாகவும் ஆவது இல்லை. "வான் ஆனாய் மண் ஆனாய்" என்று கடவுளைச் சொல்லும் திருமுறையின் பொருள், சிவனே அப்படி ஆகவில்லை என்பது தானாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானா காமையைச் சாற்றிடு மென்க
தாமே யெனுமித் தனியே காரம்
அழிந்தில ரதுவே யாய்த்தில ரதுவிட்
டொழிந்திலர் பிரிவில ரெனுமிவை யுணர்த்துங்
காயும் பழமுஞ் சுவையு நுகர்வ
தாயவன் றானு மவன்முதற் றென்னும்
அகிலமுந் தெளிய வறிவோன் றானும்
அகிலமு மறிஞரை யறிவிப் போனும்
அறிஞர்க் கறிவா யறிகின் றோனும்
அறிவிற் கறிபொரு ளாவோன்றானு

தாமே தாமாகச் செய்யும் எனும் திருவாக்கின் தனித்த ஏகாரம் தாங்கள் அழிந்ததாகவோ அச்சிவமாகி விட்டார்கள் என்றோ பொருளில்லை. ஆனால் சிவமின்றி இவர்கள் எதையும் செய்ய முடியாது என்றும், சிவத்துக்கு வேறாகி விட்டார்கள் இல்லை என்பதும் உணர்த்தியதாகும்.

காய், பழம், சுவை, அதை உண்பவன் ஆகிய எல்லாம் சிவனே என்பது இவற்றை உண்டாக்கியவனும், இவற்றை உண்பவை அப்படிச் செய்ய வைத்தவனும் சிவனே என்ற பொருளாம். எல்லாம் அறிபவன், அறிஞர்க்கு அறிவிப்பவன், அறிபவர் அறிவாக இருப்பவன், அறிகின்றவனாய் இருப்பவன் எல்லாம் சிவனாவன் என்பது, எல்லாம் சிவனின் திருமேனி என்று அறிவிப்பது ஆகும்.

மகிலமு மேனி யானவ னென்னுந்
தருபொருள் கொள்பொருள் தருவோன் கொள்வோ
னொருபொரு ளாயி னுவப்பண் டென்க
நுகர்வோன் தனக்கு நுகர்பொருள் வேண்டிற்
றிகலறக் கிடையா திருந்ததெ னிரையமும்

பிறருக்குத் தரும் பொருளாகவ் கொள்ளும் பொருளாகவும் தருபவனாகவும் கொள்பவனாகவும் எல்லாம் ஒரே பொருளாக இருக்கும் என்றால் மகிழ்ச்சியே. ஆனால் நுகர்பவனுக்கு நுகரும் பொருள் தடையில்லாமல் கிடைப்பது இல்லை. நரகத்தையும் நினைத்த போது அனுபவிக்க முடியாது.

வேண்டா ராயினு மெய்யுறு வியாதிக
ளீண்டா தொழியா திறைக்கிவை யீடல
சத்தியுஞ் சிவமுந் தாமே நுகருமென்
றித்திற னுணர்வுவந் தெய்துவ தெவர்க்கோ
தமக்கே யென்னிற் றாமுண ராமையு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மமைப்புற வுணர்தலு மவர்க்கடை வன்றே
நானு மவனு நவையு நலனுந்
தானவ னாகையு நின்சா தனத்தில்
சகயோ கத்தைச் சாயுச் சியமெனப்
பகர்வது பதிபசு பசாத் தவர்க்கே.

விரும்பாவிட்டாலும் உடலுக்குரிய நோய்கள் அனுபவிக்காமல் நீங்குவதில்லை. எனவே யாவும் ஒன்று எனச் சொல்வது பொருந்தாது. எல்லாம் சிவமும் சத்தியும் அனுபவிப்பதாகக் கூறினாய். அப்படியானால் தேவையானது வாராமல் தேவையற்றவை வருவது ஆன்மா இயல்புக்கு மட்டுமே ஒத்ததாகும். ஏனென்றால் பேரறிவுடைய சிவமும் சத்தியும் இவற்றை உணர்ந்தே இருக்கும் என்பதாம்.

நான் எனும் உயிரும் அவன் எனும் சிவமும் நன்மையும் குற்றமும் ஒன்றாகிச் சிவமே ஆக வேண்டும் என்பதன்று. சிவனோடு ஆன்மா கலந்துள்ளது. சாயுச்சியம் என்பது பதி பசு பாசம் என்ற கொள்கை உடையவர்க்கே பொருந்தும்.

யாதொரு வகையென வோதிய திறைநூல்
சொன்னவற் றொன்றன் றென்னில்வீ டெளிதே
தானறி வழியே தலைப்பொருள் பிடித்து
மேனிகழ் பலமும் வீடறித் திடுமே
நிலையாக் கருவியை நிலையாக் கருதிப்
புலையா டுதலு முலகா யதன்பொருள்
குட்டிய மன்றிநற் கோல மெழுதுத
லிட்டம தாயிற் கருவியு மிடங்களுங்
கருத்துற வுரைக்கத் தெரித்திடு மதீதத்
தறிவொன் றில்லோர்க் கிறையரு ளுதவுதல்

ஏதவாது ஒன்றைப் பற்றி நிற்பதே முத்திக்குப் போதும். சிவாகமம் சொல்லிய ஒன்றைப் பற்றுதல் என்பது இல்லை என்று வாதிடலாம். அதன்படி எல்லாரும் எளிதில் முத்தி அடைந்திருப்பார்களே? (ஏன் என்றால் தான் அறிந்த வழியைப் பின்பற்றுபவர் தாம் மிகுதியாக உள்ளனர்)

நிலையில்லாத பொருள்களை நிலை என்று கருதி செய்யத் தகாதவற்றைச் செய்வது உலகாயதன் கொள்கை. (அதைப் பிறர் ஏற்பதில்லை) சுவர் (குட்டியம்) இல்லாவிட்டால் சித்திரம் எழுதமுடியாது. அதுபோல நம் உடலும் அதன் கருவிகளும் இல்லாமல் வாழ இயலாது என்று ஆகமங்கள் கூறுவதை விருப்பமிருந்தால் கேட்டு உணர்க. தத்துவங்களுக்கு மேம்பட்ட கடவுளுக்கு இவை தேவையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறிவழிற வரிய செறியிரு ளிடத்தோ
ரந்தகர்க் காண வந்தோ ரெம்மை
நீவிருங் காண வேண்டு மென்றாங்
கெடுத்தோர் தீபங் கொடுத்ததை யொக்கும்
இச்செயற் கிறைவன் கொச்சைய னன்றே

பேரறிவு இல்லாத உயிர்களுக்கு இறைவன் அறிவு அருளினான் என்பது எப்படி என்றால், செறிந்த இருளில் உள்ள பார்வையற்ற ஒருவனுக்கு மற்றவன் சென்று எம்மைப்போல் நீரும் காண்பீராக என்று கைவிளக்கைத் தருவதை ஒக்கும். இதுபோல் இறைவனும் நடந்தால் அது அவனுக்கே சிறப்பற்றதாக இருக்கும்.

கருவி வசத்திற் றெரிவுறக் காண
வேண்டுந ரிலரா லீண்டறி வியாவுஞ்
சிவமே யென்று செப்பினை யவமுறு
பொறிபுல னறியா வறிவது பிரம
மென்றோர்க்கு உன்போ லிடர்பட லிலதேல்

உடல் உலகு ஆகியவற்றைக் காண்பதற்கு சிவஞானியராக இருப்போர்க்குக் கருவிகள் வேண்டாம்; காரணம் அவை அறிவற்றவை.இங்கு அறியும் அறிவு யாவும் சிவமே என்று சொல்லினாய். பொறிபுலன்கள் யாவும் சமமே. ஆகவே அவை அறியமாட்டா. பிரமம் ஒன்றே அவைகளை அறியும் என்னும் மாயாவாதிகளுக்கு உன்போல் இடர்ப்பாடு இல்லை. காரணம் அவர்கள் பிரம்மத்தை அறிவு என்றும் உலகைச் சடம் என்றும் கூறினர். நீயோ எல்லாம் அறிவுப்பொருள் என்கிறாய். இதுவே இடர்ப்பாட்டிற்குக் காரணம்.

ஏற்றங் கருவி இருபதோ டிரண்டும்
போற்றும்ஐந் தவத்தையும் புகறிரி மலமும்
ஈசனு முயிரும் பேசினை யஃதொழிந்து
ஒன்றே யா மென்றநின் னியல்பு
தாயர் மனைவியர் தாதியர் தவ்வையர்

அந்த மாயாவாதிகள் உன்போல் இருபத்திரண்டு கருவிகள் கூறவில்லை. பதினான்கு கருவியும் நான்கு அவத்தையுமே கூறினர்.

நீயோ, இருபத்திரண்டு கருவிகள், சைவர்கள் கூறும் ஐந்து அவத்தைகள், மூன்று மலங்கள், கர்த்தா ஆன்மா ஆகியன உண்டு என்றாய். இப்போது எல்லாம் அச்சிவம் மட்டுமே என்கிறாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயவ ரெவரையு மோர்மையிற் காணும்
கோகழி தூர்த்தர் கொடுந்தொழில் தகுமே
ஆக மற்றத னருணிலை தன்னிலை
யேக நாயக னாகிய விறைநிலை
நாசமில் பாசம் வீசிய வியனிலை

தாய், மனைவி, தாதியர், தமக்கையர் ஆகிய யாவரும் தன் மனைவியர் போன்றவரே என்று வரம்பு கடந்து எண்ணுகிற காமுகம் கொடிய செயல் போன்றதாகும்.

திருவருள் நிலை எப்படிப்பட்ட என்றும் ஆன்மா பின் நிலை என்றும் ஏகனாகிய இறைவன் நிலை என்றும் எல்லாப் பொருளையும் மறைக்கும் பாசத்தின் அழியா நிலை என்றும்...

இனையவை யொன்று நினைவினு மின்றி
உண்டெனு முணர்விற் கண்டது கருதி
விழுக்கெனும் புலன்வழி யொழுக்கமு மதுவாக்
கொண்டு பண்டையில் எண்டரு மடங்கு
வந்தவர் செய்த தந்ததை யன்றே

இவை யாவையிலும் எந்த நினைவும் ஆன்மாவிற்கு இல்லை என்றும் எல்லாம் சிவனே என்றும் உனக்குத் தோன்றியதைக் கொண்டு, தவறான புலன்கள் வழியில் செல்வதைத் தவிர்க்காமல், அதையே ஞானமார்க்கமாகக் கொண்டு முன்பைவிட எட்டு மடங்கு மனம் போனபடிச் செய்து, செய்ததையே வெறுக்க நேர்கிறது. இனி இப்புன்மைகள் நீங்க உண்மையைக் கேட்பாயாக.

புன்மைகள் நீங்க உண்மை கேள்மதி
சைவவாதி சங்கற்பம்
அறிவா யறிவு மறிவுயர் கேவலத்து
அறிவில னிருளொடும் பிரிவிலன் அண்ணல்
கலைமுத லாக நிலவிய கருவிகள்
விளக்கென வுதவுந் துளக்கறப் பொருந்தி

அநாதி காலமாக அறிவாக, யாவும் அறியும் ஆன்மாவுக்குக் கேவல நிலையில் அறிவில்லாமல் இருக்கும். (காரணம் ஆணவ மலத்தால் முழுதும் மூடப்பட்டிருக்கும்) அறிவற்ற அந்நிலையில் ஆணவப் பிடிப்பால் இருள் பிரியாது இருக்கும். அப்போது சிவன் கலை முதலிய வித்தியா தத்துவங்களின் கருவிகளை, இருளுக்கு விளக்குப் போலத் தந்து மாசு நீங்கச் செய்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவினை நுகர்வில் வருவினை செய்து
மாறிப் பிறந்து வருநெடுங் காலத்து
இருள்மல பாகமுஞ் சத்தி நிபாதமும்
மருவுழி அருளுரு மன்னவன் அணைந்த
செல்கதி ஆய்ந்து பல்பணி படுத்திக்

இருவினைப் பயன்களை நுவர்வதற்கு வரும் செய்கைகளைச் செய்வான்.

இதனால் ஆன்மா பல பிறவிகளாக மாறிப்பிறந்து வரும். நெடுங்காலம் இது நடக்கும். நல்லவற்றை ஆன்மா செய்து மலபரிபாகமும் இருவினை ஒப்பும் பெற்று சத்திநிபாதமாகிய அருள் பதிவது நடக்கும். அப்போது இறைவன் குருவடிவில் வந்து முத்திக்குச் செல்லும் வழிகளை ஆயுமாறு உணர்த்தி பலவித பணிகளில் புகுத்தி சடமாகிய கருவிகளும் தூய்மையற்ற மலமும் பிரிந்து நீங்கச் செய்து...

கருவியு மலமும் பிரிவுறப் பிரியா
ஞான நல்கலுந் தானது நோக்கித்
தன்னையு மதனையுந் தன்முதற் பொருளையும்
இன்னவென் றறியா விருவரு முயங்கி
ஒன்றா யுறுபய னுவப்பு

சடமாக கருவிகளும், தூயதல்லாத மலமும் ஆன்மாவை விட்டுப் பிரியவும், ஆனால் தன்னைப் பிரியாத ஞானத்தையே அருளுவான். அப்போது தன்னையும், அந்த ஞானத்தையும், தலைவனாகிய சிவத்தையும், இன்னது என்று சுட்டி அறியாமல், ஆன்மாவும் சிவமும் தம்மில் கூடி ஒன்றாகிப் பயனும் உவகையும் இல்லாததாக நிற்கும் சிவகதியாகும்.

## சைவவாதி சங்கற்ப நிராகரணம்

இதுகதி யாக முதலறி வுயிரேற்
பொறிபுல னீங்க வறிவுயி ரன்றே
அடைகாய் நூறி னிடைசேர் சிவப்பென
விந்தியத் தொகையின் வந்தறி வொன்றுநின்று
இன்றா மென்ற லன்றே எந்தை
அறிவில னதீதச் செறிவிலென் றுரைத்த
நின்மொழி விரோதமும் பின்முன் மலைவு
மன்வயி னிகழா மலமிரு ளிறையொளி
யான்மா விளக்கிற் றகுமருட் கலாதிக
ளீனமி லவனிடத் தெவ்வா றிசைந்தன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய சைவவாதியின் கொள்கையை இனிச் *சித்தாந்த வாதி மறுப்பதைக்* காணலாம்)இதுவே முத்தியாயினும் முன்பே அறிவுடைய ஆன்மா பொறிபுலன் இல்லாத காலத்திலும் அறியும் உத்தி உடையதாக இருக்க வேண்டும்.

பொறிகளால் அறிவு வந்து அவை போனதும் அறிவு நீங்கும் என்பது எப்படிப்பட்டது எனில் பாக்கு வெற்றிலையை மெல்லும் போது தோன்றும் சிவப்பு தோன்றும் பிறகு இல்லாது போகும். இதுபோல் சடமாகிய பொறிகள் வந்ததும் அறிவு உண்டாகும். பிறகு அழியும் என்பதாகிறது. அறிவாக அறிந்து வந்த ஆன்மாவுக்க மல சம்பந்தம் வந்த நிலையில் அழிவு இல்லை என்கிறாய். இது முரண்பாடாக உள்ளது. பெரியோர் இதை ஏற்கமாட்டார்கள். ஆணவ மலம் என்பது இருள்; இறைவன் ஒளியாவான். ஆன்ம விளக்கில் தரும் அருள் கருவிகள் குற்றமற்ற ஆன்மாவில் எப்படி வந்து சேர்ந்தன?

இசைந்த தாயினு மிசையா தாயினும்
அசைந்திடு முத்தி சாதன மவமே
சத்தி நிபாதமோ தகுமல பாகமோ
வுய்த்த காரண காரிய மோதுக
பாகங் காரண மாகின் மற்றது

இவை வந்த பிறகும் ஆன்மாவிற்கு அறிவு விளக்கமானாலும் ஆகாவிட்டாலும், நீ சொல்லும் முத்திக்குரிய சாமை சரியானதில்லை. சத்திநிபாதம் மலபரிபாகம் ஏற்பட்டு முத்தி கிடைக்கும் என்றாய். இவைகளில் எது முந்தியது சத்திநிபாதமா மலபரிபாகமா? என்று காரண காரியமாக விளக்கிக் கூறுக. மலபரிபாகம் காரணமாகச் சத்திநிபாதம் வரும் என்றால் அது...

காலா வதியிற் காயா வதியின்
மேலா மென்னும் வினையுறும் அவதியிற்று
துயரென யுயிர்க்குத் தோன்றிடு மவதியின்
நயமிகு மிறைவ னல்கிடு மவதியில்
ஏதிற் கூடு மோதுக இருவினை
ஒத்த வெல்லையில வைத்தன ரென்னில்
அருவினை தூக்க வருவினை நில்லா
ஒருவினை புரிகா லிருவினையாகா
ஒப்புறு மாறு செப்புக தேசிகன்
அருளுரு வென்ற பொருளிலை யாயின்

(கால அவதி) காலமுடிவில் வருமா அல்லது (காய அவதி) உடம்பின் எல்லையில் வருமா? வினைகள் முடியும் எல்லையிா? பல பிறப்புகளின் துயரம் முடியும் எல்லையிலா? இறைவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்கும் எல்லையிலா? எதில் கூடும் என்று கூறுவாயாக. இருவினை ஒப்பு எனும் எல்லையில மலபரிபாகம் உண்டு என்று கூறினார் என்றால், நல்வினையும் தீவினையும் நிறுத்துப் பார்க்க எண்ணினால் அவை உருவம் உடையன அல்ல. ஒரு வினையைச் செய்யும்போது நல்வினை தீவினை என்ற இரண்டும் கலந்து அல்லது பிரிந்து நிற்காது. நல்வினை என்பதும் தீவினை என்பதும் தனித்தனயே நிற்பனவாம். எனவே இருவினை ஒப்பு என்பது நிகழ்வது எப்படி?

மாயா வொருவன் மாயா வுருவினை
யேயா னேய்ந்தவ ரெம்ம னோரே
பல்பணி ஞான காரண மென்னிற்
றொல்பணி தொறும்பயன் றொடுப்பத னாலு
மொருபணி செய்யாச் சிரபுரச் சிறுவரும்

இறைவன் உருவம் அருள் உருவம் என்று நீ சொல்வாய் ஆகில், இறைவன் அழியாதவன்; அவன் அழியும் மாய உருவை ஏற்க மாட்டான். மாய உடலை ஏற்றவர் நம் போன்றவரேயாம். சரியை கிரியை யோகம் என்ற பல பணிகளும் செய்தால் ஞானம் உண்டாகும் என்றால் முன்பே செய்த பணியாலும் இப்பயன்கள் வரும் என்பதாலும் ஒரு பணியும் செய்யாத திருஞானசம்பந்தரும்,

அரச ராய தருணத் தலைவரும்
உதிர்புர சமயத் திதமுறு மரசரும்
ஞானம் பெற்ற நன்மையி னாலும்
ஈனமில் பணியருட் கேதுவன் றென்றான்
ஞானேற் பத்தி நிமித்தமித் தொழிலென
வேனோர்க் கிறைநூ லியம்பிற் றென்னாங்
கருவியு மலமும் பிரிவுற வருடரு
மென்றனை கேவலத் தேது மறிவிலன்
றுன்றிய சகலத் தருணிலை தோன்றா
வெவ்வ வத்தையி லிறையருள் பெறுகுவஞ்
செவ்விய ஞான தரிசந மாவது
நால்வகை மாயைப் பால்வரு ஞானம்

அரசராகிய சேரமான் பெருமாளும், வேற்றுச் சமயத்திலிருந்து திரும்பிய திருநாவுக்கரசரும், ஞானம் பெற்ற நன்மையாலும், சரியை கிரியை யோகம் ஆகியவை ஞானத்துக்குக் காரணம் என்று சொல்லக்கூடாது. ஞானத்துக்கு இவை முதல் காரணம் அல்ல; நிமித்த காரணமேயாம். இதை ஏற்காவிடில் அருள் நூல்களில் கூறியவை என்ன ஆகும்? கருவிகளும் மலமும் விலகினால் இறைவன் அருள் ஆகிய ஒளி உண்டாகும் என்றாய். ஆனால் கேவல நிலையில் ஆன்மா எதையும் அறியாது. கருவிகளுடன் கூடிய சகல நிலையில் ஆன்மாவிற்கு அருளாகிய ஒளி உண்டாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே எந்த நிலையிலிருந்தால் இறையருள் கிட்டுமென்று கூறுக. தெளிவான ஞான தரிசனம் என்பது தனு (உடல்) கரண (இந்திரியம் முதலியன) புவன (உலகம்) யோகம் (அனுபவம்) எனும் நான்கு வகைக் கருவிகள் இருக்கும் போதுதான் ஞானம் வரும் என்பதாம்.

பண்டை ஞான மிதுவறி தாவரக்
கண்ட ஞான மிதுவரக் காணில்
ஈன ஞானிக ளென்போர் யாருமின்
ஞான வேற்றுமை நாடலு மரிதே
தானு ஞானுமுந் தலைவனு மென்றனை
ஆனபி னிவனு மிவனது ஞானமும்
பாசமும் பாச ஞானமு மென்றிவை
பேசுவ ரொன்றாப் பெற்றிய வாகலின்

இது எப்போதும் உள்ள ஞானமாகும். இந்த மாயாஞானம் நீங்குமாறு வரும் ஞானம் இது மட்டுமே என்று நீ கூறினால் அத்தகைய ஈன ஞானிகள் எங்கும் இல்லை. ஞானத்தில் இப்படி வேற்றுமை பார்ப்பதும் இயலாது. ஆன்மா, ஞானம், தலைவன் என்று மூன்றாகக் கூறினாய். சிவனும் சிவனின் ஞானமும் என்று கூறியது போல நீ சொன்னபடி ஆன்மாவும் அதன் ஞானமும் பாசமும் பாசத்தின் ஞானமும் என்று இவைகள் மூன்றையும் கூட்டிப் பெரியோர் பேசுவர்.

மும்மைப் பொருட்கு மும்மைத் தன்மை
செம்மைத் தென்னிற் செலவுக ளெழுதுக
இருவருங் கூடி யொருபய னாய்த்தென்
றருளினை யிவ்வா றபேதிக ணிலையே
சித்தாந்த சைவாசாரியர் அநுக்கிரகம்
பதிபசு பாச முதிரதி வுகளுடன்

மூன்று முதற் பொருள்களுக்கும் மூன்று தனித்தன்மை உண்டு என்றால் அவை நீங்கியது எப்படி என்று சொல்லுக. மேலும் சிவனும் ஆன்மாவும் கூடி ஒரு முதலாயினது என்று கூறினாய். இப்படிப் பிறவிகளில் இரண்டாகவும் முத்தியில் ஒன்றாகவும் இருக்கும் நிலை (அபேதவாதிகளாகிய) மாயாவாதிகள் கொள்கையே ஆகும்.

பதி பசு பாசம் இவையும் முதிர் அளவு ஆகிய ஞானத்துடன்...

ஆறா முன்னர்க் கூறாப் பின்ன
ரிருபொரு ணீத்துமற் றொருநால் வகையும்
ஈனமின் ஞாதுரு ஞான ஞேயமென்று
இசைய மூன்றாய்ப் பசுபதி யென்றவற்று
இரண்டா யிரண்டு மொன்றினொன் றாகத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் பயனெனுந் திருவரு டெளியில்
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றா
மென்றிறை யியற்கை யியம்புதல் தகுமே

ஆறு வகையான முன்னால கூறி (பதி, பசு, ஞானம், பசு பசு ஞானம், பாசம் பாச ஞானம் இரண்டையும் நீக்கி நான்கு வகையாக்கி, குற்றமற்ற ஞாதுரு, ஞானம், ஞேயம் என்ற மூன்றாக ஆக்கி, அவற்றுள்ள ஞானத்தை நிக்கிப் பசு பதி என இரண்டாக்கி, அவை இரண்டும் ஒன்றோடு ஒன்றாகச் சென்று கலந்து இரண்டும் ஒர பயனாக நின்று நீ கூறும் திருவருளைத் தெளிவாக உணரும். "அது சென்று சென்று அனுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம்" என்று திருவாசகத்தில் கூறியபடி, இறைவன் இயல்பு பற்றிச் சொன்னது உன் கருத்தாக நீ கூறியதை ஒக்குமா?

ஒன்றா மென்ற லன்றியு முவப்பும்
இன்றா மென்றா லென்பய னியம்புக
என்றனை வினாவு மியாவும் விளங்க
வென்றிகொள் கருத்தின் விரும்பினை யாயின்
நதிக்கரை யானெனக் கொதித்தல மந்து
வெண்ணையம் பதிதிகழ் மெய்கண்ட வனருள்
உண்ணிலை யுடையோ னொருவ னுரைத்த

ஒன்றாகச் சிவமும் ஆன்மாவும் இருக்கும் என்பது உன் கருத்தானால் உவப்பும் அதில் இல்லை என்றால் பிறகு என்ன பயன் இதனால் கிடைக்கும் விடை கூறுக என்றீர். இதற்கான விடையை நான் கூறுகிறேன். ஆற்றங் கரையில் உள்ள பசு இங்கோ அங்கோ என்று திரிவதை விட்டு என் கருத்தைக்கேள். திருவெண்ணெய் நல்லூரில் திகழ்ந்த மெய்கண்ட தேவர் என்னும் ஞானியின் அருளால் உள்ள நிலைபெற்ற மறைஞான சம்பந்தர் எனக்கு அருள் செய்ததனால்,

தவப்பிர காசத் தன்மையில் விரித்த
சிவப்பிர காசச் செழுந்தமி ழுண்மையை
யருளுட னாய்ந்து கொள்ளத்
திருவருள் வினவ திருந்திட மன்றே. (13)

முற்பிறப்பில் செய்த தவம் விளங்கும்படி, விரிவாகச் செய்த சிவப்பிரகாசம் எனும் செழும் தமிழ் உண்மையைத் திருவருளால் ஆய்ந்து கொள்வதால் திருவருள் பற்றிய வினா எல்லாம் திருத்தமாக விடை பெற்றிடும்.

சங்கற்ப நிராகரணம் முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டு முதற் குறிப்பு அகராதி

## 1. உண்மை விளக்கம்


| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| அக்கரங்கட்கு | 12 | சேர்க்கும் துடிசிகரம் | 14 |
| அந்தக்கரணம் | 07 | ஞானேந் திரியங்கள் | 05 |
| அஞ்செழுத்தே ஆகமம் | 18 | தத்துவங்கள் எல்லாம் | 19 |
| அண்ணல் முதலா | 17 | தத்துவங்கள் ஆறா | 11 |
| அன்றியுங்கேள் ஆன்மா | 12 | தோற்றம் துடிஅதினல் | 14 |
| அப்பாஇம் முத்திக்கு | 21 | நன்றா உரைக்கக்கேள் | 10 |
| ஆடும் படிகேள்நல் | 13 | நன்றாக நீரிடமா | 06 |
| ஆதவன் | 19 | நல்தவத்தோர் தாம் | 13 |
| ஆதி மலம்இரண்டும் | 17 | நாதாந்த நாடகத்தை | 16 |
| ஆறாறு தத்துவமேது | 02 | நாற்கோணம் பூமி | 03 |
| ஆறாறு தத்துவமும் | 09 | படைப்பன் அயன் | 04 |
| ஆறாறு தத்துவமும் | 10 | பரை இடமா | 16 |
| ஆறு சுவையும் | 11 | பாராதி ஐந்துக்கும் | 04 |
| உள்ளபடி மாபூதம் | 05 | பொன்பார் புனல் | 03 |
| உள்ளபடி இத்தை | 02 | பொய்காட்டிப் பொய் | 02 |
| உற்ற குறி | 16 | மண்கடின மாய்த்த | 04 |
| எட்டும் இரண்டும் | 13 | மன் அதிகை | 22 |
| எல்லை பலம்புதுமை | 08 | மாயை தனை | 15 |
| ஓதியிடும் நாலாறும் | 07 | முத்திதனில் மூன்று | 20 |
| கண்ணுதல்நூல் ஓதி | 06 | முத்திதனை | 18 |
| கற்றூா மனம்போல் | 21 | மோனந்த மாமுனிவர் | 15 |
| காலம் நியதி | 08 | வண்மைதரும் ஆகம | 01 |
| குன்றா அருளாலே | 11 | வாக்கு மனம்இறந்த | 20 |
| குறிகுலிசம் கோகந | 03 | வாக்குஆகா யம்இடமா | 07 |
| சிவனருள் ஆவி | 17 | வானிடமாய் நின்று | 06 |
| சுத்த வித்தை | 09 | வாழ்ந்தேன் அருட் | 21 |
| சென்று இவன்தான் | 19 | வித்தியா தத்துவங்கள் | 09 |


## 2. திருவருட்பயன்


| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| அகத்து உறுநோய் | 34 | ஆசில்நவா நாப்பண் | 46 |
| அகர உயிர்போல் | 23 | ஆனா அறிவாய் | 25 |
| அகலத்தரும் | 36 | ஆராதி ஆதாரம் | 46 |
| அணுகு துணையறியா | 32 | ஆர்அறிவார் எல்லாம் | 36 |
| அன்றளவும் ஆற்றும் | 28 | இன்பில் இனி(து) | 44 |
| அன்று அளவி | 29 | இன்புறுவார் துன்பார் | 42 |
| அருளா வகையால் | 35 | இன்பதனை | 42 |
| அருளில் பெரியது | 31 | இருளானது அன்றி | 29 |
| அருள்நூலும் ஆரணம் | 44 | இருளில் இருளாகி | 28 |
| அருவும் உருவும் | 24 | இருள்இன்றேல் துன்பு | 30 |
| அறியாமை உள்நின்று | 34 | இருவர் மடந்தை | 42 |
| அவனை அகன்று | 48 | இற்றைவரை | 34 |
| ஆக்கி எவையும் | 24 | இறைசத்தி பாசம் | 45 |
| ஆசாதி யேல்அணைவ | 30 | உன்னும்உளது ஐயம் | 26 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாட்டு | பக்கம் |
|---|---|
| உறுந்தொழிற்குத் தக்க | 48 |
| உற்கை தரும்பொற்கை | 41 |
| உற்றாரும் பெற்றாரும் | 43 |
| உள்ளம் புறம்பும் | 48 |
| ஊன்உயிரால் வாழும் | 37 |
| ஊன நடனம் | 45 |
| ஊன்அறியாது என்றும் | 32 |
| ஊமன்கண் போல | 28 |
| எங்கும் எவையும் | 25 |
| எமக்கென் எவனுக்கு | 35 |
| எல்லாம் அறியும் | 47 |
| எல்லா வகையும் | 47 |
| ஏகன் அநேகன் | 37 |
| என்றவினை | 49 |
| ஐந்தொழிலும் காரணர் | 47 |
| ஐம்புலனால் தான் | 41 |
| ஒண்பொருள்கண் | 44 |
| ஒன்றாலும் ஒன்றாது | 43 |
| ஒன்று மிகினும் | 31 |
| ஒருபொருளுஞ் காட் | 29 |
| ஒளியும் இருளும் | 27 |
| ஒளியும் இருளும் | 40 |
| ஓங்குஉணர்வில் | 47 |
| ஓராதே ஒன்றையும் | 38 |
| கண்தொல்லை காணும் | 38 |
| கண்டபடி யேகண்டு | 39 |
| கண்டவற்றை நாளும் | 27 |
| களியே மிகுபுல | 39 |
| கள்ளத் தலைவர் | 49 |
| காண்பான் | 40 |
| கிடைக்கத் தகுமே | 40 |
| சத்து அசத்தைச் | 28 |
| சிவமுதலே ஆமாறு | 46 |
| செய்வானும் செய் | 37 |
| ஞானம் இவன் | 36 |
| தனக்குநிழல் இன்றாம் | 41 |
| தன்நிறமும் பல்நிறமும் | 38 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| தன்னிலைமை மன்னு | 24 |
| தாரையை அறியாது | 33 |
| தாடலைபோல் கூடி | 43 |
| தாமே தரும்அவரைத் | 41 |
| தித்திக்கும் பால்தானும் | 39 |
| திரிமலத்தார் ஒன்று | 26 |
| துன்றும் பவத்துயரும் | 29 |
| தூநிழல்ஆர்தற்கு ஆரும் | 39 |
| நற்குஞ் சரக்கன்று | 23 |
| நலமிலன் நண்ணார் | 26 |
| நீடும் இருவினையும் | 37 |
| பன்மொழிகள் என் | 30 |
| பரப்பஅமைத்து கேண் | 33 |
| பலரைப் புணர்ந்தும் | 30 |
| பல்லா ருயிர் | 25 |
| பால் ஆழி | 32 |
| பார்வை என | 35 |
| பிறந்தநாள் மேலும் | 26 |
| புன்செயலி னோடும் | 38 |
| புலன் அடக்கித் | 48 |
| பெருக்க நுகர்வினை | 31 |
| பெருமைக்கும் நுண் | 24 |
| பேய் ஒன்றும் | 43 |
| பொய்இருண்ட சிந்தை | 35 |
| பொறியின்றி ஒன்றும் | 27 |
| மலைகெடுத்தோர் | 33 |
| மாலார் திரோதம் | 45 |
| மும்மை தரும்வினை | 49 |
| மூன்றாய தன்மை | 44 |
| மூன்றுதிறத்து உள்ளா | 27 |
| வஞ்சமுடன் ஒருவன் | 40 |
| வாசி அருளிஅவை | 46 |
| விரியம நமேவிடின் | 45 |
| விடம்நகுலம் மேவினும் | 36 |
| விடிவாம் அளவும் | 31 |
| விரியுமந மேவியவ்வை | 45 |
| வெள்ளத்துள் | 33 |


## 3. சிவப்பிரகாசம்


| பாட்டு | பக்கம் |
|---|---|
| அகம்புறம் என்று | 102 |
| அடைபவர் சிவமே | 95 |
| அண்ட(ம்)மே விடஅ | 102 |
| அரிவையர்இன் புறு | 82 |
| அருத்திமிகும் கலை | 67 |
| அறிந்திடும் அனாதி | 90 |
| அறிவினால் அறிந்த | 85 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| அறிவெனில் வாயில் | 84 |
| அன்னியமானவை | 73 |
| அலகில்குணம் பிரகாசம் | 77 |
| அல்லன்மிக வுயிர் | 66 |
| அழிந்திடும் பாசம் | 99 |
| ஆசுஅறு திரோதம் | 101 |
| ஆனதனு அதனில்உறு | 78 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| இங்கிவை பொதுஇ | 83 | தன்னறிவு அதனால் | 92 |
| இத்தகைமை இறை | 75 | திருவெழுத்து ஐந்தில் | 100 |
| இந்நிலையில் ஐந்து | 80 | திருவருள் கொடுத்து | 104 |
| இந்நிலை தன்னின் | 95 | தீங்குஉறு மாயை | 101 |
| இனையபல பிறவி | 81 | தெரித்தகுரு முதல் | 56 |
| இன்மைபல மாயை | 72 | தேசுற மருவும் | 92 |
| இன்றுநோக்கு உரை | 94 | தேவர்பிரான் வளர் | 53 |
| இருள்நனி இரவி | 90 | தொண்டர்கள் தாமும் | 103 |
| இவ்வகை அவத்தை | 88 | தொன்மையவாம் எனும் | 57 |
| ஈங்கிது என்றதுகடந் | 59 | தோற்றியிடும் அண்ட | 80 |
| உன்னல்அரும் பரசிவன் | 63 | நலத்தரல்நூல் இருந் | 52 |
| உருவாதி சதுர் | 64 | நண்ணியிடும் | 68 |
| உருவுணர்வு இலாமை | 84 | நாடியசத் திநிபாத | 82 |
| உறைதரு உணர்வும் | 93 | நிலவுலோகதாதி | 104 |
| உற்றதொழில் நினைவு | 70 | நீக்கமில் அதீத | 88 |
| உலகமெலாம் ஒருவ | 60 | நீடுபரா சத்திநிகழ் | 58 |
| எண்ணஒன் றிலாது | 87 | படைத்ததுஒரு படி | 65 |
| எண்ணரிதாய் நித்தமா | 62 | பந்தமா னவைஅ | 100 |
| என்னையிது எனின் | 64 | பன்னிறம் கவரும் | 91 |
| எல்லையில் பிறவி | 99 | பரந்தபரா பரையாதி | 51 |
| எல்லையிதுவெனில் | 64 | பலகலை ஆகமம் | 58 |
| எவ்வறிவு சத்து | 85 | பற்றிடுங் கருவி | 96 |
| ஏகமாய் தங்கால | 62 | பாசமா ஞானத் | 97 |
| ஏற்றஇவை அரன் | 61 | பார்திகழ வளர்சாம | 53 |
| ஐவகையால் | 77 | பாவிக்கின் மனாதி | 98 |
| ஒடுங்கிடா கரணம் | 96 | புகலரும் அசத்தர் | 94 |
| ஒன்று இரண் | 98 | புகலுமலம் ஒழித்த | 74 |
| ஒளியான திருமேனி | 50 | புறச்சமயத் தவர்க்கு | 54 |
| ஓங்கிவரும் பலவுயிர் | 71 | பேசரிய அராகம்தன் | 76 |
| ஓங்கொளியாய் அருள் | 50 | பொற்புறு கருவி | 96 |
| ஓரிடத்து இருத்தன் | 87 | மண்முதல் கரண | 103 |
| கண்டார் புலன்கள் | 89 | மன்னியகன் மேந்திரிய | 67 |
| கண்ணொளி விளக்கு | 86 | மருவிய பொறியில் | 88 |
| கந்தமலர் அயன் | 60 | மாயைமா மாயை | 91 |
| கன்மநெறி திரிவித | 69 | மாயைமுதல் என் | 73 |
| காட்டிடும் கரணம் | 91 | முந்திய ஒருமை | 97 |
| கிரியைஎன மருவும் | 56 | முந்தியஐம் பூதங்கள் | 79 |
| குறிப்பிடும் காலத் | 101 | மூவகைஆ ருயிர் | 55 |
| சத்து இது | 86 | மேலைக்கு வருவினை | 69 |
| சுத்தமாம் சத்தி | 94 | மோகமிகவுயிர்கள் | 71 |
| செறிந்திடும் உடலுள் | 84 | வளநிலவு குலஅமரர் | 52 |
| சொன்னமுறை செவி | 78 | வந்தடைந்து | 75 |
| தத்துவம் ஆன | 93 | விரும்பியமந் திராதி | 55 |
| தனக்கென அறிவு | 89 | விளம்பிய வகையின் | 98 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. சிவஞானசித்தியார்


| பாட்டு | பக்கம் |
|---|---|
| அகலியை கல்ல | 165 |
| அங்கித்தம் பனை | 260 |
| அசித்தரு வியாப | 200 |
| அசித்துஎனின் உண | 197 |
| அஞ்செழுத்தால் | 252 |
| அண்டசம் சுவேத | 185 |
| அத்துவா மூர்த்தி | 139 |
| அநாதிஉடல் ஒன் | 262 |
| அந்தரி யாகம் | 254 |
| அனாதியே அமலன் | 113 |
| அனைத்தும்சத்து | 219 |
| அன்னிய சாதி | 110 |
| அன்னியம் இலாமை | 218 |
| அயன்அரி அரனும் | 192 |
| அயன்தனை ஆதி | 140 |
| அரசனும் செய்வது | 159 |
| அரனடிக்கு அன்பர் | 158 |
| அரன்விதி அருளது | 168 |
| அரிசனம் பூசி | 188 |
| அருஉரு என்னில் | 196 |
| அருந்துஇன்பத் | 111 |
| அருமறை ஆகமமுத | 230 |
| அருளது சத்தி | 214 |
| அருளினால் ஆக | 107 |
| அருளினால் உரைத்த | 160 |
| அருவமோ உருவ | 131 |
| அருவவி காரி | 197 |
| அருவினில் உருவம் | 126 |
| அருவுரு வீனா | 126 |
| அறவிக்க அறித | 220 |
| அறிதரும் முதல் | 207 |
| அறிந்திடும் ஆனமா | 211 |
| அறிந்திடும் பிராண | 190 |
| அறிபொருள் அசித்தாய் | 217 |
| அறியாமை அறிவு | 240 |
| அறிவிலன் மூர்த்தன் | 209 |
| அறிவுஅதுஜம் பொறி | 190 |
| அறிவுஅரியான் தனை | 270 |
| அறிவுஇச்சை செயல் | 193 |
| அறிவுடல் சிந்தை | 204 |
| அறிவுறும் பொருளோ | 214 |
| அறுவகைச் சமயத்து | 106 |
| அளவை காண்டல் | 108 |
| அழிந்தபின் அணுக்கள் | 119 |
| அழிப்புஇளைப்பு | 130 |
| அழிவிலாக் கிரியை | 224 |
| அவ்வவ யோனி | 166 |
| அவ்வுடன் உவ்வு | 192 |
| ஆகங்காரம் புத்தி | 172 |
| ஆணவம்தான் அநாதி | 263 |
| ஆணையால் அவனி | 159 |
| ஆன்மாவின் வடிவு | 193 |
| ஆரணம் ஆக | 135 |
| ஆவதாய் அழிவது | 215 |
| இங்குநாம் சிலர்க்குப் | 157 |
| இதம்அகி தங்கள் | 151 |
| இந்தனத்தின் எரி | 255 |
| இந்திரியம் எனை | 257 |
| இந்நிலை தான் | 243 |
| இம்மையின் முயற்சி | 148 |
| இம்மையே ஈர்எட்டு | 228 |
| இயல்புகாண் தோற்றி | 115 |
| இரந்தர மாகி | 174 |
| இரும்பைக்காந் தம் | 268 |
| இருவகை சாக்கி | 208 |
| இருவினை அநாதி | 163 |
| இருவினை இன்பத் | 147 |
| இருவினைச் செயல் | 148 |
| இருவினைச் செயல்கள் | 209 |
| இறுதியாம் காலம் | 130 |
| இறைவனே அறிவிப் | 210 |
| இறைவன்ஆவான் | 232 |
| இறைவன்இங்கு ஏற்பது | 151 |
| இறைவன்தன் சந்நி | 212 |
| இவன்உலகில் இதம் | 256 |
| ஈசனுக்குஅன் பில்லார் | 270 |
| ஈண்டு பக்கப் | 114 |
| உடலினின் ஏக | 198 |
| உடலின்வேறு உயிர் | 189 |
| உடலியான் அல்லேன் | 203 |
| உடல்செயல் கன்மம் | 149 |
| உடல்விடா யோனி | 162 |
| உணராத பொருள் | 216 |
| உணர்வன கரணம் | 191 |
| உதிப்பதும் ஈறு | 115 |
| உயிரவை ஒடுங்கிப் | 128 |
| உயிரினை அணுஅது | 198 |
| உயிரினோடு உணர்வு | 110 |
| உயிர்எனப் படுவது | 189 |
| உருஉயிர் என்னில் | 195 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| உருமேனி தரித்துக் | 138 | கருவிகழிந் தால் | 244 |
| உருவருள் குணங்க | 135 | கருவினுள் அழிவ | 187 |
| உருவினில் நிறைந்து | 199 | கருவியா மனமும் | 191 |
| உருவினைக் கொண்டு | 209 | கருவியால் பொருளால் | 211 |
| உருவொடு கருவி | 146 | கருவியும் பொருளும் | 212 |
| உரைதரும்இப் பசு | 221 | கற்றநூல் பொருளும் | 128 |
| உரைத்தஇத் தொழில் | 129 | காண்டல் வாயின் | 109 |
| உலகமே உருவ | 213 | காண்பவன் சிவனே | 157 |
| உலகினில் பதார்த்த | 133 | காயத்தின் அழிவு | 118 |
| உலகினை இறந்து | 135 | காயம்ஒழிந் தால் | 260 |
| உலகுஉடல் கரணம் | 155 | காரண அணுக்கள் | 119 |
| உலகெலாம் ஆகி | 145 | காரிய காரணங்கள் | 122 |
| உள்ளதும் இலதும் | 117 | காரியம் என்பது | 120 |
| உள்ளுணர் ஓசை | 123 | காலமே கடவு | 118 |
| எங்கும்தான் என்னில் | 246 | குணங்களை இன்றி | 194 |
| எங்கும்தான் நிறைந்து | 265 | குறிகள்வச் சிரத்தி | 176 |
| எங்கும்தான் வியாபி | 199 | குறித்தடியில் நின்று | 251 |
| என்னுடல் பொறிபி | 202 | குறித்ததுஒன் றாக | 134 |
| என்னைஇப் பவத்தில் | 106 | கேட்டலுடன் சிந்தி | 236 |
| எல்லாமாய்த் தத்து | 181 | கேவல சகல | 208 |
| எழும்உடல் | 169 | சகமார்க்கம் புலன் | 234 |
| எவ்விடத்தும் இறை | 264 | சங்கமத் தாப | 164 |
| ஏது மூன்றாம் | 112 | சத்திதன் வடிவேது | 141 |
| ஐந்துசாக் கிரத்தின் | 207 | சத்திதான் நாதம் | 180 |
| ஐந்துசுத் தத்தின் | 177 | சத்திதான் பலவோ | 141 |
| ஒன்றதா யநேக | 182 | சத்தியாய் விந்து | 179 |
| ஒன்றதாய் இச்சா | 142 | சத்தியும் சிவமு | 144 |
| ஒன்றென மறைக | 146 | சத்தியே வடிவென் | 133 |
| ஒன்றெனும் அதனால் | 218 | சத்துசத்து அறிவது | 219 |
| ஒன்றோடொன்று ஒவ் | 137 | சந்திரன் வடிவு | 196 |
| ஒருகோட்டன் இரு | 105 | சந்நிதி குணமது | 194 |
| ஒருபுலன் நுகரும் | 188 | சன்மார்க்கம் சகமார்க்கம் | 232 |
| ஒருபொருள் ஒருவன் | 117 | சன்மார்க்கம் சகலகலை | 235 |
| ஒருவனே இராவ | 144 | சலம்இலனாய்ஞான | 258 |
| ஒருவனோடு ஒருத்தி | 114 | சாக்கிரத்தே அதீதத்தைப் | 244 |
| ஒழுக்கம்அன்பு அருள் | 155 | சாக்கிரம் முப்பத் | 206 |
| ஓசைநற் பரிச | 175 | சாந்தியா தீதகலை | 226 |
| ஓதியுணர்ந்து ஒழுக்க | 223 | சார்பினில் | 116 |
| ஓதுசம யங்கள்பொருள் | 229 | சாற்றிய பஞ்ச | 175 |
| ஓரிடம் அழியப் | 118 | சித்தமாம் அவ்வி | 171 |
| கண்ட பொருளை | 109 | சித்தாந்தத் தேசிவன் | 231 |
| கண்டஇவை அல்லே | 292 | சிவஞானச் செயலு | 238 |
| கண்டிடும்கண் தனை | 250 | சிவனைஅவன் திருவடி | 250 |
| கண்டுஉணர் புருடன் | 205 | சிவன்அரு வுருவும் | 145 |
| கண்ணுதல் யோகி | 138 | சிவன்சீவன் என்று | 267 |
| கரணங்கள் கெட | 249 | சிவம்சத்தி தன்னை | 180 |
| கருதுகா ரணம்உண் | 121 | சிவம்சத்தி நாதம் | 179 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாட்டு | பக்கம் |
|---|---|
| சீலமோ உலகம் | 127 |
| சீவனும் இச்சா | 142 |
| சுத்ததத் துவங்கள் | 176 |
| சுத்தமாம் ஆன்ம | 200 |
| சுத்தமாம் விந்துத் | 139 |
| சுத்தமெய்ஞ் ஞான | 220 |
| சூக்கும உருவம் | 195 |
| சூக்கும தேசி யாகித் | 201 |
| சூக்கும வாக்கது | 124 |
| சூக்குமம் கெட்டுத் | 167 |
| சூரியகாந் தக்கல்லின் | 239 |
| செங்கமலத் தாளி | 269 |
| சென்றுஅணையும் | 266 |
| செப்பினாய் மாற | 165 |
| செம்பஇரதகுளிகை | 267 |
| செய்க்கிடும் தழையும் | 153 |
| செய்தவர் மனத்தே | 154 |
| சொன்னஇத் தொழில் | 130 |
| ஞானத்தால் வீடுஎன் | 238 |
| ஞானநூல் தனைஓதல் | 236 |
| ஞானமே ஆன | 143 |
| ஞானயோ கக்கிரியா | 272 |
| ஞாலம்அதில் ஞான | 242 |
| தத்துவ ரூப | 177 |
| தத்துவம் எண்மூன்றும் | 178 |
| தத்துவம் சத்துஅ | 216 |
| தந்தைதாய் பெற்ற | 152 |
| தனுகரண புவன | 181 |
| தன்னியல்பு ஒழியப் | 147 |
| தன்மமோடு அதன்ம | 163 |
| தாதமார்க் கம்சாற்றில் | 233 |
| தானம்செய் பொருள் | 154 |
| தானம்யா கம்தீர்த்தம் | 237 |
| தாபர சங்க | 158 |
| திரவியம் உவமை | 153 |
| திருக்கோயில் உள்ளி | 271 |
| தூலமா முருவி | 168 |
| தெரிந்து கொண்டு | 213 |
| தெரிவுஅரிய மெய் | 262 |
| தேசம்இடம் காலம் | 242 |
| தேவரின் ஒருவன் | 136 |
| தோற்பாவைக் கூத்தும் | 202 |
| தோற்றமும் நிலையும் | 120 |
| தோற்றுவித்து அளி | 129 |
| நண்ணிடும் உருவம் | 131 |
| நரர்களாய்த் துய்ப்பர் | 164 |
| நரர்பயில் தேயம் | 186 |
| நற்செவி துவக்குக் | 173 |
| நாடுகளில் புக்கு | 259 |
| நாட்டும்இத யம்தானும் | 253 |
| நாயகன் கண்ணை | 137 |
| நிகழ்ந்திடும் வாக்கு | 125 |
| நிக்கிர கங்கள் | 152 |
| நித்தமாய் அருவாய் | 169 |
| நியதிபின் தோன்றிக் | 170 |
| நிலம்புனல் அனல் | 116 |
| நெல்லினுக்குத் தவிடு | 264 |
| பக்க மூன்றின் | 111 |
| படைபொடு பவனி | 206 |
| படைப்பாதித் தொழி | 138 |
| பண்டைநல் தவத்தால் | 107 |
| பந்தமும் வீடும் | 134 |
| பன்னகம் அண்ட | 162 |
| பன்னிறங்கள் அவை | 245 |
| பரஞானத் தால் | 261 |
| பரம்பிரமம் இவனெ | 273 |
| பரிதியை முகிலம் | 183 |
| பலவிதம்ஆ சான்பாச | 222 |
| பாசஞா னத்தாலும் | 247 |
| பாசிபடு குட்டத்தில் | 247 |
| பாலரொடு வாலீசர் | 223 |
| பாவிப்பது என்னில் | 217 |
| பிணத்தினை ஒத்து | 188 |
| புகையால் அனல் | 112 |
| புண்ணியமேல் நோக்கு | 241 |
| புத்திமற் காரி | 121 |
| புத்திரமார்க் கம்புகலில் | 234 |
| புந்தியை மனம்அது | 204 |
| புருடனே அறிவன் | 205 |
| புருடன்தன் குணம் | 184 |
| புறச்சமய நெறிநின்றும் | 227 |
| புறம்பேயும் அரன் | 255 |
| பூதனா சரீரம் | 161 |
| பேறிழவு இன்பம் | 149 |
| பொன்அணி ஆடை | 203 |
| பொன்மைநீ லாதி | 144 |
| பொறிபுலன் கரணம் | 210 |
| போகியாய் இருந்து | 136 |
| போதகா ரிய(ம்) | 183 |
| போது நாற்றத் | 113 |
| மண்ணினில் கடாதி | 127 |
| மண்ணுளே சிலவி | 161 |
| மண்தனில் வாழ்வும் | 215 |
| மண்புனல் அனல் | 174 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| மந்திரங்கள் முதல் | 225 | மும்மல நெல்லி | 184 |
| மந்திரத்தான் மருந்து | 273 | மூன்று பக்கம் | 111 |
| மந்திரம் அத்து | 139 | மூன்றுதிறத்து அணு | 227 |
| மந்திரம் அதனில் | 140 | மூவகை அணுக்க | 125 |
| மனம்அது தைச | 172 | மேலைக்கு வித்து | 150 |
| மனம்அது நினைய | 156 | மொய்தரும் பூத | 178 |
| மன்னவன்தன் மகன் | 221 | யாதொரு தெய்வம் | 156 |
| மருஆனந்தம்விஞ் | 202 | யான்செய்தேன் பிறர் | 257 |
| மருத்துவன் உரைத்த | 160 | வண்டுக ளாகி | 164 |
| மறைகள்ஈ சன்சொ | 159 | வரும்குண வடிவாய் | 171 |
| மறையினான் அயனான் | 107 | வாக்கொடு பாதம் | 173 |
| மலமாயை கன்ம | 185 | வாய்ஆதி சோத்தி | 173 |
| மலமென வேறுஒன்று | 182 | வாழ்வெனும் மையல் | 186 |
| மாசறு காட்சி | 108 | விச்சையின் அராகம் | 170 |
| மானுடப் பிறவி | 187 | விதிப்படி சூக்கு | 167 |
| மாயைதான் மலத்தைப் | 132 | வித்தக யோக | 132 |
| மாயையின் உள்ள | 121 | வித்தைகள் வித்தை | 125 |
| மாயையின் காரி | 185 | வித்தையின்மந் திரம் | 225 |
| மாயையின் வயிற்றுள் | 201 | வித்தையோடு ஈசர் | 143 |
| மாயையில் கால | 169 | விந்துவின் மாயை | 122 |
| மாயையே யான்ம | 183 | வேதசாத் திரமிருதி | 248 |
| மாறிஇவ் வுருவம் | 166 | வேதநூல் சைவநூல் | 230 |
| மிக்கதுஒரு பக்குவ | 240 | வேற்றுமைப் பட்ட | 124 |
| முன்செயல் விதியை | 150 | வைகரி செவியிற் | 123 |


## 5. சிவஞான போதம்


| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| அகாரஉகாரம் | 286 | அன்று | 283 |
| அசித்து அறியாய் | 291 | இங்குளிவாங்கும் | 302 |
| அஞ்செழுத்தால் | 299 | இந்துவில் பானு | 300 |
| அதுஇது என்ற | 306 | இல்லா முலைப்பாலும் | 296 |
| அதுவென்னும் | 292 | இலயித்த | 278 |
| அந்தக்கரணம் | 285 | இலாடத்தே | 288 |
| அந்நியம் இல்லா | 293 | உணர்ப அசத்து | 292 |
| அரக்கொடு | 281 | உணருரு | 290 |
| அரவுதன் | 282 | உளது இல்லை | 283 |
| அருக்கன்நேர் | 304 | உள்ளதே | 281 |
| அருவுருவம் | 294 | ஊனக்கண் பாசம் | 298 |
| அருளுண்டாம் | 290 | எங்கும் | 282 |
| அவனே தானே | 301 | எண்ணிய | 287 |
| அவன்அவள் | 277 | எண்ணிய | 291 |
| அவையேதானே | 279 | எந்தை சனற்குகரன் | 307 |
| அவ் உடலின் | 284 | எவ்வுருவம்தான் | 297 |
| அவ்வினை | 281 | எனதுஅன்று | 284 |
| அறியஇரண்டு | 292 | ஏகமாய் நின்றே | 303 |
| அறிவிக்க அன்றி | 295 | ஐந்தையும் ஒக்க | 303 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| ஐம்புல வேடரின் | 295 | நாடியோ என்கோ | 298 |
| ஐம்பொறியின் | 297 | நாமல்ல இந்திரியம் | 301 |
| ஐம்பொறியை | 289 | நான் அவன் என்று | 301 |
| ஒன்று | 280 | நிர்க்குணனாய் | 299 |
| ஒன்றுஅணையா | 288 | நெல்லில் | 281 |
| ஒன்றுஅறிந்த | 284 | நோக்காது | 278 |
| ஒன்றுலா | 279 | பசித்துண்டு | 295 |
| கட்டும் | 279 | பண்ணை | 280 |
| கண்ட | 282 | பன்னிறம் காட்டும் | 296 |
| கண்டதை அன்று | 299 | பாவகமேல் | 292 |
| கண்டதொரு | 306 | பூதாதி | 227 |
| கண்டு அறிவும் | 285 | புண்ணியமாம் | 305 |
| கலையாதி | 285 | பேய்த்தேர் | 293 |
| கல்லால் | 276 | பொன்வான்முன் | 304 |
| காட்டியகண்ணே | 298 | மண்முதல் நாளம் | 300 |
| காணும் கண்ணுக்கு | 303 | மயக்கம்அது | 294 |
| சதசத்தாம் | 302 | மலர்தலை | 275 |
| சாரளுந்தானரக் | 302 | மறப்பித்தும்தன்னை | 305 |
| சிந்தித்தாய் | 286 | மனம்ஆதி | 286 |
| சிவம் எனும் | 307 | மன்னுசிவன் | 289 |
| சிறைசெய்ய நின்ற | 297 | மன்னும் இருளை | 304 |
| சுட்டி உணர்வதனை | 299 | மாயாதது | 287 |
| செம்மலர்நோன் | 305 | மெய்ஞ்ஞானம் | 294 |
| தம்மை | 276 | மெய்ஞ்யானம்தானே | 296 |
| தவம் செய்தார் | 295 | யாவையும் சூனியம் | 293 |
| தன்உரை வேண்டி | 306 | வித்துண்டா | 278 |
| தன்னை அறிவித்து | 306 | வினையால் | 306 |
| நசித்தொன்றின் | 302 | வெய்யோன் | 290 |
| நல்அனல் | 302 | | |


## 6. திருவுந்தியார்


| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| அகளமாய் யாரும் | 308 | ஓட்டற்று நின்ற | 311 |
| அஞ்சே அஞ்சாக | 310 | கண்டத்தைக் | 309 |
| அண்ட முதலாம் | 319 | கருதுவ தன்முன் | 313 |
| அதுஇது என்னா | 318 | கள்ளரோடு இல்லம் | 314 |
| அவன்இவன் ஆனது | 319 | காற்றினை மாற்றி | 314 |
| அவிழ இருக்கும் | 315 | காயத்துள்மெய் | 319 |
| ஆக்கில் அங்கே | 310 | கிடந்த கிழவியைக் | 311 |
| ஆதாரத் தாலே | 310 | சாவிபோம் மற்றைச் | 316 |
| இங்ஙன் இருந்தது | 309 | சித்தரும் தீய | 315 |
| இரவு பகலில்லா | 313 | சிந்தையின் உள்ளும் | 320 |
| உள்ளம் உருகில் | 310 | சென்ற நெறி | 318 |
| உள்ளும் புறம்பும் | 315 | சொல்லும் இடமன்று | 316 |
| உளவாது | 312 | சொல்லும் பொருள் | 313 |
| எட்டுக்கொண்டார் | 314 | தாக்கியே தாக்காது | 311 |
| ஏகனும் ஆகி | 309 | திருச்சிலம் போசை | 312 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| துரியம் கடந்த | 317 | பொற்கொழுக் | 318 |
| நம்செயல் அற்று | 309 | மருளும் தெருளும் | 312 |
| நாலாய பூதமும் | 318 | முத்தி முதலுக்கே | 319 |
| பற்றை அறுப்பதோர் | 312 | மூலை இருந்தார் | 311 |
| பழக்கம் தவிரப் | 308 | வித்தினைத் தேடி | 315 |
| பெண்டிர் பிடிபோல | 317 | வீட்டில் இருக்கில் | 316 |
| பெற்றசிற் றின்பமே | 317 | வையம் முழுதும் | 320 |
| பேரின்ப மான | 317 | | |


## 7. திருக்களிற்றுப்படியார்


| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| அகளத்தில் ஆனந்தத்து | 353 | எத்தனையோ தத்துவ | 333 |
| அகளமய மாய்நின்ற | 322 | என்அறிவு சென்ற | 322 |
| அஞ்செழுத்து மே | 329 | என்னை உடையவன் | 355 |
| அதுஇது என்றும் | 350 | எல்லார் அறிவுகளின் | 339 |
| அநாதி சிவன் | 335 | ஏதேனும் காலமுமாம் | 341 |
| அன்பேஎன் அன்பே | 339 | ஒன்றுஅன்று இரண்டு | 340 |
| அன்றிவரும் ஐம்புலன் | 332 | ஒன்றும் குறியே | 324 |
| அன்றுமுதல் ஆரேனும் | 324 | ஒன்றுரைத்து ஒன்று | 348 |
| அம்மையப்ப ரே | 321 | ஓசையெலாம் அற்றால் | 332 |
| அம்மையிலும் இம்மை | 346 | ஓடம் சிவிகை | 344 |
| அரண உணர்வதனில் | 334 | ஓட்டற்று நின்ற | 330 |
| அறிவறிவாய் நிற்கில் | 331 | கடல்அலைத்தே | 352 |
| அவனே அவனி | 351 | கண்டத்தைக் கொண்டு | 323 |
| அவன்இவனாய் நின்ற | 352 | கண்ணப்பன் ஒத்து | 338 |
| அவிழ்ந்த துணியில் | 338 | கண்ணும் கருத்து | 337 |
| ஆகமங்கள் எங்கே | 323 | கல்லில் கமரில் | 337 |
| ஆக்கப்படாத பொரு | 329 | காண்கின்ற தோர் | 330 |
| ஆக்கி ஒருபொருளை | 328 | குற்றம்அறுத்து | 353 |
| ஆதனமும் ஆதனியும் | 343 | கொண்டதுஒரு | 329 |
| ஆதார யோகம் | 328 | கொல்கரியின் நீற்று | 345 |
| ஆதியை அர்ச்சித் | 326 | சாத்திரத்தை ஓதினர் | 323 |
| ஆற்றால் அலை | 324 | சாம்பொழுதில் ஏதும் | 333 |
| ஆளுடையான் என் | 354 | சார்புஉணர்ந்து சார்பு | 332 |
| இக்கணமே முத்தி | 354 | சிந்தையினும் | 355 |
| இன்றிங்கு அசேத | 335 | சிவன்எனவே தேறி | 352 |
| இன்று பசுவின் | 323 | சிவன்முதலே அன்றி | 342 |
| இன்றுஇச் சமயத்தின் | 343 | சிவமே சிவமாக | 349 |
| இன்றுதான் நீ | 351 | சுரந்த திருமுலைக்கே | 339 |
| இப்பொருள்கள் யாதே | 341 | செத்தாரே கெட்டார் | 336 |
| ஈறாகி அங்கே | 350 | செய்தற்கு அரிய | 341 |
| உடம்புடைய யோகி | 346 | செய்யாச் செயலை | 341 |
| உணராதே யாதும் | 331 | செய்யில் உகுத்த | 327 |
| உண்டென்னில் | 332 | செய்யும் செயலே | 328 |
| உன்உதரத் தேகிட | 351 | தன்னைப் பெறு | 335 |
| உள்ள முதல்அனை | 325 | தம்மில் சிவலிங்கம் | 335 |
| உள்ளும் புறம்பு | 338 | தம்மில் தலைப் | 322 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| தாமடங்க இந்தத் | 344 | பேசாமை பெற்றதனிற் | 330 |
| தாரத்தோடு ஒன்றா | 348 | பேரின்பமான பிரம | 347 |
| துன்பமாம் எல்லாம் | 336 | பொன்னிறம் கட்டி | 347 |
| துரியம் கடந்தசுடர்க் | 344 | மன்னம் அருள்எவ் | 346 |
| தூங்கினரைத் தூய | 325 | முத்தி முதல்கொடி | 353 |
| தூல உடம்பாய | 333 | மெல்வினையே என்ன | 326 |
| தூலத்து அடுத்த | 354 | மோகம் அறுத்திடின் | 345 |
| நய்கையினால் நாம் | 347 | யாதேனும் காரண | 349 |
| நல்லசிவ தன்மத்தால் | 326 | வரங்கள்தரும் செய்ய | 327 |
| நின்றபடி நின்றவர் | 349 | வானகமும் மண்ணக | 337 |
| பற்றினுள் பற்றைத் | 331 | வித்தும்அதன் அங்கு | 340 |
| பாதகம் என்றும் | 327 | விரிந்தும் குவிந்தும் | 343 |
| பாய்பரியேறஅந்த | 345 | வீட்டிலே சென்று | 342 |
| பாலைநெய்தல் பாடி | 325 | வேண்டும்கால் | 334 |


## 8. இருபா இருபஃது


| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| அருள்முன்பு நில்லாது | 360 | கோலம் கொண்ட | 370 |
| அறிஅறி யாமை | 358 | சொல்தொழும்பு | 370 |
| அற்றது | 367 | தருமஅதருமத் | 372 |
| இருபா இருபது | 373 | தெரித்ததுஎன் | 362 |
| இறந்தோய் கரணங்கள் | 367 | தேராது உரைப்பன் | 369 |
| உற்றவர் பெற்றவர் | 372 | மதிநின்பால் இந்த | 365 |
| எண்திசை விளங்க | 365 | மதிநுதல் பாக | 360 |
| கடலமுதே | 363 | மன்னிய கன்மச் | 364 |
| கண்ணகன் ஞால | 356 | மானமரும் செங்கை | 368 |
| கண்ணுதலும் கண்டக் | 356 | மொழிந்த அவத்தை | 362 |
| கூறிய மூன்று | 359 | | |


## 9. வினா வெண்பா


| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| அருவேல் உருவன்று | 377 | ஒன்றிரண்டாய் நின்றொ | 378 |
| அருளால் உணர் | 380 | காண்பானும் | 379 |
| அறிவறிந்த எல்லாம் | 376 | கனவு கனவென்று | 375 |
| இருளில் ஒளிபுரை | 374 | சிற்றறிவு முன்சிதை | 376 |
| இருமலத்தார் | 378 | நீடும் ஒளியும் | 374 |
| உன்னரிய | 377 | புல்லறிவு நல்லுணர்வு | 375 |
| ஒன்றி நுகர்பதிவன் | 379 | | |


## 10. போற்றிப் பஃறொடை


| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| அருவமாய் எவ்வுயிரும் | 382 | கண்டவியன் கட்டில் | 385 |
| ஆசற்ற பாளைப் | 384 | குன்றாத பல்லுயிர் | 382 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| தண்டாத புன்புலால் | 384 | மிண்டாய ஆறு | 390 |
| நட்டோங்கு | 386 | முத்திதரு நன்னெறி | 389 |
| நாட்டுகின்ற எப்பிறப்பும் | 383 | முந்துற்ற நெல் | 382 |
| பல்லுயிர்க்கும் இன்ன | 388 | மேதக்கோர் செய்யும் | 391 |
| பூமன்னு நான்முகத் | 381 | வள்ளன்மையால் தன் | 392 |
| போற்றித் திருத்தில்லை | 393 | வேட்கைமிகும் உண்டிப் | 386 |


## 11. கொடிக்கவி


| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| அஞ்செழுத்தும் எட்டெழு | 395 | பொருளாம் பொருள் | 394 |
| ஒளிக்கும் இருளுக்கும் | 394 | வாக்காலும் மிக்க | 395 |


## 12. நெஞ்சுவிடு தூது


| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| அன்றியும் மானும் | 406 | தேருங்கால் உன்னை | 399 |
| ஆனந்தம் பண்ணும் | 403 | தோலாதவானம் | 404 |
| ஆர்த்த கரி | 411 | தம்மை | 405 |
| எண்எண் கலையால் | 403 | நாட்டத்தால் தெள் | 403 |
| எந்தை பிரான் | 411 | பலவும் கடந்து | 401 |
| என்றும்உளன் அன்று | 397 | பாதாளம் ஊடுருவிப் | 404 |
| காட்சியான் காட்சிக்கும் | 406 | பூமேவும் உந்திப் | 396 |
| கைமழுவன் அத்தன் | 409 | பொறி இலியேன் | 407 |
| கொண்டது ஒரு | 398 | மட்டுஅவிழ்தார் | 407 |
| சாற்றுவார் சாற்றும் | 407 | வெற்பின் மிசை | 400 |
| செய்ய தருமச் | 401 | வேளை எரித்த | 412 |


## 13. உண்மைநெறி விளக்கம்


| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| எப்பொருள்வந் துஉற்றி | 415 | பாதகங்கள் செய்திடி | 416 |
| எவ்வடி உகளும் | 414 | பாயிருள் நீங்கி | 414 |
| பரைஉயிரில் யான் | 415 | மண்முதல் சிவம்அது | 413 |


## 14. சங்கற்ப நிராகரணம்


| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| அகமே பிரம | 440 | அறிவிற்கு அறிவு | 447 |
| அங்குலி தானே | 437 | அறிவே யாகும் | 468 |
| அன்றியும் பதமும் | 427 | அவித்தையி னுதித்த | 439 |
| அரச ராய | 480 | அவித்தையை வித்தை | 433 |
| அகமே பிரம | 440 | ஆயவ ரெவரையு | 477 |
| அங்குலி தானே | 437 | ஆராய்ந் துரைக்கி | 466 |
| அன்றியும் பதமும் | 427 | ஆறா முன்னர்க் | 481 |
| அரச ராய | 480 | இகலற வொருவ | 441 |
| அரிதேர்ந் துணராப் | 444 | இசைந்த தாயினு | 479 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாட்டு | பக்கம் |
|---|---|
| இடர்நல முறுத | 472 |
| இணைத்தோர் | 465 |
| இதுஅன் றிதுஅன்று | 439 |
| இதுகதி யாக | 478 |
| இத்திறன் தெளிய | 468 |
| இந்தனத் தியற்கை | 460 |
| இனியப் பழமொழி | 426 |
| இனையவை யொன்று | 477 |
| இன்னும்அக் கனவில் | 436 |
| இன்னே எவரும் | 421 |
| இன்மை யாதன் | 445 |
| இருந்ததுன் கேள்வி | 463 |
| இருவினை ஊட்டும் | 437 |
| இருவினை நுகர்வில் | 478 |
| இருவினைத் தொகையி | 444 |
| இவ்வியல்பு பந்தப் | 424 |
| ஈசன தியல்வு | 464 |
| ஈசனது அருளால் | 449 |
| உடன்மா றாட்டக் | 436 |
| உடல்விடக் கடத்துள் | 441 |
| உயிர்நீங் கிடிலுடல் | 458 |
| உரையார் அளவையும் | 431 |
| உலூதையின் சின்னூல் | 422 |
| உளத்திற் குறுபொறி | 448 |
| என்சித் தான்அ | 470 |
| என்னவை யென்னிற் | 454 |
| எரிந்தது என்னும் | 455 |
| எழுதா மறையெனும் | 427 |
| ஏதமில் லறிவுயிர்க் | 464 |
| ஏது வேண்டும் | 446 |
| ஏத்தி இறைஞ்சிக் | 428 |
| ஏற்றங் கருவி | 476 |
| ஏழ்அஞ்சு இருநூறு | 420 |
| ஒண்ணா தென்னும் | 462 |
| அகமே பிரம | 440 |
| அங்குலி தானே | 437 |
| அன்றியும் பதமும் | 427 |
| அரச ராய | 480 |
| அகமே பிரம | 440 |
| அங்குலி தானே | 437 |
| அன்றியும் பதமும் | 427 |
| அரச ராய | 480 |
| அரிதேர்ந் துணராப் | 444 |
| அறிவிற்கு அறிவு | 447 |
| அறிவே யாகும் | 468 |
| அவித்தையி னுதித்த | 439 |
| அவித்தையை வித்தை | 433 |
| ஆயவ ரெவரையு | 477 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| ஆராய்ந் துரைக்கி | 466 |
| ஆறா முன்னர்க் | 481 |
| இகலற வொருவ | 441 |
| இசைந்த தாயினு | 479 |
| இடர்நல முறுத | 472 |
| இணைத்தோர் | 465 |
| இதுஅன் றிதுஅன்று | 439 |
| இதுகதி யாக | 478 |
| இத்திறன் தெளிய | 468 |
| இந்தனத் தியற்கை | 460 |
| இனியப் பழமொழி | 426 |
| இனையவை யொன்று | 477 |
| இன்னும்அக் கனவில் | 436 |
| இன்னே எவரும் | 421 |
| இன்மை யாதன் | 445 |
| இருந்ததுன் கேள்வி | 463 |
| இருவினை ஊட்டும் | 437 |
| இருவினை நுகர்வில் | 478 |
| இருவினைத் தொகையி | 444 |
| இவ்வியல்பு பந்தப் | 424 |
| ஈசன தியல்வு | 464 |
| ஈசனது அருளால் | 449 |
| உடன்மா றாட்டக் | 436 |
| உடல்விடக் கடத்துள் | 441 |
| உயிர்நீங் கிடிலுடல் | 458 |
| உரையார் அளவையும் | 431 |
| உலூதையின் சின்னூல் | 422 |
| உளத்திற் குறுபொறி | 448 |
| என்சித் தான்அ | 470 |
| என்னவை யென்னிற் | 454 |
| எரிந்தது என்னும் | 455 |
| எழுதா மறையெனும் | 427 |
| ஏதமில் லறிவுயிர்க் | 464 |
| ஏது வேண்டும் | 446 |
| ஏத்தி இறைஞ்சிக் | 428 |
| ஏற்றங் கருவி | 476 |
| ஏழ்அஞ்சு இருநூறு | 420 |
| ஒண்ணா தென்னும் | 462 |
| ஒன்றா மென்ற | 482 |
| ஒன்றி ஒன்றா | 456 |
| ஒன்றெனும் உரையும் | 427 |
| ஒன்றென்றது அன்றி | 426 |
| ஒன்றொன் றாக | 459 |
| ஒன்றோ டொன்று | 419 |
| ஒருகா லத்து | 439 |
| ஒருபொரு ளாகி | 471 |
| ஒருபொரு ளிவ்வியல் | 468 |
| ஒழிந்திடின் நிரயத்து | 443 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| ஓத வேண்டா | 433 | பண்டை ஞான | 481 |
| கண்ணிற் கண்ணைக் | 440 | பண்டொரு முதலை | 453 |
| கரணா பாவ | 449 | பந்தமது அகல | 438 |
| கருமத் தளவில் | 471 | பந்தம் இதுவெனத் | 438 |
| கருவி யாவும் | 446 | பன்இனம் என்னின் | 437 |
| கருவி வசத்திற் | 476 | பன்னோ யாக்கை | 443 |
| கருவியு மலமும் | 478 | பன்மணி பசுநற் | 434 |
| காந்தத்து இரும்பு | 435 | பலபல சமயப் | 419 |
| காந்தம் போல | 459 | பாசமும் பசுவும் | 450 |
| காலா வதியிற் | 479 | பாலும் பசுவம் | 434 |
| கூட்டுத லால்உருக் | 453 | பிரமம் பிரமேயமன்று | 129 |
| கூறினை யாகம் | 460 | பிறர்க்கெனிற் பிறரும் | 470 |
| கூவல் ஆழி | 423 | பிறிவறி வரிய | 476 |
| கொத்தை மாந்தர் | 448 | பிறிவித் தொட்டினும் | 429 |
| சத்திசத்தாகவும் | 431 | புனிலில் தோன்றும் | 423 |
| சத்தாய் எவையும் | 422 | புன்மைகள் நீங்க | 477 |
| சத்தினது இயல்பும் | 432 | பெருங்கடல் உதவும் | 419 |
| சலன மேவின | 441 | பேறே யாயிற் | 454 |
| சிவமும் சத்தியும் | 465 | பொறிக ளேவலி | 463 |
| சீவன் முத்தரென் | 456 | பொற்பிதிர் பிதிர்ந்தும் | 431 |
| செய்வோ ரேயாச் | 430 | மகிலமு மேனி | 474 |
| சேர்ந்த மும்மை | 451 | முன்னிழல் கொண்டு | 435 |
| சோம பானஞ் | 473 | மந்திர வாதந் | 452 |
| தத்துவ மசியென | 440 | மன்னியது அன்றிமை | 433 |
| தவப்பிரகாசத் தன்மை | 482 | மன்னும் விவேக | 442 |
| தனக்குத் தானே | 428 | மயங்கு வாத | 420 |
| தன்மையும் உறும் | 438 | மறைகள் ஆகமத் | 449 |
| தானா காமையைச் | 474 | மாயா வொருவன் | 480 |
| தானே தானாய்த் | 424 | முத்தி என்பது | 445 |
| தாரணி யதனிற் | 469 | முன்னருள் தலைவர் | 461 |
| திருந்திய அருந்தவம் | 418 | முன்புள தாயின் | 438 |
| திருவினை தருபயன் | 436 | மும்மலத் தேது | 457 |
| திறம்பெற் றின்றே | 428 | மும்மைப் பொருட்கு | 481 |
| தீபம் வேண்டு | 462 | மூங்கை அந்தரும் | 455 |
| நண்ணருஞ் சத்தி | 473 | மூல மலத்தால் | 447 |
| நண்ணருஞ் சித்தி | 467 | யாதொரு வகையென | 475 |
| நன்றி கொன்றல் | 442 | வகுத்துரை பெருகத் | 448 |
| நவிற்றிய நிரையின் | 411 | வணங்கினும் உதை | 443 |
| நிட்கள சகளத் | 472 | வண்டென உயிரைக் | 451 |
| நீங்கா தொளி | 457 | வருந்தி ஆயினும் | 442 |
| நீடாது அழித்த | 450 | வான்வளி அனல்நீர் | 422 |
| நுண்ணால் குடம்பை | 433 | விவகா ரத்தில் | 430 |
| நெல்பதர் பலாலத் | 423 | வேண்டா ராயினு | 474 |
| நேய மில்லென | 470 | வேதம் சுயம்பன்று | 425 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சிவகாமசுந்தரி செல்லத்துரை நினைவு நூல்கள் 2010 - 2020

































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org